பேரறிஞர்

அண்ணாவின்

கடிதங்கள்

தொகுதி – 5

50 கடிதங்கள்

பேரறிஞர் அண்ணாவின் கடிதங்கள் - 5

அண்ணாதுரை

மின்னூல் வெளியீடு :

http://FreeTamilEbooks.com

உரிமை - CC0 கிரியேடிவ் காமென்ஸ்.

எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/letters_of_peraringar_anna_5

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை

(kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guru-leninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guru-leninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushan-mugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

பொருளடக்கம்

1. தல யாத்திரை 10
2. தென்னகம் பொன்னகம் 51
3. எழுச்சி வெள்ளம் 87
4. தீவில் தங்கியவன் கதை 119
5. பெரிய புள்ளிகள் 166
6. ஜனநாயகச் சர்வாதிகாரி! 223
7. ஒலியும் ஒளியும் 286
8. ஆணை பிறந்தது...! 337
9. இந்தி - தமிழ் மரபு அழிக்கும் செந் தீ . . 366
10. குருதி கலந்த மண் 410
11. சட்டம் - வழக்குமன்றத்தில் 465
12. ஒளி படைத்த கண்ணினாய்! வா! வா! வா! 511
13. பாபுவின் பவனி 569
14. மூலவர் மூவர் முரசொலி... 631
15. வேலை இருக்கிறது நிரம்ப! 668
16. காலம் இல்லை... அதிகம்! 720

17. இந்நாட்டில் வாழ்வதற்கு! 735
18. மற்றொரு கூவம்! 789
19. 'ஞோ ஞா' 825
20. ஒன்றாகக் கூடி, இன்பத் திராவிடம் தேடி! 867
21. ஐந்து கால் பசு! 912
22. கொல்லிமலைச் சாரலிலே 966
23. எல்லோரும் இந்நாட்டு மன்னர் 1 993
24. எல்லோரும் இந்நாட்டு மன்னர் (2) . . . 1042
25. எல்லோரும் இந்நாட்டு மன்னர் (3) . . . 1087
26. எல்லோரும் இந்நாட்டு மன்னர் (4) . . . 1105
27. எல்லோரும் இந்நாட்டு மன்னர் (5) . . . 1144
28. மேனி சிலிர்க்குது!. 1187
29. வாழு! வாழவிடு! (1) 1216
30. இல்லம் இன்பப் பூங்கா 1247
31. கண்ணொளி போதும். 1319
32. 1961 ஆம் ஆண்டுக்கான திட்டம் இதுதானா? 1363
33. வெற்றிக்கவிதை பாடிடுவாய்! 1391

34. எண்ணப் பிணைப்பு! இதயக் கூட்டு!
வண்ணக் கலவை! 1459
35. கைராட்டை காவேரி (1) 1499
36. கைராட்டை காவேரி (2) 1552
37. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை . . . 1598
38. இதயம் இருக்கிறதே! 1693
39. இவனே தமிழ் மறவன்! 1797
40. 'இந்தியர்' ஆகின்றனர்!! (1) 1894
41. 2 திரும்பிப்பார்! 2040
42. 3 அம்பும் ஏணியும் 2093
43. 4புதுப் பா! 2132
44. 5அழியாச் செல்வம் 2178
45. 6 கதைகள் - கருத்தளிக்க 2259
46. 7 குன்றின்மேலிட்ட விளக்கு 2302
47. 8 முதல் பந்தி! 2541
48. 9 பட்டப் பகலில். . . ! (1) 2620
49. 10 பட்டப் பகலில். . . ! (2) 2655
கணியம் அறக்கட்டளை 2689

1. தல யாத்திரை

இலக்கிய இன்பம் -

ஆப்பிரிக்க மங்காலிசோ டாக்டர் பண்டா -

மடகாஸ்கர் விடுதலை

தம்பி!

“என்ன, சிறிதளவு வாட்டமுற்றதுபோலக் காணப்படு கிறாய்! வீரத் திருமுகத்திலே விசாரக்குறிகள் தெரிகின்றனவே! வந்துற்ற இடுக்கண் யாது? வந்திடில் என்ன? வாட்டம் கொளப் போமோ? வள்ளுவப் பெருந்தகையை மறந்தனையோ! இடுக்கண் வருங்கால் நகுக! என்றாரே. தமிழரின் நெறியினை அழித்திடவல்ல தீ நெறி தமிழகத்திலே நெளிந்திடக் கண்டுபோலும், வள்ளுவர், இடுக்கண் தமிழ் இனத்தைத் தாக்கக்கூடும் என்று அறிந்து, அவ்விதமானதோர் தாக்குதல்

ஏற்படினும் கவலை கொள்ளல் ஆகாது, கொண்டிடின் இடுக்கண்களை எதிர்த்து நின்று வெற்றிபெற இயலாது என்று எடுத்துக்காட்ட"நகுகா' என்று கூறினார். குறள் நெறி நின்றிடும் குறிக்கோளுடைய, உனக்கு ஏற்படலாமா வாட்டம் வருத்தம்!!

மாற்றார்கள் மனம் போன போக்கிலே ஏசுவது கேட்டா வாட்டம்? மறக்குலத் துதித்தவனே! மார்பில் பாய்ந்த வேலினைப் பறித்தெடுத்து, மதகரிமீது வீசினானாமே உன் முன்னோரில் ஓர் வீரன், களத்தில்; மறந்தனையோ வீசினான் என்ற உடன் வசைமொழியினை விருப்பம் தீருமட்டும், விசாரம் குறையும் அளவு, நானும் வீசவா என்று கேட்கத்தோன்றும் தம்பி! ஆனால், வீரன் வேல் வீசியது, மதகரி மீது, சிறுநரி மீதல்ல, தெரிகிறதா!!

வசவாளர்களின் பேச்சல்ல, என்

வாட்டத்துக்குக் காரணம்; பத்து ஆண்டுகளாக நமது கழகம் உழைத்துத் திரட்டி வைத்துள்ள செல்வாக்கை அழித்தொழிக்க பண குண்டுகளை மாற்றார் செய்து குவித்தவண்ணம் உள்ளனரே, அதனை எண்ணும்போது, கலக்கம் ஏற்படாவிடினும், பெருமளவு கவலை ஏற்படத்தானே செய்யும் என்று கேட்கிறாய். தெரிகிறது. எனினும், களம் செல்ல உறுதிபூண்ட வீரர், கையில் கிடைத்த கருவியைக் கூர்மையானதாக்கிக் கொள்வர், நமது கழகத்தவரும், அதே முறையில், தேர்தல் களத்துக்காகத் தேவைப்படும் பணபலத்தைத் தேடிடத் தலைப்பட்டுள்ளனர். சிறுதுளி பெருவெள்ளமல்லவா!! எனவே, அதுகுறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதைவிட, உன் பங்கு என்ன என்பதனை அளவிட்டுக் கொண்டு, காரியமாற்று. கவலை பறந்து போகும்!!

“என்னென்னதான் கூறுகிறாய், கேட்போம், என்றுதான் அண்ணா பதில் கூறாது இருந்தேன். வாட்டம் ஏற்படக் காரணம், மாற்றாரின் தூற்றலும் அல்ல, மனதை உளையச் செய்திடவல்ல எதிர்ப்பும் அல்ல, தேர்தலுக்காக அவர்கள் திரட்டிக் குவித்திடும் பணத்தைக்கண்டு ஏற்படும் பயமும் அல்ல நெஞ்சிலே நிறைந்துள்ளதோர் நேர்த்தியான இலட்சியம், எந்த இலட்சாதிகாரியையும் பொருட்படுத்தத் தேவையில்லை என்று கருதிடும் வீர உணர்ச்சியைத் தந்திருக்கிறது. என் வாட்டத்துக்குக் காரணம், இந்தக் கோடையின் கொடுமை, வேறொன்றும் அல்ல என்று கூறிடுகிறாயா, தம்பி. உண்மை! உண்மை! பார்த்தாயா நான் காரணமற்றுக் கவலைப்பட்டுவிடுகிறேன்! உன் தெளிவும் துணிவும் நெஞ்சு உரமும் செயல் திறனும் எனக்குத் தெரிந்திருந்தும்,

சில வேளைகளிலே, தடுமாற்றம் ஏற்பட்டுவிடு கிறது. கோடையின் கொடுமை, வாட்டம் உண்டாகி விட்டதா! ஆமாம், தம்பி! கோடை கொட்டத்தான் தொடங்கிவிட்டது. என்ன செய்வது! எவர் எப்பாடுபடினும், நமக்கு இன்பம் வேண்டும் என்று எண்ணுவோர், இந்தக் கோடையின் கொடுமையிலிருந்து தப்பி, குளிர்ச்சிமிகு இடங்கட்குச் சென்று மகிழ்ச்சிமிகு நிலை பெறுகின்றனர். கொளுத்தும் வெயிலில் பலரும் துடித்திடுகின்றனர்; ஒரு சிலருக்கு, குளிர்ச்சிமிகு குன்று இடமாகிறது. பச்சை, உலரும் நிலை இங்கு! அவர்கள் பாங்கான இடம் சென்று களிப்பினைப் பெறுகின்றனர். ஆனால் எல்லோராலும் முடிகிறதா! சிலர், பாபம், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வோமென்று, சட்டசபைக் கூட்டம், கோடையின்போது ஊட்டியில்

கூடட்டும் என்றனர், கூடிற்று; சென்றனர்; விட்டாயா அவர்களை! ஊரெல்லாம் சுற்றிச் சுற்றி,"ஊட்டியிலே ஊராள்வோர் உல்லாச வாழ்வு தேடுகின்றனர் காணீர்! இது முறைதானா, கேளீர்!' என்று முழக்கம் எழுப்பினாய்! கோடையைக்கூடத் தாங்கிக் கொள்ளலாம். இந்த எதிர்ப்பைத் தாங்கிட இயலவில்லை என்று எண்ணிப்போலும், சென்ற ஆண்டு, உதகமண்டலம் சென்று சட்டசபை நடத்தியோர், இந்த ஆண்டு, வேண்டாமென்று விளம்பிவிட்டனர். ஓரிருவருக்குக் கோபம் ஏற்பட்டுத்தான் இருக்கும். இந்தச் சிறு கூட்டம் சொல்வதற்காக, நாம் ஊட்டி செல்வதை நிறுத்துவது, கேவலம்; அதுகளின் தலையல்லவா துள்ளும்! - என்று கூடப் பேசுவர்.

எனினும், ஊட்டியிலே உல்லாசமா? என்ற கேள்வியை எழுப்பியவர், சிறு

தொகையினராக இருப்பினும், ஆமாம்! ஏன் அங்கு செல்கிறீர்! உச்சிவெடிக்கும் வெயிலில் உழலும் நாங்கள், வரிப்பணம் கொட்டிக் கொடுப்பது, அதைவைத்துக் கொண்டு நீவிர், ஊட்டி சென்று, "குளுகுளு' வாசம் செய்வதோ!! உமக்குத் தொண்டாற்றி வருகிறோம்! உங்களின் உண்மையான ஊழியர்கள் நாங்கள்! என்று மயக்க மொழி பேசி ஓட்டுகளைத் தட்டிப்பறித்துக் கொண்டு, இடம் கிடைத்ததும், ஓடுகிறீர்களோ, உல்லாசம் தேடி, எங்கள் பணத்தை பாழாக்க!! வெள்ளைக்காரன், குளிர்மிகு நாட்டுக்காரன் - கோடை ஆகாது என்றான் நீவிரும், வெள்ளைக்காரராகி விட்டீர்களோ?'' என்று கேட்டுக் கோபித்திடும் மக்கள்தொகையின் அளவோ மிகப் பெரிதாக்கிவிட்டது. அது கண்ட எவர்தான் அச்சம் கொள்ளாதிருக்க முடியும்! எனவே, ஊட்டி வேண்டாம், உள்ளது

நிலைத்தால் போதும் என்று இருந்துவிட்டனர். ஒரு இரகசியம் கூறட்டுமா, தம்பி! இந்த முறையும் சட்டசபையை ஊட்டியிலே நடத்துவது என்று, காங்கிரசார்"வீம்பு' செய்திருப்பின், கழகத்தவர்கள் சும்மா விட்டிடினும், பொதுமக்களிலே ஒரு பிரிவினர், ஊட்டி வாசத்தைத் தடுக்க "மறியல்' செய்வது எனத் திட்டமிட்டிருந்தனர்.

ஊட்டி, கோடைக்கானல், ஏற்காடு போன்ற இடங்கள் செல்வதே, குற்றம் என்று கூற முற்படவில்லை. பொதுப் பணத்தைச் செலவழித்துக்கொண்டு, ஏழை எளியோர் வாயைக் கட்டி வயிற்றைக்கட்டிக் கொடுத்திடும் வரிப்பணத்தை விரயம் செய்து, ஊட்டியில் உல்லாசம் தேடுவது, அக்ரமச் செயல். அதைத்தான் நமது கழகம் எடுத்துக் காட்டிற்று.

தவித்திடும்போது, ஊட்டி, ஏற்காடு போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று, மலைவளம்

காட்டுவோம், அருவியின் அழகைக் காட்டுவோம்; மலர்மணம் பெறட்டும், மனதுக்கு ஓர் மகிழ்ச்சி கிடைக்கட்டும் என்றல்லவா ஒரு அண்ணனுக்கு எண்ணம் ஏற்படவேண்டும். ஒரு நாளாவது, அழைத்துப் போனது உண்டா, பொழில்நிறை இடங்களுக்கு - என்று கேட்கிறாய், பார்வையால்! கூடாது என்பதல்ல தம்பி! இயலவில்லை என்பதுதான். கோடை கொடுமைதான்! குளிர் தரும் இடம் செல்வது, மகிழ்ச்சி தரத்தான் செய்யும் - இல்லை என்றா கூறுகிறேன். ஆனால் இந்தக் கோடையிலே, தம்பி! நமது உடன் பிறந்தார்களிலே சிலர், பாரவண்டிகளை இழுத்துச் செல்கிறார்கள் - பார்த்தனையா? கால்களிலே சாக்குத் துண்டுகளைச் சுற்றிக்கொண்டு, உருகிடும் தார்போட்ட பாதையில்!! மாடு இழுக்க முடியாத வண்டிகள், தம்பி! முன்னே இருவர் தொட்டு இழுக்கிறார்கள் - பின்னிருந்து

மூவர் முட்டித்தள்ளுகிறார்கள்! அவர்களோடு பிறந்தவர்கள்தான், நாம்!! நம்மிலே சிலர், வண்டுகளும் தும்பிகளும் வட்டமிட்டு இசை எழுப்பும் பூங்காக்கள் நிறைந்த இடம் தேடிச்சென்று, உல்லாசம் பெற எண்ணுவதுகூடத் தவறல்லவா? அங்குச் சென்றபிறகு, இந்த நினைப்பு வந்திடின்? கோடை நம்மைத் தேடிவந்தல்லவா, கொட்டும்!

நாமாகிலும், தம்பி! கோடையின் தாக்குதலில் மட்டும் சிக்கியுள்ளோம். கைவண்டி இழுத்துக் கொண்டு இல்லை இன்னும் ஓர் பத்தாண்டுகள், ”ஏக இந்தியா’ எனும் தத்துவம் நம்மைப் பீடித்துக்கொண்டிருக்குமானால்,
நம்மிலே பலர் கைவண்டி இழுப்போராக வேண்டியதுதான்! ஆனால் ஒன்று! உழைப்பின் மேன்மையைப் பாராட்டி, நேரு பண்டிதர் நம்மைப் பாராட்டுவார்! அது

கிடைக்கும், வண்டி வண்டியாக.

இன்று, நமது இனத்திலே எல்லோருக்குமே இந்த இழிநிலை வராமலிருக்கிறதே என்பதை எண்ணித்தான் ஆறுதல் தேடிக்கொள்ள வேண்டும்.

காலுக்குச் செருப்பில்லையே என்று கஷ்டப்பட்டேன் காலே இல்லாத ஒருவனைக் காணுமட்டும் - என்று கூறினார், ஒரு பேரறிவாளர்.

தம்பி! ஊட்டியாகட்டும், ஏற்காடாகட்டும், நந்திமலை ஆகட்டும், என்ன பிரமாதம் என்கிறாய், வா, நீ, உன்னை, இந்த இடங்களை எல்லாம்விட, எழிலுள்ள இடங்களுக்கு அழைத்துச் செல்கிறேன். நீ, அறிந்திருக்கிற, உல்லாச புரிகளிலே கார் மேகம் உலவும், சிறுதூறல் வீழும், பசும்புற்றரைமீது பல வண்ணப் பூக்கள் உதிர்ந்து அழகளிக்கும்.

அவ்வளவுதான்.

கொம்பர்த் தும்பி குழல் இசை காட்ட

பொங்கர் வண்டுஇனம் நல் யாழ் செய்ய

வரிக்குயில் பாட

மாமயில் ஆடும்

விரைப்பூம் பந்தர்

காணவேண்டுமா? காட்டுகிறேன். கண்குளிரப் பார்த்திடு. காது குளிர இசை கேட்டு இன்புற்றிரு.

குரவமும், மரவமும், குருந்தும்,

கொன்றையும்

திலகமும், வகுளமும், செங்கால் வெட்சியும்

நரந்தமும், நாகமும், பரந்துஅலர் புன்னையும்

பிடவமும் தளவமும் முடமுள் தாழையும்

குடசமும், வெதிரமும் கொழுங்கால் அசோகமும்

செருந்தியும், வேங்கையும் பெருஞ் சண்பகமும்

மலர் வகைகள் உள்ளன தம்பி! ஏராளமாக! என்னென்ன வேண்டுமோ, பறித்துக்கொள்!!

அதோ பார்த்தனையா,

வெயில் நுழைபு அறியாக்

குயில் நுழை பொதும்பர்!

வெயில் நுழையாத பூங்கா! குயில் கூவுகிறது அங்கு இருந்து கொண்டு. தாமரை, தெரிகிறதா, செந்தாமரை! அதன் பக்கம் பார்த்தனையா, வெண்ணிற அன்னம், அரசோச்சும் பாவனையில்!! கயல் துள்ளுவது கண்டனையா! கடுவன், மந்திக்கு, ஊசல் வேடிக்கை செய்திடும் காட்சி தெரிகிறதா!!

நந்தமிழகம் இருந்த நிலையினை இன்றும் நாம் கண்டு உவகை கொள்ளச் செய்யும் ஏடுகள், உள்ளனவே, அறியாயா? எடு, அவைகளில் ஒன்றினை! எழிலூர் செல்லலாம், ஏற்றமெலாம் காணலாம்!! காண்பது

மட்டுமல்ல, அத்தகைய எழிலகமாகத் தாயகம் கோலம்கொள்ள, என்னென்ன பணியாற்றலாம் என்ற ஆவல் சுரக்கும். ஓய்விடம் சென்று, காய் கதிரோனிடமிருந்து தப்பினோம் என்று எண்ணி மகிழ்வதைவிட, இலக்கியம் எடுத்துக்காட்டும் சீரிடம் கண்டு, திருவிடம் விடுபட வழி காணவேண்டும். அந்தத் தொண்டினுக்கன்றோ, உன்னை நீ, ஒப்படைத்திருக்கிறாய்! உன்னை, ஊட்டிக்கு வா என்று அழைப்பது, உன் மாண்பினை நான் மறந்திடும் போக்காக வன்றோ ஆகிவிடும். நான் அந்தத் தவறு செய்திடப் போவ தில்லை. எனவே, வா, தம்பி! வழக்கு மன்றம் போவோம்.

"குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?''

"செய்ததை ஒப்புக்கொள்கிறேன் - ஆனால் செய்தது குற்றம் அல்ல!''

"நீ செய்தது, குற்றமா அல்லவா என்பதைத்

தீர்மானிக்க நான் இருக்கிறேன். எனக்கு வழிகாட்ட, சட்டம் இருக்கிறது துரைத்தனம் ஏற்படுத்தியுள்ள அனுமதிச் சீட்டு முறையை எதிர்த்துப் பேசினாயா?''

"ஆமாம்! அது முறை அல்ல! என் நாட்டிலே நான் நடமாட எந்த அனுமதியும் ஒரு அந்நியன், எனக்குத் தரவேண்டியது இல்லை, என்று பேசினேன்,''

"மக்களைக் கூட்டிவைத்து?''

"என் மக்களை அழைத்துச் சொன்னேன்.''

"சர்க்காருக்கு எதிராகத் தூண்டிவிட்டாய்?''

"அநீதிக்கு இடம் கொடாதீர்கள். அடிமைகளாகாதீர்கள் என்று கூறினேன், வீர உணர்ச்சியை ஊட்டினேன்.''

"அதுதான், குற்றம்... ...''

"சட்டம் கூறுகிறதா?''

"ஆமாம்! படித்துக் காட்டவா?''

"படித்துக்கொள், உன் சட்டத்தை, நீயே!''

"நாட்டுக்காக, சட்டம்.''

"என் நாட்டுக்கான சட்டம் இயற்ற வேற்று நாட்டுக் காரனுக்கு, உரிமை ஏது?'"அரசாள்பவர்கள்தான், சட்டம் இயற்றுவார்கள்.''

"அடிமைகள், அதைப் பயபக்தியுடன் ஏற்றுக்கொள் வார்கள்!''

"அப்படியா! வீரர்கள் என்ன செய்வார்கள்?''

"விரட்டி அடிப்பார்கள் அந்நிய ஆதிக்கத்தை.''

"அதுதான், நீ நடத்திவரும், சங்கத்தின் நோக்கமா...''

"ஆமாம்! எமது தாயகத்தில், வேற்றான் ஆதிக்கம் கூடாது. ஒழிக்கப்பட்டாக வேண்டும்

என்பதுதான்.''

"வேற்றான்! பூ! வேற்றான்!''

"விளக்கமாகக் கூறட்டுமா... வெள்ளையன் ஆதிக்கம் அழிக்கப்படவேண்டும் என்பதுதான் எங்கள் இலட்சியம்.''

"போதும்! இனித் தண்டனையைக் கேள்.''

"தூக்கில் மாட்டினால், பழிக்குப்பழி வாங்க அணி அணியாக உள்ளனர், ஆப்பிரிக்க வீரர்கள். சிறையானால், வெளிவந்ததும் நானே கணக்குத் தீர்த்துக்கொள்கிறேன்.''

தம்பி! வீரம் செறிந்த முகம்! பொறிபறக்கப் பேசுகிறான்! பிடிபட்டோம் என்பதுபற்றித் துளியும் அச்சமின்றி. வயது என்ன தெரியுமா? 36! ஆமாம் தம்பி! குழந்தைகள் ஓடி ஆடிக் கூவுவதை, துணைவி மகிழ்ச்சிப் பெருக்குடன் காண்பதைக் கண்டு களிப்படையும் பருவம். ஆனால், கூண்டிலே நிறுத்தப்பட் டிருக்கிறான்,

குற்றவாளியாக!! சவுக்கால் அடிப்பார்கள் இரத்தம் பீறிட்டுக்கொண்டு வரும் அளவுக்கு. சிறையிலே தள்ளிப் பூட்டுவார்கள்; தெரியும் அந்த வீரனுக்கு. ஆனால் கலங்கவில்லை. அவன் விடுதலைப் போருக்காகவே வாழ்கிறான். மாங்காலிசோ சொபுக்வீ எனும் பெயரினன்; ஆப்பிரிக்க மக்களின் விடுதலைக்காக அமைந்துள்ள கழகத்தின் காவலன். இரண்டு இலட்சம் உறுப்பினர்கள் உளர், அந்த வீரக் கோட்டத்தில்.

மங்காலிசோ விவரம் அறியாதவனுமல்ல. விவரம் தெரிவதால், சிலர் பயத்துக்கு அடிமையாகிவிடுவர். இன்ன காரியம் செய்தால், சட்டத்தின் இன்ன பிரிவின்படி குற்றமாகும். அந்தக் குற்றத்துக்கு இன்ன தண்டனை தரப்படும் - என்ற விவரம், அச்சத்தைத்தானே எளிதிலே ஏற்படுத்தும், இந்த விடுதலை வீரன், கருப்பரை ஆள

வெள்ளையர் என்ற முறையை ஒழித்தாக வேண்டும் என்ற உறுதி படைத்தவன். நிறபேதம், வெள்ளையர் கட்டிவிட்ட கயமை என்ற விவரம் தெரிந்தவன். பல்கலைக் கழகமொன்றிலே, மொழித்துறை ஆசானாகப் பணியாற்றியவன். மொழி, அவனை நாட்டுப் பற்றுள்ளோனாக்கிற்று! அந்த உணர்ச்சி, அவனை வீரனாக்கிற்று. வீரனைக் கூண்டில் நிறுத்திற்று வெள்ளை வெறி! அவன் எதற்கும் துணிந்து நிற்கிறான். தாயகம் விடுபடவேண்டும் என்று முழக்கமிடுகிறான். வழக்கு மன்றத்தையேகூட, அவன், தன் கருத்துரைக்க அமைந்த மன்றமாக்கிக்கொண்டான்.

தம்பி! அந்த அஞ்சாநெஞ்சன், இன்று ஆப்பிரிக்காவிலே பல்வேறு பகுதிகளிலே தோன்றியுள்ள எழுச்சியின் சின்னம் எனினும், அவன் படித்து இன்புற, காட்டிப் பெருமைப்பட,

ஒரு திருக்குறள் இல்லை!! இங்கு இருக்கிறது - நாம் ஊமையராய் இருக்கிறோம்.

இழுத்துச் சென்று பூட்டுவார்களா, சிறையில்? என்று கேட்கிறாய். பூட்டட்டுமே! வீரம் அழிந்துபடுமா என்ன? பலரைப் பூட்டிப் பார்த்தனர் - புயல் பலமாயிற்று; வெளியே அனுப்பிவைப்பதன்றி வேறு வழியில்லை, சிறையில் தள்ளப்பட்ட, மற்றோர் வீரன் வெளியே வந்து வீரமுழக்கம் செய்கிறான், காணலாம் வா, தம்பி!

”டாக்டர்! தங்களை விடுவிக்க வந்திருக்கிறேன், புறப்படலாம். இனி, சிறை அல்ல, உமக்கேற்ற இடம்.’’

”விடுதலை, எனக்குமட்டும்தானா! நாட்டுக்கு?’’

”நாட்டுக்கான திட்டம் குறித்துக் கலந்துபேச, அழைக்கிறார்கள் - தங்களை.’’

”அதற்காக என்றால் மிக்க மகிழ்ச்சியுடன் வருகிறேன்.’’

□

தம்பி! இரண்டாண்டுகளாகச் சிறையில் தள்ளிவைத்தனர், நயாசாலாந்து நாட்டு விடுதலைக் கிளர்ச்சியை நடத்திய, டாக்டர் பண்டாவை.

டாக்டர் பண்டா சிறைப்படுத்தப்பட்டால், கிளர்ச்சி அடங்கிவிடும் என்று எண்ணினர். ஏமாந்தனர். இரத்தப் புரட்சிக்கு மக்கள் தயாராகிவிட்டனர். இனி, அவர்களைக் கட்டுக்குள் கொண்டுவந்தால்தான், தலை தப்பும் என்பது புரிந்துவிட்டது வெள்ளையருக்கு. மக்களைக் கட்டுக்குள் கொண்டுவர ஒருவரால் மட்டுமே முடியும், - அவர்தான் டாக்டர் பண்டா. எனவே, விடுதலை!! சிறைச்சாலை சென்று, உயர்தர வெள்ளை

அதிகாரி, டாக்டர் பண்டாவைக் கண்டு பேசி, வெளியே அழைத்துக்கொண்டு வந்தார்.

வெளியே வந்த தங்கள் தலைவனை வரவேற்க ஆப்பிரிக்க மக்கள், திரள் திரளாகக் கூடினர்; வாழ்த்தொலி முழக்கினர்.

வீரத் தலைவனே! வருக! வாழ்க!

வெற்றி பெற்றளிக்க வந்தோனே, வருக! வருக!

வெள்ளையரின் கொட்டம் அடக்கும் ஆற்றல் மிக்கோனே! வருக!

நாட்டுக்காகச் சிறைசென்ற, நாயகனே! வருக!

நாங்கள் செய்யவேண்டியது என்ன? கட்டளையிடுங்கள்!

காத்திருக்கிறோம்! பண்டா வாழ்க! பாதுகாவலன் வாழ்க!

விடுதலைக்கு வழிகாட்டியே வாழ்க!

வீரத்தின் சின்னமே, வெற்றியின் பிறப்பிடமே! வருக! வருக! மக்களின் இதய ஒலி, டாக்டர் பண்டாவுக்கு ஆவேசத்தை மட்டுமல்ல, அதை முறைப்படுத்தும், அடக்க உணர்ச்சியையும் அளித்தது.

நாட்டுப்பற்று மிக்கோரே! நண்பர்காள்! உடன் பிறந்த உத்தமர்களே! உமது உள்ளன்புக்கு என் நன்றி! விடுதலை எனக்குக் கிடைத்தது, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட! நான் சிறை மீண்டேன். இனி நாடு வெள்ளையர் பிடியிலிருந்து விடுபடவேண்டும். அது குறித்துப் பேச அழைக்கின்றனர்; செல்கிறேன். வெற்றிக்காகக் காத்திருங்கள்! வெற்றி கிடைத்தால் விழா! இல்லையேல், இறுதிப் போர்!! ஆனால், இடையில், கலகம் விளைவித்தல் ஆகாது. கல்லெறிந்தனர், பண்டாவின் தோழர்கள் என்ற கெட்ட பெயர்

கூடாது. அமைதியாக இருங்கள். அதுதான் ஆற்றலின் அடையாளம். வீடுசென்று குதூகலம் தேடுங்கள் - விடுதலை தேடி நான் செல்கிறேன். வெற்றியுடன் திரும்பி வருகிறேன்! விழாக் கொண்டாடுவோம்.

டாக்டர் பண்டா இக் கருத்துப்படப் பேசுகிறார், தமது நாட்டவரிடம்.

இரண்டு ஆண்டுகளாக, அவரைக் காணாததால் ஏற்பட்ட ஏக்கத்தை ஒரே அடியாகத் தீர்த்துக்கொள்வதுபோல மக்கள் அவரை, மறுபடியும் மறுபடியும் காண அழைக்கிறார்கள். மாடிமீது நின்று, மக்களைக் கண்டு மகிழ்கிறார் டாக்டர் பண்டா.

தம்பி! அந்த நயாசாலாந்து நாட்டிலே, இலக்கியத்தை அகம் என்றும் புறம் என்றும் பிரித்து சுவைபடக் கூறிய புலவோர் இருந்ததில்லை, இங்கு இருந்தனர்

எண்ணற்றவர்; பெண்பாற் புலவர்களுங்கூட!

இரண்டாண்டுகளுக்கு முன்பு, டாக்டர் பண்டா, இலண்டன் வந்திருந்தார், நாட்டு விடுதலைக்கான பேச்சு வார்த்தை நடத்த வெற்றி கிட்டவில்லை. வெறுங்கையோடு, ஆனால் வீர உள்ளத்தோடு, நாடு திரும்பக் கிளம்பினார். தன் நாட்டு விடுதலை குறித்து உலகுக்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்பிப் பிரபல பத்திரிகை நிருபர்களை அழைத்தார்; விருந்தும் வைத்தார். சிறிய சந்து! அதிலே ஓர் பழைய வீடு! அதிலே, வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு அறை! அங்குதான், நிருபர்களைச் சந்திக்க ஏற்பாடு. எத்தனையோ நிருபர்களுக்கு டாக்டர் பண்டா, அழைப்பு அனுப்பினார். இரண்டே நிருபர்கள் வந்தனர். எவனோ ஒரு கருப்பன்!! நாட்டை மீட்கப் போகிறானாம்! இவன் பேசுவதைக் கேட்க, நாம் போக வேண்டுமா? என்று

எண்ணிக்கொண்டனர். அவ்வளவு அலட்சியம்!

இம்முறை, விடுதலைபெற்று, டாக்டர் பண்டா இலண்டன் சென்றதும், 50 நிருபர்களுக்கு மேல், அவரைச் சூழ்ந்து கொண்டனர், விவரம் கேட்க! ஒருவரிடமும், டாக்டர் பண்டா, பேசவில்லை. அலட்சியப்படுத்த முடிந்தது!

இந்த டாக்டர், இவ்வளவு குறுகிய காலத்தில், இத்துணை பெரிய ஆளாகிவிடுவார் என்று அப்போது தோன்றவே இல்லை. அன்று நாம், புத்தி கெட்டு அவரை அலட்சியப்படுத்தினோம். இன்று அவரைத் துரத்திக்கொண்டு போகிறோம், பேட்டி கிடைக்கவில்லை என்று எத்தனை நிருபர்கள் பேசிக் கொண்டனரோ, யார் கண்டார்கள்.

□

டாக்டர் பண்டா, புதிய எழுச்சியுடனும்,

நம்பிக்கையுடனும் பேசுகிறார்.

”அமெரிக்க மக்களே! ஆப்பிரிக்க மக்கள் எழுச்சியை அலட்சியப்படுத்துகிறீர்கள். இது ஆபத்தான போக்கு.

எப்போதுமே, மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கும் போக்கினைக் கொள்கிறீர்கள். சீனாவில் சியாங்கேஷேக்கை ஆதரித்தீர்கள் பலன் என்ன கண்டீர்கள்? இப்போதும் ஆப்பிரிக்காவில் வெள்ளை வெறியருக்குத் துணைநிற்கிறீர்கள். வேண்டாம், இந்த விபரீத புத்தி!’’

□

டாக்டர் பண்டா என்று ஒருவர், ஆழந் தெரியாமல் காலைவிடுவதுபோலக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். பிடித்திழுத்துச் சென்றனர், சிறைச்சாலைக்கு. வீண் கிளர்ச்சியில் இறங்காது இருந்தால்,

நல்ல பதவி கொடுத்திருப்பார்கள். வெள்ளையரின் தயவுபெற்று, செல்வவானாக வாழ்ந்திருக்கலாம். சிறையிலே கிடக்கிறான் என்று கேலி பேசி இருப்பர், அமெரிக்காவில் பலர். விடுதலை இயக்கத்தின் ஆற்றலைப் பார், தம்பி! டாக்டர் பண்டா, அதே அமெரிக்கருக்கு, எச்சரிக்கை விடுக்கிறார்.

நயாசாலாந்து எமது தாயகம். எமது தாயகத்தில் வேறொருவன் எஜமானனாக இருக்க நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. ஏனெனில் எங்கள் நாட்டுக்கு நாங்கள் எஜமானர்களாக இருக்க உறுதிபூண்டுவிட்டோம்.

டாக்டர் பண்டா பேசுகிறார் தம்பி! இதுபோல. நியூயார்க் நகர மக்களிடம்!!

□

தம்பி! செங்காய் போன்று இனித்திடும்

செய்திகள் கிடைத்திடும் இடங்கள் மட்டுமல்ல, விடுதலைக் கனிச்சாறு பருகி, இன்புற்று இருக்கும் இடங்களையும் காணுவோம்,

டோகோலாந்து என்றோர் நாடு. ஆமாம், தம்பி! இது நாள்வரையில் பிரெஞ்சுப் பிடியில் இருந்துவந்ததால், பலருக்கு பெயர்கூட அவ்வளவாகத் தெரிந்திராது. அந்த நாடு, இந்தக் கிழமை விடுதலை பெற்றுவிட்டது! விழாக்கோலமாம்! வீரக் களியாட்டங்களாம்! வீதிகளெல்லாம் கொடிகள், தோரணங்கள், வெற்றியை அறிவிக்கும் வளைவுகள்!

ஆப்பிரிக்க பூபாகத்தில், கானா நாட்டுக்குப் பக்கத்தில் உள்ள நாடு. சேரனும் சோழனும் செந்தமிழ் பாண்டியனும் ஆண்டிட்ட திருநாடாக இருந்தாலென்ன, இப்போது பந்தும் பட்டிலும், ஷாவும் நவாசும், நேரு தலைமையில் இருந்து ஆள்கிறார்கள். இதிலென்ன இழிவு என்று இங்கு காமராஜரும் கக்கனும் பேசுவது

கேட்கிறோம்.

டோகோலாந்து பாருக்கு நாகரீகம் வழங்கிய, பிரான்சின் ஆட்சிக்கு உட்பட மறுத்துவிட்டது. - ஈராயிரம் ஆண்டு இணையற்ற வரலாறு காட்டி அல்ல; எங்கள் நாடு எங்களிடம் என்ற அரசியல் அரிச்சுவடி காட்டி. இங்கோ கல்லாதாரைத் தள்ளு, தம்பி! கற்றறிந்தோர் மட்டும் என்ன பேசுகிறார்கள்!

என் மொழி! என் நாடு! என்ற பேச்சு, குறுகிய மனப்பான்மை என்கின்றனர்.

டோகோலாந்து, இமயம் முதல் குமரி வரை உள்ள பாரதம் அல்ல! நாம் கேட்கும் திருவிடத்தைக் காட்டிலும் அளவில், வளத்தில், மிகவும் குறைவானதுதான். ஆனால் அங்கு, வீரர்கள் கிளம்பினர், விடுதலைக் கிளர்ச்சியைத் துவக்க; அனைவரும் வீரர் ஆயினர்; வெற்றி கிடைத்தது; மணிக்கொடி

பறக்கிறது; மக்கள் மகிழ்கின்றனர்.

ஆப்பிரிக்க பூபாகத்தில் ஒரு பகுதிகூட அல்ல, தம்பி! மடகாஸ்கர். அடுத்துள்ள தீவு! அதுவும், இந்தத் திங்கள், விடுதலை பெற்றுவிட்டது, தனி அரசு ஆகிவிட்டது!

பிரெஞ்சுப் பிடியிலிருந்த இந்தத் தீவு விடுதலைக் கிளர்ச்சியைத் தொடங்கிய உடன், பலமான, பயங்கரமான தாக்குதலைப் பிரான்சு அவிழ்த்துவிட்டது. பல ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். எத்துணை கொடுமைக்குணம் இருப்பினும், எத்தனை காலத்துக்குத்தான், படுகொலை செய்தபடி, ஒரு ஆதிக்கம் இருக்க முடியும்?

எம்மைவிட்டா விலக விரும்புகிறீர்கள்? விலகினால், ஒரு உதவியும், துளிவசதியும் கிடைக்காது. ஆற்றுவாரற்று அலைய நேரிடும். தேம்பித் தவிக்க வேண்டிவரும்.

தனி அரசு நடத்த என்ன தகுதி இருக்கிறது?

வீணாகக் கெட்டுப்போக வேண்டாம். வேண்டியதைத் தருகிறோம்.

பிரான்சு, ஆசைகாட்டிப் பார்த்தது; அச்சமூட்டிப் பார்த்தது. மடகாஸ்கர் பணிய மறுத்தது; விடுதலை பெற்றுவிட்டது தீவு, தம்பி! தனி அரசு ஆகிறது!! திருவிடம் தேம்பித் தவிக்கிறது!! ஏன்?

தம்பி! ஊட்டி சென்று என்ன பயன்? விடுதலை பெற்ற தலங்கள் சென்று, வீர உணர்ச்சி பெறவேண்டும்; விடுதலைப் போரினை வீரத்துடன் நடாத்திக் கொண்டுள்ள இடங்களைக் காணவேண்டும், உறுதி வலுவடைய வேண்டும்.

தளைகள் உடைபட, தாயகம் விடுபட, இன்னுயிர் ஈந்திடவும் துணிந்து நிற்கும், வீரர்கள் உலவும் கோட்டம் செல்லவேண்டும்;

வாட்டம் போகும்; வல்லமை மிகும்; வெற்றிப்பாதை, பளிச்செனத் தெரியும்.

ஆனால், அங்கெல்லாம் செல்ல, டில்லி அல்லவா அனுமதி தரவேண்டும்! எங்கிருந்து கிடைக்கும்? மலாயா போகவே, இயலவில்லையே! தடை விதிக்கிறதே, டில்லி. மடகாஸ்கரும், டோகோலாந்தும், நயாசாலாந்தும், அல்ஜீரியாவும் செல்லவா முடியும்? முடியாது என்பதால்தான், தம்பி! டில்லியின் அனுமதி தேவைப்படாத முறையில், அங்கெல்லாம் சென்றுவர, உன்னை அழைத்தேன். அந்த இடங்களைப்பற்றி, அங்கு நடைபெற்றுக் கொண்டு வரும் விடுதலைக் கிளர்ச்சிகள்பற்றி, படிக்கப்படிக்க தம்பி! கோழையும் வீரனாவான், கூனனும் நிமிர்ந்து நிற்பான்!

கோலமாமயிலும், கூவிடும் குயிலும், மணமளிக்கும் தருவும் மாண்புமிகு மரபும்,

இறவாப் புகழ்பெறு இலக்கிய வளமும் இல்லாத நாடுகளெல்லாம், இன்று தனி அரசுகளாகின்றன. நாம் கேட்கும் திராவிடமோ, வரலாற்றுப் பேராசிரியர் துணை நிற்பினும், இலக்கிய விற்பன்னர்கள் சான்றுதேடித் தரினும், காமராஜருக்குப் பிடிக்கவில்லை. அவரிடம் சென்று, டோகோலாந்தைப் பார்த்தீரா? மடகாஸ்கர் தெரியுமா? டாக்டர் பண்டாபற்றிக் கேள்விப்பட்டதுண்டா? என்றெல்லாம் கேட்டு, விளங்காத காரணத்தால் அவர் என்னை வெறிச்சென்று பார்த்தால், நான் எப்படித் தம்பி! அதைச் சகித்துக்கொள்ள முடியும்! எனவேதான், உன்னிடம் கூறினேன். சிதம்பரம் ஜெயராமன் செவிபழுதானவனிடம் பாடிக்காட்டி, என்ன பலன்? உடம்புக்கு என்ன? வாய் ஏன் இப்படிக் கோணிக் கொள்கிறது, என்றுதானே கேட்பார் செவி கெட்டவர். அதே தான்! திராவிட

நாடாவது கீடாவது, எல்லாம் சும்மா! அவா பேசறதோடு, சரி, ஆமா... எனக்குத் தெரியாதா என்ன...? என்று பேசுகிறார், காமராஜர். அவர் முதலமைச்சராக வேறு இருக்கிறார்!!

எத்தனையோ இழிநிலைகளை, இடுக்கண்களை, தொல்லைகளைத் தாங்கிக்கொள்பவளல்லவா தமிழ்த்தாய்!

தன் மக்களிலே ஒரு மகன் ஊமையாகவோ, உன்மத்தனா கவோ இருந்துவிட்டால், தாய் என்ன செய்ய முடியும்? வெறுத்துத் தள்ளிவிடவா முடியும்! மற்ற மக்கள், சிறிது அருவருப்புக் காட்டினால்கூடக் கடிந்துரைத்து, "அவன் இருக்கும் நிலைகண்டு இரக்கமல்லவா காட்டவேண்டும். வாய் இல்லை பேச வகை இல்லை தெளிவுபெற நீதானே துணை இருக்க வேண்டும்'' என்றுதானே கூறுவார்கள். தாய் உள்ளம், இன்னமும் நேர்த்தியானது - எந்தப் பிள்ளை

ஊமையாகவோ உன்மத்தனாகவோ இருக்கிறதோ, அந்த மகனிடம் ஒரு தனிப்பரிவு (பரிதாபம் காரணமாக) காட்டுவாள்.”அவன் பேச மாட்டானே தவிர, எல்லோரைக் காட்டிலும் அவன்தான் புத்திசாலி! பைத்தியம் போலக் காணப்படுவானே தவிர பெரிய வேதாந்தி’’ என்று பேசும் தாயும் உண்டு.

அப்படியும் உண்டா என்று யோசிக்கிறாயா, தம்பி!

இந்த நாட்டுக்குத் தமிழ்நாடு என்ற பெயர்கூட வைத்திட மனமுமின்றி இருக்கிறார் காமராஜர். ஆனால், அவரிடம் உள்ள ஆசையால், பெரியார், பச்சைத் தமிழர் என்றல்லவா அவருக்குப் பட்டம் சூட்டுகிறார். தாய் உள்ளம் இதனினும் நேர்த்தியானதாகத் தானே இருக்கும். ”எனவேதான், தாயே! உன் கரங்களில் தளைகளா? நான் இருக்கிறேன் தளைகளை உடைத்திட! என்று கூறும் தன்

மக்களிடம் காட்டும் பரிவினைவிட, தளையா? என்ன தளை இரும்பாபரணமல்லவா அது!! தங்கமாக இருந்தால் திருடுபோய்விடும்! இது இரும்பு! ஒரு பயலும் திருட வரமாட்டான்!! இருக்கட்டும் தளை!! என்ற பாவனையில் அரசியல் பேசும், தன் அருமருந்தன்ன மகனாம் காமராஜரிடம் பற்றுவைத்து முதலமைச்சராக்கியுள்ளார், போலும்.

”மற்றப் பிள்ளைகள் பரவாயில்லை. பதவி இல்லை என்றாலும் உலகிலே, அவர்கள் நற்பெயரெடுக்க முடியும், நற்பணி புரிய முடியும்; பாபம்! இந்தப் பிள்ளை அப்படி அல்ல! மந்திரிப்பதவி இருந்தால்தான், நாலுபேர் மதிப்பார்கள்; ஆனால்தான், பதவி அந்தப் பிள்ளைக்கு இருக்கட்டும் என்கிறேன்; இது விளங்கவில்லையா?’’ என்றுகூடக் கூறக்கூடும்.

ஆனால், தம்பி! ஒரு குடும்பத்தை

அடுத்துக் கெடுக்கத் திட்டமிடும் சூழ்ச்சிக்காரர் என்ன செய்வார்கள் தெரியுமோ? எந்தப் பிள்ளை, ஊமையாகவோ, உன்மத்தனாகவோ இருக்கிறதோ, அந்தப் பிள்ளையிடம், தந்திரமாகப் பேசி, சொத்துக்களைத் தம் பேருக்கு எழுதி வாங்கிக்கொள்வர்.

அதுபோலத்தான், இப்போது, வடநாட்டு ஏகாதிபத்தியம், காமராஜரின் பேச்சினைத் தனக்குத் துணையாக்கிக்கொண்டு, நம்மை அடக்கமடக்க, "காமராஜர், திராவிடர்தானே! அவரே, திராவிடநாடு வேண்டாம் என்கிறாரே!'' என்று பேசி வருகிறது.

"ஐயா! அது தெளிவில்லாத பிள்ளை'' என்று கூறுவது குடும்பத்துக்கு இழுக்கல்லவா! அதனால்தான், நாம் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திண்டாட வேண்டி இருக்கிறது.

விடுதலைக் கிளர்ச்சியை வலுப்பெறச் செய்யும் முயற்சியில், காமராஜர் ஈடுபடும் வரையில் காத்திருக்க முடியுமா! ஆகவேதான், தம்பி! நீயும் நானும் அவரால் ஏற்படும், இடையூறுகளையும் சமாளித்துக் கொண்டு விடுதலைக் கிளர்ச்சியை முறுக்கேறியதாக்க வேண்டி இருக்கிறது. அதற்காகவே விடுதலைக் கிளர்ச்சி நடாத்திய தலங்களைக் காண அழைத்தேன். கண்டது போதும் என்று இருந்துவிடாதே. தலங்கள் வேறு பலவும் உண்டு. கண்டு, மற்றவர்க்கும் கூறிடு; அணிவகுப்பில் கொண்டுவந்து சேர்த்திடு.

அன்புள்ள

அண்ணாதுரை

2. தென்னகம் பொன்னகம்

தாயும் மகனும், கருத்துக் கதை -

தமிழ் மரபு மறக்கப்பட்ட சோகம் -

டில்லியின் அதிகாரம்

தம்பி!

வழக்கப்படி, இயலாதார், நான் அடுக்குமொழி கூறுகிறேன் என்று அங்கலாய்த்துக் கொள்ளட்டும் - எனக்கென்னவோ, நாளெல்லாம் நாம் அனைவருமே, ”தென்னகம் பொன்னகம்’ என்று கூறிக், கூறும்போதே கிடைத்திடும் தேனினுமினிய சுவையினைப் பெற்றிட வேண்டுமெனத் தோன்றுகிறது. உண்மையினை உணராதாரும், உரிமை உணர்ச்சியினைப் பெற்றிடாதவரும், நாம் கூறுவதை வெற்றுரை என்று

பழிக்கின்றனர்; உணர்ந்த பின்னும் பழித்துப் பேசிடின், உள்ளபடி கவலையும் ஓரளவு கலக்கமும் நமக்கு ஏற்படவேண்டும்; ஆனால், நமது இலட்சியத்தை வெற்றுரை என்று கூறுவோரில் மிகப் பெரும்பாலோர், உண்மையினை உணராதார்; எனவேதான், அவர்தம் கூற்று, கூச்சலளவிலே வளரும் போதுகூட எனக்குச் சீற்றம் பிறப்பதில்லை. நாம் எதை அறிந்து, அகமிக மகிழ்ந்து உள்ளம் நெகிழ்ந்து உணர்ச்சி வயப்பட்டிருக்கிறோமோ, அதனை அவர்கள், இன்னமும் அறிந்துகொண்டாரில்லை; அதனால்தான் அவர்கட்கு, எழுச்சி ஏற்படவில்லை. உண்மையை அவர்கள் இன்னமும் உணரவில்லை என்பதுமட்டுமல்ல, உண்மை அல்லாத ஒன்றினை அவர்கள் மிகப் பெரிய உண்மை, மறுத்திடவொண்ணா உண்மை என்று நம்பிக்கொண்டும்

உள்ளனர்; எனவேதான், அவர்களிடம் எழுச்சி ஏற்படாமலிருப்பது மட்டுமல்ல, நமது பேச்சினைக் கேட்டதும், சீற்றமேகூட வந்துவிடுகிறது. சிறுமதியாளர் என்று நம்மைச் சினந்து பேசுகின்றனர்; குறைமதி அவர்தம் கோபத்தைக் கிளறியும் விட்டுவிடுகிறது. என் செய்வர்!

"ஐயய்யோ மகனே!' என்று அலறியபடி ஓடோடிவந்து, கீழே வீழ்ந்து துடித்துக் கொண்டிருக்கும் தன் மகனைக் கண்டு, கோவெனக் கதறுகிறாள் தாய். மகன், பேச்சு மூச்சற்றுக் கிடக்கிறான். மரத்தின் உச்சியிலிருந்து கால் இடறிக் கீழே வீழ்ந்தான். கனி பறிக்கத்தான் சென்றான், கருந்தேள் கொட்டிவிட்டது, வீழ்ந்தான் கீழே: கீழேயோ ஓர் கருங்கற் பாறை; பாறையிலே மண்டை மோதிற்று; மோதவே,

மூளை குழம்பிப்போய்விட்டது; நினைவு அழிந்துபட்டது; தன்னைத் தூக்கி மடிமீது வைத்துக்கொண்டு அழுபவள், தன்னைப் பெற்றவள் என்பதுகூடத் தெரியவில்லை அவனுக்கு; வெறிச் சென்று பார்க்கிறான்; விவரம் தெரியாமல் பேசுகிறான்; எழுந்தோட முயற்சிக்கிறான்; இளிக்கிறான்; எதிர்ப்பட்டோரை இடிக்கிறான்.

மகனுடைய நிலை கண்டு, தாய், மேலும் கதறுகிறாள். "மகனே! மகனே! இப்படிப் பாரடா, அப்பா! இதோ, பார்! ஒரு ஆபத்தும் இல்லை, உனக்கு; நான் இருக்கிறேன், உன்னைக் காப்பாற்ற! என்னைப் பாரடா, மகனே! இப்படிப் பார்! என் முகத்தைப் பார்!'' என்று பேசுகிறாள்... நினைவு இழந்தவனோ இடிஇடியெனச் சிரித்துவிட்டு,"இவள் எப்படி இங்கு வந்தாள்? கடை வீதியில், ஆப்பம் சுட்டு விற்கும் அன்னமல்லவோ, இந்த

மூதாட்டி? இவள் என்னைத் தன் மகனென்று சொல்கிறாளே'' என்று கூறுகிறான்; கைகொட்டி நகைக்கிறான்; கூடி நிற்போரைக் கண்டு, "காணீர் இவள் பேதமையை! நான், இவள் மகனாம்!'' என்று கூறிக்கெக்கலி செய்கிறான்.

மரத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்ததால், நினைவு அழிந்துவிட்டது. பெற்றெடுத்த தாயையும் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை, என்பதைத் தாய் தெரிந்துகொள்கிறாள். சொல்லொணாத் துயரம் இதயத்தைப் பிய்த்தெறிகிறது; எனினும் இந்தச் சமயம், புலம்ப அல்ல, மகனுடைய மனக்குழப்பத்தைப் போக்கும் மருந்துதேட, என்பதனை உணர்ந்து, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "ஆமடா மகனே, ஆமாம்! நான் ஆப்பம் சுட்டு விற்கும் அன்னம்தான். உன் அன்னை அல்ல.''

என்று கூறி, அவனைச் சாந்தப்படுத்தி, தக்கதோர் மருத்துவனை நாடி, அவர் தந்திடும் மூலிகையினை முறை தவறாதபடி பயன்படுத்தி, குளிர் நீரில் குளிப்பாட்டியும், குறிஅறிந்து மருந்தூட்டியும், மனம் கோணாமற் பேசியும், மகனைக், கண்ணினைக் காத்திடும் இமை எனக் காத்துவருகிறாள். மனக்குழப்பம் நீங்குகிறது: நைந்து போயிருந்த நினைவுத்தொடர், மீண்டும் சரியாகிவிடுகிறது; தூசி துடைக்கப்பட்ட கண்ணாடி போலாகிறது மனம்; கூட இருந்து, இன்முகங் காட்டி மருந்தூட்டி வருபவள், தன் தாய் என்பது தெரிகிறது; உடனே உணர்ச்சி வயப்பட்டு தாளைப் பற்றிக்கொண்டு, தழதழத்த குரலில்,"தாயே! தாயே! நாயேன் செய்த பிழை பொறுத்திடுவாய்'' என்று கூறுகிறான். "மீண்டும் பெற்றேன் என் மகனை'' என்றெண்ணிப் பூரிக்கிறாள் தாய்.

இடையே ஓர் கதையோ? அது எற்றுக்கோ! என்கிறாயா தம்பி! கதை அல்ல. கருத்து விளக்கம், கதை வடிவம்.

கனி பறிக்கச் சென்றவனைக் கருந்தேள் கொட்டிடக், கால் இடறிக் கீழே வீழ்ந்து பாறையிலே மண்டை மோதி, மனம் குழம்பிப்போய்த், தாயைக்கூட அடையாளம் தெரிந்து கொள்ளாதிருந்த மகன்போலப் புகழேணியின் உச்சி சென்ற தமிழ் இனம், நச்சரவம் போன்ற பிற இனத் தொடர்பினால் தாக்கப்பட்டுத் தடுமாறிக் குப்புறக் கீழே வீழ்ந்து, அதிர்ச்சியினால், தன் மரபு குறித்த நினைவும் கெட்டு, தாயகம் எது என்பதனையும் மறந்து, மனம் குழம்பி, வேறோர் பூமியினைத் தாயகம் என்று குளறிட நேரிட்டது.

பரணிபாடித் தரணி ஆண்ட தமிழ்

இனமல்லவோ, நீ? என்று கேட்ட காலை, "தாசன் நான்! தமிழில் பேசுகிறேன், எனினும் நான் வணங்கும் தெய்வங்களுக்கு உகந்த மொழி சமஸ்கிருதம், அந்த வடமொழியே, தேவபாஷை! என் நாடு பாரதம், இமயம் முதல் குமரிவரை உள்ளதோர் புண்யபூமி!'' என்று கூறலானான், தடுமாறித் தவித்த தமிழன். விந்தியம் மறந்தான், இமயம் நோக்கித் தொழுதான். காவிரியின் புகழ்பாடத் தயங்கினான் - கரம்புகளைக் கழனிகளாக்கி வாழ்க்கையை வளமாக்கிய பொன்னியை மறந்தான், கண்காணாத் தொலைவினிலே ஓடிடும் கங்கையினைப் புகழ்ந்து, கர்மம் யாவும் நீக்கிடும் புனித கங்கை என்று போற்றிடலானான். சேரனையும் சோழனையும் செந்தமிழ்ப் பாண்டியனையும் தன்முன்னோர் என்று கூறக் கூசினான், இக்ஷ்வாகு பரம்பரை, ரவிகுலச் சோமன் என்று

பேசிடத் தலைப்பட்டான். தொல்காப்பியம் என்றால் என்ன? என்று கேட்டிடவும், பாகவதம் படித்திடவும் முற்பட்டான்!

பெற்ற தாயை அறிந்து கொள்ள முடியாமல், ஆப்பம் சுட்டு விற்கும் அன்னம் அல்லவோ? என்று கேட்ட நினைவு இழந்த மகனைவிட, இரங்கத்தக்க நிலையினைப் பெற்றான், தமிழன்.

அவன் நிலையினை மேலும், அழுத்தமானதாக்கிடத்தக்க தோர் சூழ்நிலை வேறு உருவாயிற்று; ஆங்கில அரசு நம்மைப் பிடித்துக்கொண்டது. அதனை அகற்றவேண்டி, அனைவரையும் ஒரு முகாமுக்குள் கொண்டுவர வேண்டியதாயிற்று. ஆகவே, தமிழ் இனம் பிற இனம், தமிழ் மரபு மற்றையோர் மரபு என்பனபற்றிப் பேசவும், எண்ணிடவுங்கூட நேரம் இல்லை; வெள்ளையன் அந்நியன்;

அந்நியன் விரட்டப்படவேண்டும்; அதற்கு வீரம் மிகவும் வேண்டும்; அறிவாற்றல் கொண்டோர் அனைவரும் ஒன்று திரண்டு நின்றிடவேண்டும்; அதிலே வடக்கு என்றோ தெற்கு என்றோ பேதம் பேசுதல் ஆகாது என்று "தேசியம்' பேசப்பட்டது: அந்தத்"தேசியம்' ஏற்றுக்கொள்ளவும் பட்டது. எனவேதான், வங்கத்து சட்டர்ஜியும், வலங்கைமான் சத்தாரும், பாஞ்சாலத்து லஜபதியும், பாஞ்சாலங்குறிச்சி சிதம்பரனாரும், அலகாபாத் மோதிலாலும், சேலத்து ஆச்சாரியாரும், பம்பாய்ப் பட்டினத்து வாடியாவும், ஈரோட்டுப் பெரியாரும், கவிஞர் தாகூரும், கர்மவீரர் கலியாணசுந்தரனாரும், முகுந்தலால் சர்க்காரும், சர்க்கரைச் செட்டியாரும் - என்று இப்படிப் பலரும் ஒன்றுபட்டு நின்றனர்; ஒருபொது நோக்கத்துக்காக; பொது எதிரியை விரட்ட;

வெள்ளை ஆட்சியை நீக்கிட,

அதன் பயனாக நன்மை ஒன்று விளைந்தது, வெள்ளை ஆட்சி ஒழிந்தது.

எதிர்பாராத வகையில் தீமை ஒன்று வந்துற்றது; தமிழன், தன் இனம், மரபு, நாடு, மறந்ததே, அந்தத் தீமை.

அந்தத் தீமையின் விளைவாக ஏற்பட்டதே தடுமாற்றம், அந்தத் தடுமாற்றத்தினால், தமிழன் தமிழ்நாடு என்பதனை மறந்து, பாரதநாடு, இந்தியா என்ற கற்பனைக்கு ஆட்பட்டு, நிலைகெட்டு நிற்கலானான். தம்பி! நமது இயக்கம், இந்த நிலையினை மாற்றிட வெகுபாடு படவேண்டியதாயிற்று. மருத்துவனாகி, மனக்குழப் பத்தை நீக்கவேண்டிய வேலையில் ஈடுபட வேண்டிவந்தது. அதிலே ஓரளவு வெற்றி கிடைத்துள்ளது. தாயே! தாயே! என்று,

நினைவு திரும்பப் பெற்ற மகன் பாசத்தோடு பேசிடுவதுபோல, இப்போது, எவரும், தமிழ்! தமிழ் இனம்! தமிழ்நாடு! என்று பற்றுக்கொண்டு பேசிடக் கேட்கிறோம். பாசத்தைக் காட்டிக்கொள்ள முன்வருவது காண்கிறோம். தெளிவு பிறந்திடக் கண்டு மகிழ்ச்சிகொள்கிறோம்.

தமிழ் இனம்! மரபு! தமிழ் மன்னர்கள்! - என்றெல்லாம் பேசுவது! பத்தாம்பசலிப் பேச்சு என்று செப்பினார், கல்வித்துறை அமைச்சர் சுப்பிரமணியனார், சென்ற ஆண்டுகூட. அத்துணை முற்போக்காளரோ அமைச்சர் பெருமகனார் என்று கேட்டிடத் தோன்றும், சேரசோழபாண்டியர் குறித்துப் பேசப்படுவது கேட்டுமட்டுந்தான், இந்தக் கற்றறிவாளர், "செச்சே! ஈதென்ன, பத்தாம்பசலிப் பேச்சாக இருக்கிறதே'' என்று ஏளனம் செய்கிறார். அனுமார், மாகாளி, இராமாயணம், பாரதம்

போன்றவை குறித்துப் பேசப்படும்போது அல்ல!! அப்போது, அவர் நெஞ்சு நெக்குருகிக் கண்ணீர்மல்கி நிற்கும் காட்சி அளிக்கிறார்.

தமிழ் இனத்தை விழிப்புறச் செய்யும் ஆற்றல், சேரசோழ பாண்டியர் பற்றிய பேச்சு எழும்போது கிடைக்கிறது, அமைச்சர் அதனைத்தான் விரும்பவில்லை. பொதுவாக, ”பத்தாம்பசலி’ அவருக்குப் பிடிக்காது என்பதல்ல, பழமையை அவர் பஞ்சாமிருதமாகக் கருதிப் பருகித்தான் வருகிறார்.

தமிழ் இனம், மரபு பற்றிய பேச்சே, ”பத்தாம்பசலி’ என்று கூறிய, அதே அமைச்சர் பத்து நாட்களுக்கு முன்பு, தமிழ் இனமக்களைப் பழிக்கலாமா!! என்று எழுச்சி பொங்கிடக் கேட்டிருக்கிறார், ஒரு பொதுக்கூட்டத்தில்.

அமைச்சரை, மாற்றுக் கட்சியினர், ஏசுகின்றனராம்! அது குறித்துத் தமது கவலையைக் கொட்டிப் பேசுகிறார் அமைச்சர்.

“என்னைத் திட்டுகிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். தனிப்பட்ட முறையிலே, என்னைத் திட்டிக்கொள்ளட்டும். வருத்தமில்லை ஆனால், நான் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அமைச்சனல்லவோ! அந்த நிலையில் உள்ள என்னைத் திட்டுவது, தமிழ் இனத்தைப் பழிப்பதாகாதோ! அங்ஙனம் தமிழ் இனத்தைப் பழிக்கலாமோ!’’ - என்ற கருத்துப்படக்,”கனம்’ பேசியிருக்கிறார்.

தமது நோக்கம் போக்கு ஆகியவைபற்றி எவர் மறுப்புரை கூறினாலும், அது, அமைச்சருக்கு அவரை ஏசுவதுபோலத் தோன்றுகிறதேயன்றி, ஏசிப்பேசும் போக்கினை எதிர்க்கட்சிகள் கொண்டில்லை.

அந்த ஏகபோக உரிமை ஆளுங் கட்சியின் அறைபறை நாவினருக்கே உண்டு. எனவே, அமைச்சர், அது குறித்து ஆயாசப்படுவதிலே பொருளும் இல்லை, பொருத்தமும் இல்லை. ஆகவே, அவருடைய உரையில், அந்தப் பகுதியை நாம் பொருட்படுத்தவும் தேவையில்லை. அந்தப் பேச்சோடு பேச்சாக, அமைச்சர், தமிழ் இனம் என்று எடுத்துக் காட்டுகிறாரே, அதுதான், தம்பி! என்னை உலுக்கிவிட்டது. ஆச்சரியம் எனக்கு! ஈதென்ன, வேடிக்கை! ஏக இந்தியா பேசிடும் இணையிலா வீரர், பாரத நாட்டின் புகழ்பாடி மற்றையோரைச் சாடிடும் தீரர், தமிழ் இனம் என்று பேசுகிறாரே! எப்போது இவருக்கு இந்தப் பற்று ஏற்பட்டது? இவருக்குத்தான், தமிழன், வங்கத்தான், மராட்டியன், பஞ்சாபி, என்றெல்லாம் பேசுவது, பிற்போக்காளர் போக்கு என்ற பெருநோக்கு உண்டே! இவர்,

எதற்காகத், தமிழ் இனம் என்று பேசவேண்டும் - என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். ஒரு கணம், ஆச்சரியமே என்னைத் தாக்கிற்று. பிறகோ, என்னதான், "ஏக இந்தியா' பேசிவந்தாலும், இயல்பு அடியோடு அழிந்தா போய்விடும் - இன உணர்ச்சி உருக்குலைந்து இருக்கலாமே தவிர, ஒரேயடியாகவா அழிந்தொழிந்து போயிருக்கும். அவரும் தமிழர்தானே; மரபின் மாண்பு அதிகம் மங்கிட இடங்கொடாதிருந்துவரும் கொங்குநாட்டவர் அல்லவா! எனவேதான், தமிழ் மரபுபற்றிய நினைவு எழுகிறது!! என்று விளங்கிற்று.

தம்பி! அமைச்சருக்குங்கூட, இந்தத் தெளிவு ஏற்பட்டிருக்கிறது என்றால், மற்றையோர் குறித்துக் கூறவா வேண்டும். உதட்டளவில், "ஏக இந்தியா' பேசிடினும், அவர்தம் உள்ளத்திலே, தமிழ் இனம் என்று உணர்ச்சி இருந்திடத்தான் செய்கிறது -

சிறிதளவு உறங்கும் நிலை!! அந்த உறக்கத்தை நீக்கிடத்தான், உன் பணி!!

”ஏக இந்தியா’ பேசுவதும், அதற்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக்கொள்வதும், தாம் சுமந்து கொண்டுள்ள கடமை களிலே ஒன்று என்று, கருதிக்கொண்டு காரியமாற்றிவரும் அமைச்சர்களும், இன உணர்ச்சி பெறத்தக்க விதத்திலே, பலன் தந்துள்ள பணியினைத், தம்பி! நீ, பத்தே ஆண்டுகளிலே, வெற்றியுடன் நடத்திக் காட்டியிருக்கிறாய். தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்று வருகிறது, எனவேதான், தென்னகம் பொன்னகம் ஆகும் என்ற நம்பிக்கை என் போன்றாருக்கு.

என்ன அண்ணா! இப்போதுதான், ஜெர்மன் நாட்டு நிபுணர்கள், சேலத்து இரும்பு, இரும்புதான் என்று ஆராய்ந்து கூறி இருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. நீயோ, தென்னகம்

பொன்னகம் என்று திருப்புகழ் பாடுகிறாய்-!! என்று கேட்கிறாயா, தம்பி! கேட்கத்தான் செய்வாய். ஆனால் நான், காரணமற்றுக் கூறுவேனா? இன்றும் நமது நாட்டிலே இரும்பு தூங்கிக்கொண்டுதான் இருக்கிறது; ஆனால் துரைத் தனத்தில் உள்ள சிலர்போல மக்கள் தூங்கிக்கொண்டு இல்லை; விழித்தெழுந்து கேட்கிறார்கள்; வீர முழக்கம் செய்கிறார்கள். விலாநோகச் சிரித்து ஏளனம் செய்தவர்களெல்லாம் இன்று, தென்னகம் வளரத்தான் வேண்டும். வேண்டாமென்று கூறுவோமா நாங்களும் வலியுறுத்திக்கொண்டுதான் வருகிறோம் என்று பேசுகிறார்கள்.

தம்பி! தெற்கு வடக்கு என்று பேசுவது பத்தாண்டுகளுக்கு முன்பு கேலிக்குரியதாக கண்டனத்துக்கு உரியதாகக் கருதப்பட்டது, அறிவாய்; அறிந்து ஆயாசப்பட்டுமிருக்கிறாய்.

அறிவேன்.

இப்போது, தெற்குக் குறித்துப் பேசுவது, தென்னகத்துக்குத் தொழில் வளர்ச்சி வேண்டும், கனிப்பொருளைக் கண்டறிய வேண்டும், கனரகத் தொழில் வளரவேண்டும் என்று கேட்பது, எல்லா அரசியல் கட்சிகளுக்கும், தேவையான ஒரு பேச்சு ஆகிவிட்டது. கவனித்தனையா? காங்கிரஸ் தலைவர்களேகூட, இப்போது, இந்தப் ”பாணி’யில் பேசுவதிலே முனைந்து நிற்கிறார்கள். தூங்கிக் கிடக்கும் இரும்பினை, வெட்டி எடுத்து வெளியே கொண்டு வருவதிலே கிடைத்திடும் இலாபத்தைவிட, அதிக அளவு இலாபமல்லவா, இன்று காங்கிரஸ் தலைவர்களே, தென்னகம் குறித்த தங்கள் எண்ணத்தை, அச்சத்தை விட்டுத்தொலைத்துப் பேசுவது.

அவர்களுந்தான், பாபம், எதற்கென்று

பயப்படுவார்கள்?

தென்னகம் என்று பேசினால், மேலிடம், “ஏதேது! நீயுமா; கழகமொழி பேசுகிறாய். இதற்குக் கதர் ஒரு கேடா! இதற்கோ?”கனம்’ ஆக்கிவிட்டது. உமது உள்ளம், விரிவாக இருக்கும், வடக்கு, தெற்கு என்ற பேதபுத்தி உமக்கு ஏற்படாது, எமக்கு ஏன் இரும்புத் தொழிற்சாலை இல்லை; உரம் அத்தனையும் அங்குதானா உற்பத்தி செய்யவேண்டும்; இங்கு ஏன் கூடாது? என்றெல்லாம் கேட்கிற ”சின்னப்புத்தி’ உமக்கு ஏற்படாது; பாரதம்போல் உமது நோக்கம் விரிந்து பரந்து நிற்கும் என்றல்லவா எண்ணினோம்; எரிச்சலூட்டும் விதமாகப் பேசுகிறீர்களே! குறுகிய மனப்போக்கைக் காட்டுகிறீர்களே! கெடுமதி கொண்ட பின், அமைச்சர் என்று இருக்கலாமா? பாரதம் இதனைச் சகித்துக்கொள்ளுமா!!’’ -

என்று அறைவார்களே என்ற அச்சம், நமது அமைச்சர்களுக்கு. அந்த அச்சம் காரணமாக, வடக்காவது தெற்காவது என்று பேசி வந்தனர்.

ஆனால், தம்பி! நமது கழகம், தக்க காரணங்களைக் காட்டி, வாதாடி, மக்கள், இந்தப் பிரச்சினையை உணரும்படி செய்து விட்டது. பட்டிதொட்டிகளிலெல்லாம், கேட்கிறது, "வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது' என்ற முழக்கம். வளம் கொழுக்கிறது வடக்கே, வாட்டம் கொட்டுகிறது தெற்கே என்ற உண்மை, நல்லோர் உள்ளமெல்லாம் பதிந்துவிட்டது. அமைச்சர்கள் செல்லுமிடமெல்லாம், கேட்கிறது, எழுச்சி முரசொலி! அவர்கள், தமது கட்சியினருடன் கூடிப் பேசும்போதெல்லாம், இந்தப் பிரச்சினை முன்னிடம் பிடித்துக் கொண்டு, வாட்டி எடுக்கிறது. எண்ணிப் பார்த்தால், தெளிவாகத் தெரியும்.

அமைச்சரின் மேடை முழக்கம் முடிந்த பிறகு, அவருடன் உரையாடும் வாய்ப்புப் பெற்றோரிடம் அவர் பேசுவதாக இருப்பின், என்னென்ன பேச்சு நடைபெறும் என்பது.

□

"ரொம்பக் களைத்துவிட்டீர்கள்' என்கிறார் மின்சார விசிறி ஓடிக் கொண்டிருப்பதையும் மறந்து, விசிறி கொண்டு, பணிவிடை செய்தபடி, ஒரு கனவான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை' என்று உபகாரம் பேசுகிறார், அமைச்சர்.

"உமக்கு இருக்கும் களைப்பைவிடவா, அமைச்சருக்கு' என்று கேட்டுக் குத்துகிறார் காங்கிரஸ் தொண்டர். கனவான், அமைச்சர் வரவேற்பு விழாவுக்காக, நூறு எதிர்பார்த்துச் சென்று, இருபது மட்டுமே பெற்றதால் ஏற்பட்ட எரிச்சல் தொண்டருக்கு. தொண்டர்தம்

பெருமை கூறவும் போமோ என்ற அரசியல் அறிந்தவர் கனவான்; எனவே அவர், தொண்டரின் கேலிப்பேச்சுக்கு மறுப்புரை கூறாமல், இளிக்கிறார் புன்னகை என்று எண்ணிக்கொண்டுதான்.

"தொடர்ந்து ஒரு நாலு கூட்டம், இப்படிக் காரசாரமாக இருக்க வேண்டும். பயல்களுடைய கொட்டம் அப்போதுதான் அடங்கும்'' என்று பாராட்டுகிறார் தொண்டர்.

"ஆமாமாம்' என்று ஆமோதிக்கிறார் கனவான்.

"மாதத்துக்கு ஒரு கூட்டம், முறையாக நடத்த வேண்டும்'' என்கிறார் வக்கீல் வேலை பார்க்கும் பிரமுகர்.

"அடுத்த மாதம், கட்டாயம் வரவேண்டும்'' என்று கூறுகிறார் தொண்டர்.

"எப்படி முடியும்? அடுத்த மாதம், முதல்

வாரம், டில்லிக்குப் போகவேண்டுமே...'' என்கிறார் அமைச்சர்.

கனவான் சிரிக்கிறார். ஏனெனில், அவருடைய மோட்டார் ஓட்டி, காங்கிரஸ் அமைச்சர்கள், எதற்கும் டில்லிக்குச் சென்று வரவேண்டிய அவலநிலை இருப்பதைக் கண்டித்துப் பாடும் "காவடிப்' பாட்டை அவர் கேட்டிருக்கிறார்.

"என்ன விஷயமாக?' என்று குறுக்குக் கேள்வி போடுகிறார், வக்கீல்."உணவு மண்டலம் விஷயமாகத்தான்' என்று பதிலளிக்கிறார் அமைச்சர். தொடர்ந்து, உரையாடல் நடக்கிறது, சூடு பிடித்ததும்.

"என்ன சொன்னாலும் மண்டையில் ஏறமாட்டே னென்கிறது.''

"ஆமாம் புத்தி கூர்மையே கிடையாது.''

"புத்தி தீட்சணியம்

தென்னாட்டவருக்குத்தான்.''

"தென்னாட்டுக்காரர்கள் மட்டுமே துணைநிற்கா விட்டால், நாறிப்போயிருக்கும், எல்லாத்துறைகளும்.''

"வடக்கத்திக்காரன்களுக்கு, ஒரு விவரமும் புரிவதில்லை.''

"ஆமாம், வடக்கே எம். ஏ. படித்தவனை, இங்கே நம்ம மெட்ரிக் படித்தவன் மடக்கிவிடுவான்.''"பணம் சேர்க்கத் தெரியும், வடக்கே உள்ள ஆசாமிகளுக்கு.''

"தொழில் நுட்பம் தெரிகிறது, அங்கே இருப்பவர்களுக்கு.''

"எல்லாம் இங்கே மட்டும் தொழில் நுட்பம் தெரியாதா? தெரியும். பெரிய தொழில் நடத்தப் பணம் வேண்டும் கோடி கோடியாக. அது இல்லை இங்கே.''

”அது அந்த மார்வாடிகளுக்குத்தான் முடியும், பணம் தேட, பெற.''

“காரணம் என்ன? பெரிய பெரிய பாங்க் எல்லாம் அங்கே.'”'வெளிநாட்டுக் கடன்கூட, அங்கேதான்.''

”ஆமாம், வெளிநாட்டானும், வடக்கே உள்ளவர்களுக்குக் கிடைக்கும் பாங்க் வசதியைப் பார்த்துத்தான், கடன் கொடுக்கிறான்.''

”தொழில் ஆரம்பிக்க அனுமதி கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. டில்லிக்கு அல்லவா போகவேண்டி இருக்கிறது.''

”என்ன செய்வது, சட்டம் அப்படி இருக்கிறது.''

”என்ன சட்டம்! பெரிய சட்டம்! நமது குடுமியை அவனிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, சட்டம் சட்டம் என்று

பேசினால், என்ன பலன்.''

"அடித்துக் கேட்க வேண்டும், இனி.''"அதிகமாக அதட்டிக் கேட்டால், கிடைப்பதும் குறைந்து விடும்.'' எத்தனை நாளைக்கு அப்படிப் பயப்பட்டுக் கொண்டிருப்பது. நாம் பயப்படப் பயப்பட அவன் கொழுக்கிறான்.''

"அதைத்தான், அந்தப் பயல்களும் சொல்லுகிறார்கள் - வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்று.''

"இந்தக் கூச்சலும் இல்லை என்றால், நமக்கு இப்போது கிடைக்கிறதே இதுகூடக் கிடைக்காது.''

"அது ஒரு விதத்திலே நியாயம்தான். ஆனால் நாட்டைத் துண்டுபோடுவது சரியாகுமா? ஒற்றுமை கெட்டுவிடுமே.''

"ஒற்றுமை, ஒற்றுமை என்று நாம்தான்

பேசுகிறோம். வடக்கே பார்த்தீர்களா? ஒரு பம்பாய் பட்டினத்துக்கு எத்தனை மண்டைகள் உடைந்தன?''

"பழுத்த தேச பக்தர் ஆனேகூட, கிளர்ச்சி செய்கிறாராமே.''

"ஆமாமாம்! அந்தந்த இராஜ்யக்காரனும், தன் உரிமைக்காகப் போராடுகிறான்.''

"இப்படியே, போனால் என்ன ஆவது?''

"என்ன ஆகும்! திராவிட நாடு திராவிடருக்கே!''

தம்பி! இதே வாசகங்கள் பேசப்படுகின்றன என்று கூறவில்லை - இந்த முறையில், இந்தக் கருத்துப்படப் பேசப்படுகிறது. என்ன பொருள் என்கிறாய் இதற்கு? தடுமாறிக்கிடப்பவர்களும், தெளிவும் துணிவும் பெற்று வருகிறார்கள் என்பதுதான்.

துணிவு இல்லை இந்த அமைச்சர்களுக்கு! தென்னகத்தின் உரிமைக்காக வாதிட, போரிடத் துணிவு இல்லை என்று நமது கழகம் பேசிவருகிறதல்லவா?

அது, நமது அமைச்சர்களுக்கு இப்போதுதான், சுருக் கென்று தைத்திருக்கிறது. இரண்டு மூன்று மந்திரிகள், "நாங்கள் கோழைகள் அல்ல! வடநாட்டுக்கு நாங்கள் அடிமைகள் அல்ல! வடநாட்டுக்காரனிடம் நாங்கள் பயப்படவில்லை. அடங்கி நடக்கவுமில்லை. எங்களுக்கு என்ன அவர்கள் எஜமானர்களா? எங்களுக்கு எஜமானர்கள் இங்கே உள்ள மக்கள், வடநாட்டுக் காரரல்ல'' என்று பேசி வருகிறார்கள்.

வீரப் பேச்சு - ஒப்புக்குப் பேசினாலும் - கேட்கச் சுவையுள்ளதாகத்தான் இருக்கும். ஆனால், ஆட்சி முறை இருக்கும் விதம்,

இங்குள்ளவர்கள், டில்லியிடம் சென்று, கை ஏந்தவேண்டிய அடிமைத்தனத்தை ஏற்படுத்தி வைக்கிறது. அதை மீறியோ, புறக்கணித்தோ, அமைச்சர்கள் இயங்கவே முடியாது. கூட்டுக்குள் இருக்கும் பறவை, சிறகடித்துக் காட்டினாலும், வெளியேவந்து, விண்ணிலே பறந்திடவா முடியும்! அதுபோலத்தான், நமது அமைச்சர்களும், தமது வீரதீரம்பற்றி மேடையிலே ஆயிரம் முழக்கினாலும், நடைமுறையிலே கூண்டுக்குள் சிக்கிக்கொண்ட நிலையில்தான் உள்ளனர்.

இதை உணர்ந்து மக்கள் கேட்கும்போது, அமைச்சர்கள், சில வேளைகளிலே, உண்மையைக் கக்கியும் விடுகிறார்கள்.

"எங்களுக்கு உள்ள அதிகாரம் இவ்வளவுதான். இந்தக் காரியம் (டில்லி) மத்திய சர்க்காரிடம்தான் கேட்கவேண்டும்'' என்று, எதற்கெடுத்தாலும் இரும்புத்

தொழிற்சாலை துவக்குவதிலிருந்து, கரும்பாலை அமைப்பது வரையில், அரிசி கொள்முதல் செய்வதிலிருந்து புளி ஏற்றுமதியைத் தடுப்பது வரையில், கூறவேண்டி வருகிறது.

இது விளக்கம். நிலைமைக்கு விளக்கம்.

ஆனால், பிரச்சினைக்கு இது பரிகாரமாகாது.

பீடித்திருப்பது காசநோய் என்று மருத்துவர் கண்டறிந்து கூறிவிட்டால், நோயாளி திருப்தி பெற்றுவிட மாட்டான். அதற்கு, என்ன மருந்து? என்பதுதான் அவனுக்கு உள்ள கவலை. அதைத்தான் அவன் கேட்பான்.

அஃதேபோல, அமைச்சர்கள், டில்லிக்கு உள்ள அதிகாரம் பற்றியும், அந்த அதிகாரம் எப்படிக் கிடைத்தது என்ற சட்டவிளக்கத்தையும் கூறிவிட்டால், தெளிவு

கிடைக்கும்; ஆனால் மனக்குமுறல் அடங்கிவிடாது.

ஏன் அப்படி ஒரு முறை இருக்க வேண்டும்?

எல்லாம் உயிர்ப்பிரச்சினையையும், டில்லியிடம் ஒப்படைத்து விட்டு, ஏன், இங்கு செயலாற்ற முடியாதவர்களாக இருக்கிறீர்கள்?

அதிகாரமற்ற ஆட்சியால் என்ன பலன்?

முறையை மாற்றுங்கள்! புதுச்சட்டம் இயற்றுங்கள்.

நமது அரசு, முழு உரிமை பெற்றதாக அமைய வேண்டும். இவ்விதம், மக்கள் மன்றத்தில் இப்போதே பேசுகிறார்கள். இன்னும் சில நாட்களிலே, காங்கிரஸ் கமிட்டிகளிலேயே, வெளிப்படையாகப் பேசப்போகிறார்கள்.

தம்பி! தென்னகம் பொன்னகமாகும்

என்று எனக்கு நம்பிக்கை ஏற்படுவதற்குக் காரணம், நான், மேலே கூறியவைகளுக்கான அறிகுறிகளை, நிழலுருக்களைக் காண்கிறேன் என்பதுதான்.

இந்த நல்ல சூழ்நிலை மேலும் நேர்த்தியானதாக ஒரே ஒரு வழி உண்டு. அதுதான் 1962-ல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில், நாம் பெற்றுள்ள புதியவலிவினை விளக்கிடத்தக்க அளவிலே, வெற்றி பெற்றுக்காட்டுவது. நமது தேர்தல் முழக்கமே இதுதான், தம்பி! தென்னகம் பொன்னகம் ஆகவேண்டும் என்பதுதான்.

இனம், மரபு, வரலாறு என்பவை வழங்கிடும், உணர்ச்சியைப் பெற்றுள்ள, எழுச்சிபெற்ற எவருக்கும், ஏற்புடைய இலட்சியம் இது; தென்னகம் பொன்னகம் ஆக வேண்டும் என்பது, அந்த இலட்சியத்தை இங்கும் பரவிடச் செய்திடும் ஆற்றல்,

உனக்கு உண்டு. அறிந்து அகமகிழ்கிறேன் நான். அறிந்து அச்சமடைகிறார்கள், மாற்றார். தூற்றினால், நீ துவண்டுவிடுவாய் என்று எண்ணுகிறார்கள். தூற்றிய கனகவிசயன் தலைமீது கல்லேற்றிய சேரன், தமிழன்! அதனை நாமறிவோம்; நம்மை நடப்பிணமாக்கிட ஏக இந்தியா பேசிடும் ஏகாதிபத்திய வாதிகட்கு அது தெரியாது.

கல்லைத் தலையில் ஏற்றியது அந்த நாட்களில்.

இப்போது, தென்னகம் பொன்னகம் என்ற சுவைமிகு, பயன்தரும் சொல்லினை, அனைவர் நெஞ்சிலும் பதியவைப் பதுதான், நாம் மேற்கொள்ளவேண்டிய முறை.

கருவில் உருவாகி வரும் குழவி, காலால் உள்ளே மெள்ள உதைத்திடுவது உணர்ந்து, கவர்ச்சிமிகு புன்னகை புரிவாள்,

பூவை! தென்னகம் பொன்னகம் என்ற கருத்துக்கு நெஞ்சிலே இடமளித்துள்ளோர் அனைவரிடமும் காணப்படும் புன்னகை, அத்தகையது. புன்னகைக்குக் காரணம் என்ன? புதிய உற்சாகத்துக்குக் காரணம் என்ன? என்று கேட்போரிடம்,

தென்னகம் என்னகம்

தென்னகம் பொன்னகம்

தென்னகம் நல்லகம்

என்பதனை விளக்கிக் கூறு, தம்பி! பார்! பிறகு! படைதிரண்டிடும்! பகை மருண்டிடும்! வெற்றி பூத்திடும்! விழிகள் களிநடமிடும்! தென்னகம் பொன்னகமாகி நம்மை மகிழ்விக்கும்.

அன்புள்ள

அண்ணாதுரை

15-5-1960

3. எழுச்சி வெள்ளம்

தமிழ் மொழியின் தாழ்ந்த நிலை -

பண்டைய மேனாட்டு இலக்கியங்கள் -

இந்தித் திணிப்பு

தம்பி!

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, உலகைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரக் கிளம்பினார், ஹுவான் சுவாங் எனும் சீனப் பேரறிஞர். அவருடைய குறிப்புகள், இன்றும் வரலாற்றுக்கு அணியாக உள்ளன. அவர் பல நாடுகளிலே, இருந்துவந்த வளம், வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கிக் கண்டறிந்து, கூடுமான வரையில் மிகைப்படுத்தாமலும், குறைத்திடாமலும், தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நிகழ்ச்சிகளை, நிலைமைகளை மாற்றாமலும்,

தெளிவாக எடுத்துக் கூறினார். அவருடைய ஏடு இன்றும் பல பொருள்களை அறிந்து கொள்ளச் செய்திடும், அறியதோர் களஞ்சியமாக இருந்து வருகிறது.

"உலகிலே பல்வேறு நாடுகளையும் காணவிழைகிறேன். மக்கள், எப்படி எப்படி எல்லாம் வாழ்ந்து வருகிறார்கள், நாட்டுவளம் என்னென்ன வகையின உள்ளன? அரசு முறைகள் யாவை? நெறிகள் எவையெவை உள்ளன என்பனவற்றைக் கண்டறிய விரும்புகிறேன். சென்று வர ஒப்பம் அளியுங்கள், இறையே!'' என்று அவர் மன்னரைக் கண்டு கேட்டார்.

மாமன்னர், "டாங்' என்பவர், மகிழ்ச்சியுடன் ஒப்பம் அளித்தார்; பருகிடப் பானம் கொடுத்தார்! அற்புதமான பானம்!! பழரசமோ, பாகோ, பாலோ, தேநீரோ, அல்லது எந்த நோயும் அணுகாதிருக்கச் செய்யும்

மாமருந்தோ; மாமன்னர், தந்த பானம் யாதோ, என்றுதானே தம்பி! யோசித்துக் கொண்டிருக்கிறாய்.

ஒரு பிடி மண்ணை அள்ளி, பருகச் சாதாரணமான பானம் நிரப்பி இருந்த குவளையில் போட்டுப் பருகச் சொன்னார்.

மாமன்னரிடம் சென்று, மலை வனம் வனாந்தரங்களைக் கடந்து மண்டலம் பல சென்றுவர விழைகிறேன் என்று கூறுகிறார். ஒருவர் மணியும் பொன்னும், மருந்தும் பிறவும் கொடுத்து, அவருக்கு உற்சாகமளிக்க வேண்டியதன்றோ முறை. மண்ணைப் பானத்தில் கலந்து பருகச் சொல்வதா! ஈதென்ன பேதமை! என்று எண்ணிடவும், கோபித்திடவுங்கூடத் தோன்றும்.

மதியற்றோ, மண்டைக் கனத்தாலோ அல்ல, மாமன்னர் அதுபோலச் செய்தது.

உலகம் காணச் செல்கிறார், எந்தெந்த நாட்டிலே என்னென்ன எழில் இருக்கிறதோ, சீரும் செல்வமும் உளவோ, அவைகளைக் கண்டு, சீனத்திலே இல்லையே இத்தகைய சிறப்புகள் என்றெண்ணிச் சிந்தை நொந்து, தாயகத்தைத் தாழ்வாகக் கருதத் தலைப்பட்டு, நாட்டுப்பற்று அற்றவராகிவிட்டால் நல்லதல்லவே! நாடு பல சுற்றினாலும், "நம் நாடு' என்ற உணர்ச்சி பாழ்படலாகாதே! என் நாட்டிலே இல்லாத ஏற்றமும் எழிலும், பொழிலும், புதுமையும், வளமும் இங்கு இருக்கிறது என்று எண்ணத்தக்க விதமாக, பல நாடுகள் இருக்கலாம்; ஆனால், அவை,"என் நாடு' ஆகுமா? என்ற எண்ணம், எப்போதும் இருந்தாக வேண்டுமே! இவர், செல்லும் நாடுகளிலே, செம்பொன் ஓடுகள் வேய்ந்த மாடங்கள் இருக்கலாம், கட்டித் தங்கத்தைக் கொட்டி மகிழ்ந்திருக்கும்

கோமான்கள் இருக்கலாம், விண்ணை முட்டும் மலைகளும், மனதை மருட்டும் மாநதிகளும், செந்நெல் கொழிக்கும் வயல்களும், செந்தாமரை பூத்திடும் வாவிகளும், கிள்ளைக்கு மொழி அழகும், மயிலுக்கு நடை நயமும் கற்றுத் தருபவளோ இக் கன்னி என்று கவிஞர்கள் கூறத்தக்க பாவையரும் இருக்கலாம். அகழி சூழ்ந்த கோட்டைகளும், அவை எமக்கு எம்மாத்திரம் என்று கேட்டிடும் மதயானைகளும், கடுகிச் செல்வோம் களத்தை நோக்கி என்று கூறிடும் பரியும் பிறவும், காண்போருக்குக் கலக்கம் தரும் அளவு இருக்கலாம். பாய்ந்தோடி வரும் ஆற்று நீரிலே அழகுறத் தோன்றிடும் நுரையன்ன நிறம்கொண்ட துகில் இருக்கலாம் - ஆனால் இவை கண்டு இன்புற்று, இதற்கு ஈடோ எந்தன் நாடு! இத்துணை வளமுள்ள இஃதன்றோ நாடு; நான் பிறந்த பூமி குறித்து, எனக்கேயன்றோ

வெட்கமாக இருக்கிறது! - என்ற எண்ணம் உருவானால், நாட்டுப்பற்று நாசமாகுமன்றோ!!

இவரோ, நாடு பல செல்கிறார் காண; காண்பதால், சீனம் எனும் தாயகத்தின்மீது உள்ள பற்று அற்றுப்போய்விடக் கூடாதே! எனவே, இவருக்கு நாட்டுப்பற்றின் அருமையினை உணர்த்தியாக வேண்டும் என்று எண்ணினார், மாமன்னர் டாங்! எனவேதான், தாயகத்தின் மண்ணைப் பானத்தில் கலந்து பருகச் செய்து, பிறகு "வேற்று நாட்டவர் தந்திடவல்ல, கோடிச் செம்பொன்னையும்விட, பிறந்த நாட்டு மண் சிறந்தது அல்லவா?'' என்று கேட்டார்.

உலகு சுற்றி, அறிவினைப் பெற்றிட விரும்பினார், ஹுவான் சுவாங்; புறப்படும்போதே, பேரறிவு பெற்றுச் செல்க என்று கூறாமற் கூறி வழியனுப்பி வைத்தார் மாமன்னர்.

நாட்டுப்பற்று, பிற நாடுகள் காண்பதால் கெட்டுப்போகக் கூடும் என்று எண்ணினார் மாமன்னர்; ஆனால் நாடு பல சென்று காண்போருக்கு, அந்தந்த நாட்டு மக்கள், தத்தமது நாட்டினிடம் பற்று வைத்திருப்பதைக் காண்பதால், காண்போருக்கு, தம் தாயகத்தின்மீது உள்ள "பற்று' வளரும், குறையாது.

கண்ணைக் கவரும் வனப்பு சீமையில்; காடு சூழ்ந்த இடம், ஆப்பிரிக்க பூபாகம்! நவநாகரிகம் கொழிக்குமிடம் சீமை; காட்டுமிராண்டிக் கோலம் என்று கூறத்தக்க நடை உடை பாவனை ஆப்பிரிக்க பூபாகத்தில்! ஆடலழகிகள் ஆயிரமாயிரம் அங்கே! ஆவேசமாடிடும் அலங்கோலவதிகள் ஆப்பிரிக்காவில்!

பாங்குநிறை பாராளுமன்ற முறைகள் பரங்கியர் நாட்டில்; பழங்கால அமுல்

ஆப்பிரிக்காவில்!

எனினும், சீமை சென்று வாழ்ந்துவந்த, ஆப்பிரிக்க இளைஞர்கள் "செச்சே! நமது நாடும் ஒரு நாடா! காட்டுமுறை அல்லவா காண்கிறோம்! இந்த அழகும் அறிவும், ஆற்றலும், அங்கு ஏது' என்று எண்ணி நாட்டுப் பற்றினை நாசமாக்கிக் கொண்டாரில்லை! நாட்டுப்பற்று, கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

இவ்வளவு செல்வம் கொழிக்கிறது இங்கே; என் நாட்டிலே சீரழிவு அல்லவா உள்ள நிலைமை! இத்துணை புகழொளி வீசுகிறது இங்கே; என் நாடு, இருண்டல்லவா கிடக்கிறது! இவர்கள் இங்கு, வேற்றானுக்கு தங்க இடம் தருகிறார்கள், தகுதி பெற்றோருக்கு உதவியுமளிக்கிறார்கள்; ஆனால் அரசு நடாத்த, அனுமதிக்கின்றனரோ? என் நாட்டிலே, எவனெவனோ ஆளுகிறான்! எப்படியெப்படியோ ஆளுகிறான்! இங்குள்ள

மக்கள், இருக்க இடம், செய்யத் தொழில், வாழ வசதி பெற்று இருக்கிறார்கள்; என் நாட்டிலே மக்கள், மிருக வாழ்க்கையில் அல்லவா உள்ளனர்! இங்கு, நாட்டுப்பற்றும், உரிமை உணர்ச்சியும் ஊட்டப்பட்டு வருகிற நேர்த்தியுடன், என் நாட்டிலே எடுப்பார் கைபிள்ளையாகிடும் இழிநிலையும், எதற்கும் அஞ்சிடும் போக்கும், நத்திப் பிழைத்திடும் முறையும் இருக்கிறதே, அதனை, ஒப்பிட்டுப் பார்த்தால், செச்சே! எனக்கே வெட்கமாக அல்லவா இருக்கிறது! பிறநாட்டான் ஒரு சுடுசொல் வீசினாலும் இங்குள்ள மக்கள் சீறிக் கேட்கின்றனர்! என் நாட்டிலே உள்ளவர்களை; கருப்பர்! என்று இழிமொழியால் அழைக்கின்றனர்; சினம் கொள்வார் இல்லை!!

எமது நாடு, எமது மொழி, எமது கலை, எமது அரசு, எமது செல்வம் என்று இங்கு

எழுச்சி பொங்கிடும் நிலையில் பேசிடக் கேட்கிறோம்; இந்த ஆர்வம், எழுச்சி, பற்று, என் நாட்டிலே இல்லையே! ஏன்? ஏன்? - என்றுதான் எண்ணத் தலைப்பட்டனர்; எழுச்சியின் தூதுவராயினர்; தாயகம் திரும்பினர், தளைகளை நொறுக்கிட; ஒவ்வொன்றாக இன்று, விடுதலை பெற்றுவருகின்றன, ஆப்பிரிக்க பூபாகத்து, நாடுகள்! புத்தம் புது அரசுகள்!!

•

இன்று விடுதலைக் கொடியைப் பறக்கவிடும், இந்த நாடுகளை எல்லாம்விட, வரலாற்றுச் சிறப்புள்ள நாட்டிலே, நாம் பிறந்தோம்; எனினும் நமது இனம், அதற்குரிய மொழி, அதனால் கிடைத்திடும் வாழ்க்கை முறை எனும் எல்லாவற்றையும் அழித்து வருகின்றனர்; எதிர்த்து அல்ல, தம்பி! அணைத்து!!

வைதீகர்கள், ”எலும்பைப் பெண்ணாக்கிய மொழி, எம்மான் கழகத்தில் அமர்ந்து வளர்த்த மொழி’ என்று கூறிக் களிப்பூட்டுகிறார்கள்.

வரலாற்றுப் பேராசிரியர்களோ, ”இம்மொழி செம்மொழி; இயல் இசை நாடகமெனும் மூன்று வகையினதாக அமைந்த மொழி’ என்று கூறுகின்றனர்.

எனினும், அந்தத் தனிமொழி தத்தளிக்கிறது; தாதி வேலை பார்த்திடச் சொல்கிறார்கள், தருக்கர்கள்.

வேற்று நாட்டவரெல்லாம் கண்டு வியந்துரைக்கின்றனர், நம் மொழியின் தனிச்சிறப்புப் பற்றி; ஆயின் கோல்கொண்டோர், ”அம்மொழிக்கு, வெள்ளாட்டி வேலைதான்’ என்று கூறுகின்றனர். ஏதோ இதாகிலும் கிடைத்ததே என்று இளித்துக் கிடப்போரிடம் ஆட்சி சிக்கிக்

கிடக்கிறது.

தம்பி! செப்பேடுகளில், கல்வெட்டுக்களில், காண்கிறோம் தமிழ்மொழியை! என்ன பொருள் என்கிறாய்? சீரும் சிறப்பும் மிகுந்திருந்தது, "பேரும் புகழும்' பெற்றிருந்தது, நம் நாடு என்பதன்றோ பொருள்!

வெற்றிகளைக் குறித்திட, விருதுகளைத் தந்திட, செப்பேடுகள், கல்வெட்டுகள்!

இமயத்தில் கொடி நாட்டினான், கனகவிசயர் தலைமீது கல் ஏற்றினான், கங்கைகொண்டான், கடாரம் வென்றான், கலிங்கத்தை கதிகலங்கச் செய்தான், வாதாவி வென்றான், சிங்களம் சென்றான், வென்றான் - காவிரிக்குக் கரை அமைத்தான் - என்றெல்லாம், நமது இனத்தின் முன்னாள் ஏற்றத்தைக் குறித்திருக்கிறார்கள் - தமிழ்

மொழியில்.

செப்பேட்டுக்கும் கல்வெட்டுக்கும் தகுதிபெற்றுத் திகழ்ந்த தமிழ் மொழிக்கு இன்று அஞ்சல் அட்டையிலேகூட இடம் இல்லை தம்பி! ஆமாம்! என்று ஆச்சரியத்துடன் சிலரும், ஆமாம்! என்று ஆயாசத்துடன் பலரும், கூறிக் கேட்கிறோமேயன்றி, அப்படியா! ஏன்? என்று கேட்டுச் சீறி எழுந்து, கேட்டினை எதிர்த்து ஒழித்திட, யார் உளர்? எங்கே உளர்?

நெடுஞ்சாலைகளிலே உள்ள கற்களிலே, இந்தி! நெடுநல் வாடையின் சிறப்புப்பற்றி உரையாற்றிட ஆசிரியர் உளர், கல்லூரிகளில்!!

“கன்னித் தமிழ்!’ என்று புகழ் பாடுகின்றனர், புலவோர். எனினும்”கற்றிடுக இந்தியினை, பிழைத்திட அதுதான் வழி.’’ என்கின்றனர் அமைச்சர்கள். அவர்கள்

தமிழரே! ஐயமில்லை! ஆயின் அமைச்சராகி உள்ளனர்! அந்த நிலை கெடாதிருக்க, ஆட்டி வைக்கிறபடி ஆடிடும் போக்கினராகிவிட்டனர்!!

ஆச்சரியம், அம்மட்டோடு, இல்லை! எம்மைத்தான் மக்கள் விரும்பி, வாக்களித்து அரசோச்ச ஆணையிடுகின்றனர் என்று வேறு, அவர்கள் மார்தட்டிக் கூறுகின்றனர்; தலை குனிந்து கேட்டுக்கொள்ள வேண்டிய அளவுதான், எண்ணிக்கையில் பிற கட்சிகள் உள்ளன.

மொழியின் நிலையே இது எனின், மற்றத் துறைகளிலே என்னென்ன கொடுமைகள் ஏற்பட்டுத் தீரும் என்பதனை எடுத்தியம்பத்தான் வேண்டுமா?

•

இந்தி மொழி கட்டாயம் இல்லை; திணிக்கப்போவதில்லை; ஆட்சிமொழியாக

அவசரப்பட்டு ஆக்கிடப் போவதில்லை; ஆங்கிலத்தை உடனடியாக அறவே நீக்கிடப் போவதுமில்லை என்று ஆணவத்தை பதுங்க வைத்துக்கொண்டு, பேசிடக் கேட்கிறோம். எனினும், மெள்ள மெள்ளப் படரும் நோய் போல, இந்தி, எல்லாச் சந்து பொந்துகளிலும் நுழைகிறது, குழைகிறது, நம் தன்மானம் அழிக்கிறது.

தமிழகத்தில் மட்டுமே, இந்தி எதிர்ப்பு என்பது, பட்டுப் போகாத நிலையில், நீறுபூத்த நெருப்பு நிலையில் இருந்து வருகிறது.

வங்கம் போன்ற வேறு சில இடங்களில், வாதாட வல்லுநர்கள் உள்ளனர், வரலாற்றுச் சான்று காட்டிச் சாடுவோர் உள்ளனர், மொழிவளம் பற்றிய விளக்க உரையாற்றி, இந்தி மொழிக்குப் பொது மொழியாகிடும் தகுதி இல்லை என்று எடுத்துக் காட்டுவோர் உளர் - ஆனால், எமக்கு ஏன் இந்தி? எமக்கு ஏன்

ஒரு பொது மொழி? என்று கேட்டிடத் துணிவு எழவில்லை.

சுவிட்சர்லாந்து நாட்டினைக் காட்டி, பல மொழிகள் அங்கு, தேசிய மொழிகளாக உள்ளனவே, அதுபோல, இங்கும் பல மொழிகள் இருக்கட்டுமே, இந்தி மொழிக்கென, ஏன் ஓர் தனித்தகுதி தேடித் தருகிறீர்கள் என்று கேட்டு அறிவு கொளுத்தப் பார்க்கின்றனர்.

இவை அவ்வளவுக்கும், இந்தி புகுத்துவோர், ஒரே வரியில் சமாதானம் கூறுகின்றனர்; "உமது மொழி அழிக்கப்பட மாட்டாது; இந்தி மொழி, உங்கள் தாய்மொழிக்கென உள்ள இடத்தைப் பிடித்துக் கொள்ளாது; இந்தி, அகில - இந்திய உறவுக்காக, அகில - இந்திய ஆட்சியின் வசதிக்காக, அகில - இந்திய அலுவலகங்களுக்குத் துணையாக, இருக்கிறது,

வேறொன்றுமில்லை; மிரண்டுவிட வேண்டாம்; வெகுண்டு எழவேண்டாம்'' என்று கூறுகின்றனர்; அதுபோது, பாஞ்சாலத் தாராகட்டும், மராட்டியராகட்டும், வங்கத்தாராகட்டும், அந்த வாதம் சரியா, என்பதுபற்றித்தான் ஆராய்கின்றனரேயன்றி, போதுமான பாதுகாப்பு தமது ராஜ்ய மொழிகளுக்கு உள்ளனவா என்றுதான் கேட்கின்றனரேயன்றி, அகில - இந்திய அலுவலகங்களிலே, இந்தி பேசாதார்களுக்கு ஊறு விளைவிக்கப்படுமா என்று உசாவுகின்றனரேயன்றி, எமக்கு ஏன் அகில இந்திய ஆட்சி? என்று கேட்கிறார்களில்லை!!

தமிழர், மட்டுமே கேட்கிறோம், அதனை!

தேவையற்ற, தீதுபயக்கும், அகில - இந்திய ஆட்சி எனும் ஏற்பாட்டிலே எங்களைச் சிக்கவைத்தது ஏன்? சிக்க வைத்து விட்டு, அதிலே, இருந்திட வசதி

தேவை அல்லவா? அந்த வசதியைப்பெற, இந்தி அவசியமல்லவா? என்று பேசுவது, வெந்த புண்ணிலே வேல் சொருகுவதாகும் - வேண்டாம் இந்த விபரீதம்! - என்று கூறுகிறோம்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே ஏற்றம் பெற்றது, எமது மொழி! அம்மொழி போதும் எமக்கு, எமது அரசுக்கு! எனினும், தமிழர், தரணி எங்கணும் தொடர்பு கொண்டிட அறிவு திரட்டிட, வாணிபம் நடாத்திட, உறுதுணையாக, தமிழுடன் உலகப் பொது மொழியாம் ஆங்கிலம் போதும்! என்று உரைக்கிறோம்.

தொல்காப்பியம் முதற்கொண்டு, தூதுவரை உள்ள இலக்கியச் செல்வம், தமிழில் உளது!

இனி, ஆங்கில மொழியின்

துணைபெறின், அகில உலகப் பேச்சுத் தொடர்புக்கு மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும், இன்றுவரை மலர்ந்துள்ள கருத்துக்களை அறிந்து தொடர்பு கொள்ள வழி கிடைக்கிறது.

பண்டைய நாட்களில் பாங்குடன் விளங்கிய பாபிலோன், கிரீஸ், ரோம், சீனம், - காணலாம் ஆங்கில மொழி மூலம்!

கன்பூஷியஸ், சாக்ரடீஸ், பிளேடோ, அரிஸ்டாடில், காண்ட், மில் - போன்ற மெய்ஞ்ஞானிகளுடன் உரையாடி, உள்ளத்துக்கு உவகை தேடிடலாம், நெறிகளில் நேர்த்தி பெறலாம், ஆங்கில மொழியின் துணையால்.

உமார்கயாம் பாடலின் இனிமை, டாண்டே கவிதையின் கெம்பீரம், மில்டன் கவிதை காட்டிடும் உருக்கம், ஷெல்லி தந்திடும்

எழுச்சி, யாவும் பெறலாம், இன்புறலாம், பயன் பெறலாம், ஆங்கில மொழியின் அருந்துணைகொண்டு.

ஆர்க்கிமிடிஸ், கலிலியோ, நியூடன், ஈன்ஸ்டின் போன்ற விஞ்ஞானிகளின் விளக்கவுரைகளைப் பெறலாம், ஆங்கில மொழியின் துணைகொண்டு.

செனாகா, மார்லோ, ஷேக்ஸ்பியர், பென்ஜான்சன், மாலியர், பெர்னார்ட்ஷா - எனும் உலகப் பெரும் புகழ்பெற்ற நாடகாசிரியர்களின் நல்லுரை யாவும், ஆங்கிலம் அளித்திடும்.

ஸ்காட், டிக்கன்ஸ், பால்சாக், மாபாசான்ட், ஜோலா, டால்ஸ்டாய், ஹெமிங்வே, மாகாம், பெர்ல்பக் - என்பவர் போன்றாரின் சுவைமிகு கருத்தூட்டும் கதைகளை ஆங்கிலம் அளிக்கிறது!

மாக்கியவல்லியின் நரிக்குணமானாலும், மார்க்க அரேலியரின் வேதாந்தமானாலும், ராபஸ்பயரியின் முறையானாலும், ரூசோ தரும் அரசியல் முறையானாலும், வால்டேர் தந்திட்ட புரட்சிக் கருத்தானாலும், லெனின் நடாத்திய புரட்சிப் பெருங்காதையாயினும், எல்லாம் அறிந்திட, அவரவர், எந்தெந்த மொழியினில் எழுதினரோ, அத்தனை மொழிகளையும் கற்றுத் தீரவேண்டும் என்றில்லை - ஆங்கிலம் அறிந்திடின் அவை அனைத்தையும் அறியலாம்.

அலெக்ஸாண்டரின் படையெடுப்பிலிருந்து, அட்லியின் ஓய்வுவரையில், செங்கிஸ்கானின் வெறிச் செயலிலிருந்து நாசரின் வெற்றிவரையில், ஹுவான்சுவாங் நடத்திய பயணத்திலிருந்து தலாய் லாமாவின் "விஜயம்' வரையில், ஆங்கிலம் அறிவிக்கிறது.

நெப்போலியனுடன் நடமாடலாம், நெல்சனுடன் உரையாடலாம், கிளாஸ்டனைக் காணலாம், கிராம்வெலிடம் பேசலாம், மாஜினியைக் கண்டு விடுதலையின் மேன்மைபற்றிய விளக்கம் பெறலாம், கரிபால்டியைக் கண்டு வீரச்செயலுக்குத் தேவையான உணர்ச்சியைப் பெறலாம், சிசிரோவின் முழக்கம் டெமாஸ்தனிசின் பேராற்றல் கேட்கலாம், ஆங்கிலத்தின் துணையுடன். ஆங்கிலத்தின் துணையுடன்

அக்ராவில் நடமாடலாம், ஆக்ராவிலும் உரையாடலாம், பீகிங்கில் பேசலாம் பாரிசில் உலவலாம், மாட்ரிட்டானாலும் மாஸ்கோவானாலும், ஆட்டவாவானாலும் அங்காராவானாலும், நெபிள்ஸ் நகரானாலும் ரோம் நகர் எனினும், வா□ங்டனானாலும் டப்ளினானாலும், கற்றோர் உலாவும் எந்த இடமும் சென்று உறவாடலாம், உரையாடலாம்,

ஆங்கிலம் தெரிந்தால்!

தொல்லையை நீக்கிக்கொள்ளப் பயன்படவில்லை. எனினும், சென்ற திங்கள் நேரு பண்டிதர், சீனத்துப் பிரதமர் சூயென் - லாயுடன் உரையாட, ஆங்கிலம் உதவி செய்தது! பிரிட்டிஷ் மகாராணியுடனும், டாக்டர் நிக்ருமாவுடனும், துங்கு ரஹிமானுடனும் ஆங்கிலத்தில்தான் பேசினார். பழைய மாணவரே வருக! - என்று அவரை அவர் படித்த கல்லூரியில், ஆங்கில மொழியில்தான், இன்றைய மாணவரும் ஆசிரியரும், வரவேற்று உபசரித்தனர்.

அவர், தம்முடைய பேரப்பிள்ளைகளுடன் பேசுவதானாலும் ஆங்கிலம்தான் - ஏனெனில், அவர்கள், "ஐரோப்பிய நாடு' சென்று, கல்வி பயின்ற வாய்ப்பினர்!

நிலை இங்ஙனமிருக்க, இந்தியை,

நேரு துரைத்தனத்தார், ஏன் தூக்கித் தலைமீதுவைத்து சுமந்திடச் சொல்கின்றனர்? அகில இந்தியா எனும், ஏகாதிபத்தியத்துக்கு அது முத்திரை மொழி! அந்த முத்திரை பொறிக்கப்பட்டவர்களெல்லாம் டில்லியின் அடிமைகள் என்பது பொருள். அதற்காகவே இந்தியை ஏற்றுக்கொண்டாட வேண்டும் என்கின்றனர்.

எனவே, இந்தி மொழியைப் புகுத்துவதற்கு என்ன முறைகள் கையாளப்படுகின்றன என்பது பற்றி, மற்றவர் கவனம் செலுத்தி, முறைகளை மாற்றவோ, கடுமையைக் குறைக்கவோ, வாதாடு கிறார்கள் - அவர்களுக்கு அதுபோதும் - ஆனால் நாமோ, இந்தி மொழியை, எந்த நோக்கத்துக்காகப் புகுத்துகிறார்கள் என்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டியவர்களாகிறோம் - அந்த நோக்கத்தின் முழுப்பொருளையும், நமது

மக்கள் உணர்ந்து கொள்ளச் செய்தாக வேண்டிய பணியினைச் செய்யவேண்டிய வர்களாகிறோம் - அந்த நோக்கத்தை எதிர்த்துப் போரிட்டு இந்தியைக் கருவியாகக் கொண்டு, தமது ஏகாதிபத்தியத்தை வலுவாக்கிக்கொள்ள வேண்டும் என்று முனைந்து நிற்கும் டில்- ஏகாதிபத்தியத்தையே எதிர்த்துத், தாயக விடுதலைக்காக, தனி அரசு அமைப்புக்காகப் போராட வேண்டியவர்களாகிறோம்.

தெரிகிறதா, தம்பி! நம்முன் உள்ள பணியின் தன்மையும் கடுமையும்! தெரிந்து செயலாற்ற வேண்டும்!

கிளர்ச்சியில், இரத்தம் சிந்த, சிறைப்பட, உயிரிழக்க, உடைமை இழக்க, அச்சப்பட்டுக்கொண்டு ஓடி ஒளிந்திடும் இடுப்பொடிந்தவர்கள், நம்மிடம் இல்லை.

நமது தாய்மார்களேகூட, பத்தாண்டுகளுக்கு முன்பு, “மகன்...’ என்று விம்மிவிம்மித் துவக்கி,”சிறையில்!’ என்று முடித்து, கண்களைத் துடைத்துக்கொள்ளும் நிலையில் இருந்தனர்; இப்போது, ”என் மகன்கூடத்தான், எதிர்ப்பில் ஈடுபட்டான்; சிறை புகுந்தான்!’’ என்று பெருமிதத்துடன் கூறத்தக்க, நல்ல மனப்பக்குவம் பெற்றுவிட்டுள்ளனர்.

அதேபோது, இந்தியைப் புகுத்தி, நம்மை இழிநிலைக்கு இழுத்துச் செல்லும், ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாக உள்ள காங்கிரஸ் அமைச்சர்களோ, ”இவர்கள் எதிர்க்கிறார்கள்; கிளர்ச்சி நடத்துகிறார்கள்; ஜெயிலுக்குப் போகிறார்கள்; ஆனால், பொதுமக்கள் எங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள்; எமக்கே ஓட் அளிக்கிறார்கள்; எனவே

கிளர்ச்சிக்காரர்களுக்கு உண்மையான பொது மக்கள் ஆதரவு கிடையாது'' என்று பொய்யுரை பேசி, எண்ணிக்கை பலத்தை மட்டுமே ஜனநாயகம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் வெளியார்களை, நம்ப வைக்க முயல்வர்.

இந்த "இடுக்கி'யையும், நாம் அலட்சியப்படுத்தி விடுவதற்கில்லை.

ஆனால், நமது கழகம் இன்று வளர்ந்துள்ள நிலை, எதற்கும் துணியலாம் என்ற எண்ணத்தைத்தான் உறுதிப்படுத்திக் கொண்டு வருகிறது.

இதுநாள் வரையிலும், உணராது இருந்து வந்தவர்களும் கூட, இன்று, இந்தி மொழிப் பிரச்சினை, வெறும் மொழிப் பிரச்சினை அல்ல, நிர்வாகத்துக்காக ஏற்படுத்தப்படும் வழிமுறை அல்ல: ஒரு புதிய ஏகாதிபத்தியம் நீட்டிடும் சூட்டுக்கோல்!

இவரெல்லாம் எமது அடிமைகள்! நிரந்தர அடிமைகள் என்று உலகுக்கு காட்ட, சூடிடத் துடிக்கிறார்கள் - என்பதனை உணர்ந்து, உள்ளம் வெதும்பிக்கொண்டுள்ளனர்.

"இந்தி மொழி படித்தால்தான், அகில இந்திய அரசியலில், ஆட்சி இடத்தில், நிர்வாக அலுவலகங்களில், உலாவ, உறவாட, உரிமை பெற முடியும்'' என்று இங்குள்ள காங்கிரஸ் அமைச்சர்கள் செப்புகின்றனர்.

ஆப்பிரிக்காவிலே ஆணவ அரசு நடாத்தும் வெள்ளையன், கருப்பர் எங்கு நடமாடவேண்டுமென்றாலும், வெள்ளை அரசு தரும் அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டுதான் செல்ல வேண்டும் என்கிறான். அந்தச் சீட்டு இல்லை என்றால், போலீஸ் பிடிக்கிறது, சிறைக்கு இழுக்கிறது, மறுத்தால் சுடுகிறது.

ஆடவர் மட்டுமல்ல தம்பி! பெண்களும்கூட,

அந்த அனுமதிச் சீட்டுகளை, அடிமை முறிச்சீட்டுகளைக் கிழித்து எறிந்தனர், கொளுத்தினர், கொடுமைகளைத் தாங்கிக் கொண்டனர்.

அங்கு வெள்ளை அரசு, கருப்பருக்கு அனுமதிச் சீட்டு முறை வைத்திருக்கிறது; இங்கு காங்கிரஸ் ஏகாதிபத்தியம் "இந்தி' எனும் முத்திரை பொறித்துக் கொண்டால்தான், அகில இந்தியாவில், உலவலாம், உறவாடலாம், வசதி பெறலாம், - பிழைத்துப் போகலாம் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறது. என்ன செய்யப்போகிறாய்? என்ன செய்யச் சொல்கிறாய்? ஏற்கமாட்டாய், அடிமை முத்திரையை என்பதை நான் அறிவேன்; நாடு அறிய வேண்டுமே! அதற்கு என்ன செய்ய வேண்டும்?

மிகச் சிலர், மொழிக்காகப் போராடும்

துணிவினர்! அவர்கள் போராட்டமும் மிகச் சில நாட்களே நடந்திடும்! - என்று உண்மையாகவே, காங்கிரஸ் எதேச்சாதிகாரிகள் நம்பிக் கொண்டுள்ளனர்.

ஒருவர் இருவர்தான் உளர், என்றாலும் பரவாயில்லை, முயற்சி திருவினையாக்கும், சிறு பொறி பெரு நெருப்பாகும் என்ற மொழிகளை, நாடு அறியும்.

நாம், முறை கண்டறிந்து, அறப்போர் துவக்கினால், நாடு அறிந்து, கிளர்ந்து எழும்.

நாள்தோறும் நாம் காணும் மக்கள் கூட்டம், இதை உறுதிப்படுத்துகிறது.

துவக்கிட நாம், என்றால் தொடர்ந்து நடத்திட நாட்டவர் உளர் என்ற நிலை ஏற்படத் தக்கவிதமாக, சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

“ஐயனே! ஒரு துளி தண்ணீர்,

என்றென்றும் உலர்ந்து போகாதிருக்க என்ன வழி?'' என்று கேட்ட சீடனுக்கு, புத்தர்"அந்த ஒரு துளி தண்ணீர், கடலில் கலந்துவிட வேண்டும்'' என்று சொன்னார்.

தேர்த-லே, நமக்குக் கிடைத்திடும் வெற்றிகள் எண்ணிக்கையிலே மிகக் குறைவானதாக இருப்பதை மட்டுமே கணக்கெடுத்துப் பார்த்து, காங்கிரஸ் எதேச்சாதிகாரிகள், "இவர்கள் என்ன செய்ய வல்லவர்கள்? சிறு தண்ணீர்த் துளிகள்போல உலர்ந்து போவர்! ஒடுங்கிப்போவர்!'' என்று கூறித் துணிவு பெறுகின்றனர்.

எங்ஙனம் ஒரு துளி தண்ணீர், கடலுடன் கலந்துவிட்டால், அது உலர்ந்து போகாதோ, அஃதேபோல, நமது உணர்ச்சி, எழுச்சி, கிளர்ச்சி, மக்களின் உணர்ச்சி வெள்ளத்திலே சென்று கலந்திடும்போது, புத்தர் கூறினதுபோல, உலராதல்லவா?

நமது எண்ணமும் எழுச்சியும், மக்களின் எழுச்சியுடன், கலந்து உறவாடும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

ஒரு துளி தண்ணீர் அல்ல! மக்கள் மனதிலே பொங்கிக் கொண்டிருக்கும் எழுச்சி வெள்ளத்தின், சிறு திவளை, திராவிட முன்னேற்றக் கழகம் என்று அவர்கள் உணரப்போகிறார்கள் - நிச்சயமாக.

அன்புள்ள,

அண்ணாதுரை,

22-5-60

4. தீவில் தங்கியவன் கதை

உளவு வேலை -

பாரிஸ் மாநாடு -

அமெரிக்காவும் ரஷ்யாவும்

தம்பி!

கடும் புயலும், கடற் கொந்தளிப்பும் ஏற்பட்டுக் கலத்தைச் சுக்கு நூறாக்கி விட்டது; இருந்தோர் இறந்துபட்டனர்; ஒருவன் மட்டும் உயிர் தப்பினான். மக்களற்ற ஓர் தீவு சென்றான்; ஆண்டு மூன்று ஆகிவிட்டன; ஏதேனும் ஓர் கலம் வரும், தன்னைக் கண்டு அழைத்துச் செல்லும்; மீண்டும் ஊரில் உலவி உற்றாருடன் குலவி மகிழலாம் என்று ஒவ்வொரு நாளும் எண்ணுவான்; ஏங்குவான்!

எங்கும், பச்சைப் பட்டு

விரித்திருப்பதுபோலத் தீவு காட்சி தந்தது; பல வண்ணப்பூக்கள், பாடும் பறவைகள், சுவைமிகு கனிகள்; ஆலோலம் பாடிடும் அருவிகள், மென்காற்றைத் தரும் பூங்காக்கள், எல்லாம்தான் இருந்தன, அந்தத் தீவினில். ஆனால் இவைகளைப்பற்றிப் பேசி மகிழ, காட்டிக் களிப்பூட்ட, வேறு ஒருவரும் இல்லை! எதிரே, கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் கடல்! அதன் ஒ-, கே- செய்கிறதோ, தன்னை!! - என்று எண்ணத்தக்க விதத்தில், மேலே மேகக்கூட்டம்! சூழ, இருந்தவை, உற்று நோக்கிட மட்டுமே இடமளித்தன, உரையாட, உறவாட அல்ல!

கானம் பாடிடும் வானம்பாடியிடம், அவன் என்ன பேச முடியும்; சிறிது நேரம் "இனிய இசை' என்று மகிழ்ந்து கேட்கலாம்!!

ஏக்கம் அவனை வாட்டியதிலே, ஆச்சரியம் என்ன இருக்க முடியும். மூன்று ஆண்டுகள்

- ஆயிரம் நாட்கள் - தன்னந் தனியனாக ஒரு தீவிலே இருக்கிறான்!!

ஒரு நாள், கலம் ஒன்று நெடுந்தொலைவில் வருவது கண்டான், களிநடமாடினான்; கர்த்தரைத் தொழுதான்; கரத்தால் குறிகாட்டினான்; களிப்புடன் கூவினான்! கலம், அவன் இருக்கும் பக்கம் நோக்கி வரலாயிற்று! வாழ்வு, மீண்டும்! மக்களுடன் உறவாடும் நாட்கள், மறுபடியும்!! என்று எண்ணி மகிழ்ந்தான்.

கலத்திலிருந்து ஒருவன், படகேறித் தீவின் கரைநோக்கி வந்தான்.

வணங்கினான், வாழ்த்தினான், கட்டிப் பிடித்துக்கொண்டு, "கர்த்தரே'தான் உன்னை இங்கு அனுப்பிவைத்தார். என் "ஜெபம்' பலித்தது, ஏக்கம் தீர்ந்தது, மீண்டும் மனிதனானேன்! உன்னை என்றென்றும்

மறவேன்! என்னை வாழவைக்க வந்துள்ள தெய்வம், நீயே! என்றெல்லாம் கூவினான், குளறினான், குதூகலத்துடன்.

வந்தவனோ, ஒரு காகிதக் கட்டினைத் தந்து, உலகின் நிலை அறிவிக்கும் பத்திரிகைகள் இவை. படித்துப்பாரும். இதற்குள், நாங்கள், மற்றோர் பக்கம், ஒரு வேலையாகப் போய்விட்டுத் திரும்பி வருகிறோம். அதற்குள் இவைகளைப் படித்து முடித்துவிடலாம். உலகம் இன்றுள்ள நிலை தெரியும், புரியும்! புரிந்த பிறகும் உனக்கு இங்கிருந்து வந்துவிட விருப்பம் இருக்குமானால், உடன் அழைத்துச் செல்கிறோம் என்று உன்னிடம் கூறும்படி, எமது கலத்தின் காவலன், என்னை அனுப்பியுள்ளான் என்று கூறிவிட்டுப் படகேறிச் சென்றான்.

பத்திரிகைகளை, ஆவலுடன் பிரித்தான்,

படித்தான்.

புதிய படக்காட்சிகள் பற்றிய விவரம் கண்டான்; தனக்கு மிகவும் பிடித்தமான நடிகையரின் படங்களைப் பார்த்தான், பரவசமடைந்தான்.

நாடகம், இசை, நாட்டியம், நாகரிக நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகளைப் படித்தான், பேரானந்தம் பிறந்தது.

பிறகு, நாட்டு நிலை, அரசியல் நிலை, பொருளாதார நிலை, இவைபற்றிப் படிக்கலானான்; மகிழ்ச்சி உலரலாயிற்று; மருட்சி பிறந்தது.

உலகிலே, பல்வேறு இடங்களிலே, இல்லாமையால் தாக்கப்பட்ட மக்கள் படும் அவதி, அவர்களை அடக்கி ஒடுக்கிவைக்க ஆட்சியாளர் அவிழ்த்துவிடும் அடக்குமுறைகள், அந்த அடக்குமுறைகளை

எடுத்துக் காட்டி, ஆவேசமூட்டி, அந்த ஆட்சியினைக் கவிழ்த்திட எதிர்க்கட்சிகள் செய்திடும் முயற்சிகள், படுகொலைகள், சதிச்செயல்கள், அடுத்துக் கெடுத்திடும் அக்ரமம், அணைத்து அழித்திடும் பயங்கரம் - ஆகியவற்றினைப் பற்றிய விளக்கங்களைப் படித்தான் - நாடா, காடா இந்த இடங்கள்? என்று எண்ணத் தோன்றிற்று; அருவருப்பும் அச்சமும், அவன் உள்ளத்தை உலுக்கிடலாயின!

நில நடுக்கத்தால் ஏற்பட்ட நாசம் பற்றிய குறிப்பு, பெருவெள்ளம், தீ, ஆகியவற்றால் ஏற்பட்ட அழிவு, பஞ்சமும் நோயும் ஏற்படுத்திவிட்ட பாழ்நிலை ஆகியவை பற்றிய விவரம் படித்தான் - பயந்தே போனான்.

பாராளுமன்றங்களிலே நடைபெறும் பேருரைகள், நாட்டிலே செல்வம் பெருகிவருவதைக் காட்டுவனவாக இருந்தன. பத்திரிகையிலே மற்றோர் பகுதியில்,

பிழைப்புக்கு வழிதேடிக் கண்காணா நாடு சென்று கடுமையாக உழைத்தும் கதியற்றுக் கலங்கிடும் மக்கள் பற்றி, உருக்கமாக வரையப்பட்ட கட்டுரைகள் இருந்தன!

கர்த்தரின் கருணை பற்றிய பாசுரமும், அதற்கான பொருள் விளக்கமும் ஒரு பக்கம் இருந்திடக் கண்டான்; பிறிதோரிடத்தில், பெற்ற குழந்தையின் கழுத்தை நெரித்துச் சாக்கடையில் வீசிடும் "கன்னித்தாய்' பற்றிய குறிப்பு இருந்தது!

சீமாட்டி வாங்கிய வைரமாலையின் மதிப்புப்பற்றி, நிபுணர்கள் கருத்து வேற்றுமையை எழுதி இருந்தனர்; பசிக் கொடுமைக்காகத் திருடிய சிறுவனுக்கு இருபது சவுக்கடி கொடுத்திடச் சொல்லி, வழக்கு மன்றம் தீர்ப்பளித்ததைப் பற்றிய கருத்துக் கோவையும் காணப்பட்டது.

பிடிபட்ட வேங்கைபற்றிய செய்தியும், பிடிபடாத கொலைகாரனைப் பற்றிய தகவலும், ஒரே இதழில் இருந்திடக் கண்டான்.

கள்ளச்சந்தை நடத்துபவனுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்துப் பேசிய அமைச்சரின் அஞ்சா நெஞ்சத்தைக் கண்டு மகிழ்ந்தான்; அடுத்த பக்கத்திலேயே, அறுபத்து நாலுவகை பதார்த்தத்துடன், அமைச்சருக்கு, ஒரு கொள்ளை இலாபக்காரன் நடத்திய விருந்துபற்றிய விவரம் வெளிவந்திருக்கக் கண்டான்.

புதிதாகக் கட்டப்பட்ட அரசமாளிகைக்குச் செலவான பணத்தின் கணக்கு ஒரு பக்கம் தரப்பட்டிருந்தது; மற்றோர் பக்கமோ புற்றுநோய்க்குப் பலியானவர்களின் தொகை பெருகிவருவதைக் காட்டிடும், புள்ளிவிவரம் இருந்திடக் கண்டான்.

உளவு வேலை பார்த்துக்கொண்டே உறவாடும் போக்கினர் உயர் இடங்களிலே இருப்பதைக் கண்டான். இருக்கும் இடமிருந்தவண்ணமே இலக்குகளை அழித்திடும் போர்க் கருவிபற்றிப் பேசிப் பீதி கிளப்பிடும் பெருந்தலைவர்களின் சீற்றத்தைப் பார்த்தான். அவரவர் அவர்வழி என்ற கருத்தினைப் பேசிடும் அறிவாளரையும் கண்டான்; அடுத்த பலி எது என்று மோப்பம் பிடித்தலையும் வெறியரையும், பத்திரிகை படம் பிடித்துக் காட்டிற்று, மனிதகுலம் ஒன்றுதான் என்று பேசி, மதிப்புப் பெற்றிடும் மகான்களையும், இதழ்கள் பாராட்டின; கருப்பு, வெள்ளை, மஞ்சள், சிகப்பு என்று நிறபேதம் காட்டிடும் கொடியோருக்குக், கொடியும் படையும், கொற்றமும் ஏற்றமும் இன்னும் இருந்திடும் கொடுமையையும் காட்டின இதழ்கள்!

பிரித்துப் பிரித்துப் படிக்கிறான், தொல்லை நிரம்பிய உலகம், கொடுமை கக்கிடும் உலகம், அநீதி நெளியும் இடங்கள், ஆபத்துச் சூழ்ந்த நாடுகள் - இவைகளைத்தான் காண முடிந்தது.

அங்கல்லவா, போக வேண்டும்? என்று எண்ணினான் - உடல் பதறிற்று, உள்ளம் கொதித்திடலாயிற்று.

மரமும் செடியும், கொடியும் தழையும், இங்கு; எத்தனை காலத்துக்கு இவைகளைப் பார்த்தபடி இருப்பது என்று ஏக்கம் பிறக்கிறது; உண்மை. ஆனால், அங்கு? மாடமாளிகையும் மண்குடிசையும், பக்கத்துக்குப் பக்கம் உள்ளன; அன்புமொழி பேசுவோரும் அழித்தொழிக்கும் போக்கினரும், அடுத்தடுத்து உள்ளனர்; அங்கல்லவா செல்ல வேண்டும்? நிலநடுக்கத்தால் சாவோ, தீராத நோய் தாக்கி மரணமோ, மெள்ள மெள்ளக் கொன்றிடும்

பஞ்சம்தான் பீடித்துச் சாகடிக்குமோ - என்ன கதியோ, யாது முடிவோ! எனக்காக எது காத்துக்கொண்டிருக் கிறதோ - தடியோ, துப்பாக்கி முனையோ, கயவரின் கத்தியோ, காவலரின் கடும் சிறையோலியாதோ! - என்று எண்ணும்போது, அப்படிப்பட்ட ஆபத்துச் சூழ்ந்த இடத்திற்குச் செல்லத்தான் வேண்டுமா என்ற ஐயப்பாடு தோன்றுகிறதே! அச்சம் கூட ஏற்பட்டுவிடுகிறதே!! என்ன செய்யலாம்? போகலாமா? வேண்டாமா? இங்கேயே இருந்துவிடுவதா? அங்கு செல்வதா - என்று எண்ணினான், நெடுநேரம். பிறகோர் முடிவுக்கு வந்தான்! தீவிலேயே இருந்துவிடுவது என்று!!

□

தம்பி! யார் இவன், என்று கேட்கமாட்டாய். கருத்து விளக்கத்துக்கான, கதை வடிவம் என்பது உனக்குத் தெரியாதா, என்ன!

உலகம், இன்றுள்ள நிலைபற்றிய செய்திகள் பலவற்றைப் பார்த்திடுவோருக்கு, தீவே போதும், நாகரிக அரசுகள் உள்ளன என்ற விருதுகாட்டப்படும் நாடுகள் பலவும், இன்று எந்தச் சமயத்திலே, நாசத்தைக் கக்கலாம், எவரை அழித்திடலாம் என்று துடித்துக்கொண்டு, தொடை தட்டிக் கொண்டு நிற்கும் நிலை தெரிகிறது; தெரிவதால், அருவருப்பும் அச்சமும் மனதிலே புகுந்து குடையவும் செய்கின்றன. என் காலத்திலேயே, மற்றோர் போர் வந்து மூண்டுவிடும் போலிருக்கிறது என்று ஆச்சாரியார் பேசியிருக்கிறார் அல்லவா! அவ்விதம் எண்ணி, மருளத்தக்க விதமாகத்தான், உலகின் நிலையும், நடவடிக்கைகளும் உள்ளன.

சென்ற கிழமை கூடிய, பெருந்தலைவர்கள் மாநாடு, என்ன அலங்கோல நிலை

காட்டிற்று! கோடிக்கணக்கான மக்களின், நல்வாழ்வுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கும், அந்தப் பெருந்தலைவர்கள், அதிலும் குறிப்பாக இருவர் - இரு பெரும் நாட்டுத் தலைவர்கள் - கோபதாபத்துக்கு ஆட்பட்டுக், கூடிப் பேசவும் மறுத்துவிட்டனர், கண்டாயல்லவா?

அந்தத் தலைவர்களின் பேரப்பிள்ளைகள், பள்ளியிலே, என் புத்தகத்தைக் கிழித்தவனல்லவா நீ? உன்னோடு எனக்கென்ன பேச்சு! என்று சண்டை போட்டுக்கொள்கிறார்களோ இல்லையோ, இவர்கள், அதே முறையிலல்லவா, நடந்து கொண்டுள்ளனர்.

கோடி கோடி மக்கள், இவர்கள் கூடிப்பேசி, பகை ஒழியவும், பண்பு வளரவும், நேசம் மலரவும், நீதி தழைக்கவும் வழி காண்பர்! அச்சத்தாலும் அருவருப்பாலும் ஆதிக்க வெறி

உணர்ச்சியாலும் உந்தப்பட்டுப், பணத்தைப் பயங்கரப் போர்க் கருவிகளுக்குப் பாழாக்கும் முறை ஒழிந்து, மக்கள் அனைவரும் பசியின்றி, நோயின்றிப், பயமின்றிப், பண்புடன். கூடி வாழ்ந்திட வழி காண்பர் - பெரும் பொருளை அதற்கே செலவிடுவர் என்று எத்துணை ஆவலோடு எதிர்பார்த்து நின்றனர். இடையே உள்ளவர்களின் இறுமாப்பினாலேயே இடர்ப்பாடுகளிலே பெரும் பகுதி ஏற்பட்டுவிடுகின்றன. "மூலவர்கள் ஒன்றுகூடிப் பேசினால், மூடுபனி கலைவது போலப் பகை நோக்கு ஒழியும், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ள இயலும், அதற்காகப் பெருந்தலைவர்கள் கூடிப் பேசவேண்டும்'' என்று, பல காலமாகக் கூறப்பட்டது; ஆனால் கூடினர், பேச அல்ல; பேச முடியாது என்று கூறிவிட்டுக் கலைந்திட!

நேசக்கரத்தை நீட்டவேண்டிய

நேரத்தில்தானா, அமெரிக்கா, சோவியத் நாட்டின்மீது, வேவு பார்க்க விமானத்தை ஏவவேண்டும்!! கூடிப்பேச ஏற்றதோர், சூழ்நிலை அமைக்கும் செயலாகுமா, இது? ஏன் இந்த, நம்பிக்கையற்ற போக்கு, அவசர நடவடிக்கை?

விஞ்ஞானத்தின் துணையை, மற்ற எந்த நாட்டினையும்விட மிக அதிகமாகவும், வேகமாகவும், நேர்த்தியாகவும் பெற்று, உலகின் எந்தக் கோடியினையும் கண்டறிய, படமெடுக்க, வசதியினைப் பெற்று, செயற்கைக் கிரகங்களை அடுக்கடுக்காக அனுப்பிக் கொண்டிருக்கும் சோவியத் முறை, விஞ்ஞான வளர்ச்சியை மட்டுமா காட்டி வருகிறது! புதியதோர் வேவு பார்க்கும் முறை அல்லவா, அது!

அமெரிக்கா அனுப்பிய வேவு விமானம் பற்றி, வெகுண்டு பேசிவிட்டாகிலும்,

எதிர்காலம்பற்றிக் கலந்துபேச, மாநாடு நடத்தக்கூடாதா சோவியத்!

”முடியாது! முழங்காற்படியிட்டபடி, மன்னிப்புக் கேட்டாக வேண்டும், அமெரிக்கத் தலைவர்; அப்போதுதான், பேச இசைவேன்’’ என்று சோவியத் தலைவர் அறிவித்துவிட்டார்.

அதற்கு அமெரிக்கத் தலைவர் இணங்குவார் என்று எவரும், எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்த்தால் மாநாட்டுக்குப் பெருந்தலைவர்கள் மாநாடு என்ற பெயரே பொருந்தாது!!

ஆனால், ஏன், இருபெருந் தலைவர்கள் இந்த முறையில் நடந்து கொண்டனர்?

”கூடி வாழ்வது’ என்ற கொள்கைபற்றி இருவரும் பேசாத நாளில்லை. போர் அறவே கூடாது! மூண்டிடின், இது உலகை அழித்தொழிக்கும் போராகிவிடும் - என்று

இருவரும் உரைக்கின்றனர்; உணருகின்றனர்.

எனினும், இருவரும், தத்தமது போக்கினைத் துளியும் மாற்றிக்கொள்ள ஒருப்பட்டாரில்லை; மாற்றிக் கொள்வது தம் தரத்தைக் குறைத்துவிடும் என்ற தவறான ஓர் கருத்துக்கு அவர்கள் ஆட்பட்டுக்கிடப்பதால்.

பாலேடு திருடிய பூனைக்குட்டியை, என் தாய் கண்டு பிடித்து, அதைத் தூக்கி, அதே பாலேட்டிலே, பூனையின் மூக்கைத் தேய்த்துப் புத்தி புகட்டினார்கள் - நான் சிறுவனாக இருந்தபோது; அதுபோலத்தான், வேவு பார்த்த அமெரிக்காவுக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று விரும்புகிறேன் - என்று குருஷேவ், ஒரு கதையும் கூறியிருக்கிறார்.

தாயாருக்கு இருந்த கோபம், இப்போது இவருக்கும் இருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால், அன்று, அவருடைய அன்னை,

கோபத்தின் காரணமாக அர்த்தமற்ற காரியத்தைச் செய்ததுபோலவா, அகிலத்தில் அமைதி நிலவவேண்டும் என்ற அறிவு அறிந்த பருவத்திலுள்ள மகனும், செய்ய முற்பட வேண்டும்!!

பூனையின் மூக்கைப் பாலேட்டிலே வைத்துத் தேய்த்ததால், கோபம் குறைந்திருக்குமே தவிர, பாலேடு கூடியா இருக்கும்!! பூனை தின்றதுபோக, மிச்சமிருந்ததுமல்லவா, கெட்டுப் போயிருக்கும். தாயார், அதைச் செய்தபோது குருஷேவ், சிறுவர்! இப்போது?

□

“எமது மாபெருந் தலைவனின், வீரத்தைக் காணீர்! தன்மானம், உயிரினும் பெரிது! என்பதைத் தரணிக்கே எடுத்துக்காட்டிய, எமது இணையிலாத் தலைவரின் தரத்தை

மிஞ்ச முடியுமா, கூறீர்!! ஆணவம் பிடித்த அமெரிக்க அரசுக்கு, கொடுத்தார் ஓர் அறை! இறுமாப்புக்கொண்ட ஏகாதிபத்தியத் துக்குக் கிடைத்தது பலமான தாக்குதல்!! -" என்று சோவியத் மக்கள், குருஷேவை எழுச்சியுடன், பாராட்டத்தான் செய்வார்கள்.

"பதறுவது, பண்பாளரின் முறை அல்ல! துடுக்குத்தனமாகப் பேசியதைக் கேட்டும், துளியும் பதறாமல், பதிலுரைக்காமல், பண்புடன் நடந்துகொண்டார், எமது தலைவர்! பாரோரே! பாரீர்! அவர் வழி வந்து சேரீர்!!'' என்று ஐசனோவரை, அமெரிக்க மக்கள் பாராட்டி வரவேற்பர்.

ஆனால், பெருந்தலைவர்கள் எனும் பெருதற்கரிய இடத்தைப் பெற்ற நிலையில், அவர்கள், தம்மைச் சூழ நிற்கும் சாமான்யர்களின் பாராட்டுதலை அல்லவா, பெறத்தக்க போக்கினை மேற்கொண்டிருக்க

வேண்டும்?

உலகம், இவரிருவரிடமும், எவ்வளவு எதிர்பார்க்கிறது! இவர்களோ, எவ்வளவு எளிதில், எவரையும் வீழ்த்திவிடத்தக்க கோபதாபத்துக்கு இடமளித்துவிட்டனர்!! இவ்வளவு உயரிடம் பெற்றதும், இதற்கோ?

மாநாடு நடைபெற்று, குருஷேவ், உலகிலே போர்ப் பயம் ஏற்படாதிருக்க வழிகூறிக், கலந்துரையாடித், திட்டம் வகுத்து, ஒப்பம்பெற்றுக் கடைசியில், "இத்துணையும், உலகு அமைதிபெற நான் எடுத்துக் கொள்ளும் முயற்சியாகும், ஆனால் உலகீரே! இதோ, இங்கு நான் புறப்படும் நேரமாகப் பார்த்து, அமைதி விழையும் ஐசனோவர், அகிலம் தழைக்க வழிதேடும் அமெரிக்கத் தலைவர், எனது நாட்டின்மீது வேவு விமானம் அனுப்பினார்; வீழ்த்தினர் எமது படையினர்; வெகுண்டனர், எமது

மக்கள்; எனினும், அவர்களுக்கு நான் சமாதானம் கூறிவிட்டுச், சாந்தப்படுத்திவிட்டு, இங்கு வந்தேன்! வலிவுகுறைவு, என்பதால் அல்ல!! வலிவு மிகுதி எம்மிடம், என்பதனால்! வேவு விமானம் அனுப்புகிறது அமெரிக்கா! பாவம்! அதுவும் வெந்து கருகிக்கிடக்கிறது எமது மண்ணில்! வானவெளியில் சுற்றிவருகிறது, எமது விஞ்ஞானக் கருவி!! பூமி அல்ல, எமது இலக்கு! பூலோகத்தார், எண்ணி எண்ணி விளக்கம் காணாது, இருந்து வருகிறார்களே, வானவெளிபற்றி, அங்கு காணப்படும்"உலகுகள்' பற்றி - அவைகளைக் கண்டறிகிறோம் - அறிவுத் துறையில் வென்று வருகிறோம்! அறிவீர்! அறிவிப்பீர்!'' என்று பேருரை நிகழ்த்தி இருப்பின் - ஐசனோவர், வெட்கத்தால், குன்றிப் போயிருப்பார்; குருஷேவின் தரம், பன்மடங்கு, உயர்ந்திருக்கும்.

ஆனால் அவருக்கு "அப்போதைக்கப்போது கிடைத்திடும் ஆனந்தம்' தான், பெரிதாகத் தோன்றியிருக்கிறது; அடித்துப் பேசினேன், ஐசனோவர் அடங்கிக்கிடந்தது கண்டேன்! என்று பேசி மகிழத்தான், அவருக்கு எண்ணம் பிறந்தது.

குட்டக் குட்டக் குனிந்து கொடுப்பதா! கோழையாகிக் கிடப்பதா! தனிப்பட்ட முறையில் இழிவு என்றால் கூடப் பரவாயில்லை, நாட்டுக்கு இழிவு ஏற்படும் நடவடிக்கையில் ஒரு அந்நிய நாடு ஈடுபடுவது, அதைப் பார்த்தும், கைகட்டி வாய்பொத்தி நிற்பதா! அது ஈனனும் ஏற்கக்கூடாத இழுக்கல்லவா? - என்று கேட்கக்கூடும்; கேட்பதிலே, நியாயம் இல்லை என்றும் கூறுவதற்கில்லை. எனினும், தாங்கிக்கொள்ளவே முடியாது - சகித்துக் கொள்ளவே முடியாது - என்று

தோன்றும்போது, சகித்துக் கொள்வதும் தாங்கிக்கொள்வதும், தலை இறக்கத்தை அல்ல, மனிதத் தன்மையின் மாண்பினை மலை அளவு ஆக்கிட வல்லது. மிகச் சிலராலேயே, இது முடியும்! அந்த மிகச் சிலரே உலகுக்குப் பாடம் தர வல்லவராகின்றனர்.

பணிந்து போய்விட்டான் - போர்க் குணத்தை இழந்து விட்டான் - என்று எங்கே பிறர் தாழ்வாகக் கருதிவிடுவார்களோ, என்ற அச்சமே, குருஷேவ் கொண்டது போன்ற போக்கினுக்குக் காரணம்.

ஓரளவுக்கு, இதிலே கவனிக்கத்தக்க, புறக்கணிக்க முடியாத, உண்மையும் தொக்கி நிற்கத்தான் செய்கிறது.

பாரிஸ் மாநாட்டிலே, குருஷேவ், கோபதாபத்தை அடக்கிக் கொண்டு, கூடிப் பேசியிருந்திருந்தால், சோவியத்திலே

சிலராகிலும், "சேச்சே' குருஷேவ் என்ன இப்படிக் குனிந்து கொடுத்துவிட்டாரே! தலை இறக்கமாக அல்லவா இருக்கிறது! ஸ்டாலின், இப்படி இருந்திருக்க மாட்டார்! பொறிபறக்கப் பேசி இருப்பார்! போக்கிரிகள் கூடிப் போதனை நடத்துவதா? காலிகள் கூடி ஒழுக்கம் காண்பதா? என்று கேட்டுவிட்டு, தன் கோபப் பார்வையால், மாற்றாரின் ஆணவத்தைச் சுட்டுச் சாம்பலாக்கிவிட்டு, வெற்றி வீரராக மாஸ்கோ வந்திருப்பார்! இந்தக் குருஷேவுக்கு முதுகெலும்பு இல்லை!! என்று கேபேசிடக்கூடும். ஆனால், அவர்கள், ஏற்படக்கூடிய"விளைவுகளுக்கு'ப் பொறுப்பேற்போர் அல்ல! அந்தப் பொறுப்பு அவர்களுக்கு இல்லாததாலேயே, அவர்கள், வீரத்துக்கு இலக்கணம் கூறிடும் விற்பன்னர் வேலைக்கு வருகிறார்கள். தம்பி! மிகப் பெரிய விஷயத்திலிருந்து, மிகச் சாமான்யனான

நான் சம்பந்தப்பட்ட, மிகச் சாதாரண விஷயத்துக்கு, வருகிறேன் - பொறுத்திடுக! - திராவிடர் கழகத்திலிருந்து, விலகிய நேரம் - புதிய அமைப்புக் காணாத முன்பு - காண்பதற்காக, பலர் கலந்து பேசக்கூடினோம் - சென்னை, முத்தியாலுப்பேட்டைப் பகுதியில் - தெருவின் பெயர் நினைவில் இல்லை. அப்போது ஒருவர் - அப்போது அன்பர் வரிசையில் இருந்தவர்தான் - ஆவேசம் எழப் பேசினார்.

திராவிடர் கழகம், நம்முடையது - ஆமாம் - நம்முடையது! நாம் அறிவிக்க வேண்டும், சர்க்காருக்கு; மக்களுக்கு, பெரியாருக்கு, அனைவருக்கும். "விடுதலை பத்திரிகை, நம்முடையது! நாம்தான் நடத்தவேண்டும்! நேரே போகவேண்டும்; அங்கே உள்ளவர்களைப் பார்த்து, இது எமது இடம், உமக்கு இடமில்லை, போங்கள்

வெளியே'' என்று கூறிவிடவேண்டும்! நாம், ஏன் நம்முடைய உடைமையை உரிமையை, பிறருக்குக் கொடுத்துவிட்டு, வேறு பெயருடன் வேலை துவக்குவது?'' என்றெல்லாம் பேசினார். வீரம் கொப்பளித்தது, பேச்சில். கேட்டோர், என்னைப் பார்த்த பார்வையில் கேலி நிரம்ப! என் முகத்திலே ஒரு கணம், அசடு வழிந்தது என்றுகூடச் சொல்லலாம்!!

"அம்முறைதான் உகந்தது என்று கருதினால், கூறிடும்"அன்பர்' முன்னின்று நடத்தட்டும் - நான் அதற்கு ஏற்றவன் அல்ல! என் முறையும் அது அல்ல! ஒருபோதும் அம்முறை கொள்ளும், போக்கினனாக மாட்டேன்'' என்று கூறினேன் - தம்பி! அவ்வளவு வீரம் பேசியவர், இப்போது, திராவிடக் கழகத்தில் இருக்கிறார்; நமது கழகம், நான் அன்று கொண்ட "பொறுமை'யால் கெட்டுப் போய்விடவில்லை.

ஆனால், நானா குருஷேவ்! அவரால், எப்படிப்"பொறுமை'யாக இருக்க முடியும்!!

வீரமான காரியம் என்று, விரல்விட்டு எண்ணக்கூடிய சிலருடைய, பாராட்டுதலைப் பெறத்தக்க விதத்தில், நாம் துவக்க நாட்களில், நடந்துகொண்டிருந்திருந்தால், கழகம் அல்ல, தம்பி! கலகம், வளர்ந்திருக்கும்.

குருஷேவின் கோபமோ, ஐசனோவரின் போக்கோ, அவ்விருவரின் குடும்பத்தை மட்டுமே பாதிக்கக்கூடியதாக இருந்தால், பொருட்படுத்தத் தேவையில்லை. அவர்கள், காரணமற்றுக் கோபித்துக்கொண்டாலும், பொறுமையைக் கடைப்பிடிக்கத் தவறினாலும், பலகோடி மக்களின் வாழ்வு பாதிக்கப்பட்டுவிடும் - எனவேதான், அவர்களின் போக்குபற்றி, மன்றங்களில் மட்டுமல்ல, மனைகளிலும் பேசுகிறார்கள்.

தனிப் பெருந் தலைவர்களாகிவிட்டவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகள், கோபதாபங்கள், காரணமாகவே, போர்கள் மூண்டதுண்டு! போரிலே, அவர்கள் அல்ல, அவர்களுக்கு வாழ்த்தொலி கூறிய மக்கள்தான் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

காரணமற்றுக் கூடக் கோபம் ஏற்பட்டுவிடுமா என்று கேட்கிறாயா, தம்பி! தனிப்பட்டவர்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களே, காரணமற்றுக் கோபத்திலே சிக்கியதால் பெரும் போர் மூண்டதுண்டு.

ஜென்கின்ஸ் காதுக்காகச் சண்டை! என்று கேள்விப் பட்டதுண்டா?

இங்கிலாந்து நாட்டுக் கப்பற்படை, ஈடற்ற வலிவுடன் விளங்குவது கண்டு, அதனை அடக்கி ஒடுக்க, பிரான்சும், ஸ்பெயினும், பல முறை முயன்றன. அப்படிப்பட்ட, போர்ச்

சூழ்நிலையும், போரை மூட்டிவிடத்தக்க பகை உணர்ச்சியும் பரவி இருந்த நேரம்.

ஜென்கின்ஸ் என்பவன் பிரிட்டிஷ் கடற்படையில் இருந்த தளபதி.

எதிரி நாட்டவர், அந்தத் தளபதியைப் பிடித்திழுத்துச் சென்று, அவன் காதை வெட்டிவிட்டார்கள் என்றோர் வதந்தி பிரிட்டனில் உலவிற்று. வதந்தி என்று இப்போது நான் எழுதுகிறேன், தம்பி! அப்போது, அது "செய்தி' என்றே நம்பப்பட்டது.

"கேட்டீர்களா, அக்ரமத்தை! நமது ஜென்கின்சுடைய காதைப், படுபாவிகள், வெட்டிப் போட்டு விட்டார்களாம்.''

"தளபதி ஜென்கின்சுக்கா இந்த அவமானம் நேரிட்டது.''

"கொடுமை செய்தவன் கொட்டமடிக்கிறான்; இங்கோ நாம் கூடிக்

கதை பேசுகிறோம்.''

"இரத்தம் கொதிக்கிறது, செய்தியைக் கேட்டது முதல்.''

"நாம் என்ன மரக்கட்டைகளா, சும்மா இருக்க.''

"பழிக்குப் பழி! காதுக்குக் காது! கண்ணுக்குக் கண்!''

"ஆமாம்! உடனே! இப்போதே.''

"போர்! போர்! போர்!''

அங்காடியில் அலுவலகத்தில், பாடி வீட்டில் மாடிகளில் தோட்டத்தில் கடலோரத்தில், சீமாட்டியின் சிங்கார மாளிகை யில் கொல்லன் உலைக்கூடத்தில் - எங்கும் கிளம்பிற்று, இந்த விதப் பேச்சு! தம்பி! போரே, மூண்டுவிட்டது. எவ்வளவோ அழிவு! கடைசியில்தான், உண்மை

தெரிந்தது, ஜென்கின்ஸ் என்ற தளபதியை எவனும் பிடித்திழுத்துச் செல்லவுமில்லை, காதைவெட்டிப் போட்டுவிடவுமில்லை! காது, இருந்தது ஜென்கின்சுக்கு; ஆனால், காது அறுத்தார்கள் என்று வதந்தி பரவினதால், போர் மூண்டிட, பலருக்குக் கண் போயிற்று, கால் போயிற்று, கரம் போயிற்று, சிரமேகூடப் போயிற்று! ஒரு நாட்டு மக்கள் அவ்வளவு பேரும், காரணமற்றுக் கோபப்பட்டதால், கடும்போர் மூண்டிருக்கிறது.

இன்று, உலகு இருக்கும் நிலைமை, ஒரு சிறு வதந்தி, செய்தி வடிவமெடுத்தால்கூடப் போதும், மக்களை ஆத்திரம் கொண்டிடச் செய்திடும் - அமளி மூண்டுவிடும். பெருந்தலைவர் களே, மிக எளிதாக ஆத்திரப்பட்டு விடுகிறார்களே - விவரம் விளக்கம் கிடைக்கப் பெறாமல் இருக்கும் மக்களைப் பற்றிக் கூறவா வேண்டும்.

எனவேதான், பலருக்கும் இன்றுள்ள நிலையில், போர் எந்த நேரத்திலும், மூண்டுவிடக் கூடும் என்ற பயம் இருக்கிறது.

பாரிஸ் மாநாடு முறிந்தது, இந்தப் பீதியை வளர வைத்துவிட்டிருக்கிறது.

பாரிஸ் மாநாடு முறிந்ததற்குக் காரணம் என்ன என்பது பற்றி, பெருந்தலைவர்கள், அறிக்கைகள் வெளியிட்டனர் - விளக்கம் கிடைத்தது. ஆனால், அதைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்களின் அலுவலகத்தார், நிபுணர்கள், செய்தி அறிவிப்போர் செய்திகளுக்கு விளக்கம் கூறுவோர் என்ற பல்வேறு பெயருடன் உள்ளவர்கள், பாரிஸ் மாநாடு குறித்துப் பேசுவதும் எழுதுவதும், விளக்கத்தை அல்ல, விவேகத்தையும் அல்ல, விரோதத்தை மூட்டவே பயன்பட்டு வருகின்றன.

உலகப் பெரும்போர் மூளாதிருக்கத்தக்க விதத்திலே எண்ண வேண்டும், எழுதவேண்டும் என்ற அடிப்படையை மறந்து, ஐசனோவர் கட்சி, குருஷேவ் கட்சி என்று தாமாகவே, வேலை தேடிக் கொள்கிறார்கள் சிலர்; அவர்கள், அந்த இருவரும் எண்ணிக்கூடப் பார்க்காததை எல்லாம் காரணங்களாகக் கற்பித்துக்கொண்டு பேசுவதும் எழுதுவதும், நல்லதற்கு அல்ல என்று துணிந்து கூறலாம்.

தம்பி! மெத்தக் கற்றவர் ஒருவர், இரயிலில் சென்று கொண்டிருந்தார். இட நெருக்கடி. வழியிலே அவருடைய அருமை பெருமைகளைப் போற்றிடத் தெரிந்த ஒரு நண்பர், இரயிலில் ஏறினார். தன் பெருமைக்குரியவர், இட நெருக்கடியில்சிக்கிக் கிடப்பதைக் கண்டார்; சங்கடமாக இருந்தது; பதைத்து, அருகே சென்றார்.

”தாங்களா, இந்த இடம் நெருக்கடியிலா? ஏன் இந்த மூன்றாம் வகுப்பு வண்டியில் ஏறினீர்கள்? இடம் இருந்தால்கூடத் தரமாட்டார்களே! முதல் வகுப்பில் போயிருக்கலாமே. இவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே! அதோ ஒரு ஆசாமி, காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருக்கிறான். இங்கே நீங்கள் இப்படி ஒடுக்கிக்கொண்டிருக்கிறீர்கள்’’ என்றான் பரிவுடன்.

”பரவாயில்லை. இடம் கிடைத்ததே, அது போதும்’’ என்றார், அவர்.

இதற்குள் நண்பன், அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, தூங்கித் தூங்கி அவர் மேலே சாய்ந்து சாய்ந்து விழுந்துகொண்டிருந்த ஒருவரைக் கவனித்துவிட்டு, மெல்லத் தட்டி எழுப்பி, “ஐயா! அவர் மேலே, விழுகிறீர்களே! கொஞ்சம்,

தள்ளி உட்காருங்கள். பாருங்கள், அவர் எவ்வளவு இடுக்கிலே கிடக்கிறார். கொஞ்சம் தள்ளி, இடம் கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான். அவர், ஒரு தடவை விழித்துப் பார்த்து, கனைத்துக் காட்டிவிட்டு, மீண்டும் பழையபடியே தூங்கலானார். நண்பனுக்குக் கோபம். கொஞ்சம், அதட்டும் குரலில், அந்த ஆசாமியை எழுப்பி,"இரயில் என்னய்யா, உங்க பாட்டன் விட்டுச் சொத்தா! அவரை இப்படிப்போட்டு இடித்துத் தள்ளிக்கொண்டு இருக்கிறாயே. அவர், யார் தெரியுமா? அவருடைய யோக்யதை என்னவென்று தெரியுமா? திருவாசகத்திலே புலி ஐயா, புலி! தேன் சொட்டும், அவர் தேவாரம் பாடினால்! தெரியுமா?'' என்றான்.

விழித்துக்கொண்டிருந்த ஒரு குறும்புக்காரன், "அப்படியானால், பாடச் சொல்லு, தாளத்தைத் தட்டிக் கொண்டு''

என்றான்.

"அட, விவரமறியாதவர்களே! அவர் பெரிய வேதாந்தி! பெரிய புள்ளி! போன மாதம், பொன்னாடை போர்த்திப் பத்தாயிரம் ரூபா பரிசு கொடுத்தார்கள். அவருடைய யோக்யதை தெரியாமல் உளறுகிறீர்களே?'' என்று சிறிது கோபத்துடன் கூறினான்.

"வேதாந்தியா... யாரு? இந்த மூஞ்சியா? அவன் யாரா இருந்தா எனக்கென்ன? காலிலே விழுந்து கும்பிடணுமா! ஏன்! அவன்தான் என் காலிலே விழுந்து கும்பிடட்டுமே!'' என்று வலுச் சண்டைக்கு இழுத்தான் ஒரு வம்புக்காரன்.

"கண்ணைப் பாரு கோட்டான் மாதிரி!''

"சாமியாரு! கஞ்சா சாப்பிட்டிருப்பாரு!''

"ஆள் ஏமாந்தா, மூட்டையை அடிக்கிற பயலெல்லாம் கொட்டை கட்டிக்கிட்டு, வேஷத்தைப் போட்டுக்கிட்டு, ஊரை

ஏமாத்துறானுங்க...''

பலர் பலவிதம் பேசினர், கேவலமாக.

நண்பனொருவன், தன் பற்றினைக் காட்டுவதற்காகப் புகழ்ந்து பேச, மற்றவர்கள் அதனாலேயே எரிச்சல் கொண்டு, ஏசினர்.

இடம் பெற்றுத்தர முடியாது போனாலும், இழி மொழியை வாங்கித் தர முடிந்தது, நண்பனால்.

அதுபோன்றே தம்பி! பெருந்தலைவர்களில் தமக்கு பிடித்த மானவரைப்பற்றி "விமர்சனம் செய்வோர்' புகழ்ந்து எழுத அதனாலேயே அருவருப்பு அடைந்த மற்றவர், அந்தத் தலைவரைப்பற்றித் தாறுமாறாக ஏசி எழுதுகிறார் ஆண்டவனே! என் நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று! என்று அந்தத் தலைவர்கள், கூறிடவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

சூழ்நிலை கெடுவதும், பாழ்நிலை ஏற்படுவதும், இத்தகைய முறையினரின் போக்கினால்தான்.

ஒவ்வோர் நாளும், பாரிஸ் மாநாடுபற்றி, ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்தமான கண்ணோட்டத்தைக்கொண்டு, எழுதிவரும் கட்டுரைகள், நல்ல நிலையை வளரச் செய்ய அல்ல - கெடுக்கத்தான் பயன்படுகின்றன.

மிகச் சிலர் தவிர, பலரும் தமக்குள்ள வேலைத் தொல்லை யினால், பிரச்சினைகளைப்பற்றித் தாமாகவே சிந்திக்க இயலுவதில்லை. "விமர்சனம்' செய்வோர், செய்தளிக்கும்"சிந்தனை'யை அவர்கள் விலைக்கொடுத்து வாங்கித் தவறான கருத்தைக் கொண்டு விடுகிறார்கள்.

தம்பி! பிரச்சினைகளை நாமாகவே, அலசிப்பார்த்துக் கருத்தினைக்

கொள்ளவேண்டும்; நமக்காக வேறொருவர், தயாரித்துத்தரும் "கருத்து' கவைக்கு உதவாது.

பாரிஸ் மாநாட்டிலே குருஷேவ் கொதித்த உள்ளத்தோடு இருந்தாலும், கூர்ந்து பார்த்து, நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்தாயானால், கொதிப்புக் குறைந்ததும் தெரியும் - மீண்டும் கூடிட வழி தேடத்தான் போகிறார்கள் என்பதும் புரியும்.

இந்த நேரத்தில், பிரிட்டிஷ் மாக்மிலனும், பிரஞ்ச்சு நாட்டு தெ'கோலும் மிகப் பொறுப்புடன், நடந்து கொண்டதால், பகைப்புகை பரவாதிருக்கிறது என்று கூறலாம்.

மாநாடு நடைபெறவேண்டும் என்பதற்காக அவர்கள் தக்க முயற்சியை எடுத்துக்கொண்டனர் என்பது மட்டுமல்ல, கருத்து வேற்றுமைகளைக் குறைக்கவும்,

அரும்பாடுபட்டிருக்கின்றனர்.

மிகந்த பொறுப்புடன் அவர்கள் நடந்து கொண்டது ஏற்பட இருந்த ஆபத்தை, நெடுந்தொலைவிலேயே, தடுத்து நிறுத்த உதவிற்று என்றுகூட எனக்குத் தோன்றுகிறது.

குருஷேவ் இப்படிப் பேசியது, தவறு! என்று ஐசனோவரிடம் பேசித் தூபமிடவில்லை, கவனித்தாயா, தம்பி! இத்தனைக்கும், போர் என்று ஏற்பட்டு விட்டால், அவர்கள் இருவரும், ஐசனோவரின் அணியில் இருக்கக் கடமைப் பட்டவர்கள். எனினும் அவர்கள், பகை குறைந்திடப் பாடுபட்டனர் - பண்பு அதுவன்றோ!

பாரிசில் இருந்துவந்த சூழ்நிலையில், மாக்மிலனோ, தெகோலோ, பொறுப்பை மறந்து நடந்துகொண்டிருந்தால், தம்பி! இந்நேரம் போர் மூண்டுவிட்டிருக்கக் கூடும்.

”விடாதே! விடாதே! பார், பார், அவன் கர்வத்தை!'' என்று தூண்டிவிடுவதும், தூபம்போடுவதும், எளிதுமட்டுமல்ல, சுவைகூடத் தரும்.

பிரான்சு, பிரிட்டன் ஆகிய இரு நாடுகளுமே, அமெரிக்கா, ரஷ்யா ஆகியவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எந்த முனையில் இருந்து கவனித்தாலும், இரண்டாம் வரிசையில்தான் இருக்க முடியும்.

எனினும், அந்நாட்டுத் தலைவர்கள் மிகப் பெரிய நாடுகள் செல்வம் கொழிக்கும் இடங்கள், வல்லமை வளர்ந்துள்ள நாடுகள் என்று கூறத்தக்க, ரஷ்யா, அமெரிக்கா எனும் இருபெரும் நாட்டுத் தலைவர்களைவிட, தமது போக்கினால் தரத்திலே உயர்ந்தோராயினர்.

இருபெரும் நாட்டுத் தலைவர்களும், இவர்களிடம் தத்தமது நிலைமையினைக்

கூறவும், இவர்கள் அந்தப் பெருந்தலைவர்களுக்குப் பொறுமையின் அருமை, பொறுப்புப் பற்றிய பெருமை ஆகியவற்றை எடுத்துக்கூறவுமான நிலை அல்லவா கண்டோம்! பாரிஸ் மாநாடு - நடைபெறாத மாநாடு - இந்தப் பேருண்மையை எடுத்துக்காட்ட உதவிற்று.

இவர்களல்லாமல், ஒரு அணு ஆயுதக் கிடங்குக்காரர் பீரங்கி தயாரிக்கும் தொழிலதிபர், விமானம் கட்டும் தொழில் முதல்வர், விஷப்புகை தயாரித்து விற்போர், கலந்து பேசுவதிலே இடம் பெற்றிருப்பார்களானால், பகை கூடாது போர் ஆகாது, என்றா பேசியிருப்பர்.

உங்களுக்கு ஏற்படலாமா இந்த அவமதிப்பு!

எப்படி இந்த அக்ரமத்தைத் தாங்கிக்கொள்ள முடிகிறது! உங்களால்! -

என்று தூண்டிவிட்டிருப்பர் - பிறகு? போர்தான். இரத்தம்கொட்ட, மக்கள்! இலாபம் திரட்ட அந்த முதலாளிகள்.

இரண்டு உலகப் பெரும் போர்களின்போதும் ஜெர்மன் நாட்டை முறையே நடத்திச்சென்ற, கெய்சர், ஹிட்லர், ஆகியோருக்கு, பக்கம் நின்று, யோசனை கூறியவர்கள் அந்த நாட்டிலே, போர்க்கருவிகள் தயாரித்துக் குவித்திருந்த கொள்ளைக்காரர்கள், குரூப்ஸ் போன்ற முதலாளிகள்தான்! போர் மூண்டிட அவர்களின், "தூபம்' வெகுவாகப் பயன்பட்டது! நாடு, சுடுகாடாயிற்று, அந்த முதலாளிகளின் பெட்டி நிரம்பிற்று.

அத்தகைய சூழ்நிலை இன்று ஏற்படாமலிருந்தது ஆபத்தைத் தடுக்க, மிக மிக, உதவிற்று.

இத்தகைய, சூழ்நிலையைத் தொடர்ந்து பெற்று, மாக்மிலன், தெ'கோல் போன்றார், இடைவிடாத முயற்சி எடுத்துக்கொண்டு, பகைநீங்கிடச் செய்தல் வேண்டும். ஏனெனில், இனியொரு போர் என்றால், வெற்றி பெற்றவர்கூட வெற்றியின் பலனைச் சுவைத்திட முடியாது; ஏனெனில், சுற்றிலும் பாழ்வெளிதான் மிஞ்சும்.

இந்தப் பேருண்மை பெருந்தலைவர்களுக்கும் மிக நன்றாகத் தெரிந்திருக்கிற காரணத்தால்தான், ஆத்திரம் அடங்கி விடுகிறது; போர்வெறி ஒடுங்கிவிடுகிறது.

போர் ஏற்படாதிருக்கும் பொன்னான ஏற்பாட்டை நானா? நீயா? என்று ஒருவரை ஒருவர் மிரட்டும் அளவுக்கு ஓங்கி வளர்ந்துவிட்டுள்ள அமெரிக்கா, ரஷ்யா எனும் இரு நாடுகளைவிட, அளவிலே

குறைந்திருப்பினும், தரத்தை இழந்து விடாமலிருக்கும், பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகள், முன்னின்று சமைத்தளிக்க முடியும். ஆனால், அவை, தமக்கு எது ஏற்ற கட்சி என்று கணக்குப் பார்க்காமலும், இலாபம் தேடாமலும் இருந்திட வேண்டும். பல நாடுகள் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளன; மகிழ்ச்சி.

தம்பி! தீவிலேயே விட்டுவிட்டோமே, பாவம்! வா! அவனைக் காண்போம். அவன் கலக்கமடைந்த பிறகு, தீவே போதும் என்று எண்ணுகின்றான்.

ஆனால், மீண்டும் கூடிவாழ வேண்டும் என்ற எண்ணம் அவனை விடுவதாக இல்லை. மறுபடியும் பார்க்கிறான், இதழ்களை. உலகிலே, போர்ப் பயம் இருப்பினும், அதை நீக்கிடும் முயற்சியும் விடாமல் நடக்கிறது; அக்ரமங்கள் இருப்பினும் அதை எதிர்த்து நிற்கும் துணிவு மக்களுக்கு வளர்ந்து

வருகிறது; அலங்கோலங்கள் இருப்பினும் அவைகளை நீக்கிடத்தக்க நல்லாட்சி அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது; இல்லாமையை, கல்லாமையை விரட்ட முயற்சிகள், நோய் போக்கும் நன் மருந்துகள் தயாரிக்கும் ஏற்பாடுகள் எல்லாம், நாளுக்கு நாள் வளருகிறது - இவை பற்றிய குறிப்புகள் காண்கிறான்; நம்பிக்கை கொள்கிறான்.

கலம் தெரிகிறது; களிப்புடன், வரவேற்கிறான்!!

"எம்மோடு வரச் சம்மதமா?'' என்று கேட்கிறான், படகில் வந்தோன்.

"ஆம்! அவரவர் தத்தமது பாதுகாப்பையும் சுகத்தையும் மட்டுமே கருதித், தீவிலே தங்கிவிட்டால் உலகைத் திருத்த எவர் உளர்? வருகிறேன், உம்மோடு நின்று பணிபுரிய,'' என்றான்.

கலம் புறப்பட்டுவிட்டது! வருகிறான், தீவை விட்டு, வாழப்பிறந்தவன்!

ஆம், தம்பி! வாழப்பிறந்தோம், அதற்கேற்ப இந்த வையகத்தை மாற்றி அமைப்போம் என்ற நோக்கம் வேண்டும். அவரவர், தத்தமக்கு கிடைத்திடும் வாய்ப்புக்கு ஏற்ப, அந்தப் பொது நோக்கம் வெற்றிபெறப் பணியாற்ற வேண்டும்! தொல்லை இல்லாத வாழ்வு தேடித் தீவு நாடுவது, மனித இயல்பு அல்ல! தீவில் தங்கியவன் கதை! இந்தக் கருத்தைத்தான் விளக்குகிறது.

அன்புள்ள,

அண்ணாதுரை,

29-5-1960

5. பெரிய புள்ளிகள்

குறைமதிச் செல்வன் கருத்துக் கதை -

நேரு, மெண்டாரிஸ் உரையாடல் -

சிங்மன்ரீ -

கழகமும் காமராஜரும்

தம்பி!

எனக்கு எதற்குப் பெருஞ் செல்வம்? கட்டிக்கொள்ள நாலு முழ வேட்டியும். போட்டுக்கொள்ள ஒரு துண்டும், படுக்கப் பாயும், பசிக்குக் கொஞ்சம் சோறும் சாறும் இருந்தால் போதும். பணம் ஏன்? பங்களா ஏன்? பட்டாடை ஏன்? பளபளப்பு ஏன்? என்று காண்போரிடமெல்லாம் கூறிக்கொண்டிருந்தான் - கபடத்தை மறைத்தபடி - ஒரு ஆசாமி.

வேண்டாம்! வேண்டாம்! என்று கூறிக்கொண்டிருந்த போதே, வேறொருவர் பெரும் பொருளைப் பெற்றாலும் பேறு கிடைக்கப்பெற்று பெரும்புகழும் ஈட்டி வாழ்ந்து வருவது கண்டு, உள்ளூர அழுக்காறு கொண்டு, "நமக்குக் கிடைத்திடலாகாதா இந்தப் பேறு! கிடைத்தால், சுவைமிக்க வாழ்க்கையன்றோ!'' என்று எண்ணி எண்ணி ஏக்கமுற்றான்.

செல்வம் பெற்றவர் முன் நின்று பலர் கட்டியங் கூறினர்.

இவர்க்கோ, எட்டி எனக் கசந்தது அவர் பேச்சு.

மாலை மரியாதை, விருந்து, வைபவம், அவருக்கு!

மனக்குறை, நெஞ்சுத் துடிப்பு, இவருக்கு!

எங்கும் வரவேற்பு அவருக்கு! வேண்டா

வெறுப்புடன் இவரிடம் உறவாடினர், அவரெலாம்.

இவ்வளவு "பவிசும்' பெரும் பணம் பெற்றதனால் அல்லவா? என்று எண்ணிய போது, ஏக்கம் துக்கமாகி, துக்கம் கோபமாக மாறிற்று; அழுக்காறு ஆத்திரமாக வடிவெடுத்தது; அண்டிப் பிழைப்போர், அடுத்துக் கெடுப்போர், ஆகாவழி அழைத்தேக அறிந்தோர், எனும் வகையினருடன் கலந்து பேசி, செல்வம் பெற்றவரைச் சாய்த்தொழித்து, அந்த வீழ்ச்சியைச் சாதகமாக்கிக் கொண்டு, பெரு நிதிக்கு உரிமை கொண்டாடிப் பெற்று,"பெரிய புள்ளி' ஆகிவிட்டார், பெருஞ்செல்வம் பேய்க்குணத்தை, நாய்க் குணத்தையன்றோ ஏற்படுத்தும் என்று பேசித் திரிந்தவர்!

பெருஞ்செல்வம் கிடைத்ததும், மெள்ள மெள்ளப் பேச்சு, போக்கு, நோக்கு, நடை -

யாவும் மாறிடலாயின.

ஐயோ பாவம்! என்று முன்பு கூறி வருந்தினோர், ஐயா! வருகிறார்! என்று அடக்க ஒடுக்கமாகப் பேசிடலாயினர்.

அவர் ஒரு அப்பாவி! தனக்கென்று எதையும் விரும்ப மாட்டார்! - என்று பரிதாபத்தோடு பேசிவந்தவர்கள், "அவர் மனது வைத்தால் போதும்! அவர் தயவு கிடைத்தால் போதும்!' என்று நயமாகப் பேசவும், நாடி வரவும், பாதம் தொடவுமாயினர்.

நிலைமை மாறிடவே, நினைப்பு மாறிடலாயிற்று! நிமிர்ந்த நடை, முறுக்குப் பேச்சு, இவை உடன் வந்துவிட்டன.

பெருஞ்செல்வம் சேரா முன்பு, ஒரு இழவும் பேசவராது என்று கேலியாகக் கூறினவர்களே, "அந்தஸ்த்துக்கு ஏற்ற சுபாவம் அவருக்கு. மற்றவர்போல்

வாயாடிக்கொண்டிருக்க மாட்டார்! சுருக்கமாக, இரண்டொரு வார்த்தைதான் பேசுவார் - ஆனால் அவ்வளவும், அர்த்தம் உள்ள பேச்சு!'' என்று பாராட்டலாயினர்.

"செச்சே! ஏன் இந்த ஆசாமி, இப்படி, திருதிருவென்று விழிக்க வேண்டும்' என்று ஏளனம் செய்தவர்கள், அதே பார்வையை,"கெம்பீரம்' என்று சுட்டிக் காட்டினர்.

பரிதாபம் காட்டியவர்கள், பக்கம் நின்று பணிவிடை செய்யலாயினர்! குறும்பாகப் பேசிக்கொண்டிருந்தவர்கள், குற்றேவேல் புரியலாயினர்! ஆசாமிக்கு, தாங்க முடியவில்லை! "ஓஹோ ஹோ! நாம் பெரிய புள்ளிதான் - இதுவரை அதை நாம் தெரிந்துகொள்ளாமலே இருந்துவிட்டோம்'' என்று தனக்குள் கூறிக்கொண்டு, அதட்டிக் கேட்க, பதட்டம் பேச ஆணை பிறப்பிக்க,

ஆரம்பித்துவிட்டார்.

எனக்கும் ஏதோ கொஞ்சம் தெரியும் என்று பேசத் தொடங்கி, படிப்படியாகக்கூட அல்ல, தாவிடலானார் மேலே, மேலே; எனக்கு எல்லாம் தெரியும் என்று பேசிடலானார்; எனக்குத் தெரியும் எல்லாம்! என்று கூறினார்; எனக்குத் தான் தெரியும் என்றார்; கடைசியில், உனக்கு என்ன தெரியும்; பேசாமலிரு; எல்லாம் எனக்குத் தெரியும்!! என்று, உருட்டி மிரட்டும் குரலில் பேசிவரலானார்.

அவருக்கு புதிய "அறிவு' கிடைத்துவிட்டது என்பதனால் அல்ல; புதிய அந்தஸ்து, பண பலத்தால் கிடைத்துவிட்டதே என்பதால், மற்றவர்கள், அந்த ஆணவத்தைச் சகித்துக்கொள்ள வேண்டியதாகிவிட்டது.

ஆணவத்தைப் பலரும் சகித்துக்கொண்டதால், "நாமே உலகிலே

தலைசிறந்த அறிவாளி! நமது வீரதீரத்துக்கு ஈடு எங்கும் இல்லை! எனவேதான் இத்தனைபேர், நம்மிடம் அடங்கி ஒடுங்கிக் கிடக்கிறார்கள்' என்று அந்த ஆசாமி எண்ணிக் கொண்டு, மனம்போன போக்கிலே நடந்திடலானார்.

ஓவியத் திறனுடையார் அவரைக் கண்டு தம் கைத்திறனைக் காட்டுவர், பாராட்டுவார், பரிசளிப்பார் என்ற எண்ணத்தில். இவரோ, அலட்சியமாகப் பார்த்துவிட்டு, "ஓவியக்கலை என்பதே, காலத்தை வீணாக்கும் காரியம்!' என்று கூறி இகழுவார்.

களத்திலே, இவர் வீரர் என்று ஒருவரை அறிமுகப்படுத்து வார்கள்; "புலி இவரைவிட அதிக ஆட்களைச் சாகடித் திருக்குமே!'' என்று கேலி பேசுவார்.

"இவர் புலவர்!'' என்பார்கள்;"ஐயோ,

பாவம்!'' என்று ஏளனம் செய்வார்.

□

பெருநிதியும் குறைமதியும் கொண்ட அந்தச் சீமானைக் காணச் சென்றான், அறிவுச் செல்வம் நிரம்பப் பெற்றிருந்த வறுமை நிலையினன். செருக்கு மிக்கவனாகத் தன் நண்பன் இருப்பதைக் கண்டான். எனினும், தன்னிடம் மட்டும் ஓரளவு "மதிப்பு' காட்டுவதறிந்தான்? ஆயின், இதுபோதும் என்றெண்ணி இருந்துவிடவில்லை. நண்பனுக்கு அறிவூட்ட விரும்பினான். கண்ணாடி பொருத்தப்பட்ட பலகணி அருகே நண்பனைஅழைத்துச் சென்று,"என்ன தெரிகிறது?' என்று கேட்டான். "ஏன்! எல்லாம்தான்! வெளியே உள்ள தோட்டம்; மலர்கள்; வீடுகள்; வண்டி வாகனங்கள்; நடமாடுவோர்; எல்லாம் தெரிகிறது. கண்ணாடி ஜன்னல்தானே, தெரிவதற்கு

என்ன?'' என்றான் செல்வவான். புன்னகை புரிந்தான் அறிவாளன். வேறோர் புறமிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியைக் காட்டி,"அதைப் பார்! என்ன தெரிகிறது அதிலே?'' என்று கேட்டான். "பொல்லாத கேள்வி கேட்டுவிட்டாய், போ! அதில், நான் தெரிகிறேன்!'' என்றான், சீமான்!"நண்பா! இரண்டும், கண்ணாடிகள்! வெளியே உள்ளது எல்லாம் காண முடிகிறது, ஒன்றின் மூலம்! மற்றொன்றிலோ, உன்னைத் தவிர வேறொன்றும் தெரிவதில்லை. ஏன்? இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? ஒன்றிலே "ரசம்' பூசப்பட்டிருக்கிறது!"ரசம்' வெள்ளியிலிருந்து தயாரிக்கப்படுகிறது! பார்த்தாயா, ஒரு கண்ணாடியில் சிறிது வெள்ளி தடவியதும், வேறெதுவும் தெரியவில்லை; உன்னைத் தவிர! அதுபோலத்தான், உன்னிடம் பணம்

குவிந்துவிட்டதால், உன்னைத் தவிர, வேறு எதுவும், உனக்குத் தெரியாது போய்விடுகிறது; பணம், கண்களை மறைத்து விடுகிறது என்றான். வெட்கம், சீமானை, வேலாகக் குத்திற்று.

□

"ரசம்' பூசப்பட்ட கண்ணாடி, போலாகிவிடுகிறார்கள், பணம் பெற்று, பண்பு கெட்டுவிட்ட நிலை அடைந்தோர்! பணம் மட்டுமல்ல; புகழ், பட்டம், பதவி, எதுவும்தான் பழைமையை மறந்துவிடச் செய்கிறது, புதிய நினைப்பு, முறுக்கு, ஏற்பட்டுவிடுகிறது! இயல்பே, மாறிவிடுகிறது.

□

பணம் மட்டும் குவிந்திருக்கும்போது, செருக்கு, பிறரைத் துச்சமாக எண்ணும் துடுக்கு, ஏற்பட்டுவிடும். எனினும், இருப்பது

போய்விட்டால் என்னாகும், என்ற பயம் கூடவே பிறக்கும். எவன், கொள்ளையடித்துச் சென்றுவிடுவானோ, எவன் கொன்று போட்டுவிட்டுச் சொத்துக்களைப் பறித்துக் கொள்வானோ, என்ற பயம் பீடிக்கும். ஆணவம் ஒரு புறம், அச்சம் மற்றோர் புறம் இரண்டுக்கும் இடையே சிக்கித் தவியாய்த் தவிப்பான். ஆனால் பதவி கிடைத்துவிட்டாலோ, எவரையும் எதுவும் செய்துவிட முடியும் என்ற இறுமாப்பு, எவன் என்ன செய்துவிட முடியும் என்ற மண்டைக் கனம், எவனால் என்ன என்ற போக்கு,எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பேச்சு, யாருக்கு நான் அஞ்ச வேண்டும்! என்ற நோக்குடன் நடவடிக்கைகள், இப்படிப் பலப்பல ”நோய்கள்’ ஒரு சேரக் குடி ஏறிவிடும். பதவியும், அதனால் கிடைத்திடும் அதிகாரமும் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்ற நினைப்பு தடித்துவிடும்; பிறகு நெரித்த புருவம்,

கனல் உமிழும் பார்வை, கடும் சொற்கள்!!

பொதுத் தேர்தலில் நானூறுக்கு மேற்பட்ட இடங்களைப் பிடித்த, மண்டாரிஸ் பதவி பெற்றதும், இனி எதுவும் செய்யலாம், எவரும் பணிவர் என்றெண்ணிச் செயல்படத் தொடங்கியது, இந்த "வகையைச்' சார்ந்ததே,

எதிர்க்கட்சிகள், இளைத்தும் களைத்தும் காணப்பட்டன நினைத்ததைச் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது மெண்டாரிசுக்கு! ஆனால் செய்தது என்ன? எந்த மக்கள், பேராதரவு தந்து, பெரியதோர் வெற்றி கிட்டிடச் செய்தனரோ, அவர்களின் நல்லெண்ணத்தை, நேசத்தை மேலும்மேலும் பெறுகிற வகையான காரியமா? அல்ல! அல்ல! கிடைத்த பதவி, என்றென்றும் தன் காலடி கிடந்திட வேண்டும்! கைகட்டி வாய்பொத்திக் கிடக்க வேண்டும், எதிர்க்கட்சிகள்! எவரும், தன்னை நத்திப் பிழைக்க வேண்டும்! என்றென்றும்,

எதிர்க்கட்சிகள் தலைதூக்க முடியாதபடி, தாக்கித் தகர்த்திடவேண்டும்! - என்ற இவ்விதமான நோக்குடன் காரியங்களைத் துணிந்து செய்து வந்தார். தம்பி! அவர் இப்போது ஒரு கைதி! நான் இதை எழுதும்போது, அவர், பட்டம் இழந்து, பதவி இழந்து, மாளிகைவாசம் இழந்து மாநிதியில் புரளும் நிலை இழந்து, என்ன வழக்குத் தொடரப்படுமோ, தண்டனை எதுவாக இருக்குமோ - சுட்டுத்தள்ளுவார்களோ, சிறையில் போட்டு அடைப்பார்களோ, என்ன நேரிடுமோ? என்ற எண்ணம் குடையும் மனத்தினராகி, மருண்டு கிடக்கிறார், சுருண்டு கிடக்கிறார்! துருக்கியின் துரைத்தனத் தலைவர் என்ற முறையில், ஈடற்ற செல்வாக்குடன் இருந்து வந்தார். இன்று, "ஏன்!' என்ற அதட்டும் குரலில், பாட்டாளத்துக்காரன்

கேட்டால்,"ஒன்றுமில்லை! மணி என்ன?' என்று பணிவுடன் பேசிடும் நிலைமை!!

ஆற்றலற்றவரோ எனின், அல்ல! மக்களின் பேராதரவைத் தேர்தலின்போது தன் பக்கம் திரட்டிடத்தக்க ஆற்றல் இருந்தது; அது மட்டுமல்ல, குவலயம் புகழப் பணியாற்றிய முஸ்தபா கமால் சமைத்தளித்த புதிய துருக்கியில் எழுச்சி, மறுமலர்ச்சி, விடுதலைஉணர்ச்சி பூத்திடச் செய்திடும் ஆற்றலையும் பெற்றிருந்தவர்தான், மெண்டாரிஸ்.

□

இரு கிழமைகளுக்கு முன்பு, பாரதப் பிரதமர் நேரு பண்டிதர், அங்காரா சென்றார்; அவரை வரவேற்று விழா நடாத்தியவர், மெண்டாரிஸ்! பவனி நடந்தது, விருந்து உண்டு! கூட்டறிக்கை, வழக்கப்படி!!

மெண்டாரிஸ், துருக்கியின் முதல்வர்; நேரு, பாரதப் பிரதமர்! இருவரும் கூடி, உலகிலே சமாதானம் நிலவ, என்னென்ன செய்ய வேண்டும் என்றுகூடக் கலந்துரையாடினர்! அந்த மெண்டாரிஸ், இன்று படையினர் நடத்திய புரட்சியின் காரணமாக, பிடிபட்டு, சிறைப்பட்டு இருக்கிறார்.

□

நேரு - மெண்டாரிஸ், உரையாடிடக் கூடினரே, அப்போதே. துருக்கியில், குமுறல், பலமாக!! மெண்டாரிஸ் ஆட்சிக்கு எதிராக, இளைஞர்கள், குறிப்பாக மாணவர்கள், பெரியதோர் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண் டிருந்தனர். நேருவை வரவேற்க மரியாதைக் குண்டுகள், வெடித்திடவில்லை. துரத்தித் துரத்தித் தொல்லை தந்த மாணவர்களைச் சுட்டுத்தள்ள, மெண்டாரிஸ் ஏவிய

போலீஸ் நடத்திய தாக்குதலால், வேட்டுச் சத்தம் கேட்டவண்ணமிருந்தது. நேரு - மெண்டாரிஸ் சந்திப்பு, இந்தச் "சுவையான' சூழ்நிலையில்தான், நடைபெற்றிருக்கிறது. பஞ்சசீலம் பற்றிய பேச்சும், பாரிலே போர் இலாது ஒழிய வழி யாது என்பது பற்றிய உரையாடலும், அதே நேரத்தில்தான் நடைபெற்றிருக்கிறது.

□

"என்ன கிளர்ச்சி? எதிர்ப்பாளர் யார்?''

"விவரம் தெரியாத பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்! செல்வாக்கிழந்த எதிர்க்கட்சிகள் தூண்டிவிட்டபடி ஆடிடும் சிறுவர்கள்.''

"என்ன வேண்டுமாம், அவர்களுக்கு?''

"நான், பதவியை விட்டுவிட வேண்டுமாம்!''

"பார்லிமெண்டில், நம்பிக்கையில்லாத்

தீர்மானம், நிறைவேற்றிவிடுவதுதானே. அதுதானே முறை!''

"ஆமாம்! ஆனால் அங்கே வாலாட்ட முடியாதே! என் கட்சிக்கல்லவா, மிகப் பெரிய பலம் - உங்கள் காங்கிரஸ் கட்சிக்கு இருப்பதுபோல!''

"எதிர்க்கட்சிகள், தேர்தலில் போட்டியிடவில்லையோ?''

"காங்கிரசை எதிர்க்கவில்லையா பல கட்சிகள்! அதுபோலத்தான் இங்கும்! மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை, எதிர்க்கட்சிகளுக்கு.''

"அப்படி இருந்தும்...?''

"இப்போது தேர்தல் நடத்த வேண்டுமாம்...''

"நடத்தினால்...?''

"என் அரசு கவிழ்ந்துவிடுமாம்! மக்கள்,

ஆதரிக்க மாட்டார்களாம்!!''

□

தம்பி! நேரு - மெண்டாரிஸ் பேச்சு, இதுபோலத்தானே இருந்திருக்கும். தேர்தலில், ஒருமுறை மக்களின் "வாக்குகளை'த் திரட்டிக் குவித்துக்கொள்ள முடிந்ததால், அந்த மக்கள் ஆதரவு தன் பக்கம் நிலைத்து நிற்கும் என்றுதான், மெண்டாரிஸ், கருதினார். ஆனால் ஆட்சி கவிழ்ந்தது! மெண்டாரிஸ் "கைதி' ஆனார்! இராணுவம், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது! என்று அங்காரா வானொலி அறிவித்ததும், மக்கள் திரள் திரளாகக்கூடி, தெருவெல்லாம், களிநடமாடினராம். வீழ்ந்தது சர்வாதிகாரம்! வென்றது ஜனநாயகம்! என்று முழக்கமிட்டபடி, மக்கள், மெண்டாரிசைத் தேர்தலிலே ஆதரித்தனர்; உண்மை; ஆனால் எதற்கு? உரிமைகளைப் பாதுகாத்து வாழ்க்கைத்

தரத்தை உயர்த்தி, நல்லாட்சி நடத்துவார் என்பதற்காக."ஓட்டு' போட்டாகிவிட்டது, இனி"இதுகளை' அடுத்த முறை அழைத்து ஓட்டு கேட்கிறவரையில், நாம் வைத்ததுதான் சட்டம்! - என்ற போக்கிலே, நடந்து கொண்டார், மெண்டாரிஸ்.

□

மக்களாட்சி முறையிலே, மறைந்திருந்து கேடு விளை விக்கும் மனப்போக்கு இது. ஒருமுறை "ஓட்' அளித்துவிட்டால், அந்த மக்கள், மறுதேர்தல் வருகிறவரையில், ஆட்சிப் பொறுப்பை ஏற்றோர், எது செய்திடினும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; எதிர்த்திடலாகாது; ஏமாற்றம் ஏற்பட்டாலோ,எரிச்சல் மூட்டப்பட்டாலோ அடுத்த தேர்தலின்போதுதான், தமது எண்ணத்தை மக்கள் காட்டலாமேயொழிய, இடையில்"ஏன்' என்று கேட்பதும், எதிர்த்துக்

கிளர்ச்சி நடத்துவதும், ஜனநாயகப் பண்பு ஆகாது - என்ற கருத்தை, தத்துவமாக்கி, அதைக் கொண்டே மக்களைத் தாக்கி, அடிப்படை உரிமைகளுக்கு உலைவைக்க, ஆட்சியாளர் முனைகின்றனர். மெண்டாரிஸ் அம்முறைதான் கைக்கொண்டார்; இன்று கைதியாகிக் கிடக்கிறார். வேறு பல இடங்களிலே, அதே முறையை, "ஜனநாயகவாதிகள்' கையாண்டு வருகிறார்கள்; உணர்ச்சியற்று, அச்சம் மேலிட்டு மக்கள், அந்தக் கொடுமையைத் தாங்கிக்கொள்கின்றனர் தம்பி! மெண்டாரிஸ் பாலங்கள் கட்டாதிருந்திருப்பாரா, பள்ளிகள் திறந்திடாதிருந் திருப்பாரா, தொழிற்சாலைகள், பாதைகள் விஞ்ஞானக் கூடங்கள், விளையாட்டிடங்கள், எல்லாம்தான் அமைத்திருந் திருப்பார்! எனினும் உரிமையை அழிக்கிறார்; அடக்குமுறையை ஏவுகிறார்;

ஒரே கட்சி ஆட்சிக்கு வழிகோலுகிறார் என்று தெரிந்ததும், மக்கள் சீறி எழுந்தனர்: சரிந்தது மெண்டாரிசின் ஆட்சி! உரிமை உணர்ச்சி அந்த வகையில் அங்கு கொழுந்துவிட்டு எரிகிறது. இங்கு? இந்தி படித்தால்தானே, பிழைப்பு!! துணிந்து உத்திரவிடுகிறது, துரைத்தனம்! பணிந்து"பாஷ்யம்' கூறுகிறார்கள், இங்குள்ள மந்திரிகள்! பரிவுடன் ஆதரிக்கின்றன, ஏடுகள்! பல்லிளித்தபடி, படித்தால் என்ன? என்று கேட்கின்றனர். பராக்குக் கூறுவோர். பார்த்தாயா, தம்பி! துருக்கியை!! "கற்கோட்டை' என்றனர், மெண்டாரிசின் கட்சி ஆட்சியை - கலகலத்துப்போய் விட்டது - ஆறே மணிநேரம் நடைபெற்ற இராணுவப் புரட்சியால், எதிர்க்கட்சிகளை ஒழித்திட, போலீசை ஏவினார் மெண்டாரிஸ்; இராணுவம், தன் பலத்தை ஏவி, மெண்டாரிசை வீழ்த்திவிட்டது. இராணுவம் என்றால்,

வேற்று நாட்டானுடன் போரிட்டு மடிய, ஊட்டி வளர்க்கப்படும் பலிக்கிடாக்கள் உள்ள கொட்டடி என்ற நிலைமாறி, அதிகாரத்தைக் கைப்பற்றினோர், அக்ரமமாக நடக்க ஆரம்பித்தால், மக்களை மதியாது மனம் போன போக்கில் நடவடிக்கைகளை வகுத்துக்கொண்டால், ஜனநாயக முறைக்கு அடிப்படையாக உள்ள"எதிர்க்கட்சி'யை அழித்தொழிக்க அதிகாரத்தைப் பயன்படுத்தினால், குறுக்கிட தடுத்திட, களைந்திட முன்வந்து, நாட்டைக் குழப்பக்காடு ஆகிவிடாதபடி பார்த்துக்கொள்ளும் பொறுப்புள்ளோர் நிரம்பிய பாசறை என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

□

நினைத்தபடி "சட்டம்' செய்திடும் வாய்ப்புப் பெற்றிருந் தார், மெண்டாரிஸ். மிகப் பெரும்பான்மையினராக அவருடைய கட்சி,

பார்லிமெண்டிலே இருந்ததால்! இங்கு நாம் காணுகிறோமல்லவா,"மெஜாரட்டி' கட்சி நடந்து கொள்ளும் போக்கினை! மக்களாட்சியிலே, எதைக் காட்டியோ, நீட்டியோ, கூறியோ, "ஓட்டுகளை'க் குவித்துக்கொண்டு, ஆளவந்தார், ஆகிவிட்டால், அடே அப்பா! அவர்களுக்குத்தான், எத்துணை ஆணவம் பிடித்துக்கொள்கிறது!

அகில உலகத்து அறிவும், திரட்டி உருட்டித் தம்மிடம் தரப்பட்டிருப்பது போலல்லவா, ஆளவந்தார்கள் மட்டுமல்ல, அங்கு எலும்புத் துண்டுகளுக்காக, நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் சில்லறைத் தேவதைகள்கூடப் பேசுகின்றன. மற்றவர்களுக்கும், பொறுப்பு உண்டு, புத்தி உண்டு, கடமை உண்டு, என்றா எண்ணுகிறார்கள். நாங்கள் 150! நீங்கள் 15!! போதாதா விளக்கம்! இதைக்

காட்டிலும் வேறு என்ன காரணம் நாங்கள் கூறவேண்டும், எங்கள் போக்குக்கு என்றல்லவா பேசுகிறார்கள்.

கவைக்குதவாத பேச்செல்லாம் கற்றறிவாளர் முன் பேசத் துணிகிறார்கள்; கை ஒலியும் எதிர்பார்க்கின்றனர்.

முரண்பாடாகப் பேசுகிறார்கள், சுட்டிக் காட்டினால், அதட்டி உட்கார வைக்கின்றனர்.

“ஊழல் நிரம்பிக் கிடக்கிறதே, ஆட்சியில்’ என்று வருத்தம் தோய்ந்த குரலிற் கூறிடும் போதும்,”முட்டாள்களுக்கு அப்படித்தான் தோன்றும்’ - என்று பேசுகிறார்கள்.

எங்கிருந்து பிறக்கிறது, ஆணவம்? எண்ணிக்கை பலம்!! அசைக்க முடியாது; சட்டசபையில் நாம்தான் ”மெஜாரிட்டி’ - என்ற செருக்கு. தம்பி! துருக்கியில் நிலைத்ததா, அந்தச் செருக்கு! துக்கம் துளைத்திடும்

நிலையில், துரைத்தனம் இழந்து, மெண்டாரிஸ் கிடக்கிறார்; இதுமட்டும்தானா! இன்னும் ஏதேனும், காத்திருக்கிறதா, என்ற அச்சம் இப்போது அவருக்கு!! துருக்கியில் மக்களின் உரிமையை அழித்திடக் கிளம்பும் சக்தி எதுவாக இருப்பினும், அதனைச் சாய்த்திடத்தக்க, ஆற்றல் எழுந்தது; வென்றது. இங்கு? இப்படித்தான் செய்வோம்! தடுத்திட யார்? மக்கள் எங்களிடமல்லவா ஓட் கொடுத்து ஆளச் சொல்லியிருக்கிறார்கள்! தெரியாதா? கூறட்டுமா! நாங்கள் 150!! நீங்கள் 15!! - என்றல்லவா பேசுகிறார்கள். 150 என்ற எண்ணிக்கைஅல்லவா, காமராஜரை, பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலும், வழக்கறிஞர்கள் சங்கக் கூட்டத்திலும், பேச வைக்கிறது!! எங்கும் பேசலாம்! எதையும் பேசலாம்! எப்படியும் பேசலாம்!! - என்பது, எவ்விதம் கிடைத்தது? 150! வேறென்ன!!

இதைவிட, மிக அதிகமான அளவிலேதான், மெண்டாரிஸ் கட்சிக்கு, எண்ணிக்கை பலம். ஆயினும், என்ன நடந்தது? எந்த நேரத்திலும், மக்களின் உரிமைக்கு மேலான சக்தி வேறில்லை என்பது நிலைநாட்டப் பட்டுவிட்டது!!

□

”துருக்கியில் விடுதலைப்போர் மூண்டகாலை, நானாற்றிய வீரத் தொண்டுகளை உலகு அறியுமே! மக்கள் அறியமாட்டார் களா!! கமால் காட்டிய வழியில் துருக்கியை அழைத்துச் செல்லும் ஆற்றல் கொண்டவனன்றோ, நான்! என்னை, எந்த எதிர்க்கட்சி தூண்டிவிட்டாலும், எதிர்க்கத் துணிவார்களா! எதிர்ப்பு முளைத்தாலும், முளையிலேயே கிள்ளி எறிந்திடத் தெரியாதா! சட்டத்தை நிலைநாட்ட, பலாத்காரத்தை ஒடுக்க, பயங்கர இயக்கத்தை அழிக்கத்தானே

போலீஸ் இருக்கிறது. அந்தப் போலீஸ், என் சுட்டு விரல் காட்டும் வழி நடக்க இருக்கும்போது, கூச்சல்கள், குழப்பங்கள், ஆர்ப்பாட்டங்கள், எத்தனை நாளைக்கு நடக்கும்? வாய்வலிக்குமட்டும் கத்துவார்கள்! கால் கடுக்குமட்டும் சுற்றுவார்கள்! உதை கிடைக்குமட்டும் உலாவுவார்கள்? - என்றெல்லாமல்லவா, மெண்டாரிஸ், எண்ணி இறுமாந்து கிடந்திருப்பார்.

ஆட்சியைக் கைப்பற்றியதும், அடக்கம் அழிந்துபட்டு விடுகிறது, தம்மைப்பற்றிய நினைப்பு தலைக்கேறி விடும் போக்கினருக்கு!

காரணம் கேட்டால், கோபம் கொப்பளிக்கிறது; வாதாடினால், கண்கள் சிவந்துவிடுகின்றன.

உரிமை முழக்கத்தைக், காட்டுக்கூச்சல் என்றும், கிளர்ச்சியைக் குழப்பமென்றும்,

வீரர்களைக் காலிகளென்றும் அறிவாலயப் பயிற்சி பெற்றோரைச் சிறுபிள்ளைகள் என்றும், கூறத் தோன்றுகிறது.

சிறு பிள்ளைத்தனம் - காட்டுமிராண்டித்தனம் - அறிவற்ற தனம் - என்று நேரு பண்டிதர், என்னென்ன அர்ச்சனைநடத்தினார், உரிமையை அழிக்கலாமா என்று தமிழர் தலைவர் கேட்டபோது!! மெண்டாரிஸ் அதுபோல, என்னென்ன பேசியிருப்பார்; இழிமொழிகளை வீசியிருப்பார்! கைமேல் பலன் கிடைத்துவிட்டது, மெண்டாரிசுக்கு - கைதியாகிக் கிடக்கிறார்.

பத்து நாட்களுக்கு முன்பு வரை, அவரைப் பார்த்தால் வணக்கம் கூறி நின்றவர்கள்தான், இராணுவத்தார் மரியாதை அணிவகுப்புகளைக் கண்டு பெருமிதமடைந்தவர்தான், மெண்டாரிஸ்.

இந்த "யோகம்' என்றென்றும் இருக்கும் என்று எண்ணினார், ஏமாந்தார்!!

□

தம்பி! இந்த மெண்டாரிஸைவிட, வீரதீரமிக்கவர், வெஞ்சமர் நடத்தி வெற்றி பல கண்டவர், தென் கொரிய நாட்டுத் தலைவர் சிங்மன் ரீ! ஹவாய் தீவுசென்று, அடைக்கலம் தேடுகிறார் இன்று!! ஜப்பானை எதிர்ப்பேன்! சோவியத்தை ஒழிப்பேன்! என்று அவர் பேசிய வீரப்பேச்சு கொஞ்சமல்ல. தென் கொரியாமீது, யார் கைவைத்தாலும் ஒழித்துக்கட்டி விடுவேன் என்று உருட்டி மிரட்டிப் பேசிவந்தார், இந்த முதியவர்; வயது 90க்குக் கிட்ட.

தென் கொரியா மட்டுமல்ல, உலகெங்கும், சிங்மன் ரீயின் ஆற்றலை, அஞ்சா நெஞ்சினைப் பாராட்டினர்.

எத்துணை ஆபத்துகளை எதிர்த்து நிற்கிறார்! கஷ்டங்கள் அடுக்கடுக்காக வருகின்றன, கலங்கவில்லை! எங்கும் எதிரிகள் சூழ்ந்துகொண்டபோதிலும் புறமுதுகு காட்டாது போரிடுகிறார். தள்ளாத வயது, எனினும், களம் அமைக்கிறார், படை கூட்டுகிறார், பாசறை ஏற்படுத்துகிறார், இரத்த வெள்ளத்தில் நீந்துகிறார், இவரன்றோ வீரர்! - என்று வியந்து கூறினர். இருபது ஆண்டுகளுக்கு மேலாக, ரீ சொல்வதுதான் சட்டம் - தென் கொரியாவில் நாட்டு மக்கள் அத்துணைபேரும், ரீதான் கண்கண்ட கடவுள், மானத்தைக்காத்த மாவீரன் என்று புகழ் பாடினர். கட்டிளங்காளைகள் ரீயைச் சுற்றி நின்று, கட்டளைக்குக் காத்துக் கிடந்தனர். ஐசனோவர் "என் அருமருந்தன்ன நண்பர்' என்று பாராட்டினார் ரீயை! கேட்ட பணத்தைத் தட்டாமல் தயங்காமல் கொட்டிக் கொடுத்தார்!

இடிபாடுகள் நிரம்பிய இடத்தை எழிலிடம் ஆக்குவேன்! பயந்துகிடந்த மக்களை நிமிர்ந்து நடந்திடச் செய்வேன்! என்று சூளுரைத்துப் பணியாற்றினார்; தென் கொரிய ஆட்சியைஎதிர்ப்பின்றி நடத்தி வந்தார். அவர்தான், தம்பி! ஊரறியாமல், ஓடினார், புகலிடம் தேடி!! சிக்கிக்கொண்டால், சித்திரவதை செய்து விடுவார்கள் என்ற கிலி! பிடிபட்டால், பிய்த்தெடுத்து விடுவார்கள் என்ற பீதி! கோபம் காட்டுத் தீ கோலத்தில் தென் கொரிய நாட்டில்! இதிலே வீழ்ந்தால், கருகிப்போய்விட வேண்டும் என்ற கிலி! சென்றிருக்கிறார். அதற்குள், படாத பாடுபட்டு விட்டார்; பணிந்துகிடந்தோர் பதைத்து எழுந்தால் என்ன நேரிடும் என்பதைப் பார்த்துவிட்டார்!

மக்கள் கடலென ஒலி கிளப்பி, அவரை வாழ்த்திய காலம் உண்டு! இப்போது?

”பிடித்திழுத்து வாருங்கள் அந்தப் பேயனை’ - என்று கூவுகிறார்கள்! அந்தத் தேசியத் தலைவனோடு, களம் சென்று நிற்பது பெரும்பேறு என்று பேசினர், முன்பு; இப்போது அந்தக் கொலைகாரன் எங்கே! கொள்ளையடித்தோன் எங்கே! கொடியோன் எங்கே! என்று தேடுகின்றனர்; ஓடோடிச் சென்று பதுங்குகிறார், ரீ.

அன்பால் அபிஷேகித்தோம், அக்ரமக்காரன் என்பதை அறியாமல்! பக்கம் நின்று பணிவிடைசெய்து வந்தோம் படுகொலைகளைக் கூசாது நடத்திய கொடியோன் என்பதைத் தெரிந்துகொள்ளாமல்! நாட்டை மீட்டவன் என்று பாராட்டினோம், நாசகாலனை!! - என்றெல்லாம் இன்று மக்கள் ஆத்திரத்துடன் குரலெழுப்புகின்றனர்; குலைநடுக்கம் கண்டுவிட்டது சிங்மன் ரீக்கு; குண்டுக்குப்

பயந்துகொண்டு ஓடியே விட்டான்.

சீங்மன் ரீகூட மக்களிடம், மலைக்கத்தக்க அளவு செல்வாக்குப் பெற்றிருந்த தலைவன்தான்! மழைக் காலத்துக் காளான் அல்ல! இரத்தத் தடாகத்திலே பூத்ததோர் புரட்சி மலர் என்ற புகழுரையைப் பெற்றவன்.

தேர்தலில் சிங்மன் ரீயின் கட்சிக்குத்தான், மிகப் பெரிய வெற்றி! மற்ற கட்சிகளில் பலர், மண் கவ்வினர்!! ஆட்சி மன்றத்திலே, ரீ கட்சிதான் மிகப் பெரிய எண்ணிக்கை பலத்துடன். அந்த எண்ணிக்கை பலத்தைக் காட்டி, சிங்மன் ரீ, காட்டாட்சி நடாத்திடலானான். என்றென்றும் அதிகாரம் தன்னிடம் இருக்க வேண்டும் என்ற நோக்கம்கொண்டு மாற்றுக் கட்சியினரை. அழித்திடலானான். மக்கள் நீண்ட நாட்கள், ரீயின் போக்குக்கு, இடமளித்து வந்தனர்.

கோபவெறி பிடித்து அவன் அலைந்தபோதும், ”என்னமோ சுபாவம் இப்படிக் கெட்டுவிட்டது; என்றாலும், தென் கொரியநாட்டுக்காக, ரீ ஆற்றிய மகத்தான பணியினை மறந்திடலாமா!’ - என்று பேசினர் - பணிவுடன் நடந்துகொண்டனர்.

ஆணவச் செயல்களை துவக்கத்திலே, எதிர்த்திடவில்லை; சிங்மன் ரீ தானாகத் திருந்திவிடுவான் என்று எதிர்பார்த்தனர்.

சிங்மன் ரீயோ, தென் கொரிய நாடு இன்றுள்ள நிலையில், நாம்தான் ”இரட்சகன்’ ஆகவேண்டும் என்று எண்ணினான்.

தேர்தல் வரட்டும், நமது தீர்ப்பைத் தருவோம் என்று மக்கள் துடித்துக் கிடந்தனர். ”தேர்தல் தானே! அதை எப்படி நடத்துவது என்பதுதானா, எனக்குத் தெரியாது! தேர்தலில் வெற்றிபெற்றுக் காட்ட வேண்டும்;

அவ்வளவுதானே! இதோ, காட்டுகிறேன் வெற்றி!! என்றான், தில்லுமுல்லுகள் பல செய்து, தேர்தலில் மீண்டும் தன் கட்சிக்கே, மிகப்பெரிய அளவில் வெற்றி என்று அறிவித்தான். மக்கள் திகைத்தனர்.

ஊரெல்லாம் எதிர்த்து, உணர்ச்சி உள்ளோரெல்லாம், ரீ ஆட்சிக்கு எதிர்ப்பு காட்டினர்! எனினும் ரீ கட்சி அல்லவா, மீண்டும் வெற்றி பெற்றிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். எப்படிக் கிடைத்தது இந்த வெற்றி? எவரைக் கண்டபோதும், உழவராயினும், தொழிலாளராயினும், பாமரராயினும் படித்தோராயினும், இம்முறை எமது ஆதரவு ரீ கட்சிக்கு இல்லை என்றல்லவோ, கூறி வந்தனர். எனினும் வெற்றிப் பட்டியலைக் காட்டுகிறாரே, சிங்மன் ரீ எப்படி முடிகிறது, வெற்றி பெற!! - என்று திகைத்த மக்கள் ஒருவருக்கொருவர் கேட்டுக்

கொண்டனர்.

வெற்றி காட்டுகிறார்! பெறவில்லை!! - என்பது விளங்கிற்று. வெகுண்டெழுந்தனர் அந்தச் சூது அம்பலமானதும்.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்ததால், அதிகாரிகளை ஏவி மக்களை மயக்கவும் மிரட்டவும் முடிந்தது. பணப்பெட்டிகளைப் பெற்றிருந்ததால், ஓட்டுகளை' "விலை' கொடுத்து வாங்கிட முடிந்தது. மக்கள் மனமுவந்து தராவிட்டாலும்,"ஓட்டுகளை'த் தம் பெட்டியில் போட்டுக்கொள்ளும் வழி, ஆட்சிப் பீடத்தில் இருந்ததால் கிடைத்தது. பெட்டிகளையேகூடக், குறைக்க, மறைக்க, உடைக்க, முடிந்தது! எல்லாவிதமான சூது சூழ்ச்சிகளையும் செய்து தேர்தல் வெற்றியைத் தயாரித்துக்கொள்ள முடிந்தது. அந்த வெற்றிப் பட்டியலை நீட்டி, முணுமுணுத்துக் கிடந்தோரே! இப்போது என்ன சொல்லுகிறீர்கள்? எதிர்த்துப்

பேசினோரே! மக்கள் எவர் பக்கம் என்பதை எடுத்துக் காட்டி விட்டதேதேர்தல் வெற்றி. இனி என்ன இருக்கிறது பேச? - என்று சிங்மன் ரீ கட்சியினர் கொக்கரித்தனர்.

ஏமாற்றப்பட்டுவிட்டோம்! சூது நடந்துவிட்டது! வெற்றி வெற்றி என்று வெறிக் கூச்சலிடுகிறார்கள் - பெற்றது வெற்றி அல்ல, வெறும் புரட்டு! வன்கணாளரை வீழ்த்தி வாகை சூடிடலாம் என்று நம்பிக்கொண்டிருந்தோம். எப்படியோ வஞ்சிக்கப்பட்டுப் போய்விட்டோம்! - என்று மக்கள் கொதித்தெழுந்து கூறினர். காட்டிடேன், வெற்றி போதாதா? என்று பேசிச் சிரித்தான், சிங்மன் ரீ!

கழகம் வளருகிறது வளருகிறது என்று பேசுகிறார்களே, கூட்டம் கூடுகிறது கூடுகிறது என்று கூறுகிறார்களே, ஓட் டெல்லாம் எமக்கன்றோ கிடைக்கிறது,

பார்க்கிறீர்களல்லவா, என்று இங்கு பேசவில்லையா காமராஜர்! பண பலம், பத்திரிகை பலம், அதிகாரம் தரும் பல்வேறுவிதமான வாய்ப்புகள் இவை யாவும் சேர்ந்து, தேர்தலில் வெற்றிபெற்றுத் தருகிறது; இதை மக்கள் ஆதரவு என்றல்லவா கூறுகிறார் காமராஜர்! அவருக்குக் கிடைத்திருப்பதைவிட, மிக அதிகமான வாய்ப்புகள் வசதிகள் ரீக்கு! எனவே எல்லா வகையான புரட்டுகளையும் செய்து, பெட்டிகளை நிரப்பிக்கொள்ள முடிந்தது. புரட்டு வென்றது, புரட்சி அழிந்தது என்று எண்ணினார் ரீ; ஆனால் புரட்சி அழிந்துபடவில்லை, புது வேகம் பெற்றது. சிங்மன் ரீ ஆட்சியிலே நடக்கும் அக்ரமங்களிலே, அநீதிகளிலே, ஒன்று இந்த தேர்தல் வெற்றி! - என்று மக்கள், பேசலாயினர். தோற்றதால் குளறித் திரிகிறார்கள் என்றனர், ரீயினர் பெற்றது

வெற்றி அல்ல, என்பதை உலகறியச் செய்வோம் என்று ஆர்த்தெழுந்தனர் மக்கள் - மாணவர் முன்னணி நின்றனர் - ரீ, போலீசை ஏவினார் -மக்கள் தாக்கப்பட்டனர் சுட்டுக் கொல்லப்பட்டனர், உடனிருந்தோர் பிணமானது கண்டதும், மற்றையோரின் குருதி கொதித்தது. இரத்த வெள்ளத்திலே, தமது நண்பர்கள் வீழ்ந்திருக்கக் கண்டதும், மற்றவர் சீறும் புலியாயினர். இதுதானே முடியும் உன்னால் சாகடிக்க! சரி! மானமழிந்து, மண்டியிட்டுக் கிடப்பதைவிட, இதோ இறந்துபட்டனரே, எமது ஆருயிர்த் தோழர்கள், அதுபோல மடிந்து போவதே மேல்; ஆனால் இறந்துபடுமுன்பு, இந்தக் கொடியோரின் கோல் முறிந்திட வேண்டும். குத்தட்டும், வெட்டட்டும் குண்டடி தரட்டும், அஞ்சப்போவதில்லை, இந்த ஆட்சியின். சூது சூழ்ச்சியினை அம்பலப்படுத்தியே, தீருவோம்

என்று முழக்கமிட்டனர், மக்கள்.

பல்கலைக் கழகம் சென்று படித்து, டாக்டர்களாய், வழக்கறிஞர்களாய், பொறியியல் வல்லுநராய், ஆசான்களாய், விஞ்ஞானிகளாய், தளபதிகளாய், நிர்வாகிகளாய், திகழ வேண்டிய மாணவமணிகள், குண்டடிபட்டனர். இரத்தம் "குபுகுபு'வென வெளிவரக் கண்டும் கலங்காது, புன்னகை புரிந்து, உயிர்போகப் போகிறது! கவலையில்லை! கடமையைச் செய்தேன்! விட்ட இடத்திலிருந்து தொடங்கி, மற்றதைச் செய்து வெற்றிபெற நீவீர் இருக்க, நான் கவலைப்படுவானேன்! என் பங்கு நான் செலுத்திவிட்டேன்! என்று கூறிச் சாய்ந்தனர்! இறந்துபட்ட இளைஞர்களின் இரத்தத்திலே, சாக அஞ்சாத மற்றவரின் கண்ணீர் கலந்தது. அணுபிளக்கப்பட்டது போன்றதோர், நிலை! புதியதோர் சக்தி பிறந்தது! புயல் வீசிற்று!

போரிலே பழக்கம், ரீக்கு பயிற்சியும்கூட ஆனால் இந்தப் புயல் வேறுவிதமானது! அடக்கப் பார்த்தார், அலுத்துப் போனார்! ஆட்சி கவிழ்ந்தது! ஆணவம் அழிந்தது! வெளியே தலைகாட்ட அஞ்சினார்! விரண்டோடிவிட்டார், ஹவாய் தீவுக்கு!!

தேர்தலிலே, எப்படியோ வெற்றிபெற்றுக் காட்டி விட்டால் போதும், நாடு காலடி கிடக்கும், மக்கள் மண்டியிட்டுக் கிடப்பர், எதிர்ப்பு இருக்குமிடம் தெரியாமல் அழிந்தொழியும் என்று எண்ணுவது எத்துணை பேதமை என்பதைத் தென் கொரிய நாட்டு நிகழ்ச்சி காட்டிவிட்டது! ஆனால் அது தென் கொரியா! உரிமை உணர்ச்சியால் உந்தப்பட்டவர்கள், உயிர் கொடுத்தேனும் உரிமையைக் காத்திட வேண்டும் என்று கிளர்ந்தெழுந்தனர். இது? தெளிவுபேசித் தேம்பிக்கிடந்திடப் பழகிப்போன

தமிழ்நாடு! எனவேதான் இங்கு தேர்தலில் வெற்றிபெற்றுக் காட்டினால் போதும் என்ற போக்கிலே காங்கிரஸ் தலைவர்கள் நடந்துகொள்கிறார்கள். அவர்களை எதிர்ப்பானேன், அல்லற்படுவானேன்! - என்று எண்ணிடும் போக்கினர் மிகுந்துவிட்டனர். தம்பி! உன்போன்றார் மட்டும் போர்க்கொடி உயர்த்தியபடி உள்ளனர். மற்றவர்கள் மண்டியிட்டுக் கிடக்கும்போது, இதுகளுக்கு, எவ்வளவு மண்டைக் கனம், நம்மை எதிர்க்கிறார்களே என்று எண்ணி, காமராஜர் கடுங்கோபம் கொள்கிறார். காலை மாலை என்று பாராமல், காடு மேடு என்றும் யோசிக்காமல், சுற்றிச்சுற்றி வருகிறார், திட்டித்திட்டுத் திரிகிறார். பட்டிதொட்டி எல்லாம் அவர் பரணி! பத்திரிகைகளிலே, அவர் பேச்சு!!

மெண்டாரிஸ் ”கைதி’ ஆகியுள்ள நேரம், சிங்மன்ரீ விரண்டோடிய காலம்,

காமராஜர், பவனி வருகிறார் எதிர்க்கட்சிகளை ஒழித்துக்கட்டுவேன், என்னை எவன் என்ன செய்ய முடியும்? - என்று, கொக்கரித்தபடி!

தம்பி! மெண்டாரிஸ் முழக்கமிடத் தெரியாதவரல்ல! அவர் "கைது' செய்யப்பட்ட நேரம்கூட, அவர் முழக்கமிட ஒரு மாவட்டத்திலே சுற்றுப்பயணம் நடத்திக்கொண்டிருந்த நேரம் தான்!! இராணுவம் தலையிட்டு, அவரைச் சிறைப்படுத்தா திருந்தால், மெண்டாரிசும், காமராஜரைவிடக் காரசாரமாக ஊரூர் சென்று பேசித்தான் இருப்பார்,"எவனும் எதுவும் செய்ய முடியாது! எவனுக்கும் எதுவும் தெரியாது! எந்தக் கட்சியும், எம்மை அசைக்க முடியாது! எங்களால்தான். ஆட்சி நடத்த முடியும்!'' என்றெல்லாம். அவ்விதமான பேச்சைக் கேட்டுக் கேட்டுப் புளித்துபோய் விட்டது. ஆளவந்தாராக

இருக்கிற ஒரே காரணத்துக்காக, பேசுவதைக் கேட்டுக்கொள்கிறார்களேயன்றி, பேச்சிலே அறிவு ததும்புகிறது என்பதனால் அல்ல! மக்கள் மனம் கொதித்துக் கிடக்கிறது, எந்தச் சமயத்திலே வந்தது வரட்டும் என்று கிளம்புவார்களோ, என்னென்ன அழிவுகள் நேரிட்டுவிடுமோ! - என்று எண்ணினர், இராணுவத்தினர். இனியும் இந்த போலித்தனத்தை, கேலிக்கூத்தை விட்டுவைக்கக் கூடாது என்று முடிவு செய்தனர். மெண்டாரிசைக் கண்டு அழைத்தனர்; எங்கு? என்று கேட்டார், மெத்த உழைத்துவிட்டீர்கள், எனவே சிறிது காலம், ஓய்வு எடுத்துக்கொள்ள வாருங்கள்! - என்றனர். சிறையா? என்று குழம்பிக் கேட்கிறார், மெண்டாரிஸ்! செச்சே! அங்கு அனுப்புவோமா தங்களை! அனுப்பினால் உயிரோடு திரும்பி வெளிவரத்தான்

முடியுமா! உண்மையை உரைத்ததால், உரிமைக்குப் பரிந்து பேசியதால், நீதி கேட்டதால், நேர்மையைக் காட்டியதால் உமது கோபத்துக்கு ஆளாகி, உள்ளே தள்ளப்பட்டிருக்கிறார்களே பலர், அவர்களின் கோபப் பார்வை போதுமே, உம்மைச் சாகடிக்க! சிறை சென்றால் சித்திரவதை நேரிடும்! உம்மை அங்கல்ல, அழைத்துச் செல்வது! எமது முகாமுக்கு!! என்று கூறி இழுத்துச் சென்றனர்,

---

கபிஸ்தலம் மூப்பனார், பூண்டி வாண்டையார், நெடும் பலத்தார், வடபாதிமங்கலத்தார், எனும் "ஏழைகள்' புடைசூழ,"வீடு நமக்குத் திருவலங்காடு, உண்டு கையில் திருவோடு' என்ற பாசுரம் பாடிடும் பற்றற்ற காமராஜர், மக்களை நேரடியாகக் கண்டு பேச, குறைகளை அறிய, தீர்க்க, தஞ்சைத் தரணியிலேசுற்றுப்பயணம்

நடத்தினார் - அதுமட்டுமல்ல அவர் நோக்கம்; மிட்டா மிராசுகளின் கையாட்களாக உள்ள தீனாமூனாக்காரர் களையும் அழித்திட வேண்டும் என்பதாம். கபிஸ்தலம் மூப்பனார், வடபாதிமங்கலத்தார், நெடும்பலத்தார் என்போரெல்லாம், தெரியுமா தம்பி! காலையிலே கலப்பை தூக்கிக்கொண்டு கழனி சென்றால், மாடு அலுத்துப் படுத்தாலும் தாம் படுத்திடாமல், பாடுபடும் ஏழை உழவர்கள்! கடித்துக்கொள்ள ஒரு துண்டு மிளகாய் வத்தல்கூடத் தேடாமல், புளித்த கஞ்சியைக் குடித்துவிட்டுப், பாடுபடும் விவசாயிகள்! ஓலைக்கொத்துக் குடிசை! கந்தல் பாய்! கைதான் தலையணை, இவர்களுக்கு. உழைத்துப் பிழைத்திடும் உத்தமர்கள். ஊரார் வாழ உழைத்திடும் உத்தமர்கள்! காடு திருத்திக் கழனியாக்கி நாடு வாழ நற்பணியாற்றிடும் நல்லவர்கள்!

அவர்கள் பட்டுப் பட்டாடையைத் தொட்டும் பார்த்ததில்லை, தங்க நகையைத் தீண்டினதில்லை. வைரம் தெரியுமா? என்று கேட்டால் எந்த மரம் வைரம் பாய்ந்திருக்கிறது? என்றுதான் கேட்பார்கள் - விலையுயர்ந்த அணி வைரம் என்பதும் அறியாதவர்கள். அப்படிப்பட்ட ஏழைகளை அழைத்துக்கொண்டு, மூன்று மிட்டாக்களுக்குச் சொந்தக்காரரான குடந்தை நீலமேகமும், இரும்புப் பெட்டியிலே எட்டு இலட்சம் வைத்திருக்கும் சின்னத் தம்பியும், கரும்புத் தோட்டத்திலே வருஷம் கால் கோடி பெற்றிடும் இளங்கோவும், பஸ் முதலாளி பட்டுவும், ஆலை முதலாளி பெத்தண்ணனும், கோலாகல வாழ்வு நடாத்திடும் கொடவாசல் கிருஷ்ணமூர்த்தியும், வட்டி வியாபாரத்தில் பெரும் பொருள் ஈட்டிடும் மாயவரம் கிட்டப்பாவும், மாளிகைகளை ஊரூர் அமைத்துக்கொண்டு மனோஹர வாழ்வு

நடாத்தும் மன்னார்குடி நாராயணசாமியும் - என்று இவ்விதம் இருக்கிறார்களல்லவா, நமது கழகத்தவர், இவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றி, நான் முன்பு காட்டினேனே, பாட்டாளித் தோழர்கள், உழைப்பின் உருவங்கள், ஊர் வாழ உழைப்போர், சொத்து சுகம் இல்லாதவர், கடினமான உழைப்பாளிகள், கபிஸ்தலம், நெடும்பலம், வடபாதிமங்கலம் போன்றாரிடம், நாட்டை ஒப்படைக்க வேண்டும். அப்போதுதான் நாடு சீர்படும், நல்லாட்சி ஏற்படும் என்ற திருத்தொண்டிலே ஈடுபட்டு, அந்தத் திருவாசகத்தை ஊரெல்லாம் முழக்கிக் கொண்டு, "புனித யாத்திரை' நடாத்திக்கொண்டு வருகிறார். பெண்டா பிள்ளையா எனக்கு, எனக்கென்ன மாதச் சம்பளம் ஆயிரத்துக்குமேல், எனக்கு வேண்டியதெல்லாம் கட்டிக் கொள்ள

நாலுமுழ வேட்டியும், போட்டுக்கொள்ள ஒரு துண்டும், படுக்கப் பாயும்,பசிக்குக் கொஞ்சம் சோறும் சாறும் இருந்தால் போதும் என்று அறிவித்துவிட்டு, மாதம் சுளைசுளையாக ஆயிரத்துக்கு அதிகமாகச் சம்பளம் வாங்காத,"சத்புருஷர்' "சன்யாசி' காமராஜர்!

தம்பி! எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால், தஞ்சையிலேயே பெரிய புள்ளிகள் என்று எவரும் கூறிடக்கூடிய மிட்டா மிராசுகளை, கபிஸ்தலம் நெடும்பலங்களைக் கூட வைத்துக்கொண்டு, நான் ஏழைபங்காளன், எங்கள் கட்சி ஏழைகள் வாழ வழிவகுத்திடும் கட்சி! மிட்டா மிராசுகளுக்கு, கையாட்கள், தி. மு. கழகத்தார் - என்று கூறிடத் தோன்றும், எத்துணை மனம் மரத்துப் போயிருந்தால் அல்லது அச்சம் குடி கொண்ட மனதினராகிப்

போயிருந்தால், அந்தப் பொருளற்ற பேச்சைக்கேட்டும், வாளா இருந்திருப்பர்! நாம், மிட்டா மிராசுக் கட்சி, காமராஜரின் காங்கிரஸ் கட்சி பஞ்சை பராரி பகல் பட்டினி இராப்பட்டினி என்போரின் கட்சி! எதிரே உள்ளோர்களை எவ்வளவு இளித்தவாயர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தால், இந்தப் பேச்சுப் பேசத் துணிவு பிறந்திருக்கும். பேசினார், நமது கழகத்தை ஏசினார். அந்தத் துணிவுக்குக் காரணம் என்ன? எவர் எதிர்த்துக் கேட்க முடியும் என்ற போக்குத்தான். மெண்டாரிசும், சிங்மன் ரீயும், இது போன்ற போக்கினராகத்தான் இருந்தனர். அவர்களின் ஆட்சி இறந்த காலமாகிவிட்டது. ஏனெனில், அவர்கள் நடத்தி வந்த ஆணவ ஆட்சியால் ஏற்பட்ட கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு, மக்களிலே குறிப்பிடத்தக்க பகுதியினர்

”தாமாக’ எண்ணிப் பார்த்திடலாயினர்; உண்மை விளங்கிற்று; உரைத்தனர்; அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டது; அவதி பல கண்டனர்; எனினும் அடங்கிக் கிடந்துவிடவில்லை; அஞ்சப் போவதில்லை, சாகவும்! என்று ஆர்த்தெழுந்தனர்; அசைக்கவே முடியாது என்று அனைவரும் ஒரு காலத்தில், உள்ளபடி நம்பிக்கிடந்த ஆணவ அரசுகள், அழிந்தொழிந்து போயின!

என்ன செய்தாலும் தாங்கிக் கொண்டு, எதைப் பேசினாலும் கேட்டுக்கொண்டு, எவ்வளவு ஏசினாலும் இளித்துக் கொண்டு கிடந்தனரே, தலையாட்டிகள்போல, வாயில்லாப் பூச்சிகளாக, இந்த மக்கள்; இவர்களுக்கு எங்கிருந்து வந்தது திடீரென்று இந்தத் துணிச்சல்! அச்சம் கப்பிய முகத்தினராக இருந்து வந்தனர், இன்று பொறி பறக்கிறதே பேச்சில்!

எங்கேஒளித்துவைத்திருந்தனர், இந்தப் புரட்சிக் கனலை எல்லாம், என்று வீழ்ந்த எதேச்சாதிகாரிகள், எண்ணி எண்ணி ஆச்சரியப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீரிலிருந்து நெருப்புப் பிறக்கும் என்பதை, கூறினால் நம்புவார்களா? நடுக்கும் குரலில் பேசிக் கொண்டுள்ள இந்த மக்களுடைய உள்ளத்திலே, ஆணவ அரசுகளை அழித்திடத்தக்க ஆற்றல், குமுறல் வடிவிலே இருக்கிறது என்று கூறினால் நம்ப முடியுமா, கொடிகட்டி ஆண்டிடும் கொடியவர்களால்!

தம்பி! தண்ணீரைத் தேக்கிவைத்து, வேகமாகக் கீழே விழச்செய்து, விழும்போது ஏற்படும் சக்தியைக் கொண்டு "மின்சாரம்' தயாரிக்கிறார்கள்! பார்க்கிறாயல்லவா?

கொடுமைக்கு ஆளாக்கப்படும் மக்கள் வடிக்கும் கண்ணீர் வெள்ளம், ஓர் நாள் மாபெரும் "அழிவுச்சக்தி'யைப் பெற்றெடுக்

கிறது. ஆனால், அந்த நிலை ஏற்பட வேண்டுமானால், "சுய சிந்தனை' - கட்டுக்காவலுக்கு அஞ்சாமல், இட்டுக் கட்டியதற்குப் பணிந்து விடாமல், தாமாக, ஒவ்வொரு பிரச்சினைபற்றியும், நிகழ்ச்சி குறித்தும், எண்ணிப் பார்த்திடும் திறம், ஏற்பட வேண்டும். அந்தத் திறன் மக்களிடம் அற்றுப் போனால், தொடை நடுங்கிகளெல்லாம்கூட, செங்கிஸ்கான்களாகிவிட முடியும்; சர்வாதிகார வெறி வெற்றிபெற்றுவிடும். ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்பே கிரேக்கத் தத்துவாசிரியர்கள், இதைக் கருத்திலே கொண்டுதான்,"மனிதன் சிந்திக்கும் திறன் உடைய மிருகம்' என்று கூறினர். மனிதனிடமிருந்து சிந்திக்கும் இயல்பைப் பறித்து விட்டாலோ, அடக்கி ஒடுக்கிவிட்டாலோ, மிருகத்தை வேட்டை யாடுவதுபோல மனிதனை, மாபாவிகள்

வேட்டையாடிப் பிடிக்கலாம், விரட்டலாம், கொன்று குவிக்கலாம்!

எடுத்துக் காட்டுக்கு இது; தலைவாழை இலையில், சீரகச் சம்பா சாதத்தை வெள்ளி "அன்னகுத்தி'யால் எடுத்துப்போட்டு அதிலே வெண்ணெய் காய்ச்சிய நெய்யை உருக்கி வார்த்து. நேர்த்தியான பருப்பும் சுவைமிகு காய்கறியும் துணைக்கு இட்டு, பக்கம் நின்று பணிவிடை செய்து, எந்தக் கறியிடம் அவர் பரிவு காட்டுகிறார் என்பதைக் கவனித்து, எடுபிடியை அழைத்து, அந்தக் கறியை மேலும் இலையில் இடச்சொல்லி, பக்குவமான உபசாரத்தை நடத்தி வரும் மிட்டா மிராசுகளுடன் கூடிக் கொட்டமடித்துக் கொண்டே, கூசாமல், "நாங்கள் ஏழை பங்காளர்!' என்று பேசி வருகிறாரே, பெரிய பதவியில் அமர்ந்து விட்டதால்"பச்சைத் தமிழர்' ஆகிவிட்ட

காமராஜர், அவரிடம்”ஐயனே! அடுக்காது இந்தப் பேச்சு! அண்டப்புளுகன்றோ, நீர் பேசுவது; ஊரை அடித்து உலையில் போடுவோர், உழைப்பாளியின் இரத்தம் உறுஞ்சுவோர், தலைமுறை தலைமுறையாகச் சுரண்டிச் சுகபோகம் கண்டோர், உம்மைச் சூழ நிற்கிறார்கள்; அவர்களை, ஏழைக்குழைப்போர் என்று கூற, எப்படி மனம் இடந் தந்தது? உழைத்து உருக்குலைந்து போனோர், உழைத்திடவும் வாய்ப்புக் கிடைக்காததால் மனம் உடைந்து போனோர், தி. மு. கழகத்தில், பெரும்பாலோர்! அவர்களை மிட்டா மிராசுகளின் கையாட்கள் என்று கூறிடலாமா! அது நியாயமாகுமா? மிட்டா மிராசுகள் தமது கையாட்களுக்கு, சுவைமிகு உணவளிப்பர்! இப்போது உமக்களித்தனர்!! ஏனென்று எண்ணிப் பார்த்தீரா? உம்மிடம் பரிவு சுரந்ததாலா? உமது பதவிக்கு

உள்ள பெருமையை அறிந்ததாலா? அதோ, ஆயிரம் ரூபாய், ஏழைப்பிள்ளைகளின் மதிய உணவுக்காக அளிக்கிறேன் என்றுகூறி உம்மைக் களிப்படையச் செய்கிறாரே, "சமயமறிந்தார்'; அவர் ஏவிவிட்டதால், கொளுத்தப்பட்ட குடிசைகளும், அறுக்கப்பட்ட தாலிகளும் எவ்வளவு என்று உமக்குத் தெரியுமா? அடிஆட்கள் உடன்வர, சேரி புகுந்து அவர் நடத்திய கொடுமைகள் உமக்குத் தெரியுமா? - என்றெல்லாம் ஆத்திரத்தை அடக்க முடியாது ஒருவன் பேசி விடுகிறான் என்று வைத்துக்கொள் தம்பி!

என்ன நேரிடும் அவனுக்கு? அமைச்சர் முன் காலித்தனம் செய்தான் என்று பிடித்திழுத்துச் செல்வர் - சட்டம் அவனைக் கொட்டும். தம்பி! சர்வாதிகாரிகளிடம் சிக்கிய நாட்டிலே "குற்றவாளி'க் கூண்டிலே எவரெவர் நிறுத்தப்படுவர், வழக்கு விசாரணை எப்படி

இருக்கும் என்பதை விளக்கிடும் ஓரங்க நாடகமொன்று சின்னாட்களுக்கு முன்பு படித்தேன்.

அடுத்த கிழமை அந்தக் "குற்றவாளி'யைக் காணலாம், இந்தக் கிழமை கபிஸ்தலம், வடபாதிமங்கலம் போன்றாருடன் கூடி, ஏழைகளைக் காப்பாற்றக் கிளம்பிய காமராஜரைக்கண்டது போதும். பெரிய புள்ளிகள் என்ன கதியானார்கள் என்பதை எண்ணிப் பார்த்துப் பாடம் தேடச் சொல்லுவோம் அவர்களை.

அன்புள்ள,

அண்ணாதுரை,

5-6-1960

6. ஜனநாயகச் சர்வாதிகாரி!

மேனாட்டுச் சர்வாதிகாரிகள் -

ஏதென்ஸ் நகரில் ஒரு வழக்கு -

திராவிட நாடு

தம்பி!

”சர்வாதிகார ஆட்சி’ என்று கூறினாலே எல்லோருக்கும் ஒரு வெறுப்பு, பயம், உடனடியாகத் தோன்றிவிடுகிறது. ஏன் வெறுப்பும் பயமும் இருக்க வேண்டும் என்று விளக்கிக் கூற, வாதாட, காரணம் காட்டக்கூடத் தெரியாமலிருக்கும். ஆனால் சர்வாதிகார ஆட்சி கூடாது என்று மட்டும் அனைவரும் கூறுவர். எதை எப்படி எப்போது செய்வது என்பதுபற்றி, மற்றவர்களிடம் கலந்து பேசவேண்டிய கட்டாயமின்றி, மாற்று யோசனைகளை

அலசவேண்டிய அவசியமின்றி, ஒரு புதிய வரி போடுவதாயினும் சட்டம் இயற்றுவதாயினும், ஊர் அமைப்பதாயினும், படைதிரட்டுவதானாலும், போர் தொடுப்பதானாலும், தொழிற்கூடம் அமைப்பது என்றாலும், எந்தக் காரியம் செய்வதானாலும் தன் இச்சையாகச் செய்திடும் நிலையைப் பெற்று, அந்த நிலையினின்றும் தன்னை நீக்கத்தக்க சக்தி ஏதுமின்றி அழித்தொழித்து, கேட்பாரற்ற நிலையில் எல்லா நடவடிக்கைகளையும் செய்திடுபவராகிவிடும் நிலைதான் சர்வாதிகாரம்; எல்லா அதிகாரமும் ஒரே இடத்தில் குவிந்திருக்கும் நிலை!

இது ஏன் ஒருவிதமான வெறுப்புணர்ச்சியையும் அச்சத்தையும் மூட்டிவிடுகிறது?

ஒவ்வொருவருக்கும், குறிப்பிட்ட அளவில்

அறிவாற்றலும் செயல் திறனும் உண்டு என்ற நம்பிக்கை இருக்கிறது.

எதையும் செய்திடாமல்கூட இருக்கக்கூடும் - வாய்ப்புத் தேடிக்கொள்ளாமலும் இருந்துவிடக்கூடும் - ஆனால் முடிவு, அதற்கேற்ற அறிவாற்றல் உண்டு என்ற நம்பிக்கை மட்டும் எவருக்கும் இருக்கத்தான் செய்கிறது.

எனவே, ஒருவன் கிளம்பி, உச்சியில் உட்கார்ந்து கொண்டு, நீவிர் ஏதும் செய்யத் தெரியாதவர்! என்ன செய்ய வேண்டும் என்பதும் அறியாதவர்! உமக்கானதனைத்தையும் நானே செய்வேன்; எனக்கே, தெரியும் உமக்காக என்னென்ன செய்யவேண்டும் என்பது...! என் அறிவாற்றல், உம்மில் எவருக்கும் இல்லை! எனவே, என்னிடம் விட்டுவிடுங்கள் எல்லா அலுவல்களையும்; நான் பார்த்துக்

கொள்கிறேன் என்று கூறும்போது, தமது உரிமை பறிக்கப்படுகிறது என்ற எண்ணமும், தமது தன்மானம் அழிக்கப்படுகிறது என்ற எரிச்சலும், ஏற்பட்டுவிடுகிறது - என்ன தலைக்கனம் இவனுக்கு! எல்லாம் தெரியுமாம் இவனுக்கு - ஏதும் அறியோமாம் நாம்! நாமென்ன, இவன்போன்றே ஆறறிவுடையோரல்லவா! ஆற்றல் என்பது இவனொடு நின்றுவிடுவதோ! நாம், வெறும் மரக்கட்டைகளோ! நாம் வெறும் பிறவிகள்! இவன் ஆளப்பிறந்தவனோ!! - என்றெல்லாம் பேசிடத் தோன்றுகிறது.

அவன் வீரன்! - என்று கூறினால், நான் என்ன கோழையா? என்று கோபித்துக் கேட்டிடச் சொல்கிறது உணர்ச்சி.

அவன் அறிவாளி! - என்று கூறினால், நான் முட்டாள் அல்ல! என்று கொதித்தெழுந்து கூறத் தோன்றுகிறது.

அவ்விதமின்றி, உனக்காக அவன்! உனக்கு வேறு அலுவலிருப்பதால், அவன்! உன் அனுமதி பெற்று, அவன் உன் காரியத்தை, உன் விருப்பமறிந்து, உன் யோசனைப்படி செய்து கொடுக்க, அவன்! - என்று கூறினால், கேட்பதற்குக் களிப்பும் பெருமையும் ஏற்படுகிறது.

"எல்லாம் செய்திடுபவன்' எதைச் செய்திடுவானோ! அவன் செய்திடுவதிலே, எதெது கேடு தருமோ என்று எண்ணும்போது, அச்சம் ஏற்படுகிறது. எதையும் செய்திடுவோனாகிவிட்ட பிறகு, கேடு பல செய்து,"இது ஆகுமோ' என்று கேட்டிடின், "யார் நீ இதைக் கேட்க? நானன்றோ காரியமாற்ற வேண்டியவன்! காரணம் காட்டவா, இருக்கிறேன்!'' என்று கொக்கரித்துக்கொடுமை செய்திடின், எதையும் செய்திடும்

இடமேறிவிட்டவனிடமிருந்து, எப்படித் தப்பித்துக் கொள்வது? - என்று எண்ணும்போது, அச்சம் எழத்தானே செய்யும்.

அடுப்புக்குள் இடும் நெருப்புக்கும், அடுப்புக்குத் தேவை என்பதற்காக கூரையில் செருகிவைக்கும் கொள்ளிக் கட்டைக்கும், வித்தியாசம் இல்லையா?

சர்வாதிகாரம் - என்றவுடன் கொதித்தெழும் போக்கு எத்துணைப் பரவலாகச் சமுதாயத்திலே இருப்பினுங்கூட, இன்று உலகிலே, பல்வேறு நாடுகளிலே, சர்வாதிகாரிகளின் அமுல் இருந்து வருகிறது.

சில சர்வாதிகாரிகள் பத்தாண்டு, இருபதாண்டுகளாகக் கூடப் பீடத்தில் உள்ளனர்.

நாட்டுக்கு வெளியிடத்திலிருந்தோ, உள்ளேயிருந்தோ பேராபத்து

ஏற்பட்டுவிடக்கூடும் என்று கிலி கொள்ளும்படி மக்களை ஆக்கிவைத்துவிட்டு, “எல்லா அதிகாரமும் என்னிடம் இருக்கட்டும், ஆபத்தைப் போக்க!’ என்று பேசிச் சர்வாதிகாரிகளானோர்,”இனி ஆபத்து இல்லை! சர்வாதிகாரம் வேண்டாம்!’ ஜனநாயகம் மலரட்டும்! என்று அறிவிப்பது, மிகமிகக் கடினம்.

ஸ்பெயின் நாட்டிலேயும், போர்ச்சுகல் நாட்டிலேயும், சர்வாதிகாரிகளாகிவிட்ட பிரான்கோவும், சலாசரும் என்றென்றும் சர்வாதிகார முறைதான் இருந்திட வேண்டும் என்று அந்த நாட்டு மக்கள், எண்ணிக் கிடந்திடவேண்டிய முறையில், சூழ்நிலையை உண்டாக்கி வைத்துவிட்டனர்.

சர்வாதிகாரம் - ஜனநாயகம் சாதிக்காதவைகளைச் சில வேளைகளில் சாதித்தளிக்கக்கூடும்.

வெளிநாட்டானை விரட்டியும், உள்நாட்டிலே கொடுமையாளரை அடக்கியும் பெரும் வெற்றி, புதிய சமுதாய அமைப்பு, தொழில் வளர்ச்சி, செல்வவளர்ச்சி என்பனபோன்ற வெற்றிகள், ஒளிவிடத்தக்க விதமான ஆட்சி நடத்திடக்கூடும்.

ஆனால், அங்கு ஒன்று அழிக்கப்பட்டுவிடுகிறது - மனிதனின் சுய சிந்தனை. சிந்திக்கும் திறனை இழந்துவிட்ட பிறகு, எது வெற்றி, எது வேதனை? எது முற்போக்கு, எது பிற்போக்கு? என்பதைக் கண்டறியும் ஆற்றலும் அற்றுப்போய், அதை எடுத்துக்காட்டக்கூட, ஆட்சியினரை எதிர்பார்த்துக்கிடந்திட வேண்டியவராகின்றனர்.

இட்லரின் ஜெர்மனியில் இந்த நிலைதான் கப்பிக் கொண்டிருந்தது.

இட்லர் பார்த்து, இதுதான் இனிக்கும் என்றால், “ஆம்’ என்று நாட்டினர் அனைவரும், கூறினர்; ஒரு சிலருக்கு,”கசப்பு’ தெரிந்தாலும், அது தமது குற்றம், பொருளின் குற்றமல்ல என்று கருதினர்.

அந்த அளவுக்கு மக்களின் எண்ணத்தைக் கட்டிப்போட்டு வைத்துவிட இட்லரின் முறைகள் மெத்தப் பயன்பட்டன.

இருபத்து நான்கு மனிநேரமும், இட்லரின் பிரச்சார இயந்திரம் - பேச்சாளர் - ரேடியோ - பத்திரிகை - கலைத்துறை மக்களுக்கு எண்ணங்களை உருவாக்கித் தந்துகொண்டிருந்தன.

தொடர்ந்து திறமையுடன் இந்த முறை கையாளப்பட்டு வந்ததால், மக்கள், எதைப் பற்றியும் தாமாக எண்ணிப் பார்த்திட முடியாத நிலையைக்கூடப் பெற்றுவிட்டனர்.

தம்பி! எண்ணிப் பார்ப்பது இயல்பு. அந்தத் திறம் வளரவும், தெளிவும் பயனும் ஏற்படவும், எண்ணத்திலே வளர்ச்சி காணவும், எண்ணிக் கொண்டு மட்டும் இருந்தால் போதாது!

தாயின் மடியிலே தவழும் குழந்தைக்குக்கூட, ஒரு பொருளைக் காணும்போது, எண்ணம் எழத்தான் செய்யும். பசிக்கிறது என்ற உணர்வு, புசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்காமலிராது! குழந்தையின் அழுகைதான் அதற்கான அறிவிப்பு.

ஏற்படும் எண்ணத்தை எடுத்துக்கூற வழி ஏற்பட வேண்டும், கூறுவதைக் கேட்டிடத் தன் போன்றோர் இருக்க வேண்டும், அவர்கள் அதைக் கேட்டுத், தமது கருத்தினைக் கூற வேண்டும். இரு கருத்துக்களும் ஒன்றோடொன்று தழுவியோ, மோதியோ, புதுப்புது பொலிவு பெறவேண்டும் - எண்ண

வளர்ச்சி அப்போதுதான் ஏற்படும்.

கருத்து வளர்ச்சிக்கு, பேச்சு உரிமை இன்றியமையாததாகிறது.

சர்வாதிகார முறை, இந்த உரிமைகளை மறுத்துவிடுகிறது.

சமுதாயத்துக்கு இதன் பயனாக ஏற்படும் நஷ்டம் சர்வாதிகாரி பெற்றளிக்கும் எத்தகைய வெற்றியும் ஈடுசெய்ய முடியாததாகும்.

உள்ளத்தில் தோன்றுவதை எடுத்துரைப்பதும், உண்மை யைக் கண்டறிய ஒருவருக்கொருவர் உரையாடிக் கொள்வதும், சர்வாதிகாரத்தை ஒழித்துக்கட்டும் அறிவாற்றலைக் கெடுத்துவிடும் என்ற அச்சம் சர்வாதிகாரிகளுக்கு.

எனவே, அவர்கள், தாக்கப்படுமுன் தாக்கிவிடவேண்டும் - முதல் தாக்குதல் நம்முடையதாக இருக்க வேண்டும் -

கொடுக்கும் தாக்குதல், அவனைப் பிறகு எழுந்து நின்று, திருப்பித் தாக்கிடும் சக்தியில்லாதவனாக்கிடத்தக்கதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டுவிடுகின்றனர். கொடுமை புரியத் துளியும் கூசாத தன்மை சர்வாதிகாரிக்கு ஏற்பட்டு விடுகிறது.

தம்பி! சட்டம் வேண்டாம், என் சொல் போதும்! வழக்கு மன்றம் வேண்டாம், என்முன் கொண்டுவந்து நிறுத்துங்கள் போதும்! என்று கூறிக் கொடுமை அப்பட்டமாகத் தெரியும்படி நடந்துகொள்ளும் சர்வாதிகாரிகள் உண்டு.

சட்டம், வழக்குமன்றம், வழக்கறிஞர், நீதிபதி, விசாரணை - எனும் முறைகளை அப்படியே வைத்துக்கொண்டு, எல்லாவற்றையும் தன் இச்சைப்படி ஆட்டிவைக்கும் "முறை'யைப் புகுத்தி, சர்வாதிகாரம் செய்வோரும் உண்டு.

முன்னவரைவிட இரண்டாமவர், மிக்க ஆபத்தை மூட்டுபவராவார்.

”என்ன அண்ணா! ஏதோ வழக்குக் குறித்துக் கூறப்போவதாகச் சென்றகிழமை கூறினாய்; இப்போது ஏதோ, சாய்வு நாற்காலிக்காரர்போல அரசியல் முறைபற்றிய ஆய்வுரை பேசுகிறாயே,’’ என்று கேட்கிறாயா, தம்பி! வழக்கு மன்றம் நோக்கித்தான் நடக்கிறோம். வழியில் இதைக் கூறினால், போகிற இடம் புரியும் என்பதற்காகச் சொன்னேன்.

“இரண்டமவர்’ என்றேனே, அப்படிப்பட்ட”சர்வாதிகாரி’யின் பிடியில் உள்ள நாடு! அந்த நாட்டு வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கு நடைபெறுகிறது. காண்போம், வா.

வழக்கு மன்றம், இருக்கவேண்டிய முறைப்படிதான் இருக்கிறது.

பெருநெருப்பு நீதிபதியாகவும், கொடுவாள் போலீஸ் அதிகாரியாகவும், அரிவாள் வழக்கறிஞராகவும் இல்லை!

சட்ட நுணுக்கம் தெரிந்து, நீண்டகாலம் வழக்காடித் திறம்பெற்ற பழுத்த அனுபவசாலிதான், நீதிபதி இருக்கையில் அமர்ந்திருக்கிறார்.

அவருடைய சட்ட அறிவு நாடு அறிந்ததாகும். பல சிக்கலான வழக்குகளிலே, நல்ல தீர்ப்புத் தந்து, நற்பெயர் எடுத்தவர்.

மற்ற மற்றவரும் அதுபோன்றே - கற்றறிவாளர்.

நீதிபதி அமருகிறார். மற்றவர் வந்தமருகின்றனர். போலீஸ் அதிகாரி நின்றுகொண்டிருக்கிறார்.

நீதி : கைதியைக் கொண்டுவா.

(போலீஸ் அதிகாரி வணக்கம் செலுத்தியபடி)

போலீ : அங்ஙனமே, பெருந்தகையே! (போலீஸ் அதிகாரி வெளியே செல்கிறார்) (நீதிபதியின் மேஜைமீதுள்ள டெலிபோன் மணி ஒலிக்கிறது. நீதிபதி டெலிபோனை எடுத்துப் பேசுகிறார்; பேசுபவர் யார் என்று தெரிந்ததும், முகமே மாறிவிடுகிறது; பரபரப்பு அடைகிறார்; எழுந்து நிற்கிறார், மரியாதையுடன் அவர் எழுந்து நிற்பதைக் கண்டு மற்றவர்கள் எழுந்து நிற்கிறார்கள்.)

(தம்பி! நிலைமை புரிகிறதா! அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல், சட்டத்தின் துணையையும் தன் அறிவையும் கொண்டு, வழக்கினை விசாரித்து நீதிகண்டு, தீர்ப்பளிக்கவேண்டிய நிலை பெற்றவர் நீதிபதி.)

ஆண்டியாயினும் ஆறடுக்கு மாடியில் வாழ் சீமானா யினும் அவர் அலட்சியம் காட்டவோ, அச்சம் கொள்ளவோ கூடாது.

அவர் அமர்ந்திருக்கும் இடம், அனைவருக்கும் நியாயம் கிடைக்கச் செய்யும் திருக்கோயில்.

அங்கு அமர்ந்திருக்கும் நீதிபதி, டெலிபோன் ஒகேட்டதும், பேசுபவர் யார் என்று பார்க்கிறார்; பேசுபவர் எவர்என்று தெரிந்ததும், பீதி ஏற்படுகிறது. தேவையற்ற முறையில் பணிந்துவிடுகிறார்.

வழக்கு மன்றங்கள், என்ன போக்கிலே உள்ளன என்பதை நீதிபதியின் நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

பயம் பிடித்தாட்டுகிறது நீதிபதியை. அவரைப் பயங்காட்ட எதிரில் வந்துகூட அல்ல - எங்கோ இருந்துகொண்டு - பணிய வைக்கும்

அதிகாரம் படைத்தவர் ஒருவர் இருக்கிறார்.

குற்றம் என்ன செய்தான்? யார் கண்டறிந்து கூறினவர்கள்? சான்றுகள் யாவை? இது குறித்துச் சட்டம் கூறுவது யாது? குற்றவாளி என்பவனுக்காக வாதாட வந்தவர் என்ன கூறுகிறார்? என்ற இவைபற்றி, நீதிபதி அக்கறை காட்ட வேண்டும். அவருக்கு வழிகாட்ட, சட்டம்! ஆனால், சட்டத்தைப் பார்க்கா முன்பே, வேறோர் "சக்தி' டெலிபோன் மூலம் பேசுகிறது; நீதிபதி நடுங்கி நிற்கிறார்!)

நீதிபதி : (பணிவாக) ஆமாம், மேன்மை தங்கிய பிரபுவே, வழக்கு ஆரம்பமாப் போகிறது. நான் அவன் குற்றவாளி என்று கண்டறிந்து கூறி, அவனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன் - நிச்சயமாக, விரைவில்.

(டெலிபோனைக் கீழே வைக்கிறார்.

அமருகிறார். மற்றவர்களும் அமருகின்றனர்.)

(கவனித்தாயா, தம்பி! ”வழக்கை விசாரிக்கிறேன்.’ குற்றம் செய்தவன் என்பது எடுத்துக்காட்டப்பட்டு விட்டால், தண்டனை தரப்படும் என்று கூறவில்லை.)

குற்றவாளி என்று கூறுகிறேன்! மரண தண்டனை தருகிறேன்!! என்று அறிவிக்கிறார்.

குற்றவாளி, கூண்டுக்குக் கொண்டுவரப்படப் போகிறான், இதற்குள், அவனுக்கு மரண தண்டனை தந்துவிடுவதாக, நீதிபதி, வாக்களிக்கிறார் - பணிவுடன்.

ஏன்? டெலிபோனில் பேசியவரின் குறிப்பறிந்து நடந்திட வேண்டும் என்று நீதிபதி உணருகிறார்.

தன்னை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் பெற்ற ஒருவர் இருப்பதை அறிகிறார், அச்சப்படுகிறார்.

ஊருக்காக, உலகத்துக்காக, ஒப்புக்கு ஒரு விசாரணை ஏற்பாடாகி இருக்கிறதேயொழிய, குற்றவாளி என்று கொண்டுவரப்படுபவன் கொல்லப்படவேண்டியவன் - என்பதை டெலிபோனில் பேசும் "மேலவர்' தெரிவிக்கிறார்.

(அவர் மனமறிந்து நடப்பதற்கே, இவர் நீதிபதியாக இருக்கிறார். நிலைமை புரிகிறதா!)

(பத்திரிகைக்கு குறிப்பெடுத்தனுப்புபவர் ஒருவர், அங்கு இருக்கிறார். அவருடைய மேஜைமீது உள்ள டெலிபோன் ஒலி கிளப்புகிறது.)

குறிப் : பெருந்தகையே! டெலிபோனில் பேச அனுமதி தர வேண்டுகிறேன்.

நீதி : சரி. பேசலாம்.

குறி : வணக்கம்! வணக்கம்! நான்தான்!

குறிப்பெடுப்போன். செய்தியா? நாடு கூர்ந்து கவனித்துவரும் பரபரப்பூட்டும் வழக்குத் தொடங்க இருக்கிறது. மிக்க அனுபவம் பெற்றவர், ஆற்றல் மிக்கவர், அரசுக்கு ஆருயிர்த் தோழராக இருக்கும் அறிவாளர், வழக்கை நடத்திக், குற்றவாளிக்கு மரண தண்டனை தரத் தீர்மானித்துவிட்டார். விசாரணையா? இப்போது ஆரம்பமாகப் போகிறது. குற்றவாளியா? இன்னும் வரவில்லை. போலீஸ் அதிகாரி போயிருக்கிறார், கொண்டுவர. மரண தண்டனை - நிச்சயமாக, நீதி நிலைக்கும் - கட்டாயம்.

(பத்திரிகைக்கு, வழக்கின் முடிவுபற்றி, வழக்குத் தொடங்கு முன்பே, குறிப்பெடுப்போர், செய்தி அனுப்பிவிடும், வேடிக்கையைக் கவனித்தாயா, தம்பி!)

(போலீஸ் அதிகாரி, குற்றவாளியை

இழுத்துக் கொண்டு வருகிறார். குற்றவாளி வருகிறான் என்று தெரிந்ததும், நீதிபதி, சுற்றுமுற்றும் பார்க்கிறார்; பரபரப்படை கிறார்; பயம் கொள்கிறார்.)

போலீ : பெருந்தகையே! இதோ, கைதி.

நீதி : இரு! இரு! பாதுகாப்புப் பலமாக இருக்கிறதல்லவா?

போலீ : ஆமாம், பெருந்தகையே! போலீஸ் படை அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது. கூரைமீதும் சுவரோரங் களிலும் சுழல் துப்பாக்கிகள் வைக்கப்பட்டுள்ளன.

நீதி : கைதியின் கரங்களுக்கு விலங்கிட்டீர்களா...?

போலீ : ஆமாம்.... ஆனால்....

நீதி : ஆனால்... என்ன இழுத்துப் பேசுகிறாய், சொல்! சொல்!

போலீ : கரங்களில் விலங்கு மாட்டப்பட்டிருக்கிறது - பலமான விலங்குகள். ஆனால், என்ன மாயமோ தெரியவில்லை, விலங்குகள் எப்படியோ, கழன்று நழுவிவந்து விடுகின்றன.

நீதி : கண்காணிப்பாக இருக்க வேண்டும்; தெரிகிறதா; அவன் கரத்திலிருந்து விலங்கு கழன்றால், உன் உடலிலிருந்து சிரம் கழன்று கீழே விழும்!

(நீதிபதியின் நடுக்கம்; அவர் பேசக் கேட்டதும் போலீஸ் அதிகாரிக்கு ஏற்பட்டுவிடும் ஒடுக்கம் தெரிகிற தல்லவா? போலீஸ் அதிகாரியை நீதிபதி மிரட்டு வதிலே, நகைச்சுவை காண்கின்றனர், வழக்கு மன்றத்திலுள்ளோர் சிரிக்கின்றனர். அவர் காதுபடப் புகழ்கின்றனர். சிக்கலான வழக்கை விசாரிக்கும் போதுகூட, நகைச்சுவையைக் காட்டிடும் திறனை, நமது நீதிபதி இழந்து

விடுவதில்லை, என்கிறார் ஒருவர்.

பேரறிவாளரின் இயல்பே, அதுதானே என்று பாராட்டுகிறார், மற்றொருவர்.

ஏதேது, இதை எல்லாம்கூடப் பத்திரிகையிலே வெளியிட்டு விடுவீர்கள் போலிருக்கிறதே என்று தூண்டுகிறார், நீதிபதி - ஆசையைக் கேள்வியாக்கிப் பேசிக் காட்டுகிறார்.

ஆமாம்! பத்திரிகையில் வெளிவரும் என்று வாக்களிக்கிறான் குறிப்பெடுப்போன். குற்றவாளி, கூண்டிலே நிறுத்தப்படுகிறான்.

(நடுத்தர வயதினன் - எந்தக் கேடும் செய்திட இயலாதவன் என்பதைத் தோற்றமே காட்டுகிறது, புன்னகை செய்கிறான்.)

நீதி : குற்றவாளியைச் சோதனை செய்தாகிவிட்டதா?

போலீ : ஆமாம்...

நீதி : எப்போது நடத்தினீர்கள், சோதனை?

போலீ : தொடர்ந்து! விடாமல்! மணிக்கு ஒரு தடவை வீதம்!

நீதி : ஆயுதம் ஏதும் வைத்துக்கொண்டில்லையே... இருந்ததா?

போலீ : தேடினோம் - கிடைக்கவில்லை. ஆனால், அவனே கூறுகிறான், ஆயுதம் அவன் தலையில் இருக்கிறதாம் - மண்டைக்குள்!!

(போலீஸ் பக்கத்திலே நின்று காவல் புரிகிறது. கூண்டிலே, குற்றவாளி நிற்கிறான். என்ன நடந்தாலும் கவலையில்லை என்ற போக்கில்.)

(குறிப்பெடுப்போன், தன் இதழுக்கு அறிவிக்கிறான்.)

குறி : (டெலிபோன் மூலம்)

மயிர்க்கூச்செறியும் காட்சி. பேயன், பிடித்திழுத்துவரப்பட்டிருக்கிறான். கூண்டிலே நிற்கிறான் கொடியவன்!! பயங்கரமான தோற்றம், ஆனால் கடமையைக் கலங்காது செய்திடும் நீதிபதி, கைதிக் கூண்டில், தனக்கு மிக அருகாமையில், அந்தக் கொடியோன் இருப்பினும், துளியும் கலங்காது, அமர்ந்திருக்கிறார். அவருடைய அஞ்சா நெஞ்சம் கண்டு அவனி புகழ்கிறது.

நீதிபதி : (வழக்கினைத் தொடுத்திடும் வழக்கறிஞரைப் பார்த்து) இனித் தொடங்கலாம்... தொடுப் : பெருந்தகையே! இவன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றம், எவ்வளவு கொடியது, ஈனத்தனமானது, ஆபத்தானது, அழிவு தருவது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

நீதி : குற்றம் கொடியதே! அறியாதார் யார்?

தொடுப் : சட்ட நிபுணர் தாங்கள்! நீதியின் காவலர் தாங்கள், அறியாததும் உண்டோ?

நீதி : இவன் செய்த குற்றம்?

தொடுப் : சுயசிந்தனை! தானாகச் சிந்திக்கிறான்! எண்ணிப் பார்க்கிறான்!

(நீதிபதி கடுங்கோபங் கொள்கிறார். வழக்கு மன்றத்தி லிருப்போர் பதறுகிறார்கள். பெண்கள் பீதி அடைகிறார்கள்; ஆடவர் ஆத்திரமடைகிறார்கள். குற்றவாளியைச் சுட்டுத்தள்ளுவது போலப் பார்க்கிறார், நீதிபதி.)

நீதி : சுயசிந்தனையா! உம்! எப்போது, அப்படிச் சிந்திக்கிறான் இந்தச் சண்டாளன்?
தொடுப் : எப்போதும் அதே வேலைதான், இந்த அக்ரமக் காரனுக்கு. வீட்டில்! தொழிற்கூடத்தில்! பத்திரிகை படிக்கும்போது!

நீதி : அதிலே எழுதப்பட்டிருப்பதை

நம்பவில்லை - யோசிக் கிறான் - எண்ணிப் பார்க்கிறான்!

தொடுப் : அதுமட்டுமல்ல! நமது புனிதத் தலைவர்கள் சொற்பொழிவு மூலம் உபதேசம் செய்கிறார்களே, ஊர் வாழ, உலகு வாழ. அப்போதுகூட, இந்த அயோக்கியன் அவர்கள் கூறுவது சரியா, தவறா? என்று யோசிக்கிறான்.

நீதி : கேட்டீர்களா, கற்றறிந்தோரே! வழக்கினைத் தொடுத்து, விளக்கம் எடுத்துரைக்கும் நண்பர், வம்பு தும்பு பேசுபவர் அல்ல - வழக்கறிஞர் - திறமை மிக்கவர். சான்றுகளின்றிப் பேசமாட்டார்! பேச்சினை எவரும் மறுத்திட முடியாது! ஆணித்தரமான பேச்சு. அவர் கூறிவிட்டார், இந்த அற்பன் செய்த குற்றத்தினை. கண்கண்ட கடவுளராம் நமது நாட்டுத் தலைவர்கள், பேசுகிறார்கள்; கேட்டு இன்புற்று நல்வழி நடவாமல், இவன்,

ஐயம் கொள்கிறான் - அலசிப் பார்க்கிறான் - தானாகச் சிந்தித்துப் பார்க்கிறான் - பெரியோர்களே! எத்துணைப் பேய்க்குணம் இவனுக்கு! காலம் இப்படியுமா கெட்டுப் போக வேண்டும். நமக்கு அமைந்துள்ள நல்லாட்சியில், எதைப் பற்றியும் நாமாகவே எண்ணிப் பார்த்து உண்மையை உணர்ந்திடும் தொல்லையைத் துளியும் நமக்குத் தராமல், நமது அரும்பெரும் தலைவர்கள் அயராது உழைத்து, எண்ணங்களைச் சமைத்தெடுத்துச் சுவைபடத் தருகின்றனர்! தொட்டிலிலிருந்து சுடுகாடு வரையில் நமக்குத் துணையாக, நமது தலைவர்கள் தயாரித்துத் தருகிற, "உபதேசம்' இருக்கிறது. வீட்டிலே இருந்தாலும் அலுவலகம் சென்றாலும், எங்கே இருந்தாலும், துளியும் கஷ்டமின்றி, எல்லாவற்றைப் பற்றியும், நாம் என்ன எண்ணவேண்டுமோ அதனை, ஆட்சியில் அமைந்துள்ள புண்ய

புருஷர்கள், தயாரித்துக் கொடுக்கிறார்கள் - ஆனால் இவன், இந்தக் கொடியவன், நம் தலைவர்களின் பேச்சைக் கூடத் துச்சமென்று கருதுகிறான் - சுயமாகச் சிந்திக்கிறான். நாடு செய்த தவத்தின் நற்பயனாகக்கிடைத்துள்ள நமது தலைவர்கள் ஏதேனும் கூறினால், ஆர அமர யோசித்துப் பார்த்தறிந்த உண்மையாகத்தானே இருக்கும்; நமது நல்வாழ்வுக்கானதாகத்தானே இருக்கும்! நன்றியுடன் அதனை ஏற்றுக்கொள்ளாமல், இவன், அவர்கள் சொல்வது சரியா, தவறா என்று சிந்திக்கிறான் இவன்!! நமது தலைவர்களைவிட இவனுக்குச் சிந்தனா சக்தி அதிகமோ? எவ்வளவு கடைந்தெடுத்த கயவனாக இருந்தால், இவன், தலைவர்கள் பேச்சைப்பற்றி, ஆராயத் துணிவான்! உம்! இருக்கட்டும்!! ஏ! கெடுமதியாளனே! குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?

மறுக்கிறாயா?

கைதி : குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன்.

நீதி : நாட்டுக்கு நாசம் விளைவிக்கும் இந்தத் துரோகத்தைச் செய்ததாக ஒப்புக்கொள்கிறாய்?

கைதி : சுயமாகச் சிந்தித்தேன் - ஒப்புக்கொள்கிறேன் குற்றத்தை.

தொடுப் : நமது அரசு நமக்காகச் செய்துள்ளவைகளை மறந்து, துரோகம் செய்கிறாய்?

கைதி : மறந்ததால் அல்ல! நமக்காக நமது அரசு செய்வதை எல்லாம் கண்டதால், நானாக எண்ணிப் பார்த்து உண்மையைக் கண்டறிய விரும்பினேன்.

தொடுப் : சட்டத்தை மீறுகிறாய் - தெரிகிறதா உனக்கு.

கைதி : கூறுகிறீர்களே! தெரிகிறது! ஆனால், எந்தச் சட்டத்தை நான் உடைக்கிறேன்?

தொடுப் : எந்தச் சட்டமா? நாட்டை வாழவைக்க நமது தலைவர்கள் இயற்றிய சட்டம்.

கைதி : நாட்டை வாழ வைக்கவா? வாழ்கிறதா, நாடு! வாழ்க்கையா நாம் நடத்துவது...?

நீதி : குழப்பமோ இவனுக்கு மனதில்...

கைதி : ஆமாம்... குழப்பம்...

நீதி : ஏன் ஏற்படுகிறது?

கைதி : தானாக ஏற்படவில்லை. ஒருவன் புகுத்துகிறான், என் உள்ளத்தில்...

நீதி : யார் அவன்? தேவதையோ?

கைதி : தேவதை என்றுதான் முதலில்

எண்ணிக் கொண்டேன். பிறகு தெரிந்தது, தேவதை அல்ல - பிசாசுக் குட்டி! என்று.

நீதி : குட்டிப் பிசாசா...?

கைதி : ஆமாம்! ஓயாமல் என்னைப் பிடித்தாட்டுகிறது அந்தக் குட்டிப் பிசாசு! நான் மேலங்கி அணிந்தோரை மேதாவிகள் என்று எண்ணும்போது, காவி தரித்தோரைக் கடவுளின் அடியவர் என்று நினைக்கும்போது, பத்திரிகைகளை அறிவை அளித்திடும் அற்புதப் பணிபுரியும் திருத்தூதர்கள் என்று கருதும்போது, இந்த குட்டிப்பிசாசு, உள்ளே புகுந்து குடைகிறது! குத்திக் கிளறுகிறது, என் சிந்தனையை! எல்லாம் ஏமாற்று வித்தை, தெரியவில்லையா? என்று கேட்கிறது. புரட்டு விளங்கவில்லையா? எண்ணிப்பார்! என்று கூவித் தூண்டுகிறது.

நீதி : உன் கண்ணால் கண்டாயா அந்தக்

குட்டிப் பிசாசை... எங்காவது?

கைதி : எல்லா இடத்திலும் காண்கிறேன்! இங்கும் இல்லை என்று எப்படிக் கூறமுடியும்? (சிரிப்பொலி கேட்கிறது. சிறியதோர் உருவம் வருவது தெரிகிறது. கைதியிடம் சென்று குலவுகிறது.)

(தம்பி! குட்டிப் பிசாசு என் உள்ளத்தில் புகுந்து, என்னைச் சிந்திக்கவைக்கிறது என்று கைதி கூறியதாக, நூலெழுதியவர் எடுத்துக் காட்டுவதிலே, தனியானதோர், சுவை இருக்கிறது. சிந்தனை என்பதை நம்பிக்கைக்கு நாசம் விளைவிப்பது என்று எதேச்சாதிகாரிகள் - மத ஆதிக்கக்காரர்கள் கூறிவருவர்.)

நம்பிக்கை என்பது கடவுள் ஊட்டுவது என்றும், சந்தேகம் சிந்தனை, இவைகள் ”சாத்தான்’ ஏவிவிடுவன என்றும்

தேவாலயத்துக் கோமான்கள் கூறுவர்.

நம்பிக்கை, அடக்க ஒடுக்கத்தைத் தரும்; சிந்தனை துணிவை, தன்னிச்சையாக நடந்திடும் போக்கினை மூட்டிவிடும் - கடவுளின் ஆற்றலை அலைக்கழிக்க சாத்தான் செய்திடும் சூழ்ச்சியாகும், அதைச் சிந்தனை என்று கூறிவந்தனர், ஜெபமாலையின் துணையைச் செங்கோலுக்கு அளித்து அரசோச்சி வந்தவர்கள். அந்த நிலையைச் சுவைபட எடுத்துக்காட்டத்தான் "சிந்தித்தான்' என்று குற்றம் சாட்டப்பட்டவன் தன் சிந்தனைக்குப் பொறுப்பு,தானல்ல, ஒரு குட்டிப் பிசாசு என்று குத்திக்காட்டிப் பேசுகிறதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

நீதிபதி : வழக்குத் தொடுப்போரே! குற்றவாளியின், மனம் குழம்பிக்கிடப்பதற்கு, மருத்துவர் சான்றளிக்க வருவாரா?

தொடுப் : மருத்துவத் துறைத் தலைவர் வந்திருக்கிறார்; குற்றவாளி மிகப் பயங்கரமான, பைத்தியக்காரன் என்பதை எடுத்துகூற, அனுப்பப்பட்டிருக்கிறார்!

நீதி : சரி! மருத்துவ நிபுணரை அழைத்து வாரும்...

(நீதிபதியை டெலிபோன் அழைக்கிறது. பேசி முடித்ததும்.)

நீதி : குற்றவாளியே! உன் ஆணவம், அறிவீனம், அரசுக்கு நீ இழைத்த துரோகம், அதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு பேசிய மண்டைக் கர்வம், ஆகியவைபற்றிப் பல பக்கங்கள் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதி, உன் மனைவி மக்களுக்குத் தரப்படும் - படித்திட - பாடம் பெற்றிட. இப்போது, எழுத நேரமில்லை. துரிதமாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். போலீஸ் காவலர்காள்!

குற்றவாளியைப் பிடித்திழுத்துச் சென்று தூக்கிலிட்டுக் கொன்றுபோடுங்கள்.

(கைதியைப் போலீஸ் அதிகாரிகள், இழுத்துச் செல்கிறார்கள். வழக்கு முடிந்தது! நீதி வென்றது! குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை! என்ற செய்தியைக் குறிப்பெடுப்போன், இதழுக்கு அறிவித்துவிடுகிறான்.)

தொடுப் : பெருந்தகையே! ஒரு விஷயம் - சிறிய விஷயம்தான் - எனினும், செய்வன திருந்தச் செய் என்பார்களல்லவா? அதற்காக...

நீதி : செய்யவேண்டியதைச் செய்தாயிற்றே!

தொடுப் : முடிவு சரியானதே! முறையிலே, ஒரு சிறு குறை! குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கு முன்பு, மருத்துவ நிபுணரின், சான்று பற்றிக் குறிப்பிட்டீர்கள்.

அவர் வருவதற்குள்...

நீதி : அவர் வந்திருந்தாலும், முடிவு இதேதான்! சரி! அதனால் என்ன? குற்றவாளி இறந்துபடுகிறான் என்பதால், நாம்முறையிலே குறைவைப்பானேன்! மருத்துவ நிபுணரின் கருத்தினைக் கேட்டறிவோம் - இப்போது.

(மருத்துவ நிபுணரின் கருத்தறிந்து, குற்றவாளி, பித்தனா அல்லவா என்பதைக் கண்டறியத்தான், "முறை வகுத்தார்' நீதிபதி.

ஆனால், டெலிபோன் மூலம், அவருக்கு ஆணை பிறந்து விட்டது - ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்க இவ்வளவு நேரம் பிடிக்க வேண்டுமா? என்று கேட்டுவிட்டார், மேலோர்'. ஆகவேதான், தீர்ப்பைத் தந்துவிட்டு, முறையைக் குறையுள்ளதாக்க வேண்டாம் என்பதற்காக மருத்துவ நிபுணரை அழைத்துப்

பேசவைக்கிறார் நீதிபதி.)

தொடுப் : செத்தொழிந்தானே குற்றவாளி, அவன் உயிரோடு இருந்தபோது புத்தி தடுமாறாது இருந்தானா, பித்துப் பிடித்துக் கிடந்தானா?

மருத் : பொல்லாத பைத்யக்காரனாகத்தான் இருந்தான்.

நீதி : மூளை கெட்டுவிட்டிருந்ததோ?

மருத் : ஆமாம்...

நீதி : மூளை, நோயினால் கெட்டுவிட்டதோ?

மருத் : ஒரு கிருமி - நச்சுப் பூச்சியினால், மூளை கெட்டுக் கிடந்தது.

நீதி : அதை, எடுத்துக்காட்ட முடியுமா. ஆதாரத்துடன்?

மருத் : ஆதாரம் அப்பழுக்கின்றி இருக்கிறது. செத்தொழிந் தானே,

அவனுடைய மூளையைக் கெடுத்த, அந்த நஞ்சுப் பூச்சி, புத்தம் புதியதல்ல. அது, இக்காலத்தைவிட, ஆன்றோர்கள் காலத்தில், மிக அதிக அளவிலே இருந்த துண்டு. பழம்பெரும் நகரான ஏதன்ஸில், இந்தப் பூச்சிகள் ஏராளமாகக் கிடந்தன! பாலஸ்தீன் நகரிலே கூட! ஐரோப்பிய பூபாகத்தில், இந்தப் பூச்சியைக் கசக்கியும் நசுக்கியும் வைத்தனர். முன்பு இந்த அளவுக்கு, அவைகளின் தொல்லை இப்போது கிடையாது. கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது.

தொடுப் : அந்த நஞ்சுப் பூச்சி தீண்டி நோய் கண்டு விட்டால், நோய் என்றென்றும் போகாதோ?

மருத் : ஒருக்காலும், நோய் போகாது.

தொடுப் : நோயின் குறிகள் யாவை?

மருத் : கண்களிலே புத்தொளி,

சுறுசுறுப்பான நடவடிக்கை, எளிய வாழ்க்கை, அச்சமற்ற போக்கு, சுகபோகத்தில் பற்று அற்ற நிலை.

தொடுப் : கொல்லப்பட்டானே, அவனிடம் இந்தக் குறிகள் கண்டீரா?

மருத் : அதை ஏன் கேட்கிறீர்கள்! நோய், முற்றிப் போன நிலை அல்லவா, அவனுக்கு.

நீதி : அப்படியானால், அந்த நோயாளி கொல்லப்பட்டது, சமூகத்துக்கு மிகப் பெரிய நலன் தரும் செயல் - அல்லவா?

மருத் : ஐயமென்ன!! ஐயமென்ன!!

(குற்றவாளியைக் கொல்லப் பார்க்கிறார்கள்! அவனைச் சாகடிக்க முடியவில்லை. ஓடோடி வந்து, நீதிபதியிடம் கூறுகிறார்கள். அவர் பதறுகிறார். ஆணையிடுகிறார்! ஆர்ப்பரிக்கிறார். வெட்டு! குத்து! கொளுத்து! பிய்த்தெறி! எதையோ,

செய்! ஆனால் அவன் சாகவேண்டும்! என் தீர்ப்பு நிறைவேற்றப்பட வேண்டும்! என்று கூச்சலிடுகிறார். காவலர், வெளியே செல்கின்றனர்.)

நீதி : (கிலிகொண்ட நிலையில்) மருத்துவ நிபுணரே! இந்த நோய், தொத்திக்கொள்ளக் கூடியதோ?

மரு : பொல்லாத தொத்து நோய்! ஏதன்ஸ் நகரிலிருந்து, இந்த நோய், பரவிப் பரவிப் பரவி, ஐரோப்பிய பூபாகத்தையே கப்பிக்கொண்டது. நமது நாகரிக நகர்களில், மாற்று மருந்துகளை, ஆட்சியாளர் தயாரித்து அளிப்பதால், நோய் பரவுவது தடுக்கப்பட்டு வருகிறது.

நீதி : கிடக்கட்டும். குற்றவாளி இங்கு வந்திருந்தானே - தொத்துநோய் என்கிறீரே - நம்மைப் பிடித்துக் கொண் டிருக்குமோ? மரு :

இருக்கும்.

நீதி : அவன் உயிருடன் இருந்தால்தானே, நோய் தொத்திக் கொள்ளும். அவன்தான் செத்தானே!

மரு : ஐயோ! ஆபத்து அப்போதுதான் அதிகம். அப்படிப் பட்டவர்களின் சக்தி உயிரோடு இருந்தபோது இருப்பதைக் காட்டிலும், செத்த பிறகு, அந்தச் சக்தி பலமடங்கு அதிகமாகிவிடும்.

நீதி : நோயை நீக்க, வழியே இல்லையா...?

மரு : இருக்கிறதே! தாங்கள் கண்டவழி! சாகடிப்பது!

நீதி : என்ன, மருத்துவ நிபுணரே! ஒரு தினுசாகப் பேசுகிறீர்.

மரு : உண்மையை உரைக்கிறேன்! பெருந்தகையே! என்னை அந்த நோய்

தொத்திக்கொண்டது!

தம்பி! மருத்துவ நிபுணருக்கு, தன்னை வரவழைத்துக் கேட்டு, உண்மை என்ன என்று கண்டறியாமலே, குற்றவாளிக்கு நீதிபதி மரண தண்டனை தந்ததால் மனம், கொதித்திருக்கிறது.

சட்டத்தையும் ஒரு பக்கம் ஏடுகளாக்கி வைத்துக் கொண்டு, படுகொலையை நீதிபதி செய்கிறாரே! ஆட்சி இதனை அல்லவா, முறையாக்கி வைத்திருக்கிறது என்று எண்ணுகிறார் - அவர் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த, நேர்மை எழுந்து நின்று, அவரை ஆண்மையாளராக்கி விடுகிறது. அஞ்சாது உண்மை பேசுகிறார். இறந்தவன் மூளையைக் கெடுத்தது, ஒரு நச்சுப் பூச்சி - அது கிரேக்க நாட்டில் ஏதன்ஸ் நகரிலே நிரம்பி இருந்தது என்று மருத்துவர் கூறுவதன், உட்பொருள், கொடுங்கோலர்

செய்யக்கூடிய கொடுமைகளுக்கு அஞ்சாமல், நெஞ்சுரத்துடன் சிந்தனையாளர், ஏதன்ஸ் நகரில் நிரம்ப இருந்தனர் - அவனி எங்கும் அறிவு பரப்பினர் - சர்வாதிகாரிகளின் காலத்திலேதான், சிந்தனையைச் சாகடிக்க முயற்சிக்கிறார்கள் - அதுவும் நடவாது என்பதாகும்.

சிந்தனையாளர், கொடுங்கோலரின் சீற்றத்தால் தாக்கப்படுவது காணும்போது, எவருக்கும் அவர்பால் பற்று ஏற்பட்டுவிடும் - சிந்தனையாளர் ஆகிவிடுவர் என்ற கருத்தை விளக்கத்தான், குற்றவாளிக்கு இருந்தது தொத்துநோய் என்று கூறினார்.

அநியாயமாக ஒருவனை அழிக்கிறீர்கள், அவன் ஆன்றோர் காலமுதல் அழிந்துபடாமல் இருந்துவரும் "சிந்தனை'ச் செல்வத்தைப் பறிகொடுக்க மறுத்த காரணத்தால் - அவன் சாகத் துணிகிறான், சிந்தனையை இழக்க

மறுக்கிறான் - அவனன்றோ ஆண் மகன் - அவன்போல் அனைவரும் இருந்திட வேண்டும் -இதோ இனி நான், அவன் போலத்தான்! என்ற கருத்தை விளக்கத்தான், அந்த மருத்துவ நிபுணர், என்னையும் அந்த நோய் தொட்டுவிட்டது என்று கூறினார்.

பதறிய நீதிபதி, மருத்துவ நிபுணரைக் கைது செய்யும்படி, போலீஸ் அதிகாரிக்குக் கட்டளையிடுகிறார். அவனும் மறுத்து விடுகிறான்! தொத்துநோய்!!

வழக்குத் தொடுப்போனைக் கூவி அழைக்கிறார் நீதிபதி, அவன் மட்டும், என்ன!! நாம் நடத்தியது வழக்கு விசாரணை அல்ல! கேலிக் கூத்து! நான் ஓர் சுயநலக்காரன் - போலீஸ் காவலர், விசை கொடுத்தால் ஆடும் பதுமை - செய்தி தருவோன் பொய்யன் புரட்டன் - தாங்களோ, ஓர் கோமாளி!

பிடியுங்கள்! அடையுங்கள் சிறையில்! கொல்லுங்கள் துரோகியை! என்று ஆத்திரத்துடன், நீதிபதி அலறுகிறார்.

சட்டம் படித்தேன், பகலும் இரவும்! எதற்கு, பாதகம் புரிந்திட! படுகொலைக்கு உடந்தையாக இருக்க!! உண்மையை உணருகிறேன். உயிர் பெரிதல்ல! வாழ்க்கை பெரிதல்ல! நாம் இப்போது வாழ்ந்துகொண்டும் இல்லை! - என்று உருகிப் பேசுகிறான், வழக்குத் தொடுத்தோன்.

பொய்! பொய்! நான் இதுவரை, வெளியிடச் சொல்லி அனுப்பிய அவ்வளவு செய்தியும் அண்டப் புளுகு. நாங்கள் மனிதர்களே அல்ல! மானமற்றவர்கள்! மதியற்றவர்கள்! கதியற்றவர்கள்! இங்கு ஒரே ஒரு மனிதன் இருந்தான் - குற்றவாளிக் கூண்டில்! ஒரே ஒரு விடுதலை வீரன் இருந்தான் - கரங்களில் விலங்குகள்

பூட்டப்பட்டு! மற்றவர் அனைவரும் மாமிசப் பிண்டங்கள்! மனிதக் கழுகுகள்!

இவ்விதமெல்லாம் செய்தி தருகிறான், இதழுக்கு - நோய் முற்றிவிட்ட நிலை அவனுக்கு!

நீதிபதிக்கும், இலேசாக நோய் பிடித்துவிடும் போலாகிறது.

ஆனால், டெலிபோன் ஒலி கிளம்புகிறது! "மேலவர்' பேசுகிறார் - நீதிபதி பதறுகிறார்.

"நச்சுப் பூச்சி தீண்டியதால், இங்கு அனைவருக்கும் திடீர் என்று நோய் கண்டுவிட்டது. இப்போது பரவாயில்லை. இதோ தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன்!'' என்று கூறிவிட்டு, மற்றவர்களை அழைக்கிறார்.

"பிள்ளை குட்டிகளைக் கவனியுங்கள்! பிழைப்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்!

மேலவர் மெத்தக் கோபத்துடன் இருக்கிறார். இடிமுழக்கம் போலிருந்தது அவர் பேச்சு. எந்த நேரத்திலே ஆபத்து வருமோ, தெரியவில்லை.''

நீதிபதி பீதிகொண்டதுபோலவே, மற்றவர்களும் பீதி அடைகிறார்கள்.

குட்டிப் பிசாசும் கொல்லப்பட முடியாதவனும் கூடுகின்றனர்.

வழக்குமன்றத்திலிருந்தோர், வதைபடுவதைக் காட்டுகிறது குட்டிப் பிசாசு!

நடைப்பிணங்களைப் பார்! நடுங்கிக்கிடக்கும் பேர்வழி களைப் பார்! நத்திப் பிழைத்திடும் சிற்றினத்தைப் பார்! - என்றெல்லாம் கூறிக் கேலி செய்கிறது, குட்டிப் பிசாசு!

"இவர் போன்றார்தானே, ஆட்சி மன்றங்களிலே மிகப் பெரும்பாலோராக

உள்ளனர்'' என்று கேட்கிறான், மரண தண்டனை பெற்றும், உயிர் இழக்காதவன்.

"இவர்கள் இப்படியேதான் இருப்பார்களா? என்று கேட்கிறான்'' சிந்தித்தவன்.

ஆமாம்! என்று பதிலளிக்கிறான், சிந்திக்கச் செய்தவன்.

எப்போதும் இப்படியேதானா? என்று கேட்கிறான் சிந்தனையாளன்.

நெடுங்காலத்துக்கு இப்படித்தான்! நடைப்பிணங்கள் மனிதத்தன்மை பெறுவது மிகக் கடினமல்லவா? என்று கூறிச் சிரிக்கிறான், சிந்திக்க வைத்தவன்.

நீதிபதியின் இருக்கையில் அமருகிறான், முன்பு குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டவன்!!

தம்பி! சர்வாதிகாரிகள், நீதிமன்றத்தை

எப்படிக் கேலிக் கூத்தாக்குவார்கள் என்பது மட்டுமல்ல, நாடகக் கருத்து - எப்படிப்பட்ட மோசமான சர்வாதிகார ஆட்சி நடந்தாலும் ஒருவர் இருவராகிலும் துணிந்து "சுயசிந்தனை' செய்து, அதன் காரணமாகக் கொடுமைப்படுத்தப்பட்டாலும் தாங்கிக் கொள்வர் என்ற பேருண்மையையும், நாடகம் விளக்கிக் காட்டுகிறது.

கொடுமைக்கு அஞ்சாமல் ஒருவன், விடுதலை வீரனாகத் திகழ்ந்தால், முன்பு மரக்கட்டைகள் போலிருந்தோரும் உணர்ச்சி பெற்று, உரிமைக்காகப் போரிடும் வீரராவர் என்பதும், நாம் பெறவேண்டிய பாடம்.

□

ஆனால், சர்வாதிகாரிகள் போலவா நமது அரசு, எண்ண, எழுத, பேச, கேட்க, உரிமை தராது இருக்கிறது என்று காங்கிரசார்

கேட்பர், குறும்புச் சிரிப்புடன். பெரிய தலைவர்களே கூடச் சில வேளைகளில், மார்தட்டிக்கொண்டு பேசுகிறார்கள். “நாங்கள் அல்லவா பேச்சுரிமை கொடுத்தோம்!'' என்று. இன்னும் சிலர், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் போக்கினர்,”நாங்கள் மட்டும் நினைத்திருந்தால், உங்களை ஒழித்துக் கட்டிவிட்டிருப்போம். போனால் போகட்டும் என்று விட்டுவைத்திருக்கிறோம்'' என்று கொக்கரிக்கிறார்கள்.

இவர்கள் அளித்துள்ள பேச்சுரிமை, எத்தனை எத்தனை வளையங்கள் போடப்பட்டதாக இருக்கிறது என்பதுகூடக் கிடக்கட்டும் - பேச்சுரிமையை இவர்கள், கொடியவன் என்று கண்டிக்கப்பட்ட வெள்ளையன் காலத்திலே பெற்றுச் சுவையைக் காணவில்லையா?

சிங்கத்தின் குகையிலே நுழைந்து,

அதன் பிடரியைப் பிடித்தாட்டுவேன்! என்று பேசிடச், சத்தியமூர்த்திக்கு வெள்ளைக்காரன் உரிமை தந்தான் - நேருவுக்குக் கருப்புக்கொடி இன்னின்ன கட்டுத் திட்டத்தோடுதான் காட்டவேண்டும் என்று கழகத் தோழர்களுக்குக் கூறிட, கூட்டப்பட்ட கூட்டத்தில் பேசிடும் உரிமையையும் தர மறுத்து, வழியிலேயே மடக்கிப் பிடித்துக்கொண்டுபோய், போலீஸ் கொட்டடியில் நம்மை அடைத்தவர்கள், இவர்கள். இவர்கள் பேசுகிறார்கள், பேச்சுரிமையை நமக்குத் தாராளமாகத் தந்திருப்பதாக!

சர்வாதிகாரி, பேச்சுரிமை தரமாட்டேன் என்று அறிவித்து விடுகிறான் - காங்கிரஸ் ஜனநாயகவாதிகளோ, பேச்சுரிமை தந்திருக்கிறோம் என்று கூறிக்கொண்டே, எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகளை

நசுக்க, நானாவிதமான முறைகளைத் தொடர்ந்து நடத்தியபடி உள்ளனர். எதிர்க் கட்சிகள் எடுத்துக் காட்டும் குற்றம் குறைகளுக்கு, தக்கவிதத்தில் மறுப்புரை கூறாமல், நாட்டு மக்களிடம் சென்று, எல்லா எதிர்க்கட்சியினரும் நாசக்காரர்கள், நாட்டுத் துரோகிகள், அறிவற்றவர்கள்என்றெல்லாம் ஏசித் திரிகின்றனர், தம்பி! கனம். காமராஜரே, பேசுகிறார், தி. மு. கழகத்தவர், "அரசியல் அப்பாவிகள்' என்று. இவர் ஈராறு ஆண்டுகள், அகில உலகப் பல்கலைக் கழகத்திலே அரசியல் பெரும் பேராசிரியராகப் பணியாற்றிப் பக்குவம் பெற்றவர் போலவும், சீனத்து மாசேதுங்கும் சோவியத் நாட்டு குருஷேவும், அமெரிக்க ஐசனோவரும் பிரிட்டிஷ் மாக்மிலனும், இவரிடம் பாடம் கேட்டுப் பயிற்சி பெற்ற மாணவர்கள் போலவும், எண்ணிக் கொண்டாரோ

என்னவோ, நம்மை, அரசியல் அப்பாவிகள் என்கிறார்.

கிராமத்துப் பெரியதனக்காரர், வெட்டிய கிடாவின் இறைச்சித் துண்டுகளை, இன்னின்னாருக்கு இவ்வளவு என்று எடுத்து வைக்கச் சொல்லிக் கொடுத்தனுப்புவது போன்ற அலுவல், இவருக்கு, காங்கிரஸ் அரசியலில்! இவருடைய "அபாரமான' ஆற்றலுக்காக, இவரைத் தேடிக் கண்டுபிடித்து, நேரு பண்டிதர் முதலமைச்சராக்கி வைத்ததுபோன்ற ஒரு மன மயக்கம்போலும், இவருக்கு!

திராவிட இன உணர்ச்சி மலர்ந்துள்ள இடத்தில், ஆச்சாரியார் போன்றோர் ஆட்சியில் அமர்ந்திருப்பது அமளிக்கு வழிகோலும் என்ற அச்சத்தால், திராவிட இனத்தவ ராகவும், அதேபோது அந்த உணர்ச்சியை அறிந்துகொள்ளத் தக்க அறிவாற்றல்

அற்றவராகவும் ஒருவர் கிடைத்தால், அவரைப் பிடித்திழுத்து தலையில் மகுடத்தைக் கவிழ்த்து உட்கார வைத்தால், நாட்டிலே அமளி மூளாதிருக்கும் என்பதன்றி, பிறிதோர் நோக்கத்தை நேரு பெருமகனாரும் கொண்டிருக்க வழி இல்லை.

இவர் நம்மை ஏசுகிறார், அரசியல் அப்பாவிகள் என்று!!

நடுநிலையாளர், இங்ஙனம் எதிர்க்கட்சியினரை முறைதவறி ஏசுவதும், முரட்டுத்தனமாகத் தாக்குவதும், சரியல்லவே! என்று கூறும்போது, கோபம் கொப்பளிக்கிறது, காங்கிரஸ் ஜனநாயக வாதிகளுக்கு.

”ஓ! ஓ! யார் தெரியுமா நாங்கள்! வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை விரட்டிய வீராதி வீரர்களாக்கும்! சுயராஜ்யம் பெற்ற சூரர்கள், அறிவீர்! சுயராஜ்யம்

என்ன, விளையாட்டுக் காகப் பெற்றதாக எண்ணுகிறார்களோ!!'' - என்று எக்காளமிடுகின்றனர்.

தம்பி! கைதியாக்கப்பட்டிருக்கும், மெண்டாரிஸ் "ஏனோ தானோ' அல்ல!

பிறந்தது செல்வக் குடியில். விளைவு தெரியாமல் காரிய மாற்றிடத்துடிக்கும் காளைப் பருவத்தினர் அல்ல. பிறந்தது 1899!! நான் பள்ளிக்கூடம் போனதே இல்லை என்று கூறிக்கொண்டு, பல்கலைக்கழகப் பாதுகாவலர்களுக்கு "அறிவுரை' கூறப் புறப்படும், அலங்கோலம் காண்கிறோமே, அதுபோல் அல்ல; மெண்டாரிஸ், பார் புகழும் ஓர் பல்கலைக் கழகத்தில் படித்தவர்.

1917-ல், உதுமானிய சாம்ராஜ்யப் படையில் சேர்ந்து பணியாற்றியவர்.

உதுமானிய அரசு ஆறு

நூற்றாண்டுகளுக்கு மேலாக அலங்கோல ஆட்சி நடத்தியதால் துருக்கி, "ஐரோப்பாவின் நோயாளி' என்று பலராலும் நையாண்டி செய்யப்படும் நிலையில் கிடந்தது; அதுகண்டு வெகுண்டெழுந்து விடுதலைப் போர் நடாத்த முனைந்தார், கமால்பாஷா - மெண்டாரிஸ், அந்த வீரப் படையில் சேர்ந்து துருக்கிக்குப் புதுவாழ்வு பெற நடத்தப்பட்ட, புனிதப் போரில் பெரும்புகழ் ஈட்டியவன்.

அழகிய ஆரணங்கை மணம் புரிந்துகொண்டு, மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பனாகி, செல்வ நிலையில் இருந்து வந்தான் - 1981-ல், கமால்பாஷா அவர்களே அழைத்து, மெண்டாரிசை அரசியல் அலுவலில் ஈடுபடச் சொன்னார்.

பாராளுமன்றத்திலே இடம் பெற்ற பிறகுங்கூட, முன் வரிசை நாடாமல், வாளா இருந்து வந்தார்.

1950லே, அவர் தலைமையில் கட்சி இயங்கி, தேர்தலில் ஈடுபட்டு, மகத்தான வெற்றி பெற்றது.

மிகப் பெரிய தேக்கங்கள், அணைகள், எஃகுத் தொழிற்சாலைகள், சுரங்கத் தொழில் எனும் பலவற்றைத் துவக்கினார், துருக்கியின் செல்வம் வளர வேண்டும், பொருளாதாரம் பலப்பட வேண்டும் என்பதற்காக.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற தேர்தலில், பாராளுமன்றத்திலே 610 இடங்களில் 421 இடங்களை மெண்டாரிஸ் கட்சி பெற்றது!

அவ்வளவுதான்! ஆணவம் பிடித்துக்கொண்டது.

எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றாகக் கூடினாலும், நம்மை என்ன செய்ய முடியும் என்ற எண்ணம் தடித்தது. தடித்துப் போகவே,

திட்டம் தீட்டும்போது, எவரையும் கலந்து பேச வேண்டும் என்ற அக்கறை எழுவதில்லை - நிறைவேற்றுவதிலே நேரிடும் ஊழல்களை எவரேனும் சுட்டிக்காட்டினால், திருத்த வேண்டும் என்று எண்ணுவதில்லை; மாறாக, எதிர்க் கட்சிகளை ஏளனம் செய்தார்.

ஜெர்மன் நாட்டுப் பொருளாதார நிபுணர் எர்கார்டு என்பார்கூட, நிறைய கடன் வாங்கி வாங்கித் தொழிலை நடத்துகிறார்கள் - வருவாய் குறைவு; மிதமிஞ்சிய செலவு... இது ஆபத்து. நிர்வாகமும் ஒழுங்காக இல்லை! - என்று எடுத்துக் காட்டினார். தனக்கு இருக்கும் எண்ணிக்கை பலத்தினால், இறுமாந்து கிடந்த மெண்டாரிஸ், அந்த நிபுணர் பேச்சையும் துச்சமென்று கருதினார்.

அவனுக்கென்ன தெரியும்? இவனுக்கென்ன தெரியும்? இவன் வாலை ஒட்ட வெட்டிவிடுவேன் - அவனை அடியோடு

அழித்துவிடுவேன் - என்றெல்லாம் பேசுவது, ஜனநாயகச் சர்வாதிகாரிக்கு ஏற்படும் நோயின் குறி!

அந்த நோய் பிடித்துக் கொண்டால், வேண்டுகோளைப் புறக்கணிக்கச் சொல்லும், நல்லுரையைக் கேட்க மனம் இடம் தராது, நாமே எல்லாம் என்ற நினைப்புப் புகுந்து குடையும்!

தம்பி! நாம் கேட்கும் "திராவிட நாடு' அமைத்துக் கொடுப்பது, அவ்வளவு எளிதானதல்ல, காமராஜருக்கு என்றே வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; தமிழ் நாடு என்ற பெயர் வைப்பது கூடவா கடினமான காரியம்! அது என்ன, எவரெஸ்டுமீது ஏறிடுவது போன்றதா? இருக்குமிடமிருந்தே எங்கோ இருக்கும் இலக்கினைத் தாக்க ஏவிடும் வாணவெடி தயாரிப்பது போன்ற விற்பன்னர் வேலையா?

தேவையான அளவு தன்மான உணர்ச்சியும், மக்களின் வேண்டுகோளை மதிப்பது நமது கடன் என்ற பொறுப்புணர்ச்சியும் தானே தேவை - தமிழ்நாடு என்று பெயரிட! செய்தாரா?

"தமிழ்நாடு' என்று பெயரிடும்படி, தி. மு. கழகம் மட்டுமா கேட்கிறது? எல்லா அரசியல் கட்சிகளுமல்லவா!!

அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, கற்றறிவாளர் கழகங்கள்' வணிகர் நடத்தும் மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், புலவர்கழகம், தமிழாசிரியர் கழகம் - இவையாவுமன்றோ, தமிழ்நாடு என்ற பெயரிடும்படி வலியுறுத்தி வருகின்றன.

பம்மல் சம்பந்தனாரும், டாக்டர் மு. வரதராசனாரும், சேதுப்பிள்ளை அவர்களும், எடுத்துக் கூறும்போது கூடவா, கனிவு

எழாதிருப்பது?

எவர் சொன்னாலும் சரி, என் போக்கை மாற்றிக்கொள்ளப் போவதில்லை என்று இருப்பவரை, என்னவென்று கூறுவது? பித்தர் என்பதா? சர்வாதிகார வெறிபிடித்தலைபவர் என்றுரைப் பதா? என்ன கூறினாலும் விளக்கம் பெற முடியாத மந்த மதியினர் என்பதா?

ஒரு பெரியவர், உண்ணாவிரதமிருந்து, சாகக் கண்டும், முதலமைச்சரின் மனம் இளகவில்லை! கண்டோமே!!

ஒருவர் சாகக் கண்டும் மனதை இரும்பாக்கிக்கொண் டாகிலும், கடமையைச் செய்ய வேண்டும் - செய்தேன் - என்று கூறவாவது, காமராஜர் ஏதேனும் வியக்கத்தக்க சாதனைகளைச் செய்து காட்டினாரா?

வேறு எதைச் செய்ய இயலாமற் போயினும், நடைபெறும் ஆட்சி, ஆளுங் கட்சியினருக்கேனும், திருப்தி அளிக்கிறதா?

தம்பி! அடுத்த கிழமை காட்டுகிறேன் அந்தக் கூத்தினை.

அன்புள்ள,

அண்ணாதுரை,

12-6-1960

7. ஒலியும் ஒளியும்

ஜனநாயக ஆட்சியில் ஊழல்கள் -

சட்டசபையில் உறுப்பினர் தண்டம் -

ஓட்டும் வேட்டும்

தம்பி!

”கடும் பனி! உடல் வெடவெடுக்கிறது! காரிருள்! எந்தப் பொருளும் சரியாகத் தெரியவில்லை! காலிடறிக் கீழே வீழ்ந்தேன், கருங்கல்லில் தலை மோதிக்கொண்டது! கலங்கினேனா? இல்லை! நடந்தேன், நடந்தேன், தோட்டம் நோக்கி; ஆனால் அங்கோ கதவு தாளிடப்பட்டுக் கிடந்தது. தவித்துப் போனேன். பக்கத்துச் சுவரோரம் பதுங்கிப் பதுங்கிச் சென்றேன். பழுதையென்று எண்ணித் தொடப்போனேன், அசைந்திடக் கண்டு பாம்பென்றறிந்து

பயந்து விலகினேன்! நா உலர்ந்து விட்டது! இப்படியா இருக்க வேண்டும் நம் கதி என்று எண்ணினேன். துக்கம் துளைத்தது. எவரேனும் கண்டுவிட்டால்? என்று எண்ணும்போதே, பயம் கப்பிக் கொண்டது. திடீரென்று, ஏதோ ஒன்று என்மீது விழுந்தது, பதறினேன், மறுகணம், வீழ்ந்த பொருளைக் கண்டேன். என்னவென்கிறாய், என் காதலியின் கூந்தலில் இடம் பெற்றதால் மணம் பெற்ற மலர்! எடுத்தேன், கண்களில் ஒத்திக்கொண்டேன் - அதரத்தில் கொண்டு சென்று அகமகிழ்ந்தேன்! பட்ட கஷ்டமனைத்தையும் மறந்தேன்! இதோ வெற்றி! சுவைமிகு வெற்றி! மணமிகு வெற்றி! என் காதலி தந்திடும் அன்புக் காணிக்கை! உன்னை மறந்திடவில்லை, இதோ என் மலர், உனக்காக! என்று கூறுகிறாள் என் குயில் மொழியாள், இந்தமகிழ்ச்சியைப்

பெற, கடும்பனி, காரிருள், கரடுமுரடான வழி, இடறி விழுந்திடும் இன்னல் என்னும் எதுவாக இருந்தால் என்ன! இதைவிட ஆபத்து நிரம்பியதாக இருப்பினும், செல்வேன், வெல்வேன்.''

□

இடர்ப்பாடுகளை மறந்திடச் செய்யும் வகையான வெற்றி பெற்ற காதலன், இதுபோலக் களித்துக் கூறுவான். இத்துணை கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு சென்றவன்மீது, காதலியின் கூந்தலுக்கு அணிசெய்திருந்த மலர் வீழாமல், அவளுடைய பாட்டனார் எறிந்த கைத்தடி வீழ்ந்திருந்தால் - எப்படி இருந்திருக்கும் அவன் மனநிலை! அதுகூடச் சகித்துக் கொள்வான். வீழ்ந்தது, காதலி வீசிய மலராக இராமல், அவன் தன் அன்பின் அடையாளமாக முன்னமோர் நாள் அவளுக்கு அளித்த "கணையாழி' யாக

இருந்தால், எவ்வளவு கலங்குவான்! அதுகூடப் பரவாயில்லை! மேலே வீழ்ந்தது, ஒரு காலணியாக இருப்பின்! கோபம் பிறக்கும்!! எப்படி வீழ்ந்தது என்று பார்த்தறியும்போது, சுவரின் மறுபுறமிருந்து, இப்புறம் இறங்கிடும் ஒரு ஆடவன் காலிலிருந்து கழன்று வீழ்ந்தது என்பது தெரிந்தால், கடுங்கோபம் ஏற்படுமல்லவா! தன்னைச் சொக்கவைத்துவிட்டு வேறோர் வாலிபனுக்கு விருந்தாகி விட்டாள், காதலியாக நடித்த காதகி; அவளைக் கண்டு இதழமுதுண்டு திரும்புகிறான் இந்தக் கள்ளன்; அவசரத்திலே காலினின்றும் கழன்று வீழ்ந்தது காலணி என்று தெரிந்தால், கோபம், வெட்கம், துக்கம் எல்லாம் சேர்ந்தல்லவா அவனைத் துளைக்கும். கொலைகாரனாக வேண்டும் அல்லது குத்திச் சாக வேண்டும் - வேறென்ன செய்யத் தோன்றும், அந்த வேளையில்!

இவ்வளவு இடர்ப்பட்டு வந்தது, இந்த இழி நிலையைக் காணவா? என்று எண்ணும்போதே மனம் உடைவது போலாகிவிடாதா!

□

சர்வாதிகார ஆட்சி, உரிமையை அழிக்கும், நடுநடுங்கச் செய்யும், சிறையை, தூக்குக் கயிறைக் காட்டி மிரட்டும், எனினும் சில சர்வாதிகார ஆட்சிகள், மற்ற ஆட்சி முறையிலே இருந்து வந்த ஊழல், மந்தம், திறமைக் குறைவு, தெளிவின்மை போன்ற குறைகளை நீக்கி, மக்கள் நிம்மதியான வாழ்க்கையைப்பெறவாகிலும் வழி செய்தளிக்கும். காதலியின் மலராக இலாது போயினும், மரத்திலிருந்து உதிர்ந்த கனியாவது மேலே வீழ்வது போன்ற நிலை என்று வைத்துக்கொள்ளேன்.

கடுமையான முறைகளைப் புகுத்துகிறான், சர்வாதிகாரி. ஆனால், எதற்கு? நாட்டிலே விரைவாக, நல்ல காரியம் நடந்திட வேண்டும் என்பதற்காக! முறைகள் கடுமையானவை என்பதனால், பலனில் கிடைக்கும் சுவையை மறந்திட முடியுமா? கடும்பனியின் கொடுமையைத் தாங்கிக்கொண்ட பிறகு, காதலியின் மலர் கிடைத்தால், பட்டபாடுதனை மறந்து, மகிழ்ச்சி கொள்வா னன்றோ! ஆட்சியின் பலன், இழிதன்மை, வறுமை, அவல நிலைமை என்றிருக்குமானால், அது காதலியைக் காணச்சென்று, காலணி கண்டது போலன்றோ இருந்திடும்.

□

சர்வாதிகாரத்திலே, பேச்சுரிமை கிடையாது - இம்மென்றால் சிறைவாசம் - எதிர்த்தால் சாகடிக்கப்படுவர் - என்று பேசி, ஜனநாயகத்தை வாயாரப் புகழ்கின்றனர்.

ஆனால், அந்த ஆட்சியிலே, சர்வாதிகாரியின் "கட்டுக்காவல்' முறையை மட்டும் புகுத்திச் சர்வாதிகாரி சமைத்தளிக்கும் சுவையும் பயனும் மிக்க வெற்றிகளைத் தராவிட்டால், அந்த ஜனநாயகத்தை, மதிக்கத்தான் முடியுமா - மகிழ்ச்சிதான் பிறக்குமா?

இத்தனை கடும்பனியில் காரிருளில், எங்கே செல்கிறாய்? என்று கேட்டிடும்போது, "என் இதயம் வாழ்பவளைக் காண!'' என்று கூறிடும் வாய்ப்பு இருந்தாலாவது மகிழ்வர் - மதிப்பர்!

"எங்கு?'' என்று கேட்டதும்,"எட்டிக்கொட்டை வேண்டும் சாப்பிட! அதைக் கொண்டுவரச் செல்கிறேன்'' என்று கூறிட வேண்டியதாக இருந்தால் - மதித்திடவா செய்வோம்.

□

ஆட்சி சர்வாதிகார முறையினதா?

ஜனநாயக முறையினதா? என்பதுகூட இருக்கட்டும், கிடைத்திடும் பலன் என்ன? முறை நமக்குப் பிடிக்காதது என்றாலும்கூட, நாம் விரும்பத்தக்கதாக இருந்தால், பல்லைக் கடித்துக்கொண்டு சகித்துக் கொள்வார்களல்லவா!

காமராஜர், செல்லுமிடமெல்லாம், இந்த ஆட்சிக்கு ஈடு வேறு கிடையாது! மக்களுக்கு வயிறாரச் சோறு போடவேண்டும் என்பதுதான், என் திட்டம். என் ஆட்சியிலேதான், அந்தத் திட்டம் வெற்றி பெறும். எத்துணையோ நன்மைகளைச் செய்கிறோம். இதைக் காட்டிலும் அதிகமாக எவரும் செய்ய முடியாது. இந்த ஆட்சிபோல், நேர்த்தியான ஆட்சியை யாராலும் நடத்த முடியாது - என்று பேசி வருகிறார். உடனிருந்து உவகைகொள்ளும் ஊர்ப் பெரியவர்கள், "எவ்வளவு தெளிவு! என்ன எளிமை! புட்டுப்புட்டுக் காட்டுகிறாரே!''

என்று பாராட்டுகின்றனர் - அவர் எதிரில். ஆனால், உள்ளபடி ஆட்சி, பாராட்டுதலுக்குரியதாகத்தான் இருக்கிறதா? மக்களின் அடிப்படைத் தேவைகளையேனும் கவனித்துக் கிடைக்கச் செய்துள்ளனரா, ஆட்சியினர்? நாம், ஆட்சியாலே, நன்மை விளையாதது மட்டுமல்ல, கேடுகள் பல ஏற்பட்டுள்ளன என்று கூறும்போது, காங்கிரசாருக்குக் கடும்கோபம் வருகிறது. குறைகூறுவதேதான் வேலையா? என்று கேட்கிறார்கள். தம்பி! மக்கள் நல்வாழ்வு பெறத்தக்க, ஊழலற்ற, நேர்த்தியான ஆட்சி அல்ல அவர்கள் நடத்துவது. ஏட்டில் இனிக்க இனிக்க எழுதிக் காட்டுகிறார்கள்; நாட்டு மக்களுக்கோ, ஒரு சுவையும் கிடைப்ப தில்லை. தொண்டுபுரிவதே எமது நோக்கம் என்கிறார்கள், தொல்லையைக்கூறி உதவி கேட்டால், துரத்தி துரத்தித் தாக்குகிறார்கள்.

புடம்போட்ட தங்கம், பாரத பூமியை மீட்ட சிங்கம் என்றெல்லாம் பெருமை பேசிக்கொள்கிறார்கள் - வெள்ளையரின் பொருளாதாரப் பிடியை நீக்கிக்கொள்ளத் துணிவின்றிக் கிடக்கிறார்கள். திறமையாக நடக்கிறது எமது ஆட்சி என்கிறார்கள், ஒவ்வோர் துறையிலும் ஒழுங்கீனமும் ஊழலும் நாற்றமடித்தபடி இருக்கிறது.

□

துரைத்தனம் மேற்கொள்ளும் எந்த அலுவலுக்கும், திட்டமிட வேண்டும், இவ்வளவு செலவாகும் என்பது அதிலே குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும், கூடுமானவரை திட்டமிடப் பட்ட தொகை அளவுக்கே வேலை முடிய வேண்டும், வேலை தரமுள்ளதாக இருக்க வேண்டும், நிர்வாகத்தில் ஒழுங்கு இருக்க வேண்டும். நடுக்கொள்ளை, வீண் செலவு, ஆகாவழி

சென்றதால் அதிகச் செலவாதல் போன்றவைகள் இருத்தல் கூடாது; திட்டம் நிறைவேற்றப்பட்டதும் அதன் மூலம் எதிர்பார்க்கிற பலன், அளவும், வகையும் குறையாமல் கிடைக்க வேண்டும்.

புரட்சிகரமான ஆட்சிகூட இதற்கு வேண்டாம்; பொறுப் புணர்ச்சி உள்ள ஆட்சி போதும்.

மக்களுக்காக அரசாளுகிறோம், நாம் மகா பெரிய அறிவாளிகள் என்பதைக் காட்டிக்கொள்ள அல்ல என்ற அடக்க உணர்ச்சி இருந்தால் போதும்.

நிர்வாகத்திலே, பலதிறப்பட்ட குறைபாடுகள் இருப் பதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு பதில் கூறவேண்டியவர்கள், அமைச்சர்கள். குற்றம் குறை இருந்தால், கண்டறிந்து கூறவேண்டிய

பொறுப்பு, கணக்கு ஆய்வுக்குழுவுக்குடையது.

காமராஜர் கூறுகிறார், நாங்கள் எல்லாவற்றையும் ஒழுங்காகத்தான் செய்கிறோம் என்று. எதிர்க்கட்சியினர் எடுத்துரைக்கின்றனர், ஆட்சி ஒழுங்காக இல்லை என்பதை. இருதரப்பினர் கூறுவதிலே, எது சரி, எது தவறு என்பதைப் பொதுமக்கள் கண்டறிய வழி இருக்கிறது; கணக்காய் வாளர்களின் அறிக்கையைப் பார்த்தால் போதும், தம்பி! அந்த அறிக்கையிலே, நிர்வாகத்திலே காணப்படும், ஒழுங்கீனம் விரயம், ஊழல், முறைகேடான செயல் போன்றவைகள் எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. அந்த ஆய்வாளர்கள், கட்சிக் கண்ணோட்டம் கொண்டவர்களல்ல; துரைத்தனத்தாரேதான் அந்தக் குழுவை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அமைச்சர்கள் கொள்ளையடித்துவிட்டார்கள்,

இலஞ்சம் வாங்கினார்கள் என்றால் மட்டும்தான் நிர்வாகத்திலே ஊழல் ஏற்பட்டுவிட்டது என்று பொருள் கொள்ளக்கூடாது. அமைச்சர்கள் ஒரு துரும்புகூடத் தமக்காக எடுத்துக்கொள்ளாத "தர்மவான்களாக' இருக்கலாம்; ஆனால் அவர்கள் நடத்தும் துரைத்தனத்தில், ஆறு இலட்சத்திலே கட்டி முடிக்கப்பட வேண்டிய ஒரு பாலம் எட்டு இலட்சம் விழுங்குகிறது என்றால், அதிலே ஒரு காசுகூட அமைச்சருக்கு செல்லாவிட்டாலும், நஷ்டம் நஷ்டம்தான், நிர்வாகம் ஒழுங்கில்லை என்றுதான் பொருள்.

நாங்கள் என்ன, பொருளை எங்கள் வீட்டுக்கா எடுத்துக் கொண்டு போய்விட்டோம்! என்று பட்டம் பறக்கவிடும் பள்ளிச்சிறார்போல், அமைச்சர் ஒருவர் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படி யாரும் சொல்லவுமில்லை; செய்தால்

மக்கள் சும்மாவும் விடமாட்டார்கள்.

”வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்’ என்று யாரும் கூறவில்லை. ஆனால், இவர்கள் வீட்டுக்குப் போய்விட்டால், இந்த ஒழுங்கீனம், ஊழல் இருக்காது என்று கூறுகின்றனர்.

சுவைமிகு உண்டி தயாரித்திருக்கலாம். ஆனால் அதைக் காலங்கடந்து தந்தால், பலன் குறைவாகத்தானே இருக்கும்!

அதுபோல், பாசன வசதியை நேர்த்தியாகச் செய்தளித் திருக்கலாம். ஆனால் அது விவசாயம் செய்யவேண்டிய காலம் தவறிக் கிடைத்தால், பலன் என்ன? செலவாகி இருக்கிறது, அது விரயம்தானே, வீண்தானே! இதற்கு யார் பொறுப்பு?

கணக்காய்வாளர்கள் கண்டறிந்து கூறியுள்ளவைகளைப் பார்க்கும்போது,

எப்படிப்பட்ட கண்மூடித் தர்பார் நடக்கிறது என்பது நன்றாகப் புரிகிறது. சில குறிப்புக்களைக் காட்டுகிறேன், தம்பி! படித்துப் பார்! பராக்குக் கூறிக்கொண்டு திரிகிறார்களே, காங்கிரஸ் அமைச்சர்களுடன், அவர்களிடம் எடுத்துக் கூறு.

1954-55 அரிசி கொள்முதல் செய்து கிடங்கில் வைத்திருந்து, பிறகு விற்பனை செய்ததில், இரண்டு மாவட்டங்களில் மட்டும், முறையே 44,215 ரூபாய்களும் 1,25,256 ரூபாய்களும் நஷ்டம் ஏற்பட்டதாக அறிக்கை கூறுகிறது.

குழாய்கள், அதற்கான கருவிகளை வாங்கி, விற்றதிலே மொத்தத்தில் ஏற்பட்ட நஷ்டம் ஏழு இலட்சமாம்!

அரிசியை, பற்றாக்குறை மாவட்டத்துக்காக உபரியாக உள்ள மாவட்டத்திலிருந்து

வாங்கும் அதிகாரம் பெற்ற 14 வியாபாரிகள், சர்க்காருக்கு 2,40,616 ரூபாய் தரவேண்டி ஏற்பட்டது. ஐந்தாறு ஆண்டுகளாக அந்தப் பணத்தைச் சர்க்கார் கேட்டு வாங்கவில்லை. 1954-ல், வழக்குத் தொடுத்தார்கள். அதற்குள் இரண்டு வியாபாரிகள் இறந்துவிட்டனர். சொத்து ஏதும் இல்லை என்று ஏற்பட்டது. இதனால் 35,525 ரூபாய் நட்டம்! மற்றும் இரண்டு இலட்சத்துச் சொச்சத்துக்காக வழக்காடவேண்டிய நிலை!

நிர்வாகம் செம்மையாக இருப்பதற்கான சான்றா இது!!

கரம்புகளைத் திருத்திக் கழனிகளாக்க, ”டிராக்டர், புல்டோசர்’ போன்றவைகள் கிட்டத்தட்ட அறுபது இலட்ச ரூபாய் மூலதனம் போட்டு வாங்கிப் பயன்படுத்தப்பட்டன. இலாபமும் வேண்டாம், நஷ்டமும் ஏற்படக் கூடாது; அந்தமுறையில் இந்தத் துறை

பணியாற்ற வேண்டும் என்பது, கொள்கை. ஆனால் அதிலே ஏற்பட்ட நஷ்டம் 52,32,876 என்று அறிக்கை சுட்டிக்காட்டுகிறது! பலே பலே! நம்முடைய துரைத்தனம் எவ்வளவு திறமையாக வேலை செய்கிறது, என்றா மக்கள் பாராட்டுவார்கள், இந்தத் தகவலைப் படித்துவிட்டு.

இராணுவத்திடமிருந்த ஒரு விமானதளத்தை, பாகிஸ்தானி லிருந்து வரும் அகதிகளுக்குப் பயன்படுத்தும் எண்ணத்துடன் 86,000 ரூபாய் கொடுத்துத் துரைத்தனத்தார் வாங்கினர். வாங்குவதற்கு முன்பு, இடம் தக்கதுதானா என்று யோசித்துப் பார்த்திருக்க வேண்டாமா? நம்மைத்தான் மக்கள் நம்பிக்கொண் டிருக்கிறார்களே, எதை எப்படிச் செய்தால் என்ன என்ற போக்கிலே, தளம் வாங்கி, பிறகு அது பயனில்லை என்று கண்டு, விற்றுவிட்டனர்.

அந்த வகையிலே ஏற்பட்ட நஷ்டம் 73,643 ரூபாய்.

குடிதண்ணீர் திட்டத்துக்காக, 87,838 ரூபாய் செலவில் ஒரு அமைப்பு ஏற்பாடாயிற்று. அந்தத் திட்டம் ஒரு காண்ட்ராக்டரிடம் விடப்பட்டது. வேலை தொடங்கி ஓரளவு முடியும் தருவாயில், "சானிடரி என்ஜினியர்' வேறோர் இடமே, குடி தண்ணீர்த் திட்டத்துக்கு ஏற்றது, இந்த இடமல்ல, என்று கூறிவிட்டார். பழைய இடம், அங்கு அதுவரையில் நடைபெற்ற வேலை, கைவிடப்பட்டுவிட்டது. காண்ட்ராக்டருக்கு 37,550 ரூபாய் தரப்பட்டது.

திட்டத்தைத் துவக்கு முன்பு, ஆர அமர யோசித்து, அந்தத் துறை நிபுணர்களைக் கலந்து பேசி, அவர்களின் ஒப்புதலைப் பெற்றிருந்தால், இந்த நஷ்டம் ஏற்பட்டிராதல்லவா?

விற்பனை வரி அலுவலகத்தார், குறைத்து மதிப்பிட்ட தாலும், காரணமின்றி வரியைத் திருப்பித் தந்த வகையிலும் 36,510 ரூபாயும், நீதித்துறையிலே, கையாடல், பணத்தைத் திருப்பிப் பெறுவதிலே ஏற்பட்ட நஷ்டம் போன்ற வகைகளுக்காக 2,63,123 ரூபாயும், உருளைக்கிழங்கு காண்ட்ராக்டில் ஏற்பட்ட நஷ்டம் 59,452 ரூபாயும், விவசாயத்துறை அலுவலகத்தில் சரக்கு இருப்பில் குறைவு ஏற்பட்டது, களவு, சரக்கு வாங்குவதிலே ஏற்பட்ட நஷ்டம்போன்ற வகைகளால் 2,31,041 ரூபாயும், கடனைத் திருப்பி வாங்காதது போன்றவைகள் மூலம் 34,707 ரூபாயும், இரும்புக் கம்பிகள் களவுபோன வகையில் 64,274 ரூபாயும், அரிசி, கோதுமை மற்ற வகைத் தானியங்கள் இருப்பிலே, குறைவுஏற்பட்ட வகையில் மொத்த வியாபாரிகளுக்கு நஷ்ட ஈடு தரப்பட்ட வகையில் 36,50,114 ரூபாயும்,

ஆக மொத்தத்தில் 50,55,008 ரூபாய்கள், வீணாகிவிட்டதாக 1954-55-ம் ஆண்டு, கணக்கு ஆய்வாளர் அறிக்கை தெரிவிக்கிறது. எனினும், எங்கள் ஆட்சின் நேர்த்தியே நேர்த்தி, எமது அமைச்சர்களின் கீர்த்தியே கீர்த்தி என்று துந்துபி முழக்கித் திரிகின்றனர், தேர்தல் தரகர்கள்.

1955-56லும் இதே சோகக் காதைதான் தொடருகிறது. விவசாயத் துறை அலுவலகம், பொறியியல் துறை அலுவலகம் ஆகியவற்றிலே சரக்கு இருப்பிலே ஏற்பட்ட குறைவு வகையில் 66,386; கப்பலில் வந்த அரிசியில், அளவு குறைந்ததால் ஏற்பட்ட நஷ்டம் 1,92,151; தகவல் சரியாக விசாரிக்காமலே ஒரு கலெக்டர் அரிசி மூட்டைகளை விற்ற வகையில் ஏற்பட்ட நஷ்டம் 29,120; அலுவலகத்தார் கையாடல் வகை 25,000; மாவட்ட அலுவலகங்களில்

கையாடல் 30,247; இருப்புக் குறைவானது, கையாடல் போன்றவைகள் நீதித் துறையில் ஏற்பட்ட வகையில், 1,41,034; போலீஸ் துறையிலே, நிபுணர் யோசனையின்படி அல்லாமல் வேறுவிதமாகச் சைகிள்கள் வாங்கிய வகையில் ஏற்பட்ட நஷ்டம் 50,000, ஆசிரியர்களுக்கு மானியம், முறையற்ற வகையில் தரப்பட்டது, தரவேண்டியதைவிட அதிகத் தொகை உபகாரச் சம்பளமாகக் கொடுத்தது போன்ற வகைகளில், கல்வித் துறையில், 2,98,651; சரக்குக் கெட்டுப் போனது, இருப்பு குறைந்தது, உரம் குறைந்துவிட்டது போன்ற வகைகளால் விவசாயத் துறையில் 2,31,714; கருவிகள் கெட்டுவிட்டது, பட்டுச் சரக்கு இருப்பு பாழாகி விட்டது, நஷ்டத்துக்கு விற்றது, காண்ட்ராக்டர் தரவேண்டிய தொகையைத் திருப்பி வாங்காதது போன்ற வகைகளில் தொழிற்கூடத் துறையில்,

1,45,894; இலவசச் சம்பளம் அளித்ததில் தவறுதலாக அதிகத் தொகை தந்துவிட்ட வகையில் அரிஜன நலத்துறையில் 60,597; தவறுதலாகத் தேவையற்ற ஒரு குறிப்புப் புத்தகத்தை அச்சிட்ட வகையில் 33,733; கொடுத்த முன்பணம் திரும்ப வராதது போன்ற வகையில், 1,15,807; குழாய்கள், கருவிகள், அரிசி, நெல் போன்ற தானியங்கள் இருப்பிலே குறைவு ஏற்பட்ட வகையில், 24,82,191 மற்றும் பல்வேறு, வகையான நஷ்டங்கள் 54,92,373; ஆக மொத்தம், 99,14,228 ரூபாய் விணாக்கப்பட்டிருக்கிறது என்று 1955-56-ம் ஆண்டு கணக்கு ஆய்வாளர்கள் அறிவிக்கின்றனர். அமைச்சர்களோ, அடித்துப் பேசுகின்றனர், எம்முடைய ஆட்சியே அப்பழுக்கற்றது என்று.

□

1956-57-ல், இந்த ஓட்டைகள் அடைபட்டுப்

போய் விடவில்லை; விரயம் தொடருகிறது!!

உணவுத்துறையினர் விற்பனைவரி வசூலிக்காததால் ஏற்பட்ட நஷ்டம் 5 இலட்சம். குழாய்கள் வாங்கிய வகையில் ஏற்பட்ட அதிகச் செலவு, 5,57,000.

ஒரு நீர்ப்பாசன திட்டத்துகாகக் குன்றின் பக்கமாக மண்ணால் ஒரு அணைகட்டத் திட்டமிட்டனர்.

1,12,929 ரூபாய் இதற்காகச் செலவிடப்பட்டது.

பிறகு நிபுணர்கள், அந்தக் குன்று, பாறைகள் கொண்டது; எனவே அதைப் பலப்படுத்த மண் அணை தேவையே இல்லை என்று தெரிவித்தனர். அணைகட்டுவது கைவிடப்பட்டது. ஆன செலவு நஷ்டம், 1,12,929 ரூபாய்!!

குப்பைக் காகிதங்களை மொத்தம்

91 ரூபாய்க்கு விற்றனர் அலுவலகத்தார். ஆய்வாளர்கள் கணக்குப் பார்த்தனர். இதேபோன்ற குப்பைக் காகிதத்தை முன்பு விற்றபோது, கிடைத்த தொகை அதிகம் என்று தெரிகிறது. அந்த வகையில் நஷ்டம். 15,500 அதாவது, 15 ஆயிரம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள காகிதத்தை 100-ரூபாய்க்கு விற்றனர். ஏன்? காரணம் கேட்டுப் பாரேன், "கனம்'களைப் புகழ்ந்து உலாவும் பேர்வழிகளை.

புத்தகமொன்று 15-ரூபாய் வீதம் 2,284-புத்தகங்களை 1952-ல் துரைத்தனத்தார் விலை கொடுத்து வாங்கினார்கள்.

மூன்று ஆண்டுகளாகப் புத்தகம் விலைபோகவில்லை. 2,102-புத்தகங்கள் விற்பனை யாகாமலிருந்தன.

விலையைக் குறைத்து விற்கலாமென்று

எண்ணி 3 ரூபாய் என்றனர். 2 ரூபாய்க்கும் தயாராயினர்; அந்த விலை கொடுத்து வாங்கவும் அதிகம்பேர் முன் வரவில்லை.

எனவே; 1,775 புத்தகங்களை, குப்பைக் காகிதமென்று 778 ரூபாய்க்கு விற்றனர்.

இந்த வகையிலே ஏற்பட்ட மொத்த நஷ்டம் 29,616 ரூபாய். ஏன் ஏற்பட வேண்டும் இந்த நஷ்டம்?

வரி வசூலிக்கும் அதிகாரிகள் கையாடல் தொகை 50,672 என்று அறிக்கை அறிவிக்கிறது.

பதினெட்டு டன் சந்தனக் கட்டையை அனுப்பி வைத்தனர், துரைத்தனத்தார்.

பிறகு பார்த்தால் பத்து டன்தான் இருந்தது.

எட்டு டன், வழியில் காணாமற் போய்விட்டது.

நஷ்டம் 31,054 என்று அறிக்கை தெரிவிக்கிறது.

நீதித் துறையிலே கையாடல், அதிகத் தொகை கொடுத்ததால் கெட்டது போன்ற வகையில் 3,08,122 ரூபாய்கள். விவசாயத் துறையிலே, என்ஜின்கள் விற்றதிலே நஷ்டம் போன்றவைகளில் 1,70,246. காங்கிரஸ் பொருட்காட்சியிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகையைத் தள்ளுபடி செய்தது 32,936; மற்றும் திட்டங்களிலே பணியாற்றியவர்களுக்கு அதிகப்படியாகப் பணம் கொடுத்த வகையிலும் நீர்ப்பாசனத்துறை திட்டங்களில் ஏற்பட்ட நஷ்டங்களும் சேர்ந்து 1,62,558 ரூபாயும்; மின்சாரத் துறையில் செலுத்தவேண்டிய தொகையை வாங்க இயலாது போய்விட்ட வகையில் 1,33,848 ரூபாயும்; அரிசி, கோதுமை, உரம், ஆகியவற்றின் இருப்பிலே குறைவு

ஏற்பட்ட வகையில் 19,95,876 ரூபாயும்; விவசாயத் துறையில், கடனுக்கான வட்டி பெறமுடியாமல் தள்ளுபடி செய்யப்பட்ட வகையில் 80,798 ரூபாயும்; தனித்தனியாகக் குறிப்பிடப்படாமல் விடப்பட் டிருக்கிற, பல்வேறு இனங்களிலே ஏற்பட்ட நஷ்டம், 16,78,784 ரூபாயும்; ஆகமொத்தத்திலே 51,64,905 ரூபாய் வீணாக்கப்பட் டிருக்கிறது என்பதைக், கணக்கு ஆய்வாளர் காட்டுகிறார். காமராஜரோ எங்கள் ஆட்சியைப்போல ஒழுங்கான ஆட்சி வேறு ஏது என்று மார்தட்டுகிறார். கணக்கு ஆய்வாளர் எடுத்துக் காட்டியுள்ள அவலட்சணத்துக்கு என்ன பதில் அளிக்கிறார் அமைச்சர்! சில சில குறைகள் இருக்கத்தான் செய்யும் என்று சமாதானம் கூறுவதானால், ஊழலை ஒழித்துக்கட்ட இயலாத துரைத்தனத் தலைவர்களுக்கு, நாவடக்கமாவது இருக்க வேண்டாமா என்று

கேட்கவேண்டாமா, தம்பி!

□

நாவடக்கமின்றி, ஏதோ நாடாளும் தகுதி, தங்களுக்கு மட்டுமே, நாலாறு தலைமுறையாக, நாதன் அருளால் தரப்பட்டிருப்பதுபோலப் பேசும் அமைச்சர்கள், ஊழல், நிர்வாகத்தை விட்டு ஒழிய முயற்சி எடுத்துக்கொண்டு, வெற்றி பெற்றிருக்கிறார்களா? இல்லை என்பதை 1957-58-ம் ஆண்டுக் கணக்கு ஆய்வாளர் காட்டுகிறார்.

மருத்துவ மனைகளுக்கு இறைச்சி தருவதற்கான காண்ட்ராக்ட்டைச் சரியாகக் கவனித்துச் செய்யத் தவறியதால் 24,634 ரூபாய் அதிகம் செலவழிக்க வேண்டி நேரிட்டதாம். பெரிய சிக்கலான பிரச்சினை அல்ல; இந்தச் சாதாரணப் பிரச்சினையில்கூட

இந்த அளவு மதமதப்பு ஏற்படுவானேன் - பொருள் பாழ்படுவானேன்?

கைக்குத்தலரிசி வாங்குவதற்காக, காண்ட்ராக்ட் ஏற்பாடு செய்ததிலும், இதேபோலக் குறைபாடு ஏற்பட்டு, 1,05,412 ரூபாய் அதிகச் செலவாகி இருக்கிறது.

கண்ணுங் கருத்துமாகப் பொறுப்புணர்ச்சியோடு, புத்திக் கூர்மையுடன் காரியமாற்றியிருந்தால், இந்த வீண் செலவு ஏற்படுமா?

சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் - குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டிக்கிற இடங்களில்! - கையாடல் நடந்திருக்கிறது 10,044 ரூபாய்க்கு!!

பஸ் டிக்கட்டுகள் தேவையைக் கவனிக்காது "போர் போராக'' அச்சடித்துவிட்டு, அவை நாசமாகிப் போனதால் ஏற்பட்ட நஷ்டம்

37,179 ரூபாய்.

கூட்டுறவு வீடு கட்டும் சங்கமொன்று செலுத்த வேண்டிய "அசலும் வட்டியும்' திருப்பி வாங்க வக்கற்று 1 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய், தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

நெடுஞ்சாலைத் துறையினர், இராணுவத் தளவாடத் துறையினரிடமிருந்து வாங்கிய சாமான்கள், பழுதுபட்டுப் போய்விட்டதால் மட்டும், 71,454 - ரூபாய் நஷ்டம்.

சர்க்கார் நடத்தும் தொழிற் கூடங்களிலே கிடைக்கக்கூடிய சாமான்களை, அங்கு வாங்காமல், தனிப்பட்டவர்களின் தொழிலகங்களிலிருந்து வாங்கிய வகையில் 97,000 ரூபாய் அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது.

விற்பனை வரி தள்ளுபடி, வழக்குக்கான செலவுத் தொகை கட்டிக் கொடுத்தது போன்ற

வகையில், 5,94,410 ரூபாய்.

மாஜிட்ரேட் கோர்ட்டுகள் விதித்த அபராதத் தொகையை வசூலிக்க முடியாமற்போன வகையில் 2,93,683 ரூபாய்.

தனிப்பட்டவர் நடத்தும் ஒரு பள்ளிக்கூடத்துக்கு, அதிக அளவு மானியத் தொகையைத் தவறுதலாகக் கொடுத்தவகையிலும், சர்க்கார் பணம் கையாடல் நடத்தப்பட்ட வகையிலும் ஏற்பட்ட விரயம் 60,789.

தவறாக அதிகப் பணம் கொடுத்துவிட்டது, வரவேண்டிய பாக்கியை வசூலிக்காதது ஆகிய வகையில் 4,49,237 ரூபாய் விரயமாகி இருக்கிறது. வீண் செலவு செய்தது, காண்ட்ராக்டருக்கு அதிகப் பணம் காரணமின்றிக் கொடுத்தது ஆகிய வகையில் 72,440 ரூபாய் பாழாயிற்று.

நெல், அரிசி, உரம் ஆகியவற்றின் இருப்பில் குறைவு ஏற்பட்ட வகையில் 3,27,051 ரூபாய் பாழ்!

தனித்தனியாக விளக்கப்படாத, பல்வேறு வகையான நஷ்டங்கள் 11,81,966 ரூபாய் அளவுக்கு; ஆக மொத்தம் 32,04,065 ரூபாய் வீணாக்கப்பட்டிருக்கிறது.

□

தம்பி! இவ்வளவு குறைபாடுகளை மூடி மறைத்துவிட இவர்களுக்கு இருக்கிற ஒரே ஒரு வழி, இவைகளை எடுத்துக் காட்டுபவர்மீது எரிந்து விழுவது, இகழ்ந்து பேசுவது என்பது தான்.

”கல்வியறிவு அதிகம் பரவாதிருக்கும் நாடாக இன்று இருப்பதால், யார், இந்தக் கணக்குகளை எல்லாம் கவனித்துப் பார்க்கப்போகிறார்கள்,’’ என்ற துணிவு

இருக்கிறது, ஆட்சி நடத்துபவர்களுக்கு.

பொதுமக்களில் பெரும்பாலோர், கணக்காய்வாளர்களின் அறிக்கைகளைப் படித்துப் பார்க்கவில்லை; உண்மை. ஆனால் அவர்களுக்குப் பொது அறிவும் புத்திக் கூர்மையுமா இல்லாமற் போய்விடும்! விவரங்கள் தெரியாதே தவிர, நிர்வாகத்திலே ஒழுங்கு இல்லை, பணம் விரயம் ஆகிறது, காரணமற்ற செலவு செய்யப்படுகிறது என்பதை, அவர்கள் உணர்ந்துதான் இருக்கிறார்கள். வெளியே எடுத்துப் பேசினால், ஆளுங் கட்சியின் பகையைத் தாங்கவேண்டி வருமே என்று உள்ளபடி பயப்படுகிறார்கள்.

தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த ஒழுங்கீனங்கள், ஆட்சியை நடத்தும் கட்சியின் திறமைக்குச் சான்றாகுமா? வெட்கமிருக்க வேண்டாமா, தங்கள்

ஆட்சியிலே இத்தனை ஊழல்கள் நேரிட்டு விடுகின்றனவே என்று.

எதிர்க்கட்சியினர் இதுபற்றிப் பேசினால், கேட்கும் பொறுமை, பதிலளிக்கும் பொறுப்பு இருக்கிறதா அமைச்சர்களுக்கு. நாங்கள் நாடு மீட்ட பரம்பரை. தெரியுமா! - என்று பழைய பல்லவி பாடி, ஆவேசமாடுகிறார்கள்.

□

இவர்கள் ஆட்சியின் அவலட்சணத்தை, இவர்களின் கட்சிக்காரர்களேகூட, எடுத்துப் பேசாமல் இருக்கமுடிவ தில்லையே! தெரியுமா அந்த வேடிக்கை. ஒவ்வொரு முறை சட்டசபை கூடும்போது, காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள், ஆட்சியிலே உள்ள குறைபாடுகள் பற்றி மனம் வெதும்பிப் பேசவேண்டி நேரிட்டு விடுகிறது. காங்கிரஸ் அமைச்சர்கள், முகத்தில் அசடுவழிய உட்கார்ந்துகொண்டுதான்

இருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.க்களிலே, சில சாமர்த்திய சாலிகள் இருக்கிறார்கள். அவர்கள், அமைச்சர்களின் காதுபட, உள்ள ஊழல்களை, குறைபாடுகளை விளக்கமாகப் பேசுகிறார்கள்; கோபமாகக்கூடக் கண்டிக்கிறார்கள்; ஆனால் இடையிடையே நமது கழகத்தைக் குறிப்பாகவும், எதிர்க்கட்சி களைப் பொதுவாகவும் இகழ்ந்தும் இடித்தும் பேசி, ஆளுங் கட்சியிலுள்ள தலைவர்களின் நாவிலே தேன் தடவிவிடு கிறார்கள். அந்தச் சுவையே போதுமென்று அவர்களும் இருந்துவிடுகிறார்கள்.

எங்கள் கட்சியிலே உள்ள ஜனநாயக உரிமை அவ்வளவு சிலாக்கியமானது - குற்றங் குறைகளை எடுத்துக்காட்ட எங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு உரிமை அளித்திருக்கிறோம் என்று அமைச்சர்கள்,

இதையும் பெருமைக்குரியதாகப் பேசிக்கொள்கிறார்கள்.

”என்ன வலிவு தெரியுமா என் புருஷனுக்கு! கோபத்திலே ஒரு தட்டுத் தட்டினார், கன்னம் எப்படி ஆகிவிட்டது பார்த்தாயா?’’ என்று குழாயடியில் பேசும் குப்பி போலாகிறார்கள், கனம்கள்.

சொந்தக் கட்சிக்கே நமது ஆட்சி இவ்வளவு அவலட்சண முள்ளதாகத் தெரிகிறதே, மற்றவர்கள், உள்ள குறையை எடுத்துக் காட்டாமலா இருப்பார்கள்? என்ற எண்ணம் எழக் காணோம்.

இத்தனை குறைகளையும் எடுத்துக்காட்டிச் சொந்தக் கட்சிக்காரர்களே, நமது மானத்தை வாங்குகிறார்களே என்று, ”ரோஷம்’ பிறந்திடக் காணோம்.

இவைகளை எல்லாம் கட்சிக்கூட்டத்திலே

பேசித் தொலைக்கக் கூடாதா, சட்டசபைக்கேதான் கொண்டு வரவேண்டுமா என்று கேட்கும் துணிவுகூட, ஏற்படக் காணோம்.

பேசிவிட்டுப் போகட்டும், நஷ்டம் என்ன நமக்கு? கடைசியில் "ஓட்'' நம் பக்கம்தானே போடப்போகிறார்கள் என்று எண்ணி, அதிலே மகிழ்ந்து நடக்கிறார்கள்.

ஏன், காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள், குற்றங்குறைகளை எடுத்துக்காட்டிப் பேசுகிறார்கள்? எதிர்க்கட்சியினர், பயன் படுத்திக்கொள்வார்கள் என்பது தெரியாதா? தெரியும். ஆனால், அவர்களுக்கு "ஓட்' அளித்த மக்கள், ஊர் சீர்படாததைக் கண்டு, உள்ளம் நொந்து போயிருக்கிறார்கள்; இவர்களைக் காணும் போதே அவர்களுக்குக் கடுங்கோபம் வருகிறது; கேவலமாகப் பேசுகிறார்கள்.

எங்கள் கட்சி, ஆளுங்கட்சி! எல்லாவற்றையும் சாதிக்கும் கட்சி! என்றெல்லாம் பேசி ஓட்டு வாங்கிக்கொண்டு போனீர்களே, ஆயிரத்தெட்டுக் குறைகள் எம்மைக் கொட்டு கின்றனவே, ஏன் என்று கேட்கக் கூடாதா? ஆட்சியைத் திருத்தக்கூடாதா? தேவைகளை எடுத்துக் காட்டக் கூடாதா? இதற்காகத்தானே, சட்டசபைக்கு அனுப்பிவைத்தோம்! - என்று கேட்கிறார்கள்.

அந்தக் கேள்விக் கணைகள் துளைக்கின்றன.

எனவே, சட்டசபையிலே பேசுகிறார்கள் - தொகுதி வாக்காளர்களின் கோபத்தைத் தணியச் செய்திட.

தம்பி! இது நானாக இட்டுக் கட்டியது என்று எண்ணிக்கொண்டுவிடாதே! ஒரு

காங்கிரஸ் எம். எல். ஏ. யின் பேச்சிலேயே, இந்தக் கருத்துத் தொக்கி நிற்கிறது; அதைப் பார்த்ததால் கூறினேன்.

"நில சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று கவர்னரது உரையின்மீது நிகழ்த்திய பிரசங்கங் களில் ஒரு சிலர் சொன்னார்கள். அதைப் பார்த்துவிட்டு எனது தொகுதியிலிருந்து ஒரு பையன் சொன்னான், இந்தப் பொன்னம்மாளுக்கு ஓட்டுப் போட்டுவிட்டு, அவள் அங்குபோய்த் தண்டத்திற்கு உட்கார்ந்துவிட்டு வருகிறாள். மற்றக் கட்சிக்காரர்கள் இதை உடனடியாகக் கொண்டுவரவேண்டு மென்று பேசியிருக்கிறார்களே, நீ, ஏன் தண்டத்திற்குப் போய் உட்கார்ந்திருக்கிறாய் என்று கேட்டதும் உண்டு.''

தம்பி! அம்மையாரைப்பற்றி மரியாதைக்

குறைவாக நான் எழுதிவிட்டேனோ என்று எண்ணிக்கொள்ளாதே. இது, அவர்களே பேசியது; சட்டசபைக் குறிப்பேட்டிலே உள்ளது நிலக்கோட்டைத் தொகுதி உறுப்பினர் திருமதி. ஏ. பொன்னம்மாள் அவர்கள் 1-7-57-ல், சட்டசபையில் பேசியது இது.

ஏன் பேசுகிறார்கள் என்பது விளங்குகிறதல்லவா?

ஒரு பையன் சொன்னானாம்! கவனித்தாயா தம்பி! பையனுக்கே, தெரிந்துவிட்டது; கேட்கத் தோன்றுகிறது! கேட்டே விட்டிருக்கிறான்.

ஒரு பையனே இப்படி எண்ணுகிறான் என்றால், பெரியவர்கள், என்னென்ன எண்ணுவார்கள்! பரிதாபமாக இல்லையா, அம்மையாரின் நிலை கண்டால்!

ஆயினும், ஆட்சிப்

பொறுப்பிலுள்ளவர்களோ, தம்மை எவரும் ஏதும் செய்திட முடியாது என்று இறுமாந்து கிடக்கிறார்கள்.

பட்டிதொட்டிகளெல்லாம் செல்வோம், மக்களைக் கண்டு பேசுவோம், அச்சம் தயை தாட்சணியம் எனும் ஏதேனும் ஒன்றுக்கு மக்கள் கட்டுப்பட்டுப் போவார்கள்; அதைச் சாதகமாக்கிக் கொண்டு, மீண்டும் ஆட்சியில் அமர்ந்துகொள்ள வழி காண்போம் என்ற திட்டமிட்டுத்தான், திருஉலா வந்தவண்ணமிருக்கிறார், காமராஜர்.

வெளிப்படையாகத் தெரிவதும், அறிவிக்கப்பட்டிருப்பதும், மக்களாட்சி முறை அல்லவா? மக்களாகத்தானே, தக்கதோர் ஆட்சியை அமைத்துக் கொள்கிறார்கள், ஆட்சியிலே ஊழல், ஒழுங்கீனம், திறமைக் குறைவு, இலஞ்சம் என்பவைகள் இருப்பதாக எதிர்க்கட்சிகள் எடுத்துப் பேசுகின்றனவே,

மக்கள் அந்தப் பேச்சை மதித்தால், நம்பினால், மீண்டும் மீண்டும், தேர்தலில் எமக்கு "ஓட்' அளித்து வெற்றி தேடிக் கொடுப் பார்களா! எதிர்க்கட்சிகள் இல்லாததையும், பொல்லாததையும் கூறுகின்றன என்பதை அறிந்துதான், மக்கள் திரும்பத் திரும்பஎங்களையே ஆதரிக்கின்றனர் என்று காமராஜர் கட்சி கூறுகிறது, களிப்புடன்.

தில்லுமுல்லுகள் நடத்தியும், ஜாதி குலம் ஆகியவற்றினைப் பயன்படுத்தியும், ஓட்டுப்பெட்டிகளை நிரப்பிக்கொள்ள முடிகிறது என்பதை, மக்கள் கூடக் கூறுகிறார்கள் - தெரிந்து கொண்டுமிருக்கிறார்கள். எனினும், மீண்டும் மீண்டும், ஒரு கட்சி, எப்படியோ பதவிக்கு வந்தபடி இருக்கிறது என்றால், அந்தக் கட்சியிடமும், ஆட்சியிடமும், அதே

மக்களுக்கு, ஒரு வகையான பீதி ஏற்பட்டுப் போய்விடுகிறது.

இந்தப் ”பீதி’ மக்களாட்சி முறையினையே மாய்த்திட வல்லது.

ஆளும் கட்சியிடம் உள்ள இரும்புப் பெட்டியின் பலம் தெரிந்திருந்தும், தேர்தலில் பல்வேறு தில்லுமுல்லுகள் செய்திடும் வழி பெற்றிருக்கிறது என்பதை அறிந்திருந்தும், வெற்றி தோல்வியைப் பற்றிய கவலையற்று, எதிர்க்கட்சிகள் தேர்தலில் ஈடுபட்டு, ஆளும் கட்சியை எதிர்த்து நிற்பது, முன்னே குறிப்பிட்ட, ”பீதி’யைப் போக்கத்தான்.

ஆளுங்கட்சி தன்னை எதிர்த்து வீழ்த்துவார் இல்லை என்று இறுமாந்து, எவரையும் அழிக்கலாம், கேட்பார் இல்லை; எந்த அக்ரமமும் செய்யலாம், தடுப்பார் இல்லை; எவ்விதக்

கிளர்ச்சியையும் அடக்கலாம் ஒடுக்கலாம், அடக்குமுறை கொண்டு, என்று துணிந்து, துடுக்குத்தனத்தை அவிழ்த்துவிடும் போது, கொடுமைகளைக் கண்டு அஞ்சாது, கிளர்ச்சிக் களத்தில் நின்று, சித்திரவதைக்கும் சித்தமாக இருக்கிறோம் என்று கூறிடத் தக்க வீரம், பட்டுப்போய்விடவில்லை என்று எடுத்துக்காட்டி, மண்டைகள் உடைபடட்டும், கைகால் அறுபடட்டும், கண் போகட்டும், உயிரே போகட்டும், கலங்கப் போவதில்லை என்ற துணிவுடன், நிமிர்ந்து நின்றிடும் ஆற்றல்கொண்டோர் நடாத்தும் கிளர்ச்சியாலும், ஆணவ அரசுகளை வீழ்த்த முடியும்; மக்கள் மனதிலே மூண்டுகிடக்கும் பீதியைப் போக்க முடியும்.

நீதிக்காக, மக்களுக்காக, இதோ இவர்கள் இன்னுயிர் ஈந்தனர்!

ஆகாதய்யா அக்ரமம் என்றான் இந்த

இளைஞன், அடித்து நொறுக்கினர், அவன் மண்டையை!

ஏன் இந்த இறுமாப்பு? என்று கேட்டான் இந்தத் தோழன், இரும்புக் காலின்கீழ் போட்டு மிதித்தனர் - அவன் கூழாகும் வரையில்!

அதோ, மலரிழந்து நிற்கிறாளே ஓர் மாதரசி, அவள் மணாளன், கொடுமையாளரின் குதிரைப் படையால் தாக்கப்பட்டு மடிந்தான்!

வெஞ்சிறையில் தள்ளப்பட்டுக் கிடக்கின்றனர், ஆயிர மாயிரம் வீரர்கள் - என்ற "செய்திகள்' உலகுக்குக் கிடைத் திடத்தக்க, அடக்குமுறைத் தீயிலே குளித்தெழும் வீரர்படை திரண்டால், தேர்தலில் வெற்றி எமக்கே என்று கூறி, உலகை ஏய்த்திடும் அரசுகூட, ஆட்டம் கொடுத்துவிடும்.

இதுவா? அதுவா? என்பதல்ல பிரச்சினை.

விடுதலை உணர்ச்சி ஒரு வடிவினதுமல்ல. விடுதலை பெறுவதற்கு உள்ள வழி ஒன்றே ஒன்றுதான் என்றும் கூறுவதற்கில்லை.

மக்களாட்சி முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும், இந்த நாளில், உறுதி படைத்த, உணர்ச்சிமிக்க விடுதலை வீரர்கள், அவ்வப்போது, பதம் பார்த்துப் பார்த்து, முறைகளைப் புதிது புதிதாகக்கூடச் சமைத்துக் கொள்கின்றனர்.

விடுதலை பெறுவதற்கு இன்றியமையாதது, அதற்கான உணர்ச்சிக்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக்கொள்வதும், உணர்ச்சி பெற்றவர்களின் தொகை வளரும் நிலையை உண்டாக்குவதுமாகும்.

எமது கொள்கைக்கு விடுதலை வேட்கைக்குச் சான்று இதோ, நாங்கள் ஆட்சிமன்றங்களிலே பெற்றுள்ள இடங்கள்

என்று காட்டும்போது, உலகம் மதிக்கத்தான் செய்கிறது.

ஆனால், ஆள்பவர்கள் தடி தூக்குகிறார்கள் என்று கண்டதும், தலைதெறிக்க ஓடினால், உலகம், காரித் துப்பத்தான் செய்யும்.

மக்களை அணுகி ஓட்டு வாங்கவும் தெரிய வேண்டும் மார்புக்கு நேரே துப்பாக்கிக் குண்டு பாய வருகிறது என்றால் அதையும் தாங்கிக்கொள்ளவும் துணிவு இருக்க வேண்டும்.

தம்பி! நமது மரபு இந்த வீரத்தை அறியாததல்ல.

மையல்மிக்க மடந்தையின் தொய்யில் தன் மார்பகத்தே படிந்திடக் கண்டு, தமிழன் மகிழ்வான்; மாற்றான் வீசிய வேலால், மார்பிலிருந்து ஒழுகிய இரத்தத்தைக் கண்டும்

களிப்புறுவான்!

அவன் வழிவந்தவனே! ஆற்றலுக்குப் பஞ்சமா, உனக்கு! ஆணைக்காக அன்றோ காத்திருக்கிறாய்!

உன்னை ஆண்டிடுவோரின் ஆணவத்தை, நீ அறிந்தது போல் மற்றவர்களும் அறிந்திட, அரசியல் விளக்கம் அளித்து வருகிறாய்.

இந்த அரசு, வடவரசுக்குக் கட்டியங்கூறிக் காலந்தள்ளி வருகிறது என்ற உண்மையை, நீ உணர்ந்து விட்டாய். உன் உள்ளம் பொங்குமாங்கடலாயிற்று, இதனை உணராதாருக்கு உணர்ச்சி ஊட்ட, ஊரெங்கும் சென்று உரைத்து வருகிறாய்.

வடவரசு, நமது மரபு, இனம், அழிந்துபட்டாலன்றித் தனக்கு வாழ்வில்லை என்றறிந்து, மமதையால் மதிகெட்டு, நமது மாத்தமிழை அழித்திடச் சூழ்ச்சி பல செய்கிறது

என்பதை அறிந்து, போரிடத் துணிவு பெற்றாய்; மற்றவர்க்கும் அந்தத் துணிவு ஏற்பட, மன்றமேறி முழக்கமிட்டு வருகிறாய்.

ஆட்சியை எதிர்க்கிறார்கள் என்றால், எத்தகைய ஆட்சியை, அந்த ஆட்சியின் அவலட்சணங்கள் எவையெவை என்பதை மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக, அலசிக் காட்டுகிறாய், அறிவு கொளுத்துகிறாய்.

அந்த உன் பணிக்குத் துணையாகத்தான், இன்றுள்ள துரைத்தனத்தின் "இலட்சணத்தை' எடுத்துரைத்தேன்.

அந்தத் துரைத்தனம், "ஓட்டு' பெறவும் எம்மால்தான் முடியும்"வேட்டு கிளப்பி விடுதலை கேட்போரை வீழ்த்திடவும் முடியும்' என்று கொக்கரிக்கிறது.

அதைக் கேட்டதும், தோள் துடிக்கிறது தெரிகிறது. ஆற்றல் மிக்கோனே! அஞ்சா

நெஞ்சினர், இந்தத் தமிழர்கள்; மாற்றான் தாள் வீழ்ந்தறியா மரபினர்! பகைதேடி அலைந்தோரல்ல, பகை கக்கியோரை வீழ்த்தாது விட்டவருமல்லர்; அவர்கள் பொன்னை இழப்பர், பொருளை இழப்பர்; வண்ணத் தமிழை மட்டும் இழந்திடச் சம்மதியார்! என்று நமது முன்னோர் பெயரெடுத்தனர்.

அது, ”அந்த நாள்’ என்கிறார், அமைச்சரானதால் எதையும் பேசிடும் துணிவுகொண்டோர்.

இது நம்மை அறைகூவி அழைப்பதாகும், வீரத்தைப் பழிப்பதாகும்; மரபினை இகழ்வதாகும், என்று ஆற்றல் மிக்கோனே! ஆர்த்தெழுந்து அறைகிறாய்!! ஒலியும் ஒளியும், கிளம்பிடக் காண்கிறேன்; உவகையுடன் உனை வாழ்த்துகிறேன். வீழ்த்துவோம், அரசின் ஆணவந்தனையே

என்று விறுகொண்டுஎழுந்த ஓர் விடுதலைப் படை, பரணி பாடிக் கிளம்பிடும் வேளை, பார்த்திடும் மக்கள் அறிந்திடத்தானே, ஆட்சியால் வந்துள்ள ஆயிரம் கேட்டினை, அலசிக் காட்டிடும் அரும்பணியாற்றி னோம். ஆற்றிய அரும்பணி அளித்திடும் பலன்தனை, அறிந்திட, கணக்கிட, ஆணவ அரசு அளித்திடும் வாய்ப்பினை இழந்திட, நாம் என்ன இளித்தவாயரோ!!

அன்புள்ள,

அண்ணாதுரை,

19-6-1960

8. ஆணை பிறந்தது...!

மொழியும் இனமும், அயர்லாந்தில் -

மொழிப் பற்றும் வெறியும் -

இந்தி வெறி -

நேரு கருத்து

தம்பி!

”தாயகத்தை விட்டுப் பிரியப் போகிறேன், நாளைய தினம் என்று வைத்துக்கொள்ளுவோம். அந்த நேரத்தில், நாட்டு மக்களுக்கு என்ன தந்துவிட்டுச் செல்கிறீர் - நாட்டவருக்குத் தாங்கள் அளித்திட விரும்பும் கடைசிச் செய்தி யாது? என்று என்னை வினவிடின், அயரிஷ் இனத்தவராகத் தொடர்ந்து வாழ விரும்பினால், அயரிஷ் மொழியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்

- என்றுதான் கூறிச் செல்வேன்.''

பிரிட்டிஷ் பிடியிலிருந்து தாயகத்தை - அயர்லாந்து நாட்டை - மீட்டிட, அரும்பாடுபட்ட வீரன், அகில உலகு பாராட்டத்தக்க ஆற்றல் மிக்கோன், திவேலரா இதுபோலக் கூறினான்.

வல்லமை மிக்கவர்கள் இந்தப் பிரிட்டிஷார்! அவர்களின் படை பலம் பயமூட்டுவதாக இருக்கிறது; எதிர்ப்போரைக் கொன்று குவிக்கின்றனர்; நாடே நாசப் படுகுழியில் தள்ளப் படுவதாயினும் சரி, எங்கள் ஆதிக்கத்தை மட்டும் விட மாட்டோம் என்று கொக்கரிக்கின்றனர்; கொக்கரிப்பது மட்டுமல்ல, கூசாது கொடுமை பல செய்கின்றனர்; இவர்களை எப்படி விரட்டுவது, வீழ்த்துவது? தாயகத்தை எங்ஙனம் விடுவிப்பது என்று மக்கள் மருண்டுகிடந்தபோது, "சாகத்துணிந்திடின், நாட்டினரே! நாடு வாழும்! வாழ வேண்டுமே

என்று அலைந்திடின், நாடு சாகும்!'' என்றுரைத்து, வீர உணர்ச்சியை ஊட்டி, மக்களைத் திரட்டி, விடுதலைப்போர் நடாத்தி, வெற்றி பெற்ற மாவீரன், திவேலரா. அந்த விடுதலை வீரன், கூறுகிறான், மொழி காப்பாற்றப்பட வேண்டும் இனம் அழிந்துபடாமலிருக்க வேண்டுமானால் என்று.

ஆமாம்! உண்மைதானே அது. ஒவ்வோர் இனத்துக்கென ஒவ்வோர் மொழி இயற்கையாக அமைந்திருக்கிறது. அந்த மொழி, "வாழ்க்கை வழி'யை அந்த இன மக்களுக்கு, அமைத்துத் தருகிறது, ஓராண்டு ஈராண்டல்ல; பல தலைமுறைகளாகச் சிறுகச் சிறுகச் சமைக்கப்பட்டுக், கூட்டாகி, ஒரு பேருரு ஏற்பட்டுவிடுகிறது. அந்த மக்கள், உலவும் நாடு, வேட்டையாடி மகிழ்ந்திடும் காடு, நீந்தி விளையாடும் ஆறுகள், உழுது பயன்காணும் வயல்கள், உழைப்புடன் மதி

நுட்பத்தை இழைத்திடும் தொழிலிடங்கள், குலவி இன்புறும் மனைகள் - இங்கெல்லாம், எண்ணங்களை, எடுத்துக் கூறிக் கூறியும், பிறர் கூறிடக் கேட்டும், கலந்துரையாடியும், கருத்துக்களை உருவாக்கி, பிறகு அதனைக் காப்பாற்றிடவும், வளர்த்திடவும், வழிவகை கண்டறிகின்றனர். இந்தச் சீரிய செல்வத்தை, மக்கள் பெற உறுதுணையாக நிற்பது, அவர்க்கென அமைந்த மொழி. எனவேதான், மொழி என்பது வாழ்க்கை வழியினை அமைத்தளிக்கிறது என்று அறிவாளர் கூறுகின்றனர்.

தட்பவெட்ப நிலைக்கேற்ப, மொழி உருவாக்கப்படுகிறது.

பலப்பல நூற்றாண்டுகளாக, ஒரு குறிப்பிட்ட மக்கட் தொகை, அந்த மொழி மூலம், தங்கள் எண்ணங்களை எடுத்தியம்புவதாலும், கேட்டுப் பயன் பெறுவதாலும், கருத்துக்கள்

உருவாகின்றன. அந்தக் கருவூலம், அந்த இனம், தேடிப் பெற்றது, பிறகு உலகுக்கு அளிப்பதுமாகும்.

இதனை அறிந்ததால்தான், மொழி, இனம், பண்பாடு, என்பவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்கின்றனர்.

மொழி உணர்ச்சி ஒரு இன மக்களுக்கு உயிரூட்டம் தருகிறது.

அந்த இனத்துக்கென அமையும், தனி இயல்புகள், சிறப்புகள், அந்த மொழிவழி நின்று பெற்றது. எனவே, அந்த மொழியை இழந்துவிட்டால், அந்தத் தனி இயல்புகள், சிறப்புகள், மங்கி மடிந்துபோகும்; அல்லது வேறு பிறவற்றுடன் கலந்து, உருவம் கெட்டுப், பலன் பாழ்பட்டுப் போய்விடும். இதனை நன்குஆய்ந்தறிந்தவர்களே, எந்த ஒரு இனமும், தன் தாய் மொழியினை அழிந்துபட

விடக்கூடாது என்று கூறினர்,

அயர்லாந்து, பிரிட்டிஷ் பிடியில் இருந்தது. கேடு பல சூழ்ந்தன; வறுமை கொட்டிற்று; பஞ்சம் தலைவிரித்தாடிற்று; உழவு அழிந்தது; தொழில் நசிந்தது; வாணிபம் பாழ்பட்டது.

எனின், எமக்குச் சோறு வேண்டும்! வேலை வேண்டும்!! என்று அயர்லாந்து நாட்டு மக்கள், கேட்டனரோ எனின், இல்லை. எமக்கு எமது நாடு வேண்டும்! நாட்டு ஆட்சி எம்மிடம் இருக்க வேண்டும்! என்றுதான் கேட்டனர். ஏனெனில், வேறோர் நாட்டின் பிடியிலிருக்கும்போது, பசியும் பஞ்சமும் பல்வேறுவிதமான கொடுமைகளும் தாக்குவது மட்டுமல்ல, இன இயல்பு அழிக்கப்பட்டுப் போகிறது! அந்த இன இயல்பு அழிந்துவிட்டால், பிறகு என்றென்றும் நிமிர்ந்து நின்று, உரிமையைக் கேட்டிடும் துணிவே அற்றுப்போய்விடும். வயிற்றுக்குச் சோறு மட்டும் கிடைத்தால் போதும் என்ற

விதமான நிலை ஏற்பட்டுவிடும்.

தம்பி! கொள்ளும் புல்லும் நிரம்பத் தந்திட்டாலும், காளை கட்டு அவிழ்த்துக்கொண்டு, தன்னிச்சையாக ஓடத்தான் துடிக்கும்; பார்த்திருக்கிறாய் அல்லவா! வயிறு நிரம்பிவிட்டது, இனி நமக்கு என்ன கவலை என்று இருந்துவிடாது; எவனோ கட்டிப் போட்டு வைத்திருக்கிறான்; இந்தக் கயிறு அளவுக்குத்தான், நாம் உலவ முடிகிறது; ஏன், கட்டுண்டு கிடக்க வேண்டும்; நம்மைக் கட்டிப் போட்டுவிட்டு, இவனென்ன நமக்குப் புல்லும் கொள்ளும் தருவது; நமக்கென்ன, நமது தேவைக்குப் போதுமான தீனியைத் தேடிப் பெற்றுக்கொள்ள ஆற்றல் இல்லையா; எவ்வளவு பசுமை நிரம்பிய இடங்கள் உள்ளன; அங்கெல்லாம் ஓடித்திரிந்து, தீனி தின்று மகிழத் தெரியாதா? கட்டிப் போட்டுவிட்டானே! - என்று கூறுவது போலக் காளை துள்ளுகிறது,

நெம்புகிறது; வாலால் அடித்துக் காட்டுகிறது, காலால் தரையைக் கிளறுகிறது, கிட்டே சென்றால் முட்டித் தள்ளவே வருகிறது அல்லவா?

அந்தக் காளையே, கிழடு தட்டியதாகிவிட்டால், என்ன செய்யக் காண்கிறாய்? போட்டதைத் தின்றுவிட்டு, அசை போட்டுக்கொண்டு கிடக்கிறது; தட்டித் தட்டித்தான், எழுந்தே நிற்கச் செய்ய முடிகிறது. காளைப் பருவத்து முடுக்கு மடிந்துபோய் விடுகிறது. நமக்கு இனி இதுதான் கதி என்ற தீர்மானத்துக்கு வந்துவிடுகிறது.

ஆதிக்கத்தைப் புகுத்துவோர், விடுதலை உணர்ச்சி வீறுகொண்டு எழுந்திடும் வேளையில், கட்டிப்போட்டோ, வெட்டிச் சிதைத்தோ தடுத்து விட்டால், பிறகு கிழடுதட்டிய மாடு பெற்றிடும் இயல்புபோல், அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் ஆகிவிடுவர்!

போட்டதைத் தின்றுவிட்டு, சொல்வதைச் செய்துகொண்டு கிடப்பர்! - என்று எண்ணுகின்றனர்.

ஆனால், "மொழி' இருப்பதால்தான் எத்தனை எத்தனை காலம், ஆதிக்கக்காரன், தன்னிடம் உள்ள எல்லாவிதமான படைக்கலன்களையும் கொண்டு அடக்கி ஒடுக்கி வைத்தாலும், அடக்கி வைக்கப்பட்ட மக்கள், விடுதலை உணர்ச்சியை அடியோடு இழந்து விடுவதில்லை விடுதலைப் போர் தொடுத்திடும் துணிவு பிறவாமலிருக்கக் கூடும் - ஆனால் அந்த உணர்ச்சி அழிந்துபடுவதில்லை. மொழிதான் அதற்குக் காரணம்.

எண்ணங்களை வெளிப்படுத்திக்கொள்ள, மனதிற் பட்டதை எடுத்தியம்ப, நமது கதி இதுதானா என்றென்றும் என்று கேட்டிட, இவ்விதமா நமது முன்னோர்கள் இருந்தனர்

என்று பேச, இடுக்கண் வந்த காலை அவர்கள் யாது செய்து இன்னலைப் போக்கிக்கொண்டனர் என்பது குறித்துக் கலந்துரையாட மொழி பயன்படுகிறது.

அவ்வப்போது தோன்றும், எண்ணங்களைமட்டும் பெறுவது போதும் என்றால், எந்த மொழியைக் கற்றுக்கொண்டாலும், அம் மொழியில் பேசலாம்; போதும். ஆனால், விடுதலை உணர்ச்சிபெற, அவ்வப்போது தோன்றும் உணர்ச்சிமட்டும் போதாது: அடிமைப்படுவதற்கு முன்பு, உரிமை பெற்றவர்களாக இருந்தபோது, உலகம் மெச்ச வாழ்ந்தபோது, அந்த மக்களின் முன்னோர்கள், எங்ஙனம் இருந்தனர் என்பது தெரிய வேண்டும்; அது குறித்துப் பேசவேண்டும்; பாரதியார் கூறியபடி, அப்போதுதான் ”எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு

சக்தி பிறக்குது மூச்சினிலே!' என்ற நிலை கிடைக்கும். அந்த நிலையை அவரவர் தத்தமது தாய்மொழி மூலமாகவே பெற முடியும்; எனவே, தாய்மொழி காப்பாற்றப்பட வேண்டும்.

என்ன அண்ணா! இது குறித்து இத்துணை விளக்கம் தேவையா? எவர் அறியார் இதனை! மந்த மதியினனும் மறுத்திடமாட்டானே! மொழியன்றோ, ஒரு இனத்தின் விழி - அதனை இழந்திட, எந்த இழி மகனும் எண்ணங்கொள்ள மாட்டானே! - என்று கேட்பாய்.

கடைசிச் செய்தி தருவதானால், அயர்லாந்து வாழ அயரிஷ் மொழியைக் காத்து நில்லுங்கள் என்று திவேலரா கூறியதை நீ உவகை பொங்கிடும் நிலையில் ஏற்றுக்கொள்ளுவாய், என்பதை நான் நன்கு அறிவேன். தம்பி! அந்த ஆற்றல்மிக்கோன் கூறிய அறிவுரையை, மறுத்திடக்கூடப் போமோ என்று நீ,

கேட்பாய் என்பதையும் அறிவேன். ஆனால் மொழியைக் காப்பாற்று, அப்போதுதான், உன் நாடு உன்னுடையதாகவும், உன்னிடமும் இருக்கும் என்று திவேலரா கூறினாரே, அதுபோன்ற உணர்ச்சி மிகு அறிவுரையை எள்ளி நகையாட, எதிர்த்துப் பேசிட, ஒரு மகானுபாவர் இருக்கிறார், நமது மண்ணில். இங்கா? என்கிறாயா? ஆமாம் தம்பி! இங்குதான்! ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இணையற்ற இலக்கியம் சமைத்தனரே, இதே இடத்தில்தான், இதே தமிழகத்தில்தான். இப்போதா? என்கிறாயா? ஆமாம், தம்பி! வேதனை நிரம்பிய உண்மையை நான், உரைக்கிறேன், மொழி, இனம், நாடு, விடுதலை - எனும் உணர்ச்சிகள், உன் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும், இப்போதுதான், இருக்கிறார் அந்தப் புண்யவான்!! உன்னையும் என்னையும்,

நமக்கு உடன் இருந்து பணியாற்றும் பல இலட்சம் பண்பு நிறை வீரர் குழாத்தையும், இளித்தவாயர் என்றும், ஏதும் செய்ய இயலாதார் என்றும், பேசிக்கொண்டும் ஏசிக்கொண்டும் உலா வருகிறார், அந்த உத்தமர்!

திவேலரா சொன்னார், "மொழியை இழந்திடாதீர், பிறகு விடுதலைக்கான வழியே அழிந்துபடும்'' என்று.

இவர் கூறுகிறார், "இதென்ன பித்தம்! என் மொழி! நன் மொழி! என்ற பேச்சு! தாய்மொழி! தந்தை மொழி! என்ற வாதம்! இதுதான் படிப்பேன், இதைப் படிக்க மாட்டேன் என்ற பிடிவாதம்! இந்த மொழிவெறி ஆகாது'' என்கிறார்.

உலகம் மெச்சுகிறது, திவேலராவை!

உடனிருப்போர் மெச்சுகின்றனர், தாய்

மொழியையும் இழித்துப் பேசிடும், இந்த மா மேதையை!!

எந்தப் பித்தர் விடுதியில் கண்டாய் அப்படிப்பட்ட சத்தற்ற ஜென்மத்தை என்று கேட்கிறாய், தம்பி! கோபத்துடன்! ஆனால், நான், வருத்தத்துடன் அல்லவோ, பதிலளிக்க வேண்டி இருக்கிறது; இத்தகைய இழிமொழி பேசித் திரிபவர் மேலிடத்தில் அல்லவா இருக்கிறார்! காமராஜர்! தம்பி!முதலமைச்சர்! அவரல்லவா பேசுகிறார், நமக்கு மொழி வெறியாம்! தமிழ்! தமிழ்! என்று கூவித் திரிகிறோமாம்! எந்த மொழியாக இருந்தால் என்ன, என்கிறார்!!

மொழியைக் காத்திடின் உரிமை வாழ்வு நிலைத்திடும் என்று பேசிடும் திவேலரா, அயர்லாந்து நாட்டில்!

மொழி காத்திடப் படை திரண்டு நிற்கும்

தமிழ் நாட்டிலே, அரசோச்சுகிறார், மொழிவழி கூடாது என்று பேசிடும் காமராஜர்.

எத்தனை எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக் கொண்டோம்; கொற்றம் இழந்தோம், கோட்டை இழந்தோம்; வாணிபம் இழந்தோம், விருது பலவற்றை இழந்து நிற்கிறோம்; தொழில் வளம் இழந்தோம், தோழர்களை இழந்தோம்; கலம் இழந்தோம்; காவியம் இயற்றும் திறம் இழந்தோம்; இத்தனை இன்னல்களும் தாங்கிக் கொண்டோம்; ஆனால், தமிழ் மொழி யிடம் தமிழன் காட்டவேண்டிய பற்றினை, தாய்மொழிக்குப் பேராபத்து எனின், துடித்தெழுந்து போரிடும் வீரத்தினை, தாய்மொழியைத் தாழ்த்திப், பேய்மொழி ஒன்றினைப் புகுத்திடும் கொடுமையை எதிர்த்திடும் வீரத்தினை, ஒரு தமிழன் அரசாளும் தமிழன், தமிழ் நாட்டில், நாம் உயிருடன் உலவிக்கொண்டிருக்கும்

நாட்களில், மொழி வெறி என்று கேலி பேசி இகழ்வது, அதனை நாம் கேட்டுக்கொண்டு நிற்பது, எனும், இந்தக் கொடுமையையுமா தாங்கிக்கொள்ள வேண்டும்!

“ஏ! ஏ! தாங்கிக்கொள்ளாமல், என்ன, தாவிக் குதிப்பீர்களா?’’ - என்று பேசுகிறார், காமராஜர். காவியத் தமிழ் உலவிய தமிழகத்தில், இன்று இந்த”காடி‘த் தமிழ் வாடை கிளப்புகிறது. ”காடி’ என்றுரைத்த காரணம், தம்பி! காமராஜர் கூறிடும் அதி அற்புதமான வாதம் இருக்கிறதே, மொழி வெறி கூடாது என்பது, அது நாம் முன்பே பல முறை வேறு சிலர், பேசிப்பேசி, கேட்டுக்கேட்டுப் புளித்துப் போனது! பழைய சரக்கு! வெறும் காடி!!

எது பற்று, எது வெறி - என்பதைக் கண்டறிய, யார் இந்தக் காமராஜருக்கு, அதிகாரம் அளித்தனர்? ஓட் அளித்தனர்,

மேலிடம் அமர! மொழிபற்றிய ”முடிவுரை’ கூறவா!! கன்னித் தமிழ்பற்றி, இன்னும் நடத்தப்படவேண்டிய ஆராய்ச்சி ஏராளம்என்கின்றனர், கற்றறிந்தோர், வித்தகர், புலவர் பெருமக்கள். கானூர் படையாச்சியையும், வானூர் ரெட்டியாரையும், மேனூர் முதலியாரையும், பள்ளப்பட்டி மரக்காயரையும், பாப்பாரப்பட்டி கவுண்டரையும், வாடிப்பட்டியாரையும், வத்தலகுண்டாரையும், தேடித்தேடிப் பிடித்து வைத்துக்கொண்டு, தேர்தல் வேலையைக் கவனிக்கக் கற்றுக்கொண்ட இவர், தமிழ் மொழியின் தொன்மை மென்மை பற்றியும், அதற்கு இன்று உள்ள நிலைபற்றியும், அறிந்திட வாய்ப்பு ஏது? நாலைந்து புலவர்கள், நான் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருகிறார்கள் என்பாரேல், நாடாள்கிறார் என்பதால் நாடி வருபவர்களேயன்றி, ஏடாளும்

தகுதி பெற்றவர் என்பதால் அல்ல, என்றன்றி, வேறென்ன பதில் அளிப்பது.

பற்று - வெறி - இந்த இரு நிலைகளுக்கும் இலக்கணம் காணல் எளிதல்ல - அளவு காட்டலும் ஆகும் காரியமல்ல.

இவருக்கு, நாம் மொழிக்காக வரிந்துகட்டி நிற்பது, பிடிக்கவில்லை - எனவே, அதனை வெறி என்கிறார். அவ்வளவே தவிர, இவரென்ன, உணர்ச்சிகளை வகைப்படுத்தி, உரைத்துப் பார்க்கவோ, நிறுத்துப் பார்க்கவோ, தனியானதோர் முறை கண்டறிந்த வித்தகரோ? எவரும் கூறார். இவரே கூறிடக் கூசுவார். எனினும், முதலமைச்சர் என்ற நிலைபெற்றதால், எதையும் கூறிடும் வாய்ப்புக் கிடைக்கிறதல்லவா! அதனால் அடித்துப் பேசுகிறார். கடன்பெற ஒரு கனவான் வீட்டுக்குச் சென்றகாலை. பித்துப்பிடித்த அவன் மகன் தாவிவந்து காலையோ,

கன்னத்தையோ கடித்தால், ஏழை என்ன செய்ய முடிகிறது? முதலிலேயே வட்டி செலுத்துகிறோம் என்று எண்ணிக் கொண்டு விடுகிறான்.

நாடாள்பவர் எது பேசினாலும், தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. பூங்காவில் அமர்ந்திருக்கும்போது, புள்ளினம் எச்சமிட, அது சட்டையில் வீழ்ந்து கெடுக்கிறது - என்ன செய்ய முடிகிறது? எழுந்து செல்கிறோம் வேறிடம் தேடி. எச்சமிட்டு நம்மை வேறிடம் செல்லச் செய்ததால், அந்தப் புள்ளினம், நம்மை விரட்டிய வீராதி வீரன் என்ற விருது பெறவா, தகுதி அடைகிறது!

நாடாளத்தான் நான் வந்தேனேயன்று, நாவாள அல்ல; அது தன்னிச்சையாக, ஏதேதோ செய்யும் என்றுரைப்பது போல, அவர், ஏதேதோ பேசுகிறார்.

பள்ளிக்கூடங்கள் கட்டினேன் என்கிறார் - காலஞ்சென்ற ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் ஒரு முறைகூடச்சொன்னதில்லை, நான் ஒரு பல்கலைக் கழகம் அமைத்தேன் என்று - 80 கோடி ரூபாய் பெறுகிறது துரைத்தனம் - ஆனால், ஏதோ, எட்டுத் தலைமுறைக்கு முன்னாலே, இவர் குடும்பத்தார், ஈட்டிய பெரும்பொருளை எடுத்துச் செலவிடும் வள்ளல்போல, பள்ளிக்கூடங்கள் கட்டினேன் என்கிறார்! சரி! என்னமோ, ஒருவிதமான சபலம், பேசி அற்ப சந்தோஷத்தை அனுபவித்து விட்டுப் போகட்டும் என்று கேட்போர் எண்ணிக்கொள் கின்றனர். அந்த அளவோடு நில்லாமல், மொழி குறித்துமா, "கருத்துரை' வழங்க முன்வர வேண்டும்!!

தமிழகத்தில் இன்று காணப்படுவது, மொழி வெறி அல்ல! வெறியரிடமிருந்து

மொழியைக் காப்பாற்றும் பணியில், தமிழரில் தகுதி படைத்தோர் ஈடுபட்டுள்ளனர்.

”கடைசிச் செய்தி யாது தருகிறீர்?’ என்று கேட்டால், அயர்லாந்து மக்களே! ஒற்றுமையாக இருங்கள்! வல்லமையோடு இருங்கள்! உழைத்துச் செல்வத்தைத் தேடுங்கள்! தேடியதை மற்றையோருக்கும் தாருங்கள்! கல்விச் செல்வத்தை மறவாதீர்கள்! ஒழுக்கத்தை மறவாதீர்கள்! கர்த்தரை வழிபடுங்கள்! - என்ற எத்தனை எத்தனையோ கூறியிருக்கலாம், திவேலரா. ஆனால் அவர், அயரிஷ் மொழியைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்போதுதான், அயரிஷ் நாடு நிலைக்கும் என்று கூறினார். நல்லவேளை, அவர் நாட்டிலே ஒரு காமராஜர் கிளம்பவில்லை - மொழிவெறி கூடாது என்று பேச!! ஆனால், அயர்லாந்து நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் கொண்ட பிரிட்டிஷ்

எதேச்சாதிகாரி, திவேலரா பேச்சினைக் கேட்டு என்ன சொல்லுவான். செச்சே!! இந்தத் திவேலராவுக்கு என்ன புத்தி இப்படிக் கெட்டுவிட்டதே! மொழி வெறியைக் கிளறுகிறாரே!! - என்றுதானே கூறுவான்.

அங்ஙனமெனின், காமராஜர், தமிழரைத் தாசராக்கிடும் எதேச்சாதிகாரியோ, எனில் அல்ல! அல்ல! அவ்வளவு கடினமான வேலையில் அவர் ஈடுபட்டில்லை; தமிழரைத் தாசராக்கத் திட்டமிட்டு, இந்தியைப் புகுத்திடும் வடநாட்டு இந்தி எதேச்சாதிகாரிகளுக்கு, இவர் "எடுபிடி' வேலை பார்த்தால் போதும் என்றிருக்கிறார். இவர் பேசுகிறார், வெறி கூடாது என்று.

ஆனால், உண்மையில் என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஆதிக்க வெறிபிடித்தவர்கள், இந்தி

மொழியை அகில - இந்தியாவுக்கும் ஆட்சி மொழியாக்கிவிட்டதாக அறிவித்து விட்டார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபட்டோம் என்ற களிப்பும், விடுதலை பெற்றதும், செயல் முறைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும், அரசியல் சட்ட திட்டத்தை விரைவாகச் சமைத்திடும் திறம் இருப்பதை உலகுக்குக் காட்ட வேண்டும் என்ற ஆர்வமும், ததும்பிக் கொண்டிருந்த நேரத்திலே, மொழிபற்றி முடிவு எடுத்தனர். இந்தியே, ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டுமென்று தீர்மானித்தனர்.

அப்போதேகூட, குமுறலும், கருத்து வேற்றுமையும் எழுந்தன. ஆனால், விழாக்கோலம், விவாதத்தைக் குறைத்து விட்டது. ஆபத்தின் அளவும் வகையும் பற்றி அன்று அவ்வளவு தெளிவாக

அறிந்துகொள்ளப் பலரால் முடியவில்லை. வெள்ளைக்காரன் வெளியேறிவிட்டான்; இனி நாமே வைசிராய், நாமே கவர்னர், நமக்கே மந்திரி வேலைகள் என்ற இந்த எண்ணமே மேலோங்கி நின்றது. அந்த மகிழ்ச்சி, மற்ற எதுபற்றியும் சிந்திக்க இடமளிக்கவில்லை. இந்தி ஆதிக்கக்காரர்கள், தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொண்டனர்.

ஆனால், அப்போதும்கூட, தமிழகத்திலே, திராவிட இயக்கம் மட்டும் விழிப்புணர்ச்சியுடன் இருந்தது; வர இருக்கும் ஆபத்தை எடுத்துக் காட்டி எச்சரித்தவண்ணமிருந்தது.

”சுதந்திரத்தை’ப் பெறுவதற்கு முன்பே, காங்கிரஸ் கட்சியினர், பதவியைச் சுவைத்தனர்; அந்த நாளில் ஆச்சாரியார் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்கியதும், கடும் எதிர்ப்பு மூண்டதும், ஆயிரவர் சிறை சென்றதும், இரு காளையர் சிறையில்

மாண்டதும், தமிழகத்தின் வீர வரலாற்றுச் சுவடியிலே இடம் பெற்றுள்ளன.

அன்றெல்லாம் இந்தி எதிர்ப்பு என்பது, ஏமாற்றமடைந்த அரசியல்வாதிகளின் ”கைவரிசை’ என்று பேசப்பட்டது; ஆச்சாரியார் அப்படிச் சொல்லித்தான், நிலைமையை விளக்கப் பார்த்தார்; இன்றோ, அவரே இந்தி எதிர்ப்பாளராகிவிட்டிருக்கிறார்.

தம்பி! இருபது, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், நீ, கேட்டதுண்டோ இல்லையோ, நானறியேன் - இந்தியை இன்று ஆட்சி மொழி என்றல்லவா சொல்கிறார்கள்; அப்போதெல்லாம், இந்தியை தேசிய மொழி என்றுதான் சொல்வார்கள்; தட்டித் தட்டிப் பேசுவார்கள்.

தமிழனுக்கு, இந்தியோ, வெறெந்த மொழியோ, தேசிய மொழியாகாது! -

என்பதற்கான காரணங்களைக் காட்டி, தீவிரமான பிரச்சாரம் செய்து, கிளர்ச்சிகளை நடத்தி, சிறை சென்று பல்வேறு தொல்லைகளை நாம் தாங்கிக்கொண்ட பிறகு, இந்தி ஆதரவாளர்களின் தலைக்கனம் குறைந்தது - இப்போது மெத்த நாவடக்கத்துடன், இந்தியாவில் 14 தேசிய மொழிகள் உண்டு, இந்தி அதிலே ஒன்று; ஆனால், மிக அதிகம்பேர் பேசும் மொழி; எனவே, அது பொது மொழி, ஆட்சி மொழி - என்று இப்போது பேசுகிறார்கள்.

இந்தி ஆதிக்க நோக்கத்தை அவர்கள் விட்டுவிடவில்லை; ஆனால் முறையை, பேச்சை மாற்றிக்கொண்டனர்.

தமிழர் தவிர மற்றவர் மொழி - இனம் - பண்பாடு - என்னும் தொடர்புபற்றி அதிகக் கவலையும் பொறுப்பும் காட்டவில்லை. இங்கோ, ஆர்வத்தீ என்றுமே

அணைந்ததில்லை, ஆச்சாரியார் முயன்று பார்த்துத் தோற்றார்! ஆள்வது யார் என்று பார்த்துவிடலாம் என்று ஆர்ப்பரித்தார்! நாமல்லவா, வெள்ளைக்காரரை எதிர்த்தவர்கள் - மொழிக்காக வாதிடும் இவர்கள் போரிட வல்லவர்களல்ல; அடக்குமுறையைத் தாங்க மாட்டார்கள், என்று தப்புக் கணக்குப் போட்டார்; தடியடி தந்தார்; மண்டைகள் உடைந்தன, மனம் உடையவில்லை; மருண்டார்; ஓடிவந்த இந்திப் பெண்ணே! கேள்! நீ, தேடிவந்த நாடு இதல்லவே! - என்று பாடினர், களிநடமாடினர், தமிழர் கட்டாய இந்தி ஒழிந்தபோது.

அந்தச் சம்பவத்தை அறியாததால், காமராஜர், இன்று ஆர்ப்பரிக்கிறார்; இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியா? செய்யட்டும், பார்க்கலாம்! - என்கிறார்; துப்பாக்கி இருக்கிறது, தோட்டாக்கள் உள்ளன என்று

மிரட்டுகிறார்.

இரத்தக் கரைபடிந்த கரம்! ஈரமற்ற நெஞ்சு! விளக்கம்பெற மறுக்கும் இயல்பு! அதிகார போதை! - இவ்வளவு காமராஜர் கட்சியிடம் நிரம்பி இருப்பது தெரியும். தெரிந்தும், குமாரபாளையத்தில், நமது பொதுக்குழுவில், இந்தியை எதிர்ப்பது என்று முடிவு செய்திருக்கிறோம்.

ஆணைக்காகக் காத்திருந்த அருமைத் தம்பி! ஆணை பிறந்து விட்டது - ஆகஸ்ட்டு இறுதியில், உன் ஆற்றலுக்கு விருந்து, வாய்ப்பு!

அன்புள்ள,

அண்ணாதுரை,

26.06.1960

9. இந்தி - தமிழ் மரபு அழிக்கும் செந் தீ

தமிழ் நாட்டின் அமைப்பும் மொழியும் -

கேர் குழு அறிக்கை -

தமிழ் இலக்கிய வளம்

தம்பி!

ஆணை பிறந்துவிட்டது, அணிவகுப்புகள் தயாராகட்டும் என்று சென்ற கிழமை எழுதியதை, நீ படித்து, உன் ”பங்கு’ குறித்துத் திட்டமிட்டுக்கொண்டிருந்தபோது, நான், நெய்தல் நிலக் காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டிருந்தேன். என்ன துணிவு அண்ணா! உனக்கு, இதைச் சொல்ல. போர்க்கொடி உயர்த்தியாகிவிட்டது என்று நாவலர் அறிவித்துவிட்டார். போராட்டக்

குழு அமைக்கப்பட்டாகிவிட்டது, பரணி பாடி வருகின்றனர் கழகத்தவர், எங்கணும்; இந்த நேரத்தில், நெய்தல் நிலம் காணவா செல்கிறாய்? சென்றதுடன், அதை என்னிடமும் செப்புகிறாயே, சரியா? பாசறை காணவும் பாடி வீடமைக்கவும் செலவிட வேண்டும் நேரத்தை, நினைப்பை. நெய்தல் காணும் நேரமா இது!!

- என்று கோபித்துக்கொள்கிறாயா, தம்பி! நெய்தல் நிலம் சென்றேன், கண்டேன், களிப்பு மிகக்கொண்டேன்; ஆனால் அந்த நேரத்திலும், அந்த இடத்திலும்கூட, உன்னையொத்தவர்கள், எத்துணை உற்சாகத்துடன் எழுச்சியுடன், மொழி காத்திடும் ஆர்வத்துடன் உள்ளனர் என்பதைக் காண முடிந்தது; காட்சிகளைக் கண்டு களித்தேன் என்று கூறினேன் தம்பி! இயற்கைக் காட்சிகளை மட்டுமல்ல, இயற்கையோடு உறவாடி மகிழ்ந்திடும் இன்முகத் தோழர்கள்,நம்மை எதிர்நோக்கி

இருக்கும் இந்தி எதிர்ப்புப் பற்றிக் கொண்டுள்ள ஆர்வத்தின் அழகையும்தான் என்று கூறவும் வேண்டுமா?

தில்லையில், பல்லாயிரவர் கூடினர் - பொதுக்குழுவின் முடிவு பற்றிப் பேசினோம். கேட்டனர் - முழக்கமிட்டனர் சழக்கர் மனதிலே அதிர்ச்சி ஏற்படும் வகையில். மறுநாள்தான், தில்லைக்குச் சில கல் தொலைவிலுள்ள கிள்ளை எனும் கடலோரச் சிற்றூரைத் தொட்டுத் தோழைமை கொண்டாடிடும் உப்பங்கழி சென்றோம், தோணியில்.

பிச்சாவரம் காடு என்று அந்த இடத்துக்குப் பெயர் கூறுகின்றனர்.

தம்பி! கடல் நீரின்மீது ஒரு காடு!! அடர்ந்து இருந்தது முன்பு என்பது, இப்போது ஓரளவு அழிக்கப்பட்டுக்கிடக்கும் நிலையிலும் தெரிகிறது. வேறெங்கும்

அதிகம் காணப்படாததும், உப்பங்கழிகளில் மட்டுமே வளரக்கூடியதுமான, பலவகை மரங்கள், கொடிகள், செடிகள் நிரம்பி உள்ளன. ஆலுக்குள்ள விழுதுகள்போல, அந்த மரங்களிலிருந்து கிளம்பித் தண்ணீரைத் தொடுகின்றன, உள்ளேயும் செல்லுகின்றன. இடையிடையே "திட்டுகள்' உள்ளன; அவை மேய்ச்சலிடங்களாகப் பயன்படுகின்றன. சில இடங்கள் விரிந்து பரந்து உள்ளன; சில இடங்களிலோ, தோணி நுழையும் அளவு மட்டுமே, நீர்ப்பரப்பு உள்ளது; விழுதுகளும், கொடிகளும் வழி மறித்து நிற்கின்றன; வளைத்தும், பிரித்தும், ஒடித்தும், நீக்கியும், வழிகாண வேண்டி இருக்கிறது.

செம்போத்தும், குருகும், வக்காவும், வண்ணப் பறவைகளும, ஆங்கு தங்கியுள்ளன. இசை எழுப்பும் பறவைகளும் உள்ளன. ஆள் அரவம் கேட்டு மரத்திலிருந்து கிளம்பிச்

சிறகடித்துக்கொண்டு, வேறிடம் நாடிப் புள்ளினம் பறந்திடும் காட்சி, உள்ளபடி அழகாக இருக்கிறது. வெளிர் நீலவண்ணம் நீர், சூழப் பச்சை, மேலே நீலமும் வெண்மையும் கொண்ட மேகக் கூட்டம். இடையில், வெண்ணிறக் கொக்குகள், விமானப்படை, அணிவகுத்துச் செல்வதுபோல! இதை நீங்கள் மட்டுந்தானா கண்டு களித்திடக் கற்றீர்கள், எமக்கும் தெரியும் என்று கூறுவதுபோல், துள்ளித் துள்ளி மேலே வருகின்றன, மீனினம். எதையும் அழித்திடும் மாந்தர் உளரே என்ற வெறுப்பில், மீண்டும், தண்ணீருக்குள் சென்றுவிடுகின்றன! தரையில் நடக்கமட்டுமே கற்றுக்கொண்ட மனித இனமே! இதற்கே உனக்குஇத்துணை தலைக்கனம் ஏற்பட்டுவிட்டதே!! என்போல் நீர்மேல் நடக்கவல்லாயோ என்று கேட்டுக் கேலி செய்வதுபோல, சின்னஞ்சிறு மீன்கள்,

துள்ளித்துள்ளி, நீரின் மீது நெடுந்தூரம் செல்கின்றன.

செடி கொடிகளின் மருங்கே, தோணியை நிறுத்திவிட்டு, வலையை விரித்துவைத்து, "வரவு' தேடிக் காத்திருக்கின்றனர், மீனவர்கள். அவர்கள் கொண்டுவரும்"அறுவடை'யை அங்காடிக்கு எடுத்துச்செல்ல, கரையிலே அமைக்கப்பட்டுள்ள ஓலைக்கொத்துக் குடிசைகளில், காத்துக்கிடக்கின்றனர், பெண்டிர்! வலைக்கான நூலுக்கு, வகையாக முறுக்கேற்றியபடி சிறார்கள் உள்ளனர். தோணிகள் காற்றில் சிக்குவது காண்கின்றனர், கலக்கத்தோடு அல்ல! ஆழ்கடல் சென்று கொண்டு வந்து கொட்டப்படும் மீனினத்தைப் பார்க்கின்றனர், நமது "வேட்டை' எப்போது ஆரம்பமாகும் என்ற நினைப்புடன்.

நண்பர் இராமசாமியும் "வேட்டை'

நினைப்புடனேதான் இருந்தார்! பிச்சாவரம் சென்றதே, பெரிதும் அவருக்காகத்தான்! நான், முன்பே, சென்றிருக்கிறேன் - வில்லாளனுடன்! இம்முறை நமது நடிப்பிசைப் புலவருக்கு இந்தக் காட்சியைக் காட்ட எண்ணி, நண்பர்கள் வில்லாளன், வேணு, பட்டாபி, சுந்தரம் ஆகிய தோழர்கள், தோணிப் பயணம் ஏற்பாடு செய்தனர். கையிலே துப்பாக்கியைப் பிடித்தபடி, கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு, குருகு வருமா, வக்கா கிடைக்குமா மணிப்புறா கிடைக்குமா, செம்போத்து அகப்படுமா என்று ஆவலாகத் தேடினார்! புள்ளினம் என்ன மனித இனத்துக்கு மட்டமா!! கிழக்கே இருப்பதைக் கண்டறிந்து இவர் குறிபார்த்தால், அவை, சரேலெனக் கிளம்பி, மேற்குப் பக்கம் சென்று, அடர்ந்த இடம் தேடி அடங்கிவிடுகின்றன!! தோணி அங்குச் செல்வதற்குள், அவை,

வேறோர் இடம் பறந்து விடுகின்றன. மெத்தக் கஷ்டப்பட்டு, இரண்டு"கல்பொத்தி'ப் பறவைகளைச் சுட்டு வீழ்த்தினார், நடிப்பிசைப் புலவர்.

பறவை வேட்டை மட்டுமே ஆடினார் என்றுதான் நான் எண்ணிக்கொண்டேன்; தம்பி! நீயும் அவ்விதம்தான் எண்ணிக் கொண்டிருந்திருப்பாய். ஆனால், அப்போதும் அவர் மனதிலே என்ன எண்ணம் எழும்பிற்று என்பதை, அடுத்த நாள் விழுப்புரம் - செஞ்சி நெடுஞ்சாலையிலுள்ள முட்டத்தூர் எனும் சிற்றூரில் பேசும்போதுதான், என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

"இந்தி எதிர்ப்புப் போர் வருகிறது! இதயத்தில் இரக்கமற்ற எதேச்சாதிகாரிகள், அடக்குமுறையை அவிழ்த்துவிடுவார்கள், துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுவார்கள் என்று அண்ணா தில்லைக் கூட்டத்திலே பேசினார்.

துப்பாக்கிச் சத்தம் எப்படி இருக்கும் என்று தெரிந்துகொள்ள நேற்று எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நானே இரு முறை வேட்டுக் கிளப்பிப் பார்த்தேன் பிச்சாவரம் காட்டில்!'' - என்று இராமசாமி சொன்னார்.

கவனித்தாயா, தம்பி! கடலோரம் சென்றாலும், காட்சிகளைக் கண்டாலும், தோணி நடத்திச் சென்றாலும் புள்ளினத்தைத் தேடி அலைந்தாலும், எங்கு இருந்தாலும். எதைச் செய்தாலும், நம்மவர்களின் நோக்கம் எதிலே பதிந்து இருக்கிறது, என்பதைக் கவனித்தாயா!!

தோழர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளும் பார்வையிலேயே, இப்போதெல்லாம் ஒரு தனிச் சுவை இருந்திடுகிறது - உனக்குத் தென்பட்டிருக்க வேண்டுமே! "வருகிறது கிளர்ச்சி! பார்ப்போம், உன் பங்கு என் பங்கினைவிடத் தரத்திலும்

அளவிலும் மிஞ்சுகிறதா, பார்ப்போம்!!'' - என்று கண்கள் பேசுகின்றன.

"மகனே! மகனே! வேளா வேளைக்குச் சாப்பிடக் கூடாதா! உடம்பு இளைத்தே போய்விட்டதே!'' என்று கேட்கும், தாயின் பரிவினிலே, இப்போதெல்லாம், ஓர் தனி வகை குழைந்து காணப்படுகிறது.

"தடுத்தால் நிற்கவா போகிறான்! தடுப்பதுதான் அறமாகுமா? தாய் எனினும் தமிழச்சி அல்லவா! மொழி காத்திட, என் மகனும் சென்றான் என்று கூறுவதன்றோ மறக்குடியினர் மரபு! கிளர்ச்சியில் ஈடுபடும்போது, என்னென்ன ஆபத்து வந்து தாக்குமோ, இடுக்கண் யாதோ? யாரறிவார்! என் மகன், இப்போதேனும், உண்டு உரம் பெறுவதைக் கண்டு மகிழ வேண்டுமே! நாளை எப்படியோ!!' என்ற எண்ணம், தாயின் குரலிலே தோய்ந்து இருக்கிறது.

”உனக்கென்னடா, சிங்கக்குட்டி! மனதிற் பட்டதைச் சொல்லுகிறாய் - முடிகிறது! அறப்போருக்குத் தயாராக நிற்கிறாய் - விடுதலை வீரன்! என்னைச் சொல்? சேற்றிலே சிக்கிக் கொண்டேன்! மீள முடியவில்லை! செய்யுந் தொழிலும், இருக்கும் இடமும், என்னை செயலாற்ற இயலாதவனாக்குகிறது. நீ அறிந்ததனைத்தையும் நான் அறிந்து உணருகிறேன்! உள்ளம்அலைகடலாகிறது! ஆனால்...’’ என்று ஆயிரத்தெட்டுத் தொல்லைகளில் தன்னைச் சிக்கவைத்துக் கொண்ட தோழன், விடுதலைக் கிளர்ச்சிக்காக, எதையும் மறந்து, எந்தச் சூழ்நிலையாலும் சிறைப்படாமல், ஆர்த்தெழும் நண்பனைப் பார்த்துக் கூறுகிறான் - கண்களில் நீர் துளிர்ந்திடும் நிலையில்.

பொது மக்களேகூட நம்மை இப்போது பார்க்கும்போது ஏதேதோ கேட்பதுபோலவே,

எனக்குத் தோன்றுகிறது; உனக்கு எப்படியோ!

”பாவம்! நல்ல பிள்ளைகள்; நாட்டுக்குழைத்திடும் நற்பண்பு கொண்டவர்கள். வீட்டை மறந்து, கேடு களைந்திடும் தொண் டாற்றி வருகிறார்கள். பாட்டு மொழியாம் பைந்தமிழ் காத்திட இவரெல்லாம் செல்லுங்காலை, சுட்டுத் தள்ளுவரோ, எலும் பொடித்து வீழ்த்துவரோ, இழுத்துச்சென்று சிறையிலிட்டுப் பூட்டுவரோ! யாதோ இவருக்கு நேரிடப்போகும் இன்னல்! எனினும், மணப்பந்தல் நோக்கி முகமலர்ச்சியுடன் சென்று கட்டழகியைக் காணத்துடிக்கும் காளையர் போலன்றோ காணப்படுகின்றனர் என்றெண்ணி - ஆயாசமல்ல - அன்பு நிறை பார்வையை வழங்குகின்றனர்; வாழ்த்துகின்றனர்.

நெய்தல் நில மக்கள் என்னைப் பார்த்தபோது, நான் இதை உணர்ந்தேன் -

உவகையும் கொண்டேன்.

அந்த மக்களுடன் உரையாடியபோதும், அன்று மாலை கிள்ளையிலே பேசியபோதும், இங்கு, அறப்போருக்கு ஓர் அணிவகுப்பு அமைத்திடலாம் என்ற எண்ணம் சுவையூட்டிற்று.

தம்பி! கடலும் கடல் சூழ்ந்த இடமும், நெய்தல் என்றனர் தமிழர். நிலத்தின் இயல்பு கண்டு பெயரிட்டனர்; தனிச் சிறப்புக் கண்டு பயன் பெற்றனர். குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை எனும் ஐந்து வகையாக, நிலத்தைப் பிரித்தனர். எப்போது என்கிறாய், தம்பி? ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாக!! இன்றுள்ள பல நாடுகள், பெயரற்ற இடங்களாக இருந்த நாட்களில்! இன்றுள்ள பல நாட்டு மக்கள், காட்டில் திரிந்த காலத்தில்!! எத்துணை ஆராய்ச்சித் திறன் இருந்திருக்க வேண்டும், அந்த நாட்களில், இயல்பு கண்டு

இடங்களைப் பிரித்து, பெயரிட்டுக் காட்ட!

தம்பி! இத்துணைச் சிறப்புகளும், இன்று எடுத்துக் கூறப் படவேண்டியவைகளாகிவிட்டன. வெளிநாட்டவருக்கோ,இராமாயண மகாபாரதம் தெரிவிக்கப்பட்டிருக்கும் அளவு, தமிழரின் தனிச்சிறப்பான ”திணை இலக்கணம்’ அறிவிக்கப் பட்டதில்லை. எங்ஙனம் அறிவிக்க இயலும்! தமிழ்மொழியில் உள்ள தனிச்சிறப்புகளை நாம் கூறினால், இன்று வெளிநாட்டவர் கைகொட்டி அல்லவோ சிரிப்பர்! தமிழாம்! தமிழ்! ஐவகை நிலமாம்! அதற்கோர் இலக்கணமாம்! ஆங்கு வாழ்க்கை முறைகள், தனித்தனிச் சிறப்புடனாம்! எல்லாம் இயற்கையோடு தழுவியவையாம்! ஏதேதோ கூறுகின்றனர். எனினும், இந்தத் தமிழர், இந்தி மொழி கற்றுத் தேறினால் மட்டுமே,

பிழைக்க முடியும் - ஆட்சிமொழியாக இருப்பது இந்தி - அழகு பார், அணி பார், அகவலைப்படி, அறநூற்களைக் கவனி! என்று பேசி, ஆகப்போவது என்ன! அரசோச்சுவது இந்தி மொழி! அதற்கு அடி பணிந்து கிடக்கும் இவர்கள், அகமும் புறமும் பேசி நிற்பது, தோற்றோடி வந்தவன், தன் வாளின் பிடியிலே இழைக்கப்பட்ட ஒளிவிடு கற்களைக் காட்டுவதுபோலன்றோ! - என்று கேட்டுக் கெக்கலி செய்வர்.

கிள்ளைக் கூட்டத்திலே, தம்பி! நான் நெய்தல் நிலம் பற்றிச் சிறிதளவு பேசினேன் - பேசிவிட்டு, கேட்போரிடை எத்தகைய உணர்ச்சி ஏற்பட்டது என்று கூர்ந்து கவனித்தேன் - திகைத்துக் கிடந்தனர்!!

புலவர்கள் படித்தும் பொருளுரைத்தும் மகிழ்வளிக்கும் பொருளாகிவிட்டது, தமிழரின் அறிவுத் திறத்தின் விளைவுகள் பலவும்.

எனினும், மெள்ள மெள்ள எடுத்தியம்பி, நாம் எப்படிப் பட்டவர், எத்துணை ஏற்றத்துடன் இருந்து வந்தோம், நமது கொற்றமும் குடியும் எத்துணை தரமாக இருந்தன என்பன பற்றித், தெளிவும், அதன் பயனாக எழுச்சியையும் ஊட்டிட முடியும் - தமிழ் தாழ்நிலைக்குத் துரத்தப்படாது இருப்பின்! ஆனால், வருகிறதே இந்தி - நமது மரபு அழிக்கும் செந்தீ! அதைத் தடுத்து நிறுத்தாவிட்டால், ஏடு பல இருந்து பயன் என்ன!!

மரபு அழிக்கும் சதித்திட்டமாகவே, நாம் இந்த இந்தியைக் கருதுகிறோம் - வெறும் மொழிப் பிரச்சினையாக அல்ல.

எண்ணங்களை வெளியிடும் கருவி, மொழி என்று வாதாடுவது எளிது! ஆனால், எண்ணங்கள், உருப்பெற, அவரவர்க்கு, அவரவர் இயல்புக்கு ஏற்ப, வாழும் நாட்டின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப, அமையும்

மொழியே துணை நிற்கிறது.

அந்தத் தமிழ் மொழி அழிந்துபடாது! அது, மாநிலத்திலே, மாண்புடன் விளங்கும் - தழைக்கும் - மணம் பரப்பும் - என்றுரைப்பார் உளர். அவர்கள் உயரிடமும் சென்று அமர்ந்துள்ளனர். இடம் உயரமே தவிர, அவர்களின் கூற்று மிக மிக மட்டம் என்பதை எடுத்துக்காட்டவா வேண்டும்.

ஆட்சி மொழியாக இந்தி என்று ஆகிவிட்ட பிறகு, எவரும் அம்மொழியிடம் "பயபக்தி விசுவாசம்' காட்ட முற்படுவரேயன்றி, தமிழா கற்பர்! கற்றதனால் ஆய பயன் என் கொல், பெற்றிட இயலாது எந்த இடமும் என்ற நிலை ஏற்பட்டுவிடும்போது.

ஆட்சி மொழியாக இந்தி புகுந்தால், உலகு, நம்மை அம்மொழிகொண்டு அளந்திட முற்படுமேயன்றி, அழகு தமிழ் கொண்டா

அறிந்திட முயலும்.

தமிழ் மன்னர்கள் காலத்து ”நாணயங்கள்’ இன்று எந்த அங்காடியில் ஏற்றுக்கொள்வர். முன்பு, அந்த நாணயமன்றோ, நாடாண்டது! இன்று ஆராய்ச்சிக்கூடத்திலே, பாடம் புகட்டுகிறது; பழம் பொருட்காட்சிச்சாலையிலே படுத்து உறங்குகின்றது! அந்நிலைதானே, தமிழ் மொழிக்கும், அரசோச்ச ஆணையிட, அகிலமெலாம் உலாவர இந்தி எனும் வேற்று மொழி இடம் பெறும்போது.

உடல் பெரிது, உள்ளே நுழையும் கிருமி, மிக மிகச் சிறிது அளவில்! ஆயின் என்ன? உடலை அரித்து அரித்து, கிருமிகள் உயிரையே குடித்துவிடுகின்றன!!

“செம்மொழி, எம் தமிழ் மொழி!’ - என்று செப்பிக் கொண்டிருக்கலாம் சின்னாட்கள்.

பிறகு,"எம்மொழி, ஆட்சி மொழி?' என்று உலகு கேட்குமே? என்ன பதிலளிப்போம்? இந்தி ஆட்சி மொழி என்று கூறிடின், பிறகு, செம்மொழிக்கு எவர் மதிப்பளிப்பர்?

நாவலர் நெடுஞ்செழியன், இந்தி மொழியின் இயலாத தன்மையினையையும், தமிழின் தொன்மையினையையும், அழகுற எடுத்துச் சொல்கிறார். கேட்போர், ஏறுநடை என்கின்றனர் - அவர் பேசிடும்போது காண்போர், அரிமா நோக்கு என்கின்றனர். அவர் அள்ளித்தரும் சான்றுக்களை கவனிப்போர், அவரை நடமாடும் பல்கலைக்கழகம் என்று போற்றுகின்றனர். மன்றங்களிலே, மாநாடுகளிலே, அவர் போன்றோர் பேசுங்காலை, தமிழணங்கு கோலமெலாம் காட்டி நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் காட்சியே தெரிகிறது.

இந்தி தமிழகத்திலே நுழைக்கப்பட்டால்,

ஏற்படக்கூடிய ஆபத்தை எடுத்துக் காட்டியும், இந்த இழிசெயலுக்கு உடந்தையாக இருப்போரின் போக்கினை இடித்துக் காட்டியும், மற்றையோர் பேசும்போது, உடல் புல்லரிக்கிறது, உள்ளம் பொங்குமாங்கடலாகிறது.

தமிழ் மொழியின் சிறப்பினை, மறுப்பார் இல்லை.

இந்தி மொழிக்கு உள்ள சிறப்புக்கள் பற்றிப் பேசும் துணிவு, இந்தி ஏகாதிபத்தியவாதிகளுக்கேகூட ஏற்படாது.

ஆனால், இந்தப் பெருமை பேசிடின், பிரச்சினை தீர்ந்து விடுமா? பதற்கனவு! முயற்கொம்பு!!

”தமிழ் எவ்வளவு சிறப்பான மொழி என்பதைத் தமிழனிடத்திலே, தமிழன் எடுத்துச் சொல்லவேண்டி நேரிட்டிருப்பது

அவமானத்தின் அறிகுறி என்றே நான் கருதுகிறேன்.''

மூன்றாண்டுகளுக்கு முன்பு, திருவண்ணாமலையில், நாம் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே, நான் இப்படித்தான் பேசினேன்.

ஆட்சிமொழி குறித்து கேர் குழு அமைக்கப்பட்டு அலுவலாற்றிக் கொண்டிருந்த நேரம்.

"இந்தியா ஒரு நாடு அல்ல!'' என்ற உண்மையைக் கூறி டில்லிப் பாராளுமன்றத்திலே, ஓர் அதிர்ச்சி ஏற்படும்படியான முதல் முழக்கத்தைத் தம்பி சம்பத்து எழுப்பிய சமயம்!

1937-38-ல் இந்தி எதிர்ப்பிலே, முன்னணி நின்று கடும் போரிட்ட, கடமை மறவாத, காவி தரித்த மறத் தமிழர் அருணகிரி அடிகள்

மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

ஏழைக் குடிமகன், இவனுக்குத்தான் எத்துணை அச்சமற்ற போக்கு என்று எவரும் வியந்துரைக்கும் வண்ணம், மொழி காத்திடும் கிளர்ச்சியில் பணியாற்றி நின்ற, காஞ்சித் தோழர் சி. வி. எம். அண்ணாமலை திறப்பு விழாவாற்றிய மாநாடு.

முதன் முறையாக என்று நினைக்கிறேன், எம்.பி.க்களும், எம்.எல்.ஏ.க்களுமாகி, நமது கழகத்தவர், வந்தமர்ந்த மாநாடு.

வடநாட்டு வன்கணாளர்கள், இந்தியைப் புகுத்தத் துடிப்பதறிந்து, நாம் முரசு கொட்டக் கூடினோம். அதுபோதுநான் பேசியது, இப்போதைக்கும் பொருந்தி இருந்திடக் காண்கிறேன் - எனவே, அதனை எடுத்துக்காட்டி உன் நினைவிற்குக் கொண்டுவருகிறேன்.

இந்தி எதிர்ப்பு மாநாடு இன்றையத்தினம் நாம் நடத்தினோம். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்தி மொழியின் இயலாத தன்மையினையும், தமிழின் தொன்மை யினையும், அழகுற எடுத்துச் சொன்னார்கள். வேறு பல நண்பர்கள் இந்தி தமிழகத்திலே நுழைக்கப்பட்டால் நேருகிற பேராபத்தை எடுத்துச் சொன்னார்கள். இவைகளை மட்டும் அலசி ஆராய்ந்துவிட்டு இந்த மாநாடு முடிவடைந்துவிடப் போவதில்லை. இந்த மாநாடு மொழிப் பிரச்சினையை ஆராய்வதற்கு மட்டும் கூட்டப்பட்டதுமல்ல; இந்த மாநாடு தமிழ்மொழி சிலாக்கியமானது என்று எடுத்துச் சொல்லுவது மல்ல. தமிழ் எவ்வளவு சிலாக்கியமானது என்பதைத் தமிழனிடத் திலே தமிழன் எடுத்துச் சொல்லுவது அவமானத்தின் அறிகுறி என்று நான் கருதுகிறேன்.

தமிழ் மொழி, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே யிருந்து எத்தனையோ பெரிய படையெடுப்புக்களையும், எத்தனையோ பெரிய தாக்குதல்களையும், எத்தனையோ பெரிய தூற்றுதல்களையும் தாங்கிக்கொண்டு, இன்றைய தினமும் தன்னிகரற்ற நிலையிலே இருக்கிறதென்றால், அந்த மொழி நமக்கு உகந்த மொழிதான் - நமக்கு ஏற்றமொழிதான் - தலைசிறந்த மொழிதான். பாரிலே உள்ள பல மொழிகளிலே தமிழ்மொழி தலைசிறந்த மொழி என்று தமிழன் தமிழர்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பது உண்மையிலேயே சில நேரங்களுக்கு வேண்டுமானால் பொருந்தும். காதல் பேசும் நேரத்திலே, கணவன் தன் மனைவியை அருகிலே வைத்துக்கொண்டு "உன்னை விட அழகியை உலகத்திலே நான் கண்டதே இல்லை' எனக் கொஞ்சுவான். இப்படிக்

கொஞ்சத் தேவையில்லையென்றாலும் கொஞ்சுவதாலே இலாபம் கிடைக்கும் என்பதாலே கொஞ்சுகின்றன். அதே முறையிலே தமிழ் மொழியை இன்றையதினம் கொஞ்சுகிறோமேயொழிய, அதற்கு வாதங்கள் தேவையில்லை.”என்னுடைய மொழியைவிடச் சிறந்த மொழி உலகத்திலே வேறொன்றில்லை’ என்று எடுத்துச் சொல்லுகின்ற கடமை, எஸ்க்கிமோ நாட்டுக்காரனுக்கு, இருக்கின்றது. பின்லாந்து நாட்டுக்காரனுக்கு இருக்கின்றது. வளமற்ற மொழிபடைத்தவனானாலும் அவனுக்குச் செம்மொழி தாய்மொழிதான்.

“நமக்குக் கிடைத்திருக்கின்ற தாய்மொழி பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், பிற மொழியாளர்களெல்லாம் பார்த்து, இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம்படைத்த

இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? ஈராயிரம் ஆண்டுக்காலமாகவா இந்த மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகின்றது? என்று ஆவலுடன் சிலரும் ஆயாசத்துடன் பலரும், பொறாமையோடு சிலரும், பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலேதான் தமிழ்மொழி இருக்கின்றது. ஆகையினாலே, தமிழ் மொழிக்காக - வாதாடுவதற்காக தமிழர் மன்றத்திலே தமிழன் பேசவில்லை. ஆனால் தமிழ் மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை நுழைக்கின்ற பேதமை, தமிழ் மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை ஆதிக்க மொழியாக்குகின்ற அக்கிரமம் - இவைகளைக் கண்டித்து அந்த அக்கிரமத்தை நீக்குவதற்கு வழி என்ன

என்று உங்களைக் கேட்க இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. தமிழ்மொழியிலே அகத்திலே என்ன இருக்கின்றது? புறத்திலே என்ன இருக்கின்றது? - என்பதை நாவலர் நெடுஞ்செழியன் அருமையாக நமக்குச் சொல்லிவிடுவார். தமிழ் மொழியிலே பெயர்கள் எப்படியெல்லாம் மாற்றப்பட்டன? என்பதைக் கூற"ஊரும்பேரும்' எழுதிய பேராசிரியர் சேதுப்பிள்ளை போதும். தமிழ் மொழியிலேயுள்ள இலக்கணச் செறிவுகள் என்னென்ன? - இதற்கு பாரதியார் ஒருவர் போதும்; ஆனால், அவைகளுக்காக மட்டுமல்ல; இங்கே இந்த மாநாட்டிலே நாம் கூடியிருப்பது.

"இந்த மாநாட்டிலே எடுக்கின்ற முடிவினை, இந்த மாநாட்டிலே இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்று நாம் நிறைவேற்றியிருக்கின்ற தீர்மானத்திற்கு உயிரூட்டம் தரவேண்டுமானால்,

நீங்களெல்லோரும் 1937-க்கு வருவதற்குச் சித்தமாக இருக்கிறீர்களா? என்று கேட்பதற்கு மாநாடே தவிர, சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கல்ல; கம்பராமாயணத் தினுடைய சுவைகளை எடுத்துச் சொல்வதற்கல்ல; அகத்திலேயும் புறத்திலேயும் உள்ள அணிகளையும் அழகுகளையும் எடுத்து விளக்குவதற்கு அல்ல; அவைகளுக்குத் தமிழ்ப் பெரும்புலவர்கள் போதும்; வகுப்பறைகள் போதும்.

"வெட்ட வெளியிலே கொட்டகை போட்டு, வீதி தவறாமல் தோரணங்கள் கட்டிச், சிற்றூர்களிலிருந்தெல்லாம் சிங்க நிகர்த்த காளைகள் சாரைசாரையாக வந்து, இந்த மாமன்றத்தில் கூடியிருப்பதற்குக் காரணம், இந்தி மொழியைவிடத் தமிழ் மொழி சிறந்தது என்று வாதாடுவதற்கல்ல. தமிழகத்திலே இந்தி மொழி திணிக்கப்பட்டால்,

அதை எந்த வழியிலே ஒழித்துக்கட்டுவது? அதற்கு நம்முடைய காணிக்கை என்ன? என்று சிந்தித்து, அவரவர்கள் தங்கள் காணிக்கைகளைச் சேர்ப்பிப்பதற்காக இங்கு கூடியிருக்கிறார்களே தவிர, வெறும் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அல்ல.

தமிழர் வளர்ந்திருப்பது தெரிந்தும், வடநாட்டார் இன்றைய தினம் வம்புக்கு வருகிறார்கள் என்றால், உங்களையும் என்னையும், நம்மைப் படைத்த தமிழ் நாட்டையும், தமிழ் நாட்டுக்கு உயிர் நாடியாக இருக்கின்ற தமிழ் மொழியையும் துச்சமென்று அவர்கள் கருதுகின்றார்கள். நீங்கள் எவ்வளவு வளர்ந்தாலென்ன? கவலையில்லை; 2,000 கிளைக் கழகங்களா? - வைத்துக் கொள்ளுங்கள்; 2 இலட்சம் உறுப்பினர்களா? - இருக்கட்டுமே; நாள் தவறாமல் பொதுக்கூட்டங்களா? -

கேள்விப்படுகிறோம்! ஊர் தவறாமல் மாநாடா? - பார்த்துக்கொண்டிருக்கிறோம்; உங்களுடைய இயக்கத்திலே பத்திரிகைகள் பல இருக்கின்றனவா? - இருக்கட்டும் - இருக்கட்டும், உங்கள் இயக்கத்திலே அழகாகப் பலர் பேசுகின்றார்களா? பேசட்டும் - பேசட்டும்; ஆனால் எங்கள் ஆதிக்கம் நிறைவேறும் என்று அங்கே உள்ளவர் சொல்லுகிறார்கள்.

”இங்கே நாம் ஆயிரமாயிரமாகக் கூடியிருக்கிறோம். நாம் வளர்ச்சியடைந்திருக்கிற இந்த நேரத்திலும் நம்மை உண்மையிலேயே அடக்கி ஆளவேண்டுமென்று கருதுகின்றவர் கள், ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் இருக்கின்ற திக்கு நோக்கி நீங்கள் தமிழ்ப் பார்வையைக் காட்டவேண்டும். தமிழ்ப் பார்வையில் குளிர்ச்சியும் உண்டு,

கோபக்கனலும் உண்டு. தமிழன் தன்னுடைய நாட்டையே அர்ப்பணிப்பான், தோழன் என்று வருபவனுக்கு; தமிழன், தன்னுடைய தாளை மிதித்தவனை அவனுடைய தலை தாளிலே படுகின்றவரை போரிட ஓயமாட்டான் என்பதை, நம்முடைய இலக்கியங்களெல்லாம் எடுத்துச் சொல்லுகின்றன.

இன்றைய தினம் வடக்கேயுள்ளவர்கள் இறுமாந்து இருக்கின்றார்களே, அவர்களெல்லாம் காடுகளிலே சுற்றி கொண்டும், குகைகளிலே வாழ்ந்து கொண்டும் மொழியறியாத காரணத்தாலே வாழ்க்கை வழி தெரியாமல் வழுக்கி வீழ்ந்து கொண்டும் இருந்த நேரத்தில், இங்கே அகத்தையும் புறத்தையும் நம்முடைய பெரும் புலவர்கள் இயற்றினார்கள். முடியுடைமூவேந்தர்கள் இருந்த காலமும், அவர்கள் காலத்திலே இயற்றப்பட்டப் பெரும்

இலக்கியங்களும், அந்த நாளிலே வடநாட்டிலே வங்காளமானாலும் சரி, பாஞ்சாலமானாலும் சரி, பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய தாயகமாகப் போற்றப் படுகின்ற காஷ்மீரம் ஆனாலும் சரி, நான் வடக்கே இருக்கின்ற வரலாற்று ஆசிரியர்களைக் கேட்கின்றேன் - அந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே உங்களுக்கு ஏது மொழி? உங்களுக்கு ஏது இலக்கணம்? உங்களுக்கு ஏது இலக்கியம்? உங்களுடைய மொழி எந்த நாட்டிலே பேசப்பட்டது? ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே - தமிழ் வணிகன் ரோம் நாட்டுக் கடை வீதியிலே பேசினானே! ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே யவனத்திலல்லவா சென்று வியாபாரம் செய்தான்! ஈராயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே உலகத்தோடு தொடர்பு கொள்வதற்கு எங்கள் தமிழ்மொழி

எங்களுக்குப் போதுமானதாக இருந்ததே. ”ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே அறவழி யிலே எங்கள் இனமக்களை அழைத்துச் செல்வதற்கு எங்கள் தமிழ் மொழி எங்களுக்குப் போதுமானதாக இருந்தது.

பாடி வீடானாலும் சரி, பள்ளியறையானாலும் சரி, சாலையானாலும் சரி, சோலையானாலும் சரி, களமானாலும் சரி, எங்கேயும் பயன் பட்டுவந்த இந்தத் தமிழ்மொழி பயன்படாது என்று சொல்லுகின்றவர்கள், எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்? அவர்கள் தமிழ் மொழியறியாத காரணத்தால் அப்படிப் பேசுகிறார்கள் என்றால், மன்னித்து விடலாம். என்றாலும், அவர்களே சிற்சில வேளைகளிலே நம்முடைய முகவாய்க் கட்டையைத் தடவிச் சொல்லுகின்றார்கள், “தம்பி, தம்பி! தமிழ் மொழியை இகழ்வதாகக்

கருதிக்கொள்ளாதே, அது மிக நல்ல மொழி, அழகான மொழி, எனக்குப் பேசத்தெரியாதே தவிர, பேசுவதைக் கேட்டிருக்கிறேன். மிக அழகாக இருக்கின்றது'' என்று நம்மிடத்திலே சொல்லிவிட்டு,"எங்களுடைய மொழி சிலாக்கியமானது என்று சொல்லவில்லை. எங்களுடைய மொழி இலக்கிய வளமில்லாத மொழிதான். நீங்கள் விரும்பினால் அதை 6 மாதக் காலத்திலே கற்றுக் கொள்ளலாம். ஓராண்டுக் காலத்திலே கற்றுக்கொள்ளலாம். என்றாலும், தமிழ் ஒரு புறத்திலே இருக்கட்டும்; இந்தியையும் ஏற்றுக்கொள்ளுங்கள், இந்திக்கு அதிகம் தாருங்கள்'' - என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

"சிலப்பதிகாரக் காலத்திலாவது, கண்ணகி அளிக்க முடியாத சுகத்தை மாதவி அளித்தாள் என்பதற்காக, வழிதவறிய ஒரு வணிகன் மாதவி இல்லத்துக்குச்

சென்றான். இங்கு வழிதவறிய கோவலர்கள் இல்லை; வழிதவற வேண்டுமென்று நினைக்கின்றவர்களும், நீ கட்டிய மனைவி அழகாகத்தானிருக் கின்றாள்; நான் கொண்டு வருபவள் குணத்திலேயும் குடிகேடி; பார்ப்பதற்கு அருவருப்பாகத் தானிருப்பாள், இருந்தாலும் எத்தனை நாளைக்குத்தான் அந்தக் கட்டழகியோடு நீ இருப்பது, அவளைப் பின் அறையிலே தள்ளிவிடு, இவளை நீ முன்கட்டிலே வைத்துக்கொள் என்று கேட்கிறார்கள் என்றால், நாம்கூடச் சும்மாயிருக்கலாம், இங்கே கூடியிருக்கின்ற ஆயிரக்கணக்கான தாய்மார்கள் ஆர்த்தெழ வேண்டும்.

தமிழை, தம்பி! தாய்மொழி என்றுதானே அழைக்கிறோம்.

மொழி காத்திடத் தாய்மார்களை, நான் அழைப்பது முறைதானே!

களத்துக்கு வாருங்கள்! என்று கனிவுடன் அழைத்து வா, தம்பி! சீறிவரும் புலியதனை முறத்தினாலே அடித்துச் சிங்கார மறத்தி ஒருத்தி துரத்தினாளே! என்றன்றோ பாடினார், உடுமலை நாராயணக்கவி. தாய்மார்கள் ஆர்த்தெழுந்தால், தரணியே விழித்தெழுந்து நிற்கும். காணட்டும், அந்தக் காணற்கரிய காட்சிதனை!

தம்பி! மகனைப் பறிகொடுத்தாலும், மனங்கலங்காத மாதாக்கள் இருந்ததால்தான், தமிழகத்தின் மாண்பு தழைத்தது.

அத்தகைய, மாதர்குல மாணிக்கங்கள், எந்தெந்த நாட்டிலே இருந்தனரோ - இருக்கின்றனரோ - அந்த இடம் யாவும், புனிதம் பெறுகின்றன.

அத்தகைய வீரம், ஏதோ, பழங்கதை, பாடல் சுவடியில் உள்ளவை என்று ஏமாளிகளும்,

எதேச்சாதிகாரிகளும் எண்ணிக்கொள்ளட்டும். நீ அறிவாய், உலகிலே பல்வேறு இடங்களிலே கொதித்தெழுந்தபடி உள்ள உரிமைக் கிளர்ச்சிகளை அறிந்தவர் அறிவர், அத்தகைய வீரம் பட்டுப் போய்விடவில்லை; தேவைப்படும்போது, கொழுந்துவிட்டு எரியத்தான் செய்கிறது என்பதை.

□

"தாயே! தங்களை - அழைத்துப்போகத்தான் வந்திருக் கிறோம்.''

"என்னையா? எங்கு அப்பா, அழைக்கிறீர்கள்?''

"சுதந்திர விழாவிலே கலந்துகொள்ள, அம்மையே! அந்த விழா மாண்புபெற, மாதரசி! தாங்கள் வந்து அதிலே கலந்து கொள்ளவேண்டும்.''

"விழாவா! விழாக் காணவா

அழைக்கிறீர்கள்? என்னையா, அழைக்கிறீர்கள்? அழுதழுது விழிகள் வீங்கிக்கிடக்கும், எனக்கு அழைப்பா! விம்மி விம்மிச் சாகும் எனக்கு, விழாவிலே பங்கா...?''

"தாயே! தாங்களன்றி வேறு எவர், தகுதி பெற்றவர், சுதந்திர விழாவிலே பங்குபெற. பதவிக்கும், பட்ட கடனைத் தீர்த்துக்கொள்ளவும், பல்லிளித்துக் கிடப்போரும், கொள்ளை இலாபமடித்தோரும், கள்ளச்சந்தைக் கழுகுகளும், சமூகச் சனியன்களும், சுதந்திர விழாவிலே கலந்துகொண்டு, அதன் மாண்பினையே மாய்த்துவிடுகின்றனர். மகனை நாட்டுக்காக அர்ப்பணித்து, ஒப்பிலாத் தியாகம் புரிந்த மாதர்குல திலகமே! உன் கால்பட்டு, விழா நடக்கும் இடத்தின் மண் மணம் பெறட்டும்! விழா, வீரர்க்கு ஏற்ற திருநாள் ஆகட்டும்! மகனைக் கொன்றனர், மாபாவிகள்!

மனமுடைந்து அணு அணுவாக வேதனை பிய்த்துத் தின்னும் நிலைபெற்று, அந்த மாது கிடக்கிறாள். உரிமை என்றும் விடுதலை என்றும் பேசித்திரிவோர், அவளைக் கண்டால்,"ஐயய்யோ! இவளுக்கு வந்துற்ற கதியன்றோ, நமக்கும்' என்று எண்ணிக் கலங்குவர், கதறுவர், விடுதலைப்படையில் சேராதீர் என்று பெற்றெடுத்த மகனுக்கும் உற்றார்கட்கும் கூறுவர்; உடைபட்டுப் போய்விடும் அணிவகுப்பு; சிதைந்துபோகும் கிளர்ச்சி; - என்றன்றோ, பேசுவர். அம்மா! உன் மகன் ஆவியைக் குடித்தது அடக்கு முறை! ஆயினும் அந்த அடக்குமுறை சாகவில்லை. அது செத்தொழியவேண்டுமானால், தாயே! "மகனை இழந்தேன். மனம் கலங்கினேனில்லை. அவன், எதன்பொருட்டுத் தன் இன்னுயிர் ஈந்தானோ, அந்த நோக்கம் ஈடேற,

இதோ நானும் புறப்பட்டுவிட்டேன், பாடுபட, போரிட, தேவையானால் மடிந்துபட! வீரனைப்பெற்றவள் நான். கோழையாகமாட்டேன். தியாகியை ஈன்றவள் நான், தியாகம் செய்யத் தயங்கமாட்டேன்!' - என்று கூறிடின், தாயே! கொடுமைக்காரர், குலை நடுக்கம் கொள்வர், கொட்டம் அடக்கப்படும், வெற்றி நமக்குக் கிட்டும். வேதனையாகத்தான் இருக்கும், மகனைப் பறிகொடுத்ததால். ஆனால், அவன் இறந்தது, நாட்டுக்காக! அதை மீட்டுத்தரவழிகாட்டுங்கள்! சுதந்திர விழாவிலே கொடி ஏற்றுங்கள்! தங்கள் திருக்கரம் பட்டாகிலும், தீயோர் தொட்டுத் தொட்டுக் கரைபடிந்துகிடக்கும் அந்தத் துணித் துண்டு, மணிக்கொடி யாகட்டும். மாண்பு மீண்டும் கிடைக்கட்டும். வருக! அம்மையே வருக!''

சென்றாள், மாது! கொடி ஏற்றி நின்றாள்.

கூடி இருந் தோரைக் கண்டாள் - உரையாற்றிய பழக்கமில்லை. அதற்காகப் படித்ததில்லை. உணர்ச்சி மேலிட்டது. ஓரிரு கருத்தே உரைத்தாள் - ஓராயிரம் அறிவாளர் தீட்டிய நூற்களும், அந்தக் கருத்துக்கு மேற்பட்டதைத் தாரா!

என் மகன், எந்த நோக்கத்துக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்தானோ, அந்த நோக்கம் வெற்றி பெறப் பாடுபடுங்கள். அவன் செய்த தியாகம் வீணாகிவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

தம்பி! குஜராத் தனி மாநிலமாக இருக்க வேண்டும்; அதனை மராட்டியத்துடன் பிணைத்து, ஒரு அவியல் அரசு ஆக்கிவிடக் கூடாது என்பதற்காக, டில்லி எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நடத்தப்பட்ட மாபெருங் கிளர்ச்சியிலே ஈடுபட்டு, அடக்குமுறைக்கு ஆளாகித், துப்பாக்கிக்

குண்டுக்கு இரையாகி இறந்து பட்டான், 18 வயது இளைஞன், கல்லூரி மாணவன். இறவாப் புகழ்பெற்ற அந்த இளைஞனை ஈன்றெடுத்த தாயை, குஜராத் அரசு வேண்டி, கிளர்ச்சி நடாத்தியோர், சுதந்திர விழாவில் கொடி ஏற்ற அழைத்துச் சென்ற சம்பவம், மேலே குறிப்பிடப்பட்டிருப்பது.

அந்த வீரமாதேவி, வரலாற்றுச் சுவடிக்குள் புகுந்து கிடப்பவரல்ல! இப்போது, குஜராத்தில் வாழ்கிறார்கள் - வரலாற்றிலே இடம் பெற்றுக்கொண்டார்கள்.

மகன் கொல்லப்பட்டான் - குஜராத் கிடைத்து விட்டது.

என் மகன் செய்த தியாகம் வீண்போகக்கூடாது என்றாள் மாதரசி. வீண்போகவில்லை! அவள் கண்ணெதிரே, குஜராத் பூத்துக் குலுங்குகிறது!

என் மகன் இன்னுயிர் ஈந்தான் - குஜராத் கிடைத்தது - என்று எண்ணும்போதெல்லாம் அந்தத் தாயின் கண்களிலே நீர் துளிர்த்திடும் - ஆனால், அவர்கள் தாளிலே குஜராத் கிடைத்திட உழைத்த உத்தமர்களின், கண்ணீர் படும்!!

தம்பி! இத்தனைக்கும், தனி அரசு அல்ல - இந்தியப் பேரரசிலே ஒரு அங்கமாக இருக்கத்தான் - ஆனால் மராட்டியத்துடன் பிணைக்கப்படாமல் இருப்பதற்காக மட்டுமே, நடத்தப்பட்ட கிளர்ச்சி அது. அதிலே மகனைப் பறிகொடுத்தாள் மாதா!!

நாம் கேட்பது? தனி நாடு என்று மார்தட்டிக் கூறுகிறோம் - மமதையால் அல்ல - மரபு தெரிவதால்! அந்த மரபு அழிக்க வருகிறது, இந்தி எனும் செந்தீ.

அன்புள்ள,

அண்ணாதுரை,

3-7-1960

10. குருதி கலந்த மண்

நாகர் கிளர்ச்சி -

மொழிக் கிளர்ச்சிகள் -

அசாம் வங்க மொழிகள் -

இந்தி பேசாத பகுதி மக்கள் நிலை

தம்பி!

பிசோ! உயிரோடு! அல்லது பிணமாக!! - கொண்டு வருபவருக்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசு தரப்படும்.

"இந்திய' துரைத்தனம் இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டு ஆண்டு மூன்றாகப் போகிறது!

இப்போது பிசோ சார்பாக வேறோர் விளம்பரம் வெளியிடலாம்போல இருக்கிறது, வேடிக்கைக்காக!

பிசோ, எப்படி இங்கிருந்து, உளவாளிகள், வேவு பார்ப்போர், உயர்தர இராணுவ அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் ஆகியோரின் கண்களில் மிளகாய்ப்பொடி தூவிவிட்டு இலண்டன் போக முடிந்தது என்பதைக் கண்டறிந்து கூறுவோருக்கு, 20,000 ரூபாய் பரிசளிக்கப்படும்.

மலைநாட்டு மாவீரன் என்று, நாகர்கள், அவனை வாழ்த்துகிறார்கள்.

மண்டை ஓடுகளை மாலையாக அணிந்து கூத்தாடும், காட்டுமிராண்டித் தலைவன் என்று டில்லி கூறுகிறது.

அந்தப் பிசோ இலண்டன் நகரில் இருக்கிறான் - அரசியல் தலைவர்களைக் காண்கிறான். பத்திரிகைக்காரரிடம் உரையாடுகிறான். தாயகம் அடிமைப்பட்டிருப்பது பற்றிய விளக்கத்தை

உலகுக்கு அறிவித்து நீதி கேட்கப் போகிறேன் என்று அறிக்கை விடுகிறான்.

இறந்துவிட்டிருக்கக்கூடும் என்று முன்பு கூறினோர், இன்று இளித்தவாயர் என்ற பட்டம் பெற்றுச் சுமக்கின்றனர் - அவனோ, விடுதலை வீரர்கள் விரும்பிச் சென்று அடைக்கலம் தேடிடும் திருத்தலம் போயுள்ளான்.

நாகர் தனி இனம்! நாகர்களுக்குத் தனி மொழி! நாகர்களுக்குத் தனி கலாசாரம்! ஆகவே நாகநாடு தனி அரசு ஆகவேண்டும்! - என்பது பிசோவின் விடுதலைக் கீதம்.

நீங்களும் இந்தியர்தான், ஆனால் மலை ஜாதியினர்; உங்கள் நடை உடை மாறுபட்டிருக்கலாம், ஆனால் உள்ளம் இந்திய உள்ளம்; காட்டுக் கூத்தும், வேட்டைப் பாட்டும் கலையாக இருக்கலாம். ஆனால் அதுவும் பாரதப் பண்பாட்டிலே ஒருவகை தான்!

எனவே, தனி அரசு கூடாது, பேரரசிலே இணைந்து இருக்க வேண்டும் - மறுத்தால் படை இருக்கிறது பலமாக; குண்டுகள் உள்ளன மாரிபோல் பொழிய; தலைவர் இருக்கிறார், திம்மைய்யா! - என்று டில்லி கூறிற்று; கூவிற்று; மிரட்டிப் பார்த்தது.

மலை அரண்களைத் தூளாக்கினர், புதிய அரண்கள் அமைத்தனர், நாகர்கள்.

படைகளை ஏவினர் தாக்க; பதுங்கினர் நாகர்கள், சமயம் பார்த்துத் திருப்பித் தாக்க!

விமானம் வட்டமிட்டது; அடர்ந்த காடுகளிலே ஒளிந்து கொண்டு, நாகர்கள் கெக்கலி செய்தனர்.

மாமன் பிடிப்பட்டான், மைத்துனன் கொல்லப்பட்டான், வலது கரமாக இருந்தவனை வளைத்துப் பிடித்துக் கொண் டோம், இடதுகரமாக இருந்தவனைப்

பிடித்திழுத்து வந்தோம்; அணிவகுப்பு சின்னாபின்னமாகிவிட்டது, தங்க இடமின்றித், தக்க துணையின்றித், தலை தப்பாது என்று தெரிந்து திகில் கொண்டு அலைந்து திரிகிறான் பிசோ என்றனர்.

சென்றகிழமை, அவனை ஜெயப்பிரகாஷ் நாராயணன், இலண்டன் நகரில் கண்டு பேசினார் என்று இதழ்கள் தெரிவிக்கின்றன.

தம்பி! நாக நாடு தனி நாடு ஆகவேண்டும், என்று கேட்பதற்குக் காட்டப்படும் காரணங்களைவிட, ஆதாரங்களை விட, ஆயிரமாயிரம் மடங்கு அதிகமான, துப்புரவான ஆதாரம், குவிந்து கிடக்கிறது, நமக்கு - திராவிடருக்கு.

நாகர், மலைஜாதியினர் - ஆடுவதும் பாடுவதும் அடவியில்! தேடுவதும் பெறுவதும், உயிர்வாழ உணவு வகைகளை!

திராவிடரோ, வீரமரபினர், வாகைசூடியோர், வளம்பல பெற்றவர், வரலாற்றுப் புகழ்கொண்டவர்கள்!

திராவிடரின் தனி மரபு - தரணிக்குக் கிடைத்துள்ள, பல அணிகலன்களிலே சிறப்பான தொன்றாகும்.

அதனை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் நெஞ்சு நெக்குருகி நிற்கிறோம். இதனை அறியாததால், வடவர், நம்மை நையாண்டி செய்து கொடுமைப்படுத்துகின்றனர்.

நாம் யார் என்பதை நமக்குக் காட்ட, நமது தாய்மொழியாம் தமிழ், கொடி இழந்து, கொற்றம் இழந்து, ஈட்டியது இழந்து, இனிமை பலவும் இழந்து கிடந்துழலும், இந்த நாட்களிலும் துணை நிற்கிறது, மனப் பிணி போக்கி வருகிறது.

அந்த அழகு தமிழ் மொழியினை அணைத்து, அழித்திட, ஏவுகின்றனர், இந்தியினை.

□

”மொழி விஷயத்தை இவ்வளவு பெரிதாக்கலாமா’ என்று பேசுகிறார்கள் சிலர் - அவர்கள் வேறு ஏதோ, மிகப் பெரிய மனிதகுலத்தின் மேம்பாட்டுக்கான, விஷயத்தைக் கவனித்துக் கொண்டு இசைபட வாழ்ந்துகொண்டிருப்போரோ எனில், இல்லை, தம்பி! இல்லை வெந்ததைத் தின்றுவிட்டு, வாயில் வந்ததைப் பேசிடுவோர்: அல்லது கிடைத்தது பறிபோகாதிருக்க, கைகட்டி வாய்பொத்திக் கிடக்கும் போக்கினர். வாயும் வயிறும் தவிர, வேறெது பற்றியும் கவலைகொள்ளா மனிதர்கள்! மனிதர்களா!! மனித உருவங்கள்!! இவர்கள் பேசுகிறார்கள், மொழி பற்றித் தகராரு கூடாது என்று!!

தம்பி! நான் இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அசாம் மாநிலத்தில், பல இடங்களில் பட்டாளம் காவல் புரிந்துகொண்டிருக்கிறது, போலீசுக்குத் துணை நின்று; கிளர்ச்சியை அடக்க!

அசாமியர், வங்காளிகளைத் தாக்குகிறார்கள்.

வகையாக அசாமியர் சிக்கிக்கொண்டால், வங்காளிகள் பதிலுக்குத் தாக்குகிறார்கள்.

வங்காளிகளின் கடைகள் சூறையாடப்படுகின்றன!கொலை, கொள்ளை, தீவைத்தல் போன்ற வெறுக்கத்தக்க, கண்டிக்கத்தக்க செயல்கள் நடக்கின்றன.

வங்காளப் பத்திரிகைகளை அசாமியர் கொளுத்துகின்றனர்.

வங்காள மொழி ஒழிக! வங்காள ஆதிக்கம்

ஒழிக வங்காளிகள் ஒழிக!! - என்று அசாமிய இளைஞர்கள் முழக்கம் எழுப்புகின்றனர்.

அசாமிய மொழி ஆதிக்கம் ஒழிக! அசாமிய வெறி ஒழிக! என்று வங்காளிகள் முழக்கமிடுகிறார்கள். வங்காளிகள் இனி அசாமில் இருக்க முடியாது என்று அஞ்சி, சாரை சாரையாக வங்கம் திரும்புகின்றனர்.

வங்காளிகளுக்கும் அசாமியருக்கும், என்ன தகராறு? மொழிப் பிரச்சினையேதான்! வேறு ஒன்றும் இல்லை.

அசாம் மாநிலத்தில், மிகப் பெரும் அளவுக்கு வங்காளிகள் குடியேறிப் பொருளாதார வசதியுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

அசாமில் உள்ள அசாமியரைவிட, வங்காளிகள் வசதியுடன் வாழக்காணும் அசாமியருக்கு, என்ன தோன்றும்!! மனக்

குமுறல்! நமது நாட்டுக்குள்ளே நுழைந்து, வியாபாரத்தை, தொழிலை, அலுவல்களைக் கைப்பற்றிக் கொண்டு கொட்ட மடிக்கிறார்கள், வங்கத்தார்; நாம் கிடக்கிறோம், வகையற்று; செ! என்ன பிச்சைப் பிழைப்பு இது!! - என்ற எண்ணம் குடைகிறது.

ஆண்டுக்கு இரண்டு முறை, ஆகஸ்ட்டுத் திங்கள் 15லிம் நாளும், ஜனவரி 26-ம் நாளும், தலைவர்கள் உபதேசமளிக் கிறார்கள், "அசாமியராயினும் வங்கத்தாராயினும், பீகாரி யானாலும், ஒரியாவாயினும், எல்லோரும் பாரத புத்ரர்கள்! இந்தியர்கள்!!' என்று. ஜெய் ஹிந்த்! போடுகின்றனர்! பிறகோ?

"அந்தச் சிமெண்டுக் கம்பெனி, யாருடையது?''

"வங்காளியுடையதுதான்!''

"நேற்று கலாமண்டபத்திலே பாடிய...''

”வித்வானைக் கேட்கிறாயா? முகர்ஜி! கல்கத்தா!''

”வங்காளியா?''

”ஆமாம்!''

இப்படி உரையாடல்! இது உள்ளத்திலே என்னென்ன எண்ணங்களை எழச் செய்யும்?

தம்பி! இந்தச் சமயத்தில், அசாம் துரைத்தனத்தார், சட்டத்துக்கும் நியாயத்துக்கும் கட்டுப்பட்ட நிலையில், அசாம் மொழியை அசாம் மாநிலத்தில் ஆட்சிமொழி ஆக்குவதற்குகான சட்டம் செய்ய இருப்பதாக அறிவித்தனர்.

அமளி! அசாமிய மொழி ஆட்சி மொழி ஆகிவிட்டால், வங்காளிகளான, எங்கள் கதி என்ன ஆவது? அசாமிய மொழி கற்றவரன்றோ, அலுவலகத்தில் இடம்பெற முடியும்? அசாமிய மொழிக்கல்லவோ

ஏற்றம் ஏற்பட்டுவிடும்? பிறகு, வங்காள மொழிக்காரனுக்கு இங்கு என்ன வேலை? என்றல்லவா, அசாமியர் கேட்கத் துணிவர் - என்று எண்ணினர் வங்காளிகள்; கொதித்தனர்.

"இங்கு என்ன வேலை? என்று எப்போதோ, கேட்பதா! இதோ, இப்போதே, கேட்கிறோம். வங்கம் இருக்கும்போது, வங்காளிக்கு இங்கு என்ன வேலை?'' என்று அசாமியர் அறைகின்றனர், ஆத்திரத்துடன். அமளி!! துப்பாக்கி அமுல் நடத்துகிறது! துடுக்குத்தனம் தலைவிரித்தாடுகிறது!

தம்பி! இந்தப் பிரச்சினையிலே இருக்கிற நியாய அநியாயம் இருக்கட்டும் ஒரு புறம் - மொழி, வாழ வழிகாட்டுகிறது; ஆதிக்கம் நடத்தக் கருவியாகிறது - என்பது விளங்குகிறதல்லவா? கவனிக்கச் சொல்லு, கருத்திலே கடுவிஷம் கலவாத நிலையிலுள்ள

காங்கிரசாரிடம்.

இந்தியா ஒரே நாடு! நாம், எம்மொழி எனினும், எம்மதம் எனினும், இந்தியர் - என்ற பேச்சுக்கும், அசாமிலே காணப்படும் உணர்ச்சிக்கும் ஏதாவது சம்பந்தம் இருப்பதாகத் தெரிகிறதா!!

"நாம் இந்தியர்' என்ற உணர்ச்சி, பொய்யுரையின்மீது நிற்கிறது. எனவேதான், துளி அளவு பிரச்சினையானாலும், உண்மை உணர்ச்சி, பீறிட்டுக்கொண்டு வந்துவிடுகிறது.

தம்பி! திருவண்ணாமலையில், மூன்றாண்டுகளுக்கு முன்பே இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே, இந்தி ஆதிக்கம் எனும்ஆபத்து வரக்கூடும் என்பது பற்றிப் பேசப்பட்டது. இந்தி எதிர்ப்பு நாள் நடத்தப்பட்டது; நாடெங்கும், கிளர்ச்சிக்கான முன்னேற்பாடுகள் செய்யலாயினர். ஆட்சிமொழி பற்றிக் கேர்

குழு தந்த அறிக்கையில் டாக்டர் சுப்பராயனும், வங்கப் பேராசிரியர் ஒருவரும் ஒப்பம் எழுத மறுத்து, எதிர்ப்புக் கருத்துகளைத் தெரிவித்திருந்தனர் - தமிழக மக்களுக்கு இது, பெரியதோர் விழிப்புணர்ச்சியை ஊட்டிற்று.

டாக்டர் சுப்பராயன், தமிழர் - அறிமுகப்படுத்தத் தேவையில்லை - அமைச்சராகி இருக்கிறார் இப்போது - முன்பு ஆச்சாரியாரின் வலக்கரம் என்ற சிறப்புக்கு உரியவராக இருந்தவர் அவர், கேர் குழுவின் முடிவைப் பலமாகத் தாக்கினார் - தக்க காரணங்களைக் காட்டி.

எங்கு சென்றாலும், எப்படி வாழ்ந்தாலும், எவருடன் குலவினாலும், தமிழன் என்ற இன உணர்ச்சி அவரை விட்டுவிடாது; எனவே அவர், மறுப்புரை எழுதியதிலே விந்தை இல்லை.

அதேவிதமான கருத்தினை, ஏறக்குறைய

அதே சொற் களில், சுனிதிகுமார் சட்டர்ஜி எனும் வங்காளப் பேரறிவாளர் தெரிவித்திருந்தாரே, அது உள்ளபடி வியப்புக்குரியது, ஐயமில்லை.

சுனிதிகுமார் சட்டர்ஜி, மொழித்துறை வல்லுநர்; நாற்பது ஆண்டுகளாக அந்தத் துறையில் பணியாற்றிப் பெரும்புகழ் ஈட்டியவர்.

மேற்கு வங்க மேல்சபைத் தலைவராகத் திகழ்ந்தவர்.

வர்தாவில் துவக்கப்பட்ட ”ராஷ்டிர - பாஷா பிரசார் சமிதி’யின் மேற்கு வங்கக் கிளைக்குத் தலைவர்; எனவே, இந்திக்கு விரோதி அல்ல.

இந்தி மொழியில் நான்கு நூற்களை இயற்றியவர் - பரிசு கூடக் கிடைத்தது - எனவே, இங்கு இந்திக்காக வாதாடும் பேர்வழிகள் போல, இந்தி தெரியாதவரல்ல - விற்பன்னர்.

அப்படிப்பட்ட அறிவாளி “இந்தி வெறி’ -”இந்தி ஏகாதிபத்தியம்’ என்றெல்லாம் கண்டித்து, எழுதினார்.

I cannot help feeling that the Report is simply trying to suggest certain programmes and lines of procedure from the Centre without a close consideration, either of the general situation in India in the sphere of language or of future reactions and repercussions among large sections of our people.

□

The entire out-look is that of the Hindi-speakers in the Indian Union, who alone are to profit immediately and for a long time to come; if not forever.

□

I fear that in the entire report there is very little evidence of an attempt to understand the feelings and the intellectual approach of the non-Hindi speaking peo-

ples for their own languages...

□

The attitude is far from democratic - it is just a case of imposition of one kind of mentality over the rest...

□

The recommendations will in my opinion bring about the immediate creation without intending to do so of two classes of citizens in India - Class I citizens with Hindi as their language obtaining an immense amount of special privileges by virtue of their language only.

□

I honestly feel that I am seeing an incident 'Hindi Imperialism'.

□

After consulting the non-Hindi States, the Constitution of India is to be amended in its section on the

official language of the Indian Union.

□

கேர் குழு, ஆட்சி மொழி குறித்து ஆய்ந்தறியத்தக்க முறைகளை மேற்கொள்ளவில்லை, என்பதற்கு, சட்டர்ஜி காட்டுவதைவிட வேறென்ன காரணம் தேவை?

மொழி விஷயமாக இந்தியா முழுவதிலும் என்ன கருத்துப் பொதுவாக நிலவுகிறது என்பதைக் கண்டறியாமலும், பெரும் பாலான மக்களிடையே, என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்காமலும், மத்திய அரசு என்னென்னவழிமுறைகளைக் கையாள வேண்டும் என்று மட்டுமே, குழு அறிக்கை தயாரித்திருக்கிறது.

□

அறிக்கையின் நோக்கம், இந்தி பேசும் மக்களுக்கு, உடனடியாகவும்,

நெடுங்காலத்துக்கும், ஒரு சமயம் என்றென்றும், இலாபம் கிடைத்திடக்கூடிய விதமாகவே அமைந்திருக்கிறது. இந்தி பேசாத மக்கள், தங்கள் மொழிபற்றிக் கருதுவது என்ன என்பதைக் கண்டறிய ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதும், இந்தி பேசாத மக்களுடைய உள் உணர்ச்சி மதிக்கப்படவில்லை என்பதும் அறிக்கையில் தெரிகிறது.

ஜனநாயக முறை கையாளப்படவில்லை. ஒரு கருத்தினர் தமது கருத்தை மற்றவர்மீது திணிப்பதுதான், இந்த முறை என்று தெரிகிறது.

இந்த அறிக்கையின்படி காரியமாற்றினால், இந்தியைத் தாய்

மொழியாகக் கொண்ட மக்கள் மேலோர் ஆகவும், மற்றவர்கள் இரண்டாந்தர மக்கள் ஆகவும் ஆகிவிடுவர்.

□

இந்தி ஏகாதிபத்யம், நெளிவதைக் காண்கிறேன்.

□

இந்திய அரசியல் சட்டத்தில் மொழிபற்றி இருக்கும், விதியை, இந்தி பேசாத மாநிலங்களுடன் கலந்து பேசி, திருத்தி அமைக்க வேண்டும்.

□

தம்பி! டாக்டர் சுப்பராயன், இந்தக் கருத்துக்களை ஆதரித்ததுடன், இந்தி பற்றி, பல்கலைக் கழக மாணவர்களின் கருத்தினை அறிந்திருக்க வேண்டும் என்றும் சுட்டிக்

காட்டினார்.

இந்த கருத்துகளும், நாட்டிலே, இதற்குப் பரவலாகக் கிடைத்த ஆதரவும், நமக்கெல்லாம் மிகுந்த திருப்தியை உண்டாக்கின.

இந்திக்கு எதிர்ப்பு, எதிர்பாராத இடமிருந்தெல்லாம் வருகிறது. எனவே, வெறி குறையும், ஆதிக்க முயற்சி குலையும் என்று எண்ணம் பிறந்தது; செந்தேனாய் இனித்தது.

இம்மட்டோ! இந்தியைக் கட்டாய பாடமாக்கி, தமிழரை வம்புக்கு இழுத்து, தாளமுத்து - நடராசன் எனும் இரு இளைஞர்களைப் பலிகொண்ட அடக்குமுறையை அவிழ்த்து விட்ட, ஆச்சாரியாரே, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு இந்தியைப் பலமாகத் தாக்கலானார்.

இந்தியை எதிர்த்து நானும் ஆச்சாரியாரும்

ஒரே மேடையில் பேசிய அற்புதமே கண்டாயல்லவா!

வங்கம் சென்றுகூடப் பேசினார் ஆச்சாரியார்.

சம்பத்தும், வி. பி. இராமனும் வங்கம் சென்று மொழி மாநாட்டிலே பேசினர்.

இங்குள்ள இதழ்கள்கூட, இந்தி வெறியைக் கண்டித்தன.

எங்களுக்கு மட்டும் என்ன, தமிழ் உணர்ச்சி இல்லையா? நாங்கள் இந்தத் தமிழ் மண்ணிலே பிறக்கவில்லையா!! என்று காங்கிரஸ் மந்திரிகளேகூடப் பேசலாயினர். மகிழ்ச்சி நமக்கு, மயக்கம் வரும் அளவுக்குப் போரிடாமலே வெற்றி கிடைத்துவிடும், என்ற நினைப்புத் தடித்தது.

இவைகளை எல்லாம்விட, இந்தி குறித்துப் பண்டித நேரு பாராளுமன்றத்தில் இரு

முறை பேசியது, நம்மைக் களிப்புக் கடலிற் கொண்டு சேர்த்தது எனலாம்; இனிப்புக் கூட்டிப் பெருந்தன்மையைக் காட்டிப், பெருந் தலைவர் என்ற கோலம் பூண்டார் நேரு பண்டிதர்! நம்மை மகிழ்வித்தார். என்ன தெளிவு! எத்துணை கனிவு! தலைவரென்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்! மக்கள் குரலுக்கு எவ்வளவு மதிப்பளிக்கிறார்! மர மண்டைகளும். புரிந்துகொள்ளத்தக்க விளக்கம் தருகிறார்! அச்சம் அகன்றது! ஐயம் நீங்கிற்று! ஆணித்தரமாகப் பேசி விட்டார்! இனி இந்தி வெறியர், பெட்டிப் பாம்பாவர்! - என்றெல்லாம், நாடே புகழ்பாடிற்று, பண்டிதரின் பேருரை கேட்டு. சந்தைச் சதுக்கத்திலோ, சாவடித் திண்ணையிலோ, அல்ல! தம்பி! பாராளுமன்றத்தில் பேசினார். எந்த இடத்தில் பேசினால், இந்தத் துணைக் கண்டம் மட்டுமல்ல, உலகநாடுகள்

அனைத்திலும் கூர்ந்து கவனிக்கப்படுமோ, அங்குப் பேசினார்!!

□

Hindi would not be imposed against their wishes on non-Hindi speaking people.

English would continue as an associate or additional language in the country for an indefinite period or as long as the non-Hindi speaking people wanted it.

The decision as to how long it would continue as an associate language should be left to the non-Hindi speaking people and not to the Hindi-speaking people.

□

Many people in the South objected to learning Hindi. They did so because of a feeling that it was being imposed on them.

Therefore all talk of imposition must go. (Hear!

Hear) I shall go further and say that if they don't want to learn Hindi, let them not learn Hindi.

I believe in two things. There must be no imposition of Hindi. Secondly for an indefinite period — I do not know how long — English should continue as an associate or additional language, not because of certain facilities and all that but because I do not wish people in the non-Hindi areas to feel that certain doors of advances are closed to them.

So I would take (English) it as an alternative language so long as people require it and the decision on that I would not leave to the Hindiknowing people, but to the non-Hindi knowing people. (Cheers)

படித்துப் படித்து இன்புறலாம் என்று தோன்றும், பண்டிதரின் பேருரை! இந்தி பேசாத மக்கள்மீது அவர்களின் விருப்பத்துக்கு மாறாக இந்தி திணிக்கப்படமாட்டாது.

□

துணை மொழியாக, ஆங்கிலம், நீண்ட நெடுங்காலம் - அல்லது இந்தி பேசாத மக்கள், எவ்வளவு காலத்துக்கு இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதுவரையில் ஆங்கிலம் துணை மொழியாக இருக்கும்.

□

ஆங்கிலம் துணை மொழியாக எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்பதை முடிவுகட்டும் உரிமை, இந்தி பேசும் மக்களிடம் அல்ல, இந்தி பேசாத மக்களிடமே விடப்படும். □ தெற்கே பலர், இந்தி கற்பதை மறுக்கிறார்கள்; இந்தி திணிக்கப்படுகிறது என்ற எண்ணத்தாலே. எனவே, திணிப்புப்பற்றிய பேச்சு ஒழிய வேண்டும்.

□

நான் இன்னும் சொல்லுவேன்: அவர்கள் இந்தி படிக்க விரும்பாவிட்டால், படிக்கத் தேவையில்லை.

□

இரு விஷயங்களில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். ஒன்று இந்தித் திணிப்பு கூடவே கூடாது. இரண்டாவதாக காலம் குறிப்பிட முடியாது - எவ்வளவு காலம் என்று எனக்கே கூறத் தெரியாது. ஆங்கிலம் துணை மொழியாகத் தொடர்ந்து இருந்தாக வேண்டும்; அதனால் சில வசதிகள் உள்ளன என்பன போன்ற காரணங்களுக்காகக்கூட அல்ல; தங்கள் முன்னேற்றம் தடுக்கப்பட்டுவிட்டதாக இந்தி பேசாத மக்களுக்கு ஒரு உள் உணர்ச்சி ஏற்படக் கூடாது என்பது என் எண்ணம்.

□

எனவே, ஆங்கிலம், இந்திக்குப் பதிலாக, மாற்று ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் - எவ்வளவு காலத்துக்கு மக்கள் விரும்புகிறார்களோ, அதுவரையில் ஆங்கிலம் இருக்க வேண்டும். இதற்கான முடிவு கூறும் உரிமையை இந்தி பேசும் மக்களிடம் நான் விடமாட்டேன்; இந்தி பேசாத மக்கள்தான் முடிவு எடுக்க வேண்டும்.

தம்பி! இவ்வளவு தெளிவாக இந்தத் துணைக்கண்டத்தின் முதலமைச்சர், காங்கிரஸ் கட்சியின் ஈடு எதிர்ப்பில்லாத் தலைவர், உலகப் பெருந்தலைவர்களின் வரிசையிலே இடம் பெறத்தக்கவர் என்ற புகழ் ஈட்டிக் கொண்டவர், பஞ்சசீல கர்த்தாவென்றும்பாண்டுங் மாநாட்டு வீரர் என்றும் கொண்டாடப்படுபவர், போர் வெறிகொண்ட இந்தக் கெட்ட உலகிலே, சமாதானம் நிலவப் பாடுபடும் சாந்த மூர்த்தி,

என்று போற்றப்படுபவர் - பண்டிதர் - பேசினால் யாருக்குத்தான், நம்பிக்கை மேலிடாது.

இந்தி குறித்து இனிக் கவலையில்லை.

அச்சம் இல்லை; நீதி நிலைத்தது.

இந்தி வெறியரின் கொட்டம் அழிந்தது; ஆதிக்கம் ஏற்படாது.

இந்தி பேசாத மக்களின் உரிமை பாதுகாக்கப்பட்டு விட்டது. பண்டித நேருவே இதற்கு உறுதிமொழி அளித்து விட்டார்.

அவருடைய உறுதிமொழியை, மாஸ்கோவும் வா□ங்ட னும், பெர்லினும், இலண்டனும், பாரிசும் டோக்கியோவும், மதிக்கும்போது, நாம் மதிப்பளிக்காதிருப்பது, அறிவுடைமை யாகுமா! - என்றெல்லாம் தம்பி! நம் நெஞ்சம் எண்ணியதிலே, தவறு இல்லையே! நம்பினோம்!

அந்த நம்பிக்கையின் காரணமாகத்தான், திருவண்ணா மலையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்திய நாம், 1959 செப்டம்பர் திங்கள் நடத்திய பூவிருந்தவல்லி மாநாட்டில், - ஒரு வாழ்த்துத் தீர்மானமே, நிறைவேற்றினோம்.

"இந்தி ஏகாதிபத்தியத்தைப் புகுத்தி நிலைபெறச்செய்ய வடநாட்டுச் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் வஞ்சக முயற்சியை திராவிடப் பெருங்குடி மக்கள் தீவிரமாகவும் தொடர்ந்தும் அறவழி நின்று நடத்திவரும் கிளர்ச்சியின் விளைவாக, வடநாட்டு இந்தி வெறியர்களின் போக்கைப் பண்டித நேருவே கண்டிக்கவும்; தடுத்து நிறுத்தவும்; முன்வரவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது திராவிடரின் கிளர்ச்சி வெற்றிப்பாதை நோக்கிச் செல்கிறது என்பதையே எடுத்துக் காட்டுவதாக இந்த மாநாடு கருதுவதுடன், பண்டித நேருவின் போக்கிலேயே ஒரு

மாற்றத்தையும், இந்தி வெறியர்களின் கொட்டத்துக்கு ஒரு பலமான அடி கிடைத்தது போன்ற நிலைமையையும் ஏற்படச் செய்ய வீரமும் தியாகமும் நிறைந்த கிளர்ச்சியில் ஈடுபட்ட திராவிடப் பெருங்குடி மக்களுக்கு இம் மாநாடு வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.''

நமக்கு மட்டுமல்ல, இந்தி ஏகாதிபத்தியத்தை வெறுக்கும் பலருக்கும் பண்டிதரின் பேச்சு, பாகாக இருந்தது. இனி இந்தித் திணிப்புப்பற்றிய பயம் இல்லை என்று பலரும் கூறினர் - களித்தனர்.

வாழ்த்துத் தீர்மானம் நிறைவேற்றியபோதுகூடத் தம்பி! நமக்கு ஐயப்பாடு அறவே நீங்கிவிடவில்லை.

பண்டிதரின் போக்கு மாறிவிடுமோ? பேச்சை ஒரு நாள் மறுத்துவிடுவாரோ?

பேசிமட்டும் என்ன பலன்? சட்டம் மிரட்டியபடி இருக்கிறதே! எந்த நேரத்தில் இந்தி வந்திடுமோ, கொட்டிட! - என்ற அச்சம் கலந்த ஐயப்பாடு எழுந்தது. எனவேதான், வாழ்த்துரைத்ததுடன், வேறொன்றினையும் தீர்மானம் அளித்தது.

”1965-க்குப் பிறகு, இந்தி மொழியே அகில இந்திய ஆட்சி மொழியாகி, ஆங்கிலம் அறவே அகற்றப்படும் என்ற நெருக்கடியைப் பண்டித நேருவின் வாக்குறுதி தளர்த்தியிருப்பது கண்டு இம்மாநாடு மகிழ்கின்றது. என்றாலும், பேச்சளவோடு நின்று விடாமல், பண்டித நேரு தமது வாக்குறுதியைச் சட்டபூர்வமான நடவடிக்கையை எடுத்துக்கொள்வதன் மூலம் நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று இம்மாநாடு வ-யுறுத்திக் கூறுகிறது.’’

எந்த இந்திப் பிரச்சினை எரிச்சலையும் அருவருப்பையும் மூட்டி வந்ததோ, எந்தப்

பிரச்சினை எதேச்சாதிகாரத்துக்கு வழிகோலுவதாகும் என்ற நியாயமான அச்சம், திராவிடப் பெருங்குடி மக்களின் உள்ளத்தைக் குடைந்து வந்ததோ, அந்தப் பிரச்சினைக்கு மிகச் சாதாரண அரசியல்வாதிபோல அல்ல, மக்களின் மனதினை அறிந்தும் மதித்தும் நடந்திடும் மாபெருந் தலைவர் என்ற முறையிலே, தக்கதோர் தீர்வுகாண முன்வந்த, பண்டித நேரு, தமது வாக்குறுதிக்குச் சுவையும் பயனும் ஏற்படத்தக்க செயலை மேற்கொண்டாரா? இல்லை!

இந்தி பேசாத மக்களின் கருத்தறிய, ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டாரா? இல்லை.

இந்தி பேசாத மக்களின் கருத்தறிய என்ன வழி என்றாவது கலந்துபேசினாரா? இல்லை.

இந்தி பேசாத மக்கள், இப்போது இந்தியை

ஏற்றுக் கொண்டுவிட்டனரா? இல்லை.

இந்தி குறித்து முடிவு கட்டாமல், சும்மாவிடப்பட்டதா? இல்லை.

நேரு பேசினார், நேசம் சொட்டச் சொட்ட; குடியரசுத் தலைவர், தமது ஆணையின் மூலம் தமிழரின் வாழ்வை, பதைக்கப் பதைக்க வெட்டுகிறார், 1965-க்குப் பிறகு, இந்திதான் ஆட்சி மொழி, அறிவீர் என்று அறைகிறார்.

இந்தி பேசாத மக்களைக் கேட்பேன் - இந்தி பேசாத மக்களைத்தான் கேட்பேன்; இந்தி பேசும் மக்களைக் கேட்கத் தேவையில்லை - கேட்கப் போவதில்லை - என்று பண்டிதர் கூறினார் - அவருடைய சொல்லுக்குக் கிடைத்த மதிப்பு, வாக்குறுதிக்குக் கிடைத்த மரியாதை என்ன? பாபு இராஜேந்திரபிரசாத், பிடி சாபம்! என்று கூறிவிட்டார்! நேருவின் முகத்தில் கரி

பூசிவிட்டார்! துடைத்துக்கொண்டு விடுவோம் என்று பண்டிதர் எண்ணிக்கொள்ளக்கூடும். ஏனெனில், அது அவருக்கு மிகச் சாதாரணமான, "அதிகாரவரம்பு' பற்றிய பிரச்சினையாக இருக்கலாம். நமக்கோ? உயிர்ப் பிரச்சினையாயிற்றே!

அவ்வப்பொழுது இருக்கும் ஆற்றலை மட்டுமல்ல, அவனியிலுள்ள அறவோர் இன்று மட்டுமல்ல, பிறகோர் நாளும், என்ன கூறுவர் என்பதற்கு அஞ்சி, ஆட்சி நடத்துவதே அறவழி.

வலிவு கரத்திலே சிக்கிவிட்டதாலேயே, வழிப்பறி நடத்தி விடலாம் சில காலம், சிலரிடம். ஆனால், அவனை வீரனென்று எவரும் கூறார். வெற்றியும் இறுதிவரை இருந்துவிடாது.

பண்டித நேரு இந்த அறிவினைப் பெற்றவர். எனவேதான், பண்புடன் பேசுகிறார்; அறநெறி நிற்கிறார் என்றெண்ணி அகமிக

மகிழ்ந்தோம்.

ஆனால், பாராளுமன்றத்தில், பலருடைய கைதட்டுதலைப் பெற்ற நிலையில், தாம் பேசிய பேச்சினைத் துச்சமென்று கருதும் தன்மையில், கொடுத்த வாக்குறுதியைக் குப்பைக் கூடைக்குத் தூக்கி எறியும் விதத்தில், குடியரசுத் தலைவர், இந்தி பேசாத மக்களின் கருத்துப்பற்றி ஏதும் கூறாமல், ஆணை பிறப்பிக்கிறார், இந்திதான் ஆட்சிமொழி 1965-ல் என்று. நேரு பண்டிதர், வாயடைத்துக் கிடக்கிறார். வேதனையும் வெட்கமும் விலாவைக் குத்தவில்லையா?

பூ! இது என்ன பிரமாதம்! பாண்டுங் மாநாட்டில் "பாய் - பாய்'! என்று இருந்தார் சூயென்லாய்; இப்போது பற்களை நறநறவென்று கடித்துக் காட்டுகிறார் - மாலை மாலையாகப் போட்டார் என் கழுத்தில்; இப்போது பல ஆயிரக்கணக்கான

மைல்களை கைப்பற்றிக்கொண்டார்! வெட்கம்தான்! வேதனைதான்! ஏதோ டில்லிவரை வராமலிருக்கிறாரே, என்று எண்ணிக் கொள்ளவில்லையா! அதுபோல், குடியரசுத் தலைவர் என் தலையில் குட்டுவதுபோலத்தான் காரியம் செய்துவிட்டார் - என்ன செய்யலாம்! இத்துடன் விட்டால் போதும்! இறங்கு கீழே!! என்று கூறினால் என்ன செய்வது!! - என்ற முறையிலே எண்ணிக்கூட, நேரு சமாதானம் தேடிக்கொள்ளலாம், சாந்தி பெறலாம். ஆனால் நாம்? நமது கதி என்ன ஆவது?

பண்டித நேரு, கொதிக்கும் உள்ளத்துக்குச் சிறிதளவு சாந்தி தேடித் தருகிற முறையில், தேன்மொழி பேசிவிட்டு, இந்தித் திணிப்பு நடைபெறும்போது, நம்மை மயக்கத்திலிருந்திடச் செய்துவிட்டால், நி□மை மோசமாகிவிடுமே என்ற கவலை, நமக்கு,

அந்த நேரத்திலும் இருந்தது. வாழ்த்தினோம்! வலியுறுத்தினோம்! என்ற அளவோடு நின்றோமில்லை.

”எந்த நேரத்திலும் தீவிரமான அறப்போர் நடத்தவேண்டிய நிலைமை ஏற்படக்கூடும் என்று இம்மாநாடு கருதுவதால், ஒவ்வொரு கிளைக் கழகமும், ஒவ்வொரு சிற்றூரிலும் இந்தி ஆதிக்க ஒழிப்பு அறப்போரில் ஈடுபட உறுதிகொண்டவர்களின் பட்டியலைத் தயாரித்து, தலைமைக் கழகத்திற்கு அனுப்பித் தரவேண்டும்.’’

என்ற தீர்மானத்தையும், பூவிருந்தவல்லி மாநாட்டிலே நிறைவேற்றியிருக்கிறோம். 1957 ல், திருவண்ணாமலையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே, அறப்போர் வீரர்களின் பட்டியல் தயாராக வேண்டும் என்று கழகம் கட்டளையிட்டது.

1959 செப்டம்பரில், பூவிருந்தவல்லி மாநாட்டிலேயும் "பட்டியல்' தயாராகட்டும் என்று கழகம் நினைவுபடுத்திற்று.

இரண்டு மாநாடுகளுக்கும் இடையே இருந்த ஆண்டுகளிலே, எத்தனை எத்தனையோ மாற்றங்கள் - எனினும், நமது கழகம் மயங்கிவிடவில்லை, மருண்டுவிடவில்லை, அயர்ந்து போய்விடவில்லை.

எந்தச் சமயத்திலும், அறப்போர் அணிவகுப்புகளுக்கான அழைப்பு அனுப்பவேண்டிய நிலை பிறக்கும் என்று விழிப்புடனேயே கழகம் இருந்துவந்திருக்கிறது.

இப்போது நேரு, தன் வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டியது, தமது கடமை என்பதை மறந்துவிட்டார்; நேருவின்

பேச்சுக்கு உரிய மதிப்பளித்துதான் முறை என்பதைக் குடியரசுத் தலைவர் மறந்துவிட்டார்; இந்தி அரசோச்சும் என்று அறிவிக்கும் ஆணை பிறப்பித்துவிட்டார்; இந்தி பேசாத மக்களுடைய கருத்தினை அறிந்திடத் துளியும் முயற்சி எடுக்கப்படவில்லை, சட்டம் திருத்தப்படவில்லை; என்ன செய்வது? ஏக்கம், பலன் அளிக்காது! துக்கம் துளைத்திட இடமளித்து ஒன்றும் ஆகப்போவதில்லை. துணிவுடன், மனத்தூய்மையுடன், கடமை உணர்ச்சியுடன், இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்தொழிப்பதன்றி வேறு வேலை தேவை இல்லை என்று கூறும் கட்டம் காண்கிறோம்!

அதென்ன அண்ணா! கட்டம் காண்கிறோம் என்று கூறுகிறாய்! கட்டம் வந்து சேர்ந்துள்ளோம் என்று கூறு, மேலால் என்ன செய்வது என்பதையும் சொல்லு; என்ன வகையான தியாகமும் செய்யத் தயாராக

உள்ள இலட்சக் கணக்கான தம்பிமார்கள் உள்ளனர் என்பதை மறவாதே! - என்று, உன் விழி பேசும் வீரத்தை நான் மறந்தேனில்லை! மகிழ்கிறேன்! பெருமை கொள்கிறேன்!

இந்தி பேசாத மக்களுடைய கருத்தை அறிந்து கொள்ளாமல், இந்தியை ஆட்சிமொழி ஆக்குவது அடாத செயல். அதைத் தடுக்கத்தான், நமக்கு ஆவி; தாசராகித் தவித்திட அல்ல!!

திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவேண்டியவன் துச்சாதனன் என்றால், திரௌபதைக்கு என்றையத் தினம் துணி கிடைக்கும்?

திரௌபதைக்கு எந்தத் துணி தேவை என்பதைத் தருமன் கூற உரிமைபெற்றால், ஏதோ ஒரு நாட்டுச் சேலையாவது கிடைக்கக் கூடும்.

அருச்சுனனுக்கு அந்த உரிமை இருப்பின் ஒரு அலங்காரச் சேலை வாங்கித் தருவான். துரியோதனனுக்கோ துச்சாதனனுக்கோ அந்த உரிமை அளிக்கப்பட்டால், எந்தச் சேலை கிடைக்கும்? இருக்கிற சேலையையே உருவியவர்கள் அல்லவா, அவர்கள்!

அதுபோன்று இருக்கிறது, அரசியல் ஆதிக்கத்தைப் பறித்துக்கொண்டுள்ள வடவர், இந்தி பேசும் மக்கள், பார்த்து, நமக்கு எந்த மொழி ஆட்சிமொழி என்று முடிவுகட்டுவது.

வைதிகக் கலியாணம் போலல்லவா, அவர்களின் நடவடிக்கை இருக்கிறது. பெண்ணிடத்திலே ஒரு வார்த்தை கூடக் கேட்காமல், விடியற்காலை கணவனைக் கொண்டுவந்து உட்காரவைக்கும் நேரத்தில், அவனுக்கு ஒரு கால் நொண்டியாக இருந்து, சாய்த்தபடி வந்தால், பார்த்து, மணப்பெண் கண் கலங்கி, “என்ன? ஒரு

கால் நொண்டிபோல் இருக்கிறதே?'' என்று தோழியிடம் கேட்டால்,"இல்லை; வாழைப்பழத் தோலை மிதித்தார் - வழுக்கிக் கீழே விழுந்தார் - வேறொன்றுமில்லை'' என்று பொய் பேசி, கழுத்திலே தாலி கட்டிய கதை போலல்லவா இருக்கிறது.

வடநாட்டு இந்தி வெறியர்கள், எந்த அளவுக்கும் துணிவார்கள் என்பதை விளக்கிட, இந்தப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளில், அடுக்கடுக்காகப் பல நிகழ்ச்சிகளைக் காட்டலாம்; காட்டிக்கொண்டுதானே வருகிறோம்; கட்டுண்டு கிடக்காதவர்கள், கண்ணியத்தை இழந்திடாதிருப்பவர்கள், உணருகிறார்கள், உள்ளம் வெதும்பிக் கிடக்கிறார்கள். சென்ற கிழமை வடவர் காங்கிரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டியாரிடமே இந்த வெறியைக் காட்டினரே!!

பண்டித நேரு, பாரதத் தலைவரானார்

- எதற்கு? - நமது இந்தி ஆதிபத்தியத்தை நிலைநாட்ட! அதற்கு அவர் கருவியாக இருக்கவேண்டுமேயன்றி, மற்றவரின் உரிமை - மற்றவர் கருத்தறிதல் - போன்றவைகளிலே ஈடுபட அல்ல!! என்று இந்தி வெறியர்கள் கருதுகிறார்கள்.

பண்டித நேருவுக்குப் பலமளித்திருப்பதே, இதற்காகத்தான்! - என்று எண்ணுகிறார்கள்.

இந்தக் காரியத்தை நிறைவேற்ற, நேரு தனக்கு அளிக்கப்பட்டுள்ள இடம், வலிவு, ஆகியவற்றைப் பயன்படுத்தத் தவறினால், அவரை வீழ்த்தவும், அவர்கள் தயங்க மாட்டார்கள்.

இந்துமத ஆதிக்கத்துக்கு முழுக்க முழுக்கப் பயன்படுவார் மகாத்மா என்று நம்பி, அவரிடம் "பயபக்தி விசுவாசம்' காட்டி வந்த இந்துமத வெறியர்கள், காந்தியார்"ராமும்

- ரஹீமும்' ஒன்றேதான் என்று கூறுமளவு பெருங்குணம் காட்டியதும், இனி இவர் நமக்காக இருக்கமாட்டார்! இவரால் நமது ஆதிக்கத்துக்கேஆபத்து ஏற்பட்டுவிடக்கூடும்! - என்று கூறி, வெறிகொண்டு, அவரை இழித்தும் பழித்தும், பேசினார்களே!

தம்பி! அப்படிப்பட்ட வெறி பிடித்தலைந்த கோட்சே எனும் பார்ப்பனன், உலக உத்தமர் காந்தியாரைச் சுட்டே கொன்றுவிட்டானே! அதைவிட, இழிதன்மைக்கும் கொடுமைக் கும் வேறென்ன எடுத்துக்காட்டு வேண்டும்.

சோவியத் தலைவரும், அமெரிக்க அதிபரும், எகிப்துத் தலைவரும், இன்ன பிறரும், காந்தியாரின் "சமாதி'யில் மலர்தூவி, அஞ்சலி செய்கிறார்களே, தம்பி; அப்போது, அவர்கள், பாரதத்தின் விடுதலைக்காகக் காந்தியார் நடத்திய ஒத்துழையாமை, உப்புச் சத்தியாக்கிரகம், தண்டி யாத்திரை

போன்றவைகள் பற்றியா, எண்ணிக்கொண்டு நிற்கிறார்கள்! நிச்சயமாக, அந்த எண்ணம் எழாது!!

எவ்வளவு இழித்தன்மை நிறைந்த கொடியவர்கள் இந்த நாட்டிலே! நாடு மீள வழி காட்டினால் - அவரை அல்லவா, மதவெறி காரணமாகச் சுட்டுக்கொன்றனர்! மதம், வெறி அளவாகி, யாரைக் கண்கண்ட தெய்வம் என்று கோடிக் கணக்கானவர்கள் கொண்டாடினரோ, அவரையே அல்லவா, மத ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படுத்துகிறார் என்பதற்காக, கொலை செய்தனர் என்று எண்ணுகிறார்கள், தம்பி! எண்ணியதும், ஆயிரத்தெட்டு அணைக்கட்டுகளைக் காட்டினாலும் நூற்றுக்கணக்கான புத்தம் புதுத் தொழிலிடங் களைக் காட்டினாலும், இவைகள் நல்ல வளர்ச்சிக்கான அறிக்குறிகள், உண்மை; நல்ல நாடு என்பதைக் காட்டும்

சான்றுகள்; ஆனால்...'' - என்று எண்ணிப் பெருமூச்செறிகிறார் கள் - கண் கசிகிறது - ராஜ கட்டத்தை நினைக்கிறார்கள் - காடு அல்லவோ இது என்று எண்ணிக் கடுங்கோபம் கொள்கிறார்கள்.

காந்தியாருக்குக் கிடைத்தது, மூன்று குண்டுகள் - மார்பில்! ஆதிக்கம் பெற அலைவோர், அபலை எனினும், அருளாளன் எனினும், வழிகாட்டி எனினும், வாழ்வளித்தவன் எனினும், யாராக இருப்பினும், தமது ஆதிக்கத்தை எதிர்த்து ஒழிப்பான் என்று, துளி சந்தேகம் தோன்றினாலும், ஈவு இரக்கம் காட்டாமல் தொலைத்துவிடுவார்கள்.

நேரு பண்டிதர், இந்த உண்மையை உணராமலிருக்க முடியாது! இந்தி ஆதிக்கக்காரர்களைத் தீவிரமாக எதிர்த்து நின்றிட, அறம் அவரை அழைக்கிறது;

எனினும் அச்சம் அவரைத் தடுத்திடவும் செய்கிறது.

எனவேதான், வீரதீரமாக இந்தித் திணிப்பு அறவே கூடாது என்று பேசிய, ஆற்றல் நிறை தலைவன், பேச்சைத் தொடர்ந்து செயலாற்ற முன்வரவில்லை. எந்தச் சமயம் பாய்வார்களோ, பழிக்கஞ்சாப் பாதகர்கள் என்று பயப்படுகிறார் என்றே தோன்றுகிறது.

சம்பத்தைக் கேட்டேன், "ஆமாம்! பண்டித நேரு இவ்வளவு வெளிப்படையாக, இந்தி வெறியைக் கண்டித்துப் பேசினாரே இந்தி ஆதிக்கக்காரர்கள், என்ன கூறினார்கள், அதுபற்றி?'' என்று."அதை ஏனண்ணா! கேட்கிறீர்கள்! பாராளுமன்ற ஓய்விடத்தில் அமர்ந்து, அவர்கள், நேருவை, நாக்கில் நரம்பின்றி ஏசிக்கொண்டிருந்ததையே கேட்டேன்'' என்று கூறினான்.

”வீராவேசப் பேச்சு’’

”பேச்சுத்தானே! பேசட்டும்!’’

”வீராவேசப் பேச்சுக்கூடப் பேசாமல், வேறு என்ன செய்வார், வீரர்!’’

”யாரிட்ட போதனையோ, இப்படிப் பேசினார்.’’

”எதிலாவது அவருக்கு விருப்பம் ஏற்பட்டால், அது போதை அளவுக்குப் போவதுதானே, வாடிக்கை.’’

”பேசட்டும் - ஆனால் சட்டத்தைத் தெரிந்தல்லவா பேச வேண்டும்’’

”சட்டம்தானே! நான் இட்டது சட்டம், என்கிறார்.’’

”சொல்வார்! சொல்வார்! நாம் சொரணையற்றுக் கிடந்தால்.’’

தம்பி! இப்படியும், இதனைவிடக்

கடுமையாகவும், அன்றே இந்தி வெறியர்கள், நேருவின் பேச்சைக் கேட்டு, குமுறிக் குளறிக் கொட்டினார்களாம்!!

இந்தவிதமாக ஆய்ந்தறிய நமது மாநில அமைச்சர்களுக்கு நேரமும் இல்லை - பழக்கமும் ஏற்படவில்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம், ஒன்றே ஒன்று - நாங்கள் 150! நீங்கள் 15!! எங்கள் பக்கம் பஸ் முதலாளிகள்: உங்கள் கட்சியில், டிரைவர் கண்டக்டர்! எங்கள் பக்கம் மிட்டா மிராசு! உங்கள் பக்கம் ஏர் கலப்பை! இதுதான்!!

இந்தியா? - படியேன்! என்ன கஷ்டம்? - என்று ஒவ்வொரு அமைச்சரும், ஒன்பது மொழி படித்துத் தேறிய வித்தகர் போலப், பேசிவிட்டு வருகிறார்கள்.

இப்படி இப்படி நேரு பேசினார் - குடியரசுத் தலைவரின் ஆணை இதற்கு

மாறாக, முரணாக இருக்கிறது - அதனை எதிர்த்துத்தான், தி. மு. கழகம் அறப்போர் நடாத்தப் போகிறது என்று எவரேனும் கூறினால், எல்லாமறிந்தவர் இருக்கிறாரே, இந்த நாட்டு முதலமைச்சர், அவர் இளிக்கிறாராம், செய்யட்டுமே! - என்று கூறி. என்ன துணிவினால்? போலீஸ் இருக்கிறது, ஏவிச், செம்மையாக அடிக்கச் சொல்லலாம் என்ற துணிவு! அந்தப் போலீஸ் துறையினருக்கு மட்டுமென்ன? இந்தி மொழி வந்து, ஆலாத்தி எடுக்கப் போகிறதோ!!

"பெயர்?''

"பாரதிதாசன் என்கிற பாண்டுரங்கம்''

"எதற்காக, வந்தீர்?''

"தங்களைப் பேட்டி கண்டு மனு கொடுக்க.''

"மனுவா?''

"ஆமாம்! நான், சப்-இன்ஸ்பெக்டராக நீண்டகாலமாக இருந்து வருகிறேன்; இப்போது மேல் உத்தியோகம் பார்க்க விரும்புகிறேன்,''

"உம்! மேல் உத்தியோகமா? சரி! தகுதி; கூறும்''

"எட்டு மாவட்டங்களிலே கொட்டமடித்துக் கொண்டிருந்த, கொலைகாரக் கோபாலசாமியைப் பிடித்தது, நான்தான்!''

"அப்படியா? பிறகு...?''

"சூதாட்ட மடம் நடத்திய சுப்பண்ணா கோஷ்டியை, சிவராத்திரி அன்று, சுடுகாட்டு மண்டபத்திலே, சுற்றி வளைத்துப் பிடித்தது, நான்தான்! காதைப் பாருங்கள்! அந்தக் காலி கடித்துத் துண்டாக்கி விட்டான்.''

"சரி! சரி! வேறே?''

”கடமை தவறாதவன். ஒரு கருப்புப் புள்ளியும் கிடையாது.’’

”இது கிடக்கட்டும். மேல் உத்யோகம் வேண்டும் என்கிறாயே! தகுதி வேண்டுமே, அதற்கு!! இந்தி தெரியுமா?’’

”இந்தி மொழியா...’’

”என்னய்யா இழுத்துப் பேசுகிறீர்! இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி! அதுவே தெரியாதா உனக்கு. தூத்தூதூ! இந்தி மொழி தெரியாத ஆளுக்கு, மேல் உத்யோகமா? இந்த உத்யோகமே, இருக்கப்படாதே! திருடனைப் பிடித்தேன், சூதாடியைப் பிடித்தேன் என்று மளமளவென்று வீரப் பிரதாபத்தை எல்லாம் கொட்டிக் காட்டினாயே! இந்தி தெரியாத ஆள், இதெல்லாம் தெரிந்து என்ன பலன்? போ! போ! போய், இந்தியில் பரீட்சை எழுது! மார்க்கு வாங்கு! அந்தத் தகுதிபெற்ற பிறகு, வா! போ!

போ!!''

□

தம்பி! நாம், தடுத்து நிறுத்தாவிட்டால், இந்தி ஆதிக்கம் ஏற்பட்டுவிடும்; ஏற்பட்டுவிட்டால் போலீசுக்கும் இதே கதிதான்! அவர்கள்தானே அடிக்கப் போகிறார்கள்! பரவாயில்லை! தாங்கிக் கொள்வோம் தம்பி! நம் இனத்தின்மீது (போலீசில் உள்ளவர்களையும் சேர்த்துத்தான்) இந்தி ஆதிக்கம் செலுத்த வருகிறது; அந்தத் தாக்குதலைவிட, போலீஸ் தடி கொண்டு தாக்குவது கொடுமையானதல்ல! தடி உடலைப் புண்ணாக்கும், உயிரைக் குடிக்கும்; இந்தியோ மனதைப் புண்ணாக்கும், மரபினை அழித்திடும்!

இதைக் கண்டதால் ஏற்பட்ட மனக் குமுறல்தான், தம்பி! ஏதாவது வம்பு வல்லடி

வேண்டும் வேண்டும் என்று அலையும் பழக்கமற்ற, தி. மு. கழகத்தை, போராட்டம் நடத்தியே தீரவேண்டும் என்ற நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது.

அறப்போரில் ஈடுபட்டு, அடக்குமுறையால் நம் குருதி கொட்டப்பட்டால், அந்தக் குருதி கலந்த மண் இருக்கிறதே, தம்பி! அதைவிடப் புனிதப்பொருள் வேறு இல்லை.

அன்புள்ள,

அண்ணாதுரை,

10-7-1960

11. சட்டம் - வழக்குமன்றத்தில்

தொழிலாளர் வேலை நிறுத்த வழக்கு -

ஆப்பிரிக்காவில் சட்டம்

தம்பி!

வழக்குமன்றம் சென்றாக வேண்டும். அழைப்பு அனுப்பி விட்டார்கள். பெற்றுக்கொண்டேன். செல்லுகிறேன். ஆனால், துணையின்றியும் அல்ல! உள்ளத் தூய்மையற்ற நிலையிலும் அல்ல!!

தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி, தூண்டிவிடும் முறையில் பேசினோம் என்று எடுத்துகாட்டி, எனக்கும் தம்பி சம்பத்துக்கும், தொழிலாளர் தலைவர் அந்தோணிப்பிள்ளை, கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் கலியாண சுந்தரம், சித்தன் ஆகியோர்மீதும் தொடரப்படும் முறையில்

வழக்குத் தொடரப்படுகிறது.

அவசரச் சட்டம் அல்லவா அமுலில் இருக்கிறது, அதன் ஐந்தாம் பிரிவின்படி, நாங்கள் பேசியது குற்றம் என்று கூறி, என்ன பதில் அளிக்கப்போகிறீர்கள்? வந்து நில்லுங்கள் வழக்கு மன்றத்தில்! பதில் சொல்லுங்கள்! - என்று கேட்டிருக்கிறார்கள்.

ஓராண்டு சிறைவாசமாம் - ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கலாமாம், வழக்கறிஞர்களாக உள்ள நண்பர்கள், சுட்டிக் காட்டுகிறார்கள்.

வழக்கு, பொதுவாகக் கூறுகிறேன், இந்த வழக்குப்பற்றி அல்ல; இன்னவிதமாக நடந்தால், இன்னின்ன காரியத்தைச்செய்தால், அதனால் இன்னின்ன வகையான கேடுபாடுகள் விளையும்; ஆகவே, கேடுபாடுகள் விளைவதற்குக் காரண

மாகவும், உடந்தையாகவும் இருந்த குற்றத்துக்காக, அவ்விதமான குற்றம் செய்தால் என்ன தண்டனை தரப்படவேண்டும் என்று சட்டம் சாற்றுகிறதோ, அந்த முறைப்படி தண்டனை தருவதற்கு முன்பு, குற்றம் செய்ததாகக் கருதப்பட்டவர்களை மன்றத்தில் நிறுத்திவைத்து, விசாரிப்பது - பிறகு தீர்ப்பளிப்பது - என்ற முறையில் இருந்துவருகிறது.

பசி ஐயா! நாலு நாட்களாகப் பட்டினி! பாதை ஓரத்திலே இருந்தது பொட்டலம்! கமகமவென மணம் வீசிற்று! எடுத்தேன், பிரித்தேன், தின்றுவிட்டேன்!! - என்று சோற்று மூட்டையைக் களவாடித் தின்றவன், கூறக்கூடும், உருக்கமுடன்; கேட்போர் மனம் உருகும் விதமாகக்கூட. ஆனால் வழக்கு மன்றம்,

உண்மையாக அவனுக்குப் பசியா?

நாலு நாட்கள் பட்டினியா?

என்று கேட்காது - அறிந்துகொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளாது.

”அவன், அந்தச் சோற்று மூட்டையை எடுத்தானா? பிரித்தானா? தின்றானா? அந்த மூட்டை வெறொருவ னுடையதா?’’ இவைபற்றித்தான் கேட்கும், அறிந்துகொள்ளும். அறிவிக்கும், அந்தக் கட்டம் முடிந்ததும், அந்தச் செயல் குற்றம் என்று கூறும் கட்டம். பிறகு அந்தக் குற்றத்துக்கு என்னவிதமான தண்டனை தரப்படலாம் என்ற சட்டம் காட்டப்படும் கட்டம்; பிறகு தண்டனை அளிக்கப்படும் கட்டம்! வழக்குமன்றத்தின் வேலை அவ்வளவோடு முடிவடைகிறது. தீர்ப்பைக் கூறிவிட்டுக், கசியும் கண்ணீரைத் துடைத்துக்கொள்ள, குமுறி எழும் பெருமூச்சை அடக்கிக்கொள்ள, வழக்குமன்றத் தலைவர், தமது தனி அறைக்கோ, மாளிகைக்கோ

செல்லலாம் - மன்றத்திலே சட்டம் காட்டும் வழிதான் நிற்க வேண்டும்.

மாளிகையில் சென்று, மலர்விழியாளைக் கண்டும் மகிழ்ச்சி பெறாது, குழலையும் யாழையும் மீட்டி நிற்கும் குழவிகளிடமும் கொஞ்சாமல், தீர்ப்பளித்தவர், கவலை குடையும் உள்ளத்தினராகி உழலக் கூடும். ஆனால், மன்றத்தில், அவரைக் கட்டுப்படுத்துவது சட்டம்.

”நேரம் போவதே தெரியவில்லையா? எந்தக் கோட்டை யைப் பிடிக்க, இவ்வளவு பலமான யோசனை! எழுந்திருங்கள், சாப்பிட.’’

என்று அன்புக்கரசி அழைக்கக்கூடும். பசியில்லை என்று சுருக்கமாக, அவர் பதில் அளிக்கக்கூடும்; அளித்துவிட்டு, வேதனை கலந்த ஒரு சிரிப்பொலி எழுப்பக்கூடும். உள்ளம் கூறும்.

”உனக்குப் பசி இல்லை!

அவனுக்குப் பசி!!

நீ, தீர்ப்பளித்தாய்!

அவன் திருடினான்!

உனக்கு உணவு காத்துக் கிடக்கிறது!

அவனைப் பசி விரட்டிற்று!

நீ, நீதிபதி!

அவன் குற்றவாளி!!

நீ, மாளிகையில்

அவன், சிறையில்!!’’

தீர்ப்பளித்தவர், திகைக்கக் கூடும், உள்ளம் கூறுவனவற்றைக் கேட்டு, மாளிகையில்! ஆனால், மன்றத்திலோ, அவருக்குச் சட்டத்தின் பிடி! பிரிப்பார், பிடிப்பார், தண்டிப்பார்!

வேறென்ன செய்ய முடியும்?

உணர்ச்சிகளுக்கு இடமளித்துச், சட்டத்தை மறந்தால், சமுதாயம் என்ன ஆகும்? என்று கேட்போர், பலர் இருக்கிறார்கள், தம்பி, அவர்கள், என்னைப்பற்றித் தவறாத எண்ணிக்கொள்ளப் போகிறார்கள் - நான், வழக்கு மன்றங்கள்; சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கத்தான் உள்ளன, நடக்கத்தான் வேண்டும் என்ற பொது நீதியை மறுப்பவனல்ல, வெறுப்பவனல்ல. நான் எண்ணிக் கொள்வதும், எண்ணிப்பார்க்கும்படி மற்றவர்களைக் கேட்டுக் கொள்வதும், வேறு ஒன்றினைப்பற்றி - அடிப்படையான ஒரு பொருள்பற்றி!

சட்டம் இயற்றப்படும் விதம் என்ன? என்பது பற்றித்தான் நான் எண்ணிப் பார்க்கச் சொல்கிறேன் - வழக்குமன்ற முறை சரியா அல்லவா? என்பதுபற்றி அல்ல.

தொல்காப்பியம் கூறுகிறது, வேறோர்

பொருள் பற்றிய விளக்கமளிக்க,

”பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் வகுத்தனர் கரணம் என்ப”

அஃதேபோல, இயற்றப்படும் ஒவ்வொரு சட்டமும், ஏதோ ஒரு நிலைமையைச் சீர்படுத்த, குற்றம் எழாதிருக்கச் செய்ய, முறைப்படுத்தத்தான் இயற்றப்படுகின்றன. ஆனால், இயற்றும் சட்டம் இயற்றும் நிலைபெற்றோரின் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள என்றால், சட்டம் என்பது பெயரள வுக்குத்தான் பொருந்தும் - ஆனால், நீதிக்கும், அந்தச் சட்டத்துக்கும் தொடர்பு அற்றுப்போய்விடும்.

கதை படிக்கக் கேட்டிருப்பாயே, தம்பி!

வேளைக்கு ஒரு ஆள் தரவேண்டும், என் பசி போக்கிக்கொள்ள; தவறினால் ஒரே நாளில் ஊரையே அழித்துவிடுவேன் என்று கட்டளையிட்ட பூதம்பற்றி - சிறியவனாக இருந்தபோது.

பூதம்கூட சட்டம்தான் இயற்றிற்று! ஆனால், யாருக்காக? தனக்காக!! சட்டம் நீதியை உள்ளடக்கியதாகவா இருக்கிறது? பித்தனும் அவ்விதம் பேசத் துணிந்திடமாட்டான்.

தம்பி! மழை காலத்தில், சீமானின் தூக்கத்தையும் சீமாட்டிகளின் களியாட்டத்தையும் கெடுக்கும் விதமாகக் கத்திக்கிடக்கும் தவளைகளை, உழுது பிழைக்கும் ஊழியர்கள், இரவு முழுவதும் விழித்திருந்து கல்லால் அடித்துக் கொன்றாக வேண்டும் என்று சட்டம் இருந்தது, புரட்சிக்கு முன்பு, பிரான்சில்!

மீறினோர், சட்டப்படி விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப் பட்டனர். ஆனால் இதிலே கவனிக்கவேண்டிய மிக முக்கியமான விஷயம் என்ன தெரியுமா தம்பி! தண்டனை பெற்றோரின் தொகை வளர வளர, அந்தச் சட்டம் தகர்ந்தது - சட்டம் மட்டுமல்ல, அத்தகைய சட்டத்தைக் காட்டிக் கொட்டமடித்துக் கொண்டிருந்த பிரபுக்களின் பிடி! மன்னனின் மணிமுடியே பறிக்கப்பட்டது!! ஆனால், அது, பிறகு, நடந்த கதை நெடுங்காலம், சட்டம்தான் மேலிடத்தில்! தண்டனை தந்தபடி!!

ஐரோப்பாக் கண்டத்தில், ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, சில நாடுகளில் சட்டம் ஒன்று இருந்தது; அதை அடிப்படையாக வைத்துப் பின்னப்பட்ட ஒரு கதையைப் படித்திருக்கிறேன் - இப்போதல்ல; நேரம் ஏது! நீ, விட்டால் தானே!! - சில ஆண்டுகளுக்கு முன்பு.

பண்ணையாள், திருமணம் செய்துகொண்டால், "முதல் இரவு' அவனுக்கு அல்ல! பண்ணையாருக்கு!!

ஆமாடா, தம்பி! ஆமாம்! அப்படிப்பட்ட "சண்டாளத் தனம்' - சட்டம்!

"குட்டி யார்? மான்விழி! சிற்பி செதுக்கிய சிலை போன்ற உடல்! பருவக் கருவமிகுந்த, வயது! யார் இந்தக் காட்டு ரோஜா?''

"என் வீட்டுக்கு வந்தவள் - என்...''

"மனைவியா! பலே! பலே! வேறெந்த வேலையிலும் திறமை இல்லாவிட்டாலும், பயலே! உனக்கு,

"உருப்படி'யைத் தேடிப் பிடிக்கும் திறமை மட்டும் நிரம்ப இருக்கிறது. எங்கு கிடைத்தாள், இந்த எழிலரசி?"

"இவளை நான் திருமணம் செய்து

கொண்டேன்.''

"அது தெரிகிறதடா; முட்டாளே! தேடிக் கிடைக்காத பொருள்... உனக்கு எப்படியடா கிடைத்தது?''

"திருமணம்...''

"செய்துகொண்டாய்; ஆமாம்! நன்றி! மிக்க நன்றி! போய் வா!''

தம்பி! அவன் போய்விட வேண்டும் வெளியே! அவள் தங்க வேண்டும், மாளிகையில்! முதல் இரவு அங்குதான்! பிறகு, சீமான் வேறு "சிட்டு' தேடிக் கொண்டால், இந்தக் கசங்கிய மொட்டு, வீசி எறியப்படும்! கட்டியவன் அழைத்துச் செல்வான். தம்பி! இது சட்டமாக இருந்தது!!

சீமான், "முதல் இரவு' வேண்டாமென்று கூறி, அதற்கு ஈடாக, ஊழியக்காரனிடம், பணம் பெறுவதுமுண்டு.

“செச்சே! இழுத்துச் செல்லடா, சப்பை மூக்கை!”முதல் இரவுக்கு’ ஈடாக, பணம் கட்டு’’ - என்று கேட்பதுண்டு சீமான்!

”ஆண்டவனே! அவள் அழகற்றவளாக இருந்ததால், நான் மானமற்றவனாகாது இருந்திட முடிந்தது’’ என்று கூறித் தொழுது, பணம் அழுதுவிட்டுப், பணியாள் செல்வான்.

கற்பைச் சூறையாடுவதல்லவா இது? என்று, இன்று எவரும் கேட்பார் கொதிப்புடன். அன்று, அது சட்டம்!! எதிர்ப்பது, பாவம்! எதிர்த்தால், அதற்கு வேறோர் சட்டம்!! கடும் தண்டனை!!

ஆனால், தம்பி! மனிதகுலத்தின் மாண்பினையே அழித்திடத்தக்க அந்தச் சட்டம், காலம் கிளப்பிய சூறாவளியால், சுக்கு நூறாயிற்று.

காலம், சூறாவளியைக் கிளப்பிவிடுமுன்பு,

குறிகளைக் காட்டத் தவறவில்லை. ஆதிக்கக்காரர்கள் குறிகளைக் காண வில்லை; கண்ட பிறகும் கருத்திலே, தெளிவு ஏற்படவில்லை; இறுமாப்பு அவர்களைப் பிடித்தாட்டிற்று; அவர்கள் வாழ்ந்த கோட்டைகளின் இடிபாடுகள்கூட இன்று இல்லை!

"இப்படி ஒரு சட்டமா?' என்று, துக்கம், வெட்கம், துளைத்திடும் நிலையில், கேட்டிருப்பான் ஒரு காளை! அவனைக் கண்டதுண்டமாக்கிக், காக்கைக்கும் கழுகுக்கும் இரையாக்கி விட்டு, அவன் மணமுடித்த கட்டழகியை அந்த மனிதக் கழுகு கொத்தி மகிழ்ந்திருக்கும்.

இதுதான், சட்டமா? என்று எதிர்த்திருப்பான் ஒருவன்; அவன் தலை உருண்டிருக்கும்.

நீ இட்டது, சட்டமா? என்று, எதற்கும் துணிந்து வேறொருவன் கேட்டு, வெட்டுண்டு மாண்டிருப்பான்.

யாருக்காக ஐயா! இந்தச் சட்டம்?

யாரைக் கேட்டுக்கொண்டு இந்தச் சட்டம்?

என்று, விளக்கம் கேட்டிருப்பான், வேறொருவன்; அவன் ”இராஜத் துரோகி’யாக்கப்பட்டுத், தூக்கு மரத்தில் தொங்க விடப்பட்டிருப்பான்.

இவை யாவும், முறைப்படி விசாரணை நடத்தி, வழக்கு மன்றம், அளித்த தீர்ப்புகள்!!

வழக்கு மன்றங்களை அல்ல; தீர்ப்பு அளித்தவர்களை அல்ல; விசாரணை முறையை அல்ல; சட்டத்தின் இலட்சணத்தைப் பற்றியே, கேட்கலாயினர்! சூறாவளி கிளம்பிற்று! சுக்குநூறாயிற்று, அக்ரமக்காரர் ஆதிக்கம்.

இன்று, கேட்டால், கைகொட்டிச் சிரிப்பார்கள். அல்லது கோபத்தால் கண்கள் கொவ்வைபோலாகி விடும்; அப்படிப் பட்ட விதமான, சட்டங்கள் பல இருந்திருக்கின்றன; மனித குலம் தாங்கிக் கொண்டிருந்திருக்கிறது! மாவீரர் பலர் மடிந்தனர்; பச்சை இரத்தம் பரிமாறிய பிறகு, சட்டம் காட்டிக் கொட்டமடித்து வந்த சழக்கர்களின் ஆதிக்கம் அழிந்து பட்டது.

□

மூன்று "இராஜத் துரோகிகள்' வழக்குமன்றம் இழுத்து வரப்பட்டனர்; அழைத்து வந்திருக்கிறேன் மூன்று குற்றவாளிகளை என்று அறிவித்தான், அமுல் நடத்தும் அதிகாரி. கனல் உமிழும் விழி, வழக்குமன்றத் தலைவருக்கு. விவரம் அறியாததால், திகைப்பு மூவருக்கும்.

"எங்கிருந்து இவர்களைப் பிடித்து வந்தாய்?''

"இதோ நிற்கிறானே, முதலில், இவன் நடத்தும் உணவு விடுதியில்.''

"உணவு விடுதியிலா? என்ன செய்தான், இவன்?''

"இராஜத் துரோகம்.''

"விளக்கம்.''

"இராஜத் துரோகிகள் பதுங்கிக் கிடக்கும் இடங்கள் பற்றிய உளவு அறிந்து சென்று, கையும் பிடியுமாக அவர்களை இழுத்து வந்து, தங்கள் முன் நிறுத்துவது, என் கடமை...''

"ஆம்! கடமை தவறாத அதிகாரி என்று, புகழ்பெற்று விளங்குகிறாய். என் பாராட்டுதல்.''

"நன்றி! மிக்க நன்றி! தங்கள்

பாராட்டுதலைப் பெற நான் பாக்கியம் செய்தவன். தங்களின், சட்டம் காக்கும் திறம், இந்த நாட்டுக்கே தனிச்சிறப்பு அளிக்கிறது.''

"இவன் செய்ததைக் கூறும். நாம் இருவரும் நமது கடமையைச் செய்கிறோம்.''

"உணவு விடுதியில், நமது மன்னரின் படம்...'"காலஞ்சென்ற மன்னரின்...''

"ஆமாம்... மறந்து போனேன் கூறிட! காலஞ்சென்ற மன்னரின் படம், தொங்கவிடப்பட்டிருந்தது...''

"இராஜத் துரோகம் செய்தவன் என்றீர்...''

"ஆம்! படம், செல்லரித்த நிலையில் இருந்தது.''

"செல்லரித்துக் கிடந்ததா? மன்னரின் படமா?''

"முகம், விகாரமாகிக் கிடந்தது;

அழுக்கேறிய படம்!''

"அதைப் பலர் வருகிற இடத்தில் தொங்கவிட்டிருந்தான்... உம்!''

"பார்ப்பவர், சிரிக்க! கேலி பேச! இழிவுபடுத்தினான் மன்னரை!''

"மறுக்கிறானா?''

"மண்டைக் கர்வம் பிடித்தவன்; மறுக்கவில்லை, விளக்கம் தருகிறான்.''

"விளக்கம் தருகிறானா, விவேகி. அவனிடம், விளக்கம் ஏன் கேட்டாய்? வீண் வேலை!''

"கேட்டது நானல்ல. இதோ நிற்கிறானே, பக்கத்தில் இவன் கேட்டான்.''

"என்ன கேட்டான், இந்தத் துரோகி.''

"சிறிதளவு விவரமாகப் பேச அனுமதி தாருங்கள். உணவு விடுதி சென்று,

இவர்களுக்கு அருகே உட்கார்ந்தபடி யாரார் என்னென்ன போக்கிலே இருக்கிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கவனித்தபடி இருந்தேன். என்னைக் கண்டதும், ஏதும் பேசாமல் இருந்தனர் - கொஞ்சநேரம். நானாக, பேச வைத்தேன். வருத்தமாக இல்லையா உனக்கு? என்று கேட்டேன் இவனை. எனக்கென்ன வருத்தம், என்றான்...''

"நாடு துக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறது, மன்னர் படுகொலை செய்யப்பட்டது கேட்டு. இவன்...''"துளியும் வருத்தப்படவில்லை. துணிந்து எனக்கென்ன வருத்தம்? என்று, என்னையே கேட்டான். நமது மன்னர் படுகொலை செய்யப்பட்டது தெரியுமல்லவா? என்று கேட்டேன். நான் அவரைப் பார்த்ததுகூட இல்லை என்றான்.''

"மன்னரைப் பார்த்ததில்லை என்று கூறினானா! அட! படுபாவி! மன்னன்தானே

கண்கண்ட கடவுள்.''

"அவ்வளவு இராஜத் துரோகம் இவனுக்கு. இவன், நான் மன்னனைப் பார்த்ததுகூட இல்லை என்று சொன்னதும், இதோ இவன், உணவு விடுதிக்காரன், படத்தைக் காட்டி, இதோ, மன்னர்! என்றான்.''

"செல்லரித்த படத்தைக் காட்டி!''

"மன்னன் அவ்வளவு குரூபி என்று மற்றவர்கள் எண்ணிக்கொள்ள...''

"இழிவு படுத்தினான்.''

"படத்தைப் பார்த்ததும், இந்தப் பயல், நீ, மன்னனை முன்பே அழித்துவிட்டாய்! என்று கூறிச் சிரித்தான். அவன், நானா? செச்சே! செல் அரித்துவிட்டது!!' என்றான். அதாவது மன்னனை, மனிதன்கூட அல்ல, கேவலம் பூச்சி புழுக்களே அழித்துவிடும் என்று சபித்தான். இருவரையும், அதே இடத்தில் இராஜத் துரோகி

என்று குற்றம் சாட்டி, விலங்கிட்டேன்...''

"இந்த மூன்றாவது ஆசாமி?''

"இவன், இந்த இருவரையும்விட, மோசமானவன். இராஜத் துரோகிகளை நான் கண்டுபிடித்துக் கைகளுக்கு விலங்கிட்டு, இழுத்து வருகிறேன். இவன் ஒரு துளிகூடப் பதறாமல், மன்னரையா இந்த மாபாவிகள் இழிவுபடுத்தினார்கள் என்று கொதித்தெழுந்து கூறாமல், இத்தகைய இழிமக்களைக் கண்டுபிடித்த என்னைப் பாராட்டாமல்...''

"என்ன செய்து கொண்டிருந்தான்?''"காப்பி குடித்துக் கொண்டிருந்தான்!''

"பதறாமல்.''

"அமைதியாக!''

"அழுத்தக்காரன்! மூவருக்கும் மரண

தண்டனை!''

"தம்பி! ஐரோப்பாக் கண்டத்திலே ஒரு நாட்டின் நிலையை விளக்க, இப்படி ஒரு விசாரணைபற்றி எழுதப்பட்டிருந்தது; படித்திருக்கிறேன்.

மன்னனை இழிவுபடுத்துவது குற்றம்! அதை மறுக்க வேண்டியதில்லை.

ஆனால், இந்த மூவர் மன்னரை இழிவுபடுத்தியதாக எடுத்துக்காட்டிட என்ன கிடைத்தது, கவனித்தாயா?

அது போதுமானதாக இருந்தது, மரண தண்டனை தர.

□

இப்படிக்கூட இருக்குமா, நடக்குமா? சட்டம் என்றா இவைகளைக் கூறுவது? விசாரணை என்றா இதற்குப் பெயர்? காட்டுமிராண்டிக்

காலத்து அமுல் அல்லவா இது? அரசியல் தெளிவும், உரிமை உணர்வும், மிகுந்திருக்கும், இந்த நாட்களிலே எவர் ஏற்றுக்கொள்வர், இத்தகு அக்ரமத்தை? - என்றெல்லாம்கேட்கப் போகிறாய் - தெரியுமே, எனக்கு மக்களாட்சியின் மாண்புபற்றியும் உரிமை உணர்ச்சி வெற்றி பல பெற்றதுபற்றியும், நிரம்ப அறிந்திருக்கிறாய். ஆனால், தம்பி! காட்டுமிராண்டிக் காலம் என்று ஒன்றும், தெளிவுள்ள காலம் என்று மற்றொன்றும் தனித் தனியாக இருக்கும் என்று எண்ணாதே! முழு நிலவு தவழ்ந்திடும் வானவீதியிலேயேதான், கும்மிருட்டு - அமாவாசை - இருந்திடக் காண்கிறோம்.

இப்போதுகூடக், காட்டுமிராண்டிக் காலத்தவை என்று எள்ளி நகையாடத்தக்க சட்டங்கள், ஜனநாயக நாடுகள் என்ற பட்டியலில் இடம் பொறித்துக்கொண்டுள்ள

சில நாடுகளில், அமுலில் உள்ளன.

தம்பி! மறந்துவிடாதே, முறைப்படி நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்!! எவனோ எதேச்சாதிகாரியின் இறுமாப்பின் விளைவு அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களாட்சி நடத்திவரும், மக்களின் தலைவர்கள், மக்களுக்காக, மக்களின் ஆதரவுபெற்று, மக்கள் மன்றத்திலே பேசி, முடிவு எடுத்து, நிறைவேற்றப்பட்டு, அமுலில் இருந்துவரும் சட்டங்கள்!!

டாக்டர் வெர்வுட்! தென் ஆப்பிரிக்க அரசுக்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முதல்வர். கண்ணை மூடிக்கொண்டு, அவரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்றும் கூறிவிட முடியாது. உருட்டி மிரட்டிப் பதவியைத் தட்டிப் பறித்துக்கொண்டார் என்றும் குற்றம் சுமத்த முடியாது. நல்லாட்சிக்கு வழி என்று

எந்தத் தேர்தல் முறையைப் பல நாடுகள் மேற்கொண்டுள்ளனவோ, அதே போன்ற முறையிலே அமைக்கப்பட்ட, அமைச்சர் அவையின் தலைவர், டாக்டர் வெர்வுட்.

அவர் உலகமறியாதவருமல்ல - அறநூற்களைத் தெரியாதவருமல்ல.

அவர் நாட்டிலே கருப்பர் என்பவர்கள் படும்பாடு, உலகிலே உள்ள நல்லறிவாளர்களின் உள்ளத்தை வேகவைப்ப தாக இருக்கிறது.

நாட்டிலே, கருப்பர், வெள்ளையர் கண்படாத இடத்தில், தனியாகத்தான் இருக்க வேண்டும்.

மருத்துவராக இருக்கலாம், மத குருவாகப் பணியாற்றலாம், வழக்கறிஞராக, பேராசிரியராக, வணிகராக, எப்படிப்பட்டஅறிவாற்றல் மிக்கவராக

இருப்பினும் சரி, கருப்பர் என்றால், ஊரிலே, ஒரு ஒதுக்கிடம் - பொது இடத்தில் அல்ல - வெள்ளையர் வாழுமிடத்தில் அல்ல.

கலந்து இருந்து வருகிறோமே என்கிறார்கள் கருப்பர் - இனி அது கூடாது - என்று சட்டம் கூறுகிறது - விரட்டுகிறது.

வாழுமிடங்களில் மட்டுமல்ல, இந்த வேதனை தரும் வேற்றுமை - தொழிலிடம், கல்விக்கூடம், தொழுகை இடம் - கேளிக்கைக் கூடம் எங்கும் - வேறு வேறுதான்!

பல அலுவலகங்களில், வேறு வேறு இடங்களில்தான் இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல - நுழைவு இடங்களே தனித் தனி.

வெள்ளையருக்கு மட்டும் என்று இருக்கும் நுழைவு இடத்தில், கருப்பர் சென்றால், கடும் தண்டனை - கசையடி கூட!!

இரயிலில், பஸ்ஸில், மருத்துவமனையில்,

எங்கும், தாழ்நிலை, இழிநிலை, கருப்பர் என்போருக்கு!

தம்பி! கொடிய நோய்வாய்ப்பட்டவர்களுக்கு இரத்தம் சுண்டிப்போனால், புதிய இரத்தத்தை உள்ளுக்குப் புகுத்துகிறார் களல்லவா - அதிலேகூடக் கருப்பருக்கு, கருப்பரின் இரத்தம்; வெள்ளையருக்கு வெள்ளையரின் இரத்தம்! இதுவும் சட்டப்படி; மீறினால் கடும் தண்டனை!!

உலகிலுள்ள நல்லறிவாளர்களெல்லாம் கண்டிக்கிறார்கள். டாக்டர் வெர்வுட், சட்டப்படி நடக்கிறேன், தவறா? என்று கேட்கிறார். இது சட்டமல்ல என்று எவரேனும் வாதாடினால், ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட, மக்கள் மன்றத்தில். பெருவாரியான உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்றுச் சட்டம் இயற்றப்பட்டது என்று எடுத்துக் காட்டுகிறார்.

இருப்பினும், இது சட்டம் அல்ல! சட்டம் என்று ஏற்றுக்கொள்ளமாட்டோம்! சட்டம் என்று நீங்கள் கூறலாம், ஆனால் நாங்கள் அதை மதிக்கமாட்டோம்! என்று பலரும் கூறுகின்றனர்.

இருப்பினும் இது சட்டமல்ல! - என்று கூறப்படுகிறதே, தம்பி! இதை வழக்குமன்றம் ஏற்றுக்கொள்ளாது; வழக்கு மன்றத்தில் கூறவும் மாட்டார்கள். வழக்குமன்றம், தரப்பட்டுள்ள சட்டப்படி, குறிப்பிடப்பட்டுள்ள தண்டனையைத் தருகிறஇடம்! சட்டத்தின் பிறப்பு வளர்ப்பு பெற்றோர் உற்றார் இவைபற்றிய விசாரணை நடத்தும் இடம் அல்ல!!

சட்டத்தின்படி நடந்துகொள்கிறோம் என்று வழக்கு மன்றத்தினர் பேசுவர்; ஆனால் சமுகத்தில் உள்ள நல்லறிவாளர் கள், சட்டத்தை நிறுத்தி வைத்து, விசாரணை

நடத்தித் தீர்ப்பளிக்க வேண்டும்.

குற்றவாளியின் பெயர், வயது, தொழில், ஊர் இவைகளை, வழக்குமன்றம் விசாரிக்கும்.

சமுகம், சட்டத்தின் பிறப்பு - இலட்சணம் - இதன் விளைவுகள் - இவைகளை விசாரித்துப் பார்த்து தீர்ப்பளிக்க வேண்டும்.

வழக்கு விசாரணை நாட்கணக்கில், மாதக்கணக்கில், மிகச் சிக்கலானதாக இருப்பின், வருடக்கணக்கில்கூட நடந்தேறி முடிவடையும்.

சமுகம், சட்டத்தைப்பற்றிய விசாரணை நடத்தித் தீர்ப்பளிக்க, ஆண்டுகள் அல்ல, நூற்றாண்டுகள் பிடிக்கும்

அதற்கு இடையில் பலர், பலியாக வேண்டும் - சட்டம் தன் வேலையைச் செய்துகொண்டேதான் இருக்கும்.

செல்லமாகப் பெயரிட்டனர் குழந்தைக்கு. ஆனால் அந்தக் குழந்தை, பெற்றோருடன் இருக்கக்கூடாது என்று சட்டம் கூறுகிறது - டாக்டர் வெர்வுட்டின் சட்டம்!

பாட்ரிக் மாடிம்பா என்பவர், தந்தை; வழக்கறிஞர்; வயது முப்பதுக்குள்; ஆப்பிரிக்கர்; டாக்டர் வெர்வுட்டின் மொழிப்படி கருப்பர்!

அவர் டச்சு நாட்டைச் சேர்ந்த ஒரு மங்கையை மணம் செய்துகொண்டார், இங்கிலாந்தில் படிக்கும்போது. அவள், வெள்ளையர் இனம்!

முனேனி பிறந்தாள். மூவருமாக ஆப்பிரிக்கா வந்தனர்.

அங்கு சட்டம் கட்டளையிடுகிறது, தாய் டச்சு நாட்டு வெள்ளைக்காரி, எனவே, அவள் வெள்ளையர் வாழும் பகுதியில்

தான் இருக்க வேண்டும்; தந்தை கருப்பர், எனவே வேறு இடத்தில் கருப்பருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குப் போயாக வேண்டும், குழந்தை கலப்பு இனம் - எனவே, இரு இடத்திலும் இருப்பதற்கில்லை, கலப்பு இனம் வாழவேண்டிய இடம் கொண்டுபோகப்பட வேண்டும் என்று சட்டம் ஆணையிடுகிறது.

"எம்மைப் பிரியாள்'' என்று தாயும் தந்தையும் குழந்தையைக் கொஞ்சிக் கொஞ்சி முத்தமிட்டிருப்பர்; குழந்தையும் தாயிடம் தாவித் தாவிச் சென்று விளையாடி இருக்கும், தந்தையின் கன்னத்தில் முத்தமிட்டிருக்கும்; ஆனால் சட்டம், தாயையும் சேயையும் பிரிக்கிறது! இப்படி ஒரு சட்டமா? என்று கேட்பதே சட்ட விரோதம்.

இது நாடு அல்ல, காடு! சட்டமல்ல, சண்டாளத்தனம்! என்று ஆப்பிரிக்காவில்

இருந்துகொண்டு அல்ல, வெளி ஏறி வேறு நாடு சென்றுதான், அவர்கள் பேச முடிகிறது. சட்டம் பார்த்தாயா, தம்பி! 1960ல்!! மக்களாட்சியில்!!

அந்தச் சட்டத்தை, வழக்குமன்றம், மதித்தாக வேண்டும்! ஆட்சியாளர் அதை அமுல் நடத்தித் தீருவார்கள். அறிவுலகம் கண்டிக்கும்! ஆனால், அந்தச் சட்டம் அமுலில் இருக்குமிடத்தில், அதை மதிக்க மறுப்போரும், மீறி நடப்போரும், தண்டிக்கப்படுகிறார்கள் - சட்டப்படி!!

மக்களால் அமைக்கப்பட்ட அரசு, மக்கள் மன்றத்தில் பேசி முடிவு எடுத்து, சட்டம் இயற்றுகிறது. சட்டம்பற்றிப் பேசப்படும்போது, பலரும் தத்தமது கருத்துரைகளை வழங்குகிறார்கள், திருத்தங்களைத் தருகிறார்கள், வாக்கெடுப்பு நடக்கிறது. பிறகே சட்டமாகிறது. ஆகவே, சமுகம்,

அந்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்கிறது என்று கூறுவது கேட்டிருப்பாய். அப்பழுக்கற்ற வாதம்! திறமை மிகுந்ததுங்கூட!

ஆனால், அடிப்படையில் உள்ள நிலைமையைக் கவனித்தாயா?

மக்களாட்சி முறைப்படி, பெருவாரியான இடங்களை, மக்கள் மன்றத்திலே பெற்ற கட்சியினர், என்ன தேவை என்று நினைக்கிறார்களோ, அவ்விதம் சட்டம் இயற்றிக்கொள்ள முடிகிறது.

எதிர்ப்பு இருக்கலாம், அந்த எதிர்ப்புரையில் நியாயம் இருக்கலாம்; நிபுணர்கள் சிக்கல்களை எடுத்துக்காட்டலாம், அவை உண்மையாக இருக்கலாம்; ஆனால், கடைசியில், "ஓட்' தானே - சட்டமாகி விடுகிறது. ஆளும் கட்சியின் விருப்பம், எதைச் சொன்னால் என்ன? நிதி மந்திரிபோல் வாதத்

திறமையைக் காட்ட வாய்ப்பு என்று எண்ணி, எதிர்ப்புரைகளின் உள்ளே நுழையாமல், பேசுவோர்மீது கேலி வீசி, மேதை என்று அரசியல் பந்துக்களிடம் பெயரெடுக்கலாம்; சட்டம் நிறைவேறிவிடும். அல்லது அந்த வீண் வேலைதான் நமக்கேன் என்ற போக்கில், அமைச்சர் பக்தவத்சலத்தைப் போல, எதிர்த்தரப்பினர் ஆவலுடனும், நம்பிகையுடனும் எடுத்துச் சொல்வதை எல்லாம், துளி அளவு உணர்ச்சியும் காட்டாது கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, எழுந்து நின்று, கனம் இன்னார் சொன்னதை ஏற்றுக்கொள்வதற்கில்லை, என்று பேசிவிட்டு, உயர்த்தப்படும் கரங்களைத் துணைக்கு அழைத்துக் கொள்ளலாம்.

இந்த விதத்தில், சட்டங்கள் இயற்றிக்கொள்ள வாய்ப்புப் பெற்ற ஆளுங்கட்சியை, ஆட்சிப் பொறுப்பில்

மக்கள் அமர்த்தியது, இந்த விதமான சட்டங்கள் இயற்றுவார்கள், இயற்ற வேண்டும் என்பதற்காக அல்ல. வேறு பொதுவான நல்லியல்புகளோ, சுவையுள்ள வரலாறோ, திறமையோ இருப்பதாகக் கண்டறிந்த காரணத்தால், பந்தல்போட வந்தவன், சொந்தம் கொண்டாடத் தொடங்கினால், வந்த வேலையைப் பார்த்து விட்டுப்போ! என்போம்; ஆளுங் கட்சியை அவ்விதம் சொல்ல முடியாதே, ஐந்தாண்டுகள் வரையில்!!

சட்டம், பிறப்பது இவ்விதத்தில்.

அதிலும், இப்போது எங்கள்மீது தொடரப்படும் வழக்கு. மக்கள் மன்றத்தில் பேசி, விவாதித்து, முடிவு கண்டு, இயற்றப் பட்ட சட்டம் அல்ல. இது அவசரச் சட்டம்.

சட்டத்தில், அவசரம் இருக்கக்கூடாது - எனினும், இது அவசரச் சட்டம் என்றே

பெயரிட்டு அழைக்கிறார்கள். ஏனோ!

இந்த அவசரச் சட்டம், மிக நிதானமாக யோசித்து உரையாடி, விளக்கம் பெற்று, விவாதித்து, பல நாடுகளிலே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, வேலை நிறுத்த உரிமை சட்டபூர்வமானது என்பதையே மறுக்கும் சட்டம்

! தம்பி தசரதன் ஒரு நாள் கூறக்கேட்டேன் - அங்காடியில் கிடைத்தது, திடீர்ப் பாயாசம் என்று. என்னவென்று கேட்டதில், திடீரெனப் பாயாசம் தேவைப்பட்டால், ஒரு பிடி அந்தத் தூளை எடுத்து கொதிக்கும் தண்ணீரில் போட்டுக் கலக்கினால் பாயாசமாகுமாம் - பருகலாமாம் - பருகினதாகச் சொன்னார்.

பாயாசம் செய்யப்படும் முறையோ, மிகப் பக்குவமானது. நன்றாகக் கலந்து, குழம்பி, கொதித்து, பதமான பிறகு பாயாசமாகும்;

நேரம் பிடிக்கும்; நொடியில் ஆகாது. ஆனால், அங்காடியில் கிடைக்கிறதாமே திடீர்ப் பாயாசம். அதுபோல அரசியல் அங்காடி, அவசரச் சட்டம் தருகிறது. இது தனி தனியான மகத்துவம் வாய்ந்தது. இதைத் திறம்படப் பயன் படுத்திப் பலன் காணும் இதே காங்கிரசார், வெள்ளையர்கள் அவசரச் சட்டம் போட்டபோது பேசிய பேச்சினை நான் கேட்டிருக்கிறேன்; நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் என்று தோன்றும் வெள்ளைக்காரருக்கு, அந்தப் பேச்சுகளைக் கேட்டிருந்தால்.

பேசினார்கள் அப்போது, இப்போது வெள்ளையராகி வெறியாட்டம் ஆடுகிறார்கள்.

அந்த வெறியாட்டத்தையே நாடு தாங்கிக்கொள்கிற போது, நம்மிலே சிலர் வழக்குகள், விளைவுகள் ஆகியவற்றையா, தாங்கிக்கொள்ளக் கூடாது!

வழக்கு என்றதும், எனக்கு என்னவோ உன்னிடம் பொதுவாகவே, சட்டம் என்பதுபற்றிய பேச்சுப் பேசலாமா என்று தோன்றிற்று; ஆனால்தான் இது.

சட்டம், தூய்மையான உள்ளத்துடன், நெறி தவறா முறையில் இயற்றப்பட்டாலும், இயற்றியவர்கள் சமுகத்தில் எவ்விதமான அமைப்பு இருக்க வேண்டும் என்று விரும்பி, அதனைத் தமது குறிக்கோள் ஆக்கிக்கொள்கிறார்களோ, அதனை நிலை நிறுத்தவும், மற்றவர்களும் விரும்பினாலும்விரும்பாவிட்டாலும் ஏற்றுக்கொள்ளவும் செய்வதற்காக வடித்தெடுக்கப்படும், கருவி - வேறென்ன!

சமுக அமைப்பிலே, ஒரு அடிப்படை மாறுதல் தேவை என்று நெஞ்சார உணர்ந்து, அதற்கான குறிக்கோளைச் சமைத்தளிக்கும் ஒரு இயக்கம் அல்லது

சிலர் அந்தக் குறிக்கோளுக்காகப் பாடுபடும்போது, ஏற்கனவே உள்ள சட்டங்களின் காரணமாக, வழக்கு மன்றம் இழுக்கப்பட்டால், வருத்தமடையாது செல்வதும், கடும் தண்டனை தரப்பட்டால், கலங்காது ஏற்றுக்கொள்வதும், அவர்கள் செலுத்தவேண்டிய காணிக்கை! அதனைத் தருவதற்கு எனக்கு வாய்ப்புகள் கிடைக்குமானால், அதைவிடப் பேறு வேறென்ன இருக்க முடியும்!

குறிக்கோளைப் பெரிதெனக் கொண்டவர்கள், அந்தக் குறிக்கோளை நாடு ஏற்றுச் செயல்படுவது எப்போது என்பதில் நாட்டம் கொண்டவர்கள் மீது சட்டமாகட்டும், அவசரச் சட்டமாகட்டும் வீசப்பட்டால் விசாரப்படவா செய்வர்? வழக்குமன்றம் தன் கடமையைச் செய்கிறது, நாம் நமது கடமையைச் செய்வோம் என்றே இருப்பர்.

விடுதலை விரும்பிகள் அந்த மனநிலையைப் பெறுவதற்கு, வழக்குமன்றங்கள் மெத்தப் பயன்பட்டிருக்கின்றன.

இடையிலே வந்தது இருக்கட்டும். இந்தி விஷயத்தை எடுத்துக்கொள். அதுகூடச் சட்டம்தான்! இந்திய அரசியல் சட்டம்! அதிலே, 1965லில் இந்தி ஆட்சி மொழி ஆகியே தீரவேண்டும் என்று இருக்கிறது. அடடா! சட்டம் அப்படி இருக்கிறதே, நாமென்ன செய்வது என்றா இருக்கிறோம்? முடியுமா! இருக்கலாமா! இருந்திடுவோர் தமிழரா!!

அது ஆகாது, தீது, ஏற்கமாட்டோம், என்று தமிழகம் கூறுகிறது.

சட்டமய்யா சட்டம்! - என்று ஆர்ப்பரிக்கின்றனர், ஆளவந்தார்கள்.

பதில் என்ன தருகிறோம், யார் போட்ட

சட்டம்? யாருக்காகப் போடப்பட்ட சட்டம்? எப்படிப் போடப்பட்ட சட்டம்? ஏன் அப்படி ஒரு சட்டம்? என்றெல்லாம் கேட்கிறோம்.

கவனித்தாயா, தம்பி! சட்டத்தைச் சமுகம் விசாரிக்கிறது! உன் பிறப்பு என்ன, வளர்ப்பு என்ன, இலட்சணம் என்ன என்று!!

என்னையும் நண்பர்களையும் வழக்குமன்றத்தில் நிற்க வைத்து, விசாரணை நடத்துவார்கள்.

ஆனால் சுவையுள்ள, பயனுள்ள, சிறப்புமிக்க, வரலாற்றில் இடம் பெறத்தக்க விசாரணை, சமுகம் நடத்திக்கொண்டிருக்கிறது - சட்டத்தைக் கூண்டில் நிறுத்தி!!

காணவேண்டிய காட்சி, கேட்டு இன்புறவேண்டிய செய்தி, அதுதான்.

தொழிலாளர்களைத் தூண்டிவிடப்

பேசியதாக வழக்குத் தொடரப்படுகிறது.

நானும் நீயும், தம்பி! மிகப் பெரிய குற்றம் ஒன்றினைச் செய்துகொண்டே இருக்கிறோம். சட்டத்தைக் கூண்டிலேற்றி விசாரணை நடத்தச் சொல்லிச் சமுகத்தை - தூண்டுவது அல்ல - தட்டி எழுப்பியபடி இருக்கிறோம்.

அந்த விசாரணை நாளைத்தான், நாம் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறோம்.

இந்திய அரசியல் சட்டமே! எல்லா அதிகாரத்தையும் மத்திய சர்க்காரில் குவித்துக்கொண்டு, மாநிலங்களை மட்ட மாக்கி வைத்திருக்கிறாயே! ஏன்? என்று சொல்! நியாயமா? என்று கூறு!

வளமெல்லாம் ஓரிடத்திலும், வறுமை பிறிதிடத்திலும் இருக்கும் விதமான, ஆட்சி அமைப்புக்கு வழி வகுத்து விட்டாயே, ஆகுமா இந்த அநீதி?

வரலாற்றுச் சிறப்புப்படைத்த மொழியைப் பெற்றுப் பெருமைகொண்டவர்கள்மீது இந்தியைத் திணிக்கலாமா?

குறிப்பிட்ட சில மாநில மக்களின் தாய்மொழியான இந்தியைப் பொது ஆட்சி மொழி ஆக்கத் துடிக்கிறாயே அதன் விளைவாக அந்த மக்களை மேலோர் ஆக்கி எம்மைத் தாசர்கள் ஆக்கிடும் சூழ்ச்சியைச் செய்யலாமா? - என்றெல்லாம், சமுகம், கேட்கப் போகிறது - கேட்கும் தெளிவு பரவிவிட்டது, துணிவும் துளிர்த்துக் கொண்டிருக்கிறது.

அந்த விசாரணை நாள், விரைந்து பெறப்பட வேண்டும். அந்தப் பணியில் ஈடுபட்டிருப்போர், எத்தனை முறை, வழக்கு மன்றம் செல்லவேண்டி வந்தாலும், அவை, வாய்ப்புகள் என்றே கொள்ள வேண்டும்,

அத்தகைய வாய்ப்பு எனக்கு கிடைக்கிறது!

உனக்கு? எப்போது?

அன்புள்ள,

அண்ணாதுரை,

17-7-1960

12. ஒளி படைத்த கண்ணினாய்! வா! வா! வா!

தேர்தலும் அரசியல் கட்சியும் -

பிராங்கோவும் சட்டமும் -

க்யூபாவின் காஸ்ட்ரோ -

இந்திக்கு வங்காளிகள் எதிர்ப்பு

தம்பி!

வருகிறாயா, ஒரு திருமணக்காட்சி காண! அடே அப்பா! அண்ணனுக்கு எப்படித்தான் இந்த "மனம்' வந்தது, எப்போது பார்த்தாலும், பாடிவீடு வருகிறாயா, களம் வருகிறாயா, சிறைச்சாலைக்கு வருகிறாயா, வழக்குமன்றம் வருகிறாயா என்று அழைப்பு விடுத்தவண்ணம் இருப்பவராயிற்றே, அப்படிப்பட்ட கல்மனக்கார அண்ணன்,

இவ்வளவு கனிவுடன் திருமண வீட்டுக்கு அழைக்கிறாரே வியப்பான நிகழ்ச்சிதான் என்றுதானே எண்ணிக்கொள்கிறாய். திடுக்கிட்டுப் போய்விடாதே, தம்பி! திருமண வீட்டுக்கு உன்னை அழைப்பது, களித்திட, சுவைத்திட அல்ல; கருத்துக் கண்டு பெறத்தான்.

திருமணத்தன்று, மணமக்கள் இருவரும் வேண்டுமானால், எழில் தரும் ஆடை அணி அதிகமின்றிக்கூட இருக்கலாம் - அன்றுதான் அவர்களை எழிலுருவாக்கிடும் இன்ப நினைவு பெருக்கெடுத்து, புது மெருகு கொடுத்திருக்குமே - செயற்கைஅழகு தேடிக் கொள்வானேன். பெற்றோர் - உற்றார் - உறவினர் - உடனிருக்க வந்தோர் இவர்கள், மகிழ்ச்சி தரும் நாளன்று, புதிய கோலம் புனைந்துகொள்ளத் தவறமாட்டார்கள்! நானே, கண்டு கேட்டுவிட்டும் வந்தேன்; தன் அருமைத்

திருக்குமாரிக்குத் திருமணம் நடத்தினார், திருவண்ணாமலை சண்முகம். அடே! அப்பா! பட்டுப்பட்டாடை! சரிகை வேட்டி! புத்தம் புதிய சட்டை! மாப்பிள்ளைக் கோலம்! யார்? மாமனார்!! நம்ம சண்முகம்!! சரி! இதோ, பார் திருமணக் காட்சியை.

”வாங்க! வாங்க! இதோ, இப்படி! இங்கு வந்து, குழந்தைகளை ஆசீர்வாதம் செய்யுங்க’ - என்று குழையக் குழைய அழைக்கிறாரே, அவர்தான் மாமனார்!

இருக்கட்டும்! இருக்கட்டும்! என்று கூறியபடி, புகைக்குப் பயந்துகொண்டு, சற்று தொலைவிலேயே உட்காருகிறாரே, அவர், வருமானவரி அலுவலகத்திலே மிகுந்த செல்வாக்குப் படைத்தவர். திருமண நாளிலும், ”வியாபார தோரணை’ இல்லாமலா, போகும்! அதுதான், உபசாரமாக வடிவெடுத்திருக்கிறது.

பலர் வரவேற்கப்படுகிறார்கள்; மன்றத்திலே முன்னிடம் பெறுகிறார்கள். அதோ பார், ஒரு முதியவர், தள்ளாடியபடி தவிக்கிறார் - வழி கிடைக்காமல், இடம் தேடிக்கொண்டு. திருமண வீட்டுக்குப் போகிறோம், நாலுபேர் வருகிற இடம், பச்சென்று வருகிறவர்களெல்லாம் வருவார்கள், அந்த இடத்துக்கு நான் மட்டும் பக்கிரிபோலப் போகலாமா - "திருஷ்டி பரிகாரம்' போல! - என்ற நினைப்பு அந்த முதியவருக்கு.

வேட்டி வெண்ணிறமாக இருக்கிறது - ஆனால் தம்பி அதற்காக அவர், அதை ஒரு நாள் முன்னதாகவே தோள் வளடுக்குமள வு துவைத்து, அழுக்குப் போக்கி, உலர்த்தி "பெட்டி' போட்டு, பாதுகாத்து, உடுத்திக் கொண்டார். நாட்டு வேட்டி - சரிகையுமில்லை, கரையின் சாயம்கூடக் கலைந்துபோயிருக்கிறது.

என்றாலும், உள்ளதை நல்லதாக்கி உடுத்திக்கொண்டு வந்திருக்கிறார்.

அதோ, ”தங்கப்பல்’ தனவானைப் பார்! சந்தனம் கீழே சிந்திவிட்டதைக் கவனிக்காமல் உட்கார்ந்து விட்டார் - இருபது ரூபாய்க்குமேல் விலை உள்ள வேட்டி - கறைபட்டு விட்டது. திருமண வீட்டுப் பெரியவர், பரிதாபம் காட்டுகிறார் - அவர் அலட்சியமாகப் பரவாயில்லை’ - என்று கூறுகிறார். ஆமாம்,அவருக்கு அது பரவாயில்லை! ஆனால், தம்பி! முதியவர் முகத்தைப் பார்த்தாயா, அச்சம்! எங்கே, தன் வெண்ணிற வேட்டி கெட்டுவிடுகிறதோ என்ற பயம். உள்ளதில், நல்லது அது. அதுவும் கெட்டுவிட்டால், என்ன செய்வது என்ற கவலை அவருக்கு.

மேலே கவனித்தாயா, சரிகை வேட்டி! மடிப்புக் கலையாமல்! அழகாக

இருக்கிறதல்லவா!

பார்த்து விட்டார், திருமணவீட்டுப் பெரியவர், முதியவரை. ஒரு மகிழ்ச்சியற்ற சிரிப்பு!

”வாய்யா, வாய்யா, வரதப்பமொதலி! வா! வா! எங்கே, நீ வராமலிருந்து விடுகிறாயோன்னு பார்த்தேன்’’ - என்கிறார்.

பெருமைப்படுத்திப் பேசுகிறாரா, கேலி செய்கிறாரா, அல்லது வேற்றுமையா என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

அருகே செல்கிறார், பார்! கழுத்திலே போட்டிருக்கும், சரிகை வேட்டியைத் தொட்டிழுக்கிறார், கவனித்தாயா! “சரிகை வேட்டியா! பலே! பலே! கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா! வரதப்பமொதலி, வாங்கின கடனைக் கொடுக்க முடியாமல், திண்டாடினாலும் திண்டாடுவாரே தவிர,

இந்தச் சரிகை வேட்டி போடுவதை மட்டும் மறக்கவே மாட்டார்!'' - என்று கூறியபடி, முதுகிலே ஒரு தட்டுத்தட்டி, ஒரு மூலையைக் காட்டுகிறார் போய், உட்காரச் சொல்லி. இதைக் கண்டுதான் தம்பி! அதோ அந்த வைரக் கடுக்கன், பச்சைக்கல் மோதிரம் இவர்களெல்லாம் இடி இடி என்று சிரிக்கிறார்கள் தெரிகிறதல்லவா, தம்பி! வந்தவர், கேலிப் பொருளாகிறார்! அவர் செய்து கொண்டிருக்கும் அலங்காரமே, கனவான்கள்"கிண்டல்' செய்து மகிழ, வழி செய்கிறது. துல்லியமாக உடுத்திக்கொண்டு போவதுதான் முறை - இடம் அப்படிப்பட்டது - நேரமும் அதுபோல் - என்று எண்ணிக்கொண்டு அதற்காகவே முயற்சி எடுத்துக்கொண்டு, நாலுபேர் வருகிற இடத்துக்கு, நல்லபடி உடுத்திக்கொண்டு, போகவேண்டுமே என்றுதான், வரதப்பர்,

இவ்விதம் வந்தார்! ஆனால், பார்த்தாயல்லவா, அவரைக் கேலி செய்கிறார்கள். ஏன்? வரதப்பர் வாழ்ந்து கெட்டவர்!!

வாழ்ந்து கெட்டவர்கள், தமது நிலைமை வெளியே தெரியாதபடி, மூடி மறைத்தாலும், பூசி மெழுகினாலும் மற்றவர் கண்களுக்கு, உண்மை நிலைமை பளிச்செனத் தெரிந்துவிடும். உடையை, நிலைமையை மாற்றிக் காட்டும் வகையிலே அணிந்துகொள்ளலாம் - ஆனால் உடை உண்மை நிலைமையையா, மூடிடும், உடலை மட்டுந்தானே!

எனக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லை, அண்ணா! இளைத்தவர்களை இறுமாப்பாளர்கள் ஏளனம் பேசி, இழிவாக நடத்தும்போது, என்னால் கண்டு தாங்கிக்கொள்ள முடிவதில்லை. நினைப்பு எப்படி எப்படியோ மாறுகிறது. இந்த முதியவர்,

வறுமையால் வாடிடலாம் - அதற்காக மனிதத் தன்மையற்றா, இந்த மமதைக்காரர் நடந்துகொள்வது? வாழ்ந்துகெட்டவர், சரி! அதனால்? கேலி செய்வதா? கேவலமாக நடத்துவதா, இதுதான் முறையா? இதைக் காண, என்னை வேறு அழைத்து வந்தாயே! - என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது, உனக்கு. தம்பியின் உள்ளம் அறியாதவனா, நான். கோபமாகத்தான் இருக்கும். சரி! காணவேண்டியதைக் கண்டாகி விட்டது, இனி நமக்கு இங்கென்ன, வேலை? வா, தம்பி, போகலாம்.

வருத்தமாக இருக்கிறதல்லவா! கோபம் குறையவில்லை அல்லவா! நினைக்க நினைக்க ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறதல்லவா! ஆமாம், அப்படித்தான் இருக்கும். நான் பட்டிருக்கிறேன், அந்த வேதனையை, பல முறை!

ஆனால், தம்பி! வாழ்ந்துகெட்டவருக்குக் கிடைப்பது இதுதான்; திருமண வீட்டில் மட்டும் என்று எண்ணாதே; எங்கும்; எப்போதும்.

வாழ்ந்துகெட்ட வரதப்பர், கால் வீக்கத்தால் நடக்க முடியாமல் வண்டியிலே போகிறார் என்றால், கேலியாகத்தான் பார்க்கிறார்கள்!

"குதிரை வண்டியிலே போகிறாரே. வரதப்பமொதலி!' - என்பார், ஒருவர்.

குதிரை வண்டியிலா? வரதப்பனா - என்று திரும்பத் திரும்பக் கேட்பார், இன்னொருவர்.

வண்டிக்காரன் தெரிந்தவனாக இருப்பான் - காசு கேட்டிருக்க மாட்டான் - என்று கேலி செய்வார் வேறொருவர்.

மூவரும் சிரிப்பார்கள்! வாழ்ந்துகெட்டவர்கள், இருப்பது போனதால் ஏற்பட்ட வருத்தத்தை மட்டுமல்ல, இப்படிப்பட்ட கேலி கிண்டலையும் சுமந்து தீரவேண்டி

இருக்கிறது.

வாழ்ந்து கெட்டவர்களுக்கு மட்டுமல்ல, அப்படிப்பட்ட இடங்கள், இனங்கள், நாடுகள், எல்லாவற்றுக்குமே, இந்தக் கதிதான், என்ன செய்வது?

பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, நான் செஞ்சிக் கோட்டை சென்றேன் - தேசிங்கு ராஜனின் வீரத்தை எண்ணி வியப்புற்றவண்ணம், கோட்டை உட்புறம் நடந்தேன் - நிழலுக்காகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்த நாய் ஒலி கேட்டு விரண்டு, ஓடிற்று. நாய், தம்பி! சொறிபிடித்த நாய்! எனக்கு, உள்ளபடி துக்கம் துளைத்தது. செஞ்சிக் கோட்டையிலே, தேசிங்கு மன்னன் கோலோச்சிக்கொண்டிருந்த நாட்களில், "பாராசாரியும்"'நீலவேணியும்' அல்லவா அங்கு உலவி இருக்கும் - கவிதைப் புகழ்பெற்ற அந்தப் புரவிகள் கெம்பீரநடை போட்ட இடத்தில்,

சொறி நாயல்லவா ஓடிற்று.

மனிதர்களைத் தள்ளு, தம்பி! அந்தக் கோட்டைக்கு வந்த ”கதி’யை பார்த்தாயா? வாழ்ந்துகெட்டால், இதுதான் நிலைமை வாழ்ந்து கெட்டவர்கள் மீண்டும் வாழ வழிகாண வேண்டும் இல்லை மாண்டொழிய வேண்டும்; இல்லையெனில், உலகிலே சிறுகச்சிறுக மானம் அழிந்து, உள்ளம் நொந்து, உருக்குலைந்து போக நேரிடும்!

தனி மனிதரானால், வாழ்ந்து கெட்ட நிலையால் ஏற்படும் இழிவைத் தாங்கிக்கொள்ள முடியாமல், தனக்கு நிரம்பத் தெரிந்தவர்கள் இருக்கும் இடத்தை விட்டு, அவர்கள் “கண்காணா’ இடம் சென்று காலத்தை ஓட்டுவர். ஒரு நாள், தம்பி! திருக்கழுக்குன்றம் சென்றேன்; குளத்திலே குளித்துவிட்டுத், தங்குமிடம் திரும்பினேன், நண்பர்களோடு. கடைவீதிப்

பக்கம் வருவோர் போவோரிடம் பிச்சை கேட்டுக்கொண்டு, அலங்கோலமான நிலையில் ஒரு மாது இருந்திடக் கண்டேன். பத்தாண்டுச்"சுயராஜ்யம்' இந்த இலட்சணத்தில் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டேன் அந்த மாது, என்னை மிரள மிரளப் பார்த்துவிட்டு, சரேலென நழுவி, வேறு பக்கமாக ஓட்டம் பெருநடையாகச் சென்றிடக் கண்டேன். திகைத்துப் போனேன். நம்மைக் கண்டதும் அந்த மாது முகத்திலே மிரட்சி! நான் காணக்கூடாது என்பதுபோல ஓடி மறைகிறார்களே, என்ன காரணம்? என்று ஒரே குழப்பம் எனக்கு - ஒரு கணம் - பிறகோ, தம்பி! என் கண்களில் நீர் துளிர்த்தது. என்னைக் காணக் கூடாது என்று ஓடி மறைந்த மாது, எனக்குத் தெரிந்தவர், வாழ்ந்து கெட்டவர் - பிச்சை எடுத்திடவேண்டியநிலை பெற்றதை நான் காணக்கூடாது என்று,

பீதிகொண்டு, ஓடி மறைந்திருக்கிறார்கள், பாபம், ஆணாக இருந்தாலாவது, காவிகட்டிக்கொண்டு "அண்ணாமலைக்கு அரோகரா' கூறிக்கொண்டு, பிச்சை அல்ல எடுப்பது, சம்சார பந்தத்தை அறுத்துக் கொண்டேன் என்று பேசி இருக்க முடியும் - மாது - என்ன பேச முடியும். ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தவர்கள் - அதைக் கண்டவன் நான். வாழ்ந்து கெட்ட அந்த மாது, பிச்சை எடுத்துக்கொண்டிருப்பதை நான் காண்பது என்றால், அதைவிடக் கொடுமையான காட்சி வேறென்ன இருக்க முடியும்! எனக்கு அந்தக் கஷ்டம் வரக்கூடாது என்றுதான், அந்த மாது, ஓடி மறைந்திருக்க வேண்டும். மறைந்த மாது, மற்றவருக்குப் பிச்சை போட்டதைக் கண்ட கண்களால் அவர்கள் பிச்சை எடுப்பதைக் காண்பதென்றால், எத்துணை வேதனை ஏற்படும். தம்பி! விளக்கவா முடியும்?

வாழ்ந்துகெட்ட வரதப்பன், மறைந்து அலையும் மாது இடிபாடான கோட்டை - இவை நான் காண்பனவாக மட்டு மின்றி, நம்மோடு தொடர்பு கொண்டனவாக இருந்திடின், வேதனை எத்துணை கொடுமையுள்ளதாகிடும்.

சுவர் இருந்த இடத்திலே, ஓலை வைத்து மறைத்திருக்கும் இடிந்த வீடுகளைப் பார்த்திருக்கிறோம்.

ஓட்டையான பாண்டத்தில், எதையோ ஒட்டிவைத்து, உபயோகப்படுத்துவதைப் பார்த்திருக்கிறோம்.

இவ்வளவுக்குப் போவானேன், தருமமிகு சென்னையில், நித்தம் காணலாமே, கன்றாகத் துள்ளிக் கொண்டிருந்ததை, கைக்கு அடக்கமான தோல் பொம்மையாக்கி, பசுவிடம் காட்டிப் பாலைக் கறந்தளிக்கும் காட்சியினை.

இவைகள், ஒன்றுகூட இப்போது, நம் கண்முன் - மனக்கண் முன் - நின்று நைந்துருக வைத்திடும் காட்சிக்கு ஈடாகாது, வெட்கம், துக்கம் தருவதிலே.

வாழ்ந்துகெட்ட வரதப்பன், திருமண வீட்டுக்கு வந்தானல்லவா, சரிகை வேட்டியுடன் - கேலி மொழி கேட்டிட - தம்பி! தமிழ்த்தாய் காலில் சிலம்பு ஒலிக்க, மேகலை மின்னிட, மணி ஆரத்துடன், உலகம் காண நிற்கிறாள் - ஆனால் நெற்றியில் பொட்டு இல்லை, கூந்தலில் நெய் இல்லை, கண்களிலே நீர் கசிகிறது; காலிலே தளைகள்!! ஆமடா, தம்பி, ஆம்! வாழ்ந்துகெட்ட நிலையில்தான், தமிழ்த்தாய் இருந்திடக் காண்கிறோம்.

வாழ்ந்துகெட்ட வரதப்பனை மண்டைக் கனம் கொண்டவன் கேலி பேசியபோது, வரதப்பனின் மகன், அங்கு இருந்திருந்தால்? மணவீடாகவா இருக்கும்! பெருத்த அமளி

மூண்டுவிடாதோ?

மறைந்தோடிய மாதை, அவன் பேரப்பிள்ளை தற்செயலாகக் காண நேரிட்டால், கசிந்து, கண்ணீர் மல்கி நான் இருக்கும்போது உனக்கேன் இந்தக் கதி? என்று கேட்டுக் காலடி வீழ்ந்து, கல் உடைப்பேன், குப்பை கூட்டுவேன், மாடு போல் உழைப்பேன், எப்பாடுபட்டேனும், உன்னைக் காப்பாற்றுவேன், பாட்டி! உன்னை இந்தக் கோலத்திலா, நான் காண வேண்டும்.

வா, என்னுடன் என்று அழைத்துக்கொண்டு போவானல்லவா?

செஞ்சி, தேசிங்கு மன்னன் வழிவழி வந்தவர்களுக்கு என்று ஆகி, அந்தக் குடும்பத்தினன் ஒருவன், சொறி நாய் கோட்டையில் உலவக் கண்டால், வாளா இருப்பானா?

ஆனால், தம்பி! நாம், நீயும் நானும், நம்மைப்போல உள்ள மூன்றுகோடி தமிழர்களும், தமிழ்த்தாய் தலைவிரிகோலமாகி, தளைகள் பூட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தளைகளும் உடைபடவில்லை, நமது உடலிலும் உயிர் இருந்துகொண்டிருக் கிறது. வாழ்கிறோம் தமிழர் என்ற பெயரையும் சூட்டிக் கொண்டு!!

வாங்கின கடனைக் கொடுக்க வக்கு இல்லாவிட்டாலும், சரிகை வேட்டிக்குக் குறைவில்லை! என்று வரதப்பனைக் கேபேசி, மூலையைக் காட்டி உட்காரச் சொன்னானே, திருமண வீட்டில். அதுபோலத்தான், உலக அரங்கிலே, உரிமையுடன் அதனால் உவகையுடன் அரசோச்சி வாழ்கிறார்களே, அவர்களெல்லாம், தமிழ் அன்னை பூண்டிருக்கும் அணிபணி கண்டு கேலி

பேசுகிறார்கள் - திருக்குறள் என்றோர் அறநூல், உலகிலே வேறு எங்கும் இல்லை அதற்கு ஈடு! சிலப்பதிகாரம், சுவைமிகு காவியம்! அதிலே முத்தமிழ் ஒளி விடுகிறது! - என்று, வரதப்பன் போட்டிருக்கும் சரிகை வேட்டிபற்றிப் பேசியது போலப் பேசிவிட்டு, அவனை மூலையில் உட்காரச் சொன்னது போல, தமிழ்த் தாயை, அடிமைச் சாவடியில் தள்ளி வைத்திருக்கிறார்கள், அவனியோர் - அவள் ஈன்றெடுத்த அருமருந்தன்ன மக்கள், மூன்று கோடி! குன்றெடுக்கும் நெடுந்தோளும், கொடை கொடுக்கும் கரமும் கொண்டோராக இருக்கலாம் - இருக்கிறார்கள். செந்தமிழ் பயின்ற வாயினர் - ஆம்! அதிலே குறைவு இல்லை. ஆனால், தாயின் தாளிலேபூட்டப்பட்டுள்ள தளைகளை நொறுக்கிடத் துணிகின்றனரோ? அதுதான் இல்லை!

காஞ்சிபுரம் குண்டஞ்சி! வெள்ளிச் சரிகை, கருக்காது! நூறாம் நம்பர் மிக நேர்த்தியானது - என்று வரதப்பன், தன் சரிகை வேட்டிபற்றிப் பெருமை பேசுகிறான் என்று வைத்துக் கொள், தம்பி! அதைக் கேட்பவர்கள், ஆமாம்! என்று கூறி, அந்தச் சரிகை வேட்டியைப் போட்டுக்கொண்டிருப்பதற்காகப் பாராட்டவா செய்வார்கள்?

சரிகை வேட்டியின் பெருமை போதுமய்யா, மறைக்காமல் சொல், நேற்றிரவு, பட்டினிதானே? உண்மையைச் சொல்! வட்டித் தொகை கட்டாததற்காகக் கடன்காரன், வீடு புகுந்து பெட்டியையும் தட்டுமுட்டுச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு போனானாமே, உண்மைதானே! வேறு வேலை கிடைக்காததால், விறகுக் கடையிலே எடுபிடியாக இருக்கிறாய் - மறுக்க முடியுமா? - என்றெல்லாமல்லவா கேட்பார்கள்.

அதுபோலத்தான் தம்பி! தாழ்நிலை பெற்று, தருக்கரின் பிடியில் சிக்கி, கட்டுண்டு கிடக்கும் தமிழகத்தின் தனிச் சிறப்புகள் எனப்படும், அகம், புறம், குறள் போன்றவைபற்றி, பெருமிதத் துடன் கூறிடும்போது, உலக அரங்கிலே, கேட்கிறார்கள்.

அத்தகைய தமிழகம் இந்தியப் பேரரசில் பெற்றிருப்பது அடிமை நிலைதானே?

அவ்வளவு இலக்கிய வளம் இருந்தும், தமிழ் தாழ்நிலைதானே பெற்றிருக்கிறது?

முன்னாள் கொடிகட்டி வாழ்ந்த தமிழர், இன்று கூலிகளாகித் தானே உழல்கிறார்கள்?

எல்லா வளமும் கொண்டது தமிழ் என்கிறீர்கள்; உங்களுக்கும் ஆட்சிமொழி இந்திதானே?

என்றெல்லாம் கேட்கிறார்கள். வாழ்ந்து கெட்ட வரதப்பனைக் கண்டே, துக்கம்

துளைத்ததே, இந்தக் காட்சியைக் காணும்போது, வேதனை எத்துணை வேகமாகத் தாக்கும். நாம் அதனால் தத்தளிக்கிறோம் - ஆனால் வேறு சிலர் இருக்கிறார்களே, இதுபற்றிய நினைப்புமற்று - அந்தக் கொடிய குற்றம் இழைப்போர்களை, தாய்த் திருநாட்டுக்காக வரிந்து கட்டிக்கொண்டு பரிந்து போராட முன்வராதவர்களை, போரிடுவோரை முதுகில் குத்தவும் துணிந்திடும் ஈனர்களை -இழி தன்மைமிக்க குற்றம் செய்து, கொழுத்து வாழ்ந்திடும் போக்கினரை, யார், கூண்டிலேற்றி, விசாரணை நடத்தித் தண்டனை தரப்போகிறார்கள்! என்னைப் பிடித்திழுத்து நிறுத்துகிறார்கள், வழக்கு மன்றத்தில்!! ஓராண்டுச் சிறையாம்! ஆயிரம் ரூபாய் அபராதமும் உண்டாம்!! துரைத்தனத்தார் நடமாடவிட்ட அவசரச்சட்டம்,

வேலைசெய்கிறது!! போகட்டும், இவ்வளவு பெரிய வேலை நிறுத்தம் நடைபெற்றதே, அதனால் நேரு சர்க்காருக்கு ஏற்பட்ட மானக்குறைவும், அது மூட்டிவிட்ட மன எரிச்சலும், என்னை ஓராண்டு உள்ளே தள்ளிவைப்பதனால், ஓரளவுக்குக் குறையும் என்றால், நான், மகிழத்தானே வேண்டும். அவ்வளவு பெரிய மனிதருக்கு, என்னால் இந்த அளவுக்காகிலும் "உபகாரம்' செய்ய முடிகிறதல்லவா! அதுவும் நல்லதே - மகிழத்தக்கதே, நானும் அந்த மகிழ்ச்சியுடனேதான், வழக்குமன்றம் சென்றேன், - மீண்டும் செல்வேன்.

தம்பி! அண்ணன் உள்ளேபோய் உட்கார்ந்து விட்டால், கிழமைதோறும் வரும் கடிதம் வாராதோ என்று எண்ணி இப்போதே மனம் குழம்பாதே! உன் நிலை என்ன ஆகிறதோ, விரைவில், யார் கண்டார்கள்?

உன்னை மட்டும், வெளியே உலவவிட்டு வேடிக்கை பார்ப்பார்களா!! அப்படி வெளியே இருப்பதானாலும் - இருக்கும் வரையிலும் - என் கருத்துரைகள் கிழமை தோறும் கிடைக்க, ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன் - வெளியே இருக்கும் வாய்ப்பிலே பெருமளவு, உனக்காக எழுதி அடிகளிடம் சேர்ப்பித்துவிட்டுச் செல்லவே; - ஆகவே அந்தக் கவலை வேண்டாம்.

உனக்கும் எனக்கும் இருக்கவேண்டிய கவலை எல்லாம் என்ன வழக்குத் தொடுக்கிறார்கள், தண்டனை எவ்வளவு கடுமையாகத் தருகிறார்கள் என்பதுபற்றி ஏன் இருக்கப்போகிறது - நாம் கவலைப்படவேண்டியதெல்லாம், நாம் ஈடுபட்டிருக்கும் காரியம் நியாயமானதுதானா, கொண்டுள்ள கொள்கை ஏற்புடையதா என்பதுபற்றித்தான், பெறநினைக்கும்

பொருளுக்குத் தக்க விலை கொடுக்க எவர் தயங்குவர்; தயங்கிடின் தரணி இந்த அளவு செழித்திருக்கத்தான் முடியுமா?

ஆதிக்கக்காரனெல்லாம் கோலாகல வாழ்வு நடத்துகிறான் - சுவைமிகு வாழ்க்கை - ஆளப்பிறந்தவன், கட்டுண்டு கிடக் கிறான். உல்லாசபுரியிலே உலவி, மாளிகையிலே மகிழ்ந் திருக்கிறான், ஆதிக்கம் செலுத்துவோம். அவனை நத்திப் பிழைத்திடும் நாட்டுப்பற்று அற்றதுகளும், அவன் வீசியதைவிலாப் புடைக்கத்தின்று, அதுவும் வாழ்க்கை என்று பெருமைப் பட்டுக்கொள்கின்றன. ஆனால் நாட்டுமக்களின் வாட்டம் போக்கிடப் பணியாற்றியவன், அடிமைகளாகிக் கிடந்த மக்களை ஆண்மையாளராக்கியவன், உரிமைக் குரலெழுப்பி ஊமைகளையும், என் நாடு, என் அரசு என்று பேசவைத்தவன்,

நாட்டுக்கு உழைப்பதன்றி நமக்கு வேறு வேலை இல்லை என்று கூறி, தன்னைத்தானே அந்தத் திருப்பணிக்கு ஈடுபடுத்திக் கொண்டவன், கொடுமை பலவற்றைத் தாக்கிக் கொண்டவன், மனம் குலையா மாவீரன், இன்று பாலைவனப் பகுதியில், பட்டியொன்றிலே, சிறைப்பட்டுக் கிடக்கிறான்; ஆண்டுபல ஆகின்றன; அவன் மூட்டிய விடுதலைக் கனல் பெருந்தீ ஆகிவிட்டது; நாட்டுமக்கள் ஆர்த்தெழுந்து அவன் ஆணைக்கு எதிர் நோக்கி நிற்கிறார்கள், அவனோ, நாட்டைவிட்டுக் கடத்தப்பட்டு, உரிமைகள் பறிக்கபட்டு, "கைதி' என்ற நிலையில் உழல்கிறான். உண்ணலாம், உலவலாம், உறங்கலாம், இதழ் படிக்கலாம், கடிதம் எழுதலாம், ஆனால் தாயகம் வரக்கூடாது! தம்பி! கெனியா நாட்டு மக்கள், கண்கண்ட கடவுள் என்று

போற்றிக்கொண்டாடும், விடுதலை வீரன், ஜோமோ கெனியாடாவைப் பற்றிக் கூறினேன், அத்தகைய கஷ்ட நஷ்டங்களைத் தாயகத்துக்காக ஏற்றுக்கொள்ளும் துணிவு, நமது கொள்கையிலே நமக்கு ஏற்பட்டுள்ள தூய்மைமிகு பற்றுதல் ஏற்படுத்திவைத்திருக்கிறது.

உலகிலுள்ள பல்வேறு நாடுகளும், எந்த அமெரிக்கப் பேரரசிடம் கெஞ்சி நிற்கின்றனவோ, அந்தக் "குபேரபுரி'யைக், கொள்கை வீரம் கொழுந்துவிட்டெரியும் செஞ்சினன் ஒருவன் துச்சமாக மதித்துப் பேசி வருகிறான்! ஏழை நாடு! இன்னும் சரியாக எழுந்து நிற்கக்கூடிய வலிவுகிடைக்காத நிலையில் உள்ள நாடு! எனினும், அந்நாட்டுத் தலைவன்,"என் நாட்டை அடிமைப் படுத்த எண்ணும் நாடு, எத்துணை பெரிதாக இருப்பினும் எனக்கென்ன? அங்கு தங்க

ஓடுகள் வேயப்பட்ட மாடமாளிகைகள் இருக்கலாம், சீமான்கள் பவழம் பதிக்கப்பட்ட கோப்பையிலே பழரசம் ஊற்றி, வைரம் ஜொலிக்கும் உடலினள் மின்னிடும் கண்ணினாள், இடை துவள நடையழகு காட்டிவந்து கொடுக்கலாம். மலைமலையாகப் பண்டங்கள் இருக்கலாம் பாளம் பாளமாகத் தங்கம் இருக்கலாம். என்ன இருந்தால் என்ன? என் நாட்டில் உரிமைக்கு ஈடோ, அவை? என்ற நினைப்பால் உந்தப்பட்டு, எதிர்த்து நிற்கிறான், எடுத்தேன் கவிழ்த்தேன் என்றுகூடப் பேசுகிறான்.

என் நாட்டுச் சர்க்கரை வாங்குவதைக் கொஞ்சம் கொஞ்சமாக, அமெரிக்கா குறைத்துக்கொண்டு வம்புக்கு நின்றால், என் நாட்டிலுள்ள, அவர்களுக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக்கொண்டு விடுவேன்!

அவர்கள் இங்கு தொழிலில் போட்டிருக்கும் மூலத்தனத் தைப் பறிமுதல் செய்து செய்து, கடைசியில் அவர்களுக்கு ஒரு காசும் மிச்சமில்லாதபடி செய்துவிடுவேன்.

வணிகத் துறையில் வஞ்சகத் திட்டத்தைப் புகுத்தி, என் நாட்டுப் பொருளை வாங்காமல் முடக்கிப், பணத்தட்டு ஏற்படச் செய்து, எங்களை பட்டினிபோட்டுப் பணியவைக்கலாம் என்று சூது நிரம்பிய அமெரிக்க நாடு கருதினால், அமெரிக்க நாட்டுப் போர்வீரர்களின் கால் செருப்பிலே அடித்திருக்கும் ஆணிகூட அவர்களுக்குக் கிடைக்க முடியாதபடி செய்துவிடுவேன்!

உலகையே அழித்திடக்கூடிய அணுகுண்டுகளைக் குவித்து வைத்திருக்கிறது அமெரிக்கா - கால் செருப்பாணிகூட மிஞ்சாதபடி செய்துவிடுவேன் என்று பேசுகிறான்,

அளவில், அரசிடம் செல்வாக்கில், பொருளாதாரத் துறையில், குறைந்த நிலையில் உள்ள, க்யூபா நாட்டுத் தலைவன், காஸ்ட்ரோ.

வீரம் நிரம்ப இருக்கிறது - அளவுக்கு அதிகமாகவேகூட - ஆனால் விவேகம் அல்லவே. இப்படிப் பொறிபறக்கப் பேசுவது, என்று தொல்லைகளால் தாக்கப்படாமல் தொலைவிலே உள்ள பார்வையாளர்கள், அறிவுரை கூறலாம். ஆனால், அல்லலை அனுபவித்துக்கொண்டிருப்பவன், அந்த நாட்டுத் தலைவன் - அவன் மனக்கொதிப்புக்கான காரணத்தை, அவனன்றி வேறு யார், உணர முடியும்!

இன்று, காஸ்ட்ரோ கனல் கக்குகிறானே! என்று கடிந்துரைக்கப் பலர் உளர்; ஆனால், அவன் க்யூபா நாட்டைக் கெடுத்தழித்துக் கொண்டிருந்த ஆட்சியை ஒழிக்கக் கடும்

போர் நடாத்திய காலை, அவனைச் சூழ்ந்துகொண்டிருந்த ஆபத்தை, யார் அப்போது அறிந்து ஆறுதல் கூற முன்வந்தனர்? வாலிபப் பருவம்! வழக்கறிஞர் தொழில்! காஸ்ட்ரோ "கனவானாகி' விட வழிபல இருந்தன. ஆனால் அவன், காட்டுப் பாதையிலே சென்றான், நாட்டைக் காக்க! தன் இளவலுடன், துணைவர்கள் சிலருடன். காஸ்ட்ரோ புரட்சிக் கொடியை உயர்த்தியபோது, வேட்டை நாய்களால் விரட்டப்படும் மானினம் போன்றதல்லவாநிலைமை! சிக்கினால், சித்திரவதை! பிடிபட்டான், சிறைப்பட்டான் - 15 ஆண்டுகள் சிறை!! ஆமாம், தம்பி, பதினைந்து ஆண்டுகள்! ஆணவ அரசு அவ்வளவு காலம், தன் ஆதிக்கம் இருக்குமென்று எண்ணி மனப்பால் குடித்தது. ஆனால், இடையிலேயே ஆட்சி கலகலத்துப் போயிற்று. அடித்தளத்தில்

ஏற்பட்டுவிட்ட அழிவு கண்ணுக்குத் தெரியாததால், ஆட்சியாளர், போனால் போகட்டும், போட்டடைத்து வைப்பானேன் இந்தப் போக்கத்ததுகளை; திறந்து வெளியே துரத்துங்கள், எதையோ தேடித் தின்று பிழைத்துப் போகட்டும், என்று இறுமாப்புடன் எண்ணிக்கொண்டு, காஸ்ட்ரோவை விடுதலை செய்தனர். வெளியே வந்த வீரன், பட்டது போதும், இனிப் பட முடியாது துயரம் என்றல்ல, பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகல்லவா, தாயகத்துக்குப் பணிபுரிய முடியும் என்று எண்ணி, மனம் நொந்து கிடந்தேன் - இதோ வாய்ப்புக் கிடைத்துவிட்டது, விட்ட இடத்திலிருந்து வேலையைத் தொடங்க, என்றான். படைதிரட்டினான், பாய்ந்து தாக்கினான், பகை அழிந்தது, க்யூபாவின் தலைவனானான்.

தம்பி! காஸ்ட்ரோ என்னென்ன

முறைகளைக் கையாண்டான் என்பது அல்ல, நாம் கவனிக்கவேண்டியதும், கையாள வேண்டியதும். நாம் கூர்ந்து பார்த்திடவேண்டியது, அவன் எத்துணை கடுமையான விளைவுகளுக்குத் தயாரானான், ஈடுகொடுத்தான் என்பதுதான்.

விடுதலை! விடுதலை! விடுதலை! என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடு, பண்ணிசைத்து வருகிறது, பார்க்கிறோமல்லவா!!

கானா, டோகோலாண்டு, மாலி, சோமாலிலாந்து, மடகாஸ்கர் - என்று பட்டியல் வளர்ந்தபடி இருந்திடக் காண்கிறோம்.

அந்த நாடுகளிலெல்லாம், விடுதலை ஆர்வம், உரிமை உணர்ச்சி, எழுந்த விதம், வளர்ந்தவகை, எம்முறையிலிருந்தன என்பதுகூட, இனித்தான், உலகு

தெரிந்துகொள்ள வேண்டும். அந்த நாட்டு விடுதலை வீரர்கள் பற்றிய குறிப்புகள், அவர்கள் அமைத்த அணிவகுப்புகள் பற்றிய விவரம் இனி வெளியிடப்பட வேண்டிய வீரக் காதைகள்! அந்த நாட்டுக்காக உழைத்தவர்கள், உழைப்பின் பலன் காணா முன்பே கொல்லப்பட்டவர்கள், உழைத்து உருக்குலைந்தவர்கள், அவர்களைத் தீண்டிய ஆபத்துகள், சூழ்ந்துகொண்ட தீச்சுழல்கள் போன்றவை பற்றியவிவரங்கள், இனி வெளியிடப்படவேண்டிய காப்பியங்கள். விடுதலை கிடைக்கும் வரையில், அந்த நாடுகளைப்பற்றி, இதழ்கள், இருட்டடிப்பு நடத்தி வந்தன! இன்று தேடித்தேடிச் சென்று பேட்டி காண்பதும், பெரிது பெரிதாகப் படங்களை எடுப்பதும், பக்கம் பக்கமாகச் செய்திகளைத் தருவதுமாக உள்ளன, ஏடுகள்! நாடு மீட்டிட, நடத்தப்பட்ட

போரின்போது, கேட்பாரற்று, கவனிப்பாரற்றுக் கிடந்தனர் - இன்று அந்த விடுதலை வீரர்கள் வெற்றிபெற்றனர். எனவே அவர்களைச் செய்தி தேடுவோர், மொய்த்துக்கொள்கின்றனர்.

விடுதலை முழக்கம் எழுப்புபவனை, வெறியன் என்று ஏசுவதும், அவன் கையாளும் முறைகளைக் காட்டுமிராண்டித் தனம் என்று கூறுவதும், கூர்த்தமதியற்ற காரணத்தால், மிகப் பலருக்கு வாடிக்கையாகிவிட்டது. வெற்றி கிட்டியதும், வியர்க்க ஓடோடிச் சென்று, வீரனே! தீரனே! என்று புகழ்பாடி, புன்னகைக்குக் காத்துக் கிடப்பதும், அத்தகையோரின் வாடிக்கை.

ஆனால், விடுதலை இயக்கம் இருட்டடிப்பினால் மாய்ந்து போகாது; புகழ்பாடுவோர் கிடைக்காததால், புகைந்து போய் விடாது.

விடுதலை இயக்கம், பலி கேட்கும் - தன்னிடம் பற்றுக் கொண்டவர்களை. பலி, பயங்கரமானதாகக்கூட இருக்கும். பலர், பலியான பிறகு, கடைசி அணிவகுப்புக்கு வெற்றி கிடைக்கக் கூடும்.

அந்த அணிவகுப்புத்தான் உலகிலே, பளிச்செனத் தெரியும்.

முன்னால் அழிக்கப்பட்ட அணிவகுப்புகளைப் பற்றி, உலகம் கவனம் செலுத்தி இருக்காது, வாடிக்கை இல்லை.

முதல் தாக்குதலில் கொல்லப்பட்ட கொள்கை வீரர்களின் புதைகுழிகளை, வெற்றிக்குப் பிறகு, நாட்டவரும், மற்றவரும் தேடிக்கண்டறிவார்கள். பிறகு, அவை வழிபடும் இடங்களாகும் திருத்தலங்களாகும்!

தம்பி! எப்படிப்பட்ட இடம் பெறத்தக்க வாய்ப்பு, நமக்கு இருக்கிறது என்பதை

எண்ணும்போதே, இணையற்ற ஓர் எழுச்சி பெறுகிறோமல்லவா! அதை உணரமுடியாதவர்கள்தான், இடுக்கணும் இன்னலும் தாக்கினால், நாம் தகர்ந்து போவோம் என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள்.

ஒரு அரசியல் கட்சி நடத்தி, அதிலே தேர்தல் பலன் கிட்டவில்லை என்றால், அந்தக் கட்சி கலகலத்துப்போகும். விடுதலை இயக்கம் அப்படி அல்ல. ஒரு அணிவகுப்பு அழிக்கப்பட்டால், புதியதொன்று எழும்! அழிப்பவனின் கரம் துவண்டுவிழும் வரையில் அணிவகுப்புகள் எழுந்தவண்ணம் இருக்கும் - வெற்றி கிட்டும் வரை!

காங்கிரஸ் கட்சியில் உள்ளோர் ஒரு பெரும் தவறு செய்கிறார்கள்; நாம் ஒரு வெறும் அரசியல் கட்சி நடத்துகிறோம், ஆகவே, இருட்டடிப்பால், ஏளனத்தால்,

சதிச் செயலால், கலாம் மூட்டிவிடுவதால், வழக்குகள் தொடுப்பதால், தேர்தலில் தோற்கடிப்பதால், நம்மை ஒழித்துவிடலாம் என்று எண்ணுகிறார்கள்.

சின்னாட்களுக்கு முன்பு, நான் எப்போதும் அளந்துதான் பேசுவேன் என்று கூறிக்கொள்ளும் அமைச்சர் பக்தவத்சலனார் பேசினாராமே, தி. மு. க. வினருக்கு, அரசியல் ஞானமே இல்லை என்று!

ஏன், அவ்விதம் சொன்னார்? அவ்விதம் ஏளனம் பேசி னால், எரிச்சல் ஏற்படும்; அந்த எரிச்சலைத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் - துளைக்கப்பட்டுப் போய் விடுவார்கள் என்று நினைக்கிறார்.

அவர்கள், நாம் ஒரு விடுதலை இயக்கத்தை நடத்துகிறோம் என்பதை உணரவில்லை.

விடுதலை இயக்கம் நடத்துவதற்கான காரணம், ஆயிரம் உள்ளன என்பதையும் அறியவில்லை.

அவர்கள்தான், தம்பி! தமிழ் மொழியினைச் சூழ்ச்சித் திட்டத்தால் அழித்தொழிக்க முற்படும்போதுகூடத் தமிழர்கள், வாய்திறவாதிருப்பர், கைகட்டிக் கிடப்பர் என்று எண்ணுகிறார்களே! அவர்களின் அரசியல் "ஞானம்' அவ்வளவு"அபாரம்!!' நம்மால் முடியுமா, அவர்களுடன் போட்டியிட! கடினம்! மிகக் கடினம்!

அவர்கள் கிடக்கட்டும், தம்பி! தமிழ்மொழி கற்றறிந்தோர்! உரிமை வேட்கை குறித்து, நாடு பல சுற்றியும் ஏடு பல படித்தும் வித்தகரானோர்! இவர்களாகிலும் மொழிக்கு வர இருக்கும் ஆபத்தை அறிந்து துடித்தெழக், காண்கிறோமா? இந்தி ஆதிக்கம், வெறி அளவு

வளர்ந்திருக்கிறது, இது ஆகாது கூடாது, தீது, என்று எடுத்துரைத்தால், என்ன கெட்டுவிடும்.

பிராங்கோவின் ஆட்சியிலே, சர்வாதிகார நோய் பிடித்துக் கொண்டிருக்கிறதைக் கண்டித்துப் பேச்சுரிமை இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, 329 மதகுருமார்கள் கையொப்ப மிட்டுக் கடிதம் அனுப்பினார்கள் என்று மாட்ரிட் செய்தி அறிவிக்கிறது.

பிராங்கோவின் ஆட்சிமுறையைக் குறை சொன்னால், என்ன நடக்கும்? தெரியாதா, அவர்களுக்கு? துணிந்துதான், கண்டிக்கிறார்கள், சிலராகிலும், துணிந்து எதற்கும் தயாராகி உண்மைக்காகப் பரிந்து பேசாவிட்டால், உலகில் அறம்தான் தழைக்குமா? நீதிதான் நிலைக்குமா? எனவேதான், அந்த மதகுருமார்கள், ஆபத்தைத் துச்சமென்று கருதி, பிராங்கோ ஆட்சிமுறையைக் கண்டித்துள்ளனர்.

இங்கு? சீவக சிந்தாமணியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வானவூர்திக்கும், இப்போது விஞ்ஞானம் சமைத்தளித்துள்ள வானவூர்திக்கும் ஒப்புவமை காட்டிப் பேசச் சொல்கிறீர்களா? உம்! மணி மூன்றுக்குக் குறையாமல் மூச்சைப்பிடித்துக் கொண்டு பேச, மேதைகள் இருக்கிறார்கள். முகவரி வேண்டுமா?

நாட்டுப்பற்று எப்படி ஏற்படுகிறது என்பதுபற்றி விரிவுரை வேண்டுமா, உலகப்பெரும் பேராசிரியர்களின் மேற்கோள் களுடன் ஒன்றரை மணி நேரம் பேசிவிட்டுப், பிறகு ஒன்பது நாள், நண்பர்களிடம் அந்தப் பேச்சின் அருமை பெருமைபற்றிப் பேசிட ஆசாமிகள் இருக்கிறார்கள்!

ஆனால், ஆட்சிமொழியாக இந்தி வந்தே தீரும் என்று குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பித்துவிட்டார், குமுறுகிறார்கள் நாட்டு

மக்கள், ஒரு குரல் கேட்கிறதா, அதைக் கண்டித்து அந்த மேதைகளிடமிருந்து!

பிராங்கோவை எதிர்த்தால் மரணதண்டனை கிடைக்கக் கூடும்.

இந்தி ஆட்சிமொழி ஆகக் கூடாது என்று கூறினால், ஆக்கக் கூடாது என்று உறுதி பேசினால், ஆக்கினால் ஆபத்து விளையும் என்று எச்சரிக்கை விடுத்தால், இந்த மேதைகளுக்கு என்ன ஆபத்து வந்துவிடும்!

கை குலுக்குவதும், கனவானே! நலமா? என்று கேட்பதும், குறையக்கூடும-அடியோடு நின்றுவிடாது! இதைக்கூடவா தாங்கிக்கொள்ளக் கூடாது.

பாகிஸ்தானில், நடப்பது, இராணுவ ஆட்சி, அயூப்கான் மிக்க கண்டிப்பானவர். அரசியல் தலைவர்களை எல்லாம் அடைத்துவிட்டார் சிறையில்!

எனினும், பாகிஸ்தானில் மக்களாட்சி முறை ஏற்பட்டாக வேண்டும். கட்சி அரசியல் முறை தோற்றுப்போய்விட்டதாக அயூப்கான் சொல்வது சரியல்ல.

புதிய அரசியல் சட்டத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான், தீட்ட வேண்டுமே தவிர, அயூப்கானால் நியமிக்கப்படும் குழு தீட்டுவது சரியல்ல என்று அறிக்கை வெளியிட்டு, ஆயிரக்கணக்காக அந்த ஏடுகளை, நாடெங்கும் பரப்பி இருக்கிறார்கள், பாகிஸ்தானில் உள்ள 19 உலமாக்கள் - மதத்தின் வித்தகர்கள்.

பயம் அவர்களைப் பிய்த்துத் தின்றதா? இங்கு? பேசச் சொல்லுங்கள், துணிவுடன்! ஏ! அப்பா! என்ன பயம்! எவ்வளவு நடுக்கம்! நமக்கேன் வம்பு என்ற போக்கு.

பாகிஸ்தானில், உலமாக்கள் போலவே,

உயர்நீதி மன்ற நீதிபதியும், இப்போதைய ஆட்சி முறையைக் கண்டித்திருக்கிறார்.

சர்வாதிகார நாடுகளில் ஏற்பட்டிருக்கும், இந்த நெஞ்சுரம், பேச்சுரிமை, எழுத்துரிமை தரப்பட்டுள்ள "ஜனநாயக' நாட்டிலே உள்ள மேதைகளுக்கு ஏற்படவில்லையே! வெட்கப்படுவதா, வேதனைப்படுவதா? சொல்லு, தம்பி!

இந்த கழகத்துக்காரர்கள், வீணாகப் பயம் காட்டு கிறார்கள்; இந்தி ஆட்சிமொழியாகி, ஆங்கிலம் அறவே ஒழிந்துபோய் விடாது; தமிழ்தான் வளரும்; வழக்கு மன்றங்களே கூடத் தமிழில்தான், நடவடிக்கைகளை நடத்தும் என்று சுவை சொட்டச் சொட்டப் பேசுகிறார் சுப்பிரமணியனார் - அமைச்சர்!

சரியான போடுபோட்டார், பயல்கள் திணறுவார்கள் என்று, தெந்தினம்

பாடிடுவோர் பேசினர். ஆனால், அமைச்சர் சுப்பிரமணியம் சுருண்டு கீழே விழத்தக்க, அறை கொடுத்தார், டில்லியில் அரசோச்சும் சட்டத்துறை அமைச்சர், சென்.

சுப்பிரமணியனார் செப்பினார், தமிழிலேயே, வழக்குமன்ற நடவடிக்கைகள் இருக்கும் என்று. டில்லி அமைச்சர், இது யார் பைத்தியக்காரத்தனமாகப் பேசுபவர்! என்ற எண்ணிக் கொண்டவர்போல உண்மையைக் கக்கிக் காட்டினார்.

சுப்ரீம் கோர்ட்டிலே இந்தி மொழியில்தான் 1965-க்குப் பிறகு நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

அப்போது, இராஜ்யங்களில் அந்தந்த இராஜ்ய மொழியில் வழக்குமன்ற நடவடிக்கைகள் இருந்தால் குழப்பமாகி விடும்.

எனவே, இராஜ்யங்களில் உள்ள

வழக்குமன்றங்களிலும், இந்தி மொழியிலேயே நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

எனவே, சட்டங்களையும், வழக்காடலில் தேவைப்படும் நுணுக்கச் சொற்களையும், ஆங்கிலத்தில் உள்ளதை, இந்தி மொழியில் பெயர்த்திடக், குழு விரைந்து வேலை செய்ய வேண்டும்.

கனைத்தாவது காட்ட வேண்டுமே, கனம் சுப்ரமணியம்; உஹூம்! கப்சிப்! வாய் திறக்கவில்லை! நம்மைப்பற்றிப் பேசச் சொல்லுங்கள். நாராசம், தாராளமாக, ஏராளமாக! "எஜமானர்' இடிக்கிறார். இவர்"படிதாண்டாப் பத்தினி'யாகக் கோலம் பூண்டாக வேண்டுமே! எனவே, வாய்திறந்து அழக்கூட மறுக்கிறார்.

தமிழ் மொழி, இராஜ்ய வழக்குமன்றத்தில்

அரசோச்சும் என்று பேசிவிட்டோமே, - நமது பேச்சினைத் துச்சமென்றாக் கிடும் முறையில், தமிழாவது தெலுங்காவது, இந்திதான் இராஜ்ய வழக்குமன்றங்களில் என்று டில்லி அமைச்சர் சென் அறைகிறாரே, மக்கள் நம்மை மதிப்பார்களா? என்று எண்ணினாரா?

ஐயோ! ஆபத்தான எண்ணமல்லவா அது! அது வேகமாக வளர்ந்தும் விடுமே! வளர்ந்துவிட்டால், என்ன கதி ஆவது? அரும்பாடுபட்டுப் பெற்ற பதவி அல்லவா பறிபோய்விடும் - என்று நினைக்கிறார், நடுக்கமெடுக்கிறது. பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கிறார் - பிறகு இருக்கவே இருக்கிறது, வாய்க்கு வேலை, கழகத்தைத் தாக்குவது!

ஸ்பெயினில், பாகிஸ்தானில் உயிர்போவது பற்றிக்கூடக் கவலைப்படாமல் உண்மைக்குப் பரிந்து பேசுகிறார்கள்.

இங்கு, இருக்கும் பதவி பறிபோய்விடுமே என்ற பயத்தால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித் திரிகிறார்கள்.

பதவிதானே! பறிபோனால்தான் என்ன? என்று, தம்பி! நீ, வெகு எளிதாகச் சொல்லிவிடுவாய்: அவர்களுக்கல்லவா,அதனுடைய அருமை தெரியும்! அது போய்விட்டால், பிறகு இவர்கள் இருக்குமிடம் நோக்கி, யார் திரும்பிப் பார்ப்பார்கள்? இவர்கள் சென்று சென்று பார்த்தாலும், யார் முகம் கொடுத்துப் பேசுவார்கள்? நீ கூறிவிடலாம், பதவியா பெரிது என்று! பதவிதானே, அவர்களின் நிலையைப் பெரிது ஆக்கிற்று! அதைப்போய் இழப்பது என்றால்!!

தம்பி! இங்கு இருப்பதுபோலத்தான் எங்கும் என்று எண்ணிவிடாதே.

நரேஷ்சென் குப்தா

நரேந்திர தேவ்

திரிகுண சென்

சுபீந்திரநாத் தத்தா

ராதாராணி தேவி

பேராசிரியர் குகா

புத்ததேவ போஸ்

பிரமாதநாத் பிசி

நிர்மல்சௌத்ரி பட்டாச்சாரியா

காஜிஅப்துல் வாதுத்

சுஜேந்திரநாத் சென்

அபு சையத் அயூப்

டாக்டர் அதீந்திரநாத் போஸ்

விவேகானந்த முகர்ஜி

மைத்ரேயி தேவி

புரோதீவா போஸ்

சாகராமாய் கோஷ்

அமலன் தத்தா

கே. கே. சின்கா

ஹிரேன் குமார் சன்யால்

இவர்கள், தம்பி! வங்காளத்திலே உள்ள மேதைகள். ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் வித்தகர்கள், புலவர்கள், பெரும் பேராசிரியர்கள், கல்வித்துறை நிபுணர்கள்.

இவர்கள் கையொப்பமிட்டு, ஒரு அறிக்கையை இந்தத் திங்கள் துவக்கத்திலே வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்திய தேசிய மொழிகளின் வளர்ச்சிக்கான மன்றம் ஒன்று, பணியாற்றி வருகிறது; அந்த மன்றத்தின்

சார்பில், இந்தஅறிக்கை. அதிலே இந்தி ஆட்சிமொழி ஆவது பற்றிக் குடியரசுத் தலைவர் விடுத்துள்ள ஆணை கண்டிக்கப்பட்டிருக்கிறது.

ஆணை கண்டோம், ஏமாற்றமடைந்தோம்.

ஆணையில் தெளிவு, விளக்கம் சரியாக இல்லை.

இந்தி மொழியின் சார்பில் ஒருதலைப்பட்சமான அக்கறை காட்டப்பட்டிருக்கிறது.

இந்தி பேசுவோருக்குத் தனிச்சலுகை, மேலிடம் அளிக்கப் படுகிறது.

இந்தி அல்லாத மற்ற மொழி பேசுவோருக்கு, இது பெருத்த அநீதி இழைப்பதாகும்.

இந்தி பேசாத மக்களுடைய ஒப்பம்

பெறாமல், ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தி ஆட்சி மொழியாகப் புகுத்தமாட்டோம் என்று 1959-ம் ஆண்டு செப்டம்பர் நாலாம் நாள், பாராளுமன்றத்தில் பண்டித நேரு வெளியிட்ட கொள்கை, திட்டவட்டமாகக், குடியரசுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிடும் என்று இந்த மன்றம் எதிர்பார்த்தது; ஏமாற்ற மடைந்தது.

குறுகிய கால அளவுக்குப் பிறகு, அகில - இந்தியத்துறை அலுவலகப் பணிகளுக்கான தேர்வுகள், இந்தியில் நடைபெறும் என்று ஆணையில் குறிப்பிட்டிருப்பதை இந்த மன்றம் பலமாகக் கண்டிக்கிறது.

இந்தத் தேர்வுகளில், இந்தியாவின் மற்றத் தேசிய மொழிகள் குறித்து யோசிக்கக்கூட இல்லை என்பது கண்டிக்கத்தக்கது.

இந்த ஏற்பாட்டினால் இந்தி பேசும்

மக்களுக்குத்தான் மற்றவர்களை மிஞ்சக்கூடிய சலுகை கிடைக்கும்.

இந்த நிலைமையினால் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே ஆபத்து விளையக்கூடும்.

முதலமைச்சர் நேரு கொடுத்த வாக்குறுதியின்படி, காலக் கெடுவின்றி, ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருக்கும் விதத்தில், குடிஅரசுத் தலைவர் தமது ஆணையைத் தெளிவாக்கும்படி இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

தம்பி! குமாரபாளையத்திலே, நாம் கூடி, குடியரசுத் தலைவரின் ஆணை குறித்து, என்ன கருத்தினை வலியுறுத்தி னோமோ, அது ஏதோ "பக்தவத்சலனாரின் பாஷைப்படி"அரசியல் ஞானம்' அற்றவர்களின் போக்காக இருக்கட்டும்; மந்திரி சுப்ரமணியத்தின் வாதப்படி, விவரம்

தெரியாதவர்களின் பேச்சாக இருக்கட்டும்; எல்லாமறிந்த காமராஜரின் பேச்சுப்படி, விளையாட்டுத்தனமாக இருக்கட்டும்; இதோ, வங்க நாட்டு வித்தகர்கள் அதே கருத்தினைத் தெளிவுடன், துணிவுடன், எடுத்துக்காட்டி அறிக்கை வெளியிட்டனரே, இதற்கு என்ன பதில் அளிக்கப்போகிறார்கள், பதவி பெற்றவர்கள்! இத்தனை வித்தகர்களும், அரசியல் ஞானமற்ற, விவரம் தெரியாத விளையாட்டுக்காரர்களா? நிந்தித்து நிந்தித்துப் பழகிப்போன மந்திரிகளின் நாக்குக்கூடக் கூசுமே, அப்படிச் சொல்ல! இவர்கள் ஒவ்வொருவரும், தத்தமது துறை, தொழில், கொள்கை ஆகியவைகளைப்பற்றிக் கவலைப்படாமல், பதவியில் உட்காரவேண்டுமென்றால், காமராஜர்கள் ஆகிவிடலாமே! அதாவது மந்திரிகளாகலாமே! இவர்களல்லவா

குடியரசுத் தலைவரின் ஆணையைக் கண்டிக்கிறார்கள்; குலைநடுக்க மல்லவா எடுக்கிறது இங்கு உள்ள கற்றறிவாளர்களுக்கு!!

தம்பி! இந்த மன்றத்தார் நம்மைவிட ஒரு படி மேலே சென்றுவிட்டார்கள்.

மற்ற மொழிகளின் வளர்ச்சிக்காக அளிப்பதைவிட மிக அதிகமான தொகையை இந்தி மொழி வளர்ச்சிக்காக, இந்திய சர்க்கார் தரக்கூடாது என்பதை அறிக்கை வலியுறுத்துகிறது.

இந்த நாட்டு வித்தகர்கள், தங்களை மெத்தச் சொத்தை உள்ளத்தினர் என்று காட்டிக்கொள்வது கண்டு, வருந்திக் கிடக்கும் வேளையில், வங்கத்திலிருந்து இந்தத் தேன்மொழி கிடைக்கிறது. தம்பி! நாம் கொண்ட கருத்துக்கு மேற்கொண் டுள்ள

போக்குக்கு, எத்தகைய நேர்த்தியான இடமிருந்தெல்லாம் இசைவு இருக்கிறது என்பதைக் காணும்போது, புதியதோர் எழுச்சி பிறக்கிறதல்லவா!

அந்த எழுச்சி நிரம்பிய உள்ளத்தினராக நாமிருக்கும் போது அடக்குமுறை காட்டியா, நமது உறுதியை அழித்துவிட முடியும்.

நான்தான், காணப்போகிறேனே உறுதிபடைத்த நெஞ்சினரை! ஒளிபடைத்த கண்ணனரை! பலப்பல ஆயிரக் கணக்கில்! இந்தி எதிர்ப்பு மாநாட்டில்!

இந்தத் திங்கள் 30-ல் என்னை வழக்குமன்றம் காணப் போகிறது.

மறுநாள், 31-ந் தேதி நான், என் எண்ணற்ற உடன்பிறந்தார்களைக் காண இருக்கிறேன்.

வழக்குமன்றத்திலே இருக்கும்போது, உன்னைத்தானே காண்கிறேன்.

நான் கண்டு களித்திட, பெருமைப்பட, உணர்ச்சி பெற உறுதிபெற, எழுச்சிபெற, வேறு என்ன வேண்டும்?

நீ செல்லும் பாதை சரியானதுதான் என்று உலகிலே நடைபெற்ற, இன்றும் நடைபெறும் உரிமைக் கிளர்ச்சிகள் விடுதலை இயக்கச் செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன.

வழக்குமன்றமோ, நீ கவனிக்கப்படுகிறாய் என்று கூறுகிறது.

தம்பி! நீயோ? தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று நீதானே அண்ணா!

கூறினாய் என்று கேட்கிறாய். எனக்கோ, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற கவிதை மனப்பாடம்.

ஆயினும், கவிதைகள் கட்டுரைகள், வீரக்காதைகள், வெற்றிக் காப்பியங்கள், ஆகியவைகளால் கூட அளித்திட முடியாத

எழுச்சியை, உன் கண்ணொளி எனக்கு அளிக்கிறது, அந்த ஒளியைக் காட்டிட, 31-ந் தேதி, சென்னை வருகிறாயல்லவா?

அன்புள்ள,

அண்ணாதுரை,

24-7-1960

13. பாபுவின் பவனி

இராஜேந்திரப் பிரசாத்தின் உலா -

இந்தி எதிர்ப்பு -

நிதி அமைச்சர் கருத்து

தம்பி!

கிருஹப்பிரவேச மஹோர்சவ விஞ்ஞாபனம்

நிகழும் விகாரி வருஷம் தை மாசம் சுக்ரவாரம் உதயாதி சுப முகூர்த்தத்தில்

ஸ்ரீ மீனாட்சி சமேத சொக்கர் கடாட்சத்தால், அடியேன் ஏகாம்பரதாசன், திருமஞ்சன வீதியில்

புதிதாக அமைத்திருக்கும் வீட்டிற்கு

கிருஹப்பிரவேசம்

செய்யப் பெரியோர்களால் நிச்சயித்து இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டஜன மித்ராளுடன் எழுந்தருளி எம்மை ஆசீர்வதித்தருள வேண்டிக்கொள்கிறேன்.

அன்றிரவு பிரம்மஸ்ரீ காவியானந்த ஸ்வாமிகளின்

"ருக்மணி பரிணயம்'

எனும் காலட்சேபம் நடைபெறும். அனைவரும் வந்திருந்து பகவத் பிரசாதம் பெற்று ஆனந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

தங்கள் விதேயன்

ஏகம்பரதாசன்

"அனுக்கிரஹம்"

இப்படி ஒரு அழைப்பிதழ் உனக்குக்

கிடைத்தால், என்ன எண்ணிக் கொள்ளுவாய்? என்னண்ணா! இது! எங்கே கிடைத்தது இந்தப் பத்தாம் பசலி, எந்தக் குப்பையிலே கிடந்தது? தமிழா, இது? ஒரே மணிப்பிரவாளம்! யார் இந்தத் தாசன்? தேடித்தேடிப் பார்த்தால், தூய தமிழ்ச் சொற்கள் இந்த அழைப்பிதழிலே, ஒரு பத்துக்கூடக் கிடைக்காது போலிருக் கிறதே! தமிழ் வரிவடிவம் ஒரு கேடா, இந்த கலக்கலுக்கு! விஞ்ஞாபனமாம் விஞ்ஞாபனம்! க்ருஹம்! ஏன்? அழைப்பு! இல்லம்! என்று சொன்னால் என்னவாம்? வாயா வெந்துவிடும்? - என்றெல்லாம் கேட்பாய் - கோபம் பொங்கும் உனக்கு. தமிழ் மொழியின் தூய்மையைக் கெடுக்கும் செயலைத்தான், நீ வம்மையாகக் கண்டிப்பவனாயிற்றே!

ஆனால், தம்பி! நான், இந்த அழைப்பிதழை உன்னிடம் காட்டியது, தமிழ் மொழியை எப்படிப் பாழ்படுத்தி இருக்கிறார்கள் பார்த்தாயா

என்பதை எடுத்துக்காட்ட அல்ல!

இதை எனக்குக் கொண்டுவந்து கொடுத்தது யார், தெரியுமா? என் நண்பர் முத்தழகர் தெரியுமல்லவா, உனக்கு; அவருடைய மகன், பொன்னப்பன்! ஆமாம், அவன், அஞ்சல் துறையிலே பணியாற்றுகிறான் - இந்தப் பணிதான்...

அப்படியா அண்ணா! முத்தழகர் ஒரு காலத்திலே பெரிய புள்ளியாக இருந்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் குடும்பம் இப்போது, வளம் கெட்டுவிட்ட நிலையில் இருக்கிறது போலும் என்று கூறிடுவாய் - ஆறுதலளிக்க. ஆனால், தம்பி! புதுமனை புகுவிழா அழைப்பிதழைப் பலருக்கும் கொண்டுபோய்த் தருகிறானே, பொன்னப்பன் - அவன் துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தைக் கழித்தது, இப்போது ”அனுக்ரஹம்’ ஆகியிருக்கிறதே, அதே

இடத்தில்தான்.

வீடு, பலகாலம் கவனிப்பாரற்றுக் கிடந்ததால் கலனாகி விட்டது. பார்ப்பவர்கள் பழுது பார்க்கக் கூடாதா? இது, பாட்டன் முப்பாட்டன் காலத்துச் சொத்தாச்சே? என்று கூறினர்; பணமுடை முத்தழகருக்கு; ஏகாம்பரம் "தாசன்' ஆகிவில்லை அப்போது; வெறும் ஏகாம்பரம்; பணம் அதிகம் சேராதிருந்த காலம்; ஆனால் தன்னிலும் சற்றுத் தாழ்ந்திருப்பவர்களின் நிலைமையை மோப்பம் பிடித்தறிந்து, சிறு சிறு தொகை கடன் கொடுத்து,"வட்டி' பெறுவது வாடிக்கை; முத்தழகர் சிக்கினார், கடன் கொடுத்தான்; வட்டிமேல் வட்டி ஏறிக் கடைசியில் வீடே அவனுக்கு என்றாகிவிட்டது, தம்பி!அந்த வீடுதான் இப்போது "அனுக்ரஹம்' ஆகிவிட்டது; ஏகாம்பரம்,"தாசன்' ஆகி கிருஹப் பிரவேசம் நடத்துகிறான். அந்த

அழைப்பிதழைப் பலருக்கும் கொடுக்கும் பணியில், முத்தழகர் மகன் ஈடுபட்டிருக்கிறான்!

குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் தமிழகத்தில் உலா ஏற்பாடாகி இருக்கிறது; அந்த உலாவைக் காமராஜர் ஏற்பாடு செய்கிறார்; நாட்டவருக்கும் அறிவித்திருக் கிறார்; அன்பழைப்புகளை அனுப்பப் போகிறார்!!

□

குத்திக் குடலெடுத்துக் கொன்றுவிட்டான் காதகன்; குங்குமம் இழந்தாள் குமாரி. குமுறிக் கிடக்கிறாள் கைம்பெண்ணாகி! ஓர் நாள், விவரமறியாச் சிறுமிகள் ஓடோடி வந்து, “எப்போது பார்த்தாலும் கண்ணீர் வடித்தபடி இருக்கிறாயே அக்கா! வந்துதான், பாரேன் வெளியே! வாண வேடிக்கை! பொய்க்கால் குதிரை ஆட்டம்

ஊர்வலம் வருகிறது, வந்துதான் பாரேன்!' என்று அழைக்கிறார்கள்."நான் இருக்கும் இருப்புக்கு, வேடிக்கை வேறு பார்க்க வேண்டுமா? உள்ளவர்கள் மகிழ்ச்சி கொள்கிறார்கள் - நான்தான், மஞ்சள் இழந்த மாபாவியானேனே - எனக்கு என்ன வேலை, களிப்பு நடமாடும் இடத்தில்?'' என்று கூறுகிறாள் மாது. சிறுமியர், விடாப்பிடியாகப் பிடித்திழுத்து வருகிறார்கள். வெளியே, ஊர்வலம் வருகிறது! என்ன காண்கிறாள் ஊர்வலத்தில்! குத்திக் குடலெடுத்துக் கொன்றானே, கணவனை, அந்த வீராதி வீரனை, விருதுகள் பெற்றான் என்ற காரணத்துக்காக, ஊர்வலமாக அழைத்து வருகிறார்கள்!!

தமிழ்த்தாய் தலைவிரிகோலமாகிக் கதறி, என் மக்கள் இனி இந்த இந்தியிடம் சிக்கி என்னென்ன பாடுபடவேண்டி

நேரிடுமோ, இந்தியை ஆட்சிமொழி ஆக்கிவிட்டால், அம்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டவர்களன்றோ, ஆதிக்கம் செலுத்திடவும், அரசோச்சி மகிழவும் வழி ஏற்பட்டுவிடும், என் மக்கள் இழிநிலைமைக்குத் தள்ளப்பட்டுக், காடு வெட்டவும், கல் உடைக்கவும், குப்பை கூட்டவும் குற்றவேல் புரியவுமான அடிமை நிலையன்றோ அடைவார்கள்! சீராட்டிப் பாராட்டி வளர்த்தேன், செல்வக் குடிப்பிறந்தீர்கள், செயற்கரிய செய்து வாழ்வீர்கள் என்றெல்லாம் சொல்லிச் சொல்லிப் பூரித்துக் கிடந்தேன். இப்போதோ எமது மரபு அழித்திடும் இந்தியன்றோ ஆட்சி மொழியாகிறதாம் என்று கதறித்துடித்திடும் வேளையிலே, இந்திமொழிக்கு ஓர் வெற்றி உலா நடத்தி, அந்த உலாவின்போது, இந்திக்கு ஆலவட்டம் வீசிடத் தமிழ்த் தாயை அழைத்தால்,

எப்படி இருக்கும் நிலைமை?

குத்திக் குடலெடுத்துக் கணவனைக் கொன்ற ஓர் மாபாவிக்குக் கொடியவர்கள் உலா ஏற்பாடு செய்து, அதனைக் காண மஞ்சள் இழந்த மாதை அழைத்தால், அவள் எவ்வளவு வேதனை அடைவாளோ, அஃதே போன்ற வேதனையன்றோ ஏற்படும், ஆட்சிமொழி ஆகிவிடும் இந்திக்கு ஆலவட்டம் சுற்றத் தமிழ்த்தாயை அழைத்தால்!

1965க்குப் பிறகு இந்தியே ஆட்சிமொழி என்று அறிவிக்கும் ஆணையைப் பிறப்பித்துவிட்டு, குடியரசுத் தலைவர் தமிழகத்தில் உலா வருவது, இந்தி வெற்றி விழா நடத்துவதற்கு ஒப்பானதுதானே. எப்படித் தமிழர்கள் இதைத் தாங்கிக்கொள்ள முடியும்? ஏன் தாங்கிக் கொள்ளவேண்டும்?

குடியரசுத் தலைவர், ”சாந்த சீலர்’

என்று போற்றப் படுபவர்; வெள்ளையரை விரட்டிடும் போரிலே முன்னணி நின்றவர்; பல கஷ்ட நஷ்டம் கண்டு கலங்காதிருந்தவர்; காந்தியாரின் அன்பினைப் பெரும் அளவு பெற்றுத் திகழ்ந்தவர்; தம்பி! இந்தச் சிறப்புகளை, நான் மறந்திடவில்லை. நீயும் அறிந்தே இருக்கிறாய். ஆனால், குடியரசுத் தலைவர், இந்தி மொழி விஷயத்திலே மிகக் கண்டிப்பானவர்; இந்தி வெறியர்களே, அவரைத்தான் தமது பாதுகாவலராகக் கருதுகிறார்கள்; நேரு பண்டிதர்கூடச் சில வேளைகளில் - நெளிகிறார், ஆங்கிலத்தின் நேர்த்திபற்றித் தன்னை மறந்த நிலையில்கூடப் பேசுகிறார். ஆனால் பாபு இராஜேந்திரர், எப்போதும், இந்தி விஷயத்திலே, திட்டவட்டமாகவும், தீவிரமாகவும், துணிவாகவும் பேசி வருகிறார்; எனவே, இந்தித் திணிப்புக்கு இவரே தக்க

கருவி, இவரைக் கொண்டுதான், இந்தி மொழி ஆதிக்கம் வெற்றிபெறச் செய்துகொள்ள வேண்டும் என்று இந்தி வெறியர்கள், முழு நம்பிக்கையுடன், இருந்து வருகிறார்கள்.

எனவே, பாபு இராஜேந்திர பிரசாத் இந்தி ஆதிக்கக்காரர்களின் பிரதிநிதியாகத் தமிழகம் வருகிறார் - எந்தத் தமிழகம், ஏற்க மாட்டோம் இந்தியை என்று எக்காளமிட்டு நிற்கிறதோ அந்த தமிழகத்தில் உலா வருகிறார்!

□

”ஏடா, மூடா! எனது மொழி இணையற்ற எழிலுள்ள மொழி! தாய்மொழி! தமிழ்மொழி! என்றெல்லாம், முழக்கமிடுகிறாயே! செம்மொழி என்று பேசுகிறாய் செருக்குடன்! வேறு எம்மொழியிலும் காணக் கிடைக்காத கருத்துக் கருவூலங்கள் உண்டு எமது

மொழியிலே என்று இறுமாந்து பேசுகிறாய்! முடியுடை மூவேந்தர்கள் கட்டிக் காத்தனர், போற்றி வளர்ந்தனர், எமது இனிமைத் தமிழ்மொழியை என்று சுவை சொட்டிடப் பேசுகிறாய்! இதோ, பார், பவனிவரும் பாபு, இந்திமொழியின் ஆதிக்கத்தை விளக்கிடும் நடமாடும் சான்று! என்ன சொல்கிறீர்கள், இதைக் கண்டு! நல்ல மொழி என்கிறீர்களே, உமது தமிழ்; எமது இந்தி மொழியை, ஆட்சி மொழி ஆக்கிவிட ஆணையைப் பிறப்பித்துவிட்டு, உலா வரும் அஞ்சா நெஞ்சனாம் எமது பாபுவைப் பாராட்டி, ஒரு வாழ்த்துப்பா இயற்றுங்கள்; பரிசு வேண்டுமானால் பெறலாம்! என்றன்றோ, இந்தி வெறியர் பேசுவர்.

இந்தி மொழியை ஆட்சிமொழியாக்கிவிட்டால், சமாளிக்க முடியாத எதிர்ப்பு எழும். சண்டமாருதம்

போலத் தமிழர் கொதித்தெழுந்து நிற்பர். அவர்கள் விழி உமிழும் கோபக்கனல் தீயாகித் திக்கெட்டும் பரவும் என்றெல்லாம் பேசுகிறார்களே. என்ன செய்ய இயலும், பிடியை எம்மிடம் சிக்கிட விட்டுவிட்ட தமிழர்களால், அடிமைத் தளைகளையே அணிபணி என்று எண்ணிக் கொண்டுள்ள ஏமாளிகளால், கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு குழைந்து கிடக்கும் கும்பலால்! பவனி வருகிறார், பாபு! பல்லிளித்து நிற்க ஆட்கள் வேண்டுமா, காட்டுகிறோம், பாருங்கள்! பராக்குக் கூறிடுவோர், பாரீர்! - என்றல்லவா, பேசுவர், எதிர்ப்பு எதுவாயினும் அதனை முறியடித்து, எதிர்ப்போரின் இடுப்பொடித்தோ உயிர் குடித்தோ, எதிர்ப்பை அழித்தொழித்து, எமது இந்தியை ஆட்சிமொழி ஆக்கியே தீருவோம் என்று பேசி நிற்கும் வன்கணாளர்கள்.

”அம்மா! அது யார்?’’ என்று கேட்கும் சிறுவனுக்கு, தாய் என்ன பதில் கூறுவது!

“அவர்தானடா, கண்ணே!”அம்மா’ என்று எந்தத் தமிழ் மொழியால் இனிமை வழிய வழிய என்னை நீ அழைத்து அகமகிழச் செய்கிறாயோ, அந்தத் தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் பெற்றுள்ள மக்களுக்கு, வேற்று மொழியை ஆட்சிமொழி ஆக்கிவிட்ட உத்தமர்! உன் தாய்மொழியை நீயே இகழ, இழக்கச் செய்திடும் ”சத்புருஷர்!’ - என்றா பதிலளிக்க முடியும்?

”ஐயோ, அம்மா! நம் தாய்மொழிக்கே ஆபத்துத் தேடியவரா, இவர்? இப்படிப்பட்டவர், என்னையும் உன்னிடம் இருந்து பிரித்து, எவளோ ஒரு வெள்ளாட்டியிடம் விரட்டி விட்டு, உன்னைப் பெற்றவள் இருக்கட்டும் ஒருபுறம்;

இனி இவளிடமே நீ இருந்து வரவேண்டும்!'' என்று கட்டளை பிறப்பிப்பாரோ? பயம் மேலிடுகிறதே! அவரைக் காணவும் கூசுகிறதே!! என்றன்றோ சிறுவனும் கூறுவான்.

"அண்ணா! அண்ணா! அகம் என்பாய், புறம் என்பாய்; அழகுதரும் இலக்கியம் என்பாய்; அவனியோர்க்கே அறிவளிக்கும் அறநூலாகும் குறள் என்பாய்; அந்தத் தமிழ் மொழி பயின்றிடும் நமக்கு, ஆட்சி மொழியாக இந்தியா? அதற்கான கட்டளை பிறப்பித்தவர், இவர்தானா? இவர் விழாக் கொண்டாடும் நாட்டிலா, நாம் நடமாடிக் கிடக்கிறோம்'' என்று தம்பி கேட்பான், அண்ணனை.

□

தம்பி! தமிழகம், எதை எதையோ தாங்கிக்கொள்கிறது; பசி, பஞ்சம்,

பட்டினி, வேலையில்லாக் கொடுமை, விலையேற்றம், கடற்கொந்தளிப்பு எனும் ஏதேதோ இடர்ப்பாடுகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது; எனினும் இதனையுமா தாங்கிக்கொள்ள வேண்டும்?

இந்தி ஆட்சிமொழி ஆகிவிடும்; தமிழர் தாய்நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவர் என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலையில் உள்ள தமிழர்களுக்கு ஒரு ஆறுதல் மொழி அளிக்காமல், இந்தி பேசாதாரின் எதிர்காலம் இருண்டுபோய் விடாது, இந்தி பேசுவோர் ஆதிக்கம் செலுத்தவும், மற்றையோர் அடிமைப் பட்டும் கிடக்கும் நிலை ஏற்படாது என்று உறுதிமொழி அளிக்காமலும், குடியரசுத் தலைவர் உலா வருவது எற்றுக்கு!

நேரு பண்டிதர் வாக்குறுதி அளித்தார், பாராளு மன்றத்தில், ஒரு முறைக்கு இரு முறை.

அதனைத் தம்பி! நிதி அமைச்சர், நினைவுபடுத்துகிறார் - தேவையில்லை. அமைச்சரிடம், நாம் இந்தத் ”தபால்’ உத்யோகம் பார்க்கும் ஆற்றல் இருப்பதை மட்டுமா எதிர்பார்க்க வேண்டும்! நேரு பண்டிதர் தந்த வாக்குறுதி நமக்கும் தெரியும், நாட்டுக்கும் நாம் இதனை அறிவித்திருக்கிறோம்.

ஆனால், விளக்கப்பட வேண்டிய பிரச்சினை, நேரு பண்டிதர் அளித்த வாக்குறுதிபற்றிக் குடியரசுத் தலைவரின் ஆணையிலே ஏன் விளக்கமான, திட்டவட்டமான குறிப்பு இல்லை - என்பதாகும்.

இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், அதற்கு என்னென்ன குழுக்கள் அமைக்கலாம் என்பதுபற்றி ஆர்வமும் அவசரமும் காட்டப்பட்டு, செயல்பட்டு

வருகிறது; அந்த ஆர்வமும் அவசரமும், இந்தி பேசாத மக்களுடைய கருத்து அறியவேண்டும், காலக்கெடுவின்றி ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதிலே ஏன் காட்டப்படவில்லை. அந்த வகையிலே என்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன?

இந்தி பேசாத மக்களின் கருத்தை அறியவும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கவும் உறுதி இருக்குமானால், அந்த வகையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்! அதற்கான நடவடிக்கை, என்ன எடுத்துக்கொள்ளப்பட்டது?

அந்த நடிவடிக்கை எடுத்துக்கொள்ளப்படாமல், இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதற்கான வழிவகைகளிலே மட்டும், ஆர்வமும் தீவிரமும், அவசரமும் காட்டப்படுவதுதான், பேராபத்து என்கிறோம்.

தம்பி! இதற்காகத்தான், இந்தி எதிர்ப்பு அறப்போர் நடாத்த நமது கழகம் முடிவெடுத்திருக்கிறது.

இது, குடியரசுத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதனைக் கண்ணுற்றவர், அது குறித்து ஏதும் கூறாமல், உலா வர மட்டும் ஏற்பாடு செய்கிறார் என்றால், உன்னையும் என்னையும், நம்முடன் திரண்டு நிற்கும் பல இலட்சக்கணக் கானவர்களையும், துச்சமென்று மதிக்கிறார் - இவர்களை ஏதும் செய்யலாம் என்று எண்ணுகிறார் என்றுதானே பொருள்.

□

குடியரசுத் தலைவரின் உலா, இந்த அவர் போக்கை, நாடு ஏற்றுக்கொள்கிறது, அனைவரும் மண்டியிட்டுக் கிடக்கிறார்கள்

என்று உலகுக்கு உணர்த்தவும், இந்தி ஆதிக்கக்காரருக்கு உச்சி குளிர வேண்டும் என்பதற்கும்தானே பயன்படும்!

தம்பி! குடியரசுத் தலைவரோ அல்லது இங்குள்ள எடுபிடிகளோ, நம்மை மதிக்காதது பற்றி, மனம் குமுறி என்ன பயன்? மெயில் பத்திரிகைக்கே, மதிப்பு இன்னும் ஏற்படவில்லையே. அறிவு அவ்வளவும் உருட்டித் திரட்டி, அந்த இதழ் நடாத்துவோரி'டம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது போலவும், இதழின் பணி, நாட்டு நிலைமையை எடுத்து விளக்குவது என்றிருக்க, அதை மறந்து, ஒரு பெரிய இயக்கத்துக்கு "புத்திமதி' கூறிடும் போதகாசிரியராகத் தன்னைத்தானே நியமித்துக் கொண்டு, அறப்போர் நடத்தாதீர்! என்று எழுதுகிறது.

ஏதோ, அந்த இதழுக்குத் தன் அறிவிலே அவ்வளவு அபாரமான நம்பிக்கை -

முற்றிவிட்டிருக்கிறது - இருந்து போகட்டும். நமக்கோ நாட்டுக்கோ, அது நட்டமல்ல. விந்தை மனிதர்களை எவ்வளவோ காண்கிறோம். இது ஒன்று அதிலே! ஆனால், மெயில் வேறொன்று கூறி இருக்கிறது.

அதுதான், தம்பி! என் நெஞ்சை உள்ளபடி, குத்திக் குடைவதாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் கிளர்ச்சிகளின் போது, துரைத்தனம், இலேசான தண்டனைகள் கொடுக்கிறதாம் - சீக்கிரம் சீக்கிரம் சிறையிலிருந்து விடுதலை தந்துவிடுகிறதாம். எனவேதான், கழகம், மறுபடியும் மறுபடியும் கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறதாம்! எனவே, மிகக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று எழுதுகிறது.

துரைத்தனத்தின் மனம் ஏதோ இலவம் பஞ்சாக இருப்பது போலவும், இரும்பாக்கிக் கொள்ள வேண்டும் என்று தூண்டிவிட

வேண்டிய பொறுப்புத் தனக்கு இருப்பதாகவும், இந்த இதழ் எண்ணிக்கொள்வது பேதமை - வேறென்ன?

பிடிக்காதவர்கள்மீது, வேறு சிலரைத் தூண்டிவிட்டு வேடிக்கைக் பார்ப்பவர்களை, மிகமிக மட்டமான மக்கள் என்பர் ஆன்றோர்.

மெயில் இதழுக்கு, நாம், கடுமையாகத் தண்டிக்கப் படுவதிலே என்ன அலாதியான மகிழ்ச்சி ஏற்படுமோ, எனக்குத் தெரியவில்லை - அதையும் அனுபவிக்க விரும்பினால், தாராளமாக அனுபவித்துவிட்டுப் போகட்டும்.

ஆனால், தம்பி! இந்த நேரத்தில், நாமும் ஒரு விஷயத்திலே, தெளிவு பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் கொண்டுள்ள கொள்கையின் தூய்மையிலே நமக்கு அசைக்க

முடியாத நம்பிக்கை இருக்குமானால், நெஞ்சார நாம் அந்தக் கொள்கையிடம் பற்றுக்கொண்டிருப்பது உண்மை யானால், எத்துணை கொடுமை மிக்க தண்டனையையும் ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

நாம் அதற்குத் தயாராக இருக்கிறோமா?

நீண்டகாலச் சிறைவாசம், சொத்துப் பறிமுதல், போலீஸ் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் - எனும் அடக்குமுறையின் பல்வேறு உருளைகள், நம்மீது பாய்ந்து, நம்மைப் பிய்த்தெரியும் நிலை பிறக்கலாம்; தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறோமா?

எதற்கும் தயாராக இருப்பதுதான், இலட்சியவாதிகளின் கடமை - இலட்சணம். நம்மை மாற்றார் மட்டுமல்ல, மந்தமதி படைத்தோரும், இவர்கள் இலட்சியவாதிகள்

என்பதில் ஐயமில்லை, இல்லையெனில் உண்டு களித்திருக்க எல்லா வாய்ப்புகளும் இருக்கும்போது, இவர்கள், அடக்குமுறையின் உறுமலைப் பொருட்படுத்தாமல், பயங்கரப் பற்களை அது நறநறவெனக் கடித்துக்காட்டிக் கிளம்பும் என்பது தெரிந்தும், அதன் பக்கம் நின்று "மெயில்' போன்ற இதழ்கள், விடாதே! கடி! பாய்ந்து பாய்ந்து கடி! பிய்த்துப் பிய்த்து எடு! என்று உசுப்புவது தெரிந்தும், தங்கள் கடமையைத் துணிந்து செய்கிறார்களே என்பதை உணர்ந்து புதுத் தெளிவு பெறவேண்டும்.

அறப்போர் பலவற்றில், நமது கழகத்தவர் ஈடுபட்டு ஏற்கனவே தியாகத் தழும்பு பல பெற்றுள்ளனர்; எனினும், இப்போதும், நமது வீரத்தையும் தியாகமேற்கும் திறத்தையும் பழித்துப் பேசிடத் துணிவு கொள்கின்றனர். ஒரேயடியாகத் தலைதூக்க முடியாதபடி

அடித்து நொறுக்கிவிட வேண்டும், இவர்களின் தொல்லை தாளக்கூடியதாக இல்லை என்ற நினைப்பு, வெறி அளவுக்கு அவர்களுக்கு ஏற்பட்டு விட்டதால், எந்தக் கொடிய முறைகளைக் கையாளவும் தயாராகிக் கொள்வர். தயாராகும்படி மெயில் இதழ் போன்றவைகள் தூண்டிவிடும், தூபம் போடும். "உமது வீரதீரம் அபாரம்! உம்மிடம் நாடே சொக்கிக் கிடக்கிறது. அடக்குமுறை வீசினால், நாட்டு மக்கள் உள்ளத்தில் அருவருப்பு ஏற்படுமோ, வெறுப்புப் பீறிட்டு எழுமோ என்று எண்ணிக் கவலைப்படாதீர்! நாங்கள் இருக்கிறோம், உமக்குத் துதிபாட!! நீங்கள் அவர்களைச் சுட்டுத் தள்ளுங்கள் - செத்தொழிந்தன நாட்டைக் கெடுக்கும் பீடைகள்என்று தலையங்கம் தீட்டுகிறோம்; உமக்குத் திருப்புகழ் பாடுகிறோம்!'' என்று கூறிட இதழ்கள் உள்ளன.

ஆயினும், தம்பி! நம்மிலே பலர் வீழ்ந்துபட்டாலும், நமது உடலிலிருந்து கொட்டும் குருதி கண்டு, கள்ளமில்லா உள்ளம்கொண்டோர், சுயநலமற்றோர், நாடு, மொழி, இனம் என்பனவைகளிலே நம்பிக்கையும் பற்றும் கொண்டார், நமக்காக இரக்கம் காட்டி, ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தால், போதுமடா, தம்பி! நாம் பட்ட கஷ்டமத்தனையும் பஞ்சாகப் பறக்கும். நமது உடலிலே ஏற்பட்ட புண் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாவாகி, உலகுக்கு, உண்மையை உரைத்திடும். சுற்றிச் சுற்றி வந்து ஊர் மக்களுக்கு, உண்மையை, விளக்கி வரும் நாம், சுடப்பட்டுக் கீழே சாய்ந்தால் காட்டிலே சந்தன மரங்களின்மீது கரி உராய்வதால் காடு முழுதும் மணம் பரவும் என்பார்களே, அதுபோல் நாடெங்கும் வீரம் பரவும். வெற்றி தொட்டணைத்து உச்சிமோந்து முத்தமிடும்.

வேண்டுவது, அடக்குமுறையின் தாக்குதலை ஏற்றுக்கொள்ளும் நெஞ்சுரம். அந்த நெஞ்சுரம், நாம் நேர்மைக்குப் பாடுபடுகிறோம் என்ற நம்பிக்கையிலே இருந்து பிறக்கிறது. அந்த உணர்ச்சியால் உந்தப்பட்டவர்கள், நாம் என்பதை உலுத்தர்கள் உணரமாட்டார்கள்; எனவேதான் அவர்கள், தெருக்கோடிச் சாவடியில் முடக்கிக்கொண்டு கிடக்கும் செயலாற்ற முடியாத நிலைபெற்ற "போக்கிரி', மற்றவர்களைப் பார்த்துக் கூறுவானல்லவா, "பயல்களை விடக்கூடாது! செம்மையாக உதைக்க வேண்டும்! கைகால்களை உடைத்திட வேண்டும்!' என்று. அதுபோலப் பேசுகின்றனர்.

பிறிதோர் நாள், தமிழகத்தில், நாம் நடத்தும் மாநாட்டிலே, பத்து இருபதுபேர், கட்டையை ஊன்றிக்கொண்டு, தத்தித்தத்தி நடந்து வருகிறார்கள் என்று வைத்துக்கொள்

- இப்போது நாம் திட்டமிடும் அறப்போரை அழித்திடும் ஆட்சியாளர், மெயில் தரும் மேலான அறிவுரையின்படி தடிகொண்டு தாக்கி, கால்களை ஒடித்துவிடுவதால் - தம்பி! பத்து இருபது பேர், காலிழந்து, கட்டையை ஊன்றிக்கொண்டு, தத்தித்தத்தி நடந்து, மாநாட்டுக் கொட்டகைக்கு வந்தால், அதை விட வீரஞ் செறிந்த காட்சி, வெற்றித் திருவைத் தேடித் தந்திடவல்ல உணர்ச்சிமிக்க காட்சி, வேறென்ன இருக்க முடியும்!

"அதோ, கடிலாக்கில் வந்து இறங்குகிறாரே கனவான், கருத்த முகம், வைரக் கடுக்கன், அவர் காட்டிலாகா காண்ட் ராக்டர், ஒரே வருஷத்தில் கால்கோடி இலாபம் பெற்றவர். காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு இரண்டு இலட்சம் கொடுத்தார்.''

"அவரைப் பாருங்கள் - சிரித்தபடி இருக்கிறார். நாலைந்து சீமாட்டிகள் சூழ

நிற்கிறாரே, அவர்தான் - அவர் அடுத்த முறை தேர்தலில் ஈடுபட, இப்போதே அச்சாரம் கொடுப்பதுபோல், தமது மாளிகையில் ஒன்றைக் காங்கிரஸ் காரியாலயம் நடத்திக்கொள்ள கால் காசுகூடப் பெறாமல், கொடுத்திருக்கிறார் - அநியாய வட்டி வாங்குபவர் என்று அழுகுரலிற் பேசுவர் சிலர் - வட்டி வியாபாரம்தான் - நல்ல பக்தர் - நாட்டுப்பட்டி மிட்டாதாரர்.''

"கவர்னர். பார், கவர்னர். அவருடைய மாளிகை எவ்வளவு பெரிது தெரியுமா? மான்கள் கூட்டம் கூட்டமாகத் துள்ளி ஓடிடும் காட்சியைக் காணவேண்டுமே, அவருடைய தோட்டத்தில் - மிக அழகாக இருக்கும்.''

"அதோ, அவர், உயர்நீதிமன்ற முதல்வர்! சட்ட நிபுணர்!''

"அந்தப் பக்கம் நிற்பவர், ஆறு ஆயிரம்

மாதச் சம்பளம் பெறும், உயர்தர அதிகாரி. நிர்வாகச் செலவை எப்படிக் குறைப்பது என்பதுபற்றி அவ்வப்போது யோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பிரத்தியேக அதிகாரி.''

"இவர் சகலகலா பண்டிதர் சம்பூர்ணானந்தர். சமஸ்கிருத காவியங்களிலே விசேஷ பாண்டித்யம் இவருக்கு. அமெரிக்கா போய் வந்தார், சென்ற மாதம் - கீதைபற்றி"உபன்யாசம்' செய்ய!''

தம்பி! இவ்விதமெல்லாம், குடியரசுத் தலைவர் போன்றாருக்காக நடத்தப்படும் கோலாகல விழாக்களில் காணப்படுவோர் பற்றிப், பளபளப்புக் கண்டு பரவசம் அடைவோர், பேசட்டும்.

நமது எதிர்கால மாநாடுகளில், "அதோ காலிழந்து காணப்படும் கந்தசாமி, சிறுகடை

வைத்துக்கொண்டு காலந் தள்ளிவந்தான் - ஆறு குழந்தைகள் - சொந்த வீடுகூடக் கிடையாது, ஏழை. ஆனால் கோழை அல்ல! எனக்கு வீடு இல்லாமலிருக்கலாம், என் தாய்மொழி நாடு இல்லாமல், நாதியில்லாமல் இருந்திட விடமாட்டேன் என்று கூறினான், இந்தியை எதிர்த்தான், அடக்குமுறை அவனை நோக்கிப் பாய்ந்தது, காலிழந்தான் வீரன், கண்ணீர் பொழிந்தனர் மக்கள். இதோ வருகிறான், வெற்றிநடை நடந்து! அவன் நடந்துவரும் பாதையை மக்கள் தமது கண்ணீர் தெளித்து வணங்குகிறார்கள். நாடு வாழத் தன்னை நொண்டியாக்கிக் கொண்டான். நாம் வாழ, அவன் வதைபட்டான்!''

"எழும்பி எழும்பிப் பேசுவானே, என் மொழி! என் நாடு! என்றெல்லாம், ஒரு இளைஞன், கவனமிருக்கிறதல்லவா, அவன்தான், அதோ தத்தித் தத்தி நடந்து வருபவன் -

காலிழந்தான்.''

"அதோ, கண்ணிழந்தான்! கரமிழந்தான்!''

தம்பி! இப்படிப்பட்ட எழுச்சியூட்டும் பேச்சுக்கள் கிளம்பிடத்தக்க நிலையில், ஊர் காக்கப் புறப்பட்டு, உறுப்புகளில் சிலதை இழந்தவர்கள், நமது மாநாட்டிலே, வந்து சேரத்தக்க வகையில், அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட வேண்டும்.

காலோ, கையோ, கண்ணோ, போனவர்களில் ஒருவனாக நான் இருக்க விரும்பவில்லை - தம்பி!

அதுமட்டும்தான் எனக்கு என்றால், நான் மெத்த வருத்தப் பட்டுக்கொண்டுதான் இருப்பேன்.

அப்படிப்பட்டதோர் மாநாடு நடக்கையிலே, நான் காலிழந்து, கரமிழந்து வருவதைவிட, அந்த மாநாட்டைக் காண முடியாத நிலையில்,

”உயிரிழந்தோன்’ ஆகிவிடவேண்டும் என்று விரும்புகிறேன்.

என் விருப்பம் நிறைவேறும் அளவிலும், வகையிலும், அடக்குமுறையை அவிழ்த்துவிடும்படி, மெயில், இன்னும் சில முறை தூபமிட வேண்டுமென விரும்புகிறேன்.

இம்முறை நேரிடுமோ, பிறகோ, என்பதுவேண்டுமானால், விவாதிக்கப்படவேண்டியதாக இருக்கும் பிரச்சினையே தவிர, நம்மிலே பலர், இந்த நெருப்பாற்றில் இறங்கிய பிறகுதான், நாம் விரும்பும் இன்பத் திராவிடம் கிடைக்கும் என்பதை அறிந்து கொள்ளும் அளவு, தம்பி! நான் படித்திருக்கிறேன்.

அங்ஙனம் இன்னுயிர் ஈந்து, இலட்சிய வெற்றி கண்டவர் களைப்பற்றிப் படித்து இன்புறும்போதெல்லாம், நமக்கு எப்போது

அந்தப் பேறு கிடைக்கும் என்று எண்ணி எண்ணி இருந்திருக்கிறேன்.

நாம் இருக்குமிடத்திலிருந்து நெடுந்தொலைவில், முற்றிலும் வேறான சுற்றுச் சார்பில், வாழ்ந்துவரும், மெயில் போன்றார்கள், நாம் ஏதோ, விளைவு தெரியாமல், விளைவுகளைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும் என்ற உறுதிகொள்ளாமல், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டுள்ளனர். தம்பி! தமது! நமது தியாகத் தழும்புகளின் மீது செந்நிறம், ஆறாது இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம் - ஏனெனில், நமது கொள்கையின் தூய்மையை உலகுக்குக் காட்டிட, இதனைவிட வேறு மகிமை வாய்ந்த சான்றுகளை நம்மால் பெற முடியாது.

அந்த நல்ல வாய்ப்பிலே ஒரு அளவு, இம்

முறை எழ இருக்கும் அறப்போரின் பலனாக, நமக்குக் கிடைக்குமானால், நன்றி செலுத்தி ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

நாம், அவ்விதமான உணர்ச்சி நிரம்பப் பெற்றவர்கள் என்பதைத் துளியும் அறியாததால்தான், குடியரசுத் தலைவரை இந்தச் சமயமாகப் பார்த்து வரவழைத்துக் கோலாகலமான விழா நடத்தத் திட்டமிடுகிறார்கள் - இங்குள்ளோர்.

குடியரசுத் தலைவர் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர், அவருக்கு நாட்டவர் அனைவரும் மரியாதை காட்ட வேண்டும் என்று இனி உபதேசம் செய்வார்கள்.

அவருடைய தனிச் சிறப்பு இயல்புகளை எடுத்துக் கூறி எப்படிப்பட்ட நல்லவர் தெரியுமா என்று கேட்போர் என்புருக எடுத்துக் கூறுவர்.

ஆமென்று நம்பி, அனைவரும்

இருந்துவிட்டால், குடியரசுத் தலைவரின் உலா முடிந்ததும், அவர் தில்லி சென்று, உலகுக்கு அறிவிப்பார்.

”யாம் பத்து நாட்களாகப் பாரதத்தின் தென் பகுதி சென்று வந்தோம்.

சென்னை முதல் தூத்துக்குடி வரை சென்றோம். சென்ற இடமெங்கும் சிறப்பான வரவேற்பு, மக்கள் வெள்ளம்போல் கூடி நின்றனர்; வழிபட; வாழ்த்துப் பெற.

இந்தப் பகுதியில்தான், தனிநாடு, தனி இனம் என்ற தவறான பேச்சுப் பேசிக்கிடக்கும் ஒரு சிறு கூட்டம் இருக்கிறது. அந்தக் கூட்டம், இந்தியைக்கூட எதிர்க்கிறது!! - என்று எனக்குச் சிலர் கூறினார்கள்.

ஆனால், என் பத்து நாள் உலாவின்போதும், ஒரு இடத்திலாகிலும், ஒரு துளி எதிர்ப்பும், ஒரு சிறு அறிகுறியும்

காணோம்.

இந்தியைத் தேசிய மொழியாக அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதற்கு, என் விஜயம் வெற்றியுடனும் விமரிசையாகவும் நடைபெற்றது ஒன்றே போதும். ஜெய்ஹிந்த்!''

என்று அறிக்கை வெளியிடுவார். அகில உலக இதழ்களும், அதனை எடுத்து வெளியிட்டு, இந்தியை இந்தியர் ஏற்றுக்கொண்டனர் என்று கூறும் - தமிழர் என்றோர் இனம் உண்டு என்று எவரேனும் கூறினால், எந்தப் புதை குழியில், எத்தனை ஆயிரம் அடி ஆழம் தோண்டிப் பார்த்தால் கிடைக்கும் என்று வேடிக்கைக்காக அல்ல, உண்மையாகவே கேட்பர்.

ஏனெனில், தமிழ் இனத்தின் சிறப்பு என்றும், தமிழ் மொழியின் சிறப்பு என்றும்,

நாம் எடுத்துக் கூறி வருவதை மட்டுமல்ல, ஏற்கனவே, பேரறிவாளர் பலரும் எடுத்துச் சொல்வதையும் கேட்ட எவரும், அந்த இனம் அடியோடு அழிந்துபடா முன்பு, இந்தி ஆட்சி மொழியாகி ஆதிக்கம் செலுத்த முடியாது என்றே இயற்கையாகவே எண்ணுவர்.

□

குடியரசுத் தலைவரின் ”விஜயம்’ இந்தக் குறிக்கோளுக்காக அல்ல என்று விளக்கம் அளிக்கப்படும். உண்மையாகவும் இருக்கக்கூடும்.

ஆனால், அவர் உலாவின் விளைவு என்னவாக இருக்க முடியும்?

எனவேதான், தமிழர் தமது இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை எடுத்துக்காட்டத் தவறினால், உண்மை மறைக்கப்பட்டுப் போய்விடக்கூடும். உலுத்தர்கள் அதனையே சாக்காகக்கொண்டு,

இந்திக்கு எதிர்ப்பே இல்லை என்று பேசி உலகை ஏய்ப்பார்களே என்ற கவலை, மிகவும் ஏற்படுகிறது.

நமக்கு ஏற்படும் இந்தக் கவலை குறித்தும், குடியரசுத் தலைவர் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. எனினும், ஒவ்வொரு நாளும், குடியரசுத் தலைவர்,

சென்னை

தூத்துக்குடி

நாகர்கோயில்

கன்னியாகுமரி

கோவை

சேலம்மேட்டூர்

வேலூர்

ஆகிய இடங்களில் விழா நடத்திச்

சொற்பொழிவு ஆற்ற இருக்கிறார் - கவர்னர் உடன் வருகிறார் - காமராஜர்கூட வருகிறார் - என்ற செய்திகள், வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

என்ன செய்வது? நமது நாட்டிலே மூண்டுகிடக்கும் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை, எப்படிக் குடியரசுத் தலைவர் உணரும்படி செய்வது?

உடன் வருவோர், அவரிடம் உபசாரம் பேசுவர், உண்மை நிலையைக் கூறப்போவதில்லை.

அவராகக் கேட்டாலும், தேர்தலில் தோற்ற ஒரு சிறு கூட்டம், காரணமற்று இந்தியை எதிர்க்கிறது என்று கூறி, அவருடைய புன்னகையைப் பரிசாகப் பெறவே முயற்சிப்பர்.

தமிழரின் தவிப்பை, தத்தளித்துக்

கிடப்பதை அவர் அறியச் செய்வது எவ்வகையில்?

உமது ஆணை கண்டு, தமிழர் அஞ்சுகின்றனர் - இந்தி ஆதிக்கமொழியாகிட வழிவகுத்துவிட்டீர் என்று நேரு பண்டிதர் கொடுத்த வாக்குறுதியும் மீறப்படுகிறது என்று. இதை நீக்கும் வகையில்,

இந்தி பேசாத மக்களின் விருப்பம் அறியாமல், இந்தி திணிக்கப்படமாட்டாது.

அவர்களின் விருப்பப்படி, காலக் கெடுவின்றி ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருந்திடும்.

அதற்கான முறையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படும்.

என்று குடியரசுத் தலைவரை "அறிக்கை' பிறப்பித்துவிட்டுத் தமிழகம் வந்து, உலா நடத்திக்கொள்ளும்படி இங்குள்ள

அமைச்சர்கள் கூற வேண்டும். அதை விட்டுப், போலீஸ் உண்டு, படை உண்டு, சிறை உண்டு, அடக்கிவிடுவோம், ஒரு துளியும் எதிர்ப்புணர்ச்சி தலைகாட்டாதபடி செய்துவிடுவோம் என்று கூறுவார்களானால், எந்தத் தலைவரின் உலா மிகச் சிறப்பாக, அனைவரும் கண்டு பெருமைப்படத்தக்க விதத்தில் நடைபெறவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்ப்பார்களோ,அம் முறையில், உலா அமையாது என்பது மட்டும் எனக்கும் தெரிகிறது, உனக்கும் புரிகிறது.

ஜனவரி ஆறாம் நாள் நிகழ்ச்சி நினைவுக் குறிப்பில் இருக்கு மானால், இங்குள்ள அமைச்சர்களும் அறிந்துதான் இருப்பார்கள்.

அன்று கையாண்டதைவிடக் கடுமையாக இருக்கும், கெடுபிடி என்று அமைச்சர்கள் கூறுவரேல், நாம் என்ன சொல்ல முடியும்.

அன்று வீழ்ந்த பிணத்தைவிட, இன்னும் சற்று அதிக அளவில் கீழே சாயும்! அது உமக்குச் சிறப்பளிக்கும் என்றால் செய்துகொள்ளுங்கள் என்றுதானே சொல்ல முடியும். பாபு பவனி வந்தார், ஊருக்கு நாலுவீதம், மொத்தத்தில் நாற்பது ஐம்பது பிணங்கள் கிழே சாய்ந்தன தமிழகத்தில் என்று வரலாற்றிலே பதித்துக்கொள்வது, சிறப்புக்கும் அறிவுடைமைக்கும் அறநெறிக்கும் உகந்ததென்றால், ஆட்சியாளர், தமது இஷ்டப்படி செய்துகொள்ளட்டும்.

எதிர்ப்பு உணர்ச்சி காட்டாதிருந்தால், இந்திக்குத் தமிழகம் தலைசாய்த்துவிட்டது என்று பொருள்படும் என்று உணரும் தமிழர், அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சமாட்டார்கள்! பாபுவின் பவனி முறையுமல்ல; அவருக்குத் தேடித் தரவேண்டிய சிறப்பினையும் இங்குள்ள அமைச்சர்கள்,

பெற்றளிக்கத் தவறி விட்டார்கள் என்ற பழிச்சொல்லே பெறப்போகிறார்கள்.

அந்த வழிதான் எங்கள் வழி என்று அமைச்சர்கள் எண்ணினால், நாம் தடுக்கவா முடியும்!

நமக்கு நமது வழி தெளிவாகத் தெரிகிறது.

நமக்கு எத்துணை கஷ்டம் நேரிடுவதாயினும், தாயகத்துக்கு மானக் குறைவு, இனத்துக்கு இழிவு, மொழிக்குத் தாழ்நிலை ஏற்படலாகாது, ஏற்படவிடக் கூடாது, அந்தத் தூய தொண்டாற்றவே, உயிர் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தமிழர், நீண்ட பல காலமாகவே அந்த வழி நடந்து பழகினவர்கள். அவர் வழிவழி வந்த நாம், வேறு வழியா நாடுவோம்!

“தவறான வழி செல்லாதீர்’’ என்று உருக்கமாகப் பேசும் பாவனையில்

சிலரும்,"உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்'' என்று உருட்டுவிழி காட்டிச் சிலரும் பேசி வருகின்றனர் - காங்கிரஸ் வட்டாரத்தில்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழு மதுரையில் கூடி, இதைப்பற்றி விரிவாகப் பேசி - இந்தி எதிர்ப்பு அறப்போருக்கு ஆதரவு தராதீர் என்று தமிழக மக்களை கேட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழர்கள், தங்கள் பக்கம்தான் நிற்பர், கழகத்தின் வேண்டுகோளை ஏற்கமாட்டார்கள் என்பதில், இந்த ஆண்மையாளர்களுக்கு நம்பிக்கை இருக்குமானால், ஒரு காரியம் செய்யச் சொல்லு பார்க்கலாம், தம்பி!

குடியரசுத் தலைவரின் ஆணை கண்டு குமுறிக் கிடக்கும் மக்கள், தங்கள் எதிர்ப்புணர்ச்சியை எடுத்துக் காட்ட, அவர் செல்லுமிடங்களில், அமைதியான முறையில்.

கருப்புக் கொடி காட்ட வேண்டும் என்று கழகம், கூறிடட்டும்.

காமராஜரிலிருந்து கக்கன் ஈறாக, இன்னும் உள்ள நாராச நடையினர், அனைவரும் கூடி, தமிழக மக்களுக்குப் ”புத்திமதி’ கூறி, கருப்புக் கொடி காட்டாதீர்கள் என்று வேண்டுகோள் விடட்டும்.

ஒருவர் முயற்சியில் மற்றொருவர் குறுக்கிட வேண்டாம்.

இரு சாராரும், மக்களிடம் சென்று, நிலைமையை விளக்கித் தமது கருத்துக்கு ஆதரவு தேடட்டும்.

அப்போது, தமிழர்கள் கருப்புக் கொடி காட்டித் தமது கண்டனத்தைத் தெரிவிக்க முன் வருகிறார்களா அல்லது காமராஜர் பேச்சைக் கேட்டு காலைக் கழுவி நீரைப் பருகிடும் பக்தர்போலாகி, குடியரசுத் தலைவரை

வரவேற்கிறார்களா என்று பார்ப்போம்.

இந்த அறைகூவலை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாரா?

அந்த இலட்சணத்தைத்தான், நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டியபோதே கண்டோமே!

தம்பி! மக்களைக் கண்டு, இன்னின்ன முறையில், அமைதி கெடாமல், பலாத்காரம் துளியும் தலைகாட்டா வண்ணம், கருப்புக் கொடி காட்டுங்கள் என்று கூறக், கடற்கரைக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டோம் - மறுத்தனர் - மீறிச் சென்றோம் - வழியிலே வளைத்துப் பிடித்துக்கொண்டுபோய்ப் போலீஸ் கொட்டடியில் போட்டு அடைத்தனர்.

அவ்வளவுதான், அவர்களுக்கு மக்களிடம் உள்ள நம்பிக்கை.

நமது மாநிலத்தில், மிக நீண்ட காலமாகவே திறமையுடன் அமைந்துள்ள

போலீஸ் படையின் தயவை நாடித்தான், காங்கிரசார் கிளர்ச்சிகளை ஒடுக்க முடிகிறதே தவிர அறிவுரையாற்றி, மக்களைத் தம் பக்கம் ஈர்த்திட முடிகிறதா? இல்லை, தம்பி! இல்லை! அந்தச் சக்தியை அவர்கள் இழந்து நெடுங்காலமாகிவிட்டது.

மெயில் இதழ்கூடக் காங்கிரசாருக்கு - அமைச்சர்கள் உட்பட - மக்களிடம் விளக்கம் கூறித், தம் பக்கம் கொண்டுவரச் செய்யும் ஆற்றல் இல்லை என்பதை அறிந்துதான், கடுமையான தண்டனை கொடுத்து அடக்க வேண்டும் என்று எழுதுகிறது.

மக்களின் நெஞ்சைத் தொடும் விதமாகப் பேசும், மக்கள் தலைவரே! காமராஜரே! கிளம்புங்கள்! ஊரூர் சென்று, கழகத்தின் போக்கை மக்கள் ஆதரிக்கக் கூடாது என்று எடுத்துக் கூறுங்கள் - என்று எழுத மெயிலுக்கு மனம் வரவில்லை; நடவாத காரியமாயிற்றே

என்று எண்ணுகிறது.

“புள்ளிவிவரப் புலியே! வாத வல்லுநரே! கோவைச் சிங்கமே! சுப்பிரமணியமெனும் அமைச்சர் ஏறே! போர் முழக்கம் செய்ய இன்றே புறப்படுக! உமது விவேகம் ததும்பும் பேச்சினைக் கேட்டால், மக்கள் தெளிவு பெறுவர்! உமக்கென்ன, காரசாரமாகவா பேசத் தெரியாது! ஏதோ, இந்த நாடு செய்த”தவப்பயனால்’ ”அமைச்சர்’ எனும் மிகச் சாதாரணப் பதவியில் இருக்கிறீர் - நீர் விரும்பினால், அகில உலக அரங்கின் அரியாசனம் அமர்ந்து, பண்டிதரால் செய்து முடிக்க முடியாத பஞ்சசீலத்தைப் பாரில் வெற்றிபெறச் செய்ய இயலுமே! சில பயல்கள் பாபுவுக்குக் கருப்புக் கொடி பிடிக்கத் தூண்டினால் என்ன? உமது சங்கநாதம் கிளம்பினால், திக்காலொருவராக ஓடிவிட மாட்டார்களா? மக்கள், உமது

பாதம் பணிந்து கட்டளையை எதிர்பார்த்து நிற்கமாட்டார்களா? அத்தகைய பேராற்றல் படைத்தவரல்லவோ! இன்றே புறப்படுக!'' என்று எழுதிட, மெயிலுக்குக் கூச்சமாக இருக்கிறது. கோவையார் போகாத ஊரில்லை, பேசாத நாளில்லை, மக்கள் கேட்டதாகத் தெரியவில்லையே! மறுபடியும் ஏன் வீண் முயற்சி என்று எண்ணுகிறது. எனவேதான், எது, அமைச்சர்களால், எளிதிலே செய்திட முடியுமோ, அதுவாகப் பார்த்து, கடுமையாகத் தண்டித்துக் கழகத்தை ஒழித்துக்கட்டுங்கள் என்று எழுதுகிறது.

மயில், காணும்போது தன் தோகையை விரித்தாடினால் காட்சி அழகாக இருக்குமே என்ற எண்ணம் தோன்றும்.கழுகைக் காணும்போது? இதன் கூரிய மூக்கினால் பிணங்களை எத்தனை வேகமாகக் கொத்துமோ! என்று வியப்புடன் நினைத்திடத்

தோன்றும்.

மக்களாட்சி முறையில், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் பிரசாரத்தைத் தமது மறுப்புரை மூலம் பயனற்றதாக்க வேண்டும்; அந்த ஆற்றலுடன், அந்த ஆளுங்கட்சி இருந்தால், அத்தகைய ஆற்றல் அற்றுப் போனால்? பிடி! அடி! சுடு! இதுதான்!! இது புதிதுமல்ல; இதைக் கண்டு மருண்டு, எந்த இயக்கமும் சுருண்டு போனதில்லை. சிலர் மடிந்தனர்; வேறு பலர் எழுந்தனர்! சிலர் வாழ்வு பாழ்படுத்தப்பட்டது; ஆனால், இறுதியில் மனித குலத்துக்குப் புது வாழ்வு கிடைத்தது.

□

நிதி அமைச்சர் பேசாமலும் இல்லை.

ஏன் வீண் பீதி?

இந்தியை எங்கே திணிக்கிறார்கள்?

தமிழன்றோ ஆட்சிமொழியாகி இருக்கிறது.

ஆங்கிலம் அறவே போய்விடாது.

என்றெல்லாம் பேசி வருகிறார்.

ஒருவிதத்திலே மகிழ்ச்சிதான் எனக்கு.

எவனவன் இந்தியை எதிர்ப்பவன்?

இந்திதான் நமது தேசிய மொழி.

இந்திதான் ஆட்சி மொழி.

தமிழ் மொழி, தாய் மொழி என்று பேசலாகாது.

து. தமிழர் வேறு, இந்தியர் வேறு என்று கூறுவது மடமை. என்றெல்லாம் பேசவில்லை - பேச முடியவில்லை - பேசினால், இப்படியும் ஒரு தமிழ்த் துரோகி இருக்கிறாரே என்று பாமரரும் கூறிக் கண்டிப்பார்கள் என்ற பயம் மேலிட்டிருக்கிறது. தமிழ் இனம் விழிப்புற்று

இருக்கிறது என்பது தெரிந்து, சுடச்சுடப் பேசுவதுதான் சுவைமிக்கது என்ற கருத்தில் நாவைப் பயன்படுத்தும் அமைச்சர், அடக்க ஒடுக்கமாகப் பேசுகிறார். அந்த மாறுதல், வரவேற்கத்தக்கது; ஆனால், உண்மையையா, அவர் பேசுகிறார்?

தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட்டிருக்கிறது என்பதை மிகச் சிரமப்பட்டு விளக்கி இருக்கிறார்.

தமிழகத்தில், தமிழ் ஆட்சிமொழி ஆகியிருப்பது, அதிசயத்திலே ஒன்றல்ல.

மொழிவழி மாநில அமைப்பின்போதே, இப்படித்தான் நடந்திடும் என்பதை அனைவரும் அறிவர்.

தமிழ் மாநிலத்தில் தமிழ் ஆட்சிமொழி என்றிருப்பது போலவே, பிறமொழி பேசிடும் மாநிலங்களிலேயும் ஏற்பட்டுள்ளன.

இதிலே அமைச்சர் சுப்ரமணியனாரின் அலாதியான வீரதீரம் ஏதுமில்லை.

இது, டில்லியால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு ஏற்பாடு. ஆனால், அமைச்சர் அறிவிக்காதது. ஆனால் நாடு அறிந்து கொள்ளவேண்டியது வேறொன்று உளது.

தமிழ் மாநில அரசு தில்லி அரசுக்குக் கட்டுப்பட்டு, அது இட்ட வேலையைச் செய்துகிடக்கக் கட்டுப்பட்டிருக்கிறது.

எனவே ஆட்டிப்படைக்கும் அதிகாரம், தில்லிக்கு.

அந்தத் தில்லிக்கு, ஆட்சி மொழி இந்தி!

பேரரசு என்ற நிலைபெற்று உள்ள தில்லியில், எம்மொழி ஆட்சி மொழியோ, அந்த மொழியைத்தான் உலக நாடுகள், உண்மையான ஆட்சிமொழி என்று ஏற்றுக்கொள்ளும் - மதித்திடும்.

இந்த உண்மையை எடுத்துரைக்காது மறைத்துவிடுகிறார் அமைச்சர்.

வெளிநாடுகளுடன் செய்துகொள்ளும் ஒப்பந்த நடவடிக்கைகள், இந்தியா முழுவதுக்கும் (தமிழகம் உட்பட) என்று இயற்றப்படும் சட்டங்கள், உத்தரவுகள், எல்லாம் இந்தியில்தான்!

இந்தியப் பேரரசின் கட்டுக்கு அடங்கி நடக்கவேண்டிய இராணுவத்தில் இந்திமொழியில்தான், கவாத்து பழகுவதி லிருந்து, காரிய விளக்கங்கள் வரையில்.

இந்தியா முழுமைக்கும் என்று இருக்கிற உச்ச உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் இந்தி மொழியில்தான்.

இந்தியப் பேரரசு நடைபெறப் பணியாற்றிவரும் அலுவலகங்களிலே உள்ளோர், இந்தி கற்றுத் தேறியாக வேண்டும்.

இவைகள், எதைக் காட்டுகின்றன? இந்தி, ஆட்சி மொழியாகிவிடுவதை, ஆதிக்க மொழியாகிவிடுவதை!

இந்தியப் பேரரசு, மாநில அரசுகளை, அதிகாரமற்ற, தானம் கேட்டுப் பிழைத்திடவேண்டிய தலையாட்டிகளாக்கி வைத்திருப்பதைத், துணிவுடன் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடும் போக்கினராக உள்ள அமைச்சரேகூட, ஏற்றுக் கொண்டாக வேண்டிய நிலைதான். பேரறிவாளர் பலரும் கூறி விட்டனர்.

அந்தப் பேரரசு, இந்தியை ஆட்சிமொழி என்றாக்கி விட்டால், இங்கு தமிழ்தான் ஆட்சிமொழி என்று கதைப்பதிலே, பொருள் என்ன இருக்க முடியும்!

நீதிமன்றங்களில்கூட, இனித் தமிழ்தான் என்றார் அமைச்சர்.

யார் அவ்விதம் சொல்வது? உச்ச உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் இந்தியில் இருந்து தீரும். அந்நிலையில், ஒவ்வொரு மாநிலமும், தத்தமது தாய்மொழியில், உயர் நீதிமன்ற நடவடிக்கைகளை நடத்திச் சென்றால், குழப்பமல்லவா ஏற்படும். எனவே மாநில உயர்நீதிமன்றங்களும், இந்தி மொழியிலேயே நடைபெறவேண்டும் என்று அறைகிறார், தில்லி அமைச்சர் சென்!

இப்போதும், உயர் நீதிமன்றம் தமிழில்தான் நடைபெற வேண்டும் என்பதில், சென்னைத் துரைத்தனம் உறுதியாக இருக்கிறது என்று பேசுகிறார் நிதி அமைச்சர்.

உரத்த குரலிற்கூடப் பேசலாம் - ஆனால் உறுதியாக இருக்க இவருக்கு ஏது உரிமை?

உயர்நீதிமன்றங்கள் இப்படி இப்படி நடைபெற வேண்டு மென்று, தில்லி

தீர்மானித்துவிட்டால், அதை மீறும் துணிவும், வழி வகையும், இவருக்கு ஏது?

இவரே அல்லவா, தமது ஆட்சியின் கீழுள்ள இந்த மாநிலத்தில், ஏதேனும் ஓர் இந்திய மொழி பயில வேண்டும் என்று தந்திரமாகக் கூறிவிட்டு, எல்லாப் பள்ளிகளிலும் இந்தியைத் திணித்திருக்கிறார்.

இவர், இந்தித் திணிப்பு இல்லை என்று பேசுவதை, எவர் மதித்திடுவர்.

இவைபற்றி எல்லாம் எண்ணிப்பார்த்தே, மெயில், இந்த அமைச்சர்கள் பேசிப் பயனில்லை - இவர்களுக்குத் தெரிந்ததும், முடியக்கூடியதும் ஒன்றே ஒன்றுதான். ஈவு இரக்கமின்றி எதிர்ப்பாளர்களை அடித்து நொறுக்குவது. அந்த வேலையைச் செய்யும்படி கூறலாம் என்ற போக்கிலே எழுதி இருக்கிறது.

கடுமையாகத் தண்டித்து விடுவோம் என்று மிரட்டினால், குடியரசுத் தலைவரின் விழாவின்போது, எதிர்ப்புத் தலைகாட்டாது என்று எண்ணுகிறார்கள் போலும்!

ஆளுங் கட்சியினர், அவர்களை அடுத்துப் பிழைப்போர், ஆகியோரை அணிபணி பூண்டு வரச்செய்து, குடியரசுத் தலைவரின் முன் நிறுத்திக் காட்டி, "இதோ வரவேற்பாளர்கள்! தமிழர்கள்! தங்கள் ஆணையைச் சீரமேற்கொண்டு"சேவை' செய்யக் காத்துக்கிடக்கும் "கர்ம வீரர்கள்!' என்று எடுத்துக் கூறுவர் போலும்!

தம்பி! முன்னமோர் நாள், ரோம் சாம்ராஜ்யத்தில் டைடஸ் ப்ளாவியஸ் டோமீ□யன் என்ற மன்னர் மன்னன் இருந்தான். வீரனல்ல; எனினும் விருதுகள் பெற விரும்பினான். இதோ வாய்ப்பு என்றனர், உடன் நின்றோர். ஜெர்மன் இனத்தவரின்

ஆளுகையில் இருந்த ஒரு நாட்டின்மீது படை எடுத்துச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

போர் நடைபெற்றது! ரோம் நாட்டு மக்கள், தமது மாமன்னன் பெற்றளிக்கப்போகும் வெற்றியை விழாவாகக் கொண்டாடத் துடித்து நின்றனர். போர் முடிவுற்றது. மாமன்னன், வெற்றி உலா வந்தான் ரோம் நகரில்! வீதிகளெல்லாம் வளைவுகள், கொடிகள், தோரணங்கள், மாமன்னரே, வருக! மாற்றானை மண்டியிடவைத்த வீரரே வருக! ரோம் நாட்டுக் கீர்த்தியைப் பரப்பிய தலைவனே! வருக! வருக! என்று வாழ்த்தி வரவேற்றனர்.

மாமன்னன், தலைநகரில் பவனி வந்தான்.

பிடிபட்ட ஜெர்மானியர்கள், அந்த ஊர்வலத்திலே, அணி அணியாக இழுத்துவரப்பட்டனர்.

ரோம் நாட்டு மக்களுக்குப் பேருவகை! தோற்றவர்கள், பிடிபட்டனர், பிடிபட்டவர்களைப் பிடித்திழுத்து வருகிறார் மாமன்னர்! - என்று எக்காளமிட்டனர்.

ஆனால், தம்பி! உண்மையில் நடந்தது என்ன தெரியுமோ? போரிலே மாமன்னர் வெற்றி பெறவில்லை - விரட்டி அடிக்கப்பட்டார்.

தோற்றுப் போய்த்தான் தலைநகரம் திரும்பினார்.

ஆனால், வெட்கமாக இருக்குமல்லவா! அதனால், தோற்ற செய்தியை மூடி மறைத்தார் - வெற்றி உலாவே நடத்திக் காட்டினார்.

அங்ஙனமாயின், பிடிபட்ட ஜெர்மானியர்களைப் பிடித்திழுத்து வந்தாரே, அது எப்படி? என்றுதானே தம்பி! கேட்கிறாய்.

அவ்வளவுபேரும், மாமன்னரின் அடிமைகள்! அவர் களுக்கு,

ஜெர்மானியர்போல் உடை அணிவித்து, அழைத்து வந்தார் - ஊரை ஏய்த்திட.

நாளை, குடியரசுத் தலைவர்முன் கொண்டுபோய் நிறுத்தப்படுபவர்கள், தமிழ் பேசுவோர், தமிழராகார்! தமிழரின் நடை உடை இருக்கும் நெஞ்சம் தமிழ் நெஞ்சமாக இராது! அடிமைகள் ஜெர்மன் உடையில்!! இவர்கள் அடிவருடிகள் தமிழர் கோலத்தில்!! பாபு இராஜேந்திரர், இந்தக் காட்சியைக் காணவா, தமிழகம் வரவேண்டும்! பரிதாபம்! மிகப் பரிதாபம்!!

அன்புள்ள,

அண்ணாதுரை,

31-7-1960

குடியரசுத் தலைவருக்குக் கருப்புக் கொடி - நேருவின் பதில்

தம்பி!

என்ன, என்னைக் கண்டதும், உன் முகத்தை ஒளிவிடச் செய்துகொண்டிருந்த அந்த "வசீகர'ப் புன்னகையை மறைத்துக் கொண்டு, கோபமும் சோகமும் காட்ட முயற்சிக்கிறாய்? எதையோ எண்ணி எண்ணி, மகிழ்ந்துகொண்டிருந்திருக்கிறாய் - புன்னகை பூத்திடக் காரணம் அதுவே - எனினும் என்னைக் கண்டதும், புன்னகையைத் திரையிட்டு மூடிவிடுகிறாய், புதியதோர் கோலம் கொள்கிறாய் - எதை உணர்த்த? - அடே! அப்பா! இலேசான ஆளல்லவே நீ!! எழுச்சிக்கு இருப்பிடம்! வீரத்தின் பிறப்பிடம்!

உணர்ச்சியின் உறைவிடம்! அல்லவோ - உன்னை நான் அறியேனா? உன் இயல்புகள் எனக்கு நன்கு தெரிந்திருப்பதனால்தானே, எத்தனை எத்தனையோ கற்று மெத்தத் தேறியவர்கள் என்போர் எண்ணிப் பார்த்திடக்கூட அச்சப்படும், நாட்டு விடுதலைக் கிளர்ச்சியை நடாத்தி வெற்றி பெற முடியும் என்ற உறுதியும் நம்பிக்கையும் என்போன்றார்களுக்கெல்லாம் ஏற்படுகிறது. அந்த உன் இயல்பு, உன்னைப் புன்னகை புரிந்திட வைக்கிறது. அதனூடே, பொய்க் கோபம் காட்டவும் செய்கிறது, அண்ணன் காணா நேரத்தில் அகமகிழ்ச்சி; வெளியே தெரியுமளவு புன்னகை கொள்கிறாய்; காணும்போதோ, இது போதாது அண்ணா! என்று கூறிடஓர் பொய்க் கோபம் காட்டுகிறாய், புரிகிறது! புரிவதால், உன்னிடம் உள்ள பற்றும் மதிப்பும், வளரவும் செய்கிறது! வீரச்

செயல்களை அடுக்கடுக்காகத், தொடர்ந்து, மாற்றார் மருண்டு மண்டியிடும் அளவுக்குச் செய்தவண்ணம் இருக்கத் துடிக்கிறாய்! இளமைத் துடிப்பு என்று மட்டும்கூட இதனைக் கூறுவதற்கில்லை - இலட்சியத்திலே உனக்குள்ள ஆர்வம், உனக்கு அத்தகைய உணர்ச்சியைத் தருகிறது, பகை அழிக்கத் துடிக்கிறாய்! பகை அழித்தே சிகை முடிப்பேன் என்று சூளுரைத்துக் களம் புகும் பண்டைய வீரத்தின், இன்றைய"பதிப்பாக' விளங்கி வருகிறாய். வாழ்க நின் வீர உணர்ச்சி! வளர்க உன் பேரார்வம்!!

எதற்கு அண்ணா, பேரார்வம் வளருவது? ஏன்? வளர்த்து விடுவாய், பிறகு, ஒரு கணத்தில், அதற்கு இது சமயமல்ல, தேவைப்படவில்லை என்று கூறிவிடுவாய்!! இதற்கா இத்துணை ஆர்வம் பொங்கிடக் கிளர்ந்து எழுந்தோம் என்று. பிறகு நான்

நொந்துகொள்ளவேண்டும் - ஏனோ, இந்தப் போக்கு? பாடி வீட்டிலே பரணி பாடியபடி இருந்திட வேண்டி வருகிறதே, பகைக் கூட்டம் பழிச் சொல்லையும் இழிமொழியையும் உமிழ்ந்தபடி நடமாடிடக் காண்கிறோமே; அவர்தம் கொட்டம் அடக்க, நமக்கோர் வெற்றி கிடைக்க, செருமுனை சென்று, சீறிப் போரிடவேண்டாமோ, சிந்தனையில் பிறந்து வளர்ந்துள்ள எத்தனை எத்தனையோ செயல் முறைகளை, வடிவமெடுக்கச் செய்து காணவேண்டாமோ! - அந்த என் நிலையைத் துளியும் உணராமல், அடலேறே! வா! வா! என்று அழைக்கிறாய்; அணிபணி மறந்து, ஆடல் பாடல் வெறுத்து, குடும்பத்தையும் துறந்து, நீ கூப்பிடும் குரல், கோலமயிலாள், குழல் மொழிக் குழவி, பாசம் பொழியும் அன்னை, இவர்தம் குரலினும் மேலானது என்று எண்ணி, நான் ஓடோடி வருகிறேன்;

வந்தவனை நோக்கி, ”வல்லமை மிக்கவனே! பொல்லாங்கு அறுப்பவனே! ஆற்றல் மிக்கோனே! அறப்போர் வீரனே! இப்போது இல்லை, உன் வீர விளையாட்டுக்கு வாய்ப்பு! பிறிதோர் சமயம் பார்ப்போம்! சென்று, வா!’’ என்று கூறுகிறாய், என்னைச் செயலாற்ற இயலாதவனாக்குகிறாய் - ஏன் இப்படி என்னை வாட்டுகிறாய், அண்ணா! - என்றெல்லாம் கேட்கிறாய். கோபமல்ல, தம்பி! மனம் குளிர்ச்சி அடைகிறது, உன் நோக்கம் காணும்போது!

ஆமாம்! கோபம் காட்டுகிறாய் - அதற்கான காரணம், உன் மனம் மகிழத்தக்க அளவுக்கு, வல்லமை விளங்கிடத்தக்கவகையில், அறப்போர்க்களத்திலே செயலாற்றும் செம்மலாகத் திகழுவதற்கு இருந்த நல்வாய்ப்பு, பறிக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்பது. ஆனால், பொய்க்கோபம் காட்டி

நின்றாயே அதற்கு முன்பு, ஓர் புன்னகை பூத்திருந்ததே, மறுக்காதே தம்பி! அந்தப் புன்னகைக்குக் காரணம் என்ன? மகிழ்ச்சி! மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன? கூறமாட்டாய்! தெரியும் எனக்கு! மூச்சடக்கிக் கடலடி சென்று, முத்து எடுக்கும் இனத்தவரின் வழிவழி அன்றோ! உனக்குக் கடலோர வெண் மணலில், முத்தொன்று, காலிலே தட்டுப்பட்டுக் கிடைத்திடின், பெருமகிழ்ச்சி கொண்டிட இயலாது.

பொங்கும் கடல்! மலைமலையாய் அலை! குமுறிடும் சுழல்! என்று பலர் கூறிடும் வேளையில், அச்சம் கொள்வோரிடம் கூறிடுக! ஆண்மையாளர்களிடம் இவை வெற்றுரை! - என்று உரைத்துவிட்டுப், பாய்ந்திடுவான் கடலில், மூழ்கிடுவான் அடிநோக்கி, மூச்சடிக்கி கண்டிடுவான் சிப்பிகளை; கைநிறையக் கொண்டு, மேலே எழும்பிவந்து, காட்டுவான்,

கரை நிற்போருக்கு, காணீர் நன் முத்து! என்று. அஃதே போல், களம் சென்று, கடும்போரிட்டுக், குருதி கொட்டி, வெற்றியைப் பிடித்திழுத்து வந்து, மற்றையோர்க்குக் காட்டி மகிழவேண்டுமெ என்பது உன் எண்ணம். ஆனால், கடலோர வெண்மணற் பரப்பிலே நடந்து செல்கையிலேயே, முத்து காலினிலே தட்டுப்படுவது போன்று, களம் நோக்கி நின்றபோதே வெற்றி உன்னை நாடிவந்தது; புன்னகைக்குக் காரணம் அதுவே! ஆயினும், போரிடும் வாய்ப்பினை இழந்து விடுகிறோமே என்றெண்ணும்போது, சங்கடமாக இருக்கிறது; என்னைக் கண்டதும், இந்த உன் எண்ணத்தைத் தெரிவிக்கப் பொய்க் கோபம் காட்டுகிறாய்! அல்லவா?

தம்பி! உனக்கு மாதுளைப் பழம் தரவேண்டும், அதனைத் தின்றிடச் சொல்லி, பக்க நின்று பார்த்திட வேண்டும்

என்று விரும்புகிறேன். ஏன், என்கிறாய்? மாதுளையின் தோலினை உரித்திடும்போதே வாயினிலே நீர் ஊறும், விரலெல்லாம் சாறுபோன்ற நீர்படியும். அழகான அணிசெய்வோன், செம்பொன்னால் அதனைச் செய்து, அதிலே இடம் செதுக்கி, ஆங்கு வைரம், கெம்பு, வைடூரியம் முதலிய கற்களைப் பதித்து இழைத்தளிக்கும் பான்மைபோல, இயற்கை அன்னை மாதுளைக் கனியில் கோலம் காட்டியன்றோ அளித்திடக் காண்கிறோம்! மேலே ஒரு நிறம்! உள்ளே, பெரிதும் மஞ்சள் வண்ணம்; ஆங்கு, இரத்தச் சிவப்பு நிறத்தில், சுவைமிகு மாதுளை மணிகள்பதிக்கப்பட்டு; மணியுடன் மணி உராய்ந்து உருவம் கெடாதிருக்க, இடையிடையே, வெண்மை கலந்த மஞ்சள் நிற மெல்லிய தோலினை அமைத்திருக்கும் பாங்கு, காணக் காண வியப்பளிக்கும்.

ஆனால், மேல்தோல் நீக்கியதும் மணிகள்மீது தானே, விருப்பம் பாயும்! எனவே, பலர், மாதுளையின் அமைப்பு காட்டிடும் அழகினைக் கண்டு மகிழும் வாய்ப்பினை இழந்தே விடுகின்றனர்.

தம்பி! உரித்தெடுத்து, ஒவ்வொன்றாக அல்ல, சிறு சிறு பிடி அளவு மாதுளை மணிகளை வாயினில் போட்டதும், சுவைமிகு சாறு கிடைக்கும்! குதப்பிக் குதப்பி, அந்தச் சாறு தரும் சுவையைப் பெறுவாய்! பிறகு? சாறு உண்ட பின்னர், கீழேயன்றோ, துப்பிடுவாய், சாறளித்த, மணிகளை - அவை சக்கையாகிவிட்டன என்பதை உணர்ந்து! அந்த மணிகளைக் கீழே துப்பும்போது, எவரேனும், மாதுளையின் தன்மை அறியாதார் கண்டால், என்ன எண்ணுவர்? செச்சே! பிடிக்காத பண்டம்! அதனால்தான், கீழே துப்புகிறார்! என்றன்றோ, எண்ணுவர்!

உனக்கல்லவா, தெரியும், சுவை தரும் சாறு உண்ட பிறகே, சத்தற்றதைக் கீழே துப்பும் உண்மை!!

அதுபோலவேதான், தம்பி! களம்புகத் துடித்து நின்ற உனக்கு வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று; சாறு பருகிய பின்னர், மாதுளை மணியின் சக்கையினைக் கீழே துப்புவதுபோல, வெற்றிச் சாறு தரும் சுவை பெற்றான பிறகு, பொய்க் கோபம் காட்டி நிற்கிறாய்!

ரோம் நாடு, பேரரசின் இருப்பிடமாய், பெரு வெற்றிகள் திகழ்ந்திடும் எழிலிடமாய் இருந்த காலை, வீரர் குழாம் கூடிடும் வகையிலே, கோடம்பாக்கத்தில், நீல வானத்தையே கொட்டகையாகக் கொண்டு, பல்லாயிரவர் கூடினபோது,

”தமிழழிக்கும் இந்தியினைத் திணிக்கும் ஆணை பிறப்பித்து விட்டு, அது குறித்து எழுந்துள்ள அச்சத்தை நீக்கும் வகையிலும் ஐயப்பாட்டினைப் போக்கும் முறையிலும் விளக்கம் அளிக்காமல், பாபு இராஜேந்திர பிரசாத் தமிழகத்தில் பவனி வரப்போகிறார். என்ன செய்யப் போகிறீர்கள்! வரவேற்கப் போகிறீர்களா?

என்று, அந்த மாநாட்டுக்குத் தலைமை வகிப்பவன் என்ற முறையில் கேட்டேன்.

”இல்லை! இல்லை! வரவேற்கமாட்டோம்! கருப்புக் கொடி காட்டுவோம்!!

என்று முழக்கமெழுப்பினாய்! கண்முன் தெரிகிறது காட்சி! காதினிலே ஒலிக்கிறது முழக்கம்!

”பாபு இராஜேந்திரர் விளக்கம் அளித்துவிட்டுத் தமிழகம் வரவேண்டும்!

இல்லையேல், அவருக்குக் கருப்புக்கொடி காட்ட வேண்டும்.''

என்று கூறினேன், ஆம்! ஆம்! என்று கூறி ஒப்பம் அளித்தாய். உள்ளம் மகிழ்ந்தது! ஊர் மகிழ்ந்தது! இந்தியத் துணைக் கண்டத்தையே, அந்தச் செய்தி ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது!

உளறித் திரியும் சில்லறைகளின் பேச்சை விட்டுத்தள்ளு, தம்பி! உன் சூளுரை, அடிமுடி அனைத்தையும் கிடுகிடுக்க வைத்தது. ஊரெல்லாம் அடக்குமுறை வலைவீசிப் பிடித்தாலும், பிடிபட்டவர் போக, கருப்புக் கொடி காட்டப் பல்லாயிரவர் இருப்பர் என்பதை நேரு பண்டிதர் கண்ட காட்சியினின்றும், நாடு அறிந்திருக்கிறது. விரட்டினாலும், மிரட்டினாலும், அடித்துத் துரத்தினாலும், வட்டமிட்டு அடித்தாலும், வளையமிட்டு அடித்தாலும், குருதி கொட்டக் கொட்ட அடித்தாலும், கருப்புக் கொடி

காட்டிடத் தயங்கமாட்டார்கள் என்பது ஆளவந்தார்களுக்குத் தெரியும். எனவே, கோடம்பாக்கத்தில், உன் முழக்கம் கேட்டு - மூலை முனை தேடித் திரிந்திடும் பேர்வழிகளைத் தள்ளு - மூலவர்கள் முகம் கருத்தது, மனம் குழம்பிற்று!

கருப்புக் கொடியா? தி.மு.க. வா? ஐய்யயோ! பொல்லாத பாவிகளாயிற்றே! என்ன நேரிடினும் கலங்கமாட்டார்களே! எடுத்ததைச் செய்தே முடிப்பார்களே! கழகம் கட்டளை பிறப்பித்தால், நிறைவேற்றியே தீருவார்களே! கண்டோமே நேரு வந்தபோது! - என்றெண்ணினர். கூடிக்கூடிப் பேசினர்; குமுறிக் குமுறிக் கிடந்தனர்; தூதுவிட்டனர்; துயரப்பட்டனர்; பாகுமொழி பேசிடுவோமா, பல்லைக் காட்டிக் கெஞ்சிடலாமா, அடைப்பம் தாங்கி கோபம் துடைத்திடலாமா, என்ன செய்து இந்த இக்கட்டை நீக்குவது

என்றெல்லாம் எண்ணி, ஏங்கிக் கிடந்தனர். போலீசும் தூங்கிக்கொண்டில்லை. வட்டம் வட்டமாகச் சென்று, பெயர் என்ன? வயதென்ன? தொழிலென்ன? தோழர்கள் எவரெவர்? என்ற விவரங்களைக்கேட்டறிந்து குறித்தவண்ணமிருந்தனர். அறிவகம் நாடிவந்து அன்புரை பகன்று, ஆற்றலறிவோம்! கொள்கையின் நேர்த்தியும் தெரியும்! எனினும் குடியரசுத் தலைவர், கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர் - அவருக்குக் கருப்புக்கொடி பிடிக்காதீர்கள்! என்று கூறிக் கொஞ்சியோர் பலப்பலர் - மேலதிகாரிகளும் கூடத்தான்!!

இங்குள்ள இதழ்கள் மட்டுமல்ல, வடநாட்டு இதழ்கள் யாவும், இந்தச் செய்தியை வெளியிட்டன; வெளிநாட்டு இதழ் களிலே என்ன வந்துள்ளன என்பது எனக்கு இனித்தான் தெரிய வேண்டும்; எங்கும் ஒரே பரபரப்பு, தம்பி! உன் ஆற்றலை அவர்கள்

அறிந்திருக்கிறார்கள்! அன்றைய மாநாடு, ஒரு இலட்சம் மக்கள் திரண்டிருந்ததோர் அருமையான காட்சி என்பதையும் உணர்ந்தனர். எனவே, எப்படியும் மனதினைத் தொட வேண்டும், விபத்தை நீக்கிக்கொள்ள வேண்டும், இன்மொழி பேச வேண்டும், இன்னல் ஏற்படாமல் தடுத்துவிட வேண்டும், என்பதற்காகப் படாதபாடு பட்டார்கள்.

”பசப்பு! அண்ணா! பசப்பு! எல்லாம் வெறும் ஏமாற்று வித்தை! நமது திட்டத்தை முறியடிக்கும் சதி! இனிப்பாகப் பேசினால் மனம் இளகும் என்பதறிந்து மேற்கொள்ளப்படும் முறை இதைக் கண்டு நாம் ஏமாறக்கூடாது’’ என்று கூறிடும் தம்பிமார்கள் ஏராளம். கூறினர். செயற்குழு கூடும்போதுகூட அறிவகம் வந்தனர்; பசப்பு மொழி கேட்டு போரை நிறுத்த வேண்டாம்! என்று உரிமையுடன் கூறினர்; உவகையுடன்

கேட்டுக்கொண்டுதான் உள்ளே சென்றேன்.

தம்பி! மாற்றாராயினும் உற்றாராயினும், பேசுவது எவ்வகையானது என்பதனையும், நோக்கம் யாது என்பதனையும், அதனை எந்த அளவு, எந்த முறையில், எந்தச் சமயத்தில், கவனிக்க வேண்டும், என்பதையும் அறிந்தவன்தான் உன் அண்ணன் என்பதை நினைவுபடுத்தவா வேண்டும்.

கொஞ்சுமொழி கேட்டுக் கொள்கையை விட்டுவிடுவது என்றால், கொள்கையே இந்த அளவு உரம் பெற்றிருக்காது.

இனிமை மொழி கேட்டு கொள்கை விட்டுவிடுவதென்றால், கோகிலகான M.S. சுப்புலட்சுமி "மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று பாடிய போதே, கொள்கையை விட்டு விட்டிருப்போம்.

பசப்பு மொழி கேட்டு, கொள்கையை

விட்டுவிடுவ தென்றால், வடக்காவது தெற்காவது! திம்மையா, யார்? கட்டாரி யார்? டாக்டர் இராதாகிருஷ்ணன் யார்? கிருஷ்ணமேனன் யார்? - என்றெல்லாம் பேசிக் காட்டினரே, அப்போதே, கொள்கையை விட்டுவிட்டிருப்போம் அல்லவா?

நாம் எடுத்துக்கொண்டுள்ள கொள்கையும், அதற்கான திட்டமும், அச்சமூட்டியோ, பசப்புக் காட்டியோ ஒழித்துக் கட்டிவிடக் கூடியன அல்ல; அடக்குமுறை எனும் நெருப்பாற்றில் நீந்திச் செல்ல நேரிடினும், வெந்து நீரானவர்கள் போக மீதமுள்ளோர், இலட்சியப் பயணத்தை மேற்கொள்வர்.

இதை அறிந்திருக்கிறாய், எனினும், தம்பி! அறப்போர் நடாத்தி உன் ஆற்றலைக் காட்டிடும் வாய்ப்புப் போய் விடுகிறதே என்ற ஆயாசத்தால், அண்ணன் எங்கே பசப்பு வார்த்தை கேட்டு உறுதியைத்

தளர்த்திக்கொண்டு விடுவானோ என்று ஐயம் கொள்கிறாய்.

இதிலே, உன் ஐயத்தைவிட, உனக்கு உள்ள பேரார்வம் இருக்கிறதே, அதை நான் பெரிதும் மதிக்கிறேன் - அந்த ஆர்வம் கொண்டவர்களை வாழ்த்துகிறேன். கோடம்பாக்கம் மாநாட்டில் நான் கூறியபடி, "பேரார்வம் பொங்கிடும் நிலையில் உள்ள படை வரிசை கண்டும், போரிட வழி தராமல் இருக்கும் தலைவனாக இருப்பது, போரிட அழைக்கும் போது, போரிடப் படை வீரர்கள் முன் வராது இருப்பதைக் காணும் தலைவனாக இருப்பதைவிட, மேலானது, மகத்தானது, பெருமைக்கு உரியது.''

போர் இல்லை!

ஏன்? போர் நடாத்த வீரர் இல்லை!

தம்பி! இதுதான், கேவலம், இழுக்கு.

போர் இல்லை!

ஏன்?

இப்போது தேவையில்லையாம்?

யார் கூறுவது?

அவர்தான் போரிட ஆர்வம் காட்டியவரேதான்.

தம்பி! இதிலேதான், மாற்றாரே கண்டு மருளத்தக்க, வலிமைமிக்க, உண்மையான பெருமை, சிறப்பு இருக்கிறது.

கட்டித் தங்கம் இருக்கிறது, அணிபணியாக ஆக்கப் படாமல்! - இப்படி ஒரு நிலை.

அணிபணி செய்வதற்காக உட்காருகிறோம், தொழி லிடத்தில் - ஆனால், கட்டித் தங்கம் இல்லை! - இப்படி ஒரு நிலை.

தம்பி! இந்த இரு நிலைமைகளில், எது மதிக்கத்தக்கது! பதில், வேறு வேண்டுமா

இதற்கு!!

நீ நிற்கிறாய், உன் போன்ற இலட்சக்கணக்கானவர்கள் உடன்வர - களம் புக! ஆனால், போர் இல்லை என்ற அறிவிப்பு கிடைக்கிறது.

களம் புக வாரீர்! கடும் போரிட வாரீர்! - என்று கரடுமீது நின்று அழைக்கிறார் ஒரு தலைவர். ஆனால், குரல் கேட்டு வருவார்தான் இல்லை என்று வைத்துக்கொள் - எப்படி இருக்கும் அந்த நிலைமை!!

அதுபோலத்தான், தம்பி! இந்த அண்ணன் இப்படித்தான், அறப்போர் நடத்தப் போகிறோம், நடத்தப் போகிறோம் என்று நாம் எவ்வளவோ ஆவலாகத் துடித்து நிற்கிறோம், திடீரென்று வேண்டாம் இப்போது என்று அறிவிக்கிறார் - செ! என்ன ஏமாற்றம்! எத்துணை மனச் சங்கடம்! - என்று நீ கூறிடும் நிலை, காணக்

காணப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

கருப்புக் கொடி காட்டவேண்டாமாமே?

ஆமாம்! செயற்குழு முடிவு!

எவ்வளவு ஆசையாக இருந்தோம்!

என்னென்ன எண்ணிக்கொண்டோம் அறப்போர் மாண்புபற்றி!

செயற்குழுவும், நிரம்ப எண்ணிப் பார்த்துத்தான் முடிவு செய்தது. ஐந்து மணி நேரம் நடந்ததாம்.

தம்பி! நமது வட்டாரத்திலே இதுபோல இருக்கும் உரையாடல்.

கருப்புக் கொடி இல்லையாம்.

ஏன்?

அடக்குமுறை வரும் என்ற அச்சம்! நம்ம காமராஜர் கண்டிப்பான நடவடிக்கை எடுப்பார்

என்று திகில்!

இது, தம்பி! காங்கிரஸ் வட்டாரத்தில் பேச்சாக அமையும்; உன் காதில் விழ! ஆனால் தனியாக அவர்கள் பேசுவது என்னவாக இருக்கும் தெரியுமோ?

கருப்புக் கொடி இல்லையாமே!

ஏன்?

எதற்காகக் காட்டப் போகிறார்கள். அவர்களுக்குத்தான் கேட்டது கிடைத்துவிட்டதே!

அதென்ன விஷயம்?

இது தெரியாதா, உனக்கு? கோடம்பாக்கத்திலே, கூறினார்கள், இராஜேந்திர பிரசாத் தமிழகம் வருமுன், மொழி பற்றிய தமது ஆணைக்கு விளக்கம் கூறிவிட்டுத்தான் வரவேண்டும்; விளக்கம்

தராவிட்டால், கருப்புக்கொடி காட்டப்படும் என்று. இந்த இராஜேந்திரபிரசாத், இங்கு வந்த பிறகாவது, பேசக்கூடாதா? அவர்கள் கேட்டுக்கொண்ட படியே, இங்கு வருவதற்கு முன்பே, ஹைதராபாத்திலேயே விளக்கம் கொடுத்துப் பேசிவிட்டார்.

என்ன விளக்கம் கொடுத்துப் பேசினார்?

என்ன விளக்கம் வேண்டுமென்று, தீனா மூனாக்காரர் கேட்டார்களோ, அந்த விளக்கத்தைத்தான், இந்தி திணிப்பு இல்லை. இந்தி விஷயமாக, நேரு கொடுத்த வாக்குறுதியின்படி செயல்படுவோம் என்று விளக்கம் கொடுத்தார்.

பேச்சுத்தானே! பொதுக்கூட்டத்தில்!!

ஆமாம், நான்கூட அப்படித்தான், மனதுக்குச் சமாதானம் தேடிக்கொண்டேன், ஆனால்...

ஆனால் என்ன...

இவர் பேசினார்! நமது பாரதப் பிரதமரோ, கடிதமே எழுதி அனுப்பினார்!

கடிதமா! அவரா? இதுகளுக்கா?

ஆமாம்! நினைத்தாலே கோபம் கோபமாக வருகிறது. நாம், காங்கிரசுக்கு தூணாக இருக்கிறோம். ஒரு மந்திரிகூட நமக்குக் கடிதம் எழுதுவதில்லை. இந்தக் கழகத்தான் சம்பத்து "என்ன சொல்லுகிறீர்? என் கழகம் கருப்புக் கொடி காட்ட தீர்மானித்திருக்கிறது, இராஜேந்திர பிரசாத்துக்கு, நீங்கள் ஒரு விளக்கம், சமாதானம், கொடுக்க வேண்டும்'' என்று.

எப்போது எழுதினான்?

ஆகஸ்ட்டு மூன்றாம் தேதி!

பாரேன், துணிச்சலை. ஆகஸ்ட் ஆறாம்

தேதி கருப்புக் கொடி என்று அறிவித்துவிட்டு. மூன்றாம் தேதி கடிதம் எழுதி, பதில் கேட்டிருக்கிறான். சீனாக்காரன் தொல்லை ஒரு புறம், நாகர்கள் அமளி இன்னோர் புறம், அசாம் ரகளை வேறோர்புறம். இவைகளைக் கவனிப்பாரா, இந்த கழகத்தான் கடிதத்தைக் கவனிப்பாரா?

நானும் அப்படித்தான் எண்ணிக்கொண்டேன். இது களுக்காவது, நேருவாவது, கடிதம் எழுதுவதாவது! அவர் பதில் கடிதம் போட வேண்டிய அளவு இதுகள் என்ன, பெரிய மனிதர்களா!! - என்றெல்லாம் எண்ணிக் கொண்டேன். பயல், முகத்தில் கரிபூசிக்கொண்டு வந்து சேருவான் என்று நினைத்தேன்.

ஆனால் நேரு, பதில் கடிதம் கொடுத்திருக்கிறாரே!

வெட்கம் பிய்த்துத் தின்கிறது. என்ன செய்வது? சம்பத் கடிதம் பார்த்த மூன்று மணி நேரத்துக்கெல்லாம், தானே கையெழுத்துப் போட்டு, கடிதம் அனுப்புகிறார். பெயர், பாரதப் பிரதமர்! செய்கிற காரியம் இப்படி இருக்கிறது!!

கழகக்காரர்கள், இதை வெற்றி என்று கொண்டாடாமலா இருப்பார்கள்?

நமக்குள்ளே பேசிக்கொண்டால், என்ன தப்பு. வெற்றி தான்! இராஜேந்திர பிரசாத் அவசர அவசரமாக விளக்கம் கொடுக்கிறார்; அழுத்தக்காரர் என்கிறார்கள் கோவிந்த வல்லபபந்த். அவர், பார்லிமெண்டில் பேசுகிறார், இந்தித் திணிப்பு இல்லை; நேரு வாக்குறுதி நிலைக்கும்; ஆங்கிலம நீடிக்கும்; அதற்கான சட்டம் நிறைவேற்றுவோம், - என்றெல்லாம்; நேரு கடிதமே போடுகிறார்.

எல்லாம் இந்தப் பயல்கள் கருப்புக் கொடி காட்டுகிறோம் என்று சொன்ன பிறகு!

- அதுதான் எனக்கு வெட்கமாக இருக்கிறது.சாதாரண சமயத்திலே பேசட்டும், கடிதம் போடட்டும், அது ஒன்றும் பிரமாதம் அல்ல; அது எங்கள் தலைவர்களின் பெருந் தன்மையைத்தான் காட்டுகிறது என்று கூறிக்கொள்ளலாம்; நாலு பேரையும் நம்ப வைக்கலாம். விளக்கம் கொடு, இல்லாவிட்டால் கருப்புக் கொடி என்று மிரட்டுகிறான்; அப்பா! அப்பா! இதோ இந்த விளக்கம் என்று இராஜேந்திர பிரசாத் பேசுகிறார். உறுதிமொழியை உறுதிப்படுத்துங்கள் என்று கேட்கிறான் சம்பத்; உடனே, உறுதி! உறுதி! என்று பதில் கடிதம் கொடுக்கிறார் நேரு! நினைத்தாலே, வெட்கமாக இருக்கிறது.

கருப்புக் கொடிக்குப் பயந்துகொண்டுதான், உங்கள் தலைவர்கள், பந்த், நேரு, பிரசாத் மூவரும், விழுந்தடித்துக் கொண்டு, விளக்கம், உறுதிமொழி, கடிதம், தருகிறார்கள். நீ கேலியாகப் பேசினாயே, கருப்புக் கொடி பற்றி, பார்த்தாயா, உன் தலைவர்கள், அடிமுதல் முடிவரை கிடுகிடுத்துப்போனதை என்று கழகத்தான், கேட்பானா மாட்டானா?

கேட்பானய்யா கேட்பான். நமது தலைவர்கள் செய்து விட்ட காரியத்துக்கு, இதுவும் கேட்பான், இதற்கு மேலும் கேட்பான். நம் தலை எழுத்து, கேட்டுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

அட, குமாரபாளையத்திலே கூடி என்னமோ தீர்மானம் போட்டு அனுப்பிவைத்தார்களே, அப்போது இந்த இழவு விளக்கம், உறுதிமொழிக் கடிதம், இதை அனுப்பி

இருக்கக் கூடாதா, நம்ம தலைவர்கள். அப்போதெல்லாம் கல்லுப்பிள்ளையார்போல் இருந்துவிட்டு...

நான்கூடச் சந்தோஷப்பட்டேன். இந்தப் பயல்கள் தீர்மானம் போட்டு அனுப்பினால் சட்டை செய்வார்களா!! பார்! பார்! இதுகள் அனுப்பிய கடிதத்தை, எங்கள் தலைவர்கள், குப்பைக் கூடையிலே தூக்கி வீசினார்கள் என்றெல்லாம் பேசினேன்.

நான்கூடத்தான் பேசினேன். இப்போது? கருப்புக் கொடி காட்டுவோம் என்று மிரட்டியதும், மூலவர்கள் மூன்று பேரும், போட்டி போட்டுக் கொண்டு, காட்டாதே! காட்டாதே!விளக்கம் தருகிறோம்! உறுதிமொழி தருகிறோம்! கடிதம் இதோ! என்று நடந்துகொள்கிறார்கள்.

நாம் பேசுகிறோம், வீராவேசமாக! கழகம்

கால் தூசு! இதை எவனும் மதிக்கமாட்டான், கழகம் சொல்லும் போர் வெறும் புஸ்வாணம் என்று...

ஆமாம்! நம்ம தலைவர்கள் அப்படி இல்லையே! அவர்களை மிரட்ட, புஸ்வாணமே போதும்போல் இருக்கிறதே.

கழகக்காரர்கள், நேரு கடிதத்தை, படம் போட்டல்லவா, வைத்துக்கொள்வார்கள்!

ஆமாம்! நாம் அவர்களைப் பற்றிக் கேவலமாகப் பேசும் போதெல்லாம், எடுத்து வீசுவார்கள் நமது முகத்தில்.

கழகத்துக்கு வெற்றி தேடித் தருகிறார்கள் - நமக்குக் கேவலத்தை உண்டாக்குகிறார்கள் நமது தலைவர்கள்!

ஆமாம் ஆமாம், நமது... தலை...வர்கள்... செ! வெட்கம் பிய்த்துத் தின்கிறது.

போலீஸ் பார்த்துக் கொள்ளும் என்று இருந்துவிட்டிருக்க வேண்டும்.

கருப்புக் கொடி காட்டுவதை, சட்டம் சமாதானம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகக் கருதிவிட்டிருக்க வேண்டும்.

ஆனால், அது நாட்டைக் கலக்கும் அரசியல் பிரச்சினை என்பதை ஆளவந்தார்கள் உணர்ந்து, ஏற்றுக்கொண்டதால்தான், மூலவர் மூவருமே முன் வந்தனர். இதைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்திட இதைவிடக் குறிப்பிடத்தக்க வெற்றி வேறு என்ன வேண்டும்? கருப்புக் கொடி காட்டினாலும், இந்த அளவிலும், முறையிலும், வகையிலும், மூலவர்கள் மூவர் முன்வந்து, பேசி இருப்பார்களா என்பதுகூடச் சந்தேகம்.

அப்படிப்பட்ட மகத்தான வெற்றி கிடைக்கிறது. தம்பி! நீ, களம்புகத் துணிந்து

அறிவித்த உடன்!!

தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கூடிக் கலந்து பேசுவோம், வாருங்கள்.

குடியரசுத் தலைவரின் ஆணைபற்றிப் பொதுவாக நிபுணரின் கருத்தைக் கேட்டறிவோம், வருக!

ஒரு கட்சி, மொழிப் பிரச்சினைப்பற்றிக் கவனிப்பதைவிட, எல்லாக் கட்சியும் கூடிச் செயலாற்றினால், வெற்றி நிச்சயம்.

குடியரசுத் தலைவர் ஆணையில், மாற்றம் தேவை என்றால் எடுத்துச் சொல்லுங்கள்.

மாற்றம் ஏற்பட, நான், மத்திய சர்க்காருடன் வாதாடுகிறேன், போராடுகிறேன்.

என் சர்க்கார் இதற்குத் துணை நிற்கும் என்று நான் சத்தியம் செய்து கொடுக்கிறேன்.

தம்பி! இவையெல்லாம், கழகத்தைக்

கண்டதுண்டமாக்க வல்ல வீராதிவீரர் என்கிறார்களே, அந்தச் சுப்ரமணியனார் இருக்கிறாரே(!!) அவர் திருவாய் மலர்ந்தருளியவை!!

அவருடைய வாழ்நாளிலேயே, இதற்குமுன் எப்போதும் காட்டாத அளவு, பணிவு, குழைவு, கனிவு ததும்பும் முறையில் பத்திரிகை நிருபர்கள் மாநாடு கூட்டிப் பேசினார். இத்தனைக்கும் அவரிடம் இப்போது போலீசுத் துறையும் விடப்பட்டிருக்கிறது.

எனவே, தம்பி! கோடம்பாக்கத்தில், நீ எடுத்த சூளுரை வெற்றியை, அவர்களே, நம்மைத் தேடிக் கொண்டுவந்து தர வைத்திருக்கிறது.

இந்தித் திணிப்பு முயற்சியை முறியடித்த பெருமை,

நேருவின் வாக்குறுதி காற்றிலே

போய்விடாமல், உறுதிப் படுத்தப்பட்ட அருமை,

நம்மை அடக்குமுறை காட்டி ஒடுக்க முடியாது என்பதை ஆளவந்தார்கள் அறிந்து கொண்டுள்ள அரிய உண்மை,

இவ்வளவும், நீ, காட்டுவேன் கருப்புக் கொடி என்று முழக்கமிட்டதிலேயே கிடைத்திருக்கிறது.

இந்த வெற்றிதான், உன்னைப் புன்னகை புரிய வைக்கிறது.

அறப்போர் நடத்துவதிலே உள்ள ஆர்வம், செயல்பட வழி ஏற்படாமல் போனதால், பொய்க்கோபம் எழுகிறது.

குமாரபாளையத்தில் கூடிய நாளிலிருந்து, செயற்குழு அறிவகத்தில் கூடி, கருப்புக்கொடி காட்டத் தேவையில்லை என்று முடிவெடுத்த நாள்வரை, நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம், முறையாக எண்ணிப் பார்த்தால்,

எவரும் மகிழ்ச்சி கொள்வர், வெற்றி கிடைத்தது கண்டு பெருமிதம் கொள்வர்.

ஏடுகள் சில, இந்த வெற்றி கண்டு, காங்கிரசார் கலக்க மடையாது இருக்க வேண்டும் என்பதற்காகவும், வெட்கத்தை மறைத்துக்கொள்ளவும், ஈனத்தனமாக எழுதும்! கவலைப் படாதே! இசைவாணன் இல்லாதபோது, மந்தி புகுந்து, யாழ் மீட்டுகிறது என்று எண்ணிக்கொள். பெற்ற வெற்றி இனிப் பெற வேண்டியவைகளை நினைவுபடுத்தட்டும். வாழ்த்துகிறேன், உனை! வாகை சூடிய, தம்பியை! நீ பெற்ற வெற்றியை உலகுக்கு அறிவிக்கும் முரசொலிதான், மூலவர் மூவர் தந்த உறுதி மொழிகள். மூலவர் மூவர் முரசொலி எழுப்ப, வாகை சூடினாய், வாழ்க, நீ, தம்பி!

அன்புள்ள,

அண்ணாதுரை,

7-8-1960

15. வேலை இருக்கிறது நிரம்ப!

மொழிகள் -

அரசியல் சட்டம் திருத்தப்படுதல்,

நேருவும் குடியரசுத் தலைவரும் உறுதி

இந்தி மொழி திணிப்பு

தம்பி!

வெற்றி விழாக்கூட்டம் நடத்தி, தமிழகத்துக்குத் தனிச் சிறப்பினைத் தேடிக் கொடுத்த உன்னை வாழ்த்துகிறேன். அன்று கடற்கரையில் கூடிய மிகப் பெரிய கூட்டம், தமிழர் தரணி மெச்ச வாழ்ந்த நாட்களிலே பெற்ற வெற்றிகளை மக்களுக்கு அறிவிக்க நடாத்திய விழாக்கள் பற்றி இலக்கியம் காட்டுகிறதே, அதனை நினைவுபடுத்துவதாக அமைந்திருந்தது.

குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் பிறப்பித்த ஆணை, முன்பு பண்டித நேரு மொழிபற்றி அளித்திருந்த அருமை நிறைந்த வாக்குறுதியை உள்ளடக்கியதாக இலாது போனதால், பலரும் ஐயமும் அச்சமும் கொண்டனர்; அறிக்கைகள் விடுத்தனர். "ஐயகோ! ஈதென்ன கொடுமை. இந்தியைத் திணித்திட அன்றோ, குடியரசுத் தலைவரின் ஆணை வழிகோலுகிறது. பண்டிதர் பரிந்தளித்த வாக்குறுதி கேட்டு, நம்பிக்கையில் ஆழ்ந்து கிடந்தோமே - அதனை இப்போது நொறுக்கித் தூள் தூளாக்கி விடுகிறதே இவர்தம் ஆணை! இந்தி பேசாதாரின் இதயக் குமுறலை மதித்து, இந்தித் திணிப்புக்கு எழுந்துள்ள எதிர்ப்பினை உணர்ந்து, இந்தி நுழைவைத் தடுத்து நிறுத்த இன்னுயிரையும் தந்திடும் உறுதியுடன் தமிழ்ப் பெருங்குடி மக்களில்

தாசரானோர் தவிர, மற்றையோர் அனைவரும் திரண்டெழுந்து நிற்கின்றனர் என்பதனையும் அறிந்து, இத்துணை பெரும் எதிர்ப்பினைப் பொருட்படுத்தாது இருப்பது அறிவுடைமை அல்ல, இதனை அடக்குமுறை கொண்டு அழித்திட முனைவது அறவழி ஆகாது என்பதனை எல்லாம் எண்ணிப் பார்த்தன்றோ, நேரு பண்டிதர்,"அஞ்சற்க! இந்தித் திணிப்பு இல்லை. இந்தி பேசாதாரின் எண்ணம் கண்டறிந்து ஒப்பம் பெறா முன்னம், ஆங்கிலத்தை அகற்றப்போவதில்லை'' என்றெல்லாம், வாக்குறுதி அளித்தார், பாரே கவனிக்கத்தக்க முறையில், பண்பாளர் போற்றத்தக்க வகையில், பாராளு மன்றத்தில், பண்டித நேரு அதனை முறியடிக்கும் முறையிலே இருக்கிறதே, குடியரசுத் தலைவரின் ஆணை என்று எடுத்துக் கூறினர் பலர்; விளக்கிக் காட்டினர் வித்தகர்;

அறிக்கைகளை விடுத்தனர் அறிவிடம் அமர்ந்து பணிபுரிவோர்; எதிர்த்துப் பேசினார் ஆச்சாரியார்; வங்கத்தில் ஓர் மாநாடு கூட்டினர் வல்லுநர்கள்; மற்றும் சிலர் அழுது காட்டினர்; தம்பி! ஆர்த்தெழுந்து அணிவகுப்புகளைத் திரட்டிக் களம் காணத் துடித்த பெருமை, நம்மை மட்டுமே சாரும்.

விளக்கம் அளிப்போம், மேலும் மேலும். காரணங்களைக் காட்டுவோம் திறமையுடன், வாதாடுவோம் வல்லமை விளங்கிட என்றுதான் பலர் கருதினரேயன்றி, இந்தப் பேராபத்தைப் போக்கப் போரிட்டாக வேண்டும், அறம் வெல்லும் என்பது ஆன்றோர் மொழி எனினும், அறங்காத்திட அஞ்சா நெஞ்சும் வேண்டும் என்று எண்ணிச் செயலாற்ற முன்வந்தார்களில்லை.

குடியரசுத் தலைவரின் துணைகொண்டு, இந்தியை எப்படியும் ஆட்சி மொழியாகத்

திணித்து, ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தி பேசாதவர்களை அடிமைகளாக்கிடலாம், ஆணவ அரசினை நிலைநாட்டி விடலாம் என்று எண்ணிடும் வன்கணார்கள், இந்தி பற்றிய விளக்கம் தெரியாமல், இந்தி பேசாதாரின் மனம் அறியாமல், பிரச்சினையைப் புரிந்துகொள்ளாமல் இருப்பதுபோல எண்ணிக்கொண்டு, மெத்தவும் கற்றறிந்த வித்தகர்கள், பேசினர், எழுதினர்! வடக்கே இன்று ஆணவம் தலைக்கேறிய நிலையில் உள்ள இந்தி வெறியர்கள், தலைவர்கள் என்ற நிலை பெற்றுள்ளனர். எப்படி, காந்தியாரின் சமரச நோக்கத்தை, கோழைத்தனம் என்று திரித்துக் கூறி, அவருக்கு எதிர்ப்பு மூட்டி, இறுதியில் கயவனொருவன் அவரைச் சுட்டுக் கொன்றிடும் கொடுமைஏற்பட்டதோ, அதுபோல இந்தி பேசாதாரின் உணர்ச்சிகளையும் உரிமையையும்

மதித்து, அவர்களை இந்தி மொழி மூலம் அடிமைப்படுத்த முற்படுவது கூடாது என்பதை வெளிப்படை யாகத் தெரிவித்து, அத்தகைய அக்ரமம் நடைபெற நான் இடந்தரமாட்டேன், உடந்தையாக இருக்கப் போவதில்லை என்று உறுதியாக உரைத்திடும் எவரையும், எதிர்த்து ஒழிக்கவோ, குழி பறிக்கவோ, குலவிக் கெடுக்கவோ தயாராக உள்ள ஓர் கூட்டம், மாடமாளிகைகள், வாணிபக் கோட்டங்கள் எனும் இடங்களில் மட்டுமல்ல, கல்விக் கழகங்கள், துரைத்தன மன்றங்கள் ஆகியவற்றிலும், நிரம்பி உள்ளனர். அவர்கள், இந்திக்காக வாதாடுவதுகூடத் தேவை இல்லை; கட்டளை பிறப்பிக்க வேண்டியதுதானே! இதிலென்ன காரணம் கூறுவதும், கனிமொழி பேசுவதும்; இந்தி படித்துக்கொள்ளுங் கள், அப்போதுதான் ஏற்றம் பெறுவீர்கள் என்றுகூட எடுத்து

இயம்ப வேண்டும், படித்தால், பிழைக்கட்டும், இல்லையேல் சாகட்டும். நமக்கென்ன; நாம் ஆணையிடும் நிலையில் இருக்கிறோம்; அவர்கள் அடிபணிந்து கிடக்கிறார்கள். நாம் வேங்கைகளாகி உள்ளோம்; அவர்கள் வெள்ளாடுகள்! இந்நிலையில் அவர்களிடம் நாம் ஏன் கெஞ்சிக் கிடக்கவேண்டும்; கொஞ்சு மொழி பேசவேண்டும், இந்திதான் ஆட்சிமொழி! அறிந்திடுக! அதற்கேற்ப நடந்திடுக! என்று கட்டளையைப் பிறப்பித்து விட்டு, அதனைச் செயல்படுத்தக் கடுமையான நடவடிக்கைகளைத் திறம்பட எடுத்துக்கொள்ள வேண்டியது தானே முறை! என்று கொக்கரித்துக் கிடக்கும் கெடுமதி யாளர்கள், ஆட்சியின் எடுபிடிகளாக அல்ல, ஆட்டிப்படைப் போராக உள்ளனர். இதனைப் பண்டித நேரு மிக நன்றாக அறிவார். அறிந்திருந்தும் தமிழகம் எத்தகையது

என்பதையும் தெரிந்துகொண்டதால் வாக்குறுதி வழங்கினார்; வாழ்த்தினோம் அவரை.

கைகாலில் தளைபூட்டிச் சிறையில் தள்ளப்பட்டிருப் போனுக்குக் கடும் தாகம் ஏற்பட்டு, நாவுலர்ந்து, பேசவும் இயலா நிலைபெற்றுக் குறிகாட்டிக் குடிக்கத் தண்ணீர் கேட்டிடக் கண்ட, இரக்க மனம் கொண்ட காவலாளி குவளையில் தண்ணீர் கொண்டுவந்து, தருவதுகண்டு, செருக்கு மிகுந்த இரக்கமற்ற மேலதிகாரி குறுக்கிட்டு, குவளையைக் காலால் உதைத்துக் கீழே விழச்செய்து, "தண்ணீரா, தண்ணீர்! ஏடா! இவனுக்கு உபசாரம் செய்யவா, உன்னை இங்கு அமர்த்தினோம்! நாளையோ மறுநாளோ சாகப் போகிறான்; இவனுக்குத் தண்ணீர் ஒருகேடா! ஏன்! கண்ணீர் மொழிகிறான் என்பாயே! அது போதாதோ!

தண்ணீர் வேறு தரவேண்டுமோ!'' என்று கேட்டு இடி இடியெனச் சிரிப்பதைத் தம்பி! நாடகங்களிலே கண்டிருப்பாய்.

குடியரசுத் தலைவர் பிறப்பித்த ஆணையைப் பார்த்ததும், பலருக்கும், இதுவும் அதுபோன்றதோர் நிலையே என்ற எண்ணம் தோன்றிற்று. ஐயோ! பாவம்! என்றனர் சிலர்; உனக்கோ இந்தக் கதி என்று கேட்டனர் சிலர்; காலக் கொடுமை, நாம் என்ன செய்யலாம் என்று ஆயாசப்பட்டனர் பலர் என்று வைத்துக்கொள், கைகாலில் தளைபூட்டப்பட்டவன் கொடுமைப்படுத்தப்படுவது கண்டு பலன் என்ன? அவர்களின் பரிவுரையும் பெருமூச்சும், தளைகளை நொறுக்கிடுமோ? அவர்கள் அன்புரை காட்டுவதால் அவன் இருக்கும் சிறை சிங்காரச் சோலையாகிவிடுமோ? அஃதேபோல, இந்த ஆணை ஆகாது, இது

செயல்படுத்தப்படுமானால் வரும் பெரும் தீது, இது நேரு தந்த வாக்குறுதியை மதித்ததாகாது என்று விளக்கம் தந்தனரே, விவேகிகள் பலர். அதனால் விபத்து விலகிட வழி கிடைத்ததோ! இல்லை!! மாறாக, வாதத்துக்கு எதிர்வாதம்; மறுப்புக்கு மறுப்புச் சரமாரியாகக் கிளம்பி, மாலைநேரப் பேச்சுக்குச் சுவை தந்தது.

தம்பி! மறத்தமிழ் மரபினன் நீ, மார்தட்டி நின்றாய்! வஞ்சகர்களே! வாழ்ந்தால் தமிழொடு வாழ்வேன்! வீழ்வதேனும், இந்தியை எதிர்த்தபடி வீழ்வேன்! என்று சூளுரைத்தாய், துடித்தெழுந்தாய், வெற்றி உனை நாடி வந்தது, தேடி அடைந்தது. வெற்றி விழாக்கூட்டத்தில், மலர்ந்தமுகம், எவருக்கும்.

ஆடவர் அனைவரும் அறப்போரில் ஈடுபடக் கிளம்புவர். எவரையும் அழித்துப் பழக்கப்பட்டுவிட்ட எதேச்சாதிகாரம். என்னென்ன ஏவுமோ, எதை எதைப்

பறித்திடுமோ என்றெல்லாம் எண்ணி ஏக்கத்தால் தாக்குண்டு கிடந்த தாய்க்குலத்தவர் எண்ணற்றவர் கூடினர்; தமிழகம் போர்க்கோலம் பூண்டது கண்டதுமே, மாற்றார் மருண்டனர் என்ற செய்தி அறிந்து, அந்தச் செந்தேனைப் பருகி, அவர்தம் உரிமையாளரே, களிப்பில் திளைத்தனர். கழகம் நடாத்திச் சென்றிடும் பேறு பெற்றோர், காணற்கரிய காட்சி இது என்று களித்தது மட்டுமல்ல, இன்றுள்ள ஆற்றலும், கட்டுக்கோப்பும் மாசுபடாமல் வளர்ந்து, முறையும் திறனும் மேலும் செம்மை பெற்று, விடுதலைப்போர்நடாத்திக் காணவேண்டிய பெரியதோர் வெற்றிபற்றி எண்ணிக் களித்தனர்.

”வண்ணக் கிளியே வா! வா! வைரச் சிலையே! அருகே வா! தத்தி நடந்திடும் தங்கக் கொடியே! தாவி வந்திடும் மானின் கன்றே!

தோகை காட்டிடும் கோலமயிலே! எனை வாழ வைத்திடும் எழிலே, வா! வா!'' என்று தான் பெற்ற செல்வத்தைத் தாய் அழைத்து, மகிழ்ந்திடும் காட்சி ஒன்று.

நரைதிரை மூப்பு மேலிட்டு, கையில் தடி ஊன்றிடும் பருவத்தினரான முதியவர், வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அகமகிழ்ந்து, திருவும் புகழும் நிரம்பப் பெற்றுச், சான்றோனாகி வீரனுமாகி, நாட்டுக்குழைத்து நற்பெயரெடுத்து, வீட்டிற்கு வந்து விளக்கினைக் கண்டு, சுடும் என்றார்கள், சுவைதான் கண்டேன், அழுதாய் என்றார்கள் கண் அலர்ந்திடக் காண்கிறேன்; மேனி கருத்தது என்றனர் கண்டோர், செம்பொன் சிலை இது என்றறியாமல்! என்றெல்லாம் மகன் தன் துணைவியுடன் பேசி மகிழ்வது அறிந்து, பெருமிதம் கொண்டிடும் காட்சி மற்றொன்று.

முன்னையதற்கு ஈடு, சென்னைக் கடற்கரையில் கழகம் நடாத்திய வெற்றி விழா! பின்னையதோ, விடுதலைபெற்ற திருநாட்டில், வீரர்கள் மகிழ்ந்திருக்கும் நாளைக் குறிப்பிடுவதாகும்.

பெற்ற வெற்றி, தம்பி! பெறவேண்டிய வெற்றியினை யன்றோ நினைவூட்ட வேண்டும். அன்று அங்கு கூடினோர் அனைவரும் அதே எண்ணம் கொண்டவராகவே இருந்தனர்.

வெற்றி பற்றிய விளக்கங்களைக் கேட்டு இன்புற்றனர். எனினும், இதுபோதும் என்று எண்ணி அல்ல; இதுபோல்' பலப்பல வெற்றிகள் பெறப்பெறப் பாதை துலங்கும், பயணம் பாங்கானதாகும், இலட்சியம் நிறைவேறும், இன்பத் திராவிடம் காண்போம் என்ற எண்ணத்துடன்! "

என்னைப் போலவே, மாந்தர் ஏதேது தேடிப் பெற்றிடினும், வாலுக்கு எங்கே போவர்!'' என்று மந்தி கேட்கிறதாம், மனித குலத்தை நோக்கி. பாரதியார் சொன்னார் தம்பி! நானல்ல. அதுபோல, நாம் பெற்ற வெற்றி கண்டு மனம் பொறாதார், வாலுண்டோ? என்று பேசிடுகின்றனராம், பாவம்! வேறு என்ன பேசி அவர்களுக்கு இயல்பாக எழுந்திடும் வேதனையை நீக்கிக் கொள்வது.

"கடிதம் கிடைத்ததாமா, கடிதம்! நேரு ஒரு கடிதம் போட்டுவிட்டாராம், இதுகள் அதைத் தூக்கி வைத்துக் கொண்டு குதிகுதியென்று குதிக்கின்றனவே'' என்று குமுறலைக் குளறலாக்கித் திரியும் கும்பல் நமக்குத்தான் மிக நன்றாகத் தெரியுமே, தம்பி!

கொண்டை அறுந்த பெண்டொருத்தி செண்டு கண்டு இகழ்ந்தாளாம்! இந்தித் திணிப்பைத் தடுத்திட முடியாது என்று ஒதுங்கி

நின்றார், இன்று கொண்டை அறுந்து பெண்டு போல, நாம் பெற்ற வெற்றிச் செண்டு கண்டு இகழ்கின்றனர், வேறென்ன!

ஏதோ இவர்கள் துவக்கிடும் போராட்டம் ஒவ்வொன்றின் போதும், துணைக்குக் குருஷேவையும் ஐசனோவரையும் உடனழைத்துக் கொண்டு, நேரு பண்டிதர் பறந்து வந்து பேட்டிக்குக் காத்துக்கிடந்து, இவர்கள் பாசறை அலுவலை முடித்துக்கொண்டு, பாரிலுள்ளோருக்கு அறிவுரைகள் அனுப்பி விட்டு, வந்து பார்க்கச் சொல்லு பண்டிதர் குழுவை என்று "சேதி' விடுப்பதுதான், வாடிக்கை போலவும், நாம் ஏதோ ஒரு காகிதத்தைப் பெற்றுக் களிப்படைவது போலவும் அப்பாவிகள் எண்ணிக் கொள்ளட்டும் என்ற நினைப்பில், ஏதேதோ பேசுகின்றனர். எனக்கிருக்கும் வருத்தம், தம்பி! நம்மை இவர்கள்

இகழ்கிறார்களே என்பதனால் அல்ல. ஆனால், நம்மை இகழ்வதாக எண்ணிக்கொண்டு இவர்கள் பேசுவது, நம்மை அல்ல, நேரு பண்டிதரின் தரத்தை அல்லவா தாக்குவதாக ஆகிறது! நேரு பண்டிதர் என்ன மிகப் பெரிய தலைவரா! அவர் அமர்ந்திருக்கும் இடம் என்ன, மிக உயர்தரமானதா! அவரிடமிருந்து கடிதம் வந்தது என்பதிலே, என்ன குறிப்பிடத்தக்க சிறப்பு இருக்கிறது!! என்று, இவர்கள் பேசுகிறார்கள் என்பதல்லவா தொக்கி நிற்கிறது, இவர்கள் கூற்றிலே!!

நாம் நேரு பண்டிதர் தனிப்பட்ட முறையிலும் சரி, அவர் இன்று பெற்றுப் பெருமை அளித்திடும் பதவியைக் கவனித்தாலும் சரி, மதிக்கத்தக்கவர் என்பதனால்தான், அவர் உறுதிமொழி தருவதையும், அதை மீண்டும் வலிவுபடுத்திக் கடிதம் எழுதியதையும் பாராட்டி

மதிப்பளிக்கிறோம்.

கடிதம் பெற்றது ஒரு பெரிய காரியமா! பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய விஷயமா? என்று பேசகிறார்களே, இவர்கள், நேரு பண்டிதர், மதிக்கத்தக்கவர் என்று கருதுகிறார்களா!!

ஏனோ பாவம், எரிச்சலை அடக்கிக்கொள்ள எண்ணி, நம்மை இகழ்வதாக எண்ணிக்கொண்டு, உலகத் தலைவர்களில் ஒருவர் என்ற உயர்நிலையினைப் பெற்றுள்ள பண்டித நேருவை இகழ்ந்து பேசித் திரிகின்றனர். பொருள் தெரியாததாலா? மனமருள் அவர்களை அப்படி ஆக்கிவிட்டதா!!

கழுநீர்ப் பானையினைத் தலையில் சுமந்துகொண்டு செல்பவன், பன்னீர்ச்செம்பினைக் கரத்தில் எடுத்துச்

செல்பவனைக் கண்டு, "பூ இந்தச் சின்னச் செம்புதான் உனக்குக் கிடைத்ததா! என் தலையில் பார்! எத்தனை பெரிய கழுநீர்ப் பானை!!' என்று கூறினால் எப்படி இருக்கும்? யாரண்ணா! அப்படிப் கூறுவார்கள்! என்று கேட்கிறாயா தம்பி! இதோ இவர்கள் பேசுகிறார்களே, கடிதம் ஒரு பிரமாதமா! என்று, அதற்கென்ன சொல்லுகிறாய்?

சட்டசபையில், நான்கூட, ஒரு காங்கிரஸ் உறுப்பினர் இது பற்றிப் பேசும்போது கேட்டேன்:

எங்களுக்குக் குடியரசுத் தலைவரும் முதலமைச்சர் நேருவும் உறுதிமொழிக் கடிதங்கள் அனுப்பியதால், அவர்களின் தரம் குறைந்துவிட்டதாகக் கனம் அங்கத்தினர் கருதுகிறாரா?

என்று. பதில் இல்லை!

அந்தக் கடிதத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு இத்தனை ஆர்ப்பாட்டமா என்று பேசுபவர்கள், ஒன்று, நேரு பண்டிதரின் தரம் இப்படி ஒரு கடிதம் எழுதியதால் குறைந்துவிட்டது என்ற கருத்துடன் இருக்க வேண்டும் அல்லது நேரு பண்டிதருக்கு, தரமே கிடையாது என்ற எண்ணம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

இரண்டில் எது அவர்கள் எண்ணமாக இருப்பினும், இழிமொழியை அவர்கள் நேரு பண்டிதர்மீது வீசுகிறார்கள் என்று பொருளாகுமே தவிர, நம்மீது அல்ல! நம்மீது என்றுதான், விவரமறியாமல் அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள்.

அவர்கள் கிடக்கட்டும்; நமக்குக் கிடைத்துள்ள வெற்றி, தம்பி! நமக்கு மட்டுமல்ல, நம் தமிழகத்துக்குக் கிடைத்துள்ள வெற்றி - அதுமட்டுமல்ல, இந்திபேசாத

மாநிலங்கள் அனைத்துக்கும் கிடைத்துள்ள வெற்றி, இதுதான், இந்தித் திணிப்பு இல்லை; ஆங்கிலம் அகற்றப்படமாட்டாது; இந்தி பேசாத மக்களின் கருத்தறியப்படும்; ஆங்கிலத்தைகாலக்கெடுவின்றி நீடித்திடச் செய்யும் சட்டம் நிறைவேற்றப்படும் என்ற திட்டவட்டமான, அறிவிப்புகள் கிடைத்துவிட்டன. அவை நேரு பண்டிதர், தனிப்பட்ட முறையில் தருவனகூட அல்ல; அவர் நடாத்திச் செல்லும் அரசின் சார்பிலே அளித்திருக்கிறார்.

இது நல்லதோர் வெற்றி, எனவே மகிழ்ச்சி. இது நல்லதோர் வாய்ப்பு, எனவே இதனை பயன்தரத்தக்கதாக்கும் பொறுப்பும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

உறுதிமொழிகள் அபின் மாத்திரைகள், நம்மை மயக்க, என்பார் உளர்.

நான், அந்த வகையிலே எண்ணவில்லை; எனினும் அந்த விதமாக எண்ணுபவர் கூறுகிறபடி, நாம் விழிப்பாக இருக்கத்தான் வேண்டும்.

உறுதிமொழிகளை ஒரு கரத்தால் அளித்துவிட்டு, மறு கரத்தால் நிலைமையை உருக்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்; அது கண்டிக்கத்தக்கது; தடுத்து நிறுத்தப் பட்டாக வேண்டும்.

உறுதிமொழிகளுக்கேற்ப, ஆங்கிலம் காலக்கெடுவின்றி ஆட்சிமொழி அலுவலுக்கு இருந்துவரச் செய்வதற்கான சட்டம் கொண்டுவரப்படும் என்று அறிகிறோம்.

ஆனால், அப்படி ஒரு தனிச்சட்டம் கொண்டு வந்து, பிறகு, அதிலே ஏற்படக்கூடிய நேர்முக, மறைமுகக் குறைபாடுகளால் விபத்துக்கள் ஏற்படுமானால், பிறகு தொல்லை நாட்டினைத்

தாக்கும்.

எனவே, நாம், ஆட்சிமொழி பற்றி, இந்திய அரசியல் சட்டத்திலே உள்ளதைத் திருத்தி அமைக்க வேண்டும் என்பதை, நாட்டவருக்கும் நாடாள்வோருக்கும், செயற்குழுத் தீர்மான வாயிலாக எடுத்துக் கூறி இருக்கிறோம்.

இந்திய அரசியல் சட்டத்துக்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டால், நிலைமை தெளிவாகும் என்பது மட்டுமல்ல, இந்தி பேசாத மாநில அரசுகள் நிம்மதி பெற முடியும்.

தம்பி! வெற்றி விழாக் கூட்டத்துக்காக, நான் காஞ்சிபுரத்திலிருந்து, அ.க. தங்கவேலருடன் அவருடைய மோட்டாரில் வந்து கொண்டிருந்தேன். திடீரென்று, வண்டி நின்றது; ஓட்டுபவர் பதறினார், கீழே இறங்கிப் பார்த்தோம்; சக்கரங்கள்பொருத்தப்பட்டிருந்த இடத்திலிருந்து புகை குபுகுபுவென

வரக்கண்டோம். என்ன இது? என்று கேட்டோம்.

“மோட்டாரில், தடுத்து நிறுத்தும் கருவி பழுதாகிவிட்டது. சக்கரங்களை அடி பிடித்து அழுத்துகிறது. உராய்ந்து உராய்ந்து சூடேறிவிட்டது’’ என்று கூறிடவே, நாங்கள் பதறி, இப்படியே போனால், என்ன ஆகும்? என்று கேட்டோம்,”தீப்பிடித்துக் கொள்ளும்’’ என்ற பதில் கிடைத்தது.

பிறகு...? என்று கேட்கிறாயா? ஒன்றும் ஆகவில்லை, தம்பி! இருக்கிறேனே! அதே மோட்டாரில்தான் சென்னை வந்தோம்; தீப்பிடித்துக் கொள்ளவில்லை. எப்படி? அந்தக் கருவியைப் பழுதடையச் செய்த, குழம்பிப்போன, பழைய எண்ணெயை, வெளியே எடுத்துவிட்டுச் சிறிது பழுது பார்த்திடவே, வண்டி விபத்து ஏதுமன்றி நகர்ந்தது.

இந்திய அரசியல் சட்டத்திலே இப்போது உள்ள மொழி பற்றிய விதிமுறை, பழைய எண்ணெய் ஆகிவிட்டது, துரைத்தனம் எனும் கருவியே பழுதுபட்டு, புகை சுருள் சுருளாக வெளிவந்தபடி இருக்கிறது. அந்த எண்ணெய் வெளியே எடுத்துவிடப்பட வேண்டும்; கருவி பழுதுபார்க்கப்பட வேண்டும், என்பது போன்றதுதான், இந்திய அரசியல் சட்டத்திலே, மொழிபற்றிய விஷயத்திலே, ஒரு திருத்தம் செய்திட வேண்டும் என்று கூறுவது.

"இதென்ன புதிய நிபந்தனை?'' என்றார் ஒரு காங்கிரஸ் நண்பர்.

"கருப்புக்கொடிக்கு அச்சப்பட்டுக்கொண்டு, முதலமைச்சர் நேரு, கடிதம் கொடுத்தவுடன், உங்களுக்குத் துணிவு அதிகமாகிவிட்டது. அதனால்தான், இந்திய அரசியல் சட்டத்துக்கே திருத்தம் வேண்டும் என்று கூற வந்துவிட்டீர்கள்'' என்றார், எளிதாக

ஆத்திரப்பட்டுவிடும் மற்றோர் காங்கிரஸ் நண்பர்.

"இதை ஏனண்ணா' முன்பே சொல்லக்கூடாது?'' என்று கேட்டார், நாம் செய்துவரும் காரியத்தைச் சரியானபடி கணிக்காமல், யோசனைகளைக் கூறுவதிலே ஆர்வம் காட்டும், நமது கழகத்தோழர் ஒருவர்.

மொழி விஷயமாக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம்;அதைச் செயல்படுத்தி வெற்றி காண்பது எப்படி என்பது பற்றிய கட்டம் - வாய்ப்பு - இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், சென்னை சர்க்கார், மொழிப் பிரச்சினை குறித்துத் தயாரித்து, எல்லாக் கட்சித் தலைவர்களிடமும் பொது உடன்பாடு பெற்றுப், பிறகு, இந்திய துரைத்தனத்துக்கு

அனுப்பி வைத்த அறிக்கை, சென்னை சட்ட சபையிலே, விவாதிக்கப் பட்டபோதே, நமது கழகச் சார்பில், அந்த அறிக்கையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும என்ற தீர்மானத்தையும் இணைத்து அனுப்ப வேண்டும் என்று எடுத்துக்கூறப்பட்டது.

விளக்கம், விவாதம், மறுப்பு - இவைகளுக்குப் பிறகு ஓட்டுக்கும் விடப்பட்டது.

நாம்தான், தம்பி! 15!! - என்ன ஆகியிருக்கும் தீர்மானம், என்பதைச் சொல்லவா வேண்டும்.

தி. மு. கழக உறுப்பினர் தவிர, மற்ற எல்லாக் கட்சியினரும் ஒரே முகமாகி, இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைத் தோற்கடித்து விட்டனர்.

அன்றே சென்னை அரசினை நடத்திச் செல்லும் காங்கிரஸ் கட்சி, கட்சிக்

கண்ணோட்டத்தை மறந்து, நாட்டு நலனைக் கருத்திற் கொண்டு, தி. மு. க. தந்த தீர்மானத்தை ஆதரித்து, நிறைவேற்றி இருப்பார்களானால், மொழிப் பிரச்சினையில் தமிழகம், கட்சிகளை மறந்து, ஒன்றுபட்டு நிற்கிறது என்பது வடவருக்கு விளங்கி இருக்கும்.

என்னால் இயன்றமட்டும், கேட்டுப் பார்த்தேன் - அவர் களுக்கு வேறு எந்த வாதமும் சரியானதாகப்படவில்லை - 150 - 15 - அது ஒன்றுதான், அவர்களுக்குத் தெரிந்தது. தமிழகம் பெற்றிருக்கக்கூடிய பொன்னான வாய்ப்பினை அழித் தொழித்தார்கள்.

"இப்போதுள்ள மத்திய சர்க்கார் மூலமாகவோ இதற்குப் பின்னர் வரக்கூடிய சர்க்கார் மூலமாகவோ, தமிழகத்துக்கு எந்த ஆபத்தும் வராமல் இருக்க வேண்டுமானால், அரசியல் சட்டத்துக்கு ஒரு திருத்தம் வேண்டும்

என்று வலியுறுத்திக் கூறுவேன்.''

இந்திய துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலே இதற்குக் கணிசமான ஆதரவு கிடைக்கமென்று துணிவாகக்கூறலாம். வங்காளத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சி, பாஞ்சாலத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சி, மராட்டிய நாட்டிலே ஏற்பட்டிருக்கும் குமுறல், இவைகள் எல்லாம் பிற்போக்கு வாதிகள் செய்கின்ற கிளர்ச்சி என்று சொல்லிவிடுவார்களானால் - அவர்களிடமுள்ள அரசியல் அகராதி அவர்களுக்கு அந்த ஒரு பதத்தைத்தான் தருகிறது என்று சொல்ல வேண்டும். உண்மையாக ஆராய்ந்து பார்த்தால், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு ஒரு (டர்ப்ண்ற்ண்ஸ்ரீஹப் ஸ்ரீப்ண்ம்ஹற்ங்) அரசியல் சூழ்நிலை

சரியானபடி ஏற்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

1958 மார்ச்சுத் திங்கள் 11-ம் நாள், மொழிப் பிரச்சினை பற்றி, நான் அதுபோலக் குறிப்பிட்டுப் பேசினேன்.

இந்தித் திணிப்புப்பற்றிச் சென்னை சர்க்கார் விழிப்புடன் இருக்கிறது என்ற கருத்துடன் அமைச்சர் வாதாடியதால், நான் அப்படிச் சென்னை சர்க்கார் கருதினாலும்கூட, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த முயற்சி எடுப்பதுதான் அறிவுடைமை என்பதையும், எடுத்துக் கூறினேன்.

"சென்னை சர்க்கார் கருத்து வெற்றிபெற வேண்டுமானால், இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.''

இப்போது, இதை வலியுறுத்திக்கொண்டு போனால், சிக்கல் ஏற்பட்டுவிடும், இந்திய துரைத்தனத்துடன் சமரசமாகப் போகும் வாய்ப்புக் கெட்டுவிடும் என்று அமைச்சர் கருத்துத் தெரிவித்ததால்,

”எதிர்கால சந்ததிகளை கட்டுப்படுத்தக்கூடிய மிக முக்கியமான முடிவில், அவசரப்பட்டு, ஏதோ சமரசம் காணவேண்டும் என்பதில் நாட்டம் வைக்காமல், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான எங்கள் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.’’

என்று எடுத்துக் காட்டினேன்.

இந்திய அரசியல் சட்டம் ஏதோ தொடக்கூடாத, திருத்தப் படக்கூடாத புனித ஏடு என்ற முறையிலே, காங்கிரஸ் கட்சியினர் பேசிவருவதுதான் நமக்குத் தெரியுமே, தம்பி!

அதனால், இந்திய அரசியல் சட்டத்தைப் பற்றியே விளக்கம் கூறினேன்.

”இந்திய அரசியல் சட்டமாக்கப்பட்ட நேரத்தில், அது எவ்வளவு அவசரமாக ஆக்கப்பட்டது என்பதனை உணர வேண்டும். அவ்வாறு யார் மூலம் உணர்ந்திருக்கிறோம் என்றால், இந்திய அரசியல் சட்ட நிபுணர்களாக இருந்தவர்கள், அரசியல் சட்டமாக்கப்படும்பொழுது உடன் இருந்தவர்கள், இவர்களெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அன்றைய தினம் வெள்ளைக்கார ஆட்சி நீங்கி, இந்த நாட்டுக்குச் சுய ஆட்சி கிடைத்த நேரத்தில், வெள்ளைக்காரர் போய்விட்டார்கள் என்ற இயற்கையான சந்தோஷத்தில், எதிர் காலத்தில் ஆட்சி எப்படி இருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து, ஒருவருக்கொருவர் எதைவேண்டுமானாலும்

பரிமாறிக் கொள்ளலாம் என்ற ஆனந்தத்தில், செய்துகொண்ட காரியம் இது. ஹோலி பண்டிகையன்று வேடிக்கையாக ஒருவருக் கொருவர்மீது வண்ணச்சாயத்தை வீசிக்கொள்வதுபோல, ஒருவருக்கொருவர் மீது வாதங்கள் ஆனந்தமாக வீசிக் கொள்ளப்பட்டன. ஆரஅமர ஆராய்ந்து இது செய்யப்பட வில்லை என்று அரசியல் சட்டத்தை ஆராய்ந்திருக்கும் பெரிய அரசியல் சட்ட நிபுணர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.''

மொழிப் பிரச்சினை சம்பந்தப்பட்டவரை, இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்துகொள்ளுவதுதான், உண்மையிலேயே நமக்கும் எதிர்காலத்திற்கும் நல்லது, நல்ல பாதுகாப்பு அளிப்பதாக இருக்கும். அந்தப் பாதுகாப்பைப் பெறுவதற்காகத்தான் இந்த

அறிக்கையிலே எங்களுடைய திருத்தத்தை இணைத்துக்கொள்வது பொருத்தம் என்பதை, நான் நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பேச்சு, அதற்குத் துணைநிற்கக்கூடியவர்கள், சட்ட மன்றத்தில், 15 மட்டுமே என்பதால் பலன் அளிக்காமற் போய்விட்டது.

வெறும் வாதத் திறமையைக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்துடனே, வேகம், விறுவிறுப்பு ஊட்ட வேண்டும் என்பதற்காகவோ நான் அன்று பேசவில்லை. உணரக்கூடிய ஒப்புக்கொள்ளக்கூடிய காரணங்களை, முறைப்படி எடுத்துக்கூறி, அமைச்சரின் இசைவினைப் பெற வேண்டும் என்று மெத்தவும் விரும்பினேன். ஆனால் அவர்கள் நமக்கு இணங்குவது, தங்கள்கட்சியின் அந்தஸ்துக்குக் கேடு

என்று எண்ணிக்கொண்டு, எதிர்த்தார்கள் - நாட்டுக்கான திட்டம் இது என்பதைக் கவனிக்க மறுத்தார்கள்.

இந்தியாவில்தான் நீங்கள் இருக்கமாட்டீர்களே! திராவிடம் தனி நாடு என்பவர்களாயிற்றே, உங்களுக்கு இந்திய அரசியல் சட்டத்திலே எந்த மொழி ஆட்சிமொழியாக இருந்தால் என்ன? என்று இப்போதும் கேலி பேசுகிறார்கள் அல்லவா, "இடம் பிடித்தார்கள்' - அதே முறையில்தான் அன்றும்!

கனிவு இருக்க வேண்டும் என்ற அலாதி அக்கறையுடன் நிதி அமைச்சர், இப்போது பேசினார், மொழிப் பிரச்சினை பற்றி; பத்திரிகை நிருபர்கள் மாநாடு கூட்டி; அதிலேகூடக் காணலாம், இந்த வாடை!

இந்தியாவிலே எது ஆட்சிமொழியாக

இருக்க வேண்டும் என்று இவர்கள் இவ்வளவு அக்கறை காட்டுவதிலிருந்து, பிரிவினை விஷயத்திலே, ஏதோ கருத்து மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது - என்ற பொருள்பட அல்லவா பேசினார். அன்றும் அதேவிதமாகப் பேசப்பட்டது. நான் சிறிதளவு விளக்கமாகவே, அது குறித்து அன்று பேசினேன்.

"இப்போது மூன்று வகையான மொழிப் பிரச்சினைகள் நம் முன்னால் இருக்கின்றன. ஒன்று தேசிய மொழிப் பிரச்சினை.

தேசிய மொழியைப் பொறுத்தவரையில் 10 - 15 - ஆண்டுகளுக்கு முன்னால், எங்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்ததெல்லாம், இந்திதான் தேசியமொழி என்ப தாகும். இந்திதான் தேசியமொழி என்று எடுத்துக் கூறப்படாத காங்கிரஸ் கூட்டங்கள் அப்போது கிடையாது.

இந்திதான் தேசிய மொழி என்று கூறாத காங்கிரஸ்காரர் அப்போது கிடையாது. அவ்வாறு கூறாதவர் காங்கிரஸ்காரர் அல்ல என்ற கருத்து அப்போது நிலவி வந்தது. இன்றோ இந்தி தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், இந்தியுடன் தமிழும் மற்றப் பல மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, மொத்தம் 14 - தேசிய மொழிகள் இருக்கின்றன.''

□

ஆட்சிமொழி அந்தஸ்தைப் பொறுத்தவரையில், தமிழ்தான் தமிழகத்தில் ஆட்சிமொழி.

□

இந்தியாவில், நிர்வாக மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதுபற்றிக் கருத்து

வேறுபாடுகள் இருக்கின்றன.

இந்தப் பிரச்சினையை மூன்றுவிதமாக நோக்கலாம். இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில், இப் பிரச்சினையைப் பார்ப்பது ஒரு விதம்.

இரண்டாவது, இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கப்போவதில்லை; அது பிரியப் போகிறது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு பிரியும்வரை உள்ள இடைக்காலத்தில் எது நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்று பார்ப்பது ஆகும்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்தியா பிரியப்போகிறது என்ற எண்ணத்துடன்தான், இப் பிரச்சினையை நாங்கள் அணுகுகிறோம்.

நிர்வாகத்தில் மத்திய சர்க்காரிடம் எந்தெந்தப் பொறுப்பு களை மாத்திரம்

ஒப்படைக்கலாம் என்று பார்த்து, அவர்களிடம் இருக்கும் அதிகப்படியான பொறுப்புகளைக் குறைத்துவிட்டால், அப்போது மத்திய அரசாங்க நிர்வாக மொழி எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடன், இப்பிரச்சினையை அணுகுவது மூன்றாவது விதம் ஆகும்.

தம்பி! மொழிப் பிரச்சினையை, நாம் அக்கறையுடன் கவனித்து வருகிறோம் என்று மட்டுமே, காங்கிரசார் எண்ணு கின்றனர்; அப்படியல்ல, உரிமைப் பிரச்சினையுடன் சேர்த்தே நாம் இந்த மொழிப் பிரச்சினையைப்பற்றி நாட்டம் செலுத்து கிறோம் என்பதை ஆட்சியாளர் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே, நான் இத்தனை விளக்கம் தந்தேன். விளக்கமாகத்தான் இருக்கிறது; நமது கழகத்தின் அடிப்படைக்

குறிக்கோளான நாட்டுப் பிரிவினை பற்றியும் வலியுறுத்தித்தான் சொன்னீர்கள்; இவ்வளவு விளக்கம் போதுமே என்று, தம்பி! நீயும் கூறுவாய், நாட்டவரும் கூறுவர்; ஆனால் நாடாள்வோர் அவ்விதமா! இந்தச் சாமான்யன் சொல்வதா, நாம் கேட்டுக்கொண்டு ஒப்பம் அளிப்பதா என்ற எண்ணம் அவர்களிடம் தடித்து மேலோங்கி நிற்கிறது. எனவே, அவர்களிடம் வடக்கே உள்ளவர்களின் போக்கினை எடுத்துக் கூறி வாதாடலாம் என்று எண்ணினேன்.

"நிர்வாக மொழியாக இந்திதான் இருக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்திச் சொல்லும் வெறிபிடித்த தலைவர்களின் கூட்டம் வடநாட்டில் இருக்கிறதென்பதும், அந்தத் தலைவர்களுக்கு மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சியாளர்களிடம் மிகுந்த செல்வாக்கு இருக்கிறதென்பதும் உலகமறிந்த

உண்மை. கௌஹத்தி காங்கிரஸ் மாநாட்டில் கனம் சுப்பிரமணியம் பேசிய பேச்சை, The most reactionary speech (பிற்போக்கான பேச்சு) என்று ஒரு வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டார்.''

என்று எடுத்துப் பேசினேன். கனம் கொதித்தெழுந்தார். பாவம்! சங்கடம் அவருக்கு. அவருடைய பேச்சை அவருடைய கட்சிக்காரர் ஒருவரே, பிற்போக்கான பேச்சு என்று வெளிப்படையாக மாநாட்டிலே கண்டித்தார் என்பதைச் சட்டசபையில் நான் எடுத்துக் காட்டுவதை, எப்படிப் பொறுமையுடன் அவரால் கேட்டுக்கொண்டிருக்க முடியும்? பொங்கி எழுந்தார்.

"அவருக்கும் இந்திக்கும் சம்பந்தம் கிடையாது. ஆகவே, இந்தி தெரியாதவர்தான் அவ்வாறு கூறினார்''

என்று பேசினார்.

கொடுத்தார் சரியான அடி, நம்ம அமைச்சர்! என்று உடனிருந்தோர் எண்ணிக்கொண்டிருப்பார்களல்லவா? அவர்களின் களிப்புக் கருகிவிட்டதோ என்னவோ, நான் தொடர்ந்து பேசியது கேட்டு.

"இந்திக்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லாதபோது, இந்தியின் சார்பாக அவர் பேசியிருப்பதிலிருந்து, இந்திக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தச் செல்வாக்கு வளர்ந்து கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களும், அவ்வாறு கூறுபவர்களும் இருக்கிறார்கள்.''

இந்தப் பிரச்சினையில் சமரச மனப்பான்மையுடன் நடந்து கொள்ளவேண்டுமென்று பண்டித

ஜவஹர்லால் நேரு விரும்புகிறார் என்பதை அவருடைய வார்த்தைகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

இந்தியை எப்படியும் நிர்வாக மொழியாகப் புகுத்த வேண்டுமென்ற மனப்பான்மைகொண்ட கூட்டத்தினரும் வடநாட்டில் இருக்கிறார்கள். இந்தியைப் பக்குவமாக நிர்வாக மொழியாகப் புகுத்தவேண்டுமென்ற மனப்பான்மை கொண்ட கூட்டத்தினரும் வடநாட்டில் இருக்கிறார்கள்.

இந்த இரு கூட்டத்தினருள் எந்தக் கூட்டத்தினர் வெற்றி பெறமாட்டார்கள் என்று நாம் இன்று அறுதியிட்டுக் கூற முடியாது.

இப்படிப்பட்ட நிலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறிக்கைக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது என்றும், மற்ற

எதிர்க்கட்சிகளும் ஒப்புதல் அளித்துள்ளன என்றும் குறிப்பிட்டு, இந்த அறிக்கையை, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினால், வடநாட்டு இந்தி வெறியர்கள் இங்கே இந்தியைப் புகுத்துவதற்கு இந்த அறிக்கையைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

ஆகவேதான், இந்தியை எதிர்ப்பவர்களும், இந்தி ஆட்சி மொழியாகக் கூடாது என்று சொல்பவர்களும், இந்தி மத்திய அரசாங்க ஆட்சி மொழியாக ஆக்கப்படவேண்டுமென்று கூறும் அரசியல் சட்டப் பிரிவை எதிர்ப்பவர்களும், அந்தப் பிரிவைத் திருத்தவேண்டுமென்று வாதாடுபவர்களும், தமிழ் நாட்டில் ஏராளமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதை, மத்திய அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்கு நாங்கள் வகை செய்கிறோம்.

நாங்கள் இவ்வாறு செய்வது,

இந்தித் திணிப்பை எதிர்த்து மத்திய அரசாங்கத்திடம் வாதாடுவதற்கு, இந்த மாநில ஆட்சியாளர்களுக்கு உதவும்படியாக இருக்கும் என்று சொல்லுவேன்.

இந்த மொழிப் பிரச்சினையில் நாமெல்லோரும் சமரசத்திற்கு வந்துவிட்டோம் என்று தெரிவிப்பதைவிட, அடிப்படையில் சில மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை மத்திய சர்க்காருக்கு உணர்த்துவது மிகப்பொருத்தம் என்று கருதி, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தத் திருத்தத்தை நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம்.

இவ்வளவும் கூறி என்ன ஆயிற்று? இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற கழகத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. நாம் 15 - அவர்கள் 150! அதனால்!!

தம்பி! நானும் நமது சட்டமன்ற உறுப்பினர்களும் மொழி சம்பந்தமாக, நிரந்தரமான ஒரு "பரிகாரம்' கிடைக்கவேண்டுமானால், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று வாதாடியபோது, கனம் சுப்பிரமணியம் அவர்கள் தமது பேச்சிலே இனிப்புக் கூட்டித் தந்தார். எல்லாம் பிறகு பார்த்துக்கொள்வோம் என்றார். இப்போது எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொண்டு, ஒருமனதுடன் அறிக்கையைத் தயாரித்து அனுப்பினார்கள் என்ற பெருமையை இழக்கக் கூடாது என்ற பொருள்படப் பேசினார்.

இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும் என்ற தீர்மானத்தை, அன்பழகன் திரும்பிப் பெற்றுக்கொள்ள இசையாது போகவே, ஓட்டுக்கு விடப்பட்டது - தோல்விதான்!! சொல்லவா வேண்டும்!

இந்த அறிக்கையைப் பற்றித்தான்

அமைச்சர் அவையை அமைத்துள்ள கட்சியினர், மொழிப் பிரச்சினையில் எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு, ஒருமனப்பட்டு, முடிவெடுத்து, மத்திய சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று பெருமை பேசிக்கொள்கின்றனர்.

அன்றே சட்டசபையில், இந்திய அரசியல் சட்டம் திருத்தப் பட்டாக வேண்டும் என்று நமது கழகம் வாதாடி இருக்கிறது.

இப்போது நமது செயற்குழுவிலும், இது மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தம்பி! அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று மட்டுமல்ல, மேலும் பல அடிப்படைக் கருத்துக்களையும் அன்று, சட்டசபையில் நமது கழகம் வலியுறுத்தித், துரைத்தனம் தயாரித்த அறிக்கைக்குத் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறது.

ஆத்தூர் தொகுதி உறுப்பினர் M.P. சுப்பிரமணியம் பள்ளி களில் மூன்று மொழிகளைக் கட்டாயமாகப் படிக்க வேண்டு மென்ற முறையை மறுத்து, தமிழ், ஆங்கிலம் எனும் இரு மொழி மட்டுமே போதும் என்று திருத்தம் கொடுத்தார்.

தோழர் A. கோவிந்தசாமி அவர்கள், பாராளுமன்றத்தில் எந்த மொழியில் பேசினாலும் உடனுக்குடன் எல்லாத் ”தேசிய’ மொழிகளிலும் அவை மொழிபெயர்த்தளித்திட ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற திருத்தம் கொடுத்தார்.

(சுப்ரீம் கோர்ட்டில்) உச்ச உயர்நீதி மன்றத்தில், ஆங்கில மொழியே தொடர்ந்து அலுவல் மொழியாக இருந்து வர வேண்டும் என்ற திருத்தத்தை, தோழர் ப. உ. சண்முகம் கொடுத்தார்.

இவை யாவும் தோற்கடிக்கப்பட்டுவிட்டன.

சட்டசபையில் நமக்கு எண்ணிக்கை பலம் இல்லாததால் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற நமது முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டது.

இனித் தம்பி! உன் ஆற்றலால் கிடைத்துள்ள வெற்றிச் சூழ்நிலையையும், நாட்டு மக்கள் உள்ளத்திலே ஏற்பட்டுள்ள எழுச்சியையும் துணைகொண்டு, இந்திய அரசியல் சட்டத் திலுள்ள மொழி சம்பந்தமான பகுதியைத் திருத்த வேண்டு மென்று, செயற் குழு முடிவெடுத்திருக்கிறது.

எனவே, கருப்புக் கொடி காட்டிடும் வாய்ப்புப் பறிபோய் விட்டதே என்று எண்ணிக், களிப்புக் கருகிய நிலையில் இருந்து விடாதே, இதுநாள்வரை இந்தப் பிரச்சினை குறித்துக் காட்டாத அளவு கனிவு, இன்று மேலிடம் உள்ள

மூலவர் மூவர் காட்டியுள்ளனர் என்பதை மறவாதே!

நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூறு. இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டாகவேண்டும் என்ற யோசனை, திடீரென்று முளைத்ததல்ல. முறைப்படி, சட்டமன்றத்திலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துகூறப்பட்டதுதான் - அதற்கு இப்போது நாம் பெற்ற வெற்றி, புதியதோர் வலிவையும் பொலிவினையும் தந்துள்ளது என்பதனை எடுத்துக் கூறு.

இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நாம் சொன்னபோது, எண்ணிக்கை பலத்தால் அதனைத் தோற்கடித்த அதே காங்கிரஸ் அரசு, முன்பு ஒரு முறை இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படத்தான் வேண்டும் என்று தனது கருத்தினை, மொழிக்குழு மூலம் மத்திய

அரசுக்குத் தெரிவித்துமிருக்கிறது என்ற பேருண்மையை எடுத்துச் சொல்லு.

வேலை இருக்கிறது நிரம்ப, வெற்றிக் கோலம் பூண்ட தம்பி! செந்தமிழ் நாட்டுச் சோலையிலே, நல்ல சிந்துபாடும் வேளையிலே, தென்றல் அடிக்குது என்னை மயக்குது! - என்று இருந்து விடாதே!!

வடக்கே உள்ள இதழ்கள் பல "டைம்ஸ் ஆப் இந்தியா', "இதவாதம்','போரம்' - இவை, எப்படி நேருவும் பந்தும் குடி அரசுத் தலைவரும் இந்த தி. மு. கழகத்துக்கு உறுதிமொழிகள் அளிக்கலாம்? அந்தக் கழகத்துக்கு அத்துணை மதிப்பு அளிப்பதா? இதனையே காட்டிக்காட்டி, கூறிக்கூறி, நாட்டு மக்களைத் தமது பக்கம் சேர்த்துக்கொள்வார்களே! ஏனோ, இந்தத் தலைவர்கள் இப்படி ஒரு காரியம் செய்தனர்? என்றுஅந்த இதழ்களெல்லாம் எழுதியுள்ளன - எரிச்சல் தாள மாட்டாமல்.

தொடர்ந்து நாலு கூட்டங்களில் விஷயத்தைத் திரித்துக் கூறிவிட்டால் போகிறது; வெற்றியை வைத்துக்கொண்டு என்ன பெரிய பலனைக் கண்டுவிடப் போகிறார்கள்!! - என்று ஏளனம் பேசுகின்றனர் இங்குள்ள காங்கிரசார்.

”எல்லாம் ஓட்டுப் பெட்டியில் இருக்கிறது!'' என்ற மூல மந்திரத்தைக் கூறித் திருப்தி தேடுகிறார் முதலமைச்சர் காமராஜர்.

”யார் எப்படிச் சொன்னாலும், இந்தச் சமயத்தில் செயல்பட முனைந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்தி ஆதிக்கக்காரரின் எண்ணத்தில் சரியானபடி மண்விழச் செய்துவிட்டார்கள். இது அவர்களுக்கு மகிழ்ச்சி என்பது மட்டுமல்ல, நம் அனைவருக்குமே பெருமை'' என்று கட்சிக் கண்ணோட்டத்தால் உண்மையைக் காண மறுக்கும் சிலர் போலன்றி, நடு நிலையாளர்

அனைவருமே பேசுகின்றனர்.

எண்ணி எண்ணி மகிழத்தக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனைத், தக்கபடி பயன்படுத்தும் பணியாற்ற உனை அழைக்கிறேன், உவகையுடன் உரிமையுடன்! வேலை நிரம்ப இருக்கிறது தம்பி! நிரம்ப!!

அன்புள்ள,

அண்ணாதுரை,

14-8-1960

16. காலம் இல்லை... அதிகம்!

கொள்கையில் உறுதி-

தளராது பணிபுரிதல்

தம்பி!

வேதனை கப்பிய நிலையில் இந்தக் கிழமை, உன்னுடன் அளவளாவ இயலுமா என்பது பற்றியே, எனக்கு ஐயப்பாடு இருந்தது. நமது மாநிலத்துக்கு வெளிப்பகுதிக்கு நாலு நாட்கள் சென்று வரவேண்டி இருந்தது. சென்னை புறப்படு முன்புதான், தொலைபேசி மூலம், தம்பி கருணாநிதி, குடந்தையிலே நேரிட்ட கோரச் சம்பவம் குறித்துக் கூறக்கேட்டேன். உள்ளம் துடித்தது; பறந்து வந்தேன். நிலைமைகளை விளக்கிக் கூறினர், நண்பர்கள். குடந்தை சென்று நேரடியாகவே தகவல்களைக் கேட்டறிந்து

வருவதாகக் கருணாநிதியும், தர்மலிங்கம், எம்.பி. அவர்களும், கூறிச்சென்றனர். தகவல் கிடைத்ததும், அறிந்ததை உரைத்திடவும், ஆவன செய்வதற்கு முயற்சி எடுத்திடவும் காத்துக் கிடக்கிறேன்.

ஒன்று பொதுவாகக் கூறுவேன் - நமது கழக வளர்ச்சி கண்டு, அரசியல் வட்டாரங்களிலே எழுந்துள்ள பொறாமை, பகை உணர்ச்சியாகி, தீயதோர் தீச்சுழல், தமிழகமெங்கும், நமது கழகத்தைச் சுற்றி வளையமிட்டது போலிருக்கிறது என்பதை, நான் உணருவது போலவே நீயும் உணர்ந்திருக்கிறாய் என்று எண்ணுகிறேன். இது, ஒவ்வொரு அரசியல் கட்சியும், அதிலும் குறிப்பாக விடுதலை இயக்கம், எதிர்பார்த்துத் தீர வேண்டிய கட்டம்.

நம்மை அலட்சியப்படுத்தினர் அரசியல் மாற்றார்கள் - நாடு நம்மை எதிர்

கொண்டழைத்தது. சான்றோர் என்ற சிறப்புப் பெயருக்கேற்ப, இயல்பு பெறவேண்டிய சிலர், நிலைகெட்டதால் நினைப்புக்கெட்டு நம்மைச் சபித்தனர் - நாடு நம்மை வாழ்த்தலாயிற்று. பேதமும் பிளவும் மூளும்; பிய்த்தெறியலாம் என்று எண்ணினர். சிறுமதி கொண்டு பெருநோக்குடையாரைச் சாய்த்திட எண்ணிடும் சதிமதி தெரிந்தோர் - நாமோ தணலைத் தங்கம் பயன்படுத்திக்கொள்ளும் தன்மைபோல, எதனையும் நமக்கு ஆக்கம் தரவல்லது ஆக்கிக்கொண்டு விட்டோம்.

இனி, இவர்களைச் செல்வாக்கற்றவர்களாக்குவதும், செயலற்றவர்களாக்குவதும் இயலாது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டதால், நம்மை உயிரற்றவர்களாக்கி விடுவது என்று துணிந்து, தாக்கவும் தகர்க்கவும், குத்தவும், வெட்டவும், கொல்லவும் ஏவிவிடும் அளவுக்குச்

சென்று கொண்டிருக்கின்றனர்.

தம்பி! உயிரற்றவர் என்பதை, பிணம் என்று பேசுகிறோம்.

ஒருவன் செத்தால், உயிரற்றவனாகிறான் என்று பொது வாகக் கூறும்போது, அது உண்மைதான் - ஆனால் சாவு வேறு, உயிரற்றுப்போவது என்பது வேறு. தத்துவம் பேசுவதாக எண்ணிக்கொள்ளாதே, தம்பி! உண்மையை உரைக்கிறேன்.

சாகாமலே, உயிரற்றவர்களாகி விட்டவர்கள் உண்டு!

செத்து, உயிரூட்டம் தருபவர்கள் உண்டு.

முன்னவர், கொள்கைப் பற்றற்று, வாழ்க்கைச் சுவையில் மூழ்கி, நாடு, மொழி, இனம் மறந்து கிடக்கும் உருவாரங்கள். உயிர் இருக்கும், உண்ண உறங்க, உறவாட, உரையாட, பொருள் தேட, நடமாட! ஆனால்

இனம் வாழ, நாடு பீடுநடை போட, மொழி வாழ, வழிவகுத்திட வேண்டும் என்ற உணர்ச்சி, துடிப்பு, செயலார்வம் அற்றுப் போயிருக்கும்.

அவர்தான் உள்ளபடி, உயிரற்றோர்!

கொள்கைக்காகவே வாழ்ந்து, கொடியவரின் கொடு வாளுக்கோ, வஞ்சகரின் வீச்சுக்கோ, அடக்குமுறையின் கோரப் பற்களுக்கோ இரையாகி இறந்துபடும் மாண்பினர், உயிரற்றோர் எனும் பட்டியலில் அல்ல, உயிரூட்டம் தருவோர் வரிசைக்குத் தங்களை உயர்த்திக் கொள்கிறார்கள் என்பதுதான், நாம் போற்றிடத்தக்க பேருண்மையாகும்.

அந்த வரிசையில் ஏற்கனவே, நிரம்ப இடம் பெற்றனர், நமது கழகத்தவர். இனி அந்த வரிசை வளரவேண்டும், என்று, வன்கணாளர்கள் விரும்புகிறார்களோ

என்று எண்ணத்தக்க விதமான நாசகால நடவடிக்கைகள், நாள்தோறும் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

இது, என்னைப் பொறுத்தவரையிலும், என் போன்ற இயல்பினரைப் பொறுத்தவரையிலும், எதனை உணர்த்துகிறது எனின், எந்த நேரத்திலும், எந்த முறையிலும், உயிர்குடிக்கும் பகை நம்மைத் தாக்கி மாய்த்திடக்கூடும்; எனவே, உள்ள நேரத்தை, விரைந்தும், துணிந்தும், முறைப்படுத்தியும், மூலம் கெடா வகையிலும், பயனுள்ளதாக்கிக்கொள்ளவேண்டும்;
எத்தனை நாள் இந்தப் பணியாற்ற விட்டுவைக்கப் பட்டிருப்போம் என்பதே பிரச்சினையாகி விட்டிருப்பதனால், கிடைக்கும் வாய்ப்புகளைச் செம்மையாகப் பயன்படுத்தி, வீழ்த்தப்படுமுன் வீரப்பணி யாற்றினேன்! என்று நாம் நமது

நெஞ்சத்துக்குக் கூறிக் கொள்ளத்தக்க நிலை பெற்று, பிறகு நிற்பவரிடம் வீழ்வோர், அறப்போர் ஆர்வத்தை, விடுதலை வேட்கையை ஒப்படைத்து விட்டு, இவர் என்னினும் செம்மையாகச் செயல்படவல்லார்! என்ற மகிழ்ச்சியுடன், மண்ணில் சாய்ந்திடவேண்டும், என்பதுதான்.

வேலை நிரம்ப இருக்கிறது என்றேன். சென்ற கிழமை - தம்பி! அத்துடன் இதனை இணைத்துக்கொள், காலம் அதிகம் இல்லை!

வேலை நிரம்ப இருக்கிறது, காலம் அதிகம் இல்லை - எனின், சிக்கலன்றோ அதிகப்படும் என்று, சிந்தை குழம்பிக் கிடந்திடும் சிற்றினம் அல்ல, திராவிட இனம்.

வேலை நிரம்ப இருக்கிறது - காலம் அதிகம் இல்லை - எனினும் உறுதிக்குக் குறைவேதுமில்லை - என்பதுதான் முழு

உண்மை.

அத்திமரம் கண்டிருக்கிறாயே, தம்பி! மரம் எத்துணை பெரிது - அதிலே காய்த்திடுவது எத்துணை சிறிது! காண்கிறா யல்லவா! அளவுக்காக மட்டுமல்ல, தம்பி! அதனைக் காட்டுவது மிக எளிதிலே "சொத்தை'யாகிடத் தக்கது என்பதனையும் கூறத்தான். "அத்திப்பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை' என்பது பழமொழி. நான் உன்னைக் கவனிக்கச் சொல்வது, அதனை அல்ல; மரம் பெரிது, காய் மிகச் சிறிது.

பூசுணைக்கொடி பார்க்கிறாயே, தம்பி! எப்படி இருக்கிறது? உலர்ந்து, சுருண்டு, கீழே வீழ்ந்துகிடக்கிறது - ஆனால் காயோ மிகப் பெரிது!

அத்திமரத்தினையும், பூசுணைக்கொடியினையும் கண்டறியா

தாரிடம், அத்திக்காயினையும், பூசுணைக்காயையும் காட்டி, பிறகு மரத்தையும் கொடியையும் காட்டினால், அத்தியைப் பூசுணைக் கொடியுடையது என்றும், பூசுணைக்காயை அத்திமரம் தந்தது என்றும் கூறுவரன்றோ.

நாம் செயலாற்றிப் பெற்ற சாதனைகள், தம்பி! கொடியிலே காணப்படும் பூசுணை போன்றது. காணாதார், நம்ப மாட்டார்கள்! கண்டோர், வியப்படையாதிருக்கமாட்டார்கள்.

அத்திமரத்திலே காய்த்துக் கிடக்கும் கொத்துக் கொத்தான காய்கள் போல, காங்கிரஸ் கட்சியினர், ஆட்சி மன்றங்களிலே, எண்ணிக்கை பலத்துடன் அமர்ந்துள்ளனர். இப்போது அந்தப் பழமொழியை நினைவிற்குக் கொண்டு வா, அத்திப்பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை.

அப்படியொரு அத்திப்பழத்தைப் புட்டு, சொத்தை எவ்வளவு என்று பார்த்துக் கொண்டிருந்தனர், பெங்களூரில், நான் சென்றபோது - ஜட்டி அமைச்சர் அவை எதிர்ப்பாளர்கள் கிளப்பிய புகார்கள் பற்றிய விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கர்னாடக வணிகக்கோட்டப் பெரியவர் ஒருவருடன் உரையாட வாய்ப்புக் கிடைத்தது - அவர் அந்த "அத்திப்பழ' வேலையாக வந்திருந்தார். அவரிடம் நமது கழகம், செயலாற்றி வருகிற பான்மையினையும், பெற்ற வெற்றிகளையும் எடுத்துக் கூறும்போது, அவர், கொடியிலே காணப்படும் பூசுணைக் காயைத்தான் எண்ணிக் கொண்டிருந்திருப்பார். ஏனெனில் நான் சொல்லச் சொல்ல அவர், இவ்வளவு வேலை நடக்கிறதா? இத்துணை வலிவு இருக்கிறதா? இவ்வளவு ஆதரவு பெருகி வருகிறதா? என்று

வியப்புடன் கூறியவண்ணம் இருந்தார்.

நல்லவர் மனதிலே வியப்பும், நாடாள்வோர் மனதிலே விசாரமும், ஏற்படுத்தும் நமது நிலைமை, அழித்தொழிக்கும் முறையை அறமென்று எண்ணிக்கொள்ளும் அளவுக்கு மனம் அழுகிக் கிடப்போருக்கு, பகை உணர்ச்சியைத்தான் ஊட்டும் - அதன் விளைவுதான், நமக்கு அவ்வப்போது ஏற்படும் விபத்துக்கள்.

இவை இனி ஏற்படாது என்ற உத்தரவாதம் தரத்தக்க பெருங்குணமோ, பேராற்றலோ கொண்டதாக அரசு இல்லை.

ஆனால், ஒன்று: இவைகளைத் தாங்கிக்கொள்ளும் நெஞ்சுரம் இல்லை என்று கூறிடும், வலிவிழந்தான் எவனும் இங்கு இல்லை.

வெட்ட வருவோனை வீழ்த்தவாகிலும்

உரிமை வழங்க லாகாதா என்று வீரம் கொப்பளிக்கும் நிலையில் கேட்டிடும் காளையரைக் காண்கிறோமேயன்றி, விரண்டோடும் போக்கினர் எவரும், இந்த நம் அணிவகுப்பிலே நிச்சயம் இல்லை.

அதோ என் மகன்! வீட்டு வாயிற்படியிலே சிறிதளவு குனியாவிட்டால தலை இடித்துக் கொள்ளும், என்று பெருமிதத் துடன் கூறும் தாய், அந்த அடலேறு, தன் கருவில் இருந்த மணி என்பது பற்றி எண்ணிடும்போது, ஒரு கணம் வியப்பன்றோ தோன்றிடும்! நானா, தாங்கி இருந்தேன், இந்த மாவீரனை, என் கருவில்! - என்றன்றோ எண்ணுவர்.

அஃதேபோல, நமது கழகத்துக்குள்ள, வயது, வரலாறு வடிவத்தின் அளவு, கிடைத்துள்ள வாய்ப்புகள் இவைகளுடன் நாம் பெற்றுள்ள வெற்றிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெற்ற மகன் அடலேறாகி

உலவக்காணும் தாய்மனம், நமது கழகத்திற்கு ஏற்படுகிறது.

பெற்ற மகன் தத்தாரியாகிப் போனதையோ, அல்லது நோய்கொண்டோனாகிக் கிடப்பதையோ காண்பவள் அடலேறு போன்ற மகனை ஈன்றவளைக் காணும்போதே, கடுகடுத்த முகத் தினளாவளன்றோ, இழிகுணம் கொண்டோளாக அவள் இருந்திடின்.

அதுபோன்ற போக்கு, ஆளுங் கட்சிக்கு இன்று - நம்மை நோக்குங்காலை, இழிகுணம் கொண்டோர், அந்த முகாமில் இடம் பெற்றதால், நம்மிடம் அருவருப்புக் காட்டுவதுடன் அழித்திடவும் முயலுகின்றனர்.

ஆகவேதான் தம்பி! மீண்டும் கூறுகிறேன், வேலை இருக்கிறது நிரம்ப!. . . காலம் இல்லை அதிகம்! - என்பதை.

உள்ளபோதே, உண்மைக்கு உழைத்திட, ஊராருக்குப் பணியாற்றிட, விடுதலைக் கிளர்ச்சிக்கு விறுவிறுப்பூட்ட, தளராது பணியாற்று. பணி முடியுமுன் பாதகரின் சதி, நம்மை வீழ்த்தினாலும், ஐயகோ! அதைச் செய்யாது விட்டோமே! இதைக் கவனியாதிருந்தோமே! என்று எண்ணித் துயருறும் நிலையில், நாம் இருத்தலாகாது. என் கடமையைச் செய்தேன் குறைவற! நானிருந்தால், தனக்கு வாழ்வில்லை என்று அஞ்சியவன் என்னை வீழ்த்துகிறான். நான் விடை பெற்றுக் கொள்கிறேன்; வேலை இருக்கிறது நிரம்ப! காலம் இல்லை அதிகம்! என்று கூறிவிட்டு, தொடர்ந்து பணியாற்றும் உடன்பிறந்தார்கள் உள்ளனர் அணிஅணியாக என்ற எண்ணம் தவழ, உயிரூட்டம் தருவோரின் வரிசைக்கு நாம் உயர வேண்டும். அந்த வாய்ப்புப் பெற்றோருக்கு, என் வீர வணக்கம்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

21-8-60

17. இந்நாட்டில் வாழ்வதற்கு !

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள்

ஓ ஹென்றியின் கதை

தம்பி!

விரைவிலே நீ, காண இருக்கும் தமிழ்ப் படம் ஒன்றினை, சென்ற கிழமை நான் காணும் வாய்ப்பினை படப்பிடிப்பாளர்கள் ஏற்படுத்தித் தந்தனர் - படம், தம்பி இராஜேந்திரன் நடிக்கும் "தங்கரத்தினம்'.

துவக்கத்திலே ஒரு காட்சி. இயற்கை எழில் குலுங்கும் சிற்றூரின் மருங்கு. பச்சைப் பட்டாடை அணிந்த நிலமகள்! அவளுடன் வண்ணத்தில் போட்டியிடும் எண்ணத்துடனோ என்னவோ, விண்ணழகி, நீலநிற ஆடையினை நேர்த்தியாக அணிந்துகொண்டிருந்தாள். கனி

குலுங்கும் மரங்கள், பூ உதிர்க்கும் செடிகள், கோலமளிக்கும் கொடிகள், வழிநெடுக. நாலைந்து கன்னியர், இரட்டை மாட்டு வண்டியிலே செல்கிறார்கள் - ஓட்டுபவள் கள்ளங்கபடமற்ற இளமங்கை!

என்ன அண்ணா! காட்சியிலே, என்ன இருக்கிறது, புதுமை யாக? வயலையும் வாவியையும், வட்டமிடும் வானம்பாடி களையும், வளைந்தோடும் அருவிகளையும், இப்போதெல்லாம் எந்தப் படக்காட்சியிலும் காண முடிகிறதே! - என்று கூற எண்ணுகிறாய். உண்மை, தம்பி! உண்மை! கண்களுக்குக் குளிர்ச்சி தரும் வண்ணமிகு, வெளிப்புறக் காட்சிகளை இப்போது, நிரம்பக் காணுகிறோம். ஆனால், என் மனதை ஈர்த்தது, கண்கண்ட காட்சி அல்ல - கருத்தைத் தொட்டிடும் வகையிலே, நான் கேட்ட இசை.

கிராமத்துக் கட்டழகி - விளக்கமாகச் சொல்வதானால் சேரிவாழ் சிங்காரி - தன் தோழிகளுடன், வண்டி ஓட்டிக் தொகுதி மூன்று 15 கொண்டு போகும்போது, சூழ இருந்த இயற்கைச் செல்வத்தைக் கண்ட மகிழ்ச்சி பொங்கிடும் நிலையில், பாடிய பாடல், கூடச் சென்ற தோழிகளைப் பார்த்தல்ல, நாட்டு மக்களைப் பார்த்தே, பாடுவதுபோலிருந்தது.

இன்னொருவர் தயவெதற்கு?

இந் நாட்டில் வாழ்வதற்கு!

என்பது, பாடலின் எடுப்பு! என் செவியிலே, அந்த "எடுப்பு' இன்னமும் ஒலித்த வண்ணம் இருக்கிறது.

நம் நாட்டின் இயற்கை வளம், மக்களின் உழைப்புத்திறம், அறிவு மேம்பாடு, இவைபற்றி எல்லாம் அந்தப் பாடலிலே அழகான "அடிகள்' உள்ளன; பொருட்சுவை இசை இனிமை

யுடன் குழைந்து வருகிறது; எனினும்,"எடுப்பு' இருக்கிறதே, அது ஒரு பாடலுக்காக மட்டுமல்ல, நமது நாட்டு மக்கள் எப்போதும் எண்ணிப் பார்த்திட, ஏற்றம் பெற்றிடத் தூண்டிடும் முறையிலே, அமைந்திருக்கிறது.

இன்னொருவர் தயவெதற்கு? இந் நாட்டில் வாழ்வதற்கு! - இது பாடலின் எடுப்பாக அமைந்திருந்தது, என்றாலும் தம்பி! இச்சகம் பேசியோ, இளித்துக் கிடந்தோ, ஏவல் பல புரிந்தோ, எடுபிடி ஆகியோ இருந்தால் மட்டுமே பிழைக்க முடியும் என்று எண்ணிக் கிடக்கிறார்களே சிலர், அவர்கள் ஒரு நாள் ஒரு பொழுதாகிலும், தம்மைத்தாமே கேட்டுக் கொள்ள வேண்டும்,

இன்னொருவர் தயவெதற்கு?

இந் நாட்டில் வாழ்வதற்கு! - என்று

இன்னொருவர் தயவை மட்டும் தேடித்,

தாள் தொட்டுக் கிடந்தன்றோ வாழமுடியும் என்று எண்ணிக் கிடக்கின்றனர், இருப்பதை மறந்துவிட்ட இயல்பினர்.

ஏதோ இந்நாடு, பாலைவனமும், பாழ்வெளியும், காடு மேடும், மட்டுமே கொண்டதாக இருப்பது போலவும், இங்கு விதைத்தால் முளைக்காது, வெட்டினால் ஊற்றுச் சுரக்காது என்று கூறத்தக்க நிலை இருப்பதுபோலவும், எதிரிப் படைகள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டு, தாக்கியபடி இருப்பது போலவும், ஓர் மனமயக்கத்தைத் தாமாக ஏற்படுத்திக் கொண்டு, ஓர் "மேலிடம்' நாடி, அவர் தயவினைத் தேடிப்பெற்று மட்டுமே, வாழ்வினைச் செம்மையாக்கிக் கொள்ள முடியும் என்று எண்ணி, அடிமை மனப்பான்மையினராகி அவதியுறுவதுடன், அந்தப்"பிச்சைப் பிழைப்பை இச்சையுடன் ஏற்றுக் கொள்வது தான் அறிவுடைமை;

மறுப்பது மடைமை! - என்றெல்லாம் பேசியும் வருகின்றனரே, அவர்களின் நினைப்புத் தான் வந்தது, பாடலின் எடுப்பைக் கேட்டதும்.

சோம்பித் திரிந்திடாமல், சுரண்டிக் கெடுக்காமல், உழைத் தால் அனைவரும் உண்டு மகிழ்ந்திருக்கத்தக்க அளவு, வளம் கொண்டதாகவே நம்நாடு இருந்திடக் காண்கிறோம்.

கோடிகோடியாகப் பொருளைக் கொட்டிப் புதுத் திட்டங்களைத் தீட்டி நடத்தி, பெருஞ்செல்வத்தை உற்பத்தி செய்து குவித்திடுவோம் - என்று இன்று கூறுகின்றனர். தம்பி! நான் அந்தத் தனிமுயற்சியை மனதில் வைத்துக் கொண்டுகூட அல்ல, உழைப்பைக் குறைத்துப் பொருளைப் பெருக்கித் தரத்தக்க விஞ்ஞானக் கருவிகள், கிடைக்காது போயினும்கூட, அறிவுத் தெளிவுடன் கூடிய உழைப்பின் மூலம்

மட்டுமே, பெறத்தக்க வளமேகூட, இந்நாட்டு மக்களை, நிம்மதியாக வாழ்ந்திடச் செய்திடும் வகையிலும், அளவிலும், இருப்பதைக் குறிப்பிடுகிறேன். இது இல்லையே? இதற்கு என்ன செய்வோம்? என்று ஏங்கித் தவித்திடும் நிலையில் நாம் இல்லை - நமது நாடு, போதுமான அளவு, வளம்பெற்றிருக்கிறது. அதனை அறிந்து, அனைவரும் கபடமற்று, உழைத்துக் கயமத்தனத்தைத் தலை காட்ட ஒட்டாது வெட்டிச் சாய்த்திட்டால், "இன்னொருவர் தயவு எதற்கு? இந்நாட்டில் வாழ்வதற்கு?' என்று இசைபாடி மட்டுமல்ல, இசைபட வாழ்ந்திடவும் முடியும்.

புத்தம் புதுக்கருவிகள், புதுப்புதுத் திட்டங்கள், இங்கு நிம்மதியான வாழ்க்கையை மட்டுமல்ல, எங்கும் பொன் கொழிக்கும் நிலையை ஏற்படுத்தித்தரும், என்று திட்டம் தீட்டுவோர் அறிவிக்கின்றனர்.

அந்த நோக்கத்துடனேயே, இரண்டு திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். இப்போது மூன்றாவது திட்டம் கருவில் உருவாகி வருகிறது என்றும், கூறிக் களிப்பூட்டுகின்றனர். ஆனால், கவனித்திருப்பாயே, தம்பி! இந்தக் கிழமை, நேரு பண்டிதர், பேசியிருப்பதை.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களாலும் பெருகிய செல்வம், எங்கே சென்று தங்கிவிட்டிருக்கிறது, என்பதைக் கண்டறிய வேண்டும். அதற்காக ஒரு தனிக்குழு அமைத்திட வேண்டும்.

பத்து ஆண்டுகள், பாடுபட்டதிலே கிடைத்த பலன், எங்கே இருக்கிறது என்பது, கண்டுபிடிக்கப்படவேண்டியதாக, தனிக் குழு அமைத்துக் கண்டுபிடிக்கப்படவேண்டியதாக இருக்கிறது.

திட்டத்தின் வெற்றிக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்! தேடுகிறார்கள். பலன் எங்கே என்று!!

”நான் தம்பி! இப்போது அந்தத் திட்டங்களை மனதிலே கொண்டு அல்ல, இயற்கை நமக்கு அளித்துள்ள செல்வத்தை மட்டுமே மனதிலே கொண்டுதான், கூறுகிறேன், ஒழுங்கான முறையில், ஒருவரை ஒருவர் அழித்திடும் கெடுமதியின்றி, அனைவரும் உழைத்தால், எவரும், இல்லாமை எனும் நோயால் பீடிக்கப்படாமல், நிம்மதியாக வாழ்ந்திட முடியும்.

•

உலகிலே, பல நாடுகள் உள்ளன - சில நாடுகளிலே சில பகுதிகளும் உள்ளன - இன்னொருவர் தயவு இருந்தால் மட்டுமே வாழ்ந்திட முடியும் என்று கூறத்தக்க

நிலையில், வளம் குறைந்த நாடுகள் உள்ளன. குடிவளமற்ற நாடுகள் உள்ளன. இன்றும் வேட்டையாடுதல், மீன்பிடித்தல், இவைகளை மட்டுமே வாழ்க்கைக்கு வழிகளாகக்கொண்ட நாடுகள் உள்ளன. சில இடங்கள் உள்ளன - கதிரவனை வருடத்தில் மூன்று மாதங்கள் மட்டுமே காண முடியும்! சில நாடுகளிலே, அடிக்கடி, கடல் கொதித்தெழுந்து, படை எடுத்து அழிவை உண்டாக்கிவிடும்!! சில நாடுகளிலே, எப்போதும் மூடுபனி. புல் பூண்டு கூட முளைத்திட முடியாத நிலையிலே பனிப்பாறைகள் நிரம்பிக் கிடக்கும் இடங்களும் உள்ளன. இந்நாடு, பல ஆயிரம் ஆண்டுகளாகவே, இயற்கையின் பேருதவியைப் பெருமளவு பெற்றுத் திகழ்ந்து வந்திருக்கிறது. அந்த வளத்தை, பழம்பெரும் புலவர்களின் பாக்களில் காண்கிறோம். அவர்களின் காலத்திலே,

அற்புதம் செய்தளிக்கும் கருவிகள் இல்லை; உண்மை. ஆயினும் வளம் கொஞ்சிக் கிடந்தது. துள்ளிடும் வாளைக் கண்டனர்; புள்ளிமான் கோலம் கண்டனர்; கிள்ளைமொழி கேட்டு இன்புற்றனர்; சந்தன மனம் பெற்று மகிழ்ந்தனர்; கடலிடை முத்தும், கைத்திறனுள்ளோர் செய்தளிக்கும் அணிபணியும் கண்டனர்; பழமுதிர் சோலைகள், பாங்கு நிறை வயல்கள், செங்கரும்புக் கழனிகள், என்ற இன்னோரன்ன வளம்கண்டு பாடினரேயன்றி, வெடித்துக் கிடக்கும் வயல்கள், கொதித்துக் குழம்பிடும் கும்பிகள், நெருப்பைக் கக்கிடும் எரிமலைகள், அழிவினை ஏவிடும் நில நடுக்கங்கள் - எனும் கொடுமைகளைக் கண்டார்களில்லை. பன்னெடுங்காலமாகவே, இன்னொருவர் தயவு எதற்கு, இந்நாட்டில் வாழ்வதற்கு? என்று பண்பாடியே, வாழ்ந்தனர்,

தமிழர்.

உண்டிக்கும் உடுத்துவதற்குங்கூட, வழிவகை யற்றுப் போய், மற்றவர்களை அண்டிப் பிழைத்திட வேண்டிய அல்லல் நிரம்பிய நிலையில், நாடுகள் இருந்தன; இருக்கின்றன; பிச்சைப் பிழைப்பு நம் நாட்டு மக்களை, முன்பு தீண்டினதில்லை. நாடு மட்டுமா, தனி மனிதனே, பிச்சை எடுத்துத்தான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலை இருக்குமானால், அது எத்துணை வெறுக்கத் தக்கது என்று, நமது ஆன்றோர் கருதினர் என்பதற்குச் சான்றுகளைத் தேடி அலைவானேன்.

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்

பரந்து கெடுக உலகியற்றியான்

என்றன்றோ, வள்ளுவப் பெருந்தகை கூறினார்.

அப்படிப்பட்ட நாடு, இன்று எதிலாகிலும், தன்னிறைவு பெற்று இருந்திடக் காண்கிறோமா?

எதிலாகிலும், தன்னிச்சைப்படி நடந்திடும் உரிமை பெற்றிருக்கிறதா, நாடு?

இல்லை! இல்லை! என்பதை, நாம் எடுத்துக் காட்டும் ஆதாரங்களைக்கூடத் தள்ளிவிடட்டும், தம்பி! ஒவ்வொன்றுக்கும், நமது அமைச்சர்கள் அளிக்கிறார்களே, பதில்கள், அவைகளை கவனித்தாலே, புரிகிறதல்லவா!

நம் நாட்டிலே, உழவுமுறை எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதிலிருந்து, உரையாடுவது எம்மொழியில் என்பது வரையில், இன்னொருவர் தயவுகூட அல்ல, இன்னொருவரின் கட்டளையை எதிர்பார்த்தல்லவா, நடந்துகொள்ளவேண்டி

இருக்கிறது.

துறைமுகங்கள் உள்ளன இங்கே, தூர்ந்து போன நிலையில்; அவைகளைப் பழுது பார்க்கலாமா, ஆழப்படுத்தலாமா என்று யோசிக்கக்கூட, நமக்கு, அங்கிருந்து "நிபுணர்கள்' தேவைப்படும் நிலையல்லவா, காண்கிறோம்.

தூத்துக்குடித் துறைமுகத்தைப் பற்றிய சோகக் கதை தான், தெரியுமே, தம்பி! உனக்கு. ஓட்டு வேட்டைக்குச் செல்லும் போது, அமைச்சர்கள் பேசும் பேச்சுக்களைக் கவனித்தால், அடே! அப்பா! ஒரே மாதத்திலே, அவர்களே, தூத்துக்குடித் துறைமுகத்தை விரிவுபடுத்தி, சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்தி, கப்பலே ஓட்டிவிடுவார்கள் என்று எண்ணிடத் தோன்றும் - அவ்வளவு கனிவு, குழைவு, தாராளம், வீரம், விவேகம் ததும்புகின்றன. பொங்கி வழியும்

அந்த ஆர்வம், பெட்டியில் விழுந்ததை எண்ணிப் பார்த்ததும், இருக்குமிடம் தெரியாமல் வறண்டுபோயே விடுகிறது ஏன்? இன்னொருவர் கட்டளைக்குக் காத்துக் கிடக்கவேண்டி இருப்பதால்! இதைச் சொன்னால், இப்போதெல்லாம், நமது மந்திரிமார்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. கோபம் பிறந்து என்ன பலன்? எதிர்க்கட்சிகளைத் தாக்கத்தான் அந்தக் கோபம் பயன்படுமேயன்றி, டில்லிப் பட்டினத்தருகே கூடச்செல்லும் வலிவு இல்லையே அதற்கு!! ஏன்? எதற்கும் டில்லியின் தயவை நாடிக் கிடக்க வேண்டிய இழி நிலையை, இவர்களாக ஏற்படுத்திக் கொண்டதனால்! இவர்களின், நெஞ்சுக்கு உரம் ஊட்ட அறிவுக்குத் தெளிவு கிடைக்கத்தான், நமது கழகம்,

இன்னொருவர் தயவெதற்கு?

இந் நாட்டில் வாழ்வதற்கு!

என்று பண்பாடியபடி இருக்கிறது.

•

தம்பி! சில நாடுகள், இயற்கை வளமற்று, தொழில் திறனுள்ள மக்களற்று இருப்பதால், பேரரசு ஒன்றினுக்கு உட்பட்டு, அடங்கிக் கிடந்து, வாழ்க்கையை நடத்தித் தீர வேண்டியவைகளாகி விடுகின்றன. வேறு சில நாடுகள், வளம் இருந்தும், அதனைக் தக்க முறையில் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை பெறாததாலோ, உரிமை பறிக்கப்பட்டுப் போய்விடுவ தாலோ, அடிமைக்கோலம் பூண்டு, பேரரசு இடும் பிச்சையை உண்டு வாழ வேண்டி நேரிட்டுவிடுகிறது. நம் நாட்டு நிலை, மிக வியப்பான தொன்றாகும். நம் நாட்டு வளம் ஒரு பேரரசுக்கு வண்ணமளிக்கவும், நம் நாட்டுத் தொழில் திறமை வேறோர்

இடத்துக்கு வலிவும் பொலிவும் தேடித் தரவும், பயன்படுத்தப் பட்டு வருகிறது.

நம் நாட்டு இரும்பு, நமக்கு இன்னமும் பயன்படவில்லை; நம் நாட்டுக்கோ, வேற்றிடத்து இரும்பு வருகிறது; அது மட்டுமல்ல வேடிக்கை; அந்த வேற்றிடத்து இரும்பை வெட்டி எடுக்கவும், அதற்கான திட்டமிட்டுச் செயல்படவும், நம் நாட்டவர் வேற்றிடம் செல்கிறார்கள்!!

நாட்டிலே, காவிரிக் கரையிலே எண்ணெய் கிடைக்கும் என்கிறார்கள் நிபுணர்கள்.

நம் நாட்டுக்கு இப்போது எண்ணெய் வேற்றிடத்திலிருந்து வருகிறது.

அதுமட்டுமல்ல, வேற்றிடத்தில் உள்ள எண்ணெய்த் தொழிலிடங்களில், நம் நாட்டு உழைப்பாளிகளும், நிபுணர் களும், வேலை செய்து வருகிறார்கள்.

சந்தனத்தை அரைத்தெடுத்துக் கொடுக்கிறோம் - சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன் - மார்பிலே பூசிக்கொள்கிறான், மகிழ்ச்சியுடன்; அரைத்ததால் கையிலே வந்துற்ற "சுளுக்கு'க்காக ஈரக் களிமண்ணை அப்பிக்கொண்டு, நாம் வேதனைப்படுகிறோம்.

என்ன செய்யலாம்! நாம் வந்த வழி அப்படி!! - என்று பேசிப் புலம்புவர், வழி அறியாதார். அது போலன்றோ, ஆளவந்தார்களும் பேசுகின்றனர். என்ன செய்வது? நாம், டில்லியின் தயவை எதிர்பார்த்துத்தான் வாழவேண்டி இருக்கிறது, என்று. என்ன இல்லை இங்கே? ஏன் கை ஏந்திக் கஷ்டப்படுகிறீர்கள்? என்று கேட்டுவிட்டாலோ, உருட்டு கிறார்கள், மிரட்டுகிறார்கள், தம்பி! குத்திக் குடலெடுக்கிறார்கள், கொன்றே போட்டுவிடுகிறார்கள்.

உண்மையிலேயே இந்த நாடு, இன்னொருவர் தயவை நாடினால் மட்டுமே வாழ முடியும், என்ற விதத்திலே, இருக்குமானால், நீயும் நானும், நமது பக்கம் திரண்டு நிற்கும் நற்பண்பாளரும், ஏன், தனி அரசு என்று பேசப் போகிறோம்! நமக்கு என்ன, ஆளவந்தார்களின் அருவருப்பைத் தேடிக் கொள்வதிலே, இலாபமா? சுவையா? தலையாட்டிகளெல்லாம் தர்பாரில் இடம் பெற்றிருப்பதைப் பார்க்கிறோம்; எங்கோ கிடந்ததுகள் சாமரம் வீசிப் பங்காளிகளாகிவிடுவதைக் காண்கிறோம்; எதிர்த்துப் பார்த்தோம், பலன் இல்லை; இனி எடுபிடியாகிப் பார்ப்போம், பலன் கேட்போம், என்ற முறையிலே, ஓங்காரக் கூச்சலிட்டு ஒரு காலத்தில் உலவி வந்ததுகளெல்லாம், இன்று புகழ் ”ரீங்காரம்’ செய்து, வட்டமிட்டுக் கொண்டிருக்கக்

காண்கிறோம்! எனினும் ஆளவந்தாரின் போக்கினை எதிர்த்து, இன்னல் வந்துற்றால் ஏற்றுக்கொள்கிறோம். என்ன காரணம்? நமது உள்ளத்தில் ஆட்சி செய்யும் உணர்வு, நம்மை உந்திக்கொண்டிருக்கிறது.

இன்னொருவர் தயவெதற்கு?

இந் நாட்டில் வாழ்வதற்கு!

என்ற பண், செவியில் கேட்டபடி இருக்கிறது. இந்நாட்டு அருவியின் சல சல ஒலியிலும், செந்நெல் மணிகளின் கலகல ஒலியிலும், இந்தப் பண்தான் கேட்கிறோம். ஓங்கி உயர்ந்த மலைகளும், தேனினைச் சொரிந்திடும் தருக்களும், நமக்கு இந்தப் பண்ணினைத்தான் இசைத்தபடி உள்ளன. அதன் வயப்பட்டு விட்டோம்; மற்ற எதுவும், நம்மை மயக்கிடாது; எந்த எதிர்ப்பும் நமது எண்ணத்தை மாய்த்திடாது;

உடலைச் சாய்த்திடலாம்; இருட்டு நேரம், முரட்டு ஆள், கூர்மையான கத்தி, நேர்மை மறக்கும் அதிகாரி, இருந்தால் போதும், அதற்கு. ஆனால், எண்ணம், என்றும் இறந்துபடாது! காணும் காட்சிகள், கேட்டிடும் இசை எல்லாம், அந்த எண்ணத்தை மேலும் வலிவுள்ளதாக்கும்!!

தம்பி! உடன் பிறந்த தங்கைமார் கூடி, நிலாச் சோறு செய்து உண்டு களிப்பர் - கண்டிருக்கக்கூடும். பல்வேறு இல்லங் களின் செல்வங்கள் ஒரு இடத்தில் இருந்து, ஒன்றாகச் சமைத்து, ஒருசேர இருந்து உண்டு, ஆடிப்பாடி மகிழ்வர். எனினும், அந்த "விளையாட்டு' முடிந்ததும், அவரவர் இல்லம் செல்வர்; பிறகு, உண்பதும், உறங்குவதும் அவரவர் இல்லத்திலேயே.

அதுபோல், வேடிக்கைக்காக அல்ல, காரணத்தோடு, ஒரு குறிப்பிட்ட

காரியத்துக்காக, பல நாட்டவர், பல இனத்தினர் ஒரு இடத்திலிருந்து, ஒன்றுபட்டுக் காரியமாற்றலாம் - காரிய மாற்ற வேண்டி நேரிடும். ஆனால், அந்தக் குறிப்பிட்ட காரியம் குறைவின்றி நடந்தேறிய பிறகு, ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு இனமும், தத்தமது எல்லை நின்று, உழைத்து, உயர்ந்து, உயர்வினை உலகுக்கு விரும்பி அளித்து, உலகப் பொதுநலனை வளர்த்திடவே முனைதல் வேண்டும்.

உலகே ஒரு பெரும் நாடு ஆகி - எல்லைக் கோடுகள் அழிக்கப்பட்டு - இன இயல்புகள் நீக்கப்பட்டு - யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்பது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும், நன்னாள் வருமெனின், எவர் குறுக்கே நிற்பர்! ஜெர்மனி, ஜெர்மனி என்ற உணர்வை இழந்து, இத்தாலி தன் தனிப் பெயரை விட்டுக் கொடுத்து, பிரான்சு

தன் பண்பு தனியானது என்று பேசுவதை விட்டொழித்து, அதுபோன்றே, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, இர□யா ஆகிய எல்லா நாடுகளும், தத்தமது எல்லைகள் இயல்புகள், அரசு முறைகள், வளமூட்டும் வாய்ப்புகள் அனைத்தையும் "தியாகம்' செய்து,"ஒரே உலகு' ஆகிவிடத் திட்டமிட்டாலும், நாங்கள் மட்டும், "திராவிடம்' தனி நாடுதான் என்ற திட்டத்தை விடவேமாட்டோம் என்று, எவரும் கூறத் துணியார். ஆனால்,"ஒரே உலகு' என்பதே உயர்ந்த இலட்சியம், எனவே உனக்கென ஒரு நாடு, ஒரு அரசு, வேண்டுமென்று கிளர்ச்சி நடத்தாதே, அது குறுகிய மனப்போக்கு என்று பேசுவது, பேரறிவினைக் காட்டுவதுமாகாது, நேர்மையுமாகாது.

•

"தேசியம்' என்பது கூட, ஒரு போலித் தத்துவந்தான்! மனித குலம் ஒன்றேயன்றி,

அதிலே, மஞ்சள், கருப்பு, வெள்ளை, மாநிறம் என்றெல்லாம் குறிப்பிட்டு இது என் நாடு, இது என் அரசு, என்று வாதாடுவது பேதைமை என்றுகூடப் பெரியவர்கள் பேசுகிறார்கள் - சுவை இருக்கிறது பேச்சில், சூடுகூடப் பிறந்து விடுகிறது; ஆனால் செயல்முறை, எங்ஙனம் இருக்கிறது என்று கவனிக்கும்போதுதான், அந்தப் பெரியவர்கள் பேசுவது, மற்றவர்கள் கேட்டுத், தம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்க அல்ல என்பது விளக்கமாகத் தெரிகிறது.

•

ஓ, ஹென்றி சுவைமிகு சிறுகதைகள் பல எழுதிப் புகழ் ஈட்டிய, அமெரிக்க எழுத்தாளர். கதைகளில் சுவை என்றால், சொல்லடுக்கால், கட்டுக்கோப்பு முறையால் கிடைத்திடும் சுவை மட்டுமல்ல, கதையிலே இடம்பெற்று, படிப்போரின் நெஞ்சைத் தொட்டிடும் கருத்தால்

கிடைத்திடும் சுவை.

•

ஒரு உணவு விடுதி! மிகப்பெரியது, புகழ்வாய்ந்தது. எப்போதும் இங்கு ஒரே ஆரவாரம், கூட்டம், குதூகலம், எங்கெங் கிருந்தெல்லாமோ, வருகிறார்கள் இந்த உணவு விடுதிக்கு.

கூட்டத்திலே சேராமல், ஆனால் அனைவரையும் கூர்ந்து கவனித்தபடி, ஒருவன் இருக்கிறான் - அவன் ஒரு சிந்தனையாளன். அரசியல், பொருளியல், மன இயல், இவைகளைப் பற்றி எல்லாம் நிரம்பத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு. இந்த விடுதியிலே பலர் வருகிறார்கள், பல விஷயங் களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதற் காகவே வந்திருக்கிறான்.

விந்தையான மனிதர்கள், வேடிக்கையான இடம்! என்று எண்ணியபடி அவன் உட்கார்ந்திருக்கிறான். "நடமாடும் விந்தை என்று சொல்லத்தக்க விதத்தில், ஒருவன், உள்ளே நுழைந்து, ஒரு அதிர்வேட்டுச் சிரிப்பை வீசிவிட்டு, உட்கார இடம் தேடி, ஒதுக்குப்புறமான இடத்தில், தனியாக உட்கார்ந்திருக்கும் சிந்தனையாளனைப் பார்க்கிறான். என்ன எண்ணிக் கொண்டானோ, தெரியவில்லை. நேராக, அதே இடம் வந்து அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறான்.

மயக்கும் பார்வை! இனிக்கும் பேச்சு! அந்த விந்தை மனிதனுக்கு.

"தாங்கள் எந்த ஊரோ?'' என்று கேட்டான் சிந்தனையாளன்.

"நானா? நான், நார்வே! அல்லது

பலஸ்தீன்! பாரிஸ்!'' என்று எதாவது பதில் சொல்லுவான் என்பது சிந்தனையாளன் நினைப்பு. விந்தை மனிதனோ, உடனே பதில் கூறவில்லை. ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ஏளனம், பச்சாதாபம், வியப்பு எல்லாம் கலந்த ஒரு புன்னகையைக் காட்டியபடி,"நானா? எந்த ஊர் என்றா கேட்கிறாய்! நான், என்ன சொல்ல! என் ஊர், உலகம்!! இப்போது பீகிங் நகரிலிருந்து புறப்பட்டு வருகிறேன்; டமாஸ்கஸ் நகர வியாபாரி ஒருவருக்கு காஷ்மீர் கம்பளம் தேவை என்று வெனிஸ் நண்பன் கூறக்கேட்டு இன்றிரவு பாக்தாத் கிளம்பு கிறேன், அந்த வியாபாரியைக் கண்டு பேச!'' என்று பதிலளித்தான்.

ஊர் எது என்று கேட்ட உடன், மளமளவென்று உலகையே ஒரு சுற்றுச் சுற்றி வருகிறானே என்று, ஆச்சரியம் சிந்தனையாளனுக்கு.

”உலகம், எல்லோருக்கும் பொதுவானது என்றாலும், அவரவர்களுக்கு என்று ஒரு நாடு, ஒரு ஊர் உண்டு அல்லவா?'' என்று கேட்டான் சிந்தனையாளன்.

”இளைஞனே! பொதுவாகப் பலருக்கும் இருக்கும் பித்தம் உனக்கும் இருக்கிறது. என் நாடு, என் ஊர், என்பது அர்த்தமற்ற பேச்சு!! நாட்டின் மீது பற்றுவைப்பது என்ற தத்துவமே, போலி - சொத்தை. மண்ணும் விண்ணும், மரமும் மலரும், குதலை மொழிக் குழந்தையரும், குழல்மொழிக் குமரிகளும், எல்லா இடத்திலும், உலகமெங்கும் உண்டு! இதிலே, ஒரு குறிப்பிட்ட எல்லையை நாமாக வகுத்துக் கொண்டு, இது எனது நாடு, இதற்கு உலகிலே எங்கும் இல்லை ஈடு, என்று பேசுவது பேதைமை. ஒரு குறிப்பிட்ட இடத்தின்மீது பற்று இருப்பதாகப் பேசுவதும் பொருத்தமற்றது. எனக்கு இமயமலை பனிமூடி இருக்கும்

காட்சியும், இலண்டன் மாநகரம் மூடுபனியில் மூழ்கிக் கிடப்பதும், நைல் நதியின் நேர்த்தியும், நேப்பிள்ஸ் நகர வசீகரமும், பெர்லின் நகரத் தொழிற்சாலையும், பிரான்சு நாட்டு மதுவகையும், மணிபுரி நடனமும், மாட்ரிட் நகர மாட்டுச் சண்டையும், எல்லாமே பிடிக்கும்! எல்லாம் என்னுடையவை என்ற உணர்ச்சிதான் எனக்கு - என் நாடு! அதிலே என் ஊர்! அதிலே என் தெரு! அதிலே நான் பிறந்த வீடு! நான் விளையாடிய மண் மேடு! அங்கு நான் கலைத்தெறிந்த குருவிக் கூடு! - என்றெல்லாம் பேசுவது கிடையாது. நான் மனிதன்! இந்த நாட்டுக்காரன் - அந்த நாட்டுக்காரன் என்று, என்னையே நான் மதிப்புக் குறைவாக்கிக்கொள்ளமாட்டேன். என் நாடு உலகம்!! மசூதியும் மாதாகோயிலும், தேரும் திருவிழாவும், உண்டு, இதிலே இதுதான்

என்னுடையது, இது என்னுடையது அல்ல என்ற பேத உணர்ச்சி எனக்குக் கிடையாது. நான் சில வேளைகளில், சில இடங்களில் தங்குவேன் - ஆனால், அதிலே இன்ன இடம் என் இடம் என்று கூறி, மற்ற இடங்களை இழந்து விடுவேனா! மதியற்றவனல்லவா, அப்படிச் செய்வான்! நான் அரேபிய பாலைவனத்திலே ஒட்டகத்தின்மீது அமர்ந்து செல்வேன் கேரளத்திலே படகேறிச் செல்வேன். டார்ட்டாரியில் குதிரை! இலண்டனில் விமானம்! இர□யாவில், ரயில்! - இப்படி!! ஆனால், இதிலே இதுதான் என் நாடு, மற்றவை மற்ற எவரெவருக்கோ என்று பேசும், பஞ்சப் புத்திக்காரனல்ல நான்! எனக்கு. உலகம் உறைவிடம்! உலகநாதன் என்று என்னை அழைக்கலாம்.''

சிந்தனையாளன், வியப்பிலே அமிழ்ந்தே போனான்.

நாடு, நாட்டுப்பற்று, நாட்டுவிடுதலை, அதற்கான போர், அதிலே தியாகங்கள், வீர வரலாறுகள், இவைகளை எல்லாம் படித்து, நெஞ்சு நெக்குருகி இருக்கிறான் - இதோ "ஒருவன், தன்னை உலகநாதன் என்று கூறிக் கொள்கிறான் - நாட்டுப் பற்று என்று பேசுவதே சிறுபிள்ளைத்தனம் என்று கேலி செய்கிறான் - இவனல்லவா, தலைசிறந்த தத்துவவாதி - நாட்டுப் பற்று எனும் பாசத்தைக்கூடக் கடந்தவன்! - என்று எண்ணி வியந்தான்.

"என் நாடு இங்கிலாந்து என்று கூறிவிட்டால், உனக்குக் கரித்துண்டு மட்டும்தான் சொந்தமாகும்; ஆப்பிரிக்காவிலே உள்ள வைரம், உனக்கு இருக்காது - தமிழ்நாட்டு முத்து உனக்கல்ல, ஆப்கன் நாட்டு பழவகை உனக்கில்லை...'' என்று விந்தை மனிதன் கூறக்கேட்டு, சிந்தனையாளன், இவனே"இலட்சிய புருஷன்' - இவன்

கூறுவதே உண்மையான தத்துவம், தேசியம் என்பதுகூடச் சொத்தை வாதம், நாமும் "உலகநாதன்' ஆகிவிடவேண்டும், குறுகிய மனப்பான்மை கூடாது, எல்லைக் கோடுகளிலே சிக்கிக் கொள்ளலாகாது என்றெல்லாம், தீர்மானித்தான்.

உலகநாதன், சிறிது நேரம் இருந்துவிட்டு, விடைபெற்றுக் கொண்டு, கிளம்பினான்.

"சிந்தனையாளன், செந்தேன் உண்டவன் போலாகி, அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று, பெருங் கூச்சல் கேட்டது.

ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வதும், தாறுமாறாகப் பேசிக் கொள்வதும், கேட்டது.

உதைப்பேன்! கொன்றுவிடுவேன்! சுட்டுத் தள்ளுவேன்! - என்று கூக்குரல் கிளம்பிற்று.

பரபரப்பு ஏற்பட்டது. அமளி மூண்டுவிட்டது.

மேஜைகள் நாற்காலிகள், பறந்தன, உடைந்தன. உண்டு களித்திருந்தோர் மூலைக்கு ஒருவராக ஓடலாயினர்.

பலப்பல நூற்றாண்டுகளாகப் பாவாணர்களும், அரசியல் ஆசிரியர்களும், எழுச்சியூட்டி நிலைநாட்டிய தேசியம் - நாட்டுப் பற்று - என்பதே போலித்தத்துவம் என்ற பேருண்மையை, உலகநாதனின் உன்னதமான விளக்கத்தால் பெற்றுப் பெருமிதம் அடைந்திருக்கும் வேளையில், ஏதோ ஒரு அற்ப விஷயத்துக்காக, இங்கு அமளி செய்கிறார்களே அறிவற்றவர்கள் பேருண்மையைக் கேட்டறியாப் பித்தர்கள், என்று எண்ணி வெறுப்படைந்தான், சிந்தனையாளன்.

இதற்குள், அமளி பலமாகிவிட்டது. ஒருவன் பலமாகத் தாக்கப்பட்டுக் கீழே சாய்ந்தான். அவன் உடலில் பல இடங்

களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

"ஐயோ பாவம்! எவனையோ, பலமாகத் தாக்கி விட்டார்களே!'' என்று முணு முணுத்தபடி, அந்த இடம் நோக்கிச் சென்றான், சிந்தனையாளன். அடிபட்டவனைக் கீழே கிடத்தி இருந்தார்கள். அருகே சென்று பார்த்தான். திடுக்கிட்டுப் போனான்; அடிபட்டுக் கீழே கிடந்தவன், உலகநாதன்.

"ஐயா! இவரை ஏன் இப்படித் தாக்கினீர்கள்? அமளிக்குக் காரணம் என்ன?'' என்று பரிவுடன் சிந்தனையாளன் கேட்டான்.

"பயல், முன்கோபக்காரன். யாரோ ஒருவன், இவனுடைய ஊரிலே சாக்கடை நாற்றம் மூக்கைத் துளைக்கும் என்று சொன்னானாம். ஆஹா! என் ஊரைப் பற்றியா கேவலமாக, இழிவாகப் பேசுகிறாய்? என்று கூவி, அவன் மீது பாய்ந்து அடித்தான்;

தடுத்தார்கள், அடங்கவில்லை; பிறகு அனைவரும் சேர்ந்து கொடுத்தார்கள் பலமாக; பயல் கீழே உருண்டான்; இவனுடைய ஊரிலே உள்ள சாக்கடை நாற்றமடிப்பதைச் சொன்னால் கூடவா, கோபம் வருவது! முட்டாள் தனமல்லவா அது!'' என்று ஒருவர் விளக்கம் தந்தார்.

உலகநாதனைப் பார்த்தான் - அவன் தன்னிடம், தேசியமே போலி என்று பேசிய பேச்சை நினைத்துக் கொண்டான் - அவன் ஊரைப்பற்றி யாரோ கேவலமாகப் பேசினது கேட்டு, இவ்வளவு ஆத்திரம் பிறந்ததே, இவனா, உலகமே என் நாடு! எனக்கு நாடு என்ற எல்லைக் கோடு மீது பற்றுக் கிடையாது! என்று பேசிய, உலகநாதன்!! - என்று நினைத்தான் - மயக்கம் வந்தது சிந்தனையாளனுக்கு.

•

தம்பி! ஓ ஹென்ரியின், சிறுகதையை, கூடுமான வரையில், புரியவைக்க முயன்றிருக்கிறேன் அதற்கான வடிவம் அமைத்து - அவ்வளவுதான் - அந்த முழுச் சுவையைத் தர இயலவில்லை.

"ஒரே உலகம்' என்று பேசுபவர்களிடம் தமது நாடு தமது ஊர் என்ற உடன், எப்படிப்பட்ட ஆத்திர உணர்ச்சி ஏற்படும், என்பதைக் கதை வடிவாக்கிக் காட்டி, தத்துவம் பேசலாம் தாராளமாக, ஆனால் பற்று, பாசம், அதனால் வரும் எழுச்சி இவைகளைப் போக்கிக் கொள்ள முடியாது என்பதை, அழகாக விளக்கிவிட்டார், ஓ, ஹென்ரி.

திராவிட நாடாவது, தமிழ் நாடாவது, இந்தியா ஒரே நாடு, இதிலே என்ன, என் நாடு, என் இனம், என்ற குறுகிய மனப் பான்மை, என்று பேசுகிறவர்களைக் கண்டால், தம்பி! ஓ ஹென்ரியின் கதையை நினைத்துக்கொள்.

•

நாம், திராவிடம் கேட்கும்போது, பாரதம் - ஒரே இந்தியா - என்றெல்லாம் உபதேசம் செய்கிறார்கள் - பலர் - மேதாவித்தனம் என்ற எண்ணத்தில். அவர்களே, அவர்களின் மாநிலம், அதன் உரிமை, அதன் தொழில் வளம், என்ற பிரச்சினை வந்ததும், தாவிக் குதிக்கிறார்கள், தாறுமாறாகக்கூட நடந்து கொள்கிறார்கள்.

அசாமிலே, இன்னமும் அடங்கவில்லை அமளி.

பஞ்சாபிலே கிளர்ச்சி ஓயவில்லை.

மகாராஷ்டிரம் கிடைத்த பிறகுதான், பம்பாய், ஆமதாபாத் அமளி அடங்கிற்று.

"நாக நாடு' என்று தனி அந்தஸ்துத் தருகிறோம், ஆண்டொன்றுக்கு மூன்று கோடி ரூபாய் செலவுக்குத் தருகிறோம், இந்தியாவில்

ஒரு பகுதி என்ற ஏற்பாட்டுக்காகிலும் இணங்குக, என்று முகவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டு, டில்லி, கெஞ்சுகிறது, பார்க்கிறோம்.

இவர்களேதான், "திராவிடம்' என்று நாம் பேசும்போது, செச்சே! என்ன பேதைமை! பாரத தேசம் என்று சொல்லுங்கள்! - என்று உபதேசம் பேசுகிறார்கள் - உணவு விடுதியிலே கண்டோமே உலகநாதன், அவனைப் போல.

•

நமக்கு வேண்டிய உரிமையின் அருமையை, மற்றவர்கள், புரிந்துகொள்வார்கள், அக்கரை காட்டுவார்கள், ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதும் தவறுதானே!

நமக்குத்தானே, பிரச்சினை புரிய முடியும். நாம்தான், கேட்டுக் கொள்ள வேண்டும்,

இன்னொருவர் தயவெதற்கு?

இந் நாட்டில் வாழ்வதற்கு?

என்ற கேள்வியை.

'தேசியம்' என்பது கூட, ஒரு போலித் தத்துவந்தான்! மனித குலம் ஒன்றேயன்றி, அதிலே, மஞ்சள், கருப்பு, வெள்ளை, மாநிறம் என்றெல்லாம் குறிப்பிட்டு இது என் நாடு, இது என் அரசு, என்று வாதாடுவது பேதைமை என்றுகூடப் பெரியவர்கள் பேசுகிறார்கள் - சுவை இருக்கிறது பேச்சில், சூடுகூடப் பிறந்து விடுகிறது; ஆனால் செயல்முறை, எங்ஙனம் இருக்கிறது என்று கவனிக்கும்போதுதான், அந்தப் பெரியவர்கள் பேசுவது, மற்றவர்கள் கேட்டுத், தம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்க அல்ல என்பது விளக்கமாகத் தெரிகிறது.

•

ஓ, ஹென்றி சுவைமிகு சிறுகதைகள் பல எழுதிப் புகழ் ஈட்டிய, அமெரிக்க எழுத்தாளர். கதைகளில் சுவை என்றால், சொல்லடுக்கால், கட்டுக்கோப்பு முறையால் கிடைத்திடும் சுவை மட்டுமல்ல, கதையிலே இடம்பெற்று, படிப்போரின் நெஞ்சைத் தொட்டிடும் கருத்தால் கிடைத்திடும் சுவை.

•

ஒரு உணவு விடுதி! மிகப்பெரியது, புகழ்வாய்ந்தது. எப்போதும் இங்கு ஒரே ஆரவாரம், கூட்டம், குதூகலம், எங்கெங் கிருந்தெல்லாமோ, வருகிறார்கள் இந்த உணவு விடுதிக்கு.

கூட்டத்திலே சேராமல், ஆனால் அனைவரையும் கூர்ந்து கவனித்தபடி, ஒருவன் இருக்கிறான் - அவன் ஒரு சிந்தனையாளன். அரசியல், பொருளியல், மன இயல்,

இவைகளைப் பற்றி எல்லாம் நிரம்பத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு. இந்த விடுதியிலே பலர் வருகிறார்கள், பல விஷயங் களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதற் காகவே வந்திருக்கிறான்.

விந்தையான மனிதர்கள், வேடிக்கையான இடம்! என்று எண்ணியபடி அவன் உட்கார்ந்திருக்கிறான். ”நடமாடும் விந்தை என்று சொல்லத்தக்க விதத்தில், ஒருவன், உள்ளே நுழைந்து, ஒரு அதிர்வேட்டுச் சிரிப்பை வீசிவிட்டு, உட்கார இடம் தேடி, ஒதுக்குப்புறமான இடத்தில், தனியாக உட்கார்ந்திருக்கும் சிந்தனையாளனைப் பார்க்கிறான். என்ன எண்ணிக் கொண்டானோ, தெரியவில்லை. நேராக, அதே இடம் வந்து அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறான்.

மயக்கும் பார்வை! இனிக்கும் பேச்சு! அந்த விந்தை மனிதனுக்கு.

"தாங்கள் எந்த ஊரோ?'' என்று கேட்டான் சிந்தனையாளன்.

"நானா? நான், நார்வே! அல்லது பலஸ்தீன்! பாரிஸ்!'' என்று எதாவது பதில் சொல்லுவான் என்பது சிந்தனையாளன் நினைப்பு. விந்தை மனிதனோ, உடனே பதில் கூறவில்லை. ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ஏளனம், பச்சாதாபம், வியப்பு எல்லாம் கலந்த ஒரு புன்னகையைக் காட்டியபடி,"நானா? எந்த ஊர் என்றா கேட்கிறாய்! நான், என்ன சொல்ல! என் ஊர், உலகம்!! இப்போது பீகிங் நகரிலிருந்து புறப்பட்டு வருகிறேன்; டமாஸ்கஸ் நகர வியாபாரி ஒருவருக்கு காஷ்மீர் கம்பளம் தேவை என்று வெனிஸ் நண்பன் கூறக்கேட்டு இன்றிரவு பாக்தாத் கிளம்பு கிறேன், அந்த வியாபாரியைக் கண்டு

பேச!'' என்று பதிலளித்தான்.

ஊர் எது என்று கேட்ட உடன், மளமளவென்று உலகையே ஒரு சுற்றுச் சுற்றி வருகிறானே என்று, ஆச்சரியம் சிந்தனையாளனுக்கு.

"உலகம், எல்லோருக்கும் பொதுவானது என்றாலும், அவரவர்களுக்கு என்று ஒரு நாடு, ஒரு ஊர் உண்டு அல்லவா?'' என்று கேட்டான் சிந்தனையாளன்.

"இளைஞனே! பொதுவாகப் பலருக்கும் இருக்கும் பித்தம் உனக்கும் இருக்கிறது. என் நாடு, என் ஊர், என்பது அர்த்தமற்ற பேச்சு!! நாட்டின் மீது பற்றுவைப்பது என்ற தத்துவமே, போலி - சொத்தை. மண்ணும் விண்ணும், மரமும் மலரும், குதலை மொழிக் குழந்தையரும், குழல்மொழிக் குமரிகளும், எல்லா இடத்திலும், உலகமெங்கும் உண்டு!

இதிலே, ஒரு குறிப்பிட்ட எல்லையை நாமாக வகுத்துக் கொண்டு, இது எனது நாடு, இதற்கு உலகிலே எங்கும் இல்லை ஈடு, என்று பேசுவது பேதைமை. ஒரு குறிப்பிட்ட இடத்தின்மீது பற்று இருப்பதாகப் பேசுவதும் பொருத்தமற்றது. எனக்கு இமயமலை பனிமூடி இருக்கும் காட்சியும், இலண்டன் மாநகரம் மூடுபனியில் மூழ்கிக் கிடப்பதும், நைல் நதியின் நேர்த்தியும், நேப்பிள்ஸ் நகர வசீகரமும், பெர்லின் நகரத் தொழிற்சாலையும், பிரான்சு நாட்டு மதுவகையும், மணிபுரி நடனமும், மாட்ரிட் நகர மாட்டுச் சண்டையும், எல்லாமே பிடிக்கும்! எல்லாம் என்னுடையவை என்ற உணர்ச்சிதான் எனக்கு - என் நாடு! அதிலே என் ஊர்! அதிலே என் தெரு! அதிலே நான் பிறந்த வீடு! நான் விளையாடிய மண் மேடு! அங்கு நான் கலைத்தெறிந்த குருவிக் கூடு! - என்றெல்லாம் பேசுவது

கிடையாது. நான் மனிதன்! இந்த நாட்டுக்காரன் - அந்த நாட்டுக்காரன் என்று, என்னையே நான் மதிப்புக் குறைவாக்கிக்கொள்ளமாட்டேன். என் நாடு உலகம்!! மசூதியும் மாதாகோயிலும், தேரும் திருவிழாவும், உண்டு, இதிலே இதுதான் என்னுடையது, இது என்னுடையது அல்ல என்ற பேத உணர்ச்சி எனக்குக் கிடையாது. நான் சில வேளைகளில், சில இடங்களில் தங்குவேன் - ஆனால், அதிலே இன்ன இடம் என் இடம் என்று கூறி, மற்ற இடங்களை இழந்து விடுவேனா! மதியற்றவனல்லவா, அப்படிச் செய்வான்! நான் அரேபிய பாலைவனத்திலே ஒட்டகத்தின்மீது அமர்ந்து செல்வேன் கேரளத்திலே படகேறிச் செல்வேன். டார்ட்டாரியில் குதிரை! இலண்டனில் விமானம்! இர□யாவில், ரயில்! - இப்படி!! ஆனால், இதிலே இதுதான் என் நாடு, மற்றவை

மற்ற எவரெவருக்கோ என்று பேசும், பஞ்சப் புத்திக்காரனல்ல நான்! எனக்கு. உலகம் உறைவிடம்! உலகநாதன் என்று என்னை அழைக்கலாம்.''

சிந்தனையாளன், வியப்பிலே அமிழ்ந்தே போனான்.

நாடு, நாட்டுப்பற்று, நாட்டுவிடுதலை, அதற்கான போர், அதிலே தியாகங்கள், வீர வரலாறுகள், இவைகளை எல்லாம் படித்து, நெஞ்சு நெக்குருகி இருக்கிறான் - இதோ "ஒருவன், தன்னை உலகநாதன் என்று கூறிக் கொள்கிறான் - நாட்டுப் பற்று என்று பேசுவதே சிறுபிள்ளைத்தனம் என்று கேலி செய்கிறான் - இவனல்லவா, தலைசிறந்த தத்துவவாதி - நாட்டுப் பற்று எனும் பாசத்தைக்கூடக் கடந்தவன்! - என்று எண்ணி வியந்தான்.

"என் நாடு இங்கிலாந்து என்று

கூறிவிட்டால், உனக்குக் கரித்துண்டு மட்டும்தான் சொந்தமாகும்; ஆப்பிரிக்காவிலே உள்ள வைரம், உனக்கு இருக்காது - தமிழ்நாட்டு முத்து உனக்கல்ல, ஆப்கன் நாட்டு பழவகை உனக்கில்லை...'' என்று விந்தை மனிதன் கூறக்கேட்டு, சிந்தனையாளன், இவனே"இலட்சிய புருஷன்' - இவன் கூறுவதே உண்மையான தத்துவம், தேசியம் என்பதுகூடச் சொத்தை வாதம், நாமும் "உலகநாதன்' ஆகிவிடவேண்டும், குறுகிய மனப்பான்மை கூடாது, எல்லைக் கோடுகளிலே சிக்கிக் கொள்ளலாகாது என்றெல்லாம், தீர்மானித்தான்.

உலகநாதன், சிறிது நேரம் இருந்துவிட்டு, விடைபெற்றுக் கொண்டு, கிளம்பினான்.

"சிந்தனையாளன், செந்தேன் உண்டவன் போலாகி, அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று, பெருங் கூச்சல் கேட்டது.

ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வதும், தாறுமாறாகப் பேசிக் கொள்வதும், கேட்டது.

உதைப்பேன்! கொன்றுவிடுவேன்! சுட்டுத் தள்ளுவேன்! - என்று கூக்குரல் கிளம்பிற்று.

பரபரப்பு ஏற்பட்டது. அமளி மூண்டுவிட்டது. மேஜைகள் நாற்காலிகள், பறந்தன, உடைந்தன. உண்டு களித்திருந்தோர் மூலைக்கு ஒருவராக ஓடலாயினர்.

பலப்பல நூற்றாண்டுகளாகப் பாவாணர்களும், அரசியல் ஆசிரியர்களும், எழுச்சியூட்டி நிலைநாட்டிய தேசியம் - நாட்டுப் பற்று - என்பதே போலித்தத்துவம் என்ற பேருண்மையை, உலகநாதனின் உன்னதமான விளக்கத்தால் பெற்றுப் பெருமிதம் அடைந்திருக்கும் வேளையில், ஏதோ ஒரு அற்ப விஷயத்துக்காக, இங்கு

அமளி செய்கிறார்களே அறிவற்றவர்கள் பேருண்மையைக் கேட்டறியாப் பித்தர்கள், என்று எண்ணி வெறுப்படைந்தான், சிந்தனையாளன்.

இதற்குள், அமளி பலமாகிவிட்டது. ஒருவன் பலமாகத் தாக்கப்பட்டுக் கீழே சாய்ந்தான். அவன் உடலில் பல இடங் களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

"ஐயோ பாவம்! எவனையோ, பலமாகத் தாக்கி விட்டார்களே!'' என்று முணு முணுத்தபடி, அந்த இடம் நோக்கிச் சென்றான், சிந்தனையாளன். அடிபட்டவனைக் கீழே கிடத்தி இருந்தார்கள். அருகே சென்று பார்த்தான். திடுக்கிட்டுப் போனான்; அடிபட்டுக் கீழே கிடந்தவன், உலகநாதன்.

"ஐயா! இவரை ஏன் இப்படித் தாக்கினீர்கள்? அமளிக்குக் காரணம் என்ன?''

என்று பரிவுடன் சிந்தனையாளன் கேட்டான்.

”பயல், முன்கோபக்காரன். யாரோ ஒருவன், இவனுடைய ஊரிலே சாக்கடை நாற்றம் மூக்கைத் துளைக்கும் என்று சொன்னானாம். ஆஹா! என் ஊரைப் பற்றியா கேவலமாக, இழிவாகப் பேசுகிறாய்? என்று கூவி, அவன் மீது பாய்ந்து அடித்தான்; தடுத்தார்கள், அடங்கவில்லை; பிறகு அனைவரும் சேர்ந்து கொடுத்தார்கள் பலமாக; பயல் கீழே உருண்டான்; இவனுடைய ஊரிலே உள்ள சாக்கடை நாற்றமடிப்பதைச் சொன்னால் கூடவா, கோபம் வருவது! முட்டாள் தனமல்லவா அது!’’ என்று ஒருவர் விளக்கம் தந்தார்.

உலகநாதனைப் பார்த்தான் - அவன் தன்னிடம், தேசியமே போலி என்று பேசிய பேச்சை நினைத்துக் கொண்டான் - அவன் ஊரைப்பற்றி யாரோ கேவலமாகப் பேசினது

கேட்டு, இவ்வளவு ஆத்திரம் பிறந்ததே, இவனா, உலகமே என் நாடு! எனக்கு நாடு என்ற எல்லைக் கோடு மீது பற்றுக் கிடையாது! என்று பேசிய, உலகநாதன்!! - என்று நினைத்தான் - மயக்கம் வந்தது சிந்தனையாளனுக்கு.

•

தம்பி! ஓ ஹென்ரியின், சிறுகதையை, கூடுமான வரையில், புரியவைக்க முயன்றிருக்கிறேன் அதற்கான வடிவம் அமைத்து - அவ்வளவுதான் - அந்த முழுச் சுவையைத் தர இயலவில்லை.

"ஒரே உலகம்' என்று பேசுபவர்களிடம் தமது நாடு தமது ஊர் என்ற உடன், எப்படிப்பட்ட ஆத்திர உணர்ச்சி ஏற்படும், என்பதைக் கதை வடிவாக்கிக் காட்டி, தத்துவம் பேசலாம் தாராளமாக, ஆனால் பற்று, பாசம், அதனால் வரும் எழுச்சி இவைகளைப் போக்கிக்

கொள்ள முடியாது என்பதை, அழகாக விளக்கிவிட்டார், ஓ, ஹென்ரி.

திராவிட நாடாவது, தமிழ் நாடாவது, இந்தியா ஒரே நாடு, இதிலே என்ன, என் நாடு, என் இனம், என்ற குறுகிய மனப் பான்மை, என்று பேசுகிறவர்களைக் கண்டால், தம்பி! ஓ ஹென்ரியின் கதையை நினைத்துக்கொள்.

•

நாம், திராவிடம் கேட்கும்போது, பாரதம் - ஒரே இந்தியா - என்றெல்லாம் உபதேசம் செய்கிறார்கள் - பலர் - மேதாவித்தனம் என்ற எண்ணத்தில். அவர்களே, அவர்களின் மாநிலம், அதன் உரிமை, அதன் தொழில் வளம், என்ற பிரச்சினை வந்ததும், தாவிக் குதிக்கிறார்கள், தாறுமாறாகக்கூட நடந்து கொள்கிறார்கள்.

அசாமிலே, இன்னமும் அடங்கவில்லை

அமளி.

பஞ்சாபிலே கிளர்ச்சி ஓயவில்லை.

மகாராஷ்டிரம் கிடைத்த பிறகுதான், பம்பாய், ஆமதாபாத் அமளி அடங்கிற்று.

"நாக நாடு' என்று தனி அந்தஸ்துத் தருகிறோம், ஆண்டொன்றுக்கு மூன்று கோடி ரூபாய் செலவுக்குத் தருகிறோம், இந்தியாவில் ஒரு பகுதி என்ற ஏற்பாட்டுக்காகிலும் இணங்குக, என்று முகவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டு, டில்லி, கெஞ்சுகிறது, பார்க்கிறோம்.

இவர்களேதான், "திராவிடம்' என்று நாம் பேசும்போது, செச்சே! என்ன பேதைமை! பாரத தேசம் என்று சொல்லுங்கள்! - என்று உபதேசம் பேசுகிறார்கள் - உணவு விடுதியிலே கண்டோமே உலகநாதன், அவனைப் போல.

•

நமக்கு வேண்டிய உரிமையின் அருமையை, மற்றவர்கள், புரிந்துகொள்வார்கள், அக்கரை காட்டுவார்கள், ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதும் தவறுதானே!

நமக்குத்தானே, பிரச்சினை புரிய முடியும். நாம்தான், கேட்டுக் கொள்ள வேண்டும்,

இன்னொருவர் தயவெதற்கு?

இந் நாட்டில் வாழ்வதற்கு? என்ற கேள்வியை.

அன்புள்ள,

அண்ணாதுரை,

28-8-60

18. மற்றொரு கூவம்!

அமைச்சரும் அறிவாற்றலும் -

தென்னாட்டுத் தொழில் வளம் -

தமிழகக் கிராமங்களின் இடர்ப்பட்ட நிலை.

தம்பி!

"கூவம் நதிக்கு அணைகட்டச் சொல்கிறார்களா, தி.மு. கழகத்தினர்' என்று கோபாவேசமாகப் பேசி வருகிறார், கோலோச்சும் நிலை கிடைக்கப் பெற்றதால், எத்தகைய வாய் வீச்சும் மதிப்புப் பெற்றுவிடும் என்று எண்ணிக்கொள்ளும் ஏமாளித்தனத்தில், தன்னை மிஞ்சுவார் இல்லை என்று காட்டிக் கொண்டுலவும் கனம். சுப்பிரமணியம்.

"என்னுடைய அறிவாற்றல் எத்தகையது,

ஆராய்ச்சித்திறன் எத்தன்மையது, வீரதீரம் எத்துணை பெரிது, ஏதுமறியாதார்களே! எதையும் கதைத்துக்கொண்டு கிடப்போரே! பிழைக்கும் வழி அறியாப் பேதைகாள்! என்னைப் போய், கூவம் ஆற்றுக்கா அணைகட்டச் சொல்கிறீர்கள்'' என்று கேட்கக் கிளம்புகிறார். தம்பி! இவரை ஒருவரும் இந்தக் காரியம் செய்யச்சொல்ல வில்லை. எனினும், வடக்கே பெரிய பெரிய அணைகள் கட்டப் பட்டுள்ளனவே, இங்கு என்ன சாதித்தீர்கள்? என்று நாம் கேட்கிறோமல்லவா, அதைத் திரித்துக் கூறி, ஆறு இருந்தாலும், இல்லை எனினும், அணைகட்டுக! என்று அறியாமை காரணமாக நாம் கூறுவது போலவும், நம்மை இடித்துக் காட்டித் திருத்தும் திருத்தொண்டினைச் செய்து தீரவேண்டிய பெரும் பொறுப்பினை இவர் தாங்கிக் கிடப்பது போலவும், கருவில் உள்ளது வெளியே வந்து

வீழ்ந்தாலொழியச், சூல்கொண்ட மாது நிம்மதி பெற முடியாது என்பார்போல, உள்ளத்திலே தொகுதி மூன்று 29 குடிபுகுந்துவிட்ட பேரறிவினை இவர் வெளியே உமிழா விட்டால், பாரம் தாங்கமாட்டாமல் தத்தளிக்க நேரிடும் என்பது போலவும் எண்ணிக்கொண்டு, கூவம் ஆற்றுக்கா அணைகட்டச் சொல்கிறார்கள்!! - என்று, கேலி பேசிப் பார்க்கிறார்.

ஏ! எனை நன்கு அறியாத மக்காள்! அணைகட்டுவது மிகப் பெரிய சாதனையோ! அந்த நாளில் குரங்குகள் அல்லவா சேதுவுக்கு அணைகட்டி முடித்தன என்று இராமாயணம் கூறுகிறது. அங்ஙனமிருக்க, அமைச்சராக இருக்கிறேன். நாடு மண்டியிட்டுக் கேட்டுக் கொண்டதால், பல துறைகளையும் ஒரு சேரப் பார்த்துக் கொண்டு வருகிறேன், அப்படிப்பட்ட என்னைப் போய், கேவலம் குரங்குகள் செய்து முடித்த வேலையையா செய்யச்

சொல்கிறீர்கள்! எத்துணை இறுமாப்பு உமக்கு!! இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே கடல் இருக்கிறது; எனினும் பாதாள வழி அமைக்கலாமா என்றோர் பிரச்சினை இருக்கிறது, இலண்டன் செல்கிறீராமே, பிழைத்துப் போகட்டும் அந்த நாட்டு மக்கள், பிரச்சினைக்கு ஒரு விளக்கம், வழிவகை கூறிவிட்டு வருக! என்று கூறியிருந்தால், செய்து முடிப்போம்! என்று எண்ணி மகிழ்ந்திருப்பேன். கூடிக்கூடிப் பேசுகிறார்கள் போரை ஒழிப்பது எங்ஙனமென்று, அதற்கான வழி தெரியாது வதைபடுகின்றனர்; அமைச்சர் ஏறே! இலண்டன் சென்றதும், காரிருளில் சிக்கித் தவித்திடும் "இராஜதந்திரிகளை' வரச்சொல்லி, அறிவுரை அருளி, உலகம் உய்ய பழி கூறிவிட்டு வாரும், என்று கூறினால், மகிழ்ச்சியுடன் அந்தப் பணியினை ஏற்றுக் கொண்டிருந்திருப்பேன்!! சமதர்மம்

என்பதுபற்றி எவரெவரோ ஏதேதோ எழுதிக் குழப்பிவிட்டிருக்கிறார்கள். அதனால், சமதர்மம் எனும் தத்துவத்துக்கு ஒரு தெளிவுரை நூல் தீட்டி, அதனை உலக மொழிகள் அனைத்திலும் வெளியிட, தங்களைக் கண்டதும், துடிதுடித்தோடி வந்து, பதிப்பாளர்கள், குழுமி நிற்பர். கொங்குநாட்டுத் தங்கமே! அத்தகைய ஒரு நல்லேடு எழுதித் தந்து, மார்க்சையும், ஏன்ஜல்சையும், ப்ரோதானையும், பிறரையும் நம்பி நாசமாகிவிட்ட நானிலத்துக்கு, ஒரு புதுவழி காட்டிவிட்டு வாருங்கள், என்று கூறினால், சில மணிநேரம் அதற்கென ஒதுக்கி, அந்தக் காரியத்தைச் செய்து முடித்துத் திருப்தி அடைவேன் - தமிழகத்துக்குப் பெருமை ஏற்படச் செய்திடுவேன்!! இப்படிப்பட்ட பணிகளைக் கூறாமல், செச்சே! குரங்குகள் செய்து முடித்த

காரியம், அணைகட்டுவது, அதைச் செய்யச் சொல்கிறீர்களே என்னை? - என்று, அமைச்சர் ஆயாசப்படுகிறார்போல் தெரிகிறது, அவர் பேசும் போக்கினைக் கவனிக்கும்போது.

அமைச்சராக இருப்பவருக்குத் தமது அறிவாற்றலிலே நம்பிக்கை இருக்கத்தான் வேண்டும் - அளவு அறிந்து நம்பிக்கை இருந்தால் நல்லது - வரைமுறையற்ற நம்பிக்கை கொள்வது கேலிக்குரியது, எனினும், இருந்துவிட்டுப் போகட்டும்; ஆனால், அத்துடன் பிறர் பேசுவது அத்தனையும் பேதைமை, என்று எண்ணிக் கொள்வது ஆணவத்தின் விளைவு; அதனை எடுத்துப் பேசுவது, நோய் முற்றுகிறது என்பதற்கு அடையாளம்.

யார், எங்கே, எப்போது, இந்த உலக மகா மேதையைப் பார்த்து, ஆறுகள் இல்லை எனினும், அணைகள் கட்ட வேண்டும் என்று

கேட்டார்கள்!

அன்றும் கேட்டோம், இன்றும் கேட்கிறோம், கோடி கோடியாகக் கொட்டி மலைமலையாக அணைகள் கட்டி, வடக்கே பாலைவனத்தைச் சோலைவனமாக்குகிறீர்களே, தெற்குச் சீமைக்குச் செய்தது என்ன? என்று கேட்கிறோம்; உரிமை இருப்பதால், தேவை அறிவதால், ஆட்சியாளர் திருவடி தாங்கிடுவோராகிப்போனதை உணருவதால்.

இதைத் திரித்துக்கூறி, அணையா? எங்கே? கூவம் ஆற்றிலே கட்டவா? என்று கேட்பவர், அமைச்சராகமட்டும் இல்லாது போனால், யார் இந்தக் குறும்புப் பேச்சுப் பேசுபவர்? கோமாளியோ!! என்றுதான் நாடு கேட்டிருக்கும். பேசுபவர் அமைச்சர் என்று அறிவதால், நாடு, திகைத்துக்கிடக்கிறது. அமைச்சரா இப்படிப் பேசுகிறார் என்று எண்ணி அல்ல; இப்படிப் பேசுபவரா

அமைச்சராக இருக்கிறார் என்று எண்ணி.

கூவத்துக்கு அணைகட்டச் சொல்லியோ, கோவலத்திலே கோட்டை கட்டச் சொல்லியோ, நாம் யாரும் கேட்டோ மில்லை; கேட்டதெல்லாம், வடக்கு வளம்பெற என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு, பெரும்பொருள்கொட்டி ஆர்வம் பொங்கிடும் நிலையில் காரியங்களைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறார்களே, அந்த ஆர்வம், அக்கரை, திறமை, ஏனய்யா, உமக்கு இல்லை? வளமளிக்கும் திட்டங்கள் தென்னகத்துக்கு எம்முறையில் இருத்தல் வேண்டும் என்பது பற்றி ஆர்வம்காட்டி, அதற்கான பொருள் ஈட்டுவதிலே அக்கரை செலுத்தி, திட்டங்களை நிறைவேற்றுவதிலே அவசரத்தைக் காட்டி, ஏன் வெற்றிப்பட்டியலை நீட்டாதிருக்கிறீர்கள், என்று கேட்கிறோம். தவறா? இதற்கு பதில், உதட்டைப்

பிதுக்குவதும் உறுமிக் காட்டுவதும்தானா! வேறு இல்லையா!!

தம்பி! அமைச்சர் கூவத்துக்கு அணைகட்ட வேண்டாம் - அதன் நாற்றத்தையாவது போக்கட்டுமே பார்ப்போம். பார்த்தோமே பொறுத்திருந்து இந்தப் பன்னிரண்டு ஆண்டு களுக்கு மேலாக, கூவம் நதியின் நாற்றத்தைப் போக்கக்கூட வக்கு அற்று வழி அற்றுப்போயிருக்கும் இந்த வல்லமைசாலிதான், வாய் வீச்சிலே எனக்குள்ள வல்லமையைப் பாரீர் என்கிறார். இது வல்லமைகூட அல்ல! இடத்தின் காரணமாகக் கிடைக்கும், வாய்ப்பு!! "யாரறியார், இதனை! அவரே, ஒருகணம், நிதானமாக எண்ணிப் பார்த்தால், புரியும்.

கூவம் ஆற்றினைப் பயனுள்ளதாக்கத் திட்டம்கூட இருக்கிறது - அறிந்தோர் தீட்டி, ஆளவந்தார்களால் நிறை வேற்றப்படாமல்,

ஏட்டளவில் இருந்துவரும் திட்டம். செய்து முடித்தாரா? செருமுனையில் எனக்கெதிர் நிற்பவன் யார்? என்று செருக்குடன் பேசிவரும், அமைச்சர் பெருந்தகை.

ஆறுகள் உள்ள இடத்தில் அணைகள் - ஏரிகள் உள்ள இடத்தில் கரைகள்!

கங்கைக்கும் யமுனைக்கும் கோடி கோடியாகப் பணம்! இங்கு காட்டாறுகளைக் கட்டுப்படுத்த, தொகையின் அளவு ஏன் அதிகப்படுத்தக் கூடாது.

தம்பி! தமிழரின் பிணங்கள், கடலலையால் மோதப்பட்டு மோதப்பட்டு, சிங்களத் தீவின் கரையிலே ஒதுக்கப்பட்டிருக் கின்றன - ஆமடா, தம்பி! ஆம்! எந்தச் சிங்களம், சீறிப் போரிட்ட தமிழர்கள் முன் ஒரு காலத்தில் மண்டியிட்டதோ, எந்தச் சிங்களவர், போரில் தோற்றதால், அக்கால முறைப்படி, அடிமை

களாக்கப்பட்டு, இங்கு கொண்டு வரப்பட்டு, காவிரிக்குக் கரை அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்களோ, அந்தச் சிங்களவர் காண, தமிழரின் பிணங்கள், சுறா தின்றது போக, சுழல் அரித்தது போக, மிச்சம் இருந்த பிணங்கள் சிங்களத் தீவின் கரை ஓரம் கிடந்தன!!

தமிழரின் பிணங்கள் சிங்களத் தீவின் கரையிலே கிடக்கின்றன!

கொங்கு நாட்டுக் குடிமகன், தேம்ஸ் நதிக்கரை மீது எழுப்பப்பட்டுள்ள எழிலூர் சென்று, எமது காங்கிரஸ் ஆட்சியில், மக்கள் புது வாழ்வு, முழுவாழ்வு பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள் என்று கூறப் போகிறார்!!

அமைச்சர் அல்லவா, ஆட்சியினால் ஏற்பட்டுள்ள அகமகிழ்ச்சி பற்றி ஆங்கிலர்

அறிந்திட எடுத்துரைக்கப் போகிறார். எத்தனை எத்தனை அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள், பெரும் பேராசிரியர்கள், மதத் தலைவர்கள், கலைஞர்கள், நமது அமைச்சர் பெருமானை, அச்சமும் அடக்கமும் கொண்ட நிலையில் அணுகிப் பாடம் கேட்கப் போகிறார்களோ, நமக்கென்ன தெரியும், தம்பி? தெரியாமலா, செல்வார்!!

ஆனால், அங்கு சென்றும், நமது நினைவால் தாக்கப்பட்டு, கூவம் நதிக்கா அணைகட்டுவது என்று கேட்டுவிடக் கூடாது; ஏனெனில், அணை இருக்கட்டும், கூவம் நதியின் நாற்றம் போய்விட்டதா என்று அறிந்தோர், கேட்பர்.

தொழில்வளம் காண்பதற்காக, இயற்கை வளத்தைச் சரியான முறையிலே பயன்படுத்துவதற்கான திட்டங்கள்

தீட்டுவதிலே, தென்னகம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, இடித்துரைக்காத நிபுணர் இல்லை என்னலாம். இந்த அமைச்சரேகூட, கனரகத் தொழிலைப் பொறுத்த வரையில் தென்னகம் - அதிலும் குறிப்பாகச் சென்னை - சரியான அளவிலும் முறையிலும் வளர்ச்சி அடையவில்லை என்பதைச், சில வேளைகளில் எடுத்துக்காட்டிப் பேசியுமிருக்கிறார். மற்றவர் களுக்கு மட்டுந்தானா, எமக்குத் தெரியும், என்று உரிமையுடன் பேசித் தென்னகத்தின் தொழில் வளர்ச்சிக்கான வழிவகை நிச்சயமாகக் காண்பேன் என்று வாக்களித்துமிருக்கிறார். எனினும், இவரே, நாம் அதை எடுத்துக் காட்டும்போது, எரிச்ச லடைந்து, கூவத்துக்கு அணைகட்டவா என்று கொதித்துக் கேட்கிறார். கொஞ்சம் உரத்த குரலில் பேசுங்கள் - என்று கூறுபவரைப் பார்த்து, காது செவிடா?

என்று கேட்டுவிடுங்கள் - எவ்வளவு கோபம் வருகிறது என்பது தெரியும். அந்த நிலைதான், அமைச்சருக்கு.

காங்கிரஸ் கட்சியிலேயே பலர், தென்னாடு புறக்கணிக்கப் பட்டு வருகிறது. தொழில் வளர்ச்சி சரியான அளவிலும் வகையிலும் ஏற்படவில்லை என்பதை உணர்ந்து குமுறுகிறார்கள். பொதுவாகவே மக்கள், சுயராஜ்யத்தின் பலனை வடக்கே உள்ளவர்கள் சுவைத்து இன்புறுவது போலத் தென்னக மக்கள் இன்புறவில்லை என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சிறிதளவு துணிவு கொண்டவர்கள், காங்கிரஸ் தலைவர்களைக் கேட்கவும் செய்கிறார்கள்; "ஏனய்யா, வடக்கே மூன்று பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் அமைத்தார்களே, இங்கு இவ்வளவு கூக்குரலிட்டும் இன்னும் ஏன் இரும்புத் தொழிற்சாலை அமைக்கவில்லை'

என்று கேட்கிறார்கள்.

ஏற்பாடாகி வருகிறது; பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; நிபுணர்கள் திட்டம் வகுத்துக் கொண்டிருக் கிறார்கள் என்று, காங்கிரஸ் தலைவர்கள் எத்தனை முறைதான், பொதுமக்களுக்குச் சமாதானம், கூறுவார்கள்! அவர்களுக்கும் சலிப்பும் ஆத்திரமும் ஏற்பட்டுப்போய், அவர்களே இப்போது டில்லி தேவதைகளைப் பார்த்துக் கேட்கக் துணிந்து விட்டார்கள்.

ஆயிரம் சொல்லு, தென்னாட்டுக்காக வாதாடுவதிலே; திறமையும் தீரமும் காட்டுபவர்கள் தி.மு. கழகத்தினர்தான் - என்று பொதுமக்களே, மகிழ்ச்சியுடன் கூறிடக் கேட்கும்போது, காங்கிரஸ் தலைவர்களுக்கே, ஒருபுறம் எரிச்சல், இன்னோர் புறம் வெட்கம் கிளம்புகிறது. இதிலென்ன பிரமாதம் நாங்களும்தான்

கேட்கிறோம், என்று கூறிவிட்டு, இப்போது டில்லியில் காங்கிரஸ்காரர்கள், சம்பத்தோடு சேர்ந்து, குரல் எழுப்பக் காண்கிறோம். ஆனால், அவர்கள் இன்னமும் "மனு' போடும்"மகானுபாவர்களாக'வே உள்ளனர்; வேறுவிதமாக அவர்கள் இருப்பதற்கில்லை. ஆனால், இந்த அளவுக்கு அவர்கள் பேசுவது கூட, வடக்கே உள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கு, அதிர்ச்சியைத் தருகிறது. ஏதேது, இது கட்சிகளைக் கடந்த ஒரு தேசியப் பிரச்சினையாகி விடும்போல இருக்கிறதே, பாரதம், ஏக இந்தியா, என்ற தத்துவமே தகர்ந்து போய்விடும்போல இருக்கிறதே என்று எண்ணுகிறார்கள்; எண்ணும்போதே அச்சம் குடைகிறது. நிலைமை புரிவதால், அவர்களுக்கு அச்சம் குடைகிறது.

பெற்றுள்ள நிலையின் காரணமாக, துணிவு தடித்துப் போயிருப்பதால், இங்குள்ள

நிதி அமைச்சருக்கு, எவரைக் கண்டாலும் ஒரு ஏளனம், எதைச் சொன்னாலும் அலட்சியம் ஏற்படுகிறது; கூவத்துக்கா, அணை கட்ட? என்று கேட்கிறார், கேலி பேசும் போக்கில்.

”எவ்வளவு முன்னேறி இருக்கிறது, இந்த மாநிலம், எமது திறமையான ஆட்சியினால்: மின்சாரத்தில் உணவு உற்பத்தியில், பாதைகள் அமைப்பில், பகல் உணவுத் திட்டத்தில், இப்படிப் பல துறைகளில், இப்படிப்பட்ட முன்னேற்றம் கண்டிருக்கும் போது, திரும்பத் திரும்ப வடக்கு வாழ்கிறது. தெற்குத் தேய்கிறது என்று பேசிக்கிடப்பதா, என்று அமைச்சர் வாதாடுகிறார். அவரே நீதிபதியுமாகி, நாம் கூறுவது தவறு; நடவாததை, நடக்கக் கூடாததை, தீதானதை, தேவையற்றதை, நாம் கேட்பது அடாத செயலாகும் என்று தீர்ப்பும் அளித்துவிடுகிறார்!! தண்டனையும் தருகிறார்!

நான் பொருளற்றது பேசுவேன்; அதனைப் பொன் மொழியாகக் கொள்ள வேண்டும்; இதுதான் உமக்கு நாம் அளிக்கும் தண்டனை என்கிறார்.

தம்பி! கிடைக்கிற "மின்சாரத்தைக்' கிராமப் பகுதிகளிலே, அதிகமாக அளவுக்குப் பயன்படுத்துவதிலே"சென்னை இராஜ்யம்' முன்னணியில் இருக்கிறது. ஆனால், மின்சார உற்பத்தியில் முதலிடமல்ல, சென்னைக்கு. சென்னையில் உற்பத்தி யாவதைவிட, அதிக அளவு மின்சக்தியை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் மாநிலங்களில், மேலும், மின்சக்தியை அதிகப் படுத்திக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன; இங்கு, அந்த வாய்ப்புகள் யாவும் தீர்ந்துபோய்விட்டன; இனி அணு உலைக்கூடம் மூலம்தான், வழி கண்டாகவேண்டும். இங்கு அமைச்சர்கள், அதைக் குறித்துப் பேசத் தவறவில்லை,

வாக்களிக்கத் தவறவில்லை. மேலிடம் சென்று கெஞ்சிடத் தவற வில்லை. ஆனால், தம்பி! உனக்குத்தான் தெரியுமே. அணு உலைக்கூடம், இங்கு இல்லை - எது மிக அவசியமோ, அங்கு அது இல்லை; பம்பாய் பகுதியில் அமைக்கத் தீர்மானித்து விட்டார்கள்! நமது அமைச்சர்கள், என்ன செய்கிறார்கள்? இந்தச் செய்தியை நாட்டுக்கு அறிவிக்கிறார்கள்!! சிறிதளவு ஆயாசமோ, அருவருப்போ, கண்டனமோ தெரிவிக்கக்கூட அவர்களுக்கு அச்சம்! என்ன நேரிட்டுவிடுமோ என்ற கவலை. இப்படி இடுப்பொடிந்த நிலையில் இருந்தால், தென்னகத்தின் உரிமைகளை யார்தான் பறித்துக் கொள்ளத் துணியமாட்டார்கள்.

அசாமும், வங்காளமும், காங்கிரஸ்காரர்கள் அரசோச்சும் மாநிலங்கள்; அங்கு உள்ள முதலமைச்சர்கள், தரத்தில்,

திறத்தில், தகுதியில், இங்கு அரசு நடாத்தும் காங்கிரஸ் தலைவர்களை விடக் குறைவானவர்கள் அல்ல! ஏக இந்தியா - அகில பாரதம்- என்ற மயக்கமொழிகளை அவர்களும் மக்களிடம் பேசி வருபவர்கள்தான். ஆனால், தத்தமது மக்களின் உரிமை பற்றிய பேச்சு எழும்போது, எவ்வளவு துடித்துக் கிளம்புகிறார்கள்.

அசாம் அமைச்சரவையைக் கலைத்துவிடவேண்டும், என்று வங்க முதல் அமைச்சர், பேசுகிறார்.

சுதந்திர தினத்தையே அல்லவா, கொண்டாட முடியாது என்று, வங்க அமைச்சரவை அறிவித்தது. வங்க மாநில கவர்னர்,. சுதந்திர தின விழாவின்போது நடத்தும் விருந்து, வைபவம்கூட அல்லவா, நிறுத்திவிட்டார். டில்லி செங்கோட்டையில், நேரு பண்டிதர்

கொடி ஏற்றுகிறார்; வங்கத்திலோ, எமது மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அசாமில் இழைக்கப்படும் கொடுமை எமது உள்ளத்தைக் கொதிக்கச் செய்திருக்கிறது; இந்நிலையில், கொண்டாட்டம் ஒரு கேடா! செத்து விழுகிறார்கள், வங்க மக்கள்; தடுத்து நிறுத்த வில்லை, டில்லிப் பேரரசு; இந்த இலட்சணத்தில், சுதந்திர விழா வேறு கொண்டாட வேண்டுமா? முடியாது! மனம் இடம் தராது! மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! என்று, வங்கக் காங்கிரசு திட்ட வட்டமாகக் கூறுகிறது. இங்கு உள்ள காங்கிரஸ் தலைவர்கள்? குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும் குணாளர் களாக விளங்குகிறார்கள்!

”ஐயனே! அணு உலைக்கூடம் வேண்டும்,’ என்று கேட்கிறார்கள்.

அணு உலைக்கூடமா? ஆமாம்! அதன் அற்புதசக்தி அபாரம். அதை நாமும் உணர்ந்திருக்கிறோம். உமக்கு அணு உலைக்கூடத்தின்மீது ஆசை ஏற்பட்டிருப்பதைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அந்த அணு உலைக்கூடத்தைக் காண விரும்பினால், பம்பாய் வட்டாரம் சென்று காணவும்; அங்குதான் அணு உலைக்கூடம் அமைக்க ஏற்பாடாகி இருக்கிறது! - என்று டில்லி கூறுகிறது.

மெத்தச் சந்தோஷம்! மிக்க நன்றி - என்று இவர்கள் கூறுகிறார்கள்.

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை சம்பந்தமாக, முன்பு, அசாமுக்கும், டில்லித் துரைத்தனத்துக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தம்பி! இப்போது இங்கே கவர்னராகக் கொலுவிருந்துகொண்டு, அகில பாரதம்பற்றிய அரிய "உபதேசம்'

செய்துகொண்டிருக்கிறாரே, இதே மேதி அவர்கள் அசாமில் முதலமைச்சராக இருந்தார். என்ன நடந்தது என்பதை, இங்குள்ள காங்கிரசாரை, பழைய பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்துகொள்ளச் சொல்லு, தம்பி! அசாம் முழுவதும் முழக்கம் - அகில பாரதம் என்று அல்ல - அசாம் அசாமியருக்கே! என்ற முழக்கம். தேசிய ஒற்றுமை, பாரதப் பண்பாடு என்றெல்லாம் பேசுவது, அசாமை வஞ்சிக்க, புறக்கணிக்க, சுறண்ட என்பது எமக்குப் புரிந்துவிட்டது. வேண்டாம் இந்தப் போலி உறவு! அசாமுக்கு நீதி கிடைத்தாக வேண்டும்; உரிமை பறிபோக விடமாட்டோம். டில்லிப் பேரரசு ஓரவஞ்சனையாக நடந்தால், அசாம். இந்தியாவிலிருந்து பிரிந்து போய்விடும்! என்று பேசி, நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள், ஊர்வலம், வேலை நிறுத்தம், கடை அடைப்பு நடத்தி, டில்லிப்

பேரரசை நடுநடுங்க வைத்தது, அசாம். டில்லிப் பேரரசு, அசாமில், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஏற்படும் என்று உறுதி அளித்த பிறகே, குமுறல் அடங்கிற்று.

இங்கு? இரும்புத் தொழிற்சாலை இப்போதைக்கு இல்லையா? சரி.

உரத் தொழிற்சாலை ஏற்படத் தாமதமாகுமா? சரி.

தூத்துக்குடி, சேது சமுத்திர திட்டம், மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படுவது முடியாத காரியம் என்கிறீர்களா? சரி.

எமது பதவிக்கு ஆபத்து இல்லையல்லவா? அது போதும். ஐயனே! அதுபோதும்!! - என்று கூறிக் காலந்தள்ளி வருகிறார்கள்.

பெரும்பாலான காங்கிரஸ் தலைவர்களுக்கு ஒரு பேருண்மை நன்கு தெரிந்திருக்கிறது; பதவியில் இல்லாவிட்டால்,

நாடு தங்களைத் தேடாது, நாடாது என்ற பேருண்மையைத்தான் குறிப்பிடுகிறேன். காமராஜர் போன்ற ஒருவர் இருவர் தவிர, மற்றவர்கள், பதவியின்றி இருந்த காலத்திலே, யாருக்குத் தெரிந்தவர்களாக இருந்தனர்? நாடு, அவர்களுக்கு அப்போது அளித்த ”மரியாதை’ என்ன? பத்திரிகைகளேகூட, அவர்களின் பேச்சுக்கு என்ன இடம் கொடுத்தன? யாருக்குத் தெரியாது!

பதவி போய்விட்டால், மீண்டும் அந்தப் பழைய நிலைதான் என்ற பேருண்மை தெரிந்திருப்பதால்தான், அவர்கள் நாட்டுக்குக் கிடைக்கவேண்டியது கிடைக்காது போயினும், நமக்குக் கிடைத்துள்ள பதவி பறி போகாதிருந்தால் போதும் என்று எண்ணுகிறார்கள்; அந்தப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதிலே அவ்வளவு கவலையுடன் இருக்கிறார்கள்.

பதவியில் இருந்துகொண்டு, சிரித்தால் முகம் செந்தாமரை என்றும், கடுகடுப்பாக இருந்தால், கெம்பீரம் என்றும் தருக்குமொழி பேசினால் பாமரர் தலைவன் என்றும் பாராட்ட, ஏடுகள் முன்வருகின்றன! எப்படி அந்தச் சுவையை இழக்க மனம் வரும்? எனவேதான், டில்லிப் பேரரசு எத்தனை முறை இல்லை! இல்லை! என்று சொன்னாலும், இவர்கள் சரி! சரி! என்று கூறிவிடுகிறார்கள்; அதுமட்டுமல்ல, டில்லிப் பேரரசுகூடக் கூசக் கூறிடும் வார்த்தைகளை வீசி, இந்நாட்டு மக்களின் மனதைப் புண்படுத்துகிறார்கள்.

இங்கு செய்யவேண்டியதனைத்தையும் செய்து முடித்து விட்டது போலவும், மக்கள் வெற்றிக்களிநடனம் ஆடிக்கிடப்பது போலவும், ஒரு நாலைந்துபேர் மட்டுமே வீண் கூச்சலிட்டுக் கொண்டு இருப்பதுபோலவும் நினைத்துக் கொண்டு, கேலிபேசி எதிர்ப்பை

ஒழித்துவிடலாம் என்று, "கூவத்துக்கு அணை கட்டவா?' என்று கேட்கிறார், குறும்புத்தனத்தை விட்டொழிக்க வேண்டிய பருவத்தை அடைந்து, மேலான பதவியிலும் அமர்ந்திருக்கும் அமைச்சர்.

"இராமநாதபுரம் மாவட்டத்தின் பெரும் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்படி செய்ய, மேல் பெரியாற்றுத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

குந்தாறு, நாராயண காவேரி போன்ற சிற்றாறுகளின் நீரைப் பாசனத்திற்கு உதவும்படி செய்ய வேண்டும்.

சிக்கல், குதங்கல், எராகுடி போன்ற பெரிய வாய்க்கால்களைச் சீராக்க வேண்டும்.

முதுகுளத்தூர் தாலூகாவில் உள்ள குளங்களைச் சீரமைக்க வேண்டும்.''

தம்பி! ஒரு மாவட்டத்தில் மட்டும், செய்யப்பட வேண்டியவை - ஒரே ஒரு துறையில் மட்டும்.

எல்லாம் செய்தாகிவிட்டது, இனிக் கூவத்துக்கு அணை கட்டவேண்டியதுதான் பாக்கி, என்று எக்காளமிடுகிறாரே அமைச்சர், அவருடைய திருப்பார்வையிலே, இராமநாதபுரம் மாவட்டம் படவில்லையா?

முதுகுளத்தூர் தாலூகா காங்கிரஸ் மாநாட்டிலே, நிறை வேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து ஒரு பகுதியைத்தான் மேலே குறிப்பிட்டிருக்கிறேன். காமராஜர் வீரஉரை, விளக்கஉரை, எல்லாம் அளித்தார் - அந்த மாநாட்டில். அவருடைய ஆட்சி செய்யவேண்டியது எவ்வளவு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதுபோலத் தீர்மானங்களைக் காங்கிரஸ் மாநாட்டில் கொண்டுவந்து பேசினர்.

தம்பி! இதை நான் எழுதிகொண்டிருக்கும் நேரத்தில், காஞ்சிபுரம் தொகுதியைச் சேர்ந்த கீழம்பி எனும் சிற்றூரின் மருங்கே வாழ்ந்துவரும் ஆதிதிராவிட மக்கள், பிணம் விழுந்தால் எடுத்துச் செல்வதற்குக்கூடப் பாதை வசதி இல்லாத குறையைப் போக்க, துரைத்தனம், எவ்வளவு மனுக்கள் அனுப்பியும், இதுவரை ஒரு முயற்சியும் எடுத்துக்கொள்ளாததுபற்றி வருத்தத்துடன் வந்து கூறினர்.

இந்த இலட்சணத்தில் காமராஜர், கமுதியில் பேசுகிறார், இப்படிப்பட்ட மாநாடுகள் நடத்துவதால், மக்களுக்கு உள்ள குறைகளை நேரடியாக அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது என்று.

பாகல்மேடு இதற்குத்தான் என்றார்! பாதயாத்திரை இதற்காகவேதான் என்றார்! சூறாவளிச் சுற்றுப்பயணம் இதற்காகத் தான்

என்றார்! இப்போது மாநாடுகள் நடத்துவது இதற்குத்தான் என்கிறார்.

மாத்திரை தீர்ந்ததேயன்றி, மாந்தம் போகவில்லை என்பார்கள், தாய்மார்கள்.

அதுபோல, இவர், முறை பல காட்டுகிறாரேயன்றி, குறைகள் எங்கே களையப்பட்டன?

இதோ, கீழம்பியில், ஆதிதிராவிட மக்கள், பிணம் எடுத்துச் செல்ல, பாதை இல்லை என்கிறார்கள் - இதை, முதலமைச் சரிடம், ஏழைபங்காளன் என்ற விருது சூட்டிக்கொண்டு உலா வரும் காமராஜரிடம், நான் முன்னின்று நடத்திய தண்டலம் மாநாட்டிலே, மனுக்கொடுத்துத் தெரிவித்துக்கொண்டார்கள், பலன் என்ன? பூஜ்யம்!! அதனால் வெட்கப்படவேண்டியது, யார்? காமராஜர் ஆட்சி அல்லவா!!

கீழம்பிப் பகுதி ஆதிதிராவிட மக்களுக்கு, பிணம் எடுத்துச் செல்லப் பாதை இல்லாவிட்டால் என்ன, உங்கள் உரிமையைக் காத்திட, உமக்குப் பெருமை தேடித்தர, கக்கன் இருக்கிறார் கனம் மந்திரியாக என்று போய்ச் சொல்வதா!

அமைச்சர் கேட்கிறார், கூவத்துக்கு அணை கட்டவா? என்று.

பிணம் புதைக்கும் இடம், அதை எடுத்துச் செல்ல "வழி' அமைத்துக் கொடுக்கக்கூட, வக்கற்றுக் கிடக்கும் அமைச்சர், வாய்க்கு வந்தபடி பேசிவிட்டால், வளம் பொங்கி வழிந்துவிடும் என்று எண்ணுகிறாரா? வளமும் பொங்கி வழியாது, திறமும் வளராது. இப்படிப்பட்ட பேச்சினால், நாராச நடையினால் நறுமணம் எங்ஙனம் எழும்! ஓங்கி அடித்தேன், ஒடிந்து விட்டார்கள்! சரியான போடுபோட்டேன், சாய்ந்தார்கள்

கீழே! - என்று வேண்டுமானால், துதிபாடித் திரிபவரிடம் பேசி மகிழலாம். தூய்மை, வாய்மை, செயல்திறமை, என்பவைகளைக் கவனித்து ஆய்வு நடாத்தும் அறிவாளர்கள் இத்தகைய பேச்சினை வீரமென்றோ விளக்கமென்றோ கொள்ளமாட்டார்கள். இது மற்றொரு"கூவம்' என்றுதான் கூறுவர்.

கொங்குநாட்டுக் குடிமகன் வாயிலே இருந்து, இந்தக் "கூவம்' வெளிவரலாமா! நான் பரிதாபப்படுகிறேன்.

தொழில் வளர, செல்வம் கொழிக்க, விலைவாசி கட்டுப் படுத்தப்பட, விஞ்ஞானம் வளர, இன்னபிறபற்றிய தெளிவுரை கூறவேண்டியவரிடமிருந்து, கூவம் கிளம்புவது கண்டால், பரிதாபமாகத்தானே இருக்கும்!

கூவம் ஏன் கெடுநாற்றம் கிளப்புகிறது

என்று அறிந்தோரைக் கேட்டேன்; நல்ல நீரோட்டம் இல்லாததால், சரியான முறையில் துப்புரவு செய்யப்படாததால், அடைப்புகள் ஏற்பட்டுவிட்டதால், நாற்றம் அடிக்கிறது என்றார்கள்.

பேச்சிலே "கூவம்' ஏற்படக் காரணம் என்ன என்பதை, விளக்கவா வேண்டும். சிந்தனை வழி அடைபட்டுப் போயிருப்பது, எல்லாக் கருத்துக்களையும் அறிந்து உண்மையைக் காண வேண்டும் என்று எண்ணம் கொள்ளாமல், ஒரே இடத்தில் தமது சிந்தனையைக் கட்டிப் போட்டு வைத்து, உயிரூட்டம் இல்லாமற் செய்துவிடுவது, அலட்சியம், அகம்பாவம், போன்ற அழுக்குகள் படிந்து படிந்து, அறிவுக்குத் தேவையான தெளிவைப் பாழ்படுத்தி விடுவது ஆகியவைகளே, பேச்சுக்"கூவம்' ஆகிவிடக் காரணம்.

கூவத்துக்கு அணைகட்டச் சொல்லி, அமைச்சருக்கு, ஒருவரும் சொல்லவில்லை; அவர் பேச்சைப் பார்க்கும்போது, "ஐயனே! அமைச்சராக இருக்கும் காலம் வரையிலுமாகிலும், பேச்சிலே,"கூவம்' புகாமல் பார்த்துக் கொள்வீராக!'' என்று கூறத் தோன்றுகிறது.

இவர்தம் ஆட்சியின் சிறப்பினை, உலகுக்கே, எடுத்துக் காட்டச் சிங்களக் கரையிலே ஒதுக்கப்பட்ட 18 தமிழர்களின் பிணங்கள் போதுமே!!

சிங்களவர், என்ன எண்ணி இருப்பர், தமிழரின் பிணங்களைக் கண்டு; தமிழருக்கு இது கதி, இவர்கள் ஆட்சியில்! இது குறித்து வெட்கித் தலைகுனிந்து வேதனைப்பட்டுக் கிடக்க வேண்டியதிருக்க, வீறாப்புக் காட்டுவதும், பேச்சைக் கூவமாக்கு வதுமாக இருக்கிறார்கள்.

இறந்துபட்ட அந்தத் தமிழர்கள், அலைகடலில் தத்தளித்த போது, சுறா கொத்தியபோது, கைகால் சோர்ந்தபோது, கண் பஞ்சடைந்தபோது என்னென்ன எண்ணினரோ, எப்படி எப்படிப் புலம்பினரோ, யாரறிவர்!

கடலில், தமிழன் பிணமாகி மிதக்கிறான் - அது கண்டு சிங்களவன், இதோ "கள்ளத் தோணி' என்று கேலி பேசிச் சிரிக்கிறான், வாழ வைக்கவேண்டிய பொறுப்பினை நிறை வேற்றும் தகுதி இழந்து போனோமே என்று கண்ணீர் வடிக்க வேண்டிய அமைச்சர், பேச்சைக் கூவம் ஆக்கிக் கொள்கிறார்; ஏனோ, பாவம்!

அன்புள்ள,

அண்ணாதுரை,

4-9-1960

19. 'ஞோ ஞா'

மலேய மொழி உணர்வு -

இந்தி வெறி -

அசாமிய மொழி உணர்ச்சி -

தமிழின் தனி இயல்பு.

தம்பி!

"ஞோஞா'' - உச்சரிக்கத் தெரிகிறதா-முடிகிறதா! வேடிக்கையாக இருக்கிறதல்லவா,"ஞோஞா' என்று கூறும்போது. உனக்கு உச்சரிக்கக் கஷ்டமாக இருக்கக் கூடும். எனக்கு, "ஞோஞா' என்று கூற, வசதியாக இருக்கிறது - ஒரு கிழமையாகவே, எனக்கு நாசியில் அடைப்பு, தொண்டையில் சளி, இலேசாகக் காய்ச்சல் - இந்த நிலை"ஞோஞா' என்று கூறக்,

கனகச்சிதமாக இருக்கிறது!!

அதுசரி, அண்ணா! இரு கிழமைகளாக என்னோடு உரையாடாமலிருந்தது, சீன மொழி கற்கத்தானா, என்று கேட்கிறாயா, தம்பி! தவறு, மிகத் தவறு! ஞோஞா', சீன மொழி அல்ல; மலாய் மொழி.

ஆமாம், இனி மலாயா வானொலியில், அடிக்கடி, இந்த "ஞோஞா' எனும் சொல் கூறப்படுவதைக் கேட்கலாம்.

மணமாகாதவளைக் குமாரி அல்லது மிஸ் - என்றுதான் மலாய் வானொலி, கூறிக்கொண்டு வந்தது - குமாரி, தமிழ்ச் சொல் - மிஸ் ஆங்கிலம். மலாய் நாட்டிலே, தமிழோ ஆங்கிலமோதானா, இருக்கவேண்டும்? மலாய் மொழியை ஏன் புறக்கணிக்கவேண்டும்? மலாய் மொழி, புறக்கணிக்கப்பட்டால், பின்னர், மலாய்

நாடு என்ற தனிநிலை பெற்றதனால் பயன் என்ன? தாய்மொழியில் தக்க சொல் கிடைக்கும்போது, எதற்காக வேற்று மொழிகளைச் சுமந்துகொண்டிருக்க வேண்டும்? நாட்டுப் பற்று வளர, வழிகோல வேண்டுமெனின், முதலில் மொழிப் பற்றன்றோ தேவை! அங்ஙனமிருக்க, குமாரி என்றும், மிஸ் என்றும் வானொலியில் அறிவிக்கலாமோ? வானொலி இனி, மணமாகாத பெண்களைக் குறிப்பிடுகையில் "ஞோஞா' என்றுதான் கூறவேண்டும் என்று, மலாய் நாட்டுத் துரைத்தனம் அறிவித்து விட்டது!

துவான் ஹாஜி ஜைனுல் ஆபிதின் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு, மலாய் மொழியிலே காணக்கிடக்கும் சொற்களை ஆய்ந்தெடுத்துப் பழக்கத்துக்குக் கொண்டுவர, வழி அமைத்திருக்கிறது. அதன்

விளைவாகவே இனி ஞோஞா, என்று மலாய் வானொலி ஒலிபரப்ப இருக்கிறது.

பெயரில் என்ன இருக்கிறது!- என்று பேசிடும் பெருந் தன்மையாளர் இங்கு உளர்! அவர்கட்கு "ஸ்ரீ' என்றால் இனிக்கும்;"திரு'- என்றால் தித்திக்காது! "ஆகாஷ்வாணி' என்று கூறி அகமகிழ்வர், வானொலி என்று கூறினால், வாய் வெந்துவிடும் என்று கருதுகின்றனர். தமிழ் மொழியாம்"திரு' இருக்க, ஏனோ வடமொழியில் ஸ்ரீ என்று கூறுகிறீர்கள். . . இனி, "திரு' என்ற அடைமொழியையே, கூறிடுவீர் என்று சென்னை மாநகராட்சி மன்றம் செப்பிற்று; காஞ்சிபுரம் நகராட்சி மன்றமும் கூறிற்று; பல நகராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றிச் சென்னை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளன. அரசோ, எப்படிச் சொன்னால் என்ன?"ஸ்ரீ' இருந்துவிட்டுப்

போகட்டுமே, ஏன் அதை மாற்றவேண்டும்? என்று வாதாடுகிறது. விரிந்த பரந்த மனப் பான்மைக்கு இஃதே சான்று என்று சென்னை அரசு கூறுகிறது - தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக் கொள்கிறது. "மலாயாவிலே தம்பி! துங்கு ரஹிமான், மலாய் மொழி, மலாய் இனம், மலாய் நாடு, எனும் உணர்ச்சி ஏற்பட்டாக வேண்டும், அப்போதுதான், மலாய் தனி அரசு நடாத்துவதிலே பொருளும் உண்டு, பயனும் ஏற்படும், சுவையும் கிடைக்கும் என்று கருதுகிறார் - அந்தக் கருத்துக்கேற்பக் காரியமாற்றுகிறார்.

ஆடவர்களை, இஞ்சே என்றும், பெண்களை சே என்றும், மணமாகாத பெண்களை ஞோஞா என்றும், மணமானவளை புவான் என்றும், மலாயா வானொலி அறிவிக்கும்.

குறுகிய மனப்பான்மை - கோணல் வழி

- மொழி வெறி - என்றெல்லாம் இங்கு, தூய தமிழ் வேண்டும் என்று உரைப்போரை, ஊராள்வோர் ஏசுகின்றனர். மலாயாவில், துரைத் தனமே மலாய் மொழிதான் நாட்டு மொழி, பிறமொழிக் கலப்பும் பிற இனத் தொடர்பும், பிற பண்பாடு குழைந்து விடுவதும், நன்றன்று, என்று துணிந்து கூறுகிறது; கருத்து வெற்றிபெறக் காரியமாற்றவும் செய்கிறது.

இத்தனைக்கும், தம்பி! மலாயாவே, பல்வேறு காலங்களிலே பல்வேறு நாட்டு மக்கள் சென்று தங்கி, ஒரு "கலப்படம்' ஏற்பட்டுப் போயிருக்கும் நாடு. அங்கேகூட, ஓர் இனம், ஓர் மொழி, உண்டு என்ற உணர்வும். அதனை அரசோச்சச் செய்திடல் வேண்டும் என்ற ஆர்வமும், எழக் காண்கிறோம். இங்கோ, பிறமொழிகளைச் சுமந்துகொண்டு திரிந்திடுவோரை

யன்றோ காண்கிறோம். அந்தக் கொடுமை போதாதென்று, அப்பேரறிவாளர், தமிழின் தூய்மைக்காகக் பாடுபடுவோரை எள்ளி நகையாடவும் செய்கின்றனர். மேலிடம் உள்ளோர், தம்மைக் குட்டி உட்கார வைப்பரோ, அல்லது பதவியினின்றும் உருட்டிக் கீழே தள்ளிவிடுவரோ, என்ற அச்சம், குடி கொண்டவர்கள், ஆளவந்தார்களாகியுள்ளனர்.

"இந்தி மொழியில் இருபெரும் காப்பியங்கள் உள்ளன - ஒன்று துளசிதாசின் இராமாயணம். . .'' என்று தம்பி! நான் இம்முறை சட்டமன்றத்தில் பேசியபோது, பலர். இரண்டு காவியம் என்றுரைக்கிறானே, துளசிதாஸ் இராமாயணம் ஒன்றுதானே காவியம், மற்றொன்று எது? என்று எண்ணிக் கிடந்தனர்; நான் என் பேச்சைத் தொடர்ந்து,

மற்றோர் காவியம் அகில இந்திய

இரயில்வே கைட் - என்று கூறினேன். சிலரால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. அமைச்சரும் மகிழ்ச்சி பொங்கி வழிந்திடும் நிலையில்தான் இருந்தார் - எனினும் கடமை அவரைக் குடைந்தது. எழுந்தார், குறுக்கிட்டார், "நமது மொழிபற்றி எவ்வளவு பெருமையாக வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம். ஆனால், பிற மொழியை இப்படி இகழத் தேவை இல்லை' என்றுரைத்தார். எனக்கு அவருடைய நிலை புரிந்தது. அதனையும் அங்கேயே கூறினேன்.

இந்தி மொழியைப் பற்றி ஒருவன் ஏளனம் பேசக் கேட்டும், சும்மாவா இருந்தீர்? என்று மேலிடத்தார் கேட்டால், "இல்லையே, உடனே எழுந்து, அதனைத் தடுத்து நிறுத்தினேனே!' என்று மேலிடத்தாருக்குச் சொல்லிக் கொள்ளத்தான் இப்போது அமைச்சர் குறுக்கிட்டுப் பேசினார் என்று நான் கூறினேன்

- அமைச்சர் இருக்கை நாடினார்! தம்பி! நமது அமைச்சர்கள், தமிழர், தமிழகம், தமிழ்மொழி, தமிழர் நெறி, என்று கூறவும் அஞ்சுகின்றனர் - அடிமைத்தனம் அவர்களைத் தடித்த தோலர்களாக்கி விட்டிருக்கிறது - பதவிப்பற்று, அவர்களைப் பல்லிளிக்க வைக்கிறது - தமிழகத்தைச் சென்னை என்றே செப்புகின்றனர் - பாரதி விழாவின் போதோ, செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே - என்று பாடிவிடுகிறார்கள். மலாயாவிலே மேற்கொள்ளப்பட்டு வரும், முயற்சியினைக் கண்டேனும், இவர் தம் கருத்துத் தெளியுமா? துணிவு ஏற்படுமா? என்று கேட்கத் தோன்றுகிறது.

போகட்டும், தம்பி! கறந்த பால் காம்பேறாது, கருத்தழிந் தோர் துணிவினைப் பெறார் - என்று எண்ணிக் கொள்வோம்.

மலாய் நாடு தேடித் தேடிப் பார்த்து, கல்லி எடுத்து, குமாரிக்குப் பதில் ஞோஞா என்ற சொல்லினை வானொலி மூலம் ஒலிபரப்புவது கேட்கும்போது, நாம், தமிழ் மொழிக்கு ஏற்றம் கிடைத்திட வேண்டும், ஒரு துளியும் தேவையற்ற நிலையில், தமிழில் பிற மொழிச் சொற்களைக் கொண்டு வந்து கலக்கி விடுவது தீது, எனவே அஃது நீக்கப்பட்டாக வேண்டும், என்று கொண்டுள்ள கொள்கை அப்பழுக்கற்றது, என்பது உறுதிப் படுகிறதல்லவா? ஆளத் தெரியாதார், அந்த வாய்ப்புக் கிடைக்கப் பெறாதார், வீணான பகைமையுணர்ச்சியை மூட்டி விடவே, "திரு' என்றும்,"வானொலி' என்றும் செப்பித் திரிகின்றனர் என்று கூவிக் கிடந்திடும், குணாளர்கள் தலையிலே ஓங்கிக் குட்டுவது போலன்றோ, மலாய் துரைத்தனம் ஞோஞா கூறுகிறது!!

மிகக் கோடியிலிருக்கிற க்யூபா நாட்டிலிருந்து அண்டையிலே, உள்ள மலாயா வரையிலே, தாய்மொழி, தாயகம், தனி அரசு எனும் உணர்ச்சி கொழுந்துவிட்டு எரிந்திடக் காண்கிறோம்; காண்பதனால் நாம், கொண்டுள்ள கருத்து, வலிவுடையது என்பதுமட்டுமல்ல, உரிமைக்குப் போரிடும் அறிவாற்றல் கொண்டோர் எவரும் போற்றத்தக்கது என்பது, உறுதிப்படுகிறது.

மொழியில் என்ன இருக்கிறது என்று பேசுவோர், தமது மொழி மூலம் ஆதிக்கத்துக்காக வழி வகுத்துக் கொண்டுள்ள சூது வெளிப்பட்டுவிடும் என்ற அச்சத்தினாலேயே, அவ்விதம் பேசுகின்றனர்.

அசாமில் அசாம் மொழி ஆட்சிமொழி ஆவதை, அந்த மாநிலத்திலே பெரும் அளவு குடி ஏறி உள்ளவர்கள், பல்வேறு துறைகளிலே இடம் பிடித்துக் கொண்டு கொட்டமடிப்போர்

எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தினர். குத்தும் வெட்டும், கொலையும் கொள்ளையும், சூறையாடலும் கற்பழித்தலும் ஆகிய கொடுமைகள் நடைபெற்றன - கண்டனங்கள், அறிவுரைகள், கிளம்பின; குழுக்கள் அமைக்கப்பட்டன; ஆய்வுரைகள் வெளி யிடப்பட்டன; எனினும் புகை கிளம்பியபடியே இருக்கிறது.

மொழி பற்றியா இப்படி ஒரு அமளி! ஏனோ இந்த வெறி! எதற்கோ இந்த அறிவீனம்! - என்று பெருந்தலைவர்கள், நெடுந்தொலைவிலே இருந்துகொண்டு பேசுகின்றனர். ஆனால், அமளியில் சிக்கினோரோ, அடிமைகளாக, நடைப் பிணங்களாக உழலுவதைவிட, ஒரு கணம் உரிமை முழக்கம் செய்து விட்டேனும், மடிந்துபடுவோம். எற்றுக்கு இந்தப் பிச்சைப் பிழைப்பு! நாம் பிறந்த

நாட்டிலேயே நாம் மற்றவர்களை நத்திப் பிழைத்துக்கிடக்கத்தான் வேண்டுமா! - நமது தொழிலிடங்களில் வேற்றார் ஆதிக்கம் செலுத்துகின்றனர், நாமோ மாற்றானால் சிறை பிடிக்கப்பட்டவன் கொத்தடிமையாகிக் கிடப்பதுபோலக் கூலிகளாகிக் குமுறிக் கிடக்கிறோம். மனதை மயக்கும் இயற்கை வளம், நமக்கு வயிறாரச் சோறளிக்கவும் இல்லை - வேற்றாரோ அதனைச் சுரண்டிக் கொழுக்கிறார்கள்! ஏன் என்று கேட்கவோ, பெரியவர்கள் கூசுகின்றனர் - கொடுமைகளால் அவர்கள் தாக்கப்படாததால். நாமும், அவர்போல் இருந்துவிட்டால், நமது கதி யாது ஆகும்? நாம் வாழ வழி வகுக்காத, நாடு ஒன்று நமக்கென்று இருப்பதைக் காட்டிலும், நாம் நாடற்றவர் ஆகிவிடுவதும் நன்று - இல்லையேல் உயிரற்றவர் ஆவது மிக நன்று! - என்று எண்ணி எண்ணிக்

குமுறிக் கிடந்தனர். மக்கள் - வெடி மருந்துக் கிடங்கிலே சிறுபொறி வீழ்ந்ததுபோல, மொழி பற்றிய தகராறு கிளம்பிற்று, நெடுங்காலமாக மூண்டுகிடந்த பகை பீறிட்டுக் கிளம்பிற்று - பாரத நாடு - இந்திய மக்கள் - எனும் சொற்கள் பொருளற்றன, சுவையற்றன, வலிவற்றன என்பது விளங்கிற்று - அசாம் அசாமியருக்கே என்ற முழக்கம், நாட்டையே கிடுகிடுக்க வைத்தது; அசாம் அரசு, வழி தவறிச் சென்றதென வங்க அரசும், வங்க அரசு வரம்பு மீறி நடக்கிறது என்று அசாம் அரசும் வசைபாடிக்கொண்டது. இரு அரசுகளும், டில்லிப் பேரரசு கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்று கண்டனம் தெரிவித்தன. எவர் உண்மையில் குற்றம் புரிந்தனர், எவர் உள்ளபடி அத்துமீறிய செயல்புரிந்தனர் என்பது, தம்பி! கண்டுபிடிக்கப்படவேண்டும்

என்ற நோக்கத்துடன், எந்தக் குழு இனிப் பணியாற்றினாலும் கசப்பு வளருமே தவிரக், குறையாது.

வங்கத்தவரும் அசாமியரும்-இரு சாராருமே-தவறுகளை உணர்ந்துவிட்டனர் - ஏற்பட்டுவிட்ட தவறுகளுக்காக வருந்து கின்றனர். - வெட்கப்படுகின்றனர் - இனி ஒரு தாய் வயிற்று மக்கள்போல வாழ உறுதி கொண்டுவிட்டனர், என்று அறிவிக்கப்படுகிறது.

இதிலே, தம்பி! ஆபத்தை எந்த நேரத்திலும் காக்கக் கூடிய, சொற்றொடர்கள் இருப்பதனைக் கவனித்தாயா - இருசாராரும்! மிக ஆபத்தான சொற்றொடர்!! - ஒரு தாய் வயிற்று மக்கள் போல!! - சுவை பூசப்பட்டிருக்கிறது, எனினும் ஆபத்துத் தொக்கி நிற்கிறதல்லவா, "போல'' என்ற சொல்லில்!!

ஒரு தாய் வயிற்று மக்களே கூட ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதுண்டு பகையுணர்ச்சி ஏற்பட்டு - வெட்டி வீழ்த்திக் கொள்வதுண்டு வெறி முற்றி - எனினும் இறுதியில் ஒரு தாய் வயிற்று மக்கள் என்ற உண்மை வெற்றிபெறும். ஆனால் ஒரு தாய் வயிற்று மக்கள்போல என்று மட்டும்தானே பேச முடிகிறது, அசாமியருக்கும் வங்காளிகளுக்கும் இடையே மூண்டுவிட்ட பகையைப்போக்கும் நோக்குடன் பாகுமொழி பேசிப், பண்பினைப் போதித்துச், சமரசம் காண விழைவோரால்!

ஆமாம், இனி நாம் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளக் கூடாது - நாமென்ன நற்பண்புகளறியாக் காட்டுக் குணமுடை யோரா! - வெள்ளையருக்கும் கருப்பருக்கும் இடையே உள்ளது போன்ற ”நிறபேதம்’ நம்மிடம் இல்லையே! மும்மூர்த்திகளை

இருவரும் வழிபடுகிறோம் - புனிதக் கங்கையிலே பாபம் போக்கிக் கொள்ள இருவருமே மூழ்கி மகிழ்கிறோம் - இமயத்தின் பனிப்படலம் காண இருவரின் நெஞ்சிலேயும் ஒரு எழுச்சி ஏற்படத்தானே செய்கிறது - அன்னை பாரதமாதாவின் அருமருந்தன்ன மக்களன்றோ இருவரும் - என்றெல்லாம், பேசிடும்போதும், நேசம் காட்டி மகிழ்ந்திடும்போதும் இரு சாராருமே, வேறோர் கருத்தினை உள்ளூரப் பற்றிக் கொண்டுள்ளனர் - தம்பி! அவர்கள் பற்றிக் கொண்டுள்ளனர் என்று கூறுவதைவிட, அந்தக் கருத்து அவர்களைப் பற்றிக் கொண்டிருக்கிறது என்று கூறுவதே முற்றிலும் பொருத்தமான தாகும். அந்த உள் உணர்ச்சி, மெள்ள, மெள்ள, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் தலை தூக்கும் - மறுப்பு எழும்போது வேகமாக வெளிப்படும் -

எதிர்ப்புக் காட்டப்படும்போது கொதித்து எழும்! அந்த உணர்ச்சி, ஆனால் என்ற முன்னுரை யுடன் தொடங்கி, ஆகவே என்ற சொல்லினை நாடிப் பெறும், பிறகோ, குத்தும் வெட்டும், கொலையும் பிறவும் தலைவிரித்தாடும், நட்பு நாசமாகும், பகை கொக்கரிக்கும்.

இதோ ஒரு அசாமியன், தம்பி! நடைபெற்ற நாச காரியத்துக்காக இன்று வெட்கப்படுகிறான் - இனி வங்க மக்களுடன் ஒருதாய் வயிற்று மக்கள்போல வாழச் சம்மதம் தெரிவிக்கிறான் - அவனே எந்தக் குடிலுக்குத் தீ மூட்டி விட்டானோ, அதே குடிலைத் திரும்பக் கட்டித்தர முன் வருகிறான் - அவனைப் பாராட்டிவிட்டு, "ஏனப்பா, இத்துணை நல்லவனாக இருக்கிறாயே! வங்காளியானால் என்ன, அசாமியன் ஆனால் என்ன, அனைவரும் பாரத மக்களன்றோ என்று கீதம் பாடுகிறாயே,

இப்படிப்பட்ட பண்பாளனாகிய நீயா, வெறிச் செயலில் ஈடுபட்டாய், வங்காள மாதர்களைக் கூடத் துன்புறுத்த மட்டுமல்ல, மானபங்கப்படுத்தக் கூடத் துணிந்தனை! ஏன் ஏற்பட்டது, ஈனத்தனமான எண்ணம்! எவர் மூட்டிவிட்டனர், உன் இதயத்திலே, அத்தகைய இழிகுணத்தை!'' - என்று கேட்டிடின், அவன் முதலில்,"வீணாக ஏன் பழைய நிகழ்ச்சியைக் கிளறுகிறீர்கள்? வேண்டாம்! புதுக்காலம் பிறந்துவிட்டது! பொற்காலமாக்குவோம் இதனை! பகை மடிந்தது! பண்பு மலர்ந்தது! பாரதம் வென்றது!!'' என்று கூறுவான், தம்பி! உண்மையினைக் காணவேண்டி, நீ அவனை மேலும் உசாவினால், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மெல்லிய குரலிலே பேசுவான், "பகை கூடாது, நண்பனே! நிச்சயம் கூடாது! மனிதத் தன்மை புனிதமானது, மறந்தேனில்லை. ஆனால். . . இதைக்

கேள் இது அசாம்! என் தாயகம்! இங்கு எனக்கு வாழ வழி இல்லை!! கூவேலை செய்தாலன்றி!! அதோ பார் அலுவலகங்களை - வட்டிக் கடைகளில் வங்காளியர்! தபால் நிலையங்களில் வங்காளியர்! வணிகக் கோட்டங்களில் வங்காளியர்! புகை வண்டி நிலையங்களிலே வங்காளியர்! எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் வங்காளியர்! எங்கும் அவர்கள்! எதிலும் அவர்கள்! ஏற்றமெல்லாம் அவர்கட்கு! எமக்கு உள்ளது என்ன? கல் உடைக்க நாங்கள், கனவானாக அவர்கள்! மண் சுமக்க அசாமியர், மண்டிக் கடை நடாத்த வங்காளியர்! ஏடு நடாத்த அவர்கள், எடுத்துச் சென்று கூவிக் கூவி விற்க நாங்கள்! இதற்கு, எமக்கு அசாமியர் என்ற பெயர் எதற்கு! இந்த நாட்டுக்கு அசாம் என்ற தனிப்பெயர் இருப்பானேன்! வங்கத்தவர்,

இங்கு பையப்பையப் புகுந்து இத்துணை ஆதிக்கம் பெற்றபிறகு, வங்கத்தின் கொல்லையாக்கிக் கொள்வதுதானே, ஏன் அசாம் ஓர் தனி மாநிலம் என்று கூறிட வேண்டும்! அசாமியன் வாழ வழி இல்லை, அசாம் என்ற பெயர் எதற்கு!! - என்று கூறிக் குமுறுகிறான்! கண்களிலே வெறி உணர்ச்சி காணப்படுகிறது! கவனித்தாயா!!

இந்த உள் உணர்ச்சியை ஓராயிரம் தலைவர்கள், உன்னதமான உபதேசம் அளித்தும் நீக்கிட இயலவில்லை - நீக்கிட இயலாது! ஒன்று, அவன் தன் உரிமை எவராலும் பறிக்கப்படவில்லை என்று உணரவேண்டும் - அல்லது, அவனுக்கு உரிமை உணர்ச்சி அறவே அற்றுப் போய்விட வேண்டும் - அந்த அளவு அவன் தடித்த தோலனாகி விடவேண்டும். தம்பி பத்துப்பேர் பதினைந்துபேர், மாதம்

ஆயிரம், இரண்டாயிரம் கைக்கூலி பெற்றுக் கொண்டு, "தடித்த தோலராகி' - அது வெளியே தெரிய ஒட்டாதபடி, பதவிப் பட்டாடை அணிந்துகொண்டு, மந்திரிகளாகி விடலாம்! ஒரு இன மக்கட்கூட்டம் முழுவதுமா, அங்ஙனம் நிலைகெட்டுப் போய்விட முடியும்! முடியாதே! அங்ஙனமாவது இயலாத தொன்று என்பதனால்தான், வீரம், தீரம், தியாகம் எனும் எழுச்சியூட்டும் இயல்புகளை உள்ளடக்கிய விடுதலை போர்க் காதைகளாம் வீரக் காப்பியங்கள், உலக மன்றத்திலே, என்றோ ஓர் நாளல்ல, புதிது புதிதாக இயற்றப்பட்டு வருகின்றன! குமுறிக் கிடக்கும் மக்கள், கைகூப்பி நிற்கும் மக்கள், கண் கசக்கி நிற்கும் கதியற்ற மக்கள், ஓர் நாள் கொதித்தெழுந்து கிளம்புகின்றனர். அச்சம் அழிந்துபடுகிறது, ஆண்மை தலைமை ஏற்கிறது. ஆணவக் கோட்டைகள் தூள் தூளாகின்றன! விடுதலை

முரசொலி எங்கும் எழுகின்றது!! - என் நாடு! என் அரசு! என் மொழி! என் இனம்!! - என்று எக்காளம் எழுகிறது. மனித குலத்தின் ஓர் பகுதியினர், தலைகளை நொறுக்கி எறிந்துவிட்டுத், தன்னாட்சி பெற்று, தலை நிமிர்ந்து நடக்கின்றனர்.

காலில் தட்டுப்படும் வைரத்தைக், கற்களிலே ஒரு வகை என்று எண்ணிக் கொள்கிறான், கருத்தறியாதான், கருப்பன்! யானைத் தந்தத்தை அடுப்பிலிடுகிறான், அதன் மதிப்பறியாமல்? கூவுகிறான், அது இசையாம்! கூத்தடிக்கிறான், அது நடனமாம்! சொல்லுகிறான், அது வேள்வியாம்! செச்சே! ஆண்டவன் படைப்பிலே, இப்படி ஒரு காட்டுமிராண்டிக் கூட்டமா!! - என்று வெள்ளையர் கேலி பேசினரே, தம்பி! கருப்பர் எனும் நீக்ரோ இனமக்களை. காண்கிறாயல்லவா, இன்று அவர்தம்,

வீரச் செயல்களை, விடுதலைப் போரினை, வெற்றிக் காதையினை!

காமரூன்

டோகோ

சோமாலியா

காங்கோ

தாஹோமி

நைஜர்

மேல்வோல்டா

ஐவரிகோஸ்ட்

சாட்

கேபன்

மத்திய ஆப்பிரிக்கா

சைப்ரஸ்

தம்பி! 14 புதிய நாடுகள் - விடுதலை பெற்ற வீரபுரிகள் - தனிக் கொடியினைப் பறக்கவிடும் குடி அரசுகள், இதோ இப்போது ஐக்கிய நாடுகள் மன்றத்திலே, உறுப்பினர்களாகிவிட்டன. சோவியத் தலைவர் குருசேவ், கைதட்டி வரவேற்றாராம். இது அறிவிக்கப்பட்ட போது. காலம் இப்படியும் ஆகிவிட்டதே என்றெண்ணிச் சில ஆதிக்க அரசுகள். கைபிசைந்து கொள்ளக் கூடும் - எனினும் படையும் தடையும், வேட்டின் வேதனையும், கொலையும் கொடுமையும், விடுதலை உணர்ச்சியை, உரிமை உணர்ச்சியை அழித்திட முடியவில்லை, இறுதி வெற்றி எழுச்சி பெற்றோருக்கே, என்பதையன்றோ, இந்தக் குடி அரசுகள், எடுத்துக் காட்டுகின்றன!

”எம்மைப் பாரீர்! அடிமைத்தளை பூண்டு அழுது கிடந்திடும் மக்காள்! பாரீர்

எம்மை! எமது கரங்களிலும் தலைகள் பூட்டப்பட்டிருந்தன - தசையை அழுத்தும் அளவுக்கு! சாட்டையடி பட்டோம்! பசியாலும் தாக்குண்டோம்! பல்லிளிக்காவிட்டால், பாதம் பிடித்திட மறுத்தால் பயங்கர மான கொடுமைகள் ஏற்படும்! கரும்பு விளைவிப்போம். சுவை காணமாட்டோம்! வெட்டி எடுப்போம் தங்கம், அவர்கள் முன் கொட்டிக் காட்டி மகிழ்விக்க! உழுது அழுவோம், அவர்கள் அறுவடை கண்டு மகிழ்வர்! அவர்கள் மருத்துவமனை அமைப்பர், நாங்கள் நோயாளிகளை அனுப்பி வைப்போம். அவர்கள் குதிரை வளர்ப்பர், நாய்கள் மேய்ப்போம், தேய்ப்போம்! அவர்களின் நாய்கள், எமது குழந்தைகளைக் கடித்துவிடும், நாங்கள் எமது குழந்தைகளை அடித்து அடக்க மாக்கவேண்டும்! அவர்கள் படித்து மகிழ்வர், நாங்கள் வாய் பிளந்து நிற்போம்! செடியும்

கொடியும், கல்லும் மண்ணும், எலும்பும் எரிபொருளும், இவைதாமே, உமக்குத் தெய்வங்கள், என்று கேட்டுக் கேசெய்வர், நாங்கள் ஆம்! ஆம்! என்று தலை அசைத்து நிற்போம். ஆடு! என்பர், ஆடுவோம்!! அவள்? என்று கேட்பர், மகளாயினும் மாதாவாயினும், ஆடிக்காட்டு என்போம், ஆடுவர், வெள்ளையர் மனம் மகிழ! ஆடை ஏன்? என்பர், களைந்தெறிவர் எமது பெண்டிர் - இல்லையேல் கசையடி!

அடிமைகளே! சொல்லொணாக் கொடுமைகளைத் தாங்கித் தவித்தோம்! கண்ணீர் வடித்தோம்! பிறகோ கண்கள் வற்றி விட்டன! உடலெங்கும் வடுக்கள் - வடுக்கள் உலர்ந்தன - உள்ளம் உலர்ந்துவிட்டது - அச்சமேகூட அழிந்துவிட்டது! சாவுக்கஞ்சா நிலை பெற்றோம், வாழ்வுக்கும் சாவுக்கும் வேறுபாடு காணமுடியாத

நிலையில் தள்ளப்பட்டதால், விம்முவதை விட்டொழித்தோம், விழிகளிலே நெருப்புக் கிளம்பிடலாயிற்று! விடுதலை ஆர்வம் எனும் தீ நெஞ்சில் புகுந்தது. கண் விழி வெளிவரலாயிற்று. பார்வையிலே ஒரு கடுமை தெரிகிறது! நடையிலே ஓர் ஆணவம் காணப்படுகிறது! பயலை அடித்தால் அழமாட்டேனென்கிறான்! என்ன, இதன் பொருள்? என்று ஆதிக்கக்காரர்கள் திகைத்தனர்.

தலையை நொறுக்கிடத் துணியாதிருப்போரே! அவர்தம் திகைப்புக் கண்டோம், இடி இடி எனச் சிரித்தோம்! அடிமை சிரித்தால், பொருள் என்ன தெரியுமா!! கொடுமையை அலட்சிய மாகத் தாங்கிக்கொண்டு, அடிமை, ஆதிக்கக்காரன் காது செவிடுபடச் சிரித்தால், பொருள் என்ன தெரியுமா? அடிமை, அடிமை அல்ல என்பது

பொருள்! அவனை அடக்கி வைத்திடும் ஆற்றலை, ஆதிக்கக்காரன் இழந்துவிட்டான் என்று பொருள்!

எனவே, விடுதலை பெற்ற எமக்கு வாழ்த்தளித்து மகிழ்வோரே! எங்ஙனம் பெற்றோம் விடுதலை என்று அறிய விரும்பிடின், கூறுவோம் கேண்மின், கொடுமைகளைத் தாங்கிக் கொண்டோம், குமுறிக் கிடப்பதை விட்டொழித்தோம், சிரித்தோம், ஆதிக்கக்காரன் எமைத் தாக்கியதால் இரத்தம் சொட்டக்கண்டு! விடுதலை பெற, ஒரே வழிதான் உண்டு! வீரத் தியாகம். அதற்கு நீவிர் தயாராகிவிட்டீர்களாயின், தலைகள் அறுபடும், தருக்கரின் அரசு அழிந்துபடும், தன்னரசு பெறுவீர்.

பல்கலைக் கழகங்களிலே உள்ளோர், இது குறித்து எண்ணற்ற ஏடுகளை

வைத்துக்கொண்டுள்ளனராம். இனிதான், நாங்கள் அவைகளைப் படிக்கக்கூட வாய்ப்புக் கிடைக்கும். எமக்குப் பாடம் புகட்டப் பல்கலைக் கழகம் இல்லை. மகனை இழந்த தாயின் கண்ணீர், எமக்குப் பாடம் புகட்டிற்று! தாள்ளாடி நடக்கவும் வலிவற்ற கிழவனைப் பிடித்திழுத்துக் சென்றனர் சிறையில் தள்ள, அவன் பார்வையிலே, காணப்பட்ட திகில் திகைப்பு, எமக்குப் பாடம் புகட்டிற்று! எரிந்த குடிசைகள், இடிந்த வீடுகள், இழுத்துச் செல்லப்பட்ட ஆடு மாடுகள், உடைத்தெறியப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்கள் - இவையே எமக்குப் பேராசிரியர்கள்! கை இழந்தோர், கால் இழந்தோர், எமக்குத் தன்மானம் இழந்திடாதிருக்கும், வழி காட்டினர்! கண் இழந்தோன், எமக்கு விடுதலைப் பாதையைத் தெரிந்திடச் செய்தான்.

”மகளே! மகளே! ஏன் இப்படி வெறிக்க

வெறிக்கப் பார்க்கிறாய்!?' என்று கேட்டிடும் தந்தையின் முகத்தைக் காணவும் முடியாமல், தலையைக் கவிழ்த்துக்கொண்ட, தையலின் கன்னத்தில் புரண்டோடிய கண்ணீர் கண்டோம், விடுதலைப் போருக்கான வீரம் பெற்றோம்!!

அடிமைத்தனம், துவக்கத்திலே, உணர்ச்சியற்ற நிலையை உண்டாக்கி வைக்கும்.

அல்லற்படும்போது, அழத்தோன்றும்.

அழமட்டும் தெரியும்போது, நெஞ்சிலே பீதி குடிபுகும்.

கொடுமை வளர வளரப் பீதி அழிந்துபடும், கண்ணீர் வறண்டுவிடும், நெஞ்சிலே நெருப்பு மூண்டுவிடும்!

அந்தக் கட்டம் தோன்றிவிட்டால், ஆதிக்கக்காரன், திகைப்படைகிறான், கடைசி

முயற்சி செய்து பார்க்கிறான்!

அவன் கடைசி முயற்சியில் ஈடுபடும்போது, கொடுமை பல செய்து செய்து, அவன் கரங்கள் வலுவிழந்து கிடக்கின்றன; அடிமைப்பட்டுக் கிடப்பவனோ, கொடுமை பலவற்றைத் தாங்கித் தாங்கி, உரம் ஏறி நிற்கிறான்!

கடைசி முயற்சி வலுவற்றுப் போகிறது!

அடிமை சிரிக்கிறான்! ஆதிக்கக்காரன், திணறுகிறான்! விடுதலை வெற்றி பெறுகிறது! இதுதான் நாங்கள் பெற்ற பாடம்! விடுதலைபெற விழைவோருக்கு, இஃதன்றி வேறோர் வழிகாட்ட, யாமறியோம் - என்றன்றோ, தம்பி! இதுபோது, விடுதலைப் பெற்று வீரக்கோட்டம் சென்று இடம்பெறும், நாடுகள் நமக்குக் கூறிடும்.

தம்பி! விடுதலை பெற்ற நாடுகள், பேசிடக் கேட்டால் வீரம் கொப்புளிக்கத்தான் செய்யும்,

என்கிறாய் - உன் புன்னகை அதனைத்தான் செப்புகிறது. ஆயின், மற்றொன்றைக் கவனித்தனையோ? வீரம் கொப்புளிக்கச் செய்யும் உரையாற்றிடத்தக்க நிலைபெற்ற இந்த நாடுகள், இதோ அகம் காணீர், புறம் பாரீர்! தொல்காப்பியம் காண்மின்! திருக்குறளைப் பெறுமின்! என்று கூறிட இயலுமோ, எனின், இல்லை என்றுதான் கூறவேண்டும்.

எனினும், நமது தாயகம், வீரக்கோட்டமாகத் திகழ்ந்தது! இன்று? எண்ணிடவே, வெட்கமாகவன்றோ இருக்கிறது!!

எத்துணை எத்துணை வீரக்காதைகள், உள்ளன நந்தமிழகத்தின் தனிச்சிறப்பினை விளக்கிட!

எத்தனை எத்தனை மாற்றார்களை, மண்டியிடச் செய்தனர் நம் முன்னோர்!!

எங்கெங்கு படை எடுத்துச் சென்றனர்,

பகை முடித்து வென்றனர்!!

இன்றும், அந்த வீரக் காப்பியங்களைப் படிக்கப் படிக்க, இனித்திடக் காண்கிறோம்! பொருள் விளங்கிட, பொறி பறக்கும் கண்ணினராகி நிற்கிறோம்!

தம்பி! ஓசை கேட்டாலே, விசை ஒடிந்த தேகத்திலும் வீரம் வந்து சேரும்! கூறட்டுமா. . . .

விடவிகள் மொடுமொடு விசைபட

முறிபட எறிபட நெறிபடவே!

அடவிகள் பொடிபட, அருவிகள்

அனல்பட, அருவரை

துகள்படவே.

ஓசை கேட்கும்போதே, பெரும் படையொன்று எதிர்ப்பட்ட தனைத்தையும் அழித்தொழித்தபடி, பாய்ந்து செல்வது, தெரிகிறதல்லவா?

மொடு மொடுவென்று, மரங்கள் முறிந்து விழுகின்றன, படைகள் பாய்ந்து வருவதால், அடவிகள் பொடிபடுகின்றன; மலைகள் தூளாகின்றன, அருவிகள் நெருப்பாறாகின்றன.

இது தம்பி! கலிங்கப்படை! தமிழ் மறவரின் படையினைத் தடுத்து நிறுத்தப் பாய்ந்து வருகிறது. ஆனால் தமிழரின் பெரும் படையோ, தமிழகத்தைக் கடந்து கலிங்கம் செல்கிறது. படையுடன் செல்வோமா - பாடல்

படித்தேனும்!

பாலாறு, குசைத்தலை, பொன் முகரிப்

பழஆறு, படர்ந்து எழு கொல்லி எனும்

நாலாறும் அகன்று ஒரு பெண்ணை எனும்

நதி ஆறு கடந்து நடந்து, உடனே

வயலாறு புகுந்து, மணிப்புனல் வாய்

மண்ணாறு, வளம் கெழு குன்றி

எனும்

பெயலாறு, பரந்து நிறைந்து வரும்

பேர் ஆறும் இழிந்து, அது பிற்படவே

கோதாவரி நதி, மேலாறொடு குளிர்

பம்பா நதியொடு சந்தப் பேர்

ஓதாவரு நதி ஒரு கோதுமையுடன்

ஒலி நீர் மலிதுறை பிற காக.

இப்படி, தம்பி! தமிழர் பெரும்படை, ஆறு

பல கடந்து, அடவி பல நடந்து, கலிங்கப் படையைத் தாக்குகிறது. சோளத் தட்டுகள் போன்றாருடன் அல்ல, போர்! மாற்றார், வீரமே புலியுடன் போரிடுவது போல! மலையுடன் மலை மோதுதல் போல!! அந்தப் போரிலே.

குருதியின் நதிவெளி பரக்கவே

குடை இனம் நுரை என மிதக்கவே

கரி துணிபடும் உடல் அடுக்கியே

கரை என இருபுடை கிடக்கவே

இரத்த வெள்ளம் - ஆறு போல! வீழ்ந்த வெண் குடைகள் மிதக்கின்றன, நுரைபோல! ஆறு கரை புரண்டோடாது

தடுத்தது என்னையோவெனின், வெட்டுண்ட யானைகளின் உடலங்கள் கரைபோல அமைந்துவிட்டன - அதனால்!!

இத்தகைய பெரும்போரில், தமிழர் வெற்றியினைப் பெற்றனர் - கலிங்கத்துப் பரணி, அந்தச் சிறப்பினைச் செப்புகிறது.

அந்த வீரத் தமிழ் மக்கள்தாம், நாம்! ஆம்! இன்று வடபுலத்து பேரரசுக்கு உட்பட்டுக் கிடக்கும் அடிமைக்காடு!

கொற்றம் இழந்தோம், எனினும், மொழி வளத்தை இன்னும் இழக்காதிருப்பதால், அந்த நாளில் நம்மனோர் வாழ்ந்தது எத்துணைச் சிறப்புடன் என்பதனை, ஓரோர் வேளை அறிந்திடவேனும், வாய்ப்புக் கிடைக்கிறது.

அந்த வாய்ப்பினைத் தக்க முறையில் பயன்படுத்தித் தன்மான உணர்ச்சி பெற்றுத், தனி அரசு கேட்டுப் பெறும் திறம் பெற்று

விடுவோமே, என்பதனால், தமிழ்மொழி தனித்தியங்கும் நிலையினைக் கூடக் குழிபறித்துப் புதைத்திடத் திட்டமிட்டுப் பணிபுரிகின்றனர்; அவர்தரும் சுவைமிகு திண்டி உண்டு கிடக்கும் திம்மப்பரோ, மொழியிலே என்ன இருக்கிறது, "திரு' என்று கூறிடுவதால் என்ன உயர்வு, ஸ்ரீ என்றுரைத்தால் என்ன இழுக்கு என்று கூறுகின்றனர்.

மலாய் நாடு, இதுபோன்ற உணர்ச்சியற்ற தன்மையில் இல்லை. ஞோஞா என்று வானொலி பேசுகிறது.

மலாய் மொழியின் தனித்தன்மையைக் காப்பாற்றித் தீரவேண்டும் என்று துங்கு ரஹிமான் உறுதிகாட்டுகிறார். இங்கோ, மொழியில் என்ன இருக்கிறது என்று பேசிக் குழை கிறார்கள், பதவிபெற்றுப் பசி தீர்த்துக் கொள்ளும் போக்கினர்.

ஆனால், அத்தகைய போக்கினரின் தொகையும் மிகக் குறைவு; அவர்பால் மக்கள் கொண்டுள்ள வெறுப்போ மிக அதிகம்.

இன்று, தமிழ்மொழியின் தூய்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே நாட்டம் காட்டாத நல்விளைஞன் இல்லை எனலாம்.

மொழி, இனத்தின் பண்பையும், நாட்டு வரலாற்றினையும் எடுத்துக்காட்டி, வீரம் ஊட்டிடவல்ல தாய் என்பதை, தன்னை மறவாதார் அனைவருமே, அறிந்துள்ளனர்.

தனி நாடு, தனி அரசு என்று குறிக்கோள் கொள்ளாத வர்களும்கூட, தனிமொழி, தாய்மொழி என்ற உணர்ச்சியை மதித்திடக் காண்கிறோம்.

மொழிவளமே கூடப் பெற்றிராத நாடுகள் பல, பேரரசு களின் பிடியிலிருந்து நம்மை விடுவித்துக்கொண்டு, தனி அரசுகளாகித்,

தரணிக்கோர் அணி என விளங்கும் ஐக்கிய நாடுகள் மன்றத்திலே அமர்ந்து, அவனிக்கோர் புதிய பாடம் அளித்திடக் காண்கிறோம்.

இந்த நிலையில், தம்பி! நாம் நமது மொழி, இனம், நாடு, அரசு என்று பேசுவதும், உரிமை கொண்டாடுவதும், அந்த உரிமையினைப் பெறத் திரண்டெழுவதும், தவறாமோ? அங்ஙனம், கூறிடும் குறைமதியாளர்கட்கு, மலாய் வானொலி ஒலிபரப்பும் "ஞோஞா' எனும் சொல்லேனும், நல்லறிவு கொளுத்தட்டும்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

25-9-1960

20. ஒன்றாகக் கூடி, இன்பத் திராவிடம் தேடி!

தி.மு.க. பொதுச் செயலாளர் பொறுப்பு -

சாலமன் வெற்றி -

கழகத் தோழர்களுக்கு அறிவுரை.

தம்பி!

புரிகிறது, புரிகிறது, உன் குறும்புப் புன்னகை. எப்படி அண்ணா எமது திறமை!! தம்பிகள் இருக்கிறார்கள் எதையும் தாங்கிட! அறிவாற்றலிருக்கிறது அவர்களிடம் நிரம்ப; எதனையும் செய்து முடிக்க! எனக்கென்ன குறை! எதையும் அவர்களைக் கொண்டே செய்து முடிப்பேன் என்றெல்லாம் கூறி, நிம்மதியாக, ஓய்வாக, இருந்துவிடலாம் என்றல்லவா எண்ணிக்

கொண்டிருந்தாய். பார்த்தனையா, இப்போது, பிடித்திழுத்து வந்து இருக்கையில் அமர்த்திவிட்டோம், பொதுச் செயலாள ராக்கி விட்டோம்! என்று கேட்கிறாய், குறுநகை மின்னிட. வசமாகச் சிக்கிக் கொண்டு விட்டேனே, நான். அன்புக் கயிற்றி னாலே பிணைத்துவிட்டாய்! நீ ஆட்டிவைக்கிறபடி ஆடித்தீர வேண்டியவனாகி விட்டேன். வேறென்ன முடிகிறது என்னால்... ஆண்டு பல உழைத்தோம், கள்ளமின்றி, உள்ளத் திறமத்தனை யையும் ஒப்படைத்துவிட்டு; நிலைமையிலே மகிழத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இனித் தம்பிகளிலே எவரேனும் ஒருவர், மற்றவர்களின் மகிழ்ச்சி கலந்த ஒத்துழைப்பைப் பெற்றுத், தானையினை நடாத்திச் செல்லவேண்டும் என்று தான், சொன்னேன், ”தவம் கிடந்தேன்’

என்றே கூறலாம். ஆனால். . .

மீண்டும் ”சுமைதாங்கி’ யாக்கப்பட்டு விட்டேன்!!

விடுவதாக இல்லையே, நீயும் உன் போன்றாரும்.

குன்றெடுக்கும் நெடுந்தோள் எனக்கு இல்லை. எனினும், என் தோளின்மீது பொறுப்புகளை எடுத்துவைத்துச் சுமந்திடச் சொல்வதிலேயோ, உனக்கோர் தனிச்சுவை ஏற்பட்டுவிடுகிறது; நான் என்ன செய்வேன்? தாங்கிக் கொள்கிறேன்.

என்னைப் பிடித்திழுத்து இருக்கையிலே அமர்த்துகிறார் களே. ஏனோ நமக்கு இனியும் இந்த இக்கட்டு என்றெண்ணித் தம்பி! நான் இடர்ப்பட்ட நேரத்தில், “ஏனண்ணா! வீண் கலக்கம், எழுந்து நில், எம்முடனே!!

என்று கூறுவதுபோல, தம்பிகள் நாவலரும், சம்பத்தும், கருணாநிதியும், மதியும், நடராசனும் அன்பழகனும், சிற்றரசும், எனைச் சுற்றி வளையம் அமைத்துக் கொண்டனர் - என் செய்வேன்! - தப்பி ஓடிடவா முடியும் - உம்! என்று இழுத்தேன், உட்கார்! என்றனர், வேறென்ன செய்ய இயலும் - பொறுப்பேற்றுக் கொண்டேன்! அல்ல! அல்ல! பொறுப்பேற்றுக் கொண்டேன் என்று கூறிவிட்டேன்! பொறுப்புகளை நிறைவேற்றிட இயலும் என்பதில் எனக்குத் துளியும் ஐயமில்லை - ஏனோவெனில் - வீரர்களாம் என் தம்பிமார்கள், ஒவ்வொருவர் ஒவ்வோர் துறையிலே அரசோச்சி, அருந்திறன் காட்டிப் பெறப்போகும் பலன்களை, நாட்டு மக்களைக் கூட்டிக் காட்டி மகிழத்தானே, நான் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிறேன்! அவர்கள் செய்தளிக்கும் அணிபணியினை, அனைவரும் கண்டு மகிழ,

கொண்டு வந்து காட்டிட, நான்"பொது'ச் செயலாளன் ஆக்கப்பட்டிருக்கிறேன். இதை எண்ணும்போது, முதலில் எழுந்த திகைப்புத் தகர்ந்து, தித்திப்புத் தட்டுகிறது.

தம்பி! அலைகடலில் கிடக்கிறது முத்து. மண்ணடியில் கிடக்கிறது தங்கம்! பிறகோ, கைத்திறன், தொழில் நுட்பம் பெற்றோரின் கரம் வந்தடைகிறது; பிறிதோர் நாள், மனதை மயக்கும் பருவத்தாளின் மார்பினில் புரள்கிறது, மாலையாகி!

எங்கெங்கு இருந்த பொருள், எவரெவர், எத்தகைய திறம் காட்டிக் கொணர்ந்தனர் - கொண்டு வந்த பின்னர், வண்ணம் வளரத்தக்க வடிவம் பெற்று, ஒன்றுடன் மற்றொன்று பொருத்தமான முறையில் இணைக்கப்பட்டு, பிறகு இருக்குமிடம் சென்று, எழில் எழிலோடு சேர்ந்துவிடுகிறதல்லவா? அஃதே போல், பல்வேறு துறைகளிலே,

பணிபல புரிந்து, என் தம்பிகள் தேடிக்கொண்டு வந்தளிக்கும், பொன்னும் மணியும், முத்தும் பிறவும், கோர்த்தளித்து, அதனைத் தாயகம் அணிந்து, பெருமிதம் கொண்ட நிலையில் இருந்திடக்கண்டு, மகிழ, நீயும் நானும் இருக்கிறோம், மூழ்கியும் கல்லியும், முறியடித்தும் பகை முடித்தும், அவர்கள் தேடிக் கொண்டுவந்து அளிக்கும் "செல்வத்தை' நாட்டுக்குக் காட்டி,"காணீர்! என்னருந் தம்பிகளின் ஆற்றலை!' என்று கூறி மகிழ்ந்திட, நான். ஆம்! ஆம்! கடற்கரைக் கூட்டத்திலேயே, அதனைத்தான் நான் கூறினேன். அதற்குத் தடை ஏதும் இல்லை என்றே, அவர்தம் முகப் பொலிவும் பொலிவளிக்கும் கண்ணொளியும் காட்டின. மட்டற்ற மகிழ்ச்சி.

திராவிட முன்னேற்றக் கழகம், ஈடுபடும் எந்தக் காரியத்தை யும், எடுத்துக்காட்டும்

எந்தப் பிரச்சினையையும், மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும், நாடு இன்று கூர்ந்து பார்த்து, "இதற் கென்ன பொருள்? இது எதைக் காட்டுகிறது? இதற்கு என்ன நோக்கம்? இது எதன் விளைவு?' - என்றெல்லாம், ஆராய்ந்திடவும், உரையாடிடவும் காண்கிறோம்.

எங்கோ, எதுவோ, நடந்தது - என்ற முறையில் அல்ல, ஏன், இது, இவ்வண்ணம், இதுபோல, நடைபெற்றது? என்று, நமது ஒவ்வொரு நடவடிக்கையையும், ஏற்படும் ஒவ்வொரு நிலைமையையும், அலசிப்பார்த்திட இன்று, எல்லா அரசியல் கட்சிகளுமே முயற்சிக்கின்றன. அலசிப்பார்த்து உண்மையை, அந்தக் கட்சிகள் கண்டறிந்துவிட்டன, என்று கூறுவதற்கு இல்லை! ஆனால், முயற்சியிலே மட்டும், மும்முரமாக ஈடுபடுகின்றன.

இது, நமது கழகம், இன்று பெற்றுள்ள வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சான்று.

தம்பி! நாம் கவனிக்கப்பட்டு வருகிறோம் - நமது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் கவனிக்கப்பட்டு வருகின்றன - என்பதுதான் பொருள். அதிலே தொக்கி நிற்பது, சுவைதரும் மற்றோர் உண்மை. எவரும் அலட்சியப்படுத்த முடியாத நிலையில், இன்று நம் கழகம் இருக்கிறது. அனைவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள் - திகிலுடன் சிலர், திடுக்கிட்டுப் போன நிலையில் சிலர், அருவருப்புடன் சிலர், பொறாமையுடன் வேறு சிலர் - அவரவர், தத்தமது நிலைக்கு ஏற்ற நினைப்புடன் - ஆனால், எவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

அடவியில் சென்று கொண்டிருக்கிறான் ஒருவன் - கதிரவன் களைத்துப் போய், இளைத்துப்போய், மறையும் நேரம் - கால்

கடுக்க நடக்கிறான் - சற்றுத் தொலைவில், மரம் அடர்ந்த இடத்தில், சிறு பொறி காண்கிறான் - உற்றுப் பார்க்கிறான் - பொறி பெரிதாகக் காண்கிறான் - நடையை நிறுத்திக் கொள்கிறான் - தீப்பந்தங்கள் போலத் தெரிகின்றன - அசைவற்று நிற்கிறான் - புலியின் கண்களே, அதுபோலத் தெரிகின்றன, என்று எண்ணுகிறான் - திகிலன்றோ அவன் நெஞ்சில் தீயெனப் புகும்.

மாலை வேளை! ஆற்றோரச் சோலை! அழகு தமிழ்ப் பாடலை இசைத்தபடி, நடக்கிறான், ஒரு இளைஞன்! யார்? என்றா கேட்கிறாய்? என்ன தம்பி! நேரம், இடம், கூறினேனே - இதற்கு மேலுமா விளக்கம் வேண்டும்? - சொல்லிவிடட்டுமா அதனையும் - கெண்டை விழியாளைக் கண்டு, அவள் தனக்குச் செண்டு தந்து, பின்னர் இன்பம் மொண்டு உண்டிடச் செல்லும் காதலன்,

போதுமா! - சரி, அவன் செல்கையில், குக்கூ! குக்கூ! என்ற ஒலி செவியில் வீழ்கிறது. என்ன செய்வான்? முகமலர்ச்சி யுடன், தருக்களைக் கூர்ந்து கவனிக்கிறான். எங்கு ஒளிந்து கொண்டு இன்னிசை எழுப்புகிறது, குயில் என்று கண்டறிய, திகிலுணர்ச்சியா, அவனுக்கு - தித்திப்பு உணர்ச்சி!

அஃதேபோல, அவரவர், தத்தமது நிலைமைக்கு ஏற்ப, எதிர்ப்படுவனவற்றைக் கூர்ந்து கவனிப்பர்.

வழியே கிடக்கும் எருக்கஞ்செடியினையும், எலும்புத் துண்டுகளையும், சோளக் கொல்லைப் பொம்மைகளையும், வயல் வளைவாழ் எலிகளையும், கத்திக்கத்திச் செத்த தவளைகளையும், காலில் உதையுண்டு சிதறிய ஒட்டாஞ் சல்லிகளையுமா, கூர்ந்து கவனிப்பார்கள். உலகம் என்ன அவ்வளவு விவரமறியாதவர்களின் இருப்பிடமாகவா,

உளது! இல்லை, தம்பி! நிச்சயம் இல்லை! எதைக் கூர்ந்து கவனித்தாக வேண்டும் என்பது, மிக நன்றாக உலகுக்குத் தெரிகிறது - அதிலும் அரசியல் உலகு இருக்கிறதே, அதற்கு இந்தத் துறையில் தனியானதோர் திறமை, மிக வேகமாக வளர்ந்துவிட்டிருக்கிறது.

அத்தகைய அரசியல் உலகம், நமது கழகத்தின் ஒவ்வொரு அசைவையும், நமது பேச்சின், "அசை'யைக்கூட மிக உன்னிப் பாகக் கவனித்து வருகிறது: காரணம் தேடுகிறது, பொருளை ஆராய்கிறது, இயன்றால், எவ்வழியில் அதனைப் பயன்படுத்தி, நம்மை வீழ்த்தலாம், என்ற நினைப்புடன்.

நெடுந் தொலைவிலிருந்து வர இருக்கும் எதிர்ப்படை கண்ணுக்குத் தெரியுமுன்பே, தூசி கிளம்பிடக் கண்டதும், படை வருகிறது, என்பதனைக் கண்டறிய முடிகிறதல்லவா? மண் காற்று அடிக்கிறது -

அதனைப் போய் இத்துணைக் கூர்மையாகக் கவனிக்கவேண்டுமா என்று கருதுபவன், அந்தத் துறையிலே ஓர் மதியிலியன்றோ!

அதுபோலத்தான், நமது ஒவ்வொரு நடவடிக்கையும், மாற்றாரின் கண்களிலே, நடவடிக்கை உருவாகு முன்பே, தூசி அளவாக இருக்கும்போதே, தெரிந்துவிடுகிறது.

எனவே, தம்பி! நாமும் நமது நடவடிக்கைகள், திருப்பங்கள், முடிவுகள், முயற்சிகள், முகாம் அமைப்புகள் என்பவைகளை எதிரிகள் கூர்ந்து கவனித்த வண்ணம் இருக்கிறார்கள் என்பதை அறிந்து, அதற்கேற்ப, நமது செயல் முறைகளை மட்டுமல்ல, பேச்சு முறைகளைக்கூட செம்மையானவையாக மட்டுமல்ல ஆற்றல் மிக்கவையாக மட்டுமல்ல, எவரும் பாராட்டத் தக்கவையாக மட்டுமல்ல, எதிரிகள் கண்டு, இதற்கு இதுவா பொருள்? யாமறியாமற்

போனோமே? இதற்கா இந்த நடவடிக்கை, எமக்கு முதலில் விளங்காமற் போய்விட்டதே? இவ்விதமாகவா முடிவு செய்தனர், இது திடீர் நடவடிக்கையாக வன்றோ இருக்கிறது? - என்று எண்ணித் திணறத்தக்க விதமாகக், கூடுமானவரையில் அமைத்தல்வேண்டும் - ஆனால், இது இயற்கையானதாகவும் பலனளிக்கத்தக்கதாகவும், வளர்ச்சியைக் காட்டுவதாகவும், இருத்தலும்வேண்டும்.

பரபரப்புணர்ச்சிக்காகப் பலனளிக்காத் திட்டங்களை மேற்கொள்வதும் தீங்கு பயக்கும்; அமைதியே ஆனந்தம் என்ற போக்குக்காகச் சொரணையற்றுக் கிடப்பதும் அழிவுதரும், தேய்வினை உண்டாக்கும்.

கரிப்படைகள் மட்டுமே இருந்தால் போதும், வலிவுமிக்க கோட்டைகளையும் தூள் தூளாக்கலாம் என்றெண்ணிப் பிற வகைகளை அமைக்காதிருப்பவன் வெற்றியா

பெறுவான்?

கேடயம் ஏந்தாத வாள் வீரன் உண்டோ?

திறமைகள் பலப்பல - அவைகளை இணைத்திடும் முறையோ மிகப் பெரியது, மிக மிகத் தேவையானது.

இன்றல்ல நேற்றல்ல, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு வள்ளுவப் பெருந்தகை கூறிய இப்பேருண்மையை, நமது நாவலர் விளக்கிக் கூறிடக் கேட்டு இன்புற்று இருப்பாயே!

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்.

அஃதேபோல, நமது கழகத்துக்குக் கிடைத்துள்ள ஒப்பற்ற, ஓய்வறியா வீரர்

குழாத்திலே, பல்வேறு துறைகளிலே, பார்மெச்சும் தனித்திறமை பெற்றோர் உளர் - அவர் ஒவ்வொரு வரிடமும், அவரவரின் தனித்திறமையினைக் காட்டிக் கழகத்துக்கு வலிவு ஈட்டிடச் செய்திடும் நோக்குடன், ஒவ்வோர் துறை ஒப்படைக்கப்படல் வேண்டும் - அவர்களே தேர்ந்தெடுத்தல் எனினும், சாலச் சிறந்ததே - அவரவர் தனித் திறமையினைக் காட்டிடத், தமக்கேற்ற துறையினிலே ஈடுபட்டு, ஈட்டிடும் கூட்டுச் சக்தியினை, பொது வலிவினை, வடித்தெடுத்து, உம்மிடம் தந்திட, நான் - அந்த நோக்கத்துடனேயே, என்னை "இருக்கைக்கு' இழுத்து வந்துள்ளனர், என்று உளமார நம்புகிறேன்.

தம்பி! கரிப்படை வலிவளிக்குமா, கரிப்படை வெற்றி தேடித் தருமா, என்பதுபற்றிக் காலாட்படை, பேசியபடி காலத்தை ஓட்டினால், களத்திலே வெற்றியா,

கிட்டும்?

அதுபோலவே, நமது கழகத்தவரில், சிலரோ, பலரோ, திறமைகளிலே, எந்தத் திறமை பெரிது, உயர்வுடையது, எது முன்னணி, எது மூன்றாமணி என்று ஆராய்வதிலும், உரையாடிக் கிடப்பதிலும், ஆர்வம் செலுத்திக் கொண்டிருந்தால், திறமை களைக் காட்டிக் கழகத்துக்கு வலிவு ஈட்டிட, மனமும் வராது, திறமும் குறையும், நேரமும் கிடைக்காது.

திறமைகளின் வகை வளர வளர, இந்தப் பிரச்சினையில், சுவைமிகு சிக்கல் நிச்சயம் ஏற்படும் - அதனை எத்துணை பொறுப்புணர்ச்சியுடன், தன்னல மறுப்புணர்ச்சியுடன், தீர்த்துக் கொள்கிறோமோ, அதைப் பொறுத்தே, நமது வெற்றி உளது.

சென்ற கிழமை, இரு நாட்கள், தொடர்ந்து ஒரு ஆங்கிலப் படம் பார்த்தேன்.

ஆமாம், தம்பி! ஏன் திகைக்கிறாய்? கழகத்திலே பெரிய பிளவாமே! குழப்பமாமே! அப்படிப்பட்ட நேரத்திலே, படக் காட்சிக்குச் செல்வதா, கவலையில்லாத மனிதனா நீ! - என்று தானே, கேட்கிறாய்- தம்பி! இதிலிருந்தே, நீ தெரிந்து கொள்ள வேண்டும், பெரிய பிளவு - குழப்பம் - என்பன மாற்றாரின் மனதிலே மூண்ட அற்ப ஆசைகளின் ஓசைகள்!!

எனவேதான், நான் படம் பார்க்கச் சென்றேன் - அங்கும் பாடம் தேடிப்பெறும் பக்குவம் எனக்கு நீண்டகாலமாகவே உண்டு. ஆதலால்.

மதத் தொடர்புடைய கதை - சாலமனும் ஷீபா நாட்டு அரசியும் என்ற படம்.

சாலமன், எகிப்து நாட்டிலிருந்து கிளம்பிவந்த மிகப் பெரும்படையால் தாக்குண்டு, தன் படை சின்னாபின்னமாகிப் போனது கண்டு, மனம் வெதும்பிக் கிடக்கிறான்.

இரவு, இருளை ஏவி, அவனையும் அவன் படையினரையும் அரவணைத்துக் கொள்ளச் செய்கிறது. துக்கம் துளைக்கிறது; தூக்கம் இல்லை.

காலையில், சாலமன் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறான் - களம் சென்றாக வேண்டும் - காற்றெனக் கடுகிவரும் எதிரிப் படையுடன் போரிட - புயலின் வேகம் எதிரிப் படைக்கு - கிளைகள் முறிந்த மரம் போல், இவன் படை.

எதிர்ப்புறம், ஓர் ஒளிப்பிழம்பு, ஊடுருவிக் கிளம்பிடக் காண்கிறான்.

இருளைக் கிழித்துக் கொண்டு, ஞாயிறு எழுந்தான் - ஞாயிற்றின் ஒளியின் இடையிலேயே, தனிப் பளபளப்புடன், மற்றோர் ஒளி, காண்கிறான். வியந்து, இதற்குக் காரணம் யாது என்று பார்க்கிறான் - அவனிடமிருந்த, கேடயத்தின்மீது கதிரவன் ஒளி படுவதால், காண்போரின் கண்களைக் கூசிடச் செய்திடும் ஒளிப்பிழம்பு உமிழப்படுகிறது என்பதறிந்தான்.

படையினரை விளித்துக் கேடயங்களைப் பளபளக்கச் செய்து வைத்துக்கொள்ளச் செய்தான்.

பாய்ந்து வந்த எகிப்தியப்படை, குன்றின் முகடு வரும் வரையில் காத்திருந்து, சாலமன் படையினர், தமது கேடயங் களைக் கதிரவன் ஒளி அவைமீது விழும் வண்ணம், ஏந்தி நின்றனர் - ஒளிப்பிழம்புகள், ஆயிரமாயிரம் கிளம்பின - எதிரிப்படையினரின் கண்களைத்

துளைத்தன! வாளுக்கு வாள்! வேலுக்கு வேல்! இது போர்முறை! ஆனால் இங்கோ, ஒளிப் பிழம்புகள் தாக்குகின்றன; கண்கூசுகிறது! வழி தெரியவில்லை; பாதை தவறுகிறது! ஒளிப்பிழம்பைக் காண மாட்டாமல், வீரர்கள் விழிகளை இறுக மூடிக்கொள்கிறார்கள். குதிரைகள் மிரண்டோடுகின்றன. வழி தவறி. படையிலே குழப்பம்! கிலி! விவரமறியாததால் திகில்! படை, மலை முகடு சென்று, படுகுழியில் வீழ்கிறது - சின்னா பின்னமாகிறது. தாக்காமலேயே, தாக்கவந்த பெரும்படையை வீழ்த்துகிறான் சாலமன், அறிவாயுதம்கொண்டு. பளபளப்பான கேடயம், கூர்மையான வாளேந்திய குதிரை வீரர்களை வீழ்த்திவிடுகிறது. ஒளிப்பிழம்பு கிளம்பிப் பெரும் படையைப் பிளந்தெறிகிறது.

தம்பி! கேடயத்தின் பளபளப்பை, ஒளிப்பிழம்பாக்கி, எதிரிப் படையை

முறியடிப்பது, சாலமன், செய்துகாட்டும் வரையிலே போர் முறைகளிலே, ஒன்று அல்ல! நிலைமை, ஒரு புது முறையை அளித்தது; வெற்றியும் கிடைத்தது.

நாமும் மிகப்பெரிய படையினைத் திரட்டிவைத்துக் கொண்டுள்ள, காங்கிரஸ் கட்சியைக் களத்திலே சந்திக்க வேண்டும் - ஆற்றல் மிக்கது நமது படை, எனினும், அவர்கள் திரட்டிக்காட்டத்தக்க அளவு, மிகப் பெரிதாகவே அமையும், அறிந்திருக்கிறோம்.

இத்தகைய போரில் நாம், முறைகள், அணிகளின் வரிசைகள், திறமைகளின் வகைகள், அவைகளிலே உள்ள ஏற்றத் தாழ்வுகள், இவை குறித்துப் பேசிக் கிடப்பது, நேரக்கேடு. திறமை துருப்பிடிப்பது என்பவைகளை, நாமே வலியத்தேடிப் பெற்றுக் கொள்ளும் தற்கொலைத் திட்டமாக முடியும்.

மாற்றார், நமது முறை, முகாம் வரிசை, திறமைகளின் வகை, என்பன பற்றி அறிந்திடவும், அறிவதால் கலாம் விளை வித்திடவும், வழி ஏற்படச் செய்து வைப்பது, நமது படை வரிசையை நாமே, நம்மையும் அறியாமல், காட்டிக் கொடுத்து விட்டுப், பிறகு கண் கசக்கி நிற்கும் கருத்தற்றோர் ஆக்கி விடும்.

முறைகளிலே, நிலைமைகளுக்கேற்பத் திருப்பங்கள், திருத்தங்கள், புதுமைகள் கண்டிடத் தெரிந்தாலன்றி கேடயம் கக்கிய ஒளியினைக் கொண்டே, எதிரிப்படையினை அழித் தொழித்துச் சாலமன் பெற்ற வெற்றி போல, நமக்கு வெற்றி கிட்டுவதும், இயலாததாகிவிடும்.

இப்போது, சொல்லு தம்பி! நாம் மேற்கொண்டுள்ள குறிக்கோள் வெற்றிபெற வேண்டுமானால், நாம் எத்துணை விழிப்பாக

இருத்தல் வேண்டும் என்பது புரிகிறதல்லவா?

•

இனி, ஒரு விடுதலை இயக்கம், தன் குறிக்கோளில் வெற்றி பெற, என்னென்ன வகையான திறமைகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது பற்றியும், எண்ணிப்பார். அந்தத் திறமைகளை தமது தனித்திறமையாகப் பெற்றுத் திகழும், தம்பிமார்களின் முகாமல்லவா, நமது கழகம் என்பதையும் நினைத்துப் பார் - அப்போதுதான் நமது கழகத்தின் அளவு மட்டுமல்ல, இயல்பு விளங்கிடும் - ஏற்றம் தெரிந்திடும்.

மாற்றார், மேடை தவறாமல், சிக்கலான கேள்வியை எழுப்பி, நமக்குத் தொல்லை தருகிறார்களே? என்ன கூறி, இந்தச் சிக்கலை அறுப்பது என்று எண்ணிடும்போது, தம்பி! சிற்றரசு உன் நினைவிற்கு வருகிறாரல்லவா!

ஆமாம்! அவர் பேசினால், இந்தச் சிக்கலையே சின்னாபின்னமாக்கி எறிவார் என்று தோன்றுகிறதல்லவா?

கேட்பவர்கள் கிடுகிடுக்க, எதிரிகள் படை நடுங்க, நமது படை எக்களிக்க, சம்மட்டி அடி கொடுப்பதுபோல, மொழியும் விழியும் உறுதியையும் உணர்ச்சியையும் கொட்டிடத் தக்கபடி பேசினால், மாற்றார் மமதை மடியும், என்ற எண்ணம் தோன்றும் போது, சம்பத் தெரியவில்லையா உன் கண் முன்பு!

நெஞ்சம் நெக்குருக, இதயம் விம்மிட., கண்களில் நீர் துளிர்த்திட, நரம்புகள் புடைத்திட, ஓசை நயமும் சொல்லடுக்கு அழகும் துலங்கிடப் பேசி, நமது கொள்கைவழி, கேட்போரை ஈர்த்திடவேண்டும் என்று எண்ணும்போது, கருணாநிதியைக் காண்கிறதன்றோ உன் மனக்கண்.

ஆரியப்படை கடந்தானின் ஆற்றல், இமயம் முட்டிய பெரும்படை நடாத்தியவனின் பெருமை, சாவகம் யவனம் சிங்களமெனும் பலநாடு சென்று பரணி பாடிய அடலேறுகளின் அஞ்சா நெஞ்சம், பரணி பாடித் தரணியாண்ட பைந்தமிழ் வேந்தரின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறந்திட்ட மாட்சி, இவைதமை, முகபடாம் போர்த்த யானை மீதமர்ந்து, முரசொலித்துச் செல்லும் ஆணையாளன் போலவும், இன்று இயற்றும் இன்கவிதை என்றும் நிலைத்து நின்று அறிவு புகட்டும் என்று அறிந்து கவிதை ஆர்த்திடும் அருந்தமிழ்ப் புலவோன் போலவும், தமிழழகும் இலக்கியச் செறிவும் மிளிர, இனிமை துள்ளிட, ஏறுநடையில் பேசினால், தமிழகத்தின் தொன்மை அறிந்த கற்றோர் களிப்படைவர், கழகத்தின் மாண்பறிவர், என்று எண்ணிடும் வேளையிலே, நாவலர் நெடுஞ்செழியன், நினைவிலே வந்து நின்று,

அன்புகெழுமிய தோழர்களே! தோழியர்களே! என்றழைக்கும், பாங்கு தெரியாமலிருக்குமா?

பிரச்சினைகளை அலசி, எளிதாக்கி, தொடர்புடையன, தொக்கி நிற்பன, துணை வருவன, என்னும் வகையினதான கருத்துக்களையும் பிணைத்து, ஆசிரியர்போல எடுத்துக் கூறிக் கேட்போர்க்குத் தெளிவளித்து, நம் பக்கம் அவர்தம் ஆதரவைத் திரட்டிட வேண்டும், என்று எண்ண தோன்றும்போது, பல ஆண்டுகள், பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியர் பணிபுரிந்து, இன்று விடுதலை இயக்கத்தின் வீரர் கோட்டத்திலே திகழும், அன்பழகன் அழைக்கப்பட வேண்டும் என்று தோன்றுகிறதல்லவா?

கட்டையாய் குட்டையாய் உள்ள இந்த இளைஞன், கல்லூரியில் படித்த நாள் தொட்டு, காண்போரைக் கண்களால் கவ்வி,

எண்ணங்களை எடுத்து இயம்பும்போது, கேட்போர், ஏற்றுக்கொண்டனர் என்று அறிந்தாகவேண்டும் என்ற இயல்புடன், நிறுத்தி நிறுத்திப் பேசி, உலைக்கள நெருப்பு வளரட்டும் என்று காத்திருந்து, தழல் கொழுந்துவிட்டதும் இரும்பினைப் பழுக்கக் காய்ச்சி எடுத்துச் சம்மட்டி அடி கொடுக்கும் பான்மைபோல, எண்ணி எண்ணித் துவக்கி, பின்னர், மேலை நாட்டு வரலாற்றுச் சம்பவங்களைப் பின்னி, கொள்கைக் கனலைச் சொற்களாக்கித் தருகிறான் - இத்தகு, திறமுடையான் இளைஞர்தமை நமது இயக்கம் ஈர்த்திடத்தக்க வழிமுறை கொண்டான், என்றன்றோ மதியழகனைக் குறித்து, எண்ணுவீர்!

நாடு நமது ஆகாதிருப்பதால் வந்துற்ற நலிவு, நாடாள்வோர் எதனையும் நன்முறையில் கவனியாது இருப்பதால்

ஏற்படும் இன்னல், வடவரிடம் சிக்கியதால் வந்துற்ற சீர்கேடு, இவவை குறித்துக் கேட்போர் மனதில் குமுறல் எழவேண்டும், எனில், உருக்கமும் உழைப்பாளியின் உள்ளம் அறிந்த தன்மையும், வேதனையைக் காட்டிடும் குரல் கம்மலும், எளியார்க்கே இக் கழகம் என்பதனை எடுத்துக் காட்டிடும் தோற்றமும் கொண்ட முறையில் பேசிப், பாட்டாளிகள், நமக்கேற்ற பாசறை, தி.மு.க. என்று உணரச் செய்தல்வேண்டும், என்ற எண்ணம் எழும்போது, நடராசன் என்று நினைவு செல்கிறதன்றோ.

தம்பி! இஃதேபோல, ஒவ்வொருவர், குறித்தும், என் எண்ணத்தைக் கூறப்புகின் ஏடு கொள்ளாது - நாடு மதித்திடத் தக்க நல்ல திறமையினைப் பெற்றிருப்போர், நமது பெரும் படையில், உள்ளனர். நான் என் பணியினை எளிதாக்கிட, உடன்

இருந்து உழைத்து வெற்றி தேடிட முனைந்து, இப்போது செயலாற்றும் செம்மல்களை மட்டும், குறிப்பிட்டேன் - மற்றவர் பற்றிக் கூறிட ஏதும் இல்லை என்பதால் அல்ல - ஏட்டில் இடம் இராது என்பதால்.

ஒரு விடுதலை இயக்கம் இதனினும், சிறந்தோர் பாசறையை இவ்வளவு குறுகிய காலத்திலே, பெற்றது இல்லை.

இதனை எண்ணி மகிழவும், இந்த நிலைமையைத் தக்கபடி பயன்படுத்திப் பலன் பெறவும், நாம் ஒவ்வொருவரும் முனைந்து நிற்க வேண்டுமேயன்றி, மாற்றார், நமது முறை பற்றிக் கூறிடும் மருளுரை கேட்டு, மனம் தடுமாறிடப் போமோ!!

பார்! பார்! பயல்கள் நாலே நாட்களில், பிளவுபட்டு, ஒருவரை ஒருவர் ஏசிக் கொண்டும், எதிர்த்துக் கொண்டும்,

திக்காலொருவராக ஓடப்போகிறார்கள் - என்று கூறினாராம், காமராசர் - ”தீர்க்கதரிசனம்’ - தெரிந்தவர் - முதலமைச்சர் அல்லவா!!

ஆனால், நடந்தது என்ன?

ஆராய்கிறார்களாம், அரசியல் வட்டாரத்தில் - இதன் பொருள் என்ன? நோக்கம் என்ன? விளைவு யாதாக இருக்கும் என்று.

•

தம்பி! பொதுக் குழுவு எடுத்த முடிவு, மாற்றார்களின் முகாம்களிலே, உலவிக் கிடக்கும், ஒற்றர்கள், உளவாளிகள் அங்கிருந்து கிளம்பிப், பிற இடங்களில் உறவாடிக் கெடுத்திட நினைக்கும் நயவஞ்சகர்கள் ஆகியோர்களுக்கு, அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டதாம்.

ஆயிரத்தெட்டு ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டு, அவர்கள் கிடக்கட்டும் - தம்பி! - உனக்கு வேலை, நிரம்ப இருக்கிறது - தொடர்ந்து செய்யப்படவேண்டிய பணி.

ஒருவர், முன்பு - இப்போது, அதே பணியினைச் செம்மையாகவும், வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணமும் நடத்திச் செல்லப் பலர்!

மாற்றம் இவ்வளவே - திருப்பம், இதுதான்.

உள்ள திறமைகள் அவ்வளவையும், திரட்டிப் பயன்படுத்த வேண்டிய நேரமிது.

ஒவ்வொருவரும் ஒவ்வோர் துறை நின்று, முன்நின்று, வழி கண்டு, வல்லமையை ஈந்து, பணிபுரிந்து, பொது நோக்கம் ஈடேறப் பாடுபடவேண்டிய வேளை இது?

எந்த ஒரு கட்சியிலும், முதல் கட்டத்தில், யார் உங்கள் கட்சிக்குத் தலைவன்? என்று பிறர் கேட்கக்கூட மாட்டார்கள்?

இன்றும் அதுபோலக் கட்சிகள் பல உள.

இரண்டாவது கட்டத்திலே, அலட்சியத்துடனும் கேலிச் சிரிப்புடனும், இவன்தானே உங்கள் கட்சிக்குத் தலைவன்? என்று கேட்பர்.

மூன்றாவது கட்டம் வந்ததும், யார் உங்கள் கட்சிக்குத் தலைவர், அவரா? இவரா? எவர்? என்று கலாம் விளைவிக்கும் நோக்கத்துடன் கேட்பர்.

நாலாவது கட்டத்தின்போது, கட்சித் தலைமைக்காக அவனும் இவனும் மோதிக்கொள்ளப் போகிறார்கள், அமளி எழப் போகிறது, கட்சி அழியப்போகிறது, என்று ஆரூடம் கணிப்பார்கள்.

ஐந்தாவது கட்டத்தில், எமகாதகப் பேர்வழிகளப்பா இவர்கள், என்னமோ பேதம் என்றார்கள், பிளவு என்றார்கள்,

குழப்பம் வரும் என்றார்கள், குட்டிக் கலகம் ஏற்படும் என்றார்கள் - கடைசியில் பார்த்தால் எல்லோருமே ஒன்றாகத் திரண்டு நின்று, இதுதான் எமதுகட்சி தெரிகிறதா புரிகிறதா, என்று கேட்கிறார்களே, ஏ! அப்பா! சாமான்யப்பட்டவர்களல்ல, இவர்கள் - என்று பேசிக் கொள்வார்கள்.

அதுதான், தம்பி! இது!! நாம், வளர்ச்சி பெற்றிருக்கிறோம். மாற்றார் எதை எதையோ எண்ணி எதிர்பார்த்து, ஏமாந்து, ஏக்கமுற்றுப் போகும் நிலையிலும், அளவிலும், நாம், வளர்ந்திருக்கிறோம்.

ஏமாளிகள், எண்ணிக் கொண்டார்கள், நமது கழகம் பிளவுபடும் என்று - நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போவோம், என்று. நான் நமது கழகத்தைக் குறித்துக் கொண்டுள்ள நம்பிக்கை, நமது உடன் பிறந்தார்கள் பற்றி எனக்குள்ள மதிப்பும் பற்றுப் பாசமும்,

எத்தகையது என்பதை அவர்கள் எங்ஙனம் அறியமுடியும்?

இருவர் மட்டும் செல்கின்றனரே, ஐந்து நூறுபேர் உள்ள அயலார் கோட்டை சென்று, உரிமை முழக்கமிட, என்ன நேரிடுமோ? எவன் தாக்குவானோ? என்றெண்ணிச், சம்பத்தை, டில்லிக்கு வழியனுப்பி வைத்தபோது, என் கண் கலங்கியதை மாற்றுக் கட்சி முகாமில் இருந்துகொண்டிருக்கும், "இடம் பிடித்தான்களால்' எப்படி, உணர்ந்துகொள்ள முடியும்?

கண்ணதாசனைச் சுட்டுக் கொன்றுவிட்டார்களாமே! - என்றோர் வதந்தி, மும்முனைப் போராட்டத்தின்போது, சிறை நுழைந்து என் காதினில் நுழைந்ததால், சோற்றுத் தட்டிலே சிந்திய, என் கண்ணீர்பற்றி, மாற்றுக் கட்சியினர் எங்ஙனம் தெரிந்துகொள்ள முடியும்? அந்தக் கண்ணீரின்

மதிப்பும் சக்தியும் இன்னது என்றுதான், அவர்களால் எப்படிக் கணித்திட இயலும்!

நாடகமாடுவதை இயக்கத் தொண்டாகவும், தொழிலாகவும் கூடக்கொண்டு, கருணாநிதி இருந்த நாட்களில், எதிரிகள் இழுத்துப்போட்டு, அடித்து, பிணமானான் என்று கருதிப் பெருஞ் சிரிப்புச் சிரித்துவிட்டுச் சென்றனர் என்பதைக் கேள்விப்பட்ட உடன், தம்பிக்கு வந்துற்ற ஆபத்தினைத் தடுத்திடும் ஆற்றலும் அற்ற நிலையிலே இருக்கிறேனே! என் போன்றார் மொழி கேட்டும், காட்டும் வழிநடந்தும் பணியாற்றிய, வாழ்க்கையைச் சுவைத்திடாப் பருவத்தினனை, மாபாவிகள், நொறுக்கினரே, அடிபட்டபோது, இரத்தம் கொட்டியபோது, கயவர் கத்தியைக் காட்டியபோது என்னென்ன எண்ணினானோ! எனக்கு ஒரு அண்ணன் உண்டு! அவன் சொல்லில் எனக்குப் பற்று உண்டு! அவன் இருக்க நாம் அச்சமடையத்

தேவை இல்லை என்றெண்ணி இருந்தேன். இதோ நான் கொல்லப் படுகிறேன், எங்கு இருக்கிறான் என் அண்ணன்? என்றெல்லாம் எண்ணித் திகைத்தானோ - இதுபோலெல்லாம் எண்ணிப், புதுவையிலிருந்து விழுப்புரம் வந்து சேரும் வரையில், விம்மிக் கிடந்தேன் - இடம் தேடி அரசியலை நாடியோருக்கு அந்த இதயத் துடிப்பு எப்படித் தெரிய முடியும்?

அடையாற்றில், காந்திநகரில், நடிப்பிசைப் புலவரின் வீட்டு மாடியில் படுத்துப் புழுவெனத் துடித்துக் கிடந்தேன். நண்பர் நடராசனை, குன்றத்தூரில் 144 தடையை மீறச் சென்றதற்காக, போலீஸ் தாக்குதல் நடத்தி, துப்பாக்கிச் சூடு எழுப்பினார்கள். நடராசன் என்ன ஆனாரோ தெரியவில்லை என்று, செய்தி தெரிவிக்கப்பட்டபோது.

பாராங்கல்லைத் தூக்கி மண்டையில் போட்டு, நாவலரைக் கொன்றுவிடத்

தேனியில் முயற்சி செய்யப்பட்ட செய்தி கேட்டு, பழந்தமிழரின் வீரத்துக்கு உறைவிடம் என்று கூறத்தக்க, கட்டுடல் கொண்டவர் தானெனினும், குழந்தை உள்ளமாயிற்றே நெடுஞ்செழியனுக்கு, கொடியவர்கள், கொலைக்கஞ்சாப் பாதகர்கள் சூழ்ந்தகாலை, எப்படி எப்படிப் பதறினாரோ, எதை எதை எண்ணித் துடித்தாரோ என்றெண்ணித் துடிதுடித்துப் போன என் முகத்திலே, கப்பிக்கொண்டிருந்த வேதனையை, வேற்றுக் கட்சிக்காரர்கள், எப்படிப் பார்த்திருக்க முடியும்?

தம்பி! நம்மில், ஒருவர் மாற்றாரால் வதைக்கப்பட்டதைக் கேட்டு, மற்றவர் மனம் குமுறிக் குமுறி, ஒரு குடும்பத்தினரான வர்கள் - ஒரு கட்சியின் உறுப்பினர்கள் மட்டுமல்ல.

இதோ இப்போது பொதுக்குழு கூடும் சமயத்தில், கையிலும் காலிலும் வெட்டுக் காயத்துடன், தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்த

குன்றத்தூர் சம்பந்தத்தையல்லவா, கண்டேன் - கட்சிக்காரர் என்றா எண்ணத் தோன்றும் - நமது குடும்பத்தவரிலே ஒருவன் - நாம் கொண்ட கொள்கைக்காகக் கொடியவர்களின் தாக்குதலைத் தாங்கித் தத்தளிக்கும் உடன் பிறந்தான், என்ற எண்ணமல்லவா எழுகிறது.

இத்தகைய ஒரு குடும்பத்திலே, முறைகளைப் புதுப்பிக்க, எழும் வேகம் அல்லது ஆர்வம், பணியாற்றுவதிலே எவரெவர் எந்தெந்தத் துறை நிற்பது என்பது குறித்து எழும் எண்ணங்கள் ஒன்றோடொன்று உராய்ந்துகொள்வது போன்ற இவைகளைக் கேட்டும், காட்டியும், பிளவு ஏற்படும் என்று எதிர்பார்ப்பது பேதைமை - பிளவு மூட்டிவிட வேண்டும் என்று முயற்சிப்பது கொடுமை - பிளவு ஏற்படவில்லையே என்று திகைத்தும் திகிலுற்றும் பேசிக் கிடப்பது, மடமை.

தம்பி! மாற்றார், இது குறித்து எப்படி

வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும், கதைத்துக்கொள்ளட்டும் - உனக்கும் எனக்கும் அது குறித்துக் கவலை எழக் காரணம் இல்லை.

•

பொதுத் தேர்தலை எதிர்நோக்கி நாம் இருக்கும் நேரமாகப் பார்த்து, என்னை இழுத்து உட்காரவைத்துவிட்டார்கள் - பொதுச் செயலாளராக.

அமைச்சர்கள், புகாத ஊரில்லை, போகாத நாளில்லை, பேசாத புளுகு இல்லை, ஏசாத வேளையில்லை என்று ஆகி விட்டிருக்கிறது.

மற்றோர் புறமோ, தாக்குவது, குத்துவது, வெட்டுவது, கோணல் வழக்குகள் தொடுப்பது, என்ற முறையில் அமளி மூட்டிவிடும் நடவடிக்கைகள், அவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன.

பணம் படைத்தோரைப் பயமூட்டியும், ஆசை

காட்டியும், தேர்தல் நிதி மிகப்பெரிய அளவிலே திரட்டி வருகிறது காங்கிரஸ் கட்சி.

முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, ஐந்து கோடி ரூபாய் செலவிட்டது காங்கிரஸ் கட்சி என்று, வெட்கமின்றி, வீராப்புடன், காங்கிரஸ் அமைச்சர் ஒருவரே பேசினார், பதினைந்து நாட்களுக்கு முன்பு.

நமது கழகப் பிரசாரத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் முறை, பல வழிகளில் கையாளப்பட்டு வருகின்றன.

அதிகார வர்க்கமே ஓட்டுப் பெற்றுத்தர, ஏவி விடப்படக் கூடும் என்று ஐயப்படத்தக்க சூழ்நிலை, இப்போதே தெரிகிறது. இந்த ஐயம் நீங்கவும், பொதுவாழ்வுத் துறையிலே ஒழுக்கம் ஓங்கவும், தேர்தலுக்கு ஆறு திங்களுக்கு முன்பு, காங்கிரஸ் அமைச்சர்கள்,

தமது பதவியை விட்டு விலகுவது, அறமாகும் என்று அன்பர் ஆச்சாரியார் பேசுகிறார் - அது எள்ளி நகையாடப்படுகிறது.

புயல் பலமாகத்தான் இருக்கும் - சந்தேகமில்லை.

நாம், அதனை எதிர்த்து வெற்றி பெற்றாக வேண்டும் - ஏனெனில், நாம், தனி ஆட்களுக்காக அல்ல, அரசியல் கட்சி என்பதற்காக அல்ல - விடுதலை இயக்கம் இது - இதற்கு மக்களிடம் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது என்பதை உலகறியச் செய்தாக வேண்டும் - அதற்காக நாம், தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும்.

தம்பி! உன் நினைவிலே இந்த நிலைமைதான், பளிச்சிட்டுக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி, இவரிவர் இன்னின்ன இடத்தில் இருப்பது எதற்கு என்ற, பிரச்சினை

அல்ல; அந்தப் பிரச்சினை சூடுதரும், சுவை தாராது. சூடே சுவைதான் என்று வாதிடுவரேல், அந்தச் சுவையின் மூலம், கழகம் பலன் பெறாது என்றுதான் கூறவேண்டும்.

எனவே, தம்பி! நமது கழகத்தின் கட்டுக் கோப்பினைக் குறித்தும், ஒன்றுபட்டுப் பணியாற்றும் மாண்பு குறித்தும், நாட்டவருக்கு எடுத்துக் கூறு.

நாட்டவரின் நலிவு போக, வாழ்வு துலங்க, நாம் எடுத்துக் காட்டும் வழியின்றிப் பிறிதோர் வழி இல்லை என்பதை எடுத்துக் கூறு.

அனைவரையும் ஆற்றல் படைத்தோராக்கு; வீரர்களாக்கு; விடுதலைப் போரார்வம் கொண்டவர்களாக்கு!

அண்ணனைச் சிக்கவைத்துவிட்டோம், என்பதிலே மட்டும் அகமகிழ்ச்சி கொள்வதிலே,

அர்த்தமில்லை.

எனக்கு இது முதன் முறையுமல்ல, பூரிக்க, வாழ்த்துக் களைப் பெற்று இன்புற.

நான் தம்பி! திராவிடர் கழகமாக நாம் இருந்தபோதே, பொதுச் செயலாளன்தான்.

என் நிலைமையிலோ, பெறும் இடத்திலோ ஏற்றம் இல்லை; மாற்றம் இல்லை. என் இயல்பிலேயும் மாற்றம் எழாது.

எளிதிலே திருப்திபெற்றுவிடுபவன், என்னைக் காட்டிலும் ஒருவர், உனக்குக் கிடைப்பது அரிது.

ஆனால், காரியம் சரியாகச் செய்யப்படவில்லையோ என்ற எண்ணம் ஏற்படும்போது, மற்ற எவரையும்விட அதிகமாக ஏக்கம் அடைபவன் நான்.

அச்சம் வேண்டாம் அண்ணா!

நானிருக்கிறேன், துணை நிற்கிறேன்! என்று உன் போன்றோர் பல இலட்சம், கூறிடும் காட்சியை மனக்கண்ணால் காண்கிறேன். காண்பதனால்தான், "சுமைதாங்கி' வேலைக்கு இசைவு தந்தேன்.

என் வேலையை எளிதாக்குவதும், சுவைமிக்கதாக்குவதும், பயனுள்ளதாக்குவதும், வெற்றியுள்ள தாக்குவதும், உன்னிடம் தான் தம்பி, இருக்கிறது.

சிதறிச் சிதறிக் கிடந்த சக்திகளை, பத்தே ஆண்டுகளிலே ஓரிடம் கொணர்ந்து, ஒன்றுபடுத்தி, ஓர் எழிலுருவம் தந்த செயல்வீரனல்லவா! என்னை மகிழ்வித்து, வெற்றிப் பாதையில் கழகத்தை அழைத்துச் செல்லவா உன்னால் முடியாது!!

வா, தம்பி! வா! அந்த எழுச்சியூட்டும்

நம்பிக்கையுடன் நாம் ஒன்றாகக்கூடி, இன்பத் திராவிடம் தேடி, நடைபோடுவோம்.

பிறந்த பொன்னாட்டுக்கு விடுதலை பெற்றுத்தர, நாம் நம்மை ஒப்படைத்துவிட்டோம். வெற்றி நமதே!

அன்புள்ள,

அண்ணாதுரை,

2-10-60

21. ஐந்து கால் பசு!

காங்கிரஸ் தலைவரும் உத்திரப்பிரதேசத்துக் காரரும்-

மதமும் இராசேந்திரரும்-

காந்தியாரும் மதமும்.

தம்பி!

பந்த பாசங்களால் கட்டுண்டு கிடக்கும் இந்தச் சடலத்தைக் கீழே போட்டுவிட்டு, பரமன் திருவடி சேர்ந்திட வழிகாண்பதே, மானிடரின் பிறவிப் பெருங்கடன் என்று கூறித் தவம் கிடப்போர் தங்கி இருக்கும், ரி□கேசம் - பனிப் படலத்தையே ஆடை அணியாகக் கொண்டுள்ள பத்ரிநாத் - எனும் திருத்தலங்களைத் தரிசித்து வர, இந்தியக் குடி அரசுத் தலைவர் பாபு இராசேந்திர பிரசாத் சென்றிருந்தார்.

அழிவுக் கருவிகளைக் குவித்து வைத்துக் கொண்டு, ஆணவ அரசுகளை அமைத்துக் கொண்டு, அமளி மூட்டிவிட எது தக்க தருணம் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வல்லரசுகளை, ”காட்டுக் குணத்தை விட்டிடுமின்! மனிதகுல மாண்பினை மதித்து நடந்திடுமின்! இனி ஒரு போர் மூண்டிடின் வென்றவர் எவர், தோற்றவர் எவர் என்று நிலை இராது, உலகமே நாசப் படுகுழியில் வீழ்ந்துபோகும்’ என்று எடுத்துரைத்துப் போர் வெறியைப் போக்கிட, நடைபெற்றிடும் ஐக்கிய நாடுகளின் மன்றக் கூட்டத்திலே கலந்துகொண்டு, உலக சமாதானம் குறித்து உரையாற்றிட, நேரு பண்டிதர், நியூயார்க் நகர் சென்றார்.

குத்தும் வெட்டு மிகுந்து, கொள்ளையும் கொலையும் நடமிடும் அசாம், மொழி

காரணமாக அமளியில் ஈடுபட்டிருக்கிற இழிநிலையைப் போக்கிடப் பல்வேறு தரப்பினருடன் பேசி வழிகண்டிட, □ல்லாங் நகர் சென்றார் கோவிந்த வல்லப பந்த். தொகுதி மூன்று 73 கேரள மாநிலத்தில், சுதந்திரக் கட்சிக்கு வித்தூன்ற, முதுகிழவர் ஆச்சாரியார், திருவனந்தபுரம் சென்றிருந்தார்.

அவர் போன்றே பருவமுடையார் எனினும், அவரைக் காட்டிலும் உழைப்புத் திறனும் நெஞ்சுரமும் கொள்கைப் பற்றும் கொண்ட பெரியார், காமராஜர் ஆட்சியின் சாதனைகளைக் காங்கிரசாரே கேட்டு வியந்திடும் வண்ணம் எடுத்துப் பேசத் தமிழகத்தில், பல்வேறு இடங்களில், உலாவந்து கொண்டி ருக்கிறார்.

காமராஜரோ, "ஏழைகள் நெளிகின்றனர். எனக்குத் தெரியும்; ஏற்பாடுகள் பல செய்கிறோம், எனினும், எல்லாம்

பணக்காரருக்கே பலன் தருகின்றன; அதுவும் தெரியும்; விலைவாசிகள் விஷம்போல் ஏறுகின்றன, கட்டுப்படுத்தத்தான் வேண்டும்; ஆனால் முடியவில்லை. நாடு பிரியவேண்டும் என்று பேசுவார்கள், நன்றாகப் பேசுவார்கள், திறமையாக வாதாடுவார்கள்; என்றாலும் நம்பாதீர்கள்' - என்று இந்த முறையில், பேசிவரப் பட்டித் தொட்டிகளெல்லாம் சென்று வருகிறார்.

•

பச்சைப் பயிரை நாசமாக்கும் வெட்டுக்கிளிகள் கோடி கோடியாக இராஜஸ்தானிலிருந்து கிளம்பி, ஆந்திர மாநிலம் வரை படையெடுத்துப், படுநாசத்தை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றன.

•

என்ன அண்ணா! பத்ரிநாத்தில் துவக்கிப்,

பயிரை அழிக்கும் வெட்டுக்கிளியின் படை எடுப்பிலே வந்து நிற்கிறாயே! ஒன்றுக் கொன்று, தொடர்பற்றுக் கிடக்கிறதே, என்றுதானே தம்பி! கேட்கத் துடிக்கிறாய். இவைகளுக்குள் தொடர்பு உள்ளன என்பதற்காகக் கூறினேன் என்று எண்ணிக் கொள்ளாதே. நமது மக்களின் கவனத்தை ஈர்த்திடும் மிக முக்கியமான நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள், நடமாட்டங்கள், நிலைமைகள் பல உள; அவற்றிலே சில, இவை.

திருத்தலங்களைக் காணச் செல்வது தொன்று தொட்டு இருந்துவரும் பழக்கம். இதனை, மகா மேதாவிகள் என்று தங்களை எண்ணிக் கொண்டிருக்கும் இந்தச் "சூனாமானாக்கள்' கண்டிப்பர், கேலி பேசுவர்; ஆனால் பாரதப் பண்பாடு தெரிந்தவர், நமது பாபு இராசேந்திரர், தர்ம நெறி அறிந்தவர், நமது குடிஅரசுத் தலைவர்;

குலாச்சாரம், மதாச்சாரம், சதாச்சாரம் வழுவலாகாது என்ற கோட்பாடுடையவர், நமது பாபு; எனவேதான், துரைத்தன அலுவல் ஆயிரத்தெட்டு இருப்பினும், நோய்கொண்ட நிலைபற்றியும் பொருட்படுத்தாது, பத்ரிநாத் சென்றார். இவரன்றோ பாரதப் பண்பாடு தெரிந்தவர்! என்னே அவர் தம் மத உணர்வு! என்று, காங்கிரசார் பலர் பாராட்டுகின்றனர்.

தம்பி! உள்ளபடி, காங்கிரஸ் நண்பரொருவர், என்னிடம், பாபுவின் பக்திப்பிரபாவம் பற்றிப் பெருமிதத்துடன் எடுத்துப் பேசினார். முழு உண்மையைக் கூறிவிடுகிறேன்; பாபு இராஜேந்திரரின் பெருமை பற்றிப் பேசியதுடன், அந்தக் காங்கிரஸ் நண்பர் நிற்கவில்லை; சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்துவிட்டு, குரலைத் தாழ்த்திச், சிறிது கடுமையையும் வரவழைத்துக் கொண்டு, நேரு பண்டிதருக்கு,

இந்த நேர்த்தியான பண்பு கிடையாது, கண்டகண்ட நாடுகள் செல்வதும், கை குலுக்குகளில் களிப்பதும், அடுக்கடுக்காகச் சிகரெட் புகைப்பதும், அவசியமற்ற அரசியல் பிரச்சினைகளைப் பேசிக் கிடப்பதும், உலா வருவதும், உலகத்தின் தொல்லைகளைத் தாமாகத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு, பாரம் அதிகம்! நேரம் போதாது இவைகளைக் கவனிக்க! - என்று பேசுவதுமாக இருக்கிறார்!! என்ன பயன்! ஆத்மபலம் எங்ஙனம் கிடைக்கும்? ஆத்மபலம் இல்லையேல், அரசு, தர்ம சூன்யமானதாகவன்றோ ஆகிவிடும்; என்றெல்லாம் பேசினார். தம்பி! அவர் ஏசினார், நான், அதனை, பேசினார் என்று சொல்லத்தக்க விதமானதாக்கி இங்குத் தந்திருக்கிறேன்.

காங்கிரஸ்காரரா நேரு பண்டிதரைக் குறித்து ஏசினார் என்று தம்பி! நீ,

கேட்கமாட்டாய் என்பதை நான் அறிவேன். - ஆனால் வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணிக் கொள்ளும் போக்கினர், கேட்பர் - ஏனெனில், அவர்கட்கு இன்றுள்ள காங்கிரசாரின் "இரட்டை நாக்கு'ப் பற்றித் தெரியாதல்லவா!

ஒரு விஷயம், கவனித்திருக்கிறாயா, தம்பி! நமது கழகத் தோழர்கள், எண்ணுவதைப் பேசுகிறார்கள் - உள்ளொன்று வெளியே ஒன்று என்பது கிடையாது. ஆனால், காங்கிரசார், தனியாக நம்மைச் சந்திக்கும்போது பேசுவது ஒன்று; மேடை ஏறி மக்களைப் பார்த்துப் பேசும்போது, மற்றோர்விதமாக!! இதைத்தான், "இரட்டை நாக்கு' என்கிறோம். இது அந்தக் கட்சி, உள்ளுக்குள்ளே குலைந்து வருகிறது, முறிந்து கொண்டு வருகிறது, என்பதைத்தான் காட்டுகிறது.

•

“மன்னர் மன்னவா! தங்களுடைய அறிவுத் தெளிவு கண்டு, அவையிலே கூடி இருந்த அயல்நாட்டுப் பேரறிவாளர் அனைவரும், வியப்புற்றனர்; வாய்திறந்து பேசிடக்கூட அவர் களால் இயலவில்லை’’ - என்று அரசனை அண்டிப் பிழைத்திட வேண்டிய நிலையினன் கூறிடக்கூடும். ஆயின், அவனே தன் ஆருயிர்த் தோழனைக் கண்டு பேசும்போது, உண்மையை உரைத்திடத் துடிக்கிறான்.”என்ன செய்வர், வெளிநாட்டு விற்பன்னர்கள்! அரசபீடத்தில் அமர்ந்து கிடக்கும் மாமிசப் பிண்டத்தைக் கண்டனர்! வெறிச்சென்ற பார்வை! காரணமற்ற கண் சிமிட்டல்! பொருளற்ற பேச்சு! கவர்ச்சியற்ற சிரிப்பு! - இவைகளைக் கண்டனர். இந்த உருவாரத்திடம் உரையாடி யாது பயன்? என்றெண்ணினர் - ஏதும் பேசாது எழுந்து

சென்றனர்.'' என்று கூறுகிறான்,

அஃதேபோலத்தான், இன்று, காங்கிரஸ் தலைவர்களைக் குறித்து உண்மை ஊழியர்கள், கருதுகின்றனர். வெளியே சொன்னால், வெட்கக்கேடல்லவா!!

அதுபோலவே, ஊழியர்களைப்பற்றிக், காங்கிரஸ் தலைவர் களுக்கும், மிகமிக மட்டமான கருத்துத்தான்.

பெரியார், அடிக்கடி கூறுவார் - முன்பெல்லாம் - இப்போது எப்படியோ தெரியாது - எவன் இருக்கிறான் யோக்யன், நம்முடன்? என்று.

இதை, சொத்து சுகம் இழந்தவன், குடும்பத் தொடர்பினைக் கூட அறுத்துக்கொண்டவன், ஊர்ப்பகை கிளம்பினாலும் கவலைப்படாமல், உண்மையான தொண்டாற்றுபவன், அனைவரும், பதிலேதும் கூறாமல்,

கேட்டுக்கொள்வர்.

தம்பி! அதுபோலவே, இப்போது, மிகப் பெரிய காங்கிரஸ் தலைவர்கள், தமது தோழர்கள் - துணைப் பணியாளர்கள் - தொண்டர்கள் - ஆகியோர்பற்றி, மிகத் துச்சமாகப் பேசுவதை, நானே கேட்டிருக்கிறேன்.

இருசாராரும், ஒருவரை ஒருவர் மதித்து, நேசித்து, வந்த காலம் போயேவிட்டது.

இப்போது இருப்பது, கூட்டுறவுகூட அல்ல; ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காமல் இருந்து தீரவேண்டிய நிர்ப்பந்தத்தை இருசாராரும் உணர்ந்துகொண்டு, ஒரே முகாமில் இருக்கிறார்கள் என்றுதான், சொல்ல வேண்டும்.

"தெரியுமா உங்களுக்கு ஒரு விஷயம்'' என்று தோழமை உணர்ச்சி வழிந்திடும்

போக்கிலே காங்கிரஸ் வட்டாரத்தினர் ஒருவர் - மிகப்பெரிய நிலையில் உள்ளவர் - அமைச்சர் என்றே வைத்துக் கொள்வேன், தம்பி! என்னிடம் ஒரு நாள் பேசத் தொடங்கினார்.

"என்ன?'' என்று நான் கேட்டேன் - எழுந்த ஆவலை அடக்கியபடி.

"சமுதாய நலத் திட்டத்தின்படி கட்டுகிறார்களே, வீடுகள், அந்த இலட்சணம் எப்படி இருக்கிறது தெரியுமா? நானே அப்படிப்பட்ட வீட்டைப் பார்த்தேன். மகா மட்டம்! உளுத்துப் போன சாமான்கள் போட்டுக் கட்டப்பட்டிருந்தது. சுவரிலே, கைவைத்து அழுத்தினால், பள்ளம் விழுகிறது. பாளம் பாளமாக வெடிப்புகள் உதிருகின்றன. பணம் பாழாகிறது. ஒரே மோசடி, வீண் விளம்பரத்துக்குத்தான் பயன்படுகிறது'' - என்று அவர் கூறினார். - என்னிடம் - தனிமையில் - மெத்த உருக்கத்துடன்!

ஆனால், மேடை மீது நின்று பேசும்போது பார்த்தால், தேன் கலந்த சொற்கள்! தீப்பொறி பறக்கும் முழக்கம்!!

இரட்டை நாக்கு, தம்பி! - ஒன்று, உண்மை பேச! மற்றொன்று, பிழைக்கும் வழி பேச!!

வேறோர் பெரிய காங்கிரஸ் தலைவர் - மிகப் பெரியவர், என்னிடமே சொன்னார்:

“யாரை நம்பினாலும் நம்பலாம், உத்திரப்பிரதேசத்தானை மட்டும் நம்பவே கூடாது. ஏற்படுகிற அரசியல் குழப்பம், சச்சரவு அவ்வளவும், உத்திரப்பிரதேசத்துக்காரரால்தான்! இந்தியாவிலே மட்டுமல்ல, பாகிஸ்தானில் கிளம்பும் சச்சரவுகள் கூட உத்தரப் பிரதேசத்தார் கிளப்பிவிடுவதுதான். நான்கூட ஒரு தடவை சொல்லிவிட்டேன், நாட்டை அண்ணாதுரை அல்ல பிரிக்கப்

போவது; உத்திரப்பிரதேசத்துக்காரர்கள் செய்கிற"ரகளை' யால்தான், நாடு பிரியப் போகிறது, என்று சொல்லிவிட்டேன்.''

தம்பி! அச்சம் தயை தாட்சணியமற்ற பேச்சல்லவா இது. ஆனால், சொன்னவர், என்னிடம், தனிமையில் இதைச் சொன்னார் - மேடை ஏறினாலோ தொடை தட்டிக், கழகத்தை வம்புச்சண்டைக்கே இழுக்கிறார். "வடக்காவது தெற்காவது! இதெல்லாம் என்ன பேச்சு! வேண்டியது என்ன இப்போது? வடக்கு, தெற்கா! சோறு வேண்டும் இப்போது - வயிராறச் சோறு!'' - என்று பேசுகிறார்.

இரட்டை நாக்கினர் இதுபோல நிரம்பியுள்ளனர் காங்கிரஸ் கட்சியில்.

இந்த மனப்பான்மையுடன் அவர்களில் பலருக்கு, தமக் கென்று தயாரித்து அளிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களில், எது

உள்ளபடி ஏற்புடையது என்பதிலே ஒரே குழப்பம்.

அவர்களை இன்று ஒரே உருவாக்கிக் காட்டுவது, கொள்கையில் உள்ள ஒருமித்த கருத்துமல்ல, நம்பிக்கையுமல்ல - ஓருருவாக இருந்தால் மட்டுமே பேருருவாகத் தெரிந்திட முடியும் - அந்தப் பேருருக்கண்டுதான், மாற்றுக் கட்சியினர், மருண்டிடவேண்டும் - அவர்களுக்கு அந்த மருட்சி இருக்கிற வரையில்தான், நமக்கு ஆட்சி - இல்லையேல் வீழ்ச்சிதான் - இந்த எண்ணம்தான், இன்று காங்கிரசாரைப் பிணைத்து இருக்கிறது.

ஒரு அரசரிடம் குற்றவேல் புரிந்துகொண்டே, அவரிடம் பற்று இன்றிப், பகையை உள்ளுக்குள் வைத்துக்கொண்டு, பணிந்து கிடப்பதுபோலப் பாவனை காட்டிக்கொண்டு, அதே போது எப்போது வீழ்வான், கைக்கொட்டிச் சிரிக்கலாம் என்று

உள்ளூர எதிர்பார்த்துக் கொண்டு இருந்திடும், எடுபிடிகள், எதிரிப்படையினரைவிட, அந்த அரசுக்கு ஆபத்தல்லவா! அது இன்றுள்ள காங்கிரஸ் நிலை. இதேநிலை, பயங்கரமான புரட்சி வெடிக்குமுன்பு, பிரான்சு நாட்டிலே இருந்தது.

காவலனும், அவனுக்குற்ற தோழர்களாக விளங்கிய கனவான்களும் நடாத்திய காமக்களியாட்டங்களைக் கண்டு, வெகுண்டனர், உழைத்தும் பிழைக்க முடியாமல், உழன்று கிடந்த மக்கள்! எனினும், கோபத்தை வெளியே தெரியவிட மாட்டார்கள். அது மட்டுமல்ல, மன்னன் நடத்தும் காமக் களியாட்டத்தை, கலை என்றுகூடக் கூறிப் பாராட்டினர்! காய்ந்து கிடக்கும் இந்தப் பாறை நெருப்பைக் கக்கும் என்று கூறினால், யார் எளிதில் நம்புவர்! குமுறிக் கொதித்து, வெடித்து, நெருப்புக்

குழம்பு வேகமாகப் பீறிட்டுக்கொண்டு வெளியே வரும்போதுதான், எரிமலையின் அழிக்கும் சக்தி தெரிகிறது. அதுபோன்றே, இளித்துக் கிடக்கும் இந்த மக்கள், என்ன செய்யவல்லார்! இறையே! எமைக் காத்தருளே! என்று தொழுது கிடக்கும் இந்த எலும்புந் தோலுமாயுள்ளவர்கள், எங்ஙனம் நம்மை எதிர்ப்பர்! நமது மணிமுடி விடு ஒளி கண்டு, ஆச்சரியத்தால், வாய்பிளந்து நிற்கும் இந்தப் பராரிகள், படைபலம்கொண்ட நம்மை எதிர்க்கும் துணிவினை எப்படிப் பெற முடியும்! - என்றெல்லாம் எண்ணியன்றோ வேந்தர்கள் ஏமாந்தனர். அதுபோலவே, காங்கிரஸ் கட்சியின் மூலவர்கள், தம்மை நத்திப் பிழைப்போர், தெந்தினம் பாடி நிற்போர், மாலை அணிவித்து வரவேற்போர், மனுக்கள் கொடுத்து மண்டியிடுவோர், வளைவுகள் அமைத்து வாழ்த்துக் கூறுவோர், ஆகியவர்கள்,

என்றென்றும் அடிமைகளாய், அறிவாற்றலற்ற வர்களாய் இருப்பர், எதிர்த்திட இயலாது, குனிந்து நிற்க, வளைந்து நிற்க, வீழ்ந்து வணங்க மட்டுமே அறிவர், நிமிர்ந்து நின்று உரிமை கேட்டிடும் வகை அறியார் - என்றுதான் எண்ணிக் கொண்டுள்ளனர்.

அது போலிருப்பதுதான் "பாமரர்' வாடிக்கை! ஆனால், அவர்கள், மிகக் கூர்மையாக, மற்றொன்றைக் கவனித்துக் கொண்டே இருப்பர் - ஆட்டிப் படைப்போர், ஆதிக்கக்காரர் - எப்போது இளைப்பாலோ, களைப்பாலோ, திடமிழந்து தடுமாறப் போகிறார்கள் - அந்தச் சமயம் வந்ததும், பாய்ந்து கீழே சாய்த்து பழிக்குப்பழி வாங்கிடவேண்டும் - என்று காத்துக் கிடப்பர்! வகை அறியாதார் அல்ல, பாமரர் - காலம் வரட்டும் என்று காத்திருக்கும் பொறுமைசாலிகள்! அறிவற்றவர்கள் அல்ல.

மக்கள் - ஆத்திரத்தை அடக்கிக்கொள்ளக் கற்றவர்கள்! பிடி சாம்பலாகிப் போனவர்கள் அல்ல, அந்த மக்கள் - நீறுபூத்த நெருப்பாகி நிற்பவர்கள்!

இதை, வீழ்ந்த அரசுகள், விரண்டோடிய மன்னர்கள், வெட்டுண்ட தலைகள், காட்டுகின்றன,

இப்போது படித்தாலும், தம்பி! எப்படி எப்படியோ எண்ணம் செல்கிறது - அப்பாவிகள் என்று ஆணவக்காரர் எண்ணிக்கொண்டிருந்த நிலையில் இருந்த மக்கள், காலம் பிறந்தது என்று தெரிந்ததும், ஆர்த்தெழுந்து ஆணவ அரசு களைத் தூள் தூளாக்கிய வீரக் காரைகளைப் படிக்கும்போது.

பிரான்சு நாட்டிலே, வெட்ட வெளியை விழாப்பந்த லாக்கி, விருந்து ஏற்பாடு செய்வானாம், மன்னன்! அதைக் கட்டணம்

கொடுத்துக் கண்டு மகிழ வருவராம், மக்கள்!! ஆரணங்குகள் உண்டு மிச்சமானதை ஆற்றலரசர்கள் உண்பதும், "அதரம் பட்டது எனக்கு! வேண்டாம், அவள் கரம் பட்டதே போதும் எனக்கு'- என்று சீமாட்டி முன் நின்று சல்லாபச் சண்டையிடும் சீமான்கள் களிநடமாடுவது - இவை காட்சிகள் - கட்டணம் கொடுத்துக் காண வேண்டிய காட்சிகள்!!

இதே மக்கள்தான், அதிலும், பெண்கள், படை வரிசை அமைத்துக் கொண்டு, கூட்டுக்கோலும், தட்டு முறங்களும் ஏரோட்டும் கோலும், இன்ன பிறவும் ஆயுதங்களாகக் கொண்டு, படை எடுப்பு நடத்தி, அரண்மனையில் நுழைந்து ஆங்கு காணக்கிடக்கும் போகப் பொருட்களை எல்லாம், தொட்டும் இழுத்தும், உடைத்தும் உருக்குலைத்தும், வேடிக்கை காட்டினர்!!

நல்ல வேளையாகக் காமராஜருக்கு

இந்தக் காதைகள் தெரியாது - அவர் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையோடு தமது படிப்பை நிறுத்திக்கொண்டவர், என்கிறார்கள். எனவே அவருக்கு, அடங்கிக் கிடக்கும் மக்கள் ஆர்த்தெழக் கூடும், பணிந்து கிடக்கும் பாமரர், பிறிதோர் நாள் பயங்கரப் புரட்சி நடத்திடக்கூடும் என்பதுபற்றியே நினைப்பே எழாது.

இதனை அறிந்துள்ள மற்ற அமைச்சர்களோ, அறிந்ததைக் கூறார் - ஏனோவெனில், அவர்களுக்குப் பாபம், சங்கடமாகத் தானே இருக்கும் - என்ன கற்று என்ன பலன்! நாம் இவருக்குக் கீழ்தானே!! - என்று எண்ணும்போது அவர்களுக்குக் கற்றதை மறந்தால் நல்லது என்றுகூடத் தோன்றக்கூடும்.

•

இந்நிலையில், இன்றுள்ள காங்கிரசில், பாபு பத்ரிநாத் சென்றதைப் பாராட்டி, அது அவருடைய பக்திப் பிரபாவத்தை, பாரதப் பண்பாட்டைக் காட்டுவதாகும் என்று கனிவுடன் கூறி, அதேபோது, நேரு பண்டிதர், உலகிலே பல்வேறு இடங்கட்கு உலாவருதல் குறித்துக், காங்கிரசார் ஒருவர், கேலியாகப் பேசியதிலே வியப்பில்லை அல்லவா? ஆனால், இதிலே வியப்பு இல்லை என்பதை எடுத்துக்காட்ட அல்ல நான் இதனைக் குறிப்பிடுவது, எனக்கு, அந்தக் காங்கிரஸ் நண்பருக்குக் கொள்கையில் பிடித்தமும் அழுத்தமும் எந்த அளவு இருக்கிறது என்று தெரிந்து கொள்ளவேண்டும் என்பதிலே, சுவை கலந்த ஒரு ஆவல். எனவே நான், அவரிடம், பேச்சைத் தொடர்ந்தேன்.

•

"ஆமாம்! திவ்ய க்ஷேத்திரங்களைத்

தரிசிப்பது, பாரதப் பண்பாடு என்கிறீர். இருக்கட்டும், இது, பாபு இராஜேந்திரருக்கு இருக்கிறது; ஆனால் நேரு பண்டிதரிடம் இல்லை என்கிறீர். அதுவும் சரி. ஆனால் இந்த விஷயத்தில், காந்தியார் பற்றி உமது கருத்து என்ன?'' - என்று கேட்டேன்.

நண்பருக்கு மெத்த மகிழ்ச்சி.

"உண்மையாகச் சொல்கிறேன் - இப்போது எங்கள் காங்கிரசார், காந்தியாரை அறவே மறந்துவிட்டார்கள் - உங்கள் கழகத்துக்காரர்தான், அவரைப்பற்றி, மக்களிடம் பேசி வருகிறார்கள்'' என்றார் அந்த நண்பர்.

அவருடைய அந்த முன்னுரைக்குப், புன்னகையன்றி வேறென்ன பதிலுரை இருக்க முடியும். தந்தேன் - பெற்றுக் கொண்டார் - பேச்சைத் தொடங்கினார்.

காந்தியார், பாரதப் பண்பாடு தழைக்கவேண்டும், என்பதற்காகவேதான், "ஸ்வராஜ்யம்' கேட்டார் - பெற்றுத் தந்தார்! மகா பக்திமானல்லவோ, அவர்! இராம பக்தர்! திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசிப்பது, இந்து தர்மம் என்பதை நன்கு உணர்ந்தவரல்லவா!' - என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

"மன்னிக்க வேண்டும்! காந்தியார், திவ்ய க்ஷேத்திரங்களைப் பற்றி, மிகக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்'' என்று நான் சொன்னேன்.

"ஆரம்பமாகிவிட்டதா, கழகம்!!' - என்று கோபமும் கேலியும் கலந்த குரலில் பேசலானார்.

"கோபம் கூடாது! காந்தியாருடைய மிக முக்கியமான உபதேசமே அது. நான் கூறுவதைக் கேளும். காந்தியார்,

திவ்ய க்ஷேத்திரங்களிலே காணப்படும், ஆபாசங்களைப் பார்த்து விட்டு மனம் நொந்து போனவர்'' - என்றேன்.

"உம்மிடம், வந்து சொன்னாராக்கும்'' - என்று குத்தலானார், நண்பர். கோபம் இருக்குமல்லவா, அவருக்கு."என்னிடம் மட்டுமல்ல - எல்லோரிடமும் சொல்ல வேண்டும் என்பதற்காக, காந்தியார், எழுதியே வைத்துவிட்டார். படிக்கிறேன்; பதறாமல், கேளும்'' - என்று கூறிவிட்டுக் காந்தியாரின் சுயசரிதையை எடுத்தேன்.

"காந்தியார், அரித்துவாரத்தில், நடைபெற்ற கும்பமேளா பார்க்கச் சென்றார்...!'' - என்று நான் துவக்கினேன். நண்பர்,"காந்தியாருக்கு, திவ்விய க்ஷேத்திரம் பிடிக்காது என்றல்லவா சொன்னாய்;'' என்றார். "சிறிதளவு பொறுமை காட்டும்'' என்று கூறிவிட்டுச் சுயசரிதையைப்

படிக்கலானேன்.

”சுற்றித் திரிந்ததில் பலவிஷயங்களைக் கவனித்தேன். யாத்திரீகர்களிடம் பக்தியைக் காட்டிலும் கவனக் குறைவும், வெளிவேஷமும், துப்புக்கெட்ட தனமுமே அதிகமாக இருந்ததைப் பார்த்தேன். சாதுக்கள் கூட்டம் கூட்டமாக அங்கே வந்திருந்தார்கள். உலக வாழ்க்கையின் இன்பங்களையெல்லாம் அனுபவிப்பதற்கென்று பிறந்திருப்பவர்களாகவே அவர்கள் தோன்றினர்.''

இதை நான் படித்துவிட்டு, நண்பரின் முகத்தைக் கவனித்தேன். வேதனைக் குறிகள் தென்பட்டன.

திவ்ய க்ஷேத்திரங்களிலே, சாதுக்கூட்டம் இருந்து கொண்டு, ஆபாசமாக நடந்துகொள்கிறார்கள் என்பதை

காந்தியார், எத்துணை நகைச்சுவையுடன் கூறியிருக்கிறார், கவனித்தீர்களா. . .

”உலக வாழ்க்கையின் இன்பங்களை எல்லாம் அனுபவிப்பதற்கு

என்றே பிறந்திருப்பவர்களாகவே அவர்கள் தோன்றினர்.’’

இதை நாம், விரிவாக, விளக்கமாகப் பேசவும் வேண்டுமா...

மும்முலம் நீக்கினோர், ஐம்புலனை அடக்கினோர், உலகைத் துறந்தோர், கனியேனும் செங்காயேனும் கந்தமூலங் களேனும் உண்டு இருப்போர் என்று, நாம் பெருமையாகப் பேசுகிறோம். ஆனால், அரித்துவாரம், ரி□கேசம் ஆகிய இடங்களிலே இருந்துவரும் சாதுக்கள், இன்பங்களை அனுபவிக்கவே பிறந்தவர்கள் என்று காந்தியாருக்குத் தோன்றிற்று! ஐயா!

காந்தியார், பக்திமான், சனாதனி, இந்து - எனினும், நேர்மை, தூய்மை, வாய்மை, இவைகளில் அசைக்க முடியாத பற்று வைத்திருந்தவர் - எனவேதான், கட்டியிருப்பது காவி எனினும் உலவுவது கங்கைக் கரை என்றாலும், பெயர் சாது சன்யாசி என்று இருப்பினும், அவர்களுடைய செயல் கண்டு, மனம் வெதும்பி, எழுதினார். இவர்களைத் தரிசிக்கவா, பாபு இராஜேந்திரர் போகவேண்டும்? - என்று நான் கேட்டேன். நண்பருக்குக் கோபம் குறைந்தது; வருத்தம் மேலிட்டது.

காந்தியார், மதத்தை வாணிபச் சரக்காக்கிக்கொள்ள வில்லை. எனவேதான், உள்ளதை உள்ளபடி உரைத்தார் - அதனைக் கேட்டுப் பலருக்கு, திவ்ய க்ஷேத்திரங்களின் மீது வெறுப்பு ஏற்படும் என்பது அவருக்குத் தெரியும் - எனினும், பொய்யும் புனைசுருட்டும்

எந்தப் போர்வையிலே இருப்பினும், அதனை வெளிப்படுத்தித் தீரவேண்டும் என்று அந்தத் தூயவர் கருதினார் - எனவேதான், காவி உடையில் உலவியவர்களின் கபடத்தைக் கண்டித்தார்? இன்றோ, கதர் உடையில் இருந்து கொண்டு, எத்துணை அக்ரமம் செய்தாலும், கண்டிக்கப் பலர் கூச்சப்படுகின்றனர், தண்டிக்கச் சில அதிகாரிகள் அச்சப் படுகிறார்கள்!'' என்று நான் கூறினேன். நண்பர், நீண்ட பெருமூச்செறிந்தார்.

"நண்பரே! ஐந்து கால் பசு பார்த்திருக்கிறீரா?'' என்று நான் கேட்டேன். அவர் திடுக்கிட்டுப் போய்,"என்னய்யா ஐந்தாண்டுத் திட்டங்களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோமே. அது போதாதா! ஐந்து கால் பசு வேறு பார்க்கவேண்டுமா?'' என்று கேட்டார்.

”காந்தியார், பார்த்தாராம்’’ என்றேன் நான்.

”நல்ல வேளை, ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்க்கவில்லை அவர்! ஐந்து கால் பசுவைப் பார்த்தார் போலும். உம்! அது என்ன சொல்லும், கேட்போம்.’’ என்றார் ஆயாசத்துடன்.

“சொல்வதாவது! படிக்கிறேன். கேளும்’’ என்று கூறிவிட்டு சுயசரிதையைப் பிரித்தேன்.”இங்கே ஐந்து கால்களோடு கூடிய ஒரு பசுவையும் பார்த்தேன்.

நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். ஆனால் விஷயம் தெரிந்தவர்கள் சீக்கிரத்தில் எனக்கு ஏற்பட்டிருந்த பிரமையைப் போக்கிவிட்டனர். அந்தப் பரிதாபகரமான ஐந்து கால் பசு, கொடியவர்களின் பேராசைக்குப் பலியானதேயன்றி, வேறு அல்ல. உயிருடன் இருந்த ஒரு கன்றின்

காலைத் துண்டித்து, இப்பசுவின் தோலில் பொருத்தியிருந்தார்கள். அதுதான் இந்த ஐந்தாவது காலே ஒழிய, வேறு ஒன்றும் இல்லை என்பதை அறிந்தேன்! இவ்வித இரட்டைக் கொடுமையின் பயனைக் கொண்டு, ஒன்றும் அறியாதவர்களின் பணத்தைப் பறித்து வந்தார்கள். இந்த ஐந்து கால் பசுவைப் பார்க்க ஆவல் கொள்ளாத இந்துவே இல்லை. இந்த அற்புதப் பசுவிற்குத் தாராளமாகத் தருமம் செய்யாத இந்துவும் இல்லை.''

தம்பி! காங்கிரஸ் நண்பர், வெடுக்கென்று, என் கரத்திலி ருந்து புத்தகத்தைப் பறித்துக்கொண்டார் - கேட்டிருந்தாலே கொடுத்திருப்பேன் - அவருக்கு ஆத்திரம், அவசரம் - ஐயப்பாடு, நான் உண்மையில், புத்தகத்தைத்தான் படிக்கிறேனா, அல்லது இட்டுக்கட்டிப் பேசுகிறேனா, என்று சந்தேகம்.

புத்தகத்தைப் பார்த்தார் - உண்மை அவர்

உள்ளத்தை உலுக்கிவிட்டது. வேதனை அடைந்தார்.

”உலக இன்பத்தை அனுபவிக்கும் சாதுக்கள்! அக்ரமமான புரட்டு நடத்திப் பணம் பறிக்கும் எத்தர்கள்! அற்புதம் என்று நம்பி, பணம் பறிகொடுத்து பூஜித்துக் கிடக்கும் அப்பாவிகள்!! - திருத்தலங்களில் காணக்கிடப்பவை இவை!! இங்கு சென்று வருவதால் என்ன பலன்?’’ என்று நான் கேட்டேன் - அவர் பதில் கூறுவார், என்ற எண்ணத்துடன் அல்ல! அவர் மனம் மாறுவது நன்கு தெரிந்ததால்.

நண்பரே! புரட்டுக்கும் புனிதத் தன்மைக்கும் வித்தியாசம் தெரியாமல், காவி கட்டியவனைக் கடவுள் அருள் பெற்றோன் என்றெண்ணிக் கருத்திழந்து கிடக்கும், இந்த மக்களுக்கு, மத வெறி எந்த அளவு இருந்ததாம் தெரியுமா?

கல்கத்தாவிலிருந்து அரித்துவாரம் செல்லும் இரயில், மிக நெருக்கடியானதாம் - வெப்பம் கொல்லுமாம். ஆனால் அப்போதும், இந்து, இந்து தரும் தண்ணீரைத்தான் சாப்பிடுவானாம்.

காந்தியார் எழுதுகிறார், இதைக் குறித்து; கேளும்:

"இத்தகைய பிரயாணத்தினால் ஏற்பட்ட நீர் வேட்கையில் கூட, வைதிக இந்துக்கள் முஸ்லீம்களிடமிருந்து தண்ணீர் வாங்கிக் குடிக்க மறுத்தனர். இந்து தண்ணீர் கிடைக்கும் வரையில் அவர்கள் காத்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் இதே இந்துக்கள் நோயுற்றுவிடும்போது, டாக்டர் தங்களுக்குக் கொடுக்கும் சாராயத்தையும் மாட்டிறைச்சிச் சூப்பையும் குடிக்கத் தயங்குவதில்லை. தங்களுக்கு மருந்துத் தண்ணீர் கொடுப்பவர் கிருஸ்தவக்

கம்பவுண்டரா முஸ்லீம் கம்பவுண்டரா என்பதைக் குறித்து விசாரிப்பதும் இல்லை என்பது கவனிக்க வேண்டியதாகும்.''

நண்பருக்கு, மேலும் விளக்கங்கள் தரத் தேவையில்லை என்று தோன்றிற்று; எனவே, தம்பி, வேறு பகுதிகளை, படித்து மட்டும் காட்டினேன் - விளக்கம் கூறாமல். அந்தப் பகுதிகள் இவை.

"இயற்கைக் காட்சிகள் மிகுந்த இடங்களை மனிதர்கள் உபயோகித்து வந்த விதங்கள் என் மனத்திற்குச் சங்கடத்தை உண்டாக்கின. அரித்துவாரத்தைப் போல, ரி□ கேசத்திலும் மக்கள் ரஸ்தாக்களையும், அழகிய கங்கைக் கரைகளையும் ஆபாசப்படுத்தி வந்தனர். கங்கையின் புனித நீரையும் அசுத்தப் படுத்த அவர்கள் தயங்கவில்லை. கொஞ்சத்தூரம் போனால் ஜன நடமாட்டமில்லாத இடங்களுக்கு எளிதாகப் போயிருக்கக்

கூடுமெனினும், அப்படிச் செய்யாமல், பாட்டைகளிலும் நதிக் கரைகளிலும் மக்கள் மலஜலம் கழித்ததைக் கண்டு என் மனம் அதிக வேதனை அடைந்தது.''

தம்பி! காந்தியாருக்கு இருந்துவந்த அழுத்தமான மத நம்பிக்கையை, நான் குறிப்பிட்ட காங்கிரஸ் நண்பர் எடுத்துக் காட்டி, பாபு இராசேந்திர பிரசாத் அத்தகைய பாரதப் பண்பாடு வழி நிற்பவர் என்று பெருமிதத்துடன் பேசினார் - ஆனால், காந்தியார், தமது சுயசரிதையில் ஒளிவு மறைவு இன்றி, மதத்தின் பெயரால் நடத்தப்படும் மோசடிகளையும், பக்தி காரணமாகப் பாமரர், ஐந்து கால் பசுவைப் பூஜிப்பதுபோன்ற அளவு ஏமாளிகளாகிப் போவதையும், எடுத்துக்காட்டியிருப்பதை நான் படித்துக்காட்டவே, என்ன எண்ணிக்கொண்டாரோ தெரிய

வில்லை, மேற்கொண்டு பாபுபற்றியோ, பத்ரிநாத்பற்றியோ, பேச்சை எடுக்கவில்லை.

•

மத நம்பிக்கையைக் கைமுதலாக்கிக்கொண்டு, ஆதிக்கம் செலுத்த விரும்புவோர், கொழுக்கத் துடிப்போர் தவிர, மற்ற எவரும், எத்துணை மத நம்பிக்கைக் கொண்டவர்களாக இருப்பினும், பொய்யும் புரட்டும், மூடத்தனமும் ஏமாற்று வித்தையும், திருத்தலங்களில் காணப்படின், மூடிமறைக்காமல், கண்டித்து வந்தனர். அவ்விதம் கண்டித்தவர்களை, வன்கணாளர்கள், விட்டுவைத்ததுமில்லை.

அரித்துவாரம், ரி□கேசம், காசிபோன்ற க்ஷேத்திரங்களில் நடைபெற்ற புரட்டுகளையும், நெளிந்த ஆபாசங்களையும், எடுத்துக் காட்டியதுபோலவே, காந்தியார்,

காசியிலே உள்ள கண்றாவிக் காட்சியையும், கல்கத்தாவில் காளிமாதாவுக்குத் தரப்படும் உயிர்ப்பலிக் கொடுமையையும், எடுத்துக்காட்டிக் கண்டித்தார்.

•

சுயமரியாதைக்காரரின் கண்டனம் என்றால், வெகு எளிதாக, நாத்திகப் பட்டம் கட்டிப், பொதுமக்களை அவர்களின்மீது ஏவிவிடலாம் என்று, மதத்தால் மந்தகாச வாழ்வு நடாத்துவோர், எண்ணிக்கொள்வர்.

ஆனால், காந்தியாரோ, மதவாதி; சனாதனி; இராம பக்தர்; வைஷ்ணவ ஜனதோ என்று பாடிக் கேட்போர் உள்ளத்தை உருக்கி, அனைவரையும் பக்தர்களாக்கவே பாடுபட்டவர் அவர்; மதத்தைக் காட்டி எத்தர்கள் ஏமாளிகளைச் சுரண்டிக் கொழுத்திடுவதை எடுத்துக்காட்டிக் கண்டிக்கும்போது, என்ன

செய்ய முடியும்? நாத்திகம் பேசுகிறார் என்று கூறினால், மக்கள் நம்பமாட்டார்கள். எனவே, அவரை ஒழித்துக்கட்டினால் மட்டுமே, தங்கள் சுறண்டல் தங்கு தடையின்றி நடைபெறும் என்ற முடிவுக்கு வந்தனர். மூன்று முறை சுட்டு அல்லவா மதவெறி, தன் உண்மை வடிவத்தைக் காட்டி அன்புருவாக அண்ணலின் உயிர் குடித்தது.

•

தம்பி! இந்தத் திங்கள் அவருக்கு ”ஜெயந்தி’ நடத்தினார்கள் காங்கிரஸ் கட்சியினர் - அந்த மேடைகளிலே ரி□கேசிலும் அரித்துவாரத்திலும், காளிகட்டத்திலும் காசியிலும் காணப் பட்ட கபடம், கயமைத்தனம், ஆபாசம், அக்கிரமம், இவைகளைக் கண்டித்த காந்தியாரைக் காட்டி இருக்க மாட்டார்கள். அந்த காந்தியாரைத்தான் கொன்று போட்டாயிற்றே! இப்போது அவர்கள்

காட்டும் காந்தியார், இவர்களுக்கு ஓட்டு வாங்கித்தரும் கருவியாக்கப்பட்ட காந்தியார். நான், தம்பி! அந்த காங்கிரஸ் நண்பருக்குக் காட்டிய காந்தியார், காசியைக் கண்டு, மனம் குமுறியதையும் கூறுகிறேன், நாட்டினருக்கு எடுத்துக் கூறும், நல்ல தம்பியாயிற்றே, நீ, அதனால்.

•

காசி! கர்மம் யாவும் தீருமாம், அந்தத் திருத்தலம் சென்றால். புனிதக் கங்கை, பாபம் போக்கும் - காசி விசுவநாதரின் தரிசனம், புண்யம் தரும். காசியைத் தரிசித்த பிறகுதான், ஒருவன், பூரண இந்து ஆகிறான் என்பர், வைதிகர்கள்.

அத்தகைய காசிக்குக் காந்தியார், சென்றார் - பயபக்தி யுடன் - தூய உள்ளத்துடன், என்ன கண்டார்? நான் கூறத் தேவையில்லை,

அவரே, விளக்கமாக எழுதிவிட்டிருக்கிறார். துவக்கத்திலேயே, தமது துக்கத்தைக் காட்டுகிறார்.

"நான் சுவாமி தரிசனத்துக்காக, காசி விசுவநாதர் கோயிலுக்குப் போனேன்.

"நான் கண்டவை எனக்கு மனவேதனையைத் தந்தன.

"நான் அடைந்த ஏமாற்றம், நான் எதிர்பார்த்திருந்ததை விடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.''

காந்தியார், ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்ட இந்து. ஆனால் வேறு பலர், மதப்புரட்டுகளைக் கண்டறிந்தவர்கள், திருத்தலங் களிலேயே நடைபெறும் அக்கிரம ஆபாசங்களை அம்பலப் படுத்தி இருந்தனர். எனவே, காந்தியார் காசி செல்லும்போதே, அவர் ஓரளவு, அக்கிரமம் அங்கு இருக்கக்கூடும் என்று எதிர்பார்த்துத்

தான் சென்றார்.

ஆனால் அவர் கூறுவதுபோல, அவர் அங்கு கண்டது, எதிர்பார்த்ததைவிடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.

மகன், சுயமரியாதை இயக்கம், காசி, இராமேஸ்வரம் போவது, காவடி தூக்குவது, வீதியில் புரள்வது போன்றவைகள், காட்டுமிராண்டித்தனம் என்று ஊருக்குக் கூறுகிறான். நான் மட்டும், அவன் பேச்சைத் துச்சமென்று கருதலாமா? அதனால் தான், காசி போகிறேன் என்று காமாட்சி சொன்னபோது, ஆசையை அடக்கிக் கொண்டு, போய்வாடி அம்மா! என்று சொல்லி அனுப்பினேன். அவள் கொடுத்து வைத்தவள், காசி க்ஷேத்திரம் செல்கிறாள்; நமக்குத்தான் அந்தப் பாக்கியம் இல்லையே, என்று தம்பி! வீட்டிலே பாட்டியோ அத்தையோ, பெரியம்மாவோ பிறரோ, மனச்சங்கடத்தோடு

இருப்பார் களானால், அவர்களை ஒருமுறை, காசியைக் காணச் சொல்லு - இங்கு இருந்தபடியே - காந்தியார் கண்ட காசியை - அவர் சுயசரிதையில் சித்தரிக்கப்பட்டுள்ள காசியை.

காந்தியார் அழைக்கிறார், காசியைக் காண!

"குறுகலான வழுக்கும் ஒரு சந்தின் வழியாகவே கோயிலுக்குப் போகவேண்டியிருந்தது.

அங்கோ அமைதி என்பதே இல்லை.

ஈக்கள் ஏகமாக மொய்த்தன.

கடைக்காரர்களும் யாத்திரிகர்களும் போட்ட சப்தம் சகிக்கமுடியாததாக இருந்தது.

நான் கோயிலுக்குள்ளே போனதும், வாசலில் அழுகி நாற்றமெடுத்த பூக்குவியலே

எனக்கு வரவேற்பளித்தது.

உயர்ந்த சலவைக் கற்களாலான தரை; ஆனால், அழகு உணர்ச்சியே இல்லாத ஒரு பக்தர், சலவைக் கற்களை ஆங்காங்கே உடைத்து அவற்றில் ரூபாய் நாணயங்களைப் பதித்துவிட்டார். அந்த ரூபாய்கள் அழுக்குச் சேர்வதற்குச் சிறந்த இடங்கள் ஆகிவிட்டன.

ஞானவாவி (ஞானக்கிணறு) பக்கத்தில் போனேன். அங்கே கடவுளைக் காணலாம் என்று தேடினேன்.

ஆனால் நான் காணவில்லை. ஆகையால், எனக்கு மனநிலை நன்றாக இல்லை. ஞான வாவியைச் சுற்றிலும்கூட ஆபாசமாகவே இருப்பதைக் கண்டேன். தட்சணை கொடுக்கவே எனக்கு விருப்பமில்லை. ஆகையால், ஒரு தம்படி கொடுத்தேன்.

அங்கே இருந்த பண்டாவுக்குக் கோபம்

வந்து, அந்தத் தம்படியை வீசி எறிந்துவிட்டார்.

”இந்த அவமரியாதை உன்னை நேரே நரகத்திற்குத்தான் கொண்டுபோகும்’’ என்று கூறி என்னைச் சபித்தார்.

கவனித்தனையா, தம்பி! நாம் பகுத்தறிவாளர் என்பதனால், பதறிப், பழமையாளர் நம்மீது பாய்கின்றனர், தூற்றுகின்றனர் என்பதைப் பார்க்கும்பொழுது, நம்மிலே துடிப்புள்ளவர்கள் மெத்தக் கோபப்படுகிறார்களல்லவா!

பிரம்மத் துவேஷி!

வேத நிந்தகன்!

நாஸ்திகன்!

நாக்கு அழுகிவிடும்!

ரௌரவாதி நரகம் போவாய்!

கசடன்!

அசடன்!

அற்பாயுசு!

தம்பி! இவை தமிழகத்திலே, இப்பொழுது, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத், துணிவை வரவழைத்துக்கொண்டு, பட்டி தொட்டிகளிலே, குளத்துப் படிக்கட்டுகளிலே, காது கேளாதவன், கண் அவிந்தவன், கதியற்றவன் கிலி கொண்டவன், ஆகியவர்களுக்கு மட்டும் கேட்கும்படி சொல்லப்படும், வார்த்தைகளாகிவிட்டன.

உரத்த குரலில், கோபத்துடன், இந்த வார்த்தைகளை நாடக மேடையில் மட்டுமே கூறிடக் கேட்கலாம்; நாட்டிலே இவை இப்போது நடமாட விடப்படுவதில்லை.

நமது தம்பிகளிலே, பதினைந்து வயதுக்குள் இருப்பவர் களுக்கு இந்த வார்த்தைகள், பொருள் விளங்கா ஓசைகளாகி

விட்டன!

ஆனால், தம்பி! என் போன்றோர் இளைஞர்களாக, பள்ளி மாணவர்களாக இருந்தபோது, இந்தச் "சாபம்' நித்த நித்தம் நாடெங்கணும், எவர் செவியிலும் வீழ்ந்து கொண்டிருந்த சங்கீதமாக இருந்தது.

ஐயோ! சாபம் கொடுத்துவிடப் போகிறார் - என்று பாட்டனார் பதறுவார், பாட்டி, பாதம் வீழ்ந்து வணங்குவாள் - அவ்வளவு பயம் பிய்த்துத் தின்னும்.

கட்டுக்காவலை மதியாமல், குலதர்மத்தைக் கவனிக்காமல், மதத்தை அழித்திடும் போக்கிலே, பேசுவோர், செயலில் ஈடுபடுவோர், ஆகியோருக்கு, பூசுரர், அவர்கள் பூஜை செய்வோ ராயினும், பூட்ஸ் அணிந்து பரங்கியனுக்குப் பணிவிடை செய்வோனாயினும், இடும் சாபம்!

அப்படியா சபித்தனர் என்று, இப்போது தம்பிமார்கள், கேட்டுத் துடிக்கின்றனர்.

அப்போதேகூடச் சிறிது கோபமுள்ளவர்கள், எதிர்த்தனர் - தாக்கினர் - பெரும்பாலும் சொல்லால்.

ஆனால், அப்படிச் "சாபம்' பெற்றவர்களில், மதத்திலே அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, இராம நாமத்தைப் பூஜித்துக்கொண்டிருந்த, காந்தியாரும் ஒருவர் என்பதை அறியும்போது, வேதனையினூடே சிரிப்பல்லவா வருகிறது.

தட்சணை கொடுத்தார், ஒரு தம்படி!

இது, ஆயிரத்தெட்டு இழிமொழி வீசுவதைக் காட்டிலும், கொடுமையானதாகக், கேவலமானதாகத்தானே தோன்றும் - பண்டாவுக்கு - பூஜாரிக்கு!

இகபரசுகம் இரண்டுக்கும் வழி அருளும்

விசுவநாதர் ஆலயம்! காசி க்ஷேத்திரம்! அங்கு, பக்தருக்கும் பரமனுக்கும் இடையிலே, வேதாகமம் தந்த உரிமையின்படி நிற்கிறார், பண்டா! இந்தப் பொல்லாத காந்தியார், ஒரு தம்படியா கொடுப்பது தட்சணை!

பவுன் கொடுத்தனர் - வெள்ளி நாணயம் கொடுத்தனர் - பாதம் தொட்டுக் கும்பிட்டுவிட்டு - பக்தர்கள். இவர், ஒரு தம்படி தருகிறார்!

ஆலயத்திலே அமர்ந்துள்ள தேவனிடம், பக்தன் வந்திருக் கிறான்! அவன் பாபம் போக்கு! புண்ணியம் கிடைத்திடச் செய்! - என்று மன்றாடப் போகிறான் - அதற்கான "மாதவம்' செய்து பண்டாவானான். அவனுக்கு, ஆலயத்தில், பல பக்தர்கள் முன்னிலையில், காந்தியார், தட்சணை தரப் பணம் இல்லை என்று கூடச் சொல்லி விட்டிருக்கலாம் - ஒரு தம்படியா தருவது, தட்சணையாக!

காலமெல்லாம், பண்டாவின் செல்வாக்கைப் பார்த்துப் பார்த்து ஆச்சரியத்தால், அசைவற்று நிற்கும், விசுவநாதர்கூட அல்லவா, ஒரு தம்படி தட்சணை தரப்படுவது கண்டு, விலா நோகச் சிரிப்பார்!

சபித்தார், பண்டா! "நேரே நரகம்தான் போவாய்' - என்று. என்ன செய்தார், காந்தியார்?

இதைக் கேட்டு நான் பரபரப்பு அடைந்துவிடவில்லை. "மகாராஜ்! என் விதி எப்படியானாலும் சரி, ஆனால், இப்படி யெல்லாம் பேசுவது உங்களைப் போன்றதோர் வகுப்பினருக்குத் தகாது. விருப்பமிருந்தால் அந்தத் தம்படியை எடுத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால், அதையும் நீங்கள் இழந்து விடுவீர்கள்' என்றேன்.

எப்படி, காந்தியாருடைய நெஞ்சழுத்தம் என்று கூற அல்ல, இதை எடுத்துக்காட்டுவது, காந்தியாருடைய சொல்லிலே தொக்கி நிற்கும், நகைச்சுவை இருக்கிறதே அதைக்காட்ட இதைக் கூறினேன்.

தம்பி! கவனித்தாயா? கொடுத்தது தம்படி! பண்டாவுக்கு! ஆனால், பண்டாவைக் கூப்பிடுவதோ, மகராஜ்! - கவனித்தாயா.

திகைத்துப் போயிருக்கவேண்டும், காசிவாசி.

"போய்த்தொலை. உன் தம்படி எனக்கு வேண்டாம்'' என்றார், தொடர்ந்து வசைமாரி பொழிந்தார்!

சரி! பண்டா, வசைமாரி பொழியட்டும் என்று கவலையற்றுக் காந்தியார், தம் வழி நடந்தாரா? அல்லது நின்று, பண்டாவைப் பார்த்து, அளவுக்கு மீறிப் பேசாதே!

அவதியைக் கூவி அழைக்காதே! என்று எச்சரித்தாரா? என்ன செய்தார்? அவரே, கூறக் கேள், தம்பி! சுவை காண்பாய்.

”தரையில் கிடந்த தம்படியை எடுத்துக் கொண்டு நான் நடக்க ஆரம்பித்தேன்.

””பிராமணர் ஒரு தம்படியை இழந்தார்.

”எனக்கு ஒரு தம்படி மிச்சம் என்று என்னைப் பாராட்டிக் கொண்டேன்.

ஆனால் மகராஜ் அந்தத் தம்படியையும் விட்டுவிடக் கூடியவர் அல்ல.

என்னைத் திரும்பக் கூப்பிட்டார்.

அது சரி, அந்தத் தம்படியை இங்கே கொடுத்து விட்டுப்போ!

உன் தம்படியை வாங்கிக் கொள்ள நான் மறுத்துவிட்டால், அது உனக்குத் கெடுதல் ஆகிவிடும் என்றார்.

நான் ஒன்றும் சொல்லாமல், அந்தத் தம்படியை அவரிடம் கொடுத்தேன்.

அப்புறம் ஒரு முறை பெருமூச்சுவிட்டுக் கொண்டு அப்பால் போய்விட்டேன்.''

தம்பி! இதைக் கருணாநிதி கதைவடிவாக்கினால், நமது காங்கிரஸ் நண்பர்கள், சீறி விழுவார்கள். கதையாம் கதை! இப்படியா ஒரு சம்பவம் நடக்கும்! அற்பத்தனத்தை அச்சாணியாக வைத்து ஒரு அபத்தக் கதை எழுதிவிடுவதா! இதுதான், தமிழ் வளர்க்கும் வழியா? இதுதான் கலையா? தூ! தூ! சே! சே! என்றெல்லாம் ஏசுவர்.

ஆனால், இது, காந்தியாரின் சுய சரிதையின் இருக்கிறது.

கொடுத்தது தம்படி! கிடைத்தது சாபம்! அந்த தம்படியும் இல்லை என்ற நிலை! உடனே, அதையாவது கொடு என்ற பவதி

பிக்ஷாந்தேஹி நிலை!

ஒவ்வொரு மாலையும், காந்தியார் இராமநாமப் பஜனை மட்டும் செய்யாதிருந்திருப்பாரானால், இந்த ஒரு செயலுக்காக மட்டுமே, அவரை, "ஈரோடு' ஆக்கிவிட்டிருப்பார்கள் வைதிகர்கள்.

ஐந்து கால் பசு, இருப்பதைக் காணீர்! என்று காந்தி யாரையே நம்ப வைத்த புரட்டர்களுக்கு முதலிடமாகத் திருத்தலங்கள் உள்ளன என்பது, தெரிந்துதான், பகுத்தறி வாளர்கள், அந்த இடங்களுக்குச் சென்று வருவது நேரக்கேடு, அறிவுக்கேடு என்று கருதுகின்றனர். மெள்ள மெள்ளப் பாமரர் கூடப் புரட்டுகளை வெறுக்கவும், மதத்தைக் காட்டி ஏய்ப்போரின் ஆதிக்கத்தை எதிர்க்கவும் துணிவுபெற்று வருகின்றனர். இந்த நேரத்திலே பாபு இராஜேந்திர பிரசாத் திருத்தல யாத்தைரை ஏற்பது

பிற்போக்காளர்களுக்கு ஒரு புதிய வாய்ப்பாகிவிடுமே என்பதுதான், நம் போன்றாருக்கு உள்ள கவலை. அதனால்தான் திருத்தலங்களிலே காந்தியார் கண்டதைக் குறித்தும், கொள்கை கருத்துப்பற்றியும் எழுதினேன்.

நேருப் பண்டிதர், வேறோர் வகையான திருத்தலம் சென்று வந்திருக்கிறார். அது குறித்துப் பிறகு எழுதுகிறேன்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

16-10-60

22. கொல்லிமலைச் சாரலிலே

கொல்லிமலை மக்கள் இயல்பு -

குமாரசாமி ராஜா கருத்துரை -

தமிழக மலை வளம்.

தம்பி!

கொல்லிமலைச் சாரலிலே, கொஞ்சும் சதங்கை ஒளழுப் பியபடி அடிவரும் அருவிக்கருகே, வழவழப்பான கற்குவியலின் மீதமர்ந்து, உன்னைத்தான் நினைத்துக் கொண்டேன். திருச்சி மாவட்டத்திலே பல்வேறு இடங்கட்கு இந்தக் கிழமை அழைத்துச் செல்லப்பட்டேன் - ஒவ்வோர் நாளும் மூன்று நான்கு நிகழ்ச்சிகள், இப்படி இழுத்துச் செல்வதால், களைப்பும் சலிப்பும் எனக்கு ஏற்பட்டுவிடுமோ, மற்றப் பல நிகழ்ச்சிகளுக்கு ஒப்பம் அளித்திட மறுப்பேனோ என்னவோ,

என்று எண்ணிக் கொண்டனர் போலும், அன்பில் தர்மலிங்கமும், அவருடன் இருந்து என்னை அகமகிழ வைத்த, தோழர்கள் காமாட்சி, அழகமுத்து, முத்துக் கருப்பன், ஆகியோரும் சரி, அண்ணனுக்கு எதையாவது காட்டிக் களிப்பூட்டுவோம் என்று எண்ணிக் கொண்டு, மலைவளம் காண அழைத்தனர். கோடி கோடியாகக் கொட்டிச் செலவிட்டாலும் செய்துகாட்ட இயலாத காட்சியன்றோ, மலைவளம். அதிலும், தம்பி! தமிழகத்தின் தன்னிகரில்லா வரலாற்றுச் சிறப்பினுக்கு உள்ள சான்றுகளிலே ஒன்றன்றோ, கொல்லிமலை! அந்த மலைச் சாரலில் அமைந்துள்ள புளியஞ்சோலை என்னும் இடம் அழைத்துச் சென்றனர் - பகற்பொழுது முழுவதும் ஆங்கு தங்கி, உண்டு இளைப்பாறி, உரையாடி மகிழ்ந்து, மாலை நிகழ்ச்சிக்குச் சென்றிடுவது என்ற திட்டத்துடன்.

தொகுதி மூன்று 93 தம்பி! கொல்லிமலை, திருச்சி மாவட்டத்துக்கும் சேலம் மாவட்டத்துக்கும் நடுவே, இயற்கை அமைத்துள்ள எழில்மிகு திரை என்று கூறலாம், இப்புறத்தில் திருச்சி - அப்புறம் சென்றால் சேலம் - சேந்தமங்கலப் பகுதி! ”ஓஹோ! உனக்கு அப்படிக் கூறுவதைவிட, விளங்கத்தக்க விதத்தில் கூறவேண்டும்! அப்புறம், நமது இயக்க முதியவர், ஜி.பி. சோமசுந்தரம்!

கொல்லிமலையினின்றும், இரு மாவட்டங்களுக்கும் கீழ் நோக்கிச் செல்ல, ஒற்றையடிப் பாதைகள் உள்ளன. மலைபடு பொருள்களைச் சுமந்துகொண்டு, இரு மாவட்டங்களுக்கும் வருகின்றனர்.

நான் சென்ற அன்று, புளியஞ்சோலையிலே, சந்தை.

நெடுஞ்சாலைக்கருகே நடத்தப்படும் சந்தைகள் பலவற்றைக் கண்டதுண்டு; மலைச்சாரலிலே நடந்திடும் சந்தையை அன்றுதான் கண்டேன்.

கொல்லிமலையிலே விளைந்திடும் பலாவும், வாழையும், கொய்யாக் கனிகளும், பருப்பு வகைகளுமான பொருள்களை, மலைவாழ் மக்கள், சுமந்தபடி ஒற்றையடிப்பாதை வழியாக இறங்கி வந்தவண்ணம் இருந்தனர். சாரை சாரையாக, மரத்தடிக்கு மரத்தடி, சிறு கடைகள் அமைத்துக் கொண்டு, மலை மக்களின் வருகைக்காகக் காத்திருந்தனர், சிறுகடை நடாத்தும் வணிகர்கள். இரைச்சல் குறைவு! இயற்கை அமைத் தளித்த எழிலோ மிகுதி! கட்டுடல் இருக்கிறது, மலைவாழ் மக்களிடம். ஆயினும், முகத்திலே கவலை தோய்ந்திருக்கக் கண்டேன். அவர்கள் மனதைக் குடைந்திடும்

எண்ணம் யாதோ, அறிந்திட இயலவில்லை; ஆயினும், இயற்கையுடன் போராடி, காடுகளில், குடி இருந்துகொண்டு, காலமெல்லாம் கஷ்டப் படுகிறோமே, நல்ல பாதை, புதிய வாழ்வு, எப்போதுதான் கிடைத்திடுமோ, புத்தம் புதிய ஆட்சி வந்தது என்றனர்; புல்லர்களின் கொட்டம் அழிந்தது என்றனர்; எனினும், நமது வாழ்க்கையிலே மட்டும், எந்தப் புதிய மாற்றமும் ஏற்படக் காணோமே, என்று எண்ணி ஏக்கமடைகின்றனரோ, என்னவோ, யாரறிவர்.

மலைவாழ் மக்கள், தமிழைத்தான் பேசுகின்றனர். தடுக்கு மொழி! பெயர் கேட்டேன். ஒரு இளைஞனை - செல்லப்பன் என்றான். அழகிய பெயர்! தந்தையின் பெயர் வடமன் என்றான். பெண்கள், புடவையையே மேலாடைக்காகவும் பயன்படுத்திக் கொள்கின்றனர். தோற்றத்தால், அவர்கள், எவ்வகையிலும், நம்மில் வேறுபட்டவர்களாகத்

தெரியவில்லை. மலை மீது, கானிடை வாழ்வதால், ஏற்படும், நடை உடை முறைகளிலே மட்டுமே, வேறுபாடுகள் தெரிந்தன.

கொய்யாக் கனிகளும், மலைவாழையும், பலாவும் மட்டுந்தானா, மலைபடு பொருள்கள் என்று கேட்டேன் - தம்பி! நான் கேட்டு மலைத்திடும் முறையில், மளமளவென்று மலைபடு பொருள்களின் பட்டியலைக் கூறினர்.

காப்பியும், மிளகும், கடுக்காயும், ஏலமும், சந்தனமும் மிளகும், ஆங்கு உண்டு என்றனர். இவை, வேறும் பொருள்களின் பெயர்ப்பட்டியலென்று, பொருளாதார நூலறிவு உடைய எவரும் கூறார். இவை யாவும் வெளிநாட்டினர் விரும்பிப் பெற்று, பொருளினை நமக்கு அளித்திட உதவும் செல்வப் பொருள்கள்! மேனாடுகள்

பலவற்றினுக்கும், சுவையும் மணமும், இத்தகு பொருள்கள் மூலமே கிடைக்கின்றன.

செல்வப் பொருள்களை ஈந்திடும், கொல்லிமலையின் வளத்தைத் திட்டமிட்டுப் பெற்றிடத்தக்க ஏற்பாடுகளைத் துரைத்தனம் மேற்கொண்டு இருந்திருக்குமானால், எதெதற்கோ செலவிடும் தொகையிலே ஒரு சிறு அளவு இதற்கென ஒதுக்கிச் செலவிட்டு இருந்திருப்பின், கொல்லிமலையின் கொடைத்திறன், பன் மடங்கு அதிகமாகி இருக்கும் - திருச்சி மாவட்ட முழுவதும், இந்த மலைபடுபொருள் ஈட்டித்தரும் செல்வத்தைக்கொண்டே, ஏற்றம் பெற்றிடக்கூட இயலும். இப்போது கொல்லிமலையிலே கிடைப்பவை, திட்டமிட்டுப் பெறப்படுபவை அல்ல. மலைபடு பொருள் வகை அறிந்த விற்பன்னர்கள். வளம் கண்டறிந்து, இங்குத் தோட்டங்களை

அமைத்தனரோ, எனின், இல்லை. பன்னெடுங் காலமாக இருந்துவரும் தருக்கள்! பாய்ந்தோடிவரும் அருவி, வழவழப்பாகிப்போன நிலையிலுள்ள பாறைகள், உருளைக் கற்கள்! மரக்கிளைகளிலே மந்திகள்! இனிய பண் பல எழுப்பி, வட்டமிட்டுத் திரிந்திடும் புள்ளினங்கள்! சீறிடும் சிறுத்தைகளும், கிழங்கு அகழ்ந்திடும் காட்டுப் பன்றிகளும், சிறு நரிகளும் உண்டு! உச்சி செல்லச்செல்ல, கரடிக் கூட்டமும் உண்டு என்கின்றனர், இவைகளுக்கு ஈடுகொடுத்துக் கொண்டு, வாழ்கின்றனர், மலை மக்கள் - தம்பி! அவர்கள் ஓட்டர்களும்கூட! - அதாவது அவர்களும், நம்மைப்போல் இந்நாட்டு மன்னர்!

பெரும்பகுதி நிலத்திலே சாமை பயிரிடுகின்றனர் - அந்தச் சோறு, மல்லி நிறம்! வேறு நெல்வகையும் கூடப்

பயிராகின்றது. எல்லாம், தக்க திட்டமிட்டு அல்ல! பெரும்பாலானவை தன்னிச்சையாகத் தழைக்கின்றன. "என் ஆற்றலின் அளவு அறிய மாட்டீர்கள், அறிவிலிகாள்! நான் தரவல்ல யாவை என்பதை நீவீர், சிறிதளவு தெரிந்துகொள்ள மட்டுமே, இப்பொருள் களைக் காட்டி நிற்கிறேன்!'' - என்று நம்மை நோக்கிக் கேலி செய்வது போல, நிற்கிறது கொல்லிமலை. இங்கு வீழ்ந்தோடி வரும், அருவி நீரைத் தேக்கிப் பயன்மிகுதியாகப் பெற இயலும் என்று, பல ஆண்டுகளுக்கு முன்பே, பலரும் எடுத்துக் கூறினர்; நமது கழக மாநாட்டிலே தீர்மானமும் நிறைவேற்றப்பட்டி ருக்கிறது. அதற்காகச் செலவிடப்படும் பணத்தின் அளவிற்குத் தக்க பலன் கிட்டாது என்று, நிபுணர்கள் செப்புவதாகக் கூறித் துயில்கொண்டனர் துரைத்தனத்தார். மீண்டும் மீண்டும், அந்தப்

பிரச்சினையைப் பலரும் எடுத்துப் பேசி வருவதால், இப்போது துரைத்தனத்தார், செயல்படத் துணிந்துள்ளனர் என்று அறிகிறேன். அதற்கு அறிகுறியாகத் தேக்கம், அணை போன்றவை களை அமைத்திடும் துறையினர் ஆங்கு நடமாடுகின்றனர் - பாறைகளிலே இங்கும் அங்குமாக வெள்ளை நிறம் அடித்து வைத்துள்ளனர் - காண்போர், இந்தப் பக்கமாகத்தான் தேக்கம் -அணை என்று பேசிக் கொள்கின்றனர்.

தம்பி! துரைத்தனம், எந்தத் மட்டம் நடாத்துவதானாலும், செலவிடும் தொகைக்கு ஏற்பப், பலன் கிடைத்திட வேண்டும் என்று கருதித்தான் பணியாற்ற வேண்டும். ஆனால், ஏதும் செய்யாதிருக்க இந்த நோக்கத்தைச் சாக்காக்கிக் கொள்வதே, நமது துரைத்தனத்தின் போக்காகி விட்டது. அதிலும் தென்னகத்தைப் பொறுத்தவரையிலே, புள்ளி

விவரப் புலிகள், எதையும் உடனடி துணிந்து செய்திட இடமளிப்பது இல்லை.

கொல்லிமலை நீரைத் தேக்கிடச் செலவிடும் பணத்துக்குத் தக்க பலன் கிடைக்காது என்று அச்சமூட்டுகின்றனர். இந்த அச்சம், வடக்கே, பெரும் அணைகள் கட்டப்படும்போது குறுக்கே நிற்கிறதா! மறைந்த இராஜபாளையம் குமாரசாமி ராஜா அவர்கள் கோவையிலே பேசியது நினைவிலே இருக்கிறதல்லவா?

”வடக்கே அமைக்கப்பட்டுள்ள தேக்கங்கள், அணைகள் ஆகியவற்றிலே செலவிடப்பட்டுள்ள தொகையிலே, மிகமிக விரயம் ஏற்பட்டிருக்கிறது என்றல்லவா, கவர்னராகப் பணியாற்றிய குமாரசாமி ராஜா அவர்கள் கூறினார்.

கொல்லிமலையை வளமாக்கத், தொகை

ஒதுக்கச் சொன்னால், ஆயிரத்தெட்டு ஐயப்பாடுகளை அவிழ்த்து விடுகின்றனர்; ஆனால் வடக்கே, எத்துணை கோடிகளாயினும் கொட்டிடத் தயங்குவதில்லை.

பக்ராலிநங்கல் அணைக்குக் கிட்டத்தட்ட இருநூறு கோடி ரூபாய் செலவு, தட்டாமல் தயங்காமல் கொட்டிச் செலவிட்டனர். ஆனால் எதிர்பார்த்த பலன் கிடைத்ததா என்றால், நிபுணர்கள் திகைக்கின்றனர், அரசியல் தலைவர்கள் ஆயாசமடைகின்றனர். காங்கிரஸ் தலைவர்கள் கைபிசைந்து கொள்கின்றனர்.

என்னுடைய "திருத்தலம்' என்று பக்ராலிநங்கலைக் குறிப்பிட்டுக் குதூகலமாகப் பேசினார், நேரு பண்டிதர். வெளி நாட்டிலிருந்து எந்தத் தலைவர் வந்திடினும், அழைத்துச் சென்று காட்டுவது. இந்த பக்ராலிநங்கலைத்தான். எனினும்

இப்போது நிபுணர்கள், பக்ரா-நங்கல் மூலம், எவ்வளவு பரப்பு நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டதோ, அவ்வளவுக்கும் கிடைக்காது என்று அறிவிக்கின்றனர்.

நூற்றுக்கு முப்பது பங்கு குறைவாம் - எதிர்பார்த்த பலனில்.

மற்றும், ஆங்கு அமைக்கப்பட்டுள்ள தேக்கங்கள், அணைகள் பெருந்தொழில்கள் அனைத்திலுமே, நிர்வாக ஊழலும், நேரக்கேடும், பொருள் நட்டமும், நாற்றமெடுக்கும் அளவில் உள்ளன என்று அவ்வப்போது நிபுணர்கள் ஆய்வுக் குழுவினர், அறிவிக்கின்றனர். எனினும், மேலும் பல புதிய திட்டங்களை மேற்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனரா எனில், இல்லை. இல்லை, என்பது பளிச்செனத் தெரிகிறது. பொக்காராவில் நாலாவது இரும்புத்

தொழிற்சாலை அமைத்திடுவதிலே ஆர்வமும், சுறுசுறுப்பும், காட்டப்படுகிறது.

கொல்லிமலையோ, மகன் வரவுக்காக, சுவைமிகு உணவினைச் சமைத்து வைத்துவிட்டு, அது சில்லிட்டுப்போகும் நிலையிலும் மகன் வீடு வராதிருந்தால், ஏக்கத்துடன் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் தாய்போல, இருந்துவரக் காண்கிறேன்.

ஆயிரம் கோடியா! அட பேராசைக்காரா! என்ன செய்வாய் அவ்வளவு தொகையை வைத்துக்கொண்டு? - என்று என்னைக் கேட்கின்றனர், கேலி பேசுகின்றனர், அமைச்சர்கள். கோலேந்திகளே! கொல்லிமலையைப் பார்த்துவிட்டு, என்மீது கேலிக்கணைகளை ஏவுங்கள்! பழமுதிர் சோலையாக்கலாம் கொல்லிமலையை - சில கோடி ரூபாய், பயன் தரும் முறையிலே

செலவிட்டால்! சந்தனக் காடு காணலாம்! அடவி அழகும், அருவி அழகும் காணச் செல்வோர், சிந்துபாடி மகிழ்ந்திடும் உல்லாசக் கூடமாக்கலாம்! வெளிநாட்டார் விரும்பி வாங்கிடும் காப்பி பயிரிடலாம், மிளகு பயிரிடலாம்! கொல்லி மலைத் திட்டம் என்று மலைபடு பொருள் காணும் நிபுணர் குழுவினைத் திட்டம் தயாரித்து அளிக்கச் சொன்னால், இயலாது என்றா கருதுகிறீர்கள்; - என்று கேட்கத் தோன்றுகிறது. அமைச்சர்களைப் பார்த்து! அவர்கள், தம்பி! இந்த ஏழையின் பேச்சையா ஏற்பார்கள்!! அதனால்தான், உன்னிடம் கூறுகிறேன், ஊராருக்கு நீ உரைத்திடுவாய் என்ற நம்பிக்கையில்.

முன்பொருமுறை, தம்பி! கழுதைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது என்பது குறித்துக் கவலைப்பட்டுப் பேசினார்,

அமைச்சர் பக்தவத்சலம்! ஆமாம், தம்பி! வேடிக்கை அல்ல! ஏழை பங்காளர் அல்லவா காங்கிரஸ் அமைச்சர்! அதனால், ஏழைக்குப் பொதிசுமக்க, மலிவானது கழுதை தானே! அதனால், அமைச்சருக்கு அந்தக் கவலை ஏற்பட்டது. கழுதைகளை வளர்க்கவேண்டும் என்றார். அதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதோ இல்லையோ, நானறியேன் - ஆனால் கழுதைகள் விஷயமாக ஏற்படும் அக்கறையிலே ஒரு சிறு அளவாகிலும், காடு வளர்த்திடவேண்டும் என்பதிலே, அமைச்சர் பக்தவத்சலனாருக்கு ஏற்படவேண்டுமல்லவா! தேவிகுளம், பீர்மேடு இழந்தோம், காட்டுவளம் கெட்டுவிட்டது, தமிழகத்துக்கு. கொல்லிமலை, பச்சைமலை, ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, ஏலகிரி என்பனபோன்ற மலைகளை யாகிலும் இந்த நோக்கத்துடன் கவனித்துத் திட்டமிட்டுக் காரியமாற்ற வேண்டாமா! எங்கே

செய்கின்றனர்? எப்படிச் செய்ய இயலும்? அவர்கள்தான், ஆயிரம் கோடி கிடைத்தால், செலவிட முடியாது என்ற அதி அற்புதமான பொருளாதார அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்களே! இவர்கள் ஆட்சியிலே, கொல்லிமலை இருந்தென்ன, குடகுமலை கிடைத்தென்ன? ஊமை கண்ட கனவுதானே!

முகிலைத் தொட்டிழுத்து முத்தமிடும் குன்றுகள் உள்ளன - அந்தக் குன்றுகளிலே இயற்கைவளம் கொஞ்சி விளையாடு கிறது - எனினும், அது திருமாலுக்கா, அவன் மருமகனுக்கா என்று மல்லுக்கு நிற்கின்றனர், மேதைகள்! அதனைத் தீர்த்து வைக்க மன்றம் அமைத்துத் தருகிறது துரைத்தனம்.

அந்தக் குன்றுகளும், ஆங்கு தழைத்துக் கிடந்திடும் காடுகளும் எத்தகைய செல்வங்களை ஈந்திடத் தக்கவை என்பது குறித்து எவர் அக்கறை காட்டுகின்றனர்?

அங்கு எங்காவது, ஆமை ஓட்டிற்குள்ளே அங்கத்தைச் சுருட்டி வைத்துக் கொண்டு, ஒரு மகான் இருக்கிறார் என்று எவனாவது கதைகட்டி விடுவானேல், சூடம் பழத்துடன், கும்பல் கும்பலாகச் செல்வர், கும்பிட்டுக் கூத்தாட! சந்தனமும், மிளகும், காப்பியும், தேயிலையும், பலாவும் முந்திரியும், தேக்கும், அகிலும், தினையும், தேனும் நிரம்பப் பெறலாமே அத்தகைய இடங்களில் என்று எங்கே எண்ணம் பிறக்கிறது. அமெரிக்கா, பால் பவுடர் தர வேண்டும். பிரான்சு பழரசம் அனுப்ப வேண்டும்; டென்மார்க் பாலேடு கொடுக்க வேண்டும் என்று, பிச்சைப் பாத்திரம் ஏந்திக் கொண்டு செல்வதற்காகத், தூதுவர்களை எட்டுத்திக்கும் அனுப்பி வைக்கிறார்கள் - மலைவளம் பெருக்கிட, காட்டு வளம் கண்டிட, ஆங்காங்கு என்னென்ன முறைகளைக் கையாண்டு வருகின்றனர்,

அம்முறைகளிலே, எவை நமக்கு ஏற்றவை என்பன பற்றி அறிந்துவர, என்ன திட்டம் அமுலில் இருக்கிறது?

தம்பி! கொல்லிமலைச் சாரலில் உட்கார்ந்து, கொய்யாக் கனியைக் கடித்துத் தின்றபடி, இவ்விதமெல்லாம் எண்ணிக் கொண்டேன். இந்த மலைகளெல்லாம், அந்த நாட்களில், "அரண்கள்' என்றல்லவா கருதப்பட்டன - கொள்ளப்பட்டன. முடியுடை மூவேந்தர்களின் பிடி தளர்ந்த பிறகு, பாரியும், ஓரியும், பேகனும், குமணனும், காரியும் மலை அரண்களிலன்றோ அமர்ந்து அரசோச்சி, அருந்தமிழ் காத்தனர். வல்வில் ஓரி! என்று புலவர் கூறிய சொற்றொடரை உச்சரிக்கும்போதே, நாணேற்றும் போது எழும் ஓசையே யன்றோ, செவியில் வீழ்கின்றது. அந்த நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்! என்று முதிரமலை யாண்ட

குமணன் கூறியது நினைவிற்கு வரும்போது, நெஞ்சம் எப்படியெல்லாம் நெகிழ்கிறது அந்த மலைகளெல்லாம் இன்று, புதரும் பொந்தும், உள்ள வெற்று இடங்களாகிப் போயினவே - சோற்றுக்கு வழி காணா மக்கள், கடல் கடந்தன்றோ செல்கின் றனர். காடு திருத்திக் கழனியாக்க - இதோ உள்ளனவே வளமளிக்கும் மலைகள், செல்வப் பொருளளிக்கும் காடுகள் - இவைகளைத் தக்கவிதத்தில் பயன்படுத்தத் திட்டமிட்டால், வேற்று நாடு களிலே கூலிகளாக்கிக் கொடுமையில் உழலும் நம் உடன் பிறந்தார், உழைத்துப் பிழைக்கலாமே, தாயகத்தில். ஏனோ துரைத் தனத்தார்க்கு தினையளவும் இந்த எண்ணம் ஏற்படவில்லை.

காடுபடு பொருட்களை மட்டுமே நம்பி உள்ளன. இதுபோது விடுதலைப் பெற்றுத் திகழும், ஆப்பிரிக்க பூபாக நாடுகளிலே

பல; இன்று இந்தியத் துணை கண்டத்துப் பிரதமரால் வரவேற்கப்படும் நிலையைப் பெற்றுள்ள இன்க்ரூமா என்பவர் அரசோச்சும் கனா நாட்டிலே, செல்வம் தருவதே, காட்டுப்பயிர் என்று கருதப்படும், கொக்கோ செடிதானே!

நமது மலைகளிலே, எத்தனை எத்தனையோ வகையான மூலிகைகள், உள்ளன - இன்று மலைப்பாம்புளும் அவைகளைத் துரத்தித் தடிகொண்டு தாக்கும் வேட்டையாடுவோரும் இந்த மூலிகைகள் படர்ந்து கிடக்கும் இடங்களை அறிவர். இவைகளைக் கண்டறிந்து, வகைப்படுத்தி, பயன்படுத்தினால், பெரும் பொருள் ஈட்டிட இயலும் என்கின்றனர் அறிந்தோர். இங்கோ மூலிகைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன; நாமோ பெரும் பொருளைக் கொடுத்து இதுபோன்ற மூலிகைகளைக்

கொண்டு தயாரிக்கப்படும், வெளிநாட்டு மருந்து வகைகளை, விலை கொடுத்து வாங்குகிறோம்.

அமைச்சர்களும், ஆளும் கட்சியினரும், சென்ற கிழமை, "வனவிலங்குகள் வாரம்' நடத்தினர். வனவிலங்குகளைக் கூண்டில் அடைத்து, கூண்டுகளை வண்டிகளில் ஏற்றி, உலா நடத்திக் காட்டினர். சிறுவர்கள் களிப்புற்றிருப்பர். ஆனால், இந்த"வாரம்' நடத்துவதிலே ஏதேனும் பொருள் இருக்குமானால், காட்டு வளத்தைப் பெருக்குவது எப்படி என்பது பற்றி அக்கரை காட்டுவதாகத்தானே இருக்கவேண்டும். கொல்லி மலையும், பச்சைமலையும், வேறு பல குன்றுகளும் கவனிப்பாரற்றுக் கிடக்கும்போது, கூண்டிலிட்டு, மிருகங்களைச் சிறார்களுக்குக் காட்டி விழா நடத்துவது, கேலிக்கூத்தன்றி வேறென்னவாக

இருக்கமுடியும்.

தம்பி! முந்திரி பயிரிடவேண்டும் என்று நாம் கூறியபோது கேலி பேசியவர்கள்தானே ஆளவந்தார்கள். இப்போது முந்திரிக் காடுகளை வளர்த்து வருகிறோம் என்று அவர்களே பெருமை யுடன் பேசிக் கொள்கின்றனர். அதுபோலவே மலைவளம், காட்டுவளம் ஆகியவற்றைப் பெருக்கவேண்டும் என்று, இன்று நாம் கூறும்போது கேலிதான் செய்வர், என்றாலும், இன்றில்லா விட்டால் மற்றோர் நாள், மலை வளமும் காட்டு வளமும் ஒரு நாட்டுக்கு மிகமிகத் தேவைப்படுவதாகும் என்று உணரத்தான் போகிறார்கள்.

•

கொல்லிமலைச் சாரலிலே அமர்ந்திருந்தபோது, தோன்றிய

எண்ணங்களைத் தொகுத்து எழுதும்போது, தம்பி! வேறோர் யோசனையும், எனக்கு எழத்தான் செய்கிறது.

தேரும் திருவிழாவும் காணவும், ஊரூர் சென்று இடிபட்டு மிதிபட்டு, அறிவிழந்து, கண்ட கண்ட காதகர் காலடியெல்லாம் வீழ்ந்து வணங்கும் போக்கினராக உள்ள, நமது மக்கள், ஓய்வு நாட்களை, கொல்லிமலை போன்ற இடங்களைச் சென்று காண்பதற்குச் செலவிட்டால், மனத் தூய்மையும், தெம்பும் ஏற்படுமல்லவா! எங்கே செல்கிறார்கள்! கானிடை சென்று தங்கி இருக்கும்போது, ஆங்கு வீசும் காற்றுமன்றோ கானமாகி வருகிறது!

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக இருந்தாரே, ரூசுவெல்ட், அவருக்கு ஒரு பழக்கமாம் - பொழுது புலரும் வேளையிலே, புள்ளினங்கள் மிகுந்துள்ள சிறு கானிடை

சென்று தங்குவாராம் - ஒவ்வோர் வகையான புள்ளினமும் ஒவ்வோர் வகையான பண் எழுப்புமன்றோ! அந்தப் பண்ணினைக் கேட்பதிலே, அவருக்குத் தனிச் சுவையாம்! பண்ணின் வகையினைக் கேட்டு, இது இன்ன புள்ளினத்தின் பண் என்று கூறுவாராம்.

இயற்கையின் எழிலைக் காண்பதிலே தனிச்சுவை இருக்கிறது; அந்தச் சுபை உள்ளத்துக்குத் தூய்மையும் தரவல்லது என்பதை, மலைவளம், கானின் கவர்ச்சி ஆகியவற்றினைக் காணும்போது, நிச்சயமாக உணரமுடிகிறது.

உயர்ந்து விளங்கிய கொல்லிமலையையும், உருண்டோடி வரும் அருவியையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டே, நான், என்னுடன் வந்திருந்த நண்பர் முல்லை சக்தியை உற்று உற்றுப் பார்த்தேன். என் பார்வையின்

பொருளை அவர் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. மணமாகாதவர்! முல்லைக்கு மணமானதும், துணைவியுடன் வந்து, காணவேண்டிய காட்சி. மோட்டார் சத்தம் காதைத் துளைத்திட, ஆலைச் சங்குகள் அலறி அலறி அலுப்பைத் தந்திட, பேரிரைச்சலை எழுப்பிடும், பெரிய நகரமல்ல; கண்ணுக்குத் தெரியாமல் இருந்துகொண்டே கானம் எழுப்பி மகிழ்விக்கும் புள்ளினங்கள் நிரம்பிப், புனலாடிப் புதுத் தெம்பு பெற்றிடத் தக்கதான சூழ்நிலை அழகுற அமைந்துள்ள, கொல்லிமலைச் சாரலன்றோ, என்று எண்ணிக் கொண்டேன். இயற்கையின் அன்பழைப்பாகவே, காற்றினால் அசைவுபெறும் செடியும் கொடியும், எனக்குத் தென்பட்டன. நந்தமிழ் மக்களும், தம்பி! வாழ்விழந்து தவிக்கும் இந்நாளில் அல்ல, மாற்றார்முன் மண்டியிடாது வாழ்ந்துவந்த

நாட்களிலே, இயற்கையின் எழிலைக் காண்பதிலே தனிச்சுவை பெற்றிருந்தனர். புலவர் பெருமக்கள் அன்று எழுதிய சொல்லோவியம் அத்தனையும், இன்றும், கூர்ந்து பார்த்திடும் எவருக்கும், இயற்கை சமைத்தளிக்கும் வடிவழகின் விளைவு என்பதும் விளங்கும். ஒரு பகற்பொழுது மட்டுமே கிடைத்தது, எனக்கு அந்த வாய்ப்பு. இதோ, வெளியே இருக்கிறார், அன்பில், அரியலூர் அழைத்துச் செல்ல, சென்று வருகிறேன்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

23-10-60

23. எல்லோரும் இந்நாட்டு மன்னர் 1

தம்பி!

குழல்மொழி, கயல்விழி, துடியிடை, புன்னகை பூத்திடும் பொன்னவிர் மேனியாள், ஏழிசைவல்லி, ஆடலழகி எனும் அணங்குகள், தத்தமது திறனத்தனையையும் தங்கு தடையின்றித், தரக்குறைவின்றிக், காட்டிப் பார்த்தனர் - காவலன், கடுகடுத்த முகத்தோனானானேயன்றிக் கலகலப்புப் பெற்றானில்லை.

மாற்றார்கள் களத்தில் போட்டோடிச் சென்று, மாமல்லர் களால் எடுத்துவரப்பட்ட, குருதிதோய்ந்த கொடிகள், உடைந்து கிடந்த யானைத் தந்தங்கள், வாட்பிடிகள், வேற்கம்புகள் இவையெல்லாம்

கொண்டுவந்து எதிரே குவித்துக் காட்டினர், கோமான், வீரச்செயல் பற்றிய நினைவுபெற்று, மகிழ்ச்சிப் பெறுவான் என்று எண்ணி; மாமன்னனோ, அப்பொருட் குவியலைக் கண்டு புன்னகையும் செய்தானில்லை.

கன்னியரின் கடைக்கண் ஊட்டிடாத சுவையைக் கனிவகையா தந்திடும்! எனவே, பழவகைகளைக் கொணர்ந்ததும், பட்டத்தரசன், எட்டிப்போ! என்று கட்டளையிட்டான் பணியாட்களை நோக்கி.

மன்னன் மனமகிழ வேண்டும் - அவையினர் ஏதேதோ எண்ணினர்; தெளிவு பிறந்திடவில்லை.

தொகுதி மூன்று 103 ”யானறிவேன், அவருக்குக் களிப்பூட்டும் வகை’’ என்றால் கவிதை வல்லானொருவன்.

”ஐயா புலவரே! எதுகை மோனையைக்

காட்டியா, மன்னனை மகிழ்விக்க முயல்கிறீர். வானவில்லென வளைந்து நின்றாள், வடிவழகி; மன்னன் ஏறெடுத்தும் பார்த்திட மறுத்தான். கரம் இரண்டன்றி வேறோர் துணை தேடிடாது, வேங்கையுடன் போரிட்டுக், கழுத்தை நெறித்தானே, வேங்கையை - வெற்றி வேலன் பெற்றெடுத்த வீரமைந்தன் - அதன் பற்களைக் கொட்டிக் காட்டினோம் - சுற்றுமுற்றும் பார்த்தானேயன்றி, மன்னன், அதனை உற்றும் பார்த்ததுண்டா? இந்நிலையில் உள்ளான் ஊராள்வோன்; நீவிர் ஏடு தூக்கிக் காட்டிடின் வேந்தன் கொண்டுள்ள கசப்பெலாம் கரைந்தோடிப் போகும், களிப்பு மலரும் என்று கருதுவது, எத்துணைப் பேதைமை!'' என்று எடுத்துரைத்தனர், அவை அமர்ந்த முதியோர்.

"ஐயன்மீர்! அருங்கவிதைத் திறன்காட்டி அல்ல, மகிழ்ச்சி யூட்ட விரும்புவது. என்

கவிதையும், அரசர்க்குச் சிரிப்பூட்ட அல்ல; அவனிக்கு அறிவூட்ட! அதனையும் அறிமின்! யான் நினைப்பது முற்றிலும் வேறு!'' என்றான் புலவன்.

"வாதிட்டுப் பொழுதினை ஓட்டிடுவதைக் காட்டிலும் அவர் வகுத்திடும் முறையேனும், மன்னனின் சோகத்தை நீக்கிவிடுகிறதா என்பதைக் கண்டிடுவதே சாலச் சிறந்தது'' என்றனர் ஆன்றோர்.

புலவர் எழுந்தார்; பணியாளிடம், ஏதோ, மெல்லிய குரலில் கூறினார்; அமர்ந்தார்! அரசனை விளித்தார்.

"கோமானே! எட்டுத் தளபதிகளைக் கீழே வீழ்த்தி, பதினாறு வேற்படை வீரரின் பற்களைத் தட்டிப்பறித்து, பழம் பெரும் போர்க்கலை ஆசானின் இடுப்பிலே, ஈராண்டும் தீராத வலி ஏற்படத்தக்கதான

உதை கொடுத்து, கரிப்படைத் தலைவனின் கண்ணைக் கலங்கிடச் செய்த, வீராதி வீரன், குரலெடுத்துப் படை நடுங்கிட வைத்திட வல்லோனாம் வெஞ்சமர்ச் சூரன், தங்களைக் காண வருகிறான் - கட்டளைக்குக் காத்திருக்கிறான் - அனுமதி அருள்வீரா?'' - என்று கேட்டார். மன்னன்,"ஈதென்ன விந்தை! இத்துணை வீரச் செயல் புரிந்தோனை, யான் ஏன் இதுவரை, காணவில்லை'' என்று எண்ணிப் புலவரை நோக்கி, "தளபதிகள் எண்மர், வேற்படை யாளர் பதினாறுபேர், மற்றும் கரிப்படைக் காவலன், ஆகியோரைத் தாக்கியவனா - யார் அவன்? எங்குள்ளான்? கொண்டுவந்து நிறுத்தும், அவனை, நம்முன் - தாமதமின்றி!'' என்று முழக்கமிட்டான்.

பவனிக்கான இசைமுழக்கம் எழும்பிற்று.

பராக்குக் கூறுவார் பதின்மர் வந்து நின்றனர்.

பந்தல் அமைத்ததுபோன்ற பட்டுப் போர்வையைப் பலர் முறைப்படி ஏந்திவந்தனர்.

மன்னர் எதிர்ப்புறம் அந்தப் பந்தற் போர்வை வந்தடைந் ததும், “இனிக் காணீர், தளபதியின் பல் உடைத்து, வீரனின் விலாவை நொறுக்கி, கரிப்படையானை வீழ்த்திய, மாவீரனை!’ - என்று கூறிக், குறி காட்டினான் புலவன்; போர்வையை நீக்கினர்; கோவேறு கழுதை ஒன்று, நின்றது, மன்னன் எதிரில்; மன்னன், இடிஇடியெனச் சிரித்து,”ஏடா! வீராதி வீரா! நீதானோ, புலவர் போற்றிய மாவீரன்! எட்டி உதைத்து இத்தனையையும் செய்ததன்றோ, நம் பாடி வீட்டுக்குக் கொட்டிலில் கிடந்திடும் இக் கோவேறு கழுதை! பலே! பலே! எறி ஈட்டிக்கும், கொடுவாளுக்கும் அஞ்சாது போரிடும் என் தளபதிகள், இதனிடம் படாதபாடு

பட்டனர்; பல் உடைபட்டனர்; ஆம்! புலவரே! ஆம்!'' - என்று கூறிக் கூறிச் சிரித்தான் கோமான்; அவையினர் அனைவருமே, புலவர் செய்தளித்த நகைச்சுவை நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.

ஆடலும் பாடலும், அருங்கவிச் சுவையும், வீரமும் வெற்றிப் பொருட்களும் பெற்றளிக்க முடியாத பெருஞ் சிரிப்பை, கோவேறு கழுதை அளித்திட முடிந்தது.

•

முடி ஆட்சியிலே, மூதறிஞர்களாகவும், வெற்றி வீரர் களாகவும் விளங்கிய மன்னர்கள் இருந்தனர் - கொலைபாதகத் துக்கு அஞ்சாத கொடியவர்களும் கோலேந்திகளாகி இருந்தனர் - மடமை மிக்கவர்களும், மன்னன் மகனானதால் மன்னனாயினர்!

கொடுமை புரிந்தவர்கள் கோல்

முறிக்கப்பட்டது.

மடமை கொண்டோரின் அரசு, மதியிலிகளின் மந்தகாசக் கூடமாகவும், நத்திப் பிழைப்போரின் புகலிடமாகவுமாகி, மக்களால் எள்ளி நகையாடப்பட்டது!

இந்நிலைக்கு முடி அரசு சரிந்ததும், முறை மாற்றியாக வேண்டும் - ஒருவனிடம் அதிகாரமத்தனையையும் ஒப்படைத்து விட்டு, அவன் அறிவாற்றலுள்ளவனானால், அவதிக்கு ஆளாகாமல் இருக்கவும், கொடியவனானால், அஞ்சி அஞ்சிக் கிடக்கவும், மதியற்றவனானால் கேலிப் பொருளாகி இருக்கவுமான, நிலைமையைத் தாங்கித் தாங்கிப் பார்த்து, இனி அது ஆகாது என்ற முடிவுக்கு வந்த பிறகே, பேரறிவாளர் பலர் எண்ணிப் பார்த்து, எடுத்தியம்பியது மக்களாட்சி முறை என்பது.

முடி ஆட்சிக் காலத்திலே, மன்னனிடம் மக்கள் அச்சத்துடன் அடங்கிக் கிடக்க நேரிட்டது; கொடுமை செய்யும் போது குமுறிச் சாக நேரிட்டது; மடமைக்காரனாக இருக்கும்போது வெட்கப்பட்டுக் கிடக்கவேண்டி நேரிட்டது; எனினும், மன்னன் சரியில்லை, எனவே, அவனை நீக்குவோம், வேறு தகுதியுள்ளவனை ஆட்சிப் பீடம் அமர்த்துவோம் என்று கூறிடும், ஆற்றலும் உரிமையும், மக்களிடம் இல்லை.

பெய்யெனப் பெய்யும் மழை வளமளிக்கிறது; பேய்மழை நாட்டை அழிக்கிறது. பூங்காற்று இனிமை பயக்கிறது; சூறைக் காற்று ஊர் அழிக்கிறது.

ஆனால், இயற்கையின் செயலைக் கட்டுப்படுத்த இயலாமல் மாமழை போற்றியும், பேய்மழை கண்டு துயருற்றும், பூங்காற்றுப் பெற்று இன்புற்றும், அழிவூட்டும் காற்றால்

அவதியுற்றும், நாம் யாது செய்யவல்லோம்; இயற்கையை நாம் எங்ஙனம் கட்டுப்படுத்த இயலும்! - என்று எண்ணிக் கிடந்திடும் போக்கினர் போன்றே, மக்கள் முறை தவறும் மன்னன், முறை அறியா மன்னன் என்போர் ஆட்சி நடாத்தி, அவதியை மூட்டிய காலத்திலும், இயற்கை சிற்சில வேளைகளில் கொடுமையை ஏவுவதுபோல, ஆண்டவன் எக்காரணம் குறித்தோ நமக்குக் கேடு சூழ்ந்திடக் கொடுமையாளனைக் கோலேந்தியாக்கினான்; மடமை மிக்கவனை மன்னனாக்கி மகிழ்கிறான்! நாம் எங்ஙனம், இதனைத் தடுத்திட, முடியும்! எங்ஙனம் மாற்ற இயலும்! நமக்கு ஏது அந்த ஆற்றல்! - என்று எண்ணிக் கிடந்தனர் நீண்ட காலம்.

கண்ணீர் முழுதும் வற்றிய பிறகு, கனல் பிறந்தது கண் களில்; தொல்லையின் எல்லைவரை துரத்தப்பட்ட பிறகு, துணிவு

பிறந்தது நெஞ்சத்தில்; பிறகே, முடி ஆட்சி முறை, திட்ட வட்டமாக, இன்ன குணமுள்ளதாக இருக்கும், இன்ன பலன் தரும் என்று அறுதியிட்டுக் கூற இயலாததாகவும், மாற்றி அமைக்க முடியாததாகவும் இருப்பதனால், அதனை நம்பி மக்கள் தமது வாழ்க்கையை ஒப்படைப்பது கூடாத காரியம் - எனவே மக்கள், கண்டறியத்தக்கதும், தேவைப்பட்டபோது மாற்றி அமைக்கத்தக்கதுமான ஓர் ஆட்சிமுறை வேண்டும்; நோக்கம் குறித்து அமைத்திடவும், எதிர்பார்த்த நலன் பெற்றளிக்க இயலாது போயின், மாற்றிவிடவும் தக்கதான ஆட்சி முறை இருத்தல் வேண்டும், என்ற முடிவுக்கு மக்கள் வந்தனர் - குடியரசு கண்டனர்.

தம்பி! குடிஅரசு கண்டனர், என்று மிகச் சுருக்கமாகக் கூறிவிட்டேன் - ஆனால், மிக நீண்ட, பயங்கரப் பயணம் நடாத்தியே, மக்கள் குடிஅரசு கண்டனர்.

•

முடி அரசு, கேடு பயப்பினும், மக்கள் தாங்கிக் கொள்ள வேண்டுமேயன்றி, மாற்றிவிட இயலாது.

குடிஅரசு, கேடு தந்திடின், மாற்றி அமைத்திடும் உரிமை மக்களுக்குக் கிடைக்கிறது.

முடிஅரசு, கோணல் வழி சென்றிடினும், கண்டித்துப் பேச, மக்களுக்கு உரிமை கிடையாது - உயிரைப்பற்றிய கவலை இருக்கும்வரை!!

குடிஅரசு, தவறு செய்வதாகத் தோன்றும்போதே, மக்கள் எடுத்துரைக்கலாம், கண்டிக்கலாம், எதிர்க்கக் கூடச் செய்யலாம்.

முடி அரசுக்கும், குடிஅரசுக்கும் இடையே உள்ளது இந்த வித்தியாசம். பல நூற்றாண்டுகள் சிந்தனையாளர்களும் வீரத்

தியாகிகளும், அரும்பாடுபட்டு ஈட்டிய முறை, குடிஅரசு.

முடி அரசுக் காலத்தில், மன்னனை மகிழ்விக்கவேண்டியது தமது கடமை என்று கிடந்தனர் மக்கள்.

அந்த மகிழ்ச்சி, கதை காட்டினேனே, அதுபோல் கோவேறு கழுதையின் வீரம்பற்றி, நகைச்சுவையுடன் எடுத்துக் கூறிக் களிப்பூட்டும் வகையினதாகத்தான் இருக்கும் என்பதல்ல பொருள் - மதியிலி மன்னனாக இருக்கும்போது இது போதும்! மமதையாளன் மன்னனானாலோ, அவன் மனம், குடி மகனொருவன் பெற்றெடுத்த செல்வத்தின் கற்பைச் சூறையாடு வதிலேதான் மகிழ்ச்சி பெறும் என்றால், அதுதான் நடக்கும்; மானமுள்ளோருக்குப் புகலிடம், சிறைக்கோட்டம், வெட்டுப் பாறை, அல்லது மரக்கிளை!

முடி அரசுக் காலத்து முறை, மக்கள் மன்னனுக்கு மகிழ்ச்சி யூட்டிப் பிழைத்துக் கிடப்பது.

குடிஅரசுக் காலத்திலோ, மக்களுக்கு மகிழ்ச்சியூட்டி, ஆள வந்தார்கள், இடம்பெற்றிருப்பர்.

பசிப்பிணி போக்கி, வளம் உண்டாக்கி, நல்வாழ்வு அளித்து, மக்களை மகிழவைக்கும், குடிஅரசுகளும் உண்டு. ஒரே நாளில் அமைச்சர் என்பது ஊர் உலா வந்தார், உமக்காக!! என்றுரைத்தும், உமக்காக இன்னின்ன திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன என்று ஏடு காட்டியும், பசிகண்டு பதறாதீர்! பாலாறு தயாராகிறது, பாரீர்! என்று புள்ளி விபரம் வீசுவதுமான, வேடிக்கை காட்டியும் பொழுதை ஓட்டிடுவோர்! நடாத்தும் குடிஅரசும் உளது.

கேடளிக்கும் முடி அரசு மாற, முடி தரித்தோன் மாய்ந் திடல் வேண்டும்; ஆனால் கேடளிக்கும் குடிஅரசை மாற்ற, மக்களுக்கு உரிமை இருக்கிறது

அறிந்து, ஆற்றலுடன் அந்த உரிமையைப் பயன்படுத்த வேண்டும்; பயன்படுத்துவர் என்ற நம்பிக்கையினால்தான், குடிஅரசு முறையே வகுக்கப்பட்டது; பல நாடுகளிலே, இந்த நம்பிக்கை வீணாகிப்போகவுமில்லை.

•

தம்பி! ஒரு நாட்டை ஆள்வது என்பது எல்லோராலும் முடிகிற காரியமா. . .? அதற்கேற்ற அறிவாற்றல் அனைவருக்கும் ஏற்பட்டுவிடுமா? ஆண்டவன் யாரோ சிலருக்கு மட்டுமே, அத்தகைய தகுதியை அருள்கிறான். மன்னர்கள், மகேசனின் அருள் பெற்றோர்! அவனுடைய பிரதிநிதிகள்!

என்று கூறப்பட்டதுபோய், எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று கூறிடத்தக்க காலம் இன்று பிறந்துவிட்டிருக்கிறது; என்றாலும் குடிஅரசு ஏற்பட்டான பிறகு, எதிர்பார்த்ததனைத்தும் கிடைத்து விட்டது என்று எவரும் கூறிவிடுவதற்கில்லை.

இது குடி அரசுக்காலம் என்று குதூகலத்துடன் கூறிக் கொள்பவர்களை நோக்கிக் கேலி செய்து கொண்டல்லவா, ஸ்பெயின் நாட்டுப் பிராங்கோவும், போர்ச்சுகல் நாட்டு சலாசரும் உள்ளனர்! எகிப்து நாட்டு நாசரும், பிரான்சின் தெகோலூம், இந்தோனேசிய நாட்டு டாக்டர் சுகர்ணோவும், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் எனினும், சர்வாதி காரிகள் எனும் நிலையில்தானே உள்ளனர். பக்கத்து நாடான பாகிஸ்தானில், பட்டாளத்துத் தலைவர்தானே, ஆட்சி நடத்துகிறார்!

இன்றைய உலகில், முடி மன்னர்களும் உள்ளனர், பிடியை பிரபுக்களிடம் விட்டுவிட்டு இருக்கும் முடி தாங்கிகளும் உள்ளனர்.

குடிஅரசுத் தலைவர்களும் உள்ளனர்; குடிமக்களை நல்லபடி நடத்திச்செல்ல நான் எல்லா அதிகாரத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்றுரைக்கும் சர்வாதிகாரிகளும் உள்ளனர். பாராளுமன்ற முறை மூலமே, குடிஅரசு முறையிலே பக்குவம் ஏற்படுத்த முடியும்; அந்தப் பாராளுமன்ற முறைக்கு அடிப்படையாகத் தேவைப்படுவது, அரசியல் கட்சிகள் - அந்த முறைதான் இங்கு உள்ளது என்று கூறும் நாடுகள் உள்ளன; சோவியத்தோ, அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வது, நேரக்கேடு, வீணாட்டம்; அத்தகைய கட்சிகள், பணம் படைத்தோரின் உடைமைகளாகி விடுகின்றன; எனவே மக்களாட்சி என்பது

வெறும் கேலிக் கூத்தாகிவிடுகிறது! எனவே இங்கு ஒரே கட்சிதான் உண்டு, அது மக்கள் கட்சி! ஒரே தேர்தல்தான் - அந்தக் கட்சி மட்டுமே ஈடுபடும் தேர்தல் - இதுதான் உண்மையான மக்களாட்சி! மற்றது போலி! புரட்டு! - பகட்டு!- என்று செப்புகிறது.

இது ஆட்சி முறையிலே ஒருவகை என்று கூறத்தக்கதே யன்றிப், பாராளுமன்ற ஆட்சிமுறை ஆகாது என்று கூறிடும், அரசியல் தத்துவவாதிகள் நிரம்ப உள்ளனர்.

முடி ஆட்சி, ஒரு அருள் பெற்ற குடும்பத்துக்கு மட்டுமே, ஆட்சி நடாத்தும் தகுதி, வழி வழி கிடைத்திடும் என்ற நிலையை நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

குடிஅரசு முறையோ, கொல்லன் மகனாயினும், உழவனாயினும், சிறுகடை நடாத்துவோனாயினும், செருப்புத்

தைப்போனாயினும் - ஆட்சி நடத்திடும் ஆற்றலைப் பெற்றிட இயலும் என்ற நம்பிக்கையையும், அந்த உரிமை அவனுக்கு உண்டு என்ற நிலையையும், ஏற்படுத்தித் தருகிறது.

•

எல்லோரும் இந்நாட்டு மன்னர் - என்பதிலே, மன்னர், என்ற வார்த்தை, ஆட்சி, நடாத்தும் உரிமையைக் குறிக்க மட்டுமே பயன்படுதல் வேண்டுமேயன்றி, மன்னன்போல், "அருள் பெற்றேன், அமுல் நடத்துவேன், எது செயினும் முறையே என்று எவரும் இருத்தல்வேண்டும்' என்ற மனப்போக்கை, மண்டைக் கனத்தைக் குறித்திடப் பயன்படுத்தப்படுமானால், குடிஅரசு முறை, கொடுமைகளை மட்டும் மூட்டுவதாக அல்ல, மடைமைப் படுகுழியில் மக்களைத் தள்ளிடும் மாபெரும் சதியாகிப்

போகும்.

•

இந்த நிலையில், இன்று நடைபெறும் அரசு முறை ஆகிவிட்டது என்றுதானோ என்னவோ, குடிஅரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத், மனம் வெதும்பியது போலவும், கேட்போர் மனம் புண்படும் முறையிலும், சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். பத்ரிநாத் போய்வந்தவர், பாபம் போக மார்க்கம் ஏதேனும் கூறுவார் என்று பலரும் எதிர்பார்த்திருப்பர் - ஆனால் பாபுவோ, இன்றுள்ள ஆட்சி முறை பற்றி, கேலியும் கண்டனமும், வியப்பும் வேதனையும் நெளியும் விதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

•

சட்டமன்றங்களில் அமர்ந்து,

சட்டமியற்றுவோருக்கு, அதற்குத் தேவையான அறிவாற்றல் இல்லை; அவர்களுக்கு உள்ள ஒரே தகுதி, அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்பதுதான். அப்படித் தேர்ந்தெடுத்த மக்கள் யார் எனில் இவர்களைப் போலவே அறிவாற்றலற்றவர்கள் - என்ற கருத்துப்படப் பேசிவிட்டார்.

குருடும் குருடும் குருடாட்டம் ஆடுவதுபோல என்பார்களே, அதுபோல, இன்று ஆட்சிமுறை இருப்பதாக, அவர் கருதுகிறார்.]

இவ்விதமான கருத்துக் கொண்டுள்ள இவரே, குடிஅரசுத் தலைவராக, இன்று அமர்ந்திருப்பது, கேலிக்குரிய, கண்டிக்கத் தக்க, தரம் கெட்ட ஒரு அரசியல் முறையின் மூலமாகத்தான் என்பதை அவர் மறந்துவிட்டிருக்க முடியாது. சிலராகிலும்

இதைச் சுட்டிக்காட்டுவார்களே என்பதைத் தெரிந்திருந்தும் தான், குடிஅரசுத் தலைவர் அவ்விதம் பேசியிருக்கிறார். பேசியதோடு நிற்கவில்லை, சட்டமன்றங்கள் செல்வதற்குச் சில தகுதிகள் இருத்தல் வேண்டும்; சில தகுதிகளைக் குறிப்பிட்டு, அத்தகுதிகள் உள்ளவர்கள் மட்டுமே, சட்டமன்றங்கள் செல்லலாம் என்று முறை ஏற்படுத்துவது மிக நல்லது என்றும் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

மிக உச்சிக்குச் சென்று அமர்ந்துகொண்டவர்களும், சட்ட மன்றம் போன்ற இடங்கள் செல்வது தமது தகுதிக்குக் குறைவு என்று கருதுவோரும், சட்டமன்றம் போன்ற இடங்களுக்குச் செல்ல முடியாது கிடப்போரும், செய்திடும், ”உபதேசம்’ இது என்று மட்டும், பாபுவின் பேச்சைக் கொள்வதற்கு இல்லை.

முன்பொருமுறை, இப்போது இருந்துவரும்

எல்லோரும் ஓட்டு அளிக்கும் முறை, இனியும் நீடிக்க வேண்டுமா? அதைவிட, மறைமுகத் தேர்தல் முறை இருப்பது நல்லதல்லவா? - என்ற கருத்துப் பட, நேரு பண்டிதர் பேசி இருக்கிறார்.

குடிஅரசுதான் சிறந்தது; ஆனால், அது கட்சிகளற்ற குடிஅரசாக இருக்கவேண்டும் - ஆனால் அதேபோது சர்வாதிகாரமும் கூடாது, சோவியத் முறையும் ஆகாது! - என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறிவருகிறார்.

பெரியார், பலமுறை பேசியிருக்கிறார், இராஜாவே ஆண்டால் என்ன? சர்வாதிகாரி இருப்பதுதான் நல்லது! - என்றெல்லாம்.

அவர், இந்த நாடு பற்றியும், ஆட்சி பற்றியும் என்ன கருதுகிறார் என்பதை அறிந்துகொள்ள, அவர் பன்முறை பேசி இருக்கிற ஒரு கருத்தைக் கவனித்தாலே

போதும்.

”இந்த நாட்டை எவன் ஆண்டால் என்ன? இந்த நாட்டை ஒரு ஜதை செருப்பு ஆண்டிருக்கிறது. 14 வருஷங்கள்’’ என்று பேசி இருக்கிறார்.

இதைக் கவனிக்கும்போது, அவர், இந்த நாட்டு மக்களுடைய போக்கைக் குறித்துக்கொண்டுள்ள வெறுப்புத் தான், அவரை அவ்விதம் பேசவைக்கிறதேயன்றி, ஆட்சிமுறை களிலே எது சிறந்தது, எது தரமானது என்று எண்ணிப் பார்த்து அவர் ஏதும் கூறுவதாகத் தெரியவில்லை என்பது விளக்க மாகிறது.

•

பாபு இராஜேந்திரர் போன்றவர்கள், இன்று, சட்டம் இயற்றும் போக்குக்கண்டு கசப்புற்று, இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது சட்டம்

இயற்ற என்று பேசுவது, என்ன காரணத்தால்? அவர்களுக்குப் பிடித்தமற்ற முறையிலே, சட்டங்கள் இன்று நிறைவேற்றப்படுகின்றன, என்ற கசப்பா? அல்லது, இன்று சட்டமியற்றும் பொறுப்பும் உரிமையும் பெற்றுள்ள தமது கட்சியினர், இனி அந்த நிலையினின்றும், விரைவிலே தள்ளப்பட்டுப் போவார்கள்; அவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், யார் வேண்டுமானாலும் சட்டமன்றத்துக்குச் செல்லலாம் என்ற முறையையே மாற்றிவிட வேண்டும் என்று எண்ணுகிறாரா!

சட்டமன்றம் செல்வதற்குச் சில தகுதிகள் இருக்க வேண்டும் என்பது முறையானால், சட்டமன்றத்துத் தேர்தலில் ஈடுபட்டு,. "ஓட்டு' அளிக்கவும், சில தகுதிகள் இருக்க வேண்டும் அல்லவா? அதாவது, வயது வந்த எல்லோருக்கும்"ஓட்டு' என்ற முறை இருக்கக் கூடாது என்று

ஏற்படுகிறது. அப்படியாகுமானால், நாடு, வெள்ளைக்காரர்கள் ஆட்சி நடத்தி, முணு முணுத்துக் கொண்டே, சிறிது சிறிதாக, அரசியல் உரிமைகளை மக்களுக்கு அளித்தார்களே, அந்தப் பழைய காலத்துக்கன்றோ இழுத்துச் செல்லப்படும்! அதனைத்தானே, ஐம்பது அறுபது ஆண்டுகளாக எதேச்சாதிகாரம், பிற்போககு அரசியல், என்றெல்லாம், பாபுவின் சகாக்கள் கண்டித்தனர்.

இப்போது எதேச்சாதிகாரமும், பிற்போக்கு அரசியல் முறையும் தேவை என்ற முடிவுக்குக் காங்கிரஸ் வந்துவிட்டது என்பதைத் தான் பாபுவின் பேச்சு முன்கூட்டியே அறிவிக்கிறதோ என்ற அச்சம் எவருக்கும் ஏற்படத்தான் செய்யும்.

சுதந்திரம் பெற்ற உடன், எமது காங்கிரஸ் கட்சிதான், எல்லா மக்களுக்கும் ஓட்டுரிமை

வாங்கிக் கொடுத்தது என்று மார்தட்டிக் கொள்ளும் காங்கிரஸ், இனி வெகு விரைவில், கொடுத்த ஓட்டுகளைப் பறித்துக் கொண்டு, எதேச்சாதிகார அரசியல் முறையை அமுல் நடத்தப் போகிறதோ, என்னவோ, யார் கண்டார்கள்!

•

எகிப்து நாட்டிலே, படைபலம் காட்டி, ஆட்சியைக் கைப்பற்றியுள்ள, நாசர் நல்லவர், திறமைமிக்கவர், இலட்சியவாதி - எல்லாம் உண்மை. ஆனால், அவர், நான் பார்த்து, ஒத்துக் கொள்வது மட்டுமே அரசியல் கட்சி என்ற உரிமையைப் பெற முடியும் - மற்றவை தலைகாட்டக் கூடாது என்று கூறிவிட்டார்.

அவருடைய சொல்லே சட்டம்! ஏனெனில், அந்தச் சொல்லுக்கு வலிவளிக்கப், பெரும்படை தயாராக இருக்கிறது.

அவர் போன்றே, இந்தோனேசிய அதிபர் சுகர்ணோவும் அரசியல் கட்சிகளுக்கு, இன்னின்ன இலக்கணம் இருக்க வேண்டும்; இவ்விதம் நடந்துகொள்ளவேண்டும்; இல்லை யென்றால், அந்தக் கட்சிகளின் சீட்டுக் கிழிக்கப்பட்டுவிடும் என்று அறிவித்துவிட்டார்.

உரிமைகள் பற்றிய ஆர்வமற்றவரோ, டாக்டர் சுகர்ணோ? இல்லை! நிரம்பப் பேசி இருக்கிறார், ஐக்கிய நாடுகள் மன்றத்திலே!!

தம்பி, இந்தப் பெரும் தலைவர்களின், வியப்பூட்டும் பேச்சுக்களைப் பார்க்கும்போது, இவர்கள் ஒவ்வொருவரும், தமக்கு எவை சாத்தியமோ, பிடித்தமோ, அவை மட்டுமே மக்களுக்கு நல்லாட்சி ஏற்படுத்தித் தரத்தக்கன; மற்ற எல்லா முறைகளும் தீது பயப்பன; எனவே, தேவையற்றன, நீக்கத்தக்கவை என்று கருதுகிறார்கள் என்பது மிக நன்றாகத் தெரிகிறது.

உலகப் பெருந்தலைவர்கள் கூடிப், போர்க் கருவிகளை ஒழித்திட, மாநாடு நடாத்துகிறார்களே, தம்பி! கூர்ந்து பார்த்தால், ஒவ்வொரு தலைவரும், தம்மிடம் இல்லாத போர்க் கருவிகள், உலகிலே மற்ற எவரிடமும் இருத்தல் கூடாது; தமக்குத் சாத்தியமாகாத எந்தப் போர்முறையும் திட்டமும், உலகிலே மற்ற எவரிடமும் இருத்தல் கூடாது, என்பதைத்தான் மிகச் சாமர்த்தியமாகப் பேசி வருவது புரியும்.

1932-இல் ஜெனிவா நகரில், போர்க்கருவிகள் ஒழிப்புக்கான மாநாடொன்று நடைபெற்றது. சோவியத் நாட்டு லிட்வினாப் இப்போது குருஷேவ் வலியுறுத்தியதுபோலவே, போர்க் கருவிகள் ஒழிக்கப்படவேண்டும் என்ற திட்டம் கொடுத்துப் பேசினார்.

அப்போது, ஸ்பெயின் நாட்டிலிருந்து

வந்திருந்த மாட்ரியாகா என்பவர் ஒரு கதை கூறினார்.

”காட்டிலே உள்ள மிருகங்களெல்லாம் கூடி, ஒன்றை ஒன்று கொன்று குவித்திடும் கொடுமையை ஒழிக்க வழிவகை என்ன என்று மாநாடு நடத்தின. காட்டரசனான சிங்கம், கெம்பீரக் குரலில், கழுகைப் பார்த்தபடி, நாமெல்லாம் கூர்மையான மூக்குகளை ஒழித்துவிட வேண்டும் என்று கூறிற்று; புலி யானையைப் பார்த்தபடி, ஒழிக்கப்பட வேண்டியது தந்தங்கள்! என்று பேசிற்று; யானையோ, புலியை பார்த்துக் கொண்டே, கோரமான பற்களையும் கூரான நகங்களையும் ஒழித்தாக வேண்டும் என்று முழக்கமிட்டது. இப்படி ஒவ்வொரு மிருகமும், தன்னிடம் எது இல்லையோ, எதை வைத்துக் கொண்டு, மற்ற மிருகங்கள் கொல்லும் வலிவு பெறுகின்றனவோ, அவைகளை ஒழித்துவிட

வேண்டுமென்ற நோக்கத்துடன் பேசின. கடைசியாகக், கரடி எழுந்தது, கனிவுடன், கொல்லும் செயலுக்குப் பயன்படும் எல்லாமே ஒழிக்கப்படத்தான் வேண்டும் - கொடிய வாய், கூரான நகம், நீண்ட கூரிய மூக்கு - எல்லாம் - புவியெங்கும் இருந்து வருகிறது, கட்டித் தழுவிக் கொள்ளும் முறை தவிர, மற்றதெல்லாம், ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று கூறிற்று.

தம்பி! கரடி, கட்டிப்பிடித்தே மற்றதைக் கொல்லவல்லது, எனவே, கரடி, அதுமட்டும் இருக்க வேண்டும், மற்றவை ஒழிய வேண்டும், என்று பேசிற்று என்பதாகக் கூறினார், ஸ்பெயின் நாட்டுக்காரர்.

அது, சோவியத்தைக் கிண்டல் செய்யப் பேசப்பட்டது. ஆனால், இதிலே தொக்கி நிற்கும் உண்மை, ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டுக்கு வலிவு எதுவோ, அதை ஒழிக்கவே,

போர்க்கருவி ஒழிப்பு மாநாடு நடத்துகிறது, என்பதுதான்.

போர்க் கருவிபற்றி மட்டுமல்ல, ஆட்சி முறை பற்றியும், பெரும் தலைவர்கள் பேசுவது, இஃதே போன்ற நோக்குடைய தாகவே இருந்து வரக் காண்கிறோம்.

•

நோக்கம் இருக்கட்டும், இந்தப் பேச்சுப் பேச ஏன் முன்வந்தனர், பாபு போன்றார்! மக்கள், குடிஅரசு முறையிலே அடியோடு நம்பிக்கை இழந்துவிடவில்லையே தவிர, எதிர்பார்த்த பலன், நலன், குடிஅரசு முறைமூலம் கிடைக்கக் காணோமே என்ற ஏக்கமும் திகைப்பும் மக்கள் மனதிலே, வேகமாக வளர்ந்த வண்ணம் இருக்கிறது.

அதனைத் தெரிந்து கொண்டே பெருந்தலைவர்கள், இது போலப் பேசத்

தலைப்பட்டுள்ளனர்.

மக்களுக்குத் திகைப்பு ஏற்பட்டிருப்பதற்கும் காரணம் நிரம்ப இருக்கிறது.

எந்தக் குடிஅரசு முறைபற்றி விழாக் கொண்டாடி, மக்களை, ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே! என்று பாடி, ஓட்டு வாங்கி, ஆட்சி நடத்தத் தொடங்கினார்களோ, அந்தக் காங்கிரசார் ஆட்சியிலே, வெள்ளைக்கார ஆட்சியிலே நடைபெற்றதைவிட, அளவிலும் வகையிலும் அதிகமான அடக்குமுறை அவிழ்த்து விடப்படுகிறது.

உலகுக்கே சாந்தி போதனை பேசிவிட்டு, ஊர் திரும்புகிறார் நேரு பண்டிதர்; அவர் ஆட்சியிலே என்ன நடக்கிறது; எதைக் கண்டார்?

சிறையில் அடைக்கப்பட்ட அகாலியர்,

கலகம் செய்தனர் என்பதற்காகச், சிறையிலே சுட்டுத் தள்ளப்பட்டனர்.

வரியோ, ஏறியபடி இருக்கிறது; கடன் பளுவோ, கழுத்தை நெறிக்கும் அளவுக்கு; சட்டங்களோ, தொழிலாளரின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில்! செல்வ வான்களுக்குத் தரப்படும் சலுகைகளோ அவர்களே வெட்கப்படும் அளவிலும், முறையிலும்! விலைவாசியோ விஷம்போல் ஏறியபடி! நிர்வாகத்தில் ஊழல்களோ, நாற்றமெடுக்கும் அளவுக்கு!

என்றாலும், தம்பி! மீண்டும் மீண்டும் இத்துணை கேடுபாடு களைச் செய்திடும் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் வெற்றி கிடைக்கிறது.

இதைக் காணும்போது மக்களுக்கு, திகைப்பும், குடிஅரசு முறை மீதே ஒருவிதமான

அருவருப்பும் ஏற்படத்தானே செய்யும்.

என்ன தேர்தல்!

என்ன சட்டசபை!

என்ன குடிஅரசு!

எந்த அரசு வந்தும் நமது கஷ்டம் போகக் காணோம்.

என்று மக்கள் மனம் குமுறிப் பேசுகின்றனர்.

•

பேசுகின்றனர், திகைப்படைகின்றனர், திகில் கூடக் கொள்கின்றனர்; ஆனால், கேடுபாடு நிறைந்த காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தும் உரிமையும் ஆற்றலும், குடிஅரசுக் கோட்பாட்டின் மூலம், தங்களிடம் தரப்பட்டிருக்கிறது, என்பதை மட்டும் தெளிவாக உணர மறுக்கின்றனர்.

விழிப்புடனிருத்தல், குடிஅரசு வெற்றிபெற மிக மிகத் தேவை. விழிப்புடன் இருக்கும் நிலையில் உள்ள மக்களையே, குடிஅரசு முறையையும் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும், பணம் படைத்தோர், மயக்கவும், மிரட்டவும் முடிகிறது என்றால், விழிப்புணர்ச்சியே அற்றுக் கிடக்கும் மக்களிடம், ஆதிக்கக் காரர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்!

மக்களை, மிரட்டவும் மயக்கவும் எளிதாக முடிகிறது என்று தெரியும்போது, சீமான்கள், குடிஅரசு முறையையே குத்தகைக்கு எடுத்துக்கொள்ள முடிகிறது.

நாம் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்து கொண்டு, அதற்கு விளக்கம், இதற்குச் சமாதானம், இந்தக் கணக்கு அந்த விவரம், என்றெல்லாம் காட்டிக் கொண்டும், எதிர்ப்பாளர்களுடன் மல்லுக்கு நின்று

கொண்டும் கஷ்டப்படுவானேன்; நமது "பாகார்டு' ஓட்ட நல்ல ஆளை அமர்த்திக் கொள்வது போல, நமது நலனைப் பாதுகாக்கும் முறையிலே ஆட்சி நடத்தத் தக்கவர்களைத் தட்டிக் கொடுத்து, வேலை வாங்கினால் போதாதா! - என்ற முறையிலேதான் கோடீஸ்வரர்கள் உள்ளனர்.

ஐந்து கோடி ரூபாய் செலவிட்டுத்தான் போன பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது என்பதைக் காங்கிரஸ் அமைச்சரே, வெட்கமின்றி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

மக்கள் "ஓட்டு' அளிக்கிறார்கள். சீமான்கள் நோட்டு அளிக்கிறார்கள். ஓட்டளித்த மக்களுக்காக முற்போக்கான சட்டங்களை இயற்றுவோம். நோட் அளித்த சீமான்களுக்காக, அந்தச் சட்டத்திலே, நிறையச் சந்து பொந்துகளை

ஏற்படுத்திக் கொடுப்போம். திடலில் தீவிரம் பேசுவோம் - அது மக்களுக்குத் தரும் தித்திப்பு! மாளிகைகளிலே சீமான்களிடம், வேண்டுகோள் விடுப்போம் - அது இலட்சங்கள் பெற!!

இந்த முறையில்தானே தம்பி! காரியம்.

மக்களே! உங்கள் வாழ்வு வளம் பெறப் புதுப்புதுத் தொழில்களை அமைக்கிறோம் என்று திடலில் பேசுகின்றனர். மாளிகைக்காரரிடமோ, தொழில்களை நடத்த இன்னின்ன வசதிகள், சலுகைகள், வாய்ப்புகள் தருகிறோம், பெற்றுக்கொள்க என்று பேசுகின்றனர்.

ஐயன்மீர்! திட்டம் திட்டம் என்று பேசுகிறீர், புதுப் புதுத் தொழில் வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு, முதலாளிகளைத்தானே கொழுக்க வைக்கிறீர்; என்று

கேட்டுவிட்டாலோ, மூக்குச் சிவந்துவிடுகிறது அமைச்சர்களுக்கு. அப்படியானால், தொழில் வளர வேண்டாம் என்கிறீரா! மக்கள் வறுமையிலேயே வாடட்டும் என்கிறீரா! - என்று பேசி, மக்கள்மீது மாயவலை வீசுகிறார்கள்.

தம்பி! ஒரு தகவல் பார்த்தேன். ஏதோ ஒரு இதழில் தனிப்பட்ட முதலாளி, சுயராஜ்யத்திலே தன் ஆதிக்கத்தை எந்த அளவு பெருக்கிக்கொள்ள முடிந்திருக்கிறது. என்பதற்கான தகவல். திகைத்தே போனேன், சொல்கிறேன், கேட்கிறாயா, திகைப்படையாமல், காங்கிரஸ் கட்சிக்கு மெத்த வேண்டியவர் அல்லவா, பிர்லா! அவருடைய மாளிகையில்தானே, காந்தியாரே சுட்டுக் கொல்லப்பட்டார்! அவருடைய தர்மாலயங்கள், என்னென்ன தெரியுமா! குமரி முதல் இமயம் வரை என்கிறார்கள் அல்லவா - அது இவரைப் பொறுத்தவரையிலே,

முற்றிலும், உண்மை.

ஹென்றி கெய்சர் எனும் அமெரிக்கக் கோடீஸ்வரருடன் கூட்டாகச் சேர்ந்து, உத்திரப் பிரதேசத்தில், மிகப் பெரிய அலுமினியத் தொழிற்சாலையைத் துவக்கி இருக்கிறார்.

தம்பி! இங்கே ஏன், தொழிற்சாலை அமைக்கக் கூடாது என்று நாம் கேட்கும்போது, படிக்காத மேதையும் படித்த மேதையும் சேர்ந்துகொண்டே பதில் கூறுகின்றனர், நினைவிருக் கிறதா - கண்ட கண்ட இடத்திலே தொழிற்சாலைகளை ஆரம்பித்துவிட முடியுமா! தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள் கிடைக்க வேண்டாமா? மூலப்பொருள் எங்கு கிடைக்கிறதோ, அங்கு தொழில் வளரும். இதுகூடத் தெரியவில்லை, இந்த தி.மு.க.வுக்கு - என்று பேசிக் கெக்கலி செய்கி ன்றனர்.

ஆனால், தம்பி! பிர்லா, அமெரிக்கக்

கூட்டுடன், உத்திரப் பிரதேசத்தில் அமைக்கிறாரே, அலுமினியத் தொழிற்சாலை, அதற்கு மிகமிகத் தேவைப்படுவது பாக்சைட்! அந்தப் பாக்சைட் உத்திரப்பிரதேசத்தில் இல்லை. மத்திய பிரதேசத்திலிருந்து, 400 கல் தொலைவில் இருந்து, கொண்டுவரப்பட வேண்டும்!!

இதைச் சொல்லிப் பார், காமராஜரிடம், "போ! போ! அலுமினியமாவது காரீயமாவது! இங்கே வேண்டியது சோறு!'' என்று அழகாக, எந்த நாட்டு அமைச்சரும் இதுவரை சொல்லாத முறையில், கூறுவார்.

பிர்லாவின் தொழிற்சாலை, உத்திரப்பிரதேசத்தையும் மத்தியப் பிரதேசத்தையும் இணைக்கிறது.

டெல்லியில், பிர்லா பஞ்சாலை!

பம்பாயில், பிர்லாவுக்கு சென்ச்சரி

நூற்பாலை.

குவாலியரில், அவருக்கு, ஜீவாஜீராவ் பஞ்சாலை.

கல்கத்தாவில், ஜெயஸ்ரீ கேசவராம் பஞ்சாலை.

மத்தியப் பிரதேசத்தில், குவாலியர் பட்டுநூல் ஆலை.

ஆமதாபாத்தில், புதிய சுவதேசி ஆலை.

ஹைதராபாத்தில், சிர்சில்க் எனும் ஆலை.

பிர்லா சணலாலை, ராமேஸ்வர் சணலாலை, பாலி சணலாலை, சூரா சணலாலை, இத்தனையும் கல்கத்தாவில்.

ஜாம் நகரில், திக்விஜயா, கம்பளி ஜவுளி ஆலை.

கல்கத்தாவில், நெசவாலை யந்திர உற்பத்திச் சாலை.

கிம்கோ என்ற பெயரில், குவாலியரில், பரத்பூரில் தொழிற்சாலைகள்.

கல்கத்தாவில், புதிய இந்தியா, மேல் கங்கை, பாரத்பூர், அவுத், புது சுவதேசி, கோவிந்து, என்று இத்தணை பெயர்களில் சர்க்கரை ஆலைகள்.

பெப்பர்மின்டு தொழிற்சாலை, கல்கத்தாவில்.

வனஸ்பதி, துங்கபத்ரா தொழிற்சாலையில், பேரார் சுவதேசி வனஸ்பதி, சர்க்கரை ஆலை யந்திர உற்பத்திச்சாலை, ஓரியண்ட் காகிதத் தொழிற்சாலை, இவ்வளவும் வங்காளத்தில்.

ஹைதராபாத்தில் சிர்பூர் காகித ஆலை.

ஓரியண்ட் மின்சார விசிறித் தொழிற்சாலை கல்கத்தாவில்.

பம்பாயில் ஹிண்ட் சைக்கிள் தொழிற்சாலை.

கல்கத்தாவில், இந்துஸ்தான் மோட்டார் தொழிற்சாலை.

ஜெய்பூரில், தேசிய உருளைகள் தயாரிப்புத் தொழிற்சாலை.

பம்பாயில், உருக்கு உலை.

கல்கத்தாவில், யந்திரச் சாமான்கள் தயாரிப்புத் தொழிற் சாலை; ரேடியோ, பிளாஸ்டிக் தொழிற்சாலைகள்; மருந்துவகை தயாரிக்கும் தொழிற்சாலை, இவ்வளவும்.

போர்பந்தரில் சோடா உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை.

தேடத்தேடத், தகவல்கள் நிறையக் கிடைக்கும்; கிடைத்தது?

காங்கிரசாட்சி, கனதனவான்களுக்குக்

கரும்பாக இனிப்பதிலே வியப்பு என்ன?

இத்தனை, விதவிதமான தொழிற்சாலைகளை நடத்தும் பிர்லாவுக்கு, மூலதனம், வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு யந்திரம், இவ்வளவும் தேவைப்படும் அளவுக்குக் கிடைக்கிறது; தொழில் தழைக்கிறது. காங்கிரசாட்சியின் துணையின்றி, எப்படி, இப்படிப்பட்ட ”ராஜ்யத்தை’ ஒரு பிர்லா அமைத்து ஆண்டிட முடியும்?

காங்கிரசாட்சியின் துணை இவ்வளவுக்கும் தேவைப்படும் போது, தேர்தலிலே, காங்கிரசை வெற்றிபெறச் செய்வதிலே, பிர்லாவுக்கு அக்கரை எப்படி ஏற்படாமல் போகும். அந்த அக்கரை கோடிகளாகின்றன! கோடிகள் இருப்பதால், கோணல் ஆட்சி நடாத்திடினும், மக்களை மயக்கி, மீண்டும் பீடம் ஏறக் காங்கிரஸ்

கட்சியால் முடிகிறது.

குடிஅரசு, மக்களின் நலனைக் காத்திடும் அரசாகாமல் இருக்கிறது என்றால், தம்பி! காரணம் இப்போது புரிகிறது அல்லவா?

பலப்பல கோடி ரூபாய்கள், திட்டங்களின் பெயரால் செல விடப்படுகின்றன; இதிலே, பெரும்பங்கு தனிப்பட்ட முதலாளி களுக்குத்தான் சேருகிறது - அவர்கள் தொழில்கள் வளர, இலாபம் பெருக.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே, 233 கோடி ரூபாய், தனியார் துறைக்கு ஒதுக்கினீர்களே - இதிலே, பல தொழில்களை அமைத்துக் கொண்டு, ஏகபோக பாத்தியதை கொண்டாடும் 20 பெரிய தொழிலதிபர்களிடம் போய்ச் சேர்ந்தது எவ்வளவு தொகை? பரவலாகத் தொழில் வளரச், சிறு முதலாளிகளுக்குப் போய்ச் சேர்ந்தது,

எவ்வளவு தொகை?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, தனியார் துறைக்கு 570 கோடி ரூபாய் ஒதுக்குகிறீர்களே, இதை எப்படிப் பகிர்ந்தளிக்கப் போகிறீர்கள்?

தொழில் உலகில், வல்லரசு அமைத்துக் கொள்ளப் பெரிய முதலாளிகளால் முடிகிறது! அதைத் தடுத்து நிறுத்த உங்களால் முடியவில்லை.

தொழிற்சாலை அதிபர்கள், மேலும் மேலும் வலிவு அடைகிறார்கள்; ஆதிக்கம் பெறுகிறார்கள்.''

என்று அசோக் மேத்தா பாராளுமன்றத்திலேயே பேசினார். பேசி? நான் எப்போதாவது எடுத்துச் சொன்னால் தான் வெளியே தெரியுமே தவிர, இந்துவும், மெயிலும், இன்னபிற இதழ்களும், இதனையா

எழுதி மக்களுக்கு உண்மை நிலையைத் தெரியச் செய்திடும்! பத்திரிகைகள் மட்டும் என்ன - "சூளைக் கல்லும் பிடாரிதான்' என்ற பழமொழிப்படிதானே!

•

தம்பி! அரசு முறை எவ்விதம் இருப்பினும், முடி அரசு ஆகட்டும், குடிஅரசு ஆகட்டும், இங்கிலாந்தில் உள்ளதுபோல குடிக் கோனாட்சியாகட்டும், முறை எவ்விதம் இருப்பினும் தொழிலதிபர்களிடம் சிக்கிக்கொண்டால், தீர்ந்தது - ஆட்டி வைக்கிறபடி ஆடும், நீட்டிய இடத்தில் கையெழுத்திடும்!

குடிஅரசு முறையையும் வைத்துக்கொண்டு, சமூகத்திலேயும், தொழில் உலகிலேயும் ஆதிக்கக்காரர்களுக்குப் பிடி இருக்கும் படியும் அனுமதித்துவிட்டால்,

புத்தியுள்ள ஒரு மன்னனேகூட, குடிஅரசுக் கோட்பாடு பேசும் அமைச்சர்களை ஆட்டிப்படைக்க முடியும்.

அடுத்து அப்படிப்பட்ட ஒரு மன்னனைக் காணலாம்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

30-10-1960

24. எல்லோரும் இந்நாட்டு மன்னர் (2)

தம்பி!

”உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்,

மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்”

என்ற செய்யுளை, வேறு எதற்காக இல்லையென்றாலும், செந்தமிழின் செம்மை கருதியேனும், இன்றும் பள்ளிகளில் பிள்ளைகள் படிக்கின்றார்கள் அல்லவா!

அந்த உழவனைச் சற்றுக் காண்போமா? கழகத் தோழர்கள், எடுத்தளிக்கும் படப்பிடிப்பு அல்ல; காங்கிரஸ் ஆட்சி அமைத்த குழுவினர்

தருவது.

1956-57ஆம்ஆண்டு, உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் நிலை குறித்து, ஆய்ந்தறிந்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். இதற்கு முன்பும் இதுபோன்றதோர் அறிக்கை வெளியிடப் பட்டது.

வேறு எந்தச் செயலிலே காட்டத் தவறினாலும் காங்கிரஸ் துரைத்தனம், பல்வேறு குழுக்கள் அமைப்பது அறிக்கைகள் வெளியிடுவது, ஆய்வுரைகளைத் தருவது எனும் செயலிலே மட்டும், மிக மிகச் சுறுசுறுப்புக் காட்டுகிறது. காங்கிரசார் ஆளவந்தார்களான பிறகு, வெளியிடப்பட்ட அறிக்கைகளைக் குன்றெனக் குவித்துக் காட்டலாம் - அளவில் குன்று! பலன்? குடிஅரசுத் துணைத் தலைவர், டாக்டர் இராதாகிருஷ்ணன், சின்னாட்களுக்கு முன்னம், "ஆய்வுக் குழுக்கள் அமைப்பிலே,

அறிக்கைகள் வெளியிடுவதிலே, எனக்குத் துளியும் நம்பிக்கை யில்லை, நானே, பல ஆண்டுகளுக்கு முன்பு. பல்கலைக் கழகம் குறித்து ஆய்ந்தறிந்து அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்; தொகுதி மூன்று 121 பலன் ஏதும் விளையவில்லை!!'' - என்று மெத்த வேதனையுடன் பேசினார்.

ஆளவந்தார்கள், குழுக்களை அமைக்கிறார்கள்; குழுக்கள் உலாவருகின்றன; உரையாடல்கள் உற்சாகத்துடன் நடைபெறு கின்றன; அறிக்கைகள் ஆர்வத்துடன் தயாரித்து வெளியிடு கிறார்கள்; அந்த அறிக்கைகளோ குவிகின்றன; செயல்பட வேண்டிய துரைத்தனமோ, துயில்கொண்டு விடுகிறது.

அறிக்கையின் மூலம் விளைவு, விரும்பத்தக்க முறையில் கிடைப்பதில்லை என்றாலும், கூர்ந்து பார்க்கக்

கூடியவர்களுக்கு, நாட்டு நிலைமையையும், நாடாள்வோரின் திறனற்ற போக்கையும் எடுத்துக்காட்ட இவை பயன்படுகின்றன. அத்தகைய அறிக்கை களிலே ஒன்றுதான் 1956-57ஆம் ஆண்டு வெளிவந்தது; உழவர் பெருங்குடிமக்கள், இந்த உத்தமர்கள் ஆட்சியில் இராமராஜ்யம் என்பதே கிராம ராஜ்யம்தான் என்று தமக்குத் தாமே புகழாரம் சூட்டிக் கொள்வோர் ஆட்சியில், எத்தகைய நிலைமையிலே உள்ளனர் என்பதை, இந்த அறிக்கை காட்டுகிறது.

•

3600 சிற்றூர்களிலே நிலைமைகளைக் கண்டறிந்து அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

உழவுத் தொழிலில் உள்ளவர்கள் எவர் என்பதற்கு, ஆய்வுக் குழுவினர் ஒரு

இலக்கணம் வகுத்துக் கொண்டு அறிக்கைத் தயாரித்துள்ளனர். அந்த இலக்கணத்தின்படி, வருவாயின் பெரும் பகுதி, உழவுத் தொழிலில் கிடைக்கும் கூலியாக எவருக்கு அமைந்து இருக்கிறதோ, அவர்களே, உழவர் என்பதாகும்.

அந்த முறையில் நடத்தப்பட்ட ஆய்வு, என்ன உண்மை களைத் தந்திருக்கிறது?

உழவர்களின் நிலைமை, நாளுக்குநாள் தேய்ந்து கொண்டு வருகிறது.

நிலமற்ற உழவர்களின் தொகை அதிகமாகி விட்டிருக்கிறது.

உழவுத் தொழிலில் உள்ளவர்களின் கூலி, குறைக்கப் பட்டுப்போயிருக்கிறது.

முன்பு 109 புதிய காசுகள், கூலியாகப் பெற்றுவந்த உழவர் களுக்கு, இப்போது 96 புதிய காசுகள் மட்டுமே கிடைக்கின்றன.

உழவுத் தொழிலிலே ஈடுபட்ட பெண்களுக்கு, முன்பு 68 புதிய காசுகள் கிடைத்தன. காங்கிரசாட்சியின் சிறப்பின் விளைவாக (!) இப்போது அந்தக் கூலி குறைந்து, 59 புதிய காசுகள் பெறுகின்றனர் - தாய்மார்கள்.

சிறார்களோ, முன்பு பெற்றது 70 புதிய காசுகள்; இப்போது 53!

கொட்டுங்கடி! கும்மி கொட்டுங்கடி!

கோலேந்தும் காங்கிரஸ் புகழைப்பாடி!

என்று, "மாதர் பகுதி' கும்மி கொட்டுகிறது, ஓட்டு வாங்க!! ஆனால் அறிக்கையைப் பார்த்தாலோ, காங்கிரசாட்சியிலே ஏர்பிடித்தோன் திண்டாட்டம் வளருவது

தெரிகிறது.

1951ஆம் ஆண்டு அறிக்கைப்படி, உழவர் குடும்பத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு 447-ரூபாய் வருவாயாம், 1957ஆம் ஆண்டில் கணக்கெடுக்கும்போது, 437 ரூபாய் வருவாய்தான் கிடைக் கிறதாம்!!

கோழி கூவாமுன்பு எழுந்திருந்து சென்ற, கோட்டான் கூவும்வரை பாடுபடும் உழவன், வருவாய் குறைந்து விட்டிருக் கிறது. துணிச்சலுடன், அமைச்சர்கள், அவனுடைய குடிசைக்குப் பக்கத்திலேயே, கொடிமரம் நடுகிறார்கள்; கும்மி கொட்டிட, கொட்டி முழக்கிட, படை வருகிறது; பத்திரிகைகளோ, இந்த வளர்ச்சியை எடுத்துக்காட்டப் பத்தி பத்தியாகச் செய்திகளை வெளியிடுகின்றன.

நம்மவர்கள் வருகிறார்கள் நாடாள! நல்லவர்கள் வருகிறார்கள் பாடுபட! இனி

நமது வருவாய் வளரும், வாட்டம் குறையும் என்று எண்ணினர், உழுது கிடப்போர்! வருவாய் குறைந்து விட்டிருக்கிறது; வாய்வீச்சு மிகுந்து விட்டிருக்கிறது!

உழவர்களின் வருவாய் குறைந்திருப்பது மட்டுமல்ல, வேதனையூட்டும் உண்மை; அவர்களின் வாழ்க்கைச் செலவு அதிகமாகி விட்டிருக்கிறது.

முன்பு ஆண்டு ஒன்றுக்கு, 461 ரூபாய் இருந்தால், குடும்பம் ஏதோ இழுத்துப் பறித்துக் கொண்ட நிலையில் நடந்து வந்தது; இப்போது, குடும்பச் செலவு, ஆண்டொன்றுக்கு, 618-ரூபாய் பிடிக்கிறதாம்.

•

தம்பி! கணக்குத் தயாரித்தது, நம் கழகமல்ல காங்கிரசாட்சி அமைத்த ஆய்வுக்குழு! கவனமிருக்கட்டும்

கவனப்படுத்திவை!

உழவர்களுக்குக் கடன் பளுவும் ஏறிவிட்டிருக்கிறது.

இந்த இலட்சணத்தில் ஆட்சியை நடத்திக் கொண்டு, பாரதிக்கு விழாக் கொண்டாடும்போது,

உழவுக்கும் தொழிலுக்கும்

வந்தனை செய்வோம்

என்று பாடிவிட்டால், பசித்த வயிறுக்குப் பாலும் பழமுமா கிடைத்துவிடும்! பாவிகளே! உங்களை நம்பி நாசமானோமே!! - என்று கொதித்தெழுந்து கேட்கத் தோன்றுகிறது, மாடென உழைத்து ஓடென ஆகிவிட்டிருக்கும் உழவர்களுக்கு. ஆனால், எப்படிக் கேட்பார்கள்? பேசவருகிற அமைச்சருடன்தான் பராக்குக்

கூறுவோர், பல்லிளிப்போர், பர்மிட் கேட்போர், பட்டுப் பட்டாடைகள், பவுன் துப்பட்டாக்கள், பஸ் ரூட்டுகள், இப்படி ஒரு படையே வருகிறதே! எப்படி மனதிலுள்ளதை எடுத்துக் கூற, உழவர்களுக்குத் தைரியம் ஏற்படும்?

அதோ அமைச்சரின் கால் தூசு தன் மேலே பட்டாலே போதும், அதைக்காட்டியே, அங்காடியிலே, செல்வாக்குப் பெறலாம் என்று எண்ணிக் கொள்பவர் போல நிற்கிறாரே, திருவாளர் சமயமறிந்தான் பிள்ளை, அவருக்குக் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலே, கழனி; காடு என்கிறார் வயலை! கடாமாடுகள் என்கிறார், அதை உழுதுகிடப்பவர்களை! "கனம்' என்கிறார், அமைச்சரை! இருளை ஓட்டும் அவர் காதிலுள்ள வைரக்கடுக்கன்! உடலிலே தங்கம், உள்ளத்திலே, இரும்பு!! அவரிடம் அண்டிப் பிழைக்கிறான், உழவன்; அவன்

அமைச்சர் பொய்யுரைக்கிறார் என்று, எப்படிக் கூற முடியும்?

”காங்கிரசாட்சியிலே ஆதிதிராவிடர் வீடுகளிலே வெள்ளிப் பாத்திரங்கள் காணப்படும் அளவுக்கு வளம் கொழிக்கின்றது.’

என்று வாய் கூசாமல் கனம் கக்கன் பேசுகிறார்.

ஐயா! தகரக் குவளையைப் பார்த்துவிட்டு இப்படிப் பேசலாமா? என்று கேட்கத் தோன்றுகிறது. ஆனால், அமைச்சரைச் சுற்றி நிற்கும் கனதனவான்கள், சற்றுத் தொலைவில், கெட்டித்த துப்பாக்கிகளுடன் தயாராக நின்று கொண்டிருக்கும் போலீஸ் படையினர், இவர்களைக் கண்ட பிறகு, ஏழை எப்படிப் பேச முடியும்?

•

அஞ்சி அஞ்சிச் சாவார்

இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே

என்றல்லவா, பாரதியார் பாடினார்.

அச்சம் பிடித்தாட்டும் நிலையில் உள்ள ஏழை உழவர்களை, போலீஸ் படை சூழ நின்றிடப், பூமான்கள், உடனிருந்த அதிகாரிகள் ஆரத்தி எடுத்திட, உலாவந்து, அமைச்சர்கள் காணும்போது, கிலி அதிகமாகுமேயன்றி வேறென்ன ஏற்பட முடியும்.

அதை அறிந்து, அகமிக மகிழ்ந்துதான், அமைச்சர்கள், அமுலில் இருந்துகொண்டே ஓட்டு வேட்டை ஆடவேண்டும். பஞ்சை

பராரிகளிடம் பயமூட்டியே ஓட்டுகளைப் பறித்துக் கொள்ள முடியும், என்று நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த முறைகேடான போக்கைத்தான், மலைபோலக் காங்கிரஸ் ஆட்சி நம்பிக் கொண்டிருக்கிறது.

குடிஅரசு முறை, மக்களிடம் "ஓட்டு' வாங்கி நடத்தப் படுவது.

ஆனால் அதிகார அமுலைக் கண்டால், இயல்பாகவே அச்சப்படும் மக்கள் பெரும் அளவுக்கு இருக்கும் இந்த நாட்டில், அமைச்சர்களாகப் பதவியில் இருந்துகொண்டே பவனி வந்து தேர்தல் நடத்துவது, எப்படி நியாயமாகும்?

செய்தவைகளை எடுத்துக்காட்டி, மக்களுடைய ஆதரவை மீண்டும் பெற முடியும் என்ற நம்பிக்கை இவர்களுக்கு

இருக்கு மானால், தேர்தலுக்கு ஒரு ஆறு திங்களுக்கு முன்பாகவேனும், பதவியைவிட்டு விலகிநின்று, காங்கிரஸ்காரர்களாக மட்டும் கிராமப்புறம் சென்று, ஓட்டுக் கேட்க வேண்டும்.

அப்படிக் கேட்டுப் பெரும் அளவு ஓட்டு இவர்கள் பெற்று விடுவார்களானால், தம்பி! அதுதான், அறவழி நடாத்திடும் அரசியல் என்று கூறத்தக்கதாகும்.

அஃதன்றி, அமைச்சர்களாகக் கொலுவிருந்த வண்ணமே, "ஓட்டு' வேட்டையிலும் ஈடுபடுவார்களானால், குடிஅரசு முறையைக் கோணல் வழியில் பயன்படுத்தி, ஆதிக்கம் தேடிக் கொள்கிறார்கள் என்றுதான், அறிவாளர் எவரும் கூறுவர்.

•

கட்சிக் கண்ணோட்டத்துடன் அல்ல,

இதனை நான் கூறுவது.

விதி, பழைமைப் பிடி, ஜாதி எனும் பல கொடுமையான பிடிப்புகளிலிருந்தே இன்றும் விடுபட முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் பாமர மக்களிடம், அதிகாரம் தரும் அச்சத் தையும் ஏவிவிட்டு ஓட்டு வாங்குவது, அறமல்ல; அரசியலை வெறும் சூதாட்டம் ஆக்குவதே யாகும், என்ற பொதுநெறி பற்றி எடுத்துரைக்கிறேன்; கட்சி வளர்ச்சிக்காக அல்ல.

•

”மன்னன் எதையும் செய்யலாம்’ என்பது தவறு, தீது, கொடுமை, என்பதால்தான், முடி அரசு முறையை மாற்றிக், குடிஅரசு முறையைத் தேடினர்; குடிஅரசிலோ, மந்திரிகள் எதையும் செய்ய வல்லவர்கள் என்பதை உணர்ந்து,

உள்ளத்தில் கிலி குடிகொண்ட நிலையில் இருக்கும் மக்களிடம், மந்திரிகளாக இருந்துகொண்டே ஓட்டுக் கேட்பது, முடி அரசு முறையின் கேடு பாட்டைவிட மோசமான நிலைமையையன்றோ ஏற்படுத்திவிடும்.

எனவேதான், குடிஅரசு முறை, இந்த நாட்டைப் பொறுத்த வரையில், உண்மையான மக்களாட்சி அமைய வழிகோல வேண்டுமானால், பொதுத் தேர்தலுக்கு ஆறு திங்களுக்கு முன்னா லாவது, காங்கிரஸ் மந்திரிகள் பதவியை விட்டு விலகிச், சொந்த அறிவாற்றலை காட்டிக், கட்சி சாதித்தவைகளை எடுத்துக் கூறி, "ஓட்டு' கேட்க வேண்டும்.

•

"முன்பு இருந்ததைவிடக் காங்கிரசுக்கு இப்போது வலிவு அதிகமாகி இருக்கிறது'

என்று முதலமைச்சர் காமராஜர் பேசி வருகிறார்.

அவர் கூறுவதிலே அவருக்கே நம்பிக்கை இருக்குமானால், தேர்தலுக்கு ஆறு திங்களுக்கு முன்பு, பதவியை விட்டு விலகி, வெறும் காமராஜராக, கர்மவீரர் காமராஜராவோ, பச்சைத் தமிழர் காமராஜராகவோ, கிராமம் கிராமமாகச் சென்று, போட்ட பாதைகள், வெட்டிய வாய்க்கால்கள், தோண்டிய கிணறுகள், திறந்த பள்ளிக்கூடங்கள், ஏற்றிய விளக்குகள் - இவைகளுக்காக வாங்கிய வரித்தொகை - இந்தக் கணக்கைக் காட்டி, "ஓட்டு' வாங்கிவிடட்டும், பார்க்கலாம்!!

தம்பி! இந்த ஏற்பாடு, இன்றுள்ள நிலையில், குடிஅரசு முறையைக் கூடத் தூய்மைப்படுத்த மிக மிகத் தேவை.

எல்லா அரசியல் கட்சிகளுமே, இதனை நாட்டு மக்கள் முன் ஒரு உடனடிப் பிரச்சினையாக வைத்து, மக்களின் வலிவைத் திரட்டிக் காட்டிக், காங்கிரஸ் கட்சியை இந்த ஏற்பாட்டுக்கு இணங்கும்படி, வலியுறுத்தவேண்டும்.

ஏதோ ஓரளவுக்காகிலும், குடிஅரசு முறை பலன் தர வேண்டும் என்று விரும்பினால், இந்த ஏற்பாடு, நடைமுறைக்கு வந்தே ஆக வேண்டும்.

பாபு இராஜேந்திர பிரசாத், சட்டம் இயற்றச் செல்வோர் களுக்குத் தகுதிகள் இருத்தல் வேண்டும் என்று கூறினார் - அதுபோலவே, அல்லது அதனைவிட மிகமிக அவசியமாகவும், அவசரமாகவும், இன்று தேவைப்படுவது, மக்களை மிரட்டி "ஓட்டு' வாங்கும் முறையை ஒழித்துக் கட்டுவது.

தேர்தலில் ஈடுபட்டு, மக்களின் ஆதரவைக் கேட்டுப் பெறச் செல்வோர், அமைச்சர்கள் என்ற "அந்தஸ்து' பலத்தைக் காட்டுவது, அவர்களுக்கு பதவியை விட்டுவிட்டால், மக்களின் நல்லாதரவைப் பெறத்தக்க வேறு தகுதிகள் இல்லை என்பதையே, உலகுக்கே எடுத்துக்காட்டும், தரக்குறைவான காரியமாகிப் போகும்.

•

கட்சி மகத்தான காரியங்களைச் சாதித்து விட்டது என்பதற்காக அல்ல, அமைச்சர்களாக இருக்கிறார்களே என்பதற்காகவே, நெஞ்சின் குமுறலை அடக்கிக் கொண்டு கிடக்கிறோம், என்று பேசாதவர்கள் இல்லை.

குடிஅரசு முறையிலே செய்யப்படவேண்டிய திருத்தங்கள் குறித்து, பாபு இராஜேந்திரர் போன்றாரெல்லாம்,

அக்கரை காட்டிப் பேசுவதால், தம்பி! உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையை எடுத்துரைத்தேன் - என் வார்த்தையைக் கேட்டு விட்டு, அமைச்சர்களுக்கு, "ரோஷம்' பொத்துக் கொண்டு வந்துவிடும்."அடே! அறிவிலி! எமக்கு இருக்கும் செல்வாக்கு, அமைச்சர்களாக இருப்பதனால் மட்டும் என்றா வாய்த் துடுக்காகக் கூறுகிறாய்? எம்மை நாடு அறியும் - நன்கு அறியும்!! எமது அறிவாற்றல், வீரதீரம், தியாகம், யாவும், அறியாத வீடு உண்டா? கேவலம், அமைச்சர் பதவியைக் காட்டியா, நாங்கள் "ஓட்டு' வாங்கவேண்டும்? அங்ஙனமா, எண்ணிக் கொண்டாய்? இதோ பார், பதவி பழஞ் செருப்பு - வீசி எறிந்து விட்டு, மக்களை அணுகி, எமது சொந்தத் தகுதி, திறமை, சாதித்தவை இவைகளைக் காட்டியே ஓட்டுக் கேட்டுப் பெறுகிறோம்!! - என்று கூறி

விடுவார்கள். என்ற நம்பிக்கையுடன் இதைக் கூறவில்லை. நாடு அறியட்டும், இவர்கள் நிலைமையை-மக்கள் திரண்டெழுந்து வலியுறுத்தட்டும் - பொய்க்கால் இல்லாமல், பூச்சு, பூணாரம் இல்லாமல், வந்து ஓட்டுக் கேளுங்கள் - அதுதான் முறை - எல்லோரும் இந்நாட்டு மன்னர் - என்று தத்துவம் பேசுகிறீர்கள் - ஆனால் அமைச்சர்களாக இருந்துகொண்டு, ஓட்டுக் கேட்க நீவிர் வருகிறபோது, நாங்கள், கைகட்டி வாய் பொத்தி நிற்க வேண்டி இருக்கிறது - நீவிர் கல்லைக் கனி என்று கூறினாலும், சுடு சொல்லை எம்மீது வீசினாலும், மறுத்திட மார்க்கமின்றிக் கிடக்க வேண்டி நேரிடுகிறது - எப்பக்கம் திரும்பினாலும், உமக்கு, பதவி தரும் பலம் தெரிகிறது - திகில் பிறக்கிறது - ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக் கொள்கிறீர்கள் - இது குடிஅரசு முறை அல்ல - தடி அரசு

முறையாகிப் போகிறது. ஆகவே, எங்கள் தயவை நாடி வருகிற போதாகிலும், தடி தூக்கிக் கோலம் கலைத்து விட்டு வாருங்கள் - காட்டவேண்டிய கணக்கைக் காட்டுங்கள் - நாங்கள் கேட்கவேண்டியவைகளைக் கேட்கிறோம் - அதுதான் முறை - என்று மக்கள் கூறவேண்டும் என்பதற்காகவே, இதனை எழுதுகிறேன்.

தம்பி! பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என்று நினைக்கிறேன் - சென்னையில், நான் ஓர் நாடகத்துக்குத் தலைமை வகிக்க அழைக்கப்பட்டுச் சென்றிருந்தேன். எனக்கு வலப்புறம், நாடகக் குழுவின் உரிமையாளர் அமர்ந்திருந்தார் - மறுபுறம், அவருடைய மகன், சிறுவன் - ஏழெட்டு வயதிருக்கும் - அமர்ந்திருந்தான்.

நாடக முடிவில், பேசச் சென்றேன். சிறந்த முறையில் அமைந்திருந்த நாடகம்

அது. அன்று அந்தக் குழுவில் இருந்த வர்களில் பலர், இன்று திரையில் ஒளிவிடும் திறமைமிக்க நட்சத்திர நடிகர்களாக உள்ளனர். அவர்கள் அந்த நிலை பெறப் போகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டத்தக்க சிறப்புடனேயே, அவர்களின் அன்றைய நடிப்பு இருந்தது. பாராட்டிப் பேசினேன். உரிமையாளர், மாலை அணிவித்தார். அவர் மகன், மாலையையே உற்று உற்றுப் பார்த்தான்.

சிறுவன், மாலையை மிக உன்னிப்பாகப் பார்த்துவிட்டுத், தன் தகப்பனாரைப் பார்த்து, "அப்பா! இவர் சின்ன மந்திரியா?'' - என்று கேட்டான். எனக்கு, அந்தக் கேள்வி வியப்பாக இருந்தது. அவர், சற்றுச் சிரமப்பட்டார். சிறுவர்களா, கேள்விக்குப் பதில் பெறாமல் விடுவார்கள்! கிளறியபடி இருந்தான் - அவர், வேறு பக்கமாகப், பேச்சைத் திருப்பிப் பார்த்தார்.

"இவர்தானடா, அண்ணாதுரை . . . . அண்ணா தெரியாது?'' - என்று கேட்டார், சிறுவன் செல்லமாக,"ஓ! தெரியுமே! இவர் தான் அண்ணா! அது தெரியும். ஆனால், இவர் சின்ன மந்திரியா?'' - என்று மீண்டும் கேட்டான். நான் சிறுவனைப் பார்த்து, "தம்பி! ஏன் அப்படிக் கேட்கிறாய்?'' என்று கேட்டேன். உரிமையாளர் திகைத்தார் - சிறுவன், சொன்னான்:"நேற்று ஒருவர் தலைமை வகித்தார். அவர்க்கு இந்தாப் பெரிய மாலை போட்டாங்க, அப்பா. அவர் யார் என்று கேட்டேன். மந்திரி என்று சொன்னார். இப்ப, உங்களுக்குச், சின்ன மாலைதான் போட்டாங்க. . . அதனாலேதான், நீங்க சின்ன மந்திரியா, என்று கேட்டேன்'' - என்றான். சிரித்தேன், உரிமையாளரின் சங்கடத்தைக் குறைத்திட, அந்த உரிமையாளர், என்னிடம் உள்ளன்பு கொண்டவர் - அன்றும், இன்றும். அன்றும் சரி,

இன்றும் சரி, மந்திரிகளை விட, நாடகத்தைக் காண்பதிலும், சுவைப்பதிலும், நடிப்புத் திறனைக் கண்டால், நடிகர்களின் விருப்பு வெறுப்புப் பற்றி மறந்து பாராட்டுவதிலும், நான் அதிக ஈடுபாடு கொண்டவன்; இதை நாடு அறியும். என்னைத் திட்டுவதற்கு, மாற்றுக் கட்சியினர், பயன்படுத்தும் வார்த்தையிலே, மிக முக்கியமான சொல்லே, கூத்தாடி என்பதல்லவா?

இருப்பினும், மந்திரி தலைமை வகிக்கிறார் என்றால், மற்றவர்களுக்குச் செய்கிற மரியாதையைவிடச் சற்றுச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற நினைப்பும், நிலையும், யாருக்கும் ஏற்பட்டு விடுகிறது.

இது தவறும் அல்ல! அவர்களிலே, மிகப் பலர், தலைமை வகிக்கும் வாய்ப்புப் பெற்று, ”பெரியமாலை’ என்றானே

சிறுவன், அவ்விதமான மரியாதைகளைப் பெறுவதே, மந்திரிகள் என்ற பதவியில் இருக்கும்போதுதான்.

முன்னம் இல்லை, பின்பும் அநேகமாக இருக்காது.

என்போன்றோர்களின் நிலை, அது அல்ல.

ஆகவே, அமைச்சர்கள், "பெரிய மாலை' போட்டுக் கொள்வதும் தவறும் அல்ல; தகாது என்றும் கூறுவது கூடாது. ஆனால், சிறுவனுக்கு என்ன தோன்றிற்று? மந்திரிக்குப் பெரிய மாலை - அண்ணாதுரைக்குச் சின்ன மாலை - ஆகவே, இவன் இவன் சின்ன மந்திரி! - என்றுதானே!

குழந்தை உள்ளம் அது. குடிமக்களில் பெரும்பாலோ ருக்கும், நிலை அதுதான். அறிவாற்றல், தகுதி, திறமை, என்பவைகளைப் பார்த்துமட்டும் அல்ல,

பதவியின் உயர்வைக் கண்டு, "பெரிய மாலை' போட வேண்டியவர்களாகிறார்கள். மாலை மரியாதை மட்டும்தான் என்றால் நஷ்டமும் இல்லை, ஆபத்தும் எழாது. ஆனால், பதவி காரணமாக மூட்டிவிடப்படும் மயக்கம், அச்சம் காரணமாக"ஒட்டுகளை'யும் போடும் நிலை ஏற்பட்டுவிடுமானால், பிறகு குடிஅரசு முறை, கோண லாட்சிக்குத்தானே, வழி ஏற்படுத்தும்.

தம்பி! ஒரு கணம் மீண்டும், அந்த நாடக மேடைக்குப் போவோம். மந்திரி என்பதால், பெரிய மாலை போட்டுக் கொண்டதாலே ஆபத்து ஏதும் ஏற்பட்டுவிடாது - ஆனால், மந்திரியின் கரம் பட்டவன்தான் திறமுள்ள நடிகன், என்று ஒரு முறை உண்டாக்கிவிட்டிருந்தால், என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும்? இன்று மந்திரிகளின் கரம் குலுக்கிக் களிப்படையும் நடிகர்களே கூட, ஒரு சமயம், மந்திரியின் கண் பார்வை கிடைக்காது

போயிருக்குமானால், உரிய உயர் இடம் பெற்றிருக்க முடியாது.

நடிகன், எந்த இடம் பெறத்தக்கவன் என்பது, ரசிகர்களின் கைஒலியில் இருக்கிறது; மந்திரியின் பார்வையில் அல்ல!!

அதுபோலவே, யார் மக்களின் ஓட்டுகளைப் பெறத் தக்கவர்கள் என்பது, அவர்களின் அறிவாற்றல், செய்தவை, இவைகளைக் காட்டிப் பெறுவதாக இருக்கவேண்டும் - பதவியைக் காட்டிப் பறிக்கப்படுவதாக இருத்தல் கூடாது - அது தீது - பேராபத்துமாகும்.

குடிஅரசு முறை, காங்கிரசாரிடம் இருப்பதால், உழவர் களின் நிலை, தேய்ந்து விட்டிருக்கிறது என்பது, ஆய்வுக் குழுவின் அறிக்கையிலேயே, விளக்கமாக்கப்படுகிறது.

இதை ஆதாரமாகக் கொண்டு, ”ஓட்டு’ அளிப்பது என்றால், உழவர் பெருங்குடி

மக்களின் ஆதரவு, எப்படிக் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைக்க முடியும்?

இவ்வளவும் செய்துவிட்டு, உழவனைக் கடனாளியாக்கி, நோயாளியாக்கி உழலவைத்துவிட்டுப், பதவியைக் காட்டிப் பயமூட்டி "ஓட்டு' வாங்கினால், அது கூர்மையான கத்தியைக் காட்டி நடத்தப்படும் வழிப்பறி, அல்லது சுவையான பண்டம் கொடுத்து குழந்தையை ஏய்த்துவிட்டு நடத்தப்படும் களவு, போன்றதாகத்தானே ஆகிவிடும்.

இதனைத்தான், எல்லா அரசியல் கட்சிகளும், குடிஅரசு செம்மையாக்கப்படவேண்டும் என்பதிலே அக்கரை கொண்ட வர்களும், கவனிக்கவேண்டும்.

குடிஅரசு முறையை ஏற்று நடத்திக்

கொண்டு வரும் காங்கிரஸ் கட்சி, உழவர்களை எந்த நிலையில் வைத்திருக்கிறது என்பதைக் கண்டோமல்லவா! தம்பி! நெசவாளியைக் காண்போம்! அவன், இவர்கள் ஆட்சியிலே, எப்படி இருக்கிறான்? நெய்யுந் தொழிலுக்கு நிகர் இல்லை என்று நேர்த்தியாகக் கூறப்பட்டிருக்கிறது. காங்கிரசாட்சியோ, பட்டமரம் துளிர்த்திடச் செய்யும் ”மாயாவிகள்’ நிரம்பிய கட்சி என்று பாமரரிடம் கூறி வைத்திருக்கிறார்கள். இந்நிலையில் நெசவாளி முன்னேற்றம் அடைந்தல்லவா இருக்கவேண்டும்! ஆனால், எப்படி இருக்கிறான்? நான் எதற்காகத் தம்பி! அதைச் சொல்லிக், காங்கிரசாரின் கோபத்தைக் கிளறவேண்டும். ஒரே அடியாகச் சொல்வார்கள் - இவனுக்கு நெசவுத் தொழில்பற்றி என்ன தெரியும்? - என்று. ஆகவே, நான் ஏதும் கூறப் போவதில்லை -

இதோ ஒரு நெசவாளி! நீயே, கேள்:

நான் ஓர் ஏழை நெசவாளி, எனக்கு வயது 17. என் தந்தை சிறுவயதிலேயே என்னையும், என் தம்பி, தங்கை ஆகியவரையும் விட்டுவிட்டு, இறந்துவிட்டார். நான் தறிநெய்து, நான், தாயார், தம்பி, தங்கை ஆகிய நால்வரும் சாப்பிட வேண்டும். வீட்டுக்கு வாடகை கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்குப் படிப்பு, சம்பளம், துணி, மருந்து, வைத்தியம். . ..

இதோ எனது வருமானம்.

மாதம் ஒன்றுக்கு நான் நெய்வதால் கிடைக்கும் கூலி ரூபாய் 40. எனது தாயார் கூலிக்கு நூல் சுற்றினால் மாதம் 7 ரூபாய் கிடைக்கும், ஆக ரூபாய் 47 தான் மாத வருமானம். இதற்குக் குறையுமே தவிர அதிகமாவது கிடையாது.

தறியுடன் கூடிய வீட்டு வாடகை ரூபாய் 7

அரிசி, பருப்பு, சாப்பாட்டு வகை 30-8-0

பள்ளிக்கூடச் சம்பளம் அல்லது புத்தக வகை, 2-8-0

ஆகச் செலவு 40-0-0

இனி வைத்தியம், போக்குவரத்து, ஆடைகள், சினிமா இவைகளுக்கு நான் எங்கே போவது? தவிர, எனக்குத் திருமணம் ஆக வேண்டும். என் தங்கைக்கும் செய்ய வேண்டும். பெண்ணுக்கு நகை சீர் வரிசை இவைகள் உண்டல்லவா? இவற்றிற்கெல்லாம் பணம் தேவை. மேலும் எனது வயோதிகத் தாயாருக்குப் பிற்கால அந்திமக்கிரியைகள் - இவையெல்லாம் நான் சுமக்கும் பாரமாகும். எங்கே இதற்கெல்லாம் வருவாய்? நான் எந்த ரகம்போட்டுக் கொண்டு கைத்தறியிலே நெய்தாலும், மாதம் சுமார் 40, 50, 60 ரூபாய்க்கு

மேல் வருவாய் காண முடியாது, இது என் குடும்பத்துக்குப் போதுமா? பெருகிவரும் குடும்பத் திற்கும், அதனால் ஏற்படும் செலவுகளுக்கும் நான் எங்கே போவது?

•

தம்பி! என்ன பதில் அளிக்கப் போகிறாய்? நான், என்ன அண்ணா! பதில் அளிக்க முடியும்? அவர்களை ஆண்டிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி அல்லவா பதில் கூற வேண்டும் - என்றுதான் கூறுவாய், நெசவாளி காங்கிரஸ் கட்சியினரைக் கேட்கிறான் என்றால்.

கலகக்காரன்

கழகக்காரன் என்று ஏசி, அவன் வாயை அடைத்துவிட முடியும் - முடிகிறது.

கூட்டுறவு நாடு

காங்கிரசைத் தேடு

என்று புத்திமதி கூறிட, பெரியவர்கள் முன்வருகிறார்கள்.

காலத்துக்கேற்ற ரகம் வேண்டும்.

நாணயமாகத் தொழில் நடத்த வேண்டும்.

என்று எச்சரிக்கை கூறிடவும் கதராடையினர் உள்ளனர்.

இதையே நம்பிக்கிடக்காதே.

விசைத் தறி வைத்துக் கொள்.

வேறு வேலைக்குப் போ!

என்று பயங்கரமான, அல்லது பயனற்ற யோசனைகளைக் கூறவும், காங்கிரசில் ஆட்கள் உள்ளனர்.

தொழில் துறை அமைச்சர் வெங்கட்டராமன், நொந்து கிடப்பதாகப் பேசும்

நெசவாளி கேட்டிடும் கேள்விக்குப் பதில், எவ்வளவு பளிச்சுப் பளிச்செனத் தருகிறார் தெரியுமா, தம்பி! அதைப் படித்தால்; நெசவாளி மீது கோபமே கூட ஏற்பட்டு விடக்கூடும். அவ்வளவு அன்புடன், அக்கரையுடன், பட்டியல் தருகிறார் அமைச்சர், இன்னின்ன உதவிகள் செய்கிறோம் என்பதாக, அவரே கூறட்டும், கேள் தம்பி!

"...சமுக பொருளாதார நிலை உயர்வதில், சென்னை இராஜ்ய நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும், இதர நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், பெரும் பணி ஆற்றியுள்ளன என்பதை அறிய, அரசாங்கம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறது.''

அரசாங்கம் மகிழ்ச்சி அடைகிறதாம்! நெசவாளி, குமுறுகிறான். என் கதி என்ன ஆவது? நான் எங்கே போவேன்? என்று கேட்கிறான். அமைச்சரோ,

மகிழ்ச்சி அடைகிறார் - அவ்வளவு நன்மை செய்தாகிவிட்டதாம் நெசவாளிக்கு!

அமைச்சரின் பேச்சு, ஏற்றுக் கொள்ளத் தக்கதுதானா? நெசவாளி, வேண்டுமென்றா, வேதனைக் கீதம் பாடுகிறான்! நாம் தான் பார்க்கிறோமே, அவன், நாளுக்கு நாள் காய்ந்து, தேய்ந்து, உருமாறிப் போய்க் கொண்டிருக்கும் உள்ளம் உலுக்கும் காட்சியை, மரக்கிளை, ஆழ்கிணறு, இவைகளை அல்லவா, அவன் அமைச்சர்களை நம்புவதை விட, அதிக ஆர்வத்துடன் நம்புகிறான், அவ்வப்போது இதழ்களில் காண்கிறோமே, இம்சைக்கு ஆளான நெசவாளி படும் அவதிகளை. அமைச்சரோ, எவ்வளவோ உதவிகள்! செய்தபடி இருக்கிறோமே, இவ்வளவு செய்கிறோமே, என்று எங்களுக்கே மகிழ்ச்சி! - என்கிறார்.

”நாட்டிலே 2 ஐந்தாண்டுத் திட்டங்கள்

நிறைவேறியுங் கூடக் கைத்தறியாளர்கள் சம்பந்தப்பட்டவரை, அவர்களது சொந்த வாழ்க்கையில் எவ்வித மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை. சுருங்கச் சொன்னால், அவர்களது வாங்கும் சக்தி குறைந்து போய், அகவிலை உயர்வுடன் அன்றாடம், மல்லுக் கட்டி வருகிறார்களென்று கூறலாம்.''

தம்பி! கைத்தறியாளர்களின் பாதுகாவலன் என்ற நிலையில் உள்ளவர்கள், இதுபோலக் கூறுகிறார்கள்; அமைச்சரோ, அகமகிழ்ச்சி கொள்கிறார்; அந்த அகமகிழ்ச்சியையும் சேர்த்து எடுத்துக்கொண்டுதான், அமெரிக்கா போயிருக்கிறார்.

யாரோ, வீணாகக் கண்ணீர் வடிக்கிறார்கள், கைத்தறி யாளர்களைக் காட்டி; நிலைமை அது அல்ல; அமைச்சர் சொன்னதுபோல, அகமகிழத்தக்க அளவிலும்

வகையிலும்தான் உதவி செய்கிறது சர்க்கார் என்று ஓட்டு கேட்க வரும் காங்கிரசார், கூறுவர்.

நெசவாளி கஷ்டப்படுகிறான், என்பதை மேலும் விளக்கமாகவே கூறுகிறார், பாதுகாவலர்.

"தொழில் துறையில் அவர்களது ஆதார தேவையாகவுள்ள மூலப்பொருளான நூலுக்கு, இன்று உயர்ந்துள்ள விலையானது, இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் மங்கம்மா மார்க் கட்டிலே விற்ற நூல் விலையைக் கேலி செய்வதாக இருக்கிறது. கேள்விமுறையற்று உயர்ந்துவிட்ட நூல் விலை காரணமாகக், கைத்தறி நெசவாளர்கள், இன்று சொல்லொணாத் துன்ப துயரங்களுக்கு ஆளாகி நிற்கின்றனர்.''

மங்கம்மா மார்க்கட்டு விலையைவிட, அதிகமாமே இப்போது - ஏழை பங்காளர்

ஆட்சியிலே? - கவனித்தாயா தம்பி! இது நாட்டு மக்களுக்குத் தெரியாது - தெரிந்தாலும் உருட்டி மிரட்டி வாயை அடக்கிவிடலாம் என்ற துணிச்சலில், கதராடை களுக்கு, எவ்வளவு வீறாப்பு, கனைப்பு, முறைப்பு - பார்க்கிறாயல்லவா!

”நூற்பாலை முதலாளிகளே, தாங்களாக முன் வந்து நூலுக்கு விலைக்குறைவு செய்து விட்டதாக அறிவித்து, அரசாங்கத்தையும் கைத்தறியாளர்களையும் ஒரு வகையாக ஏமாற்றியதைத் தவிர, உருப்படியான பலன் ஏதும் ஏற்படவில்லை. அப்படித்தான் நூல் விலையைக் குறைத்துவிட்ட தாகச் சொன்னார்களே, அந்த விலைக்காவது மார்க்கெட்டில் நூல் கிடைக்கிறதா? இல்லையே! அதிலும் இப்போது கள்ள மார்க்கட்தானே!’’

காங்கிரசாட்சி - கள்ளமார்க்கட் -

இந்த இரண்டையும் எவ்வளவு ஜோடிப் பொருத்தத்தோடு, சேர்த்துப் பேசுகிறார்கள். ஆனால், துளியாவது வெட்கம் காணோமே, ஆளவந்தார்களுக்கு!!

கைத்தறியாளருக்கு நூல் கிடைப்பதில்லை - கள்ள மார்க்கட்டை நாடுகிறான் - விலை ஏறுகிறது - மங்கம்மா மார்க்கட் விலையைவிட!

ஆனால், அமைச்சர்கள், "நெசவாளி காலனி' திறப்புவிழா செய்யச் செல்கிறார்கள் - அதைத் திறப்பதற்காகத் திறக்கும் வாய், வலி எடுத்துப் போகும் அளவுக்கு, நமது கழகத்தைத் தூற்றிப் பேசப் பயன்படுத்திவிட்டு, இறுதியாக, எந்த நாட்டு அரசியல் தலைவனும் எடுத்தியம்பத் தெரியாமல் தத்தளிக்கும் அதி அற்புதமான அரசியல் தத்துவம் பேசுவதாக எண்ணிக்கொண்டு வீணாக எதை எதையோ, பேசுவானேன் -"இப்போது வேண்டியது சோறு!'

- என்று தெளிவுரை தருகிறார்கள்.

இனி இந்த சோற்றுக்குக்கூட, காமராஜர் அதிகமாக வாய்திறக்க முடியாது போலிருக்கிறது - நேரு பண்டிதர், அரிசிச் சோறு சாப்பிட்டால், சோம்பேறிகள் - ஆகிவிடுகிறார்கள் - மூளைகூடச் சரியாக இருக்காது! - என்று பேசுகிறார்.

இத்தகைய ஒரு விஞ்ஞான நுணுக்கம் நிரம்பிய (!!) கருத்தை வெளியிடுவதற்கு முன்பு, நேரு பண்டிதர், நன்கு ஆராய்ந்து பார்த்து, காமராஜர் போன்றாரிடம் கலந்து பேசித் தெரிந்து கொண்டுதான், வெளியிட்டிருப்பார். காமராஜர்களும், ஆமாமாம்! என்று தலை அசைத்திருக்கக்கூடும்.

கைத்தறியாளர்களுக்கு, காங்கிரஸ் ஒன்றுமே செய்ய வில்லையா? ஏய்! கழகம்!

உன்னைத்தான் கேட்கிறேன்! ரிபேட் கொடுப்பது, தெரியுமா? தெரியாதா? என்று கதருடையார் கோபத்துடன் கேட்கிறார்.

அமைச்சர்களோ, "ரிபேட்' தருகிறோம், இப்போது; ஆனால், டில்லி வேறு விதமாகப் பேசுகிறது; ரிபேட் தொடர்ந்து கிடைக்கும் என்று கூறுவதற்கு இல்லை என்று பேசுகிறார்கள்.

"கைத்தறித் தொழிலுக்குத் தொடர்ந்து பாதுகாப்புத் தர இயலாது; ரிபேட்டுக்குப் பதிலாக மாற்று யோசனை இருந்தால் தெரிவியுங்கள்'' என முக்கிய அமைச்சர்களே பேசுகிறார்கள். இதே பல்லவியை, கதர்த் தொழிலைப் பார்த்து மட்டும் சொல்ல அவர்களது நா கூசுகிறதே, ஏன்?

சாதாரண காலத்தில் கைத்தறி ஜவுளிக்கு 5 காசு ரிபேட்; இப்போது தீபாவளிக்காகக்

கூடுதலாக 5 காசு சேர்த்து ரூபாய்க்கு 10 காசு ரிபேட் தர அனுமதித்துவிட்டு, அடுத்த பக்கம் கதர் ஜவுளிக்கு ரூபாய்க்கு 5 அணா - அதாவது 31 காசு ரிபேட் தருவதற்கு அனுமதிக்கிற நியாயம் எதில் உட்பட்டதோ தெரியவில்லை!''

தம்பி! இதைவிடத் தெளிவாக, கைத்தறியாளர் பிரச்சினையைக் கூற முடியாது.

நெசவாளியின் குமுறல், அமைச்சரின் அகமகிழ்ச்சி, மங்கம்மா மார்க்கட், கதருக்கு 5 அணா ரிபேட் என்ற, இவ்வளவும் பற்றி நான் இங்கு கூறியிருப்பது, நெசவாளர்களின் பாதுகாவலனாகப் பணியாற்றும், "கைத்தறி'' தீபாவளி மலரில் காணப்படும், கட்டுரைகள், தலையங்கம் இவற்றிலிருந்து எடுக்கப்பட்டவை.

•

ஆக, ஆய்வுக் குழுவின் அறிக்கை, உழவர் படும் துயரத்தையும், நெசவாளர் படும் அல்லலை "கைத்தறி' மவரும், நன்கு எடுத்துக் காட்டுகின்றன. உழவர் - நெசவாளர் - இவர்கள், சமூகத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள். இவர்களுக்குக் காங்கிரஸ் நடாத்தும் குடிஅரசு, கொடுத்திருப்பது இது இனிக் குடிஅரசு முறைமீதே மக்களுக்கு கசப்பு ஏற்படுவதில் வியப்பு என்ன?

அது சரி அண்ணா! முன்பே வாக்களித்தாய்; மன்னனைக் காணலாம் என்று; நானும் ஆவலாக வந்தேன்; நெசவாளியையும், உழவனையும் காட்டுகிறாயே!! - என்றுதானே தம்பி கேட்கிறாய்.

இவர்கள் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்!!

முடிதரித்த மன்னனையே காண வேண்டுமா, சரி காணலாம் வா.

அன்புள்ள,

அண்ணாதுரை,

6-11-1960

25. எல்லோரும் இந்நாட்டு மன்னர் (3)

தம்பி!

மன்னர்கள் பலர் உளர்; சிலரைக் காணலாம்!! காணு முன்பு இதனை எண்ணிப்பார்; முடி அரசு முறை தீது, ஆகாது, தேவையற்றது என்று கூறுவது, மிகச் சுவையுள்ள, மிக எளிதிலே எவரும் ஒப்புக் கொள்ளத்தக்க அரசியல் தத்துவம் என்பது நிலைத்து நின்றான பிறகும், மன்னர்களைக் காண்பது என்றால், ஓர் ஆவல், பரபரப்பு உணர்ச்சி, உன்போன்றார் உள்ளங்களில் கூட ஏற்பட்டுவிடுகிறதே, அது ஏன்? புரிகிறதா? மன்னர்கள் மமதையாளர்களாகிவிடக்கூடும், மக்களை மந்தை என்றெண்ணி நடத்திடக்கூடும் -

அதுபோல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல உள! மக்கள் தமது குடிசைகளில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களை விற்றாகிலும், மன்னன் மனையாட்டியின் கருத்துக்கேற்ற மரகதமணிமாலை - வாங்கப் பணம் செலுத்தவேண்டும் என்று கூறிய முடி அரசுகள் இருந்திருக்கின்றன. எனக்கு மட்டும் அவன் கிடைத்துவிட்டால், இரு கரங்கள் போதும், வாள் வேண்டாம், வேல் வேண்டாம், கழுத்தை நெறித்தே காதகனைக் கொன்று போடுவேன்; கற்பழிக்கப்பட்ட கன்னியரின் கண்ணீரை எண்ணிக் கொண்டால் போதும், இந்த என் கரங்கள், இரும்பினும் வலிவுடையனவாகும் - என்று புரட்சிப்பொறி பறந்திடப் பேசிய வீரர்களை, முச்சந்தியிலே தூக்குமரம் நாட்டி, அதிலே பிணமாக்கித் தொங்கவிட்ட மன்னர்களும் இருந்திருக்கிறார்கள். எனினும், இன்றும், இவ்வளவு சுவையுடன்

”ஜனநாயகம்’ பேசும் இந்த நாட்களிலேயும், எங்கிருந்தாகிலும், யாரேனும் மன்னன் வருகிறார் என்றால், பார்க்கவேண்டும் என்று மக்களுக்கு ஆவல் பொங்குகிறது.

தலைவர்கள், நடிகர்கள், வெற்றி வீரர்கள், ஆகியோரைக் காணவும் மக்களுக்கு ஆவல் எழத்தான் செய்கிறது; ஆனால், அந்த ஆவல் அவர்கள் தத்தமது துறைகளில், பாராட்டத்தக்க திறம் காட்டி, மக்களின் மனதை ஈர்த்த பிறகே, ஏற்படுகிறது.

ஆனால், மன்னர்களைக் காண வேண்டும் என்ற ஆவலோ, அவன் மன்னன் என்பதற்காகவே ஏற்பட்டுவிடுகிறது - தரம், திறம், வெற்றி, எதுவும் அவ்வளவாகத் தேவைப்படுவதில்லை.

இந்த நிலை, பழமையை விட்டுவிடத் துணிவு இல்லாத இந்நாட்டிலே மட்டும்

என்பதற்கில்லை; புரட்சி பூத்திட்ட சோவியத் நாட்டிலேயே, இப்போது, மன்னர்கள் ஒருவர்பின் ஒருவராகப் "பவனி' வருகிறார்கள்; மக்கள் கண்டு மகிழ்கிறார்கள்.

என்ன எண்ணிக் கொண்டு, ஜார் மன்னனை ஒழித்துக் கட்டிய புரட்சிப் பரம்பரையினர், இந்த மன்னர்களைப் பார்க்கி றார்களோ? அப்படி அங்கு செல்லும் மன்னர்களும், சோவியத் மக்களைக் கண்டு புன்னகை புரிகிறார்களே, அதற்குத்தான் என்ன பொருளோ? யாரறிவர்!!

"மைசூர் மகாராஜா'' அமெரிக்கா சென்று, காட்டு மிருகங்களைப்பற்றியும், கடவுள் கொள்கைபற்றியும், பல்கலைக் கழகங்களில் பேருரையாற்றிவிட்டு, வருகிறார்.

"மகாராஜா'வை அமெரிக்க மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். ஆனால்

தங்கள் நாட்டுக்கு ஒரு "ராஜா' வேண்டுமென்று அவர்கள் விரும்பவுமில்லை; முன்பு இங்கிலாந்து நாட்டு அரசன் ஆணைக்கு உட்பட்டு இருந்த நிலைமையைப் புரட்சி நடாத்திப் போரிட்டு ஒழித்துக் கட்டியவர்கள் அமெரிக்கர்கள்.

அமெரிக்காவில், வரவேற்பு வைபவங்களைப் பெற்று, மகாராஜா! என்று மக்களால் புகழாரம் சூட்டப்பட்டு, மகிழ்ந்திடும் மன்னர், இங்கு திரும்பி வந்ததும், "ராஜ்யம்' பறிபோன நிலைதான் அவரை வரவேற்கிறது!

நேபாள நாட்டு மன்னர், காஷ்மீர் நாட்டு மன்னர், இவர்கள் தத்தமது நாடுகளிலே, இன்று, இந்தியப் பேரரசின் துணை தரும் வலிவின் காரணத்தால்தான், அரசாள முடிகிறது - ஆனால் அவர்கள் "பவனி' வரும் சோவியத் போன்ற புத்தம் புதுமுறை கண்ட நாடுகளிலே, அவர்கள், புரட்சித்

தலைவர்களுடன் குலவ முடிகிறது. குடிஅரசுத் தலைவருடன் கொலுவிருக்க முடிகிறது, மக்களாட்சி மட்டுமே மாண்பளிக்கும் என்ற கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த, நாட்டுத் தலைவர்கள், இந்த மன்னர்களுடன் உரையாடி, உலக சமாதானம் குறித்தும், நேசத் தொடர்புகொள்வதுபற்றியும், பேசி அறிக்கை வெளியிடு கிறார்கள். விந்தையாக இருக்கிறதல்லவா?

ஆப்கன் நாட்டு மன்னரும், மன்னர் பரூக்கை விரட்டி, அரசுத் தலைவராகிவிட்ட நாசரும், எழில்மிகு எகிப்தில் விருந்துண்டு மகிழ்கிறார்கள், உலகு சீர்பெற வழி காண்போம் என்று செப்புகிறார்கள்.

மைசூர், திருவனந்தபுரம், கொச்சி, புதுக்கோட்டை, போபால், ஜெய்ப்பூர், ஜோத்பூர், பவநகர், நவநகர், பாடியாலா, - இப்படியுள்ள ஐநூறுக்கு மேற்பட்ட இராஜ்ஜியங்களை

அரசாண்டு வந்தவர்களை, இந்தியப் பேரரசு வீட்டுக்கு அனுப்பிவிட்டது - எனினும் இப்போது, "பிரிட்டிஷ் மகாராணி இங்கு வருகிறார்கள்' என்பதற்காக, என்னென்ன வகையான விருந்து வைபவங்கள் ஏற்பாடு செய்வது என்பது பற்றித் துரைத்தனமே சுறுசுறுப்பாகி விட்டிருக்கிறது.

மாலை போடலாம் - ஒன்றே ஒன்று!

விருந்து வைக்கலாம் - ஆங்கில முறை உணவு!

உடனிருந்து உபசாரங்களைக் கவனித்துக் கொள்ள, இலட்சுமி மேனன் எனும் துணை அமைச்சரே, கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

மகாராணி, புலிவேட்டை காண்பாராம்! மகாராணியின் மணாளன், புலியைச் சுடுவாராம்!

இருவரும் சென்று, காதற்சின்னமாம்

கவின்மிகு ”தாஜ்மகாலை’க் காண்பாராம் - நிலவொளியில்!!

தம்பி! பிரிட்டிஷ் மகாராணியின் வரவேற்பு வைபவத்துக்காக, அமைச்சர்கள் வண்டுபோலச் சுறுசுறுப்பாகப் பணியாற்று கிறார்கள் - அதிகாரிகள் பம்பரமாகச் சுழன்று வேலை செய்து கொண்டுள்ளனர்.

இது “குடிஅரசு’ கொடிகட்டி வெற்றி முழக்கமிடும் காலம்! - இப்போது, உலகில் மிகப்பெரிய ஏகாதிபத்தியத்தை அமைத்து, பல நாடுகளை அடிமைகொண்ட, பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் மகாராணியாருக்குக், குடிஅரசு முறையை மேற்கொண்டுவிட்ட இந்தியாவில், இத்துணை சிறப்புடனும், பகட்டுடனும் வரவேற்புகள்!! பொருள் உண்டா, இதற்கு? குடிஅரசு முறையிலே, மக்களுக்கு ஐயப்பாடே ஏற்பட்டுவிடுமோ என்று கூடச் சிலர் அச்சப்படுவர் - முடிதரித்தோர் முன், குடியாட்சித்

தலைவர்கள், முகமன்கூறி நின்றிடும்”அடக்க உணர்ச்சி’யைக் காணும்போது.

அஃதேபோல, முடிதரித்தோர், குடியாட்சித் தலைவர்களுடன் கைகுலுக்கி, கனிவு காட்டி, அவர்தம் அறிவாற்றலைப் பாராட்டிப் பேசும்போது, குடியாட்சித் தலைவர்களில், மிக மிக உறுதி படைத்தவர்களுக்கேகூட, ஒரு கணம், உச்சி குளிரத்தான் செய்யும்.

குடியாட்சி முறையை மேற்கொள்ளுங்கள், என்று முடி தரித்தோருக்கு இவர்கள் யோசனை கூறுவதில்லை. முடி அரசுதான் சாலச் சிறந்தது என்று குடியாட்சித் தலைவர்களுக்கு, மன்னர்களும் அறிவுரை கூறுவதில்லை; இருவரும் ஒருவருக் கொருவர் ”அன்புரை’ கூறிக்கொள்கின்றனர்; அவனியோர்க்கு வாழும் வழி கூறுகின்றனர்.

முடிதரித்தோருக்கு உள்ள பகட்டு கண்டு,

குடியாட்சித் தலைவர்கட்கு, நெஞ்சில் சபலம் தட்டுகிறதோ என்னவோ, யார் கண்டார்கள்? அதுபோலவே, குடியாட்சித் தலைவரானால், மக்களின் பேரன்பு கிடைக்கிறது என்பது கண்டு, முடிதரித்தோர் மனம், குடியாட்சி முறையை நாடுமோ, என்னவோ!

ஆனால், மக்கள் இன்றும், மன்னர்களைக் காண்பதிலே, மட்டற்ற ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஈரான் நாட்டு மன்னருக்கு, சின்னாட்களுக்கு முன்பு ஒரு ஆண் மகவு பிறந்தது! ஆண் குழந்தை ஈன்றெடுக்காத ஒரே காரணத்துக்காகவே, ஈரான் மன்னர், தன் இதயத்தில் இடம் பெற்ற பேரழகி சுரையா மகாராணியை விலக்கி வைத்து விட்டார்; வேறோர் மங்கையை மண முடித்துவிட்டார்; அவள் பெற்றெடுத்தாள் ஆண் மகவு! ஈரான் நாடு விழாக்கோலம் பூண்டது! மன்னனுக்கு

மகன் பிறந்தான் - நாட்டுக்கு இளவரசன் பிறந்தான் - என்று குதூகலம், நாடு முழுவதும்.

ஈரான் நாட்டு மன்னர், "இளவரசனை'க் கண்டுவிட்டுத் திரும்புகையில், அவருடைய மோட்டாரைச் சூழ்ந்து கொண்டு, ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்த காட்சி படமெடுக்கப்பட்டு, குடியாட்சி பரவப் பாடுபடும் நாளிதழ் களில், முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இன்றளவும், பிடிதளரவில்லை; முறை அதிகமாக மாறி விடவில்லை; எல்லா அதிகாரமும் தமது கரத்திலேயே வைத்துக் கொண்டு இருக்கிறார் அபிசீனியா நாட்டு மாமன்னர், ஹெயிலி செலாசி! சென்ற கிழமை, அவர் அரசாளத் தொடங்கி, முப்பதாண்டுகள் ஆயின என்பதைக் காட்டிட ஒரு விழா நடைபெற்றது - கோலாகலமாக!

பிரான்சு நாட்டிலே, மன்னனை விரட்டிய நாளை, இன்றும் விழாவாக்கிக் கொண்டாடுகிறார்கள்.

ர□ய நாட்டிலே, இந்த நவம்பரில், ஜார் மன்னன் ஆட்சி ஒழிக்கப்பட்ட புரட்சி, விழா நாளாக்கப்பட்டுக் கொண்டாட்டம் நடக்கிறது.

அபிசீனியா நாட்டிலே, மாமன்னர் முடி தரித்து முப்பது ஆண்டுகள் ஆகின்றன என்பதால், மகிழ்ச்சியுற்று விழாக் கொண்டாடுகிறார்கள்.

பேரறிவாளன் என்று போற்றப்படும் சாலமன் எனும் மன்னனுக்கும், பேரழகி ஷீபா எனும் அரசிக்கும் பிறந்த மைந்தனுடைய வழி வழி வந்தவர், அபிசீனியா மாமன்னர், என்கிறார்கள்.

இவரும், இன்றுள்ள குடியாட்சித் தலைவர்களுக்கு, நல்லாட்சி நடத்த வேண்டும்

என்பது குறித்தும், உலகப் போர் மூண்டிடாமல், அறநெறியுடன் நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றியும், அறிவுரைகள் கூறுகிறார்.

இவ்விதமானதோர் விந்தையான நிலைமை இன்று இருந்து வருகிறது.

குடியாட்சி முறையை முடியாட்சி முறையுடன் இணைத்துக் கொண்டுள்ள நாடு பிரிட்டன்.

முடியுடையோன் தலையை வெட்டினர் பிரிட்டனில், முன்போர் முறை.

மற்றோர் மன்னனை நாடு கடத்தினர்! மிகப் பழம் காலத்திலேயே, மன்னனை மாளிகைக்குள்ளே, மடக்கி அடக்கி, அவனிடம் "உரிமைச் சாசனம்' எழுதி வாங்கினர் - இதே பிரிட்டனில்.

இதே பிரிட்டனில், மகாராணிக்குக் குழந்தை பிறக்கப் போகிறது என்று

அறிவிக்கப்பட்டதும், கொட்டும் பனியைப் பொருட்படுத்தாமல், அரண்மனைக்கு எதிரே, பெருந்திரளாக மக்கள் கூடி நின்றனர் - சேதி கேட்டு மகிழ்ந்திட!

அப்படிப்பட்ட விந்தை முறைகள் நிறைந்த பிரிட்டனை ஆண்ட ஓர் மன்னனைத்தான், நாடகப் பேராசிரியர், நானிலம் போற்றிய பகுத்தறிவாளர், பேரறிஞர் பெர்னாட்ஷா "ஆப்பின் கார்ட்' எனும் நாடக நூலொன்றிலே, படைத்துக் காட்டுகிறார். ஆமாம் தம்பி! உண்மையாக இருந்த மன்னன் அல்ல; சமதர்ம குடிஅரசு, பகுத்தறிவு எனும், பல தூய கருத்துக்களைக் கருவூலமாக்கித் தந்த பேரறிஞர்,"பெர்னாட்ஷா'வின் கற்பனையில் தோன்றிய மன்னன்! காண்போம் வா!

•

மன்னன் அரண்மனை பெரியது!

கவர்ச்சிகரமானது! மன்னனுடைய நிலைமைக்கு ஏற்றதாகத்தானே அவன் இருப்பிடம் இருத்தல் வேண்டும். நமது நாட்டிலே தம்பி! கோயில் என்றே பெயர் தந்தனர், மன்னன் மனைக்கு!

நுழைவு வாயிலைக் கடந்துவிட்டோம் - முன்புறக் கூடம்! இங்கு உள்ள உதிகாரிகளிடம் அனுமதி பெற்றுக் கொண்டுதான் உள்ளே போக முடியும். அவர்கள் இருவரும், மன்னனுக்கு வந்த கடிதங்களைப் படித்துக் கொண்டும், இடையிடையே பேசிக் கொண்டுமிருக்கிறார்கள். என்ன செய்வது, தம்பி! கனைத்தாலும், கண் சிமிட்டினாலும், இவர்கள், தங்கள் வேலை முடிந்தா லொழிய, அல்லது என்ன காரணத்தினாலோ நம்மிடம் அக்கரை ஏற்பட்டாலொழிய, உள்ளே செல்ல அனுமதி அளிக்க மாட்டார்கள். எவ்வளவு நேரமாகும் என்று கேட்கிறாய் - பார்வையால்!

என் பெருமூச்சு கூறுவது புரியவில்லையா - எவ்வளவு நேரமாகுமோ எனக்கே தெரியாது.

இதுதான் அண்ணா! முடிஅரசு முறையிலே உள்ள கொடுமை - என்று கூறுவாய்.

குடியாட்சி முறையிலே மட்டும் என்னவாம்! கண்டவர்கள், கண்ட கண்ட நேரத்திலெல்லாம், அமைச்சர் பெருமானைக் காணச் சென்றுவிட முடியுமா? "நந்திபூஜை' அங்கு இல்லையா?

இராஜகோபாலாச்சாரியார் அமைச்சராக வந்த உடன், குடியாட்சி முறையின் அருமை பெருமையை உயர்த்தும் நோக்குடன், தன்னை எவரும் எந்த நேரத்திலும் வந்து பார்க்கலாம் என்று கூறினார். ஒரே கொண்டாட்டம் மக்களுக்கு! காங்கிரஸ் வட்டாரத்திலே பெரு மகிழ்ச்சி! ஆனால், என்ன நடந்தது; தெரியுமோ? தம்பி! அணி அணியாகக் காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும்,

வந்து பார்த்தபடி இருந்தனர் - வேறு வேலை பார்க்கவே நேரம் கிடைக்கவில்லை. கூப்பிய கரத்தை, மடக்கமுடியவில்லை! சிரித்த முகம் - மாறக்கூட நேரம் கிடைக்கவில்லை. கடைசியில் இது ஆகாது என்று உணர்ந்து, ஆச்சாரியார், முதலில் செய்திருந்த ஏற்பாட்டைக் கைவிட்டுவிட்டார்.

குடியாட்சியிலேயே இது என்றால், முடியாட்சியிலே, கட்டுக் காவல், தடை, இவை அதிகமாகத்தானே இருந்திடும்!

அதிகாரிகள் நமது பக்கம் திரும்பிப் பார்ப்பதாக இல்லை - தம்பி! அடுத்து, காண்போம், மன்னனை.

அன்புள்ள,

அண்ணாதுரை,

13-11-1960

26. எல்லோரும் இந்நாட்டு மன்னர் (4)

தம்பி!

மன்னனைக் காணப் பலர் வரக்கூடும்; இளவரசர்கள், தளபதி, வணிகர் கோமான்கள், கலைவல்லோர், மார்க்கத் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இப்படிப் பலர். இவர்கள் ஒவ்வொருவருக்கும், மன்னனைக் காண்பது, அவருடன் உரையாடுவது என்பதிலே, ஒவ்வொரு முறை இருக்கும். கொலு மண்டபம், கோட்டை வெளி, விழாமன்றம், களியாட்டக் கூடம், காணாற்றுப் பக்கம் எனும் பல்வேறு அரங்கங்களில், மன்னனுடன் செல்வோர் அல்லது வந்து காண்போர், என்ன முறையில் வரவேற்கப்படுவர், எங்கு இடம் பெறுவர்

என்பதற் கெல்லாம், கட்டுத்திட்டம் உண்டு; அது துளியும் கெடாதபடி பார்த்துக்கொள்வார்கள்; கெடவிடின், மன்னன், தன் நிலை அறியாது தடுமாறினான் என்று கேலி பேசுவர், கண்டிக்கக்கூடச் செய்வர்.

இங்கு வர இருக்கும் பிரிட்டிஷ் பேரரசிக்கு மணாளனாக இருப்பவர், வேறோர் நாட்டு அரச குடும்பத்தவர் எனினும், அரசர் அல்ல! பேரரசியுடன் அவர் செல்கிறார், பல நாடுகளுக்கு; பேரரசிக்குக் காட்டப்படும் சில தனிச்சிறப்புகள் இவருக்குக் கிடையாது; பெற இயலாது; கேட்கவும் மாட்டார். நாட்டுக்கு மட்டுமல்ல, நாயகனுக்கும், அவர் பேரரசி!

பேரரசியின் பாராளுமன்றத் துவக்க உரை நிகழ்ந்தபோது, பேரரசியின் தங்கை, அவையில் அரச குடும்பத்தினருக்கு என்றுள்ள இருக்கையில் காணப்படவில்லை. காரணம் என்ன என்று இதழ்கள் விளக்கின.

ஒரு இதழ், உண்மையான காரணம், அவர் மட்டும்தான், அரச குடும்பத்தினர் இருக்கையில் அமரலாமேயொழிய, பக்கத்தில் கணவன் அமர முடியாது! ஏனெனில், அவர் அரச குடும்பத்தவர் அல்ல; தனக்கு ஒரு இடம், மணாளனுக்கு மற்றோர் இடம் என்று இருப்பதை விரும்பாத தாலேயே, அரச குமாரி பாராளுமன்ற விழாவில் கலந்து கொள்ளவில்லை, என்று எழுதிற்று. இது இந்த ஆண்டு!

இங்கு வர இருக்கிறாரே எலிசபத் பேரரசி, அவர் புவேட்டை காணப்போகிறார்? காண மட்டுமே! புலிவேட்டை ஆடப்போவதோ பேரரசியின் கணவர்.

தம்பி! பேரரசி, புலிவேட்டை ஆடுவது கூடாது! தரக் குறைவான செயல்! அவர் கணவர், வேட்டை ஆடலாம், அவருக்கு உள்ள நிலையின் அளவு அது! ஏன் இந்த

வித்தியாசம் என்று வியப்பாக இருக்கிறதா? இதிலென்ன, தம்பி! வியப்பு? உண்மையாக நீ வியப்புறவேண்டியது எதை அறிந்து தெரியுமா? பேரரசியின் கணவன் பேரரசன் அல்ல; பேரரசனின் மனைவி பேரரசி ஆகலாம்!!

இத்தகைய சில தனிச் சிறப்புகள், இன்றும், அரசர்களுக்கு உள்ளன; மக்களும், இந்தச் சிறப்புகளைத் தருவதிலே தயக்கம் காட்டுவதில்லை; மன்னன் உலா, விழாபோல் இருக்கலாம் என்கின்றனர் மக்கள்; விழாவில் களிப்புப் பெறுகின்றனர்! மன்னன், கண்ணைக் கவரும் வனப்பு அளித்திடும் அணிமணி பூண்டிடலாம், மக்கள் அதனை அனுமதிக்கின்றனர்! கண்டு அகமகிழ்கின்றனர்; ஆனால் மன்னன், ஆட்சிப் பொறுப்பு அத்தனையும் வேண்டுமென்று கேட்டாலோ மறுக்கின்றனர்; உமக்கு எது

நல்லது என்பது எமக்கன்றோ தெரியும் என்று மன்னன் பேசிடின், அதனை மமதை என்கின்றனர் மக்கள்!!

பிடி யாராரிடமோ உள்ளது, முடிமட்டும் நம் தலையில்! அரசன் என்று விருது இருக்கிறது, ஆட்சியோ நம் விருப்பப்படி இல்லை! அரண்மனை இருக்கிறது பெரிதாக; ஆனால் அது சிங்காரச் சிறைக்கூடம் போலாக்கப்படுகிறது! இந்நிலையில், அரசர்க்கான உடையும் முடியும் வெறும் சுமையாகிறது. பொன்னால் சமைக்கப்பட்டு நவமணிகள் இழைக்கப்பட்ட, "சிம்மாசனம்' எந்தச் சமயத்திலும் கடித்திடத் தயாராக இருக்கும்"சர்ப்பாசனம்' போலாகிறது! இந்த நிலையில், மன்னன் என்று இருப்பதைவிடக் குடிமகனாக இருப்பது மேல்! மன்னன் குடிமகனை, எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற முறை முறிந்து

போய்விட்டது. குடிமகன், இன்று மன்னனை, எப்படி எப்படிக் காணவேண்டும் என்று எண்ணுகிறானோ, அதுபோல் ஆக்கிவிட முடிகிறது. இந்நிலையில், குடிமகனாக இருப்பது கோலேந்தியாக இருப்பதைக் காட்டிலும், எத்துணையோ மடங்கு மேலானது, என்று எண்ணிக்கிடந்திடும், மன்னர்களும் உளர்.

இவ்விதமான எண்ணம்கொண்ட மன்னனைத்தான் தம்பி! நாம் காணப் புறப்பட்டோம்.

அதோ பார்! ஏறு நடை! எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசக் கூடியவர் என்பதை எடுத்துக் காட்டிடும் பார்வை, கண்டவர் தன் நிலை உயர்ந்தது என்பதை அறிய வேண்டும் என்ற நோக்குடன், உடை அலங்காரம். ஆதிக்கக்காரருக்கு அடி பணிபவன் நான் அல்ல; நான் புரட்சி

நோக்குடையவன் என்பதை எடுத்துக்காட்டும், சிகப்பு அங்கி. இவர் ஓர் அமைச்சர்! புதிதாக அமைச்சரானவர்!

அமைச்சரானேன், என்றார் இவர்.

அமைச்சர் ஆக்கினேன் என்பார், முதலமைச்சர்.

இவர், வணிகக் கோட்டத் துறைக்குத் தலைமை ஏற்றிருக்கும் அமைச்சர். பேரறிஞர் பெர்னாட்ஷா இந்த அமைச்சருக்கு போனார்ஜிஸ் என்று பெயரிட்டிருக்கிறார்.

தம்பி! நான், நமது வசதிக்காக, இந்த அமைச்சரை, புயலார் என்று அழைக்கிறேன். இந்த அமைச்சர், தமது அறிவாற்றலால், புரட்சிப் போக்கினால், முடி அரசு முறையையே வீழ்த்தத்தக்க புயல் கிளப்பு விடுவதாக எண்ணுபவர்; எனவே இவருக்குப் புயலார் எனும் பெயர் ஒருவகையிலே

பொருத்தமானதுங்கூட.

அமைச்சர் அவையில் இடம் பெறுமுன், இவர், பொறி பறக்கப் பேசியும், புதுப்புதுத் திட்டங்களைத் தீட்டியும், ஆட்சி முறையிலே மதமதப்பு ஏற்பட்டு விட்டது என்று கடிந்துரைத்தும், மன்னராட்சி முறை உள்ளமட்டும் மக்களாட்சி மலராது என்று விளக்கியும், முடிதரிப்போரே இருத்தல் ஆகாது, முழுக்க முழுக்க குடிஅரசு ஏற்பட்டாக வேண்டும் என்று முழக்கமிட்டும், "பெரிய புள்ளி' ஆனவர்;"புயலார்' ' ஆனவர்!

அவருக்கு அமைச்சர் அவையில் இடம் தரப்பட்டது.

புதிய அமைச்சர் மன்னனைக் காண வருகிறார்.

மன்னனைக் காண வந்திருக்கிறேன் - என்று புயலார் கூறிடும் போது, அச்சொல்

கேட்டதும் அலுவலர்கள் அஞ்சி நடுநடுங்கி, ஐயனே! அமருவீர்! இதோ அரைநொடியில் அரசனை அழைத்து வருகிறோம் - என்று கூறிவிட்டு ஓடோடிச் சென்று, அரசனை அழைத்து வருவர், என்று எண்ணிக் கொண்டிருக்கக் கூடும். ஏனெனில், மன்னர்களைப் பேட்டிக் காணச் செல்வது பேதைமை என்றும், மக்களின் தலைவர்களை மன்னர்கள் காத்திருக்கச் செய்வது கொடுமை என்றும், அந்த முறையை வாழவிடுவது மடைமை என்றும், சந்தைத் திடலில், அவர், எத்தனையோ முறை முழக்கமிட்டிருப்பார். அப்படிப் பட்டவர், அமைச்சர் என்ற நிலையைப் பெற்று மன்னனைக் காண வந்திருக்கிறார் - மதியிலிகள், அவரை ஊர் என்ன? பேர் என்ன? உற்ற குறை யாது? என்று கேட்கிறார்கள்? - அவ்விதம் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டதால்!! புயலார் கோபம் கொள்ளா மலிருந்திருக்க

முடியுமா?

கேட்பதென்ன! வந்தது மன்னனைக் காண - காணச் செல்வோம்!! - என்று எண்ணிக் கொண்டார் போலிருக்கிறது, உள்ளே நுழைந்தார், மன்னனுக்கு அனுப்பப் படும் மடல்களைக் கவனிக்கும் அலுவலர் இருவர் கண்டனர்; அவர்களில் ஒருவன், வந்தவர் யார் எனக் கண்டுகொண்டான். அவர் போக்கும் நோக்கும் தெரிந்தவன் என்ற முறையில் பேசினான்.

”வருக! அமைச்சரே! வருக! தாங்கள் அமைச்சரான தற்காகத் தங்களை நான் வாழ்த்துகிறேன். . . இல்லை, இல்லை தங்களைப் பெற்றதற்காக அமைச்சர் அவையை வாழ்த்துகிறேன்!’’

பொல்லாதவன் இந்த இளைஞன். முடி அரசனோ, குடி அரசுக்

கொள்கையுடையோனோ, எவனாயினும், புகழ்மொழி கேட்டால் மயங்கிப் போவர், என்ற உண்மையை உணர்ந்து, புயலாரிடமே, அந்த வித்தையை காட்டுகிறான். மன்னர்களாகிலும், பலருடைய புகழுரையைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போயிருப்பர்! எனவே அவர்கள், தம்மைப் புகழ்பவர்களின் எண்ணிக்கை வளர வளர, ஓரளவு சலிப்புணர்ச்சிகூடக் கொள்ளக்கூடும். புயலார் போன்றவர்கள் அவ்விதம் அல்லவே! அங்காடியிலும், ஆற்றோரத் திடலிலும், முச்சந்தியிலும், மன்றங்களிலும், பாராட்டுரைகளைப் பெற்றிருப்பர். இது அரண்மனை! எந்த அரண்மனையைச் சுட்டிக் காட்டி, ஆணவம் குடிகொண்ட இடம்! அக்கிரமம் கொலு இருக்கும் இடம்! என்றெல்லாம் கண்டித்துப் பேசி இருக்கிறானோ, அதே அரண்மனை, அங்கு

அவன் நுழைகிறான், மன்னனைக் காண, அமைச்சர் என்ற நிலை பெற்று! அந்த இடத்தில், தன்னைப் புகழ்கிறார்கள் என்றால், உச்சி குளிர்ந்திடத்தானே செய்யும்.

மன்னர்! என்று இளைஞர்களில் ஒருவன் அறிவிக்கிறான்.

உட்கார்ந்திருக்கும் புயலார், இருக்கையில் இருந்தபடியே, கதவுப்பக்கம் திரும்பிப் பார்க்கிறார் - எழுந்திருக்கவில்லை.

மன்னன் வருகிறார் என்ற உடன், எழுந்து நின்றால், செ! தன்மானத்தை, இழந்துவிடும் செயலாகி விடாதா! ஓ! பயல், நம்மைக் கண்டதும் மரியாதை காட்டுகிறான் என்று மன்னன் எண்ணிக் கொண்டு விடுவானே! நாடு, நமது கட்டளைக்காகக் காத்துக்கிடக்கிறது; நமது அறிவாற்றலால் இந்த அரசையே

ஆட்டிப் படைக்கிறது - அப்படிப்பட்ட நாம், கேவலம் ஒரு முடிதாங்கியைக் கண்டு எழுந்து நிற்பதா? கூடாது. கூடவே கூடாது. நாம் உட்கார்ந்தபடி இருந்தால்தான் நமது நிலையின் உயர்வு தெரியும், தரம் புரியும், குடிஅரசுக் கோட்பாட்டுக்கு ஏற்றம் ஏற்படும், என்றெல்லாம் புயலார் எண்ணிக்கொண்டிருந்திருக்கக்கூடும்.

நாற்பத்தைந்து வயதிருக்கும் மன்னனுக்கு; நல்ல உயரம்; அறிவாளி என்பதைக் காட்டிடும் தோற்றம். கனிவுடன், கரங்களை நீட்டியபடி, புயலாரை நோக்கி வருகிறார்.

மன்:- என் சிறிய அரண்மனைக்கு வந்திருக்கிறீர் - நல் வரவேற்பு.

புயலாரே! அமருங்களேன்!! (மன்னன், அமைச்சருக்குத் தர வேண்டிய உரிய

மதிப்பைத் தரவேண்டி, வரவேற்பு கூறுகிறான். மன்னனைக் காண வருபவர்கள், மன்னனைக் கண்டதும் எழுந்து நிற்பது வாடிக்கை யாக இருந்துவரும் மரியாதை முறை; அங்ஙனம் நிற்பவரை, அமருக! என்று அன்புடன் மன்னன் கூறுவதும் மரியாதை முறைகளிலே ஒன்று.

மன்னன், தனக்கென்று இருந்துவரும் மரியாதை முறைப்படி, அமைச்சரை வரவேற்றபடி, அமருக! என்று கூறினார். அமைச்சர் தான், வழக்கமான மரியாதை முறையைக் கையாள்வது தன் நிலைமையைக் குறைத்துவிடும், தாழ்வு மனப் பான்மையைக் காட்டும் என்று கருதி, எழுந்திருக்கவே இல்லையே, அதைக் கவனித்துவிட்டதாகக் கூட, மன்னன் காட்டிக் கொள்ளவில்லை. வழக்கமான மரியாதை முறை இருப்பதுபோலவே கருதிக்கொண்டு, அமருக! என்கிறார்.)

அமை: நான் அமர்ந்துகொண்டுதான் இருக்கிறேன்.

மன்: உண்மை, புயலாரே! நான் அதைக் கவனிக்கவில்லை. மன்னித்துக்கொள்க! அமருக! என்று கூறிவிட்டேன்!! பழக்கம் அப்படி!

(தம்பி! மன்னன், எப்படிப்பட்டவன் என்பதை எடுத்துக் காட்ட இந்த ஒரு பேச்சுப்போதும் என்று கூறலாம்.)

தேவையற்ற திமிர் என்றுதான், தெளிவுள்ள எவரும் கூறுவர், சாதாரண, வழக்கமான, மரியாதையை காட்டக்கூட மறுத்திட்ட, அமைச்சரின் போக்கை.

ஆனால், அதைக் கண்டும், காணாதது போலிருந்து விட்டது மன்னனுடைய பெருந்தன்மையை மட்டுமல்ல, அவனுக்கு உள்ள ”எடைபோடும்’ திறமையையும் நன்கு

காட்டுகிறது.

ஆணவம் தலைக்கேறிவிட்ட நிலை இவனுக்கு; எனவே தான், கஷ்டமோ நஷ்டமோ தராத, மிக மிகச் சாதாரணமான மரியாதை முறையைக்கூடக் கைக்கொள்ளாதிருக்கிறான். இத்தனை முடுக்கும், முறிவுக்குத்தான் வழி அமைக்கும்!

இவன், கொந்தளிக்கும் உள்ளம் கொண்டவனேயொழிய, நின்று நிதானித்து, காரியமாற்றி, நீங்காப் புகழ் பெறும் வாய்ப்பினைத் தேடிக்கொள்பவனல்ல. எனவே இவன், நாம், கவனிக்கத்தக்க பகைவன் அல்ல! என்றுதான், மன்னன் எண்ணிக் கொண்டிருப்பான்.

அமருக! என்று கூறினேன், அட அறிவிலி! மன்னர்கள் அங்ஙனம் கூறுவது முறை! அதற்குப் பிறகு அமருவதே,

பழக்கமாக இருந்து வருகிறது! என்று, மன்னன் கடிந்துரைக்க வில்லை. மாறாக, "மன்னித்தருள்க, பழக்கத்தால் அங்ஙனம் கூறிவிட்டேன்' என்று பேசினான்.

இங்கு அனேகர் வருகின்றனர், புயலாரே! அவர்கள் நான் நின்றுகொண்டிருக்கும்போது அமர்ந்து கொண்டிருக்க மாட்டார்கள் - அது பண்பு அல்ல என்பதால்! அவர்கள் நின்று கொண்டிருக்க, நான் அமருவதும், பண்பு அல்ல! எனவேதான், நான், அமருக! என்று கூறுவது வழக்கம். இங்கு எப்போதும் போலத்தான், முறை தெரிந்தவர்கள், மரியாதை அறிந்தவர்கள், பண்பு புரிந்தவர்கள் வந்திருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு வந்தேன். அவ்விதம் நான் எண்ணிக்கொண்ட தால்தான், வந்தவர் நின்றுகொண்டுதானே இருப்பார் என்ற நினைப்பில், அமருக! என்றேன். பண்புடன்

நடந்துகொள் வோருக்கு, நான் காட்டும் மரியாதை அது. தேவையில்லை என்பதை அறியாது போனேன் - அமருக! என்று கூறியதற்காக மன்னித்திடுக! - என்றன்றோ, கூறுகிறான் கொற்றவன்!!)

இதற்குள், அலுவலர், ஓர் நாற்காலியை, புயலாருக்குப் பக்கத்தில் போடுகிறார் - மன்னன் காட்டிய குறி கண்டு.

பண்பற்று நீ நடந்து கொண்டாலும், நான் அங்ஙனம் நடந்து கொள்ளமாட்டேன், என்று இடித்துரைப்பதுபோல, மன்னன், புயலாரைப் பார்த்து,

"என்னை உட்கார அனுமதிக்கிறீர்களா?'' - என்று கேட்கிறார்.

மன்னன் பாடம் புகட்டக் கையாண்ட நேர்த்தியான இந்த முறை, அமைச்சர் புயலாருக்கு, புரிந்ததாகத் தெரியவில்லை.

அவருக்கு இருந்த எண்ணமெல்லாம், ஒருவன் மன்னன் என்பதற்காக, நான் ஒரு தனி மரியாதையும் காட்டி, என்னைத் தாழ்த்திக் கொள்ளமாட்டேன் என்பதுதான். எனவே அமைச்சர்,

"அட உட்கார் ஐயா! உட்கார்! உன் வீட்டில்தானே நீ இருக்கிறாய்.

எனக்கு இந்தச் சம்பிரதாய உபசார முறைகள் கட்டோடு பிடிக்காது.''

என்றுதான் பேச முடிகிறது.

மன்னனைக் காணச் சென்றேன்! நானென்ன, மற்ற மற்றவர்களைப் போல நோஞ்சானா!! பல்லிளிக்கும் பேர் வழியா! மன்னன் அவன் என்றால், நான் மக்களின் தலைவன்! மன்னர் களின் மணி முடியைப் பறித்தெடுத்துப் பந்தாடக்கூட உரிமையும் வலிமையும் பெற்றவன். வந்தான் மன்னன்,

அவனிடம் கூலி வாங்கிக்கொண்டு கிடக்கும் பயல்கள், மன்னர்! மன்னர்! என்று பயபக்தியுடன் கூடினர். அந்தச் சொல்லைக் கேட்ட உடனே, நான் நடுநடுங்கிப்போவேன், கூப்பிய கரத்துடன் நிற்பேன் என்று எண்ணிக் கொண்டார்கள் போலிருக்கிறது. நானா, என்னைவிட ஒருவன் மேலானவன் என்பதை ஏற்றுக்கொள்வேன். என் வீரதீரம் எத்தகையது! அறிவாற்றல் எத்துணைச் சிறப்பானது! நான் மக்கள் தலைவன்! இவன் மன்னன்! இவனைக் கண்டு நான் எழுந்திருக்கவில்லை, உட்கார்ந்தபடியேதான் இருந்தேன். மன்னன் திருதிருவென்று விழித்தான். கோபம் கொண்டு ஏதாகிலும் கேட்பான், செம்மையாகக் கொடுக்கலாம் என்று இருந்தேன். கோழை, வாயைத் திறந்தானில்லை. குழைந்து குழைந்து பேசினான் - என்று பொறிபறக்கப் பேசிடுவார்,

நமது மாசற்ற தலைவர் என்று புகழ் பாடிடும் கூட்டத்தினர் முன்பு புயலார். அவ்வளவே! வேறு உருவான, சுவையான, பயன்தரும் விளைவு எதுவும் ஏற்படாது, பண்பு மறந்த அந்தச் செயலால், மன்னன் "எடைபோட்டு' இதனை அறிந்து கொண்டான்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, தாங்கள் தேர்தலில் ஈடுபட்டீர்களே, அப்போதிருந்தே நான் தங்கள் அரசியல் வாழ்க்கையைக் கவனித்து வந்திருக்கிறேன். இப்போது தங்களைக் காணும் வாய்ப்பு கிடைத்தது எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது.

காரணமற்ற மண்டைக்கனம் காட்டும் இந்த அமைச்சன், இரண்டொரு புகழுரைகளைப் பெற்றாலே, புத்தி தடுமாறி நிற்பான் என்பதைப் புரிந்துகொண்டு மட்டும், மன்னன் இதுபோலப் பேசினார் என்று கொள்வதற்கில்லை.

அரசுகளை ஆட்டிப் படைக்கும் ஆற்றல் பெற்றிருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பவனே, நான் உன் போன்றோர்களின் நடவடிக்கைகளை அறிந்து வைத்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஏதுமறியாதவன் என்று என்னை எண்ணிக்கொள்ளாதே. முடிதாங்கியாக மட்டுமே இருக்கிறேன் என்று எண்ணி விடாதே. நான் நாட்டிலே கிளம்பிடும் நானாவிதமான சுழல்களையும் கூர்ந்து கவனித்தவண்ணம் இருக்கிறேன் - எனவே, நிலைமையை அறிந்து நடந்து கொள்ளக்கூடியவன், அப்படிப்பட்ட என்னை வீழ்த்துவது எளிதான செயலல்ல என்பதைத் தெரிந்துகொள் - என்று கூறாமற் கூறுகிறான் மன்னன்!

இன்று அமைச்சனாகி அரண்மனைக்கு வந்திருக்கிறாய், என்னைக் காண! என்னைக் காண வந்திருக்கும்போதே,

என்னை அவமானப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, உன் சிறுமைக் குணத்தைத்தான் காட்டிவிட்டாய். இந்த அளவு உயர, இந்த நிலைபெற, இந்த இடம் பிடிக்க, நீ எத்தனை ஆண்டுகளாகப் பாடுபட்டு வந்திருக்கிறாய், என்னென்ன கரணம், எத்துணை "கூட்டு' - யாராருடைய"தயவு' - இவைகளைத் துணை கொண்டு, வளர்ந்திருக்கிறாய். இந்த வளர்ச்சியைக் காண, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் உழன்று வந்திருக்கிறாய் - தெரியும் - எனக்கு!! - என்று கேலிக் கசையடி அல்லவா தருகிறான் காவலன். இந்த உட்கருத்தினை அமைச்சர் கவனித்ததாகத் தெரியவில்லை; மன்னன், இருபத்தைந்து ஆண்டுகளாகவே, தன்னைக் கவனித்து வந்திருப்பதாகக் கூறினார். அவ்வளவு பெருமதிப்பு நம்மிடம் மன்னருக்கு! நம்முடைய தரத்தையும் திறத்தையும்

மன்னர் போற்றுகிறார்! - என்று மட்டுமே எண்ணிக் கொள்ள முடிகிறது அமைச்சனால். அவ்வளவுதான் முடிகிறது, மகிழ்ச்சியுடன், தன் பெருமையைத் தம்பட்டமடித்துக் கொள்கிறான்.

"ஆமாம் அரசே! கவனித்திருப்பீர், இரண்டொரு முறையாவது, நான் உங்களை உலுக்கிவிட்டிருப்பேன், அல்லவா!''

என்று கூறுகிறான். புரட்சிவீரன்! அவன் சொல், மன்னனை உலுக்கிவிட்டதாம்!

புன்னகை புரிகிறான் மன்னன். புகழ்மொழி, இந்த புரட்சி வீரனை பூப்பந்தாக்கிவிடும் என்பது மன்னனுக்கு விளங்கி விடுகிறது. அதே வழியில், அவனை இழுத்துச் செல்ல விரும்புகிறான். உலுக்கிவிட்டிருக்கிறேன் என்று மட்டும்தானே கூறினான் அமைச்சன்; அரசன் மேலும் ஒருபடி

சென்று.

”தங்கள் முழக்கம், என் சிம்மாசனத்தையே பலமுறை ஆடச் செய்து விட்டிருக்கிறதே!’’

என்று கூறுகிறான். இந்தப் புகழ்மொழி, அமைச்சருக்கு போதை ஏறச் செய்துவிடுகிறது. மன்னனிடம் தனித்திருந்து பேச வேண்டும்; மனம் விட்டுப் பேச வேண்டும்; இவன் சாதாரண மன்னன் அல்ல; நமது ஆற்றலை அறிந்திருக்கிறான்; நமது தாக்கும் சக்தி இவனுக்குப் புரிந்து விட்டிருக்கிறது; இவனிடம் நாம் மிகத் தாராளமாகப் பேசலாம் - என்றெல்லாம் தோன்றுகிறது. அலுவலர் இருவர் ஆங்கு இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

”இவர்கள் இருவர் இங்கு உளர்! நாம் பேசுவதை எல்லாம் இவர்கள் கேட்டுக் கொண்டு இருப்பதா?’’

என்று கேட்கிறார் அமைச்சர்.

அமைச்சர் புயலார், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கோட்பாட்டுக்காரர்! எனினும், அவர், மன்னனுடன் தனித்திருந்து அரசியல் விஷயம் பேச வேண்டும் தவிர, கண்ட வர்களின் முன்பு பேசுவது முறையல்ல, என்று எண்ணுகிறார்.

அவருடைய "ஜனநாயகம்' எல்லோருக்கும், அல்ல! மன்னன் தன் மதிப்பை அறிந்து, தன்னிடம் அரசியல் விஷயமாகக் கலந்து பேசும் அளவுக்கு இருந்தால் போதும், என்று இருக்கிறது.

நாடாளும் மன்னன், அவனை எதிர்த்திடும் மக்கள் தலைவன், இந்த இருவர் கூடிப் பேசி நடத்துவதே ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்று, எண்ணுகிறார்.

மன்னன் ஜனநாயகவாதியாகிறார்

- அவர்கள் இருப்பதால் தவறு ஏதும் ஏற்பட்டுவிடாது என்கிறார். பிறகு உரையாடல் நடைபெறுகிறது.

அமை: இதுவரை மன்னர்கள்முன் எவரும் சொல்லிடாத விஷயங்களை நான் இப்போது சொல்லப் போகிறேன் என்பதை உணருகிறீரா?

மன்: மகிழ்ச்சி அமைச்சரே! மன்னர்களிடம் என்னென்ன சொல்ல முடியுமோ அவ்வளவும் சொல்லியாகி விட்டதாகத் தான் நான் கருதுகிறேன். ஏதேனும் சிறு அளவு புதுமை இருப்பினும், மகிழ்ச்சி!

அமை: எச்சரிக்கிறேன் மன்னரே! தித்திப்புச் பேச்சல்ல! நான் வெளிப்படையாகப் பேசுபவன்.

மன்: தாங்களா? இல்லை! இல்லை! தாங்கள் ஒரு புதிர்! எப்போதுமே எனக்குத்

தாங்கள் ஒரு புதிராகவே இருந்து வருகிறீர்.

தம்பி! இந்தப் பேச்சு, அமைச்சருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. தன் சொல், செயல், இவற்றின் உட்பொருள், வலிவு, விளைவு இவைகளைப் பிறர் அறிந்து கொள்ளவே இயலாது, புதிர்போல் இருக்கும் தனது நடவடிக்கை. இன்னதுதான் என்று அறியாமல், எவரும் ஏமாந்து போவர், வீழ்ந்துபோவர், என்று அமைச்சருக்கு உள்ளூற ஒரு எண்ணம். அடே, அப்பா! அவன் எமகாதகப் பேர்வழி திட்டம் என்ன போடுகிறான், வழி என்ன தேடுகிறான் என்று கண்டு பிடிக்கவே முடியாதே! கடலாழம் காணலாம், இவன் கருத்தாழம் காண இயலாது எவராலும். இவன் ஓர் நடமாடும் புதிர்! என்று தன்னைப் பற்றி எவரும் பேச வேண்டும் - புகழிலே இதற்கு நிகர் வேறு இல்லை - என்ற எண்ணம், இந்த அமைச்சருக்கு என்பதைக்

கண்டுகொண்டுதான், மன்னன், அந்த நரம்பைத் தொட்டான். அமைச்சருக்கு அளவற்ற திருப்தி - மகிழ்ச்சி - புன்னகையை அடக்கிக் கொள்ளவே முடியவில்லை - ஏன் இந்தப் புகழ்மொழி! அப்படி எல்லாம் இல்லை! நான் சாதாரணம் - சாமான்யன் - புதிர் அல்ல - என்று கூற இயலவில்லை.

"ஆமாம் - ஒரு விதத்தில் உண்மைதான். நான் ஒரு புதிர்தான்!''

என்று தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக் கொள்கிறான், மன்னன், உள்ளூறச் சிரித்திருப்பான்!

"புதிர்போலிருக்கும் உம்மைப் புரிந்துகொள்ள முடிய வில்லை - முயற்சித்தும். விளக்கமாகப் பேசும் அமைச்சரே!''

"ஆம்! வெளிப்படையாகத்தான் பேச வந்திருக்கிறேன். முதலிலே இதை

அறிந்துகொள்ளும், இந்த நாட்டை நீர் அல்ல, உமது அமைச்சர்கள் ஆள வேண்டும்.''

"கடினமான ஆட்சிப் பொறுப்பை அமைச்சர்கள் என் கரத்திலிருந்து எடுத்துக்கொண்டு பார்த்துக்கொள்வதற்கு நான் அவர்களுக்கு நன்றி கூறுவேன்.''

"உம் கரத்தில் இருப்பதாகச் சொல்வது தவறு. உமது அமைச்சர்களின் கரத்தில் ஆட்சிப் பொறுப்பு இருக்கிறது. கட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் காவலன், நீர்! தெரிகிறதா? பெல்ஜியத்தில் இந்த முறையை என்ன பெயரிட்டுச் சொல்கிறார்கள் தெரியுமா?''

"ரப்பர் ஸ்டாம்ப்? மந்திரி கை முத்திரை'' என்பார்கள்!

"ஆமாம் மன்னவா! ஒரு ரப்பர் ஸ்டாம்புதான். அப்படித்தான் நீர்

இருந்தாகவேண்டும்.''

"ஆமாம், நாம் அப்படித்தான் ஆகிவிட்டிருக்கிறோம்.''

"அதென்ன,"நாம்' என்கிறீர்? என்ன பொருள்?

"நம்மிடம் காகிதங்களைக் கொண்டு வருகிறார்கள். கை எழுத்திடுகிறோம். அவைகளைப் படிக்க அமைச்சர்களாகிய உமக்கு நேரம் இல்லை. அது நல்லது. ஆனால், நான் எல்லா வற்றையும் படித்தாகவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, சரியோ தவறோ கையொப்பமிடவேண்டும். குற்றமற்றவர்களுக்குக் கூடத் தண்டனை தரப்பட்டிருக்கும்; நான் கையொப்பமிட வேண்டும். தூக்குத் தண்டனை தரவேண்டிய குற்றம் செய்திருப்பார்கள் சிலர், தண்டனை

தர எனக்கு அதிகாரம் இல்லை.''

"ஓஹோ கொண்டுவா அவனுடைய தலையை என்று கொக்கரித்த காலம் திரும்பிவரவேண்டும் என்கிறீரா?''

தம்பி! உரையாடலின்போதே, மன்னன், அமைச்சரின் உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொள்கிறான்.

அமைச்சரே! நான் மன்னனாக இருப்பதிலே ஒரு பிரமாதமும் இல்லை. அரச குடும்பத்தவன், அரசன் ஆனேன், மற்ற வாரிசுகள் செத்ததால். ஆனால் உங்கள் பெருமையே பெருமை. சாமான்யக் குடும்பம்! வறுமை சூழ்ந்த இளமை! உழைப்பாலும், அறிவுத் திறத்தாலும் உயர்ந்து, நாடாளும் அமைச்சரானீர்! மன்னனாக இருக்கிறேன், என்ன பலன்? குடிஅரசுத் தலைவராக இருப்பின், எவ்வளவு நிரம்பிய அதிகாரம்

கிடைக்கும்! தாங்களே அப்படி, குடிஅரசுத் தலைவராகப் போவதாகவும் கூறுகிறார்கள் - என்று மன்னன் தேன் துளிகளாக்குகிறான் வார்த்தைகளை. சுவைத்து இன்புறுகிறார் அமைச்சர்.

"அதென்ன குடிஅரசுத் தலைவரானால் வலிவும் பொலிவும் அதிகம் என்கிறீர்! அப்படியானால் மன்னனாக இருப்பதைவிட குடிஅரசுத் தலைவராவதைத்தானா மேலானது என்று கருதி விரும்புகிறீர்.'' - என்று கேட்கிறார் அமைச்சர்.

அப்படிச் சொல்வதற்கில்லை. அரசனாக இருப்பவர்களுக்கு அதிகாரம் இல்லையே தவிர, அவர்கள் அரசராக இருக்கும் போது, பாதுகாப்பு நிரம்ப இருக்கிறது. ஜனநாயக முறைப்படி தலைவர்களாக வருகிறவர்களுக்கு அந்தப் பாதுகாப்பு இல்லை. போற்றுகிற மக்களே தூற்றுக்

கீழே இறக்கி விடலாம். போட்டி ஏற்பட்டுத் தலைமைப் பதவி போய்விடலாம். வேறு ஒரு தலைவன் தோன்றி, அதிக தீவிரம் பேசி, மக்களைத் தன் பக்கம் அழைத்துக் கொள்ளலாம். அப்போது பழைய தலைவர் பாடு ஆபத்தாகிப் போகும். மன்னன் என்றால் அந்த ஆபத்து இல்லை. நிம்மதி இருக்கும். பாதுகாப்பு இருக்கும். அதிகாரம் இருக்காது, பரவாயில்லை; ஆபத்தும் இல்லை அல்லவா?

மன்னன், எடுத்துக் காட்டியது, மறுக்க முடியாத உண்மை என்பது அமைச்சருக்குப் புரிகிறது! புரிகிற காரணத்தாலேயே அச்சமும் ஏற்படுகிறது.

ஜனநாயக முறையிலே ஈடுபட்டுத் தலைவர்களாக, அமைச்சர்களாக உயர்ந்துவிடுவதாலேயே, மண்டைக் கனம் கொண்டுவிடாதீர்கள். ஆபத்து எந்த நேரத்திலும் உமது பதவிக்கு, செல்வாக்குக்கு,

தலைமைக்கு ஏற்படலாம்! மக்களின் மனம் மாறிவிடக்கூடும் - வீழ்ச்சி ஏற்பட்டுவிடும். எனவே அமைச்சர் என்ற நிலை கிடைத்ததும், இந்த உயர் இடம் என்றென்றைக்கும் இருக்கும், நம்மை மிஞ்சுவார் இல்லை, என்று எண்ணி இறுமாப்பு அடையாதீர். தலைக்கு மேல் ஆபத்து இருக்கிறது. அதைத் தெரிந்து, இந்தப் பதவி நிலையில்லாதது, இந்தச் செல்வாக்கு சரிந்து போகக் கூடியது என்பதை உணர்ந்து, பக்குவமாக பண்போடு நடந்துகொள்வதுதான் அறிவுடைமை - என்று மன்னன், இலைமறைகாய் முறையில் எடுத்துக் கூறுகிறான்.

நுழைந்தபோது இருந்த முடுக்கு, வெகுவாகக் குறைந்து தானே போகும், மறுக்கமுடியாத உண்மையினை மன்னன் எடுத்துச் சொன்ன பிறகு.

மன்னன் மகள் அங்கு வருகிறாள்.

மன்னன் வந்தபோது மரியாதை காட்டுவது வலிவற்ற தன்மையைக் காட்டுவதாகும் என்று எண்ணி, எழுந்து நிற்காதிருந்த அமைச்சர், மன்னன் தன் மகளை அறிமுகப்படுத்தியபோது, முகமலர்ச்சியுடன், எழுந்திருந்து, கனிவுடன் கை குலுக்குகிறான் அரசகுமாரியுடன். அரசகுமாரி, அவன் ஆடையைக்கூட, சரியில்லை என்று சுட்டிக் காட்டிக் கேலி செய்கிறாள். ஒரு விநாடி, அமைச்சருக்கு, "சூடு' பிறக்கிறது. இது உழைப்பாளியின் உடை அரசகுமாரி! உத்தமரின் உடை! இதை அணிந்துகொள்வதிலே நான் பெருமை கொள்கிறேன்! - என்று முழக்கம் எழுப்புகிறான். அரசகுமாரி வாதாடவில்லை.

அதெல்லாம் சரி, அப்படித்தான் சொல்லக் கேட்டிருக் கிறேன். ஆனால், உமக்கு உடை ஒத்துவரவில்லை. உம்மைப் பார்த்த உடனே,

எவரும் சொல்லிவிடுவார்களே, ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர் இவர் என்று. உமக்கு ஏன், உழைப்பாளி உடை?

அரசகுமாரி, இவ்விதம் பேசக் கேட்டு அமைச்சருக்குக் கோபம் வரவில்லை.

ஒருவிதத்தில் தாங்கள் சொல்வது சரிதான். என்று குழைந்து பேசத்தான் முடிகிறது.

மன்னன், மகளை அழைத்துக்கொண்டு செல்கிறான், மற்றோர் சமயம் பேசலாம் என்று அமைச்சரிடம் கூறிவிட்டு.

அமைச்சர், சென்று வருக! என்று மரியாதையாகக் கூறுகிறார்.

அவர்கள் சென்ற பிறகு, அலுவலரிடம், அமைச்சர்.

”என்னதான் சொல்லு, மன்னன், மதியிலி

அல்ல'' என்று கூறுகிறான்.

மிரட்ட வந்தான் மன்னனை; மன்னன், அந்த அமைச்சரை மயக்கிவிட்டான்.

ஆணவமாக நடந்து அரசனை அவமதிக்கவேண்டும் என்று திட்டமிட்டு நடந்து கொண்டான் அமைச்சன்; இரண்டொரு உண்மைகளைக் கூறியும், உச்சி குளிரும்படி சில புகழுரை பேசியும், தாக்க வந்த அமைச்சனைத் தழதழத்த குரலிற் பேசுவோனாக்கிவிட்டான், மன்னன்.

மன்னன் மதிமிக்கவன்; மன்னராட்சியுடன் இணைந்த மக்களாட்சியில் இடம் பெற்ற அமைச்சனோ, மண்டைக் கனத்தை மட்டுமே நம்பிக் கிடந்தான். பிறகு? என்று கேட்கிறாய் தம்பி!

எனக்கு இந்த "ராஜா'' வேலை வேண்டாம்; விலகிவிடப் போகிறேன் - என்று

மன்னன் கூறுகிறான். இந்த அமைச்சர் மட்டுமல்ல, முதலமைச்சர் உட்பட அமைச்சர் அவையே கூடி, மன்னனை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறது, மன்னா! மன்னனாகவே வீற்றிருக்கவேண்டுகிறோம்!! - என்று.

மன்னன் என்ன செய்தான் மேலால் என்று அறிய வேண்டுகிறாய். ஆகட்டும் தம்பி!

அன்புள்ள,

அண்ணாதுரை,

20-11-1960

27. எல்லோரும் இந்நாட்டு மன்னர் (5)

தம்பி!

நினைவிலிருக்கிறதல்லவா, குடிஅரசுக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்ட மன்னன் - முடிஅரசு முறையின் மூலத்தைக் கிள்ளி எறியத் தேவையில்லை. அதனை ஓர் சின்னமாக, அணியாக வைத்துக் கொண்டு, மக்களாட்சியை நடாத்திச் செல்ல இயலும் என்ற நம்பிக்கையுடன் நாடாளும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அமைச்சர்கள், அவர்களில் ஒருவனை, மன்னன் தித்திப்புப் பேச்சுமூலமே, தீர்த்துக் கட்டிவிட முனைந்த கட்டம்! எதிர்த்துப் பேசச்சென்று, இளித்துவிட்டுத் திரும்பிய அவன் போக்கு - இதனைக் கண்டோம்.

மன்னன் முடிதரித்த - சிரம் கொண்டோன் மட்டுமல்ல; மனதிலே திடம், பேச்சிலே திறம், நடவடிக்கையிலே உறுதி, இவையெல்லாம் கொண்டவன். எனின், அவன் ஏன், மன்னனாக இரேன் என்று கூறினான் என்றன்றோ கேட்கிறாய்! அது, அவன் கையாண்ட முறை! மன்னனைப் பொம்மையாக்கி வைத்துக் கொண்ட பிறகும், மனக்கொதிப்புத் தீராமல், அடியோடு ஒழித்துக் கட்டிவிட்டு, பீடத்தை வெற்றிடமாக்கி விட்டால் மட்டுமே, எல்லோரும் இந்நாட்டு மன்னராகத் திகழ முடியும் என்று எண்ணிக் கனல்கக்கும் கண்ணினராய், தீச்சொல் உமிழும் வாயினராய், கொலுவிருக்கும் அமைச்சர்களுக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று எண்ணினான், மன்னன், அதற்காகவே, மன்னன், நான் அரசபீடத்தில் அமர்ந்திருக்க விரும்பவில்லை - விலகிக்

கொள்கிறேன் - என்றுரைத்தான்.

இவன் மதிமிகு மன்னன்! இவனுக்கெனத் துறையில்லை, அலுவல் இல்லை, அதிகாரம் இல்லை! முத்திரை மோதிரம் இருக்கிறது. நமது விருப்பத்தைச் சட்டமாக்கி அதிலே தன் பெயரை, ஆணையினைப் பொறித்திட! இவ்வளவே அவன் பணி! எனினும் இவன், இதுபோதும் என்று எண்ணுபவனாக இல்லை. கலைமான்களையும், கலாபங்களையும், கிள்ளை மொழியையும் கிண்கிணி ஒலியையும், வண்ணத் தாமரையினையும், வட்டில் மோகினிகளையும், கண்டும் கொண்டும், காலமெல்லாம் களிநடம் புரியட்டும் - பணம் பாழாகும் ஓரளவு - எனினும், மக்களை ஆட்டிப்படைத்திடும் வாய்ப்பினை அதிகார மூலம் பெற விழைவு கொள்ளாதிருந்தால் போதும், என்று எண்ணினர் - அங்ஙனம் எண்ணியே,

அரண்மனையில் அரசோச்ச அனுமதித்தனர். இம்மன்னனோ, அரண்மனையோடு தன் அரசோச்சுதல் இருந்து விடுவதில் மனநிறைவு கொண்டா னில்லை. அரசாளவேண்டும், அரசன் என்ற நிலை உண்மை என்றால். இல்லையேல், அரசாள அரசன் என்ற நிலையையே வேண்டாமென்று விட்டொழித்து விடுதல் வேண்டும் - என்று எண்ணினான். அவனைத்தான் பெர்னாட்ஷா, படம் பிடித்துக் காட்டுகிறார், தமது நாடகப் பெருநூலில். புயலார் என்று கூறத்தக்க போக்குடைய, புதிய அமைச்சரை, மன்னன், புன்னகை பூத்த முகத்தினனாக மட்டுமல்ல, அசட்டுச் சிரிப்புக்காரனாகவே, நொடியில் மாற்றி அனுப்பிய காட்சியினைக் கண்டாய். இனி அமைச்சர் அவை காணலாம்.

முதலமைச்சர், ப்ரோடியஸ் எனும் பெயருடையார், காட்சி மூலம், அவர் போக்கு

விளங்கிடும் - அதற்கேற்பப், பொருத்தமான, வசதியான பெயரைத் தேடிச் சூட்டிவிடு, தம்பி! அவருடைய தலைமையிலே அவை கூடுகிறது.

முடி தரித்த மன்னன் பிடியிலே சிக்கிக் கிடந்தது நாடு! அவன் இட்டது சட்டம்! என்ற நிலை இருந்தது. மக்கள், வாயில்லாப் பூச்சிகளாக்கப்பட்டுக் கிடந்தனர். நம் போன்றாரின் உள்ளத்திலே ஓராயிரம் உன்னதமான எண்ணம் எழும் - பயனென்ன? - யாவும் மக்கி மண்ணாகிப் போகும் - அவைதமை மதித்திடான் மன்னன்! கலை அறியான் - எனினும், அவனே கலைக்கூடக் காவலன்! பொருள் ஈட்டும் வழி அறியான் - எனினும் பிறர் திரட்டியதைக் கொண்டு வந்து கொட்டச் சொல்வான், பெருநிதிக்கு உடையோன் ஆவான்! வாளேந்தான் - எனினும், அவனே படைகளுக்கெல்லாம் தலைவன் எனும் விருதுடையோன் என்பர்!

இந்நிலையில் இருந்த முடி அரசு முறையினை எதிர்த்துப் போரிட்டுப் போரிட்டுக், குடிஅரசுக் கோட்பாட்டினை மெள்ள மெள்ள வெற்றிபெறச் செய்து, கொற்றவன் கொலுவிருக்கட்டும், ஆனால் அரசு நடாத்த, ஆற்றலுள்ளோர் அமைச்சர்களாகட்டும் - அந்த ஆற்றலை அளந்திடும் கோலாக, மக்கள் அளித்திடும் ஆதரவு அமையட்டும் - அந்த ஆதரவு பெறும் முறையாக, தேர்தல் முறை ஏற்படட்டும் என்றெல்லாம், திட்டம் தீட்டி, நடைமுறையாக்கி, மன்னனை இன்று, அரண்மனைவாழ் அலங்காரன் என்ற அளவுக்குக் கொண்டு வந்து நிறுத்திவிட்டோம்; உண்மையில் அரசாள்வது நாம் - என்று எண்ணி எண்ணி மகிழ்ந்து கிடப்போர், அமைச்சர்கள். முதலமைச்சரோ, அத்தகைய மகிழ்ச்சியால் மயக்கமுற்று உண்மை நிலைமையை அடியோடு மறந்துவிட்டவரல்ல

- மன்னன், எப்படிப்பட்டவன் என்பதை உணர்ந்திருக்கிறார்.

சென்ற தேர்தலிலே, நாம் மற்ற எல்லாக் கட்சிகளையும் அழித்தொழித்து, இந்த மூன்றாண்டுகளாக அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறோம். ஆனால், இந்த மூன்று ஆண்டுகளும், உள்ளபடி, நாட்டை ஆள்வது, இந்த மன்னன்தான் என்பதை உணர்கிறீர்களா. . .? - என்று கேட்கிறார், முதலமைச்சர்!

•

முடி அரசு, நிலை குலையாமல் இருந்த நாட்களில், அரசன், சிலரை அமைச்சர் ஆக்குவான் ஆற்றல் அறிந்தேதான் என்பதல்ல - எவ்வகையாலோ, மன்னன் மனதில் இடம் பெற்றவனானால் போதும்! மன்னன் மகிழ மலர் கொடுத்திருக்கலாம் - காட்டு

மல்லிகையோ, வீட்டு ரோஜாவோ, ஏதோ ஒரு மென் மலர்!!

அமைச்சர்கள் இருப்பர் - அரசாள அல்ல - அரசன் ஆட்சி நடத்துவான், இவர்கள் எடுபிடிகளாவர், இளித்துக் கிடப்பர்.

முடி அரசு முறையின் கேடு முறிக்கப்பட்டான பிறகு மன்னன் இருப்பான் - ஆனால், அரசாள்வோனாக அல்ல - முடி தரித்துக் கொலுவிருக்க! அமைச்சர்கள் இருப்பர் - முடி இராது சிரத்தில் - ஆட்சியின் பிடியோ, அவர்தம் கரம் இருக்கும்.

ஷா, குடிஅரசுக் காலத்துக் கொற்றவனைத்தான் காட்டுகிறார். எனினும், அவன் எங்ஙனமோ, மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அமைச்சர்களின் தலைவன், அச்சத்துடன் ஆயாசத்துடன் உணரத்தக்க விதத்தில், வெறும் சின்னமாக இருந்து

விடாமல், ஆட்சியை நடத்துபவனாக இருந்து வருகிறான். இதனைத்தான், முதலமைச்சர், மற்ற அமைச்சர் களுக்குக் கூறுகிறார். கூறுகிறார் என்று சொல்வதற்கில்லை - இந்த நிலையை உணர்ந்திருக்கிறீர்களா என்று கேட்கிறார்!

ஒரு அமைச்சர், இந்த அளவு உணர்வு பெறாததால், எனக்கு அப்படிப் புலப்படவில்லை. . .

என்று கூறிடத் தொடங்கும்போதே, முதலமைச்சருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

இதை உணர்ந்து கொள்ள உம்மால் முடியாவிட்டால், விலகி விடுமய்யா! நிலைமையை உணர்ந்துகொள்ளக் கூடியவர் களுக்கு இடம் கொடும்! இல்லையானால், என் வேலையை ஏற்றுக் கொண்டு கட்சியை நடத்திச் செல்லும் என்று பேசுகிறார்.

அமைச்சராயிற்றே! வேறு பல அமைச்சர்கள் முன்னிலையில், முதலமைச்சர் பேசிவிட்டார் என்பதால், கோபம் எழுமல்லவா. எனவே, அந்த அமைச்சர், சற்று முடுக்காக - ஆனால், ஆழ்ந்த அறிவின் துணையுடன் அல்ல - பேசுகிறார்:

முதலமைச்சர் ஐயா நீர்! முழுமுதற் கடவுள் அல்ல! மன்னன் என்ன செய்ய இயலும் என்கிறீர்? நாம் எதை எப்படிச் செய் என்று புத்திமதி கூறுகிறோமோ, அதைத்தான் செய்ய முடியும். அதிகாரம் அனைத்தும் நம்மிடம் இருக்கும்போது, அந்த மன்னன் எப்படி நாடாள இயலும்? சொல்கிறீரே!!

•

தம்பி! இந்த அமைச்சர் கேட்பதுபோலத்தான், பெரும் பாலானவர்களுக்குக் கேட்கத் தோன்றும்.

ஏனெனில், ஒப்புக் கொள்ளப்பட்ட ஏற்பாட்டின்படி, அமைச்சர்களிடமே எல்லா அதிகாரங்களும் - மன்னன் தானாக ஏதும் செய்ய இயலாது எனினும், இந்த மன்னன், ஒரு முதலமைச்சர் அச்சம் கொள்ளத் தக்க முறையில் அமுல் நடத்துகிறான்! எப்படி?

மன்னனும் அமைச்சர்களும் பேசிடும் கட்டத்தின்போது இது விளக்கப்பட்டிருக்கிறது - நாடக நூலில். தம்பி! நான் குறிப்புகள் மட்டுமே தருகிறேன்.

குடிஅரசுக் கோட்பாடும், கேடு களையப்பட்ட முடி அரசு முறையும் இணைந்ததோர் அமைப்பினைக் குடிக்கோனாட்சி முறை என்று கூறுவர்.

குடிக்கோனாட்சி முறையிலே, அமைச்சர்களே அனைத்துக்கும் பொறுப்பாளர்; மக்களே, ஆட்சி மன்றத்

தினரைத் தேர்ந்தேடுப்பர்.

அமைச்சர்கள் ஆட்சிமன்ற மூலம் சட்டங்கள் இயற்றுவர், திட்டங்கள் தீட்டுவர் - நாடு அவைதமை ஏற்கும்.

இந்த முழு உரிமை அமைச்சர்களுக்கு - எனினும், ஏதேனும் ஓர் சட்டமோ திட்டமோ செயலோ முறையோ, மக்களுக்கு ஊறு விளைவிக்கும் என்று ஏற்படின், மன்னன், அதனைத் தன் மறுப்பு மூலம் தடுத்து நிறுத்தலாம்.

நாட்டை நடத்திச் செல்ல அமைச்சர்கள் - அவர்கள் நடத்திச் செல்வதிலே, மன்னன் குறுக்கிடவோ, அலுவலிலே பங்கு பெறவோ கூடாது - ஆயினும், நடத்திச் செல்லப்படுவதை, மக்கள் சார்பில், நாட்டின் சார்பிலே, கூர்ந்து கவனித்த வண்ணம் இருந்து, பேராபத்துக்கு நாட்டை இழுத்துச் செல்லும் நிலை

ஏற்பட்டுவிடும் என்று தோன்றினால், தடுத்து நிறுத்திட மன்னனுக்கு அதிகாரம் உண்டு.

மன்னர்கள் இந்தத் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில்லை - அநேகமாக.

தேவைப்படுவதில்லை, ஆகவேதான், பயன்படுத்து வதில்லை என்று கூறுவார் உளர்.

தெரிவதில்லை, ஆகவே பயன்படுத்துவதில்லை என்றுரைப் பாரும் உளர். பயன்படுத்தத் தொடங்கினால், பிறகு இந்த அதிகாரமும் பறிக்கப்பட்டுப் போய்விடும் என்று அச்சம் - எனவே எந்த மன்னனும், தன்னுடையது என்று குறிக்கப்பட்ட, தடுத்து நிறுத்தும் உரிமையைப் பயன்படுத்துவதில்லை என்றும், கூறுவர் வேறு சிலர்.

•

தம்பி! இந்த மன்னன், இந்த ”அதிகாரத்தை’ப் பயன்படுத்தி, அமைச்சர்களின் உரிமையைப் பாழாக்கினானில்லை,

இவன் செய்ததெல்லாம், சான்றோர் கூடிடும் இடங்களில், அல்லது மக்கள் மன்றங்களில் பேசும் வாய்ப்புப் பெறும்போது, மன்னனுக்கு உள்ள இந்த அதிகாரத்தைப் பற்றி விளக்கம் தந்து வருவது வாடிக்கை.

மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற நோக்குடன் குடிஅரசு முறை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையின்படி, நாடாளும் பொறுப்பினை ஏற்றுள்ளோர் அமைச்சர்கள். அவர்கள் வழிதவறி நடப்பின், அல்லது முறைகேடான செயலில் ஈடுபடின், தீதுதரும் சட்ட திட்டத்தைப் புகுத்திடின், தடுத்து

நிறுத்த, மன்னருக்கு அதிகாரம் உண்டு. எனவே, அமைச்சர்களின் ஆட்சியிலே என்ன கெடுதல் ஏற்பட்டுவிடுமோ என்று மக்கள் கலக்கமடையத் தேவையில்லை - மன்னன் இருக்கிறார், தடுத்து நிறுத்திடும் வல்லவராக!

இம்முறையில் பேசிக்கொண்டிருந்தார் இந்த மன்னர்.

இந்தக் கருத்துப்படி இதழ்கள் எழுதிய வண்ணம் இருந்தன - அந்த இதழ்களில் மன்னனுக்குத் தொடர்பு உண்டு!!

அமைச்சர் அவையின் மதிப்பு, இதன் காரணமாகக் குறையும் அல்லவா?

இவர்களைக் கண்காணிக்க ஒரு மேலோன் இருக்கிறான்.

இவர்கள் ஏதேனும், தெரிந்தோ, தெரியாமலோ, தவறுகள் செய்துவிடக்கூடும் என்பதால், அந்த மேலோனிடம், இறுதி

அதிகாரத்தை - தடுத்திடும் உரிமையை - ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஆகவே, அந்த மேலோன்தான், உண்மையில், மக்களின் பாதுகாவலன்!

தம்பி! இந்தக் கருத்துக்களைத்தான், காவலன், பேச்சுக் கிளப்பியபடி இருந்தது.

அமைச்சர்கள், தவறு செய்யக் கூடியவர்கள் - தவறு செய்கிறோம் என்று தெரியாமலேகூட தவறுகளைச் செய்து விடக்கூடியவர்கள் - எனவேதான், ஒரு மேலோன், இருக்கிறான், தடுத்து நிறுத்த! அந்த மேலோன், எது நாட்டுக்கு, மக்களுக்கு, தீது பயக்கும், நன்மை பயக்கும், என்பதை அறிந்திடும் ஆற்றல் படைத்தவன் - தடுத்து நிறுத்திடும் தகுதி படைத்தவன்.

குடிஅரசு முறையையும் நடத்திக்கொண்டு, இந்தக் கோட்பாட்டையும் ஏற்றுக்கொண்டு

இருப்பது, முரண்பாடாக மட்டுமல்ல, சிறிதளவு தரக்குறைவாகவேகூடத் தோன்றும்.

மமதை, மந்தமதி, அக்கரையற்றப் போக்கு, இவைகள் காரணமாக, தன்னிச்சையாக நடக்கும் மன்னன், நாடு கேடுறக் கூடிய காரியமாற்றுவான் - எனவே கட்டுப்படுத்த வேண்டும், மட்டுப்படுத்த வேண்டும் - என்று ஆர்த்தெழுந்து பலர் பேசிப் பேசி, கிளர்ச்சி பல நடாத்திக், கொடுமைகளை ஏற்றுக் கொண்டு, இறுதியில் பெற்றது, எல்லோரும் இந்நாட்டு மன்னர் - எனும் குடிஅரசுக் கோட்பாடு!

எனினும் அமைச்சர்களையும், கண்காணித்துவர, தவறாகச் சென்றால், தடுத்து நிறுத்திட ஒரு மேலோன் உண்டு! - அந்த மேலோனாக ஒரு மன்னன் இருந்துவருவான் என்பது, முடி அரசுக் காலத்திலே தரப்பட்டிருந்ததைவிட, வலிவான அதிகாரம் என்று, முதலமைச்சர் கருதினார்.

எனவே, மன்னன், இனி அந்த "உரிமை'யைப் பற்றி, எங்கும் பேசக் கூடாது, என்று உறுதிமொழி தந்தாக வேண்டும் - என்பது முதலமைச்சரின் திட்டம். அந்தத் திட்டத்துக்கு மன்னன் ஒப்பம் அளித்தாக வேண்டும் என்று வலியுறுத்தவே, அமைச்சர் அவை கூடிற்று, அரண்மனையில் ஓர் பகுதியில்.

•

அமைச்சர் அவையில் என்னென்ன போக்கினர், நோக்கினர், உளர், என்பதை பெர்னாட்ஷா எடுத்துக் காட்டு வதைப் படிக்கும்போது, நகைச்சுவைக்காக இருக்குமோ, என்று எண்ணத் தோன்றும். ஆனால் அதுதான் உண்மையான நிலைமை, எந்த அமைச்சர் அவையிலும் என்பது, தம்பி! எண்ணிப் பார்த்திடும் எவருக்கும் புரியும்.

ஐவர் கொண்ட அமைச்சர் அவை! இதில் இடம் பெற்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயல்பினர்! அம்மட்டோ! ஒருவரைக் குறித்து ஒருவர் கொண்டுள்ள கருத்துக்களோ, வேடிக்கை வேடிக்கையானவை! தமக்கன்றி மற்றவர்களுக்குத் தகுதியும் திறமையும், இல்லை, அமைச்சராக இருக்க - என்பது ஒவ்வொருவருக்கும் உள்ள எண்ணம்.

உற்றார் உறவினருக்கு, வரம்பு மீறிப் பதவிகள் கொடுப்பவர் என்று ஒருவரைப் பற்றி மற்றவர், புகார் கூறிக் கொள்வர்.

நம்மால் மட்டுமே இந்த அமைச்சர் அவை செயல்படுகிறது. அமைச்சர் அவை ஏற்படத்தக்க விதமான வளர்ச்சி கட்சிக்கு ஏற்பட்டது, என்று ஒவ்வொரு அமைச்சருக்கும், உள்ளூர எண்ணம்.

முதல் அமைச்சருக்கோ, அமைச்சர்கள்

அனைவருமே, இடம் பிடித்துக் கொண்டவர்கள், என்ற எண்ணம்!!

இதனை விளக்கிடும் பான்மையிலே, அமைச்சர்களின் பேச்சினை அழகுற, அமைத்தளிக்கிறார், ஷா. கருத்து வேற்றுமைகளை எடுத்துக் கூறிக் கொள்வதிலே, கட்டுக்கு அடங்கும் தன்மையும் கைவிடப்பட்டு விடுவதுண்டு, முதலமைச்சர், மன்னனை எண்ணிக் கொள்கிறார்.

•

தம்பி! நாடகத்திற்கு ஷா சூட்டியுள்ள பெயர் ஆப்பிள் கார்ட் (Apple Cart) என்பது; தமிழில் இதற்கொப்பான பெயரிட வேண்டுமெனின், நெல்லிக்காய் மூட்டை எனலாம்.

மூட்டைக்குள் இருப்பதால், உருண்டோடி விடவில்லை; அவிழ்த்துவிட்டால், திக்காலொன்றாக உருண்டோடிவிடும்!

தீர்த்துக்கட்டிவிட வேண்டும் முடி அரசு முறையை! சின்னமும் கூடாது! முழுக்க முழுக்கக் குடிஅரசு மலர வேண்டும்! - என்று முழக்கமிட்டு அமைச்சரான புயலார் - ஒருவர்! இன்னொருவர், பெரிய முதல் போட்டு நடத்தப்படும் தொழிற் சாலை முதலாளியின் கையாள்! இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சீர்கேடு!

இந்தச் சீர்கேடுகளை அறிந்து, தக்கபடி பயன்படுத்திக் கொண்டு, தன் தலைமையைக் காப்பாற்றிக்கொண்டுள்ள முதலமைச்சர்.

மன்னன் இதனை நன்கு அறிவானே - இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்வானே என்ற கவலை, முதலமைச்சருக்கு.

மன்னர்களுக்கு மதி ஏது! என்று எண்ணுபவர் - அதிகாரம் ஏது! என்று

நினைப்பவர் - ஏது செய்ய இயலும்!! என்று பேசுபவர் - எதற்காக இப்படி ஒரு பதுமை என்று ஏளனம் பேசுபவர் - இப்படித்தான் அமைச்சர்கள் உளர்!

முதலமைச்சரோ, இந்த மன்னன் மதிமிக்கவன், வாய்ப்பினை நழுவவிடாது காரியம் செய்பவன் என்று உணர்ந்திருக்கிறார்.

மனதிலே திடமும் தெளிவும் கொண்டவன் மன்னன். தெளிவற்ற பத்துப் பேர்களைக்கூட, தெளிவும் திடமும் கொண்ட ஒருவன் வீழ்த்திட முடியும். மன்னன் அப்படிப் பட்டவன். நீங்கள் ஒருவருக்கொருவர் மாறுபாடுகளைக் குறித்துக் கூச்சலெழுப்பிப் பிளவுபட்டு நிற்பீரேல், மன்னன் பாடுதான் கொண்டாட்டம் என்பதனை முதலமைச்சர் எடுத்துக் காட்டுகிறார்.

தபால்துறை, எதனையும் இயக்குவிக்கும் வலிவுத் துறை, எனும் இரண்டினையும், மாதர்களிடம் ஒப்படைத்திருக்கிறார், பெர்னாட்ஷா, நாடகத்தில்!!

இந்த இருவரும், அமைச்சர் அவை கூடிடும்போது, உடனிருந்திருக்க வேண்டும் - எனினும் ஷா தீட்டிய நாடகத்தில், இந்த இரு பெருமாட்டிகளும் அமைச்சர் அவைக்கு மன்னர் வரும்போதுதான், அவருடன் வருவதாகக் காட்டியிருக்கிறார்!

அமைச்சர் அவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூடத்துக்கு, மன்னன், இந்த இரு மாதர்களும் இருபுறம் இருக்கும் நிலையிலேதான், வந்து நுழைகிறார்.

மன்னன், பேச்சாற்றல் மிக்கவன் என்பதை, தம்பி! முன்பே கண்டிருக்கிறாய் - ஆனால் அவனுடைய முழு ஆற்றல் இங்குதான் காண

வேண்டும்.

என்னை வந்து காணும் உரிமையை, அமைச்சர் குழுவினரே! ஒரு சேர நீவிர் இன்று பயன்படுத்தி, எனக்குக் களிப்பூட்டிடும், காரணம் யாதோ! நாம் அதைக் கேட்டு இன்புறலாமோ!

என்று பேச்சைத் துவக்குகிறார் மன்னர்.

முதலமைச்சர், சுற்றி வளைத்துப் பேசாமல், அமைச்சர் அவையின் முடிவை எடுத்துக் கூறுகிறார்.

அதைத் தொடர்ந்து, சுவைமிக்க உரையாடல்கள் நடை பெறுகின்றன.

எமது ஆட்சியிலே, மக்கள், வாழ்வில் வளம் பெற்று மகிழ் கிறார்கள் என்றனர் அமைச்சர்கள்.

வாழ்வில் வளமா? யாருக்கு? மக்களுக்கா!

இல்லையே! தொழில் அதிபர்கள் அல்லவா கொழுக்கிறார்கள்! என்றெல்லாம் சுட்டிக்காட்டி கேலி செய்கிறார் மன்னர்.

கடைசியில், இனி கட்டுக்கு அடங்கி நடந்து கொள்வதாக, இறுதி உறுதிமொழிச் சீட்டிலே மன்னன் கையொப்பமிட வேண்டும் - அதனைப் பெறாமல் அமைச்சர் அவை கலையப் போவதில்லை என்று முதலமைச்சர் அறிவிக்கிறார். அரசன், உறுதிமொழிகள் யாவை என உசாவுகிறான்.

மன்னர் இனி, சொற்பொழிவாற்றக் கூடாது!

அப்படியா! அமைச்சர் அவை தயாரித்துக் கொடுக்கும் சொற்பொழிவுகளைக் கூடவா நான் படித்துக் காட்டக் கூடாது?

ஆமாம். . . ஆமாம். . . அதை வைத்துக் கொண்டே, படிக்கும் முறையிலேயே,

கேலியும் கண்டனமும் எழச் செய்துவிடக்கூடிய திறமைசாலி, நீர் - தெரியும்!

வாயைத் திறக்கவே கூடாதா? ஊமையாக இருக்க வேண்டும், உங்கள் மன்னர்! அப்படித்தானே!

ஒருவிதத்திலே, அப்படித்தான். அரசியல் பேச்சுகளைப் பொறுத்தவரையிலே, மன்னர் ஊமையாகத்தான் இருக்க வேண்டும். ஏதாவது திறப்பு விழாக்களிலே வேண்டுமானால், இதைத் திறந்து வைக்கிறேன் என்று கூறலாம்.

சரி! மற்றும், நான் செய்யவேண்டியது?

பத்திரிகைகளில் கட்டுரைகள், செய்திகள், எழுதக்கூடாது.

நானா எழுதுகிறேன், இல்லையே. . .

உங்கள் தூண்டுதலால், எழுதப்பட்டு

வருவது தெரியும்.

நீங்கள் கூடத்தான் எழுதுகிறீர்கள்.

நாங்கள் எழுதுவோம்! நீர் எழுதக்கூடாது!

என்ன நியாயமோ!! சரி! ஆகட்டும்! பிறகு?

தடுத்து நிறுத்தும் உரிமை, அதிகாரம் இருந்து வருகிறதே, அதை அடியோடு விட்டுவிட வேண்டும்.

அந்த அதிகாரத்தை நான் பயன்படுத்தவே இல்லையே, இது வரையில்.

அதைப்பற்றி பேசுகிறீர். . .

ஆமாம்! மக்களாட்சியிலே அமைச்சர்களுக்கு உள்ள அதிகாரம், உரிமைபற்றி, நீங்கள் பேசுகிறீர்கள். அதுபோல், மன்னனுக்கு உள்ள அதிகாரத்தைப்பற்றி நான் பேசினால் என்ன?

நாங்கள் பேசுவோம், நீர் பேசக் கூடாது.

இந்த உறுதிமொழியில் நான் கையொப்பமிடுவது, மிகக் கடினம். ஏனெனில், கையொப்பமிட்டுவிட்டால், அதன்படி நடக்க வேண்டும். என்னால், ஏதும் செய்யாமல், பொம்மையாக இருந்துவர இயலாதே.

மீறக்கூடாது. உறுதிமொழியில் கையொப்பம் இடத்தான் வேண்டும்.

மறுத்தால்?

மறுத்தால்! அமைச்சர் அவை, ”ராஜிநாமா’ச் செய்யும், பொதுத் தேர்தல்! என் கட்சி மக்களிடம் சென்று, கட்டுக் கடங்கிய காவலன் வேண்டுமா, கண்மூடித் தர்பார் வேண்டுமா என்ற பிரச்சினையை வைத்துப், போட்டியிடும், வெற்றி எமது கட்சிக்கே!!

•

தம்பி! மக்களை, இந்தப் பிரச்சினை மூலம், கட்சி தன் வயப்படுத்திக் கொள்ளும் என்பதை

உணர முடியாதவன் அல்ல, மன்னன்.

எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்க்கிறான், இந்த ஏற்பாடு வேண்டாம் - என் இயல்புக்கு ஏற்றதல்ல - என்றெல்லாம்.

முதலமைச்சருக்கு இந்தப் பிரச்சினையிலே, மன்னன் பிடிவாதம் காட்டுவது, தன் கட்சிக்குப் பெருத்த இலாபமே பெற்றுத் தரும் என்பது நன்றாகத் தெரியும். எனவே, உறுதியுடன் பேசுகிறார்.

பொதுத் தேர்தலை, இவ்வளவு விரைவிலே வைத்துக் கொண்டால், பொருட்செலவு! மறுபடியும்!! இந்தக் கவலை சில அமைச்சர்களுக்கு - குறிப்பாக, புதிதாக அமைச்சரானவருக்கு.

பல கட்டங்கள், உள்ளன, இந்தக் காட்சியில்.

அமைச்சர்கள் ஒருவரை ஒருவர்

தூற்றிக் கொள்வது முதற் கொண்டு, "தொடர்புகள்' பற்றிய புகார்கள் வரையிலே! ஒவ்வொன்றும் படித்திட இனித்திடும், என்பது மட்டுமல்ல - வரிக்கு வரி குடிஅரசு, தக்கபடி நடைமுறைக்குக் கொண்டு வரப் படாவிட்டால், வெறும் கேலிக் கூத்தாக்கப்பட்டுப் போய் விடும் என்பது போன்ற அரசியல் விளக்கங்களைப் பெறலாம். பிறிதோர் சமயம், விரிவாகக் கூறிடக் கூட எண்ணுகிறேன் - இப்போது நாம், விரைவாக இறுதிக் கட்டம் கண்டாக வேண்டும்.

•

முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

ஆம்! உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டே தீர வேண்டும்.

வேண்டாம் முதலமைச்சரே! மன்னன்,

என்றோர் சின்னம் இருப்பது நாட்டுக்கும் நல்லது!

உங்களுக்கும் நல்லது! உபதேசம் வேண்டியதில்லை! உமது கையொப்பம், உடனே - தயங்காமல். .

. என்னால் முடியாது அமைச்சரே!

முடியாது என்றால், பொதுத் தேர்தல்! மன்னரின் முறை கேடு பற்றி மக்களிடம் சொல்லுவோம் - ஆதரவு திரட்டுவோம்...

என் இயல்பு, இதற்கு இடம் கொடுக்காது. உங்களுக்கோ ஒரு ஊமை மன்னன் வேண்டும்!

குடிஅரசு முறையால் அமைச்சரான உமக்கு, சிறு துளி அதிகாரம் கொண்ட அரசனையும் சகித்துக் கொள்ள விருப்பம் இல்லை. குடிஅரசுக்கும் கட்டுப்பட்ட காவலன் வேண்டும், உமக்கு.

அதுதான்! சரியாகச் சொன்னீர். குடிஅரசுக்குக் கட்டுப் பட்டு நடக்கும் காவலன் வேண்டும்.

என்னால் அப்படி இருக்க முடியாதே!

எங்கள் முடிவு அது!

உங்கள் முடிவு நியாயமானது.

அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மகிழ்ச்சி! சரியான முடிவுக்கு வந்துள்ளீர்! இடும் கையொப்பம்!

உறுதி மொழியிலா! அது என்னால் முடியாதே! கட்டுப் பட்டுக் கிடக்க இயலாது!

கட்டுக்கு அடங்கும் மன்னன் தேவை என்ற எங்கள் முடிவு நியாயமானது என்று ஒப்பம் அளித்தீர்!

ஆமாம்! அதை மறுக்கவில்லையே! ஆனால் அப்படி, நான் இருக்க முடியாது

என்கிறேன்.

அப்படியானால். . .?

சிக்கலான நிலைமை! நான் மன்னனாக இருப்பதானால், நீங்கள் சொல்கிறபடி கட்டுண்டு கிடக்க முடியாது. எனவே நான் ஓர் முடிவுக்கு வந்துவிட்டேன்.

உறுதிமொழியில் கையொப்பமிடச் சம்மதம். . . அப்படித் தானே. . .

இல்லை! உறுதிமொழியில் கையொப்பமிடக் கூடிய, மன்னனைத் தருகிறேன். . . என் மகன். . . உங்களின் இன்றைய இளவரசன்!

அப்படியானால், தாங்கள்?

நான் அரசப் பதவியைத் துறந்து விடுகிறேன். என் மகன், மன்னனாவான். உம் விருப்பப்படி, உறுதிமொழி தருவான். . .

காவலா! உம்மை இழக்கத்தான் வேண்டுமா?

வேறுவழி? சிக்கல் தீர நான் விலகுவதுதான் முறை. . .

கூடிக் கலந்து பேச வந்தோம், பிரிவு உபசாரக் கூட்டமாகி விட்டதே, இன்று.

உமது அன்புக்கு என் நன்றி! கொள்கையால் நாம் பிரிகிறோம் - எனினும் உமது அறிவாற்றலை நாங்கள் மறவோம், இனிச் செல்ல வேண்டியது தானா, வெவ்வேறு வழியாக. . .

ஏன், வெவ்வேறு வழி! நானல்லவா, உங்கள் வழிக்கு வந்து விடத் தீர்மானித்துவிட்டேன். . .

மன்னர் பதவியைத் துறந்து, பிறகு, யாது செய்யவல்லீர், அரசே!

அரச பதவியில் இருக்கும்போது, செய்ய இயலாததை யெல்லாம் செய்திடலாமே. . .

என்ன கூறுகிறீர் வேந்தே!

என் பேச்சு முற்றுப் பெறவில்லை, அமைச்சரே!

நான் அரச பதவியைத் துறப்பேன் - என் மகன் உமது கட்டுக்கு அடங்கும் மன்னனாவான்! மக்களால் தேர்ந்தெடுக்கப் படும், பெருவாரிக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து, அந்தக் கட்சியினர் ஆணையின்படி நடந்து கொள்வான். நான் பதவியிலிருந்து விலகுமுன், என் அதிகாரத்தைக் கொண்டு, எனக்குள்ள அரச குடும்பத்துக்கான தனி உரிமைகள், சலுகைகள் ஆகியவற்றை நீக்கிக் கொண்டு, சாதாரணக் குடிமகனாகிவிடப் போகிறேன்.

கொற்றவன் குடி மகனாவதா?

குடிமகனாவதற்காகத்தானே, நான் கொற்றவனாக இருக்கும் நிலையையே துறக்கிறேன்.

ஏன்? எதற்கு? என்ன செய்யத் திட்டமிடுகிறீர்?

உம்மோடு உறவாடி மகிழ! உடனிருக்க! அடுத்த பொதுத் தேர்தலில், சாதாரணக் குடிமகனாக ஈடுபட!

வெற்றி நிச்சயமல்லவா மன்னருக்கு!

எதிர்த்து எவர் போட்டியிடுவர்?

வெற்றி பெறக்கூடும்! ஏன்! நான் ஒரு கட்சியைத் துவக்கி, தலைவனாகித், தேர்தலில் போட்டியிடக்கூடும். இப்போது, நான் மன்னன் என்று இருப்பதால், என்னைக் குற்றம் கூறிப் பேச உம்மால் முடியவில்லை. எனக்கும் மன்னனாக இருப்பதால், அமைச்சர்களின் அவலட்சணங்களை எடுத்துப் பேச முடிய

வில்லை. குடிமகனானால், இருவருமே, தாராளமாக, காரசாரமாகக் கண்டனக் கணைகளை ஏவிக் கொள்ளலாம்...

இதெல்லாம் எதற்கு மன்னவா?

எதற்கா! என் கட்சி, மகத்தான வெற்றி பெற! உமது உறுதிமொழியில் கையொப்பமிட்டுக் கட்டுண்டு கிடக்கும் காவலன், என் மகன், எந்தக் கட்சிக்கு அதிக இடம் கிடைக்கிறதோ, அந்தக் கட்சித் தலைவனை அழைத்துத்தானே அமைச்சர் அவை அமைக்கச் சொல்லி, அதன் ஆணைக்கு அடங்கி நடப்பான்! என் கட்சி அத்தகைய வெற்றி பெற்றால், என்னையே அழைத்து, அமைச்சர் அவை அமைக்கச் சொல்லக் கூடும்! குடிமகன் ஆகிவிட்டால், அமைச்சரே, கொற்றவனாக நான் இருக்கும்போது கிடைக்காத வாய்ப்பு, வலிவு, எனக்குக் கிடைக்கிறது!!

•

தம்பி! இந்த உரையாடல், அமைச்சர் அவையினருக்கு அதிர்ச்சியை, அச்சத்தை, வெகுவாக எப்படி ஏற்படுத்தாம லிருந்திருக்க முடியும்? ஏதேது இவன் அசகாயசூரன்! மன்னனாக இருப்பதாலாவது, இந்த அளவுக்குக் கட்டுப்படுகிறான் - இவன் குடிமகனாகி, கொற்றவனாக இருந்து அந்தப் பெரும் சிறப்பினையே துச்சமென்று துறந்த தியாகி, வீரன், மக்கள் தொண்டன் என்ற பெயரும் பெற்றுத், தேர்தலில் ஈடுபட்டால் எவரே அவனைத் தடுக்க முடியும்! ஆட்சி அவன் கரம் செல்லும்! முடி அரசு, மகன் மூலம்! குடிஅரசு தந்தை மூலம்! இதற்கு இடமளித்தால், நாம் யாரும் தலைதூக்கவே முடியாது - என்று எண்ணினர் - வியர்த்தனர் - வெடவெடத்துப் போயினர்.

முதலமைச்சர் ஒரு முடிவுக்கு வந்தார்.

மன்னா! அந்த உறுதிமொழிப் பத்திரம் எங்கே என்று கேட்டார். நான் கையொப்பம் இடவேண்டிய பத்திரம் தானே; இதோ! - என்று கூறியபடி, பத்திரத்தை, மன்னன் தந்தான். முதலமைச்சர், அதைச் சுக்கு நூறாகக் கிழித் தெரிந்தபடி, அமைச்சர் அவைக்கூட்டம் கலைகிறது! - என்று கூறிவிட்டுச் சென்றார்!!

•

தம்பி! மன்னன் என்னென்ன எண்ணிச் சிரித்திருப்பான் என்பதைக் கற்பனை செய்து பார்க்கப் பார்க்கச் சுவை சொட்டும் அல்லவா!

முடி அரசாகட்டும் குடி அரசாகட்டும், அதை நடாத்திச் செல்வோரின் திறமையைப் பொறுத்தே, அந்த முறை மூலம் பெறத்தக்க பலன், சுவை, கிடைக்கும். வெறும் முறையினால் மட்டும், போலிச் சுவைதான் கிடைக்கும்; காகிதப்பூவாகத்தான் இருக்கும்!

கவர்ச்சி இருக்கும் வண்ணத்தால்; மணம் கிடைக்காது.

கொற்றவனைக் குட்டிக் குட்டிக் குனியவைக்கக் கிளம்பினர், குடிஅரசு முறையைக் கருவியாக்கிக் கொண்டவர்; கூர்ந்த மதிபடைத்த கொற்றவனோ, நான் குடிமகனாகிக் கோலோச்சும் பேறு பெற்றிருந்தபோது இருந்ததைவிட ஏற்றத்துடன் இருந்திடுவேன், என்பதைக் குறிப்பிட்டுக் காட்டினான் - குடிமகனாக வேண்டாம்! கொற்றவனாகவே இருந்திடு!! - என்று கூறாமற் கூறிவிட்டுச் சென்றான், குடிஅரசு முறையால், தலைமை பெற்றவன்.

குடிஅரசு, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கொள்கையைத் தருகிறது.

அந்தக் கொள்கையைச் சாதகமாக்கிக்கொண்டு எவரெவர்

அந்த இடத்தைப் பெற்று, என்னென்ன செய்யக்கூடும் என்பதை எண்ணிப் பார்த்து, தெளிவு தேடிப் பெறவே, இது குறித்து, பன்னிப் பன்னிச் சொன்னேன்.

தம்பி! முன்பு கொற்றவன் என்ற நிலையிலிருந்து கொண்டு ஆதிக்கம் செலுத்த இருந்த வாய்ப்பினைவிட, இன்று குடிமகன் என்ற நிலையில் இருந்து கொண்டு, நல்லது செய்யவும், வாய்ப்பு அதிகம்; கேடு செய்திடவும் வழி கிடைத்துவிடுகிறது.

எனவே மமதை, மந்தமதி எனும் கேடுடைக் குணம் கொண்ட மன்னன் நாடாள்வது, தீது தரும் என்பதால் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற ஏற்புடைய, குடிஅரசுக் கோட்பாட்டை நிலைபெறச் செய்துவிட்டதாலேயே, ஆட்சியிலே சீரும் சிறப்பும், மக்கள் வாழ்விலே நலனும் தாமாக வந்து தழைத்திடும் என்று எண்ணிவிடுவது,

பேராபத்து. முன்பாவது ஒருவர் மன்னர்! இன்று எல்லோரும் மன்னர்கள்! எனவே, எல்லோருக்குமே, ஆட்சி நடாத்தத்தக்க அறிவாற்றல் இருக்க வேண்டும். அதேபோது ஆணவம் இருத்தல் ஆகாது - திறம் இருக்க வேண்டும், தலைக்கனம் இருத்தலாகாது!

இந்தப் பண்புகள் உள்ள சில பலரிடம், சில பல குறிப்பிட்ட காலத்துக்கு, ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டுப், பொது மக்கள், உழவு, நெசவு, தொழில், தொண்டு, கலை, கல்வி, களியாட்டம் எனும் பல்வேறு செயல்களில் ஈடுபட்டு, நல்வாழ்வு, முழுவாழ்வு, பெற வேண்டும்! அவர்கள் அத்தகைய நல்வாழ்வு பெறத்தக்க சூழ்நிலையைத் தக்கபடி ஆக்கிக் காத்து அழிந்துபடாது பார்த்துக் கொள்ளும் பெரும் பொறுப்பை ஏற்றுத், தன்னல மறுப்புடன் நடந்திடும் பேராற்றல் வளர்ந்தால்தான், எல்லோரும்

இந்நாட்டு மன்னர் என்ற சுவைமிகு கொள்கை, பயன்தரும் முறையாகி நிற்கும். . . அதற்காகப் பணியாற்ற, எங்கோ, யாரோ உளர், வருவர், என்று எதிர்பார்த்து நின்று, பிறகு இலவுகாத்த கிளியாகிப் போய்விடலாகாது. அதற்கான பணியாற்றும் கடமை, நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

அன்புள்ள,

அண்ணாதுரை,

4-12-1960

28. மேனி சிலிர்க்குது !. . .

மேயர் தேர்தல் வெற்றி -

நாகர் கிளர்ச்சி.

தம்பி!

நெல்லைச்சீமை சென்றிருந்தேன் - நாலு நாட்கள் - பல இடங்கள் - எழுச்சியூட்டும் நிகழ்ச்சிகள் - எனவே, மடல் அனுப்ப இயலவில்லை. எனினும், திருநெல்வேலிச் சீமையிலே நான் கண்டு அளவளாவி அகமகிழ்ந்திட, பொதுக்கூட்டங்களிலேயும், தனியாகவும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் தோற்றத்திலே, கண்ணொளியிலே, கருத்தாழம் மிக்க உரையாடலிலே, புன்னகையிலே, புதியதோர் விறுவிறுப்பிலே, உன்னைக் கண்டேன்!

உள்ளத்தால் ஒருவர், வடிவத்தால் வெவ்வேறு என்றன்றோ இன்று நமது கழகத் தோழர்களின் நிலைமை! வாங்க அண்ணா! வாங்க அண்ணாச்சி! தடம் பார்த்து வாங்க! அதோ அந்தாலே பாருங்க! சொதி இன்னும் கொஞ்சம் போடட்டுமா அண்ணாச்சி! - என்று இவ்விதம் மாவட்டத்துக்கு மாவட்டம், பேச்சு எனினும், எங்கும் தமிழ் உள்ளம் தானே காண்கிறோம். அஃதேபோலத்தாம் தம்பிமார்கள் எந்தெந்தச் சீமையில் இருக்கிறார்களோ, அந்தந்த இடத்திலே வழக்கிலே இருந்துவரும் முறைப்படி பேசுகிறார்கள் என்றாலும், எங்கும் ஆர்வமும் எழுச்சியும், நம்பிக்கையும் நல்லுணர்வும், பொங்கிப் பொலிவளித்த வண்ணமிருக்கிறது. பக்குவமாக அமைக்க பூந்தோட்டம் சென்றால், தூய்மையைக் காட்டி நிற்கும் முல்லையும், மல்லியும், அந்திவானத்தை நினைவூட்டும் வண்ணப்

பூக்கள் பலவும், வடிவத்தால் வகையால் வெவ்வேறாகத் தெரியும் - காண்பதற்கு அத்தனை பூக்களும் அழகுடன் விளங்கி - எல்லாம் ஒரு சேர மணம் பரப்பி, மனதுக்கு ஈடற்ற ஓர் மகிழ்ச்சியைத் தருகிறதல்லவா? அதுபோலவே, கழகத் தோழர்கள், கடலோரம் வாழ்ந்திடுவோராகட்டும், காடிடை உள்ள சிற்றூரில் உள்ளவர் களாகட்டும், வரிசை வரிசையாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளும், கொள்வோரும், கொடுப்போரும் எழுப்பிடும் ஒலிமிகு அங்காடி கொண்டதாக உள்ள சீரூர் வாழ்வோராக இருக்கட்டும். பல கல் பாழ்வெளியைக் கடந்தான பிறகு, பசுமையற்று, பாங்கற்று, வறுமை கொட்டியதால் வடிவம் கெட்டு, பிய்ந்து போயுள்ள கூரைகள், சரிந்து கிடக்கும் மண்சுவர்கள், செல்லரித்துப் போன வாயிற்படிகள் எனும் நிலையிலுள்ள,

இருண்ட பட்டிதொட்டியில், பாடுபட்டுப் பலன் காணாமல், பகல் உண்டு, இரவில் அதை எண்ணிக் கொண்டு, படுத்துப் புரண்டு கிடந்திடுவோராயினும், அகில உலகச் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள வாய்ப்புப் பெற்ற கல்வி வளம் பெற்றோரா யினும், மலையும் மடுவும், வயலும் வாவியும், கருகிய மொட்டும் கசந்த கரும்பும், வாலிப நரையும் வயோதிகர் உழைப்பும், கந்தலாடையும் காச இருமலும் என்பனவற்றையே, பாடம் தந்திடும் பள்ளிகளாக்கிக்கொண்டுள்ள குறிச்சியில் உழல்வோ ராயினும், எங்கும் எவரிடமும் தம்பி! இன்று, இதுநாள்வரை நான் கண்டிராத ஓர் ஆர்வம், தமக்கு ஓர் நல்ல எதிர்காலம் உருவாகிக் கொண்டிருக்கிறது, அந்தத் தூயத்தொண்டிலே நமது கழகம் ஈடுபட்டிருக்கிறது, ஈடுபட்டிருப்பதால்,

இல்லாதானை ஏய்த்து ஏய்த்துக் கொழுத்திடும் வல்லான், அந்தக் கழகத்தை அழித்திடத் துடிக்கிறான். எனவே, நாம் நொந்து கிடப்பினும், நமக்காகப் பணியாற்றும் கழகத்துக்குத் துணை நிற்க வேண்டும் என்ற ஓர் விதமான "பந்தபாச' உணர்ச்சி உருவாகி இருப்பதைக் காண்கிறேன். மாடோட்டும் சிறார் முதல் காரோட்டும் தொழிலாளிவரை, கரும்பு பயிரிடும் காராளரிலிருந்து இரும்பு காய்ச்சி அடித்திடும் உலைக்கள உழைப்பாளி வரையிலே, ஏதோ ஓர் விதமான - என்னால் தெளிவாக விளக்கக் கூட முடியவில்லை - பற்றுக்காட்டுவது தெரிகிறது, துணை நிற்க இசைவது புரிகிறது, தோழமை கொண்டாடுவது காண்கிறேன். அத்துணை பேரும், ஐயந்திரிபற, நமது கொள்கைகளை அறிந்து கொண்டார்களா, அலசிப்பார்த்தார்களா,

அடுக்கடுக்காக மாற்றார்கள் ஏவிடும் கண்டனங்கள், கருத்துள்ளனவா, அன்றிக் காழ்ப்பின் விளைவா என்பது பற்றியேனும் விளங்கிக்கொண்டனரா, என்று அவர்கள் தமது இதயத்தை வழங்கிடும்போதெல்லாம், நான் எண்ணி எண்ணிப்பார்க்கிறேன் - வியப்புறுகிறேன். அத்துணை ஆர அமர இருந்து ஆராய்ச்சி நடத்திட, அவர்கட்கு ஓய்வும் இல்லை; வாய்ப்பும் கிடையாது. எனினும் நம்மிடம் ஓர் பற்று நாம் அவர்களுக்காக என்ற ஓர் நம்பிக்கை, அந்த மக்களிடம் ஏற்பட்டி ருக்கிறது - கழகத்தை மாற்றார்கள் தாக்கத் தாக்க, இழிமொழியினர் பழிச்சொற்களை உமிழ உமிழ, அந்த நம்பிக்கை உறுதிப்படுகிறது, வளருகிறது, உரம் ஏறுகிறது! வைரம் பாய்ந்தது என்கிறார்களே - அதுபோல.

தம்பி! பாரதியார் பாடலொன்று நான்

அடிக்கடி கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். அதிலே ஓரிடத்தில், மெச்சி உன்னை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி - என்றிருக்கும். அதன் முழுப் பொருளை உணர வேண்டுமானால், நமது கழகத்தோழர்களில் எவருக்கேனும், ஒரு ஊராட்சி மன்றத்திலே வரவேற்பு அளிக்கப் படும்போது, மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்துப் பாராட்டுரை வழங்கிப் பரிவுகாட்டிடும்போது, விழாக் காணக் கூடிடும், நமது கழகத் தோழர்கள் களிநடமாடிடுவதைக் காண வேண்டும்! உள்ளபடி அவர்களுக்கு மேனி சிலிர்க்கிறது! நமது கழகத்தவருக்கு, நமது தோழருக்கு இந்தச் சிறப்பு நடக்கிறது! ஏற்றம் பெறுபவர், பாராட்டுத்தாளை வாங்கிக்கொண்டு நன்றி தெரிவித்து நிற்போர் மட்டுமல்ல, கழகம் ஏற்றம் பெறுகிறது; கழகத்துக்குப் பாராட்டுக்

கிடைக்கிறது என்று எண்ணி எண்ணி, மகிழ்ச்சியால் துள்ளுகிறார்கள். ஊராட்சி மன்றங்களுக்கு, வரவேற்புக் கொடுப்பது, வாடிக்கையாகிப் போயுள்ள அலுவலாகிவிட்டிருக்கிறது என்று கூடக் கூறலாம். எனவே ஊராட்சி மன்றத்தினர் "உளங்களிந்து வரவேற்புத் தரும்போது, அவர்களுக்கு, புதியதோர் களிப்புப் பூத்திடக்கூடச் செய்யாது. பலமுறை வரவேற்புகள், பல திறப்பட்டவர்களுக்கு வழங்கி, வழங்கி, பழகிப்போய் விட்டிருக்கிறார்கள். நான் இந்தச் சுற்றுப் பயணத்தின்போது காயல்பட்டினம் ஊராட்சி மன்றத்தின் வரவேற்பினைப் பெற்றேன். விழாவுக்காக அழகிய பந்தல் அமைத்திருந்தனர். அதே இடத்தில், காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் அவர்களுக்கு முன்னால் ஊராட்சி மன்றம்

வரவேற்பு அளித்ததாகவும், மறுநாள் அன்பர் ஆச்சாரியாருக்கு வரவேற்பு ஏற்பாடாகி இருப்பதாகவும் அறிந்தேன். இதுபோலத் தான் ஊராட்சி மன்றங்கள் பல்வேறு தரத்தினருக்கு, வரவேற்புகள் வழங்குகின்றன! எனவே, அவர்களுக்கு, மேனி சிலிர்த்திடக் காரணம் இருக்காது. செருக்குடன் செப்புகிறேனோ என்று எவரும் எண்ணிவிட வேண்டாம் - உள்ளதைச் சொல்லுகிறேன் - எனக்கு இத்தகைய வரவேற்புகளைப் பெறும்போது மேனி சிலிர்ப்பது இல்லை. ஒரே ஒருமுறை, என் மேனி சிலிர்த்ததுண்டு - அது, மீண்டும் திரும்பி வரமுடியாத"அந்தக் காலத்தில்' - ஈரோடு நகராட்சி மன்றத்தின் வரவேற்பு எனக்கு அளிக்கப்பட வேண்டும் என்று பெரியார் முன்னின்று நடத்திய விழா - ஊர்வலமாக, பழையகோட்டைக் காளைகள் பூட்டிய வண்டியிலே நான் அமர்ந்து

கொண்டிருக்க, வெண் தாடி காற்றினிலே அசைந்தாட, திராவிடச் செங்கோலாகிடத் தக்க வலிவு பெற்ற கைத்தடியை ஏந்திக் கொண்டு, அரிமா நோக்கு இதுதானோ என்று எவரும் எண்ணிடத்தக்க தனியானதோர் பார்வையை இப்புறமும் அப்புறமும் செலுத்திக் கொண்டு, பெரியார் ஊர்வலத்தில் நடந்து வந்தபோது - அன்று - உள்ளபடி எனக்கு மேனி சிலிர்த்தது. இப்போது, மேனி சிலிர்த்திடுவது இல்லை! நன்றி கொள் உள்ளம் உண்டு!

ஆனால், நமது தோழர்களுக்கு, இப்படி ஒரு வரவேற்புக் கூட்டம் கண்டால், ஊராட்சிமன்றத் தலைவர் மாலையை அணிவிக்கக் கண்டால், அடே அப்பா! என்ன களிப்பு! எத்துணை பெருமை! என்ன பூரிப்பு! மேனி சிலிர்க்கிறது! ஒருவரில் மற்றவர், என்றாகிவிட்டோம். நாம் எவ்வளவு தூரம் கலந்து போயிருக்கிறோம். நமக்குள்

ஏற்பட்டுவிட்டுள்ள தொடர்பு, அரசியல் கட்சிகளிலே காணக்கிடக்கும், சதுரங்கக் காய்களின், இடம்பெறும் வகையினது அல்ல - இது, நெஞ்சோடு நெஞ்சம் உறவாடிடும் நிலை! தம்பி! எதை வேண்டுமானாலும் இழந்து விடலாம், மீண்டும் பெறலாம், எற்றுக்கு என்று கேட்டு அலட்சியப்படுத்தி விடக் கூடக் கூடச் செய்யலாம். ஆனால், அது இருக்கிறதே, "நெஞ்சோடு நெஞ்சம் உறவாடிடும்' தன்மை. நாம் இழக்கக்கூடாத செல்வம் - வேறு எந்தக் கட்சியிலும் காணக் கிடைக்காத கருவூலம் - பழங்காலத்துக் கதையொன்று உண்டு, கடவுளர் சிந்திடும் கண்ணீர்த்துளிகளே, கடலிடை முத்துகளாக மாறின என்று - நமக்குள், ஏற்பட்டுவிட்டுள்ள இந்த இழைந்துள்ள இதய உறவு, நாம் தனியாகவிடப்படுகிறோமே, திக்குத் தெரியாத காட்டிலே, சிறகு வளராத நிலையிலே

கிளம்பிடும் புள்ளினம்போலானோமே, நமது எதிர்காலம் யாதோ? இருள் மருட்டுமோ, ஒளிக்கீறலாகிலும் கிடைக்குமோ, என்று எண்ணி, ஏக்கமுற்று, இந்நிலை ஏற்பட்டு விட்டதே என்று கசிந்து உதிர்த்த கண்ணீர்த் துளிகள், தம்பி! நான் குறிப்பிடும் கருவூலமாகி விட்டிருக்கிறது. இதை இழந்து, மற்ற எதைப் பெறுவதும், கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குவதற்கு ஒப்பாகும்.

இம்முறை, என்னைக் காணும்போது, நமது தோழர்களுக்கு, மகிழ்ச்சி பொங்கிட மற்றோர் காரணம் இருந்தது - மேயர் தேர்தல்.

ஊரூருக்கும் காங்கிரஸ் தலைவர்கள், இம்முறை மூக்கறு பட்டு விடும், முக்காடிட்டு மூலைக்குச் செல்வார்கள், மேயர் ஆக முடியாதது மட்டுமல்ல, பிளவு ஏற்பட்டு, ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்துக் கொள்ளப் போகிறார்கள் - பாருங்கள் அந்த

வேடிக்கையை - என்று நிறையப் பேசி வைத்திருக்கிறார்கள். வெடிகள், வாணங்கள், அறிவிப்புப் பலகைகள், உர்வல ஏற்பாடுகள் எல்லாமே தயாராகிவிட்டிருந்ததாம், காங்கிரஸ் வட்டாரத்தில் - பல ஊர்த் தோழர்கள் கூறினர். மேயர் தேர்தலில், கழகம் தோற்றது என்ற செய்தி கிடைத்திடும். தாரை தப்பட்டை அடித்துக் கொண்டு, சங்கு ஊதிக்கொண்டு, ”சாவு’ ஊர்வலம் நடத்த வேண்டும் என்றுகூடத் திட்டம் போட்டிருந் தனராம்; எனவே, நமது தோழர்கள், நெருப்பின்மீது நின்று கொண்டிருந்தார்கள்! வெற்றி கிடைத்ததும், தந்தையிடம் சென்று தகதகவென ஆடிடும் மகனும், தம்பியின் முதுகினைத் தட்டிக் கொடுத்திடும் அண்ணனும், அரும்பு மீசையை மேலும் அழகுதர முறுக்கியபடி, அது கீறிடுவதால் கன்னத்துக் கதகதப்புக் கண்ட, காதலி முன்றின்று, எப்படி என் வெற்றி!

என்று கேட்டிடும் காதலனும், ஆக இப்படி எல்லாம் ஆகிவிட்டிருக் கின்றனர். நமது தோழர்கள். என்னைக் காணவே அவர்களுக்கு, மேலும் மகிழ்ச்சி பொங்கிற்று! மேனி சிலிர்த்த நிலை!! மேயர் பதவி, முதலமைச்சர் நிலைபோன்றது அல்ல - தெரியும் - புரிகிறது - ஆனால், அந்த இடம் நமக்குக் கிடைப்பது, நாம் வெற்றிப் பாதையிலேதான் சென்றுகொண்டிருக்கிறோம் என்தையன்றோ எடுத்துக் காட்டுகிறது - உரியவளைக் காணா முன்பே, அவள் வளை ஒலிகேட்டு இன்புறுவது உண்டன்றோ! அஃதேபோல!!

"ஏன் அண்ணா! இருவர் கேட்டார்களே, வாய்ப்பு அளித்திடும்படி - என்ன காரணம் கொண்டு, முனுசாமியைத் தேர்ந்தெடுத்தீர்கள் என்று, ஒருவராவது கேட்க வேண்டுமே! உஹும்! ஒருவரும் கேட்கவில்லை. அத்துணை அலட்சியமா பிரச்சினையிலே,

அல்லது என்னிடம் உள்ள நம்பிக்கையின் ஆழமும் அழுத்தமும் அவர்களைச் சிந்திக்க வைக்கவில்லையா, என்றால், தம்பி! அது அல்ல - அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்து இருக்கிறார்கள் - கழகத்துக்கு வெற்றி - கபடத்தை வீழ்த்திப் பெற்ற வெற்றி - தொடர்ந்து வெற்றி - இந்த எண்ணம், அவர்களை வேறு எது குறித்தும், நினைத்திட வைக்கவில்லை. மழலை பேசிடும் மதலை, தனக்கென்று தந்த கனியைக் குழப்பி, நமது வாயிலே திணித்திட, அதை குதப்பிக் கொண்டிருக்கும் போது, பெற்றளித்த பெருமாட்டி, என்ன ஒரே கொஞ்சல்! என்று கேட்க, உள்ளத்தை வென்றான், பதில் சொல்வது, எப்படி இருக்கும்! வார்த்தைகள் தெளிவாக இரா - கனி போலவே குழம்பிக் கிடக்கும் - கனியினும் இனித்திடும்! அது போன்ற முறையில்தான், நமது கழகத்

தோழர்கள் மேயர் தேர்தல் பற்றிப் பேசினர், உள்ளம் நெகிழ்ந்து, மேனி சிலிர்த்திடும் நிலை!

எனக்கே, தம்பி! மேயர் தேர்தலிலே, நாம் பெற்ற வெற்றி எத்துணை மகிழ்ச்சிக்குரியது என்பது, ஆயிரமாயிரம் ஆசைத் தம்பிகள் மேனி சிலிர்த்த நிலையில் இருந்ததைக் கண்டபோது தான், பளிச்சென்று தெரிந்தது. செடியில் உள்ள மலர், செண்டாகி, சேரிடம் அறிந்து சேர்ந்த பிறகு, தனியான, புதிய, கவர்ச்சி பெற்று, அளிக்கிறதல்லவா! அதுபோல!!

இந்த மகிழ்ச்சியைத் தேடிப்பெற்று, திருநெல்வேலிச் சீமையிலே, நண்பர்கள் E.V.இராசகோபால், அன்பில் தருமலிங்கம், மதுரை முத்து, மதுரை துரை அரசு, பாண்டி, நெல்லை இரத்தினவேலு பாண்டியன், தூத்துக்குடி சிவசாமி ஆகியோர் உடனிருந்து

உவகையை உயர்வானதாக்கிட, மதுரை டாக்டர் அருணாசலம் அவர்கள், வழிமடக்கி விருந்தளித்துக் களிப்பூட்ட, நாலு நாட்கள் சுற்றிவிட்டு வந்தேன். நாலாயிரத்து ஐம்பது ரூபாய், தேர்தல் நிதி, தந்தனர் - பெற்று மகிழ்ந்தேன் - எனினும் ஒரு கணம்தான் - என்னையோவெனில் அது போய்ச் சேர வேண்டிய இடம் போய்ச் சேரட்டும் என்று, டாக்டர் வாங்கிக் கொண்டார், பொருளாளர் கருணாநிதியிடம் சேர்ப்பிக்க!!

கேட்டது கிடைத்ததா என்று கேட்கத் தோன்றுகிற தல்லவா, தம்பி! நான், இவ்வளவு தர வேண்டும் என்று கேட்கவில்லை; ஆனால் நெல்லை மாவட்டச் செயலாளர் சிவசாமி, நாலாயிரம் தருவதாக வாக்களித்தார், நிறைவேற்றியு மிருக்கிறார் - ஆனால், இது முதல் தவணை - அவரறிவார், அறிந்தோர் அவர் பணி விரைவிலே

வெற்றிபெற உடனிருந்து செயலாற்றக் கேட்டுக் கொள்கிறேன்.

தம்பி! தேர்தல் செலவுக்காக, காங்கிரஸ் கட்சியினால் இலட்ச இலட்சமாகப் பணத்தை மிக எளிதாகத் திரட்ட முடியும். பட்டப்பகலில் சட்டத்தின் கண்களைப் பணத்திரை போட்டு மூடிவிட்டு, கொள்ளை கொள்ளையாகப் பணத்தைக் குவித்துக் கொண்டுள்ளவர்கள், பாதுகாப்புத் தேடிக்கொள்ள, காங்கிரஸ் கட்சிக்கு வலியச் சென்றும் பொருளைக் கொட்டிக் கொடுப்பர் என்பதும் புரிகிறது, என்றாலும், நாம், ஏழை எளியவர்களின் சார்பிலே, பணியாற்ற, தேவைப்படும் தொகையினைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கை, நமது தோழர்களுக்கு, நிரம்ப இருக்கிறது. அதிலே நமக்கு வெற்றியின் அறிகுறிகள் தென்படும்போதே, நமது கழகத் தோழர்களுக்க மேனி சிலிர்க்கிறது.

கொளுத்தும் வெயிலில் பகல் பன்னிரண்டு மணிக்குக் கோயில்பட்டிக் கூட்டம். இசைபாடுவோர், இராக இலாபனை நடத்தி, கீர்த்தனங்கள் பாடி, பக்க வாத்தியக்காரருடன் வித்தைகள் செய்துகாட்டி, திருப்புகழ், காவடிச்சிந்து, அருட்பா என்று இப்படி எல்லாம் பாடுவார் - என்ன பாடினாலும் பணம் வராது! கடைசியில் மங்களம் பாடி முடிந்த பிறகுதான் பணம் தருவார்கள். அதுபோல் நள்ளிரவுப் பேச்சு, மழையின் ஊடே பேச்சு, என்று பல ஊர்களில் - நெல்லையிலும் தூத்துக்குடியிலும் சிறப்புச் சொற்பொழிவுகள் - எனினும் பணம் தந்தாரில்லை, நண்பர் சிவசாமி - கோயில்பட்டியில் "மங்களம்' பாடியபோது, நாலாயிரம் தந்தார். தம்பி! அந்தத் தொகையை ஒரு தட்டிலே (பித்தளைத் தட்டுதான்!!) வைத்து, என்னிடம் தந்த உடனே, பார்க்க வேண்டுமே அங்கு ஏற்பட்ட

மகிழ்ச்சியை!! மேனி சிலிர்த்தது!! நமது கழகம் தேர்தல் நிதி திரட்டுகிறது - அதற்கு நாலு ஆயிரம் கிடைத்தது - என்பது காணும்போது அவர்களுக்கு மேனி சிலிர்க்கிறது. காங்கிரசுக்குப் பணம் சேருகிறது. இலட்சக் கணக்கில் - அது ஒரு பிரமாதமாகத் தோன்றுவதில்லை. நமது கழகத்தவருக்கு மட்டுமல்ல, பொதுமக்களுக்கேகூட - ஏனெனில், காங்கிரஸ், கோடீஸ்வரர்கள் உள்ள கட்சி, அதிலே இலட்சக் கணக்கிலே பணம் திரட்ட முடிவதிலே, ஆச்சரியப் படவோ, செயலாற்றியவர்களைப் பாராட்டவோ என்ன இருக்கிறது. பணம் படைத்தோன், வெள்ளித் தட்டிலே வைத்தளிக்கப்படும் பாதாம் அல்வாவில், கால் பாகம் தின்கிறான்; தின்னும்போதுகூட கிடைத்திருக்கவேண்டிய கால் இலட்சம் இலாபத் தொகை குறைந்துவிட்டதை எண்ணிக் கொண்டு

விட்டால், இனிப்புப் பண்டமே கசப்பாகிப் போகிறது. பாடு பட்டவன், பெற்ற பணத்தைக்கொண்டு, செட்டாகக் குடும்பம் நடத்தும் இல்லாள், அன்புடன் அளித்திடும் உண்டியை அவளுடன் உரையாடிக்கொண்டே உண்டு மகிழ்பவன், கடைசி உருண்டையைக் குதப்பியபடி இலையோடு ஒட்டிக் கொண்டு விட்டிருக்கும் ஊறுகாயை எடுக்க முயலுவது கண்ட இல்லத்தழகி குறுநகை புரிந்து, இலை பிய்த்துக் கொண்டு வந்துவிடப் போகிறது! - என்று கேலி பேசிட, வெட்கத்தை வெறும் சிரிப்பால் மறைத்தபடி, ஊறுகாய் கிடைக்கா விட்டாலும் அதைத் தொட்ட விரலைச் சுவைத்திடுகிறானே, அப்போது அவனுக்குக் கிடைத்திடும் சுவையும், அது அளித்திடும் மகிழ்ச்சியும், பாதாம் அல்வா சாப்பிட்ட பத்து இலட்சத்தாருக்குக் கிடைக்குமா, என்ன!

நாம் தேர்தல் நிதி திரட்டுகிறோம் - சிறு

தொகை - அதற்குப் பெரும்பாடு என்றாலும், அதிலே நாம் வெற்றி காணும்போது, ஏழைக்கு ஊறுகாய் தொட்ட கைதரும் சுவை காண்கிறோம். இல்லத்தில் உண்கிறோம்! இல்லக்கிழத்தி அருகே இருக்கிறாள், எந்தப் பண்டத்திலே எந்தச் சுவை குறைந்திருந் தாலும், இன்மொழியால், புன்னகையால், ஈடுசெய்து மகிழ்வளிக்க! பாடுபட்டுப் பிழைக்கிறோம் என்ற எண்ணம், தேனாகிறது!!

அஃதேபோலத்தான் தம்பி! தேர்தல் களம் செல்கிறோம், பதவி பறிக்க அல்ல; தாயகம் காண, களம்பல சென்றாக வேண்டும், அதிலே இது ஒன்று என்ற உணர்வுடன், அங்கு செல்ல, இந்தத் தொகை பயன்படுத்தப்படும் என்று எண்ணும் போதே மகிழ்ச்சி பொங்கிவழியத்தானே செய்யும். அதற்கான தொகையினைத் திரட்டிட முடியும், திரட்டித்தரத் தோழர் களால் முடிகிறது,

திரட்டச் செல்லும்போது, பொதுமக்கள், ஆதரவு தருகிறார்கள் என்பது நமக்கு, இன்ப உணர்ச்சிகளை, எடுத்ததை முடித்திடுவோம் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

நாலு ஆயிரம் என்று நண்பர் அறிவித்ததும், கூடியிருந்தோர், கையொலி செய்தனர் - களிப்பினைக் காட்டிட! ஏன்? அவர்கள், அதுவரையில் ஆவலுடன் - அச்சம் கலந்த ஆவலுடன் அமர்ந்திருக்கிறார்கள் - நல்ல தொண்டாற்றத்தான் பணம் கேட்கிறார்கள், தரவேண்டும் என்று மனம் கூறுகிறது, மடியோ நமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது - மிகமிகச் சிறிய தொகைதான் நம்மாலே கொடுக்க முடிகிறது - நம்மைப்போலத்தானே மற்றவர்கள், நம்முடன் உள்ளோரில் பெரும் பாகம் - இவர்கள் சேர்ந்து கொடுக்கும் தொகை, எப்படி அதிகமாக இருக்க முடியும் - ஒரு ஐந்நூறோ ஆயிரமோ சேருவதே

கடினம் - என்று எண்ணி ஏக்கத்துடன் இருக்கின்றனர். அந்த நிலையில் நாலாயிரம் என்று அறிவிக்கப்பட்ட உடனே அவர்களுக்கு பெருமை கலந்த களிப்பு! நம்மாலே நாலாயிரம்! நமது கழகத்துக்கு நாலாயிரம் நாம் சிறு தொகைதானே கொடுத்தோம் என்று ஆயாசப்பட்டுக் கொண்டோம், சிறுதுளி பெருவெள்ள மாகிறது! இதோ நாலாயிரம்! இதே முறையிலே முயன்று பணியாற்றினால், கழகம் குறித்துள்ள தொகையைச் சேர்த்து விட முடியும்! - தம்பி! இதுபோன்ற எண்ணங்கள், அவர்களை மேனி சிலிர்த்திட வைக்கிறது.

நாகர்களின் விடுதலைக் கிளர்ச்சி, நம்முடையது போல அல்ல - அது காங்கிரசாரின் ஆகஸ்ட்டுக் கிளர்ச்சிக்கு அண்ணனாகிவிட்டது. இந்திய துரைத்தனம் பல நூறுகோடி ரூபாய் செலவிட்டு அமைத்துள்ள படைபலம், நாகர்களை

அடக்க முடியவில்லை - இன்றுவரை. அதற்கு மாறாக, சின்னாட்களுக்கு முன்பு டில்லி அனுப்பிவைத்த படையினரில் நான்கு பேர்களை, விமானப்படையைச் சேர்ந்தவர்களை, நாகர்களின் விடுதலைப் படையினர், சிறைபிடித்து விட்டனர். டில்லி அரசிடம் உள்ள படை மிகப்பெரியது! அதிலே நாலே நாலுபேர்தான், நாகர்களிடம் பிடிபட்டனர். ஆனால், அந்தச் செய்தி கேட்டதும், நாகநாடு முழுவதும் தலைநிமிர்ந்தன்றோ நின்றிருக்கும்! எம்மை அழிக்கவந்தவர்கள் - எம்மிடம் பிடிபட்டார்கள் - கட்டிப்போட்டு வைத்திருக்கிறோம் என்றன்றோ விடுதலைப் போரைத் தொடர்ந்து நடாத்தி வரும் நாகர்கள் பெருமிதத்துடன் கூறுவர். அம்மட்டோ! நாகர்களை அடக்க, அழிக்க, ஏவப்பட்ட டில்லிப் படையினைச் சேர்ந்த நால்வரை, நாகர் சிறை பிடித்தனர் என்று கேள்விப் பட்டதும், விடுதலை

வீரர்களாம் நாகர்களுக்கு மேனி சிலிர்த்துத் தானே போகும்!!

தம்பி! கேள்விப்பட்டால் நாமே, மேனி சிலிர்த்திடும் நிலை பெறுவோம் - அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது, இதை ஒட்டி,

பிடிபட்டவர்களைத் தேடி அலைகிறார்கள், டில்லி அரசினர். அந்த டில்லி அரசுக்கு, நாகர்களின் விடுதலை இயக்கம், சொல்லி அனுப்புகிறது, "சிறைப்பட்ட நால்வரை விடுதலை செய்து விடுகிறோம்; விடுதலை செய்துவிடும்படி, டில்லி அரசு எங்கள் நாகநாட்டு அரசைக் கேட்டுக்கொண்டால்'' என்பதாக! கேட்கும்போதே மேனி சிலிர்க்கும், பேச்சல்லவா இது! டில்லியில் ஒரு அரசு - நாகநாட்டில் ஒரு அரசு! முன்னையது பெரிதாக இருக்கலாம், நாகருடைய அரசு அளவு சிறியதாக இருக்கலாம் - எனினும், நிலையில், இரண்டும் ஒன்றே! இதுவும் அரசு,

அதுவும் அரசு!! - என்று எடுத்துக்காட்டும், விடுதலை வீரம் கொழுந்துவிட்டெரியும் ஆர்வப் பேச்சல்லவா, அது! எனவேதான் மேனி சிலிர்க்கிறது.

மலைவாழ் மாவீரர்கள் தமக்கென்று வகுத்துக் கொண்ட முறைப்படி, விடுதலைப் போரினை நடாத்தி வருகின்றனர். வீரச் செயல்கள் நிகழும்போது, நாகர்களின் மேனி சிலிர்க்கிறது.

நாம், திராவிட விடுதலைக்கு வகுத்துக் கொண்டிருப்பது, அறவழி நின்று உரிமைக்கான கிளர்ச்சி நடாத்துவது; அதற்கான களங்களிலே ஒன்று, தேர்தல் களம்; அந்தக் களம் சென்று பணிபுரிந்திட, பொதுமக்களின் நல்லாதரவு மிகமிகத் தேவை. சிவசாமி திரட்டித் தந்த நாலாயிரம், இந்த ஆதரவு தர, மக்கள் தயாராக உள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுவது கண்டுதான்,

கழகத் தோழர்களின், மேனி சிலிர்க்கிறது. அண்ணா! என்று அழைத்து மதுரை முத்து, நான் தந்தது ஐந்து ஆயிரம் - என்று என்று கவனப்படுத்துகிறார். அதுமட்டுமல்ல! இந்தத் திங்கள் இறுதியில் இன்னும் பெற வருக என்று அழைக்கிறார்.

அந்த மாவட்டங்கள், இரு முறை வரவழைத்துத் தரும் தொகையை எமது மாவட்டம், ஒரே நாளில் தர இருக்கிறது என்று சுவையூட்டுகிறார், வடாற்காடு மாவட்டச் செயலாளர் தருமலிங்கம். எவ்வளவு என்று கேட்டு அவரே பதிலளிக்கிறார், பதினைந்தாயிரம் என்று.

இந்த மகிழ்ச்சியூட்டும் உணர்வுடன் உறவாடி மகிழ்ந்து கொண்டிருப்பதனால்தான், தம்பி! ஊர் விஷயம், உலக விவகாரம், இவைபற்றி எழுதாமல், நமது குடும்ப விஷயமாக மட்டும், குதூகலப்படத்தக்க

பகுதியை இந்தக் கிழமை எழுதினேன். மகிழ்ந்திரு. ஆனால், விழிப்பாக இரு! பணியாற்றியபடி இரு; புதிய நம்பிக்கையுடன் நாடு நமது நோக்கத்தை அறிந்து, ஆதரவு தரும் கட்டம் பிறந்திருக்கிறது, மேனி சிலிர்க்கிறது!

அன்புள்ள,

அண்ணாதுரை,

18-12-1960

29. வாழு! வாழவிடு! (1)

அவளும், அவனும் -

கருத்துக்கதை இந்திய ஒற்றுமை -

சர். சி.பி.யின் கருத்து.

தம்பி!

உருக்கமான கதையொன்று, நெடுநாட்களுக்கு முன்பு படித்தது நினைவிற்கு வருகிறது. உனக்கும் அதைக் கூற வேண்டும்போலத் தோன்றுகிறது. கூறுகிறேன்.

சாலைகளும் சோலைகளும் கண்டு சொக்கிட, அவர் களுக்கு நேரம் இல்லை; சாலைகளும் சோலைகளும் அங்கு இல்லவும் இல்லை; ஏனெனில் அவை சிறிது சிறிதாக அழிக்கப் பட்டுப் போய் விட்டன!

சோலைகள் இருந்தால், புள்ளினம் நிரம்பி இருக்கும்; புதுப் புதுப் பண் அமைப்போருக்குப் பாடம் தருவதுபோன்ற முறையில், இசை எழுப்பும்; அவர்கள் கேட்டு இன்புற்றிருக் கலாம்! அவர்கள் என்பது கூடத் தவறு - அவள் கேட்டு இன்புற்றிருப்பாள் - அவனுக்குத்தான் அவள் பேச்சே இசையாயிற்றே! புள்ளினம் இல்லை, இசையும் இல்லை! இருந்திருப்பினும், அவர்கள் அதனைக் கேட்டு மகிழ்ந்திட நேரமும் இல்லை! அவர்கள், உருளைகளின் ஒலி, உருண்டோடும் வண்டிகளின் இரைச்சல், இடித்தல் வடித்தல், அறுத்தல் எரித்தல் போன்றவைகள் எழுப்பிடும் பேரிரைச்சல், இவைகளுக் கிடையிலே உழன்று கிடந்தனர்! இசை கேட்டு இன்புற நேரமும் இல்லை! கிடைத்திடின், இசையை நுகரும் இயல்பேகூடப் பழுது

படாமல் இருந்திருக்குமோ என்னவோ, கூறுவதற்கில்லை. அவர்கள் உழைப்பாளிகள் - உனக்கு நான், எனக்கு நீ, - என்று பாடி ஆடிடும், நிலையினர் அல்ல!

அந்தக் கண்களிலே நான் கண்ட ஒளி! என்று கூறிக்கூறி மகிழ்ந்து கிடக்க அவனுக்கு நேரம் இல்லை; ஒளி இருந்த கண்கள் - உண்மை - ஆனால், அது முன்பு! இப்போது ஓரோர் சமயம் ஒளிச் சிதறல் தெரிகிறது, மறுகணம் மறைகிறது! அவள் அவனுக்காக வேலை செய்கிறாள் - அவன் அவளுக்காக உழைக்கிறான்! அவனும் அவளும் உழைத்துப் பிழைக்கும் எளிய குடும்பத்தினர்.

கவிதைகளைப் படித்திட வாய்ப்புப் பெற்றிருந்த நண்பர்கள், அவனிடம், மேலே உலவிடும் மேகத்தை, மங்கையரின் கூந்தலுக்கு ஒப்பிட்டுக் காட்டியிருப்பதை எடுத்துக் கூறியிருப்பர் - அவன் இதழில் ஒரு

புன்னகை தவழும் - மறுகணம் மறையும்! தன் துணைவியின் குழலழகை எண்ணி மகிழ்வான்! எனினும், வேலை இருக்கிறதே - என் செய்வான்?

அந்தக் கூந்தலின் சுருளழகும், மினுமினுப்பும், அதனைக் கோதிடும்போது, கரத்தின் வழி நுழைந்து நேரே இதயம் சென்று இன்பமூட்டிடும் களிப்பும், அவன் நினைவிற்கு வருகிறது. ஆனால், அதேபோது செய்துமுடிக்கவேண்டிய வேலையின் அளவும் தெரிகிறது! மகிழ்ச்சியை, ஒரு பெருமூச்சால் விரட்டி விடுகிறான் - பிறகு? வேலை! வேலை!!

கூந்தலுக்கு இயற்கையாக அமையாத அழகினைக் கூட்டிட மினுக்குத் தைலம் தேடுகிறார்கள், வண்ணக் கலவை நாடுகிறார்கள், வைரம் இழைத்த அணி பணியினை, கோதி முடித்த கூந்தலில் செருகிக் கொள்கிறார்கள் - உள்ளவர்கள்!

அவள், வியர்வை பொழியும் நெற்றியிலே, வந்து வந்து விழுந்திடும் கூந்தற் சுருளை, கரத்தால் மேலுக்குத் தள்ளித் தள்ளி விடுகிறாள்! கூந்தலோ, எப்போது பார்த்தாலும் ஏதேதோ வேலை செய்தபடி இருக்கிறாயே, என்னையும்தான் கொஞ்சம் பாரேன்! என்று கெஞ்சுகிறது!! அவளுக்கு அதற்கெல்லாம் நேரம் இல்லை! பட்டுக்கயிறு கொண்டாகிலும், கட்டி முடித்துக் கொள்ளலாம்! ஆனால், அதற்குப் பணம் வேண்டுமே? உழைப்பில் கிடைப்பது, உணவுக்கும் உடைக்கும் விடுதிக்கும் மட்டும் கட்டிவந்தாலே போதாதா, கூந்தலுக்கு அழகுதேடச் செலவிடக் கூடவா காணும்!

அவன், அந்தக் கூந்தலில் செருகிக் கொள்ள ஒரு அழகான அணி வேண்டும், என்று உணர்ந்தான், தன் கரம் கொண்டா எப்போதும் நெற்றியிலே வந்து விழும்

கூந்தற்சுருளைத் தள்ளித் தள்ளி விட்டுக் கொண்டிருக்க முடியும்! கரத்துக்கு வேறு கடினமான வேலைகள் நிரம்ப உள்ளனவே!

எனவே, எப்படியாகிலும் கூந்தலில் அணிந்து கொள்வதற் கான அணி வாங்கியாக வேண்டும்! அவளிடம் கூடக் கூறக் கூடாது - வாங்கும் வரையில்! பிறகு? என்னென்னவோ விதமான கற்பனைகள், பாவம் அவனுக்கு! உழைப்பாளிதான், என்றாலும் நினைவு குழம்பிப் போகும் நிலை பெற்ற வயோதிகன் அல்லவே! கட்டிளம் காளை!!

அந்த நினைவு பிறந்ததும், அவனுடைய உழைக்கும் திறனே கூடத் தன்னாலே வளரலாயிற்று. வேலை செய்யுமிடம், விரைந்து செல்கிறான், கைக்கடிகாரம், நேரமாகிவிட்டது என்பதை எடுத்துக்காட்டியதால்!

அவள், அவனைக் காண்கிறாள் - அவன் புன்னகைக்குக் காரணம் கேட்காமல்! எப்படிக் கேட்பாள்! அவள், சிந்திய புன்னகைக்குக் காரணம், கூறினாளா? அவன் அவளுடைய கூந்தலுக்கு, வாங்கிச் சூட்டிடப் போகும் அழகிய ஆபரணத்தை எண்ணி மகிழ்ந்தான்! அவளோ, அவன் கரத்தில் கட்டப் பட்டிருந்த கடிகாரத்தின், தோல்பட்டைக்குப் பதிலாகப் பளபளப்பான முலாம் பூசப்பட்ட செயற்கை வெள்ளியாலான, பட்டையைக் (கற்பனைக் கண்களால்) கண்டு, புன்னகை புரிந்தாள்.

உழைப்பால் மெருகேறியிருந்த கரங்கள் - பளபளப்பான செயற்கை வெள்ளிப்பட்டையுடன் கடிகாரம் இருந்தால், அழகாகத்தான் இருக்கும் - அந்தப் பட்டை, கடையிலே கண்ணாடிப் பேழையிலே இருக்கும்போது உள்ளதைக் காட்டிலும், அழகு அதிகமாக விளங்கிடும். கடையிலே

அதைக் காணும்போதெல்லாம், அவள் இதையே எண்ணுவாள். எப்படியும் அதை வாங்கிவிடவேண்டும் - அவருக்குத் தரவேண்டும் - தாமே அவர் கரத்தில் அதனைக் கட்டிவிட வேண்டும் என்று எண்ணிக் கொள்வாள். அவனுக்கும் அதுபோலவே நினைப்பு - எப்படியாகிலும், கூந்தலில் செருகிக் கொள்ள அழகான அணி வாங்கிவிடவேண்டும் என்று.

அவளுக்குத் தன் கூந்தலிற் செருகிக் கொள்ள ஒரு அழகான அணி இல்லையே என்று நினைப்பு எழவில்லை.

அவனுக்குத் தன் கைக்கடியாரத்துக்குத் தோலாலான பட்டையைவிட, பளபளப்பான செயற்கை வெள்ளிப்பட்டை இருந்தால் அழகாக இருக்கும் என்ற எண்ணம் தோன்றவில்லை.

அவன், அவள் கூந்தலழகையே எண்ணிக் கிடந்தான்.

அவள், அவன் கரத்திலே பளபளப்பான பட்டை இருக்க வேண்டும் என்பது பற்றியே எண்ணிக் கொண்டு இருந்தாள்.

அவளுக்காக அவன்! அவனுக்காக அவள்!

இவர்களின் தூய காதலைக் கண்டு, காதகர்களிடம், கஞ்சத்தனம் படைத்தோரிடம் குவிந்துகிடந்த பணம், உருண்டோடி வந்து, உறவாடி உரையாடிடவா, முடியும்? அதுதான், சிக்கிக் கொண்டு விட்டோம், இனி நம்மை ஏவி என்னென்ன சீரழிவுகளைச் செய்கிறார்களோ, என்றெண்ணி வாயடைத்துக் கிடக்கிறதே!!

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பார்கள் அல்லவா! தூய காதலால் கட்டுண்டு கிடந்தவர்களுக்கும் வழி கிடைத்தது.

"கண்ணாளா! கண்ணை மூடிக் கொண்டு, தங்கள் கரத்தை இப்படி என் முன் நீட்டுங்கள்!'' எந்று கொஞ்சுமொழி பேசினாள் கோதை, ஓர் நாள்.

இதென்ன பந்தாடும் சிறுமிபோலப் பேசுகிறாளே என்றெண்ணினான் வியப்புடன். அவளோ, செல்லக் கோபம் காட்டி, சேல்விழியால் களிப்பூட்டித், தேனை மொழியாக்கித் தருகிறாள்.

என்ன? என்ன? ஏன்? என்றெல்லாம் கேட்கிறான் - அவள் நினைவிலே தன்னை இழைத்துவிட்ட காதலன்.

சொல்கிறபடி கேட்க வேண்டும்! உம் - என்று மிரட்டுகிறாள் - கரத்தைப் பற்றி இழுக்கிறாள்.

"கண்ணே! அப்படியே திருப்பு முகத்தை!'' என்று அவன் கட்டளையிடுகிறான்.

”ஏன்?’’ என்று அவள் கேட்கிறாள், தழதழத்த குரலில்.

“உன் அழகான கூந்தலிலே இடம் பெற்று புது அழகு பெறத் துடிக்கும் இந்தக்”கொண்டைச் செருகு’ உன்னைக் கெஞ்சுகிறது, பாரேன்!’’ என்று கூறிக், கடையிலே வாங்கி வந்த அழகுமிகு அணியினைக் காட்டுகிறான்.

அவள், அதைப் பார்க்கிறாள்! வியப்புடன் பார்க்கிறாள்!! அகலக் கண்களைத் திறந்தபடி பார்க்கிறாள்!!

வெற்றிவீரன், பரிசாகப் பெற்ற வீரக்கழலை, காதலியிடம் காட்டும்போது, எத்துணை மகிழ்ச்சியும் பெருமிதமும் அவன் விழியில் இருந்திடும்! அவன், அந்த அணியை அவள் காணும்படி, ஏந்தியபடி நிற்கிறான், வெற்றி வீரன் போல்!!

“எனக்கா! அன்பே! நீங்கள் வாங்கிவந்தீர்களா! தங்களுக்குத் தான் என்மீது எத்துணை அன்பு! கண்ணாளா! இத்தனை கனிவு கொண்டுள்ள, தங்களை என் மணாளராகக்கொண்டுள்ள நானே பாக்கியசாலி! புதிதாகக் கட்டிமுடித்த மாளிகையிலே ஓர் புறம் வெட்டப்பட்டிருக்கும் பளிங்குக் குளத்திலே, பட்டு மெத்தைகள் போடப்பட்டுள்ள உல்லாச ஓடம் ஒயிலாக ஆடிநிற்பதைக் கணவன் காட்டிடும்போது, அந்தக் காரிகைக்கு ஏற்பட முடியாத களிப்பு, என் அரசே! எனக்கு இப்போது ஏற்படுகிறது. என்னைப் பற்றிய எண்ணம், உமக்கு எத்துணை இருந்தால், என் கூந்தலுக்கு இந்தச்”செருகு’ இல்லை என்பதை அறிந்து, பெற்றுத் தந்திருப்பீர்!! அதைத் தரும் கரங்களைக் கண்களிலே ஒத்திக் கொண்டு, காலமெல்லாம் இருந்திடலாம்போல்

தோன்றுகிறது! - என்றெல்லாம், நாடகமேடையானால்! பேசிடலாம் - இது வீடு - அவள் பேசவா முடியும் - பேசவா செய்தாள்! அவள் கண்கள், இதுபோல மட்டுமல்ல, காதற் காவியமே தீட்டிக் காட்டிற்று.

திரும்பு! நானே என் கரத்தால் கொண்டைச் செருகினை உன் கூந்தலில் சூட்டி மகிழ வேண்டும் - என்கிறான், அவன்.

புன்னகை பூத்திடும் நிலையிலே நிற்கிறாள் பூவை - அவன் எதிரில்! அவன் முகவாய்க்கட்டையைத் தடவியபடி!!

அவன், அவளைத் திருப்பி நிற்கச் செய்யும் எண்ணத்துடன், தொட்டு இழுக்கிறான்! துடியிடை, சிலையாகி நிற்கிறாள்!! வேண்டாம்! வேண்டாம்! என்று குறிகாட்டி நிற்கிறாள்.

இதற்கு வெட்கமா! இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகுமா! நாம், தனியாக

இருக்கும்போதுகூடவா!! - என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது, அவனுக்கு - ஆனால், செயலல்லவா முக்கியம் பேச்சைவிட - எனவே அவன், அவளுடைய தோளைப் பிடித்து இழுத்தபடி திருப்ப முயற்சிக்கிறான். அவள், கண்கள் துளிர்க்கின்றன! உற்றுப் பார்க்கிறான்! கண்ணீர்த் துளிகள், வெளிப்பட்டுக் கன்னத்தில் வீழ்கின்றன!

"அன்பே, என்ன இது?'' என்று கேட்கிறான் - அவள் அவன் மார்மீது சாய்கிறாள். அணைத்தபடி, கண்ணீரைத் துடைக் கிறான். தலையில் முக்காடிட்டதுபோலக் கட்டப்பட்டிருந்த துண்டு நழுவி விடுகிறது; கூந்தல் புரளவில்லை - கத்தரித்து விடப்பட்டுக், கழுத்தளவோடு நிற்கிறது!!

கூந்தலில் செருகிக்கொள்ள, அணிகொண்டு வந்தான் - சுருண்டு அடர்ந்து புரண்டு கிடக்கும் கூந்தல் இல்லை!!

எப்படி இருக்கும்? அதைத்தான், விலைக்கு வாங்கிய கடைக்காரன் தொட்டுப் பார்த்து "பட்டு' என்கிறான் - அளவு எடுத்துப் பார்த்து அற்புதம் என்கிறான் - கொடுத்த பணத்தைக் கணக்கெடுத்து, கிடைக்கப்போகும் பணத்துடன் ஒப்பிட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறானே!

ஏழையிடம் இருந்தது இந்த அழகு!

இந்த "அழகு' தேடி அலைகிறார்கள், பணம் படைத்த பெருமாட்டிகள்.

மருத்துவர்கள் கொடுத்தவை அனைத்தும் பயனளிக்க வில்லை. செம்பட்டை போகவில்லை!! இதோ கற்றைக்குழல்! ஆனால் அது, ஒரு ஏழையிடமல்லவா இருந்துவந்தது - மினுக்குப் பெறாமல்!!

வாடைக் காற்றிலே முன்பு ஆடி இருக்கும் - இனி மாளிகையிலே கிடைக்கும் பூங்காற்று

அல்லவோ, இதற்கு!

காதற்கணவனுக்குக் கைக்கடியாரத்துக்கான செயற்கை வெள்ளிப்பட்டை வாங்க, காரிகைக்குப் பணம் வேண்டும்! ஒவ்வொரு நாளும் கண்ணாடிப் பேழைக்குள் இருந்து கொண்டு, அந்தப் "பட்டை"'உன் கணவனுக்காகவே காத்துக் கொண்டி ருக்கிறேன், இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கு இருக்க முடியும்? உள்ளவன் எவனாவது வாங்கிக் கொண்டு போய் விட்டால்!! பிறகு, உனக்குப் பெருத்த ஏமாற்றம் ஏற்படும்! உடனே வாங்கிக் கொண்டு, போ!!' - என்று பேசிற்று, பணம் இல்லை! என்ன செய்வது? பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தபடி இருந்தாள்.

கூந்தல் தயாரித்து விற்பனை செய்யும் கடைக்காரன் உற்றுப் பார்த்தபடி இருந்தான், ஒவ்வொரு நாளும் - அவளை அல்ல -

கூந்தலை!!

அலைந்து திரியும் இவளிடம் இவ்வளவு அழகான கூந்தல் - இதுபோல வேண்டுமென்று அங்காடி அங்காடியாக அலைந்து திரிகிறார்கள், சீமாட்டிகள்! - இந்தப் பெண்ணின் கூந்தல் கிடைத்தால். . .!! - என்று நினைத்தது நடந்தது. கூந்தலை வெட்டி எடுத்துக் கொண்டு கொடுப்பதைக் கொடு என்றாள். அவன், பக்குவமாகப் பேசினான் - கூந்தல் போய்விடுகிறதே என்று கவலைப்படாதே - வாலிபப் பருவம் உனக்கு - கரு கருவென விரைவிலே கூந்தல் மீண்டும் வளர்ந்துவிடும் - வளரா விட்டால் கூட என்ன - கவனிக்காமல் இருந்தால், கூந்தலில், சிக்கு ஏற்படும், சுண்டு சொறி கிளம்பும் - என்றான்!

வெட்டி எடுக்கப்பட்ட கூந்தலைக் கண்டதும், அவளுக்கு ஒரு கணம் வருத்தமாகத்தான் இருந்தது. நமது கூந்தலா இத்தனை நீளமாக,

இவ்வளவு அடர்த்தியாக, கவர்ச்சியாக இருந்தது!! - என்று எண்ணினாள். மறுகணமோ, அதை எடுத்துக் கொடுத்து விடுவதால், கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாங்கப் போகும் பொருளை எண்ணிக் கொண்டாள், முகம் புதுமலராயிற்று!

அந்தப் "பட்டை' அவளிடம் இருந்தது - அவன் கட்டித் தழுவியபடி,"செருகு' சூட நினைத்துப் பார்க்கும்போது, கூந்தல் வெட்டி எடுக்கப்பட்டுப் போய்விட்ட அலங்கோலத்தைக் கண்டு கண்ணீர் உகுக்கும்போது!

சூட்டி மகிழ நினைத்தார் - அவருடைய மகிழ்ச்சியைப் பாழாக்கிவிட்டேனே - என்றுதான், அவள் கவலைப்பட்டாள்.

அவருக்கு அந்த மகிழ்ச்சி கிடைக்கவில்லை - நான் அவர் கரத்தில், பளபளப்பான செயற்கை வெள்ளிப் பட்டையை

மாட்டி மகிழ்ச்சி பெற, அவர் மகிழ்ச்சியை இழக்கிறார் - என்று எண்ணினாள், நெஞ்சு நெகிழ்ந்தது.

"கண்ணாளா! நெடு நாட்களாக, இதை வாங்கித் தங்கள் கடிகாரத்துடன் இணைத்துக், கரத்தில் அணிவித்துப் பார்த்து மகிழ ஆவல் - அதை நிறைவேற்றிக் கொள்ளவே, கூந்தலை இழந்தேன்! கோபம் கொள்ளாதீர்! கூந்தல் மீண்டும் வளர்ந்து விடும் - இன்று கொண்டுவந்ததைப் பிறகோர் நாள் என் கூந்தலிலே செருகி மகிழலாம்! இப்போது இன்பமே! கரத்தை நீட்டுங்கள்!'' - என்று கூறியபடி நின்றாள். அவன் ஏதும் பேசவில்லை, கரத்தை நீட்டினான். கடிகாரம் இல்லை!!

அவளுடைய கண்கள் கேள்விக் குறியாயின!

அவனுடைய அணைப்புப் பதிலளித்தது!

அந்தக் கடிகாரம் தான் இது, - என்று கொண்டைச் செருகைக் காட்டினான்!

செருகு இருந்தது, கொண்டை இல்லை!

கடிகாரப்பட்டை இருந்தது, கடிகாரம் இல்லை!!

அவர்கள் இருவரிடமும் காதல் ததும்பி இருந்தது - கண்ணீராக வழிந்தது!

•

அண்ணா! கதை சுவைதான் - காதல் மாண்பினை விளக்கிடத்தான் செய்கிறது. எனினும், இந்தக் கதை யாது கருத்துடன் கூறிடுகிறாய். வெறும் கதை பேசும் பழக்கம் நமக்குள்ளே கிடையாதே! - என்றுதானே தம்பி! கேட்கிறாய். காரணம் இருக்கிறது!

•

இந்திய ஒற்றுமை - பாரதப் பண்பாடு - ஏக இந்தியா - எனும் எழிலோவியம் காண வேண்டும் என்று நேரு பண்டிதர், துடியாய்த் துடிக்கிறார் - அதனை அவர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், சொல்லியும் வருகிறார். கனிவாகப் பேசுகிறார் சில வேளை, கடுங்கோபம் காட்டுகிறார் மற்ற வேளைகளில். விளக்கம் தருகிறார் சில சமயங்களில், இது உணரப்பட வேண்டியது, உண்மை என்று உபதேசமளிக்கிறார், மற்ற வேளை களில். "ஏக இந்தியா' என்பது பற்றிப் பேசிப் பேசி, அவரே, அதிலே"இலயித்து' விட்டாரோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது, அவருடைய போக்கைக் கவனிக்கும்போது.

"ஏக இந்தியா' என்பது இன்றுள்ள அரசியல் அங்காடியிலே மதிப்புள்ள பொருள் - எனவே அதைக் கொள்வோம், என்ற போக்கினர் உளர் - அவர்களின் உரையைக்

குறித்து, நாம் கவலைப்படத் தேவையில்லை, காற்றடிக்கும் பக்கம் திரும்புவர்.

பண்டிதர் போல, நெகிழ்ச்சியுடன், "ஏக இந்தியா' என்ற தத்துவம்பற்றிப் பேசுபவர், போக்குதான், அனுதாபத்துடன் கவனிக்கத்தக்கது.

"ஆமாம், அதனால் என்ன? எல்லாம் ஒண்ணுதான், இதை எவன் மறுக்க முடியும்? எது எங்கே கட்டினா என்ன? இவனுங்க யாரு இதைக் கிளப்பிவிட!'' - என்று இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசிடும், காமராஜர்களின், போக்குப் பற்றி கவலைப்பட வேண்டியதே இல்லை! ஓட்டுப்பெட்டியிலே ஓட்டை விழுகிற வரையிலே இப்படிப்பட்டவர்கள் இதுபோலத்தான் ஒய்யாரப் பேச்சுப் பேசிக்கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டிருப்பார்கள்.

தம்பி! நான் கவனிப்பது, உள்ளபடி, நெகிழ்ச்சியுடன், நம்பிக்கையுடன், "ஏக இந்தியா' என்ற கொள்கையை அணைத்துக் கொண்டிருக்கும் சுயநலமற்ற, பதவிப்பற்று அற்ற, சிலருடைய போக்குப்பற்றித்தான்.

இந்தத் திங்கள், டில்லியில், "பாரதம்' பற்றிப் பண்டித நேரு பேசுகிறார், பாசம் நிரம்பிய பேச்சு என்று கூறலாம். துக்கம் தோய்ந்த குரலிற் பேசினார் என்று கூடக் குறிப்பிடலாம். தென்னாட்டுக்காரர்கள் நடாத்தும் கல்விக்கூட விழாவிலே பேசும்போது,"இந்தியா ஒன்று' என்ற உணர்வு இருக்க வேண்டும், மொழி, மாநிலம் என்பவை காரணமாகப் பேத உணர்ச்சி, பிளவு மனப்பான்மை கூடாது - அது கொடும் தீது - என்றெல்லாம் பேசி இருக்கிறார்.

அதற்குச் சின்னாட்களுக்கு முன்பு, பம்பாயில், "மேதைகள்' சிலர் கூடி,

இந்தியாவின் ஒற்றுமை குறித்துப் பேசி இருக்கிறார்கள். - சர். சி. பி. இராமஸ்வாமி ஐயர், ஆச்சாரிய கிருபாளினி, முன்ஷி ஆகியோர்.

இவர்களின் பேச்சிலே, வாதங்கள், விளக்கங்கள், மறுப்புக்கு மறுப்புகள் போன்ற இலட்சணங்கள் நிரம்ப உள்ளன - மன நெகிழ்ச்சி - பண்டிதரிடம் உள்ளது போன்றது - இருப்பதாக எனக்குப் படவில்லை.

சர். சி.பி. இராமஸ்வாமி ஐயர் விஷயத்தையே, தம்பி! கவனித்தால், அவர், இந்திய ஒற்றுமை குறித்து மட்டுந்தான், திறம்படப் பேசக் கூடியவர் என்று சொல்வதற்கில்லை - எதிர் தரப்பிலே இருக்க நேரிட்டாலும், இதே திறமையுடன், இந்தியா ஒன்றாக இருப்பது நல்லதுமல்ல, நடைபெறுவதும் சாத்திய மில்லை என்று மன்றத்தினர் பாராட்டத்தக்க விதத்திலே பேசக்

கூடியவர் என்பது விளக்கமாகும்.

சர்.சி.பி. முன்பு திருவிதாங்கூர் சமஸ்தான திவானாக இருந்தார். அப்போது, அவருடைய ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தத்தக்க, அகன்ற கண்களின் ஒளி, அரண்மனைக்கே ஓர் புதுமெருகு கொடுத்தது என்று பேசினர்! மக்களின் எதிர்ப்புச் சக்தியை "பத்மநாப தாசரின்' சார்பிலே நின்று, அடக்கிய ஆற்றல் மிக்கவர், சர்.சி.பி.

அப்போது வெள்ளையர் ஆதிக்கப் படலம் முடிவுற்று, அவர்கள் இங்கு உள்ளவர்களை ஆட்கொண்ட படலம் ஆரம்ப மாயிற்று - வைதீக பாஷையிலே கூறுவதானால், தம்பி! சுதந்தி ரோதயம், ஏற்பட்டது!

திவான் சர். சி. பி. என்ன செய்தார்?

பாரதம் ஒரே தேசம் - பிரிக்க முடியாதது - பிரிக்கக் கூடாது - என்று, இன்று பேசுகிறார்.

உம்! ஆற்றலுடன்!! ஆற்றலுக்கு என்ன பஞ்சமா!!

அன்று, அதே ஆற்றலுடன், சர்.சி.பி. சொன்னது யாது?

திருவிதாங்கூர் தனி அரசு! அதை ஏக இந்தியாவில் பிணைத்து விடுவதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் - என்று முழக்கமிட்டார்.

தம்பி! வெறும் பேச்சோடு இல்லை!! பாகிஸ்தானோடு திருவிதாங்கூர் தனியாக ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளும் - பண்டமாற்று முறை ஏற்பாடாகும் - இந்தியாவிலிருந்து அரிசி வராவிட்டால் கவலை இல்லை - பாகிஸ்தானம் அரிசி தரும் - என்று கூறினார் - ஏற்பாடுகளைக்கூடத் துரிதமாக்கினார்.

நாடு துண்டாடப்படுவது கூடாது என்று

இன்று பேசுபவர் அன்று, திருவிதாங்கூர், தனி அரசு நடத்த முடியும் என்று பேசினார்.

எனவேதான், தம்பி! அவர் போன்றாரின் பேச்சை, மேதை களின் பொழுதுபோக்கு என்ற அளவிலேதான் கவனிக்க வேண்டும் - அது ஒரு பிரச்சினை அல்ல, என்று நான் கருதுகிறேன்.

பண்டிதரின் போக்கை அவ்விதம் என்று தள்ளிவிடுவதற்கில்லை.

கதையிலே வருகிற காதலர்போல், அவருடைய நெஞ்சு நெகிழ்ந்துவிடுகிறது.

எதை இழந்தேனும் பாரத ஒற்றுமையைப் பெற்றாக வேண்டும் - எத்தகைய கஷ்ட நஷ்டம் ஏற்படினும், ஏக இந்தியா எனும் ஏற்பாடு, பழுதின்றிப், பங்கமின்றி இருந்துவரவேண்டும் என்று, பண்டிதர் கூறுகிறார்.

அதற்காக, எதையும் இழக்கத்

துணிகிறார் என்பது மட்டுமல்ல, எதனையும் அழித்தொழிக்கவும் தயாராகிறார்.

”வங்கமே! சிங்கமெனச் சீறாதே! பாரத ஒற்றுமைக்காக, எதையும் இழந்திடச் சம்மதிக்க வேண்டும். பெருபாரியானாலும் சரி, வங்கமொழிச் சிறப்பானாலும் சரி, கவலைப்படக் கூடாது.''

”பாஞ்சாலமே! வீரக் கோட்டமே! உனக்குக் கூறுகிறேன், உன் தன்மானம் பறிக்கப்படுகிறது என்றாலும், பாரத ஒற்றுமைக்காக, அதனையும் இழந்திடச் சம்மதிக்க வேண்டும். முழக்கம் எழுப்பாதே! முணுமுணுத்தால்கூட, அன்னை பாரத தேவி அழுதுவிடுவாள்! அவள் வாழ, நீ வதைபடுவதானாலும், நஷ்டம் இல்லை! வீரப் புதல்வர்கள் வெஞ்சிறையில் உழல்கிறார்களே, என்பதை எண்ணிடும்போது வேதனையாகத் தான் இருக்கும். ஆனால்

அந்த வேதனையைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் - பாரதமாதாவுக்காக.''

"இரத்தக் காடாகிறதே பாஞ்சாலம், என்கிறாய். பாஞ்சாலத்து வீரர்கள் சுட்டுக்கொல்லப் படுகிறார்கள். குருதி கொட்டுகிறார்களே! இரத்தக் காடாகிறதே, பாஞ்சாலம்!'' என்கிறாய்,"வீரக் கோட்டத்துத் தீரர்காள்! அந்த இரத்தம் வீண் போகவில்லை. பாரதமாதா குளித்திடும் பன்னீராக மாறுகிறது, பாஞ்சால மக்கள் கொட்டும் இரத்தம்'' என்று கவிதை பாடுகிறார்.

"செச்சேச்சே! என்ன சிறுமைக் குணம் இது. அந்த அணை எங்கே, இந்தத் தொழிற்சாலை யாருக்கு? எமக்கு என்ன பங்கு? இங்கு எவருக்கு உரிமை? என்றெல்லாம், பேசிப் பேசி, மாநிலம் மாநிலம் என்று கூச்சலிட்டுக் கிடக்கிறீர்களே, சரியா? முறையா? பாரதம் ஒரு நாடு - ஒரே நாடு - உங்கள் நாடு - நம்

நாடு - இதிலே எது எங்கே இருந்தால் என்ன?'' என்று சீற்றத்துடனே பேசுகிறார், தெற்குச் சீமையினர், உரிமை, பங்கு, உறவு முறை இவைபற்றிப் பேசும்போதெல்லாம்.

அவருடைய மனம், "பாரத தேசம்' ஒரே நாடு ஒரே அரசு என்ற தத்துவத்தில் இலயித்துவிட்டிருப்பதால், உண்மை நிலைமைகளை அவர் காண மறுக்கிறார் - எவரேனும் சுட்டிக் காட்டினாலோ, சீறுகிறார்.

எனக்குத் தம்பி! அவருடைய போக்குப் பற்றி நினைக்கும் போது, கதையிலே காண்கிறோமே, கடிகாரப் பட்டைக்காக கூந்தலை விற்ற காரிகை, கூந்தல் செருகுக்காகக் கடிகாரத்தை விற்ற கணவன், இவர்கள் நினைவுதான் வந்தது - உள்ளபடி.

"பாரதம்' காண்பதற்காக, வங்கத்தை வதைத்து, பாஞ்சாலத்தை படுகளமாக்கி,

திராவிடத்தைத் தேயவைத்து, இவர்,"ஏக இந்தியா' எனும் அணியினைப் பெற்றாலும், செருகு உண்டு, கூந்தல் இல்லை! கைப்பட்டை உண்டு கடிகாரம் இல்லை! என்பது போன்ற நிலையைத்தான் உண்டாக்கிவிடும், என்ற அச்சம் எழுகிறது.

"திராவிடம்' என்ற எழுச்சியும் உணர்ச்சியும் வெட்டி எறியப்பட்டு, பாரதம் என்ற உணர்ச்சியும் கிடைக்காமல், ஓர்"சூன்ய' நிலைமை ஏற்படுமோ என்றுகூட அஞ்சுகிறேன்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

23-12-1960

30. இல்லம் இன்பப் பூங்கா

யோகி பாரதியாரின் காதல் கவிதை

பொங்கல் நாளிலே பல்துறையினர்க்கும் பரிசளித்திடுக!

இளங்கோ காட்டும் மதுரை மாநகர மகளிரின் இன்ப வாழ்க்கை

உதுமானிய சாம்ராச்சியத்தின் உடைபாடு

இந்தியப் பேரரசு என்பது போலித் தத்துவம்

தம்பி!

என் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உன் குறும்புப் புன்னகையின் பொருள் எனக்கு விளங்காமலில்லை. இந்த விழா நாளன்று, எவரெவரோ தத்தமது உடன்பிறந்தார்கட்கு விரும்பித் தருவர்

விதவிதமாகப் பொருள் பட்டும் பொன் இழையும் பாங்காகச் சேர்த்தமைத்த வண்ணம் சிறந்திடும் நல்ஆடை வகைதானுண்டு மெல்லியதாய்த், துல்லியதாய், மேனி அழகினைச் சுட்டிக் காட்டுவதாய்; எழிலூட்டி வளம் காட்டும் எத்தனையோ, வகையான அணிபணிகள் பெற்றளிக்க அங்காடியா இல்லை சுவையூட்டும் பண்டங்கள் தொகை தொகையாய் உள்ளனவே எனக்கென்று நீ இன்று எடுத்து வந்தளிப்பதுதான் என்ன என்றறிய ஆவல் கொண்டுள்ளேன், ஏன் இனியும் ஓட்டுகிறாய் என் காலம் வீணாக, கொண்டுவந்த பொருள்தனைக் கொடுத்திடு, கோலம் காண்போம், இன்று என் வருவேன், கடுகி என்றுரைத்து, நேற்று அந்திப்போதினிலே செப்பிவிட்டேன் நண்பரிடம்; அவரெல்லாம் எனைக் கண்டு, ஐயையே! இதுதானா? என

இழித்துப் பேசிடவா, அண்ணா நீ எனைவிடுவாய், இல்லை! இல்லை! நானறிவேன்! எனக்கென்றே நல்ல பொருள் எடுத்துத்தான் வந்திருப்பாய். எனக்கன்றி வேறு எவர்க்குமில்லை! நீயன்றிப் பொருள் எனக்களிப்பாரும் வேறு இல்லை! இருவருமே இதனை மிக நன்றாக அறிந்துளோமே! எனினும், காலமதை வீணாக்கி அலைக்கழித்து, எனை வாட்டி நிற்கின்றீர், எடுத்திடும் என் பொருளை! கொடுத்திடும் இப்போதே!! - என்றெல்லாம் கேட்டிடுது, உன் பார்வை, நானறிவேன். ஆனாலும், அன்புத் தம்பி! எப்பொருளைப் பெற்றாலும், அது என்ன வகை என்றாலும், பொன்னுடன் நேர்செய்து, பார்த்திடும் போதினிலே, என்னவோ அவ்வளவு ஏற்றமிலையோவென்று அங்காடி மனத்தினர் அறிவித்துவிட்டாலும், ஒன்றை

மறவாதே, இன்றல்ல நேற்றல்ல, நம் நெஞ்சம் நேசத்தால் நெகிழ்ந்திட்ட நாள் தொட்டு, என்னால் இயன்றதனை இம்மியும் வஞ்சமின்றி எடுத்து வந்து தருகின்றேன், ஏற்கின்றாய்; மகிழ்கின்றாய்! முத்து இது அல்ல, மூலையில் போட்டுவிடு என்றுரைக்கும் தாய் உண்டோ, தன் சிறுமதலை தரும் கடலலையால் ஒதுங்கிவந்து உடைபட்டு கிளிஞ்சல் துண்டு! அஃதேபோல அளித்திடும் பொருளுக் கெல்லாம், அங்காடிக் கணக்கைவிட்டு, அகத்திலே ஊறுகின்ற அன்பு பெய்திட்டதென்று, ஆங்கதனைத்தான் கொண்டு அக மகிழ்ந்து இருப்பதுதான், உடன்பிறந்தார் காட்டும் உவகைமிகு பாசமாம். இன்றும் அதுவே முறை! என்றென்றும் அம்முறையால், வாராது எக்குறையும்! குன்றின்மேல் வீழும் கொன்றை, கண்ட நம் புலவோர் பேழையுள் கிடந்திட்ட பொன்னுக்கு

நிகர் என்றார்; அது பண்பு. அவர் வழியில் நாம் வந்தோம், நாம் தாழ்ந்தால், அவர் தம்மைப் பிறர் இகழவைக்கின்றோம் என்றாகும். ஆகையினால், என்றென்றும் நம் நெஞ்சில், தமிழ்ப்பண்பு ஏற்றம் பெற்றாளட்டும்.

அண்ணன் தருகின்ற பொருளைப் பெறுங்காலைத் தந்த பொருள், தர எண்ணும் பொருளைச் சுட்டிக்காட்டிடும் வகைதான் என்று எண்ணவேண்டும். மலர் தொட்ட கரம் காட்டும் மணத்தைக் கண்டால், மலர்த் தோட்டம் பெற வேண்டும் என்ற எண்ணம் எழுதல்வேண்டும்; அஃதேபோல, அண்ணனால் இயன்றதனை அளிக்கின்றான், அதனைப் பெற்று, அவனால் ஆகாதனவற்றை நாம் முடித்து வெற்றி காண்போம், என்றெண்ணி இகல் வென்று, வாழ்க நீயும். இனிதாக நீ வாழுங்காலை, நானும் இடுக்கணிலா உழன்றிடுவேன்? இல்லை! வாழ்வேன்!!

இன்றுனக்கு விழா! இல்லம் புதுக்கோலம் கொள்ளும் நாள்! அந்தக் கோலம், அழகளிக்கும், ஏனென்றால், காணும் போது, உள்ளம் களிப்புப் பொங்கும் காரணத்தால். பொங்கற் புதுநாள் போந்தது என்றால், மங்கிக் கிடந்ததெல்லாம் தங்கமென் றாகும் காண்! வெளியெல்லாம் பொன்பரப்பி, வேலியெல்லாம் மணி இழைத்து, வைத்திருக்கும் இந்த எழில், தந்ததெவர்? உழைப்பாளி! அவர், சதிராடிக் காட்டிடும் கதிராளைக் கண்டதாலே, மயங்கிடாமல், நின்றவளை, அழைத்து வந்தார். மனைதனுக்கு! அவள் ஏறிவரும் வண்டிக்கு எருதுகள்தான் பூட்டியது, என்றாலும், எழிலரசி ஏழெட்டுக் குதிரைகளைப் பூட்டியதோர் நல்இரதத்தில் புறப்பட்டு உலா வந்தால்; ஊர் என்ன கவின்பெறுமோ - அதற்கு நேர் இஃது, இல்லை, அதனையும் மிஞ்சிடும்

எழில்மிக்க காட்சி இது என்பதனை, இன்றல்ல, என்றோ அறிந்தார், நம் தமிழர், அதனால்தான், மன்னவனைக் கண்டிட்ட மாப்புலவர் கூறி நின்றார், நின்கரத்துச் செங்கோற்குக் காப்பு எது கூறுவன், கேள்! ஏரடிக்கும் சிறுகோல்!! என்றியம்பினர்; வியந்தார்.

இன்றும், ஏதேதோ தொழில், ஏற்றம், மாற்றமிகு வினை பலவும், காண்கின்றோம், களிக்கின்றோம், என்றாலும், அச்சாணி யாக இன்றும், அமைந்து இருப்பது முன் ஆன்றோர்கள் மெச்சிப் புகழ்ந்திட்ட உழவுதான்; மறுப்பு இலை. அந்த உழவு, கனிவு பெற்றளிக்க, அந்தச் சுவை உண்டு மகிழ்ந்திடத்தான், மனை தோறும் கூடுகின்றார், மாடுகன்றும் போற்றுகின்றார், பொங்கலோ பொங்கலென்று! பாடி மகிழ்கின்றார், திருநாள் கொண்டாடும் திரு இடத்து மாந்தரெலாம். அந்த நன்னாளிலே,

அருகே கரும்பிருக்க, அதைக் காண மனமின்றி, ஆரணங்கின் மொழிகேட்டு, பலவின் கனிமொய்க்கும் பான்மையிலே, நீ இருக்க, எனை என்ன, உனக்கேற்ற பொருள் அளிக்கும் திறன் பெற்றோன், என்றா எண்ணப்போகின்றாய்? உம்! நானறிவேன், இன்றுனக்கு, பொன்னும் பொருளும் மின்னலிடையாள் வீசும் கன்னல் மொழியில் உண்டு! குழலுண்டு! யாழுண்டு! கூத்துண்டு! பாட்டுண்டு!! இவை எல்லாம் இருக்கையிலே, உனக்கின்று, நானென்ன உயர்ந்த பொருள் அளித்திடுவேன்! முயற்சியும் வீணே! பூத்தமலரின் புதுத்தேனைத் தானுண்டு, பாடி வட்டமிடும் வண்டினுக்கு, நான் இன்று, "பருகப் பால் உண்டு!' என்றழைக்க வருவது, நன்றல்ல, நானறிவேன்.

மகிழ்ந்திருக்கும் இவ்வேளை, மகிழ்ச்சியே வினையென்று, மயங்கிடுதல் கூடாது

என்று மூதறிஞர் இயம்பியதை மட்டும், மறவாதிருப்பதுதான், மாண்பு; தமிழர் நெறி.

மகிழ்ச்சியே மயக்கம்; மன்னுயிரைத்தான் மாய்க்கும்! என்று கூறினோர் அல்லர் நம் தமிழர், எனினும், மகிழ்ச்சியே வினை; வேறு செயல் வேண்டாம், என்றிருத்தல் நன்றன்று; வினை வித்து; மகிழ்ச்சி, விளைவு; அந்த விளைவு அவ்வளவும், தின்று தீர்த்திட்டால், பின்வினைக்கு வித்து ஏது? எனவே, விளைவு அளிக்கும் சுவையினை உண்டு மகிழ்ந்திருப்பதுடன், இருந்திடாது "வித்து' எடுத்து வைத்து, மீண்டும் வினைமேற்கொளல்வேண்டும்; அங்ஙனம், முறை வகுத்துக்கொண்டால்தான், வாழ்வில் வளம் காண வகை கிடைக்கும், தொடர்ந்து.

மகிழ்ச்சி, மயக்கமாகுதல் கூடாது; மது மாந்திடும் மந்தி போன்றதன்று மனிதகுலம்! மகிழ்ச்சி, புது முயற்சிகட்கு ஊக்குவிக்கும்

மாமருந்து; மருவன்று.

கரும்பளித்த கழனி, மீண்டும் கரும்பளிக்கக் காண்கிறோம்; மண்தான்; எனினும் மதிமிக்க செயலன்றோ! மனிதன், அதனினும் மேம்பட்டன்றோ இருத்தல்வேண்டும்? எனவே, ஒரு விளைவு, மறுவினைக்குத் துவக்கம்; மகிழ்ச்சி வினையின் இறுதி முடிவு அல்ல; வினைப்பயன்; புதிய வினைக்கு அழைப்பு. புதிர் அல்ல, புண்ணயம் பேசிடுவோர் கூறிடும் தத்துவமும் இஃதல்ல; பொருள் பொதிந்த உண்மை; தமிழர்க்கு இது புதிதுமன்று.

தாயின் அழகைப் பெற்றிடும் மகவு, பிறகு தாயுமாகித், தன் அழகளித்துச் சேயை அளித்திடும்; காண்கிறோம் அன்றோ!

அதுபோலவேதான், மகிழ்ச்சி பெறுகிறோம் விழாக் காரணமாக, எனில்,

அந்த மகிழ்ச்சியில் திளைத்துப் பிறகு, தொடர்ந்து, தொகை தொகையாக, வகை வகையாக, மகிழ்ச்சி பெற்றிடச் செயலில் ஈடுபடவேண்டும்.

குழலில் உள்ள துளைகளின்மீது விரல் சேர்க்கும் இசை வல்லான், என் செய்யக் காண்கிறோம்? எல்லாத் துளைகளையும் இறுக மூடிவிட்டால், இசை தானும், எங்கிருந்து எழும், கூறு? இசையின் வகைக்கேற்ப, அளவுக்கேற்ப, இன்னின்ன நேரத்தில், இன்னின்ன முறையோடு, விரலுக்கும் குழலிலுள்ள துளை கட்கும் தொடர்புண்டு என்பது இசைவல்லோன், கண்டறிந்த இலக்கணம், அதற்கேற்ப, மூடுகிறான் ஓர் துளையை, முற்றும் ஒலி பிறக்கும் நிலையிலே வேறோர் துளையை விட்டுவைத்துக் காட்டுகிறான், தொட்டும் தொடாததுமாய் விரல் இருக்கும் சில துளையில், பாதி, கால்,

அரைக்கால் என்று பாங்கறிந்த அளவு முறை தானறிந்து, விரல்களையே வினை செய்ய விடுகின்றான்; அதனால்தான் ஏழிசையின் இனிமைதனை, மானிடர் கேட்டு இன்புற்று மகிழ்ந்து இருக்கின்றார்; நாகமும் தீண்டாதாம், நஞ்சு கொண்டதெனினும்!

வாழ்க்கையே, அதுபோல்தான்.

அளவு, தொடர்பு, அறிந்து வினை செய்து, எதற்கும் முறை வகுத்து, இன்பம் காண்பது, வாழ்வு! அதுவும், மூழ்கிச் செயலற்றுப்போக அல்ல; அது மடமை! துய்த்திடலாம் வாழ்வின் சுவை; துஞ்சிட அல்ல; வினை மேற்கொள்ள; தொடர்ந்து செயலாற்ற; ஏனெனில், இயங்குதல் வாழ்க்கையின் இலக்கணம்; இனியன புரிதல் அறநெறியாகும்; அறநெறியதனை அடவி ஏகாமல், மாடும் மனையும் சூழ இருந்திடும் மாண்புமிகு இல்லறம் அதனிலேயே, பெற்றிட

இயலும் என்று கூறினர், தமிழர்; துறவோரும், இவரில்லை எனில் இல்லை யாங்கண் என்றார் உணர்ந்து.

இல்லறத்தாருக்கு நல்ல விழாவாக அமைந்திருப்பதுதான், பொங்கற் புதுநாள், எனவேதான், இன்று, ஈசன் திருவடி நிழலைச் சேர்ந்திடும் காதைபற்றிப் பேசிடும் கவலை இல்லை; பொங்கிற்றா பால்! என்று ஒருவருக்கொருவர் கேட்கும், பூரிக்கும் காட்சி காண்கிறோம்.

“எப்படியும் வந்திடுவார் என்றாள். அவள் ஆரூடம் இப்படிப் பலிக்குமென்று, எண்ணவே இல்லை’’ என்று இருபதாண்டு தாங்கும் எழிற்கொடியைத்தான் பார்த்து, இதுபோல மும்மடங்கு ஆண்டு கண்ட முதியவன் கூறி நிற்க,”நானென்ன அவருக்காக, ஏக்கமா கொண்டிருந்தேன்? அவர் வந்த காரணமும், எனைக் காணத்தானா?

இப்பக்கம் ஏதேனும் அலுவல் இருந்திருக்கும்; அக்காரணம்பற்றி வந்திருப்பார், மனைவரையில்'' என்றந்த மலரணையாள், இடிக்கின்றாள் சொல்லாலே. வெடுக் கென்று இதழ் கடிக்கும் தன் மகவுக் கன்னத்தை. இதுகேட்டு, இலேசாகத் தட்டுகிறான் பெற்றெடுத்தோன்; "ஏதேது! மெத்தவும் நீ; போக்கிரியாகிவிட்டாய்! உன்னைக் கட்டித் தழுவி நான், கசக்கிவிடப்போகிறேன், பார்!'' என்று கூறுகிறான், குழவிக்காம் அப்பேச்சு! ஆனால், பார்வை? அவள்மீது!!

இதைப் பாரண்ணா! இதைப் பார்! பால் பொங்குகிறது பார்! பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!! என்று கூவுகிறாள், அவன் உடன்பிறந்தாள்; அவள் செங்காய்!

•

"ஏடா உன் அண்ணன், ஏதுகூற

முனைந்திடினும், இழுத்து வந்து பேசுவானாம் காதல் கதை எல்லாம்; கடிந்துரைத்தார். ஓர்"கனம்' கால்வாய் திறப்பு விழாவன்று; அவர் உரைத்தது போலவா உன் அண்ணன் பேசுகிறான்?'' என்று கேட்டிடுவார், காதற் காவியத்தின் கடைசி ஏடு வரை, படித்து முடித்திட்ட முதியோர், இல்லத்துப் பெரியோர். அவரல்ல பேசுவது; அமைச்சர்! அவர்க்கும் கோபம், காதல் மீதல்ல; என்மீது! அதற்கும் காரணம், காதல் அவர்க்கெல்லாம் காஞ்சிரமுமல்ல!! எனினும், ஏன் இதுபோல் அவர் பேசித்திரிகின்றார் என்பாயேல், மாசு எனக்குச் சேருமாம்; மனப்பால் குடிக்கின்றார். அறம் பொருளை உரைத்ததுடன், வீடு காண அழைத்துச் சென்றாரில்லை, அருங்குறளை ஆக்கியோனும், "இன்பம்' தந்தார்; அஃது இயற்கை எனும் காரணத்தால். அஃது அற்றுப்போமேல், உயிரில்லை, ஊரில்லை,

ஊராளும் முறையுமில்லை; ஊராள் வோர்க்கோ இது புரியவில்லை.

நானுங்கூடத் தீதோதான் காதற்றிறமுரைத்தல், ஆன்றோரெல்லாம், அதனை வெறுத்துத்தானா கூறியுளார் என்பதனைக் கண்டறிய, ஏடு பலவும் பார்த்தேன், அதனுள் இருப்பதனை எடுத்தியம்பிய வல்லோர் தம்மை அடுத்துக் கேட்டுப் பார்த்தேன்; அமைச்சர் பேசும் பேச்சு, பேச்சாக இருத்தல்கூட, அமைச்சராய் அவர் இருக்கும் காரணத்தாலேதான்; வாழ்வுக்கு நல்லோர்கள் வகுத்த நல்லறமே காதல் என்கின்றார்; அறிகின்றேன்.

காதலே யுலகம்! காதலே வாழ்க்கை!

காதற் களிப்பே கடவுட்

களிப்பாம்;

காதலின் மறுப்பே கவலையுந் துயரும்!

காதலின் அளிப்பே கட்டறு மின்பம்!

காதலால் உயிரைக் கடவுள் படைத்தான்.

காதலித் தின்னுங் கண்ணிலம் பெருகவே!

விண்மீன் கணங்களு மிளிர்வன காதலில்!

தண்ணுங் காற்றுந் தவழ்வன

காதலில்

உண்கனி விளைவதும் உள்ளக் காதலால்!

புன்னகை யொன்றாற் பூத்திடுங் காதல்;

கண்கள் கதுவிக் கனவுகள் காணும்;

இன்னிய காதலால் எண்ணம் உயரும்;

பொன்னொளிர் வனப்பும், புதுப்புது மகிழ்வும்,

நாளொரு மேனியும், நாண்மல

ரழகும்,

வாழ்விழி நோக்கின் வரப்பிர சாதம்.

புள்ளின் பாட்டும், பூவின் மணமும்

கள்ளுண்ண வண்டும், காற்றின் உயிர்ப்பும்

அன்னமும், மானும், அழகிய கிளியும்,

வன்ன வியற்கையும், வசந்தப் பசுமையும்,

காதலர் தூதே! காசினி

யெல்லாம்

காதலர் கடிதம், காதலர் பேச்சு!

காலமும் இடமும் காதலை வெல்லா;

கால மிடத்தைக் காதலே வெல்லும்;

காதலே காய கற்பமு மாகும்;

காதலே தேவர் சோதிக் கனவாம்;

கண்களாற் பேசிக் கருத்திரண் டணைத்துப்

புண்களை யாற்றிப்

புலன்களைப் பற்றி,

இமையவ ரின்பமும் இணையிலா இன்பம்

இமையி னளித்திடும் இன்பமே காதல்.

காதல் வாழ்க! காதலர் வாழ்க!

காதலால் வாழ்வுக் கற்பக மோங்குக!

ஓங்குயர் காதலே உயிர்க்கடை யாளம்

நீங்காக் காதலே நித்திய வாழ்வு;

காத லற்றவர் கட்டையைப்

போல்வர்;

உயிரின் இன்பமே, உயிரெனும் பசிய

பயிரினை வளர்க்கும் பைம்முகி லேயுனைப்

பிரிந்து வாழேன்; பிதற்றியுன் பெயரை

விரிந்த வுலகெலாம் வெளிகொண் டலைந்தேன்;

நீவே றில்லை; நான்வே றில்லை;

பூவே றில்லை; நிறம்வே

றில்லை;

நானுன் யாக்கை; நீயென் னாவி;

நானுன் வாழ்க்கை; நீயென் வையம்;

உள்ளந் தாராய்; உயிரைத் தாராய்;

உள்ளம் வணங்கும் ஒன்றிய காதலே!

எப்படித் தம்பி, கவிதை!! ஏதேது, அமைச்சர்கள் சொல்லச் சொல்ல, அண்ணன் அகவலாகக் கொட்டுகிறான்போலும், காதல்பற்றி; என்றுதானே எண்ணிக்கொள்கிறாய்; தம்பி! இது நான் தொடுத்த கவிதையே அல்ல!!

வாழ்வு எனும் மாயப் பைசாசத்தின் பிடியில் அகப்பட்டு உழன்று, பேரின்பம் பெறவே முடியாத வகையில் சிற்றின்பச்சேற்றில் அழுந்திக் கிடந்திடும், அறம் மறந்த ஒருவரின், வேட்கை குழம்பி வெளிப்பட்டதுமல்ல. இளைஞர் மனத்தினை ஈர்த்துக் கட்சிக்கு வலிவு தேடும் ”கதை கூறி’யின் பேச்சுமல்ல. கண் கவரும் காட்சி காட்டிக் காசுதனைப் பறிக்கக் கலையை விலையாக்கும் காதகரும் அல்ல இவர்! தூயவர்! ஆம்! அங்ஙனம் நான் கூறுவதை அமைச்சரும் ஒப்புவர்! மேலவர்! அவர் அறிவு கண்டோர் கூறுவர் அதுபோல்! அதுமட்டுமன்று தம்பி! புலன் அடக்கி வாழ்கின்றார், புதுயோகி இவர்; என்று, அமைச்சர் போன்றார் போற்றினர், நாடறியும். அரவிந்தர் அமைத்த நல் ஆசிரமம்தனில் இருந்து; அறம் வளர்த்தார், இவர் துறவி என்று அநேகர் கூறினர். அந்தத் துறவி தந்த

அருங்கவிதைதான், இங்கு நான் இணைத்துத் தந்தது. காதலின்பம், மாண்பு கூறிடுதல் தீதென்றால், இக்கவிதைக்கு என்ன பெயர்? இதனைத் தந்த துறவியை அறிவர் நாட்டார்; சுத்தானந்த பாரதியார்.

அவர் பாடி அளித்திட்ட இந்த அரும் கவிதை கண்ட அமைச்சர்கள், நாவெல்லாம் அசையாது இருந்தது ஏன்? பசைபோட்டு அவர் நாவை ஒட்டிவைத்தனரோ, எவரேனும்? கதைக்கின்றார் இதுபோது, "கழகம் உள்ளோர், காதற்கதை பேசி வளர்க்கின்றார், கேடு' என்று; அன்று துறவி தொடுத்த கவிதை கண்டு, வாய் அடைத்துக் கிடந்திடக் காரணம் என்ன? அவர் கவி பாடினார்; கட்சி நடத்தவில்லை, நாம் கவி பாடவுமில்லை, கட்சி ஒன்றில் ஈடுபட்டோம்; அந்தக் கட்சியின் வளர்ச்சி கண்டதால் அவர்க்குக் கசப்பு! உள்ளே வெந்தால், வாயும் கசக்கும், என்றுரைப்பர் மருத்துவம்

அறிந்தோர், இவர்தம் கசப்புக்கு இஃதே காரணம். வாய்க்கசப்புடையோர் வட்டில் தன்னில் பழச்சாறு பெய்து தந்திட்டாலும், ஐயோ! எரியுது! ஆகாது, இது தீது! என்றே அலறுவர்! குறை, அவர் நாவில்!! நமது பேச்சில் இல்லை. அகம் என்றும், புறம் என்றும் அன்று புலவோர் வகுத்த காலை இவ்விதம் சில பேர் குமுட்டல் கொண்டோர் வருவர் என்று துளியேனும் எண்ணவில்லை. போகட்டும்! அவர் நோய். விரைவில் தீரட்டும்! விழாநாளன்று, அவர்க்கும் நல்வாழ்த்தளிப்போம், அவரும், தமிழர் ஆதலாலே.

•

இல்லற இன்பம், மாண்புடையது என்பதைச் சுவை பட எடுத்துக்காட்டும் விழாவாக, பொங்கற் புதுநாள் இருப்பதனால்தான், தம்பி! தமிழகத்திலே

புதியதோர் எழில் அந்நாளில் பூத்திருக்கிறது.

வேட்டுச்சத்தம் கொட்டு முழக்கு இல்லை!

தாளமும் மேளமும் தோற்றிடும் அளவில், ”கைலையும் வைகுந்தமும்’ கிலிகொண்டு கிடுகிடுத்து, ஆங்குள்ள கடவுளர் அவரவர் வாகனம் கிடைத்திடினும் மேய்ந்திட எங்கேனும் போயிருப்பினும், இனியும் தாமதித்தால், இக்கூச்சல் நம் உலகினைத் துளைக்கும் என்று அஞ்சி ஓடிவந்து, என்ன வேண்டும்? என்று கேட்டு, வரம் தந்து போகவேண்டும் என்று கூறும் வகையில், கோவிந்தன் பெயரையோ பரமசிவன் நாமந் தனையோ, பல்வேறு வகையான ஒலியாலே எழுப்பிடும், பஜனைக் கோஷ்டிகள் பாற்பொங்கல் நாளன்று இருப்பதில்லை.

வளைஒலி எழும்பிடும்; வண்ணக் கலவையால் கோலம் போடுவர்! வீடு அழகு

பெறும்; வீட்டுளார் புத்தாடை புனைவர்; மாடு கன்று நீராட்டல் பெறும்; அவற்றினுக்கும் புதுக்கோலம் புனைவர்; மஞ்சளும் இஞ்சியும், அவரையும் துவரையும், பூசுணையும் பிறவும் கொட்டி இருக்கும்! வாழையுடன் கரும்பிருக்கும்; வடித்தெடுத்த சோற்றினிலே சுவையும் குழம்பி யிருக்கும்; உண்டு மகிழ்ந்திருப்பர்; உரையாடிக் களித்திருப்பர்; இது தமிழர் திருநாள்.

தம்பி! எனக்கொரு ஆசை: சிற்சில ஊர்களிலே ஓரளவு செய்கின்றனர், நமது தோழர்கள்.

தமிழர்கள் திருநாள், அந்த ஊருக்கே, மகிழ்ச்சி தரும் நாள்! எனவே, ஊர் மக்கள் அனைவரும், விழாக்கோலம் பூண்டிருக்கும் அந்நாள், உழைப்புக்கும், அறிவுக்கும், எழிலுக்கும், ஏற்றத்துக்கும், ஊர் மன்றம் புகழ்மாலை சூட்டிப்

பெருமைப்படுத்தவேண்டும்.

உழவுத்திறன் காட்டச் சொல்லி, உழவர்க்குப் பரிசு அளித்தல்,

வலிவுத்திறம் விளக்கிடும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தி வெற்றிகொள்வோருக்குப் பரிசளித்தல்.

நேர்த்திமிக்க ஆடை நெய்தவர்க்குப் பரிசு,

ஊர் மக்கள் நோய்தீர்த்த உத்தமருக்குப் பரிசு,

கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியருக்குப் பரிசு,

முதல்தரமான பசு,

நல்ல காளை,

அழகான கன்று,

எடுப்பான தோற்றமுள்ள சேவல், கோழி,

அழகான குழந்தை,

ஆடல் பாடலில் வல்லோர்,

புதிய கவிதைகள் புனைந்தோர்,

நல்ல ஏடு தருவோர்,

இப்படிப்பட்ட, சிறப்பு இயல்புகளுடையோரைத் தேர்ந் தெடுக்க ஊர் மன்றம் கூடிப் பரிசளித்து, மகிழ்ந்து கொண்டாட வேண்டும்.

அன்றலர்ந்த பூத்தொடுத்த அழகான மாலையோ,

புத்தாடையோ,

பொற்பதக்கமோ,

பரிசுப்பொருள், எதுவாக இருப்பினும், அன்று பெறுவதிலே ஓர் தனி மகிழ்ச்சியுண்டு; அத்தகைய ஓர் ஏற்பாடு விழாவினுக்குச் சிறப்பளிக்கும்.

களம் சென்று மட்டுமே உள்ளவுரம் காட்டவேண்டும் என்று தமிழர் இருந்தார் இல்லை.

ஊரார் கண்டு மகிழ, தம்மையொத்தவர் வியந்திட, வீர விளையாட்டுகளில் ஈடுபட்டு, வெற்றிபெற்று, விருது பெற்றனர்; விழாக்களிலே இவை தனிச்சிறப்பான இடம் பெற்றிருந்தன.

மல்லர்கள், தமது திறம் காட்டினர்.

மாடு அடக்குதல், வீர விளையாட்டாகத் திகழ்ந்தது.

கூடிப்பாடுதல், கைகோத்து ஆடுதல் - இவை மகிழ்ச்சிப் பெருக்கைக் காட்டின.

விழாக்களில், ஈடுபடும்போது புது எழிலைப் பெற்றனர் - அணிபணியாலும் ஆடை வகையாலும் ஆடவரம் ஆரணங்குகளும்.

செல்வம் சீரளித்தது என்பதனை எடுத்துக் காட்டுவனவாக, விழாக்கள் இருந்து வந்தன என்பது மட்டுமல்ல, விழாக்கோலம், கலை அழகு வளர்ந்திட, வாய்ப்பு அளித்தது என்பதும் தெரிகிறது; இலக்கியம் பயிலும்போது,

கசங்கிய கண்ணினராக, கூப்பிய கரத்தினராக, வாழ்வைச் சுமையாகக் கருதிக் காதலை வெறுத்து மாதரை மாயப்பிசாசு என்று இழித்துக்கூறி, தமிழர் வாழ்ந்தாரில்லை.

வாழ்க்கையும் ஒரு கலை என்று அறிந்திருந்தனர்.

வாழ்க்கைக் கலையினை விளக்கத் தனியாக நூலொன்று தந்தாரோவெனில், இல்லை. ஆனால், அறநெறி உரைத்திடத் தமிழ்ப்புலவோர் ஆக்கி அளித்த காப்பியங்களிலேயே, மக்கள் வாழ்ந்த

வகையினை அழகுற எடுத்துக் கூறும்போது, கலை அறிவுடன் அவர்தம் வாழ்க்கை அமைந்து இருந்ததை எடுத்துக் காட்டினர்.

பூம்புகார், மதுரை மாநகர் இரண்டிலேயும், மாந்தர் வாழ்க்கை, சிறப்பாக மகளிர் வாழ்க்கை இருந்த விதத்தைப் படம் பிடித்துக் காட்டும் பான்மையிலே தந்தவர் துறவி, இளங்கோ அடிகள். மலரணி கொண்டை மாதர்க்கு அழகு!

இளங்கோ அடிகள், மதுரை மகளிர், மலரணிந்து மகிழ்ந் திருந்தனர் என்று மட்டுமல்ல, மலர்கள் பல வண்ணங்களாக உள்ளன அல்லவா? அவற்றினை ஒன்றாகத் தொடுத்து, அணிந்தனர் என்பதையும் கூறுகிறார்.

மலர், மணம் தருகிறது! எனவே, மாதர்தம் கூந்தலுக்குச் சேருகிறது.

ஆனால், இது, கலை அழகும் பெறுகிறது, கலை அழகு உணர்வு மிகுந்தவர் மதுரை மகளிர் என்பதைக் காட்டுகிறது. அவர்கள் முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ முதலியவற்றினைத் தொடுத்து அணிந்துகொண்டனர் என்று அடிகளார் கூறும்போது.

அந்த மலர்களையும், மதுரை மகளிர், முத்தாரங்களுடன் தொடுத்து அணிந்திருந்தனராம். பாண்டிநாடு முத்துடைத்து அல்லவா!

செல்வம், சீர், கலை உணர்வு, வாழ்க்கையை வெறுத்திடாத தன்மை, இவ்வளவும் விளங்கும் வகையில், மதுரை மகளிர் முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பு முதலிய வற்றை முத்தாரங்களுடன் தொடுத்து அணிந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

வாழ்க்கை இவ்விதம் இருத்தல்தான் முறை; மதுரை மகளிர் இப்படி இன்பமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதனை, அடிகள், எப்போது காட்டுகிறார்? கண்ணகி, கணவன் அன்பைத் திரும்பவும் பெற்றுப் புதுவாழ்வு தொடங்கப் பொருள் தேட முயலும் நோக்குடன் கோவலனுடன் வருகிறபோது!

மதுரை மகளிர், முத்தாரமும் மலரும் தொடுத்து அணிந்துள்ளனர்; வணிகக் கோமான் மகள், கண்ணகி இதனினும் மேலாக, அணிபணி பூண்டு வாழ்ந்திடலாம்.

ஆனால், காற்சிலம்பு விற்றால்தான், கைப்பொருள் கிடைக்கும் என்ற நிலை!

என்றாலும், மகிழ்ந்து இருக்கும் மதுரைமகளிரைக் கண்ட போது, புதுவாழ்வு கிடைக்கும்; அப்போது, இதுபோல. . .! என்ற எண்ணம் கண்ணகிக்கும்

தோன்றியிருக்குமோ, என்னவோ!

காலத்துக்கு ஏற்றபடி, தம்மை அழகுபடுத்திக்கொள்வது, நுண்ணிய கலை உணர்வைக் காட்டுவதாகும்.

இப்போதும், ஜப்பான் நாட்டுப் பெண்கள் தமது இல்லத்தையும், தம்மையும், வண்ணங்களின் வகை அறிந்து அழகு படுத்தும் நுண்கலை மிகுதியாகப் பெற்றவர்கள் என்று கண்டறிந்தோர் கூறுகின்றனர்.

காலத்துக்கு ஏற்ப, ஊர் கோலம் கொள்கிறது - இயற்கை அப்படிக் கோலத்தை மாற்றிக் காட்டுகிறது.

அந்தக் கோலத்துக்கு ஒத்ததுபோல ஆடை அணி புனைவது, கலை அழகினை நன்கு உணர்ந்தால் மட்டுமே முடியும்.

அத்தகைய கலை உணர்வு மதுரை

மகளிருக்கு இருந் திருக்கிறது என்பது வாடைக்காலத்துக்கு ஏற்ப அரத்தப் பூம்பட்டையை, மகளிர் அணிந்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து தெரிகிறது.

பூம்புகார் நகரத்துப் பெண்கள் பகலில் பட்டு ஆடையும், இரவில் பருத்தி ஆடையும் உடுத்தினராம்.

ஆரணங்குகள் மட்டுமல்ல; ஆடவரும், அணிபணி பூண்டு, தம்மை அழகுபடுத்திக்கொண்டனர். வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்குவளை மலர்களை, ஆடிடும் விறலியர் அணிவராம்.

வெள்ளியால், நார்! பொற்குவளை! - வண்ணங்களை அடுக்கி அழகுபெறும் கலைத்திறனை, கலையால் கவர்ச்சி யூட்டும் விறலியர் பெற்றிருப்பது

மிகப்பொருத்தமல்லவா?

ஆடவரோ, கடகம் கழல் எனும் அணிகள் பூண்டிருந்தனர்.

அவை, செல்வத்தைக் காட்டுவன மட்டுமல்ல; வீர வெற்றிகள் பெற்றவர் என்பதையும் காட்டுவன.

கொள்ளழல் புரிந்த தாமரை

வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே.

- புறநா: 11

எரியகைந் தன்ன வேடி தாமரை

சுரியிரும் பித்தை பொலியச்

சூட்டி

நூ-ன் வலவா நுணங்கரின் மாலை

வாலொளி முத்தமொடு பாடினி யணிய

- பொருந: 159-62

(வேடி - சிவந்த (பொன், அழகிய); பித்தை - கூந்தல்; பாடினி - பாடுபவள்.)

அணிவன, சூடுவன என்பதில் மட்டுமல்ல, பூசுவனவற்றிலே, பல பொருள், பல முறைகள் இருந்திருக்கின்றன.

மாதவி, தன் கூந்தலைப் பத்து வகைப்பட்ட துவர், ஐந்து வகைப்பட்ட விரை, முப்பத்து இரண்டு வகை ஓமாலிகைகள்

முதலியன ஊறின நல்ல நீராலே கழுவி, வாசனைப் புகையூட்டி கஸ்தூரி, சவ்வாது கலந்த தைலத்தைத் தடவி அழகுபடுத்திக் கொண்டாள் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

இப்படியெல்லாம் செய்து, கோவலனை மயக்கினாள் - என்று கூறுவர், நுனிப்புல் மேய்வோர்.

எண்ணிப்பார்த்து வியப்படைய வேண்டியது அஃது அல்ல. இவ்வளவு இன்பமாகச் செல்வமாகக் கலை அழகு உணர்வுடன், காட்சிப் பொருளாக வளர்ந்த அந்த ஆடழலகி, கோவலன் தன்னைத் துறந்தான், பின்னர் வெட்டுண்டு இறந்தான் என்றவுடன், என்ன ஆனாள்? எல்லாம் துறந்தாள்!!

அவ்வளவு அழகூட்டும் முறைகளும்,

அவனுக்காக; அவனை மகிழ்விக்க! அவன் இல்லை! அவை இனி ஏன்? என்று துறந்தாள்.

ஆடலழகியரும் விறலியரும் அழகளிக்கப் பலமுறை தேடிக் கொள்வதிலே வியப்பென்ன? அது பொதுமுறையாமோ? என்று சிலர் ஐயப்படுவர்.

அலத்தகம் எனும் செம்பஞ்சுக் குழம்பை, கால், உள்ளங்கை, இதழ், நெற்றி, நகம் - இங்கெல்லாம் பூசி இலக்கணையார் மண அறைக்கு அழைத்துக்கொண்டு வரப்பட்டார் என்று சிந்தாமணியில் காண்கிறோம்.

கால வேறுபாட்டினைக் கவனித்துப் பெண்கள், மலர் சூடுவர் என்பதும், கூறப்பட்டிருக்கிறது.

மாதவியின் ஒப்பனை

பத்துத் துவரினும் ஐந்து

விரையினும்

முப்பத் திருவகை யோமா லிகையானும்

ஊறின நன்னீர் வுரைத்த நெய்வாசம்

நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்

புகையில் புலர்த்திய பூமென் கூந்தலை

வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி

- சிலப்: கடலாடு காதை: 76-81

(துவர் - பூசுவன, விரை -கலவைச் சாந்து; ஓமா-கை - மணம் உள்ள நீரில் இடும்பொருள்; மான்மதம் - கஸ்தூரிக் குழம்பு.)

அம்மலர் அடியுங் கையும் அணிகிளர் பவழவாயும்

செம்மலர் நுதலும் நாவும் திருந்தொளி

உகிரோ(டு) அங்கேழ்

விம்மிதப் பட்டு வீழ அலத்தகம் எழுதி இட்டாள்

அம்மலர்க் கண்ட முள்ளிட்

டரிவையைத்

தெரிவை தானே.

- இலக்கணையாரிலம்பகம்: 69

(நுதல் - நெற்றி; உகிர் - நகம்; அலத்தகம் - செம்பஞ்சுக் குழம்பு.)

முன்பனிக் காலத்தில், மகளிர், தம் கூந்தலில் மல்லிகை யையும், அதன் அருகே வாகையையும் சூடிக்கொள்வாராம்.

இளவேனிற் காலத்திலோவெனில், கழுநீர் மாலையாம், குவளை மலராம்!!

தம்பி! இவ்விதமாகவெல்லாம், இல்லறத்திலே, வாழ்க்கைக் கலையழகுடன், வாழ்ந்துவந்தவர் தமிழர், முன்பு!!

தமிழரின் தனிச்சிறப்புடைத் திருநாளாம்,

பொங்கற் புது நாளன்று - ஓர் நாளாகிலும் - எழில் குலுங்க, இன்பம் துலங்க, மகிழ்ச்சி பொங்க இருக்கவேண்டாவா? அதை அறிந்தே, தமிழகம் விழா நடத்தி மகிழ்கிறது.

•

எதனையும் அளித்திட இயலாதவராக. உள்ள இன்றைய ஆட்சியாளர், தமிழர் வாழ்ந்த வகை அறிந்து அகமகிழ்ந்திடும் வாய்ப்பினைப் பெறுகிறார்களே, இன்று மக்கள் - ஓரளவுக்கு - நமது கழகம், தரணி மெச்சத் தமிழர் ஓர் காலத்தில் வாழ்ந்த சீரினை எடுத்துக்காட்டுவது கேட்டு; அந்த மகிழ்ச்சியையாவது அனுபவித்துத் தொலைக்கட்டும், என்று வாளா இருக்கிறார் களா? இல்லை, வேலாய்க் குத்துகிறார்கள்! அதென்ன, தமிழ், தமிழர், தமிழ்நாடு, தமிழ்ப்பண்பு! இதெல்லாம் சின்னப் புத்தி! பேதப்புத்தி! ஆகா வழி! என்று பேசுகின்றனர்.

பேசுவதுடன், இவ்விதமெல்லாம் தமிழ் இனம், தமிழ்நாடு, திராவிடம், தனி அரசு என்றெல்லாம் பேசுகிறார்களே, இந்தக் கழகத்தார்கள், ஏன் தெரியுமா? என்று கேட்டு விடையும் தருகிறார்கள்; எல்லாம், அமைச்சர் ஆகும் ஆசையினால்தான் என்று.

பாரேன், தம்பி! ஒவ்வொரு நாட்டு அறிவாளர், வித்தகர், வேலையற்றுப்போய், சந்திரமண்டலம் போகும் வழி, செவ்வாய் மண்டலத்தின் தன்மை, எனும் ஏதேதோ ஆராய்ச்சி நடத்து கிறார்கள் நமது - அமைச்சர்களைப் பார்! யாரும் நடத்தாத, எவராலும் நடத்த இயலாத, எவரும் வியந்து பாராட்டத்தக்க ஆராய்ச்சி நடத்திப் பேருண்மை ஒன்றைக் கண்டுபிடித்துக் கூறி விட்டனர் - தனிநாடு என்று நாம் பேசுவது மந்திரி வேலைக்காகத் தான்! என்று!!

இப்படி அமைச்சர்கள் பேசியது கேட்ட,

நண்பரொருவர், சொன்னார், நூலை அறுத்திடுமோ என்று அஞ்சி, அங்குக் குதித்துக் கூத்தாடிய குரங்குகளை ஒருவன் விரட்டினானாம்! குரங்கு, ஓஹோ! என்போன்ற "வால்' இவனுக்கு இல்லாத பொறாமையால், இவ்விதம் செய்கின்றான்! எனக்குள்ள பெருமையே இந்த"வாலால்' வருவதன்றோ, இது அந்த மானிடனுக்குக் கிடைத்திடலாமா - கூடாது - என்று கூறிற்றாம், ஏதோ அப்படி ஒரு கதையாம்.

நான்தான், மெத்தவும் கேட்டுக்கொண்டேன், அந்த நண்பனை, இப்படி நாலு பேர் நடுவே பேசாதேயப்பா - சரியல்ல - நமக்கும் அவர்களுக்கும் பிறகு வித்தியாசம்தான் என்ன - அமைச்சர்கள் பேசட்டும் - தாங்கிக்கொள்வதிலே என்ன தலை இறக்கம் - அவர்களையே நாடு தாங்கிக் கொள்கிறபோது, அவர்களின் நாக்குத்

தீண்டுவது கண்டு நாம் கோபப்படலாமா? என்றெல்லாம் சொல்லி வைத்தேன்.

தம்பி, தமிழகத்தின் பழங்காலச் சிறப்பினை மறந்து விட்டால், இன்று அமைந்துள்ள, வட அரசுக்கு இம்மியும் எதிர்ப்பு எழாது என்றெண்ணி, வரலாற்றையும் இலக்கியத்தையும் கூட, அழித்தொழிக்க முனைகின்றனர்.

தமிழ் உணர்வு, பொங்கற் புதுநாள் போன்ற பொன்னான விழாக்களின்போது, ஏற்றம் பெற்றுத் திகழ்கிறது.

இதை அறிந்து, பாழாக்க இனி, என்னென்ன செய்வாரோ, யாரறிவார்?

•

முன்பு நான், வாழு! வாழவிடு!! என்றெழுதியபோது, நமது இயற்கையும், உரிமையும் கொண்ட தமிழர், திராவிடர்

என்ற உணர்ச்சியியையும் அழித்தொழித்து, பாரதம், ஏக இந்தியா எனும் உணர்ச்சி போலி என்ற காரணத்தால் அதைப் புகுத்தி வெற்றி காணவும் முடியாமல் ஒரு ”சூன்ய’ நிலைமையை, எங்கே இவர்கள் ஏற்படுத்திவிடுவார்களோ என்ற அச்சத்தை வெளி யிட்டேன். பலர், அவ்விதம் அஞ்சத் தேவையில்லை. நாம், நமது இன உணர்ச்சியை என்றும் இழந்துவிடப்போவதில்லை என்றெல்லாம் எழுதி எழுச்சியூட்டினார்கள். அவர்கட்கு என் நன்றி. பொங்கற் புதுநாள்போன்ற விழாக்காலம், தமிழ் இன உணர்வை, மங்கிடாதிருக்கச் செய்யும் மகத்தான நல்வாய்ப்பு. எனவே, மனைதோறும் பெற்றிடும் மகிழ்ச்சியுடன், மன்ற மெங்கும், தமிழர் மாண்புபற்றி எடுத்துரைத்திட இந்த நாட்களைப் பயன்படுத்துதல் ஏற்றம் அளிக்கும்;

அறிந்து செயல்பட வேண்டுகிறேன்.

•

உருட்டி மிரட்டினாலும், உறுமிக் கிடந்தாலும், உண்மை யினை அடியோடு ஒழித்துவிடுதல் இயலாது.

வரலாறு தெளிவாக உணர்த்துவது, ஓர் பேருண்மை. நமது இடம், திரு இடம்; வடக்கே வேறு இடம்; இரண்டையும் பிணைக்கிறார்கள்; அது ஒவ்வாது என்பதை எடுத்துக் கூறாத, வரலாற்றுப் பேராசான்களும், உளநூல் வல்லோரும் - விலைக்கு வாங்கப்பட்டவர்கள் தவிர - இல்லை என்று கூறலாம்.

தம்பி! இந்தியா என்பது இயற்கையானது அல்லதான் - பல்வேறு இனங்களின் இருப்பிடங்கள் ஒன்றாக இணைக்கப் பட்டுள்ளன என்பதும் உண்மைதான் - என்றாலும், இந்தியாவை ஒரு

நாடு ஆக்கிவிட்டோம் - ஒரு பேரரசு அமைத்துவிட்டோம் - இனி இதை மாற்றப்போவதில்லை என்று பேசுகின்றனர் அரசினர்.

இது வேதனை நிரம்பிய பேச்சு - இன உணர்ச்சி உள்ள எவரையும், செய் அல்லது செத்துமடி என்று தூண்டிவிடக் கூடிய அறைகூவல்; அதுமட்டுமல்லாமல், ஒரு போலி அமைப்புத்தான் இந்தியா என்பதை வெட்கமின்றி ஒப்புக் கொள்வதுமாகும்.

கிடைத்ததை விடமாட்டோம் என்று பேசுவது அறம் அறிந்தோர் பேச்சு அல்ல - ஆதிக்கக்காரரின் ஆணவப் பேச்சு. ஆனால், வரலாறும், இலக்கியமும் அழிக்கமுடியாத விதத்தில் ஏற்படுத்தி வைத்துள்ள உணர்ச்சி, வழிவழி வளர்ந்து பண்பாடு ஆகி, இருக்கிறது; அந்த "உணர்ச்சி'யை அழித்து விடுவது, இயலாத காரியம் என்பதை, இன்று

ஆதிக்கத்தை நம்பிக்கொண்டிருக்கும் அரசினர் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்.

ஆனால், உரிமைக்காக எதனையும் இழந்திடும் வீர உணர்ச்சி, தியாக உள்ளம், கொழுந்துவிட்டு எரியும்போது ஆணவம் வெந்து கருகிச் சாம்பலாகும்.

இவ்வளவு பலமாக அமைத்துவிட்டிருக்கிறோம், ஆதிக்கத் துக்கு அரண்கள் உள்ளன; அரண் காக்கப் படைகள் உள்ளன; படைகள் அமைத்திடப் பணபலமும் உண்டு என்று இறுமாந்து கிடப்போர், இந்தியப் பேரரசு என்றென்றும் நிலைத்து இருக்கப் போகிறது என்று எண்ணுகிறார்கள்.

எனினும், அவர்களுக்கே சிற்சிலபோது, ஐயப்பாடும், அச்சமும், கவலையும் கலக்கமும் ஏற்பட்டுவிடுகின்றன; கை பிசைந்துகொள்கின்றனர்; இந்தியர்

என்ற உணர்ச்சி இல்லையே, என் மொழி! என் பிரதேசம்! என்று பேசுகிறார்களே. அதற்கு ஏதேனும் கெடுதல் நேரிடும் என்று தெரிந்தால், பேயாட்டமாடு கிறார்களே! என்று பேசுகிறார்கள், மனம் மருண்டு.

பேரரசு அமைத்துவிடலாம் - பலர் அமைத்தனர் - அதனை உடைபடாமல் பாதுகாக்கவும் செய்யலாம் வெகு பாடுபட்டு - ஆனால், பிணைக்கப்பட்ட நாடுகளிலே, ஏற்பட்டுவிடும் மனக்கசப்பு, மாறாது. அது, சமயம் பார்த்துக்கொண்டு இருக்கும் நச்சரவம் போன்றது.

புயலில் வீழும் பெருமரங்கள், நாலைந்து நாட்களுக்கு முன்பே, நான் விழப்போகிறேன் - என் வேர்கள் நைந்து போயுள்ளன - பெரும் காற்றடித்தால் தாங்கி நிற்கும் வலிவு எனக்கு இல்லை - என்று அபாய அறிவிப்பா தருகிறது?

காரணமற்று, அடிப்படைக் கோளாறுடன், அமைக்கப்படும் எந்தப் பேரரசும், விடுதலை ஆர்வம் முற்றிப் புரட்சிப் புயலாக மாறும்போது, பொடிப்பொடியாகித்தான் போகும்.

உதுமானிய சாம்ராஜ்யத்தைவிடப் பேரரசு இருந்த தில்லை என்று கூறலாம், வீரமும் திருவும் விளங்கிடும் சாம்ராஜ்ய மாகத்தான் திகழ்ந்தது. உதுமானிய சாம்ராஜ்யத்தின் புகழ்பாடக் கவிவாணர்களும், வெற்றி தேடிக் கொடுக்க வீரர் குழாமும், அணி அணியாக இருந்தனர்.

படைபலம் மட்டுமல்ல, உதுமானிய சாம்ராஜ்யத்துக்குத் தேவபலமும் இருக்கிறது என்றுதான் செப்பிப் பெருமைப் பட்டனர்.

எவ்வளவு விரிந்து பரந்து இருந்தது! எத்துணை எத்துணை எழிலூர்கள், அந்தச் சாம்ராஜ்யத்தில்!

உதுமானிய சாம்ராஜ்யத்திலே, இருந்து, இதுபோது தனி நாடுகளாகிவிட்டவைகளின் பட்டியலைப் படித்தால் வியப்பாக இருக்கும்; அவ்வளவு ”நாடுகளை’ சாம்ராஜ்யம் தன் இரும்புக் கரங்களில் வைத்துக்கொண்டிருந்திருக்கிறது.

இன்றைய துருக்கி

கிரீஸ்

பல்கேரியா

ருமேனியா

செர்பினியா

போஸ்னியா

கிரீமியா

ஈஜிப்ட்

சிரீயா

துனீசியா

திரிபோலி

அல்ஜியர்ஸ்

இவை உதுமானிய சாம்ராஜ்யத்தின் பகுதிகள்!

இந்தியப் பேரரசு, எப்படித் திராவிடம் போன்ற நாடுகளைப் ”பிரதேசங்கள்’ என்று பேசிவருகிறதோ, அதுபோல, இவைகளை உதுமானிய சாம்ராஜ்யமும், பகுதிகள் என்றுதான் குறிப்பிட்டது.

1907ஆம் ஆண்டுவரை உதுமானிய சாம்ராஜ்யம், பல இனம், பல நாடுகளைத் தன்னுடைய பிடியில் வைத்துக்கொண்டு, ஆண்டவனின் அருளும், படைபலமும், பாதுகாப்பு அளித்து வருவதாகவும், எதிர்த்து எவரும் ஏதும் செய்துவிட முடியாது என்றும் எக்காளமிட்டது.

இன்று, தம்பி! இத்தனை பெரிய உதுமானிய சாம்ராஜ்யம், என்ன ஆயிற்று? உடைபட்டுப் போயிற்று!

துருக்கியை மையமாக வைத்துத்தான், உதுமானிய சாம்ராஜ்யம் கட்டப்பட்டது; இன்று மிச்சமாக இருப்பது துருக்கி ஒன்றுதான்.

வரலாறு அறியாதார், ஈஜிப்ட் ஒரு காலத்திலே, துருக்கி யால் அமைக்கப்பட்ட, உதுமானிய ராஜ்யத்திலே ஒரு பகுதி என்று நாம் கூறினால், ஆச்சரியப்படுவர்.

கிருஸ்தவ மார்க்கத்தைக் கொண்ட பல்கேரியா, கிரீஸ் போன்ற நாடுகளாகிலும், இஸ்லாமிய மார்க்கத்தைக்கொண்ட துருக்கியர் அமைத்த சாம்ராஜ்யத்தில் இருப்பது இழுக்கு, கடவுளுக்கே பொறுக்காது என்று கருதிக் கொதித்தெழுந்து, விடுபட, தனியரசாகத் துடித்திருக்கலாம் - ஈஜிப்டுக்கு

என்ன கெடுதல்?

ஈஜிப்டில் உள்ளவர்கள் அராபியர்.

துருக்கியரும் அராபியரும் இருவருமே, இஸ்லாமியர். மதம் ஒன்று! என்றாலும், அராபியருக்கு அராபியர் என்ற இன உணர்ச்சி, துருக்கியரின் சாம்ராஜ்யத்தில் எவ்வளவு அழுத்த மாகப் பிணைக்கப்பட்டிருந்தும் மங்கிப் போய்விடவில்லை.

இஸ்லாம்போல், மார்க்கத்திலே சேர்ந்துள்ளவர்களை ஒன்றுபடுத்தும் மகத்தான சக்தி வேறு இல்லை. இருந்தும், அராபியர் தம் இன உணர்ச்சியை இழக்கவில்லை!

இப்போதும், நாசர், அராபியப் பேரரசு என்றுதான் கூறிப் பூரிப்படைகிறார்.

இமய முதல் குமரி வரை, எங்கு இருந்தாலும், இந்தியப் பேரரசில், பேதம்

காட்டப்படுவதில்லை; எல்லோரும் சமம் - எவரும் தாழ்வில்லை - எவரும் உயர்ந்தோர் என்றும் உரிமை கொண்டாடுவதற்கில்லை - என்று இந்தியப் பேரரசுக்காக வாதிடுவோர் பேசுகின்றனர்.

உதுமானிய சாம்ராஜ்யத்தில், துருக்கியர், அராபியரை எந்த ஒரு துறையிலும், எந்த வகையிலும், தாழ்வாக நடத்த வில்லை. படையிலாகட்டும், ஆட்சி அலுவலகங்களிலாகட்டும், அராபியர், துருக்கியருக்குச் சமமாகவே இடம் பெற்றனர், பெருமை பெற்றனர். என்றாலும், நாம் அராபியர்! நமது நாடு, ஈஜிப்ட்! இன்று அதனைத் துருக்கியர், தமது சாம்ராஜ்யத்தில் அடிமைப்படுத்தியுள்ளனர் என்ற எண்ணம், அவர்கள் மனதை விட்டு அகலவே இல்லை.

அராபியம் துருக்கியரும் கலப்பு மணம் செய்துகொண்டும் வாழ்ந்தனர்.

என்றாலும், அராபியர் என்ற தேசிய உணர்ச்சி, பீறிட்டுக்கொண்டு வந்தது, சாம்ராஜ்யப் பிடிப்பு பொடிப் பொடியாயிற்று; விடுபட்ட ஈஜிப்ட் தனி அரசு, தன்னரசு நடத்துகிறது.

•

அது அந்தக் காலம் - புரட்சி செய்து - படைகொண்டு தாக்குவது - அதனால்தான் பேரரசிலிருந்த நாடுகள் பிரிந்து, தனி அரசு என்றாகிவிட்டன. இது வேறு காலம்!! என்று மிரட்டும் குரலிலும், கேலி செய்யும் விதத்திலும், ஆதிக்கக்காரர் பேசுகின்றனர்.

காலம், முறைகளை மாற்றுமே தவிர, மனப்போக்கையும், உணர்ச்சியையும், நிச்சயம் மாற்றிவிடாது - அழித்துவிடாது.

முன்புபோல அல்ல, இப்போது. எந்த இடத்திலிருந்து, குமுறல் கேட்டாலும், எந்தப் பகுதியில் வீரத் தியாகிகளின் இரத்தம்

கொட்டப்பட்டாலும், ஏன்? என்று கேட்கவும், நியாயம் பேசவும், துணை நிற்கவும், உலகில் பல்வேறு நாடுகள் முனைந்து நிற்கின்றன.

அந்தக் காரணத்தால்தான், கெனியா நாட்டு விடுதலைக் கான நல்லெண்ண ஆதரவு பெற, அந்நாட்டு விடுதலைத் தளபதி டாம் இம்போயா, இந்தியப் பேரரசுத் தலைவரை நாடி வருகிறார்.

அவர்களுக்கெல்லாம், தமது நாட்டு விடுதலை குறித்து எடுத்துரைக்க, இங்கெல்லாம் வரும் அளவுக்கு "ஏகாதிபத்தியம்' உரிமை தருகிறது. ஆனால், இங்கு நடைபெறும்"அன்பாட்சி', "அகிம்சையாட்சி' வெளி நாடுகள் செல்ல, நமது கழகத்தவருக்கு, அனுமதி வழங்க இப்போதே மறுக்கிறது.

இஃதொன்றே, இந்தியப் பேரரசுக்கு

உள்ள வலிவைக் காட்டவில்லையா என்று கேட்கத் தோன்றும். தம்பி இது அந்த அரசுக்கு உள்ள வலிவை அல்ல, நம்பிக்கைக் குறைவை, பயத்தைத் தான் காட்டுகிறது. எந்த நாடு சென்று இவர்கள், வரலாற்று, இலக்கிய ஆதாரங்களைக் காட்டித் தங்கள் இன இயல்புகள் பற்றி எடுத்துச் சொன்னாலும், ஏற்றுக்கொண்டு ஆம்! ஆம் என்று பேசுவார்களே, நாம் பிறகு, பலருடைய கேள்விகளுக்கு அல்லவா பதிலளிக்கவேண்டி வந்துவிடும், என்ன பதில் அளிப்பது? நாம் அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்த அமைக்கப்பட்ட பேரரசுக்கு என்ன நியாயம் காட்டுவது? என்ற பயமும், நம்பிக்கைக் குறைவுமே, கழகத் தோழர்களை, வெளிநாடுகள் போகவிடாமல் தடுத்து வைத்திடச் செய்கிறது.

ஆனால், தம்பி! இலண்டனிலோ,

பெர்லினிலோ, டோக்கியோவிலோ, பாரிசிலோ, வா□ங்டனிலோ இதுபற்றி இப்போது ஒன்றுமே தெரியாது என்றும் கூறிவிட முடியாது.

நமது பூம்புகார் பற்றியும், கொற்கை குறித்தும், உறையூரில் நமது அரசு இருந்த ஏற்றம்பற்றியும், நமது மன்னர், காழகம், கடாரம், வங்கம், கலிங்கம் சென்று வெற்றி கண்டது குறித்தும், நமது தமிழகப் பட்டி தொட்டிகளிலெல்லாம், எடுத்துக்கூறும் கட்டத்திலே நாம் மும்முரமாக ஈடுபடவேண்டி இருக்கிறது.

தமிழகமெங்கணும், தமிழ் இன உணர்வு வீரமணம் எழுப்பினால், பிற நாட்டார் நம்மை அறிந்துகொள்ளச் செய்வதிலே கஷ்டம் அதிகம் இருக்காது.

எந்த நாடும், ஒரு நாட்டின் ஆட்சி

மன்றத்திலே எவர் இடம் பெறுகின்றனர். அவர்தம் திட்டமென்ன, கொள்கை என்ன, மக்கள் ஆதரிப்பது எந்தக் காரணம் கொண்டு என்பதனை இன்று அறிய ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

எனவேதான், இந்தியப் பேரரசு என்பது போலித் தத்துவம், சுரண்டல் யந்திரம், இன உணர்வு அழிக்கும் பலிபீடம் என்ற கொள்கையைக் காட்டி, திராவிடம் அமைக்கவேண்டும் என்ற திட்டத்துக்காகப் பணியாற்றும், நமது கழகம், பொதுத் தேர்தலில், மக்களின் பெருவாரியான ஆதரவைப் பெறவேண்டும் என்று விரும்புகிறோம்.

அது கிடைத்திடுமேல், தட்டாமலே, அறமன்றக் கதவுகள், திறக்கப்படும்; கேளாக் காதினருக்கும், நமது விடுதலைப் போர்ப் பணி கேட்கும், வெற்றித் தென்றல் வீசிடும்.

தம்பி! இன்று விழாநாள். தென்றல் காண்கிறாய் இல்லத்தில்! இது, உன் மனைமாட்சிக்கு எடுத்துக்காட்டு. ஆனால் நாட்டிலே வீசி, நலிவுகளைப் போக்கிடும், வெற்றித் தென்றல் விடுதலை எனும் சந்தனமணம் கமழ்ந்து வீசிட வேண்டும் அன்றோ?

அதற்கான அரும்பணி அடுக்கடுக்காய் உள்ளது, அறிவாய். அறிந்ததை உரைத்திடின், ஆரணங்கும் தடுத்திடப்போவதில்லை.

பொருள்தேடப் புறப்படுகிறார் என்றால், இருப்பார்க்கு வந்து உரை என்று இயம்பிடுவாள், சங்க காலத்துப் பெருமாட்டி! அந்த ஆரணங்கே கூட, களம் செல்கிறான் என்றாலோ, வேல் எடுத்துக் கரம் கொடுத்து, புன்னகை விருந்திட்டுப் போய்வருவீர், என் அரசே! வெற்றித் திருவுடனே, நீர் வருவீர், நானறிவேன்! நாடு உமை அழைக்கிறது.

நாட்டுக்கே நாம் உள்ளோம். மாடு மனை இருப்பதும், மலர்த்தோட்டம் இருப்பதும் ஆங்கு நாம் ஆடி மகிழ்வதுவும் நாடு நமது என்ற நன்னிலை இருப்பதனால் தான், அந்த நிலைக்கு ஒரு துளியும் குந்தகம் விளையுமென்றால், ஆவி தரிக்காது; மானமொன்றே நமக்கு வழி வழி வந்த செல்வம், அது காக்கப் புறப்படுவீர்! ஆற்றல் உண்டு நாட்டைக் காக்க! அந்தக் கடமையினை ஆற்ற நீர் செல்கையிலே, பிரிவு தாங்கும் மனம் உண்டு, தமிழ் மகள் நான்! என்றுரைத்துக் களம் அனுப்பி வைப்பர்.

இன்றும், அந்தப் பண்பு பட்டுப்போய்விடவில்லை. எத்தனையோ தாய்மார்கள் நாட்டுக்கு இடிவந்துற்ற காலையிலே, ஆரணங்கு பலரும், தம் நெஞ்சில் நிறைந்தவரை, கொஞ்சு மொழி பேசிடும் தம் கொழுநரை, கோல்கொண்டோர்

அது சாய்க்கும் வேலையிலே ஈடுபட்டு, தமிழ் வீரத்தைப் பழித்தபோது, அறப் போருக்கு அனுப்பி வைத்தார் - அறிவோம் நாம். அது நம் கழக வரலாறு.

“நாகநாடு’ கேட்டிடும் தலைவனை வேட்டையாடிப் பிடிக்கப்பார்த்தனர்; இன்றோ அவன் கேட்டிடும்”தனிநாடு’ போன்ற ஒரு ஏற்பாடு தந்து, சமரசம் கேட்கிறார்; நாகர் இணங்க மறுக்கின்றனர்.

”பஞ்சாபி சுபா’ கேட்கும் பழம்பெரும் வீரராம் தாராசிங் பாடிடும் பரணி கேட்டுப் பல்லாயிரவர் சிறை சென்று, இன்று விடுதலை பெற்று வந்தனர் வெளியே, அறப்போர் தொடுத்திட - புதிய முறையினில்.

”ரகுவம்ச’ காலமுதல் எமது வங்கம் எவருக்கும் அடி பணிந்து கிடந்ததில்லை, இன்றும் எவர் எம்மை அடிமை கொள்ளச்

சூழ்ச்சிகள் செய்திடினும், முறியடிப்போம் என்று முழக்கமெழுப்புகின்றனர் வங்க மக்கள்.

அவரெலாம் அடவி தன்னைப் புகலிடம் என்று பெற்று உழன்ற காலத்திலேயே, அணிநகர் பலவும் கண்டு, அறநூற்கள் பலவும் பெற்று, அரசு அமைத்து, தமிழர் வீர முரசு கொட்டி வாழ்ந்தார்.

ஆப்பிரிக்கக் கண்டத்துள்ளார், அடவியில் உள்ள பொல்லா மிருகத்துக்கொப்பார் என்று, அவர்களைப் பிடித்துச் சென்று அடிமைகளாக விற்றார், ஆணவ வெறியர் முன்பு. இன்று ஆப்பிரிக்க பூபாகமெங்கும் விடுதலை முரசு!

எவரையும் அடிமைகொள்ள எவருக்கும் உரிமை இல்லை; அவரவர் தாயகத்தில் தனி அரசமைத்து வாழ்வதே, அவனிக்கு அடுக்கடுக்காய், அழகுறு அணி அளிக்கும். இதனை இனிக் காணாவிட்டால், இருண்டிடும்

எதிர்காலமென்று, அறிவுளார் அனைவருமே அறைகின்றார் நாளும்.

இத்தகு நாட்கள் தன்னில் இருந்திடும் நமக்குத் தம்பி! மெத்தவும் பொறுப்பு உண்டு. விடுதலைக்கு நல்வாய்ப்பு உண்டு; வேண்டுவதெல்லாம் உறுதி; அதுபோல் உறுபகை அழிக்கவல்ல கருவியும் வேறு உண்டோ?

அந்த உறுதிபூண்ட வீரனாம் உனக்கு ஓர்நாள், திருநாளாய் உள்ளது; உறுதி வளர்த்திடும் வகையான உற்சாகம் பெற்றிட.

ஆகையினால், அருமைத் தம்பி! ஆகட்டும், ஆகட்டும் இன்றுனக்கு அரிய விழா; அதிலே கிடைக்கும் இன்பம், பெற்று மகிழ்ந்திடுக! பேசிட ஆயிரம் உண்டு! பூசிடச் சந்தனம் உண்டு! வாசமலரெடுத்துச் சூட்டிடவும், வாய்ப்புண்டு!! இத்தனையும் உன் செல்வம்,

இடம் கொடுத்தால் மட்டுந்தான்!

இன்பம் பொங்கி, நின் இல்லம் எழில் பூத்து விளங்கட்டும். அந்த இன்பத்தூடே, திருநாடு தெரியட்டும் என்ற என் நல்வாழ்த்தே, நான் இன்று உனக்களிப்பேன்; வேறென்ன வேண்டும் உனக்கு?

மழை

நெஞ்சில் நெருப்பு

கன்னி விதவையானாள்

நீதிபதி, வக்கீலானார்

செந்தாமரையாள்

பூச்சு வேலை

என்பன

- இக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன; அவை நானளிக்கும், இஞ்சி, மஞ்சள்

இன்ன பிற என்று கொள்ளேன்!

பொன் எனினோ, என் மின்னிடையாள், மேனிக்கென்ன!

மணி எனினோ, மகவின் கண் ஒளியே, காண்பாய்! உன்னிடம் உள்ள செல்வம் ஏ! அப்பா! மிக அருமை!!

நான் அளிக்க ஒன்று உண்டு; என் நல்லெண்ணம்; வாழ்த்துக்கள்; இல்லம், இன்பப் பூங்காவாகத் திகழ்க! உனக்கென்று அளிக்கும்போது, அதனைப் பெற்று, மற்றவர்க்கும் பகிர்ந்தளித்து மகிழ்வாய் என்று, சொல்லவா வேண்டும்? நீ, தமிழன்; என் உடன்பிறப்பு! வாழ்க! வாழ்க!!

அன்புள்ள,

அண்ணாதுரை,

14-1-1961

31. கண்ணொளி போதும். . .

உலக நிகழ்ச்சிகள் -

தி.மு.க. பற்றி மக்கள் ஆர்வம் -

கழகத்தவர் பணி.

தம்பி!

தமிழர் திருநாளில் மலர் அளித்து மகிழ்ந்த பிறகு, ஒரு திங்களுக்கு மேலாகவே மடல் அனுப்பி அளவளாவும் வாய்ப்பு இலாது போயிற்று. இடையே உருண்டோடிய நாட்களும், உருவெடுத்த நிகழ்ச்சிகளும் பல - அளவில், வகையில், எதிர் பாராதவை, ஏக்கமளிக்கத்தக்கவை, அச்சமூட்டுபவை, ஆயாசம் தருவன என்னும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள்; கழகத்தோடு பிணைந்துகொண்டவைகளை மட்டுமல்ல, நான் குறிப்பிடுவது; நாட்டிலே; அரசியல்

வட்டாரங்களிலே; அங்காடிகளிலே; அறமன்றங்களிலே; அமைச்சர் முகாம்களிலே; உலகிலே.

அமெரிக்காவுக்குப் புதிய தலைவர் வந்துள்ளார் - அரசோச்ச.

அவருக்கும், அமெரிக்காவிடம் இலட்சியம், நடைமுறைத் திட்டம் ஆகியவை காரணமாக, முரண்பட்டுக் கிடக்கும் சோவியத்தின் தலைவருக்கும், நேசமும் பாசமும் வளருமா என்பது பற்றிய கவலை ஒரு புறம்.

மேற்கத்தி நாடுகளின் கூட்டணிக்கும், அமெரிக்கத் தலைவர் கென்னடிக்கும், தொடர்பிலே மாற்றம் ஏதேனும் ஏற்படுமா என்ற ஐயப்பாடு மற்றோர் புறம்.

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவுக்குச் செல்வாக்குச் சிதைவதாகத் தென்பட்டபடி இருப்பதை,

கென்னடி கண்டறிந்து, என்ன வழியினைக் கையாண்டு, செல்வாக்கு வளரச் செய்வார் எனும் கேள்வி.

உலக மன்றத்தின் கண்டனக் குரல் பற்றியும் கவலையோ அச்சமோ காட்டாமல், நிறவெறியாட்டத்தில் ஈடுபட்டுக் கிடக்கும் தென் ஆப்பிரிக்காவின் போக்குப்பற்றியதால் எழுந்துள்ள கவலை.

இரத்தக் காடு என்று கூறத்தக்க நிலையில் அல்ஜீரியாவும், காங்கோவும் அல்லற்பட்டுக் கிடப்பதனால் ஏற்படும் அச்சம்.

இவையும், இவை போன்ற வேறுபல பிரச்சினைகளும், மனதை மருட்டத்தக்க வகையில் வடிவமெடுத்துவிட்டன.

க்யூபா நாட்டிலே புரட்சிப் புயல்! அபிசீனிய நாட்டிலே மன்னருக்கு எதிராகச் சதி! போர்ச்சுகலில் சலாசர் ஆதிக்கத்தை

அழித்தொழிக்கப் புரட்சிப்படை தயாராகி வரும் நிலைமை! லாவோசில் உள்நாட்டு அமளி! - இவ்வண்ணம் பல பிரச்சினைகள் - பயமூட்டத்தக்க விதத்தில்.

எல்லையைப் பறிகொடுத்துவிட்டதால் ஏக்கமும் திகைப்பும் கொண்டு இந்திய துரைத்தனம் இருக்கும் நிலைமை.

பர்மா, பூடான், சிக்கிம், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன், சீனா விருந்து வைபவம், கூட்டறிக்கை, கொள்கை விளக்கம், ஒப்பந்தம் போன்ற முறைகள் மூலம், புதிய நேசத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்போக்கு.

தம்பி! தமிழகத்தில், நான் மேலே கோடிட்டுக் காட்டிய நிகழ்ச்சிகள், நெருக்கடிகள், பிரச்சினைகள் பற்றி அல்ல, அக்கரையோடும், பரபரப்பு உணர்ச்சியோடும் பேசத் தலைபட்டது.

பேரரசி எலிசபத் பவனி வருகிறார், பால்வண்ண நில வொளியில், காதல் வண்ணத்தையும், மொகலாய சாம்ராஜ்யச் சிறப்பினையும் எடுத்துக்காட்டி இசைபாடி நிற்கும் எரிலுருவமாம் ”தாஜ்மகாலை’க் கண்டு வியந்தார்; பாராட்டுரை வழங்கினார். பேரரசியின் கணவர் முதலையைக் குறிபார்த்துச் சுட்டுத் தள்ளினார் - புலியினைக் கொன்றார், ஏராளமான வாத்துகளையும் சுட்டு வீழ்த்தினார்; போலோ விளையாட்டில் ஈடுபட்டார்.

சிற்றரசர்களும், சீமான்களும், சீமாட்டிகளும், ஆட்சியாளர் களும் பேரரசியாருக்கு விருந்தளித்து மகிழ்ந்தனர்.

இவைபற்றி அல்ல, தமிழகம் ஆர்வம் பொங்கும் நிலையில் பேசிக்கொண்டிருந்தது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும்,

தென்னகம் வஞ்சிக்கப்படுவது அறிந்து, மனக்குமுறல் ஏற்பட்டது.

கடன்மேல் கடன் வாங்கிக் கவைக்கு உதவாத காரியங்களிலே ஈடுபடுகின்றனரே, காங்கிரஸ் ஆட்சியினர் என்பது குறித்த கவலை கிளம்பி, மக்கள் மனதை வாட்டிற்று.

புதிது புதிதாக, என்னென்ன வரிகளைப் போட்டு, ஏழையர் வாழ்வை மேலும் வதைக்கப் போகிறார்களோ - பிப்ரவரித் திங்கள் பெட்டி நிரப்பும் காலமாயிற்றே - என்பது பற்றிய அச்சம் உள்ளத்தில் குடையும் நிலைமை.

விலைவாசி ஏறித்தான் இருக்கிறது! குறைக்க முடியவில்லை என்று அமைச்சரே அறிவிக்கும் அவலநிலை கண்டு, மக்கள் திகைப்படைந்துள்ளனர்.

எனினும் தம்பி! இரண்டு மூன்று கிழமைகளாக, தமிழகம் இவை பற்றி அல்ல,

பேசிக் கொண்டிருந்தது.

வைரவிழா நடாத்தினர் காங்கிரசார் - குடிஅரசு நாளைக் கோலாகலமாகக் கொண்டாடினர் - ஆனால், தமிழக மக்கள் இவை பற்றி ஆர்வத்துடன் பேசினார் இல்லை!

உலகப் பிரச்சினைகளிலிருந்து உள்ளூர் அரசியல் பிரச்சினை வரையில், அக்கறையுடன் பேசினாரில்லை.

பஞ்சாபில் அறப்போர் நிறுத்தப்பட்டது. அப்படியா? என்று ஆச்சரியத்துடனோ, இனி என்ன நடக்கும்? என்று அக்கறையுடனோ, தமிழக மக்கள் கேட்கவில்லை.

தனிநாடு கேட்டுப் போரிடும் நாகர்களிடையே, பிளவு உண்டாக்கிடும் நோக்குடன், அவர்களிடையே, சிலரைச் சரிப்படுத்திக் கொண்டு, போலித் திட்டம் ஒன்றினைப் புகுத்த இந்திய சர்க்கார்

முனைந்துள்ளனர். இது வெற்றி பெறுமா? நாகநாட்டு விடுதலை வீரனாம், பிசோ இனி என்ன செய்வார்? என்று கேட்கவில்லை; தமிழகத்தில் அதுகுறித்த உரையாடலைக் காணோம்.

நாய்க்குட்டிகளையும், குரங்குகளையும், வானவெளிக்கு அனுப்பி வெற்றிகண்ட ரஷ்ய விஞ்ஞானிகள், இப்போது மனிதனையே அனுப்பியுள்ளார்கள் என்று செய்தி வருகிறது. அது உண்மையா, வெற்றுரையா என்பது பற்றிப் பேச்சு எழக் காணோம்.

தமிழகத்தில், இரண்டு மூன்று கிழமைகளாக, வான வெளிப் பயணமாயினும், விலைவாசி ஏற்றமாயினும், இவை பேசப்பட வேண்டிய பிரச்சினைகள் என்று எண்ணியதாகத் தெரியவில்லை; ஒரே ஒரு பிரச்சினைதான், மனைகளில் மன்றங்களில் உரையாடல்களில் சொற்பொழிவுகளில்

பேசப் பட்டது. அமைச்சர்கள் இது குறித்தே பேசினர் - ஆள் பிடிப்போருக்கும் இதுவே பேச்சு! கலங்கிப் பேசினர், கண்ணீர் வடித்துக் கொண்டும் கைபிசைந்து கொண்டும் பேசினர்! கடை வீதியில் இதுதான் பேச்சு - கல்லூரிகளிலும் இஃதேதான்!

கண் சிமிட்டிப் பேசினர் சிலர்; முக்காலமும் உணர்ந்தோர் போலப் பேசினர் சிலர். கெக்கலி செய்து பேசினர் சிலர்; ஆயாசம் தீர்ந்தது என்ற நிலையில் பேசினர் சிலர்.

எனக்கு முன்பே தெரியும் என்று ஆரூடம் அறிந்தோர் போல் பேசினர் சிலர்; வேறு எப்படி நடக்கும் என்று அலட்சி யத்தையும் வெறுப்பையும் அள்ளி வீசினர் சிலர்; அடேயப்பா! என்னென்ன ஆட்டங்கள்! எத்துணை இறுமாப்பு இதுகளுக்கு! என்று ஏளனம் பேசி, ஏற்கனவே ஏற்பட்டிருந்த அச்சத்தைப் போக்கிக் கொள்ள முயற்சித்தனர்

சிலர்.

என்னென்னமோ எண்ணிக் கொண்டிருந்தோமே! இப்படி இருக்கிறதே நிலைமை!! - என்று வாட்டத்துடன் பேசினர் சிலர்.

ஏன் இப்படி நேரிட்டது? என்று காரணம் காண விரும்பிப் பேசினர் சிலர்; எப்படியாவது, விரும்பத்தகாத இந்த நிலைமையை, மாற்றியாக வேண்டும் என்ற உள்ளன்புடனும் உறுதியுடனும் பேசினர் சிலர்.

உணர்ச்சி வயப்படப்கூடிய வயதினர் ஒரு காரியத்தில் ஈடுபட்டால் இப்படித்தான் நேரிடும் என்று கவலையைத் தெரிவித்துக் கொண்டனர் சிலர். இது நாட்டுக்கும் நல்ல தல்லவே என்று நல்லுரை கூறினார் சிலர்.

ஒரே ஒரு பிரச்சினைதான், பேசப்படத்தக்கதாகத் தமிழகத்துக்குத்

தோன்றிற்று. ஒரே ஒரு பிரச்சினை பற்றித்தான் கொந்தளிப்பும் கோபதாபமும், காரசாரமும் கொண்ட முறையில் பேசிக் கொள்ளப்பட்டது.

தம்பி! அந்த ஒரே ஒரு பிரச்சினை - பலருடைய உள்ளத்தைக் குலுக்கிய பிரச்சினை - அகில உலகத் தொடர்பு கொண்ட பிரச்சினைகளையெல்லாம் மூலையில் தள்ளிவிட்டு, முன்னணி நின்ற பிரச்சினை, யாது? நம்முடைய பிரச்சினைதான்!!

தி.மு. கழகத்திலே நெருக்கடி - நேசத் தொடர்புகளிலே முறிவுகள் - பாசத்தைப் பிய்த்தெரியத்தக்க பிளவுகள் - குழப்பம் - தலைவர்கள் திக்காலொருவர் ஓடிவிட்டனர் - என்பதுதான், தமிழகத்திலே பத்துப் பதினைந்து நாட்களாகப் பரபரப்பூட்டிய பேச்சு.

நல்ல வேட்டை நிருபர்களுக்கு!

பத்திரிகைகளுக்குக் கொண்டாட்டம்! காங்கிரஸ் பேச்சாளர்களுக்கு ஏகப்பட்ட கிராக்கி!

ஆந்திர மாநிலக் காங்கிரசிலே, அமளி மூண்டிடத்தக்க நிலைமை.

மைசூர் மாநிலக் காங்கிரசிலே, மருட்சிகொண்டிட வைக்கும் மனமாச்சரியம்.

உத்தரப்பிரதேசக் காங்கிரசில், உள்ளத்தைக் குலுங்கச் செய்யும் விதமான பிளவுகள்.

பஞ்சாப் மாநிலத்தில் கிளர்ச்சிக் கோலத்தில் காங்கிரஸ் கட்சியினர்.

கேரளத்தில், காங்கிரஸ் - பிரஜா சோ□யலிஸ்ட் கூட்டுக்கு வேட்டு வைக்கும் போக்கிலே, காங்கிரஸ் வட்டாரத்திலே நடவடிக்கைகள்.

வெளியே வேற்றுமைகளைப் பற்றிப் பேசாதீர்கள் என்று காங்கிரஸ் தலைவர் கூறிக் கட்டுப்படுத்த வேண்டிய விதமான கலக நிலைமை, காங்கிரஸ் முகாமில்.

இவைகளைப்பற்றிப் பொதுமக்கள்கூட, அதிகக் கவனம் செலுத்திப் பேசவில்லை; இதனால் எல்லாம் என்ன ஆகுமோ என்று அச்சப்படவுமில்லை, ஆயாசப்படவுமில்லை. ஆனால் தி.மு. கழகத்திலே பிளவு - நெருக்கடி - குழப்பம் - என்று தெரிவிக்கப்பட்டதும், உள்ளபடி, கவலையுடன், கலக்கத்துடன் அன்பு கலந்த அக்கறையுடன் பேசிக் கொண்டனர்.

தம்பி! ஏற்பட்ட நிலைமையின், தன்மையை மறைக்க இவ்விதம் கூறுகிறேன், என்று எண்ணிக்கொள்ளாதே. நிலைமையின் தன்மையை நான் குறைத்தும் மதிப்பிடவில்லை; மூடி மறைத்துவிடக்கூட விரும்பவில்லை; ஆனால்,

அந்த நிலைமைபற்றி நாடே கவனித்துக் கொண்டிருந்ததே, பேசிக் கொண்டிருந்ததே. அது எதைக் காட்டுகிறது என்பதை எண்ணிப்பார்த்தால், நாம் ஒவ்வொருவரும் பெருமைப்படத்தக்க ஓர் பேருண்மை விளங்கும்.

நமது கழகம், அந்த அளவுக்கு, மக்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

கழகத்தின் ஒவ்வொரு சிறு அசைவுகளும், கழகத்தாரின் ஒவ்வொரு நடவடிக்கையும், பொதுமக்களால் மிகமிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன.

கழகத்திலே காணப்படும், ஏற்படும், ஏற்படுத்தப்படும், ஒவ்வொரு நிலைமைக்கும், பொருள் என்ன? நோக்கம் யாது? பயன் என்ன? என்று கழகத் தோழர்கள் மட்டுமல்ல, பொது மக்களே, கவனிக்க, கணக்கெடுக்க, காரணம்

காண விழைகின்றனர்.

கழகத்திலே ஏற்படக்கூடிய மாற்றங்கள், திருப்பங்கள், திருத்தங்கள் ஆகியவை, கழகத்தை மட்டுமல்ல, நிலைமை களையே, பாதிக்கத்தக்கவை என்ற கட்டம் ஏற்பட்டுவிட்டது.

கழகத்தார், கழகத்துக்கு மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கே பொறுப்பானவர்கள் என்ற உயர்நிலை அடைந்து விட்டிருக்கிறோம்.

கழகத்தின் வாழ்வும், வளர்ச்சியும், பயனும், தன்மையும், கழகத்தவர் பார்த்துச் செய்திட வேண்டிய, தனித்துறைக் காரியம் என்ற நிலைமை மாறிப் பொதுமக்கள் - நாட்டு நலனில் அக்கறை கொண்டோர், தொடர்புகொண்டு, சமைத்தளிக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டிய நிலைமை மலர்ந்து வருகிறது.

கழகம், நாட்டுக்கான நற்பணியாற்றக் கடமைப் பட்டிருக்கிறது என்பதைக் கழகத்தவர் அல்ல, நாட்டு மக்களே நம்பிக்கையுடன், எடுத்துரைக்கும் நாட்களில் இருக்கிறோம்.

கழகம், நாட்டுக்கோர் அணிகலனாய்த் திகழ்கிறது, என்ற உணர்வு பொதுமக்களுக்கு ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

கழகம், கபடரின் ஆட்சியை, வஞ்சகரின் ஆதிக்கத்தை, வீழ்த்தத் தக்கதோர் படைக்கலம், என்ற நம்பிக்கை, நாட்டுக் குரியவர்களிடம் ஆழப் பதிந்துவிட்டது.

கழகம், விடுதலைப் போர் முரசொலி எழுப்பி, வடவராட்சி எனும் வாடையை விரட்டி, மரபுகாத்திடும் மன்றமாகி, நம் நாடு பெற்றுத் திகழ, பாசறை அமைத்துத் தரவேண்டிய விலை இன்னுயிரே எனினும் ஈந்து, திராவிட நாடு பெற்றாகவேண்டு

மென்று துடித்தெழுந்து போரிடும் முன்னணி என்ற பேருண்மை, நிலைநாட்டப்பட்டு விட்டிருக்கிறது.

எனவேதான், தம்பி! இதற்கு ஒரு இடுக்கண் வருகிறது என்ற நிலை கண்டால், நாடே பேசுகிறது, நல்லோரெல்லாம் கவலையுறுகின்றனர், ஆதிக்கக்காரர் அகமகிழ்கின்றனர், பொச்சரிப்புக்காரர் ஏசித் திரிகின்றனர், பொறுப்புணர்ந்தோர் குமுறுகின்றனர்.

நிலைமை இது அல்ல எனின், ஏன் நாலாறு நாட்களாக, நாடே இந்தப் பிரச்சினைப் பற்றிப் பேசுகிறது; நாடாள்வோர், இதை வைத்துக் கொண்டே நையாண்டி செய்து வருகின்றனர்; எண்ணிப் பார்த்தனையா?

விளக்கில் வீழ்ந்துபடும் விட்டில் பூச்சி கண்டு, எவரும் பதறுவதில்லை! வேழத்தின்

முழக்கம் கேட்டாலோ, என்ன? என்ன? ஏன், இந்த முழக்கம்? வேல் பாய்ந்த வேதனையோ? வெட்டிய படுகுழியில் வீழ்ந்துபட்டதோ? சூல்கொண்டதால் வந்துற்ற வலியோ? காரணம் யாதோ, கரி இதுபோல் குரலெழுப்ப என்று எவரும் எண்ணுவர். ஆமல்லவா?

பட்டுத் துணி, காற்றால் முட்புதர் பக்கம் அடித்துச் செல்லப்பட்டால்தான், எவரும் பதறுவர்; பறந்திடும் பட்டம் அறுபட்டால், பதறுவரோ? அஃதேபோன்றுதான் தம்பி! நமது கழகம், மதிப்பு மிக்கது, பயன்தரவல்லது, நாட்டுக்குத் தேவைப்படுவது, நல்லோரின் ஆதரவு பெற்றது, பெரியதோர் பணியினைச் செய்து முடிக்கும் பொறுப்பினை மேற்கொண்டிருப்பது, என்பதனால்தான், அத்தகைய ஓர் அமைப்புக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டாலும். நாடு, நடுக்குற்றுக் கேட்கிறது, என்ன? என்ன? ஏன்? ஏன்? என்று.

நிலைமைகளைப் பற்றிக் கவலையற்று இருந்துவிட்டேன் என்று கூறவில்லை, தம்பி! அந்தக் கவலைக்கு இடையிலேயும் எனக்கு இந்தப் பேருண்மை விளங்கிற்று; கரும்பாக இனித்தது. அது எக்கேடோ கெடட்டும், நமக்கென்ன? நாம் நமது காரியத்தைப் பார்ப்போம் என்று, பொதுமக்கள், இருந்துவிட வில்லை. இது இப்படியானால், நமது எதிர்காலம் என்ன ஆகும் என்ற கவலையைத் தெரிவித்தனர்.

கழகம், கட்டுக்கோப்புக் குலையாமல், வலிவும் பொலிவும் பெற்று, வளர வேண்டும்; அதன் மூலமாக நமது நலிவுகள் போக்கப்பட வேண்டும், என்று நாட்டு மக்கள் எண்ணுகின்றனர்; நம்புகின்றனர், என்வேதான், கழகத்துக்கு ஏதேனும் ஊறு நேரிடுமோ என்ற ஐயப்பாடு ஏற்படினும், பதறுகின்றனர், பேசுகின்றனர்.

உத்தரப் பிரதேசக் காங்கிரசில் அமளி இருப்பதால், ஆந்திரப் பிரதேசக் காங்கிரசில் கலாம் விளைவதால், காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் கெட்டுவிடக்கூடும், என்பது மக்களுக்குத் தெரியத்தான் செய்கிறது; எனினும், அதுபற்றி அவர்கள் அக்கறை காட்டுவதில்லை. ஆயாசப்படுவதில்லை. ஏன்? அந்தக் கட்சி வலிவுடன் இருப்பதும், வலிவு இழப்பதும், அதைப் புகலிட மாக்கிக் கொண்ட பெரிய புள்ளிகள் கவனித்துக் கவலைப்பட வேண்டிய விஷயம்; பொதுமக்கள் அதனைப்பற்றிக் கவலைப் படத்தக்க விதமாகக், காங்கிரஸ் கட்சி, பொது மக்களுடையது என்று கூறத்தக்க நிலைமை இல்லை.

கழகம், அப்படி அல்ல! பொதுமக்களின் பேரன்பைப் பெற்றுத் திகழ்கிறது; பொதுமக்கள், கழகத்தின் பணியினை

எதிர்பார்க்கின்றனர்; நிரம்ப.

அதுபோலவே, விவரமறியா மக்களை, வெள்ளை உள்ளத்தினரை மயக்கியும், மிரட்டியும் வசப்படுத்திக் கொண்டு விட்டோம்; இனி என்றென்றும், இவர்கள் நமது பிடியில்தான் இருப்பர்; விடுபடவேண்டுமென்ற வேட்கையே எழாது; எனினும் வழி அறியார்! - என்று காங்கிரஸ் எதேச்சாதிகாரம், நம்பிக் கிடந்தது. தன்னை எதிர்த்தவர்களைத் தாக்கித் தகர்த்துத் தருக்குடன் இருக்கிறது, இரத்தம் தோய்ந்த வாயுடன், உறுமிக் கொண்டிருக்கும், புலியென்றாகிவிட்டது. இந்நிலையில், தம்பி! பன்னிரண்டு ஆண்டுகளில், "நமது கழகம்' காங்கிரஸ் எதேச்சாதிகாரத்துக்கு, ஒரு"அறை கூவல்' ஆகி நிற்கிறது.

அத்தனை பெரிய எதேச்சாதிகாரத்தை எதிர்க்கத்தக்க வலிவினைப் பெறுவதற்குத்

தேவைப்படும், சாதனங்கள், நம்மிடம் இருந்ததில்லை. நாமோ அதற்காகக் கவலைப்பட்டுக் கைகட்டி வாய்பொத்தி இருந்துவிடவில்லை. கட்கமேந்திப் போரிடு வோனைக் கவண் கற்கள் கொண்டே வீழ்த்திய தீரனைப் பற்றிய கதையொன்றுண்டு. அதுபோல, நாம், எல்லாச் சாதனங்களையும் வைத்துக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியை, நமது உறுதி, தன்னம்பிக்கை, ஆகியவற்றின் துணைகொண்டு எதிர்த்து நின்றோம்; இன்று காங்கிரசிடம் உள்ள சகல சாதனங்களும், நம்மைச் சமாளிக்கப் பயன்படுத்தித் தீரவேண்டிய நிலைமை!!

இவர் என்ன சொல்லுகிறார் கேட்போம் - என்று ஆவலுடனும் பெருமதிப்புடனும், பயபக்தியுடனும், பொதுமக்கள் அருகே வந்து சேரத்தக்க, மேல் நிலையினராகவோ, மேதைகள்

ஆகவோ, விருதுபெற்றவர்களாகவோ, வீரக் கழலணிந்தவர் களாகவோ, கூடித் துவக்கியது அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை நாம் துவக்கியபோது, ஆற்காட்டு இராமசாமியார், தமது அறிவுத்திறனை எடுத்துக் காட்ட, ஆங்கில நாடுகளில் உலா வந்து கொண்டிருந்தார்! வணிகக் கோமான்கள் பொருள் ஈட்டினர்; பிரபுக்களாயினர்! மேதைகள் நூற்கள் எழுதினர், பாராட்டுப் பெற்றனர். தேர்தல் தந்திரமறிந்தோர், கூடுவிட்டுக் கூடுபாய்ந்தனர்; பதவிகளைப் பெற்று மகிழ்ந்தனர். இசைவாணர்கள், காங்கிரஸ் நாமாவளி பாடி, புகழ் தேடினர். நாடகமேடைகள், நம்மை நள்ளிரவில் நையாண்டி செய்யும், மாற்றார் கைக்கருவிகளாக இருந்தன. படக் காட்சிகள் பரலோக விளக்கமளித்துக்

கொண்டிருந்தன. புலவர்கள், நமது ”சிற்றறிவு’ பற்றி எடுத்துரைத்து, ஏளனம் செய்திடத் தமது பேரறிவைப் பயன்படுத்தி வந்தனர். மாணவர்கள், ஜெய்ஹிந்திலேயோ, இன்குலாப் ஜிந்தாபாத் திலேயோ, ஈடுபட்டுவிட்டிருந்தனர். தம்பி! அன்று, கொட்டும் மழையில், வெட்டவெளியில், கூடினோமே, கழகம் துவக்க, அந்த நாளையும், அதுபோது, நமக்கு இருந்த வசதிக் குறைவுகளையும், இன்று நமது கழகம் பெற்றுள்ள ஏற்றத்துடன், ஒப்பிட்டுப்பார்; உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும்.

பத்திரிகை உலகம், நம்மைப் பரிகாசப் பொருளாகக் கருதிற்று; நாம் கவலைப்படவுமில்லை; செயலாற்றாமலிருந்து விடவுமில்லை; இன்று, நம்மைத் தாக்குவதாலேயே விற்பனையைப் பெருக்கிக் கொள்ள

முடியும் என்ற வித்தையைக் கையாண்டு வரும் பத்திரிகைகள் பல. நாட்டிலே, பெரிய இதழ்கள், பெயர் பெற்ற இதழ்கள் இருட்டடிப்புச் செய்தபோது, என்ன செய்தோம்? நாட்டு மக்களிடம் இடைவிடாத் தொடர்பு கொண்டோம்; பிறகு மக்கள், இத்துணைப் பணியாற்றும், இந்தக் கழகத்தின் செய்தியைக் துளிக்கூட வெளியிடாமலிருக்கும் பத்திரிகைகளும், பத்திரிகைகள்தானா என்று கேட்டனர்; கண்டித்தனர். தம்பி! தெரியுமா உனக்கு; இப்படி இருட்டடிப்பில் தள்ளப்பட்டிருந்த நமது கழகம், பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி பிடித்ததே, அந்தச் செய்தி, நிகழ்ச்சி நடைபெற்ற 24 மணி நேரத்திற்குள், அமெரிக்க நியூயார்க் நகரில் உள்ள நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில், மிக முக்கியமான செய்தியாக வெளியிடப்பட்டது. நமது கழகத்தின் இறுதிநாள் வந்துவிட்டது

என்று இறுமாப்பாளர் பேசித்திரிந்த இதுபோது டென்மார்க் நாட்டிலிருந்து ஒரு ஆராய்ச்சியாளர், நமது கழகத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும்படி எனக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

காங்கிரஸ் மேடைகளில், மாநாடுகளில், இசைவாணர்கள், கோகிலகானங்கள், கொடுமுடிகள் பாடுவர், பெருமைப்படுவர்.

நமக்கு? இயக்கத் தொண்டர்கள் - கொள்கையை இசையாக்கி, உற்சாகத்தை இராகதாளமாகக் கொண்டு பாடுவர். தம்பி! இப்போது நிலைமை என்ன தெரியுமா? இசை வாணர்கள், நமது இயக்கப்பாடல்களில் இரண்டொன்றையாவது தெரிந்து வைத்துக்கொண்டால்தான், "கச்சேரி களைகட்டும்' என்ற நிலைமை!!

நாடகமாடிப் பெயர் பெற்றவர்கள்,

வேடமணியும் போது “வெல்வெட்’ - மற்ற நேரங்களில் கதர்! அதுதான்”பாணி!!’ இன்று? புதுப்புது நாடகங்கள் கேட்கிறார்கள் நடிக நண்பர்கள். நாடக மேடை என்றாலே, கழகப் பிரசாரமாகிவிட்டது, என்று நாடாள்வோரே கவலைப்படுகின்றனர்.

இவைகளை எண்ணிப் பார்க்கச் சொல்லும் காரணம், வெற்றிப் பட்டியலைக் காட்டிக் களிநடமாடவும் அல்ல; இது போதும் திராவிட நாடு பெற என்ற ஏமாளித்தனம்கொண்ட தாலுமல்ல; இத்துணை மாறுதல். வளர்ச்சி, பொதுமக்கள் தந்த ஆதரவினால் நமக்குக் கிடைத்தது என்பதைக் காட்ட. அதனால்தான், நாம் ஊட்டிவளர்த்த கழகத்துக்குத் துளி ஊனமும் வரக்கூடாது என்ற கவலை, பொதுமக்களுக்கு ஏற்படுகிறது; இவ்வளவு விரைவிலே, பொதுமக்களின் நல்லாதரவைப் பெற்று,

நமது ஆதிக்கத்தை அழிக்கத்தக்க ஆற்றலைப் பெற்றுவிட்ட இந்தக் கழகத்திலே, ஏதேனும் ஊனம் ஏற்படாதா, உடைபட்டுப் போகாதா, நாம் உயிர்தப்பிப் பிழைத்திட வழி கிடைக்காதா, என்ற நப்பாசை நாடாளும் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்படுகிறது. அதனால்தான், காங்கிரசை ஆதரிக்கும் ஏடுகள், நமது மாநாடுகளை நாலே வரியில் நாட்டு மக்களுக்குக் கூறும் ஏடுகள், நமக்குள்ளே பேதம், பிளவு இருக்கிறதா என்று மோப்பம் பிடித்து அலைந்து, சிந்தியது சிதறியது, வீசியது பூசியது ஆகியவற்றைப், பக்கம் பக்கமாக வெளியிட்டு, நமது கழகத்தைப் பொதுமக்கள், கைவிட்டு விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வாண்டு, குடியரசு விழாக் கூட்டம் முழுவதுமே, கழகத்துக்கு அர்ச்சனை நடத்தத்தான் பயன்பட்டதாம். அமைச்சர் கூடப், போதையேறிய பூபதிபோல ஆசனத்தில்

சாய்ந்தபடி கேட்டாராம்; தி.மு. கழகத்தை நாங்களா அழிக்க வேண்டும்! - என்று. அது தன்னாலே அழிகிறது, ஒருவருக் கொருவர் பேதப்பட்டு அழிவைத் தேடிக் கொள்கிறார்கள் என்று பொருளாம்!! உத்தரப் பிரதேசத்துப் பிளவை நீக்க ஓடோடி வருகிறார் நேரு! ஆந்திர அமளியைத் தீர்த்து வைக்க வரிந்து கட்டிக் கொண்டு வருகிறார். அந்தவிதமான பிளவுகளால், காங்கிரஸ் அழிந்துவிடாதாம்; நமக்குள்ளே, முறைகளைப் பற்றிய கருத்துரைகள் கூறப்படுவதிலே கசப்புகள் ஏற்பட்டால் போதுமாம், நாம் உடைபட, அழிந்து விட!! அளவற்ற புல்லறிவும் துணிவும் வேண்டும், இப்படியொரு வாதம் புரிய!

நான் அங்ஙனம் கூறுவதால், நமக்குள் கருத்து வேற்றுமை களால் பேதத் தலைதூக்கி நிற்கவேண்டும் என்று கூறுவதாகக்

கொள்ளற்க. நமக்குள் ஏற்பட்டுள்ள வேற்றுமைகள், கழகத்தை நடத்திச் செல்லும் முறைகள்பற்றி - கழகக் கொள்கை பற்றியது அல்ல.

ஆனால், இதற்கே இத்துணை இரைச்சல் கிளப்புகின்றனர், இடுப்பொடிக்க முயலுகின்றனர், ஏளனம் செய்கின்றனர், காங்கிரசார். பொதுமக்களும், இந்த அளவிலும் வகையிலும் கூட, நமது கழகத்தில் பேத உணர்ச்சி காணப்படுவதை விரும்ப வில்லை; கலக்கமடைகிறார்கள். பெற்ற குழந்தைக்கு வந்துற்றது நோய்கூட அல்ல; பால் மணம் மாறாத குழந்தை படுத்துறங்கு கையில் சிற்றெறும்பு கடித்ததனால், ஏற்பட்ட சிறு தழும்பு என்றாலும், தாய் பதறுவதைக் காண்கிறோமல்லவா? அஃதே போல. நாம் வளர்த்திடும் கழகத்திலே முறைபற்றிக் கூடத்தான் பேத உணர்ச்சி மூண்டிடுவது ஏன்?

முண்டிட்டதும் இந்த வடிவம் பெறுவானேன் என்ற கவலை, நல்லோருக்கெல்லாம் ஏற்படுகிறது.

மாற்றார்களுக்கு நாமே இரைதேடிக் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுவிடாதபடி, பார்த்துக் கொள்ளும் பொறுப்பு, தம்பி! நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஆனால், மாற்றார்களுக்கு இடம் கிடைத்துவிடுமே என்ற அச்சத்தால், உள்ளத்தில், எழும் கருத்தை அழித்துக் கொள்ள வேண்டும் என்று கூற மாட்டேன். அதனை எடுத்துரைக்கும் முறையும், தன்மையும், எடுத்துரைக்கும் போது, நாம் கூடி ஆராய்ந்து முடிவெடுப்பதிலே மேற்கொள்ளும் பொறுப்புணர்ச்சியும் பண்பும், வளர்ந்தாக வேண்டும். கழகம் வளர வளரப் புதிய புதிய பிரச்சினைகளை நாம் சந்தித்துத் தீர வேண்டும். அது தவிர்க்க முடியாத கடமை. அந்தக் கடமையைச் செய்வதிலே,

அச்சம் தயை தாட்சணியம் தேவையில்லை. ஆனால், தோழமை பாழ்படலாகாது - முறைக் கேடு ஏற்படக் கூடாது - கட்டுக்கோப்பு உடைபடக்கூடாது. மெத்தக் கஷ்டப்பட்டு, கட்டப்பட்டது, தம்பி! இது. இதற்கு ஒரு ஊனம் ஏற்படக் கூடாது.

இப்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி, தம்பி, நீ நிறைய அறிந்திருக்கிறாய். நான் கூற, புதிதாக என்ன இருக்கிறது.

ஒன்று மட்டும் கூறுவேன், நமது தோழர்கள் பீதி அடையத் தக்கவிதமான நிலைமைக் கேடுகள் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. மாற்றார்களுக்கு இதனைச் சொல்வேன், வேழம் வேல் பாய்ந்து வேதனைக்குரல் எழுப்புகிறது. வீழ்ந்துபடும் என்று எண்ணாதீர். வேழம் சந்தனமரத்தின்மீது உராய்ந்து கொள்ளுமாம் - புலவர் கூறுகின்றனர். ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு,

அடவியில் ஓடுமாம் - முழக்கமிட்டபடி.

முறைகளைப் பற்றி இங்கு ஒருவருக்கொருவர் விவாதம் எழுப்பும் குரல் கேட்டு, கழகம் அழிந்துபடும் என்று எண்ணிக் கொள்ளாதீர்.

முறைபற்றிக் கருத்துவேற்றுமை எழுகிறது என்றால், உமது எதேச்சாதிகாரத்தை அழித்தொழிக்க, எம்முறை சிறந்தது, விரைவில் வெற்றி தரத்தக்கது என்பது பற்றித்தான்.

தம்பி! மாற்றாரின் மனம் களிப்பது எனக்குத் தெரியும்; என்னைவிட மிக நன்றாக, நீ அறிந்திருக்கிறாய்.

மாற்றுக் கட்சியினரோ, செயற்குழுவில் அமளி - அடிதடி, நடிக நண்பர்கள் தாக்குதல் நடத்தினர், சட்டையைப் பிடித்து இழுத்தனர் என்ற பொய்யுரையைப் பரப்பி, நமது

கழகத்துக்கு இழுக்குத் தேடவும், நமக்குள் கலாம் மூட்டவும் முயற்சிக்கின்றனர். அவர்கள் சித்தரித்து இருப்பது கண்டு கலங்கிப் போயிருக்கக் கூடியவர்களுக்கு, நான் இதனைக் கூறுவேன். அவர்கள் கூறியுள்ளபடியான அடிதடி, தாக்குதல் துளியும் செயற்குழுவிலோ பொதுக்குழுவிலோ நடைபெற வில்லை. உரத்த குரலில் பேச்சும் ஒருவருக்கொருவர் அறை கூவல் விடுவதும், அமைதியற்று எழுவதும் ஆகிய பரபரப்புக் கிளம்பி எம்மைக் கலங்க வைத்தது. அந்தப் பரபரப்பு ஒலிகேட்டு, பக்கத்திலே வேறோர் இடத்திலே தங்கியிருந்த பொதுக்குழு உறுப்பினர் களாக உள்ள கழக நண்பர்கள், பதறி ஓடோடி வந்தனர் - அமைதி இரண்டு நிமிடங்களில் ஏற்பட்டது - அவர்கள் திரும்பவும் தமதிடம் சென்றனர். வேறு எந்த விபரீதமும் நிகழவில்லை.

மங்கிப் போய்விட்டதாலே மறைந்துபோய்விட்டதோ என்று பலரும் எண்ணி, இனி என்றென்றும் சென்றது மீளாது எனச் செப்பினர் - எனினும், அந்தத் திராவிட இன உணர்ச்சியை நமது கழகம் கொழுந்து விட்டெரியும் நிலைக்குக் கொண்டுவந்து வைத்திருக்கிறது. பட்டுப்போன நிலையிலிருந்த மரம் துளிர் விடுகிறது! படர்ந்துபோக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடுகிறது! பட்டிதொட்டிகளெல்லாம் பாசறைகளாகி விட்டன. கழகம் அழைத்தால் களம்புகத் தயாராக நிற்கின்றன, அணிவகுப்புகள். கொட்டப்பட்ட குருதி கொஞ்சமல்ல. வெட்டிச் சாய்க்கப்பட்டனர் பலர். வெஞ்சிறையில் உழன்றனர் பலப்பலர்.

இறந்துபட்டவர்கள் சென்ற வழி செல்லாதவரையில், நாம் இயக்கத்துக்கு

தரவேண்டிய காணிக்கையைத் தந்தவர் ஆக மாட்டோம் என்று உறுதிபூண்டவர்கள், நம் உடன் இருப்போர்! பலரால் இதை எடுத்துக் கூறக்கூடத் தெரியாமல் இருக்கலாம்; சிலர் இது பற்றிப் பேசுவது முறைக்கேடு, நேரக்கேடு என்றுகூட எண்ணிப் பேசாது இருந்திடக்கூடும். ஆனால், அழைப்பு வந்திடும்போது, ஆமையாகிவிடமாட்டார்கள், களம் புகாது ஏமாற்றிவிடமாட்டார்கள், உயிரைத் தந்திடத் தயங்க மாட்டார்கள்.

அவ்விதமான வீர உணர்ச்சி கொப்பளிக்கும் நிலைமையினை நமது கழகம், மிகமிகக் குறுகிய கால அளவிலே செய்து தந்துள்ளது.

கழகம் நடாத்திய பிரசாரத்தின் பயனாக, இன்று, வடநாடு தென்னாடு எனும் பிரச்சினை குறித்துப் பேசாதார் இல்லை என்ற கட்டம் காண்கிறோம்.

கிளர்ச்சிகளில் ஈடுபடத் துடித்து நிற்கும் தூயவர் ஆயிரம் ஆயிரம். அஃதேபோல், தோழமை உணர்ச்சியுடன், கழகப் பணியாற்றப் பல்லாயிரவர் உளர். பாங்கான வளர்ச்சி தம்பி! பார்ப்போர் பரவசப்படுகின்றனர், மாற்றார் வியப்படைகின்றனர், எப்படி இவர்களால் இத்துணை விரைவில் ஏற்றமிகு அமைப்பைச் சமைத்து நடாத்திச் செல்ல முடிகின்றது என்று. அத்தகைய ஓர் அமைப்பு உடைபடுமானால், எண்ணும்போதே, நெஞ்சிலே நெருப்புப் பிடிக்கிறது, உலகம் நம்மை மன்னிக்காது. ஆமாம், தம்பி இவர்களை நம்பி, வழி நடந்தோம். துணை நின்றோம், தொல்லைகளைத் தாங்கிக்கொண்டோம்; ஆயின் கழகத்தை நடத்திச் செல்லும் நிலையிலிருப்போரோ, தமக்குள் மாறுபாடுகளை ஏற்படுத்திக்கொண்டு,

இத்தனை ஆண்டு உழைப்பையும் உருக்குலைக்கிறார்களே, என்று எண்ணி இரத்தக் கண்ணீர் வடிப்பர். அவர்கள் மனம் உடைபடும்; உடைபடின், இனி என்றென்றும், நம்போன்ற சாமான்யர்கள், ஒரு இயக்கத்தை, அமைப்பைச் சமைத்திட இயலாது; மக்கள் ஆதரவு கிட்டாது. இந்த மாபெரும் உண்மையை உணர்ந்தால், நம்மில் எவரும், கருத்து வேற்றுமைகளை கோபதாப வேகத்துடன் கலந்து உலவவிட்டுத் தம்மையும் அறியாமல், கழகத்துக்கு ஊறு தேடிடார். உடைபட்டுப் போனபின் உட்கார்ந்து, அழுது பயனில்லை; உண்மை நிலைமையினை உணராததும் மாபெரும் தீதுக்கு வழி கோலிவிடும்.

ஒரு அமைப்பினைக் கட்டுங்காலை உள்ள கஷ்டத்தைவிட, அதனைக் காத்திடும்போது ஏற்படும் கஷ்டம்

மிக அதிகம். அமைப்புக்கு அதிர்ச்சி ஏற்படுத்துவது, அதனை அழித்திடத்தக்க ஆபத்தினைக்கூட உண்டாக்கிவிடக்கூடும். தூசுபோகக் கண்ணாடிப் பலகையினைத் துடைத்திடத்தான் வேண்டும்; ஆனால், பக்குவமாக, எங்கெங்கு அழுக்கேறிவிட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதனை நீக்கிடத்தக்க விதத்தில் துடைத்திட வேண்டும் - ஆர்வத்துடன். ஆனால் ஆர்வத்துடன் பக்குவமும் சேர்ந்திட வேண்டும் - இல்லையேல், துடைக்கும் போதே, கண்ணாடி பாளம் பாளமாகக் கீழே வீழ்ந்துவிடும், பாழ் பட்டுப் போகும் - பட்டபாடு அத்துணையும் பாழாகிப் போகும்.

தம்பி! இந்தக் கவலைதான் என் மனதைக் குடைகிறதே யன்றி, எந்தப் புதிய முறைகள் புகுத்துவதற்கான முயற்சிகள் பற்றியும் நான் கவலை கொள்ளவில்லை.

முறைகள், புதியனவோ, பழையனவோ, எவை எனினும், அவை ஒரு அமைப்புக்காக - எனவே, அமைப்பு அழிந்துவிடாதபடி, கேலிக்கு ஆளாகாதபடி மாற்றாரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். நேர்த்தியான அறுவைத்திறன் காட்டினார் மருத்துவர்; ஆனால், நோயாளிதான் செத்துவிட்டார் என்று கூறிடத்தக்க நிலை ஏற்படக் கூடாதல்லவா? வேலின் கூர்பார்க்க, நம் விழியினையே குத்திக்கொள்ளப் போமோ!!

உன் கருத்து இவ்வழிதான் இருக்கும் என்பதை நான் நன்கு அறிவேன். உன் கைவண்ணத்தால் கிடைத்தது, கழகம் எனும் இந்த அமைப்பு. இன்று அது கலகலத்துப் போகாதிருக்கும் பொறுப்பினையும் நீ மேற்கொண்டாக வேண்டும். நிலைமை இது. கூறிடுவது என் கடமை. என் முயற்சியில்

குறையிராது - என் நெஞ்சில் உள்ள வலிவு போதுமானதுதான் என்ற உணர்வு குறைந்து வருகிறது. உடனிருந்து பணியாற்றிக் கழகத்தைக் கட்டிக் காத்து, வெற்றியைத் தேடிக் கொடுத்திட வேண்டும். மிக நல்ல அமைப்பு - கடினமான உழைப்பின் விளைவு - தோழமைக்கு ஓர் எடுத்துக்காட்டு - தி.மு. கழகம்.

இன்றோ. மாற்றார் எள்ளி நகையாடுகின்றனர் - உற்றார் உள்ளம் குமுறுகின்றனர் - உடைபட்டுப் போய்விடும் என்று மிரட்டுகின்றனர், நமை அழித்தொழித்துத் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ள முயற்சிக்கும், காங்கிரசார். என் அச்சத்தையும், ஆயாசத்தையும், ஐயப்பாட்டினையும் நீக்கிடத் தக்கவிதத்தில், கருத்து வேறுபாடுகள் பற்றிப் பேசுவோர் கூடக் "கழகம் உடைபட விடமாட்டோம், அழிவு

வந்திடாது' என்று உறுதி அளிக்கின்றனர். மகிழ்ச்சி. கழகத்தில் தொடர்புள்ள எவருக்கும், நிச்சயமாக, கழகத்துக்கு இழுக்கு வந்துவிடும், அழிவு ஏற்பட்டுவிடும் என்று தோன்றுமானால், நெஞ்சு துடிக்கா மலிராது; ஏனெனில், அவரெலாம் அளித்த அருந்திறனும் அயரா உழைப்பும் சேர்ந்து உருவாக்கப்பட்டதுதான், கழகம். அதற்கொரு ஊனம் ஏற்பட, எவரும் இடமளிக்க மாட்டார்கள். அந்த நம்பிக்கையும் எனக்கு உண்டு. உன் உழைப்பும், திறனும்தான், அந்த நம்பிக்கை நான் கொள்வதற்குக் காரணம், தம்பி! உன் கண்ணொளி போதும், என் கவலையை ஓட்ட, காரிருளை விரட்ட; உன் நெஞ்சு உரம் போதும், என் நடுக்கத்தை நீக்க! கழகம் காப்பாற்றப்படும் என்று, என்போன்றோர் புது உறுதி பெறுவதே, நீ எழுப்பும் எழுச்சி முழக்கம் கேட்டுத்தானே!

உன் சொல்லும் செயலும், மாற்றாருக்கு, நமது கழகத்தின் மாண்பு துளியும் மங்கவில்லை என்பதனை எடுத்துக் காட்டுவதாக அமைய வேண்டும். உன் போக்கும் நோக்கும், பேச்சும் செயலும் கழகத்தை நடத்திச் செல்பவன் என்ற பொறுப்பினைச் சுமந்து கொண்டிருக்கும் என்போன்றாருக்கும், நல்வழி காட்டத்தக்கதாக அமையட்டும். எந்த ஒரு கட்சியும், அதன் மேல்மட்டத்திலே அமர்த்தப்பட்டிருப்பவர்களின் இயல்பு, திறமை, உழைப்பு இவைகளை மட்டுமே பொறுத்து இல்லை. அவர்களை அமர்த்தும் உரிமையும் ஆற்றலும் பெற்றுள்ள பல இலட்சம் உறுப்பினர்களின் திறமை, தன்மை ஆகியவற்றைப் பொறுத்து இருக்கிறது. கலசத்தின் மினுமினுப்பு, காலக்கரம் பட்டுப்பட்டு மங்கிப் போகக் கூடும்; நட்டமில்லை, அடித்தளம் வலிவுடன் இருந்தால்.

தம்பி! அடித்தளத்தை ஆக்கிக் காத்திடும் பொறுப்பு, உன்னுடையது. அதற்கேற்ற ஆற்றலும் உனக்கு நிரம்ப இருக்கிறது. அந்த நம்பிக்கைதான், இயக்கத்துக்கு உயிர் ஊட்டம் தருகிறது. உன் பணியின் மேம்பாடுதான் நாட்டின் பிணிபோக்கும், மாமருந்து. அதை அளித்து, என் போன்றாரை நடத்திச் செல்லும் ஆற்றல் படைத்தோனே! அஞ்சாது பணியாற்று! அயராது பணியாற்று! வெற்றிக்கான பாதை வெகு தெளிவாகத் தெரிகிறது.

அன்புள்ள,

அண்ணாதுரை,

12-2-61

32. 1961 ஆம் ஆண்டுக்கான திட்டம் இதுதானா?

தி.மு.கழகமும் வளர்ச்சியும் -

கழகத்தில் பாசம்!

தம்பி!

தி.மு. கழகம் துவக்கப்பட்டதும், இது முளைவிடாது என்று பயம் காட்டினர்; அரசியலில், "மிட்டா மிராசு பாத்தியதை' கொண்டாடும் போக்கினர்.

தி.மு. கழகம் முளைவிட்டது; வளர்ந்தது; பசுமை பாங்காகத் தெரிந்தது.

தி.மு. கழகம் நாலுநாள் கூத்து; ஆடி அடங்கிவிடும்; அரூடம் கேளும் என்றார், அரசியலை நடாத்தும் அருங்கலையில் வல்லவர்கள் யாமே என்று ஆர்ப்பரிக்கும்

போக்கினர்.

தி.மு. கழகம், ஆண்டுக்காண்டு புதுப் பொலிவுபெற்று வளர்ந்து வரலாயிற்று.

ஏழெட்டுப் பேர்வழிகள் எங்கும் சுற்றி, என்னமோ கழகம் என்று பேசுகின்றார்; ஈதல்லால் இவரின் பக்கம் எவர் சேர்வர். கூறும் என்று, எல்லோர்க்கும் தாமே வழிகாட்டி என்று எண்ணிக் கொண்டோர் ஏளனம் கூறி நின்றார்.

தி.மு. கழகமே எமது இடமாகும் என்று, உழவர் முதல் சிறு வணிகர் வரை கூறலானார்; மாணவரும், நாட்டின் மாண்பு காக்க இப்பாசறையில் யாம் சேர்வோம் என்று வந்தார்; ஆலைதனில் வேலை செய்யும் பாட்டாளித் தோழர், அருங்கலைகளில் ஈடுபட்டு ஏற்றம் பெற்றார் அனைவருமே. இது எங்கள் கழகம் என்று இடம் பெற்று உயிரூட்டம் தந்தனர்; வரலாறு அறிந்தோரும் வந்தார்

இங்கு; தமிழர் வாழ்ந்த விதம் கூறி நின்றார் புலவர் பல்லோர்; கவிவல்லோர் இசைவாணர் துணை நின்றார்; கவர்ச்சி மிகு வடிவுடன் கழகம் மிளிர்ந்ததாங்கே.

ஆமப்பா! இதுகளுடன் யார்தான் சேர்வார்? அன்னக் காவடிகள் ஐந்நூறு சேரும்; ஆடிப்பிழைப்போரும் பாடி வாழ்வோரும் கூடினர் அங்கு என்றால், ஆவது என்ன அவரால்? பேசுவர் சுவைசொட்ட; வேறென்ன இயலும்! சாயம் பூசுவர், ஆடுவர் நாடகம்; கண்டோர்க்குச் சிரிப்பு மூளும். அஃதேயன்றி கிளர்ச்சி செய்ய வல்லவரோ கழகத் தோழர்! கிண்கிணியும் கழலாமோ, கூறும், என்று கேட்டுவிட்டு இடிச்சிரிப்பைக் காட்டி நின்றார், எவருக்கும் திறம் இல்லை; தீரம் இல்லை என்று கூறும் மேலோர்.

நாட்டினிலே உள்ள இழிவுதனைத் துடைத்திடத்தான், நாங்கள் எங்கள்

குருதியையும் தருவோம் என்று சூளுரைத்துக் கிளர்ந்தெழுந்தார், கழகத் தோழர்; சுடுசொல்லைத் தாங்கி நின்றார். துவளவில்லை; கடுஞ்சிறைக்கு அஞ்சி அவர் ஒளிய வில்லை; கைகால் கண் போயினும் கலங்கவில்லை; இன்னுயிரே போயிற்று, வீரம் மட்டும் இம்மியளவும் குறைவாகிப் போகவில்லை; வீறிட்டுப் பாய்ந்து வந்த விடுதலை வேகம் கண்டு கைபிசைந்து நின்றார் காங்கிரஸ் ஆட்சியாளர்தானும்.

ஈதென்ன பெருவீரம்! சிறையுள் சென்று இருந்துவிட்டு வெளிவந்து பேசுகின்றார். கிளர்ச்சி எனில் தக்கதோர் நியாயம் வேண்டும்; எடுத்ததெற்கெல்லாம் எதிர்ப்புக்காட்டி வந்தால், எவர் இவரை மதித்திடுவார் கூறும். நாடு ஏற்கும் திட்டம் உண்டு என்றால், நல்லபடி அதனை எடுத்துரைத்து, மக்களிடம் ஒப்பம் பெற்றாலன்றோ, மதித்திடுவர்

மாநிலத்தில் உள்ளோர் எல்லாம்; இங்கிதமான இம்முறையைவிட்டு எதற்கெடுத்தாலும் ஒழிக! ஒழிக! என்று இரைச்சலிட்டுப் பலன் என்ன? என்று பேசிக், குன்றனைய மதிபடைத்தோர்போலக் கோலம் காட்டி நின்றார் காங்கிரஸ் ஆட்சியாளர்.

சிறை செல்லமட்டுந்தான் தெரியுமென்று என்ணற்க; நெஞ்சத்துள்ள சிறைக்கதவுதான் திறந்துவைக்கும் அந்தத் தீரமும் எமக்கு உண்டு என்று, செப்பியே கழகத்தார், சுற்றிச் சுற்றி விளக்கமெல்லாம் அளித்தார் விடுதலைப் போரினைப் பற்றி; வீழ்ந்துபட்ட திருஇடமும் மீண்டும் வெற்றிக் கொடி நாட்டி எழுந்திடவே அறப்போர் காணீர் என்றார்; திட்டமெது என்பீரேல், ஒன்று உண்டு; அதனுள்ளே பலப்பலவுமான திட்டம், ஆலின் விதைக்குள்ளே பல்லாயிரம் இருப்பதுபோல உளது என்று, அறைந்தனர்

மாற்றார் அதிரும்வண்ணம், திராவிட நாடு திராவிடர்க்கே எனும் முழக்கம்.

முழக்கமாம், முழக்கம்; கேட்டீரோ! இவர் எழுப்பும் முழக்கமெல்லாம், நாடகம்தான்; வேறொன்றில்லை! பழம்பெருமை பேசுகிறார் பார்த்தவர்போல்; படக்காட்சி காட்டுகின்றார் திராவிடம் என்பதாக; நாடகமாடிடும் இவர்கள்தானோ நாடாள வருவார்கள்; முறையோ என்று, நாப்பறையை எழுப்பி நின்றார், நாடாளும் நப்பாசை கொண்டோரெல்லாம்!

நாடகமும் படமும், தொழில்; அறிவீர் ஐயா! நல்ல அந்தத் தொழிலும் நெஞ்சை அள்ளும் திறமுடைத்து; எள்ளி நகையாடும் ஏந்தலெல்லாம், வெள்ளையரை எதிர்த்த காலை, வேண்டிப் பெறவில்லையோ, கலைஞர் தொண்டு! - என்று கழகத்தார் கூறிக் காத்தார், கலையினையும் அஃதளிக்கும்

கருத்தோட்டத்தையும். கலைஞர் எனில், எங்கிருந்தோ வந்து சேர்ந்த வியப்பளிக்கும் பொருளல்ல, அவரும் நம்மில் ஓர் அங்கம் அறிந்திடுவீர், அவர்க்கும் உண்டு அன்னைமொழி காத்திடும் உரிமைதானும்; நாடு நமதாக வேண்டும் என்று நல்லோர்கள் கிளம்பிப் போர் புரியும் காலை, நாடகம் நடாத்திடுவோர்க்கும் வேலை உண்டு என்றும் கூறி, நமது கழகத்தோரும் நாடகமே ஆடி மகிழ்வித்தார்கள், நாட்டவரை, கலைஞரையும் கூடத்தானே!

கலை உலகு உமதே என்று கருவம் கொண்டு அலைகின்றீர்கள்; காட்டுகின்றோம் எமது திறம் பாரும் என்று, கதருடைய கலைஞர்களை அழைத்து வந்து, கண் சிமிட்டி நின்றார் காங்கிரஸ் அமைச்சரெல்லாம்; காட்சி கண்டு, கலகலத்துப் போகும் கழக அணி என்றார்.

கலையுலகில் கீர்த்திபெற்ற தோழரெல்லாம், பாடி மகிழ்விக்க மேடை வந்தாரில்லை; கழகம் காட்டும் பாதையினை மற்றவர்க்கு எடுத்துரைக்கும் பணி மேற்கொண்டார்; திரு இடத்தின் சீரெல்லாம் படித்துணரத் தலைப்பட்டார்கள்; வெறும் சிரமசைக்கும் பதுமைகளாய் இல்லை; சிறையும் செல்ல முன்வந்தார்; முக்காடிட்டு ஓடவில்லை; கழக அணி தன்னில் இவர் சேர்ந்த பின்னர், கலைத் துறையில் பணிபலவும் செய்யும் தோழர், பாட்டாளிகள் பலரும் வந்து சேர்ந்தார்; விடுதலைக்குப் பாடுபட முனைந்து நின்றார். கலையுலகில் நிலைபெற்றோர் கழகமதில் வந்ததாலே, கலையுலகப் பிரச்சினையை அலசிப் பார்த்து, எமது நிலை உயர வழிகோலக் கழகம் என்னென்ன திட்டங்கள் கொள்ளும் என்று கேட்டு அவர்கள் இருந்தார் இல்லை.

எமக்கு என்று ஏற்பட்ட தொழில் கலை; எனினும் அஃதும், எமது கழகம் காட்டும், வழிநடக்கத் துணை நிற்கும் என்பதால்தான் இருக்கின்றோம் அத்துறையில் தானும் என்றார். அர்ஜுனனாய் வேடமிட்டு, அளிப்பேன் இலட்சம் என்றுரைக்கும் முதலாளியின் முகமும் சுண்ட, எமது பணி விழைவீரேல், இதனைக் கேளும்; எமது கொள்கைக்கு ஊறு நேரா வண்ணம் இருந்தாலன்றி, படமதனில் நாங்கள் நடிக்க மாட்டோம்; நாங்கள் படத்தொழிலுக்காக மட்டுமே உள்ளோம் அல்லோம்; பாங்கான திராவிடம் காணும் நோக்கம் கொண்டுள்ளோம், அறிந்திடுவீர் என்று சொல்லி, பண்பு காத்தார்.

ஈதெல்லாம் கிடக்கட்டும்! சேதி கேறீர்! இவர்க்குள்ளே எத்தனையோ பிளவு; பேதம்! ஆளுக்கோர் திட்டம், மட்டம், அனியாயம்!

வெளியே தெரிந்தால் போதும்! இவருக்கு அவர்தான் மேல், அவருக்கு இவரே நிகர் என்றெல்லாம் எத்தனையோ பேச்செல்லாம் எழுந்திட்டது அங்கே. இனி அவர்கள் ஒன்றாக இயங்கமாட்டார்! பிய்த்துக் கொண்டு ஓடுவார் பாரீர் என்று, பேயுள்ளம் கொண்டோர் பேசி வந்தார்.

பேச்சுகளில் எழுத்துகளில் பேதம் தேடி அலைகின்றீர் பித்தர்களே! கருத்துத் தோட்டம், ஓர் மலர்தான் இருக்கும் இடமாகாது: வண்ணப் பூ வகை வகையாய் இருக்கும் ஆங்கே! சிரித்திடும் முல்லைக்கும் சிங்கார ரோஜாவுக்கும், பறித்தெடுக் காமலே பார்த்து மகிழத்தக்க பாங்கான தாமரைக்கும், பகைதான் என்று பேசுவது அறிவீனம் அன்றோ. சேர்ந்து பணியாற்றிடும் காலை; செயல் முறைகள் பலப்பலவும் பேசிடல் வேண்டும்; சீற்றம் எழத்தக்க நிலையும்

வரலாம்; சிண்டு முடித்திடுவோர் முந்திக் கொண்டு மனத்தாங்கலாக்கி மகிழ்ச்சி வெறி கொள்வர்; எனினும், எமது இலட்சியமாம், திராவிட நாடு திராவிடர்க்கு என்னும் பிணைப்பு, எமக்குள் முறிவுகளைத் தராது காணீர் என்று சூளுரைத்துக் கழகம் வளர்ந்தது; சூதுமதியினருக்குக் கிலியூட்டிற்று.

உருட்டு விழி, மிரட்டும் பேச்சுக் கொண்டோரன்றோ! இவரால் ஊர்க்கலகம் மூளும், பிணமும் வீழும், பேச்சோடு நின்றிடும் பேர்வழிகளல்ல, பெரும்போர் மூட்டி, நாட்டை இரத்தக் களரியாக்கிப், பேயாட்டம் ஆடத்தான் படை சேர்க்கின்றார்கள். அறவழியில் இவர் நின்று பணியாற்றனார் - அனைவருக்கும் ஆபத்துத் தேடும், பயமளிக்கும், பலாத்காரம் அவிழ்த்துவிட்டு, படுகளமாக்குவார், நாட்டை! பாரும் என்றார்.

கொன்று குவித்துக் கொடிநாட்டிடும் கொடிய முறை எமதல்ல, கூறிவிட்டோம். கூர்வாள் ஏந்திக் குத்திக் குடலெடுக்க முனைந்தோமில்லை - எதிர்ப்படுவோர் எங்கிருந்தோ வந்த வேற்று நாட்டாரல்ல; விலங்கணிந்தும் உணராது உழலும் எமது உடன் பிறப்பாளர் அன்றோ அவர்களும்தான்; ஒருவருக் கொருவர் வெட்டிக் கொண்டு வீழும் அந்த வேட்டுமுறை அல்ல, நாங்கள் கொண்ட முறை அறிவீர் என்று கூறி, குத்துக்கும் வெட்டுக்கும் ஆட்பட்டுக் குருதி கொட்டி, கொடிய செயலில் துளியும் இறங்காமல், கொள்கை கூறி, கண்ணீர்த் துளிகள் நாட்டின் கண்மணிகள் என்று பாராட்டும் நிலையினைக் கழகம் பெற்று, பாமரரும் பற்றுக் காட்டும் ஏற்றம் கொண்டது.

வேட்டுமுறை அல்லவோ உமது! பிழைத்தீர், பயல்காள்! இல்லையென்றால், கூண்டோடு

பிடித்தழித்துப் போட்டிருப் போம். தப்பிவிட்டீர். சரி, போகட்டும். வேட்டு முறை வேண்டாம் என்று கூறிவிட்டீர். வேறென்ன முறை உமக்கு? உண்டோ? கூறீர்! என்று காங்கிரசார் கேட்கலுற்றார்.

வேட்டுமுறை ஆகாது; மரபுமல்ல என்பதனால் அதை விடுத்தோம்; அஃதும் இன்று இக்கழகமதை நடாத்திச் செல்வோர், இம்முறை ஆகாது என்பதால், எழவில்லை. வேட்டு முறை தன்னாலன்றி வேறெதாலும் விடுதலையும் கிடைக்கப் போமோ என்று என்று கேட்கும் வீரமிகு போக்கினர்க்குக் குறைவில்லை, அறிவீர் நன்றாய். பாசறைகள் அமைத்தும், பதுங்கிப் போர் செய்தும், வெடிகுண்டுகள் செய்தும், விரைந்து தாக்கிடும் வழி நடந்தும், வடவரின் ஆதிக்கத்தை அழித்தொழிக்க வேண்டும் என்று, விடுதலைப் போர் வரலாற்றுச்

சுவடி காட்டும், சுவை மிக்க சேதிகளை நெஞ்சில் கொண்டு, செயல்புரியத் துடி துடித்து நிற்போர்கள் அறவே இல்லை என்று எண்ணற்க. அவர்கள் இன்று, அந்த முறை ஆகாது என்று கூறும் எண்ணத் தாரிடம் கழகம் இருக்கட்டும் சின்னாட்கள் என்று உள்ளார். எந்நாளில் அவரிடம் கழகம் சேரும் என்பதைக் கூறவல்லோர் அவருமல்ல; உமது ஆணவத்தின் போக்கே, அந்நாளை விரைவாகக் கொண்டு வந்து விடக்கூடும். அறப்போரிட்டு வெற்றி பெற விழைவோர்கள் கழகத்தை நடத்தும் பொறுப்பிலுள்ளார், இந்த உண்மையின் அருமையினை உணராமல், ஆணவத்தால் அடக்குமுறை அவிழ்த்துவிட அவிழ்த்துவிட, அழிவு முறையன்றி வேறொன்று ஆகாது என்று ஆர்த்தெழுவர் பல்லோர்கள் அறிவீர். இன்று வேட்டுமுறை இல்லை, ஓட்டுமுறை மேற்கொண்டுள்ளோம்

என்று, அறிவித்திருக்கிறது நம் கழகம், ஆளவந்தார்க்கு!

ஓ! ஓ! ஓட்டுமுறையோ; உமது! மெத்தச் சரி! களத்திலே காட்டுங்கள் கைவரிசை பார்ப்போம் என்று, காங்கிரசார் பெருங்கூச்சலிட்டார், சிரிப்பினூடே; தேர்தலிலே வல்லவர்கள் என்ற பட்டம், தேசத்தார் சூட்டிவிட்டார் என்பதாலே. தேர்தலிலே நிற்பாராம், கேளீர் ஐயா! தெருமுனையில் பேசுவர், கேட்பர், மக்கள், பொழுதுபோக்குப் பல பண்டு, இவர்கள் தருவது பேச்சுக் கச்சேரியன்றோ! இதனைக் கண்டு, மதிமயங்கிப் போனதாலே, இவர்கள் பாரும், தேர்தலிலே நிற்பாராம்! ஐயோ பாபம்! தூள் தூளாகிப் போவர்! பின்னர், கழகம் இருந்த இடம் புல் முளைத்துப் போகும்! சரியான அடி கொடுத்துத் தரைமட்ட மாக்கிடவே; வந்தது சமயம் ஜெய்இந்த் என்று

கொக்கரித்துக் கிளம்பினர் கோலேந்திகள், புதிய தெம்புடன்.

எப்புறமும் இத்திறத்தார் எதிர்த்த காலை, எதைக் கண்டு இவர்கள் துணிவு பெற்றார் என்று அவரெல்லாம் ஏங்கும் வண்ணம், தேர்தலிலே கழகம் ஈடுபட்டு, நாடெங்கும் நல்ல பிரச்சாரம் நடாத்தி, வீடெங்கும் கழகம் பற்றிப் பேசுவோர் கூடக் கண்டு, விறுவிறுப்பாய்ப் பணியாற்றி வெற்றிதேடப் பாடுபட முனைந்தது. அந்த நாளில், எவர் கலைஞர் எவர் வழக்கறிஞர் என்ற பேச்சு எழவே இல்லை. கலையுலகில் இருந்த இராஜேந்திரன் தானும், கடும் எதிர்ப்பு மூண்ட தேனி களத்தில் நின்று போட்டியிட்டார். மற்றக் கலைஞரெல்லாம் நாளெல்லாம் சுற்றிச் சுற்றி, கழக வெற்றிக்கு உழைத்தார். ஓட்டுப் பெறுவ தென்பது விளையாட்டல்ல; ஒன்றல்ல இரண்டல்ல நாங்கள் கண்ட

தேர்தல்; மன்னாதி மன்னனெல்லாம் மண் கவ்வச் செய்தவர்கள்: எம்மை இந்த மரப்பாச்சிகளோ எதிர்த்து வெற்றி கொளப் போகிறார்; கதை எழுதும் கருணாநிதியும், கவிபாடும் கண்ணதாசனும், படக்காட்சிகட்குக் கதை எழுதிடும் அண்ணாத்துரையும், எமை எதிர்த்து நிற்கப் போமோ என்றெல்லாம் ஏசிவந்தார், இறுமாப்பு மிகக் கொண்டோர்: மக்களோ, சீராட்டி வரவேற்று, நமக்குப் பரிந்து வாக்களித்தார்; பதினேழு இலட்சம் வாக்குகளை நம் கழகம் பெற்றது; ஆட்சி மன்றம் சென்றமர்ந்தனர் நம்மவர்.

எப்படியோ பெற்றுவிட்டார் வெற்றி, அதனால் என்ன? எம்மிடமன்றோ ஆட்சி! இதுகள் பாரீர், எம்மெதிரே இளித்துக் கிடக்கும் காட்சி. எவரெவரோ எமை எதிர்த்தார், இன்று அவரெல்லாம், ஏங்கித் தவம் இருந்து எமது அருள் வேண்டுகின்றார்!

பக்குவமில்லாதார், பாலபருவம் அரசியலில், பாகு தெளித்த மொழி பேசினாலே போதும், பாதம் பணிந்திடுவார்: சில நூறு ரூபாய்கள் பெறவல்ல வேலையோ, பல ஆயிரம் தரும் வியாபார அனுமதியோ, ஏதேனும் சுவை, இலாபம், காட்டினால் போதும், கழகம் கலைத்துவிட்டு, எம் கால் வீழ்ந்து கிடப்பார்கள்; உழைப்பாளிக் கட்சி உருக்குலைந்துபோன கதை உலகறியு மன்றோ! பொதுநலக் கட்சிதானும், போதும் "கடை' என்று கூறீ, எம்மிடம் அடைக்கலம் ஆகிவிட்ட,"சேதி' அறியீரோ? பொறுத்திருந்து பாரும், இதுகள் போக்குப் புரிந்துவிடும் என்றுரைத்து வந்தார், கேட்போர் எரிச்சலடையும் வண்ணம்.

கழகத் தோழர்களே, ஆட்சிமன்றம் அமர்ந்தாலும் ஆளடிமையாகாது, கொள்கை பிறழாது, நோக்கம் மாறாது, திருஇடத்தின் விடுதலைக்குப் பாடுபட, போர்முனைகள்

பல உண்டு, அதிலே இஃதொன்று; இங்கு வந்து அமர்ந்ததனால், இல்லை இனி வேலை என்று எவர் எண்ணிக் கொண்டாலும், ஏமாளியே அவர்கள் என்று கூறிவிட்டு, மேலும் சுறுசுறுப்பாய் நாடு சுற்றி நடத்தி வந்தார், நம் நாட்டு விடுதலைக்கு பேரார்வம் வளர்ந்திடவும், புத்தார்வம் பூத்திடவும், பெர்மிட்டு, லைசென்சு, காண்ட்ராக்ட், கையூட்டு என்று பல உண்டு, அறமழிக்கும் முறைகள். இன்று வரை எவரும், நம் தோழர் குறித்து, எந்த "மாசுமருவும்' எடுத்துக் கூற இயலாமல், தூய பணியாற்றித் தோழர்கள் வருகின்றார்.

தீர்ந்ததப்பா, தீப்பொறி கொட்டும் வேலை! இனி, திண்டு தனில் சாய்ந்து சில பேசிக் கிடப்பார்கள். போராற்றல் இனி இல்லை; நெஞ்சம் துருப்பிடித்துப் போன நிலை. முழக்கமிட்டு வந்ததெல்லாம் இந்த இடம் பிடிக்கத்தான். அதனால் இனி

இவர்கள் ஒடுங்கிக் கிடப்பார்கள், என்று பேசி மகிழ்ந்தார், நீறுபூத்த நெருப்பாகிக் கழகம் இருக்கும் நிலை உணராதார்.

அதுவும் தவறென்று காட்டுவதற்கான வாய்ப்புக் கிடைத்திட்ட போதெல்லாம், கிளர்ந்தெழுந்து நின்றார்கள் கழகத்துத் தோழர்கள். கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியே ஓர் காவியம் போல் வடிவெடுத்தது, நம் கழகத் தோழர்களின் வீரத்தின் விளைவாக, இந்தி வந்துவிடும் என்ற நிலை பிறந்தவுடன், எங்கே? எங்கே? என்று ஆர்த்தெழுந்தனர் வீரர். வீரம் குன்றிவிடும்; இயல்பே மாறிவிடும்; சட்டமன்றம் சென்ற தனால் என்றன்றோ நாமெண்ணி, ஏமாந்து போயிருந்தோம். இந்தக் கழகத்தாரோ, இம்மியும் வீரமதை இழந்திடக் காணோமே! எதேது அவர் போக்கு அதிசயமாய் இருக்கு தென்று, மாற்றார்கள்

மனம் மருளும் நிலை எழ உழைக்கலானோம்.

அழிந்துபடத்தக்க நிலை பலவும் தாண்டிவிட்டார், அடித்துக் கொண்டும் சாவர் என்றிருந்தோம், பிழைத்துக் கொண்டார்; இடம் பிடிக்க இவர்க்குள்ளே எழும் பூசல் என்றிருந்தோம், எப்படியோ எதனையும் இலகுவாகத் தீர்த்துக் கொண்டு, ஏறுநடை போடுகின்றார். இன்னும் எத்தனை நாள்? எதுவரையில் இந்நிலைமை? எப்போது பிளவு வரும்? என்று நோட்டமிட்டு, வட்டமிட்டபடி, கழுகு, பிணம் வீழாதா என்றேங்கும் பான்மைபோல, சுற்றித் திரிகின்றார், மோப்பம் பிடித்தபடி. நம்மில் துளியேனும் பேதம் ஏற்பட்டால், சந்துகளில் நுழையும் சர்ப்பம் போலாகிவிட, சந்தர்ப்பம் பார்த்தபடி இருக்கின்றார், மாற்றார்கள்; இன்று இவர்க்கு இருக்கும் வலிவுக்குக் காரணமே, இவர்க்குள்ளே இருக்கின்ற,

பாசம்தான் வேறில்லை; எப்பாடுபட்டேனும் இப்பாசம்தனை ஒழித்தால், பிறகு, சாந்து அழிந்த சுவர், சரிந்துபோவது போல், இவர்கள் அணிவகுப்பு, அழிந்துபோகும், நிச்சயமாய்; எனவே, இம்முனையில் இறங்கி வேலை செய்தால், வெற்றி நிச்சயம்காண் என்று வெறி கொண்டு, மாற்றார் உலவுகின்றார்; மரபு அழிக்கத் துடிக்கின்றார். புத்தம் புதுப் பிரச்சினையோ, பழங்காலப் பிரச்சினையோ, தத்துவம் கிளப்புகின்ற பூசலோ புகையோ, தரம் என்ன என்று கேட்கும் தத்தளிப்போ, ஏதோவொன்று, இன்று நமக்குக் கிட்டாதா? எடுத்ததனைப் பெரிதாக்கி, ஊருக்கெல்லாம் காட்டி உருவழிக்க முயல்வேனே! வருகிறதே பொதுத் தேர்தல், வளருகிறதே கழகம்!! மேலிடத்தார் கேட்கின்றார், என்னதான் செய்கிறீர்? இவ்வளவுதானோ திறமை? என்றெல்லாம். எனவே, ஏதேனும் செய்து

இவர்தம் ஒற்றுமையைக் குலைத்துவிட, நாளும் வழிதேடி, நாமிருக்க வேண்டுமென்று, நாடாளும் நிலை இழக்க நேரிடுமோ என்பதனால் நடுக்குற்றுக் கிடக்கும், காங்கிரசார் எண்ணுகின்றார். நாம், கழகத்தின் வடிவம் மாற்றிட முனைந்தாலும், கட்டுப்பாடு ஒழுங்குக் காத்திடப் பணி புரிந்தாலும், செம்மைப்படுத்த செயல்முறை புதிதாய் வகுத்தாலும், எவரெவர்க்கு என்ன இடம்? எவரெவர்க்கு என்ன தொகுதி மூன்று 219 220 தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் பணி? எவரெவர் தொண்டாற்றி ஏற்றம் அளிப்பவர்கள்; எம்முறையில் உள்ளோரைத் தலைமை இருக்கைக்கு ஏற்பது எனும், எதுபற்றி முயன்றாலும், மூச்சைச் சூறாவளி என்றாக்கி, பேச்சைப் பெரும்புயல் என்றாக்கி, நமக்குள் பேதத்தை வளர்த்து விட்டு, பெரும் பிளவு, உண்டாக்கி, உடைத்துக் காட்டிவிட்டு,

ஊராள்வோர் உட்கார்ந்து, ஓஹோ! பார்த்தீரா? பன்னிரண்டு ஆண்டுகளாய், பயல்கள் இறுமாந்திருந்தார்; பலப்பல முயற்சி களைப் பக்குவமாய் முறியடித்தார்; என்றாலும் இறுதியிலே, உடைத்தெறிந்தோம் அவர் அமைப்பை; சிதறியது கண்டவர்கள், கண்ணீர் சிந்திக் கிடக்கின்றார்; இனி இதுபோல் ஓர் அமைப்பு. எவர் முயன்று ஆக்கிடுவார்; பயமின்றி நாமினிமேல் வாழ்ந்திடலாம், என்று பாடிடவும், ஆடிடவும், ஆவலுடன் உள்ளார்கள் மாற்றார்கள்.

இதை அறிந்து, நாம் நடந்துவந்த அந்த நீள்வழியையும் நினைந்து, எதிர்ப்பட்ட ஆபத்தை எத்திறத்தால் வென்றோம், ஏனைப் பேச்செல்லாம் எவரெவர் கூறி நின்றார், என்னென்ன பேச்செல்லாம் மாற்றார் உரைத்தார்கள் - சின்னப் பிள்ளைகள் என்றார், சினிமாக் கட்சி என்றார், கூத்தாடும்

கும்பல் என்றார், தடி கண்டால் ஓடும் என்றார். சுகபோகம் தேடிடவே சூது நடத்துவோர் என்றார், குடும்பத்திலுள்ளாரைக் குறைகூறாதும் இருக்கவில்லை; என்னென்ன ஏச்சுக்கள்; எவரெவரின் இழிமொழிகள்; இவனுக்கு இந்த வாழ்வு எப்படி வந்ததென்ற கேள்விகள், கேலிகள்; அடுக்கடுக்காய் இத்தனையும் ஆண்டுபல கேட்டோம்; இதயத்துக்கு வீழ்ந்த அடி ஒன்றல்ல இரண்டல்ல; எதையும் தாங்கியது, எற்றுக்கு என்பதனை எண்ணிப் பார்ப்போருக்கு, இன்று எழுந்துள்ள நிலைமையினை உணர்ந்து தெளிவுபெற இயலும். எதிர்வீட்டுப் பலகணியை எட்டிப் பார்க்கும் போக்கு நல்லது அல்ல; தீது! ஆனால், மாற்றார்க்கு இன்று அதுவே, பொழுதுபோக்கு!! இலாபமும் அதில் அவர்க்கு உண்டு! நாம் இன்று எண்ணிப்பார்க்கவேண்டியது ஒன்று உண்டு.

கழகத்துக்குப் பெரும் விபத்து வந்து விட்டது என்று கூறித் திரியும் காங்கிரசாரின் பேச்சிலிருந்து, நாம் என்ன பாடம் தெரிந்து கொள்ள வேண்டும்?

உள்ளூர்க் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து, உச்சக்கட்டம் வரையிலே, "கோஷ்டிகள், உள்ளன' என்று நேரு பண்டிதர் கூறுகிறார், வருந்துகிறார்.

வீட்டுக்குள்ளே ஏற்பட்டுவிடும் "விரசமான' விஷயத்தை, வெளியே பேசாதீர்கள் என்று காங்கிரஸ் தலைவர், தாக்கீது பிறப்பித்துள்ளார்.

காலக்கோடுகள் வீழ்ந்து வீழ்ந்து, நரை திரை மேலிட்டுள்ள பருவத்தில் உள்ளது காங்கிரஸ் கட்சி - அந்தக் கட்சியிலேயே "கோஷ்டிகள்' கூடாது, அது ஆபத்து, என்று உணரப்பட்டு வருகிறது.

தத்துவப் பூக்கள் என்று எடுத்துக் கொண்டால், கூட்டுப் பண்ணையிலிருந்து கூடிவாழும் கொள்கை வரையிலே, இரண்டு காங்கிரஸ்காரர்கள் ஒருமித்த கருத்துக் கொண்டில்லை. ஆனால் இன்று; நம்முடைய வீட்டு விவகாரம்தான், பருந்து அடித்துக் கொண்டு வந்து கீழே வீழ்ந்த பழத்தைக் காக்கைகள் கொத்திக் கொண்டு கிடக்கும் நிலைமைக்குக் கொண்டு வரப்படுகிறது. சரியா? முறையா? 1961ஆம் ஆண்டுக்கென்று, நாம் அரும்பாடு பட்டுத் தேடிக் கொள்ளும் திட்டம் இதுதானா?

தம்பி! எண்ணிப்பார்த்து, எமக்கு நல்வழி காட்டு.

அன்புள்ள,

அண்ணாதுரை,

19-2-1961

33. வெற்றிக்கவிதை பாடிடுவாய்!

தி.மு.க.வில் கசப்புணர்ச்சி -

காமராஜர் ராஜாஜி சண்டை -

சூரத் காங்கிரஸ் மாநாட்டில் செருப்புவீச்சு -

கழகமும் மக்கள் தொடர்பும்

தம்பி!

பக்கத்தில் இருப்பது யார்? உனை ஈன்ற அன்னையா? பாதத்தை முத்தமிடு! தந்தையோ? தாளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்! அண்ணனோ? அகமும் முகமும் மலர, அண்ணா! என்று தழதழத்த குரலில் அழைத்து மகிழ்ந்திடு. தம்பியானால், முதுகைத் தட்டிக்கொடுத்திடு, களிப்புடன். பெற்ற மகவானால், உச்சிமோந்து முத்தமிடு; உன்னை அந்தப் பெருமைக்குரிய நிலைக்குக்

கொண்டுவந்த பெருமாட்டியெனில் பேசவும் வேண்டாம், களிநடமிடும் கண்கள் போதும், வெற்றிக் கவிதை பாடிட! ஆம், தம்பி! ஆமாம்! மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கும் நிலையில் உள்ளோம். உருண்டு திரண்டு கருத்துப் பெருத்து வரும் கருமேகம், ஊரழிக்கும் பேய் மழையாகும் என்று, பெரியவர்கள் பீதியுடன் தலை அசைக்க, தொலைவிலிருந்த வண்ணம், இதோ படை எடுத்து வருகிறேன், பெருமரங்களை வேரோடு சாய்ப்பேன், பயிர் பச்சைகளை அடியோடு அழிப்பேன், கூரைகள் பிய்த்தெறியப்படும், கொடுமை நடமிடப்போகிறது, காணீர்! என்று கூறுவது போலப் பேய்க்காற்று முன்னறிவிப்பதாக, மண்ணை வாரி இறைக்கிறது என்று பலரும் பயந்தவண்ணம் கூறிடத்தக்கதோர் நிலைமை, தீடீரென மாறிக், கப்பிக் கிடந்த காரிருள் விலகி, இரைச்சலைக் காற்று

நிறுத்திக் கொண்டு, வெளிர்விட்ட வானம் தெரிந்தால், பூங்காற்றும் வீசினால், எங்ஙனம் இருக்கும்! அந்நிலை கண்டோம், நிலை யாது ஆகுமோ என்று திகைத்துக் கிடந்த நாம். கருவுற்ற தாய்க்கு, குழவி ஒரு பாரமல்ல; இயக்கத்துக்குப் புதிய நிலை ஏற்படுவதற்கான கருத்துகள் குவிவதும், ஒரு தொல்லையல்ல. ஆனால், சேயினை ஈன்ற தாய், அதனைச் சீராட்டிப் பாலூட்டி வளர்த்திடும் பக்குவம் கெடாதபடி உடல்நிலை இருக்க வேண்டும் - புதிய கருத்துக்களைப் பெறுவதனால், இயக்கத்தின் கட்டுக்கோப்பு அழிந்துபடக்கூடாதன்றோ! எத்துணை எழில் இக்குழவி! ஆனால், இதனை ஈன்றிட்ட போதுதான், தாய் மாண்டாள். என்று கூறிட வேண்டிய நிலையைவிடக் கொடுமையானது வேறு உண்டோ? அஃதே போல, அருமையான கருத்து, ஆயினும்,

இதனைக் குறித்து எழுந்த விவாதம் கலாமாகி, கழகம் கலகலத்துப் போய்விட்டது என்று கூறும் நிலை ஏற்படுமானால், அதனைவிட நெஞ்சை வேகவைக்கும் நிலையும் வேறு உளதோ!

தளராது உழைத்திடும் தம்பி! தன்னலமறுப்புடன் தாய்த் திருநாட்டுக்கான திருப்பணிக்காக உன்னையே ஒப்படைத்து விட்ட பொன்னான, தம்பி! நமது கழகத்திலே புகுந்து குடைந்த நெருக்கடி நிலைமை, தம்பி சம்பத்தின் உண்ணாநோன்பு எனும் கட்டம் சென்ற உடன், உண்மையை உன்னிடம் மறைப்பானேன், நான் என்னென்னவோ எண்ணிக்கொண்டேன், பித்தம் பிடித்தவன் போல். ஏறுநடையுடையோனே! உன்னையும் மனக் கண்ணால் கண்டேன் -குறும்புப் பார்வையுடன் நின்றிடும் காங்சிரசாரையும் கண்டேன். நமது கழகக் கூட்டங்களுக்காக,

வந்து சேர்ந்திடும் அணிவகுப்பும் தெரிந்தது. மண்டலக் காங்கிரசில் கூடி. இடிஇடியெனச் சிரித்தபடி, தொலைந்ததுகள் பீடைகள்! என்று பேசிய கும்பலும் தெரிந்தது. குழந்தையைப் பெருமையுடன், பரிவுடன் ஏந்திவரும் தாய்போல, எங்களுக்குச் சூட்டிட, மாலைகளை வாங்கிக் கொண்டு, அவைகளிலே உள்ள இதழ் ஒன்றுகூடச் சிந்தாமல் சிதறாமல் இருக்க வேண்டும் என்ற அக்கறையுடன், அன்புடன், நீ, எடுத்துவரும் காட்சியும் தெரிந்தது; காங்கிரஸ் கூட்டங்களுக்குச் செல்பவர்கள், ஒருவருக்கொருவர் குதூகலமாகப் பேசிக்கொண்டு குதியாட்டம் போட்டதும் தெரிந்தது. வாலிபர்கள் வயோதிகர்போலாகினர். சோகம் கப்பியதால்; வயோதிகர் வாலிபர்போன்றாகி வாய்விட்டுக் கதறினர். இஃது ஒன்றுதான், வடநாட்டு எதேச்சாதிகாரத்தை வீழ்த்த

வல்ல படைக்கலனாக உளது; அரிய வேலைப்பாடும் கூர்மையும் கொண்டதாக இருக்கிறது; இதனால், மக்கள், விடுதலைப் போரினை வெற்றிகரமாக நடாத்திடும் ஆற்றலைப் பெறப் போகிறார்கள் - பெற்று வருகிறார்கள், என்ற ஆர்வமிகு எண்ணம், நாட்டிலே நிலைத்துவிட்டது. அமைச்சர்களின் அரவணைப்பினால் அகமகிழ்ந்தோர், ஆதாயம் பெற்றோர், நிலையினை உயர்த்திக் கொண்டோர், என்போரைக் காணும் போதெல்லாம், நமது கழகத் தோழர்கள், கடுகடுத்த பார்வையைக் கூட விட்டுவிட்டனர் - கனிவுகூடக் காட்ட ஆரம்பித்தனர் - உமக்கும் சேர்த்துத்தான், நாங்கள் கேட்கும் விடுதலை - திருஇடம் விடுபடின், உமக்கும் நத்திப் பிழைக்க வேண்டிய நிலை இராது, என்று எடுத்துக் கூறுவதுபோல, நம்பிக்கையூட்டுவது போலப் பார்த்தனர், பேசினர். இந்த நெருக்கடி

வந்துற்ற போதோ, காங்கிரசாரை மட்டுமல்ல, நம்மவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடக் கூச்சம் ஏற்பட்டு விட்டது. பார்த்திடின் பேச வேண்டிவரும், பேசிடின் உள்ள வேதனை அதிகப்படும், புதிய கிலி கொள்ளத்தக்க "சேதி' ஏதேனும் கேள்விப்பட நேரிடலாம் - எனவே, பார்க்கவும் வேண்டாம், பேசவும் வேண்டாம், என்றே எண்ணிக்கொண்டனர். நாலு தலைமுறையாக நம்முடைய குடும்பத்திடம் இருக்கம் மாடிவீடு, அங்கு மகிழ்ச்சி தரும் மணவிழாக்கள் நடந்திருக்கின்றன. மனம் உருக்கும் வேறு நிகழ்ச்சிகளுந்தான்; அந்தக் கூடத்திலே, ஊர்ப் பெரியவர்கள் உட்கார்ந்து உரையாடி மகிழ்ந்தனர். இசை கேட்டு இன்புற்றனர் - இவன்தான் என் மகன்! என்று கூறிட, பெயர்? என்று பெரியவர் கேட்டிட, நான் நடக்கும் நடை காட்டவில்லையோ என் பெயரை என்று கூறுவது போலச்

சிறுவன், அரசனென நடந்துகாட்டியதும் அந்தக் கூடத்திலேதான்; ஆரூயிர் அனையாள் முல்லையும் மல்லியும் சூட்டிக்கொண்டு, சரி பார்த்துக் கொண்டதும், அந்தக் கூடத்திலே உள்ள நிலைக் கண்ணாடி முன்தான்; சூட்டியதைச் செல்வன் பிய்த்தெறிந்து வீசிவிட்டுக், கலகலவெனச் சிரித்திட, எவரும் எளிதிலே செய்திட இயலாத வீரச் செயலைத் தன் மகவு செய்துவிட்டதுபோல எண்ணி, அவன் கன்னத்தை முத்தமிட்டுக் கருப்பஞ்சாறு பருகிய தாய் உலவியதும் அந்தக் கூடத்திலேதான்; பல் முளைத்துவிட்டது என்று பாலகனை வாயைத் திறக்கச் சொல்லிக் காட்டி மகிழ்ந்ததும் அந்தக் கூடத்திலேதான்; பொக்கைவாய்ப் பாட்டி சிரித்திடக் கண்டு சிரித்ததும் அங்குதான் - அப்படிப்பட்ட இல்லம், நாளைக் காலையிலே, கடன் கொடுத்தவன் கரம் தரப்பட இருக்கிறது;

அதற்கான அலுவலருடன் வரப்போகிறான், விடிந்ததும், என்று முன்னாள் இரவு கேள்விப்பட்ட, வீட்டுக்குடையவர்கள், அங்கு எப்படிப்பட்ட உள்ளத்துடன் இருப்பார்கள்- தம்பி! நமது கழகத்திலே பேரிடி விழவேண்டும் என்று எண்ணிக் கிடந்தவர்கள், நம்மை அந்த நிலைக்கு ஒப்பிட்டு உள்ளம் பூரித்துக் கிடந்தனர். திருவொற்றியூரில் நாம் கூடித், தேன் பருகி மகிழ்கிறோம் - அதே நாளில், அதே போது, அவ்விதம் நடைபெற வழி ஏற்படாது என்ற எண்ணத்தில், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் கழகம் ஒழிந்துவிட்டது! நமக்குச் சிரமம் கொடுக்காமல். அவர்களே ஒருவரை ஒருவர் அடித்து அழித்துக்கொண்டனர். எவனுக்குக் கண் போயிற்றோ, எவனுக்குக் கால் உடைந்ததோ, யாருக்குக் கத்திக்குத்தோ, எல்லாம் பொழுது விடிந்தால் தெரிந்துவிடும்!

- என்று வெறி அளவுக்கு மகிழ்ச்சி கொண்டவர்கள் - தம்பி! தலைவர்களேதான்!! - பேசினராம், சிரித்தனராம், கைகொட்டி னராம், கண் சிமிட்டினராம் - ஏகப்பட்ட அமர்க்களமாம்!! ஏனிருக்காது, தம்பி! கள்ளிக் காட்டிலே காய்ந்த வயிறோடு கிடக்கும் கழுகுக்குப், பிணநாற்றம் கிளம்புவது தெரியவேண்டியது தானே தாமதம், தன் பெருஞ் சிறகுகளை விரித்து, அடித்துக் கொண்டு, பறந்து வந்து விடுகிறதல்லவா? காங்கிரஸ் வட்டாரத்தினர் அவ்வளவு எதிர்பார்த்தார்கள். இருக்குமல்லவா, அவர்களுக்கு எரிச்சல். அக்குதொக்கு அற்றவர்கள், வக்கு வழி இல்லாதார், சொக்க வைக்கும் பார்வையோ, விலை கொடுத்து ஆள் வாங்கப் பணமோ இல்லாதவர்கள். ஏடு ஏது இவர்தம் சொல்லைச், செயலை நாடு அறியச் செய்ய; ஊர் வளைக்கும் வழி அறியார், பேர்பெற்ற

குடும்பத்தினருமல்ல; அன்னக்காவடிகள்; இதுகளால் ஆவது என்ன? என்று எண்ணிக் கெக்கலி செய்தனர் காங்கிரசார், கழகம் துவக்கியபோது. ஆனால், அவர்களே கண்டு மலைக்கத் தக்க மாபெரும் வடிவம் கொண்டது கழகம்; அதன் வண்ணம் மற்றவர்க்குப் பாடம் தரவல்லதாயிற்று; கழகப் பேச்சு, கழக எழுத்து, கழகக் பாடல், கழக நாடகம் என்று, கழகம் என்ற சொல்லே அடைமொழி, என்றாகிவிட்டது. எங்ஙனம் தாங்கிக் கொள்ள முடியும், காங்கிரசாரால்! எள்ளி நகையாடிப் பார்த்தனர், பேச்சுக் கச்சேரியால் என்ன ஆகும் என்று! பிறகு, பேசத்தெரிந்தவர் நீவிர் மட்டுமோ? என்று கூறிக் கிளம்பினர் பேச! நாடகம் நடத்தினர், மாநாடு கூட்டினர், பாடகர்களைத் துணைக்கு அழைத்தனர், பலப்பலவும் செய்துபார்த்து அலுத்துப் போயினர். பிறகோ? நமது கழகத்தில்,

கசப்புக் காரணமாகவோ காரணமற்ற பூசலின் விளைவாகவே, எவரேனும் வெளியேறினால், கொக்கெனக் காத்திருந்து கொத்திக்கொண்டு போகலாயினர். தம்பி! கழகத்தான் என்பதுமட்டுமல்ல, சிறப்புக் குரியதாக இருப்பது; கழகத்தின் முன்பு இருந்தவர் என்ற பேச்சே, சிறப்புக்குரியதாக்கப்பட்டது; மக்களை ஈர்க்கப் பயன்பட்டது. அதாவது, தம்பி! நம்மை மறத்துப் பேசக்கூட, நமது"பாணி'ப் பேச்சே தேவைப்பட்டது. அவ்விதம், நமது கழகம், பின்பற்றத் தக்க, வழிமுறைகளை ஆக்கித் தரத்தக்க, மாமன்றமாயிற்று. இவ்வளவும் காணும் காங்கிரசாருக்கு, எப்போது, நாம் வீழ்ந்து விடுவோம் என்ற எண்ணம்தானே, எப்போதும், மனதிலே இருந்தபடி இருக்கும். இயற்கைதானே! எனவேதான், தமது கழகத்திலே, பேச்சுப் பெருங்கூச்சலாகாதா, பெருங்கூச்சல் பேதம்

வளர்க்காதா, பிளவு தோன்றாதா, அழிவு வாராதா, கண்டு அகமகிழலாமே என்று எண்ணியபடி, நோட்டமிட்டிருந்தனர். ஒரு பத்து நாட்கள் அவர்கட்குப் பஞ்சாமிர்தம்! நாக்கைத் தொங்கவிட்டபடி, நாடெங்கும் சுற்றினர்; நண்பர்களே! கேளுங்கள், நமக்கு இருந்து வந்த ஆபத்துப் போய்விட்டது, நம்மை ஒழிக்கக் கிளம்பிய கழகம் அழிகிறது! அங்கு, பதவிச் சண்டை, பணச்சண்டை, கலைச்சண்டை, கருத்துச் சண்டை, ஒன்றல்ல, இரண்டல்ல ஏற்பட்டுவிட்ட உட்குழப்பம்; ஒழிந்து போய்விடுவார்கள்! - என்று பேசினர், பெருங்களிப்புடன். நமது கழகத்துக்கு உள்ள வலிவின் அளவே, மாற்றார்கள், நமது குலைவுக்காகக் காத்திருந்ததிலிருந்தும், அது ஏற்படும் என்ற அறிகுறிக்காக அலைந்து கிடந்ததும், கிடைத்ததாகத் தென்பட்ட வுடன், களி

நடமாடியதும், எடுத்துக்காட்டிற்று. உட்குழப்பம் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு, நாம் அழிந்துபோனாலொழியக் காங்கிரசுக்கு எதிர்காலம் இல்லை என்ற பேருண்மை, அவர்கள், நமது கழகத்திலே பெருங்குழப்பம் ஏற்பட்டுவிட்டதாகக் கூவிக் களித்ததிலிருந்தே நன்கு தெரிகிறது. நமக்கே நமது வலிவின் அளவு நன்கு தெரிய வந்ததும், நம்மைப் பற்றி நாள் தவறாமல், நாடாளும் அமைச்சர்களே நாப்பறை அறைந்து கிடப்பதைக் கண்டதால்தான், தம்பி! உன் உழைப்பால் அமைந்துவிட்ட கழகம், காங்கிரசை அந்த அளவுக்குக் கதிகலங்க வைத்துவிட்டிருக்கிறது. உனக்கும் அது தெரியும்; எனவேதான், கழகம் உருக்குலையும் விதமாக உட்குழப்பம் ஏற்படக்கூடாது என்பதிலே, நீ அத்துணை அக்கரைகாட்டி நின்றாய். உன்னைக் கலங்கச் செய்யும்

விதமாகச் சில நிலைமைகள் வளர்ந்து விட்டதற்காக, நான் வருத்தப்படுகிறேன் - பொறுத்தருளக் கேட்டுக்கொள்கிறேன்.

தம்பி! கழகம் கலகலத்துவிடும், அழிவு ஏற்பட்டுவிடும், அகமகிழ்ச்சியுடன் ஆடலாம், பாடலாம், ஆட்சி நமதே என்று கூவலாம், கொக்கரிக்கலாம் என்று கருதிய காங்கிரசார், ஒருவரை ஒருவர் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பேசிப் பேசிப் பூரித்தனர். பிரிட்டிஷ் பேரரசியாரின் வருகையின்போது, நாலு பேரி நடுவில் நான் நிற்பதைக் கண்டு, குத்தல் பேச இதுதான் தக்க சமயம் என்ற எண்ணத்துடன், என்னிடம் வந்தார், ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ.; என் அடக்க உணர்ச்சிதான், எவரும் எளிதாகக் கேலி செய்யும் அளவிலும் வகையிலும் இருப்பது, உனக்குத் தெரியுமே; அதுவும் அவருக்கு ஒரு வாய்ப்பு! அருகே வந்தார்; பலருடைய செவியில் விழுகிறபடி,

“என்ன அண்ணா! உங்க கட்சியிலே பெரிய பிளவாமே! பலர் வெளியோ போய்விடப் போகிறார்களாமே!!’’ என்று கேட்டார். கேலி வெளிப்படையாகத் தெரியும் விதமாகப் பேசி இருந்தால்கூட எனக்கு வேதனை அவ்வளவு அதிகமாகத் தெரியாது. பொது வாழ்க்கையிலே ஈடுபட்ட பிறகு, சிறு துரும்பும் மேலே விழாமல் என் பெற்றோர் என்னைப் பரிவுடன் வளர்த்திருந்தார்கள் என்றாலும், நான், எத்தனையோ கொடுமைகளைத் தாங்கிக் கொள்ளப் பழகிக் கொண்டுவிட்டேன். அப்படிப்பட்ட எனக்கே எரிச்சலேற்பட்டு, அந்த காங்கிரசாரின் பேச்சைக் கேட்டு - தம்பி! அவரை நான் காங்கிரசார், என்று கூறுவதைவிடக், காங்கிரசில் உள்ளவர் என்று கூறுவதுதான், பொருத்தம், காதில் விழாதபடி இருந்தேன். அவர் விடுவாரா? அதற்கென்றே நாக்கைத் தீட்டிக் கொண்டு வந்துவிட்டாரே!!

மறுபடியும் கேட்டார். சிறிது கோபமாக,"ஏன்? உங்கள் கட்சிக்கு ஆள்பஞ்சமோ? இருந்தால் சொல்லுங்கள், சிலரை அனுப்பி வைக்கிறேன்'' என்று கூறினேன், மறுகணமே, சிறிது கடுமையாகக் கூறிவிட்டேனோ என்று எண்ணி வருத்தப்பட்டேன். தம்பி! உன்னையே, ஊர்க்கோடியிலும், ஓய்விடங்களிலும், அங்காடியிலும், கடலோரத்திலும், எத்தனை எத்தனை பேர் என்னென்ன பேசிக் குடைந்திருப்பார்கள், குத்தல் பேச்சு எவ்வளவு இருந்திருக்கும், எவ்வளவு கொதித்திருப்பாய், குமுறி இருப்பாய் என்பதை எண்ணி மன மிக வாடினேன். கழகத்துக்கு, நீ உன்னையே ஒப்படைத்தாய் - உனக்கு நான் எப்படி எப்படியெல்லாமோ நன்றிகாட்ட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவன் - ஆனால், உனக்கு கிடைத்தது என்ன? உள்ளத்துக்கு அதிர்ச்சி, மாற்றாரின் ஏச்சு,

பேச்சு, மன்னார்சாமிகளின் வம்புப்பேச்சு, வேதனை, இவை! தத்தளித்துத்தான் போயிருப்பாய், தம்பி! ஆனால், நான் என்ன செய்ய? உன்னோடு சேர்ந்து, வேதனையை பங்கிட்டுக் கொள்வதன்றி, வேறுவழி?

இந்நிலையிலேதான், காங்கிரசாருக்கு, நமது கழகம் அழிந்தேவிடப் போகிறது என்ற எண்ணம் அழுத்தமாக ஏற்பட்டு விட்டது. கீழே வீழ்ந்ததும், பிய்த்துத் தின்ன வேண்டும், அப்போதுதான் தமது பெரும்பசி தீரும் என்று எண்ணிக் கொண்டனர்.

கலிங்கத்துப் பரணியில் தம்பி! போர்க்களக் காட்சியை எடுத்துக் காட்டும்போது, ஜெயங்கொண்டார் (பரணி பாட வேண்டிய முறைப்படி) பிணக்குவியலைத் தேடி, உண்டு களித்து நடமிடப் பேய்கள் வருவது பற்றி, வேடிக்கையாகப் பாடி இருக்கிறார். கலிங்கப் போர் நடக்கிறது,

இரத்தம் ஆறென ஓடுகிறது, பிணங்கள் வீழ்ந்து கிடக்கின்றன, மலை மலையாக! ஓடி வாருங்கள்! வயிறு புடைக்கத் தின்னலாம்! - என்று பேய்களைக் கூவிக் கூவி அழைக்கிறதாம் வேறோர் பேய்.

குறுகிய வடிவம் கொண்ட பேய்! கொழுப்பு மாலை அணிந்த பேய்! கோடரிப் பல்லழகி! கொட்டாவி விட்டபடி உள்ள பேய்! - இப்படிப் பேய்கள் பல வகை. எல்லாவற்றுக்கும் நல்ல வேட்டை அல்லவா, சுவையான விருந்தல்லவா?

தெரியுமா சேதி, ஒரே ரகளை! வெள்ளையன் சொன்னான். ஒருவர் மீது ஒருவர் பகையைக் கக்கிக் கொண்டார்களாம், சின்னையன், அவர்கள் பேசிக் கொண்டிருந்ததையே கேட்டானாம் உனக்குத் தெரியுமா சேதி, ஊர்க் காவலா! கூப்பிடு, குப்பனை, கூறுவோம் சேதி! எங்கே,

எரிச்சலூரான், சேதி கேட்டால் மிக்க மகிழ்ச்சி அடைவான்! - என்றெல்லாம் பேசிக் கொண்ட, காங்கிரசுக்காரர்களை நினைவுபடுத்திக் கொள், தம்பி!

ஜெயங்கொண்டாரின் பரணியில்

உள்ளதைக் கூறுகிறேன் கேள்.

குறுமோடி!

நெடு நிணமா லாய்!

குடை கல தீ! கூர் எயிறி!

நீலி!

மறிமாடி!

குதிர் வயிறீ!

கூழட வாரீர்! கூழட வாரீர்!

கடினமாக இருக்கிறதா, தம்பி! செய்யுளை நான், உனக்கு எளிதாகப் பொருள் விளங்க

வேண்டும் என்பதற்காகத்தான், அச்சு வேறு ஆணி வேறு என்பார்களே, அப்படி ஆக்கித் தந்திருக்கிறேன்.

கூழட வாரீர்! கூழட வாரீர்! - என்று பெரிய பேய், மற்றப் பேய்களை அழைக்கிறது. கூழட வாரீர்! என்றால், சமைக்கலாம், வாருங்கள் என்று பொருள், களம் நிறையப் பிணங்கள்! விருந்து உண்ணலாம், சமைக்க வாருங்கள் - கூழட வாரீர்! - என்று கூவி அழைக்கிறது பெரும் பேய், எவரெவரை?

குட்டைப் பேய்!

நெட்டைப் பேய்!

கொழுப்பு மாலை அணிந்த

பேய்!

இரத்த வெள்ளத்தில் குளிக்கும் பேய்!

கூரிய பற்களை உடைய பேய்!

நீலிக்கண்ணீர் விடும் பேய்!

ஆடு விழுங்கும் பேய்!

குதிர் போன்ற வயிறு உள்ள பேய்!

இப்படி உள்ளன பேய்கள்! பேய்கள் மட்டுமா, தம்பி! பெரியவர் களிலேயோ பலர் இவ்விதம் இருக்கிறார்களே, தெரியுமே உனக்கு!

களத்திலே வீழ்ந்த பிணத்தைக், குட்டைப் பேயும் நெட்டைப் பேயும், குதிர்போல் வயிறு உள்ள பேயும், பிய்த்துத் தின்னக் கூவி அழைக்கப்படுவதுபோல, நமது கழகச் செய்திகளை, தாவிக் கவ்விச் செல்ல, மென்று தின்று உமிழ்ந்திட, பிய்த்துப் பிய்த்துக் காட்டிடப், பல பத்திரிகைகள் கிளம்பின! கூழட வாரீரோ! கூழட வாரீரோ! என்று பெரிய பேய் அழைத்த பிறகே, குட்டைப் பேயும் நெட்டைப் பேயும் வந்தன. பத்திரிகைகளை நடாத்தும் பெரியவர்களுக்கு, அழைப்புக்கூடத் தேவைப்பட வில்லை. மோப்பத் திறமை நிரம்ப!

பறிந்த மருப்பின் வெண்

கோலால்

பல்லை விளக்கிக் கொள்வீரே!

மறிந்த களிற்றின் பழு எலும்பை

வாங்கி நாக்கை வழியீரே!

தம்பி! பேய்கள் என்றால், அவைகளுக்கு மட்டும், சுத்தம் வேண்டாமா? பல் விளக்க வேண்டும்! நாக்கிலே ஒட்டிக் கொண்டுள்ள பசையை வழித்தெடுத்துவிடவேண்டும்! பிறகுதானே, விருந்து சுவைக்கும்! யானைத்தந்தம் பல் விளக்க! விலா எலும்பு நாக்கு வழிக்க! பேய்களுக்கு வந்த "யோகத்தை'ப் பார்த்தாயா தம்பி! ஒரு ஆலம் குச்சி வேலம் குச்சி தேடி அலைகிறோம், குளக்கரைகளில். எங்கே கிடைக்கிறது?

எல்லாம் மரம் நடு விழாவுக்காக ஒடித்துப் போட்டாகி விட்டது!! பேய் களுக்குப் பார்த்தாயா, யானைத் தந்தம் கிடைக்கிறது பல் விளக்க!! வீழ்ந்துபட்டால், எப்படிப்பட்ட வலிவும் வடிவமும் கொண்டதாயினும், இந்தக் கதிதான்! நமது கழகமும், வீழ்ந்து பட்டதும், இப்படித்தான், பல் விளக்க, நாக்கு வழிக்க, எதெதை எடுத்து உபயோகிக்கலாம் என்று திட்டமிட்டபடி இருந்தனர் காங்கிரஸ் வட்டாரத்தினர்.

ஆனால், நீ, தம்பி! மிகமிகப் பொல்லாதவன்! காங்கிரஸ் வட்டாரத்தினருக்கு, ஆசை, வெறி அளவு ஏறச்செய்துவிட்டு, ஒரே நொடியிலே, பிடி மண்ணை அள்ளிப் போட்டுவிட்டாயே! பெரிய பேய், கூழட வாரீர்! கூழட வாரீர்! என்று கூவி அழைத்தது கேட்டு, குட்டைப் பேயும் நெட்டைப் பேயும் ஓடிவரக், களத்திலே

களிறோ கர்த்தபமோகூடப் பிணமாகிக் கிடக்கவில்லை யென்றால், வந்த பேய்களுக்கு, பசியுடன் கோபமும் கலந்து கொதிப்பை உண்டாக்குமல்லவா? திருவொற்றியூரில் நடைபெற்ற "கழகக் காவலர்' கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை, நாடே வரவேற்கிறது. நல்லவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். எனவே, காங்கிரஸ் வட்டாரத்துக்கு, மிக்க கசப்பு, கோபம். செச்சே! இதுகள் இப்படிப்பட்ட"கொதி' தாங்காததுகள் என்று அறியாமல், ஏதேதோ நடைபெறப் போகிறது என்று பன்னிப் பன்னிச் சொல்லிவிட்டோமே! இப்போது நமது முகத்திலல்லவா, கரி பூசிவிட்டனர், இந்தக் கழகத்தினர் என்று

எண்ணி அவர்கள் ஆத்திரப்படுகின்றனர்.

வன்முறை தலைகாட்டாது!

ஒன்றுபட்டுப் பணிபுரிவோம்!

கட்டுப்பாடு
குலையவிடமாட்டோம்!

பகை உணர்ச்சி எழாது!

என்று, திருவொற்றியூரில் கழகக் காவலர் கூட்டத்திலே தோழர்கள், எழுப்பிய முழக்கம், இதுபோது, நாடெங்கும், நம் தோழர்கள் ஒலித்துவரும் முழக்கமாகி வருகிறது. தம்பி! இவை ஒலி நயம் கருதி அல்ல, நாம் நமது பண்பு காத்திட மேற்கொண்டு விட்ட, அறநெறி. அறிநெறி தவறிடின், நாம் நடத்துவது கழகமாக இராது. குத்திக் குடலெடுப்போன்,

கூரையைப் பிரித்து உள்ளே குதிப்போன், படுத்துறங்கும் வேளையிலே பாராங்கல்லைத் தூக்கி மண்டையில் போடுவோன் என்று கூறத்தக்கவர்களின் முகாமாகிப் போகும். து□ய தொண்டாற்றி வருகிறோம். தூய்மை கெடத்தக்க பேச்சோ செயலோ தலை தூக்கிடலாகாது. தலைதூக்க விடமாட்டோம் என்ற உறுதி அளித்தனர் - காத்து நிற்பர் என்ற நம்பிக்கையும் எனக்கு நிரம்ப இருக்கிறது.

காங்கிரசாரோ, ஏதேதோ எதிர்பார்த்து ஏமாந்ததால், வெட்கப்படுகின்றனர் - ஆனால் அந்த வெட்கத்தை மறைப்பதற் காகவாகிலும், கழகம் முழுவதையுமே சாடுவர். அத்திப் பழத்தைப் புட்டுப்பார்த்தால் அத்தனையும் சொத்தை என்பது போலிருக்கிறது இந்தக் கழகம்; ஒருவருக்கொருவர் சேற்றை வாரி இறைத்துக் கொள்கிறார்கள் ஓர் நாள்; மறுநாளோ, சந்தனம் பூசிக் கொள்கிறார்கள்.

பேதம் என்கிறார்கள், பிளவு என்கிறார்கள் ஓர் நாள்; மறுநாளோ எங்களைப் பிரிக்க எவராலும் முடியாது; நாங்கள் ஒரே குடும்பம் என்கிறார்கள். சே! இதுகளை நம்புவது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பாகும்! - என்று பேசிக்கொள்வர். ஆனால், மொத்தத்திலே, கழகமே கெட்டவர்கள் உள்ள இடம் என்று ஏசுவர்.

கழகத்திலே கலகம் நடந்தது; அடிதடி நடந்தது; அமளி நடந்தது; என்று பலப்பல பேசுவர்; பேசிக் கொண்டும் வருகின்றனர்.

காங்கிரஸ் புனிதமான, பகையோ பூசலோ அற்ற இடம் போலவும்; அதிலே உள்ளவர்கள் எல்லாம், தன்னலம் மறந்தோர் போலவும்; போட்டியும் பொறாமையும் எழுந்ததில்லை என்பது போலவும், பேசுவர்; பெருமை சொட்டச் சொட்ட.

தம்பி! ஒரு இடத்திலே முறைகேடுகள் இருந்திடின், அது போல் எங்கும் இருக்க வேண்டும் என்று வாதாடுவதாக எவரும் எண்ணக்கூடாது. நமது கழகத்தைப் பொறுத்தவரையில், எத்தகைய முறைகேடும் முளைக்க இனி இடம் கொடுக்கப் போவதில்லை. இது உறுதி.

எனினும், இவ்வளவு பத்தினித்தனம் பேசிக் கழகத்தைப் "பரிகாசம்' செய்யும் காங்கிரஸ் கட்சியின், இன்றைய நிலைமை என்ன? இரண்டு"காங்கிரஸ்காரர், ஒரே இடத்தில் உறங்கப் படுத்தால், காலையிலே ஒரு பிணமும் கொலையாளியும் இருப்பர்' என்று சொல்லத்தக்க நிலை. பகை கொப்பளித்தபடி .இருந்து வருகிறது. கூடவே இருந்து குழிபறிப்பது, அடுத்துக் கெடுப்பது, ஆகாவழி அழைத்துச் சென்று, பிறகு அழிவை மூட்டுவது போன்ற இழி செயல்கள்தான்,

பாரதமாதாவுக்கு இவர்கள் படைக்கும் "நித்திய நைவேத்திய'மாகிவிட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு விதமான குழப்பம் - நெருக்கடி.

தமிழ்நாடு காங்கிரசிலே மட்டும் குழப்பம் இல்லை, கொந்தளிப்பு இல்லை, அது காமராஜரின் தனித்திறமைக்கு எடுத்துக் காட்டு என்று பேசுகின்றனர். தமிழ்நாடு காங்கிரசில் பிளவு வெளிப்படவில்லை என்று மட்டும் கூறலாம் - ஆனால், அதற்குக் காரணம் இருக்கிறது - அந்தக் காரணம், காமராஜரின் தனித் திறமை என்று கூறுவது முற்றிலும் சரியானது அல்ல.

காமராஜர் முதலமைச்சராக முடி சூட்டிக் கொள்ளாமல் காங்கிரஸ் தலைவராக இருந்த நாட்களிலே, காங்கிரஸ் அமைச்சர் அவைகள் ஒவ்வொன்றும், கட்சி உட்பூசல் காரணமாகக் கவிழ்க்கப்பட்டனவேயன்றி, வேறென்ன என்று

கேட்டுப் பாரேன்!

பிரகாசம்

ஆச்சாரியார்

ஓமந்தூரார்

குமாரசாமி ராஜா

என்று, எப்படி, முதலமைச்சர்கள் மாறிமாறி வந்தனர், ஒருவரை நீக்கிவிட்டு, மற்றொருவரை அமர்த்த, எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள், கூட்டுகள், திட்டங்கள், சதிவேலைகள் யாருக்குத் தெரியாது?

காமராஜருக்கும் ஆச்சாரியாருக்கும் ஏற்பட்ட மோதலும், பதவி பிடிக்க ஏற்பட்டதே தவிரக் கொள்கை அடிப்படையிலா? ஆச்சாரியாரைக் கீழே தள்ளும் வரையில், ஊண் உறக்கம் மறந்து, அலைந்து

கொண்டிருந்தவர் காமராஜர் என்பதையும், அப்போது ஒவ்வொரு காங்கிரஸ் கமிட்டியிலும் "இரு கோஷ்டிகள்' இருந்தன என்பதும், ஊரறிந்த இரகசியமல்லவா?

வெளிப்படையாகவே காமராஜரும், அவரைச் சேர்ந்தவர்களும், பகையுணர்ச்சியைக் கக்கவில்லையா? இந்தப் பகை உணர்ச்சி அடிப்படையில் பத்திரிகைகள் நடத்தப்பட வில்லையா?

"பெரிய உடல், சின்னத் தலை' என்று காமராஜரைக் கேசெய்து,"கல்கி' எழுதவில்லையா? ஆச்சாரியாரை அகற்றா விட்டால், தமிழருக்கு வாழ்வுக்கான வழியே கிடைக்காது என்று சிலர் மிரட்டவில்லையா?

அப்போதெல்லாம், ஒரே பரபரப்பு உணர்ச்சி. மேடை களிலே மட்டரகமான பேச்சுத்தான்! பத்திரிகைகளைப் புரட்டினால்,

குமட்டல் எடுக்கும். கமிட்டிக் கூட்டங்களில் ரசாபாசம்!

இராஜகோபாலாச்சாரியார் மண்டைக் கனம் கொண்டவர், அவர் ஒழிந்தால்தான், நாடு உருப்படும், காங்கிரஸ் சீர்படும், என்று காமராஜர் கோஷ்டியினர் பேசுவர், எழுதுவர்.

காமராஜருக்குப் படிப்புக் கிடையாது; ஆளைத் தூக்கி ஆளின் மீது போடத் தெரியும்; கட்சிக்குள்ளே குட்டிக் கட்சிகளை உண்டாக்கக் தெரியும்; சட்டம் தெரியுமா? நிர்வாகம் தெரியுமா? ஆசை இருக்கிறது கொள்ளை கொள்ளையாக, மந்திரியாக வேண்டுமென்று - தகுதி வேண்டுமே! - என்று ஆச்சாரியார் கோஷ்டியினர் பேசுவர், எழுதுவர்.

காங்கிரஸ் மேடையாகவா இருந்தது அந்த நாட்களில். ஒரு "கோஷ்டி' பற்றி ஊழல்களை மற்றொரு"கோஷ்டி' அம்பலப்

படுத்துவதும், ஒரு கோஷ்டியார் நடத்தும் கூட்டத்தை மற்றோரு கோஷ்டியினர் கலாம் விளைவித்துக் கலைப்பதும், ஒரு கோஷ்டி மீது புகார்கள் செய்து, மேலிடம் சென்று, மற்றோர் கோஷ்டி சிண்டு முடிந்துவிடுவதும், ஆகிய இந்தக் காரியங்கள் தானே நடைபெற்றன.

அணைக்கமுடியாத அளவில், பார்ப்பனர்கள் மீது வெறுப்பு உணர்ச்சி பரவி இருக்கும் தமிழ்நாட்டிலே, அதே உணர்ச்சியைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளக் காமராஜர் தயங்கினாரா?

பார்ப்பனரல்லாதாரிடம் பரிவு காட்டும் ஒரு நண்பர் இல்லம் சென்றபோது, அவர், காமராஜர் இங்குவந்து எங்கு உட்காருவார் தெரியுமா? என்று கூறி, ஒரு இடத்தையே காட்டினார்!

எவரெவரைப் பிடித்தால் ஆச்சாரியாரைக்

கவிழ்க்கலாம் என்று வெறிபிடித்து, காமராஜர் கோஷ்டி அலைந்ததை, நாடு மறந்துவிடவுமில்லை; அப்போது பரப்பப்பட்ட நரகல் நடையையும், நாடு அதற்கு முன்பும் பிறகும் கண்டதில்லை.

திருப்பரங்குன்றத்திலே, காமராஜர் கோஷ்டிக்கும், ஆச்சாரியார் கோஷ்டிக்கும் நடைபெற்ற பலப்பரீட்சை, அரசியல் நாகரிகத்துக்கா, எடுத்துக்காட்டு!

இந்த இலட்சணத்தில் காங்கிரஸ் கட்சியை நடத்தி னவர்கள்தான், நமது கழகத்தில் காரசாரமான பேச்சும் - கடு கடுத்த பார்வையும் - வன்முறைச் செயலிலே இறங்கிவிடும் போக்கும், இரண்டோர் முறை தென்பட்டதைக் காட்டிக் காட்டிக் கேலி பேசுகின்றனர்.

தம்பி! பழைய பத்திரிகைகள் கிடைத்தால், ஆச்சாரியார் - காமராஜர் மோதுதலின்போது,

எத்தனை கேவலமான வார்த்தைகள் வீசப்பட்டன, எவ்வளவு இழிமொழிகள் பழிச் சொற்கள் வீசப்பட்டன, என்பது விளங்கும். அப்படி ஆடிக் கெட்ட இவர்கள்தான், நம்மைக் கேலி பேசுகிறார்கள்.

காமராஜரும் அவருடைய கூட்டுத் தோழர்களும், ஆச்சாரியாரைக் கீழே தள்ளியது மட்டுமல்லாமல், அவருக்கு ஆதரவாளர்களாக உள்ளவர்களில், அமைச்சர் சுப்ரமணி யத்தைப் போல், "நெளிய'த் தெரிந்தவர்கள் தவிர, மற்றவர்களை, மட்டந்தட்டும் வேலையிலல்லவா, மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இன்று காங்கிரஸ் கட்சியிலே பிளவு இல்லை. காரணம், காமராஜரின் தனித்திறமை என்கிறார்கள். தம்பி! எங்கள் குடும்பத்திலே பாகப் பிரிவினைத் தகறாரே, கிடையாது என்றானாம் ஒருவன்; எப்படி?

என்று கேட்டானாம் இன்னொருவன்; பாகம் கேட்பதற்கு முன்பே என் தம்பியைக் கொன்று போட்டுவிட்டேன்; அந்தக் கொலை செய்தது என் அண்ணன் என்று ருஜுப்படுத்திவிட்டேன்; அவருக்கு ஆயுள் தண்டனை; ஆகவே, பாகப்பிரிவினைத் தொல்லை தர ஒருவரும் இல்லை என்றானாம், அந்தக் கொடியவன். அதுபோல, காங்கிரசுக்குள்ளே இருந்துகொண்டு, காமராஜரின் தலைமைக்கு எதிர்ப்பு உண்டாக்கக்கூடியவர்களை எல்லாம், மிரட்டியோ, மயக்கியோ, ஒடுக்கிவிட்டு, இன்று ஒய்யாரம் பேசுகிறார்கள்.

ஒழுக்கத்தில் சிறந்தவர் என்று புகழ்பெற்ற ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரால், ஆட்சியை நடத்திச் செல்ல முடிந்ததா? நடத்திச் செல்ல விட்டார்களா? காங்கிரஸ் கட்சி அவருக்குத் துணை நின்றதா? கட்சியைத் தூண்டிவிட்டு, ஓமந்தூராருக்குத் தொல்லை பல தந்து,

துரத்திவிட்ட "தூயவர்கள்' இன்று, காங்கிரஸ் கட்சியிலே, உட்பூசல் இல்லை, பதவிச் சண்டை இல்லை, இடம்பிடிக்கும் போக்குக் கிடையாது என்று பேசுகின்றனர். நாடு ஆண்ட அந்த நல்லவர், இன்று இளைத்துக் களைத்து, வடலூராரை வணங்கிக் கொண்டு, காலம் தள்ளிவருகிறார்!

இதற்கு நெடுநாட்களுக்கு முன்பே, தொண்டர்களையும் தோழர்களையும், உழைப்பால் தமது பக்கம் சேர்த்துக் கொண்டு, காங்கிரசின் தலைமையைப் பெற்றிருக்கக் கூடிய சிவஞானக் கிராமணியாரைச் சிதைத்தாகிவிட்டது.

அதற்கும் முன்பே, தென்பாண்டி மண்டலத்தில் ஈடற்ற செல்வாக்கை ஈட்டி, அதனைக் காங்கிரசுக்கு அர்ப்பணித்த, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மனம்வெதும்பி வெளியே போய்விடும்

நிலைமை ஏற்பட்டு விட்டது. இன்று பசும்பொன் தேவர், படுத்த படுக்கையாக இருக்கிறார். பட்டத்தரசராகி விட்ட காமராஜரின் கோஷ்டி கேட்கிறது, "எமது தலைவரை எதிர்க்கும் திறம் படைத்தவர் எவரேனும் உண்டா' என்று.

தமிழ்நாடு காங்கிரசிலே இருந்து, சூழ்ச்சியால், சதிச் செயலால், சிண்டு முடிந்துவிட்டதால், தொண்டர்களுக்குத் தூபமிட்டு எதிர்ப்பு மூட்டியதால், விரட்டப் பட்டவர்களின் "பட்டியலை'த் தம்பி! ஓய்வாக ஒரு நாள் தயாரித்துப் பார் - அப்போதுதான், எமது குடும்பத்தில் பாகப்பிரிவினைத் தொல்லையே கிடையாது என்று பேசிய "உத்தமன்' கதைக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் வரலாற்றுக்கும் உள்ள பொருத்தம் விளங்கும்.

இருக்கலாம், ஐயா! இருக்கலாம், ஆனால், காங்கிரசிலே குழப்பம், கலாம், அடிதடி,

அமளி ஏற்பட்டதுண்டோ என்று கண் சிமிட்டிக் கேட்பர், காங்கிரஸ் வரலாறு கூடப் படிக்காமல், காங்கிரசில் புகுந்து கொண்ட புதியவர்கள் - புனிதர்கள்!

செருப்புகள் பறந்தன எங்கோ பொதுக்கூட்டத்திலே எவனோ கயவன் விட்டெறிந்த செருப்பு அல்ல - மகாநாட்டில் தலைவர்கள் மீது!

செருப்புகள் பறந்தன! தடிகளைச் சுழற்றினர்! நாற்காலி களை உடைத்தனர்! ஒருவருக்கொருவர் கைகலப்பு! ஒரே குழப்பம், பீதி! மூலைக்கு ஒருவராக ஓடி உயிர் தப்பினர்! மகாநாடே கலைந்து விட்டது! பிரதிநிதிகள் தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என்பார்களே, அவ்விதமாயினர்.

இத்துணை காலித்தனமா நடந்தது? என்று கேட்பர், கதர்க் கடைக்கு முதன்முறையாகச்

சென்ற முன்னாள் கள்ளுக்கடைக் காரர், இந்நாள் மண்டலக் காங்கிரஸ் தலைவர்!

நாடே கைகொட்டிச் சிரித்தது, கண்டித்தது, அந்தக் காலித் தனத்தைக் கண்டு. மிகமிகக் கேவலமாகப் பேசினர். மகாநாடு களிலே, மாலைகள் போடுவார்கள், செருப்பா வீசுவது! தடிகளைச் சுழற்றியா அடிப்பது!! அமளி நடந்தது, அவமானப் படத்தக்க வகையிலும் அளவிலும்.

செருப்புகள் பறந்த இடம், கழிகள் பேசிய இடம், நாற்காலிகள் உடைக்கப்பட்ட இடம், சூரத் - காங்கிரஸ் மகாநாட்டில்.

கட்டுக்கடங்காத தொண்டர்கள் நடத்திய கூட்டமோ - உணர்ச்சிவயப்படக் கூடிய வாலிபர்களின் மகாநாடோ - இப்படிப்பட்ட, ”ரகளை’ நடந்திட என்று கேட்பர். தம்பி! டாக்டர் பட்டாபி சீதாராமய்யா எழுதிய காங்கிரஸ்

வரலாறு எனும் ஏடெடுத்துப் படித்துப் பார்க்கச் சொல்லும் - படிக்கக் கூடியவர்களை.

லோகமான்ய பால கங்காதர திலகர், ராஷ்பிகாரி கோஷ், சுரேந்திரநாத் பானர்ஜீ, ஆகியவர்கள், தம்பி! காங்கிரசுக்கு, மூலவர்கள் - தியாகிகள் - மாவீரர்கள் - மேதைகள் - தலைவர்கள்!

சூரத் காங்கிரசில் இவர்கள்தான் இருந்தார்கள் - செருப்படியும் தடியடியும், நடந்தபோது.

வெறியர்களின் செயலுக்கு விவேகிகள் என்ன செய்வார்கள்? பாவம், விம்மி விம்மி அழுதிருப்பார்கள், என்று எவரேனும் எண்ணிக் கொள்ளப் போகிறார்கள் - தம்பி! அமளியை நடத்தியவர்களே, இந்தத் தலைவர்கள்தான்!!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பன்னிரண்டாம் ஆண்டு இது. இந்தப்

பன்னிரண்டு ஆண்டுகளில் கழகத்து நடவடிக்கைகளிலே நான் கண்டு வேதனைப்படத்தக்க, வெறுக்கத்தக்க இழி செயல், தீய காரியம் நடைபெற்றதில்லை. அவ்வளவு கட்டுப்பாட்டு உணர்ச்சியும், தோழமையும், மலர்ந்திருக்கிறது. கெட்ட கனவுபோலச், சருக்கு நிலத்தில் நடக்கும்போது வழுக்கிவிழுவது போலக், காய்ச்சிய பாலிலே பூச்சி வீழ்ந்து விடுவதுபோல, கழக நடவடிக்கையிலே, கசப்பும் பகை உணர்ச்சியும், வன்முறைச் செயலும், முதன் முறையாக (இதுவே கடைசி முறையுங்ககூட என்று உறுதி அளித்துள்ளனர்) தலைகாட்டிற்று. நாடே நடுக்குற்றது; நான் பதறிப் போனேன்; சம்பத், உண்ணாவிரதம் மேற்கொண்டு, மனமாறுதல் ஏற்படுத்த வேண்டும் என்ற கட்டம் செல்ல நேரிட்டுவிட்டது.

நம்மிடம் நாடு அத்துணை தூய்மையை

எதிர்பார்க்கிறது.

பத்துப்பேர் கூடி நடத்தும் காரியத்திலே, கோபதாபம் எழுவதும், ஆத்திரம் அமளி மூண்டுவிடுவதும், சகசம்தான் என்று மற்றமற்றக் கட்சி நடவடிக்கைகளைக் குறித்துப் பேசுவோர்கூடத், திராவிட முன்னேற்றக் கழகத்திலே இப்படி நேரிடலாமா? என்றுதான் கேட்கின்றனர், பதறுகின்றனர்.

தம்பி! மூன்று நாட்களுக்கு முன்பு, நள்ளிரவில், தொலைபேசி மூலம் கேட்கிறார், குன்றக்குடி அடிகளார், "எல்லாம் நல்லபடி முடிந்துவிட்டதா? மெத்த மகிழ்ச்சி!' என்று.

நாடு, நம்மிடம் "மாசுமருவு' இருக்கவும் கூடாது என்று கருதுகிறது. நம்மிடம் அவ்வளவு அன்பு அக்கறை. கண்ணை இமை காப்பதுபோலக், கழகத்தைக் கட்டுப்பாடு காப்பாற்றி வரவேண்டும் என்று நாடு

கூறுகிறது. ஆயிரத்தெட்டு அமளிகள் இருக்கத்தான் செய்யும் - கட்சிதானே! - அரசியல்தானே - என்று நமது கழகத்தைப் பொறுத்த வரையில், எவருமே கூறத் தயாராக இல்லை.

கன்று, கெட்டதைத் தின்றிடக்கூடாது என்று எவரும் கருதுவார்களேயன்றிப், பன்றி பற்றியா கவலைப் படுவார்கள்! மண் காற்று அடிக்கும்போது, கண்களைத்தான் மூடிக் கொள்வார்கள் - கை கால்களையா! அதுபோன்றே, நமது கழகத்திலேதான் துளியும கறைபடக் கூடாது என்று கூறுவர் - அவ்வளவு துல்லியமானது என்பதால். அவ்விதமாகத்தான், கண்ணுங் கருத்துமாகக் கழகத்தைக் கட்டிக் காப்பாற்றி, அரும்பு மீசை வாலிபர்களே மிகப்பெரிய அளவிலே உள்ள இந்தக் கழகத்திலேதான், எத்துணை கட்டுத்திட்டம், அடக்க உணர்ச்சி, பந்த

பாசம்! அமைத்தால் இப்படியல்லவா ஒரு கழகம் அமைத்திடவேண்டும் என்று எவரும் கனிவுடன் கூறினர் - பாராட்டினர். ஆனால், எப்படியோ நாமெல்லாம் திகைக்கத் தக்க விதத்தில், அரவம் நுழைந்துவிட்டது - அது தீண்டி நம்மைத் தீர்த்துக் கட்டுவதற்குள், கண்டிறிந்தோம், கழகக் காவலர் கூட்டம் கண்டோம், வென்றோம்.

இதனை உணராதார், உரத்த குரலில், கழகத்தை இழித்துரைப்பது கேட்டுத்தான், நானே, தம்பி! சூரத் செருப்படி மகாநாடு பற்றித் தெரிவித்தேன் - முதன் முறையாக.

லோகமான்ய பாலகங்காதர திலகர் இந்தியாவின் வழிகாட்டி என்பர்.

கோபாலகிருஷ்ண கோகலே இந்தியாவின் அறிவுக் கண் என்பார்கள்.

இந்த இருவருக்கிடையில் மூண்ட அமளி,

தம்பி! மிகமிக அருவருக்கத்தக்க அளவுக்குச் சென்றுவிட்டது.

ஒருவரை ஒருவர், இழித்தும் பழித்தும், நாற்றநடையில், பத்திரிகைகளில், எழுதிக் கொண்டனர் - மான நஷ்ட வழக்குக் கூடத் தொடுக்கப்பட்டது.

இத்தனைக்கும் இருவரும், முதியவர்களே - முறுக்கு நிறை வயதுமல்ல, கிறுக்குத்தனத்தில் நாட்டம் வைக்கக் கூடிய வாலிபர்களுமல்ல.

தம்பி! சூரத்தில் நடைபெற்ற "செருப்படி மாநாடு'க்கு முன்பே, பகை புகைந்துகொண்டு இருந்தது. காங்கிரசுக்கு அப்போது வயது இருபத்து ஐந்தாண்டு; வெள்ளிவிழாக் கொண்டாட வேண்டிய வேளை; ஆனால் கொண்டாடப் பட்டதோ, வேறு விழாவாகிவிட்டது.

மராட்டிய மண்டலத்துக் காங்கிரசுக்கும், வங்கக் காங்கிரசாருக்கும், மனமாச்சரியம் மூண்டுவிட்டிருந்தது.

காங்கிரஸ் மகாநாடு - அகில இந்திய மகாநாடு - நடைபெற ஏற்பாடாயிற்று. நாகபுரியில் நடத்தலாம் என்றனர் ஒரு சாரார்; கூடாது, சூரத்தில் நடத்தலாம் என்றனர், மற்றொரு பிரிவினர், இடத்தைக் குறித்த சண்டை முதலிலேயே தொடங்கி விட்டது. கடைசியில், சூரத்தில் நடத்துவது என்று முடிவாயிற்று. வரவேற்புக் குழுவினர், வங்கத்தைச் சேர்ந்த ராஷ்பிகாரிகோஷ் தலைமை வகிக்கத் தேர்ந்தெடுத்தனர். மிகத் தகுதிவாய்ந்தவர், அறிவாளி, எழுச்சிமிக்க சொற்பொழிவாளர் ராஷ்பிகாரிகோஷ். எனினும், அவர் வேண்டாம், திலகர் தலைமை வகிக்கட்டும் என்று ஒரு பிரிவினர் வாதாடினர்.

”வரவேற்புக் கமிட்டியின் முடிவுக்கு,

எதிர்ப்புத் தெரிவிக்க லாமா? முறையாகுமா?''

"பெரிய முறையைக் கண்டுவிட்டார்கள்! வாயைப் பொத்திக் கொண்டு இருங்களய்யா! பொல்லாத வரவேற்புக் கமிட்டி கூட்டிவிட்டார்கள். உங்கள் கமிட்டியை யார் மதிக்கிறார்கள்?''

"இது போக்கிரித்தனமான பேச்சு!''

"யாரடா, போக்கிரி! நாக்கை உள்ளே வைத்துப் பேசு - இல்லை - வெட்டி எடுத்துவிடுவோம். . .''

"பெரிய சூரப்புலிதான், சும்மா கிடடா. . .''

"வாடா பார்த்துக் கொள்கிறேன், நீ மகாநாடு நடத்துவதை.''

"என்ன செய்துவிடுவாய்?''

"வந்து பார், தெரிகிறது.''

போய்ப் பார்த்தபோதுதான், செருப்பு

வீசப்பட்டது. தடிகொண்டு தாக்கினார்கள். நாற்காலிகளை உடைத்தார்கள். பெரிய கலகமே நடைபெற்றது.

"சரி! நமக்குள் ஏன் தகறாரு, திலகரும் வேண்டாம், ராஷ்பிகாரியும் வேண்டாம்; லாலா லஜபதிராய் தலைமை வகிக்கட்டும், என்று சிலர் யோசனை கூறினர். லாலா லஜபதிராயின் புகழ் உச்சத்தில் இருந்த நேரம் அது. அவருடைய தலைமையை ஏற்றுக் கொள்வது, தமக்குத் தரக்குறைவு அல்ல என்று, திலகர் கோஷ்டி தீர்மானித்தது. ஆனால், பாஞ்சால சிங்கம், இருதரப்பிலும் சேர மறுத்துவிடவே, ராஷ்பிகாரிகோஷ் தலைமை ஏற்றார். அவரை வழிமொழிந்து பேசினார், சுரேந்திர நாத் பானர்ஜி, அப்போது திலகர் குறுக்கிட்டு மறுப்புரை பேச விரும்பினார்; தடுத்தனர்; மீறிச் சென்றார்; கூச்சலிட்டனர். எதிர்க்கூச்சல் கிளம்பிற்று;

மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் பதறினர்; குழப்பம் ஏற்பட்டது; செருப்புப் பறந்தது; தடிகளைக் சுழற்றினர்; நாற்காலிகள் உடைந்தன; திக்காலொருவர் ஓடினர்; சூரத் காங்கிரஸ் குழப்பத்தில் முடிந்தது.

கூடியது நாட்டை மீட்கும் திட்டம் தீட்ட! நடைபெற்றது!

இந்திய தேசீயக் காங்கிரசின் மூலவர்கள் கூடினர், பிரச்சினைகளை அலச, ஆராய, விவாதிக்க! வார்த்தைகளை வீசிக் கொள்ளவில்லை; காதறுந்ததை வீசினர்!!

இவ்விதம் இருக்கிறது இவர்களின் "பூர்வோத்திரம்.' இவர்கள், நமது கழகத்தை ஏசுகின்றனர். பூச்சிக்கடியால் விரலில் வீக்கம் கண்டவனை, வாதத்தால் கால் பெருத்தவன் கேசெய்வதுபோல இருக்கிறதல்லவா, இது.

தம்பி! சூரத் பாணியில் இல்லையே தவிர,

காங்கிரசின் நடவடிக்கைகளிலே பலமுறை, குழப்பமும் அமளியும், நடைபெற்றது. இதைக் கூறி, நம்மிடையே நுழைந்த நாசத்தை நான் அனுமதிக்கிறேன் என்று மட்டும் எண்ணாதே! காங்கிரசின் ஒழுங்கு, கட்டுப்பாடு எந்த இலட்சணத்தில் இருந்திருக்கிறது, என்பதைக் காங்கிரசின் புதியவர்கள் அறிந்து கொள்ளட்டும், என்பதற்கே இதை எழுதினேன்.

உத்தரப்பிரதேசத்தில், சம்பூர்ணாநந்தா கோஷ்டிக்கும், குப்தா பிரிவினருக்கும் மூண்ட மோதலினால், இரு தரப்பினரும், ஏசிக்கொண்டதன் அளவுதான் கொஞ்சமா? தரம்தான் சிலாக்கியமானதா? உத்தரப்பிரதேசத்தில் உள்ள பத்திரிகைகளைப் பார்த்தாலல்லவா, அந்தக் "கண்றாவி' தெரியும்.

காங்கிரஸ் அமைச்சர் மீது காங்கிரஸ் தலைவர் புகார் தொடுப்பது; மகனுக்கு

வேலை தேடிக் கொடுத்தான், மருமகனுக்குக் காண்ட்ராக்ட் கொடுத்தான் என்ற குற்றச்சாட்டுகள் கொஞ்சமா?

இதை எண்ணி எண்ணிக் குமுறிக் கிடக்க வேண்டிய இவர்கள், நம்மைப் பார்த்து ஏளனம் செய்வதா?

நடைபெற்றுவிட்டவைகளைக் கண்டிக்கத் தவறக் கூடாது - களைந்தெறியும் உறுதியுடன் கண்டிக்கத்தான் வேண்டும்; ஆனால், அதற்கு, இவர்களா பொறுப்பாளர்! இவர்கள் தூற்றித் திரிவோர்; தூய்மைப்படுத்தும் உரிமையோ திறமையோ பெற்றவர்களல்ல. எனினும், எருதுமீது உள்ள புண் மீது உட்கார்ந்துவிடும் ஈயைப்போல, இவர்கள் ஆகும்போதுதான், எருது தன் வாலால் அடித்து ஈயை விரட்டுவதுபோல, நாமும், இவர்களின் இலட்சணத்தை எடுத்துக்காட்டவேண்டி வருகிறது.

ஆனால், தம்பி! இதைக்கண்டு, நமக்குள் ஏற்பட்டது குறித்து நாம் வேதனைப்படத் தேவையில்லை, என்று எண்ணி விடக்கூடாது.

நாம் எண்ணிப் பார்க்கவேண்டியது, இதுதான். இத்தனை காலமாகக், கட்டிக் காப்பாற்றி வந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இப்போது தளரக் காரணம் என்ன என்பதும், மீண்டும், மாண்புபெற நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய முறைகள் யாவை என்பதும்தான். திருவொற்றியூரில், நாம், அதற்கான முறை வகுத்துக் கொண்டிருக்கிறோம் - தக்க பலன் கிடைக்கும் என்றும் நம்புகிறேன்.

தம்பி! உன் உரையாடலிலும், மற்றவர் சொற்பொழிவிலும், எழுத்திலும், செயலிலும், கடைப்பிடிக்க வேண்டியவைகள், நிரம்ப உள்ளன.

கசப்புணர்ச்சி ஏற்படக் காரணம், கண்மூடித்தனமான போக்கும், பேச்சும். எதையும் கிளறிக் கிளறிப் பேசுவதும், எதற்கும் உள் அர்த்தங்கள் கற்பித்துக்கொள்வதும், இடையிலுள்ளோர் கூறுவனவற்றுக்குச் செவிசாய்ப்பதும்தான் தீதான மனப்போக்கை மூட்டிவிடுகின்றன.

எனவே, பொறுப்புடன் அமைதல்வேண்டும், நம் அனைவருடைய பேச்சும், எழுத்தும், செயலும்.

இதில் எவரேனும் தவறு இழைத்துவிட்டால், உணர்ந்தோர், என்னிடம் கூறுவதும், அவர்களிடமேகூட, நேச உணர்வோடு எடுத்துக்கூறித் திருத்த முற்படுவதும் ஏற்புடைய செயலாகும். அதை விடுத்துக், கண்டனம், மறுப்பு எனும் போக்கிலே ஈடுபட்டுவிட்டால், நோய் பரவுகிறது என்பது பொருள்.

தம்பி! பிளேக் போன்ற மிகப் பயங்கரமான நோய்க்கான கிருமிகளைச், சாதாரண எலிகளல்லவா பரப்புகின்றன என்கின்றனர், மருத்துவ விற்பன்னர். ஊரையே அழிக்கும் நோய் - அதனைப் பூனைக் கண்டால் தலைதெறிக்க ஓடும் எலி, பரப்புகிறது.

கூட்டாகப் பணியாற்றும்போது, மிகமிகச் சிறு சம்பவங் களைக், கிருமிகளாக்கிப் பரவவிடும்போது நோய் முற்றுகிறது.

எனவே, நம் பேச்சுக்களிலே, பொருளும் பொறுப்பும் காரணமும் தேவையும், தெளிவும் கனிவும் இருக்க வேண்டும்.

"அப்பா காதைத் திருகு! உம்! பார்க்கலாம் உன் சாமர்த்தியத்தை'' என்று நாலு வயது மகனுக்குக் கூறும் அதே தாய் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, அதே வார்த்தையையே சொல்லிப் பார்க்கட்டும் -

எத்துணை விபரீதமான பொருள்படும்.

தம்பி! நமது கழகம் இன்று அடைந்துள்ள நிலைமை அப்படிப்பட்டது.

பொதுவாக, இப்போது மேற்கொள்ள வேண்டியது ஒன்று உண்டு; ஏற்பட்டுத் தீர்க்கப்பட்டுப்போன பிரச்சினைகளைப் பற்றி, உரையாடலிலோ, மேடைப் பேச்சிலோ, பத்திரிகை வாயிலாகவோ ஆராய்ச்சி நடத்துவது, அறவே நிறுத்தப்பட வேண்டும்.

எப்படித் தொடங்கிற்று? ஏன் தொடங்கிற்று? எவர் தொடங்கினர்? என்பனப்பற்றிப் பேசுவது, புதிய, தேவையற்ற, தீது தரும் விதமான, விளைவுகளைத்தான் உண்டாக்கும். எனவே, பேச்சாளரும் எழுத்தாளரும், தமது நிலையும் நினைப்பும், அறிவும் ஆற்றலும், பண்பும் மாண்பும், நமது கழகத்தை வாழ

வைக்க, வளர வைக்கப் பயன்படத்தக்கதாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். பொறுப்புடன் பணியாற்றினால், கழகத்தை வளப்படுத்தலாம்; பொறுப்பினை மறந்தால், பகை புகையும் இடமாக்கிவிட்டுப், பின்னர், கை பிசைந்து கொள்ளும் நிலை ஏற்படும்.

கழகம் துவக்கப்பட்டபோது இருந்த சூழ்நிலை - அதனை எப்படி நாம் மாற்றி அமைத்தோம்.

கழகம் துவக்கப்பட்டபோது, நம்மைப்பற்றி நாடு கொண்டிருந்த எண்ணம் - இன்று நாடு காட்டும் அன்பும் ஆதரவும் பெற்றிட எங்ஙனம் முடிந்தது.

கழகத்தின்மீது வீசப்பட்ட அடக்கு முறைகள்; அப்போது அஞ்சா நெஞ்சுடன் நின்ற வீரக் காதைகள்.

கழகத்தின் வளர்ச்சிக்கு அவரவர் தத்தமது

அறிவாற்றலை வழங்கிய வகை; அதனால் கழகத்தின் வண்ணமும் வடிவமும் வளர்ந்த விதம்.

கழகம், மொழி காத்திட மேற்கொண்ட முயற்சிகள், அதுபோது ஏற்பட்ட இன்னல்கள்.

கழகம், கலைத்துறையைப் பக்குவப்படுத்திப், படைக் கலனாகக் கொண்டது, அதனாலாய பயன்.

கழகம், முற்போக்குக் கருத்துக்களை ஆதரித்தது; அதன் விளைவாகப் புதிய தோழமை உணர்வுகொண்டு சமுதாயம் கழகத்தை வரவேற்ற அருமை.

கழகம், விவசாயப் பிரச்சினைப் பற்றிக் கூறிய கருத்துக்கள். ஈடுபட்ட செயல்கள் - நடத்திய கிளர்ச்சிகள் - பெற்ற வெற்றிகள்.

கழகம், தொழிலாளர் துறையிலே கொண்டுள்ள தொடர்பு; ஏற்பட்டுள்ள புதிய

அமைப்புக்கள்; அதனால் காணக் கிடக்கும் புதிய நிலைமைகள்; கிடைத்த அனுபவங்கள்.

கழகம், தன் அலுவல்களைச் செய்திடப் பொதுமக்களின் ஆதரவை நாடியது; கிடைத்த அளவும், வகையும்.

கழகம், நெசவாளர் பிரச்சினையில் கொண்டுள்ள தொடர்பு; அதன் பயன்கள்.

கழகத்துக்கு ஏற்பட்ட இருட்டடிப்புகள் - அதனை முறியடிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் - இன்றைய நிலைமை.

கழகம் மாணவர்களிடம் கொண்டுள்ள பாசம் நிறைந்த தொடர்பு; அதிலே கழகம் மேற்கொண்டுள்ள கண்ணியமான போக்கு.

கழகப் பணியாற்றியவர்கள், மாற்றாரால் படுகொலை செய்யப்பட்ட சோகம் ததும்பும் சம்பவங்கள் - கழகம் அந்தக் குடும்பத்தாருக்கு கைகொடுக்க முன் வந்த நிகழ்ச்சிகள்.

கழகம், மக்களைப் பாதிக்கும், வெள்ளம், பஞ்சம், நோய் போன்ற விபத்துக்களின்போது, காட்டிய அக்கறை; திரட்டித் தந்த உதவிகள்.

கழகம், தேர்தலில் ஈடுபடக் காரணம்; அதற்கான ஏற்பாடுகள்; பெற்ற வெற்றிகள்; வெற்றிகளின் தன்மைகள்; தோல்விகளுக்கான காரணங்கள்; இப்போது ஏற்பட்டுள்ள நிலைமை மாற்றங்கள்.

கழகம், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நிற்கும் போக்கு; மக்கள் அதனை வரவேற்கும் தன்மை.

கழகம், காங்கிரஸ் முதலாளித்துவ அரசு அமைத்து நடத்துகிறது என்பதை எடுத்துக்காட்டி, மக்களிடம் ஏற்படுத்தியுள்ள தெளிவு.

காங்கிரஸ் ஆட்சியின் வரிக் கொள்கை - தொழில் கொள்கை - அடக்கு முறைப்போக்கு

- சட்டங்கள் இயற்றும் போக்கு - பொருள் விரயம் - வீண் காரியம் - நிர்வாக ஊழல், ஆகியவற்றினை, மக்கள் உணரச் செய்ய மேற்கொண்ட முயற்சிகள்.

கழகம், சட்டமன்றம், பாராளுமன்றம், நகராட்சிகள். ஊராட்சி மன்றங்கள் ஆகிய இடங்களில் ஆற்றிவரும் நற்பணிகளும் - அவற்றால் ஏற்படும் பலன்களும்.

வடநாட்டு ஆதிக்கம், திராவிடம் படும் தொல்லைகள்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் - அவைகளில் உள்ள குறைபாடுகள்.

வடக்கு, தெற்கை வஞ்சிக்கிறது என்பது குறித்து, நாம் தவிர, மற்றப் பலரும் எடுத்துக் கூறியுள்ள கருத்துகள்; அவைகளுக்கான விளக்கங்கள்.

வடக்கே அமைந்துள்ள அரசு, தொழில்

துறையில் தென்னகத்தைப் புறக்கணிப்பதால் ஏற்பட்டுள்ள கேடுபாடுகள்.

திராவிடத்தின் செல்வங்கள் - அவற்றினைப் பயன்படுத்தாததால், வந்துற்ற சீர் குலைவுகள்.

வெளிநாடுகளில் வேதனை நிரம்பிய வாழ்வு நடாத்திவரும் தமிழர் பற்றிய விவரம், விளக்கம்; அவர்களுக்கு உள்ள குறைகள்; நீக்குவதற்கான வழி வகைகள்; ஆட்சியாளர் காட்டும் அலட்சியம்!

பொல்லாங்கான ஆட்சி நடத்திடினும், பொதுமக்களை வசியப்படுத்த முடியும் என்று காங்கிரஸ் எண்ணிட உள்ள காரணங்கள் - பத்திரிகை பலம், பணபலம், ஜாதியைப் பயன் படுத்தும் போக்கு.

கழகத் தோழர்களின் உடைமைக்கும் உயிருக்கும் கூட ஆபத்து ஏற்படுத்தத்தக்க

துணிவு சிலரிடம் ஏற்பட்டிருப்பது; இதிலே துரைத்தனத்தின் கடமை என்ன, என்ற விளக்கம்.

காங்கிரசுக்குப் பக்கபலமாகப், பணம் படைத்தோர் திரண்டு நிற்கும் காட்சி - அதற்கான காரணம் - எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும், என்பது குறித்த ஆராய்ச்சி.

காங்கிரசை எதிர்த்து நிற்கத் தேவைப்படும் பணவசதி - இதனைத் திரட்டும் முயற்சி - கிடைத்துள்ள பலன்கள்.

அடுத்து வரும் தேர்தலில் கழகத் தோழர்கள் வேலை செய்யவேண்டிய முறைகள்.

தம்பி! மணி விடியற்காலை நாலு ஆகிறது. கண் தன்னாலே கூட மூடிக்கொள்கிற நிலைமை. ஆனாலும், எனக்கென்னவோ, எல்லாவற்றையும்

ஒரே மூச்சில் உன்னிடம் கூறிவிட வேண்டும் என்று ஓர் தணியாத ஆர்வம். உன் ஆர்வம் பழுதுபடாமருந்தால்தான், கழகம் மேற்கொள்ளும் எந்த முயற்சியும் வெற்றி பெறும். அந்த நோக்கத்துடன் பணியாற்றினால் பகை எழாது. பண்பு கெடாது, பாங்கான வளர்ச்சி ஏற்படும் - திருஇடம் அமைக்கும் வழி கிடைக்கும்.

திராவிடத்தின் தன்மை, வளமை, வரலாற்று உண்மை, இன்றைய தாழ்நிலை, இன்பமிகு எதிர்காலத்தை நோக்கி நாம் நடப்பது.

உலகிலுள்ள சிறிய நாடுகள் குறித்த வரலாறுகள் - விடுதலை வீரர்கள் நடாத்திய, உடம்பைப் புல்லரிக்கச் செய்யும் தீரமிக்க நடவடிக்கைகள் - மக்கள் இதன் காரணமாகப் பெற்றுள்ள எழுச்சி.

இவை குறித்துக், கோடிட்டுக் காட்டிப் பேசவே, நேரம் காணாது; ஆனால், பேசியாக வேண்டும். உன்னாலன்றி, வேறு எவரால் முடியும்? எழு! தம்பி! சோர்வு, திகைப்பு, கலக்கம் விரட்டு! வீர உணர்ச்சிக்கு வேலை செய்! வெற்றி நமதே, அஞ்சற்க!

அன்புள்ள,

அண்ணாதுரை,

5-3-1961

34. எண்ணப் பிணைப்பு! இதயக் கூட்டு! வண்ணக் கலவை!

கோபமும் கொள்கையும் - சந்தி சிரிக்கும் காங்கிரஸ்

தம்பி!

ஜெப்பர்சன் என்ற பெயருடையார் அமெரிக்கக் குடி அரசுத் தலைவராக இருந்தார். அவர் ஒரு பொன்மொழி கூறி இருக்கிறார். "கோபம் எழும்போது, உடனே பதில் பேசிவிடாதே! பேசுவதற்கு முன்பு 10 எண்ணிக்கை எண்ணிக் கொண்டிருந்து விட்டுப் பேச ஆரம்பி - கோபம் அதிகமாக இருந்தால், பத்துப் போதாது, நூறு வரையில் எண்ணிவிட்டுப் பிறகுதான் பேச வேண்டும்.''

நான் பல ஆயிரம் எண்ணிவிட்டுத்தான் பேசுவதோ, எழுதுவதோ வாடிக்கை. கோபம்

கொதித்துக் கரைந்து, உலர்ந்து பொடிப் பொடியாகித், தூளாகித் தூசியாகிக், காற்றாகக் கலந்து போகிற வரையில்கூடப் பதில் பேசாது இருக்கும் போக்கிலே, நிரம்பப் பயிற்சியும் உண்டு. அது தக்க பலனையும் - எனக்கு அல்ல - என் மூலமாக - நாட்டுக்குத் தந்துள்ளது என்பதையும் உணருகிறேன். கோபமே எழாதபடியான மனநிலை பெற வேண்டுமென்று விழைகிறேன் - வெற்றி எளிதிலே கிடைப்ப தாகத் தெரியவில்லை; எனினும் முயற்சியைக் கைவிட்டு விடுவதாகவும் இல்லை.

என்ன அண்ணா இது! சென்ற கிழமை மடல் அனுப்ப வில்லையே? கோபம் எனக்கு; நிரம்ப. அப்படி இருக்க, நீ, ஏதோ கோபத்தை அடக்கிக் கொண்டு இருப்பது பற்றிப் பேசுகிறாயே; என் கோபம் இதைக்கேட்டு வளரத்தானே செய்கிறது - என்றுதானே தம்பி!

கேட்கிறாய். உன் கோபம் நியாயமானது - மறுக்கவில்லை - ஆனால், என் நிலை, உணர்ந்து பார்த்தால், அனுதாபத்துக்கு உரியது என்பதனை அறிவாய். பல நாட்களாக நிறுத்தி வைத்திருந்த ஆங்கில இதழ், உன் வற்புறுத்தல் காரணமாக, மீண்டும் வெளியிட வேண்டிய நிலை - அதற்கான பணியும் சேர்ந்து, என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது - எனவேதான், சென்ற கிழமை உன்னுடன் அளவளாவும் அக மகிழ்ச்சியை நான் பெற முடியாது போயிற்று. மணி பன்னிரண்டு, தம்பி! எழுதிக் கொண்டிருக்கிறேன் - இன்று எழுதாவிட்டால், இந்தக் கிழமை எழுத வேறு வாய்ப்புக் கிடைக்காதே என்பதால், பன்னிரண்டு என்று மட்டும்தானே சொன்னேன். தம்பி! இரவு!!

கோபம் கூடாது என்று நான் கூறினேன் - கோப உணர்ச்சி எழவிடக்கூடாது என்று

கூறினேன் - ஆனால், எத்தகைய கோபம் என்பதை விளக்க வேண்டும். நம்மைப் பற்றித் தவறாகவோ, பகை யுணர்ச்சி காரணமாகவோ, தூற்ற வேண்டுமென்றோ, எவரேனும் ஏதேனும் பேசினால், செய்தால், எழக்கூடிய கோப உணர்ச்சிக் குத்தான் இடமளிக்கக் கூடாது என்றேன். நமது நாட்டை எவரேனும் இழித்துரைத்தால், மொழியைப் பழித்தால், கழகத்தின் மீது பகை உமிழ்ந்தால், கொள்கைகளை இகழ்ந்தால், முயற்சிகளை ஏளனம் செய்தால், கிளர்ச்சிகளை அழித்திட முனைந்தால், எழக்கூடிய உணர்ச்சிகளை அடக்கிவிட வேண்டும், அவைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது, என்று கூறுவதாக எண்ணிவிடாதே. அந்த உணர்ச்சிதான், உலகைத் திருத்த, உரிமைகளைப் பெற, உயர்வை அடையப் பயன்பட்டு வந்திருக்கிறது! அத்தகைய உணர்ச்சியால் உந்தப்பட்டவர்கள்

தான், விடுதலைப் பெறக் களத்திலே இறந்தனர்; இறவாப் புகழ்பெற்றனர்; உரிமைகாக்கத் தூக்குமரம் ஏறினர்; தாம் மடிந்து மற்றவர்களை வாழ வைத்தனர். கவிதையும் காவியமும் அந்த உணர்ச்சி பொங்கி வழிந்தபோது காணக்கிடைத்த வடிவங்களே! எழுச்சிமிக்க கிளர்ச்சிகளை, அந்த உணர்ச்சிதான் தூண்டி விட்டது! மனிதகுல முன்னேற்றமே அந்த உணர்ச்சியின் காரணமாகத்தான் ஏற்பட்டது. எனவே, தம்பி, கோபமும் கொதிப்பும் எழலாகாது என்று நான் கூறும்போது, ஏற்படினும், அந்த உணர்ச்சியால் ஆட்டிப்படைக்கப்படும் நிலைமைக்கு நம்மை ஆளாக்கிக் கொள்ளக்கூடாது என்று கூறும்போது, அருள்கூர்ந்து, பொது நோக்கத்துக்காக, பொது நலனுக்காகத், தூய கொள்கைக்காக, விடுதலைக் கிளர்ச்சிக்காக, நாம் மேற்கொள்ளும் முயற்சிகளைக்

குலைத்தும், பழித்தும், எதிர்த்தும், ஏளனம் செய்தும், இன்னல் மூட்டியும், இழிவைத் தூவியும், சிலரோ, பலரோ இருப்பரேல், அப்போது, உணர்ச்சியற்றுக் கிடக்கச் சொல்கிறேன் என்று எண்ணிக் கொள்ளாதே. அப்போது உணர்ச்சி ஏற்படுவதுதான், உள்ளத்திலே கொள்கைப்பற்று இருப்பதற்கே அடையாளம்.

உனக்கென்ன தெரியும்? என்று ஒருவன் கேட்கும்போது, கோபம் எழத் தேவையில்லை. ஏற்பட்டுவிடினும், கண் சிமிட்டிச் சிரிப்பொலி எழுப்பி, ஆமப்பா! எனக்கு ஒன்றும் தெரியாது! என்று செப்பிவிடலாம். கஷ்டமும் இல்லை; நஷ்டமும் இல்லை. உன்னால் என்ன ஆகும்? என்று ஒருவன், ஆணவத்தை, அறிவின் முதிர்ச்சி என்று நம்பிக் கொண்டு, நம்மைக் கேட்டிடின், ஒன்றும் ஆகாதப்பா! என்று கூறிவிடுவதால், நமது ஆற்றலும் அழிந்து

விடாது, மரியாதையும் மங்கிவிடாது. ஆனால் உன் தமிழ்மொழியில் என்ன உண்டு? உன் தாய் மொழியால் என்ன ஆகும்? என்று கேட்க ஒருவன் முற்பட்டால், உணர்ச்சியற்றுப் பதிலளிக்கா திருந்தால், மரபும் மானமும், நாடும் மொழியும் ஏளனத்துக்கு இலக்காகிச் சிதைவுபடும்; ஈடுசெய்ய முடியாத நஷ்டம், துடைக்க முடியாத பழி, போக்க முடியாத கறை, அப்போதுதான் ஏற்படும். எனவே, நம்மைத் "தனிப்பட்ட முறையில் தாக்கியோ, தரக்குறைவாகப் பேசியோ, இழிவுபடுத்த ஒருவன் முனைந்தால், தாங்கிக்கொள்ளலாம், கோபத்தை அடக்கிக் கொள்ளலாம். ஆனால், தமிழர் என்ற இனத்தை, தமிழ்மொழி என்ற தாய் மொழியை, நமது மரபினை இழித்தும் பழித்தும் பேசினால், தாங்கிக்கொள்ளும் அளவும்கூட அறமாகாது; உணர்ச்சியே எழவில்லை என்றால், தமிழ் இனம் வாழாது.

வெள்ளையரை முதலில் எதிர்த்த பெரியவர்களையே எடுத்துக் கொண்டு பார்த்தாலும், இது புரியும். அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே, வெள்ளையர்களால் ஒரு இழிவும், இன்னலும் ஏற்பட்டதில்லை. மாறாகப் படித்தவர்கள், வசதி பெற்றவர்கள், மேட்டுக்குடியினர், என்ற முறையில், அவர்களைத் தட்டிக் கொடுக்கப் பட்டம் அளிக்க, பதவி தந்திட, பரிவு காட்டிட, வெள்ளை அரசு தயாராகக்கூட இருந்தது. எனினும், நாடு கெடுகிறது; மக்கள் மதிக்கப்படுவதில்லை; தொழில் நசிந்து போகிறது; வறுமை தாண்டவமாடுகிறது, என்ற பொது நிலைமைகளைக் கண்டுதான், அவர்கள் ஆத்திரமடைந்தனர்; எழுச்சிபெற்றனர்; தொடுத்தனர் போர்; பெற்றனர் வெற்றி.

அஃதே போன்றே, இன்று, டில்லிப் பேரரசு, நம்மில் யாரையும், தனிப்பட்ட முறையில்

தொல்லை கொடுத்துக் கொண்டும் இல்லை, இழிவு படுத்தியும் வரவில்லை; ஆனால், நமது நாடு, மொழி மரபு பாழாக்கப்படுகிறது; நமது மக்களின் வாழ்வு இருண்டுகிடக்கிறது; தொழில் பட்டுப்போன வண்ண மிருக்கிறது என்ற "பொதுநிலை'மைதான். நம்மை, டில்லிப் பேரரசை எதிர்த்தாக வேண்டும் என்ற எழுச்சி கொள்ளச் செய்கிறது.

தம்பி! தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட காரணங் களுக்காகக், கோப உணர்ச்சி கொதித்தால், அவர்களுக்கு உள்ள பலமும் போய்விடும்; மற்றவர்கள் கண்டு, எள்ளி நகையாடவும் செய்வர். ஆனால், பொதுநல நோக்கத்துக்காக, இனத்துக்காக, மொழிக்காக, உணர்ச்சிப் பிழம்பாக நாம் மாறும்போது, புதியதோர் வலிவு பெறுகிறோம்; காண்போர் கனிவு காட்டுகின்றனர்; அவர்களேகூட எழுச்சி பெற்றவர்களாகி

விடுகின்றனர்.

ஜுரவேகத்தில் இருப்பவனை, நாலு பேர் சேர்ந்து அழுத்திப் பிடித்தாலும், நெம்பிக் கொண்டு எழுவான். அது வலிவின் அடையாளமல்ல; நோயின் தன்மை. கட்டான உடலை, உடற்பயிற்சி முறைகளால், மேலும் வலிவுள்ளதாகவும் பொலிவு மிக்கதாகவும் ஆக்கிக் கொண்டால், பத்துப்பேர் பிடித்திழுத் தாலும், நிலைகுலையாத தன்மை கிடைக்கும்; அது உண்மையான. . . வலிவுக்கு அடையாளம்.

தனிப்பட்ட காரணத்துக்காக ஏற்படும் கோபம் எழுவதும், விரைவில் முறிவதும், அஃதேபோல! இடையிலே, பிறகு எண்ணிப் பார்த்தால், வெட்கப்படத்தக்க, ஆர்ப்பரிப்பு இருக்கும்.

பொது நலனுக்காக உணர்ச்சி ஏற்படுவது

எளிதுமல்ல; எல்லோருக்கும் ஏற்பட்டு விடுவதுமில்லை; விரைவிலேயும் ஏற்பட்டு விடாது. ஏற்பட்டான பிறகோ, அந்த எழுச்சியை அழித்தொழிக்க வல்லது எதுவும் இருக்க முடியாது என்று கூறலாம். அவ்வளவு நேர்த்தியானதாக எழுச்சி இருக்கும்!

எஃகு, எளிதிலே தயாரிக்கப்படுவது அல்ல; இரும்பு காய்ச்சிக் காய்ச்சி, ஊட்டம், அழுத்தம் ஏறி ஏறி, எஃகு ஆக்கப் படுகிறது. எஃகு ஆக்கப்பட்ட பிறகே, எதையும் தாங்கும் நிலை பெறுகிறது; வளையாது, முறியாது. எனதருமைத் தம்பியரெலாம் எஃகுக் கம்பிகளாக வேண்டும் என்பதுதானே எனக்குள்ள அவா! மாற்றாரின் ஏளனம் செவியில் விழத்தான் செய்கிறது. ”எஃகுக் கம்பிகளா, உன் தம்பிகள்!! ஆமாம்! வேறு எப்படி இருப்பார்கள்? தங்கக் கம்பிகளாகவா இருக்க முடியும்!’’ என்கின்றனர். தம்பி! நமது,

இல்லாமை'யைக் குறை கூறுகிறார்கள்; இயல்பை அல்ல; எனவே, அதைக் கேட்டு நமக்குக் கோபம் எழத் தேவையுமில்லை.

அண்ணா! எல்லா நல்லுரையும் சொல்லுகிறாய், அதிலே வல்லமை பெற்றிருப்பதால்; ஆனால், உன்னையும்தான் சிலர் சொல்லுகிறார்கள் "கோபம் வந்தது' - என்று, எனச் சொல்லத் துடிக்கிறாய்; தெரிகிறது, தம்பி! நானே, அதைக் கூறத்தான், இந்தப் பிரச்சினையையே தொடங்கினேன்.

காங்கிரஸ் நண்பர்கள், நான், சென்ற கிழமை சட்ட மன்றத்தில் கோபமாகப் பேசினேன் என்று குறைபட்டுக் கொள்கிறார்கள். கோபமும் கொதிப்பும் கூடாது என்று ஊருக்கெல்லாம் கூறிவிட்டு, இவர் மட்டும் ஆத்திரத்தைக் கக்கலாமா, கோபமாகப் பேசலாமா, என்று கேட்டனர்; அறிவேன்.

சிலர், உன்னிடமும் வந்து, இதனைக் கூறி இருக்கக்கூடும். எனவேதான், கோபப்படாத அண்ணன், கோபமாகப் பேசக் காரணம் என்ன என்று கூற எண்ணுகிறேன். என்ன பேசினேன் என்பதுதான், இதழ்களில் ஓரளவு வந்திருப்பதால், உனக்குத் தெரியுமே, என் கோபத்துக்குக் காரணம். நான் இகழப்பட்டதால் அல்ல; என்னை எவரேனும் ஏளனம் செய்ததால் அல்ல. அந்த மாதிரி நேரங்களில் நான், மரக்கட்டை, தம்பி! ஆமாம்!! ஆனால், நமது கழகத்தை மிகக் கேவலப்படுத்தும் முறையில், அமைச்சர் சுப்ரமணியம், சட்டமன்றத்தில் பேசினார். நிதிநிலை அறிக்கையும், தொழில்நிலை விளக்கமும், பொது நிலை அறிவிப்பும், புதுத்தொழில் துவக்கமும் ஆகியவைக் குறித்துப் பேச வேண்டிய மன்றத்தில், ஆட்சிப் பொறுப்பதனை ஏற்று, ஆற்றல் மிக்கவர்கள்,

அனுபவமிக்கவர்கள், ஈடு இணையற்றவர்கள், ஆளப்பிறந்தவர்கள், அவனி அறிந்தவர்கள் என்றெல்லாம் விருதுகளைச் சூட்டிக் கொண்டுள்ள விவேகிகள், நொந்து கிடக்கும் நமது கழகத் தோழர்களின் மனத்தை மேலும் புண் படுத்தும் முறையில், ஆணவத்தின் முகட்டினில் நின்றுகொண்டு, பழித்துப் பேசினர்.

உங்கள் யோக்கியதைதான், சந்தி சிரிக்கிறதே! என்று செப்பினாராம், கொங்கு நாட்டுக் கோமகன், கனம், சுப்ரமணியம், வெல்வெட் மெத்தையிலே சாய்ந்தபடி, விழியிலே கேலி வழிய, நமது தோழர்களைப் பார்த்தபடி.

கட்சிகளிலே எது கலகலத்துப் போய்க் கொண்டிருக்கிறது, எதிலே குழப்பம் மூண்டு கிடக்கிறது, உட்பகையும் உருக்குலைக்கும் சதியும் எங்கு புற்றரவுபோல் இருந்து

கொண்டிருக்கிறது, என்பது பற்றிய ஆய்வுரை நடத்த அல்ல, சட்டமன்றம் நடைபெறுவது. எந்த வரி, மக்களை எந்த வகையிலே தாக்கும்; என்ன தொழிலைத் துவக்கினால் மக்களுக்கு நன்மை பெருகும், என்ற இவை பற்றிய விளக்கம் அளிக்கச் சட்டமன்றம் நடைபெறுகிறது. போதை ஏறிய பூபதி, இருக்கையில் புரண்டபடி, எதிரில் தெரியும் எவரையும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடும் பான்மைபோல், எண்ணிக்கை என்பதன்றி ஏற்றம் உள்ளது என்றுரைக்க வேறேதும் இல்லாதார், இறுமாந்து கிடப்பதும், தொடர்பேதுமற்ற முறையில், நமது கழகத்தைப் பழித்துரைப்பதும் எற்றுக்கு?

இவர் ஒரு அறிஞரா? என்று கேட்டுவிட்டு, இடி இடி யெனச் சிரிக்கட்டும்; நான் கோபம் கொள்ளமாட்டேன்; பொருட்படுத்தக்கூட மாட்டேன். இந்தக் கழகத்தின் யோக்கியதை

தெரியாதா, சந்தி சிரிக்கிறதே! என்று கழகம் காண, கட்டிக் காத்திட, கலாம் எழாதபடி தடுத்திட, உழைத்து உயர்த்திட, ஊர் நலனுக்கு உகந்ததாக்கிடப், பாடுபட்டுக் கொண்டு வரும், நமது தோழர்களின் காதிலே நாராசம் பாய்ச்சுவதுபோல, ஏசுவதா - ஒரு அமைச்சர் - படித்தவர் - பண்பு அறிந்தவர் என்று பேசப்படுபவர்?

நான் கோபம் கொண்டேன் என்பது உண்மை; ஆனால், என் பொருட்டு எழுந்தல்ல அந்தக் கோபம்; உன்னையும் என்னையும் ஆளாக்கிவிட்டதும், இந்த அமைச்சர்களுக்கே கூட முன்பு எப்போதும் ஏற்படாத அளவு மதிப்பை, வலிவை, கவனிப்பை, மேய்ப்பை, தேய்ப்பைப் பெற்றுத் தருவதுமான கழகத்தைக் கேவலப்படுத்துகிறார்களே என்பதால் ஏற்பட்டது.

முட்டாளே! - என்று ஒருவன் சொன்னால்

ஏற்படக்கூடிய கோபத்தைவிட, முட்டாள்பய மகனே! என்றால், எழக்கூடிய கோபம் அதிகமாக அல்லவா இருக்கும்.

கழகத்தில் உள்ள தனிப்பட்டவர்களைத் தாழ்வாகப் பேசுவதைக் கூடத் தாங்கிக் கொள்ளலாம் - நாக்கு அப்படி ஆகி விட்டது, நாராசத்தில் பட்டுப்பட்டுக் கெட்டுக் கிடக்கிறது என்று எண்ணிக் கொண்டு இருந்துவிடலாம் - ஆனால், நம்முடைய கூட்டு முயற்சி, குலக்கொழுந்து, மரபு காத்திடும் மாவீரர் மன்றம், விடுதலை வீரரின் பாசறை என்ற நிலைபெற்றுத் திகழும், கழகத்தைத் தரக்குறைவாகப் பேசுவது, அதைக் கேட்டுக் கொண்டு, நாம் வாளா இருப்பது என்றால், அமைச்சர், நம்மை என்ன அவ்வளவு உணர்ச்சியற்ற உதவாக்கரைகளாகவா கருதி விட்டார். எதனால்? நம்மிடையே, வெளியே தெரியும்படி கிளம்பிய, சில கருத்து

வேற்றுமைகள் காரணமாகவா? இதுவா அமைச்சருக்கு, இத்துணைத் துணிவினைத் தருவது? நாமே நடந்துவிட்டதை எண்ணி எண்ணி, நெஞ்சு நெக்குருகிக் கிடக்கிறோம் - மற்ற எந்தக் கட்சிகளிலும் மாடுபிடி சண்டை வரலாம், மண்டை உடையும் அமளி நடக்கலாம். கழுத்தறுப்பு வேலைகள் நடக்கலாம்; கல்லைத் தூக்கி மண்டையில் போட்டிடும் பாதகம் நடைபெறலாம் - அவை சமூகத்தை, நாட்டை, இனத்தை, மரபைப் பாதிக்காது; பங்குச் சண்டை என்று மக்கள் பரிகாசம் செய்வதோடு விட்டுவிடுவர் - நமது கழகம் அப்படிப்பட்டதல்ல - இது ஏழையின் இல்லத்துக்கு ஒளி அளிக்கும் அழகு மகள்போல இருக்கிறது; இருள் சூழ்ந்த நெடுவழி கடக்கக் கிடைத்திட்ட அகல்விளக்காக இருக்கிறது; சோர்ந்து போனவன், கடுவழி சென்றிடப் பயன்படும் ஊன்றுகோலாக இருக்கிறது; இதற்கு ஒரு

ஊறு நேரிட்டால், இதிலே ஒரு குலைவு ஏற்பட்டால், அது நாட்டுக்குப் பேரிடியாகும்; விடுதலை முயற்சிக்குப் பெரியதோர் விபத்தாகிப் போகும் என்று எண்ணி எண்ணி, மனம் குமுறிக் கிடக்கிறோம்; இதனை அறிந்திட ஆற்றலற்று, உணர்ந்திடும் அளவு மனிதத் தன்மையற்றுச், சந்தி சிரிக்கிறது என்றா கேபேசுவது - இதுவோ அமைச்சரின் கடமை!

”மூட மகனே! மொழியொணா வார்த்தையினைக்

கேடுவால் அறியாய் கீழ்மை யினாற் சொல்லிவிட்டாய்

புள்ளிச் சிறுமான் புலியைப்

பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்போல். . .

என்னவோ பேசிவிட்டீர் அமைச்சரே! என்று கூறக்கூட நம்மில் எவரும் எழமாட்டார்கள் என்று எண்ணிக்கொண்டாரோ? பாரதியார் ஆக்கித்தந்த பாஞ்சாலி சபதத்தைத்தான் அவரும் பார்த்ததும் இல்லை போலும்? பாரெல்லாம் தன் அடியில் படுத்துக்கிடப்பதுபோல், பண்பெல்லாம் தம்மடியில், அடப்பத்தில் அடக்கிப் போட்டிருப்பதுபோல், கட்டிப்போட்ட வேங்கைமீது கல்வீசிக் கைகொட்டிச் சிரித்திடும் ஓர் பித்துப் பிள்ளை விளையாட்டினை ஓர் வீரச் செயலெனக் கொண்டவர் போலாகிப் பேசிவிட்டார் சுடுசொல்; வீசிவிட்டார் இழிசொல். -

கேட்டவர் இருக்கின்றார்; நாட்டவர்க்கு உரைக்கின்றோம்.

தம்பி! கழகத்தின் போக்குப்பற்றிச் சந்தி சிரிக்கிறது என்று அமைச்சர் செப்பிக் கிடந்தபோது, அவரை அமைச்சராக்கி வைத்த அரும் காங்கிரசு உள்ள நிலை யாது என்பதனை எவரே அறியாதார்! பாஞ்சால நாட்டினிலே, படுகளமான நிலை! பண்டித நேருவின் தொட்டிலெனக் கூறிடலாம், பாரத அரசுக்கே சூத்திரதாரி எனப் பட்டம்பெற்று விளங்கும், உத்தரப் பிரதேசம்; ஆங்கு கொள்கையால் வந்ததல்ல, செயல்முறைக்கு ஏற்ற ஒரு திட்டம் எதுவென்று பேசிவந்ததாலல்ல, மந்திரியாய் இருந்திடவே, யார் வாய்ப்புப் பெறுவது? உனக்கா? எனக்கா? என்று ஒரு கை பார்த்திடலாம். உன் பக்கம் உள்ளவர் யார்? உமக்குள்ள கருவி எது? உடனே உரைத்திடுக! காலம்,

களம், குறிப்போம்! மாண்டவர்போக மீதம் உள்ளவர்களே, உத்தரப் பிரதேசத்து ஆட்சி!! - என்று கூறியன்றோ, இருதரப்பும் மோதிற்று. சென்று சென்று வந்தாரே, செயல் வீரர், நேரு பிரான், கண்ட பலன் என்ன? கலாம் தீர்த்துவைத்தாரோ? கைகொட்டிச் சிரிக்காதார் எவர் உண்டு, அறியோமா? போனவர் போகட்டும், புதியவர் ஆளட்டும்; ஆள்மாறி விட்டாலும், அனைவருமே கதர் அணிவோர்; ஆகவே, அவருக்கும் ஆதரவு தந்திடுவோம் - என்றா கூறினர் ஆங்குள்ள காங்கிரசார். இன்னும் எத்தனை நாள்? பார்த்தேவிடுகின்றோம்! இது குறித்துப் பண்டிதர்தான் எது கூறி நின்றாலும், எமக்குக் கவலை இல்லை! எம்மை இம்சித்தார் தம்மை விடமாட்டோம்! இஃதே எமக்கின்று தேசியம், ஆமாம்? என்று சம்பூர்ணானந்தர் சாற்றுகின்றார்; அது கேட்டுக், குப்தா

கூட்டத்தார் குலை நடுக்கம் கொள்கின்றார்; இருதரப்பும் எழுப்பிடும் இரைச்சலைக் கேட்டன்றோ, இனி நாம் இருந்து இதனைத் தாங்குவதும் இயலாதென்று, முதுபெரும் கிழவர், காங்கிரஸ் மூலவரில் முந்தியவர், கோவிந்த வல்லப பந்தும் உயிர் நீத்தார்! ஒன்றல்ல இரண்டல்ல, உள்ள ஓட்டைகள்! எங்கும் உடைப்பு, விரிசல்; காழ்ப்பு, கலாம்; அறிக்கை, மறுப்பு; ஆள் பிடித்தல், கோள் மூட்டல்; ஆந்திரம் விலக்கில்லை; மைசூர் பெரும் தொல்லை; என்ற நிலை காண்போர், என்ன செய்கின்றார் என்று, எம்மை இழிமொழியால் ஏசிய அம் மந்திரியார் கிஞ்சித்தேனும் எண்ணிப் பார்த்தாரா; அவர் அறிவு ஏனோ அதுசமயம் அவர்க்குத் துணை செய்யவில்லை.

சந்தி சிரித்ததென்றார்; தன் முதுகுப் புண்ணதனைத் தான் காணாதான்,

மற்றொருவன் முகம் தன்னில் இருந்திட்ட மாசு, மருவு, தான் கண்டு! ஏளனம் செய்தது போல.

ஏன் அமைச்சர் அதுபோல ஏளனம் செய்தார் என்று சிறிது நாம், தம்பி! சீர்தூக்கிப் பார்த்திட்டால், சிந்தை தெளிவதுடன், சிறப்பான புதுப்பாடம், கண்டு பயன் பெறலாம்; கருத்துக் கருவூலம்.

கோபம் எழவே தான் அன்று, கோலோச்சுபவர் எனினும், கொடுமைக் கணைகள் தமை என் மீது வீசிடவும் அதிகாரம் கொண்டவர்கள்தான் எனினும், மனதிற்பட்டதனைக் கூறாது இருந்திடுதல், மரபுக்கு அழகல்ல என்பதனால், "எதிர்வீட்டுப் பலகணியை எட்டிப் பார்த்திடும் போக்கு நல்லதல்ல. அமைச்சரே! விட்டுவிடும் அச் செயலை' என்று கூறிவிட்டேன்.

கோபம் குறைந்ததா? என்று கேட்கின்றாய், தம்பி! ஆமாம், அது உண்மை. ஆனால் சோகமன்றோ, வந்தென்னைத் துளைக்குதடா, தம்பி! எதனாலே எவரெவரோ, ஏசுகிறார் நம்மை? எண்ணிப் பார்த்தனையா, இதற்கான காரணத்தை? சின்னத்தனமாக நாம் நடந்து கொண்டோமா? இல்லை! எவரும் எண்ணிப் பார்த்திடக் கூசும் விதமான, நாட்டு விடுதலை எனும் திட்டம், நமது என்று கூறிவிட்டோம். பத்து நாள் பேசுவர், புளித்துப் போகும் அவர்க்கே, பிறகு பக்கம் வந்து நிற்பர், பராக்குக் கூறிப் பிழைப்பர், என்றுதான், நம்மைப் பற்றி மாற்றார் முதலில் கணக்கிட்டனர். இளைஞர் பெரும்பாலும், இல்லாதார் எல்லோரும், இவர்கள் எத்தனை நாள், என் நாடு! என் அரசு! என்றெல்லாம் பேசுவர்; எவர் கேட்பர் இவர் உரையை! நாடு, இவர் பக்கம் நாட்டம் செலுத்தாது. வீடோ,

வறுமைக் கூடம்! என் செய்வர்? இவரெல்லாம், பிழை பொறுப்பீர், ஐயன்மீர்! வழி அறியாமல் சென்றோம். வதைபட்டோம்; ஏதோ சிறு பதவி எமக்கென்று அளித்துவிட்டால், இவர்போல் இத்துறையில் எவர் உண்டு! என்று ஏத்தித் தொழுது கிடக்கின்றோம், தொல்லை எம்மால் வராது! என்று நாம் கூறிடுவோம், எதிர்ப்பு ஏதும் இருக்காது என்றுதான் எண்ணிக் கிடந்தார்கள்; இந்த அமைச்சரெல்லாம் காத்திருந்து பார்த்தார்கள்; காரியம் பலிக்கவில்லை; கடுங்காற்றுபோல் கழகம் கொள்கை பரப்பிற்று. காணாரும் கால் முடமானாரும், கடுகி நடந்துவந்து, கனிவுடனே பார்த்து, நம்மை, கழகம் சேர்ந்திடுவோம், மீட்டிடுவோம் நம் நாடு! என்று கூறலுற்றார். ஏதேது, இக்கழகம், காளான்போல் பூத்துக் கடுகி அழியுமென்று எண்ணி ஏமாந்தோம் - ஆல்போல் தழைத்திடும் என்று அச்சம்

கொண்டிடத்தக்க விதமாகக் கழகமது வளருவது, ஆபத்து எனவே, இதனை அழித்திட, நாம் எப்பாடு பட்டேனும், முனைந்திடுதல் முதல் வேலை! - என்று பேசி நின்றார். அந்த வேளையினில், நமக்குள் ஐயப்பாடுகள் எழ, அமளியாக இது வடிவெடுக்கும் என்பது பல்விளக்கிக் கிடந்தார்கள், பகை முடித்து, நம்மை ஒழித்து, பசி தீர்த்துக் கொள்ளலாம் என்ற நப்பாசை கொண்டவர்கள். கழகம் என்ன, கூளமா காற்றினில் பறந்து போக? எண்ணப் பிணைப்பு! இதயக் கூட்டு! வண்ணக் கலவை! எனவே, பேதம் என்பது ஏதுமில்லை, என்று அறிவித்துவிட்டது அணிவகுப்பு. இதனால் வந்த ஏமாற்றம், அமைச்சரை அதுபோலப் பேச வைத்தது.

எனவே தம்பி! அமைச்சருக்கும், அவர் போன்றாருக்கும் அறைகூவலாக, நமது கழகம் நிலைத்து நிற்பது மட்டுமல்ல,

ஓங்கி வளர வேண்டுமே, அதற்கு ஆவன செய்திட, நாம், நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டாமா என்பதனை எண்ணும் போதுதான், சோகம் கப்பிய நிலை என்றேன் நான்.

நீ எப்போதும் இப்படித்தான் அண்ணா! எத்துணை வெற்றிகளை நான் பெற்றளித்துக் காட்டினாலும், இதுதானா? என்று கேட்பதும், இன்னும் உளதோ ஏராளம்; செய்திட, உன்னால் முடியுமா? என்று உசுப்பி விடுவதுமே உன் வாடிக்கை, நான் அறிவேன்! - என்றுதானே தம்பி, கூற எண்ணுகிறாய். நானறிவேன், உனை நன்றாய், நம்பிக்கைக் குறைவல்ல, நான் பேசும் காரணம். நமக்குள்ளே கலாம் வந்து நாசமாய்ப் போவோம் என்று எண்ணினவர் ஏமாந்துபோனதாலே; இனி நம்மைத் தாக்குவதில், முறை என்ன? நெறி யாது?

என்று கூட எண்ணாமல், அழிப்பதற்கு என்னென்ன உண்டோ அவ்வளவும் அவிழ்த்துவிட்டு, ஆர்ப்பரிப்பார். அவைதமைத் தாங்கிடவும், அறநெறியை அப்போதும் காத்திடவும், நாம் முனைந்து நிற்கவேண்டும். அச்சம் கொண்டிட ஒரு அணுவளவும் காரணமில்லை. மச்சுமீதேறி நிற்போர், மேலோர் ஆகார்; தரையினிலே நாம் நின்றால், தரம் குறைவு என்றாகாது.

சந்தி சிரிப்பதாகச் சாற்றினாரே, அமைச்சர்! தம்பி! அவர் தம் கட்சியிலே உள்ள நிலை, அங்காடியில் இன்று அடிபடுவது, அறிவேன் நான்.

இன்று அங்கு, மண்டலக் காங்கிரசுக்கும், இளைஞர் காங்கிரசுக்கும், மடிபிடிச் சண்டை.

நடமாட வக்கின்றி, நாவசைக்க அறியாமல், கிடந்தார் இப்பெரியோர்கள், தலைவர்களாய்;

அவ்வேளை நாங்கள் கிளம்பி வந்தோம், நாப்பறையால் நாடதனில் கட்சி வளர்த் திட்டோம்; காங்கிரசுக்குக் கிழப்பருவம், கண் மங்கி, வாய் குளறி, ஈளை கட்டி, இருமி இழுத்துக் கிடக்குது என்ற பேச்சை மாய்த்திட்டோம், இளைஞர் காங்கிரசதனால்! புது இரத்தம் எம்மாலே! புது முறுக்கு! எமது பணி - என்ற எக்காளம், எழுப்பினர் இளைஞர் காங்கிரசார், குற்றாலத்தில் கூடிக், கொடி நாட்டிக் கூட்டம் சேர்த்து.

அதனை நாம் மறுத்தோமா? ஆமாம், உமது ஆற்றல் தன்னால், ஆங்காங்கு அடிதடியும் அமளியும்தான் என்றாலும் பேச்சுக்கு வழிகோலிப் பெருந்தொண்டு செய்துள்ளீர், பாராட்டு, நன்றி - வேறு என்ன கைம்மாறு? என்று பெருந் தலைவர்கள் பேசிடவே, கொதித்தது கோபம், தடித்தன வார்த்தைகள்.

என்னதான் உள்ள குறை, எடுத்துக்

கூறிடுக! என்று கேட்டிடவே, இளைஞர் காங்கிரசார், கூறலுற்றார்:

அடுத்து வருகின்ற பொதுத் தேர்தலுக்கு, யாரை எங்கெங்கு நிறுத்துவது என்பதனை, யாரோ சில பேர்கள் கூடி முடிவு செய்தால், கேடாகத்தான் போகும்; அந்தக் காரியத்தை அருமையாகச் செய்யும் ஆற்றல், எமக்குண்டு, அறிந்திடுவீர் - என்று கூறினார், இடித்துரைக்கும் போக்குடனே.

பிள்ளைகளா! இது கேளும்! பெரியவர்கள் பார்த்துச் செய்வது, இந்தத் தேர்தல் வேலை - பேச்சாலே, தேர்தலிலே பெரும் வெற்றி கிடைக்குமென்று, எண்ணாதீர் - தவறாகும். எங்கெங்கு எவரெவருக்கு என்னென்ன விதமான செல்வாக்கு என்பதனைக் கண்டறிந்து, இடம் கொடுக்கத் திறம் வேண்டும் - தனித்திறமை! மேடை பல ஏறிவிட்டால், கூடி விடுவதல்ல அந்தத் திறமை. அதற்கே

மெத்த முறையுடனே அமைத்துள்ளோம் மண்டலக் காங்கிரஸ். மேதா விலாசம் உண்டு, மேட்டுக் குடியினர் உண்டு, இரும்புப் பெட்டி உண்டு, கரும்புத் தோட்டம் உண்டு, வடபாதி மங்கலத்தார், வலங்கைமான் உறைவார், பூண்டிப்பதிமேவும் வாண்டையார், வானூரார். கானூரார், வகை வகையாய் நாம் அறிவோம். அவரெல்லாம் சேர்ந்ததுதான், மண்டலக் காங்கிரசு. அதுதான், ஆள் பொறுக்கும்; அறிவிக்கும் வேலை உமக்கு - என்று தலைவர்கள் கூறிடவே, இளைஞர் காங்கிரசார் எரிச்சல் மிகக் கொண்டு! இதுதான் முறை என்றால், எமக்கு இங்கு வேலை அல்லை; மண்டலமோ கமண்டலமோ, எதுவானால் எமக்கென்ன, என்றனராம் கோபம் மிகக் கொண்டு.

இதுமட்டுந்தானா? சென்னை செங்கற்பட்டு, தென் ஆற்காடு தன்னுடனே

வடஆற்காடும், எந்தன் வசம் விட்டுவிடும் என்று, வேளாண்குடிப் பெரியோன், அமைச்சர் பதவிக்கென்றே தம்மை அர்ப்பணித்துவிட்ட, சமயோசிதம் தர்மம் என்ற பக்குவம் மிக உணர்ந்த பக்தவத்சலனார் கூற; நானிருப்பது அங்கு; நாயகராக வேறு ஒருவர் வருவதுதான், நல்லதோ, நாடாளும் நண்பரே! கூறும் என்று, மனம் குமுறிக் கேட்கின்றார் மாணிக்கவேலர்! ஓ! ஓ! இவர் என்ன வடாற்காட்டில், "பட்டாமணியமா' பொய்! பொய்! கூட்டுறவுத் துறை மூலம் நானே அங்கு காட்டிடுவேன் என் வலிவை! என்னிடம்தான் வடாற்காடு இருந்திடவேண்டும் என்று இயம்புகிறார், மற்றோர் பக்தவத்சலனார்.

எவர் என்ன கேட்டாலும், இது கேளும், என் தலைவா! இராமன் உள்ள இடம் அயோத்தியாம் என்பார்கள்; அரிசனங்கள் உள்ள இடம், அடியேனுக்கு அரசு அன்றோ!

அங்கு ஆகும் முறை அனைத்தையும் நான் கூற, அருள் கூர்ந்து உரிமைதனைத் தந்திடுவீர் இன்றே! - என்று கனம் கக்கன் கேட்கின்றார்; காமராஜர் கலங்க.

தென் ஆற்காடதனில், திக்குக்கொரு தலைவர், நானில்லா விட்டால், சிதம்பரம், நமக்கேது, கழகம்தான்! - என்று பேசிப் பதவி கேட்கும் பெரியார் சாமிக்கண்ணு.

நேற்று இவர் வந்தார், நெருக்கடியில் நான் இருந்தேன் - சோற்றுப் பானைக்குள்ளே ஏதேதோ வந்து விழும்! நானன்றோ எந்நாளும், உங்கள் பக்கம் என்று சொந்தம் கொண்டாடி நிற்கும், சீனுவாசர் மற்றோர் பக்கம்.

ஊர் கூட்டிப் பயன் என்ன? சேரிகள் சேர்ந்தாலன்றித், தேர்தலில் வெற்றி ஏது? சேரிகளிலே, யார் உள்ளார். என்னைப் பின்பற்றாதார்! எங்கோ நெடுந்தொலைவில்

எனை அனுப்பி வைத்துவிட்டு, இங்கு எவரெவரோ குதியாட்டம் போடுவதா? இம்முறை என் இன மக்கள், இதை ஒப்பார் - அறிந்திடுமின்! அமைச்சர் ஆகத்தக்க அருகதை எனக்கு என்று, அறிவித்தா லன்றித், தேர்தல் ஆபத்தாய் முடியுமென்று இடிமுழக்கம் எழுப்புகின்றார், இளைய பெருமாள்.

இவரைச் சாய்த்திடவல்ல வலிவு எனக்குண்டு! கடைக் கண்ணைக் காட்டி என்னை கைத்தூக்கி விடுவரேல், காற்றாய்ப் பறந்துவிடும், கக்கனுக்கு எழும் எதிர்ப்பு, என்று பேசுகிறார், சிவசுப்பிரமணியப் பெயரார்.

இந்நிலையில், இருப்பதுதான் என்றாகிவிட்டால், என்னைத் தலைமையாகக் கொண்ட இனம், சுதந்திரம் ஆகிப் போகும்! எனவே எனக்கென்ன? அதனைக் கூறும் - இதுபோல் வேறு இடத்திலிருந்தும் வந்தவண்ணம் இருக்கிறது பேரம் - என்று

வெங்கடகிருஷ்ணா ரெட்டியார் பேசுகிறார், பிறிதோர் பக்கம்.

இது அல்ல பிரச்சினை - நானோ தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குத் தலைவன்! நாடோ, நாடார்! நாடார்! என்று நாடுவது, அவரையன்றோ. காமராஜருக்குக் கட்டியங் கூறத்தானா, நான் உள்ளேன் செச்சே! இஃது நான் ஒப்ப முடியாத பிச்சைப் பிழைப்பு ஆகும். நாடாளத் தக்கவர்கள், பட்டியலை நான் தருவேன்! அவரே தேர்தலில் ஈடுபட வேண்டும். அதனை நாடாளும் காமராஜர் நன்றாய் அறிந்திடவேண்டும். ஏறுமாறாக இவர் நடந்திடத் துணிவாரேல். எனக்கா, இவருக்கா, நேருவிடம் செல்வாக்கு என்பதனைப் பார்த்தே விடுகின்றேன், பயம் என்ன? என்று பக்கம் நிற்போரிடம் பக்குவமும் மறந்து, அழகேசனார் பேசி, அகலக் கடைகின்றாராம்.

இத்தனையும், புல்தரையில்

படுத்துறங்கும் பாம்புபோல!

படமெடுத்து ஆடுவதும், தீண்டித் தீர்த்துக் கட்டுவதும் அடுத்த படலம் என்று அறிந்தோர் உரைக்கின்றார்.

ஆகவே தம்பி! அங்கொன்றும் வாழவில்லை - அஞ்சாது பணியாற்று!

பதவிக்காக அவர்கள்; பண்பு காத்திட நாம்!

மந்திரிகளாகிவிட மார் உடையப் பாடுபடும், மகானுபாவர், அவர்; மரபு காத்திடும் மாவீரர் வரிசையிலே உள்ளோம் நாம்.

இலட்சங்கள் எம்மிடத்தில் என்கின்றார் அவர்!

இலட்சியமே எமக்குள்ள அணிகலனும், படைக்கலனும் என்கிறோம் நாம்!

அமைச்சுக் கேட்போர் அவர்; அரசு கேட்போர், நாம்!

நம்மை அவர்கள் பழிக்கின்றார்; நாடோ நம்மிடம் பரிவு காட்டுகிறது!

சந்தி சிரித்தது என்றார் அமைச்சர்! நெஞ்சில் இதனைக் கொள் - அந்தப் பழி துடைத்திடப், பகை அழித்திட ஏறுநடை யுடையோனே! எங்கே காட்டு, உன் திறம்!!

வீடெல்லாம் அறிந்திடச் செய், இவர்தம் ஆட்சியால் வந்திட்ட கேடெல்லாம்!

மாடாய் உழைத்து ஓடாய்ப்போனார் மக்கள் என்பதை, மனைதொறும் மனைதொறும் எடுத்துரைத்திடு!

சிங்களச் சீமையிலே செத்திடும் தமிழர் பற்றிச் சிறுவிரலும் அசைக்காத செருக்குக் காணீர் என்று கூறு!

வடக்குக்கு அடிமைப்பட்டு, வாழ்விழந்த தமிழர்களை மேலும் வாட்டி வதைத்திடும் வஞ்சகத்தை விளக்கு நன்றாய்!

சந்தி சிரித்தது, என்றார் அமைச்சர்! தம்பி! உன் பணியால் வீடுதோறும் உள்ளவர்கள், வீழ்த்திடுவோம், வீணராட்சி என்று வீறுகொண்டு எழுந்திடக் காணல் வேண்டும்.

அறம்போன்ற கூர்வாளை, அவனி அறிந்ததில்லை. அஃது நம் கரத்தில் - அச்சம் ஏன், இனி நமக்கு?

சிரித்தாராம்! சிரிக்கட்டும்! இரத்தம் இன்று சிந்திடுவோர் நாம் - ஓர் நாள் வெற்றிப் புன்னகை புரிந்திடுவோம், திருவிடத்தை விடுவிப்போம்.

அதுவரையில், செருக்கு மிக்கோர், சிரிக்கட்டும்; வெட்கமே வேலாகி நம் விலாவைக் குத்தட்டும்; வெற்றி எட்டுத் திக்கும் என்று முரசு கொட்டிய இனம், வீறு கொண்டெழுந்து, விடுதலை காணட்டும்;

திராவிடம் மலரட்டும். அப்போது நாம், இன்றைய மாற்றார்களைக் கண்டுகூட, ஏளனச் சிரிப்புச் சிரித்திட மாட்டோம். இன்பத் திராவிடத்தில், பூவையாள் ஈன்றெடுத்த பொற்கொடி, பூங்காவில் துள்ளி விளையாடி, மல்லிகைக் கொடியைத் தூக்கி மாதாவின்மீது வீசும், பாம்போ என்று அன்னை மருளக் கண்டு கைகொட்டிச் சிரித்திடும் - காண்போம்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

19-3-1961

35. கைராட்டை காவேரி (1)

காங்கிரஸ் தொண்டன் காவேரியும் கட்சியின் ஊழலும் -

வெள்ளையன் சென்றபின் நாட்டின் நிலை

தம்பி!

மங்கியதோர் நிலவினிலே, வெண் மணலில் அமர்ந்து கொண்டு, கொந்தளித்துக்கொண்டிருந்த கடலை ஒரு அலட்சியப் புன்னகையுடன் நோக்கினான் - கைராட்டை காவேரி. காவேரி என்ற பெயர், வழக்கமாகப் பெண்களுக்குத்தான் வைப்பார்கள் என்றாலும், தமக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு பிறந்த குழந்தைக்குச் செல்லமாக இந்தப் பெயரிட்டு வளர்த்தனர், பெற்றோர். கைராட்டை என்ற அடைமொழியைக் காவேரி, கடினமான

உழைப்பிற்குப் பிறகு பெற்றான். கைராட்டை காவேரி தூய உள்ளம் கொண்ட காங்கிரஸ் தொண்டன் என்று நான் கூறியதிலிருந்தும், திங்களைக் கண்டு மகிழாமல், கடலின் கொந்தளிப்பைப் பார்த்த வண்ணம் இருந்தான் என்று குறிப்பிட்டதிலிருந்தும், கைராட்டை காவேரி, தனியாகத்தான் உட்கார்ந்திருந்தான், என்பதைத் தெரிந்து கொண்டிருப்பாய்.

காங்கிரஸ் கட்சி, நாட்டு விடுதலைக்கான போர்ப்பரணி எழுப்பிக் கொண்டிருந்த நாட்களில், காவேரி, தன்னுடைய நலன், எதிர்காலம், என்பவைக் குறித்துத் துளியும் எண்ணிப் பார்க்க முடியுமா! தேசிய ஆர்வத்தால் ஈர்க்கப்பட்டுக், காங்கிரஸ் தொண்டாற்றக் கிளம்பி, தொல்லைகளைத் தாங்கிக் கொண்டான்; தூய உள்ளத்தோடு பணியாற்றினான்; சுற்று வட்டாரத்தில்

இருந்தோர், சுற்றத்தார், காவேரியைத் துவக்கத்திலே ஏளனம் செய்து பார்த்தனர்; பிறகோ அவனுடைய அறிவாற்றலைப் பாராட்டினர்; அளவளாவினர்; அவனை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டுமென்று மற்றவர்க்கு அறிவுரைகூடக் கூறினர்.

காவேரி, மற்றப் பணிகள் எல்லாவற்றையும்விடக் கைராட்டையை அனைவரும் புனிதப் பொருளாகக் கருத வேண்டும், நூற்பது தமது தலையாய கடமை என்று கொள்ள வேண்டும்; கதர் அணிவது தர்மம் என்று உறுதிகொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறித், தன் வட்டார முழுவதிலும் கைராட்டையைப் பரப்பும் பணியினை மிகத் திறம்பட, அதிக ஆர்வத்தோடு செய்து வந்ததன் காரணமாகத்தான், கைராட்டைக் காவேரி என்ற பெயர் கிடைத்தது. கடற்கரை மணலிலே அமர்ந்திருந்தபோது, அவன்

மனம் அந்தப் பழைய நாட்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளின்மீது பாய்ந்து சென்றது; உள்ளத்தில் அடிவாரத்தில் இருந்த நினைவுகள் துள்ளித் துள்ளி வெளிப்புறம் வருவதும், மீண்டும் அடிவாரம் செல்வதுமான நிலைமை - மனக்கடலிலே கொந்தளிப்பு. அவன் கைராட்டைக் காவேரியானபோது, கோட்டையிலே, அவன் விரும்பிய கொடி பறக்கவில்லை! இப்போது பறந்து கொண்டிருந்தது - பாவாணர் கூறினாரல்லவா, பட்டொளி வீசிப் பறந்திடக் காணீர் என்று, அதுபோல.

அதைக் கண்டு, அவன் மனத்தில் மகிழ்ச்சி அல்லவா பொங்கி இருக்க வேண்டும் - எண்ணம் ஈடேறிவிட்டது - விடுதலை கிடைத்துவிட்டது - புதுவாழ்வு பிறந்துவிட்டது - பொற்காலம் ஆரம்பமாகிவிட்டது - புனிதப் போரில் வெற்றி கொண்டாகிவிட்டது

- என்றெல்லாமல்லவா, எண்ணிக் களிப்படைந்திருக்க வேண்டும், என்று கேட்கிறாய். அப்படித் தான் கேட்கத் தோன்றும். பலர் காவேரியை அப்படித்தான் கேட்கிறார்கள். ஆனால், கைராட்டைக் காவேரியின் மனதில் கோபம், ஏமாற்றம், திகைப்பு, துக்கம், வெட்கம் என்பவைகள் தான் கொந்தளித்துக் கொண்டிருந்தன - கடலில் முத்து இருக்கத் தான் செய்கிறது, ஆனால் எல்லா இடத்திலுமா!

- இல்லையல்லவா? சுறாவும், அதற்கு இரையாகும் வேறு மீனினமும், பாம்பும், வேறு பல நச்சுப் பூச்சிகளும் நிரம்ப இருக்கின்றன. காவேரி, இதைக் கூட எண்ணிப் பார்த்தான் - முத்து எடுக்க மூச்சடக்கிக், கத்தும் கடலடிச் சென்றவன், கரத்தில் சிக்கியது சிப்பி என்றெண்ணி எடுத்துவந்து உடைத்துப் பார்க்கும்போது, முத்து இருக்க வேண்டிய இடத்திலிருந்து சிறியதோர் நாகம் சீறிக்

கிளம்பிடக் கண்டால் எப்படி இருக்கும் நிலைமை - என்று எண்ணினான் - ஓவென்று உரக்கச் சிரிக்கலாம் போலத் தோன்றிற்று; அடக்கிக் கொண்டான். அங்கு வேறு பலர் வெவ்வேறு நிலையில் சிரிப்பொலி கிளப்பியபடி இருந்தனர்; அவர்கள் அறிவார்களா இவன் மனக் கொந்தளிப்பை!

"ஐயா! சூடா பட்டாணி, கடலை, வேர்க்கடலை!'' - என்று சேதிகூறும் முறையிலே, குரலெழுப்பியபடி, கூடைக்காரன் வந்தான்; காவேரி, வேண்டுமென்றும் சொல்லவில்லை, வேண்டாமென்றும் கூறவில்லை; அவனால் வேறு முக்கியமான விஷயங்களிலேயே, வேண்டும்! அல்லது வேண்டாம்! - என்று கூறமுடியவில்லையே, பாபம் கூடைக்காரன், காவேரி எதிரே, உட்கார்ந்தான், குத்துக்காலிட்டபடி. அந்த மணற்பரப்பில், நடந்து நடந்து

அலுத்துப்போனவன் - ஆகவே இளைப்பாறிக் கொள்ளலாம் என்ற நினைப்பு. உட்கார்ந்தவன், காவேரியின் முகத்தைப் பார்த்ததும், அடையாளம் கண்டுபிடித்து விட்டான்.”நீங்களா! கைராட்டை காவேரி அண்ணன்தானே, அண்ணேன், எப்படி இருக்கறிங்க. . . உங்களுக்கு என்ன அண்ணேன், குறை! உங்க இராஜ்யம்தானே இப்ப நடக்குது. . . இப்பத்தான், உங்க மனம் குளிர்ந்திருக்கும்; கொடி பறக்குதே கோட்டையிலே!'' - என்று, கேலியாக அல்ல, கள்ளங்கபடமற்ற முறையிலே, பேசினான் கூடைக்காரன். கைராட்டை காவேரி தலையைக் கவிழ்த்துக்கொண்டான். காரணம் புரியவில்லை கூடைக்காரனுக்கு.

“அண்ணேன்! முன்னே மாதிரிதானே கைராட்டினமும் கையுமா இருக்கறிங்க. முன்னேயெல்லாம் உங்க பேச்சைக்

கேட்காதவங்களெல்லாங்கூட, இப்ப, கைராட்டினம் சுத்துவாங்களே. . . உங்க இராஜாங்கம்தானே நடக்குது'' என்று கூடைக்காரன் பேசிக் கொண்டே போனான். அந்தப் பேச்சு. காவேரிக்கு மெத்த வேதனையாக இருந்தது. ஏனென்றால் அன்று காலைப் பத்திரிகையிலேதான், மிகப் பெரிய காங்கிரஸ் தலைவர், தான் இப்போது, கைராட்டை சுற்றுவதில்லை என்று தெரிவித்தது போடப்பட்டிருந்தது. அதைப் படிக்கும்போதே, கைராட்டை காவேரிக்குக் கோபம் கோபமாக வந்தது. பாவி மனுஷன் இப்படி மானத்தை வாங்குகிறானே! சுற்றாவிட்டால் கூடப் போகிறது, இதை நாலுபேருக்குத் தெரிகிறபடி பேசித் தொலைக்கத்தான் வேண்டுமா?'' என்று எண்ணிக் கொதித்தான். ஆனால், மறுகணம், கோபம் மாறி விட்டது.”இந்த

ஆசாமி, பெரிய மனிதன், குற்றத்தை ஒப்புக்கொண்டு பேசுகிறான். மற்றவர்கள், இதைக்கூடச் செய்வதில்லையே! இன்னமும் ஊரை ஏமாற்றிக் கொண்டல்லவா இருக்கிறார்கள். அவர்களை விட இந்த ஆசாமி எவ்வளவோ மேல், என்று எண்ணிக்கொண்டான். கூடைக்காரனிடம் வேறு விதமாகப் பேச்சைத் திருப்பி விட்டாலொழியத் தன்னுடைய வேதனையை அதிகமாக்கும் விதமாகத்தான் அவன் எதையாவது பேசிக்கொண்டிருப்பான் என்ற எண்ணத்தில், காவேரி, கூடைக்காரனைப் பார்த்து, "ஆமாமப்பா! நீ ஏன் கிராமத்தை விட்டு, இங்குவந்து சேர்ந்தே, கெட்டவன் பட்டணம் போவான் என்பார்களே, ஊரோடு உற்றார் உறவினரோடு, காடு கரம்பைக் கவனித்துக்கொண்டு, கிடைக்கும் கஞ்சித்தண்ணியைக் குடித்துக்கொண்டு,

குழந்தை குட்டிகளைப் பார்த்துக் கொண்டு, நிம்மதியாக இருப்பதை விட்டுவிட்டு, இப்படி, பட்டணத்துக்கு வந்து, கூடை சுமந்து கொண்டு, கூவிப் பிழைக்க வந்துவிட்டாயே, ஏன்?'' என்று கேட்டான் காவேரி.

"என்னைக் கேக்கறியே அண்ணேன், உங்க இராஜாங்கத்தை நடத்துகிறவங்களையல்லவா கேட்கவேணும்'' என்று ஒரு போடு போட்டான், கூடைக்காரன். காவேரி, இரண்டொரு நாட்களுக்கு முன்புதான் படித்தான், சட்டசபையிலே காங்கிரஸ் அமைச்சர்,"கிராமத்து மக்கள் நகரத்துக்குச் சென்று விடுவது, வளர்ச்சிக்கு அறிகுறி - பொருளாதார முன்னேற்றத்துக்கு அடையாளம்'' என்று பேசியதை. அமைச்சர் பேசியது சரியானதுதான் என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தால், கிராமத்தைவிட்டு நகரத்துக்கு ஏன் வந்தாய், என்று

கூடைக்காரனைக் காவேரி கேட்டிருக்க முடியாதல்லவா? நல்ல வேளை, நம்முடைய அமைச்சர் பேசியது, இவனுக்குத் தெரிந்திருக்காது, இவன் எங்கே சட்டசபை நடவடிக்கைகளைப் படித்திருக்கப் போகிறான் என்று எண்ணிக் கொண்டான் காவேரி.

இருப்பிடம் கிராமமோ நகரமோ, இடம் அல்ல முக்கியம்; முன்பு இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும், வாழ்க்கையிலே முன்னேற்றம், தொழிலிலே முன்னேற்றம், நிம்மதி, வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்பதல்லவா முக்கியம். மாந்தோப்பாக இருந்தாலென்ன, புளியந்தோப்பாக இருந்தாலென்ன, காலா காலத்திலே காய்த்து, காய்த்தது நல்ல விலைக்கு விற்றுக் காசு கிடைத்து, வாழ்க்கையைச் செம்மைப்படுத்தினால் போதும் என்றுதானே எவரும் எண்ணுவார்கள். கூடைக்காரன்,

மண் வெட்டியும் கையுமாகத் திரிந்து, மடைதிருத்திக் கிராமத்திலே இருந்தபோது, கிடைத்த வாழ்க்கை நிம்மதியைக் காட்டிலும், பட்டணத்திலே பிழைக்க வந்ததால், சிறப்பான வாழ்க்கையா கிடைத்தது. அதுதானே இல்லை! இடம் மாறினான், இடர் மாறவில்லையே! தொழிலை மாற்றிக் கொண்டான், தொல்லை குறையக் காணோம்.

கைராட்டை காவேரிக்கு இது நன்றாகப் புரிகிறது; புரிவதால், அமைச்சர், இதைப்போய், வளர்ச்சியின் அறிகுறி என்கிறாரே, எவ்வளவு. . .! என்று எண்ணுகிறான்; என்ன கடினமான வார்த்தை பொருத்தமாக இருக்குமென்று எண்ணிப் பார்த்துப் பார்த்து, மனதிற்குள்ளாகவே குமுறிக் கொள்கிறான்.

•

"அண்ணா! அதெல்லாம் இருக்கட்டும்.

இதை எல்லாம் உனக்கு யார் சொன்னது!'' என்றுதானே, தம்பி, கேட்கத் தோன்றுகிறது. உனக்கு அந்த ஐயப்பாடு ஏற்படும் என்று எனக்குத் தெரியும். இருவருமேதான் சொன்னார்கள்.

•

"என்ன செய்தாலும், இந்த ஜனங்களுக்குத் திருப்தியே ஏற்படுவதில்லை. குறைகூறிக் கொண்டிருப்பதே வேலை, ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக் கூடாதா? வெள்ளைக்காரன் காலத்திலே, இங்கே ஏற்பட்டுவிட்ட கேடுபாடுகளைப் போக்க, இழிவுகளைத் துடைக்க, பஞ்சத்தை நீக்க, எவ்வளவோ கஷ்டப் பட்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். உடனே தீர்ந்து விடக் கூடிய காரியமா இது. என்னய்யா, சுயராஜ்யம்! சுகம் எங்கே? என்றுதானே கேட்க வேண்டியிருக்கிறது, என்று பேசுகிறார்களே

கொஞ்சம்கூடப் பொறுப்பு இல்லாமல்'' - என்று கைராட்டை காவேரி, சிறிதளவு கோபத்தோடு பேசிக் கொண்டிருந்தான், என் நண்பன்"நவபாரதி'யிடம். தம்பி! நவபாரதியை உனக்கு அறிமுகப்படுத்தவில்லையே! "நவபாரதி' என்பது, பெற்றோர் இட்ட பெயரல்ல; அவர்கள் பாபம், அதெல்லாம் தெரியாதவர்கள், இராமா, கிருஷ்ணா, கோவிந்தா, என்று காலந்தள்ளி வந்தவர்கள்; எனவே அவர்கள் நரசிம்மன் என்றுதான் பெயரிட்டார்கள்; ஆனால், நரசிம்மன், காவேரி போலவே, காங்கிரஸ் தொண்டாற்றக் கிளம்பி,"நவபாரதி' என்று பெயரெடுத்துக் கொண்டான். காகிதம் கிடைத்தாலும், நல்ல சுவர் கிடைத்தாலும், காங்கிரசைப் பற்றி எதையாவது எழுதுவான். அடியில், இப்படிக்கு "நவபாரதி' என்று கையெழுத்து இருக்கும்.

பீகார் பூகம்பம் ஏற்படக் காரணம் என்ன?

பிரிட்டிஷ் ஆட்சியால் பூமாதேவி குலுங்கிக் குலுங்கி அழுதாள். அதுதான் காரணம்!

இப்படிக்கு

நவபாரதி

தம்பி! இப்படி எதையாவது எழுதியபடி இருப்பான். போலீசார் வெள்ளை அடித்து மறைப்பார்கள்; இவன் வேறு இடத்தில் எழுதுவான்; பிறகு இதிலே படிப்படியாக முன்னேறிக் கையெழுத்துப் பத்திரிகை நடத்தி, பிறகு அச்சிட்டு வழங்கி, பிறகு அச்சகமே வைத்து, பிறகு அது பறிமுதலாகி, பிறகு அதற்காகப் பொதுமக்கள் நிதி திரட்டிக் கொடுத்து, பிறகு அதை வைத்துப் பெரிய அளவில் பத்திரிகை நடத்தி, இப்போது,

சர்க்காரின் சாதனைகளைத் தெரிவிக்கும், வெளியீடுகளை, அச்சிட்டுப் புகழ் (பொருள்) ஈட்டி வாழ்ந்து வருகிறார், நவபாரதி. அவரிடம் பேசும்போது, காவேரிக்கு, ஆர்வமும், துணிவும் இயற்கையாகவே அதிகமாகத்தானே ஏற்படும். தனக்குத் தகுந்த பக்கபலம் கிடைத்தது என்ற எண்ணத்தில், பேசலானான். மேலும், நான் இருக்கிறேனல்லவா - என்னைக் குத்திக் கிளறி வேடிக்கை பார்க்கலாம் என்ற நோக்கம் வேறு. நான் அன்று அங்கு இல்லா விட்டால், நவபாரதி, வேறுவிதமாகக், காவேரியுடன் கூடிக் கொண்டு பேசியிருப்பானோ என்னவோ, நான் இருந்து விட்டதால், நவபாரதி காவேரியுடன், வாதாட வேண்டித்தான் ஏற்பட்டுவிட்டது; ஏனெனில் நவபாரதி, என்னிடம் பலமுறை சுயராஜ்ய ஆட்சி சரியாக நடைபெறவில்லை என்று ஒப்புக் கொண்டு பேசியவன்!!

”காவேரி! மக்கள் குறை கூறுவது இருக்கட்டும். நம்முடைய காங்கிரஸ் ஆட்சியை மற்றவர்கள், அதிலும் அண்ணாதுரை போன்றவர்கள், குறைகூறிப் பேசும்போது, காங்கிரசுக்காகப் பாடுபட்ட நமக்குக் கோபம் வரத்தான் செய்யும். ஆனால், நமக்கே, உள்ளபடி, காங்கிரஸ் ஆட்சியில், திருப்தி ஏற்பட்டிருக்கிறதா? நாம், எதிர்பார்த்தபடி, திட்டமிட்டபடி, மக்களிடம் வாக்குறுதி அளித்தபடியாகவா, ஆட்சி நடக்கிறது?’’ என்று நவபாரதி கேட்டான். அவன் பேச்சு, அழுத்தந்திருத்தமாக இருந்தது. தம்பி! எனக்குக் தூக்கிவாரிப் போட்டது; ஏனெனில், நவபாரதியின் புதிய வெளியீட்டில், காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகளை அவ்வளவு அதிகமாகப் பாராட்டிக் கதிரவன் ஒளி காணாதார், கானம் கேட்டு இன்புறாதார், காங்கிரஸ் ஆட்சியின் சாதனையை

உணராதார், மூவரும், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்! தாயல்ல அவள் - பேய்! பெரும் பேய்! பிரிட்டிஷார் விட்டுச் சென்ற பேய்!! - என்று நவபாரதி எழுதியிருந்தான்.

அவன்தான் காவேரியைக் கேட்கிறான், எதிர்பார்த்த படியாகவா காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது, என்று என் எதிரில்.

காவேரிக்குக் கடுங்கோபம்; "நவபாரதி! குறைபட்டுக் கொள்வது, யாருக்கும் எளிது. ஆசை இருக்கும், அடுத்த விநாடியே அம்பாரிபோட்ட யானை மீது, அமர்ந்து பவனி வர வேண்டும். பக்கத்திலே ஒரு இராஜகுமாரி உட்கார வேண்டும், அவள் கூந்தலில், பாரிஜாத மலரைச் செருகி மகிழ வேண்டும், என்றெல்லாம். உடனே முடிகிற காரியமா! தோட்டமே கைக்கு வந்து கொஞ்சக்காலம்தானே ஆகிறது. திருத்தி, பாத்தி கட்டி, பயிரிட்டு, செடி முளைத்து. . .

செ! இதுகூடத் தெரியாமல், அரச மரத்தைச் சுற்றிக்கொண்டே, அடிவயிற்றைத் தடவிப் பார்க்கிற கதைபோலச், சுயராஜ்யம் வந்து என்ன பலன்? ஒன்றும் காணோமே! என்று மூக்கால் அழுவதா?'' - என்று படபடத்துப் பேசினான், காவேரி. நவபாரதி, சில விநாடிகள் ஒன்றும் பதில் பேசவில்லை. ஒருவேளை, தனது அடுத்த வெளியீட்டுக்கு, காவேரியின் அந்தப் பேச்சை முன்னுரையாக்குவதா, முடிவுரை யாக்குவதா என்று யோசனை செய்து கொண்டிருந்தானோ, என்னவோ!

ஒன்றுகூற மறந்துவிட்டேனே, நாங்கள் மூவரும் வேறு வேறு ஒரு காரியமாகக் கிராமம் சென்றிருந்தோம். அங்குதான் இந்த உரையாடல்.

நவபாரதி பதிலேதும் பேசாததால், காவேரிக்குத் துணிவு அதிகமாகிவிட்டது. பிரிட்டிஷார் செய்து விட்டுப்போன நாசம்

கொஞ்ச நஞ்சமா? அந்த நாசத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நாட்டைத் திருத்தி, நல்ல நிலைமையை ஏற்படுத்துவது எளிதான காரியமா? விரைவிலே முடிந்துவிடக் கூடிய காரியமா? வேரோடு கீழே சாய்ந்துவிட்ட பெருமரம் நம் கைபட்ட உடனே பூத்துக் காய்த்து, கனி குலுங்கவேண்டுமென்று சொல்வது போலல்லவா இருக்கிறது இவர்கள் கூற்று!'' என்று காவேரி பேசினான்.

"நண்பருக்கு நான் ஒரு விஷயம் கவனப்படுத்தலாமா?'' என்று நான் கேட்டேன்."ஒன்று என்ன! ஓராயிரம் சொல்லலாம்! என்ன சொல்லப்போகிறீர்கள் என்பது தெரியாதா எங்களுக்கு'' என்று சற்றுக் காரமாகவே கூறினான் காவேரி.

தாராளமாகப் பேசலாம் என்று கூறினதால், நான், சற்று விரிவாகவே, விளக்கமளிக்கலானேன். "தங்களிடம்

ஒப்படைக்கப் பட்டிருக்கும் வேலை, பாலைவனத்தைச் சோலை வனம் ஆக்குவது போன்ற மிகமிகக் கடுமையான வேலை என்று மக்கள் எண்ணி ஏமாற வேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சியினர் கருதுகிறார்கள் - பேசுகிறார்கள்.'"புயலாலே பூந்தோட்டம் அழிந்தது; கிணற்றிலேயோ இடி விழுந்து தூர்ந்து போய் விட்டது. ஆறு, ஆறாவது கல்லில் இருக்கிறது. அங்கிருந்து வாய்க்கால் வெட்டிக் கொண்டு வருவதற்கோ, இடையில் ஒரு சிறு குன்று கிடக்கிறது, நான் அந்தக் குன்றைக் குடைந்து வாய்க்கால் அமைக்கலாமா; அதைச் சுற்றி வளைத்துக் கொண்டு வாய்க்கால் கொண்டு வருவதா என்பது பற்றி நிபுணர்களைக் கேட்போமா, அல்லது "நின்று தவமிருந்தாள்'' கோயில் பூஜாரியிடம் யோசனை கேட்போமா என்று சிந்தித்த வண்ணம் இருக்கிறேன்,

சிரமப்படுகிறேன். நீயோ மல்லிகைப் பூ மாலை எங்கே, மருக்கொழுந்துக் கட்டு எங்கே, மனோரஞ்சித மலர் எங்கே? என்று கேட்டுத் தொல்லை தருகிறாயே என்று பேசும் தோரணையில், காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தைவிட்டு வெள்ளைக்காரன் நீங்கியபோது, பிணம் புதைக்கக் குழிவெட்டும் வேலையிலிருந்து இவர்கள் துவக்க வேண்டி வந்ததுபோலவும், அதற்குள் மக்கள் ஏதோ வீணாக அவசரப்பட்டு, ஆத்திரப்படுவது போலவும் கருதிக் கொண்டு, குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

வெள்ளைக்காரன் இந்தியாவைச் சுரண்டினான் - மறுப்பாரில்லை; செல்வத்தைக் கொள்ளை கொண்டான் - மறைப்பாரில்லை; ஆனால், அவன் விட்டுச் சென்ற இந்தியா பாலைவனமுமல்ல -

படுகுழி நிரம்பி, கள்ளி காளான் பூத்துக் கிடக்கும் கடுவெளியுமல்ல என்பதை மக்கள் அறிவார்கள்.

பெரும்போரிலே சிக்கி, கொடுமைக்கும் குண்டு வீச்சுக்கும் இலக்காகி, எழில்மிகு நகரங்கள் மண்மேடுகளாயின; வளம்மிகு வயல்களெல்லாம் பிணக்காடுகளாயின; தொழிற்சாலை களெல்லாம் குப்பை மேடுகளாயின; கடலே இரத்த மயமாயிற்று! குடும்பங்கள் இலட்சக் கணக்கிலே சிதறின! வாழ்வு சிதைந்தது! வீடிழந்து, நாடிழந்து, எதிரியிடம் சிக்கிச் சீரழிந்து போன மக்கள் ஆயிரமாயிரம்! நடுநிசியில் விமானம் வரும்; நாசக் குண்டுகளை வீசும்; கட்டிலும் தொட்டிலுமே புதை குழியாகும்; கன்னல் மொழிக் குழவி கண்ணெதிரே கூழாகும்; மனம் குழம்பித் தாய் மடிவாள்; தகப்பனோ, மரமாகி நிற்பான், மனத்துயரால்!

கட்டிடங்கள் இடியும் சத்தமும், குண்டுகள் சீறிடும் சத்தமும், குலை நடுங்கி மக்கள் கூச்சலிடும் சத்தமும், நித்திய நாதமாக இருந்தது. தலைநகர்களை விட்டுச் சர்க்கார் ஓட்ட மெடுப்பதும், உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக் குழியில் இறங்கிக் குடும்பம் நடாத்துவதும், சர்வ சாதாரணமான சம்பவமாக இருந்தது.

நாமெல்லாம் மாண்டுபோனாலும், நாம் பெற்றெடுத்த செல்வங்கள், பிள்ளைக் கனி அமுதங்கள், இந்தப் பேசும் பொற்சித்திரங்கள் பிழைத்தால் போதும்; குண்டு வீச்சும், பிண நாற்றமும் பிடித்தாட்டும் இந்த நாட்டிலே, இந்த மொட்டுக்கள் இருந்து கருக வேண்டாம்; கண்காணாச் சீமைச் சென்றேனும் கண்மணிகள் வாழட்டும்; காலமும் நிலைமையும் மீண்டும் ஒன்று சேர்த்து வைத்தால் உச்சிமோந்து முத்தமிடுவோம்;

அன்றி, இங்கேயே மடிய நேரிட்டாலும், நமது "குலக்கொடி' அழிந்து படவில்லை - எங்கோ ஓரிடத்தில், போரும் புகையும், சச்சரவும் சாவும் தீண்டாத ஓர் திருநாட்டிலே, நமது உயிரோவியங்கள் வாழ்கின்றன - என்று மனத்திருப்தியுடன் மண்ணில் புதைபடுவோம்; மாணிக்கங்கள் தப்பினால் போதும்; இன்பப் பெருக்குகள் இந்தத் துன்ப பூமியிலிருந்து வேறிடம் சென்றால் போதும் - என்று எண்ணித், தலைவாரிப் பூ முடித்துக் கன்னத்தைத் துடைத்து, முத்தமிட்டு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு,"கண்ணே சென்றுவா, மணியே போய்வா! என் உயிரே, உன்னைப் பிரிகிறேன்! கர்த்தன் அருளால் மீண்டும் சேருவோம்!' - என்று தழதழத்த குரலில் கூறி ஆயிரக்கணக்கான குழந்தைகளை, பிரிட்டனிலிருந்து, கனடாவுக்குக் கப்பலேற்றி அனுப்பி வைத்தனர்.

இவ்விதமான இடுக்கண்களும், பொருள் இழப்பும், உயிர் இழப்பும், கேட்போர் உள்ளத்தை உருக்கும் விதமான அளவிலும், வகையிலும் நடைபெற்று, நாடுபல நாசமாயின, போரின் காரணமாக!

அன்று அலர்ந்த மலரைக் கண்டு திங்கள் பலவாயினவாம் ஒரு வீரனுக்கு - களத்திலே, கடும்போரிலே, அவன் நெடுங் காலமாக ஈடுபட்டிருந்த காரணத்தால்! ஓர் நாள் களத்திலே சிறிது ஓய்வு கிடைத்ததாம்; அதுபோது அவன், களத்தை விட்டுச் சிறிது தூரம் சென்று, அழிவுக்கு மத்தியிலே, எப்படியோ தப்பிப் பிழைத்த ஒரு மலரைக் கண்டு, மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து, அதைப் பறிக்கச் சென்றானாம்! வேவு பார்த்துக் கொண்டிருந்த எதிரிப்படையினன் ஒருவன், மலர் பறிக்கும்போது, அவனைச் சுட்டுக் கொல்ல, கரத்தில் மலரும், மார்பில்

இரத்தமுமாக, அந்த வீரன் இறந்துபட்டானாம்!

கண்ணீர் கன்னத்தில் புரண்டோடச் செய்யும் காதைகள் பலப்பல, களம் தந்தது.

அத்தகைய கடும்போரிலே, சிக்கிச் சீரழிந்த நாடுகளெல்லாம், மீண்டும் வாழ்வு பெற்றுவிட்டன; அங்கெல்லாம் ஆளவந்த நாயகர்கள், எவ்வளவு அரும்பாடு பட்டிருந்தால், இவ்வளவு அழிவுக்குப் பிறகு, அங்கு மக்களுக்கு வாழ்வு கிடைத்திருக்க இயலும் என்பதை எண்ணிப் பார்த்தால் போதும் - இங்கு, ஏதோ மலையைக் குடைபிடித்து, மந்தையைக் காத்திடும் போக்கிலே பணிபுரிவதாகப் பேசும் காங்கிரஸ் ஆளவந்தாரின் திறமை, வெட்டவெளிச்சமாகிவிடும்.

போர் நம்மைத் தீண்டவில்லை - நினைவில் இருக்கட்டும்! களம், இங்கு இல்லை -

கவனமிருக்கட்டும்! நாசக் குண்டுகள், நமது நகர்களைப் பதம் பார்க்கவில்லை; எல்லாவற்றையும் சினிமாப் படத்திலேதான் பார்க்கிறோம்; இதழ்கள் மூலம் "சேதி' தெரிகிறது.

அணுகுண்டு விழுந்த ஜப்பானும், பிணமலை குவிந்த ஜெர்மனியும், இரத்த ஆறு ஓடிய ர□யாவும், இடிபாடு மயமான இங்கிலாந்தும், சீரழிந்த வேறுபல சிறு நாடுகளும், புயலுக்குப் பிறகு புள்ளினங்கள் கிளம்பிப் பண் இசைத்து, புதுக்கூடு, கட்டிக் கொண்டு, பெடையுடனும் குஞ்சுகளுடனும், குதூகலமாக வாழ்வதுபோல, மீண்டும் வாழ்வின் ஒளியைப் பெற்றுவிட்டன!

போரே தீண்டாத இப்பொன்னாடு, ஓர் புனித ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது; மற்ற எந்த நாட்டுத் தலைவர்களுக்கும் கிட்டாத மதிப்பும் செல்வாக்கும், இங்கு காங்கிரஸ்

தலைவர் களுக்குக் கிடைத்தது.

போரிலே பெரும் பணியாற்றி, அழிய இருந்த பிரிட்டனைக் காப்பாற்றி, ஹிட்லரை முறியடித்த பெருமைக்கு உரியவராக இருப்பினும், சர்ச்சிலை, வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிவிடும் துணிவு, பிரிட்டிஷ் ஜனநாயகத்துக்கு இருந்தது.

இங்கோ, கல்லை நிறுத்தினாலும், கட்டையைக் காட்டி னாலும், காங்கிரஸ் என்றால், தட்டாமல் தயங்காமல், "ஓட்' அளிக்க வேண்டும் என்றனர் தலைவர்கள்;ஆஹா! என்றனர் மக்கள். ஒரு நாட்டு மக்கள், இதைவிட விளக்கமாகக், கட்சிப் பற்றையும், தலைவர்களிடம்"பக்தி'யையும் காட்டியிருக்க முடியாது.

இவ்வளவுக்குப் பிறகு, எதிர்ப்போர் எவரும் இன்றி, அழைத்த இடம் வருவதற்கு ஒரு

நாட்டு மக்கள் தயாராக இருந்த நிலையில், எதைச் சாதிக்க முடிந்தது? ஏன் வறுமையைத் துடைக்க முடியவில்லை? ஏன் மக்களின் வாட்டத்தைப் போக்க முடியவில்லை?

தேசபக்தரே! தேசோத்தாரகரே! தேசபந்துவே! தீன பந்துவே! ஜோதியே! சுடரே! முத்தே! மணியே! வாழவைப்போம் என்று வாக்களித்த பெம்மானே! வாழ்வளிக்கும் திட்டம் எங்கே? சீரளிக்கும் சட்டம் எங்கே? என்று மக்கள் கேட்டால், சீறுகிறார்களே, நியாயமா?'' என்று நான் கேட்டேன்.

"இது தெரியும் இவர்களுக்கு,"வளவள'வென்று பேச, காமராஜர்கூட, இதைச் சென்ற கிழமை கண்டித்துப் பேசினார்'' என்றான் காவேரி.

"ஆமாம் மக்கள் நியாயம் கேட்டால்,"வளவள'வென்று பேசுவதுபோலத்தானய்யா தோன்றும்.

இது எதேச்சாதிகாரி களின் போக்கு. ”மளமள’வென்று காமராஜரால் பேச முடியும் - பேச வேண்டியதும் அவ்வளவுதான், அவருக்கு காங்கிரஸ் நல்ல கட்சி, மத்ததெல்லாம் மோசம். எங்களால்தான் ஆள முடியும். மத்தது பிரயோஜனம் இல்லை. நன்மைகள் செய்கிறோம். அதற்காகத்தான் வரி போடுகிறோம். வரி அதிகம் கொடுத்தால் நன்மை அதிகம் செய்வோம்.’’

இவ்வளவுதான் அவர் சரக்கு! இதைக் காட்டிவிட்டுக் கோணியைச் சுருட்டிக் கொண்டு, அடுத்த ஊர் போய்க் கடை பரப்புவார். நாங்கள் அப்படி அல்லவே! ஆதியோடு அந்தமாக, விளக்கமாக, மனதில் பதிகிறபடி பேச வேண்டும். அது உங்களுக்கு வளவளவென்றுதான் தோன்றும், என்று நான் சொன்னேன். நவபாரதி குறுக்கிட்டு, “பிரிட்டிஷ் ஆட்சிக்குப்

பிறகு, இந்தியா எந்த நிலைமையில் இருந்தது என்பதுபற்றிக் காவேரி சொல்வது தவறா?'' என்று கேட்டார்.”அதைக் கேட்டதற்குத்தான், ஒரு கதா காலட்சேபமே செய்து விட்டாரே!'' என்று கேலி செய்தான் காவேரி. “திட்டவட்டமாகப் பேச வேண்டும்'' என்றான் நவபாரதி.”புள்ளிவிவரப்படி'' என்று திருத்தமளித்தான் காவேரி. “புள்ளிவிவரம் கேட்கிறீர்களே - எந்தப் புள்ளிவிவரம்? உங்கள் சர்க்கார் தருகிற புள்ளிவிவரம் போலவா!'' என்று, எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு,”உங்கள் சர்க்கார் தருகிற புள்ளிவிவரம் மகாமட்டம் என்று, திட்டக்கமிஷன் உறுப்பினர், சீமன் நாராயணனே கண்டித்திருக்கிறாரே, தெரியுமா!! ஆனால், நான் அப்படிப்பட்ட புள்ளிவிவரம் தரப்போவதில்லை. எல்லோரும் ஒப்புக் கொள்கிறதை மட்டுமே சொல்கிறேன்!

வெள்ளைக்காரன் இந்த நாட்டைவிட்டு வெளியேறுகிறபோது, தங்கமாகவும் ரொக்கமாகவும் நம்முடையது என்று இருந்த தொகை 1,179,74,00,000 ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். பதினான்காண்டு ஆட்சி நடத்தி இருக்கிறீர்கள் - இப்போது நிலைமை என்ன தெரியுமல்லவா? 4971 கோடி ரூபாய் கடன் பட்டிருக்கிறோம். 1959-60, கடனுக்காகச் செலுத்தும் வட்டித் தொகை 129 கோடி ரூபாய். 1960-61இல், வட்டித் தொகை 143 கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதைக்கூடக் காவேரி மறுக்கமுடியுமா?'' என்று கேட்டேன். நவபாரதி சிறிதளவு குறும்புத்தனமான பார்வையைக் காவேரியின் பக்கம் செலுத்தியபடி, "கடன் பளுவு அதிகம்தான்! மிகமிக அதிகம்! அதனால், வட்டி கட்டித் தீரவேண்டிய தொல்லை ஏற்படுவது மட்டுமல்ல, பணப்பெருக்கம் ஏற்பட்டு,

விலைவாசி ஓரேயடியாக ஏறி, மக்கள் மெத்தக் கஷ்டப்படுகிறார்கள்'' என்று கூறினார்."கடன் வாங்காமல் முன்னேற்றம் நடக்குமா?'' என்று, நம்பிக்கையுடன் கேட்டான் காவேரி. "எந்த முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிறார் நண்பர்! சித்தரஞ்சனா, சிந்திரியா?'' என்று நான் கேட்க, நவபாரதி,"சிந்திரியைக் குறிப்பிடமாட்டார், அதிலும் இப்போது!! காவேரி! அண்ணாத்துரை நம்முடைய கட்சி அல்ல; அதனால் அவர் குத்திக்காட்டும்போது, நமக்குக் கோபம் வரத்தான் செய்யும்; ஆனால், கோபம் உண்மையைக் காணமுடியாத அளவுக்கு நம்முடைய கண்களை மறைக்கக் கூடாதல்லவா? எவ்வளவு வரிச்சுமை, கடன்பளு, இவைகளைத் தாங்கிக் கொண்டு, மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களிடம் சுரண்டிச் சிந்திரிபோன்ற பெரிய திட்டத்தை நடத்துகிறார்கள். அங்கு, இப்படிப்பட்ட

அக்கிரமம், கண்மூடித்தனமான நிர்வாகம் நடக்கலாமா? ஏன், அடுத்த தலைமுறைகூடக் கட்டித்தீர வேண்டிய அளவுக்குக் கடன் வாங்குகிறீர்கள் என்று யாராவது கேட்கும்போது, மார்தட்டிச் சொல்கிறோம், கடன் வாங்கிக் கடலிலா கரைக்கிறோம், கட்டித் தங்கம் வாங்கி நகை செய்வதுபோல, விதைபோட்டுச் செடி வளர்ப்பதுபோல, இந்தப் பணத்தைப் போட்டு, நாட்டுக்குப் புதுச்செல்வம் தரக்கூடிய திட்டங்களைப் போடுகிறோம், அமைப்புகளை ஏற்படுத்துகிறோம், தொழில்களை அமைக்கிறோம் என்று பேசுகிறோம். பேசிவிட்டுச் சிந்திரியைக் காட்டுகிறோம். அங்கு நடைபெற்ற அக்கிரமத்தை எப்படி மூடி மறைக்க முடியும்? எப்படிச் சகித்துக்கொள்வது? நீயேதான் சொல்லேன்'' என்று நவபாரதி கேட்டான். காவேரிக்கு கோபத்தைவிடத் துக்கம்தான்

அதிகம் என்பது தெரிந்தது. நான் என்ன செய்வேன், நிர்வாக ஊழலுக்கு என்று, பொறுப்பைத் தட்டிக்கழிக்க விரும்புபவன் அல்ல காவேரி! எங்கள் கட்சி! எங்கள் சர்க்கார்! என்று மகிழ்ச்சியுடன், பெருமையுடன், சில வேளைகளில், ஆணவத்துடன்கூடப் பேசும் போக்கினன். பாவம்! பற்று இருக்கத்தானே செய்யும்!! உரிமையும் இருக்கத்தானே இருக்கிறது! மந்திரி மாணிக்க வேலருக்கு, என் கட்சி! என் சர்க்கார்! என்று கூறிக் கொள்ளும் துடிப்பும், பற்றும், உரிமையும், நிலைமையும், இருக்கிறபோது, காவேரிக்கு இருக்கக் கூடாதா அந்த உரிமை? கைராட்டைக் காவேரியாயிற்றே! மாணிக்கவேலர், சைக்கிள் பெட்டியாயிற்றே! காவேரி காந்தி பக்தர், மாணிக்கவேலர் பூந்தி தந்தவர் என்று பேசிக் கொள்கிறார்கள்!!

“பெரிய நிர்வாகத்திலே, சிறு சிறு

தவறுகள் ஏற்பட்டு விடுவதுதான்; இதைப்போய்ப் பெரிதுபடுத்தலாமா?'' என்று சொல்லிப் பார்த்தான், காவேரி."ஒன்றா, இரண்டா, பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ள, அடுக்கடுக்காக வெளி வந்தபடி இருக்கிறது, ஊழல், விரயம், நிர்வாகக் கோளாறு. சிந்திரி விஷயம் சாதாரணமானதா? உணவு உற்பத்தி பெருக்கு வதுதான் திட்டத்தின் உயிர்நாடி என்கிறோம். உணவு உற்பத்தி பெருக, உரம் தேவை என்கிறோம். அந்த உரத்தொழில் நடக்கும் இடம் சிந்திரி. அங்கு மோசமான நிலைமை இருக்க விடலாமா!! குழந்தைக்காக, பால் காய்ச்சி வைத்திருந்தேன், பாழாய்ப்போன பூனை உருட்டிவிட்டது என்று மனைவி சொன்னால், சமாதானம் வருவதில்லையே, நம் மனதுக்கு. இது அப்படிக்கூட அல்லவே! பாலைப் பூனை குடித்துவிட்டது; என்ன

செய்வது? இது தெரியாமல் குழந்தை அழுகிறதே, கொஞ்சம்கூடப் புத்தியில்லாமல் என்று கூறிக்கொண்டே, குழந்தையை முதுகில் அறைந்துவிட்டு, அது வீறிட்டு அழ ஆரம்பித்ததும், பாலைக் குடித்த பூனை "மியாவ்"'மியாவ்' என்று கத்துவதைக் காட்டி, பாப்பா! அழாத! அதோ, கேள், பூனை பாடுகிறது! அதைக் கேட்டுக் கொண்டே தூங்கு! கண்ணல்ல, தூங்கம்மா, தூங்கு! - என்று தாய் பேசினால், எப்படி இருக்கும்? அப்படி இருக்கிறது ஒவ்வொரு ஊழலைப் பற்றியும், சர்க்காரை நடத்துகிறவர்கள் சமாதானம் சொல்லும் போக்கு.''

இவ்வளவும், சர்க்காரின் சாதனைகளைக் குறித்து, வெளி யீடுகளை அச்சிட்டு வழங்கும் நவபாரதம், பேசுகிறார். தம்பி! எனக்கு வேலையே, இருக்காது போலிருந்தது.

"காவேரிக்குக் கண்களில் கலக்கமே

தெரிகிறது. நவபாரதம் நீ ஏனப்பா இப்படி வாட்டி எடுக்கிறாய்?'' என்று நான், குறுக்கிட்டுப் பேசவேண்டியதாயிற்று, போயேன்.

"சிந்திரியில் காவேரி!'' என்று, சிறிதளவு அமைதியான முறையில், தொடங்கினான் நவபாரதி; சிந்திரியில், திடீரென்று உர உற்பத்தி வேலை நின்றுவிட்டது. ஏனென்று கேட்டால், அப்படி ஆகிவிட்டது நிலைமை; இன்னும் ஒரு ஆறுமாத காலம் ஆகும், உற்பத்தி நிலைமை சீர்பட, என்கிறார்கள். சீர்கேடு ஏன் ஏற்பட்டது என்று கேட்டால், சிந்திரியில் இயந்திரங்களை ஓட்ட உபயோகப்படுத்தப்பட்ட நிலக்கரி, மட்டமானதாக இருந்ததால், பழுது ஏற்பட்டுவிட்டது என்று, மத்திய அமைச்சர் சமாதானம் கூறுகிறார். நல்ல தரமான நிலக்கரி எஃகுத் தொழிற்சாலைக்குப் போய்விட்டதாம்; மிச்சம் இருந்த மட்டரகம்

இங்கு வந்ததாம்! இப்படியா ஒரு மந்திரி பேசுவது. இதனால் ஏற்பட்டுவிட்ட நஷ்டத்துக்கு யார் பொறுப்பு ஏற்பது?'' என்று கேட்டான்.

"எனக்கு ஒன்று தோன்றுகிறது, காவேரிக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ. இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டதால், இதற்குத் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துப் பொது மக்களுக்குத் தலைவணங்கும் முறையில், அந்த தொழிற்சாலையின் நிர்வாகத் திலிருக்கும் உயர்தர அதிகாரியும், தொழில் துறையை ஏற்றுக் கொண்டிருக்கும் மத்திய அமைச்சரும், தமது பதவிகளை இராஜிநாமாச் செய்வது நல்லது; மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கை யாகவும் அமையும். ஆனால், . . .'' என்று நான் சொன்னேன்.

"இதற்கெல்லாம் இராஜிநாமா செய்வது என்றால், அமைப்புகள் நடக்காதே. பெரிய

பண மோசடியில் ஈடுபட்டதாகத் தெரிந்தால், இராஜிநாமாச் செய்யும்படி வற்புறுத்தலாம்'' என்றான் காவேரி.

"உலக்கைக் கொழுந்து என்பார்களே, அப்படி இருக்கிற தப்பா உன் புத்தி - பணமோசடி ஏற்பட்டால், கையிலே விலங்கு பூட்டி உள்ளே அடைப்பார்கள்'' என்று நவபாரதம் பதிலளித்தார்.

"நிர்வாகத்தில் எவ்வளவு சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது என்பதற்கு, வேறு எதையும்விட ஆராயத் தேவையில்லை. 1958-59இல் சிந்திரியில், ஒரு கோடியே ஒன்பது இலட்சம் இலாபம் கிடைத்தது; அடுத்த வருஷத்திலேயே அந்த இலாபம், கிடுகிடு வெனச் சரிந்துவிட்டது 1959-60இல் கிடைத்த இலாபம் 25 இலட்சம். இது முறையா?'' என்று கேட்டேன்; காவேரி மனம் பதறி,"பாவிகள், இப்படி எல்லாம் தாறுமாறாக

நடந்து கொண்டு பண்டித நேருவுக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கிறார்கள். மக்கள் வாழ வேண்டும், அதற்கு என்ன திட்டம் போடலாம். என்னென்ன ஏற்பாடுகள் செய்யலாம் என்பதிலே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார். அவரவர்கள் தங்கள் தங்கள் காரியத்தைச் சரிவரக் கவனித்துக் கொள்வார்கள் என்று நம்புகிறார். அவரை மோசம் செய்கிறார்கள்'' என்று காவேரி பேசிடக் கேட்டு, எனக்கு, உண்மையாகவே பரிதாபம் ஏற்பட்டது, தம்பி! காவேரிக்கு, ஏற்பட்ட அக்கரையைக் கவனித்தாயா? நேரு பண்டிதர் வரையிலாவது அப்பழுக்கற்றவர் என்று ஏற்படுத்திக் காட்டி, மனதுக்கு ஒரு ஆறுதல் தேடிக் கொள்ள முனைகிற வேடிக்கை, புரிகிறதல்லவா!!

"காவேரி! நேரு பண்டிதர் மீது கண்டனம் தெரிவிக்கிறேன் என்று எண்ணிப் பதறாதே.

அவர் கண் முன் நடைபெறும் ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள் ஆகியவற்றால், இந்த 14 ஆண்டுக் காலத்தில், எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய் நாசமாகி இருக்கிறது. ஆனால், அவர் துளியாவது பதறுகிறாரா! கண்டிக்கிறாரா? களைய முற்படுகிறாரா?

வேறு எவரேனும் இந்த ஊழல்களைக் கண்டித்தால், இவர் தானே வரிந்து கட்டிக்கொண்டு வருகிறார், பதில் அளிக்க. பழி துடைக்க, பாதுகாப்புத்தர! பிறகு, ஊழல் நிர்வாகம் நடத்து பவர்களுக்கு, அச்சம் ஏன் ஏற்படப்போகிறது! திருத்தவேண்டும் என்ற எண்ணம்தான் எப்படி உண்டாகும் என்று கேட்டேன் காவேரி, வாய்திறக்கவில்லை. துக்கம் துளைக்கும் நிலைதான்! வேறெப்படி இருக்க முடியும்?

”மற்றொன்று காவேரி! மக்களின் நல்வாழ்வுக்காகப் பண்டித நேரு

அரும்பாடுபடுகிறார் என்று நம்புகிறாய் - நம்பச் சொல்கிறாய்! ஆனால், நிலைமை, வேறுவிதமாக அல்லவா இருக்கிறது. பதினான்கு ஆண்டு நேரு ஆட்சிக்குப் பிறகு, கிட்டத்தட்ட ஐயாயிரம் கோடி ரூபாய் கடன் பளு ஏறிய பிறகு, ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வரியாக மக்கள் கொட்டிக் கொடுத்த பிறகு, மக்களின் நிலைமை எப்படி இருக்க வேண்டும்? திட்டம் வெற்றிபெற்று, பலன்கள் உருவாகக் கிடைத்து, அது மக்களிடம் பரவி இருந்தால், மரப்பொந்துகளிலே முட்டை யிட்டு வைக்கும் வண்ணப் பறவைகள், குஞ்சுகள் வெளிவரும், கொஞ்சிக் குதூகலிக்கும் என்றெண்ணியபடி, இரைதேடி வேறு இடங்களில் வட்டமிடும் வேளையாகப் பார்த்து, பாம்பு புகுந்து முட்டைகளை விழுங்கிவிடுமாம். அதுபோலன்றோ, பலன்கள் கிடைக்கும், பாங்கான வாழ்வு

பெறலாம் என்று மக்கள் எண்ணி ஆவலுடன் காத்திருக்கும்போது, அந்த நம்பிக்கையுடன் கல் பிளந்து, மலை பிளந்து, காடு திருத்திக் கழனியாக்கி, நெருப்பில் வெந்து, பிலத்தில் நுழைந்து, உடலைக் கசக்கி, இரத்தத்தை வியர்வையாக்கிப் பாடுபட்டான பிறகு, பலன் தங்களுக்குக் கிட்டாமல், பகற்கொள்ளைக்காரர்களுக்குச் செல்வதைக் காண்கிறார்கள். பறவைகளாவது, படபடவெனச் சிறகடித்துக் கிரீச்சென்று கத்தி, இங்குமங்கும் வட்டமிட்டுத், தமது கோபத்தைத் துக்கத்தைக் காட்ட முடிகிறது. காவேரி போன்ற உண்மைத் தொண்டர்களால், தமது மனதிலே ஏற்பட்ட கொந்தளிப்பை வெளியே கொட்டிக்கொண்டு ஒருவிதமான ஆறுதல் பெறக்கூட அல்லவா முடிவதில்லை!'' என்று நான் கூறினேன். தம்பி! காவேரி, காங்கிரசை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டு,

பிழைப்புக்கு வழி தேடிக்கொள்பவனல்ல. எனவே, அவனுக்கு உள்ளதை ஒரே அடியாக மறைக்க மனம் இடம் தரவில்லை; அதேபோது, கட்சிக்கு இழுக்கு ஏற்படுவது கண்டு சகித்துக்கொள்ளவும் முடியவில்லை கலங்கினான்.

”ஆட்சியிலே பல கோளாறுகள் ஏற்பட்டு விட்டன; அதனை நானும் ஒரே அடியாக மறுக்க முடியாது; மறுக்கக் கூடாது! ஆனால், காங்கிரஸ் கட்சியின் அந்த நாள் சாதனைகள், தியாகங்கள், இவைகளை அடியோடு மறந்துவிட முடியுமா! அந்த மதிப்பு மங்கி மடியவிட, அந்தக் கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்ட எவருக்குத்தான் மனம் வரும்.’’ என்று காவேரி பேசினான் - தனக்குத்தானே பேசிக்கொள்பவன்போல.

பொக்கை வாய்க் கிழவன், தனக்கு மீசை சுருள் சுருளாக இருந்தபோது, மயான

காண்டத்தில், சுடலை காத்த காட்சியில், ஊர் உருகப் பாடிய கூத்து பற்றிக், கேட்போர் சலிக்கும் அளவு கூறிக் கொண்டிருப்பது போல, வறுமை கொட்டுவதால் துடித்துக் கிடக்கும் மக்களிடம், வீரதீரமாகச் சுயராஜ்யப்போர் நடாத்தியது பற்றிப் பன்னிப்பன்னிப் பேசினால், எப்படி இருக்கும்! அதுபோலச் பேசுவதுதான் காவேரிக்குத் தெரிகிறது. அது பொருத்தமுமில்லை, அதிலே பொருளும் இல்லை என்பது அவனுக்கு எங்கே புரிகிறது. ஆனாலும், தம்பி! எனக்குக் காவேரி அதுபோலப் பேசும்போது கோபம் பிறப்பதில்லை; ஏனெனில், காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டபோது, ஊராருக்கு இனிப்புப் பண்டம் வழங்கிய "உத்தமர்கள்' இன்று, காங்கிரசின் வீரத்தைப் பற்றி, தியாகத்தைப் பற்றி நீட்டி முழக்கிக் கொண்டிருப்பதை, நித்த நித்தம் கேட்டுத் தொலைக்கிறேனே!

அவர்கள் அல்லவா, மறுப்புரை கூறினால், சீறுகிறார்கள், சபிக்கிறார்கள்! காவேரிக்கு, இதைவிட அதிகமாக அல்லவா, மனவேதனை ஏற்படும். ஆனால், அவனுக்கு ஆத்திரம் அடிக்கடியும் வருவதில்லை; அதிக அளவிலும் ஏற்படுவதில்லை. வேறு சிலர் இருக்கிறார்கள் காங்கிரசாட்சியிலே உள்ள கேடுபாடுகளை எடுத்துச் சொன்ன உடனே, தீ மிதித்தவர்போலாகிக் கொதிக்கிறார்கள், கொக்கரிக்கிறார்கள்!

சிறுவனாக இருந்தபோது, தம்பி! தெருக்கூத்துகள் நிறையப் பார்ப்பதுண்டு. இப்போதுகூட மெத்த விருப்பம் எனக்கு, நள்ளிரவில் ஒலிபெருக்கியின் துணை தேடாமல், ஊர் முழுவதும் கேட்கத்தக்க முறையில் குரலெழுப்பி, நடத்தப்படும் தெருக் கூத்துக்களைக் காண்பதில், கிருஷ்ண வேடம் போடுபவன், அலங்கார நடை

நடப்பான்; ஆர்ப்பரிப்பு இருக்காது; புன்னகை செய்வான்; பற்களை நறநறவெனக் கடித்துக் காட்டமாட்டான்; குறும்புப் பார்வைதான் காட்டுவான், கொவ்வைபோலக் கண்களைச் சிவப்பாக்கியும், உருட்டி மிரட்டியும் கண்களைக் காட்ட மாட்டான்! நளினமான நடை இருக்கும். துரியோதனன், துச்சாதனன் போன்றவர்கள்தான், மண் கிளம்பும் அளவுக்குக் குதிப்பார்கள்; இடமும் வலமும் சரசரவென்று சுழலுவார்கள்; ஆர்ப்பாட்டமாக இருக்கும். ஒரு இரவு, வழக்கமான முறையிலே நடித்துக்கொண்டிருந்த கிருஷ்ண வேடக்காரன், துச்சாதனனை விட அதிக ஆர்ப்பாட்டமாக, குதிக்க ஆரம்பித்தான். எங்களுக்கு ஒரே வியப்பு! கண்ணன் இப்படி நடிக்கக் கூடாதே! போட்டுள்ள வேடத்தை மறந்துவிட்டானோ ஒரு சமயம் என்று எண்ணிக் கொண்டோம். அவனோ வலமும்

இடமும் வேகமாகச் சுற்றுகிறான், தாளக்காரன் திகைக்கிறான். துரியோதனனே திடுக்கிட்டுப் போய், அசைவற்று நின்று விட்டான் போயேன், கண்ணன் ஆடிய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு.

மற்றவர்களைப் போல, இதைக் கண்டு வியப்படைவதுடன் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. கூத்து நடத்துபவர்களில், எனக்கு வேண்டியவர்களிடமே சென்று விசாரித்தேன், கண்ணன் இப்படி ஆடிடக் காரணம் என்ன? நடிப்பு இலக்கணமோ பாழாகி விட்டதே! ஒரு சமயம், கதையையே மறந்து விட்டானோ!! - என்று கேட்டேன். இடி இடியெனச் சிரித்தபடி விளக்கம் தந்தார்கள். விளக்கை நோக்கிப் பறந்துவந்த வண்டு, கண்ணன் போட்டுக் கொண்டிருந்த சட்டையிலிருந்த ஓட்டை வழியாக உள்ளே புகுந்துவிட்டது; நெளிந்து பார்த்தான், தானாக வண்டு கீழே விழும் என்று; இல்லை! மாறாக,

வண்டு, முதுகுப்புறம் சென்றது. ஓடி ஆடிப் பார்த்தான், கீழேவிழ வில்லை; பொல்லாத வண்டு முதுகில் பலமாகக் கொட்டி விட்டது. சுரீல் என்று எரிச்சல்! கண்ணன் வேடமானால் என்ன, காகுத்தன் வேடமானால் என்ன, வண்டு கொட்டினால் வேதனை தானே! அந்த எரிச்சலால், வேதனையால், கண்ணன் வேடம் போட்டவன் அந்த ஆட்டம் ஆடினான், துரியனைத் தோற்கடிக்கும் அளவுக்கு!!

எப்போதோ பார்த்த இந்தக் கூத்துதான், எனக்கு இப்போ தெல்லாம், காங்கிரசார் ஆர்ப்பாட்டம் செய்யும்போது நினைவிற்கு வருகிறது. நடிகனை வண்டு கொட்டி, ஆர்ப்பரிக்க வைத்ததுபோல, காங்கிரஸ் ஆட்சிக்குக் கிளம்பிய எதிர்ப்பு, சில காங்கிரசாருக்கு, சுரீல் என்று கொட்டும் வண்டு போலாகி விடுகிறது! துடிக்கிறார்கள், ஆர்ப்பரிக்கிறார்கள், கண்டபடி தூற்றியும்

திரிகிறார்கள். பணபலம், பத்திரிகை பலம், மகாத்மா விட்டுச் சென்ற அருள்பலம், ஆட்சிப் பொறுப்பு அளிக்கும் செல்வாக்குப் பலம், இவ்வளவு அரண்களையும் துளைத்துக் கொண்டு, எதிர்ப்புக் கொட்டுகிறது என்றால், அவர்களால், எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்! நான் கண்ட தெருக்கூத்து நடிகன் போலாகிவிடுகிறார்கள்! கண்ணன்போல வேடம் இருப்பினும், துரியன்போல ஆர்ப்பரிக்கிறார்கள்.

தம்பி! இதை உன்னால் உணர முடிந்தால், பிறகு கொதித்து, குளறி, பகை கக்கித் திரியும் காங்கிரசாரிடம் கோபம் அல்ல, இரக்கமே ஏற்படும்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

2-4-1961

36. கைராட்டை காவேரி (2)

காவேரியின் குழப்பமும் நீக்கமும்

முதலாளிகளுக்குப் பாதுபாப்புத் தரும் காங்கிரஸ். . .

தம்பி!

மூவரும் கிராமம் சென்று பேசிக் கொண்டிருந்தோம் என்று சொன்னேன் அல்லவா. தாமரைப் பூத்த குளம் என்று கவிகள் காட்டுகிறார்களே, ஏட்டில் அந்தக் குளம் - தாமரையும் இல்லை, தண்ணீரே போதுமான அளவு இல்லை; தவளைகள் தங்கி இருக்கும் அளவுக்குச் சேறு, குழம்பிக்கிடந்த நிலை. அங்கு, பெரிய வேப்ப மரம்; அதன் அடியில், ”கன்னியம்மாள்’ கோயில். அங்கு, கருங்கற்கள் - உட்கார்ந்து கொள்ளும் அளவில்! மூவரும் உட்கார்ந்தோம், வேறு

பல விஷயங்களைப் பேசிக் கொண்டு.

இரண்டு பேர், பேசும் குரல் கேட்டது, உற்றுக் கேட்டோம்.

”நீ எப்பவும் அதிர்ஷ்டக்காரன்தாண்டா! இந்தப் பொழைப்பும் ஒரு பொழைப்பா என்று. இதற்கு ஒரு தலை முழுக்குப் போட்டுவிட்டுப் பட்டணம் போய், நிம்மதியாக இருக்க முடிகிறது. என்னைச் சொல்லு, எல்லைக் கல்லாக இங்கேயே கிடக்கிறேன்.''

”உனக்கு, ஆடுமாடு, காடுமேடு இவைகளை விட்டுவிட்டு வர மனம் இல்லை. . . காகாணி வேறே இருக்கே, அதைக் கட்டிக் கொண்டு கிடக்கிறே. . .''

”அண்ணே! நானும் இன்னும் கொஞ்ச நாளிலே இந்தப் பட்டிக்காட்டுக்கு ஒரு தலைமுழுக்குப் போட்டுவிட்டுப் பட்டணம் வந்துவிடறேன். . . அண்ணே! இப்ப நீ எங்கே

வேலைக்கு இருக்கறே?''

"ஆர்பர்லே. . . அதாவது துறைமுகத்திலே . . கடலோரம்...''

"கடல் காத்துப் பட்டாலே போதுமாமே. . . உடம்பு பளபளன்னு ஆகிவிடுமாம். . . உன் உடம்புகூட அண்ணே! மேனி போட்டிருக்குது. . .''

"போப்பா, கேலி செய்யறே. . . நான் கருப்பன் கருப்பன்தான். ஆனா, பட்டணத்திலே என்னை எல்லோரும், இங்கே கூப்பிடுகிறதுபோல கருப்பன், கருப்பன்னு கூப்பிட மாட்டாங்க. கருப்பையான்னுதான் கூப்பிடுவாங்க. . . அதெல்லாம், ஒரு மரியாதைக்கு.''

"இங்கே, இவ்வளவு வயசு ஆச்சி எனக்கு. இன்னமும் கண்டவங்க, மொட்டை, மொட்டைன்னுதானே கூப்பிடுகிறாங்க, துளி

கூட மரியாதை இல்லாமே, ஆமாண்ணேன்! நீ இருக்கிற தெரு பெரிசா?''

"அடேயப்பா! எம்மாம் பெரிசு! நம்ம ஏரிக்கரையிலே இருந்து, பக்கத்து ஊர் எல்லம்மா கோயில் வரைக்கும், ஒரே தெருவா இருந்தா எப்படி இருக்கும்! அம்மாம் பெரிசு!''

"கரண்ட் விளக்குத்தானே?''

"ஆமாம்! கண்ணைப் பறிக்கும்.''

"இங்கே, சூரியன் மலைவாயிலே விழவேண்டியதுதான் பாக்கி, ஒரே இருட்டு! பாம்புக் கடிச்சாக்கூட, ஒரு பச்சிலை தேடிப் பறிக்க வெளிச்சம் கிடையாதே, ஊராவா இருக்குது அண்ணேன்! தெருவுக்கு என்னா பேரு. . .''

"பவழக்காரத் தெரு. . .''

"அஞ்சு, ஆறு கிடைக்கும் கூலி என்கிறாயே,

அம்மாம் பணமுமா, செலவழிச்சி விடுவே. . .''

"அட போடா, பைத்தியக்காரா! சுகப்படத்தானே அங்கே போனது. ஒரு சொக்கா துணி இல்லாம, இங்கே இருக்கற மாதிரியா, பிறந்த மேனியாவா இருக்கறது? இங்கே பச்சை மிளகா ஒண்ணைக் கடிச்சிக்கிட்டுப், பானைக் கஞ்சியைக் குடிக்கறது வழக்கம். இங்கே அப்படி முடியுமா? அப்படி இருக்கலாமா? நாலு பேர் பார்த்தா என்ன சொல்லுவாங்க.''

"காப்பித் தண்ணி குடிப்பே. . .''

"ஒரு நாளைக்கு நாலு தடவையாவது. . .''

"இங்கே, காச்சல் வந்தா காப்பி ஒரு முழுங்கு குடிடான்னு, வைத்தியர் சொல்றாரு. . .''

"அங்கே காச்சல் வந்தா, உடனே ஊசி போட்டுக்கணும்...''

”ஆசுபத்திரியிலே. . .’’

”ஆமாம். . . ஆனா, வேலை மேலே இருக்கறதாலே, அங்கே போயி காத்துகிட்டு இருக்க முடியறதில்லை. நம்ம வீட்டுப் பக்கமா, டாக்டரய்யா இருக்கறாரு, அவர் போட்டு விடுவாரு ஊசி.’’

”பணம் கொடுக்கணுமேல்லோ. . .’’

”பின்னே! அவர் வயிறு என்ன மண்ணையா தின்னும்.’’

”அண்ணே, கடல் காத்து வாங்கப் போறதாமே, நீயும் போவயா, எப்பவாவது’’

”நானா! ஒவ்வொரு நாளும் கடல்காத்து வாங்கப் போவேனே. . .’’

”நீ கொடுத்து வைத்தவன், அண்ணே, நான் வயித்தெரிச்சல் படறதா எண்ணிக் கொள்ளாதே, நான் சுகப்படா விட்டாலும்,

நீ சந்தோஷமா இருக்கறயே அது போதும். எண்ணே! இப்பத்தான் நீ நிம்மதியா, வேலை கிடைச்சு, பட்டணத்திலே வாசம் செய்யறியே, அந்தப் பழையக் கடனைக், கொஞ்சம் கொஞ்சமா கொடுத்துவிடக் கூடாதா! நான், கொழந்தை குட்டிக்காரனாச்சே. . .''

"அட, கொடுக்கறம்பா! இப்ப, கொஞ்சம் செலவு, அங்கே கூடக் கொஞ்சம் கடன் இருக்குது. . .''

"அங்கே, உன்னை யாருக்குத் தெரியும். யாரு கடன் கொடுத்தாங்க. . .''

"இங்கே போலவா, அங்கே மூணு தலைமுறையா, நாணயமான குடும்பமா, நிலம் இருக்குதா, நீர் இருக்குதான்னு பார்த்துக் கடன் கொடுக்க. அங்கே ஆளோட நம்பிக்கையின் பேரிலேயே, கடன் கொடுக்கறாங்க போயேன் - ஐம்பது வேணுமோ, நூறு வேணுமான்னு

மனுஷாளோட மதிப்புத்தான் பெரிசு அங்கே. கடனைத் திருப்பிக் கொடுக்கச் சுலபமான வழியும் இருக்குதா, இங்கே, அறுவடை காலத்திலே வந்து களத்து மேட்டிலே உட்கார்ந்துகிட்டுப் பூரா கடனுக்கும் அளடா நெல்லை என்கிறானே, அதுபோலவா? ஒவ்வொரு நாளும் கையிலே கிடைச்சதைக் கொடுத்துகிட்டு வரலாமே - காலோ அரையோ, ஒண்ணோ ரெண்டோ, நம்ம இஷ்டம் போலே. . .''

"இம்மாம் சௌகரியம் இருக்குது அண்ணே! எல்லாம், சொயராஜ்யம் வந்த பிறகுதானே, இதெல்லாம். . .''

"ஆமாம். . . நான்கூட ஒரு நாள், நம்ம கைராட்டை காவேரியைப் பார்த்தேன். ரொம்ப நேரம் பேசிக் கொண்டு இருந்தோம், கடற்கரையிலே.''

"அப்படியா! அவரும் காத்து வாங்க வந்தார்போல இருக்கு. வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போனயா?''

"இல்லே! அவருக்கு வேலை ஓய்வில்லைன்னு தெரிஞ்சுது, நாம போயி அவரோட வேலையைக் கெடுக்கலாமா. . . பட்டணத்திலே, அப்படி அனாவசியமா, ஒருத்தர் காரியத்திலே ஒருத்தர் தலையிடமாட்டாங்க. . .''

"ஆனா, உபகாரம் செய்ய ஆள் இருக்குதே. கேட்டா, கடன் கிடைக்குது என்கிறியே. . . அது சரி, கோயில் கொளம் இருக்குதா...''

"அட, ஏன் இல்லே! நம்ம வீட்டுக்குப் பக்கத்திலேயே வேலாத்தம்மன் கோயில் இருக்குதே. இப்பத்தான் போன மாசம் அபிஷேகம் நடந்தது பழத்தாலே. . .''

"பழமா. . .''

"ஆமாம். . . இங்கே ஏது அந்தப் பழமெல்லாம். ஆப்பிளு, திராட்சை, கமலா, உம்! தினுசு தினுசான பழம்.''

"ஆத்தா கொடுக்கறா; கொடுக்கறவளுக்குக் கொண்டாட்டம் நடத்தாமே. . . இங்கே, கால்ரா வந்தா, காப்புக் கட்டிக் கடா வெட்டறோம். . .''

"அங்கே, உடனே, மோட்டார் வரும். . .''

"மோட்டார் காரு எதுக்கு. . .''

"காலராக்காரனை, தனி ஆசுபத்திரிக்கு அழைச்சுக்கிட்டுப் போவாங்க. . .''

"அப்படி அல்லவா இருக்கணும் ராஜாங்கம்னா.''

•

காவேரிக்குக் குழப்பம், கலக்கம், கவலை, எல்லாம் பறந்தே போய்விட்டது. இதோ ஒரு

ஏழை; உழைத்து உருக்குலைந்து போனவன்; பட்டணம் சென்று, நல்லபடி வாழ முடிகிறது; நம்ம ராஜாங்கத்தில் - என்று எண்ணி, என்னைப் பெருமிதத்துடன் பார்த்தான்.

பேச்சுக்குரல் அடங்கிவிட்டது. இருவரும், எழுந்து போய் விட்டனர்; நாங்கள் மூவரும் எழுந்தோம், வீடு செல்ல. சுற்றிய அலுப்பு; வீட்டில் கிரசின் விளக்குத்தான். எனவே படிக்கவோ, எழுதவோ முடியவில்லை; சீக்கிரமாகவே படுத்துத் தூங்கி விட்டோம். மறுநாள் பகலில் வெளியில் கிளம்ப முடியவில்லை.

பச்சைப்பட்டு விரித்தாற்போலப் பாங்கான காட்சி. நீலநிற நீர்நிரம்பிய குளம்; அதிலே, பலவண்ணப் பூக்கள்; கரையோரத்தில் வெண்ணிறக் கொக்குகள்; செடி கொடிகளிலே மலர் கூத்தாடும்; பழமரங்களில் கிளிகள், நாகண வாய்ப்புட்கள்

உற்றுக்கேட்டால், குயிலின் குரல், வானம்பாடியின் இசை - இவைகளைச் சுவைக்கத் தெரியாததால், வெளியே போகவில்லை என்று எண்ணிவிடாதே, தம்பி! ஏடுகளில் படிக்கும்போதே, இனிக்கிறதே - நேரில் காணக் கசக்குமா! ஆனால் இருந்தால் தானே காண!!

எலும்புந் தோலுமான மாடுகளை, இவனும் நமது இனம் தானா என்று சந்தேகப்பட்டுக் கேட்கவேண்டிய நிலையில் இருப்பவன் ஓட்டிக் கொண்டு போகிறான். ஒவ்வொரு நாளும் தான் போகிறோம், கண்டது என்ன, கால்கடுக்கச் சுற்றியது தவிர என்ற எண்ணமோ என்னவோ, மாடுகள் துளிக்கூட ஆவலோ, சுறுசுறுப்போ அற்ற நிலையில், சென்றன! அவனும், அவைகளை விரட்டவில்லை. பூச்சூடி விளையாட வேண்டிய வயதுச் சிறுமிகள்,

தலையில் புல்லுக்கட்டுகளைச் சுமந்து செல்கிறார்கள் - கிராமத்துக்கு வெளியே. கோழி முட்டைகளை எடுத்துக், கந்தல் துணியில் முடிந்து, சிலர் செல்கிறார்கள் - கோழியும் பார்க்கிறது - வீட்டுச் சிறுவனும் பார்க்கிறான் நமக்குப் பயன்படவில்லை, எந்த மாடி வீட்டுக்குப் போய்ச் சேருகிறதோ முட்டைகள் என்ற ஏக்கத்துடன். கடப்பாரை காலில் விழுந்ததால் ஏற்பட்ட வெட்டுக் காயத்துக்குப் பச்சிலை அரைத்துப் பூசிக் கொண்டு, வேலைக்குச் செல்கிறான் ஒரு பாட்டாளி. தன் ஆறு குட்டிகளும் பின்தொடரச், சொறி பிடிக்கும் நிலையில் உள்ள நாய், குப்பை மேடு நோக்கி ஓடுகிறது. ஏற்றம் இறைக்கிறார்கள்! ஏர் உழுகிறார்கள்!! எங்கும் உழைப்புத் தெரிகிறது, உற்சாகத்தைக் காணோம். சிரிப்பு எழவில்லை, சலிப்புக் குரலொலிதான் கேட்கிறது. சுற்றிலும்

பொட்டல், எனவே, வெப்பக் காற்று வீசுகிறது. இப்படிப்பட்ட இடத்திலே, காலையிலே, கடும் வெயிலிலே, சென்று, என்ன காண்பது - என்ன இனிமை பெற முடியும்? கட்டு அறுத்துக் கொண்டு ஒரு முரட்டுக்காளை ஓட, அதனைத் துரத்திப் பிடித்து மடக்க, அடக்க ஒரு வீர இளைஞன் செல்கிறான் - என்ற விதமான காட்சியாவது இருந்தால் பார்க்கலாம். எதுவும் இல்லை. விசை கொடுக்கப்பட்ட உருவங்கள்தான் தெரிந்தன. சரி! கிராமங்களின் கவர்ச்சி பற்றிப் பட்டணம் சென்று, கவிதைகளைப் படித்துச் சுவைத்துக் கொள்ள வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டோம். மாலை வரையில் வீடே கதி.

இருட்டும் நேரம். இங்கும் அங்குமாகச் சில குடிசைகள் இருக்கும் வழியாக நடந்து வந்து கொண்டிருந்தோம். வழி என்று சொன்னேன் - அதற்குத் தெற்குப் பெரிய தெரு என்று

பெயராம்!!

சற்றுத் தொலைவிலிருந்த ஒரு குடிசைப் பக்கம், நாலைந்து பேர் ஓடினார்கள் - குய்யோ முறையோ என்ற கூக்குரல் கேட்டு. நாங்களும் ஓடினோம்.

நாங்கள், அந்தக் குடிசைக்கு அருகிலே சென்ற நேரத்தில், ஏற்கனவே அங்கு சென்றவர்கள் திரும்பிவிட்டனர்.

"வீட்டுக்கு வீடு வாசற்படிதான் வாங்க.''

"என்னதான் சொல்லு - இப்படிக் கண்மண் தெரியாமல் அடிக்கக் கூடாது.''

"பட்டணத்துக்குப் போய், பய இதைத்தான் தெரிஞ்சு கொண்டு வந்திருக்கிறான் போல இருக்குது.''

"அந்தப் பொம்பளையும், மனுஷன் சுபாவத்தைத் தெரிஞ்சி அடங்கினா

என்னவாம்!''

"அட, அவளுக்கும் ஆசை டோய், பட்டணம் பார்க்க. . .''

இப்படிப் பேசிக் கொண்டு, அவரவர்கள் தத்தமது வேலைகளைக் கவனிக்கச் சென்றனர். நாங்கள் மூவரும், குடிசை எதிரில் நின்றோம்.

உள்ளே இருந்து ஓலம்! அந்த அழுகுரலை அடக்கும் அளவுக்கு ஆடவனின் அதிகாரக் குரல். குழந்தைகளின் கூக்குரல்! இடையிடையே, அடி, அறை, குத்து இவைகளின் சத்தம். உள்ளே போர்க்களம்; சந்தேகமில்லை. சரேலென உள்ளே நுழைந்தோம். எதிர்பாராத எங்கள் நுழைவு, அமளிக்கு முற்றுப்புள்ளி வைத்தது; ஆனால், அழுகை ஓயவில்லை; அவனுக்கு மேல் மூச்சு நிற்கவில்லை. காவேரியைப் பார்த்து,

"நீங்களா?' என்று சிறிதளவு கூச்சம் கலந்த பயத்துடன் கேட்டான்.

காவேரி, சற்றுக் கடுமையாகவே, "உன்னை நான் யோக்யன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன், இதுநாள் வரையில். ஒரு பெண்பிள்ளையைப் போட்டு மாட்டை அடிப்பதுபோல அடிக்கிறாயே, ஈவு, இரக்கம், தர்மம், நியாயம், நாகரிகம் எதுவுமின்றி. சே! இவ்வளவுதானா! பெண்ணை அடிப்பது ஒரு பெரிய வீரமா!'' என்றான்.

"பெண்ணா! இவ! பேய், காவேரி அண்ணே; இது என் உயிரை வாங்கும் பேய். உனக்குத் தெரியாது.''

"பேய்தான் நானு. . . ஆமா. . . நியாயத்தைக் கேட்கறனே, அதனாலே. . .''

"என்ன நியாயத்தைடி நீ கண்டுவிட்டே.''

"ஊர் உலகம் ஒத்துக்கொள்கிற

நியாயத்தைத்தான், நான் கேட்கிறேன். ஐயா! நீங்களே சொல்லுங்க. இங்கே நான் இந்த மூணு சனியன்களைக் காப்பாத்தப் படாதபாடுபட்டுக்கொண்டு கிடக்கறேன். காட்டிலே ஒவ்வொரு நாளுமா, சுள்ளியும் விறகுக் குச்சியும் கிடைக்கும். நாலு நாளைக்கு ஒரு கட்டுக் கிடைச்சாலே பெரிய அதிர்ஷ்டம். அதை வித்து, இதுகளைக் காப்பாத்திகிட்டு, நான் கால் வயிறு கஞ்சிக்கு இங்கே அலையறேன். இந்த மனுஷன், பட்டணத்திலே, குஷாலா காலந்தள்ளிக்கிட்டுக் கிடக்கறாரு, நானும் வர்ரேன். அழைச்சிக்கிட்டுப் போ என்கிறேன், முடியாதாம்...''

"முடியாது. . . என்னாண்றே! தலையைச் சீவிடுவயா. . .''

"நான் ஏன் சீவணும். ஆண்டவன் பார்த்துகிட்டுத்தானே இருக்கறாரு, நீ செய்யற அக்ரமத்தை. உன் தலையிலே ஒரு நாளைக்கு

இடி விழாமலா போகும்!''

"விழட்டும். . . செத்துத் தொலைக்கறேன். அப்புறம் உடம்பு பூரா பூசிக்கடி மஞ்சக் குங்குமம். . . கேட்டிங்களேல்லோ பேச்சை... இடி விழணுமாம், என் தலையிலே. . .''

காவேரி மேற்கொண்டும் அவன், அவளை அடிக்க ஒட்டாதபடி தடுத்துவிட்டு,

"ஏன்யா! இதிலே என்ன தப்பு இருக்குது. உன்னோடு அழைச்சிக் கொண்டு போக வேண்டியதுதானே.''

என்று கேட்டான். அவன், எவ்வளவோ வேதனையை அடக்கிக் கொள்பவன் போலாகி,

"பட்டணம்தானே! அழைச்சிக் கொண்டு போக வேண்டியதுதான், இந்தப் பட்டத்து அரசியை! ஏன்னா! ஆறு அடுக்கு மாடி இருக்குதேல்லோ, எனக்கு அங்கே; இவ

வந்து உலாத்தணும், அந்த அழகை நான் பார்க்கணுமேல்லோ. காவேரி அண்ணே! உனக்கு ஒரு இழவும் புரியறது இல்லே. சுத்தச் சொன்னா, நாளெல்லாம் கைராட்டினத்தைச் சுத்திகிட்டுக் கிடப்பே. குடும்ப விவகாரம், உனக்கென்ன தெரியும்? நான் அவளை அடக்கற விதமாக அடக்கிக் கொள்கிறேன். நீ போ, இதிலே தலையிடாம.. .''

என்று கோபம் குறையாத நிலையில் பேசினான்.

"ஏம்பா! இங்கே கிராமத்திலே இருந்துதான் நிம்மதியாக வாழ முடியவில்லை. பட்டணம் போயிருக்கறே - ஏதோ வேலை செய்து பிழைக்கறியே - கூட உன் சம்சாரம், கொழந்தைகள் இருக்க வேண்டியதுதானே தர்மம், நியாயம், முறை. இதுகள் இங்கே பட்டினி கிடக்கறபோது, நீ மட்டும், பட்டணத்திலே இருக்க, எப்படி மனம் இடம்

கொடுக்கும் உனக்கு.''

என்று நான் கேட்டேன். கனிவாகப் பேசினால், அவனுடைய காட்டுக் குணம் மாறக்கூடும் என்ற எண்ணத்தில்.

"ஐயா! நான்தான் அங்கே, நாய் படாத பாடுபட்டுக் கொண்டு கிடக்கறனே, இவளையுமா, அந்த வேதனையிலே கொண்டு போய்த் தள்ளணும்.'' என்றான் - கோபம் குறைந்து, துக்கம் வளர்ந்து வரும் நிலையில்.

"ஏம்பா! ஒரே அடியாப் பொய் பேசறே. உனக்குத் தான், ஆர்பர்லே வேலைன்னு சொன்னயே நேத்து, உன் சிநேகிதனிடம்.''

"அட, யாரய்யா, விவரம் கெட்ட ஆளா இருக்கறே. கடன்பட்டும் காலந்தள்ள முடியாததாலே, சொல்லாம, கொள்ளாம, ஓடிவிட்டேன் சென்னை பட்டணம். திரும்பி வந்தேன், மனசு கேக்காததாலே, இந்தச்

சனியன்க கண்ணிலேயே இருக்கற மாதிரியா இருந்தது. வந்த இடத்திலே, சென்னைப் பட்டணத்திலே எப்படி இருக்கறே, என்ன வேலை செய்கிறேன்னு எவனாவது கேட்டா, என்ன சொல்ல முடியும்? அங்கேயும் அவதிதான்னா சொல்ல முடியும்? அதனாலேதான் ஆர்பர்லே வேலைன்னு சொன்னேன். ஆர்பர்லே வேலைன்னு சொன்னதும், நீ என்ன, இவளாட்டம், நான் ஒரு ஆபீசர்னு நினைக்கறியா? மூட்டை ஏத்தறது இறக்கறதுய்யா, வண்டிகளிலே! தெரியாதா, அதுதான் உத்யோகம், ஆர்பரிலே...!''

"அஞ்சு ஆறு சம்பாதிப்பதாகச் சொன்னயே.''

"ஆமாம், சொன்னேன். பய, பட்டணம் போயிருக்கான், அங்கே திண்டாட்டம்தான் இவனுக்கு. பிச்சை எடுக்கப் போறான் பாரேன், நாமே காதாலே கேட்கப் போறோம்.

கண்ணாலே பார்க்கப் போறோம். பய பெரிய படிப்பாளி - இல்லையானா"மெ□ன், ஓட்டுகிறதிலே கை தேர்ந்தவர் - அப்படி ஒரு நினைப்புப் போல இருக்குது என்று பேசிக் கேலி செய்கிறார் களே, அவர்கள் வாயை அடக்க, ஆர்பர்லே வேலைன்னு சொன்னேன்; மூட்டை சுமக்கறதை மறைச்சி.''

"ஒவ்வொரு நாளும் கடல் காத்து வாங்குவேன், உடம்பு கூட அதனாலே பளபளன்னு ஆகுது என்று சொன்னயே - நாங்க கேட்டுக் கொண்டு இருந்தமே. . .''

"மூட்டை சுமக்கற நேரம் போக, மிச்ச நேரத்திலே கடற்கரையிலே, பட்டாணி கடலை விற்கறதய்யா. அதை எப்படி, அப்பட்டமாச் சொல்றது. அற்பப் பசங்க கேலி செய்வானுங் கன்னு அப்படி மறைச்சிப் பேசினேன். மனுஷனுக்கு மானம்னு ஒண்ணு இருக்கவேணாமா! நம்ம காவேரி பார்த்தாரே

என்னை, கடற்கரையிலே பட்டாணிக் கூடையோட.''

"பட்டாணிக் கடலை விற்கறவன், பகலிலே மூட்டை சுமக்கறவன், பவழக்காரத் தெருவிலே எப்படிக் குடி இருக்க முடியும்? அது பெரிய பணக்காரர்கள், வியாபாரிகள் இருக்கற தெருவாச்சே.''

"ஆமாம். . . அங்கே ஆறாம் நம்பர் மாடி வீடு. நூறு ரூபா வாடகை கொடுக்கறேன். ஏன்யா வயத்தெரிச்சலைக் கொட்டிக் கொள்றே. பவழக்காரத் தெருதான்யா - வீடு எவன்யா நமக்குக் கொடுப்பான் - தெரு ஓரம், - நடைபாதை - சரிதானா! இதைப்போயி சொல்லச் சொல்றயா, அவன் கிட்ட. . . சொன்னா என்னைக் காகாசுக்கு மதிப்பானா. நானே அவன்கிட்ட கடன்பட்டிருக்கிறேன். . .''

"பட்டணத்திலே, கடன் கொடுக்கப் பலபேர்

இருக்கறாங்க - மனுஷாளோட நம்பிக்கையின் பேரிலேயே கடன் கொடுக்கறாங்க - ஒவ்வொரு நாளும் கால் அரை கட்டலாம். இப்படிச் சொன்னயே.''

"அது புரியல்லையா உனக்கு ஈட்டிக்காரன் தெரியுமா உனக்கு; அட காபூல்காரன்யா! அவனுங்க கடனை எங்க தலையிலே கட்டிவிட்டு, ஒவ்வொரு நாளும் வந்துவிடுவான், கையிலே சவுக்கு எடுத்துக் கொண்டு, தெரியுமா! காலோ அரையோ கொடுக்கல்லே, சவுக்காலேயே கொடுப்பான்.''

"அட பைத்யக்காரா! அதைத்தானா, அவ்வளவு கெளர வமாச் சொன்னே.''

"அப்படிச் சொல்லாமே, தெரு ஓரத்திலே கிடக்கறேன் - மூட்டை தூக்கிப் பிழைக்கறேன் - என்று சொன்னா, ஊரார் பார்த்து மதிச்சி, மெடல் கொடுப்பாங்களா! சுத்த

பைத்யக்காரனா, இருக்கறியே. . . சும்மா சொல்லி வைக்கறதுதான், மானம் போகாமலிருக்க. இவளிடம் சொன்னேன். நம்பினாளா!! ஆர்பர்லே வேலையாமேன்னு, பெரிய உத்யோகத்திலே நான் இருக்கற மாதிரியாகவும்,"அடுத்த கவர்னர் நான்தான்' என்கிற மாதிரியாகவும் எண்ணிக்கொண்டு, நானும் வர்ரேன் என்கிறா, பட்டணத்துக்கு. இவளையும் இழுத்துக்கிட்டுப் போய், நடைபாதையிலே குடும்பம் நடத்தவா - இந்த மூணு கோட்டான் களையும் கூட்டிக்கிட்டுப் போகவா!! ஆர்பர்லே போயி, வெளியே வருவதற்குள்ளே ஆபீசர்கள் திட்டு, போலீஸ் அடி, இந்தப் பொழைப்புக்குப் போட்டி போட்டுக் கொண்டு வருகிறவங்களோட தொல்லை - கொஞ்சமா நஞ்சமா, நான் பட்டுக்கொண்டு வர்றது. இவ வேறே வரணுமா - நான் மூட்டை சுமக்கறதையும், உதை படறதையும் பார்க்க.''

”ஏம்பா, நீ பட்டணம் போயி, இந்தப் பாடு படணும். . .?’’

”என்னைக் கேக்கறியே, இதோ காவேரி அண்ணனைக் கேளு. இவங்களோட ராஜாங்கத்திலே, ஏழைங்களுக்கு இதுதான் கதி!’’

மனதிலே குமுறிக் கொண்டிருந்ததையெல்லாம் கொட்டி விட்டதாலே, கூடைக்காரனுக்குக் கொஞ்சம் நிம்மதி. கணவன் படும் கஷ்டத்தை அறிந்ததாலே, மனம் இளகிற்று மனைவிக்கு. உண்மை தெரியாமல் அவனிடம் வம்புக்கு நின்றோமே என்று வருத்தப்பட்டுக் கொண்டாள். ஆனால், இவர்களுடைய வருத்தத்தைவிட, அதிக அளவு வருத்தம் காவேரிக்குத்தான். மலைபோல நம்பிக் கொண்டிருக்கும் காங்கிரசாட்சியிலே, உழைப்பாளிக்கு இதுதான் நிலை என்று

அறிந்து குமுறினான்.

மூவரும், நகரம் வந்து சேர்ந்தோம். காவேரி என்னை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டான். எனக்கு என் கட்சியின் மீதுள்ள பற்றுதலால், உன் பேச்சைக் கேட்கக்கூட எரிச்சலாக இருக்கும். இப்போது ஓரளவுக்கு எனக்கும் உண்மை புரிகிறது மேலும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலும் பிறக்கிறது, என்றான். ”காவேரி! இப்போதுதான் வெள்ளைக்காரனை எதிர்த்த போது, உன்னிடம் இருந்த தெளிவு, துணிவு, வீரம் மறுபடியும் மலருகிறது. வெள்ளைக்காரன் வெளியேறிக், காங்கிரஸ் ஆட்சி அமைந்ததும், உனக்கு, மகிழ்ச்சி, பெருமை, பக்தியே ஏற்பட்டு விட்டது. வழிபடும் தெய்வமாக்கிக் கொண்டாய் காங்கிரஸ் ஆட்சியை; அந்த ஆட்சியோ, உன்போன்ற உண்மைத் தொண்டர்களைப் பலி கேட்கிறது;

இரத்தம் குடித்துக் கொழுக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலே, காவேரி! 270- இலட்சம் மக்கள் ஒரு நாளைக்கெல்லாம் ஒரு மணிநேரம் மட்டுமே செய்வதற்கு வேலைபெற்று, மற்ற நேரத்தில் தேம்பித் தவிக்கிறார்கள். 200-இலட்சம் மக்கள் இரண்டு மணிநேரமும், 450-இலட்சம் மக்கள் 4-மணி நேரமும்தான் வேலை கிடைக்கப் பெற்று, அதிலே கிடைக்கக் கூடியது கால்வயிற்றுக்குப் போதாததால் வேதனைப்படுகிறார்கள். 600-இலட்சம் மக்களுக்கு ஒரு நாளைக்கு 5-அணா அளவில்தான் வருமானம். 400-இலட்சம் மக்களுக்கு 4-அணா அளவு! 200-இலட்சம் மக்களுக்கு 2-அணா!!

இது, சர்க்காரின் அனுமதியுடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சிக் குழு தருகிற புள்ளிவிவரம்.

இதேபோது, வெள்ளைக்காரன் காலத்திலே கிடைத்ததை விட, வருவாய்

இப்போது, காங்கிரஸ் ஆட்சியின்போது, வணிகக் கோமான்களுக்குக் கிடைக்கிறது என்று வணிகர்கள் மகா நாட்டிலேயே பேசப்படுகிறது.

முதலாளிகளுக்குச் சர்க்கார் காட்டியுள்ள சலுகை - காங்கிரசாட்சி - 590 கோடி ரூபாய் அளவாம்.

சுயராஜ்யம் கிடைக்குமுன்பு, தனிப்பட்ட முதலாளிகள் நடத்திய தொழில்களில், அவர்களின் மூலதனம் 700 கோடி ரூபாய். இப்போது, சுயராஜ்ய ஆட்சியின் பயனாக, 1900 கோடி ரூபாய் தொழில்களில்.

காவேரி! உன்னைப்போல உழைத்த உத்தமர்களல்ல, தியாகச் செம்மல்கள் அல்ல, காற்றடித்த பக்கம் திரும்பும் துருத்திகள், விளைந்த காட்டுக் குருவிகள், பழந்தின்னிப் பறவைகள், காங்கிரசாட்சியிலே தங்கள்

ஆதிக்கத்துக்கு வழிவகுத்துக் கொண்டு, காங்கிரசைப் புகழ்ந்து பேசுவதுடன், ஆட்சியின் அலங்கோலத்தை எடுத்து விளக்கும் எங்கள்மீது சீறிப் பாய்கிறார்கள்; எம்மைத் தேசத்துரோகிகள், பிளவு மனப்பான்மையினர் என்றெல்லாம் ஏசிப்பேசி, உன்போன்ற உண்மைத் தொண்டர்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்; நீங்களும் மயங்கி விடுகிறீர்கள்.

"கனம் உதவி சபாநாயகர் அவர்களே! நாடு சுதந்திரம் அடைந்த ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கப் புகுந்திருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நிதி மந்திரி அவர்கள் சொல்லும் காலத்திலும், அறிக்கையின் வாயிலாக நாம் பார்க்கின்ற போதும், மக்களுடைய வாழ்க்கையின் தரம்

மூன்று சதவிகிதம் உயர்ந்து இருக்கிறது என்று தெரிகிறது. அது சராசரியாகப் போட்ட கணக்காகத்தான் இருக்கும். உண்மையாகவே கிராம மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த நிலைமையைவிட, இப்பொழுது அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டதாகச் சொல்ல முடியாது.

"உற்பத்தி செய்யுங்கள் அல்லது அழிந்துவிடுங்கள்'' (produce or perish) என்று சொல்லப்படுகிறது. ஆனால், உண்மை நிலை எப்படியிருக்கிறது?"உற்பத்தி செய்து, அழிந்து விடுங்கள்' (produce and perish) என்ற நிலைமைதான் இருக்கிறதே - தவிர வேறு ஒன்றுமில்லை. தொழிலாள மக்களும், விவசாய மக்களும் நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதேமாதிரி உற்பத்தியையும்

பெருக்குகிறார்கள். உற்பத்தியை என்னவோ அவர்கள் பெருக்கிக் கொண்டிருக்கிறார் களே தவிர, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா என்றால், அதுதான் கிடையாது. மூன்று சதவிகிதம் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இன்னும் அதிகமாக உயர்த்தப் போவதாகச் சொல்லுகிறார்கள்.

"கனம் நிதி மந்திரி அவர்கள் கொள்கையை விளக்கும் காலத்தில், கனரகத் தொழில்களை முதல்படியாக அமைக்கப் போவதாகவும், அதற்கு அடுத்தபடியாகக் குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்யப் போவதாகவும், அதன் மூலமாக மக்களுடைய வாங்கும் சக்தி உயரும் என்றும், விவசாயத்திலே மாறுபாடு செய்யப்

போகிறோம் என்றும் சொன்னார்கள்.

”கனரகத் தொழிலைப் பற்றிச் சொல்லும்போது, உருக்குத் தொழிற்சாலையை டில்லி நகரத்திலும், அலுமினியம் தொழிற்சாலையை இன்னொரு இடத்திலும் வைக்கப் போவதாக யோசிக்கப்படுகிறது. எஃகுத் தொழிற்சாலையைப் பீகாரில் நிறுவலாமா என்று பேசப்படுவதாக நேற்றுப் பத்திரிகையில் பார்த்தேன். அது ஏன் என்று சொல்ல வேண்டும்? தென்னாட்டில் பல அங்கத்தினர்கள், நாங்கள் மட்டுமல்ல காங்கிரஸ் பக்கத்தி லுள்ள அங்கத்தினர்கள்கூட நிச்சயமாகத் தென்னாட்டிலே சரியான ஆலைத் தொழில் இல்லையென்று சொல்லி வந்திருக்கிறார்கள். சேலத்தில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற் சாலையை நிறுவவேண்டுமென்று இந்த

மாகாணத்தில் இருக்கக்கூடிய சகல மக்களும் தெரிவித்தும்கூடச், சேலத்தில் நிலக்கரி கிடையாது, அதனால் உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்த முடியாது என்று மத்திய சர்க்காரால் பேசப்படுகிறது. ஆனால் பத்திராவதியில் நடப்பது என்ன? டன் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் மத்திய சர்க்கார் (Subsidy) கொடுக்கிறார்கள். அதே மாதிரி சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையை அமைப்பதற்கு வேண்டிய உதவியையும் மத்திய அரசாங்கம் அளிப்பதற்கு முன் வர வேண்டும். அலுமினியம், பாக்சைட் ஆகிய தாதுப் பொருள்கள் சேலத்தில் கிடைக்கின்றன. நிச்சயமாக ஒரு அலுமினிய உற்பத்தித் தொழிற்சாலையை அங்கு அமைக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கட்டாயப்படுத்த வேண்டும். திருச்சி ஜில்லாவில் ஆயிரக்கணக்கான

டன் எடை உள்ள ஜிப்சம் கிடைக்கிறது. அதைக் கொண்டு சூப்பர் பாஸ்பேட் செய்ய நல்லதொரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். இம்மாதிரி கனரகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் போது, அவை தனிப்பட்டோருடைய மேற்பார்வையில் விடப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படிச் செய்வதற்குப் பதிலாக மத்திய சர்க்காரோ, சென்னை சர்க்காரோ நேரடியாக நடத்துவதற்கு முன்வர வேண்டும். தனிப்பட்டவர்களுக்குக் கொள்ளை இலாபம் கிடைக்கும்படியாக விட்டுவிடக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

"சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தி பெருகி விட்டது என்று சொல்லப்பட்டது. பஞ்சாலைத் தொழிலிலும் சிமெண்ட் தொழிலிலும் உற்பத்தி பெருகியிருக்கிறது. அதன் மூலம் தனிப்பட்டவர்களுக்கு

இலட்சக்கணக்கான ரூபாய் இலாபம் சென்று கொண்டிருக்கிறது. அந்த இலாபத்தை நிறுத்திக் கட்டுப்படுத்த வேண்டும். மக்களின் மீது மேலும் மேலும் வரியைச் சுமத்திக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, ஆலைத் தொழிலை நடத்தக்கூடிய பெரும் முதலாளிகள் அடைந்து வரும் இலாபத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சிமெண்ட் தொழிலில் சுமார் 50 முதல் 60 இலட்சம் வரை மூலதனம் போட்டவர்கள்கூட இன்று கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏ.சி.சி., டால்மியா போன்றவர்களும், இன்னும் சாதாரணமாக மூலதனம் போட்டவர்களும், ரிசர்வ் நிதியில் எவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதற்குப் புள்ளி விவரத்தைப் பல அங்கத்தினர்கள் இதற்கு முன் கொடுத்திருக்கிறார்கள். தேயிலைத்

தோட்டத் தொழிலின் மூலம் வெள்ளைக்கார முதலாளிகள் நிறைய இலாபம் சம்பாதித்துப், பணத்தை வெளி நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தேயிலைத் தொழிலில் முதலாளிகள் கொள்ளை இலாபம் அடிப்பதற்குக் காரணம் என்னவென்றால், அதில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு முதலாளிகள் யாதொரு விதமான வசதியும் செய்து கொடுக்காததுதான். வெள்ளைக்கார முதலாளிகள் இலாபத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருப்பதில் அக்கறை செலுத்துகிறார்களே தவிர, தங்களின்கீழ் வேலை செய்யும் தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளுக்கு வேண்டிய மருத்துவ வசதி, வீட்டு வசதி, குழந்தைகளின் கல்வி வசதி, இவை போன்ற பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியிருக்க, யாதொன்றும் செய்து கொடுக்காமல்

இருக்கிறார்கள் என்று நீலகிரியிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. சென்ற ஆண்டில் வெள்ளை முதலாளிகள் ஏராளமான இலாபத்தைச் சம்பாதித்திருக்கிறார்கள். இவர்களுடைய இலாபத்தைச் சர்க்கார் ஏன் கட்டுப்படுத்தக் கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். பெரும் முதலாளிகளுடைய இலாபத்தைக் கட்டுப்படுத்தி, அளவுக்கு மேற்பட்ட இலாபத்தைச் சர்க்கார் எடுத்துக் கொள்வதின் மூலம், நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றலாம். அப்படிச் செய்தால் மக்கள்மீது வரி போட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் யோசனை கூற விரும்புகிறேன். மக்களுக்கு இன்னும் வரி போட்டுக் கொண்டிருந்தால் நிச்சயமாக அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேலும் மேலும் கீழேதான்

போய்விடும்.

”விவசாய மக்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படியிருக் கிறது? சாதாரண விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை யென்று உறுதியாகக் கூற முடியும். அரசாங்கத்தார், டாடாவுக்கு ரூ. 10 கோடி கொடுக்கிறார்கள். மற்றும் பல கம்பெனிகளுக்கும் இம்மாதிரி உதவியளிக்கப்படுகிறது. ஆனால் அக்கம்பெனிகளின் நிர்வாகத்தில் அரசாங்கத்துக்கு பங்கு அல்லது கண்ட்ரோல் (Control) இருக்கிறதா? கிடையாது. இலாபத்தையும் அதிகமாக அடிக்க விட்டுவிட்டுத், தனிப்பட்ட மூலதனக்காரர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. நேற்றுக்கூட மத்திய அரசாங்க நிர்வாகத்தைப் பற்றிப் பேசுகிற காலத்தில் Industrial Finance Corporation-

ல் நடக்கும் ஊழல்களைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அனுசரிக்கும் முறையைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். சாதாரண சிறு தொழிலாளி களுக்குக் கடன் கொடுத்து ஆதரிக்க வேண்டுமேயல்லாது, தொழிலாளிகளுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்கும் தனிப்பட்ட பெரு முதலாளிகளுக்கு வட்டியேயில்லாமல் கடன் கொடுப்பதை நிறுத்த வேண்டும். தனிப்பட்டவர்களுடைய இலாபத்தைக் கட்டுப்படுத்தித், தொழிலாளிகளுடைய நிலைமையை உயர்த்தி, நிலச் சீர்த்திருத்தம் கொண்டு வந்தால்தான் நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். ஐந்து வருடத் திட்டம் போட்டு விட்டோம். அதை அமுலாக்கப் போகிறோம்' என்று சொன்னால் போதாது.

"அடுத்தபடியாக, யாருக்கு வரி போட

வேண்டும்? பெரும்பாலான அளவில் நாட்டில் மக்களுடைய வாழ்க்கை யிலுள்ள ஏற்றத் தாழ்வைக் குறைக்க வேண்டும். பெரும் பணம் படைத்தவர்களுடைய வரியை குறைத்துச் சாதாரண மக்களுக்கு வரி ஏற்றப்பட்டுப் பல துறைகளில் அவர்களிடமிருந்து வரி வசூலிக்கும் வழக்கம் நிறுத்தப்பட வேண்டும். நிறையப் பணம் படைத்த பணக்காரர்களுக்கு வரி போட்டு ஏழைகளுக்கு வரி போடாமலிருந்தால்தான், மக்களுடைய வாங்கும் சக்தி பெருகும். தென்னாட்டிலுள்ள விவசாயிகளுக்குத்தான் சம்பளம் மிகக் குறைவு. அகில இந்திய ரீதியில் தயாரிக்கப்பட்ட ஒரு ரிப்போர்ட்டின்படி, பெப்சுவில் பெண்களுக்கு ரூ. 1தீ சம்பளம், தென்னாட்டில் அவர்களுக்கு ரூ. தீ சம்பளம். இந்த ரிப்போர்ட்டை நாங்கள் தயாரிக்கவில்லை; இதை மத்திய

அரசாங்கம் தயாரித்திருக்கிறது. வேறு ராஜ்யத்தில் தொழிலாளி களுக்குச் சம்பளம் ரூ. 4, 5 என்றால், நம் ராஜ்யத்தில் ரூ. 2-தான். ஆகையால் தொழிலாளிகளுக்கு இலாபகரமான தொழிலை ஸ்தாபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

"காவேரி! இது, நாங்கள் யாரோ, பேசுவதுபோலத் தோன்றுகிறது அல்லவா! காங்கிரஸ், முதலாளிகளுக்குப் பாதுபாப்பு அளிக்கிறது; வடநாட்டுக்குத்தான் வளம் கிடைக்கிறது என்ற இந்த இரு கருத்துக்களையும் நாங்கள் பேசும் அளவிலும், முறையிலும் பேசியவர், இப்போது, காங்கிரஸ் உறுப்பினராக டில்லிப் பாராளுமன்றத்தில் கொலு இருக்கிறார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, காங்கிரசைத் தோற்கடித்த வீரர், ஏழை பங்காளர் என்ற விருதுபெற்றுச், சென்னை சட்டசபையிலே

எதிர்க்கட்சியிலே உட்கார்ந்து கொண்டு, இப்படிக் கனல் கக்கினார்.”இன்று, காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்து கொண்டு, இன்பம் சுவைக்கிறார். கிடைத்ததைப் பிடித்துக் கொண்டு பிழைத்துப் போகட்டும், நமக்குக் கவலையுமில்லை, நட்டமுமில்லை. ஆனால், உடனே, எங்கள்மீதுதானா பாய வேண்டும். எங்கள் கழகக்குரலை, தென்னகத்தின் உரிமைக்குரலை, பாராளுமன்றத்திலே சம்பத் எழுப்பியபோது, ஒரு வடநாட்டுக்காரன் எழவில்லை எதிர்த்துப் பேச. இந்த வாழத் தெரிந்தவர்தான் வரிந்து கட்டிக் கொண்டு எழுந்திருக்கிறார், கண்டிக்க; கேலி பேச!

இப்படிப்பட்ட, “இடம் தேடிகள்’ -”மடம் நாடிகள்’ - இன்று காங்கிரஸ் கட்சியிலே நிறைய இருக்கிறார்கள். அந்த இடம் எப்படி, இனி உன் போன்றாருக்கு ஏற்றதாக இருக்க முடியும்!! - என்று கேட்டேன். காவேரியின்

கண்களிலே நீர் துளிர்த்தது.

•

அண்ணா! இப்படி மனம் மாறிய காவேரியை நான் பார்க்க வேண்டுமே!! - என்றுதான் கேட்பாய்.

காவேரி - நவபாரதி - இவர்களைக் காண வேண்டுமென்ற ஆவல் நிச்சயம் எழத்தான் செய்யும்.

அவர்கள், தம்பி! இதோ, என் பக்கத்திலேயேதான் இருக்கிறார்கள் - ஆமாம், ஒரே ஒரு காவேரி அல்ல, ஓராயிரம் பேர் இருக்கிறார்கள், காங்கிரசிடம் மனதைப் பறிகொடுத்து விட்டு, மீண்டுவர மார்க்கமின்றிக் குமுறிக் கிடப்பவர்கள். அவர்களைக் கண்டறிந்து, கருத்தளித்து, அவர்களை நமது இயக்கத்துக்குக் கருவூலமாக்கித் தர வேண்டும் என்று

உன்னைக் கேட்டுக்கொள்ளத்தான், ஒரு கற்பனைக் காவேரியைக் காட்டினேன்.

அன்புள்ள,

அண்ணாதுரை,

9-4-61

37. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை

பெரியாரின் ஏசல் கணை -

தோழர் சம்பத்தின் பாராட்டும் தூற்றலும் -

சம்பத் பிரிவு -

கழகக் கலைஞர்.

தம்பி!

கூத்தாடிகள்

கூவிக் கிடப்போர்

அடுக்கு மொழியினர்

ஆபாச நடையினர்

பணம் தேடிகள்

பதவிப் பித்தர்கள்

காமச்சுவைப் பேச்சினர்

கதை எழுதிப் பிழைப்போர்

அன்னக் காவடிகள்

ஏவிய கணைகள் - அவரை விட்டு நான் தனியாகக் கிளம்ப நேரிட்ட போது.

காங்கிரஸ் வட்டாரத்துக்குச் சொல்லொணாத குதூகலம்.

வேண்டும் பயலுக்கு! இதுவும் வேண்டும் இதற்கு மேலும் வேண்டும்! பெரியாருடன் கூடிக் கொண்டு, "பொடியன்' காங்கிரஸ் மகாசபையையே அல்லவா கண்டித்தான்.

படித்தவர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சி - அரசியல் அறியாத அப்பாவிகளும், கிழக்கு மேற்குத் தெரியாத ஏமாளி களும்தான் வேறு வேறு கட்சிகளில் என்று நாம் கூறிக் கொண்டிருந்தோம் - எக்களித்துக் கிடந்தோம்; பல்போனதுகள் - பட்டம் இழந்ததுகள் - சரிகைக் குல்லாய்கள் - சலாமிட்டு வாழ்ந்ததுகள் - ஆகிய வகையினர் மட்டுமே காங்கிரசை எதிர்ப்பர்

- இளைஞர்கள் - இளித்துக் கிடக்க வேண்டிய நிலையில்லாதவர்கள் - நிமிர்ந்த நெஞ்சினர் - இவர்களெல்லாம் காங்கிரசில்தான் இருக்க முடியும் என்றோம். இந்த அண்ணாத்துரை நமது வார்த்தையைப் பொய்யாக்கி, நான் இளைஞன்! நான் சரிகைக்குல்லாய்க்காரன் அல்ல! படித்துமிருக்கிறேன், பதவிக்காகப் பல்லிளித்துக் கிடக்கவில்லை; நான் கண்டிக்கிறேன் காங்கிரசின் போக்கை என்று பேசி, இளைஞர்களிடம் இருந்து வந்த அழுத்தமான காங்கிரஸ் பக்தியைப் பாழாக்கினானே! பயலுக்கு இப்போது கிடைக்கிறது சரியான சவுக்கடி! சுடச்சுடக் கொடுக்கிறார்! சுற்றிச் சுற்றிக் கொடுக்கிறார். எந்தப் பெரியாருக்குப் பராக்குக் கூறிக் கொண்டிருந்தானோ, அதே பெரியார் கொடுக்கிறார் சூடு! துடிக்கிறான்! சுருண்டு கீழே விழுகிறான்! வேண்டும் பயலுக்கு;

இதுவும் வேண்டும் இதற்கு மேலும் வேண்டும்!! - என்று காங்கிரஸ் வட்டாரத்தினர் கூறிக் களிப்படைந்தனர்.

பெரியார் பேசக் கேட்டுக் கேட்டுத்தான், காங்கிரஸ் வட்டாரமே, என்னை ஏசக் கற்றுக் கொண்டது; பயிற்சியே அவர்களுக்கு அந்த முறையிலே கிடைத்ததுதான்.

முதலிலே, பெரியார் என்னை ஏசிப் பேசக் கேட்டு மகிழ்ந்தனர் - காது குளிர! பிறகு, தாங்களே பேசலாயினர் - நாமணக்க!!

என்ன தெரியும் இந்த அண்ணாத்துரைக்கு என்று துவக்கினார்களானால், காங்கிரஸ் பேச்சாளர்கள், தங்கள் வசம் உள்ள நாராசம் அவ்வளவும் தீருமளவு பேசித் தீர்ப்பார்கள்.

அந்த ஆர்வத்திலே, ஆவேசத்திலே, சபர்மதி சிறப்பு, தண்டியாத்திரையின் மகிமை, உப்புச் சத்தியாகிரகப் பெருமை, இர்வின் -

காந்தி ஒப்பந்த அருமை, என்பவை யாவும் அவர் களுக்கு மறந்தே போய்விடும்.

அவர்களுக்கு ஒரே நோக்கம் - இந்த அண்ணாத்துரைக்கு இழிவுவந்து சேர்ந்தாக வேண்டும் - இதைச் சாதித்துவிட்டுத் தான் பிறகு மற்றவை; முடிந்தால், நேரம் கிடைத்தால்.

இந்தச் சாமரம் வீசியபடிதான், என்னை அரசியல் உலகிலே உலாவர வைத்தனர் எனக்கு அது பழக்கமாகவும் ஆகிவிட்டது.

அப்போதெல்லாம், இவ்விதமான கண்மூடித்தனமான கண்டனங்களை, இழிமொழிகளை, பழிச்சொற்களைக் கேட்டு, கொதித்து, குமுறி, கோபம் கொப்பளிக்கும் நிலைபெற்று, ஆகுமா இந்த அக்ரமம்! அண்ணாவையா இப்படித் தூற்றுகிறீர்கள்! அவர் நடையையா பழிக்கிறீர்கள்! - என்றெல்லாம் கேட்டு, பதிலளித்து, என் மீது

விழும் தூசுகளைத் தன் அன்புக் கரத்தால் துடைத்து, என் அண்ணன் மாசுமறுவற்றவன் என்று மகிழ்ந்து கொண்டாடியவர்களிலே, முதன்மை இடம், தோழர் சம்பத்துக்கு என்பதை நாடு அறியும்!

எனக்காக அவர் அரும்பணியாற்றியதற்கு, நான் செய்யக் கூடிய "கைம்மாறு' என்ன இருக்க முடியும்?

உண்ணாவிரதத்தை முடிக்கும்போது, உள்ளே சென்ற பழரசம், விக்கலால் வெளியே வந்தது கண்டு, சிந்தினேனே கண்ணீர், அதுவா! தூ!! உப்புத் தண்ணீர் உபயோகமற்ற தண்ணீர்! கண் என்று இருந்தால், கண்ணீர் வருகிறது - இது ஒரு பெரிய விஷயமா!!

கைம்மாறு ஏதும் செய்திட இயலாத நிலையில் இருந்தேன் இத்தனை காலம் - இப்போதுதான் அந்த வாய்ப்புக் கிடைத்தி

ருக்கிறது; பெரியாரும் காங்கிரஸ்காரர்களும் என்னென்ன ஏசினார்களோ, அதை அப்படியே, சிந்தாமல் எடுத்து வைத்துக் கொண்டு, தோழர் சம்பத் பேசுகிறார் - தாங்கிக் கொள்கிறேன் - அதுதான் நான் காட்ட வேண்டிய ”கைம்மாறு’ என்றும் கொள்கிறேன்.

கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டவனுக்கு ஏற்படும் மன நிம்மதி எனக்கு ஏற்படுகிறது.

பெரியாரும், காங்கிரசாரும், இந்த வசவுகளை வீசியபோது, எப்படி என்னை அறிந்ததால், இதயத்தில் கொண்டதால், அந்தச் சொற்களை, தம்பி! நீ பொருட்படுத்தவில்லையோ, அது போலவேதான் இதற்கும்.

குயிலுக்கு, கிளியின் அழகு இல்லை; என்ன செய்வது! அந்த அழகு பெற்றுக்கொண்ட பிறகு கூவிட வாராய்

- என்றா கூறுகிறோம் இல்லையல்லவா! ஏதோ நிறம் கருமை எனினும், குரல் இனிமை - அதைச் சுவைப்போம் என்று இருக்கிறோம். அஃதேபோல, எல்லாத் திறமைகளும் குறைவற வந்து குவிந்தான பிறகுதான், "அண்ணன்' என்று ஏற்றுக் கொள்வேன் - அது வரையில் முடியாது என்று இலட்சக்கணக்கான தம்பிமார்கள் கூறிவிடவில்லை; கூறியிருந்தாலும் நான் என்ன செய்ய முடியும்? பெருமூச்சுடன் உலவிக் கொண்டிருந்திருப்பேன்.

காமராஜர் அதிகாலையில் எழுந்திருக்கிறாராம் - கனம் சுப்ரமணியம் கடலோரம் நடக்கிறாராம் - மாணிக்கவேலர் மரத்தடி படுக்கிறாராம் - இப்படி ஒவ்வொரு தலைவருக்கும் உள்ள பல சிறப்பு இயல்புகளைப் பலர் சுட்டிக் காட்டுவர். எல்லாத் தலைவர்களிடமும் உள்ள

எல்லாச் சிறப்பு இயல்புகளும், ஒருங்கே அமையப்பெற்றாலொழிய, உன்னை என் "அண்ணன்' என்று ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்றா கூறினீர்கள்? இல்லையே! கூறியிருந்தால் என்ன செய்திருப்பேன்? நமக்கு இப்படிப்பட்ட அருமைத் தோழர்களைத் தம்பிகளாகப் பெறும் வாய்ப்பு இல்லாது போயிற்றே என்று மனம் குமுறி இருப்பேன். எதற்குச் சொல்கிறேன் என்றால், பாசமும் நேசமும் ஏற்பட்டால், திறமைகள் முற்றிலும் நிரம்பி இருக்கிறதா என்றுகூடக் கவனிக்கச் சொல்லாது; இருப்பதைக் கண்டு மகிழ வைத்திடும்.

அவ்விதம்தான் நான் உன் போன்றாரின் அன்புப் பாராட்டுதலைப் பெற்றேன்.

அதனால், எனக்குத் திறமைகளைப் பெற வேண்டுமே என்ற அவசர ஆர்வம்கூட ஏற்பட்டது என்று கூறலாம். இலட்சக்

கணக்கானவர்கள், நமக்குத் தமது இதயத்திலே இடமளித் திருக்கிறார்களே, அதற்கு ஏற்ற முறையில், அவர்கள் மகிழத்தக்க விதத்தில், பெருமைப்படத்தக்க வகையிலே, நாம் திறமைகளைத் தேடிப் பெற்றாக வேண்டுமே என்ற எண்ணம் எழுந்தது. எல்லாத் திறமைகளையும் பெற்றுவிட முடியுமா?

முடியாதுதான்!

ஏன்?

காலம் போதாது என்பது மட்டுமல்ல; திறமை எது என்பது பற்றிய கருத்தே, காலத்தோடு சேர்ந்து வளர்ந்த வண்ணம் இருக்கிறது; திறமைக்கான இலக்கணம் மாறுகிறது; திறமை பற்றிய மதிப்பீட்டுத் தன்மை மாறுகிறது; திறமை கண்டு பாராட்டும் போக்கேகூட அவ்வப்போது மாறுகிறது.

ஏதோ ஓர் ஏட்டிலே படித்ததாக நினைவு; பிரிட்டிஷ் பாராளுமன்றப் பேச்சுகள், சர்ச்சில் காலத்திலே இருந்ததுபோல, இலக்கியச் சுவை நிரம்பியதாக இப்போது இல்லை என்று.

பிரிட்டன் சென்று திரும்பியவர்களும் இதனையே கூறக் கேட்டுமிருக்கிறேன்.

உண்மை என்னவென்றால், இப்போது, அந்தப் பாணியில் பேசுபவர்கள் இல்லை என்பது மட்டுமல்ல, பேசினால் சுவைபடுமா என்பதே ஐயப்பாட்டுக்கு உரியது.

ஏனெனில், திறமையைச் சுவைப்பதிலே எப்போதும் நாட்டம் உண்டு என்றாலும், ஒரு காலத்திலே சுவை தருவதாகக் கருதப் பட்டு வந்த திறமை; பிறிதொரு காலத்தில் சுவை தருவதாக அமையாது போகக்கூடும்.

எனவே, நான் எல்லாத் திறமைகளையும் பெற முடியும் என்றும் நம்புபவனுமல்ல,

திறமைகளின் இலக்கணம் மாறக் கூடியது என்பதை அறியாதவனுமல்ல. குறைகளுடன் கூடிய வனானாலும், அன்பு காட்டுவோர் தமது அன்பை அதற்காக நிறுத்திவிட மாட்டார்கள்.

தங்கத்திலே ஒரு குறை உண்டானால் தரமும் குறைவதுண்டோ?

உங்கள் அங்கத்திலே ஒரு குறை உண்டானால், அன்பு குறைவதுண்டோ?

இதிலே இன்னொரு வேடிக்கையும் இழைந்து நிற்கிறது.

பெரியாரும், காங்கிரஸ்காரர்களும், இழி மொழிகளையும் பழிச்சொற்களையும் வீசி, குறையைச் சுட்டிக் காட்டுகிறோம் என்று சொன்னார்களே, அப்போதெல்லாம், மெள்ள, ஒரு வார்த்தை, "ஆமண்ணா! குறைகள்தாம் இவை!'' என்று எனக்கு, இன்று கண்டிப்பவர்கள், எடுத்துக்காட்டினார்களா

என்றால், இல்லை! மாறாக, என்மீது பழி கூறியவர்களுக்குப் பளிச்சுப் பளிச்சென்று பதிலளித்தனர்.

சில வேளைகளிலே, அப்படிப் பதிலளிக்கும்போது, பக்கத்தில் இருந்து கேட்க, எனக்கே கூச்சமாக இருக்கும் - அப்படிப்பட்ட பாராட்டுதல், புகழுரைகள்!

அப்போதும் நான், அவர்களின் நடையழகு கேட்டு இன்புற்றேனேயன்றி, புகழுரையால் மயங்கிப் போய்விடவில்லை.

அண்ணன் அப்படிப்பட்டவன் இப்படிப்பட்டவன் என்று புகழ்ந்து பேசுவது, அண்ணனுக்கு மட்டுமல்ல, தனக்கும், மொத்தமாகக் குடும்பத்துக்கும், பெருமையைத் தேடித் தருகிற காரியம்தானே!

தம்பி! இதை இப்போது கூறக் காரணம், தூற்றல் கணைகள் என்மீது ஏவப்படும்

போதெல்லாம், நான் வரவு - செலவு கணக்குப் பார்த்து, மகிழ்ச்சியைத் தருவித்துக் கொள்பவன் - மனம் நொந்து போய்விடுபவன் அல்ல என்பதை எடுத்துக் காட்டத்தான்.

எந்தத் தூற்றலையும்தான் எடுத்து ஆராய்ந்து பாரேன், நான் கூறுவது தெரியும் விளக்கமாக.

எவர் தூற்றினாலும், முன் நடவடிக்கைகளை ஆராய்ந்து பாரேன் - நான் கூறுவது பளிச்செனத் தெரியும்.

மூன்றாம் படிவ மாணவனாக இருந்தபோது, ஆசிரியர் சொன்ன கதை நினைவிற்கு வருகிறது. ஒரு அரசியல் தலைவன் என்போன், கதை சொல்லலாமா என்று கேட்டுவிடாதே - நான் அப்படி! - என்ன செய்யலாம்!! கதையைக் கேளேன் - கருத்து இருக்கிறது.

ஒரு மருத்துவன், பிழைப்பு நாடி வேற்றூர் சென்றானாம் - ஒரு நாள் காலை, அந்த ஊர் மக்களிலே பலர், காலை வெயிலில் உலவிக் கொண்டும், வேலை செய்து கொண்டும் இருக்கக் கண்டான். மெத்த மகிழ்ச்சி ஏற்பட்டதாம் மருத்துவனுக்கு. காலை வெயில், பித்தம் உண்டாக்கும்; இந்த ஊர் மக்கள், காலை வெயிலில் கிடக்கிறார்கள்; நிச்சயமாக, பித்தம் சம்பந்தப்பட்ட நோய் உண்டாகும்; நமக்கு நிறைய வருமானம் கிடைக்கும்; ஏற்ற இடம் என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்து, தன் ஊர் சென்று, மருந்துப் பெட்டிகளுடன், மாலை வந்தானாம். வந்ததும் மகிழ்ச்சியே போய்விட்டதாம்; கவலை பிடித்தாட்டிற்றாம். காரணம் என்ன என்றால், ஊர் மக்கள், மாலையில் மஞ்சள் வெயிலில் காய்ந்து கொண்டிருந்ததைக் கண்டான்; மாலை வேளையில் மஞ்சள் வெயில் உடலில் பட்டால்,

பித்தம் போய் விடும் என்பது மருத்துவ உண்மை! மருத்துவன் என்ன செய்வான்! இந்த ஊர் பயனில்லை என்று எண்ணி, வேறு இடம் நாடினானாம்.

தம்பி! பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட நாளாய், என் நிலை, ஏறக்குறைய, கதையில் குறிப்பிட்டேனே, ஒரு ஊர் மக்கள், அவர்கள் நிலையைப்போல் இருந்து வருகிறது; ஆகவே தூற்றித் துளைக்கலாம் என்று எண்ணுபவர்கள், நான் உங்கள் அன்புக் கரங்களின் அரவணைப்பில் உள்ள காரணத்தால், தொடர்ந்து ஏமாற்றமே காண்கின்றனர்.

என் இயல்போ, என்னை எவர் எக்காரணம் கொண்டு எத்தகைய இழிமொழி கொண்டு தாக்கினாலும், அவர்கள் எப்போதாவது என்னைப் பற்றி ஏதாகிலும் இரண்டொரு நல்ல வார்த்தைகள் சொல்லியிருந்தால்,

அதை நினைவுபடுத்திக் கொண்டு, மனதுக்கு ஆறுதலும் மகிழ்ச்சியும் தேடிக் கொள்வது வாடிக்கை. அதுமட்டும் அல்ல; அன்று நம்மை எவ்வளவோ அன்புடன் பாராட்டினவர்கள்தானே; இப்போது நாலு கடுமொழி பேசிவிட்டால் என்ன! போகட்டும் என்று எண்ணிக் கொள்பவன்.

வாழ்க வசவாளர்கள் என்று முன்பு ஒரு முறை நான் எழுதியது, வெறும் சொல்லடுக்கு அல்ல; என் உள்ளக் கிடக்கையைத்தான் குறிப்பிட்டேன்.

சட்டசபையிலே நாம் திறமையுடன் நடந்துகொள் வதில்லை - மந்திரிகளே இடித்துப் பேசி, ஏளனம் செய்யும் நிலைக்குச் சென்றுவிட்டோம் - என்று கண்டிக்கிறார்கள்.

திராவிட நாடு பகற்கனவாகிவிட்டது; தமிழ்நாட்டிலேயே இருந்துகொண்டு, திராவிட

நாடு பற்றிப் பேசுவது பைத்யக் காரத்தனம் - தமிழ்நாடு போதும் என்று கூறிவிடலாம் என்று கண்டனத்துடன் அறிவுரை வழங்கப்படுகிறது.

கலைஞர்கள் கழகத்தில் புகுந்து, எல்லாம் கெட்டுவிட்டது என்று பலமாகக் கண்டிக்கிறார்கள்.

இவைகளைத் தத்துவ விளக்கம் போன்ற முறையிலே அல்ல குற்றச்சாட்டுகளாக, இழிமொழிகளால் கூறுகிறார்கள்.

மற்றவை இருக்கட்டும்; பலமான மூன்று குற்றச்சாட்டு களைக் கூறுகிறார்களே, அதிலும் மிகமிகக் கேவலப்படுத்தும் முறையிலே என்று எண்ணி நான் ஆயாசப்படவில்லை; மாறாக, இந்த மூன்று விஷயமாகவுமே, அவர்கள், சமீப காலத்துக்கு முன்பு வரையில் கனிவுடன் மட்டுமல்ல, பாராட்டும் முறையில் பேசியிருக்கிறார்கள்,

அதை எண்ணி மகிழ்ச்சிப் பெறுகிறேன்.

முன்பு அப்படிப் பேசினார்கள்; இப்போது ஒரே அடியாக மாற்றிப் பேசுகிறார்களே என்றுகூட எனக்கு வியப்பு ஏற்படுவதில்லை.

ஏதோ, முன்பொரு முறையாகிலும் பாராட்டிப் பேசி யிருக்கிறார்களல்லவா; அதற்கு நன்றி கூறிக் கொள்வோம் என்றுதான் தோன்றுகிறது.

கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திட மனம் இல்லையென்றால், கடமையை நிறைவேற்ற முடியாது.

பாராட்டியவர்களே கண்டிக்கும்போது, அதைத் தாங்கிக் கொள்ளும் மனத் திடம் இருக்கிறதே, அது எளிதிலே பெற முடியாத, ஆனால் விலை மதிக்க முடியாத மிகச் சிறந்த பண்பாகும்.

”சிலர் கேட்கிறார்கள், தி.மு. கழகம்

சட்டசபைக்குப் போய் என்ன சாதித்துவிட்டது?'' என்று.

தி.மு. கழகம் எதைச் சாதித்தது என்று கேட்கும் காங்கிரசுக்காரர்களுக்கு ஒரு முன்னாள் மந்திரி செய்த விமர்சனத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டிலிருந்து அண்மையில் இராஜ்யங்கள் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், டெல்லி வந்து சேர்ந்தார். வந்தவர் டெல்லியிலுள்ள தமிழ்நாட்டு ராஜ்ய சபை உறுப்பினர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு சென்னைச் செய்திகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். தெரியுமா, நண்பர்களே! நான்கூடத்தான் சட்டசபையில் இருந்திருக்கிறேன்; எத்தனையோ முறை சுப்பிரமணியம் அவர்களின் பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன். இப்பொழுதும் கேட்டேன்; ஒரு நாள், காலரியில் உட்கார்ந்து கொண்டு.

மிகவும் பிரமாதம், மிகவும் progress - மிகவும் முன்னேற்றம் - என்று சொல்லிவிட்டு, எல்லோரையும் ஒரு முறை அந்த முன்னாள் அமைச்சர் பார்த்தார். அப்படியா? என்றார்கள் எல்லோரும். ஏன் தெரியுமா? என்று அவரே கேள்வியைப் போட்டுக் கொண்டு சொன்னார், "எல்லாம் அண்ணாத்துரையின் டிரெயினிங் - அண்ணாத்துரையின் பயிற்சி என்று சொன்னார். மந்திரி சுப்ரமணியத்திற்குத் தமிழ் அபிவிருத்தி ஏற்பட்டதிலிருந்து அண்ணாத்துரை யுடைய சட்டசபைப் பிரவேசம் பலனளித்திருக்கிறது என்று அவர்களே ஒத்துக் கொள்ளும் அளவுக்கு, நம்முடைய சாதனைப் பட்டியல் ஆரம்பமாகிறது.

இப்படிப் பேசியதைக் கேட்டு, எனக்கே கூச்சமாக இருந்தது. என்னதான் நம்மிடம் அன்பு இருந்தாலும், அண்ணனைப் பாராட்ட வேண்டும் என்ற பாச உணர்ச்சி இருந்தாலும்,

இப்படிப் பேசத் தேவையில்லையே என்று எண்ணிக் கொண்டேன்.

இந்தப் பாராட்டுதலை, நாலைந்து நண்பர்களை வைத்துக் கொண்டு அல்ல, பல்லாயிரவர் கூடிய மாநாட்டிலே தோழர் சம்பத் பேசினார். 1958 ஜூன் 7, 8 நாட்களில் விருத்தாசலத்தில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில்!

இப்போது, சட்டசபையில் திறமையே காட்டுவதில்லை; அக்கறையே இருப்பதில்லை; அமைச்சர்கள் கேலி செய்கிறார்கள் என்று பேசினால், நான் சிரிக்காமல் என்ன செய்வது, தம்பி! நீதான் சொல்லேன்.

சட்டசபையிலே திறமையே காட்டுவதில்லை என்று கூறுபவர், அமைச்சர் சுப்ரமணியத்துக்கு நல்ல தமிழ் நடைப்

பயிற்சியே நான் சென்றதால் கிடைத்தது என்று ஒரு காங்கிரஸ் காரர் பேசியதை மேற்கோளாகக் காட்டிப் பேசி, மாநாட்டினரை மகிழச் செய்தவர்!! இப்போது, இப்படி! அதற்கு நான் என்ன செய்ய!! சட்டசபையிலே திறமையே காட்டுவதில்லை என்று உங்கள் சம்பத் கூறுகிறாரே, என்று சொல்லி, அமைச்சர் சுப்ரமணியமாவது, சந்தோஷப்பட்டுக்கொள்ள முடியுமா? அவருக்குத் தமிழ் நடையில் பயிற்சியே என்னால்தான் கிடைத்தது என்ற கருத்தை அளித்தவரல்லவா, இன்று இதைக் கூறுகிறார். ஒரு சமயம் என்னிடம் உள்ள பாசம் அப்படிப் பாராட்ட வைத்தது போலும் என்று எண்ணிக் கொள்கிறாயா தம்பி! அதுவும் இல்லை. அதே தொடரில் தோழர் சம்பத் கூறினார்:

”அன்று ஒரு நாள் நான் சட்டசபைக்குச் சென்றிருந்தேன். அன்று நீர்ப்பாசன

திட்டத்தின்மீது விவாதம் நடைபெற்றது. தோழர் கருணாநிதி அவர்கள் பேசினார்கள். அவர் குளித்தலைத் தொகுதிக் குறைகளை மட்டும் சொல்லாமல் குடகுநாட்டுத் திட்டத்தையும் சொல்லிவிட்டு, தமிழ் நாட்டிலுள்ள அத்தனை மாவட்டங்களிலேயும் எந்தெந்த நீர்த்தேக்கத் திட்டங்கள் இருக்கின்றன என்று எண்ணி, காகிதத்திலே திட்டமிடப்பட்டு, கையிலே காசு இல்லையே என்று மூடி வைத்திருக்கிறார்களோ, அத்தனை திட்டங் களையும் பெயரோடு, விவரங்களோடு, நீண்ட ஒரு பட்டியலைச் சொல்லி விட்டு அமர்ந்தார். பிறகு மந்திரி கக்கன் அவர்கள் எழுந்தார். அவருக்கே உள்ள பார்வை யோடு தோழர் கருணாநிதி அவர்களைப் பார்த்துச் சொன்னார் - இவர் எல்லாத் திட்டங்களையும் சொல்லி விட்டார் - வேறு யாரும் சொல்லக் கூடாது என்று நினைத்துக் கொண்டு

எல்லாவற்றையும் சொல்லிவிட்டார் என்று பெருமூச்சோடு தொடங்கிப் பதில் சொல்ல ஆரம்பித்தார். இப்படி நம் தோழர்கள் எந்த இடத்திலே புகுந்து வேலை செய்தாலும், புகழ் மணக்கத்தக்க வகையிலேதான் செயலாற்றுவார்கள். நாம் பெறுகின்ற இடம், நம்முடைய ஆசானுடைய திறன் அது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நல்ல பாதையிலே நாம் நடைபோடுவதால்தான் எவ்வளவு இடர்கள் வந்தாலும், இடறி விழுந்தோம், தவறுகள் செய்தோம் என்று நம்முடைய வரலாற்றிலே ஒரு இடம் - ஒரு வரியைக்கூடக் காட்ட முடியவில்லை.''

எப்படித் தம்பி! பாராட்டுதல்!! கேட்போர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். திறமையுடன் பணியாற்றுகிறார்கள் நமது கழகத்தவர் என்பதற்காக மட்டுமல்ல; இதை "நமது சம்பத்து' எவ்வளவு அருமையாகப் படம்

பிடித்துக் காட்டுகிறார் பார்த்தீர்களா என்பதற்காகவும்தான். இப்போது அதே மக்கள், அதே தோழர் சம்பத், அதே சட்டசபை உறுப்பினர்களைப் பற்றி,"சுத்த மோசம்' என்று கூறுவதைக் கேட்கிறார்கள். என்ன எண்ணிக் கொள்வார்கள்? அவர்களும்தான் சிரிப்பார்கள்.

அதெல்லாம், சந்தோஷமாக இருந்தபோது, போனால் போகட்டும் என்று நாலு வார்த்தை பாராட்டி வைத்தேன் என்று தோழர் சம்பத் கூறுவாரானால், அப்படியானால் இப்போது அவர் கோபத்தால் நாலு வார்த்தை இழிவாகப் பேசுகிறார், என்றுதானே சொல்லுவார்கள்!!

இந்த விதமான பாராட்டுப் பேச்சு, என்னையோ மற்றவர் களையோ மகிழச் செய்வதற்காக அல்ல; ஒரு பிரச்சினையை விளக்க என்பதை, மேலும் பல ஊர்களிலே பேசினார். சென்னையில் 37-வது வட்டத்தில்

”சாதாரணமாகச் சட்டசபைக்குள் நுழைந்தவுடன், எந்த ஒரு கட்சிக்கும் மந்த நிலை ஏற்படுவது இயல்பு. சென்ற முறை கம்யூனிஸ்டு கட்சிக்கும் அந்த நிலை ஏற்பட்டது. ஆனால் சட்ட சபையில், நம் கட்சி நுழைந்தபின், அந்த நிலை மாறி நாம் இரட்டிப்பு மடங்காக வளர்ச்சி பெற்று வருகிறோம். இதற்குக் காரணம் என்ன? அண்ணா அவர்களின் உழைப்பையும், ஆற்றலையும், அனுபவத்தையும், அறிவையும் முன் வைத்து ஆராய்ந்தால், இதற்கு விடை கிடைக்கும். இந்த நாட்டு வரலாற்றிலேயே இப்படிப்பட்டதொரு மாபெரும் சக்தி இதற்கு முன்பு இப்படி வளர்ந்ததில்லை.’’

சென்னை மக்கள் கேட்டு மகிழ்ந்த இதே விஷயத்தை, குடந்தை நகர மக்களுக்கும் தோழர் சம்பத் வழங்கினார்.

”சட்டமன்றத்தில், தி.மு. கழகத்தினர் எதையும் சாதித்து விடவில்லையெனக் கூறுகின்றார் அமைச்சர் சுப்ரமணியம். எப்பொழுதுமில்லாத நிலையில் இப்பொழுது அமைச்சர்கள் சுற்றுப்பயணம் புரிவதே, நம் சாதனைக்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும்.’’

இப்படிப்பட்ட விளக்கம் - பாராட்டுதல் - பல்வேறு ஊர்களிலே உள்ளவர்களும், கேட்கட்டும் என்று வழங்கி வந்தார். நான் நல்ல வாய்ப்புப் பெற்றேன் - தோழர் சம்பத் அவர்கள், அடியோடு கெட்டுவிட்டது இந்த தி.மு.க. என்று கூறி வெளியேறுவதற்கு 7 நாட்களுக்கு முன்பு, சட்டசபையில், நல்லபடிதான் பணியாற்றுகிறார்கள் என்று, கேட்போர் பெருமைப்படத்தக்க விதத்தில் அவர் மாயவரத்தில் பேசியதையும், அமைச்சரை நேருக்கு நேர் வைத்துக்

கொண்டு, திருவண்ணாமலைத் தோழர் ப.உ. சண்முகம் அவர்கள், தேர்தல் நிதி வசூலிப்பது பற்றிக் கண்டனம் தெரிவித்த துணிச்சலையும், பாராட்டிப் பேசியதை; இவ்வளவும் கேட்டான பிறகு, இப்போது, அமைச்சர் சுப்ரமணியம் போன்றவர்கள் பாணியில், இவர்கள் சட்டசபையில் திறமையே காட்டவில்லை என்று பேசினால், என்ன செய்வது! சிரிக்கத்தான் தோன்றுகிறது!!

சட்டசபையில், திறமையாகப் பணியாற்றவில்லை என்று அவர், ஜாடைமாடையாகவேனும் கூறி இருந்திருந்தால், என்னைப் பொறுத்தவரையிலே, கொஞ்சம் திறமையைப் பெற, பாடம் கேட்டாகிலும் பெற, முயற்சி எடுத்துக் கொண்டிருந்திருப்பேன். முயற்சி எடுத்துக் கொண்டாலும், திறமை எனக்கு வருகிறதோ இல்லையோ, அது வேறு

சந்தேகம்! ஆனால் முயற்சியாவது செய்திருக்கலாம். ஆனால் பாராட்டுதலை அல்லவா வழங்கிக் கொண்டிருந்தார்!! நாங்கள் சட்டசபையில் சரிவர வேலை செய்யவில்லை என்று இவர் குறைபட்டுக் கொள்கிறார் என்று எப்படித் தெரிய முடியும்? இப்போது கூறுகிறார் - பிரிந்துபோன பிறகு, இதைக் கேட்டனையா, தம்பி! அமைச்சர் சுப்ரமணியம் அவர்களுக்கு, தைரியம் ஏற்பட்டதே, எப்படி என்று, தோழர் சம்பத் கூறியதை, இன்று ஏதேதோ பேசுகிறவர், அன்று என்ன பேசினார் என்பதைத்தான் கேளேன். கேட்டால், இப்போதைய அவருடைய பேச்சு உனக்கு எரிச்சல் கூட மூட்டாது.

"கௌஹாத்தியில் நேருவையும் எதிர்த்து, இந்தித் திணிப்பைக் கண்டித்துத் துணிந்து பேசியிருக்கிறார், சுப்ரமணியம். இது அவருடைய வாழ்க்கையில் செய்த முதல்

முக்கிய காரியமாகும். அவர் அப்படிப் பேசியிராவிட்டால், நாடு அவரை ஏளனம் செய்யும் என்று தெரிந்துதான் அவர் இப்படித் துணிந்து பேசினார். அந்தத் துணிவு கௌஹாத்தி மாநாட்டிலே அவருக்கு வரக் காரணம், அண்ணாதுரை சட்டமன்றத்திலிருக்கிறார் என்ற நினைவு அவருக்கு இருந்ததால்தான், அண்ணாவுக்கு எதிரிலே அமர்ந்து நிதியமைச்சருக்கு இலேசாகத் தைரியம் வந்தது. அதற்கு முன்பு நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளிலெல்லாம் பந்தல் காலைக் கட்டிக் கொண்டு தலைவர்களை வேடிக்கை பார்த்தவர்தான் அவர்.''

தம்பி! சட்டசபையில் நமது கழகத் தோழர்கள் ஆற்றிய பணியினால், அமைச்சர் சுப்ரமணியத்திற்கு, நல்ல தமிழ் நடை மட்டுமல்ல, துணிவே வந்தது என்று கூறி,

அதற்கு முன்பு அவர், மாநாடுகளில் பந்தல் காலைக் கட்டிக் கொண்டு தலைவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர் என்று பேசி, நம்மை, தோழர் சம்பத் மகிழச் செய்தார். இப்போது, நாம் சட்ட சபையில் திறமையற்றுக் கிடக்கிறோம் என்று பேசி, அமைச்சர் சுப்ரமணியத்தை மகிழச் செய்கிறார். எத்தனை காலத்துக்கு, ஒரே இடத்துக்கு மகிழ்ச்சி தரும் காரியமே செய்து கொண்டிருப்பது! யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!! சில காலம். அமைச்சர் வட்டாரமும் அடையட்டுமே இந்த ஆனந்தத்தை!

தம்பி! சட்டசபையில் நாம் நடந்துகொண்ட தன்மையால்தான் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலிலே நாம் வெற்றி பெற்றோம் என்று நான் கூறி, நீ கேட்டதுண்டா? எழுதிப் படித்ததுண்டா? எனக்கு எங்கே இதெல்லாம் தெரிகிறது, தோழர் சம்பத்தான் அதைப்

பேசினார், புதுவையில் நடைபெற்ற மாநாட்டில் 1959, மே. 2, 3 நாட்களில்.

நமது வெற்றி பற்றி ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறது - இந்த வெற்றி திடீர் என்று அவர்களுக்கு ஏற்பட்டது அல்ல - இடறி விழுந்ததால் ஏற்பட்டதல்ல - அவர்கள் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்து நடந்துகொள்ளும் முறையும், எதை எந்த முறையில் எதிர்க்க வேண்டும் என்று அறிந்து, அந்தப் பண்புடன் அவர்கள் எதிர்க்கின்ற முறையும்தான், அவர்களுக்கு இந்த வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது என்று அந்தப் பத்திரிகை கூறுகிறது.''

தம்பி! சட்டசபையில், நாம் எப்படி நடந்து கொண்டிருக் கிறோம் என்கிற பிரச்சினை இருக்கட்டும் - இப்போதைக்கு - இந்த அளவில்,

பெரிய விஷயத்திலேயே பேதம்

வந்துவிட்டதே, திராவிட நாடு பகற் கனவு என்று கூறுகிறாராமே, அதைப்பற்றி என்ன சொல்வது என்று யோசிப்பாய். இதிலேயும் சிக்கல் இல்லை; சங்கடம் இல்லை.

திராவிட நாடு பகற் கனவு என்று நேரு கூறினார் - ஏற்க மறுத்துவிட்டோம். காமராஜர் கூறினார் - கவைக்குதவாப் பேச்சு என்றோம்.

பெரியார் பேசினார் - போக்கை மாற்றிக்கொண்டார் என்றோம்.

இப்போது தோழர் சம்பத் பேசுகிறார்! அதனால் என்ன?

ஆனால், பலர் கூறியும் நமக்கு, "திராவிட நாடு' பிரச்சினையில், ஏன் அவ்வளவு அழுத்தமான அசைக்க முடியாத நம்பிக்கை இருந்து வருகிறது? அந்த நம்பிக்கையை நாம் அவசரப்பட்டு மேற்கொள்ளவில்லை - ஆத்திர உணர்ச்சி காரணமாக மேற்கொள்ளவில்லை.

மிகப் பெரியவர்கள், மேதைகள் என்ன சொல்வார்களோ என்று கவலைகொள்ள வில்லை. நமது இதயகீதமாக்கிக் கொண்டோம். அந்த இலட்சியத் திலிருந்து நாம் வழுக்கிவிடக் கூடாது - பேரம் பேசுவது - குறைத்துக் கேட்பது - சாயலைக் கேட்பது - இலட்சியவாதிகளின் போக்காக இருத்தல் ஆகாது. இலட்சியவாதியின் பிணத்துக்குப் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு வேண்டுமானால் காரியவாதி, பேரம் பேசி, கிடைத்ததைப் பெற்று மகிழ முனையலாம். நமக்கு, இலட்சியம், இறுதி மூச்சு உள்ள வரையில்! இதை வெறி என்று கூறினும், நெளிந்து கொடுக்கத் தெரியாத தன்மை என்றுரைக்கினும், கவலை இல்லை! இப்படிச் சிலர், நாளைக்குத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, கொடுத்ததைக் கொடுங்கள் என்று கேட்டுப் பெற்று இன்புற்றாலும்,

பரவாயில்லை! இலட்சியம் நமக்கு! விடுதலை, பகுதி பகுதியாகத் தரப்படட்டும் என்று பேசுபவர், இலட்சியவாதிகளாகார் - என்று நான் படித்த ஏடுகள் கூறுகின்றன!

இந்த நம்பிக்கையுடனேதான் தோழர், சம்பத் லால்குடி மாநாட்டிலே பேசி, கேட்போர்களை, விடுதலை ஆர்வம் கொந்தளிக்கும் உள்ளத்தினராக்கினார்.

அந்தக் கொந்தளிப்பு, சிவாஜி கணேசனை, மேடை ஏறி, "அண்ணா ஆணையிட்டால், நான் பட ஒப்பந்தங்களை எல்லாம் கிழித்தெறிந்துவிட்டு, போரில் ஈடுபடுவேன்' என்று பேச வைத்தது.

தோழர் சம்பத், நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவர் ஆற்றிய உரை, அவரை நம்முடன் பிணைத்து வைத்திருக்கிறது, அது இது:

"இயக்கத்தின் தலைவர்களான பெரியார்,

அண்ணா ஆகியோர் சிறையிலிருந்தபோது, வேலூரில் தமிழர் மாநாடொன்று பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் எஸ்.எஸ். பாரதியார் போன்ற பெரும் புலவர்கள் கலந்து கொண்டனர். வடமொழி ஆதிக்கம் வடவர் ஆதிக்கத்துக்கு முன்னேற்பாடு என்பதை அறிந்து கொண்ட அம் மாநாடு, தமிழ்நாடு தமிழருக்காக வேண்டும் எனத் தீர்மானித்தது. சிறை சென்ற தலைவர்கள் மீண்டனர். மீண்ட தலைவர்கள் அந்தத் தீர்மானத்தை இயக்கத்தின் இலட்சியமாக்கினர். அச்சமயத்தில் நமது இயக்கத்தில் இருந்த சில ஆந்திர, மலையாள, கன்னடத் தோழர்கள், வடவரை எதிர்த்துத் தமிழகம் மட்டும் ஏன் பிரிய வேண்டும்? ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய திராவிட மொழிகள் பேசும் மாகாணங்களும் பிரிந்து தீர வேண்டும்.

அதற்கும் சேர்த்து ஓர் திட்டம் தேவை என்றனர். அப்போதே காஞ்சியில், அண்ணா அவர்கள் திராவிடர் கழகம் என்று ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து இருந்தார்கள். அந்த அடிப்படையில் சிந்தித்து விவாதித்துத்தான் தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய சுய நிர்ணய உரிமையோடு கூடிய நாடுகள் வலிந்து"இணைந்து' அமைக்கும், திராவிடக் கூட்டாட்சியைப் பெற, இயக்கம் இனிப் போராடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் அக்கூட்டாட்சி, குடியரசாக மட்டுமின்றி, ஒரு சமதர்மக் குடியரசாகவும் விளங்க வேண்டும் என்பது நமது இலட்சியமாக அமைய வேண்டும் என விரும்பிய அண்ணா அவர்கள், சேலத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் முக்கியமான இரண்டு தீர்மானங்களைக் கொண்டு வந்தார். ஒன்று, ஜஸ்டிஸ் கட்சியின்

பெயரைத் திராவிடர் கழகமாக மாற்ற வேண்டுமென்பது, மற்றையது கட்சியில் சர்க்கார் அளித்த இராவ்பகதூர், சர், போன்ற பட்டங்களைத் தாங்கிக் கொண்டு எவரும் இருக்கக் கூடாது என்பதாகும். கட்சியில் இருந்த ஆலை அரசர்கள், செட்டிநாட்டு வேந்தர்கள் ஆகியோர் கட்சியை விட்டு ஓட்டம் பிடித்தனர். அரண்மனையில் இருந்த கட்சியை அண்ணா அவர்கள் அந்தத் தீர்மானங்கள் மூலம் மைதானத்திற்குக் கொண்டு வந்து மக்கள் கட்சியாக மாற்றினார். அதன் பிறகு, சமுதாயத்தில் மறுமலர்ச்சியையும், பொருளாதாரப் பொது உடைமையையும், அரசியலில் திராவிட விடுதலையையும், இலட்சியங்களாகக் கொண்டு, திராவிடர் கழகம் நாட்டு மக்களை ஒன்று திரட்டியது. பின்னர், நல்ல ஜனநாயகப் பண்பு வளரத் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பு

முறையை வகுத்தோம்; உழைத்தோம். இவ்வளவு குறுகிய காலத்தில் மகத்தான மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கிறோம். என்றுமில்லாத அளவிற்கு நாட்டு விடுதலைத் திட்டத்திற்கு மக்கள் ஆதரவும் பெருகி நிற்கிறது.

அதுவும் 1947 ஆகஸ்டு 15-ல், இந்திய உபகண்டத்தின் ஆட்சி முறை வடநாட்டுக்காரர்கள் வசம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, கடந்த ஆறு ஆண்டுகளில் நமது நாடு அடைந்திருக்கும் அவல நிலை, ஆரம்பத்தில் நமது திட்டம் தேவையற்றது, ஆபத்தானது என்று எண்ணியிருந்தவர்களின் ஆதரவை எல்லாம் கூடப் பெற்றிருக்கிறது. வடவர் கையில் ஆட்சி சிக்கிய நாள் முதலாய் நமது நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி ஆகிய இந்த நிலைமைகளும், பட்டினிச் சாவு - பசியால், வேலையில்லாத் திண்டாட்டத்தால்

குடும்பத்தோடு தற்கொலை, குற்றங்கள் மலிவு ஆகியவை சர்வசாதாரணமாகிவிட்டன. பருவ மழைகளும் தவறி விட்டதால், வடவர் சுரண்டல் திரை மறைவில் நடைபெற முடியாமல், பட்டவர்த்தனமாக எல்லோர் கண்ணுக்கும் தெரியத்தக்க அளவில் நடைபெற்றது. இங்கு பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், என்னும் துன்பச் சூறாவளி கடந்த ஆறு ஆண்டுகளாக வீசிவரும் இதே காலத்தில், வடவர் வாழ்விலே வளம், ஏற்றம், ஆகியவைகளைக் கண்டு இன்புற்று வாழ்கின்றனர்.

டில்லிக்கு நாம் செலுத்தும் வரிகள் அனந்தம். ஆனால் அவைகளில் ரூபாய்க்கு எத்தனை தம்பிடி நமக்குச் செலவழிக்கப் படுகிறது என்று பார்க்கும்போது, பெரியதொரு ஏமாற்றம்தான் கண்ணுக்குத் தெரிகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில்

டில்லி சர்க்காரின் கஜானாவின் ஆதரவோடு ஆரம்பித்து நடைபெற்று வரும் அணைக்கட்டுகள், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம், ஹிராகுட் அணைக்கட்டுத் திட்டம், கோசி நீர்த்தேக்கத் திட்டம் போன்ற பெரும் பெரும் திட்டங்கள், சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலை, பென்சிலின், டி.டி.டி. மருந்து ஆகிய மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள், இன்னும் எண்ணற்ற தொழில் திட்டங்கள் ஆகியவைகள் அனைத்தும் வடநாட்டில் நடை பெற்று வருகின்றன. இங்கு சிறு சிறு நீர்த்தேக்கத் திட்டங் களுக்குக்கூட டில்லியின் பண உதவியில்லை.

நாம் வருஷா வருஷம் டில்லிக்கு இறக்குமதி ஏற்றுமதி வரிகள், வருமான வரி, புகையிலை வரி, தபால் கட்டணங்கள், இரயில்வே கட்டணங்கள் ஆகியவை மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களைக்

கொட்டியழுகிறோம். நமது நாட்டில் 100-க்கு 80 பேர் படிப்பில்லாதவராய் இருத்தலாலும், படித்தவரில் பெரும் பகுதி சுயநலமிகளாய் நாட்டைப்பற்றிய கவலையற்றிருத்தலாலும், இவைகள் விளைவிக்கும் பெருநஷ்டத்தைப் பற்றியும் நம் மக்கள் முழுதும் அறிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் இருக்கிறது. டில்லி சர்க்காரின் வருமானமாகிய சுமார் 400 கோடி ரூபாயில் ஏறத்தாழ 200 கோடி ரூபாய் ஏற்றுமதி இறக்குமதி வரிகளின் மூலம் கிடைக்கிறது. அதில் நமது பங்கு மிக அதிகம். இங்கிருந்து கொச்சி, நாகை, சென்னை, விசாகப்பட்டினம், ஆகிய துறைமுகங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் மிளகு, ரப்பர், மணிலாக் கொட்டை ஆகிய ஏற்றுமதிப் பொருள்களுக்குக் கோடிக்கணக்கில் டில்லி சர்க்காருக்கு வரி செலுத்துகிறோம். அதைவிட அதிகமாக இங்கு இறக்குமதி ஆகும் பொருள்களுக்கு வரி

தருகிறோம். இங்கிலாந்தில் செய்யப்படும் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கு 15 ரூபாய்க்கு அங்கு விலையாகிறது என்றால், சென்னைத் துறைமுகத்தில் அது இறங்கியதும் அதற்கு இறக்குமதி வரி 10 ரூபாய் டில்லி அதிகாரிகளால் வசூலிக்கப் படுகிறது. உடனே சென்னையில் உள்ள மொத்த வியாபாரிக்கு அதன் அடக்கம் 25 ரூபாய் ஆகிறது. அவன் சில்லறை வியாபாரிக்கு 30 ரூபாய்க்கு விற்கிறான். அவன் 35 ரூபாய்க்கு யாரோ ஒரு முத்தனுக்கு விற்கிறான். அவனுக்குத் தெரியாது, தான் விளக்கிற்கெனத் தந்த 35 ரூபாயில் 10 ரூபாய் டில்லிக்கு வரியாகச் செலுத்தப்பட்டுள்ளது என்பது. இவ்வாறே நாம் வாங்கும் வெளிநாட்டுச் சாமான்களான மோட்டார், சைக்கிள், கடியாரம், பேனா, வாசனைத் தைலங்கள், பொம்மைகள், எஞ்சின்கள், இயந்திரங்கள் அனைத்திற்கும்

கோடிக்கணக்கில் வரி தருகிறோம் - வரி தருகிறோம் என்ற நினைவே இல்லாமல். புகையிலை வரியின் மூலம் மட்டும் 10 கோடி ரூபாய் சென்ற ஆண்டில் நாம் கொடுத்திருக்கிறோம். வேறு எந்த ராஜ்யமும் தராத அளவு கொடுத்திருக்கிறோம். இவ்வளவு வரிகளை வாரிக் குவித்துக் கொள்ளும் டில்லி, நமக்கெனத் தந்தது என்ன? தொல்லை தவிர வேறில்லை. எல்லோருக்கும் பொது என்பதாக ஒரு இராணுவத்தைக் கட்டி வைத்துத் தீனி போடுவதைத் தவிர, வேறு எந்தக் குறிப்பிட்ட காரியத்திலும் நமக்குப் பங்கு இல்லை. இராணுவமும் வடநாட்டில் உள்ள அநாகரிகமான இந்து முஸ்லீம் பிரச்சினையைத் தீர்க்க அடிக்கடி பயன்படுகிறதே தவிர, நமக்குச் செய்ததென்ன? இராணுவம் துணைக்கு வர வேண்டிய எத்தனையோ வாய்ப்புகளில் நாம்

ஏமாந்துவிட்டிருக்கிறோம். மழையின்மையால் கிணறுகள் நம் நாட்டில் வறண்டு போயுள்ளன. இராணுவத்தினரும், அவர்கள் வசமுள்ள பெரிய இயந்திரங்களும் கிணறுகளை ஆழப்படுத்தித் தந்திருக்கலாம். தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் புயல் வீசிப் பெரும் சேதம் விளைந்தபோது, தவித்த மக்களுக்கு இராணுவம் துணை புரிந்திருக்கலாம். செய்யவில்லை. எப்படிச் செய்யும், ஆதிக்கமும் அதிகாரமும் டில்லியில் குவிக்கப்பட்டிருக்கும்போது? இப்படி நம்மிடம் இருந்து வரியின் பெயரால் டில்லி செல்லும் கோடிக்கணக்கான ரூபாய்கள் அத்தனையும் வடநாட்டில் வாழும் மக்களின் ஏற்றத்திற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

இந்திய உபகண்டத்தின் பெருந்தொழில்கள் அனைத்தும் வடநாட்டு முதலாளிகளிடத்திலே, சுருக்கமாகச்

சொன்னால், இந்தியப் பொருளாதாரமே வடவரின் கைப்பொம்மையாய் இருக்கிறது. இந்த நிலையில் டில்லியின் முழு அதிகாரத்துடன் வீற்றிருக்கும் மத்திய சர்க்காரும் வடவரின் கையிலே. சர்க்கார் இமய முதல் குமரி வரை உள்ள மக்களிடமிருந்து பெறும் வரிப்பணம் முழுவதையும் வடநாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையிலேயே செலவழித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் திராவிடம் டில்லித் தொடர்பை அறுத்துக்கொண்டு தனியரசாய் அமைவதை விரும்பாதவன் ஒன்றும் அறியாத ஏமாளியாய் இருக்க வேண்டும். அல்லது எல்லாம் தெரிந்தும், கொள்ளைக்காரர்களிடம் இலஞ்சம் வாங்கிக்கொண்டு, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகியாய் இருக்க வேண்டும்.

ஏனெனில், நாட்டின் இன்றைய

அரசியலில், சுதந்தரமற்று டில்லியின் கட்டளைகளை எதிர்நோக்கி வாழ்ந்து கொண் டிருக்கும் அடிமை நிலை, பொருளாதாரத்தில் பறி கொடுக்கும், கொள்ளை கொடுக்கும், ஏமாந்த நிலை ஆகிய நிலைமைகளும், திராவிட நாட்டு விடுதலையைத்தான் மருந்தாகக் காட்டுகின்றன.

இந்த நிலைமைகள் மட்டுமல்லாமல், வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது, வெள்ளையன் வருவதற்கு முன் இந்தியா என்ற அரசியல் அங்கம் (ல்ர்ப்ண்ற்ண்ஸ்ரீஹப் ன்ய்ண்ற்) உலகில் இருந்ததாகவே தெரியவில்லை. அதாவது ஒரு சர்க்காரின் கீழ் இந்தியா என்ற நாடு இருந்ததாக இல்லை. இந்தியா என்பது ஒரு பூகோளப் பெயராகவே திகழ்ந்து வந்திருக்கிறது. எப்படி, பல தனித் தனி நாடுகளைக் கொண்ட ஐரோப்பாவின் ஒரு பிரதேசத்திற்கு பால்கன் தீபகற்பம் என்று

பெயரோ, மற்றும் ஸ்வீடன், நார்வே ஆகிய இரு நாடுகளையும் சேர்த்து ஸ்காண்டிநேவியா என்று அழைக்கிறோமோ, அதேபோல் இந்திய தீபகற்பம் என்று ஆசியா கண்டத்தின் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் பூகோளப் பெயரே தவிர, ஒரு சர்க்காரின் கீழ் இருந்த ஒரு நாட்டின் பெயராக அது விளங்கியதில்லை.

வெள்ளையனுடைய துப்பாக்கிகள், மெல்லச் சென்னையை வென்று, ஹைய்தர் அலி, திப்பு ஆகியோரை வென்று, மராட்டியத்தைப் பிடித்து, மொகலாய மன்னர்களைச் சதி செய்தும், வென்றும், இந்திய தீபகற்பத்தில் கைப்பற்றிய பிரதேசங்கள் அனைத்தையும் சேர்த்து, இந்திய சாம்ராஜ்யம் (Indian Empire) என அழைத்தபோதுதான், இந்தியா என்ற பூகோளப் பெயர், ஒரு அரசியல் பெயராக மாறிற்றே தவிர, வேறில்லை என்பது

விளங்குகிறது. அன்னியனிடம் ஒரே சமயத்தில் தோற்ற இனங்கள் என்பதில் ஒரு ஒன்றுபட்ட தன்மை, நமக்கும் வடவர்களுக்கும் ஏற்பட்டது தவிர, கலாச்சாரத்தில், நாகரிகத்தில், மொழியில், முன் வரலாற்று நிகழ்ச்சிகளில், வடக்கையும் தெற்கையும் ஒன்றுபடுத்தி ஓரினமாக்கக் கூடியது எதுவும் இல்லை. வெள்ளையனுடைய இந்தியா என்னும் பொது சர்க்காரின் கீழ் வாழ்ந்த, கடந்த இருநூறு ஆண்டுகளில் கூட அது ஏற்படவில்லை. அது ஏற்படவில்லை என்பதை நிரூபிக்க ஆயிரம் நிகழ்ச்சிகள் அடுத்தடுத்துக் கூறலாம்.

ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் எடுத்துக்காட்ட விரும்பு கிறேன். பல மாதங்களுக்கு முன்பு பீகாரில் பஞ்சம் வருமோ என அந்தச் சர்க்கார் அஞ்சி பஞ்ச நிவாரணத்திற்காகச் சில பணிகளை

மேற்கொண்டனர். அவைகளில் ஒன்று, வாய்க்கால் வெட்டுவது, அந்தச் சமயத்தில், நேரு அவர்கள் அத்தகைய வாய்க்கால் வெட்டுமிடம் ஒன்றிற்குப் பறந்து சென்று, அங்கு குதித்தார். சட்டையின் கைகளை மேலே சுருட்டிவிட்டுக் கொண்டு, பக்கத்திலிருந்தவனிடமிருந்த மண்வெட்டியைப் பிடுங்கினார். விழியால் போட்டோக்காரனை அழைத்தார். அவன் படம் எடுத்தான். இவர் வெட்ட ஆரம்பித்தார். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஒரு விளம்பரப் பிரியர் என்பதற்கல்ல. பீகாரிலே பஞ்சம் என்றதும் அவருடைய சதை ஆடுகிறது!

உடனே ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமும், துயர்படும் "அவரது' மக்கள் மத்தியில் சென்று ஆறுதல் கூறவேண்டுமென்ற அக்கறையும் பிறக்கிறது. அது மட்டுமல்ல; நம்மெல்லோருக்கும்

பொதுவான டில்லி கஜானாவிலிருந்து பீகார் பஞ்ச நிவாரணப் பணிகளுக்கு 4 கோடி ரூபாய் வரை உதவவும் அவருக்கு ஆசை பிறக்கிறது. அதே நேரத்தில்கூட அல்ல, கடந்த 6 வருட காலமாக தென்னாட்டில் நாடு முழுவதும் பஞ்சம். பஞ்சப் பிரதேசங்களை வந்து பார்க்க வேண்டுமென்ற எண்ணமும் இல்லை. பல முறை கெஞ்சித் தெண்டனிட்டுக் கேட்டும் நேருவின் சர்க்கார் ஒரு தம்பிடிகூட நம்மிடமிருந்து பறித்த பணத்தில் உதவியதாகவோ, கடனாகவோகூட அளிக்கவில்லை. மேலும் அண்மையில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் பெரும் புயல் அடித்து, மக்கள் நடுங்கும் குளிரில் தெருத்தெருவாக அலைந்தனர், ஒண்டக்கூட இடமின்றி. நேருவுக்குத்"தோன்றவில்லை, அந்தத் துயர்படும் மக்களைப் பார்க்க வேண்டுமென்று. ஆனால், அதே நேரத்தில்,

புயலால் தாக்குண்ட பிரதேசத்திற்கு முந்நூறு மைல் தொலைவில் திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யத்தில், டில்லியின் அரசியல் புழுக்கத்தினின்றும் ஓய்வுபெற, சில நாட்களை உல்லாசமாகக் கழிக்க வந்திருந்தார். உப்பங்கழிகளில் உல்லாசப் படகேறிக் குடும்பத்தோடு இன்பப் பொழுது போக்கினார், கேரளத்துத் தென்னஞ் சோலைகளினூடே. பின் அது சலித்தபோது மலை மீதேறி அங்கு அடவியில் உள்ள வனவிலங்குகளான யானை களையும், புலியையும், ஓநாயையும் மானினங்களையும் கரடிகளையும் கண்டு களிக்க விரும்பினார். மலையில் மகாராஜாவின் கண்ணாடி பங்களாவில் இரவு முன்னேரத்திற்கே சென்று, பலகணி வழியே கீழே ஓடும் கானாற்றில் நீர் பருக வந்த வனவிலங்குகளையும், நிலவொளியில் காதல்புரியும் காட்டானை

ஜோடிகளையும் கண்டு ரசித்து, களிப்படைந்து கொண்டிருந்தார் எனச் சேதி வந்தது.

இதை ஏன் இவ்வளவு ஆத்திரமாகக் கூறுகிறேன் என்றால், பீகாரில் பஞ்சம் என்றதும் துடித்த அவரது உள்ளம், ஆடிய அவரது உடம்பு, தமிழகத்தில், ராயல சீமையில் பஞ்சம் என்ற போதும், தஞ்சையில், திருச்சியில் புயல் என்றபோதும் ஆடாமல் அசையாமல் அமைதியாக - புதுவித இன்பங்களைத் தேடிக் கொண்டிருந்தது என்பதைப் புரியாதவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே இதைச் சொல்லுகிறேன்.

இத்தனைக்கும் வடநாட்டாருக்குள்ளேயே நேரு ரொம்பவும் யோக்கியமானவர், கருணையுள்ளவர் என்று பெயர். இவரே, "ரோம் நகரம் பற்றியெரியும்போது பிடில் வாசித்த நீரோ'வாகி விட்டார் என்றால், இனி

இவருக்குப் பின் வரும் இவரது வாரிசுகள் எப்படி இருப்பார்கள் என்பதை நாமே யூகித்துக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தியாவுக்குப் பெயரளவில் சட்ட ரூபமாய் வெள்ளையரும் வடவரும் செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தால் ஒரு சர்க்கார் என்றாகிவிட்டதேயொழிய, இந்தியர்கள் என்று ஒரு இனம் தோன்றவில்லை. அவர்களுக்கு முன்னும் இருந்ததில்லை; இனியும் தோன்ற வழியில்லை. நமக்குத் தலைவன் வடநாட்டில் இல்லை. வடநாட்டில், வடநாட்டு மக்களுக்குப் பாடுபடும் வடநாட்டுத் தலைவர்கள்தான் உண்டு. நமக்குத் தலைவர்கள் நம் நாட்டில்தான் தோன்ற முடியும். வீணே வடநாட்டுக்காரர்கள் சிலரை நம் தலைவர்களென நம்புவதும், அங்குத் தலைவர்களைத் தேடுவதும் வீண் வேலையாகும். ஆகவே, இன்றைய

திராவிட மக்களின் வாழ்க்கை நிலையும் வடவர்கள் அவர்களின் தலைவர்கள் ஆகியோருடைய எண்ணங்களும், செயல்களும், எல்லாம் திராவிட நாட்டுப் பிரிவினை ஒன்றுதான் திராவிடரின் நல்வாழ்வுக்கு வாக்குறுதியாய் இருக்க முடியும் என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

அடுத்து நம் மக்களிலே சிலருக்கு ஓர் அச்சம் உண்டு. இந்தியா இவ்வளவு பரந்த நாடாய் இருப்பதால்தான் ஒரு பாதுகாப்பு இருக்கிறது. பக்கத்து நாடுகள் படையெடுக்கப் பயப்படுகின்றன. பிரிந்து சிறுசிறு நாடுகளாய்ச் ”சிதறி’ விட்டால், பழையபடி ஏதாவது ஒரு அன்னிய அரசு வெள்ளையனைப் போல மீண்டும் அடிமை கொண்டுவிடும் என்று அஞ்சுவோரும் உள்ளனர். திராவிட நாடு கூடாதென்பதற்கு அந்த அச்சத்தை வாதமாகப்

பயன்படுத்துவோரும் உள்ளனர்.

இன்றைய உலகு “பானிப்பட்‘, ”பிளாசி‘,”வந்தவாசி‘ காலத்திலில்லை. நவாபுகள், சுல்தான்கள் காலமல்ல. இன்றைய உலகில், ஒரு நாட்டின் பாதுகாப்பு அதன் பரப்பு எவ்வளவு என்பதிலேயோ, இராணுவம், விமானங்கள், கப்பல்கள்ஆகியவை எத்தனை உண்டு என்ற கணக்கிலேயோ இல்லை. அந்தந்த நாட்டு மக்களின் விவேகத்திலும், அவர்களுக்கு அமையும் தலைவர்களின் ஆற்றலிலும், நாணயத்திலும்தான் ஒரு நாட்டின் பாதுகாப்பு இருக்கிறது. முன்புபோல் ஒரு நாடு சின்ன நாடாய் இருக்கிறது என்பதற்காக வம்பிழுத்து, ஒரு பெரிய நாடு போர் தொடுத்துவிட முடியாது. மற்ற நாடுகள் வாளா இரா.

ஆகவே, ஒரு நாட்டின் பாதுகாப்பு என்பது, இராணுவத்தின் அளவையோ,

பரப்பளவையோ, பொறுத்ததல்ல. ”திராவிடம் சிறுநாடு ஆகவே பாதுகாப்பில்லை’ என்பது பத்தாம்பசகளி ன் பேதமைக் கூற்றே தவிர வேறில்லை.

நாளுக்கு நாள் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தக் கூடிய வகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இச்சமயத்தில் திராவிடத்தில் எந்தக் கட்சியாக இருந்தாலும், திராவிட விடுதலையைக் குறிக்கோளாக வைத்துக் கொள்ளாமல் வேறு எத்தகைய உலக மகா மேதாவிகளின் தத்துவங்களை இலட்சியங்களாகக் கொண்டிருந்தாலும், அது மக்களையும் வாழ வைக்காது, தானும் வாழாது.’’

அறியாப் பருவத்தில், ஆர்வத்தின் மிகுதியினால், ஆகுமா ஆகாதா என்பதறியாமல், காலம் போகும் போக்குத்

தெரியாமல், லால்குடியில் பேசிவிட்டேன் - நானென்ன மாறுதலின் மேன்மையை அறியாதிருக்க வேண்டுமா என்று கேட்கப்படுமேல். இதனைக் கூறுவேன், அந்த ஆர்வமும் நம்பிக்கையும், 1959 செப்டம்பர் 12, 13 நாட்களில், பூவிருந்தவல்லியில் நடைபெற்ற, தி.மு. கழக மாநாட்டின்போதுகூட அல்லவா, கேட்போருக்கு எழுச்சியூட்டிற்று. ”திராவிட நாடு’ எனும் இலட்சியத்தைக் குலைத்து, குறைத்து, பழிதேடிக் கொள்ளாதீர்கள் என்றல்லவா, சந்தேகப்படுபவர்களை ஆயாசப்படுபவர்களை எச்சரித்தார்.

”தமிழகத்தில் சிலர் குறை கூறுகிறார்கள் - ஏன் கேரளத்தையும் ஆந்திரத்தையும் கருநாடகத்தையும் சேர்த்துக் கொண்டு போக வேண்டும் என்று. அவர்கள் அவசரக்காரர்களும் ஆற்றலற்றவருமாவர். ஆத்திரப்பட்டு இப்படிப் பேசுகிறார்கள்.

நம்மிடம் ஆற்றலும் இருக்கிறது; நீண்ட ஆயுளும் இருக்கிறது. நல்ல நம்பிக்கையுடன் நாம் நடைபோட்டால் அந்த உண்மைப் பாதையில் வெற்றி பெற முடியும். அவசரப்படுவோமானால் நடைபெற வேண்டிய நல்ல காரியத்தைக் குலைத்த பழி வருமே தவிர நாட்டுக்கு நல்லதாகாது.''

1959-ல் இந்த ஆர்வம் இருந்தது; இப்போது அவநம்பிக்கை வரக் காரணம்?

1959-க்குப் பிறகு, பல நாடுகள் விடுதலை பெற்றதைப் படித்தோம்.

தனி அரசு நடத்தக்கூடிய வசதியற்றவைகள் என்று பொருளாதார நிபுணர்கள் கூறத்தக்க நிலையில் உள்ள நாடுகள் கூட விடுதலை பெற்று - பிற நாடுகளை விடுவிக்கும் வீரப் பணியில் ஈடுபட்டிருக்கக் காண்கிறோம். இப்போது

ஏன் அவ நம்பிக்கை? கொடுத்ததைக் கொடுங்கள் என்று நாம் கீழே இறங்கிக் கை ஏந்த வேண்டிய அவசியம் என்ன வந்தது? என்னமோ, வடநாட்டு ஏகாதிபத்தியம் நம்மைச் சந்தித்து, "நீ கேட்பது மிக அதிகம் அப்பா! அவ்வளவு தர முடியாது. கொஞ்சம் பெரிய மனது செய்து, நீ கேட்பதன் அளவைக் குறைத்துக் கொள். குறைத்துக் கொண்டால் தருகிறேன்'' என்று சமாதான உடன்படிக்கைக்கு வந்து நிற்பது போலவும், இந்தச் சமயத்தில், நாம், சிறிது விட்டுக் கொடுத்து, சமரசமாகிக், கொடுத்ததைப் பெற்றுக் கொண்டு திருப்தி அடைய வேண்டும் என்ற கட்டம் வந்ததுபோலவும், இப்போது நாம், நமது கோரிக்கையைக் குறைத்துக் கொள்ளக் காரணம் என்ன? கழகத் தோழர்களையோ, பொது மக்களையோ, நாம், இப்படி ஒரு மாறுதலுக்குத் தயாராகுங்கள் என்று கூறிக்

கொண்டு இருந்திருக்கிறோமா?

பழி ஏற்படும்! பாதையை மாற்றாதீர்!? - என்று கழக மாநாட்டிலே 1959-ல் பேசுகிறோம். இப்போது கிடைக்கக் கூடியதைக் கேட்போம் - நடக்கக்கூடியதைப் பார்ப்போம் என்று பேசுவதா? நாம் எந்தெந்த நேரத்தில் மாறுகிறோமோ, அதே வேளையில், நமது முன் பேச்சுக்களைக் கேட்டு, நம்பிக்கை கொண்டு, நாம் காட்டிய வழி நடந்து, கஷ்ட நஷ்டம் ஏற்றவர்கள், சரி! அவர்கள் மாறிவிட்டார்கள், நாமும் மாறி விடலாம் என்று வந்துவிட வேண்டுமா? வந்துவிடுவார்களா? முறைதானா அது?

இதற்கு, பெரியார், திராவிட நாடு வெங்காய நாடு என்றாரே, அப்போதே, ஆமாம்! வாடைகூட அடிக்கிறது என்று கூறி விட்டுவிட்டு வந்துவிட வேண்டும், என்று யோசனை கூறி யிருக்கலாமே.

அவராவது, கேட்கும்போது ஒருகணம், நியாயந்தான் என்று எண்ணத்தக்க காரணத்தைக் காட்டினாரே! ”எல்லாம் ஒண்ணா இருந்தானுங்க - திராவிட நாடு கேட்டோம் - இப்பத்தான் ஆந்திராக்காரன் போயாச்சி - மலையாளத்தான் பிரிஞ்சாச்சி - கன்னடத்தானும் போனான் - இப்ப ஏன் திராவிட நாடு, வெங்காய நாடு?’’ - என்று பேசினாரே, அப்போது கழகத்தவரைக் கூட்டி, திராவிட நாடு பகற்கனவு என்று சொல்ல முற்பட்டோமா? தவறு, என்றாவது தோன்றிற்றா நமது மனதுக்கு? அவர் சொல்லிக் கொள்ளட்டும், நமக்குக் கவலையில்லை என்று சொன்னோம். சொன்னோமா? சொன்னார். யார்? தோழர் சம்பத்து, 1959 அக்டோபர் 17, 18-ல் சென்னை மாநாட்டில் - தெளிவாக - அழுத்தந் திருத்தமாக.

”ஆந்திரத்தில் நம் கழகம் இல்லை என்று

காங்கிரசுக் காரர்கள் சொல்வதற்காக நாம் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. நமக்கு, நமது இலட்சியத்தின்மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. நாம் பொறுப்புள்ளவர்கள். அவசரத்தினாலும் சில்லறையில் உள்ள நாட்டத்தினாலும் தமிழ்நாடு போதும் என்று சொல்லுபவர்கள் சொல்லட்டும் - நமக்குக் கவலையில்லை.''

இப்படி பேசிவிட்டு இப்போது தமிழ்நாடு போதும் என்று இவரே பேசினால், கேட்பவர்களுக்கு என்ன சொல்லத் தோன்றும்? பெரியார், தமிழ்நாடு போதும் என்று சொன்னதற்கு இவர் என்ன பதில் சொன்னாரோ, அதேதானே நினைவிற்கு வரும்? அதைத்தானே சொல்லத் தோன்றும்.

திராவிட நாடு திராவிடருக்கே எனும் இலட்சியம் இன்று "பகற்கனவு' பட்டியலில் சேர்க்கப்படுகிறது. எனக்கோ தம்பி! அந்த

இலட்சியத்திலே இம்மி அளவும் பற்றுக் குறையவில்லை; நம்பிக்கை தளரவில்லை; எனினும், என்னால், அதனை, தோழர், சம்பத் சொன்னது போன்ற அழுத்தந்திருத்தமான முறையிலே சொல்லத் தெரியவில்லை. அதனால், மறுபடியும், அது குறித்துத் தோழர் சம்பத் பேசியிருப்பதைத்தான், நான் மேற்கோள் காட்ட நேரிடுகிறது. இது 1958-ல் திருவாரூரில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் பேசியது.

"இத்தாலிய நாட்டு விடுதலை வீரன் மாஜினி மக்களைப் பார்த்துச் சொன்னான்: இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்கான தலைப்பைத் தந்துவிட்டோம். அதனுடைய அத்தியாயங்களை எழுத வேண்டியது உங்கள் கடமை என்று.

"அதைப்போலத்தான் நம்முடைய அரிய தலைவர் அண்ணா அவர்கள்,

திராவிட நாட்டின் எதிர்கால வாழ்வுக்கான நல்ல தலைப்பைத் தந்திருக்கிறார்கள். அதுதான்"திராவிட நாடு திராவிடருக்கே'' என்பது. அதனுடைய அத்தியாயங்களை, பாகங்களை, வரிகளை எழுத வேண்டிய கடமை உங்களிலே எல்லோருக்கும் உண்டு என்பதை எண்ணிக் கொள்வேன்.''

தம்பி! நம் எல்லோர்க்கும் உள்ள கடமையைக் கவனப்படுத்தியவர். இன்று சொல்வது என்ன? அதுவும் 7-4-61-ல், தி.மு. கழக வரலாற்று வெளியீட்டு விழாவை நடத்தி வைத்துவிட்டு, 9-4-61-ல் தி.மு. கழகத்தை விட்டு விலகி, 19-4-61-ல் திராவிட நாடு பகற்கனவு; தமிழ்நாடுதான் பலிக்கும் என்று பேசுகிறார்.

உன்னாலும் என்னாலும் முடியுமா இந்த மின்னல் வேக மன மாற்றம் - திடீர் முடிவு!

மனமார, நம்பிக்கை சரிந்துவிட்டது

என்றே வைத்துக் கொள்வோம். கூட்டுத் தோழர்களிடம் அதுபற்றிப் பேசி, அவர்களைத் தம் கருத்துக்கு இசைவுதரச் செய்யும் முயற்சி நடைபெற்றதா? இல்லை! முதலில் விலகல் - பிறகு விளக்கம் - பிறகு புதுக்கட்சி - புதுக்கொள்கை! இது, எண்ணிப் பார்க்கும்போதே எவரையும் திடுக்கிடவைக்கக் கூடிய தல்லவா?

தமிழ்நாடு கூடப் பிரிய வேண்டுமென்பதல்ல அவருடைய கட்சியின் குறிக்கோள்.

தமிழரசு - தமிழர் தனி அரசு - தனித் தமிழகம் - இவை அல்ல.

வேண்டும்போது பிரிந்துபோகும் உரிமை, சட்டப்படி, தரப்பட வேண்டும்.

உரிமை தரப்பட்டால் பிரிந்தே போய்விடுவோம் என்று எண்ணற்க!

இந்தியக் கூட்டாட்சியிலேயே இருப்போம் - தேவைப்பட்டால் பிரிந்து போவோம் - இது குறிக்கோளாம்.

விளக்கங்கள் தொடரக் கூடும்.

ஆனால் இதிலிருக்கும் விசித்திரம் வெளிப்படை!

பிரிவினை உரிமையை ஒப்புக் கொள்ள, சட்டத்திலேயே அதற்கு இடம் கிடைக்கத்தக்க மாறுதலைச் செய்தளிக்க, இந்திய சர்க்கார் இசையுமானால், பிரிவினையையே ஒப்புக்கொள்ளுமே!

எப்போது வேண்டுமானாலும் பிரிந்துபோகும் உரிமை யையும் கொடுத்துவிட்டு, கூட்டு வாழ்க்கையையும் நடத்த, இந்திய துரைத்தனத்தில் உள்ளவர்கள் என்ன ஏமாளிகளா? அரசியல் அறியாத அப்பாவிகளா? புரியவில்லை!

போகட்டும், தமிழ்நாடு பாரதத்தில் இருந்து பிரியும் உரிமை வேண்டும் என்று கூறினால், வாய் வெந்து விடாது என்ற நிலையாவது நிலைத்து நிற்கட்டும். இனி மற்றோர் பிரச்சினையைக் கவனிப்போம். தம்பி! இது கலைஞர்களைப் பற்றியது! மிகக் கசப்புத் தந்துவிட்டிருக்கிறதாம் கழகத்தின் போக்கு, இதிலே! அந்தக் கசப்புக்கு மருந்து பிரிவினை! திராவிட இன மக்களின் வாழ்க்கையிலே ஒரே கசப்பு - இருந்தும் அவர்களுக்கு "பிரிவினை' உடனடியாக வேண்டாம் - பிரிந்து போகும் உரிமை மட்டும் இருந்தால் போதுமாம். ஆனால், கலைஞர்கள் கழகத்தில் இருப்பதால், ஏற்படும் விளைவுகள் மெத்தக் கசப்பாக இருப்பதால், கழகத்தைவிட்டு இவர் போகிறார். என்ன நியாயமோ? ஏனோ, அந்தக் கசப்பு ஏற்படாதபடி, கலைஞர்களுக்கும் கழகத்துக்கும் தொடர்பு எந்த அளவில் இருக்க

வேண்டும்? எப்படி அது பக்குவப்படுத்தப்பட வேண்டும்? திருத்தப்பட வேண்டும் என்பதை இங்கு இருந்தே எடுத்துச் சொல்லி, கழகத்தைச் செம்மைப்படுத்தியிருக்கக் கூடாதா? இருக்கட்டும் - யார் இந்தக் கலைஞர்கள்? மேடைதோறும், எப்படி எப்படி, படக்காட்சிகள் எடுக்கப்படுகின்றன என்பது பற்றிப் பேசிப் பேசி, நம்மை ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி, அரிசி நிலை பற்றி, அங்காடிப் போக்கு பற்றியெல்லாம் சிந்திக்க ஒட்டாது தடுத்துவிடும், பொல்லாதவர்களோ! எந்தக் கலைஞரும், கலை பற்றி அல்ல, கழக நிலை பற்றித்தான் பேசிடக் கேட்கிறோம். என்ன இருந்தாலும். . . என்று, கூறுவது எதை விளக்குகிறது? பிடிக்கவில்லை என்று தெரிகிறது. பிடிக்கவில்லை என்றால், என்ன செய்யலாம்? மற்றவர்களுக்கு இதுபற்றி என்ன எண்ணம் இருக்கிறது

என்பதைக் கண்டறியலாம், கூடிப் பேசலாம், சிக்கல் போக்கலாம், செம்மைப்படுத்தலாம், செய்தாரா? இல்லை! கலைஞர்களைவிட, அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ள கழகத் தோழர்களில் சிலர் மீது உள்ள கோபம்தான் வெளியே கொட்டப்படுகிறது; திட்டம் எதனையும் காணோம்.

பேசத் தெரியாத, எந்தப் பிரச்சினையிலும் தொடர்பு கொள்ளாத, ஒப்புக்கு ஒரு கட்சியிலே அலங்காரப் பொருளாக இருக்கும் நிலை மட்டும் போதும் என்று உள்ள கலைஞர்களாக நமது கலைஞர்கள் இருப்பார்களானால், பிரச்சினையே எழாது என்று எண்ணுகின்றனர். ஆனால் நம்மிடம் தொடர்பு கொண்டுள்ளவர்கள் மக்கள் கலைஞர்!

தம்பி! இது என்ன புதுப்பட்டம் என்று என்மீது கோபித்துக் கொள்ளாதே. கவிஞர்

கண்ணதாசன் கையெழுத்திட்டுத் தமது தென்றலில் தீட்டியுள்ள அழகு நடை தவழும் தலையங்கம் அது. இது இதோ:

”மக்களின் எண்ணம் இப்போது வெகுதூரம் முன்னேறி விட்டது. எந்தத் துறையில் பணி செய்பவனும் தங்களிடம் ஒட்டியிருக்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு ஆர்வம் பிறந்திருக்கிறது. கலைஞனாயினும், ஓவியனாயினும், அலுவலக ஊழியனாயினும் அவனது எண்ணத்தில் பொதுநலம் நிறைந் திருக்க வேண்டும் என மக்கள் நினைக்கிறார்கள். அந்த நினைப்பின் எதிரொலியாகத் தங்களை அண்டி வருவோரைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்கிறார்கள். சமீபகாலத்தில், இந்நிலை மிகவும் வளர்ச்சியடைந்துவிட்டது. சமுதாயச் சிந்தனை யுள்ள எவனும் மக்களால் ஒளிபொருந்திக் காட்டப்படுகிறான்.

இன்றையக் கலைஞர்களுக்கு, அரசியல் ஆர்வம் பிறந்திருப் பதற்குக் காரணம் இதுதான். இவர்களிலே சிலருக்குத்தான் மக்களோடு ஒட்டிப் போகும் முறை தெரிந்திருக்கிறது. எங்கெங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற பண்பு தெரிந்திருக்கிறது. இவர்கள் மக்கள் மனதில் நிறைந்த இடத்தைப் பெற்று வருகிறார்கள். மக்களைக் கவரமுடியாத வர்கள் என்னதான் மறுத்துரைத்த போதிலும் தெளிவான ஒரு கொள்கையின்மீது நிற்கின்ற கலைஞர்கள், எந்நாளும் வீழ்ச்சியுற மாட்டார்கள் என்பது உறுதி. ஒரு கலைஞனுக்கு சுயசிந்தனை இருக்கலாம்; இல்லாமல் போகலாம். ஆனால் அவன் போக்கில் தெளிவு வேண்டும். நேற்றுச் சொன்னதை இன்று மாற்றிக் கொள்ளாத பக்குவம் வேண்டும். தன்னலத்தைவிடப் பொது நலத்தில் அவனுக்கு அதிக அக்கறை

வேண்டும். இப்படிப்பட்ட கலைஞர்கள் எக்காலத்திலும் குன்றேறி நிற்க முடியும்.

கலை வெறும் பொழுதுபோக்குச் சாதனம் அல்ல என்று கூறுவார்கள். ஓரளவுக்குத்தான் இது உண்மையாகும். பெரும் பாலும் கலையை ஒரு பொழுதுபோக்குச் சாதனமாகவே கொள்ளலாம். அப்படிக் கொள்கிற நேரத்திலேயே ஒரு கருத்தை உருவாக்கலாம். நளினப் பண்பு இல்லாமல், வரட்டுத்தனமாகக் கருத்தைத் தொடுத்து, கலையைக் கருத்துச் சாதனமாக்குவதில் வெற்றி பெற முடியாது. பொழுதுபோக்கு அங்கங்களிலேயேதான் கருத்தைச் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்லப்படும் கருத்து எல்லோராலும் வரவேற்கப்படும். சொல்கின்றவன் எல்லோராலும் புகழப்படுவான். நளினமான ஒரு கதையை எடுத்துக் கொண்டு, அந்தக் கதையில்

வரும் அங்கங்களைக் கதைப்போக்கிலேயே விட்டு, சந்தர்ப்பங்களை மோதுவதன் மூலம் ஒரு நல்ல கருத்தை உருவாக்குவது நல்ல கலைக்கு அழகாகும். பொழுது போக்க வருகின்றவர்களுக்கும் இது பாடமாகும். இப்படி உருவாக்குவோர்தான் மக்கள் கலைஞர்களாக ஆக முடியும். இரண்டும் இந்த முறையில் பிறந்தவையே. இவற்றின் தொடர்ச்சி புரட்சி நடிகரின் ”நாடோடி மன்னன்’. ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே மக்கள் கலைஞர்களாக மலர்ந்து வருகிறார்கள் என்றால், இந்தக் காரணத்தைத்தான் நான் காட்டுவேன். களைப்பை நீக்கும் ஆடல் பாடலோடு, இளைப்பை நீக்கும் கருத்தைக் கொடுத்து, மக்களோடும் பழகி உறவாடி வருவதால், மக்கள் கலைஞர்கள் என்ற பதத்திற்கு அவர்கள் தகுதி உள்ளவர்களாகிறார்கள்.

இன்றையத் தமிழுலகில் ஈடு இணையற்ற செல்வாக்குப் பெற்ற கலைஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக் கிறார்கள். கழகத்தில் இருப்பதாலேயே இவர்களின் வலிவும், பொலிவும் அதிகரித்திருப்பது உண்மை. கழகம் என்றால் என்ன? வெறும் கட்சி என்பதைவிட ஒரு கருத்து என்பதே பொருந்தும். அந்தக் கருத்து மக்களின் அன்றாட வாழ்க்கையிலும், எதிர் காலத்திலும், உறுதியான தொடர்புடையது. அதனால்தான் கழகக் கலைஞர்கள், கருத்துக் கலைஞர்களாக, மக்கள் கலைஞர்களாக மலர்கிறார்கள்.

அண்மையில், மதுரையிலும், சென்னையிலும் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளை உதாரணங்களாகக் கூறலாம். புரட்சி நடிகருக்கு மதுரையில் தங்கவாள் பரிசளிக்கப்பட்டபோது, கூடியிருந்து உற்சாகக்

குரல்கொடுத்த பல இலட்சம் மக்களும், அவரது கருத்துக்கு மதிப்பளித்தார்களே தவிர, திறமைக்கல்ல. இதனை, சென்னையில் நடைபெற்ற "நாடோடி மன்னன்' நூறாவது தின விழாவில் பல இலட்சம் மக்களுக்கிடையே புரட்சி நடிகரே குறிப்பிட்டார். ஆம். அவரை மக்கள் கலைஞராக மக்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

"வெளியில் எரிகிற வயிறுகள் எரிந்து கொண்டுதானிருக் கின்றன; நாமும் சில கலைஞர்களைச் சேர்த்துக் கொள்வோம் என்று சிலர் எரிந்துபோன சுள்ளிகளைக் கொண்டு வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். எந்தெந்த வழிகளைக் கையாண்டாலும், எத்தனை வழிகளில் தாக்கப் பார்த்தாலும் நம்மைப் பலவீனப் படுத்துவதோ, நமது கலைஞர்களைச் சாய்த்து விடுவதோ, அவர்களால் ஆகாது. தங்களையாவது

மக்கள் மன்றத்தில் உயர்த்திக்கொள்ள முடியுமா என்றால் அதுவும் நடக்காது. சென்னையில்"நாடோடி மன்னன்' விழாவில் ஒரு உண்மையை நான் கண்டேன். கழகத்தின் கருத்துக் கொண்ட கலைஞர்களைத்தான் மக்கள் கலைஞர்களாக மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆம். காலமும் கருத்தும் என்றும் நம் பக்கமே இருக்கும்!''

"வாழ்க மக்கள் கலைஞர்!''

அதுமட்டுமல்ல தம்பி! திராவிட முன்னேற்றக் கழகத்தினர், திரைக்கதையிலேயும் வசனத்தின் மூலம் கருத்துக்களைக் குழைத்து ஊட்டி வந்த நாம், சட்டமன்றத்துக்குள்ளே நுழைந்த பின்னர், நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் வாய்ப்புக் கிட்டிய போதெல்லாம், நம்முடைய திரையுலகப் பணியைக் கேலி பேசி வருகிறார் என்பதை அறிந்து, கலைத்துறைப்

பணியின் மேன்மையை விளக்க, அதே தென்றல் இதழில் வெளியான மற்றுமோர் பகுதியையும் உன்னுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

“தி.மு. கழகம் சட்டமன்றத்துக்கு வந்த பிறகு, நிதியமைச்சர் சுப்ரமணியம் திரைப்படங்களைக் கேவலமாகப் பேசுவதையும், கதை வசனம் எழுதுவது கடினமான காரியமல்ல என்று இழித்துரைப்பதையும், பழக்கமாகக் கொண்டிருப்பதைப் பொதுமக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். நிதியமைச்சர் சுப்ரமணியம் கருதுவதைப்போல் கதை, வசனம் எழுதுவது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல; கோடிக்கணக்கான மக்கள் வாழும் தென்னாட்டில், நூற்றுக்கணக்கான பேர் கதை, வசனம் எழுதுகிறார்கள். அவர்களில் எத்தனை பேரை

மக்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள் என்பதை ஒருகணம் ஆராய்ந்தால், கதை, வசனம் எழுதுவதிலும் ஏதோ"சூட்சமம்' இருக்கத்தான் செய்கிறது என்பதை எவரும் உணர முடியும். கதை வசனம் எழுதுபவர்கள் அரசியலுக்கு வந்துவிட்டதாக அவர் கணக்குப் போடுவது தவறு. ஒருவேளை தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் கலைத்துறையையும் கைப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நிதியமைச்சர் ஒப்புக்கொண்டால், அரசியல் துறையிலே மட்டுமல்லாமல் கலைத்துறையிலும், இலக்கியத் துறையிலும் தி. மு. கழகத்தினர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருக் கின்றனர் என்ற மெய்யுரையைத் தெரிவித்தாக வேண்டுமே என்பதற்காக, நிதியமைச்சர் கதை வசனத்தைக் குறைத்துப் பேசக்கூடும்.

தமிழகத்தில், நாடகங்கள் மிகக் குறைவு

என்று பெரிய பத்திரிகைகளெல்லாம் அலறித் துடிக்கின்றன. போட்டிகள் நடத்துகிறார்கள். அந்தப் போட்டிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் நீதிபதிகளில் நமது சுப்ரமணியமும் ஒருவராக இருக்கிறார். தன்னுடைய வாயால் பரிகசிக்கப்படும் தொழிலுக்கு, தானே பாராட்டுரை வழங்கி, பரிசையும் தர ஒப்புதல் தந்திருக்கிறா ரென்றால், உண்மையிலேயே அவர் கதை, வசனத்தைக் குறை கூறுகிறாரா அல்லது அந்த ஆற்றல் தி. மு. க. வினர் இடத்திலேயே நிறைந்துவிட்டது என்பதற்காக குறைத்துப் பேசுகிறாரா என்பது மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும்.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரான சாமிநாத் சர்மா அவர்கள், தமிழகத்தில் நாடகங்கள் குறைந்துவிட்டனவே என்று மெத்த வருத்தப்பட்டு சென்ற கிழமை பேசியிருக்கிறார். சென்னை மாநிலத்தின்

கவர்னராக இருந்த பி. வி. இராசமன்னார் அவர்கள், "கதை, வசனம் எழுதச் சந்தர்ப்பம் கிடைத்தால் மகிழ்வோடு ஏற்றுக்கொள்வேன்' என்கிறார். ஆனால், அமைச்சர் சுப்ரமணியம் கதை வசனம் எழுதுவது மிகச் சுலபம் என்கிறார். அரசியல் கடினம்தான்; அதற்காக கதை வசனம் எழுதுவது இலகுவானதாகிவிடுமா?

ஆரம்ப காலத்தில் "கல்கி' ஒரு படத்திற்கு வசனம் எழுதிய போது, அவரைப் புகழாத காங்கிரஸ் தலைவர்கள் இல்லை. வான்முட்ட வர்ணித்தார்கள். இதுவன்றோ"அமரசிருஷ்டி' என்றார்கள். படம் விழுந்தது. பாராட்டுக்கள் காற்றோடு கலந்தன. தன் கரம் பட்டால் கரியாகும் காரியம், எதிரியின் கரம் பட்டால் பொன்னாகும்போது, சொந்தக் கரத்தை நொந்துகொள்ள மனமில்லாமல், அந்தக் காரியத்தையே குறைத்துப் பேசுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சி, வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராட்டம் நடத்திய காலத்தில், பொதுமக்கள் உள்ளத்திலே இலட்சிய வேட்கையை எழுப்பக் காங்கிரசார் என்னென்ன செய்தார்கள்?

நாடகங்கள் நடத்தவில்லையா? கே. பி. சுந்தராம்பாளைக் கேட்டால் தெரியும்!

தலைவர்கள் நடிக்கவில்லையா? சத்தியமூர்த்தி நடித்திருக்கிறார்!

பாடல்கள் இயற்றவில்லையா? பாரதியார் பாடல்கள் என்ன, குப்பையா, கூளமா? அத்தனையும் அந்நிய ஏகாதிபத்தி யத்தை எதிர்த்துப் பாடிய தீப்பொறிகள் அல்லவா!

நாடகம், இலக்கியம் அவசியம்தான்; ஆனாலும் அவர்கள் அரசியலுக்கு வரக்கூடாதென்றால், கவிக்குயில் சரோஜினி தேவியார் கவர்னராகப் பணிபுரிந்ததையும்,

நாவல் நாடக ஆசிரியரான முன் உணவு மந்திரியாக இருந்ததையும், சிறந்த எழுத்தாளரான சந்தானம் கவர்னராகப் பணிபுரிந்ததையும், காலஞ்சென்ற கல்வியமைச்சர் ஆசாத் சிறந்த இலக்கிய விமர்சகர் என்பதையும் சுப்ரமணியம் மறந்துவிட்டார் என்பதைத் தவிர வேறு பொருளில்லை.

அவரும் கலை உலகினர்; எனவே அவ்விதம் பேசுகிறார் என்று வாதிடத் தோன்றும். சரி தோழர் சம்பத்தையே அழைக்கிறேன்; கேட்டுத்தான் பாரேன், அவர் கருத்தையும்; இந்தப் பிரச்சினையில்.

கழக மாநாடு! கலைஞர்கள் கலந்துகொள்கின்றனர். உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது! காங்கிரசார் முகத்திலேயோ எள்ளுங் கொள்ளும் வெடிக்கிறது. இதனை உணர்ந்து, தோழர்

சம்பத் விளக்கம் அளிக்கிறார்; கேண்மின்!

”கழகக் கலைஞர்கள் எல்லாம் ஏதோ திடீரெனக் கழகத்திற்கு வந்தவர்கள் அல்லர். இராசேந்திரனை எடுத்துக்கொண்டால், அவர் என் எதிரில் வரப் பயப்பட்டுக் கொண்டிருந்த பருவத்திலிருந்து, இன்றுவரை கழகத்தில் இருப்பவர்.''

”அப்படியேதான் பிறரும். . . . பல காலமாகக் கழகத்தில் இருப்பவர்கள்.''

”அவர்கள் கழகத்தில் இருப்பதற்குக் கழகத்தால் கலையே வளருகிறது என்பதும் ஒரு முக்கியமான காரணம்.''

“கழகத்தில் உள்ள கலைஞர்களைத் தனியாகப் பிரித்துப் பேசுவதையேகூட நான் விரும்புவதில்லை.'”'கழகத்தில் சில டாக்டர்கள் இருக்கிறார்கள், சில என்சினியர்கள் இருக்கிறார்கள், பேராசிரியர்கள்

ஆசிரியர்கள் இருக்கிறார்கள், எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், உழவர்கள் இருக்கிறார்கள், தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அவர்களைப் போலவே சில கலைஞர் களும் இருக்கிறார்கள், அவ்வளவுதான்.''

தெளிவான விளக்கம் அல்லவா?

தம்பி! கலைஞர்களுக்கு மட்டும், குடியரசுத் தலைவருக்குக் கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தில் விலக்கு அளித்து விட்ட "மாபாவி' என்றல்லவா என்னைச் சித்திரிக்கிறார்கள். தோழர் சம்பத், கலைஞர்களைத் தனியாகப் பிரித்துப் பார்க்காதீர்கள் - டாக்டர்கள் - என்சினியர்கள்போல அவர்களும் ஒரு தொழிலினர் என்கிறார்; அதுபோன்றே, விலக்கு அளிக்கப் பட்டது கலைஞர்களுக்கு மட்டுமல்ல; டாக்டர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் கூடத்தான்! இது ஏன்

மறைக்கப்பட வேண்டும்!!

மறைத்துவிடட்டும். அதனால் குடிமுழுகிப் போய்விடாது. கலைஞர்களைப்பற்றி நாமே கூறிய கருத்தை, நாமே மறந்து விடாமல் இருந்தால், அது போதுமானது.

"தி. மு. கழகம் வளர்வதற்குக் காரணம் நாலைந்து சினிமாக் காரர்கள் இருக்கிறார்கள்; அதனால்தான் அது வளர்கிறது என்கிறார்கள். சினிமாக்காரர்கள் கழகத்தில் இருப்பதாலே அவர்களுக்கு ஒன்றும் இலாபம் இல்லை - மாறாகத் தொல்லைதான் அதிகம்.''

இதை நான் கூறவில்லை; காஞ்சி கலியாணசுந்தரம் படிப்பகத் திறப்பு விழாவின்போது, 6-6-59-ல் தோழர் சம்பத் சொன்னார்.

இந்த விளக்கங்களை எல்லாம் அறியாமல், காங்கிரசார் கண்டபடி பேசிவருவது, தோழர்

சம்பத்துக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எனவே, மிகக் கடுமையாகக் காங்கிரசாரைக் கண்டித்தாக வேண்டும் என்ற "உத்வேகத்தில்' இதைச் சொன்னார்.

"இந்த இலட்சியத்தை எடுத்து வைத்துக்கொண்டு ஆராய்வதற்கு வகையற்ற நிலையிலே இருக்கின்ற காரணத்தாலேதான், அண்ணாதுரையின்"அகலம் என்ன? உயரம் என்ன?' என்பது பற்றியும், "நெடுஞ்செழியன் ஏன் இவ்வளவு நெடு நெடுவென வளர்ந்திருக்கிறார்?' என்ற ஆராய்ச்சியிலேயும்,"கருணாநிதிக்கு கலைஞர் என்ற பட்டத்தை யார் கொடுத்தார்கள், எப்போது கொடுத்தார்கள்? ஏன் கொடுத்தார்கள்?' என்கிற ஆராய்ச்சி யிலேயும் ஈடுபட்டுப் பரிதவித்துக்கொண்டிருக்கிறார்கள்.''

தம்பி! இந்த ஆராய்ச்சியோடு, காங்கிரசார்

நிறுத்திவிட வில்லை. என் பேச்சு, எழுத்து, அதில் உள்ள அடுக்குமொழி, உவமை, அந்த உவமையிலே உள்ள தன்மை, சுவை இவை பற்றியெல்லாம் ஆராய்ச்சி நடத்தினர். அதன் விளைவுதான் என்னைப்பற்றி மட்டுமல்ல, பொதுவாகக் கழகத்தைக் குறித்தே, மிகக் கேவலமான முறையில்,

கூத்தாடிகள்

கூவிக்கிடப்போர்

அடுக்கு மொழியினர்

ஆபாச நடையினர்

காமச்சுவைப் பேசினர்

கதை எழுதிப் பிழைப்போர்

என்றெல்லாம் இழிமொழியால் ஏசலாயினர். கேட்டுக் கொண்டேன். அப்போது என் சார்பாக வாதாடி நின்றவர்கள் இன்று,

அதே இழிமொழி வீசி, என்னை ஏசிட முற்படுகின்றனர். செய்யட்டும். இதையும் தாங்கிக்கொள்கிறேன்.

வைதிகர்கள் சொல்வார்கள் ”வந்த வழி’ என்று! இது நானாக மெத்தக் கஷ்டப்பட்டு வகுத்துக்கொண்ட வழி. அதற்கு நான் யார்மீது நொந்துகொள்ள முடியும்?

ஆனால் நானாக யோசிக்கிறேன், நிலைமை புரிகிறது. நம்மோடு இல்லாதவர்கள் வேறு என்ன பேசித்தான் சமாதானம் கூறிக்கொள்ள முடியும், பாவம்!

அறிவாளிகள்

அடக்க குணமுடையோர்

அழகு நடையுடையோர்

கலைத்தொண்டு புரிவோர்

மாற்றாரும் மகிழப் பேசுவோர்

மாண்பு காத்திடுவோர்

என்றும் கூறிக்கொண்டு, நமக்கு மாற்று முகாமிலும் எப்படி இருக்க முடியும்? எனவேதான், ஏசுகிறார்கள்! அது அவர்கள் வகுத்துக்கொண்டு தீரவேண்டிய ”வழி’ ஆகிவிடுகிறது.

இது எனக்குப் புரிவதால்தான், எனக்குக் கோபமோ குமுறலோ எளிதில் ஏற்படுவதில்லை.

இந்நிலை அனைவருக்கும் ஏற்பட்டாக வேண்டும்.

அப்போதுதான், அரசியல் என்பது, அமளிகளற்ற, கருத்தரங்கம் என்ற தூய நிலை பிறக்கும்.

அந்தக் கருத்தரங்கம், ஒளி தர வேண்டும் - வீணான வெப்பத்தை அல்ல.

வேறுபாடான எண்ணங்கள் எழலாம்; மோதிக் கொள்ளலாம், இறுதியில் குழைந்து போகலாம்; வெறுப் புணர்ச்சியாக மாறிடலாகாது.

இது நாடு; காடு அல்ல! மக்களை நல்வழிப்படுத்த முடியும் என்று நாம் இயக்கம் நடத்த முற்படுகிறோம் - நாம் முதலில் நல்வழி நடக்க வேண்டும்.

எத்தனைக் கோபதாபம் ஏற்பட்டாலும் - ஏற்படக் காரணம் ஏற்படினும், - அடக்கம், பொறுப்புணர்ச்சி மறத்தலாகாது என்பதனையும், இந்த நேரத்திலே அனைவருக்கும் கூற விரும்புகிறேன் - மறந்துவிட்டேன் - பிரிந்து போனவர்கள், நீ யாரடா எமக்கு புத்திமதி கூற என்று கோபித்துக்கொள்ள வேண்டாம். முன் தொடர்புகளை அவ்வளவு எளிதாகவும், விரைவாகவும் மறந்துவிட இயலாததால்,

பழக்கம் காரணமாக, அனைவருக்கும் கூறுகிறேன் என்று சொல்லிவிட்டேன். குறை பொறுத்திடுக! என்னை, இப்போதும், "அண்ணன்' எனக் கொள்வது, அரசியல் ரீதியாகப் பார்த்தால்கூடத் தவறுமல்ல, தரக்குறைவுமல்ல என்ற எண்ணம் கொண்டவர்களுக்குக் கூறுகிறேன்.

கொள்கை மறவாதீர்!

கோபத்துக்கு ஆளாகாதீர்!

கூடி வாழ்வது பொறுப்பான காரியம் - அறிவீர்.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை!

அன்புள்ள,

அண்ணாதுரை,

23-4-61

38. இதயம் இருக்கிறதே!

அமைச்சர் வெங்கடராமன் துணிவு -

சம்பத்தின் கருத்துப்படி திராவிட நாடும் வடவரும். . .

தம்பி!

அவரது அறைகூவலை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மந்திரி வெங்கடராமன், திராவிட நாடு கோருபவர் களுக்கு விடுத்த அறைகூவலை, மிகுந்த ஆர்வத்தோடு படித்தேன்.

அவர் திராவிட நாடு பிரச்சினையை முன்வைத்துத் தேர்தலுக்கு நிற்பதற்குத் தயாராக இருப்பதாகவும், அப்படித் தேர்தல் நடந்தால் காங்கிரசுக்கு இன்னும் 10-இடங்கள் அதிகம் கிடைக்குமென்று நம்பிக்கை

தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது.

அந்த அறைகூவலை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

காங்கிரசைவிடப் பெரும்பான்மை இடங்களைச் சட்ட சபையில், தி. மு. க.வினருக்குத் தருவதன் மூலம், வாக்காளர்கள் தி. மு. க.விடம் தெரிவிக்கும் நம்பிக்கையை, மத்திய ஆட்சியி லிருந்து மாநிலம் பிரிவதற்கான வாக்கு என்று மாநில மந்திரி சபையும், மந்திய மந்திரி சபையும் ஏற்றுக்கொள்ளுமா?

அப்படி வாக்காளர்கள் தி. மு. க.விடம் தெரிவிக்கும் நம்பிக்கையைப் பிரிவினை பிரச்சினைமீது நடைபெற்ற இறுதி வாக்கெடுப்பாகக் கருதி, மாநிலத்தின்மீது தங்களுக்குள்ள தொகுதி மூன்று 331 பிடிப்பை என்றென்றைக்கும் விட்டுவிட மத்திய சர்க்கார்

ஒப்பும் என்று மந்திரி உறுதி கூறுவாரா?

பலே! பலே இது அல்லவா துணிவு! வீரம்! அண்ணா! நீ எப்போதும் அச்சம், தயக்கம் காட்டும் போக்குடன் இருப்பது வாடிக்கையல்லவோ! என்போன்றாருக்குக் கசப்புக்கூட ஏற்படு வதுண்டே அந்தப் போக்கினால். நாடு விழிப்புற்று இருக்க, வீரர் குழாம் திரண்டு நிற்க, அவர்தம் விழிகள் வேல்போல் இருக்க, ஏன் இந்த அண்ணன் இன்னமும் கனிவு, தெளிவு என்ற போக்கையே மேற்கொள்கிறார்? ஒரு கை பார்த்தேவிடுவோம் என்று வீரமாக முழக்கமிட வேண்டாமோ? ஆறிலும் சாவு! நூறிலும் சாவு! ஆமாம் கவிதைகூட நமது தோழர் தீட்டியிருக் கிறாரே, அஞ்சாமை திராவிடர் உடைமையடா! என்று. பல முறை, என்போன்றார் சலித்துக்கொண்டதுண்டு. இது மிதவாதப் போக்காயிற்றே, நமது

அண்ணன் ஏன் இப்போக்குக் கொள்ள வேண்டும் என்று சில வேளைகளில் கோபித்துக்கொண்டதுகூட உண்டு. ஆனால், அறைகூவலை ஏற்றுக்கொள்கிறேன் - திராவிட நாடு பிரச்சினையை முன்னால் வைத்துத் தேர்தலுக்கு நிற்க தி. மு. க. தயார்! கேளும் நிபந்தனையை என்று அமைச்சருக்குச் சுடச்சுடப் பதில் அறைந்திருக்கிறீரே! இஃதன்றோ எமக்குக் களிப்பூட்டும் பேச்சு! இப்படிப்பட்ட முழக்கமல்லவா, எமது இரத்தத்தில் சூடேற்ற வல்லது - நரம்புகளைப் புடைத்திடச் செய்வது - என்றெல்லாம்தானே, தம்பி! எழுச்சி பொங்கக் கூறுகிறாய், ஆமாம்! விடுதலைப் பேரார்வம் கொந்தளிக்கும் உள்ளம் உனக்கு! திராவிடம் என் பிறப்புரிமை என்று முழக்க மிடுகிறாய்! அந்த முழக்கத்தை எவரேனும் கேலி செய்தால் கொதிப்படைகிறாய். களம் காணத்

துடிக்கிறாய். எனவேதான், அமைச்சரின் அறைகூவலை ஏற்றுக்கொள்கிறேன்! என்ற பேச்சுக் கேட்டதும், ஆர்வத்தால் துள்ளி எழுகிறாய், அண்ணனைப் பாராட்டுகிறாய்! புரிகிறது - ஆனால் கவலைதான் குடைகிறது. ஏன் என்கிறாயா?

வீரச் சுவை செறிந்திட, அஞ்சா நெஞ்சுடன், வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையுடன், திராவிடம் மீட்கப்பட வேண்டும் என்ற கடமை உணர்ச்சியுடன், அமைச்சரின் அறைகூவலை ஏற்றுக் கொண்டு, தேர்தல் களம் வாரீர்! இரண்டிலொன்று பார்த்து விடுவோம்!! என்று தீப்பொறி பறக்கப் பேசியது, தம்பி! நான் அல்ல! திராவிட நாடு பகற்கனவு என்று இன்று பேசும் தோழர் சம்பத்து!

ஆமாம், தம்பி! என்னால் ஆகுமா, அப்படி அடித்துப் பேச?

அப்படி அடித்துப் பேசத்தான் என்னால் ஆகுமா, அதே வேகத்தில், திராவிடநாடு பகற்கனவு என்று மாறிப் பேசத்தான் முடியுமா?

நான் சாமான்யன்! அசகாய சூரத்தனமாகப் பேசுவ தென்றால் எனக்கு அச்சம்! அதுபோலவே, இவ்வளவு காலம் இலட்சக்கணக்கானவர்களிடம் ஊட்டிய நம்பிக்கையை மறந்து, எழுச்சியைத் துச்சமென்று மதித்து, எதனையும் எப்போதும் விருப்பம்போல் மாற்றிக்கொள்ளலாம் என்று துணிந்து, கொண்ட கொள்கையைக் குப்பை என்று கூறிட முடியாது! நான் மெத்தக் கூச்சப்பட்டவன்!!

திராவிடநாடு பகற்கனவு என்று இப்போது அவர் கூறுவது கேட்டு, உனக்கு எவ்வளவு கோபம் வருகிறதோ, அதேபோலத் தான், அப்போது வா ஒரு கை பார்ப்போம் என்று அறைகூவல் விடுத்தபோது, காங்கிரஸ்காரர்

கோபித்துக்கொண்டனர். இப்போது திராவிடநாடு பகற்கனவு என்று அவர் கூறக் கேட்டுக் காங்கிரசார் எவ்வளவு குதூகலப்பட்டு, "இவரல்லவா அறிவாளி! மாயையிலிருந்து விடுபட்ட மாவீரர்! உண்மையை உணர்ந்த மேதை!' என்றெல்லாம் கொண்டாடுவதாகக் கூறுகிறார்களோ, அதேபோலத்தான், தேர்தல் களம் புகுந்து,"திராவிடநாடு பிரச்சினைக்கு வெற்றி காண்பேன், அறைகூவலை ஏற்றுக் கொண்டேன், அமைச்சரே! வாரும்!!' என்று அன்று அவர் அறைந்தபோது, நாம் பெருமைப்பட்டோம்; பூரித்தோம்; உச்சிமீது வைத்துக் கொண்டாடினோம்.

ஆக, இதிலே யாருக்கும் நஷ்டம் இல்லை!

ஆணித்தரமான பேச்சு! அடித்துப் பேசும் போக்கு! அஞ்சாநெஞ்சம் காட்டுவது!! - இவை கைவசம் உள்ள சரக்கு - ஒவ்வோர் சமயம் ஒவ்வோர் இடத்தில் விலை போகிறது!!

கொலைக் குற்றம் செய்தவனையும் தப்பவைக்க வாதத் திறமை பயன்படுகிறது! குற்றமற்றவனைக் கூண்டில் தள்ளவும் சில வேளைகளிலே திறமையைப் பயன்படுத்துகிறார்கள். அரசியலிலுமா? என்று கேட்கிறாய்! ஆமாம். பார்க்கிறோமே!

என்றோ ஓர் நாள், என்னமோ நினைப்பில், ஏதோ, சொல்லிவிட்டேன் என்று கூறுவாரோ என்று எண்ணுகிறாய். தம்பி! இந்த அறைகூவல் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு! நெடு நாட்களுக்கு முன்பு அல்ல!!

அமைச்சர் வெங்கடராமன் பேசியதை நானும்தான் பத்திரிகையில் பார்த்தேன் - உடனே விடக்கூடாது! அறை கூவலை ஏற்றுக்கொள்வதாக உடனே வீராவேசமான அறிக்கை வெளியிட வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. தோழர் சம்பத்து. அப்படியா? விடுவாரா? எடுத்தார்

பேனா, தொடுத்தார் அறைகூவல். என்ன நடந்தது என்கிறாயா? அமைச்சர் அதைச் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒரு சமயம், அமைச்சர் வெங்கடராமனுக்கு "ஆரூடம்' தெரியுமோ என்னவோ! இவ்வளவு வீரதீரமாகப் பேசும் இந்த இளைஞர், எண்ணி மூன்றே ஆண்டுகளில், திராவிட நாடு பகற்கனவு என்று பேசப் போகிறார்; இடையிலே ஏதோ சிறிது விறுவிறுப்புப் பேச்சு; இதை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்று எண்ணிக் கொண்டாரோ, என்னவோ!

தம்பி! இப்படியெல்லாம், அறைகூவல் விடுவது - அடித்துப் பேசுவது - பரணி பாடுவது - முரசொலிப்பது - போன்றவைகளில் நான் ஈடுபடாததைத்தான், மிதவாதம் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்! இப்போது, விளங்குகிறதல்லவா, போலி அதிதீவிரவாதம், என்ன கதிக்கு ஈடுபட்டோரைக் கொண்டு

போய்ச் சேர்க்கிறது என்ற உண்மை.

திராவிட நாடு பகற்கனவு என்று சொல்வதைக் காட்டிலும், செல்வாக்கு மிகுந்த நுழைவுச் சீட்டு, இல்லை - காங்கிரஸ் மணிமாடம் செல்ல. வழி விடு! வழி விடு! என்று பலரும் கூறுவர்; வரவேற்பர். பித்தம் தெளிந்த நிலை என்றல்லவா கூறிப் போற்று கின்றனர், இன்றைய அவருடைய போக்கை.

தம்பி! அமைச்சர் வெங்கடராமனே பார்க்கிறார் என்று வைத்துக்கொள், தோழர் சம்பத் அவர்களை. கண்களிலே ஒரு குறும்புப் பார்வை! உதட்டிலே ஒரு கேலிச் சிரிப்பு! உள்ளம் என்னென்ன எண்ணும்!!

”மிஸ்டர்! நம்மை ஒரு போடுபோட்டுப் பயம் காட்டியே விட்டீர்களே, வா, பார்க்கலாம் தேர்தலில்’’ என்று!! - அமைச்சர் கூறுவார். இவர்?. . .

”எனக்குத் தெரியும் மிஸ்டர், நீங்களே, கட்டாயமாக மாறிவிடத்தான் போகிறீர்கள் என்பது.’’ இதுவும் அமைச்சர். இவர்?. . .

”பகற்கனவு என்று சரியான சூடுகொடுத்தீர்கள், மிஸ்டர். நீங்கள் சொல்லவே, சும்மா இருக்கிறார்கள், திகைத்துப்போய்.

நாங்கள் சொன்னபோது, அடே அப்பா! எப்படியெப்படிக் கண்டிப்பார்கள் - நீங்களும்தான் இலேசாகவா கண்டித்தீர்கள்!’’ - இதுவும் அமைச்சர்! இவர்?. . .

தம்பி! சில மாதங்களுக்கு முன்பு, சென்னை சட்டசபையில், அமைச்சர் வெங்கடராமன் இப்போது கொண்டுள்ளதாகக் கூறும் போக்குக்கு முற்றிலும் மாறான முறையில், டெல்லி பாராளுமன்றத்தில் அவர் உறுப்பினராக இருந்தபோது பேசியவைகளை

நான் எடுத்துக் காட்டிப் பேசினேன். அமைச்சர் வெட்கம் கலந்த புன்னகையுடன் அமர்ந்திருந்தார். பிறகு, தொழிலாளர் பிரச்சினையாக, அடியார் பாடிடும் அருள் தரும் பாசுரம்போலவா, தலைவர், எப்போது என்ன சொல்வார்; அதை அப்போது நமக்கு உகந்த கொள்கையெனக் கொள்வோம் என்று மக்கள் ஏற்கவேண்டும்? இதுதான், மக்களாட்சிக்கு அச்சாணியா? மாண்புள்ள செயலா? கூடிப் பணியாற்றுவோரிடம், கொள்கை பற்றிப் பேசிடக் கூச்சம் ஏன், தயக்கம் ஏன்? அவர்களைத் தம்வழி கொண்டு செல்லத்தக்க ஆதாரங்கள், விளக்கங்கள் இருப்பின், ஏன் அந்த முறையைக் கையாண்டிருக்கக் கூடாது? ஏகாதிபத்திய வாதிகூட அல்லவா, நான் தர இருக்கும் அரசியல் சீர்திருத்தம் குறித்து, பெறுவோரிடம் கலந்து பேசுகிறான். அந்த அளவுக்குக்

கூடவா, பொறுப்புணர்ச்சியைப் பூணாரமாகக் கொள்ளக் கூடாது! கொண்டனரோ! முதலில் விலகல் - பிறகு விளக்கம் - அடுத்தது திட்டம் - அதற்குப் பிறகு கொள்கை!! - இப்படியா இலக்கணம். எப்படி அறிவுக்கு மதிப்பும், தன்மானத்திலே அக்கறையும் கொள்வோர், இதனை ஏற்கமுடியும்! திகைக்கிறேன், தம்பி திகைக்கிறேன்!

திடீரென, தென்னகம், தெற்கு, திராவிடம் என்ற சொல் கசப்பாகிப் போவானேன்? பொருளற்ற சொற்கள் இவை என்று புது வியாக்யானம் கூறுவானேன்? வடக்கு - தெற்கு என்று வறட்டுக் கூச்சலிடுகிறார்கள் என்று நம்மைக் காங்கிரசார், கேலியாகக் கண்டித்தபோது, தோழர் சம்பத் அவர்கள் எப்படி எப்படி ஆத்திரப்பட்டார்! அரிய பெரிய விளக்கம்தர முற்பட்டார்! இப்போது அவரேவா அவருடைய வாதங்களைச் ”சொத்தை’ என்று

பேசுவது? காலத்தின் கோலமா? கோபத்தின் விளைவா? அவருடைய பொருள் செறிந்த வார்த்தையைச் சொல்வதானால், கொள்கைக் குழப்பமா? என்ன காரணம் இதற்கு?

தம்பி! நீயும் நானும், வடக்கு - தெற்கு என்று பேசுவது தவறு என்று கூறுபவர்களைக் கண்டிக்கக் கூசுவோம். மிகக் கடுமையான சொல்லே, அவர்களை, "பாரத புத்திரர்கள்' என்று சொல்வதாகும். சின்னாட்களுக்கு முன்புகூடச் சென்னை மாநகராட்சி மன்றத்திலே"பாரத புத்திரர்கள்' என்று பேசியதை ஏசல் எனக்கொண்டு, சிலர் கோபித்துக்கொண்ட செய்தி, பத்திரிகைகளில் வந்தது; கண்டிருப்பாய். அகில இந்தியா பேசுபவர்களை, நாம் கண்டிக்க முற்படும்போதுகூட, அவர்கள் மனம் புண்படக்கூடாது, நமது நாக்கும் நரம்பற்றது என்று பலரும் நினைத்துவிடும்படி

பேசிடலாகாது என்ற முறையில், பேசி வந்தோம் - பாரத புத்திரர்கள் என்று.

துரோகிகள்

கங்காணிகள்

என்று கூறியிருக்கிறோமோ, அகில இந்தியா பேசுபவர்களை, நான் கூறினதில்லை. ஆனால், தோழர் சம்பத்து? அதையுந்தான் கேளேன்! இன்று அவருடைய அறிவாற்றலைப் பத்திபத்தியாக வெளியிடும், அகில இந்தியாக்களும் கேட்கட்டுமே!

"தென்னகத்தில் இருந்துகொண்டு, அகில இந்திய அரசியல் பேசினால் - பாரதப் பண்பாடுபற்றிப் பேசினால், அவர்கள், பிறந்த மண்ணுக்குத் துரோகம் செய்கிறார்கள், என்பதுதான் பொருள். அவர்கள் எங்கேயோ இருக்கிறவர் களுக்கு ஆள்பிடித்துக் கொடுக்கும் கங்காணிகளாகத்

தானிருக்க முடியும். இது குறுகிய புத்தியால் சொல்வதல்ல, - பிறந்த நாட்டுக்குப் பெருமை தேடித்தரும். பரந்த எண்ணம், தத்துவரீதியில், வடக்காவது தெற்காவது என்று பேசினால், அவர்கள் அறியாமையில் மூழ்கியிருக்கிறார்கள், - அல்லது துரோகமிழைக்கிறார்கள் என்பதுதான் பொருள்!''

இந்த விளக்கத்தின்படி, துரோகிப்பட்டியலில், கங்காணிப் பட்டியலில், எவரெவர் என்று தம்பி, எண்ணிப் பாரேன்! காமராஜரும், கனம் சுப்ரமணியமும், கங்காணிகள்! நவ இந்தியாவும் அகில இந்தியாவை ஆதரிக்கும் ஏடுகளும் கங்காணிகள்! எவரெவர், இங்கு இருந்துகொண்டு, அகில இந்தியா பேசுகிறார்களோ, அவர்கள் துரோகிகள் - கங்காணிகள்.

நீயும் நானும் இல்லை, அந்தப் பட்டியலில்.

பெரியார் இராமசாமி இல்லை, அந்தப் பட்டியலில்.

ஆதித்தனார் இல்லை, அந்தப் பட்டியலில்.

ஆனால், வெட்டிக்கொண்டு செல்லும் உரிமையைப் பெற்றுக்கொண்டு, அகில இந்தியாவுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும் கொள்கையினர்! எனக்குக் கூச்சமாக இருக்கிறது தம்பி! சொல்ல!!

ஆனால், காரணம் காட்டாமல், கண்மூடித்தனமாக, கற்பனையாக, வடக்கு - தெற்கு என்று அவர் பேசிக்கொண் டிருந்தாரா? இல்லை! அழகான ஆதாரங்களுடன். இன்று அவருக்கு அவை பிடிக்கவில்லையாம்!! ஆனால், படித்துப் பார்க்கச் சொல், எவரையும். பல நாட்கள் ஏடுகளில் உள்ளது பற்றிச் சிந்தித்துச் சிந்தித்துத், தெளிவு பெற்றுத்,

துணிவு பெற்றுப், பேசியிருக்கிறார் என்பது தெரியும். அவசரக் கோலத்தை அள்ளித் தெளித்ததுபோல் அல்ல.

•

"தென்னகத்துக்கென ஓர் தனிப் பண்பாடு இன்றும் இருந்து வருகிறது. இந்தத் தனிப்பண்பை எல்லாத் துறைகளிலும் காண முடிகிறது. கோயில் சிற்பங்களை எடுத்துக்கொண்டால், தமிழ் நாட்டிலுள்ள அதே சிற்பக் கோயில் அமைப்பு முறையை ஆந்திரத்திலும் காணலாம். . . கருநாடகத்திலும் காணலாம். . . கேரளத்திலும் காணலாம்; இந்த நான்கு மாநிலங்களிலும் ஒரே வகையான கட்டிட அமைப்பினைக் காணலாம். இதற்கு,"திராவிடக் கலை' என்று இன்றும் பெயர் வழங்கி வருகிறது.''

"இன்று தமிழகத்தில்

வளர்ந்துள்ளதுபோல, ஆந்திரத்தில் தி. மு. கிளைகள் இல்லாமலிருக்கலாம்; ஆனால் இந்த நான்கு மாநிலங்களிலும் கலையில். . . பண்பாட்டில். . . ஒருமைப் பாட்டினைக் காணலாம்.''

"இசைத்துறையை
எடுத்துக்கொண்டாலும்,"வடநாட்டு இசை. . . தென்னாட்டு இசை' என இரண்டு வகையாகப் பிரிந்து கிடக்கின்றது.''

"தென்னாட்டு இசையான கருநாடக இசையில் புகழ் படைத்த சித்தூராரானாலும், செம்பையானாலும், தென்னக மாநிலங்கள் நான்கில் எதில் வேண்டுமானாலும் பாடலாம். இந்த நான்கு மொழிகளுக்கிடையே இசையில் ஒரு ஒற்றுமை நிலவுகிறது.''

"இந்தி பேசினால் அதை வங்காளி புரிந்துகொள்ள முடியும்; ஆனால் ஒரு

தென்னாட்டுக்காரன் அதைப் புரிந்துகொள்ள முடியாது. இதற்குக் காரணம், இந்தி சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது. மற்ற வடநாட்டு மொழிகள் அனைத்துக்கும் சமஸ்கிருதம்தான் அடிப்படை.''

"தென்னாட்டு மொழிகள் வடநாட்டு மொழியினின்றும் முற்றிலும் வேறுபட்டவையாகும்."வடநாட்டிலுள்ள எந்த மாநிலத்திலும் இந்தியில் பேசினால் அங்குள்ளவர்கள் புரிந்து கொள்கிறார்கள்; ஆனால் வடநாட்டவர் தென்னாட்டில் வந்து இந்தியில் பேசினால், அதில் ஒரு அட்சரம்கூடத் தென்னாட்டினர் புரிந்துகொள்ள முடியவில்லை' என்று காந்தி, நேரு போன்ற தலைவர்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.''

"தென்னாட்டு மொழிகளுக்குள் சிறுசிறு உருமாற்றம் இருக்கலாமே தவிர,

வடநாட்டுத் தொடர்பு சிறிதும் அவற்றிற்குக் கிடையாது. தமிழிலே பேசினால் ஆந்திரரும், கர்நாடகரும், மலையாளியும் புரிந்துகொள்ள முடியும். வடநாட்டைச் சேர்ந்தவர் அதைப் புரிந்துகொள்ள முடியாது.''

"இதிலிருந்து, தென்னாட்டுக் கலை, மொழி, பண்பாடு அனைத்தும் வடநாட்டினின்றும் முற்றிலும் வேறுபட்டது என்பதை உணரலாம்.''

"இப்பொழுது இருந்து வருகின்ற இந்தத் திராவிட இன ஒருமைப்பாட்டினை அவசரப்பட்டுப் பிரிக்கத் தேவையில்லை. சிலர் நம்மைப் பார்த்துப் பேராசைக்காரர்கள் என்று சொன்னாலும், கெக்கலித்து ஏளனம் செய்தாலும், நமக்குக் கவலை இல்லை. இந்தத் திராவிட இனத் தனிப் பண்பை. . . உணர்ச்சியை ஒரு அரசியல் சக்தியாக மாற்றக்கூடிய ஓர் சக்தி பிறக்க வேண்டும்.''

“தென்னக அரசியல்’ என்ற தலைப்பில் நான் பேசும்போது, தென்னக அரசியல் என்பதை நானே கற்பனை செய்து கொண்டதாகச் சிலர் கருதக்கூடும். அரசியலில் உல்லாசம் பெறுபவர்கள் சிலர் சொல்வார்கள் -”தென்னாடு’ - வடநாடு என்று பிரித்துப் பேசுவது குறுகிய மனப்பான்மை’. . . என்று!

தெற்கு. . . வடக்கு என்பது நாம் புதிதாகப் பாகுபாடு காட்டுவதல்ல. இந்தியத் துணைக்கண்டத்தின் பண்பாடே அப்படித்தான் அமைந்திருக்கிறது. அதன் நீண்ட வரலாற்றை எடுத்துக்கொண்டால், அதிலே வடக்கு - தெற்கு பிரிந்து கிடப்பதைக் காணலாம். அரசியலிலும், கலையிலும், இன்னபிற துறைகளிலும் இந்தப் பிரிவினையைக் காணலாம்.

வெள்ளையன் தன் துப்பாக்கி முனையால் இந்தியத் துணைக் கண்டத்தைப் பிரித்து,

மிச்சப்பட்டதை வடநாட்டு வெறியர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். ”ஏக இந்தியா’ என்ற இந்தப் பரந்த நிலப்பரப்பை, பெரிய மக்கள் தொகையைக் கட்டியாள, வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளால், இந்தியக் கலாச்சாரம். . . இந்தியப் பண்பாடு. . . இந்திய ஒற்றுமை என்று இன்று பேசப்படுகிறது.

இந்தியா மட்டுமல்ல - ஆசியாக் கண்டம் முழுவதுமே ஒன்றாக இருந்தால் நன்றாகத்தானிருக்கும். ஒன்றாக இல்லையே! அதனாலேதான், தென்னக அரசியல் என்ற கண்ணோட்டத்தில் நாம் எதையும் காணவேண்டி உள்ளது.

”நாம் சொல்வதை ஆந்திர - கேரள - கருநாடகத்தினர் கேட்கிறார்களோ இல்லையோ, நிச்சயம் தென்னக அரசியல் என்ற ஒன்று இருக்கிறது. தமிழ் நாட்டில் இன்று வளர்ந்துள்ளது போல ஆந்திர - கேரள -

கருநாடகத்தில் தி. மு. க வளரவில்லை என்பது மெய்தான். அதைவிட மெய்யானது தென்னக அரசியல் என்று ஒன்றிருக்கிறது என்பது.''

"இன்று வடநாட்டுத் தலைவர்கள் எங்கு, எப்பொழுது பேசினாலும், அது பாராளுமன்றக் கூட்டமானாலும் - பள்ளித் திறப்பு விழாவானாலும், அங்கெல்லாம் தென்னக அரசியலைப் பற்றித்தான் பேசுகிறார்கள்."தெற்கை நாங்கள் புறக்கணிக்க வில்லை' என்று பேசுகிறார்கள்; "தமிழ் நாட்டைப் புறக்கணிக்க வில்லை' என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள்,"மேற்கத்திய பண்பாடு, கிழக்கத்திய பண்பாடு' என்று பேசுவதில்லை. மராட்டியப் பண்பாட்டை மேற்கத்தியப் பண்பாடு என்றோ, வங்காளத்துப் பண்பாட்டை கிழக்கத்தியப் பண்பாடு என்றோ சொல்வதில்லை.''

"பார்லிமெண்டிலே சேத் கோவிந்ததாஸ்

என்பவர் பேசும் போதெல்லாம்,"தட்சிண பாரத்' என்றுதான் குறிப்பிடுவாரே தவிர, தமிழ் நாட்டை மட்டும் தனியாகக் குறிப்பிடுவதில்லை.''

"தென்னாடு தனித்தன்மையுடன் விளங்கக் காரணம், இந்தியா ஒன்றாக்கப்பட்ட ஒன்றே தவிர, என்றும் ஒன்றாக இருந்ததில்லை. இந்தியா ஒன்றாக்கப்பட்ட வரப்பிரசாதம் வெள்ளையனால் கிடைத்தது. வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இடையில் எண்ணற்ற எண்ண மோதல்கள் - ஆசாபாசங்கள் - முரண்பாடுகள். . . ஏராளமான பேதா பேதங்கள் - அரசியலில் இருப்பதை இன்னும் நாம் உணராவிட்டால், நாம் உணர்ந்ததை மற்ற மூன்று திராவிட மாநிலங்களுக்கும் உணர்த்தாவிட்டால்,"தமிழ் நாட்டில்தான் இந்தக் கூச்சல் இருக்கிறது' என்று வடநாட்டினர் சொல்லும் நிலைமை

ஏற்படக்கூடும்.

”தென்னக அரசியல், ஏதோ தி. மு. க. வாழ்வுக்காகப் புதிதாக அமைத்துக்கொண்ட மேடை என்று கருதுவதற்கில்லை.’’

“டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள், எதிர்பாராவிதத்தில் மந்திரி சபையில் இடம்பெற்றதைக் கண்டு. அவருக்கு ஓர் பாராட்டு அளிக்கப்பட்டது. அந்தப் பாராட்டு விழாவில்கூட வடநாட்டுக்காரர்கள் பேசும்போதெல்லாம்,”டாக்டர் சுப்பராயனுக்கு மந்திரி பதவி கிடைத்ததன் விளைவாகத் தென்னகத்திற்குத் திருப்தி ஏற்படலாம்’ என்றுதான் குறிப்பிட் டார்கள். மற்ற வடநாட்டு மாநிலத்தைச் சேர்ந்த எவரேனும் மந்திரிப் பதவி பெற்றால், அவர் இன்ன மாநிலத்தைச் சேர்ந்தவர் என்று அவரவர் மாநிலத்தின் பெயரைக் கூறித்தான் பாராட்டுவார்கள். ஆனால், டாக்டர்

சுப்பராயனைப் பாராட்டும்போது, “அவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்’ என்பதாகப் பாராட்ட வில்லை;”தென்னாட்டுக்காரர்’ என்ற முறையிலே பாராட்டினார்கள்.’’

”மக்கள் சபையில், என்னுடனிருக்கின்ற கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் நாகிரெட்டி, இந்திப் பிரச்சினைபற்றித் தென்னாட்டு உணர்ச்சி பீறிட்டுவரும் அளவுக்குப் பேசினார். மற்றக் கம்யூனிஸ்டுகளுக்கு அந்த உணர்ச்சி இல்லை.’’

”தென்னக அரசியலை மனத்தில் வைத்துக்கொண்டு, எவர் எந்தக் கட்சியிலிருந்து பேசினாலும், அவர்களை நான் பாராட்டுவேன்.’’

“தென்னகத்தில் இருந்துகொண்டு, அகில இந்திய அரசியல் பேசினால், பாரதப் பண்பாடுபற்றிப் பேசினால், அவர்கள்,”பிறந்த

மண்ணுக்குத் துரோகம் செய்கிறார்கள்' என்பதுதான் பொருள். அவர்கள், எங்கேயோ இருக்கிறவர்களுக்கு ஆள் பிடித்துக் கொடுக்கும் கங்காணிகளாகத்தானிருக்க முடியும்! இது குறுகிய புத்தியால் சொல்லுவதல்ல. . . பிறந்த நாட்டுக்குப் பெருமை தேடித்தரும் பரந்த எண்ணம்! தத்துவ ரீதியில், "வடக்காவது. . . தெற்காவது' என்று பேசினால், அவர்கள் அறியாமையில் மூழ்கியிருக்கிறார்கள். . . அல்லது துரோகமிழைக் கிறார்கள் என்பதுதான் பொருள்!''

தத்துவ விளக்கம் தரமாகத்தான் இருக்கிறது - ஒப்புக் கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது. இதைப் படித்த பிறகு, எவரும், தென்னக அரசியல் என்பது தெகிடுதத்தம் அல்ல என்பதை உணருவார்கள் என்றெல்லாம் தோன்றுகிறதல்லவா, நமக்கு! ஆயினும்,

பெரிய இடங்களில் உள்ளவர்கள், இதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள் - அகில இந்தியா என்பதுதான் உண்மை, நியாயம், தேவை, சட்டம் என்கின்றனர் - அவர்களை என்னென்பது?

தெளிவற்றவர்கள்,
பிடிபட்டவர்கள், வாழ்வை

நாடுவோர்

என்று இப்படியெல்லாம்தான் சுற்றிவளைத்துச் சூடு குறைத்துக் கண்டனச் சொல்லைக் கரும்புச் சாறினில் தோய்த்தெடுத்துப் பயன்படுத்துவோம். நமக்கெங்கே வருகிறது, தீப்பொறி! நாம்தான், எல்லோரும் இசைவு தர வேண்டும், அதற்கான முறையில் கனிவாகப் பேசவேண்டும் என்ற பைத்தியக்காரத் திட்டம்

கொண்டவர்களாயிற்றே! தீர்த்துக்கட்டு! வெளுத்து வாங்கு! என்ற போக்கு வருவதில்லையே நமக்கு! - நல்லவேளயாக!! தெற்காவது வடக்காவது, எல்லாம் ஒன்று என்று காமராஜர் பேசுகிறார், கக்கன் பேசுகிறார், சுப்ரமணியம் பேசுகிறார், நவ இந்தியா எழுதுகிறது, மேலும் பலர், பலப்பலர்! இவர்களைத் தோழர் சம்பத், என்ன கூறி அழைத்திருக்கிறார், தெரியுமா, தம்பி! நம்மைவிட்டு விலகியதும் அப்பாவி என்கிறார்கள், ஆபாச நடையுடையோன் என்கிறார்கள் - அதுகேட்டு, நீ ஆயாசமடை கிறாய்; காமராஜர் போன்றோரும், அவர் கட்சி ஏடுகளும், பூரித்துப் போகின்றன. ஆனால், அந்த அகில இந்தியாக்களை அவர் என்ன பெயரிட்டு அழைத்திருக்கிறார், தெரியுமா?

அகப்பட்டதைச் சுருட்டுபவன்!

ஆமாம், தம்பி! அது ஆனானப்பட்ட

காமராஜராகட்டும், அகிலம் சுற்ற ஆரம்பித்திருக்கும் கனம் சுப்ரமணியமாகட்டும், இதுதான், தோழர் சம்பத் அவர்கள் தரும் சிறப்புப் பட்டம்!

இப்போது, "அப்போது அப்படி எல்லாம் பேசியது பாதகம் - பொறுத்தருள்வீர்!' என்றுகூடப் பேசக்கூடும். ஆனால் அதைக் கேட்பவர்கள், இப்போது பேசுவதற்கு, மீண்டும் எப்போது பொறுத்திடுக! கூறுவாரோ என்றுதான் வியந்து பேசுவர். பன்னிரண்டு ஆண்டுகளாகப் பேசிக்கொண்டு வந்தது, பாதகம் என்று இன்று அவருக்குப் புரிகிறதுபோலும்! இப்போது பேசுவதும் அதே ரகமாக இருக்காது என்பதற்கு என்ன உறுதி இருக்க முடியும்? இப்போது பேசுவதை எப்போது மறுப்பாரோ, யாரறிவார்? இவர், எதைப் பேசினாலும், அது எப்போதேனும் இவராலேயே மறுக்கப்பட்டுவிடக்கூடுமே

என்ற பயத்தோடு அல்லவா, இருந்து தொலைக்கவேண்டும். அப்படிப்பட்ட பேச்சை எப்படி நம்பிக்கொண்டிருப்பது? இப்போது, எப்படி, திராவிடநாடு கனவு என்று பேசுகிறாரோ, அதுபோல, இப்போது பேசும்"தேசீயம்' ஒரு பித்தலாட்டம் என்பதை உணர்ந்து கொண்டேன்! இதுவரையில் உங்களைத் தவறான வழியில் அழைத்துச் சென்றதற்காக மன்னித்திடுக! என்று கூறுவாரோ? நாம், இவர் பேச்சை, நம்பிக்கையுடன் கேட்பதே ஆபத்து - என்றல்லவா மக்கள் கருதுவர் - திகில் ஏற்படும்!

தம்பி! இவர் அகில - இந்தியா பேசுவோரிடம் உள்ள திகிலைப்பற்றியும் பேசியிருக்கிறார்.

"தெற்காவது வடக்காவது எல்லாம் ஒன்று என்று பேசுபவன், அகப்பட்டதைச்

சுருட்டுபவனே தவிர, அரசியல் தீர்க்கதரிசி அல்ல.

சர்க்கஸ் கம்பெனியில் கம்பத்தின் உச்சியில் ஏறி வித்தைகள் செய்பவன், எந்த நிமிடத்தில் கீழே விழுவோமோ என்று அஞ்சிக்கொண்டேயிருப்பதுபோல, அகில இந்தியா என்று உதட்டளவில் பேசிக்கொண்டிருந்தாலும், அத்தனை பேர் மனத்திலும் ஒரு திகில் - எந்த நேரத்தில் எந்தப் பிரச்சினையில் இந்தியா உடையுமோ என்ற திகில் இருந்துகொண்டே இருக்கிறது.''

தம்பி! இவை, பூவிருந்தவல்லியில் 1959, செப்டம்பர் 11, 12 நாட்களில் மாநாட்டிலே பேசப்பட்ட மணிமொழிகள்! இப்போது, இவை யாவும், குப்பைக் கூளம் என்று தள்ளிவிடச் சொல்கிறார்!

அந்த மாநாட்டிலேதான், இன்று என்னை

ஏசும் அதே விறுவிறுப்புடன், அமைச்சர்களுக்கு அர்ச்சனை நடந்தது.

”இங்குள்ள பக்தவத்சலமும் சுப்பிரமணியமும் டெல்லியிலே வந்து கர்ணம் போடுகிறார்கள்.

சில இளிச்சவாயர்கள் கையில், 8 கோடி பேர்கள் திராவிடர்கள் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர் களைச் சிலர் டெல்லியிலிருந்து கட்டியாளுகிறார்கள். அவர்களிடமிருந்து நாம் விடுபட்டாக வேண்டும்.’’

இவ்வளவு திட்டவட்டமாகப் பேசினார் - பேசினால் என்ன? இப்போது, லேபில் மாற்றிக்கொண்டார்; அது அவருடைய விருப்பம் என்று, அவரைப் பூஜைக்குரியவராக - பொன்னான தலைவராகக் கொண்டுவிட்டவர்கள் கூறிடக்

கூடும். ஆனால், அதற்கும், அவர் இடம் வைக்கவில்லை.

”எவர் எவர் லேபில் எப்படியெப்படி மாறினாலும் தென்னக உணர்ச்சிமட்டும் மறைந்துவிடப் போவ தில்லை.’’

தம்பி! அன்று அவருக்கு இருந்த அந்த நம்பிக்கை எனக்கும், உனக்கும், நம்போன்ற இலட்சக்கணக்கானவர்களுக்கும் இன்றும் இருக்கிறது. இதற்காக, நம்மை அப்பாவிகள் என்று ஏசட்டும் - ஆபாச நடையினர் என்று தூற்றட்டும். கவலையில்லை. - தடித்த வார்த்தைகளை உபயோகிப்பது அவருடைய வாடிக்கை - கைவசமுள்ள சரக்கு என்பதுதான் நமக்குத் தெரிகிறதே. முன்பு ஒரு சாரார்மீது

கோபித்துக்கொண்டார் - அப்போது.

துரோகிகள்

கங்காணிகள்

இளிச்சவாயர்

தாசர் புத்தியினர்

கர்ணம் அடிப்போர்

அகப்பட்டதைச் சுருட்டுவோர்

என்று ஏசினார். இப்போது நம்மீது கோபம். நாலு வார்த்தை பேசுகிறார்! எப்படிச் சும்மா இருக்க முடியும்! சுறுசுறுப்பான சுபாவம்! விறுவிறுப்பூட்டும் வயது!!

•

”இந்த நான்கு மாநிலங்களின் நாகரிகமும் தொன்மையான திராவிட நாகரிகமாகும்; அதனுடைய பளபளப்பு இடையிலே கொஞ்சம் மங்கியிருக்கலாம்; இருந்தாலும், திராவிட நாகரிகத்தின் கருப்பொருள் இன்னும் தங்கியிருக்கிறது.’’

”தென்னகத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த திராவிட நாகரிகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். நாம் உதய சூரியன்போல்; நமது இலட்சியம் எல்லோருடைய கண்களுக்கும் தெரியத்தான் போகிறது. இரவிலே மலை யுச்சியைப் பார்த்தால் இருட்டாக இருக்கிறது. இயற்கை விதிப்படி சில மணி நேரத்தில் உதய சூரியன் வரும். உதய சூரியன் தோன்றியதும், ஆந்தையும் கோட்டானும் ஓடிப் பதுங்குவதுபோல, இன்று நம்மைப் பார்த்து

அலறும் ஆந்தைகளும் கோட்டான்களும் ஓடிப் பதுங்கத்தான் போகின்றன என நம்பித்தான், இந்த அரிய இலட்சியத்திலே எங்கள் கருத்தைச் செலுத்திப் பணியாற்றுவதிலே ஈடுபட்டிருக் கிறோம்.''

•

இப்படி விளக்கங்கள்!

சின்னாட்களுக்கு முன்பு, அமைச்சர் சுப்ரமணியம் ஒரு அற்புதமான கண்டுபிடிப்பு நடத்தினார். தோழர் சம்பத் அவர்கள் டில்லிப் பாராளுமன்றம் சென்றபிறகு, பண்டித நேருவின் பெருமையை அறிந்துகொண்டாராம்! இனி எப்படியோ? இதுவரை, அப்படி நேருவின் பெருமையை அறிந்துகொண்ட தாகவோ, பாராட்டியதாகவோ தெரியவில்லை.

"நேருவை நாங்கள் ஒரு அன்னியராகவே

கருதுகிறோம்; அன்னிய நாட்டுக்காரராகவே கருதுகிறோம்.''

"இந்த நாட்டிலே இருக்கிற கோடிக்கணக்கான மக்கள், நேருவினுடைய ஏகாதிபத்யத்தை எட்டி உதைத்துவிட்டுச், சுதந்திரம் பெறுவதற்கு ஆயத்தமாகிவிட்டார்கள்.''

பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டிய நிகழ்ச்சியை விளக்கி, சென்னைக் கடற்கரையில் பேசிய பேச்சிலே ஒரு துளி இது. 21-1-58-ல் பாராளுமன்றப் பிரவேசத்துக்குப் பிறகுதான்!!

•

"நாம் நியாயத்தின் அடிப்படையில் நின்று,"திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்று உரிமை முழக்கமிடுகிறோம்; ஆனால் அவர்கள் மறுக்கிறார்கள்.''

நமது கோரிக்கை, நியாயத்தின் அடிப்படையில் எழுந்தது; அவர்களின் மறுப்பு மமதையினால் எழுந்தது! மக்களை மக்களாக மதிக்காது, மாக்களாக நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள்!

இப்படி இவர்கள் மமதையோடு பேசுவதற்குக் காரணம், இவர்களிடமுள்ள ஆதிக்க அரசியல் நிலைதான் என்பதைத் தவிர வேறென்ன?

"இந்த அரசியல் நிலை, வெளி விவகாரங்களில்கூட - எதிர்பாராத இடங்களில் இருந்தெல்லாம்கூட, சிற்சில நேரங் களில் வெற்றியைத் தேடித் தரக்கூடும்; ஆனால், உள்நாட்டில், என்றென்றைக்கும் இந்த அரசியல் நிலை அநியாயத்திற்கும் அக்கிரமத்திற்குமே துணை போய்க்கொண்டிருக்காது'' என்பதை, மமதையோடு பேசுபவர்கள் உணர்ந்தாக

வேண்டும்.

”நமது கோரிக்கையை எந்தக் காரணம் காட்டி இவர்கள் மறுக்கிறார்கள்? எவருக்கு இதுவரை இந்தத் துணிவு இருந்தது?’’

”நாம், நமது கோரிக்கையின் நியாயத்தை, எந்த மன்றங் களிலும், எவரிடத்திலும், வாதிட்டு நிலைநாட்டத் தயாரா யிருக்கிறோம்’’. . . என்று, ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சொல்லியிருக்கிறோம்.

”உலகத்திலே நீதிமான்கள் - நேர்மையாளர்கள், அறிவுலக மேதைகள் - என்றுள்ள எவரையும் அழைத்து வாருங்கள்; எங்கள் கோரிக்கை நியாயமா இல்லையா என்று கேட்போம் - என்று கூறியிருக்கிறோம்.

“அகில இந்தியா’ என்று துவங்குகிற எந்த ஒரு காரிய மானாலும் சரி - அது நாடகக் கழகங்கள், இசைக் கூடங்கள் என்ற கலை

நிறுவனங்களாயினும் சரி - அல்லது"அகில இந்திய உளுத்தம் பரப்பு உடைப்போர் சங்கம்' என்றிருப்பதாயினும் சரி - அரசியல் கட்சிகளாயினும் சரி - அவைகள் வடக்கிற்கு வாழ்வும் ஏற்றமும் தரவும், தெற்கிற்குத் தேய்வும் தாழ்வும் தரவும்தான் பயன்பட முடியும்.

"அகில இந்தியா' என்ற ரீதியில் துவங்கும் எந்தப் பொருளாதார நிறுவனமாயினும், அதில் வடவர் ஆதிக்கம்தான் நிலவுகிறது.

பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் முதலியவற்றில் எல்லாம் வடநாட்டவரின் முதலீடுதான் ஆதிக்கம் செலுத்துகிறது. அண்ணா அவர்கள், "பணத்தோட்டம்' என்று தொடர் கட்டுரை ஒன்று எழுதினார்கள்; அதில், வட நாட்டவரின் பொருளாதார ஆதிக்கம் எந்த அளவு இந்த நாட்டில் இருக்கிறது - என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இப்படி, அரசியல், பொருளாதாரத் துறைகளில் வட நாட்டவர் ஆதிக்கம் செலுத்த வாய்ப்புப் பெற்றிருப்பதினால் தான், "தெற்குலிகுமரி எங்களுக்குச் சொந்தம்' என்கிறார்கள் - தங்களின் இலாபம் கருதி - பயன் கருதி!

நாம் இந்த வடவரின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பதால் தாழ்வுறுகிறோம் - வீழ்கிறோம் - என்று புள்ளி விவரங்களைப் பிரித்துக் காட்டிக் கேட்கிறோம் - "எங்கள் நாடு எங்களுக்காக வேண்டு'மென!

நமது இந்த நியாயமான கோரிக்கையை என்ன காரணங் காட்டி, இவர்கள் "தவறு' என்று கூறுகிறார்கள்?

குறி சொல்வதைப்போல, இங்குள்ள சிலர், "திராவிட நாடாவது - கிடைப்பதாவது? இந்தியாவையாவது - பிரிப்பதாவது?

திராவிட நாடு வெறும் காட்டுக் கூச்சல்; அது கிடைக்காது; தரமாட்டோம்'. . . என்று பேசுகிறார்களே தவிர, நாம் காட்டுகிற காரணங்களை மறுத்துப் பேச வாய் திறப்பதைக் காணோம்!"

சென்னைப் பேச்சு! அறைகூவி அழைத்திருக்கிறார் - திராவிட நாடு காட்டுக் கூச்சல் என்று பேசுவோரை!!

"மூன்றாம், நான்காம் படிவம் படிக்கும் மாணவர்களைக் கேட்டால்கூட விளக்கம் கிடைக்கும்,"திராவிட நாடு'பற்றி" என்றும் பேசினார். அது, இது:-

•

"நாம் நமது இலட்சியத்தை மட்டும், குருட்டுத்தனமாகக் கூறிவிட்டு, அவற்றை விளக்குவதில்லை என்று எவரேனும் கருதுவார்களேயானால், அது

வேண்டுமென்றே சொல்லப்படும் பழியாகும்.''

நாம், நமது இலட்சியம், கொள்கை, கோரிக்கைகளுக்கான நியாயங்களை, வேறு எவராலும் முடியாத அளவிற்குத் தொகுத் தெடுத்துச் சொல்லியிருக்கிறோம்; சொல்லி வருகிறோம். என்றாலும், காமராஜர் "திராவிட நாடு என்றால் என்ன என்று எனக்குப் புரியவில்லை' என்கிறார்.

"திராவிட நாடு என்றால் என்ன? திராவிட நாடு வேண்டுமா? வேண்டாமா?' என்று இந்த மாநிலத்திலுள்ளபள்ளிகளில் மூன்றாம். . . நான்காம் படிவங்களில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு கட்டுரைப் போட்டி வைத்தால், அவர்கள் அழகான விளக்கங்களை எழுதிக் காட்டுவார்கள்; வேண்டு மானால், காமராஜர், அவர்களை அணுகுகிற முறையில் அணுகிப் பார்க்கட்டும்.

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரை, திராவிட நாடு ஏன் என்பதற்கான விளக்கம் தரும் வேலையை முடித்துக்கொண்டு அந்த விளக்கம் பெற்றோரை ஒன்று திரட்டி, திராவிட நாடு அடைவதற்கான வேலைகளில் ஈடுபடும் தருவாயிலிருக்கிறது; இந்த நேரத்தில் போய், காமராஜர், நம்மிடம் விளக்கம் கேட்கிறார்; வேடிக்கையாக இருக்கிறது!

•

இப்படியெல்லாம் பேசினவரே, இன்று, திராவிட நாடு கனவு என்று பேசுகிறாரே, ஏனோ இந்தக் கொடுமை செய்கிறார் என்று எண்ணி ஆயாசம் அடையாதே, தம்பி! இவர் இன்று சொல்கிறார்; வேறு பலர், முன்பு சொன்னபோது அலட்சியப் படுத்திவிட்டு, அடித்துப் பேசிவிட்டு! நாம் அவர்களின் பேச்சுக்கு என்ன மதிப்பு தந்தோமோ, அதேதான் இதற்கும்.

”அகிலம் சுற்றி வந்தவன் கூறுகிறேன், கேண்மின், திராவிட நாடு கனவு!’’ - என்றார் பண்டித நேரு.

அகிலம் சுற்றுவது தெரியும் - எமது இன இயல்பு அறிய, எங்கெங்கோ சுற்றிப் பயன் என்ன? என்று கேட்டோம் - நேருவின் பேச்சைக் கேட்க மறுத்தோம்.

இப்போது இவர், திராவிட நாடு கனவு என்று கூறுகிற போது, நேரு பண்டிதரிடம் நாம் காணாத மேதாவிலாசம், அனுபவம், வாதத்திறமை, இவரிடம் இருக்கிறது என்றா சொக்கிவிடப் போகிறோம்.

நேருவாவது, துவக்க முதல், திராவிட நாடு கூடாது, கிடைக்காது என்று பேசி வருகிறார்; அதனால் என்ன என்று அலட்சியம் செய்கிறோம். இவரோ, 12 ஆண்டுகள், பேசிப் பேசித் தமது பேரறிவு போதும்,

எதிர்ப்பாளர்களை அழித்தொழிக்க என்று கூறி வந்துவிட்டுத், திடீரென்று, இப்போது, திராவிட நாடு கனவு என்கிறார். அப்படியா? சரி! விட்டுவிடுகிறோம்! - என்றா கூறத் தோன்றும்.

கனவு! தம்பி! கனவு! மாநாடுகளிலே முழக்கமிட்டது - பொதுக்கூட்டங்களிலே பரணி பாடியது - பத்தி பத்தியாக எழுதியது - பார்முழுதும் பார்க்கச் சொல்லிப் பாடம் காட்டியது - எல்லாமே, கனவு! எப்போது? பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு!!

திராவிட நாடு என்பது வீண் மனக்கோட்டை - வெறும் கனவு என்கிறார்கள் சிலர்.

கனவு காண்பதென்பது ஒரு சமுதாயத்துக்கு மிக மிகத் தேவை.

இதோ வானத்தில் வண்ணமதி நிலவுகிறது. சில தினங்களுக்கு முன்பு இருந்த

சந்திரன் வேறு - இப்பொழுது உள்ள சந்திரன் வேறு. பத்து நாள் முன் வாழ்ந்த வையம் வேறு.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் யாரோ ஒருவன் கனவு கண்டதன் விளைவாகத்தான் சந்திரனை எட்டிப் பிடித்துப், பூமியிலிருந்த பொருளைச் சந்திரனில் சேர்க்க முடிந்தது. இன்று சந்திர மண்டலத்தை "ராக்கெட்டு' எட்டிப் பிடிக்க வித்தூன்றியவன், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கனவு கண்டவன்தான். அப்படிக் கனவு காண்பதற்கு இன்று சிலர் தேவைப்படுகிறார்கள்.

என்ன அண்ணா! கனவுக்கே ஒரு விளக்கம் கொடுத்து விடுவாய்போலிருக்கிறதே என்று என்னைக் கேட்காதே தம்பி! இது என் பேச்சு அல்ல - தோழர் சம்பத் அவர்களின் பேச்சே தான். நெடுங்காலத்துக்கு முன்பு நிகழ்த்தியது அல்ல; 17-9-1959-ல். அன்று, என்னைப் பாராட்டிப்

பேசினார் அவர்; எனக்கு வயது ஐம்பது என்பதற்காக. அப்போதுதான் திராவிட நாடு பிரச்சினையைச் சில பைத்தியக்காரர்கள் கனவு என்கிறார்களே, அவர்களின் மரமண்டையில் படும்படி பேச வேண்டும் என்று அவருக்குத் தோன்றவே, சந்திரனைப்பற்றி முன்பு கண்ட கனவு, "ராக்கட்' கண்டுபிடிப்பு வரையில் அறிவாற்றலைக் கொடுத்தது என்று விளக்கினார். விளக்கிவிட்டு, எனக்கும் சில அன்புரைகள். . .''

"அண்ணா அவர்கள் அப்படிப்பட்டதொரு அரிய கனவைக் காண்கிறார். அந்தக் கனவு நனவாக நாம் மனமார உழைத்தால், நம் காலத்திலேயே அதைச் சாதிக்கலாம்.''

கனவு காண்பதுகூடத் தேவைதான் என்று தத்துவ விளக்கம் தந்தவரே, திராவிட நாடு வெறும் கனவு என்று ஏன் பேசுகிறார்? சலிப்பு! அலுப்பு! இயற்கையாக எழக் கூடியது!

கட்டுப்படுத்தா விட்டால் மனம் குழம்பும், மார்க்கம் வேறுபடும், மதிப்பீட்டுத் திறமையும் மங்கி மடிந்துவிடும்.

”சிலருக்கு இதிலே சலிப்பு ஏற்பட்டிருக்கிறது. அலுத்துப் போனதால், தாங்கள் அமைத்த அஸ்தி வாரத்தையே உடைத்து வேறு ஒரு கோட்டை கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். திராவிட நாடு திராவிடருக்கே என்று சொன்னவர்களுக்கே அந்த இலட்சியத்தின்மீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. கேரளமும், கர்நாடகமும், ஆந்திரமும், தமிழகமும் சேர்ந்தது திராவிட நாடு என்று முழக்கமிட்டவர்கள், இன்று, தமிழ் நாடு மட்டும் போதும் என்று பாதை மாறி, எங்கோ அலைந்து கொண்டிருக்கிறார்கள்.’’

அன்று அவர் குறிப்பிட்ட, “பாதை மாறி எங்கோ அலைந்து கொண்டிருக்கும்’ நிலை, தமக்கே இவ்வளவு விரைவாக,

திடுக்கிடத்தக்க முறையில் ஏற்படும் என்று, அவர் எண்ணியிருந் திருக்க முடியாது. அன்று இரக்கம் கலந்த குரலில்,"பாதை தவறிச் செல்கிறார்களே! அலைந்துகொண்டிருக்கிறார்களே!' என்று யாரை எண்ணிக்கொண்டு, இவர் பேசினார்? பெரியாரை! வெகுவிரைவில், தமக்கும் பாதை தவறி அலையும் நிலை ஏற்படப் போகிறது என்பது அறியாமல்!'

"பாதை புதிதாக வகுத்துக்கொண்டேன்' என்று பின்பற்றுவோர் கண்மூடிக் கிடக்கும்வரை பேசலாம். ஆனால், பெரியார் இதே காரியம் செய்தபோது, அவரைக் கேலி செய்து விட்டு, இன்று இவரே, அதுபோலாகிவிட்டதுடன் - அதற்கு ஒரு சமாதானமும் தேடிக்கொள்கிறாரே என்றுதான் எவரும் கூறுவர் - பரிதாபப்படுவர்! பெரியாராவது, தமிழ் நாடு போதும் என்று

அளவை மட்டுமே குறித்துக்கொண்டார்! வகையை அல்ல! வடநாட்டுத் தொடர்பு அறவே ஆகாது என்று கூறுகிறார். அகில இந்தியா பேசுவோரைக் கங்காணிகள், துரோகிகள், அகப்பட்டதைச் சுருட்டுவோர் என்றெல்லாம் அர்ச்சித்த ஆற்றல் மிக்கவர், தமிழ் நாடு அகில இந்தியாவிலேயே இருக்கும் - ஆனால் பிரிந்துபோக விரும்பினால், அதற்கு உரிமை பெற்று இருக்கும் என்று பேசுகிறார் - பெரியார்போலத் திட்டவட்டமாக, வடநாட்டுப் பிடிப்புக் கூடாது என்று கூற அச்சம், கூச்சம், தயக்கம், ஏனோ? அளவைக் குறைத்துக் கொண்டதற்கே, பெரியார், பாதை மாறி எங்கோ அலைந்துகொண்டிருக்கிறார் என்று கேலி பேசினாரே, இவர் கொள்கையையே அல்லவா மாற்றிக்கொண்டார் - ஏன்? அதற்கும் அவரே பதில் அளிக்கட்டும்;

“அரசியலிலே தம் கொள்கைகளை

மாற்றிக் கொள்பவர்களில் இரண்டு"ரகம்' உண்டு. அவசரக்காரர் களாக இருப்பவர்கள் அவசரப்பட்டுத் தம் கொள்கையை மாற்றிக் கொள்வது ஒரு ரகம். தம் வாழ்நாளில் பெரும் பகுதியும், தம் ஆற்றல் முழுவதையும் காட்டித் தீர்த்துவிட்டு வெற்றி கிட்டாத காரணத்தால் கொள்கையை மாற்றிக் கொள்பவர் இரண்டாம் ரகத்தைச் சேர்ந்தவர்கள்; வேறு சிலர் இருக்கிறார்கள் - அவர்கள் உள்ளமே அவ்வளவுதான்!''

தம்பி! திடீரென்று இப்போது, கொள்கையை மாற்றிக் கொண்டாரே, இவர் எந்த ரகம்? காளை வயது! கடுஞ்சிறையில் ஆண்டு பல அடைபட்டு உருகி, உடல் கருகி வெளிவந்து பார்த்துத் தன் உழைப்பு உருவான பலன் தராதது கண்டு, மனம் வெதும்பிக் கொள்கையை மாற்றிக்கொண்டிருக்க முடியாது. உள்ளமே அவ்வளவுதான் - என்று

கூறப்படும் ரகத்தில், சேர்க்க மனம் இடம் தரவில்லை. மிச்சம் இருப்பது? மீண்டும், படித்துத்தான் பாரேன் - புரிகிறது! இந்த இலட்சணத்தில், நாடு தன்னைப் பின்பற்ற வேண்டும் என்று வேறு எதிர்பார்ப்பதா? எப்படி என்று கேட்டால் - ஏன்? முன்பு அந்தக் கொள்கைக்காக எப்படியெப்படி அடித்துப் பேசினேனோ, அதுபோல் இந்தப் புதுக்கொள்கைக்கும் பேசுகிறேன் - மக்களா சேரமாட்டார்கள்? என்றா கூறுவது. மக்கள் என்ன மெழுகா - விருப்பம்போல் உருவம் பெறச் செய்ய!!

ஆனால், அண்ணா! முழுக்க முழுக்க, நீங்கள் கழகத்துக்கே பயன்பட வேண்டும் என்று யோசனை கூறினாராம் - கலைத் தொடர்பு வேண்டாம் என்றாராம், கேட்கவில்லையாம் - அதுதான் கோபமாம்!

அப்படியா, தம்பி! யோசனை என்ன?

புத்திமதியே கூறட்டும்; பரவாயில்லை; நான், இப்போது, கழகக் காரியத்தைக் கவனிக்கும் அளவுடன், யோசனை கூறுபவரின் அலுவலை ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறாய் அல்லவா? மணி மூன்று - விடியற் காலம் எழுதிக்கொண்டிருக்கிறேன்; இது முடிந்ததும், ஆங்கில ஏட்டு வேலை இருக்கிறது. கலை உலகத் தொடர்பு எனக்கு எந்த அளவு? என்ன வகை? அதற்கு நான் செலவிடும் நேரம் என்ன? ஒரு கணக்குப் பார்க்கலாமா? என்று கேட்டுப்பாரேன் - குறை கூறுவோரை. புதிய வீடு வாங்க - அலங்காரச் சாமான்கள் வாங்க - அனந்தராம தீட்சிதரின் காலட்சேபம் கேட்க - வாடகைப் பணம் முறைப்படி பெற - வழக்கு வேலைகளைக் கவனிக்க - செலவிடும் நேரம், உண்டா? எனக்கு! இவைகளைக் கவனிக்கத் தேவைப்படும் நேரத்தில், பத்தில் ஒரு பங்குகூட இராதே,

எனக்குள்ள கலை உலகத் தொடர்பு! நான் தொடர்பு கொண்டுள்ளது, இரண்டு படங்கள் - ஒன்று M.G. இராமச்சந்திரன் நடிப்பது - மற்றொன்று K.R. இராமசாமி, S.S. இராசேந்திரன், M.R.இராதா நடிப்பது; இரண்டுக்கும் நான் அல்ல, கதைகளைத் தேடிக்கொண்டிருப்பவன்; உள்ள கதைக்குப் புது உருவம் கொடுக்கும் அளவுதான் என் தொடர்பு; மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, சில மணிநேரம்! எடுத்த படத்தைக் கூடத், தோழர் சம்பத் அவர்கள் பார்த்தாராம் - நான் சரிவரப் பார்க்கக்கூட இல்லை! இது என் தொடர்பு! இது, கழக வேலையை என்ன பாதித்துவிட்டது? துளியேனும் உண்மையான மனக்குறை இருந்தால், விளக்கலாமல்லவா? போகட்டும் - இவை தவிர, இனி, என்றென்றும் கலைத்தொடர்பு வேண்டாமென்று, தம்பி! உனக்குத் தோன்றினால், யோசனை என்ன?

கட்டளையிடு! ஏற்றுக்கொள்கிறேன்! பொதுத் தேர்தல் வருவதற்குள், ஒரு படத்துக்காவது கதை எழுதுங்கள் அண்ணா! என்று என்னிடம் சொன்னவரா, நாட்டினரைப் பார்த்து, செச்சே! இப்படி ஒரு தலைவனா? படத்துக்குக் கதை எழுதுகிறானே! - என்று பேசுவது.

அதுதான், மனக் குமுறலுக்குக் காரணம், என்றால் தம்பி! ஏற்கனவே கொடுத்துவிட்ட, எதையும் தாங்கும் இதயம் - நல்லவன் வாழ்வான் எனும் இரண்டோடு, என் கலை உலகத் தொடர்பை நிறுத்திக்கொள்கிறேன்; யோசனை கூறி என்னை நல்வழிப்படுத்திக் கழகத்தைச் செம்மைப்படுத்தும் அவரை, கொள்கையை விட்டுவிடாமல், சமதர்மத்தை இழந்துவிடாமல், பணியாற்றச் சொல்லேன் - பார்ப்போம்.

இந்த அளவு கலைத்தொடர்புகூட, ஏன், எனக்கு? அதன் மூலமாக ஏதேனும், நல்லறிவுப்

பிரசாரம் செய்ய வழி கிடைக்குமா என்ற ஆவல்தான்! கலை உலகத் தொடர்பு கூடாது என்பதுதான் என் மனக்குமுறல் என்று இன்று பேசுபவரே, கலை உலகில் நான் தொடர்பு கொண்டதாலே பகுத்தறிவுத் துறைக்குக் கலை திரும்பிற்று என்று பேசிடக் கேட்டு, மகிழ்ந்து, நம்பி, செய்யத் தொடங்கியதுதான்.

போலி வாதம் பேசும் அரசியல் மேதைகளுக்கு ஈ. வெ. கி. சம்பத் "எச்சரிக்கை' என்ற தலைப்பில், அவருடைய சென்னைப் பேச்சு ஒன்று இருக்கிறது. அதில் இது இடம் பெற்றிருக்கிறது.

•

"திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சி அல்ல; அது டிராமா சினிமா கட்சி என்று அந்த"அரசியல் மேதை'கள் நம்மைப்பற்றி

கூறியிருக்கிறார்கள். உலகில் எந்தக் கட்சியில்தான் கலைஞர்கள் இல்லை? எல்லாக் கட்சியிலும் கலைஞர்கள் இருக்கிறார்கள். நம்மிடம், மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த கலைஞர்கள் இருக்கிறார்கள்."

"இந்த நாட்டில் காங்கிரஸ் உலவுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? காந்தியாருக்கு அடுத்தபடியாகச் சத்தியமூர்த்தியும், கே. பி. சுந்தரம்பாள் என்ற அம்மையாரும் தான்! நன்றிகெட்ட காங்கிரசார் வேண்டுமானால் இதை மறந்திருக்கலாம்.''

"கலைஞர்களின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு நாட்டு மக்களிடம் சென்று ஓட்டுக் கேட்டவர்கள்தான், இன்று நம்மைப் பார்த்து நடிகர்கள் என்று குறை கூறுகிறார்கள் - விதவை, கன்னியைப் பார்த்துக் கேலி செய்வதுபோல!''

"இதையெல்லாம்
தெரிந்துகொண்டிருப்பதால்தான்,
இவர்களுடைய மானம் சந்தி சிரிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசின நேரு பண்டிதர்,"அரசியல் துறைமட்டும் அல்லாமல், ஏதாவது பிழைப்பதற்குக் கௌரவமான தொழில் வைத்திருப்ப வர்கள் மட்டும் அரசியலில் வாருங்கள்' என்று கூறியிருக்கிறார். அப்படிக் கூறியிருப்பவரைப் பின்பற்றிக்கொண்டிருப்பவர்கள் தான், வேறு ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களைப் பார்த்துக் கேலி பேசுகின்றனர்.''

"எனவே, அரசியல் துறையில் ஈடுபட்டவர்கள் வேறு தொழில்களில் ஈடுபடுவது பலவீனமல்ல, அது தேவையானது தான் என்பதை நேரு பண்டிதர் விளக்கியிருக்கிறார். எனவேதான், காலை

முதல் இரவு வரை உண்ணுவதைத்தான் தங்கள் தொழிலாகக் கொண்டில்லாமல், வேறு ஏதாவது ஒரு தொழிலையும் தெரிந்துகொள்ளச் சொல்கிறார், காங்கிரஸ் காரர்களை, நேரு பண்டிதர்.''

"திராவிட முன்னேற்றக் கழகம், நல்ல நடிகர்களையும், கலைஞர்களையும், அரசியல், பொருளாதாரத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களையும், இசைவாணர்களையும், திறமைமிக்க ஓவியர் களையும், சிற்பிகளையும், குத்துச் சண்டையில் தேர்ந்தவர் களையும் - இப்படி வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் திறமை பெற்றவர்களையும் கொண்டு விளங்குகிறது. இங்கு அரசியலை மட்டும் நம்பித்தான் வாழவேண்டுமென்ற நிலையில் யாரும் இல்லை.

இலங்கைப் பிரதமராயிருக்கும் பண்டார

நாயகாவும் கதைகள் எழுதுவார் - அதுவும் மர்மக் கதைகள். மர்மக் கதைகள் என்றால் என்ன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அவர் அண்மையில் காமன்வெல்த் மாநாட்டை ஒட்டி இலண்டனுக்குச் சென்றிருந்தபோது, வெறுங்கையோடு போகவில்லை - தாம் எழுதின 4-மர்மக் கதைப் புத்தகங்களையும் எடுத்துச் சென்றார்; ஏன்? அங்குள்ள கம்பெனி மூலம் அவைகளைப் பிரசுரம் செய்வதற்காகத்தான். "இவர் என்ன மர்மக் கதைகள் எழுதுகிறாரே, இவர் அரசியலில் இருக்கலாமா?' என்று இலங்கையில் எந்தப் புத்திசாலியும் கேட்கவில்லை; எந்தக் காமராஜரும் கேட்கவில்லை; ஆனால், இங்கே கேட்கிறது அந்தக் குரல்!

இப்படி, சொத்தையான வாதங்களையும், உளுத்துப்போன வாதங்களையும் கூறி, நம்மை ஆபாசப்படுத்திவிட நினைக்

கிறார்களே தவிர, அறிவுடனும் நீதியோடும் நேர்மையோடும் தர்க்க ரீதியாக நமது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் இலட்சியங்களையும் எதிர்த்துப் பேசுவார் யாரையும் காணோம்.''

அது முன்பு! என்பீரேல் இதோ, அவருடைய பாராளு மன்றப் பேச்சு!!

தணிக்கைக் குழுவைப்பற்றிப் பேசுகிறார், டில்லி பாராளு மன்றத்தில்:

"ஒரு பத்தாண்டுகளுக்கு முன் தமிழ்ப்பட உலகில் ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்தது. அதுவரை வழக்கமாகப் படமாக்கப்பட்டு வந்த புராணம், மற்றும் இதிகாசக் கதைகளுக்கு மாறாக, நவீன காலப் பிரச்சினைகள்பற்றிய கதைகள் படமாக்கப் படும் நிலை முகிழ்த்தது.

இந்த மாற்றத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தமது வேலைக்காரி - நல்லதம்பி

- போன்ற கதைகள் மூலம் தோற்றுவித்தார். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரானதால், அவரது கதைகளுக்குக் கிடைக்கிற அமோகமான ஆதரவு, அவரது கட்சிக்கும் ஆதரவையும் வலிவையும் தேடித்தரக்கூடும் என்று சிலர் அஞ்சினர். அப்படிப்பட்டவர்களின் அச்சத்தைத் தவிர்ப்பதற்காகவோ, என்னவோ, தணிக்கைக் குழுவினர் தங்களது கத்தரிக் கோலைப் பதப்படுத்திக்கொண்டனர்.''

தம்பி! இப்படி இவர் பார்லிமெண்டில் பேசியது கேட்டு, நான், சரி, கலைத்தொடர்பு அவசியம்தானா இல்லையா என்ற சந்தேகம் தேவையில்லை. பாராளுமன்ற உறுப்பினரே, அது பாராட்டுதலுக்குரியது என்றார் - நாம் ஈடுபட்டால் தவறு இல்லை என்றுதானே எண்ணிக்கொள்வேன்.

எப்போது முதல் இவருக்கு, இப்படி ஒரு

யோசனை கூறி, என்னை நல்வழிப்படுத்தும் அக்கறை ஏற்பட்டது என்பதேகூட எனக்குப் புரியவில்லை. இருவரும் சேர்ந்து, ஒரு "படம்' கூட வாங்கி, ஓட்டி, நட்டப்பட்டிருக்கிறோம்!

பெரியார், சினிமாக் கட்சி என்று கூறியபோது, இவர்தான் மிகப் பலமாகத் தாக்கினவர்.

சினிமாவை விடு! சிலம்பத்தை எடு! - என்ற தத்துவ முழக்கத்தைக் கேட்டு, இடிஇடியெனச் சிரித்தவர் இவர்.

இவருக்குத் திடீரென்று நான் கலைத்தொடர்பு கொள்ள லாகாது என்று எப்படித் தோன்றிற்று என்பதே புரியவில்லை.

மற்றொன்று, இவ்வளவிலும், ஊடுருவி நிற்கும் ஓர் விஷயத்தைக் கவனித்தாயா, தம்பி! அது ஒரு பயங்கரமான நிலையைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

இவருக்குத் திராவிடநாடுதான் சரியான திட்டம் என்று தோன்றும்; நாம் கேட்டு நடக்க வேண்டும்; இவருக்கு திராவிட நாடு கனவு என்று தோன்றும்; தமிழ் நாடு போதும் என்று தோன்றும்; உடனே நாம் அனைவரும் தலை அசைத்தபடி, அவர் காட்டும் வழி நடக்க வேண்டும்.

பிரிவதைத் தவிர வேறு மருந்து இல்லை என்பார், ஆமாம்! என்று கூறவேண்டும். திடீரென்று பிரிவினைக்கு உரிமை மட்டும் இருந்தால் போதும் என்பார் - அப்படியா? அதுவும் சரிதான்! என்று நாம் பின்பற்ற வேண்டும்.

சமதர்மம் தழைத்தோங்க வேண்டும் என்பார் - சந்தோஷம் என்று கூறவேண்டும்; திடீரென்று சமதர்மம் போன்ற தத்துவச் சிக்கல்களை நாம் கவனிக்கத் தேவை இல்லை; நமக்குத் தொழில் வளர வேண்டும், சமதர்மம்

அல்ல; - என்பார்! ஆஹா! இது அல்லவா சரியான திட்டம் என்று கூறி, அவர் காட்டும் வழி நடக்க வேண்டும்.

கலைத் தொடர்பு கழகத்துக்கு நல்லது என்பார்; நாடகம் ஆடிடலாம் என்பார்! ஆகட்டும் என்று ஆட வேண்டும், செ! கலைத் தொடர்பு இருக்கலாமா? அது கழகத்தைக் கெடுத்து விடும் என்று கட்டளையிடுவார்! கீழ்ப்படிய வேண்டும்!!

அண்ணா என்றால் என்னவென்று எண்ணிக்கொண்டீர்கள்? அவர் ஒரு தனி ஆள் அல்ல! ஒரு ஸ்தாபனம் என்பார்! மகிழ வேண்டும்; பிறகு அண்ணா என்ன அண்ணா? அண்ணாத்துரை என்று சொல்வோம் - பூஜா மனோபாவம் வேண்டாம் - கூடாது என்பார் - உடனே டேய்! அண்ணாத்துரை! வரையில் அனைவரும் பேச முற்பட வேண்டும்.

அண்ணா நடையே புதுமை என்பார்; பூரிக்க வேண்டும்; செ! என்ன ஆபாசமான நடை! பால் வைத்து எழுது கிறார்களே, பேசுகிறார்களே, என்பார்; பயப்பட வேண்டும்; நடையைக் காட்டி, நற்சான்று பெற முயல வேண்டும்.

சட்டசபையில், தி. மு. க. சாதனைகள் பாரீர் என்பார்; மகிழ வேண்டும்; சேச்சே; அக்கறையே - இல்லையே! திறமையே - இல்லையே! என்பார். அழ வேண்டும் - பாடம் கேட்க வேண்டும்!

சிவஞானக் கிராமணியார் நடத்துவது ஒரு கட்சியா? என்று கேட்டுக் கேலி செய்வார்; கை தட்ட வேண்டும் களிப்புடன்; சுண்டைக்காய்க் கட்சி நடத்தும் சிவஞானத் தாரிடம் தி. மு. கழகத் தலைவர் போய்ப் பேசலாமா? பேசி, நமது கழகத்தின் தரத்தைக் குறைத்துக்கொள்ளலாமா? என்று

கடிந்துரைப்பார்; கை பிசைந்துகொண்டு நிற்க வேண்டும்; பிறகு சிவஞானக் கிராமணியாருடன் கூடிப் பேசுவேன் என்பார்; அதுதான் முறையான "ராஜதந்திரம்'' என்று சொல்லிப் பாராட்ட வேண்டும்.

பத்திரிகை நிருபர்கள் மெத்தக் கெட்டவர்கள், அவர்களைக் கிட்டவே சேர்க்கவே கூடாது என்று சொல்வார்; ஆமாம் போட வேண்டும்; பிறகு ஓர் நாள் பத்திரிகை நிருபர்களை நண்பர்களாகக் கொள்வார். அவர்களின் சேவை நாட்டுக்குத் தேவை என்பார்; ஆமய்யா, ஆமாம் என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆடம்பர வாழ்க்கை கூடாது என்பார். அப்படி ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபடுவது, கட்சிக்கே இழுக்கை ஏற்படுத்தும் என்று அறிவுரை கூறுவார்; அரை ஆடை அணிந்த அண்ணலின் மறுபதிப்பு என்று நாம்

எண்ணிக் கொள்ள வேண்டும்; அடுத்த சில திங்களில், அழகான மாளிகையில், அலங்காரச் சூழ்நிலையில், ஆடம்பரமான கொலு நடத்துவார்; விருந்துகள், வைபவங்கள் நடை பெறும்; இதுவா ஆடம்பர ஒழிப்பு என்ற எண்ணம் தோன்றினாலும், அடக்கிக்கொண்டு, ஒரு தலைவர் இப்படித் தான் இருக்க வேண்டும் என்பார், பாராட்ட வேண்டும்.

அவருக்கு எவ்வெப்பொழுது, எதெது சரியென்று. முறையென்று படுகிறதோ, அதை நாம் கண்டறிந்து, ஏற்று நடக்கவேண்டும். எது எப்போது அவருக்குப் பிடிக்காது என்று அறிவிக்கப்படுகிறதோ, அப்போதே, நாமும் அவைகளை ஒதுக்கிவிடவேண்டும்.

இவ்வளவையும், அவர் கூடிக் கலந்து பேசமாட்டார் - குறிப்பறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

ஐந்தாண்டுகளுக்குமேல் உறுப்பினராக இருந்தாலொழியப் பதவிகளுக்கு வரலாகாது என்பார் - ஆமாமாம்! என்றுரைக்க வேண்டும் - அடுத்தமுறை, ஐந்தாண்டு வேண்டாம், மூன்று ஆண்டுகளே போதும் என்பார் - ஆமாம்! ஐந்தாண்டு அதிகம் - மூன்று ஆண்டுகளே போதும் என்றுரைக்க வேண்டும்.

கழகக் காரியத்தில் இன்னார் இருப்பது ஆபத்து என்பார் - விலக்கி வைக்கிறோம் என்று கூறவேண்டும் - அடடா! ரொம்ப நல்லவர்! நிரம்பத் திறமைசாலி! அவர் எந்த அக்னிப் பரீட்சைக்கும் தயாராக இருப்பவர் - என்பார் - ஆமாம்! என்று சொல்ல வேண்டும்.

நமது கழகத்தைத் துச்சமென்று எண்ணும் கலைஞனை நாம் மதிக்கலாகாது என்பார் - ஆமாம்! மதிக்கத்தான் கூடாது என்றுரைக்க வேண்டும். கழகத் தொடர்பு இருந்தாலென்ன இல்லாது போனால் என்ன?

கலைஞனை அவனுடைய திறமைக்காகப் பாராட்ட வேண்டும் என்பார் - பாராட்டுவோம் என்றுரைக்க வேண்டும்.

தம்பி! இப்படி ஒரு பயங்கர நிலைமை வளர்ந்தது. நான் எல்லாவற்றுக்கும் இசைவு தந்தேன் - என் சொந்த விருப்பு வெறுப்புப்பற்றிய கவலையைக்கூட விட்டொழித்து.

ஆனால், திராவிட நாடு வேண்டாம், பிரிவினையே வேண்டாம், இந்தியப் பேரரசிலேயே ஒட்டிக்கொண்டிருக்கலாம், சமதர்மம்கூட வேண்டாம் என்பதற்குமா, நான் சம்மதிக்க முடியும்!

கொள்கையைக் கடைப்பிடித்தபடி கோபதாபம் காட்டி னாலும், முறைகளை மாற்றினாலும், வசவுகளை வீசினாலும் பொறுத்துக்கொண்டேன்! ஆனால்,

கொள்கையையே மாற்றி விடும்போது, நான் எப்படி இணங்க முடியும்? - நேர்மையில் நாட்டம் கொண்ட எவர்தான் இணங்க முடியும்?

அப்போது அப்படிச் சொன்னேன்; அதைக் கேட்டு என் பின்னால் வந்தாயல்லவா? இப்போது வேறு ஒன்று; முற்றிலும் மாறானது சொல்கிறேன்; பின்பற்ற வேண்டியதுதானே? யோசனை என்ன? கேள்வி என்ன? - என்றா பேசுவது.

முன்பு சொன்ன சொல்லை மறந்தவர்களைச் சும்மாவா விட்டுவைத்தார் இவர்.

திருச்சி மாநில மாநாடு நினைவிற்கு வருகிறதா? பண்டித நேரு, இவர் நாவில் சிக்கிப் பட்டபாடு தெரியுமல்லவா? எதற்கு? முன்பு அப்படிப் பேசினாயே, இப்போது இப்படிப் பேசுகிறாயே, ஏன் இந்த முரண்பாடு!

நீயும் ஒரு தலைவனா! - என்று கேட்டாரே!

1945-ம் வருட நேருவே! 1956-ம் வருட நேருவுக்குப் புத்தி புகட்ட வாராயோ? - என்று பேசினார்; கொள்கைக் குழப்பவாதிகளுக்குத் தெளிவுரை தந்தார்.

•

"இன்று நம்மை மிகக் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருக் கிறவர், நமது கொள்கைகளுக்கு நேர் எதிரிடையாகப் பயமுறுத்தல்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறவர் யார் என்று சொன்னால், பிரதமர் நேரு ஆவார். அவர் பதவிக்கு வந்தபின் - அந்தப் பதவி நிலைத்தபின்,"தன் ஆயுட்காலம் வரை தானே இந்த நாட்டு அரசியல் ஆதிபத்தியத்தில் அமர முடியும்; தனக்கு அடுத்தாற்போல் திரும்பிப் பார்த்தால் எறும்புக் கூட்டங் களும், கரையான்

கூட்டங்களும்தான் இருக்கின்றன; வாழுகின்ற வரையில் நம்மைவிட்டால் அவர்களுக்கு வேறு கதி இல்லை' - என்ற கருத்து அவர் உள்ளத்திலே ஊற ஊற, அவருடைய வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் பயங்கரமாகவும், 1945-ல் இருந்த நேருவுடைய வார்த்தைகளுக்கு நேர் முரணானவையாகவும், 1945-ல் இந்திய அரசியலில் வீரநடை போட்டுக்கொண்டு வந்த நேருவின் இராஜ தந்திரத்திற்கு முற்றிலும் முரணான வகையிலும், அவருடைய பேச்சுக்கள் உருவெடுத்திருக்கின்றன.''

"ஆந்திர மாநிலம் வேண்டும்'' - என்ற கிளர்ச்சி நடைபெற்ற போது, பண்டித நேரு எவ்வளவு ஆணவமாகப் பேசினார்?"முடியாது, முடியாது; யார் அவன் - ஆந்திர மாநிலம் கேட்பவன்? இந்த மக்கள் சபையில்கூட அப்படி யாரேனும் இருக்கிறார்களா' என்று

முறைத்துப் பார்த்து, அதட்டி உட்கார வைத்துக் கொண்டிருந்தார்; அந்நிலையில். பொட்டி சீராமுலு உண்ணாவிரதம் தொடங்கிவிட்டார்; "அவருடைய நிலை கவலைக்கிடமாயிருக்கிறது' என்ற செய்தி வருகிறது; என்றாலும், மக்கள் சபையில் பிரதமர் நேரு வீர கர்ஜனை புரிந்தார் -"ஆயிரம் பொட்டி சீராமுலுக்கள் பிணமானாலும் - உயிர் துறந்தாலும், நான் என்னுடைய நிலையிலிருந்து பிறழமாட்டேன்; தனி மாகாணம் வேண்டுமென்ற கருத்துக் காட்டுமிராண்டித் தனமானது' என்று குறிப்பிட்டார்.

"ஆனால், பழைய பண்டித நேரு 1945-ல் இருந்த நேரு, என்ன சொன்னார்? கம்யூனிஸ்ட் கட்சியைவிட வேகமாக வாதாடினார் -"தனித்தனி மாகாணங்கள் வேண்டுமென்று மட்டுமல்ல; தனித்தனி

மாநிலங்களாகப் பிரிக்கப்படுபவை, தனி அரசாக வாழவேண்டுமென்று விரும்பினாலும் வாழலாம்; அதைக் காங்கிரஸ் தடுக்காது - நானிருக்கிற வரையில் தடுக்க விடமாட்டேன்' என்று. அந்தப் பேச்சு எங்கே நிகழ்ந்தது என்பதை அறியும்போது, இன்னமும் நமக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வரும்.''

"காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நிகழ்ந்தது அந்தப் பேச்சு; அங்கே இருக்கிற - நமது அனுதாபத்திற்குரிய அரசியல் ஏமாளியான ஷேக் அப்துல்லா இருக்கிறாரே, அவர் கூட்டம் ஒன்றில், நேருவுக்கு ஒரு விண்ணப்பத்தைப் படித்துக் காட்டினார்; என்ன அந்த விண்ணப்பம்? தனித்தனி அந்த அந்த தேசீய இனங்கள், தனித்தனி அரசை நிறுவிக்கொள்வதற்குக் காங்கிரஸ் ஆக்கமளிக்க வேண்டும்'' - என்றுதான் அவர் விண்ணப்பித்துக் கொண்டார்.

அதைக் கேட்ட நேரு, சீறி எழுந்தார்; “அளிக்க வேண்டும் என்று கோருவதிலேயிருந்து, நாங்கள் ஏதோ அதை மறுப்பதைப் போலல்லவா கேட்கிறீர்கள்? நாங்கள் அதற்காகவே இருக்கிற வர்கள்; தனி அரசு மட்டுமல்ல - அந்தத் தனியரசிலே வாழுகிற ஒரு”குரூப்’ கோஷ்டி, அது தனியரசு வேண்டுமென்று விரும்பினாலும், அதில் நூற்றுக்கு நூறு நியாயம் இருக்கிறது’ - என்று பண்டித நேரு பேசினார்.

அந்தப் பேச்சின் நான்கைந்து வாசகங்களை உங்களுக்கு நான் கூறுகிறேன். ஏனென்றால், அவர்கள் ஏதோ பெரிய தத்துவங்களை வகுத்துக்கொண்டவர்களைப்போலவும், நாம் ஏதோ “தத்து பித்து’ என்று, உணர்ச்சி வேகத்தில், கேட்கக் கூடாதவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கும்”தப்பிலி’களைப்

போலவும் பல நண்பர்கள் எண்ணி, நம்மை ஏசிப்பேசுகிறார்கள். அவர்களுக்கு விளக்கம் தருவதாக, 1945-ம் ஆண்டில் வாழ்ந்த நேரு பேசியதை இங்கே எடுத்துரைக்கிறேன். நேரு பேசுகிறார், கேளுங்கள்.

“இந்தியாவிலிருந்து எவராவது பிரிந்து செல்ல விரும்பினால்,”வேண்டாம்’ என்று காங்கிரஸ் அவர்களை வேண்டிக்கொள்ளும்; வேண்டிக்கொண்டதற்குப் பின்னும் ”பிரிந்துதான் செல்லுவோம்’ என்று சொன்னால், கண்ணியத்தோடு அதை அனுமதித்துவிடும்.’’

இது பண்டித நேரு பேசியது - 1945-ல் ஆகஸ்டு 2ந் தேதி ஸ்ரீநகரில் பேசினார்.

”காங்கிரஸ் ஏற்கனவே தனித்தனி தேசீய இனங்களுடைய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டுவிட்டது’’ - கோபத்தோடு

இப்படிப் பேசினாராம், நேரு! ஏன்?

“ஷேக் அப்துல்லா, ஏற்றுக்கொள்ள வேண்டும் ஐயனே!’’ என்று சந்தேகத்தோடு கேட்டார்;”வேண்டுமென்ற கோரிக்கையில் சந்தேகம் தொனிக்கிறதே, சிஷ்யா! இந்த உரிமை வேண்டும் என்று நாம்தான் ஏற்கனவே தீர்மானித்துவிட்டோமே! இன்னும் உனக்கு ஏன் சந்தேகம்’ என்று பண்டிதர் நினைத்துக் கூறியிருக்கிறார் அப்படி!

“முதல் முதல் சந்தேகப்பட்ட அப்துல்லா மிகமிகப் புத்திசாலி! ஆனால், பண்டிதரது பதிலைக் கேட்டதும், சந்தேகத்தை நீக்கிக்கொண்ட ஷேக் அப்துல்லா, உலகத்திலே இருக்கிற”விடுதலைவிரும்பி’களின் நிரந்தர அனுதாபத்திற்குரிய ஷேக் அப்துல்லாவாக மாறிவிட்டார்! அதனால்தான், அவர், காலவரையின்றிக் கம்பிகளை

எண்ணிக்கொண்டிருக்கிறார், ஸ்ரீநகரத்துச் சிறைச்சாலையில்!

“பெரிய இந்தியாவில், ஏதாவது ஒரு குறிப்பிட்ட”யூனிட்’ - பிரதேசம் இருந்துதான் தீரவேண்டும் என்று வற்புறுத்த மாட்டோம்’’ என்று பேசியது 1945-வது வருடத்திய நேருவே! இதோ பார் - உன்னுடைய ”துரோகி’ 1956-வது வருடத்திய நேரு உன்னை மறுக்கிறார்!

”முடியாது முடியாது! யார் இந்தியாவிலிருந்து பிரிந்து செல்லவேண்டும் என்று கருதுகிறவர்கள்? பிளவுச் சக்திகளே! பிரிவினை மனங்கொண்டோரே! விடமாட்டேன்! தெருவிலே குதித்து, உங்கள் குரல்வளையைக் கடித்துக் குருதியை உறுஞ்சுவேன்! முடியாது’’ என்று பேசுகிறார், 1956வது வருடத்திய நேரு!

”பிரிந்துவிட்ட - சுயநிர்ணய உரிமை

பெற்ற ஒரு மாகாணத்திலே இருக்கிற ஒரு கோஷ்டி பிரிந்துபோகவேண்டு மென்று சொன்னாலும், பிரிந்துதான் போகவேண்டுமென்று கர்ஜித்த நேருவே! இதோ பம்பாயை மராட்டியர்கள் வேண்டு மென்று கேட்கிறார்கள்! மராட்டியர்களே பெரும் பகுதியினராக வாழும் பெரும் நகராம் பம்பாய் மராட்டியருக்கே வேண்டு மென்ற கோரிக்கைக்கு, உமது பதில் என்ன?''

"முடியாது; டில்லியின் நேரடி ஆட்சியில்தான் இருக்கும்'' என்பதுதானே!

"யாரையா அதை முடிவு செய்வது? பம்பாயிலே இருக்கிற மக்களா? டில்லியில் இருக்கிற நீரா?'' - என்று மாரட்டியர் கேட்கிறார்கள்."நான்தான்; நானேதான்!'' - என்று பதில் சொல்லுகிறார் நேரு!

"நேருவே! 1945-ம் வருடத்திய நேருவே! நீ

உயிர் பெற்று வரமாட்டாயா?'' என்று நாங்கள் கோருகிறோம்.

"மக்கள் உரிமையை மதிக்காமல், மதோன்மத்தரைப்போல், பழைய காலத்துக் காட்டுமிராண்டி இராசாக்களைப்போல், ஆர்ப்பாட்டம் நடத்திக்கொண்டிருக்கிற இந்த 1956-ம் ஆண்டு நேருவுக்குப் புத்திபுகட்ட, நீ உயிர்பெற்று வாராயா?'' - என்றுதான் நாம் கேட்கிறோம்!

"தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் தமிழர்கள் வாழு கிறார்கள்; அவை தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டும்'' என்று நாம் கோருகிறோம்.

"தமிழர்கள் வாழுவதனாலேயே, அப்பகுதிகள் தமிழகத் துடன் சேராது; அங்கிருக்கிற தமிழர்கள் விரும்புவதனாலேயே அது தமிழகத்துடன்

சேராது; நான் விரும்பினால் மட்டுமே அது எங்காவது சேரலாம், அல்லது செத்து ஒழியலாம்'' என்று ஒருவர் பேசுகிறார்.

"1945 வருடத்திய நேருவே! நீ இறங்கி வந்து, அவருக்குப் பாடம் புகட்டாயா? - என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறது.''

•

இதே பாணியில், தம்பி சம்பத்தே! தோழர் சம்பத் அவர்களைத் திருத்தமாட்டாயா என்று கேட்கத் தோன்றுகிறது. ஆனால், "தம்பி' என்று கூப்பிடவே, பயமாக இருக்கிறதே! 8-4-1961-ல்தான், முதன் முதலாக,"அவர்' என்று அழைத்துப் பேசினேன் - ஒரு புதுக் கட்சியின் தலைவர் ஆகிவிட்டவரை மரியாதையாக அழைக்காவிட்டால் கோபம் கொப்பளிக்குமே என்று. நான், "அவர்' என்று அழைத்ததும், அவரும் என்னைக் கௌரவப்படுத்தினார்.

எப்படி? அண்ணா என்று அழைத்து வந்தவர், தோழர் அண்ணாத்துரை என்று, பண்பு கெடாமல் அழைக்கலானார்.

சரி! அண்ணா என்று அழைக்க நாங்கள் இருக்கிறோம் இலட்சக்கணக்கில் என்று கூறுகிறாய். உள் உள்ளன்புக்கு என் நன்றி, தம்பி!

"திராவிட நாடுபற்றி முன்பு தவறான கருத்துக் கொண்டிருந்தேன் - அதே கருத்து இப்போதும் இருக்க வேண்டுமா? - என்று கேட்கிறார், மாறியவர். ஆனால், அவரேதான், நேருவை நையப்புடைத்தார் - சொல்லால் எவ்வளவு அழுத்தந் திருத்தமாகப் பேசினார்! என்ன, கிரேதாயுகத்திலா பேசினார்? முதல் அவதாரத்தில் பேசினார், எட்டாவது அவதாரத்தில் அதை மறந்து விட்டார் என்பதற்கு 1945-ல் பேசினார்! இடையில் பத்தே ஆண்டுகள்! அரசியல்

வாழ்வில் அது கை நொடிப்பொழுது! இவரே, அதற்குள் அதை மறுத்து, முரண்பட்டுப் பேசுகிறார் என்றால், ஏன்? நேருவின் உள்ளம் தெளிவற்ற நெஞ்சமா? இல்லை! தெளிவுள்ள நெஞ்சம் என்பதற்காகவே இந்தியத் துணைக்கண்டத்துத் தலைமையை அவருக்குத் தாராளமாக அளித்தது இந்திய அரசியல்.''

பத்து ஆண்டுகளுக்கு முன்பு பேசியதற்கு முரணாகப் பண்டித நேரு பேசியதற்கு, இந்தப் பலத்த தாக்குதல் மாறிப் பேசலாம் - ஆனால் 10 ஆண்டுகள் எனும் இவ்வளவு குறுகிய காலத்திலா? என்று இடித்துக் கேட்டார்! பத்து ஆண்டுகள், ஒரு கை நொடிப்பொழுது என்கிறார்.

இவர்! தம்பி! பத்து நாட்கள்கூடப் பொறுத்துக்கொள்ள வில்லை. 7-4-61-ல் தி. மு. க. வரலாற்று வெளியீட்டு விழா!

9-4-61-ல் தி. மு. கழகம் பயன் இல்லை; அதைவிட்டு விலகி விடுகிறேன் என்று அறிக்கை! இவர்தான் பத்து ஆண்டுக் கணக்கை எடுத்து வைத்துக்கொண்டு, நேருவைப் பிய்த்து எறிந்தவர். 9-4-61-ல், கழகத்தைவிட்டு வெளியேறினார் - 19-4-61-ல் புதுக் கட்சி! அதிலே, திராவிட நாடு இல்லை! சமதர்மம் கிடையாது!! பிரிவினை கிடையாது! தமிழ்நாடு, பாரதப் பிணைப்பில்!

பத்தே நாட்கள்! பத்து ஆண்டுகள், கைநொடிப்பொழுது என்றவர்தான், பத்து நாட்களுக்கும் ஒரு உவமைக் கணக்குத் தரவேண்டும்!

இவர், பழைய நேருவை அழைத்துப் புதிய நேருவுக்குப் புத்திகூறச் சொன்னார். நாம்?

ஐந்தாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற, திருச்சி மாநில மாநாட்டுப் பேச்சு, நான்

தந்திருப்பது.

தம்பி! அப்போது அவர், கழகத்தைவிட்டு வெளியேற்றப் போவதாக ஒரு சரடு விடப்பட்டது. அடேயப்பா! அதற்குப் பதில் அளிக்கும்போது, பேசிய பேச்சு - ரீங்காரமல்லவா, அது!

அண்ணனை நான் இழந்துவிடுவேன் என்றோ, இழந்துவிட வேண்டும் என்றோ, எவனாவது கருதினால், மடையனே! நீ புத்தி பெறுவதற்கு இன்னும் வெகுநாள் இல்லை என்றுதான் கூற இயலும்.

ஐந்தே ஆண்டுகள்? கழகத்தைவிட்டு விலகி எண்ணிப் பத்தே நாட்கள், தோழர் அண்ணாத்துரை ஆக்கப்படுகிறேன்! பெரியாரை விட்டுப் பிரிந்து ஆண்டு 12 ஆகிறது - அவருடன் இருந்தபோது அழைத்ததுபோலத்தான், இன்றும் பெரியார்

என்று மேடையில் பேசுகிறோம்; தனியாகப் பேசும் போது எப்போதும்போல், அவர், "ஐயா!''வாகத்தான் இருக்கிறார்.

ஆனால், நம்மைப்போலவா, எல்லோரும் பைத்தியக்காரர் களாக இருப்பார்கள்; தலைவர் ஆனபிறகு, அண்ணனாவது மண்ணாவது - தோழர் அண்ணாத்துரைதான்!!

போகட்டும் - புதுப் பெருமை கிடைக்கட்டும் - நட்டம் என்ன எனக்கு? நான் கூறவந்தது. எவ்வளவு மின்சார வேக மாறுதல் என்பதை, தம்பி! நீ தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்குத்தான்.

"அண்ணாவுக்கு வேண்டுமானால் இலட்சக்கணக்கான தம்பிகள் உண்டு; ஆனால் எனக்கு ஒரே ஒரு அண்ணன் தான் உண்டு!''

ஆண்டுகள் ஐந்து - அரை கைநொடிப்பொழுது - அண்ண னாவது

ஒண்ணாவது என்று கூறும் நிலை பிறந்துவிட்டது. எத்துணை வேகமான வளர்ச்சி!

நமது கழகத்தில் இருந்து விலகிப் புதுக்கட்சி அமைப்பது மட்டும் அல்ல - புதுக்கட்சியின் வளர்ச்சிகூடப் பிறகு; முதலில் தி. மு. கழகத்தை அழிக்கவேண்டுமாம்! ஏனெனில், இவர் வெளியேறிவிட்டாரல்லவா, அதனால்.

இது இவருடைய இப்போதைய எண்ணம். ஆனால், அன்று, 5 ஆண்டுகளுக்கு முன்பு, மாநில மாநாட்டில், சொன்னது என்ன தெரியுமா, தம்பி! ”தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில், நான் கூறுகிறேன் - எவருடைய இழப்பினாலேயும் தி. மு. கழகம் பெற்றிருக்கிற வளர்ச்சி, அடைந்திருக்கிற பேருரு, பாதிக்கப்படாது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவர்

விலகுவதால் உடைந்துபோய்விடக் கூடிய நிறுவனம், தி. மு. கழகம் அல்ல.''

ஐந்தாண்டுகளுக்கு முன்பு இருந்த கழகவளர்ச்சி கண்டே, இப்படிச் சொல்லவேண்டி நேரிட்டது என்றால், இப்போது தி. மு. கழகம் பெற்றுள்ள நிலையைப் பார்த்திடும் எந்தப் பித்தனாவது, அது அழிந்துவிடும் என்று பேசுவானா? அல்லது திராவிட நாடு கிடைக்காது என்றாவது பேசுவானா?

"தாசிகள்பற்றிய கதைகள் நீங்கள் நிரம்பப் படித்திருக்கலாம் - தாசி - ஒருவனிடத்தில், பணம் இருக்கும்வரையில்தான், என்னைத் தழுவிக்கொண்டே இருங்கள்; நீங்கள் இல்லாவிட்டால் நான் ஏது? நான் இல்லாவிட்டால் நீங்கள் ஏது? என்று ஈருடலும் ஓருயிரும் என்பதுபோலப் பேசுவாள். ஆனால் அவனிடம் இருந்த

பணம் பூராவும் பறிபோனபிறகு, அவன் இனி நம் வீட்டிலிருந்தால் சோற்றுக்குக் கேடு என்ற நிலைக்கு வரும்போது, அவனைக் கழுத்தைப்பிடித்து, நெட்டித் தள்ளி விடுவார்கள். அதைப்போலவேதான் ஏகாதிபத்யங்களும். . . .

நம் செல்வம் முழுவதும் சுரண்டப்படும் வரையில் - தாசி போல - நாமெல்லாம் பாரத புத்திரர்கள் அல்லவா? நமக்குள் ஒற்றுமை வேண்டாமா? எல்லோரும் இந்தியராயிற்றே! - என்பர். நாம் ஓட்டாண்டிகளானபின், நீங்கள் ஏன் வடநாட்டுடன் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்கிறீர்கள்? நீங்கள் யார்? நாங்கள் யார்? என்று பேசுவர் - தாசிபோல.

எனவேதான், நாம் சற்றுப் புத்திசாலித்தனமாக, நம்மிடம் கொஞ்ச நஞ்சம் இருக்கும் செல்வமும் சுரண்டப்படுமுன் புத்திசாலித்தனமாக,

வடநாட்டு ஏகாதிபத்ய அணைப்பினின்றும் விலகிக்கொள்ளவேண்டுமென்று தி. மு. கழகம், கூறுகிறது.''

"அண்ணா! நீயும் வேண்டுமென்றே, அவர்கள் குறை சொல்லுவதுபோலவே, பெண்கள் விஷயமாகத்தானே, எழுதுகிறாய். ஏனண்ணா பாலுணர்ச்சி! இதைத்தானே விலகியோர்கூடக் கண்டிக்கிறார்கள்! வடநாடு, தென்னாட்டைச் சுரண்டிச் சக்கையாக்கிக் கீழே துப்பிவிடும் என்று சொல்லக் கூடாதா? ஆபாசமான, ஒரு கதை சொல்லித்தானா இதை விளக்கவேண்டும்? இதைத்தான் அவர்கள் ஆபாசநடை என்கிறார்கள்'' என்று சொல்கிறாய்; தம்பி! புரிகிறது! பொறுத்துக்கொள். இந்தக் கதை, நான் சொன்னது அல்ல! எழுத்தோவியமே, ஆபாச நடை கூடாது, பால் உணர்ச்சி ஆகாது என்று கண்டனக் குரல் எழுப்பியுள்ள தோழர் சம்பத்

அவர்களுடையது.

அவர் பேசியதா? ஆபாசம் கூடாது என்பவர் பேச்சா? - என்று கேட்டு ஆச்சரியத்தால் மூர்ச்சையாகிவிடாதே! அவரே தான்! அவருக்கு விருப்பம் இருந்தபோது, இப்படிக் கதை - கூறினார் - இப்போது கண்டிக்கிறார்!

இதிலென்ன ஆச்சரியம்! திராவிட நாடு கூடாது என்று பேசுவோர்,

துரோகிகள்

கங்காணிகள்

இளிச்சவாயர்

அகப்பட்டதைச் சுருட்டுபவர்

என்று பேசினவரேதான், இன்று திராவிட

நாடு கனவு என்கிறார்!

அவருக்கு அவரே பதில் சொல்ல, ஏற்பாடு செய், தம்பி! அவரையும் மக்கள் புரிந்துகொள்ள முடியும். இப்படிப்பட்டவர் களால், தி. மு. கழகத்தை ஏதும் செய்திட முடியாது என்பதும் விளங்கும்.

தம்பி! இவ்வளவும் நான் எடுத்து எழுதுவது, விலகியவரின் போக்கிலே ஏற்பட்டுவிட்ட விசித்திரமான மாறுதலைச் சுட்டிக் காட்டி ஏளனம் செய்ய அல்ல. உள்ளபடி எனக்கு அதை நினைவிற்குக் கொண்டுவரும்போது, வேதனை பீறிட்டு எழுகிறதே தவிர, பரிகாசம் செய்திடத் தோன்றவில்லை. நான் அவைகளை எடுத்து எழுதுவதன் நோக்கம், நமக்கு அவர் அளித்திருக்கும் அருஞ்செல்வம், இவ்வளவு கருத்துரைகளைத் தந்தவர், காலக்கோளாறால், இன்று சாய்ந்துகொள்கிறார் என்றால், நாம்

கோபிக்கக் கூடாது என்பதற்காகவுந்தான்.

கேட்போரைச் சொக்க வைக்கும் இசைவாணனுக்கு காய்ச்சல் கண்டால், பக்கத்தில் உள்ளோரின் காது குடையும் விதமாக இருமுகிறார்! அதற்காக அவர்மீது கோபித்துக் கொள்கிறோமா? பரிதாபப்படுகிறோம்!! காது குடைச்சல் எடுக்கும்படியாக அவர் இருமும்போதுகூட, அவர் நன்றாக இருந்தபோது பாடிய பண்ணின் இனிமையை, எண்ணிக்கொள் கிறோம்; அந்த எண்ணமே நமக்குத் தேன். அதுபோலத்தான் இது.

ஆகவே தம்பி! இன்று ஏற்பட்டுவிட்ட போக்குக் கண்டு, மனம் பதறாதே! கோபம் கொள்ளாதே! வெளியே எடுக்கப்பட்டு விட்ட முத்து, மீண்டும் சிப்பிக்குள் போய்விட முடியாது; சிப்பியும் முத்துதனை எடுத்து வைத்துக்கொண்டு, கடலிடை சென்று

ஒளிந்துவிட இயலாது. அதுபோலவே, திராவிட நாடு பிரிவினைக்கான ஆதாரங்கள், வாதங்கள் ஆகியவற்றினை அளித்தவர், அவைகளைத் தம்முடன் எடுத்துக்கொண்டு போய் விடவில்லை - போய்விட முடியாது - முத்து நம்மிடம் - சிப்பி இடம் மாறிவிட்டிருக்கலாம் - அவ்வளவே.

தூற்றிப் பேசுகிறார்களே என்று துயரப்படாதே!

தூற்றிப் பேசுவோரின் பட்டியலில், சில புதிய பெயர்கள் இணைக்கப்படுகின்றன; வேறொன்றுமில்லை என்று எண்ணிக்கொள்.

தொடர்பே இல்லாதவர்கள் நம்மைத் தூற்றவில்லையா? நாம் தாங்கிக்கொள்ளவில்லையா? அவர்களைவிட, இவருக்குச் சற்று உரிமை அதிகம்தானே இருக்கும்; தொடர்பு காரணமாக, தோழமை

இருந்த காரணமாக! எனவே ஏசட்டும். எரிச்ச லூட்டலாம் என்ற நோக்குடன் ஏசுவர்; நீங்கள் மட்டும், ஏசல் கேட்டும், மனம் கலங்காத நிலையைப் பெற்றுவிடுவீர்களானால், அதனைவிட, வலிவூட்டும் வாய்ப்பு வேறு இல்லவே இல்லை என்பதை உணருவீர்கள்.

மற்றவர்கள், நமது கொள்கையைத் தூற்றும் போதாகிலும், ஒரு விவரமும் புரியவில்லையே இவர்களுக்கு என்று நமக்கு ஆயாசம் ஏற்படும். புதுக்கட்சியார் பேசும்போது, அப்படியா? எல்லாம் தெரியும் இவருக்கு; நாடு அறியச் சொன்னவர்தானே; மாற்றார் மருளப் பேசினவர்தானே; விவரம் அறியாமலா பேசுகிறார்; அறிந்ததை மறைத்துக்கொண்டு பேசுகிறார் - மெத்தக் கஷ்டப்படுகிறார் என்பதேகூட அல்லவா, நமக்குப் புரிகிறது. புரியும்போது, புன்னகை வருமே தவிர, புருவத்தை நெரிக்கவா தோன்றும்!

ஏன், இதனைச் சொல்கிறேன் என்றால், தம்பி! சென்னைக் கூட்டத்திலே, ஏசல் கேட்டு எரிச்சல்கொண்ட மக்கள், பூசல் கிளம்பிவிடுமோ என்று எண்ணத்தக்க விதத்தில், கலாம் விளைவிக்க முற்பட்டனர் என்று இதழ்களில் கண்டேன்; அது மிக மிகத் தவறான போக்கு; அருவருக்கத் தக்கது; கண்டிக்கப்பட வேண்டியது என்ற பொறுப்புணர்ச்சி காரணமாக இதனை எழுதுகிறேன்.

ஒன்று சொல்லுவேன், நம்மைப் பிறர் இகழக் கேட்டும், பதறாது இருக்கும் போக்கைவிடச் சிறந்த பண்பு வேறு இல்லை.

நமக்கு, நமது கொள்கையிலே அசைக்க முடியாத நம்பிக்கை. ஆராய்ந்து பார்த்ததால் ஏற்பட்ட நம்பிக்கை இருக்கிறது என்றால், அந்தக் கொள்கையை எவர் கேவலப் படுத்திப் பேசினாலும், நமக்கு என்ன நட்டம்? ஏன் நாம்

எரிச்சலடைய வேண்டும்?

கொள்கைப்பற்று என்ன, கீழே வீசினால் உடைந்து தூளாகிவிடக்கூடிய, கண்ணாடிப் பாத்திரமா!

இல்லையே - அது நமது குருதியில் கலந்துவிட்ட ஒன்று அல்லவோ? அதைக் கேலி பேசுவோராலா ஒழித்துவிட முடியும்? கண்டித்து விடுவதனாலா அழித்துவிட முடியும்?

நேரு வீசாத கண்டனமா? கேலிக் கணையா? இனி ஒருவர் வீசப் போகிறார்கள்!

என்ன செய்தோம் அவர் உரை கேட்டு? ஏகாதிபத்தியப் போக்கு அவரை அப்படிப் பேச வைக்கிறது என்று எண்ணிக் கொண்டோம்; அவர் உரையை ஏற்க மறுத்தோம். நம்மில், தோழர் சம்பத்து போன்றவர்களோ, பழைய நேருவை விட்டுப் புதிய நேருவுக்குப் புத்தி புகட்டச் சொன்னார்கள்.

நமது கொள்கைகளை மறுப்போரின் பேச்சைக் கேட்டு, மனம் பதறாத போக்கு, கட்டாயம் ஏற்பட்டாக வேண்டும். அவர்கள் பரப்பும் தப்புப் பிரசாரத்தை மறுத்து, மக்களுக்குத் தெளிவளிக்க, நமது கொள்கையின் நியாயத்தை நிலை நாட்ட, நமக்கு வாய்ப்பு இருக்கிறது. நாம் நமது நியாயத்தை மெய்ப்பிக்க முடியும் என்ற நம்பிக்கையும் நமக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கையும், வாய்ப்பும் நமக்கு இருக்கும்போது, நாம் ஏன் பதறவேண்டும்? - பேசுவோர்மீது ஏன் ஆத்திரப்பட வேண்டும்? - கலகம் விளையும் நிலை ஏன் பிறக்க வேண்டும்?

வேண்டாம், தம்பி! வேண்டாம். நமது கொள்கையின் தூய்மையும் வலிவும், தரமும் பழுதுபடாதபடி நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமானால், எவர் நமது

கொள்கைகளை, கழகத்தவரை, மனம்போன போக்கில் ஏசினாலும், ஒரு துளியும் பதறாத நிலை - அமைதியான மனநிலை, நமக்கு ஏற்பட்டாக வேண்டும், தணலில் போட்டு எடுக்கிறார்கள் தங்கத்தை, நினைவினில் இருக்கட்டும்.

புடம் போட்டு எடுக்கப்பட்ட வீரர்கள், தி. மு. கழகத்தில் இருக்கிறார்கள் - இது போனவர் சொன்னது. இதனை மறவாதே!

என்னைப் பொறுத்தவரையில், இதனைக் கூறுவேன் - என்னை எவர் இழிவாகப் பேசினாலும், கவலைப்படாதே; நான் கவலைப்படவில்லை. எனக்கென்ன குறை, தம்பி! உன் இதயத்தில் எனக்கு இடம் இருக்கும்போது.

பிரிந்து சென்றவர்கள் கொதித்துப் பேசும்போதுகூட, அவர்களைப்பற்றிக்

கடிந்துரைக்காதே - எனக்கு நிச்சயமாக அது பிடிக்காதது என்பது மட்டுமல்ல - கனியிருக்கக் காய் கொள்ளற்க என்பது தமிழ் மறை அன்றோ - அது நமது பண்பு எனக் கொள்ளவேண்டும். எனக்கு இன்றும், பிரிந்து போனவர்கள், என்னை இழித்தும் பழித்தும் பேசுவதுபற்றிக் கோபம் வரவில்லை; இருந்த நாட்களிலே நிகழ்ந்தவைகளைத்தான் எண்ணி எண்ணி உருகியபடி இருக்கிறேன்; என்ன செய்வது, தம்பி! எனக்கு இதயம் இருக்கிறதே!!

அன்புள்ள,

அண்ணாதுரை,

30-4-61

39. இவனே தமிழ் மறவன்!

பெரியாரின் திராவிடம் -

திராவிட மொழி ஒற்றுமை -

வடவர் ஆதிக்கம் புதிய தலைவர் போக்கு -

தமிழன்னையும் மறவனும்

தம்பி!

”நான் என் வீட்டின் ஜன்னலருகே நின்று பலகணி வழியாய்ப் பார்த்தபோது,

பேதையர்களாகிய வாலிபருக்குள்ளே ஒரு புத்தியீன வாலிபனைக் கண்டு அவனைக் கவனித்தேன்.

அவன் மாலை மயங்கும் அஸ்தமன நேரத்திலும், இரவின் இருண்ட அந்தகாரத்திலும்,

அவள் இருக்கும் சந்துக்கடுத்த தெருவில் சென்று, அவள் வீட்டு வழியாய் நடந்துபோனான்.

அப்பொழுது இதோ வேசியின் ஆடை ஆபரணந்தரித்த, தந்திர மனமுள்ள ஒரு ஸ்திரீ அவனுக்கு எதிர்ப்பட்டாள்.

அவள் வாயாடியும் அடங்காதவளுமானவள்; அவள் கால்கள் வீட்டிலே தரிக்கிறதில்லை. சில வேளை வெளியி லிருப்பாள், சில வேளை வீதியிலிருப்பாள், சந்துகள் தோறும் பதிவிருப்பாள்.

அவள் அவனைப் பிடித்து முத்தஞ் செய்து, முகம் நாணாமல் அவனைப் பார்த்து,

தொகுதி மூன்று 369 சமாதான பலிகள் என்மேல் சுமந்திருந்தது. இன்றைக்குத் தான் என் பொருத்தனைகளை நிறைவேற்றினேன்.

ஆதலால், நான் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு உன் முகத்தை ஆவலோடு தேடினேன்; இப்பொழுது உன்னைக் கண்டுபிடித்தேன்.

என் மஞ்சத்தை இரத்தினக் கம்பளங்களாலும், எகிப்து தேசத்து விசித்திர மெல்லிய வஸ்திரங்களாலும் சிங்காரித்தேன். என் படுக்கையை வெள்ளைப் போளத்தாலும் சந்தனத்தாலும் இலவங்கப் பட்டையாலும் வாசனை கட்டினேன். வா, விடியற்காலம் வரைக்கும் இன்பங்களினால் பூரிப்போம். புருஷன் வீட்டிலே இல்லை. தூரப் பிரயாணம் போனான். பணப் பையைத் தன் கையிலே கொண்டுபோனான்; குறிக்கப்பட்ட நாளிலே வீட்டுக்கு வருவான் என்று சொல்லி, தன் மிகுதியான இனிய சொற்களால் அவனை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுரவாக்கினால் அவனை இணங்கப் பண்ணினாள்.

உடனே அவன், அவள் பின்னே சென்றான்! ஒரு மாடு அடிக்கப்படும்படி செய்வதுபோலும், ஒரு மூடன் விலங்கிடப் பட்டுத் தண்டனைக்குப் போவதுபோலவும், ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறதுபோலும், அவளுக்குப் பின்னே போனான்; அம்பு அவன் ஈரலைப் பிளந்தது.''

என்ன அண்ணா! இது. உன்னிடம் இருந்து, அரசியல் விளக்கங்களைப் பெற ஆவலாக உள்ளோம்; நீ இப்படி அலங்காரக் கதைகளைக் கூறுகிறாய்; நமது மாற்றார்களோ, பார்! பார்! உங்கள் அண்ணன், ஆபாசமான விஷயமாகவே எழுது கிறான்; இப்படிப்பட்டவனை அண்ணன் என்று சொல்லிக் கொள்ள உங்களுக்கு வெட்கமாக இல்லையா என்றெல்லாம் கேட்டுச் சாடுகிறார்கள். நீயோ, கள்ளி

ஒருத்தி காமவலை வீசி இளைஞன் ஒருவனை இழுத்துச் செல்லும் கதையைக் கூறுகிறாய் - போங்களண்ணா! - என்று, தம்பி! என்மீது கோபித்துக் கொள்ளாதே. மீண்டும் ஒருமுறை அதனைப் படித்துப் பார் - நடை காட்டும், அது நான் சொல்வது அல்ல, என்பதனை. தம்பி! காமச் சுவையூட்டும் நோக்குடன் எழுதப்பட்டதும் அல்ல அது. இகபரசுகம் எனும் இரண்டில், முன்னது பெறும் வழி யாது என்பதற்கான விளக்க நூலிலிருந்தும், நான் இதனை எடுத்துக் காட்டவில்லை - கர்த்தரின் வழியைக் காட்டும் விவிலிய நூலில் உள்ளதை எடுத்துக்காட்டுகிறேன்; நீதி மொழிகள் பகுதியிலிருந்து. வலைவீசிய வனிதையிடம் சிக்குண்டவனைப்பற்றிக் கூறியதன் தொடர்ச்சிக்குப் போவோம்.

ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவி கொடுங்கள்; என் வாயின் வார்த்தைகளைக்

கவனியுங்கள்.

உன் இருதயம் அவள் வழியிலே சாயவேண்டாம்;

அவள் அநேகரைக் காயப்படுத்தி விழப்பண்ணினாள்; பலவான்கள் அநேகரைக் கொலை செய்தாள்.

அவள் வீடு பாதாளத்துக்குப் போம் வழி; அது மரண அறைகளுக்கு கொண்டுபோய்விடும்.

தாவீதின் குமாரனும், இஸ்ரவேலின் ராஜாவுமாகிய சாலமோனின் நீதிமொழிகள், விவிலிய நூலின் பழைய ஏற்பாடு பகுதியில் உள்ளன; அதிலே உள்ளதைத்தான் தந்துள்ளேன். இட்டுக்கட்டியதுமல்ல; சுவை சொட்டுகிறதா என்று பார்த்துத் தருவதுமல்ல.

இருக்கட்டும், அண்ணா! இப்போது எதற்கு இந்த நீதி மொழிகள்? என்று

கேட்பாய். தம்பி! மனச்சங்கடம் ஏற்படும் போது, எவரெவருக்கு, என்னென்னவிதமான குழப்பங்கள், கொந்தளிப்புகள், கிலேசங்கள் ஏற்பட்டன; எவ்விதம் போயின என்பதனை அறிந்துகொள்வதிலே நாட்டம் செல்லுமல்லவா? அந்தப் போக்கிலே, ஈடுபட்டிருந்தபோது, சாலமோனின் நீதி மொழிகள் குறித்துப் பார்த்தேன்; எனக்கு, அது காமவலையில் விழாதே என்பதற்காக மட்டுமல்ல, பொதுவாக வழிதவறாதே என்பதற்காகவே எடுத்துக்காட்டப்படும் அறிவு விளக்கமாகத் தான் பட்டது. என் மனக்கண்முன், முத்தமிட்ட ஆரணங்கு, அவள் சித்தரித்துக் காட்டிய பஞ்சணை, அதைக்கேட்டு மயங்கி மதியிழந்த வாலிபன், அவனை அவள் இழுத்துச்சென்ற காட்சி, இவை அல்ல தெரிந்தவை. வழி தவறி - வழுக்கி விழுந்து - நிலை மாறி - நினைப்புக்

கெட்டு - வலையில் வீழ்ந்து - இலட்சியப் பாதையைவிட்டு விலகுபவர்கள்தான், என் மனக்கண்களுக்குத் தட்டுப்பட்டார்கள். கண்ணியில் விழச்செல்லும் குருவிபோலவும், குழியில் விழப்போகும் களிறுபோலவும், இருக்கிறார்களே இலட்சியத்தை விட்டு விலகும்படியான மயக்கத்தை, மதுரத்தை ஊட்டியவர் எவர்? எதனால் சொக்கிப்போய், சொந்தம் பந்தம் மறந்தனர்? என்றெல்லாம் எண்ணிக்கொண்டேன்; ஏக்கமும் கொண்டேன். சாலமோன்போல, பிள்ளைகளே! கேளுங்கள் என்றுகூட அல்ல, தம்பி! கேள்! என்று கூறிடும் உரிமையைக்கூட அல்லவா, வழிதவறியவர்கள் பறித்துக்கொண்டனர். இனி எப்படி அவர்களுக்கு நல்லுரை கூறுவது? சரியான பாதைக்கு வரும்படி அழைப்பது? இயலாதுபோலிருக்கிறதே என்று துக்கப்பட நேரிடுகிறது.

திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தை அன்று நாமும் சரி, இது கவைக்கு உதவாது என்று இன்று போதித்து வரும் போக்கினரும் சரி, அவசரப்பட்டோ, ஆராயாமலோ, ஆதாரம் தேடாமலோ, ஏற்றுக்கொண்டோமில்லை. அது மட்டுமல்ல! நாம் அந்த இலட்சியத்தைக் கொண்டதும், நமக்கு அறிவுரைகள், எச்சரிக்கைகள், அச்சுறுத்தல், கழிவிரக்கம் என்பவைகளை எவரும் அள்ளி வீசாமலுமில்லை. அகில உலகம் அறிந்தவர் என்று போற்றப்படுபவரிலிருந்து, அன்புக் கட்டளையிடும் உரிமை பெற்றவர்கள் என்பவர் வரை, அந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் வந்தனர்; நாம் நமது இலட்சியத்தைப்பற்றி ஐயப்பாடு கொள்ளவுமில்லை; அவர்களின் உரைகளை ஏற்கத் தக்கவை என்று கொள்ளவு மில்லை;

எதேச்சாதிகாரி பேசும் இனிய மொழி என்றும், கங்காணி பேசும் கனி மொழி என்றும், சூதுக்காரரின் சுவை தடவிய பேச்சென்றும் கருதினோம்; கூறினோம்; நாடும் ஏற்றுக்கொண்டது; நம்பிக்கை அழுத்தமாயிற்று; பரவவுமாயிற்று.

”திராவிட என்ற பேரைக் கண்டு எவனாவது முகம் சுளித்தால், அவன் முகத்தில் காரித்துப்புங்கள்; தனது தாய் நாட்டின், தனது இனத்தின் பேரைக் கேட்டு முகம் சுளிக்கும் துரோகியின் கூட்டுறவில், நமக்கு என்ன நன்மை விளைய முடியும்.

இந்தச் சிறு காரியத்துக்கு இணங்காத மக்கள் எப்படி மனிதத் தன்மையும் சுதந்திரமும் பெறமுடியும்?’’

என்று கேட்டார் பெரியார்; நாம் அவருடன் இருக்கும்போது கூட அல்ல; விட்டுப் பிரிந்த

பிறகும், மகிழ்ந்தோம்; பெருமைப் பட்டோம். இலட்சியத்தில் நமக்கு இருந்த பற்று, நம்பிக்கை வளர்ந்தது; மணம் தந்தது. அதே நிலையில் நாம்! ஆனால் சிலர், இன்று, முகத்தில் காரித்துப்புங்கள் என்று பெரியார் சொன்னாரே, அதையும் மறந்து, திராவிட என்றால் முகம் சுளிக்கிறார்கள். பெரியாரைப் பொறுத்தவரையில், "திராவிட' என்ற சொல்லை, கருத்தை, இலட்சியத்தை, அவர் விட்டுவிடவுமில்லை, இகழவுமில்லை. அவருடைய வாதமெல்லாம், மொழிவழி அரசுகள் அமைந்தான பிறகு, திராவிட அரசு அமைக்க முற்படுவது இயலாத ஒன்று; எனவே தமிழ் அரசு அமைக்க முற்படவேண்டும் என்பதேயன்றி, திராவிட என்பதே பொருளற்றது என்றோ, ஆபத்தானது என்றோ கருதவில்லை. வேறு சிலர், ஆந்திர, கேரள, கருநாடகத்தாரிடமும், இங்கேயே தெலுங்கு,

மலையாளம், கன்னடம் எனும் மொழி பேசுவோர் களாக உள்ளவர்களிடத்திலேயும், காரணமற்ற வெறுப்புக் கொண்டு பகை கக்க, தமிழ் நாடு, தமிழ் அரசு என்ற சொற்களைப் பயன்படுத்திக்கொள்வது போன்ற நிலையில், பெரியார் தம்மைக் கொண்டுபோய்ச் சேர்த்துக்கொள்ளவில்லை.

தெலுங்கர், கேரளர், கருநாடகர், திராவிடராவரா? என்று கம்யூனிஸத் தோழர் இராமமூர்த்தி கேட்டார்.

தமிழ் தேசியம் என்று ஏற்படுத்த இயலும் - ஏற்படுத்த வேண்டும் - ஆனால் திராவிட தேசியம் என்பது போலி, அதனை ஏற்படுத்தவே முடியாது என்று வாதாடினார். எள்ளி நகையாடினோம். அன்று அதற்காக அவர்களைக் கொள்கைக் குழப்பம் கொண்ட கும்பல் என்று கூறி, “வீரகண்டாவும் வெற்றிலை மாலையும்’

பரிசாகப் பெற்றவர்கள், இன்று அதே வாதத்தை எடுத்துவைத்துக்கொண்டு, மரியாதைக்காகவாவது இது புதிய வாதமல்ல, முன்பே கம்யூனிஸ்டு தலைவர்கள் சொன்னதுதான், அப்போது அறிவுக்கு எட்டவில்லை, நாக்கு சற்று நீண்டிருந்தது; என்னென்னமோ பேசிவிட்டேன்; இப்போது, அப்போது அவர்கள் சொன்ன வாதத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்; உங்களுக்கும் சிபாரிசு செய்கிறேன் என்ற முறையிலல்லவா பேசவேண்டும். தடித்த வார்த்தைகளில் இதைக் கூறுவதானால், திராவிடத் தேசியம் என்பது கிடையாது, முடியாது, ஆகாது என்ற எண்ணம் உறுதியானதாகிவிட்டால், நேரே, கம்யூனிஸ்டு கட்சி காரியாலயம் சென்று, தலைவர்கள் முன் நின்று, காதைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு, பிழை பொறுத்திடுக! புத்தி வந்தது! புத்தி

வந்தது! - என்றல்லவா, பேசவேண்டும்! அதை விட்டுவிட்டு, கம்யூனிஸ்டுகளுக்கேகூட, புதிய கண்டுபிடிப்புத் தத்துவம் தாம் தருவதுபோலவா நடந்து கொள்வது. தம்பி! விலகினோருக்கு ஏற்பட்டதுபோல நமக்கும் ஏற்பட்டிருந்தால், நாம் ஏற்கனவே, அந்தக் கருத்தை வலியுறுத்திய வர்களிடம் இதுபோலத்தான் நடந்துகொண்டிருக்கவேண்டும். நமக்கோ, அன்று எப்படி, கம்யூனிஸ்டுகளின் பேச்சுத் தேவையற்றதாக பொருளற்றதாகத் தோன்றிற்றோ, அது போலவேதான் இப்போதும் தோன்றுகிறது; எனவே புத்தி! புத்தி! என்று சொல்லிக்கொள்ளவேண்டிய அவசியம் நமக்கு இல்லை. மனம் மாறினவர்கள் அப்படிச் செய்யக் கடமைப்பட்டிருக் கிறார்கள் என்று உலகம் கூறும். அது மட்டுமல்ல,

தம்பி! முன்பு, அந்தத் தத்துவத்தை, வாதத்தை, அறிவுரையை, ஆதாரத்தை ஏற்றுக்கொள்ளாது இருந்தவர்கள், இப்போது மனமாற்றம் பெற்றது எங்ஙனம்? காரணம் என்ன? அதிலும் வேடிக்கை என்னவென்றால், அந்த தத்துவத்தைப் பேசிக்கொண்டு வந்த கம்யூனிஸ்டுகள், அதைப் புதிய விளக்கங்களுடனோ, புதிய ஆதாரங்களுடனோ இப்போது எடுத்து வலியுறுத்திக் கொண்டும் இல்லாத நேரம். அதுமட்டுமல்ல; நாங்கள் நாட்டுப் பிரிவினையை ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனால் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை விட்டுவிடச் சொல்லி,"கூட்டுச்சேர' அதனை ஒரு நிபந்தனையுமாக்கவில்லை; யோசனைதான் கூறுகிறோம்; நாட்டுப் பிரிவினை தேர்தல் பிரச்சினை அல்ல; தேர்தலில் உள்ள பிரச்சினை காங்கிரஸ்

எதேச்சாதிகாரத்தை முறியடிப்பதுதான் என்று சொல்லும் காலம். இந்த நேரத்தில், மனமாற்றம் ஏற்பட வேண்டிய காரணம்? சாலமோன் கூறியபடி,

"ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல அதில் விழத் தீவிரிக்கிறது போலும், அவளுக்குப் பின்னே போனான்.''

என்பது போலத்தானா என்று கேட்கத் தோன்றுமல்லவா எவருக்கும், கேட்டாலோ, ஆஹா! அவ்வளவு துடுக்கா? நீ யார் அதைக் கேட்க? உனக்கும் எனக்கும் ஒட்டு என்ன? உறவு என்ன? என்று பேசிவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடுகிறதா? வேண்டாமப்பா, ஒட்டும் உறவும்! குடும்பத்திலே, பந்தமும், பாசமும் பெருகட்டும், பால் பொங்கட்டும், வேண்டாம் என்பார் இல்லை. ஆனால், நெஞ்சுக்கும் நாவுக்கும், நேர்மைக்கும் பேச்சுக்கும் ஒட்டு

உறவு இருக்கவேண்டும் அல்லவா? அதுவுமா, வேண்டாம்!! என்ன தம்பி, இது அக்ரமமாக அல்லவா இருக்கிறது.

"இந்தச் சென்னை இராஜ்யத்திலே தமிழர்கள், ஆந்திரர்கள், மலையாளிகள், கன்னடியர்கள் ஆகியோர் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிவிடுவார்களா?''

என்று கம்யூனிஸ்டு தலைவர் இராமமூர்த்தி கேட்டார் - ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால்.

"ஆம்! ஒரே தேசிய இனம்தான். கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும், தமிழின் உதிரத்தே உதித்தெழுந்து ஒன்று பல ஆயிருக்கும் வரலாறு, கட்டுரையாளருக்குத் தெரியாமலிருக்க முடியாது.''

என்று சொல்லப்பட்டதே; நினைவில் இருக்கிறதா,தம்பி! அதனைத்தானே காட்டிக்காட்டி, கம்யூனிஸ்டுகளைச் சாடினர் விலகினோர்; இன்று மாறினர்; அது அவர்கள் விருப்பம்; ஆனால், அவர்கள் மாறிவிட்டதால், "வரலாறுமா' மாறி விட்டது? பேராசிரியர் சுந்தரனாரின் அருங்கவிதை அளிக்கும் அறிவுரைக்குமா ஒட்டு என்ன, உறவு என்ன என்ற கேள்வி!! பயங்கரம்!! மிகப் பயங்கரம்!!

பெரியார், வெளிப்படையாகச் சொன்னார். எங்கள் முயற்சி, ஆந்திர, கேரள, கருநாடகப் பகுதிகளிலே வெற்றி பெறவில்லை இதுவரையில், அதனால் எல்லாம் ஒன்றா என்று கம்யூனிஸ்டுகள் கேட்கிறார்கள் என்று.

"திராவிட கழகத்தின் முயற்சி தமிழ் நாட்டுடன் என்றில்லாது, மற்ற திராவிட மொழிக்காரர்களிடையேயும் பரவியிருந்திருக்குமானால், இச் சந்தேகத்தை

எழுப்பி இருக்க முடியாது.''

இதைக் கூறினவர்கள் மனம் மாறட்டும்; அந்த வாதத்திலே தொக்கியிருக்கும் உண்மை மாய்ந்தா போய்விடும்? பூக்கடைக் காரனுக்கு புண் ஏற்பட்டு, மருந்து தடவிக்கொண்டிருக்கலாம், அந்த மருந்து நாற்றம் அடிக்கக்கூடும்; ஆனால் அவன் கடை மல்லிகையின் மணம் போயாவிடும்? காய்ச்சல் காரணமாக, சாறும் சோறும் கசப்பாக இருக்கலாம்; ஆனால் சாறும் சோறும் எல்லோருக்குமா கசப்பாகிவிடும்?

தம்பி! ஒரு கொடுங்கோலன் - அவனுக்கு, மருத்துவர், உடற்கூறைப் பரிசோதித்து, மாம்பழம் சாப்பிடக் கூடாது என்று கூறிவிட்டாராம்; உடனே மன்னன் உத்தரவிட்டானாம்; தன் இராஜ்யத்தில் மாந்தோப்பே இருக்கக்கூடாது - வெளியே இருந்தும் மாம்பழம் வரவழைக்கக் கூடாது

என்று. அதுபோலல்லவா இருக்கிறது இவர்கள் கூற்று. அவன் கொடுங்கோலன். - இவர்கள் இந்த இலட்சணத்தில் ஜனநாயக வாதிகளாம்! அதிலும் தீவிரமான ஜனநாயகவாதிகள்!!

திராவிட தேசியம் ஏற்படவில்லை - ஏற்பட முடியாது, தமிழ் தேசியம்தான் சாத்தியம் என்கிறார்கள். ஏதோ அதுவரையிலாவது, நின்று நிலைத்து, முயற்சியில் ஈடுபடட்டும். ஒட்டு உறவு இல்லை என்று அறிவிக்கப்பட்டுவிட்டாலும், இந்நாட்டில் உள்ளவர்கள் என்ற அந்தச் சொந்தம் மறுக்கப்பட மாட்டாது என்று நம்பி, நெடுந்தொலைவில் இருந்தபடியே வாழ்த்துவோம்; ஆனால் தமிழ் தேசியம் என்று கூறும்போது, வேறு பல தேசியங்கள் உள்ளன என்பதும், அவை ஒன்றுக் கொன்று மாறுபட்டவை என்பதும், தமிழ்

தேசியம் என்பதற்குத் தனியான சில இலக்கணம் உண்டு என்பதும், அதுபோலவே தனியான சில இலக்கணம் காரணமாகவே தனித்தனி தேசியம் ஏற்படுகிறது என்பதும், ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவ்வித மெனின் தமிழ் தேசியத்தை, ஆந்திர தேசியத்திலிருந்து, கருநாடக தேசியத்திலிருந்து, கேரள தேசியத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுபவை யாவை? மொழி ஒன்றுதான் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது. அதுவும், மொழிவளம் அறிந்தவர்கள் கூறுவதை, என்னைவிட அவர்கள் எந்தவகையில் பெரியவர்கள் என்று கேட்டுவிடாமல், இந்தத் துறைவரையிலாவது அவர்கள் நம்மைவிட வல்லவர்கள், கருத்தளிக்கத்தக்கவர்கள் என்பதை யாவது ஒப்புக்கொண்டால், அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எவனோ மொழி விஷயமாக நாலு புத்தகம்

படித்தவனை, எல்லா விஷயங்களையும்பற்றி எல்லா ஏடுகளையும் படித்தறிந்து அவைகளை உலகுக்குக் கூறியாகவேண்டுமே என்று துடியாய்த் துடித்துக்கிடக்கும் நான், எப்படி என்னைவிட மேலானவன் என்று ஏற்றுக்கொள்ளமுடியும் என்று கூறுவரேல், அவர்கட்குக் கூறுவேன், தம்பி! ஆறடி உயரமுள்ள நோயாளியானாலும் மருத்துவனை நாடும்போது, குறைந்தது ஆறேகால் அடி உயரமாவது இருக்கவேண்டும் என்று தேடமாட்டான் - நாலரை அடி உயரமாக மருத்துவர் இருப்பினும் கவலைப்படமாட்டான். அதுபோலாகிலும் மொழிப்புலமை பெற்றோரின் முடிவுகளை ஏற்கட்டுமே; சின்ன மனிதர்கள் சொல்லும் பெரிய விஷயங்கள் என்ற பெயரிட்டாகிலும்.

நாலு மொழிகளும், முற்றிலும் வேறு வேறு அல்ல; மூலம் ஒன்றேதான் என்பதை

விளக்குவது எளிது.

இதோ அந்த விளக்கம்:

தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம்

தாய் தல்லி தாய் தள்ளே

தகப்பன் தன்றி தந்தை அச்சன்

அண்ணன் அன்ன அண்ண சேட்டான்

தம்பி தம்புடு தம்ம அனுசன்

கணவன் மொகுடு கெண்ட பர்த்தா

மகன் குமாரடு மகனு

ஆண்குட்டி

பாட்டன் தாத தாத மூப்பன்

உடல் ஒள்ளு மய்யி தேகம்

மனைவி பெண்ட்லாழு எண்டத்தி பாரியா

மகள் குமாரத்தி மகளு பெண்குட்டி

அக்காள் அக்க அக்க சேட்டச்சி

மாமன் மாம மாவ அம்மாவன்

மருமகன் அல்லுடு அளிய

பாட்டி அவ்வ தாத்தி முத்தி

எது எதி எது எது

அது அதி அது அது

இது இதி இது இது

இங்கே இக்கட இல்லி இவடே

அங்கே அக்கட அல்லி அவடே

எங்கே எக்கட எல்லி எவடே

இப்போது இப்புடு ஈவாக

இப்போள்

அப்போது அப்புடு ஆவாக அப்போள்

எப்போது எப்புடு ஏவாக

எப்போள்

சிறிய சின்ன சிக்க சிறிய

பெரிய பெத்த தொட்ட வலிய

நெருப்பு நிப்பு பெங்கி தீ

மழை வான மளெ மழ

கொடு ஈய் கொடு கொடு

இரவு ராத்தி ராத்திரி ராத்திரி

பகல் பகலு அகலு பகல்

யார் எவுரு யாரு யாரானு

ஊர் ஊரு ஊரு ஊரி

சோறு அன்ன ஊண்ட ஊணு

சேலை சீரா சேலை முண்டு

நீர் நீள்ளு நிறு வெள்ளம்

கண்ணு கன்னு கண்ணு

மூக்கு முக்கு மூங்கி மூக்கு

காது செவ்வு கிரி செவி

வாய் நோரு பாயி வாயி

தலை தல தலெ தலை

வா ரா பா வரி

பசு ஆவு அசுவு பசு

எருது எத்து எத்து காள

சொல்லு செப்பு ஹேளு பர

இனி, நான்கு மக்களும் தனித்தனி

மொழிக்காரர்கள் - மூலம் மூலமாகக்கூட ஒட்டு இல்லை, உறவு இல்லை என்றே வைத்துக்கொள்வோம் - வாதத்துக்காக; இதைக்கொண்டே இவர்கள் வெவ்வேறு தேசிய இனம் ஆகிவிடுகிறார்களா?

“ஒரு தேசிய இனம் என்பதற்கு மொழி ஒற்றுமையைக் காட்டிலும், கலாசார ஒற்றுமை, வாழ்க்கை ஒற்றுமை ஆகியவை அதிக அவசியம்.’’ இனிப் பெரியார் அவர்கள்,”தமிழ் நாடு போதும், திராவிட நாடு வெங்காய நாடு’ என்று பேசி வருவதை, தாம் கொள்கை மாறுவதற்கு ஆதாரமாக்கிக் காட்டுவது வேண்டுமானால் ஒட்டும் உறவும் இருக்கிறது என்பதற்கு, சான்று ஆகலாமேயொழிய, வாதத்துக்கு வலிவு ஊட்டாது. ஏனெனில் தமிழ் நாடு பிரிவினை கேட்பது, திராவிட நாடு இலட்சியம் கொண்டிருப்பதற்குக் கேடாகும்படி செய்துவிடமாட்டேன் என்றும் பெரியார்

பேசியிருக்கிறார். இலட்சியம், திட்டம் இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக்கூடச் சொல்லியிருக்கிறார்.

”திராவிட நாடு திராவிடருக்கே என்பதுதான் நம் இறுதி இலட்சியம். ஆனால் அதுவரையில் பொறுத்திராதபடி அவசரமாகத் தனித் தமிழ்நாட்டை டில்லி ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவேண்டும் என்பது தான் நம் திட்டம். இலட்சியத்துக்கும் திட்டத்துக்கும் வேற்றுமை உண்டு. பார்க்கர் பவுண்டன் பேனா வாங்குவது ஒரு எழுத்தாளனின் இலட்சியமாக இருப்பதில் தவறில்லை. ஆனால், அதுவரையில் மூர்மார்க்கெட்டில் விற்கப்படும் ஒரு ரூபாய்ப் பேனாவை வாங்கி எழுதிக் கொண்டிருப்பதுதானே விவேகம்?’’

என்று கேட்கிறார், நியாயம்! ஆனால் நம்மிலிருந்து விலகிய வர்கள், இலட்சியமே மாற்றிக்கொண்டார்கள்; திட்டத்தை

இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள்; பொருள் வேறுபாடு உணராமலோ அல்லது மற்றவர்கள் கவனிக்கமாட்டார்கள் என்ற எண்ணம் கொண்டோ.

வடநாடு தென்னாடு என்று ஏன் பேசத் தொடங்கினோம்? வடநாடு ஆதிக்கம் செலுத்துவதால் - எப்படி? மொழியால், கலையால், அரசியலால், பொருளாதாரம் பிடிப்பினால், சுரண்டலினால். தம்பி! இதை நான் விளக்குவதைவிட, முன்பு விடுதலை தந்த விளக்கத்தை அப்படியே தருவது மெத்தச் சுவையும், பயனும் தரும் என்பதால், அதனைத் தருகிறேன். இயல்புதான் மாறிவிட்டதே தவிர, இடம் நல்லதுதான் என்பதும் விளங்கும்.

சென்ற வாரத்தில் விருதுநகர் வர்த்தக சங்க ஆண்டு விழாவில் பேசிய தோழர் காமராஜர் அவர்கள் பின்வருமாறு பேசியிருக்கிறார்:-

”சிமெண்ட், பேப்பர், இரும்புத் தொழிற்சாலைகள் நடத்து வதற்குச் சர்க்கார் லைசென்சுகள் வழங்கியிருந்தும், பலர் வேலையை ஆரம்பிக்கவில்லை. நம்மிடமிருந்து வடநாட்டான், தென்னாட்டான் என்ற வித்தியாசமே கூடாது. இந்தப் பாகுபாடில்லாமல் வியாபாரம் செய்யவேண்டும்.’’

ஏன் இந்த வித்தியாசம் கூடாது என்பதற்குந் தோழர் காமராஜர் விளக்கங் கூறவில்லை.

வடநாட்டாரும் நாமும் பாரத மாதாவின் வயிற்றிலிருந்து பிறந்த புதல்வர்கள் என்பது காரணமா?

வியாபாரம் என்ற தொழிலில், எல்லா வியாபாரிகளும் ஒன்று சேர்ந்துகொண்டு, பொதுமக்களைச்

சுரண்டவேண்டுமே யொழிய, அவர்களுக்குள் வேற்றுமையாயிருக்கக் கூடாது என்ற காரணமா?

வடநாட்டு வியாபாரிகளின் தயவில்லாமல், தென்னாட்டு வியாபாரிகள் வியாபாரஞ் செய்யமுடியாது என்பது காரணமா?

வடநாட்டு வியாபாரிகளை விரோதித்துக்கொண்டால், தென்னாட்டுக் காங்கிரஸ் இயக்கம் அழிந்துபோய்விடும் என்பது காரணமா?

வடநாட்டானுக்கும் நமக்கும் வியாபாரத்தில் வேற்றுமை கூடாது என்றால், பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் அவரவர் இஷ்டம்போல் பொருள்களை இந்தியாவுக்கு அனுப்புவதை ஏன் தடுக்கவேண்டும்? மோட்டார்க் கார், கப்பல் முதலியவைகளைக் கூட நாமே இங்கு கட்டிக்கொள்வதற்கு ஏன்

முயலவேண்டும்? வியாபாரத்தில் வித்தியாசம் கூடாது என்றால், வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்களை ஏன் தடுக்கவேண்டும்? ஏன் அவைகள்மீது அதிகமான வரி விதிக்கவேண்டும்? ஜப்பானி லிருந்து துணி இறக்குமதி செய்வதைத் தடுக்காவிட்டால், இன்று கெஜம் 4 - 5 அணாவுக்கு ஏராளமான துணி கிடைக்குமே!

இதுமட்டுமல்ல; வடநாட்டு வியாபாரிகள் எல்லாத் துறைகளையும் கைப்பற்றிவிட்டார்கள் என்பதும், அவர்களால் சுரண்டப்படும் செல்வம் வடநாட்டுக்குத்தான் எடுத்துச் செல்லப் படுகிறதேயொழிய, இங்கு செலவழிக்கப்படுவதில்லை என்பதும், தோழர் காமராஜர் அறியாததா என்று கேட்கிறோம். இலங்கைக்கும் மலேயாவுக்கும், குடியேறுகிற இலட்சக்கணக்கான தொழிலாளர்களில் ஒருவர்கூட வடநாட்டாரில்லை, திராவிட

நாட்டார்தான் என்பது இவருக்குத் தெரியாதா? இதன் காரணம், இந்நாட்டில் தொழில் வளர்ச்சி இல்லாததுதான் என்பதும், இவருக்குத் தெரியாதா?

நம் ஏழைகளைப் பொறுத்தவரையில், நம் செல்வத்தை வெள்ளையனாகிய நப்பீல்ட் சுரண்டிப்போவதும் ஒன்றுதான். வடநாட்டுக்காரனான டாட்டா கொண்டுபோவதும் ஒன்றுதான்.

வைரக்கடை முதல் வட்டிக்கடை வரையில், சிற்றுண்டிக் கடை முதல் செருப்புக்கடை வரையில், எல்லா வியாபாரங் களையும், வடநாட்டாரே கைப்பற்றிக்கொண்டுவிட்டால், தென்னாட்டின் பொருளாதார நிலை என்னவாகும்?

சிமெண்ட், பேப்பர், இரும்பு ஆகிய தொழிற்சாலைகளை நாம் தொடங்க

முடியாமலிருப்பதற்குக் காரணமென்ன? வட நாட்டு முதலாளிகளின் போட்டியும் அவர்களுக்கு டில்லி சர்க்கார் தரும் ஆதரவும் அல்லவா?

தென்னாட்டார் கைராட்டினத்தில் நூற்றுக் கைத்தறியில் நெய்யவேண்டியது, வடநாட்டு முதலாளி நூல் நெசவாலை களைப் பெருக்கிக்கொண்டிருக்க வேண்டியதுதானா? பிரிட்டனுக்கு இந்தியா மார்க்கெட்டாக இருந்துவந்த அக்கிரமத்தைச் சகிக்காமல், அன்னியத் துணிக்கடைக்கு முன்பு மறியல் செய்த காமராஜர், வடநாட்டுக்குத் தென்னாடு மார்க்கெட்டாக இருப்பதை வெளியே சொல்ல ஏன் வெட்கப் படுகிறார்?

தென்னாடு வளம்பெறவேண்டுமானால், எந்த ஆட்சி எப்பேர்ப்பட்ட திட்டத்தை வகுத்தாலும் முடியாது. வட நாட்டானை வெளியேற்றி, அவனுடைய சுரண்டலையும்

நிறுத்தினாலொழிய, திராவிடத்தின் வறுமையை ஒழிக்க முடியாது.

தோழர் காமராஜரோ, அல்லது வேறு எந்தக் காங்கிரஸ் தலைவரோ, எவ்வளவுதான் எதிர்த்தாலும் வடநாட்டுச் சுரண்டல் ஒழிப்புக் கிளர்ச்சியை மறைத்துவிட முடியாது.

பெரியார் வற்புறுத்துவதெல்லாம், தம்பி!

1. தமிழர், தெலுங்கர், கேரளம், கருநாடகர் நால்வரும் ஒரே இனத்தவர்.
2. இவர்கள் வேறுவேறு மொழி பேசுகிறார்கள் - ஆனால், இந்த நான்கு மொழிகளும் ஒன்றேதான்.
3. இந்த நால்வரும் ஒரே இனம் என்ற பிரசாரம் மற்ற மூன்று இடத்தில் வெற்றிகரமாக நடைபெறாததால், இன உணர்ச்சி அங்கு ஏற்படவில்லை.

4. இன உணர்ச்சி ஏற்படாததால், வடநாட்டு எதிர்ப் புணர்ச்சியும் திராவிட நாடு அமைப்பு உணர்ச்சியும் அங்கு ஏற்படவில்லை.

5. ஏற்படாததால், நாம் வாளா இருந்துவிடுவது கூடாது; தமிழ் நாடு ஆகிவிட வேண்டும்.

6. தமிழ் நாடு தனி நாடு என்பது நம் திட்டம். ஆனால் நம் இலட்சியம் திராவிட நாடு திராவிடருக்கு என்பதுதான்.

7. அந்த இலட்சியம் வெற்றிபெற்றே தீரும். மற்ற மூன்று மாநிலத்தாரும் உணர்ந்து சேரப்போகிறார்கள்.

8. உடனடியாகத் தேவைப்படுவது, இந்தியாவி லிருந்து நாம் பிரிந்தாக வேண்டும் என்பதாகும்.

9. இந்தியாவில் ஒட்டிக்கொண்டிருக்கிற

வரையில் தமிழ்நாடு வாழாது, மற்ற மூன்று நாடுகளும் வாழ முடியாது.

அதனால்தான், தம்பி! ஏக இந்தியா எனும் போலியை ஒழித்தாகவேண்டும் என்று சொல்லி, அந்த உணர்ச்சியை உலகுக்குக் காட்ட உள்ள வழி, இந்திய யூனியன் படத்தைக் கொளுத்துவதுதான் என்றார்.

மிகத் தீவிரமாகவே விளக்கம் அளித்தார்.

”இனிமேல் சாதி ஒழிக்கிறோம் என்று சொன்னால் கூட இது சொத்தை விஷயம்; தமிழ் நாடு தமிழருக்கே என்று ஆரம்பிக்கவேண்டும். நேருவோ அவன் பாட்டனோ வந்தால்கூட, பர்மிட் வாங்கிக்கொண்டு தான் நம் நாட்டில் நுழையவேண்டும். சாதி ஒழிப்பதையே என் திட்டங்களில் முதலில் வைத்தேன்; நாடு பிரிவினையை இரண்டாவதாக வைத்தேன்.

ஆனால், இப்போது நாடு கிடைத்தால் சாதியை ஒரு வரியில் ஒழித்துவிடலாமென்று நிச்சயம் செய்து கொண்டேன்.

சாதி வேண்டுமென்பவனை வெளியே போ என்றால் போகிறான்போல் தோன்றுகிறது. சில பெரிய வர்கள் ஒத்துழைப்பதாக என்னிடம் சொன்னார்கள். அடுத்த காரியம் நாடு பிரியவேண்டும் என்றே ஆரம்பிக்கவேண்டும். சாதி ஒழிப்புச் சங்கதி சப்பையாகிவிட்டது.''

இது 2-12-57-ல்! ஆனால், இப்போது பெரியார்,

நாடு பிரிவினை

ஜாதி ஒழிப்பு

எனும் இரண்டு திட்டங்களையும்விட,

காமராஜபுரம்

அழிந்துவிடாமல் பாதுகாக்கும் பணியில் இருக்கிறார். காமராஜபுரம் பாதுகாக்கப்படக் கூடாது, இராஜாஜி நகர் ஆகி விடட்டும் என்று யாராரோ சூழ்ச்சிகள் செய்வதாகக் கற்பனை செய்துகொண்டு, அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால் காமராஜபுரம். பெரியாருக்குப் பிடித்தமான, நாமும் விரும்புகிற,

ஜாதி ஒழிப்பு

நாட்டுப் பிரிவினை

எனும் இரு திட்டங்களுக்கு வழி அமைக்கிறதா, துணை நிற்கிறதா என்றால், இல்லை! மாறாக, காமராஜரின் கரத்தை வலுப்படுத்த வலுப்படுத்த, அது ஏக இந்தியா கொள்கையைத்தான் வலிவாக்கும் என்பதை, அரசியல் பிரச்சினையின் நுணுக்கம் அறிந்த

எவரும் மறுத்திட இயலாது.

தம்பி! எனக்கு இருக்கும் மகிழ்ச்சி, பெரியார் பிரிவினைத் தத்துவத்தை, வடநாட்டுத் தொடர்பு அறுத்துக்கொள்ளும் இலட்சியத்தை விட்டுவிடவில்லை என்பது. ஆனால் எனக்கிருக்கும் பயம், காமராஜபுரத்தைச் சுட்டிக் காத்திடும் கடமை உணர்ச்சி காரணமாகத் தனிநாடு வேண்டும் என்ற இலட்சியத்தை, விட்டுவிடத் தக்க மோசமான நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்பதுதான். எனினும், வடநாட்டு எதிர்ப்புணர்ச்சி சம்பந்தமாகப் பெரியார் இம்மி அளவும் விட்டுக் கொடுக்கமாட்டார் என்று

இன்றும் நம்புகிறேன்.

அவர் இப்போதும், வடநாடு,

காட்டுமிராண்டித்தனமும்

சுரண்டும் போக்கும் கொண்ட

இடம் என்றுதான் கருதுகிறார்.

இதைக் காங்கிரஸ் அமைச்சர்களே எதிர்த்தாலும், பெரியார் போர்க்கோலம் பூண்டுவிடுவது காண்கிறோம். (காமராஜர் விஷயமாக மட்டும் விதிவிலக்கு! அது ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு!) தம்பி! தனி நாடு கேட்பதை எதிர்த்துவிட்டு அமைச்சர் கக்கன் பட்ட பாடு தெரியுமா? பெரியார் செம்மையாகக் கொடுக்கலானார், இதோ அது:

”அமைச்சர் கக்கன் எங்கோ பேசினாராம், திராவிட நாடாவது; இது சின்ன நாடு, எப்படி நிர்வகிக்க முடியும்? எங்கே கிடைக்கப் போகிறது?’’ என்று பேசுகிறாராம்.

”அவர் பேசுவார்; வடநாட்டு ஆதிக்கம் இல்லா விட்டால் கக்கன் போன்றவர்கள் மந்திரிகள் ஆகமுடியுமா? திராவிட நாடு வந்தால் ஆதித்திராவிடன் மந்திரியாகவும் மேல் நிலையிலும் இருப்பான். ஆனால் கக்கனைப் போன்ற அறிவற்ற ஆட்கள் இருக்க முடியுமா?’’

தம்பி! நான் ஏதோ, கக்கன் அவர்களைக் குறித்துத் தாழ்வாகப் பேசிவிட்டேன் என்று, முதலில் கருதிய கக்கன் அவர்கள் விளக்கம் பெற்றார் - ஆனால் அதை இன்னமும் பேசுகிறவர்கள், அதைக் காரணமாக்கிக் காட்டி என்மீது பழிபோட எண்ணுபவர்கள், கக்கன் அவர்கள் அறிவற்றவர் என்று பெரியார்

பேசியதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். புது முயற்சியினர், இந்தப் பழைய பழிபோட்டுத் தலைவாங்கும் முயற்சியிலும் சளைக்கக் காணோம். பெரியார் பேசுவதைக் கேட்போம்; கக்கன்போன்றார்கள், நாட்டுப் பிரிவினை கேட்பவர் களைத் "தேசத் துரோகிகள்' என்று கண்டிப்பது கேட்டுக் கடுங்கோபம் மூள்கிறது, பெரியாருக்கு; வெளுத்து வாங்குகிறார்; கோபத்திலே ஒன்றை மறந்துவிடுகிறார்; தம்"அர்ச்சனை' அவ்வளவும் காமராஜருக்கும்தான் என்பதை; ஏனெனில், காமராஜரும்தானே நாட்டுப் பிரிவினையை எதிர்க்கிறார்.

"எங்களைத் தேசத் துரோகி என்கிறாயே! உங்களைப் போன்ற பிறவித் தேசத் துரோகி யார்? உன் தாய் பிறந்த நாடு, உன் பாட்டி பிறந்த நாடு! இதைக் கண்டவன்தான் ஆளவேண்டும் என்கிறாயே துணிந்து, உன்னைப்போலத்

துரோகி யார் உளர்?

உனக்கு என்ன தெரியும்? மந்திரி நாற்காதெ ரியும். பணத்தை எண்ணிப் பார்த்திருப்பாய். வேறு என்ன தெரியும்?

பூகோளம் தெரியுமா உனக்கு? சரித்திரம் தெரியுமா உனக்கு? உன் இரத்தம் கொண்டவர் தமிழ் மக்கள் இலங்கையில் நாய்போலத் திண்டாடுகிறார்கள்; அதைப் பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப்பட்டதுண்டா?''

இவ்விதம் கேட்டு அமைச்சர்களைத் திணற அடிக்கிறார்; நாட்டுப் பிரிவினையே கேட்டினைப் போக்கும் என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கிறார். ஆனால் புதியவர்களின் தீவிரம் - வேகம் - விறுவிறுப்பு - போர்ப்போக்கு - அவர்களை என்ன பேச வைத்திருக்கிறது என்று கவனித்தாயா, தம்பி! சமீபத்திய திருவாசகம், கேள்:

வடநாடு நரகலோகமல்ல, வடநாட்டார் யமகிங்கரரும் அல்ல,

நமக்குத் தாழ்வு மனப்பான்மை கூடாது.

உலகத்தோடு ஒட்டி வாழவேண்டும் - ஒண்டிக் குடித்தனம் நடத்தக் கூடாது.

ஆந்திர, கேரள, கருநாடகத்தாருடன் சேர்ந்து வாழ முடியும் என்னும்போது, மற்றவர்களுடன் மட்டும் ஏன் வாழக்கூடாது.

டாக்டர் சுப்பராயனோ, எஸ். வி. இராமசுவாமியோ பேசியிருந்தால், "ஜெய்ஹிந்'தோடு முடித்திருப்பார்கள். புதியவரின் பேச்சில், அந்த ஒரு சொல்தான் சேரவில்லை - இன்னும் கேட்டுவிட்டால் போதும், அண்ணா வாழ்க என்று சொல்லி வாயைக் கெடுத்துக் கொள்வதைவிட, "ஜெய்ஹிந்' சொன்னால்தான் என்ன தப்பு என்று கேட்டுவிட்டு, போதும்! போதும்!

காது குடைகிறது! என்று நேருவே கூறும் வரையில் கூவுவார்கள். ஆமாம் தம்பி! எல்லாம் தலைகீழாக வேண்டுமே - அதுதானே புரட்சியாம்!!

இந்தியாவின் பிரதேச ஒற்றுமைபற்றிய அக்கறையும், கவலையும் பொங்குகிறது; புதியவர்களிடமிருந்து வழிகிறது. ஏற்கனவே நேரு கட்சியாரிடமிருந்து வழிந்தது போதாதென்று. நாட்டுப் பிரிவினை கூடாது - வேண்டுமானால் பிரிந்துபோகும் உரிமையை மட்டும் பெற்றுவைத்துக்கொள்ளலாம் என்கின்றனர் - தேர் திருவிழா காலத்திலே சிறுவர்கள் பணம் கேட்பார்கள். தந்திரம் தெரிந்த பெரியவர்கள், பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து; "உனக்குத்தான் - ஜேபியிலேயே வைத்துக்கொள் - ஆனால் செலவழிக்கக்கூடாது - உம்!'' என்று சொல்வார்கள். அதுபோல, நேரு

பண்டிதர்,"பிரிந்துபோக உரிமை தருகிறேன்; ஆனால் பிரிந்துபோகக் கூடாது. உம்!'' என்ற சொல்லவேண்டும் போல் இருக்கிறது. வேடிக்கைதான்.

ஒற்றுமை கெடக்கூடாது - எனவே நாட்டுப் பிரிவினை கூடாது என்று பேசுபவர்கள் எவராயினும், பழையவரோ புதியவரோ, இதுதான் பதில்; அதுவும் குருநாதர் தந்தருளியது.

"நாட்டைத் துண்டுபோடக் கூடாது; ஒற்றுமை கெட்டுப் போகும்'' என்று மட்டும்,"கிளிப்பிள்ளை மாதிரி' திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருக்கின்றனர்.

"ஒற்றுமை' என்றால் என்ன என்பதுபற்றி இவர்கள் சரியாகப் புரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

எந்த உயிர்களிடத்திலும் இயற்கையாக அமைந்திருக்கும் ஒற்றுமை தான் நீடித்த ஒற்றுமையாயிருக்கும். காட்டிலோ, ஊரிலோ, விலங்குகளும் பறவைகளும் அந்தந்த இனம் ஒன்றுசேர்ந்து கூடி, ஒற்றுமையாக வாழ்வதைக் காண்கிறோம். எறும்புகள், காகங்கள், யானைகள், மான்கள், ஆடுகள் போன்ற எந்தப் பிரிவை எடுத்துக் கொண்டாலும், அவைகளுக்குள்ளே இன ஒற்றுமை இருப்பதைக் காணலாம். காகங்களில் ஒன்றிரண்டுகூட புறாக்கூட்டங்களுடன் சேர்ந்து உறவாடுவதில்லை. யானைகள், மான் கூட்டத்துடன் சேர்ந்து உறவாடுவதில்லை; ஆடுகள் புலிக்கூட்டத்தில் சேர்ந்து உறவாடி வாழமுடியாது. ஆனால் இவைகள் சர்க்கசில் மட்டுந்தான்"சேர்ந்து' வாழ்கின்றன. இது இயற்கையான உறவு அல்ல.

சர்க்கஸ்காரனின் சவுக்கடிக்கும், பிரம்படிக்கும், கைத் துப்பாக்கிக்கும் நடுங்கிக்கொண்டு நடிக்கின்ற போலி ஒற்றுமை, போலி உறவு ஆகும்.''

போலி உறவு என்ற சொல் கேட்டதும், தம்பி! என்னிடம் இதுநாள்வரை கொண்டிருந்ததாகக் கூறப்பட்டு வந்தது, இப்போது பேசுவது கேட்கும்போது, போலி உறவாகவே இருந்திருக்கும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றுகிறதுபோலும் என்று எண்ணிக்கொள்வாய். அது அல்ல என் உள்ளத்தில் எழுந்தது.

பிரிந்துபோகும் உரிமை பெறுவோம்; ஆனால், பிரிந்து போகமாட்டோம் என்று கூறுவது. இருதரப்புக்கும் காட்டப் படும் போலி உறவாக இருக்கிறது! இதைக் கண்டுபிடித்துவிடவா மாட்டார்கள்? என்றுதான் எண்ணுகிறேன்.

•

”பிரிந்து போகும் உரிமை அளிக்க வேண்டும்?’’

”யாருக்கு வேண்டும் அப்படி ஒரு உரிமை?’’

”ஏன்! எமக்குத்தான். தமிழ் நாட்டாருக்கு’’

”தமிழ் நாடு என்று ஒன்று உளதோ! பாரதத்தில் உள்ள பல இராஜ்யங்களிலே அது ஒன்று. அங்கு உள்ளவர்கள் தமிழ் பேசுவர்.’’

”பாரதத்தில் உள்ளதுதான்; ஆனாலும். . . .’’

“அது என்னய்யா, ஆனாலும். . . . .’”’ஆனாலும், தமிழர் ஒரு தனி தேசிய இனம். . .’’

”தமிழ் தேசியமா? அது என்ன, புது தேசியம்?’’

”தமிழ் தேசியம் என்பது திராவிட

தேசியம்போலப் போலி அல்ல - கனவு அல்ல - கவைக்கு உதவாததும் அல்ல.''

"எனக்குத் தெரியாது! எனக்கு ஒரே ஒரு தேசியம்தான் தெரியும் - பாரத தேசியம் - இந்திய தேசியம். சரி! இந்திய தேசியத்தையே உம்முடையது என்று கொண்டால் என்ன தவறு?''

"எமது தேசியம் அழிந்துவிடும்.''

"கோபித்துக்கொள்ளக் கூடாது. தமிழ் தேசியம் அழிந்துவிட்டால் என்ன தவறு? எல்லோரும் இந்தியர் என்ற உணர்ச்சி பரவும் - வெற்றி அடையும் - இந்தியாவின் ஒற்றுமை நிலைத்து நிற்கும். காவிரி வேறு, கங்கை வேறா?''

"இரண்டும் ஆறுகளே - ஒன்று மிகப் பெரியது - மற்றொன்று சிறியது.''

"அதற்கு என்ன செய்யலாம்.

இரண்டும், இந்தியருக்குச் சொந்தம் என்று எண்ணிக்கொண்டால், பேத உணர்ச்சி எழாதே.''

"இல்லையே. பேத உணர்ச்சி இருக்கிறதே. போக்க முடியவுமில்லையே. மேலும், கங்கை மண்டல நாகரிகம் வேறு. காவிரி தீரத்து நாகரிகம் வேறு.''

"பஹுத் அச்சா! நாகரிகமே இரண்டா? வடக்கு, தெற்கு? என்ன அப்படித்தானே?'"ஆமாம் என்றுதான். . . .''

"டி. எம். கே. சொல்கிறது. நீங்கள் அதைவிட்டு விலகிவிட்டீர்களே. மழைவிட்டும் தூவானம் விடாதது போல, பிரிவினை கேட்கும் கட்சியைவிட்டு விலகிய பிறகும், பிரிவினைக்கு உரிமை கேட்பதில், பொருளும் இல்லை, பொருத்தமும் இல்லை;

பிரிவினை என்றால் புரிகிறது. - பிரிவினை கூடாது என்றாலும் புரிகிறது. ஆனால், பிரிவினைக்கு உரிமை, ஆனால், பிரிவினை இல்லை என்றால் சரியாகவுமில்லை, நியாயமாகவுமில்லை, தேவை என்றும் படவில்லை.''

"பிரிவினைக்கு உரிமை கொடுத்தால், பிரிந்துபோகும் நிலையே ஏற்படாது.''

"அரே, பையா! எப்படி? பிரிந்துபோகும் உரிமை இல்லாதபோதே, பிரிவினை கேட்கிறார்களே, டி. எம். கே. யினர். பிறகு பிரிந்துபோகும் உரிமையும் கொடுத்து விட்டால் சும்மாவா இருப்பார்கள்? தொட்டதற்கு எல்லாம், மிரட்டுவார்கள் - பிரிந்துபோகிறேன் என்று தலாக் சொல்லிவிட்டு, ஒன்றாக வாழ்வது வேடிக்கை மட்டுமல்ல, விபரீதமுமாகும். நை, நை, உம்முடைய யோசனை சரியில்லை.''

”எங்கள் மக்கள் வற்புறுத்துகிறார்கள்.’’

”உங்கள் மக்கள்! அச்சா! அதென்ன, உங்கள் மக்கள், எங்கள் மக்கள்! இந்த மதராசிவாலா புத்தி மட்டும் போகிறதில்லை உங்களுக்கு. பிரிவினை உரிமை கேட்க, காரணம்?’’

”அப்போதுதான், எம்மை மதித்து, புறக்கணிக்காமல், ஒழுங்காக நடப்பீர்கள்.’’

“இப்போது எப்படி நடந்துகொள்கிறோம்?’’’’ஓரவஞ்சனையாக - மோசமாக - சுரண்டல் நோக்குடன். . . . .’’

•

தம்பி! இதற்குமேல், உரையாடலுக்கே இடம் கிடைக்காது. எனவே பிரச்சினைக்கும் பரிகாரம் கிடைக்காது.

பிரியும் உரிமை என்ற பேச்சு இங்கு

உள்ளவர்களை ஏய்க்கவும், உரிமை கொடுத்தாலும் பிரிந்துபோய்விடமாட்டோம், பாரதத்திலேயேதான் இருப்போம் என்ற பேச்சு அங்கே உள்ளவர்களை ஏய்க்கவும், பயன்படுத்தப்படக்கூடும் என்று பேசிடக்கூடும். அதுவும் நடவாது. வடநாட்டுத் தலைவர்கள் ஏமாளிகளுமல்ல, உரிமைகளை வாரி வழங்கும் வள்ளல்களுமல்ல. இது தேசியம் பேசுவோர் அறியாததுமல்ல. எனினும், ஏன் பேசுகின்றனர் அதுபோல? இலட்சியப் பயணத்திலே சலிப்பு வந்துவிட்டது.

"உடனே அவன், அவள் பின்னே சென்றான்; ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வதுபோலவும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டுத் தண்டனைக்குப் போவதுபோலவும்.''

என்று சாலமோன் கூறினார் அல்லவா? இலட்சியப் பாதையை விட்டுச் சிறிது வழுவினாலும் போதும் - சபலம், மயக்கம்,

ஏற்பட்டுவிடும் - மினுக்குக்கும் தளுக்குக்கும் மனதைப் பறிகொடுக்க வேண்டிவரும் - பயணம் நின்றுவிடும் - வழி தவறிவிடும். அம்மட்டோ! சபலத்துக்கு இரையாகாமல், பயணத்தைத் தொடர்ந்து நடத்துவோர்மீது வெறுப்பே ஏற்படும்.

தம்பி! இந்தவிதமான எண்ணங்கள் என் மனதைக் குடைந்தன. அப்போதுதான், இலட்சியப் பயணம் செய்திடும் ஓர் தாயும், அவளை உசாவி உணர்ச்சி பெற்ற இளைஞனும் என் மனக்கண்முன் தோன்றினர். அதை உன்னிடம் தெரிவிக்கிறேன் - என்று வைத்துக்கொள்ளேன்.

”தாயே! யார் பெற்ற பிள்ளையானாலும் அவரிடம் பரிவு காட்டும் பண்பின் திருஉருவாகத் தோற்றமளிக்கிறீர்கள்; அதனால் தாயே! என்று அழைத்தேன். . . .’’

”மகனே! பழச்சாற்றிலே பூச்சி விழுந்துவிட்டதுபோல, ஏன் உன் பாச உணர்ச்சியில், வேற்றுமை எண்ணத்தைக் கலந்து விடுகிறாய். தாயே என்று அழைத்தாய்; மகிழ்ச்சி; காரணம் தேடி, அந்தக் கனிவின் தரத்தைக் குறைத்துவிடாதே!’’

”மன்னித்துவிடுங்கள், அம்மா! மகன், தாயின் மேலான குணம் முழுவதையும் பெற்றுவிட முடிகிறதா! அதனால் என் பேச்சிலே தேவையற்றது கலந்துவிட்டது. தாயே! களைத்திருக்கிறீர்கள். . . .’’

”கடு வழி நடந்து வந்ததால், மகனே!’’

”நீண்ட பயணமோ, அம்மா!’’

”இலக்கு இருக்கும் இடம் வரையில், பயணம் நீண்டுதானே தீரவேண்டும், மகனே!’’

”நெடுந்தொலைவு - எனினும் இலக்கு, பளிச்சிட்டுத் தெரிகிறது தங்களுக்கு’’

”இதிலென்ன வியப்பு! வட்டமிடும் பறவைகளுக்கு, நெடுந் தொலைவிலுள்ள பழமுதிர் சோலைகளும், பளிங்கு நீரோடை களும் தெரிகின்றனவே! ஆதவன் இருக்கும் இடம் எங்கே? அவன் அன்புக்கரம்பட்டு, மலரும் தாமரை இருக்கும் இடம் எங்கே? இலக்கு அடையப் பயணம்! இதில் தொலைவு - நெடுந்தொலைவு என்ற பேச்சு ஏது? பொருளற்ற பேச்சாகுமே!!’’

”தாயே! கடு வழி என்றீர்கள்?’’

”ஆமப்பா! அமைந்த பாதை அல்லவே - அதனால்தான் என் நடையே, தேய்ந்த பாதையில் அல்ல; நான் நடந்து நடந்து தான், பாதையே அமைகிறது. உள்ள வலிவு, அதுதான்.’’

”போதுமான வலிவு இல்லை என்று தெரிந்ததும். . .?’’

”கடினமான காரியத்தில் ஈடுபடுகிறேனே என்கிறாயா? மகனே! என் வலிவு குறைவாக இருப்பதற்கு நான் எவர்மீது நொந்துகொள்ளமுடியும்? வெட்டுக்கிளியும் வேங்கையும், வலிவிலே ஒன்றாகா! எனினும் இரண்டும் பாயத்தான் செய்கின்றன!! மேலும், மகனே! இந்த வலிவும் பாழ்படா முன்பு, பயணத்தை மேற்கொள்ளவேண்டுமல்லவா? கால்கள் வலிவிழந்தன; கண்ணொளி இருக்கிறது, அதனையும் இழந்தபிறகு, பயணம் நடத்த இயலுமா? ஆகவேதான், இந்தப் பயணம். நிலைபற்றிய கவலையற்று, இந்தப் பயணம். மற்றொன்றுமுண்டு, மகனே! வலிவற்ற நான், பயணம் நடத்தக் காணும்போது, வலிவுற்றவர்கள் துணிவு பெறுவர்; இலக்கினை அடைவர் அன்றோ! என் பயணம், பயணத்தின் தேவையைக் காட்டினாலே போதும், நான்

திருப்தி அடைவேன்; என் தள்ளாடும் நடை, வேகமான நடைபோட வல்லவர்களுக்கு ஒரு தூண்டுதலை ஏற்படுத்திவிட்டாலும் போதும், நான் களிப்படைவேன்.''

"இலக்கு நோக்கி நடக்கவேண்டுமே, தாயே! பயணம் நடத்த வலிவு இருக்கலாம்; நிரம்ப! ஆனால், இலக்குத் தெரியவேண்டு மல்லவா?''

"எனக்குத் தெரிகிறதே?''

"மற்றவர்களுக்கு?''

"மகனே! எனக்கே தெரிகிறதே என்று சொல்லியிருக்க வேண்டும். தவறிழைத்துவிட்டேன். குறை மதியுடைய எனக்கே, குறிக்கோள் தெரிகிறபோது, மற்றவர்களுக்கு என்ன கஷ்டம்? மரத்தை வண்டு துளைத்திடக்காணும் விறகுவெட்டிக்கு, காரியம் எளிது என்ற எண்ணம்தானே எழும்?''

”உண்மைதான், தாயே! முற்றிலும் உண்மை! ஆனால் இது சொல்லளவில்தானே இருக்கிறது. பயணம் நடத்தப் பலசாலிகள் முன்வரக் காணோமே. இலக்குக் கண்டவர்கள் எங்கே? இல்லையே!''

”பலசாலிகள் தங்கள் பலத்தைக்கொண்டு வேறு காரியத்தை நடத்த முனைகிறார்கள். காற்றிலே பறந்திடும் பஞ்சுத் துண்டுக்கு, இலக்கு ஏன்? பறவைகளுக்குத்தானே தேவை! வலிவுள்ள பலரும், காற்றிடைப் பஞ்சாக உள்ளனர்; இலக்குத் தேடும் நிலையில் இல்லை.''

”அப்படியானால். . . . .''

”இலக்கு நோக்கிச் சென்றிடும் பறவையின் இறக்கையிலே பஞ்சுத் துண்டு ஒட்டிக்கொண்டால்? இலக்குக்கு எடுத்துச் செல்லப்படுகிறது அல்லவா?

அதுபோன்றே, பயணம் நடாத்து பவருடன் உறவுகொண்டிடுவோர் இலக்குக் காண்கின்றனர்.''

"விளக்கம் அளிக்கிறீர்களா? உள்ள நிலைமையைக் கூறுகிறீர்களா?''

"விளக்கம் என்பதே, உள்ள நிலைமையை எடுத்துக் கூறுவதுதானே!''

"அப்படியானால், பயணத்திலே ஈடுபடப் பலர் உளர் என்கிறீர்கள்?''

"அதில் என்ன ஐயப்பாடு? பயணத்தின்போதுதானே, மகனே! உன்னைப் பெற்றேன். மேலும், பயணத்திலே என்னுடன் துணை எவரும் இல்லை என்று எப்படிக் கூறலாம். உறுதி, துணை நிற்கிறது! நம்பிக்கையின் நட்பு இருக்கிறது!''

"உடலிலே புண் இருக்கத்தான் காண்கிறேன்.''

”முத்து இருக்கும் இடத்திலேயே நத்தைகளும் உள்ளன! நீ, நத்தையை மட்டும் பார்க்கிறாய்.''

”புண்ணுக்கான காரணம்?''

“ஒவ்வொரு புண்ணும், மகனே! ஒவ்வொரு கதை சொல்லும், ஒவ்வொரு புள்ளினமும் ஒவ்வோர் இசைபாடுவது போல! மழையாகப் பெய்யும்போது ஒருவித ஓசை; காட்டாறாகும்போது வேறோர் இரைச்சல்; அருவியாகும்போது மற்றோர் வகையான ஒலி உண்டல்லவா? எல்லா இடத்திலும் காண்பது தண்ணீரைத்தான் - எனினும் வெவ்வேறு ஒலியன்றோ கேட்கிறோம். மகனே! காற்றினில் ஆடை விலகுகிறது, கொடிகள் அறுபடுகின்றன, செடிகள் சிதறுகின்றன, மரங்கள் பெயர்ந்து விடுகின்றன - சிலவேளைகளிலே அதே காற்று, பூங்கொடியைப் புள்ளினம் ஆடும்

ஊஞ்சலாக்கி மகிழவைக்கிறது! வெப்ப நாட்களில், விருப்பம்; குளிர் நாட்களிலே, அருவருப்பு, காற்றின்மீது குறையா? நிலைமை நினைப்புக்குக் காரணம்; நிலைமையை ஏற்படுத்தியது, காற்றா? அல்லவே! புண், எனினும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர்"காப்பியம்' ஏற்பட்டுவிடுகிறது. வழியிலே புலியின் தாக்குதலால் புண் ஏற்பட்டுவிட்ட ஒரு யானையைக் கண்டேன். ஏறத்தாழ ஒத்த வலிவுள்ளவைகள் போரிட்டன என்பது விளங்கிற்று! கசையடியால் ஏற்பட்ட புண்ணுக்கும், களத்திலே பெற்ற புண்ணுக்கும், பொருள், தன்மை, தரம், எல்லாவற்றிலும் மிகுந்த வேறுபாடு உண்டல்லவா? புலவர்கள் புகழ்ந்திடுவர், களத்திலேற்பட்ட புண் காணின். மகனே! வழியிலே நான், எலும்புகள் சிதறிக் கிடப்பதையும் பார்த்தேன்; பிலம் நோக்கிச்

செல்லும் பாம்பினையும், அதைக் கொத்த வரும் பெரும் பறவையினையும் கண்டேன்! பறவை களைப் பிடிக்க விரிக்கப்பட்டிருந்த கண்ணிகளையும் கண்டேன். குஞ்சுக்கு உணவூட்டும் பறவையினையும் கண்டேன். பயந்து பாய்ந்தோடிய முயலையும் பார்த்தேன். எதனையோ துரத்திக் கொண்டு ஓடிய ஓநாயையும் பார்த்தேன். இரத்தத் துளிகளையும் பார்த்தேன்; அம்புகளையும் கண்டேன். வாழ்வுக்காக உயிரினம் நடாத்திவரும் போராட்டத்தின் பல்வேறு வகையான சின்னங்களையும் பார்த்தேன். தாலாட்டுப் பாடக் கேட்டேன்; ஓலக் குரலும் கேட்டது. பழம் கண்டேன், உதிர்ந்த பிஞ்சுகளையும் பார்த்தேன்; சதுப்பு நிலமும் கண்டேன்; வெடித்துக் கிடந்த வயல்களையும் பார்த்தேன், பட்ட மரமும் கண்டேன்! துளிர்த்திடும்

செடிகளையும் கண்டேன்; பச்சிலையும் பார்த்தேன், சருகும் கண்டேன்! நெருப்பைக் கண்டேன், நீரும் கண்டேன். பிறப்பு, இறப்பு எனும் இருநிலைகளையும் உணர்ந்தேன்; வாழ்வுக்காக எடுத்துக்கொள்ளப்படும் பெரும் முயற்சியும் விளங்கிற்று.''

"தாயே! இவைகளைக் கண்டு, அதிர்ச்சி ஏற்பட வில்லையோ? அச்சம் மூண்டிருக்கவேண்டுமே!''

"ஆமடா மகனே! எங்கும் அழிவு நேரிட்டிருப்பது மட்டும் தெரிந்தால், அச்சம், குழப்பம் ஏற்பட்டுத்தான் இருக்கும். எனினும் மடப்பிடி இழந்த களிறு கண்டேன்; அது தன் கன்றுகளுடன் விளையாடிடக் கண்டேன். விதைகள் முளைவிடக் கண்டேன்; உரித்துப் போடப்பட்டிருந்த பாம்பின் சட்டையைக் கண்டேன். மரப்பொந்துகளிலே முட்டைகளைக் கண்டேன்; அரும்புகளைக்

கண்டேன். அச்சம் அகன்றது. அழிவுக்குப் பிறகும், உயிர்ப்பு இருக்கிறது என்பதை அறிந்தேன். பிறப்பும் இறப்பும் மாறிமாறி நடந்திடும் நிகழ்ச்சிகள் என்பதை உணர்ந்தேன். அழிவை எதிர்த்து நிற்கும் ஆற்றல், எங்கும் தென்பட்டது, துள்ளிடும் மீனினம், வட்டமிடும் பறவை, வாட்டத்துடன் காத்துக்கிடக்கும் கொக்கு, இவை கண்டேன். கண்ணியும் வலையும் கண்டதுமட்டுமா, குட்டியும் குஞ்சும்கூடத்தானே பார்த்தேன். எனவே, அழிவுக்கும் அழிவு இருப்பதை அறிந்தேன். வீழும் அலை எழக் காண்கிறோம்; எழும் அலை மடியக் காண்கிறோமல்லவா? அழிவு வெற்றி பெற்றுவிட முடியாது என்ற அரிய பாடமன்றோ, அந்தக் காட்சி? பல் போனவனும் பல் முளைக்காப் பாலகனும் காண்கிறோம்; நோயாளியும் இருக்கிறான், மருத்துவனும்

இருக்கிறான், இவ்வளவு ஏன். மகனே! சுடலையில் தீ காண்கிறோம்; சுள்ளிகளை எரியவிட்டுக் குளிர் காய்ந்துகொண்டு வறியவர்கள் இருந்திடக் காண்கிறோம். சங்கொலியும், சதங்கை ஒலியும் உள்ளன! அழிவுக்கு வெற்றி கிட்டாது. அதன் அகன்ற வாயில் அனைத்துமே விழ்ந்துவிடும் என்று கூறுவதற்கு இல்லை. ஓயாமல்தான் வேலை செய்கிறது, அழிவு - எனினும், அப்பாடா! என் வேலை முடிந்தது என்று கூறி உட்கார முடிவதில்லையே! செடியும், கொடியும், ஊர்வனவும், பறப்பனவும், பாய்வனவும், பிறவும், ஆறறிவினவும், புதிது புதிதாகக் கிளம்பி, அழிவை, வம்புக்கு இழுத்தவண்ணம் இருக்கின்றன. மகனே! பயணம் தந்த பாடம் இது. வாழ்க்கை நிலையாமை என்கிறார்கள்; அழிவு அதுபோன்றேதான் இருக்கிறது; செத்துக்கிடக்கும் மிருகத்திலிருந்து, புழுக்கள்

உயிர்பெற்றுக் கிளம்புகின்றன; அழுகிப் போனவைகள், நெளியும் புழுக்களுக்குத் தொட்டிலாகின்றன. பாவம்! அழிவு, அலுத்துப் போய்விடுகின்றது!''

"ஆயினும், அழிவு கேட்டினைத்தானே செய்கிறது; மரப்பொந்தோ மாளிகையோ - எங்கு அழிவு நுழையினும், அலறல், கதறல் கிளம்புகின்றன.''

"உண்மைதான் மகனே! ஆயினும் முழு உண்மை அல்ல!தாயை இழந்த மான் குட்டிகள், அலறித் துடிக்கின்றன! சிங்கக் குட்டிகளோ, மானிறைச்சியைத் தின்று ஆடுகின்றன; சிங்கம் கண்டு மகிழ்கிறது; குகையிலே குதூகலம்; புதரருகே புலம்பல்!''

"அவ்விதமானால், தாயே! உலகமே, அழிவுச் சக்தியும் அதனை மீறி எழும் சக்தியும் மோதிக்கொள்ளும் போர்க்களம் தானோ?''

”அவ்விதமும் கொள்ளலாம்.’’

”அவ்விதமெனின், உலகிலே மாற்றங்கள், திருத்தங்கள், திருப்பங்கள் தேவை என்று முயன்றிடக்கூடத் தேவையில்லை அல்லவா? ஆனால் முயற்சி நடந்தவண்ணம் இருக்கக் காண்கிறோமே.’’

”இயற்கையிலே அந்த முயற்சி இருக்கிறது. நம்மில் சிலர் அதற்குத் துணைநிற்கிறோம்; ஊக்கமளிக்கிறோம்; உருவம் அளிக்கிறோம். விண்ணிடை மேகத்திரள் காண்கிறோமே, மகனே! என்னென்ன விந்தையான வடிவங்கள் - வண்ணங்கள் உள்ளன. எனினும் அவை நொடிக்குநொடி, மாற்றம் பெறக் காண்கிறோம். கம்பளம் நிறைந்த வெண்ணிறச் செம்மறி ஆட்டு மந்தை மேய்வதுபோலத் தெரிகிறது சிலவேளை. பிறகு பொங்கி நுரைவழியும் வெண்ணிற நீர்நிலையம் போலாகிடக் காண்கிறோம்.

கொட்டிவைத்த பஞ்சுபோல் தெரிகிறது சிலநேரம். அந்தக்கோலம் வண்ணமும் மாறுகிறது. வடிவமும் மாறுகிறது. மாற்ற, நாமா முயற்சிக்கிறோம்?''

"தானாகவும் ஏற்படுவதில்லையே, அந்த மாற்றங்கள். காற்றின் காரணமாகவன்றோ ஏற்படுகின்றன அந்த மாற்றங்கள்.'' ஆமப்பா! காற்றுப்போன்ற நிலையிலேயே உள்ளது உணர்ச்சி. காற்றே இல்லை என்றால் ஒரே புழுக்கம்! காற்று அதிகமானால் எதுவும் சிதறும். அடிபெயரும்! எனவே அதனை - உணர்ச்சியை முறைப்படுத்துதல் வேண்டும். அதனை முறைப் படுத்துவதே, அறிவாளர் கடன். உணர்ச்சியை அடியோடு வேண்டாமென்று கூறி ஒழித்திடுவதும் நல்லது அல்ல; செய்கிற காரியத்தைத்தானே செய்யட்டும் என்று உணர்ச்சியைக் கட்டுப் படுத்தாது விட்டுவிடுவதும்

ஆபத்து. முறைப்படுத்துவதுதான் முறை. முறைப்படுத்த வேண்டுமெனின், ஒரு இலக்கு இருத்தல் வேண்டும். அந்த இலக்கு அறிந்த பிறகு நடத்தப்படுவதே பயணம். அந்தப் பயணம், தொடங்கியபின் நிறுத்துவது என்பது இல்லை. முழுப்பயணம் முடியுமுன்பு வீழ்ந்துபடுவதுண்டு; பயணத்தை இடையிலே நிறுத்தி வாழ்வார், வாழ்வார் அல்லர்.'"பயணம் இலக்கு நோக்கி என்று கூறிக்கொண்டு, உடல் தேய்ந்து, புண்கொண்டு உழல்வதும் ஒரு வாழ்க்கையா! - என்று பலர் எண்ணுகின்றனர்.''

"ஆமப்பா! அதனால்தான், வாழ்க்கை இன்பத்திலே தம்மை ஈடுபடுத்திக்கொள்ளாமல், இலட்சியபுரி நோக்கிப் பயணம் நடத்தும் சிலருக்கு, தொல்லையும் அதிகம்; அதுபோன்றே பொறுப்பும் அதிகமாகிவிடுகிறது. அந்தச்

சிலரும், சீலர்களாகக் கடைசிவரையில் இருக்க இயலாமல் போய்விடவும் காண் கிறோம். என்போன்றார் இறுதி மூச்சு உள்ளவரையில் பயணத்தை நிறுத்தப்போவதில்லை. இதோ மகனே! இந்தப் புண், இதைச் சொன்னதால், ஏற்பட்டதுதான்.''

"யாரம்மா தாக்கினார்கள்?''

"தாக்கமட்டுமே தெரிந்தவர்கள்!''

"காரணம் என்ன? கடுங்கோபமா?''

"கடுங்கோபம்தான்! பயணம் வேண்டாம்! பழம்பறித் துண்போம், அதோ சோலை என்றனர். இந்தச் சோலையினை விடக் கவர்ச்சிகரமானது, அதோ அங்கு நாம் சேரவேண்டிய இடத்திலே இருக்கிறது; அங்கு கிடைத்திடும் கனி, சுவை மிக்கது. அங்கு செல்வோம், என்றேன்.

கண் எதிரே தெரிந்திடும் கனியை விட்டுவிட்டு, உன் கற்பனைத் தோட்டம் காண வரவேண்டுமா? நானென்ன ஏமாளியோ! போ! போ! நான் வரமுடியாது. இந்தப் பயணமே பைத்தியக்காரத்தனம் என்று கூறி, நான் அளித்த விளக்கத்தை விதண்டாவாதமென்றுகொண்டு, என்னுடன் வம்புக்கு நின்று தாக்கினான்.''

"தடுத்திட எவரும் வரவில்லையோ தாயே!''

"பலர்! பரிவுகொண்டவர் பலர்! பாய்ந்தனர், என்னைத் தாக்கினவனைத் தாக்க! இடையிலே நான் நின்றேன். இருபுற மிருந்தும் எனக்கு இடி! அடி! இதோ, இந்தப் புண், அதன் காரணமாக ஏற்பட்டதுதான்! வேண்டாமடா மகனே! என்பேன்; விடுங்கள் அம்மா கரத்தை; இக் கயவன் தங்களைக் கடுமொழி யால் தாக்கிடக் கேட்டு வாளாயிருக்க, நாங்களென்ன, செவிடரோ, ஊமையரோ

அல்லது செய்வதறியாத பேதையரோ? என்று கொதித்துக் கூறிக் கிளம்பினர்; கரம் பற்றினேன் தடுக்க; உதறித் தள்ளினர்; சுழன்று கீழே வீழ்ந்தேன்; கீழே பாறை; புண் ஏற்பட்டது.''

"எவ்வளவு சாதாரணமாகக் கூறிவிட்டீர்களம்மா, இந்த அநியாயச் செயலை.''

"மகனே! தானிட்ட முட்டையை அடைகாக்கும் பறவை, கதகதப்புக்காக, செத்தையையும் குப்பையையும் எடுத்துச் சென்று குவிக்கும்போது, தன் கால்பட்டே முட்டை கீழே வீழ்ந்து, உடைபட்டுப் போய்விடுகிறது; கண்டதுண்டோ? நான் கண்டிருக்கிறேன். அதுபோலவே மகனே! என்னிடம் கொண்ட அன்பு காரணமாகவே எனக்குத் துன்பம் இழைக்கப்பட்டு விடுவதை அவர்கள் அறிவதில்லை. தாக்கத்

துணியலாமா தாயை! - என்று கிளம்பினர். . . . .''

"தடுத்து நிறுத்தத் தாங்கள் கூறியது என்னவோ?''

"அவர்கள் கேட்டு அதன்படி நடக்காவிட்டாலும், மகனே! நீ கேட்டு அதன்படி நட! நான் சொன்னேன். மானிடமிருந்து கஸ்தூரியும், மாட்டிடமிருந்து கோரோஜனமும், யானையிட மிருந்து தந்தமும் எடுத்திட விரும்புவோர், அவைதமைத் துன்புறுத்துவர்! அதுபோல, என் இரத்தத் துளிகளைத் தேன் துளிகளாகக் கொள்ளவிரும்புவோர் இருக்கலாம், சிலர்; அவர்தம் இச்சை அதுவானால், என் குருதி குடித்து மகிழட்டும்; அவர்களுக்கு அந்த மகிழ்ச்சியை நான் தரக்கூடிய வாய்ப்பை என்னிடமிருந்து பறித்துவிடலாமா? வெட்டட்டும், குத்தட்டும், கொல்லட்டும், வெந்தழலிலிட்டுக் கருக்கட்டும்;

நீறு ஆக்கிடட்டும்; தடுத்திடாதீர்; என் பொருட்டுக் கண்ணீர் சிந்துவீர்களல்லவா? அதுபோதும் எனக்கு. உமக்கு மட்டுமா, நான் மகிழ்ச்சி அளித்தபடி இருக்கவேண்டும். அவர்களுக்கும் கிட்டட்டுமே களிப்பு. உழைத்து உம்மை மகிழ்விக்கிறேன் - செத்து அவர்கள் சிந்தை குளிரச் செய்ய, வழி கிடைக்கும்போது, தடுத்திடலாமா? இவள் போனால் இலட்சியமே ஒழிந்துபோகும் என்று கருதும் அவர்களும், நம்பிடும் பேதைகளும், நான் போன பிறகும் இலட்சியம் சாகவில்லை என்பதை அறியும் அரிய வாய்ப்பல்லவோ, என் சாவு! பொன்னான வாய்ப்பு! அதைப் போக்கடிக்கலாமா? உழைத்தாள் உத்தமி! அவள் ஆற்றல் மிக்கவள் என்பது மட்டுமல்ல, ஆற்றலுள்ளவர்களாகப் பலர் அவளால் ஆக்கப்பட்டனர் என்பதை அவனி அறிவதுதானே. எனக்கு உண்மையான

பெருமை தரும்! அந்தப் பெருமை எனக்கு, எப்போது கிடைக்கும்? இறந்தால். அதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ? என்று எண்ணி, என்னைக் கொன்று பெருமையைத் தேடித்தர வருகிறார்கள்; அவர்களைத் தடுக்கலாமா? - என்று சொன்னேன்.''

"நன்றாகச் சொன்னீர்களம்மா இந்த நெஞ்சு நோகச் செய்திடும் பேச்சினை! தங்களைத் தருக்கர் கொல்ல வருவார் களாம்; மற்றவர்கள் மரக்கட்டைகளாகிக் கிடக்கவேண்டுமாம். பேதையும் கொள்ளான் இந்தப் போக்கு!''

"பேரறிவு வேண்டும், இந்தப் பொறுப்பினை உணர. இயல்பாக எழக்கூடிய கோப உணர்ச்சியைக் கட்டுப்படுத்தத் தெரியவேண்டும். சாவது என்பதற்கும் கொல்லப்படுவது என்பதற்கும் உள்ள மாறுபாடும், அந்த மாறுபாட்டிலே காணக்

கிடைக்கும் மாண்பும் அறியவேண்டும்.''

"பாசம், பற்று, இவை வேண்டாம் என்கிறீரா?''

"சொல்வேனா அப்படி! சொல்ல நானென்ன, வெறும் சோற்றாலடித்த பிண்டமா? சொரணையற்ற ஜென்மமா? பற்றும் பாசமும் வேண்டும் - பொங்கி வழியவேண்டும். ஆனால், அதேபோது, பாசம் காரணமாக என்னைக் கொடியவர் களிடமிருந்து தப்பவைப்பதாக எண்ணிக்கொண்டு, எனக்குக் கிடைக்கக்கூடிய, மிகப் பெரிய, நிலையான, பலனளிக்கத்தக்க பேற்றினைப் பறித்துவிடலாகாதல்லவா? நான் இருந்துகொண்டு, எதை எதையோ கிளறிக்கொண்டிருக்கிறேன் என்று என்மீது பழி சுமத்தப்படுகிறதே - வீணாக அது மறைவது எப்படி? மறுப்பு உரைப்பதாலா?

விளக்கம் தருவதாலா? வாதம் புரிவதாலா? போதாது, மகனே! போதவே போதாது. நான் மரித்த பிறகும், நான் ஈடுபட்டுள்ள காரியம், எப்போதும்போல - ஏன். . . இப்போதிருப்பதைவிட வேகமாக, விறுவிறுப்பாக நடக்குமானால், இப்போது என்மீது உள்ள பழி துடைக்கப்பட்டுப் போய்விடும் அல்லவா? என்னை, மற்றவர் சாகடிக்காமல் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள், நான் செய்துவரும் வேலையைத் தொடர்ந்து செய்ய, மனமில்லாதவர்கள், திறம் போதாதவர்கள், பொறுப்பு மேற்கொள்ள மறுப்பவர்கள் என்று பொருள்பட்டு விடுமே! அதுவும் கூடாதல்லவா?''

"அவ்விதமானால். . .''

"என்னை இகழ்வார்கள்; உங்களுக்கு எரிச்சல் ஏற்படவே கூடாது. என்மீது

பழி சுமத்துவார்கள்; நீங்கள் பதறவே கூடாது. என்னைத் தாக்குவார்கள்; நீங்கள் பதிலடிகொடுக்க முனையக் கூடாது. என்னைக் கொல்வார்கள்; நீங்கள் கோலோ வாளோ தூக்கக்கூடாது! என் வேலை உம்மிடம் ஒப்படைக்கப்பட்டது என்று. அந்தச் சம்பவத்துக்குப் பொருள்கொள்ள வேண்டும்; புதிய பொறுப்பு உமக்கு வந்துளது என்பதை உணரவேண்டும்; நீங்கள் நானாக வேண்டும்.''

"இதை எந்த மகனம்மா ஏற்றுக்கொள்வான்?''

"தாயின் தகுதியை அறியும் மகன், நிச்சயம் ஏற்றுக் கொள்வான்.''"தாயை, மறுக்கும் மகன் கிளம்பும் நாட்களம்மா, இது.''

"தாழையைச் சுற்றிலும் முள் உண்டு - ஆயினும் ஒரே செடி தருவதுதான் - பூவும் முள்ளும்!! மேலும், ஒருவர் இயற்கையான

நீதியைப் பழிக்கும்போதுதான், இயற்கை நீதிக்கு எத்துணை பேர்களுடைய பேராதரவு இருக்கிறது என்பது தெரிகிறது.''

"அக்ரமக்காரர்களுக்கு ஆதரவு தருவதை ஒரு தத்துவமே ஆக்கிவிடுவீர்கள் போலிருக்கிறதே, அம்மா! பொறுமை வேண்டும் - ஆனால் இந்தத் தன்மையிலா? இந்த அளவிலா?''

"மாற்றுக் குறையாததுதானப்பா, தங்கம்! நற்குணமும் அதுபோலத்தான்; குறைவற இருந்தால்தான், நற்குணம்; கொஞ்ச நஞ்சம், துண்டு துணுக்கு என்ற முறையிலே நற்குணம் இருத்தல் முறையாகாது. அகழ்வாரைப் பொறுத்திடும் பூமிபோல, இகழ்வாரைப் பொறுதிடவேண்டும் என்று வள்ளுவர் கூறியுள்ளார்; அறிவாயல்லவா?''

"ஆமாமாம், போங்கள்! நஞ்சு

கொடுத்தால்கூடப் பருகிடச் சொல்கிறார்; முகம் கோணாமல் அந்த வள்ளுவர்.'"'பருகினாரே, சாக்ரட்டீஸ், படித்ததில்லையா நீ?''

"பொல்லாங்கு செய்வோருக்குப் புதுத் தெம்பும், துணிவும் பிறந்துவிடுமே! தாங்கள் கூறும் போக்கினை அனைவரும் மேற்கொண்டுவிட்டால்,''

"இல்லை, மகனே! இல்லை! இலட்சியபுரிப் பயணம் மேற்கொள்வோர் பெறவேண்டிய நெஞ்சு உரம் ஏற்பட்டுவிடும், இந்தப் போக்கினை மேற்கொண்டால். ஆனால், அதற்கு, முதலிலே இலட்சியத்திலே, அசைக்கமுடியாத நம்பிக்கை ஏற்பட வேண்டும். வேகமான நம்பிக்கை மட்டும் போதாது - கள் பொங்கக் காண்கிறோம்; பாலிலும் நுரை பொங்கிடக் காண்கிறோம்; இரண்டும் ஒன்றல்லவே. அதுபோலத்தான்,

நம்பிக்கையை, பொங்கும், பொறி பொறிக்கும், பேச்சினால் வெளிப்படுத்துவது மட்டும் போதாது. சிறு நரியைப் பிடித்து அடைத்தால், கூண்டுக்குள்ளே, வேகவேகமாக ஓடும், பாயும், நடக்கும். சிங்கமோ அங்குகூட, கெம்பீர நடைபோடும் பார்த்திருக்கிறாயா? கூண்டு திறக்கப்பட்டால், நரி பயந்து ஓடும், சிங்கமோ, காண்போரை ஓடச்செய்யும். இலட்சிய முழக்கம், உரத்த குரலில், தடித்த வார்த்தைகளில், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற போக்கிலே இருப்பதுண்டு. ஆனால், அது நிலைத்து நிற்கும் தன்மைக்குப் பெரும்பாலும் வழிகோலுவதில்லை. திடீரென, முறுக்கி, முடிபோடாதுவிட்ட கயிறு பிரிந்து போவதுபோல், இலட்சிய நம்பிக்கை நலிந்து போகும்.''

"ஆமம்மா! பிறகு, அந்த இலட்சியத்தையே, பழிக்கவும் செய்கிறார்கள்.''

”இல்லையே! தம்மையே அல்லவா இகழ்ந்துகொள் கிறார்கள். நான் ஓர் ஏமாளி! இதனைப்போய் இதுநாள்வரையில் இலட்சியம் என்று கொண்டிருந்தேன். நான் ஓர் அகம்பாவி! நான் கொண்ட நம்பிக்கையிலே எனக்கே ஒரு நிலையான தன்மை ஏற்படுமுன்பு, ஊருக்கு அறிவுரை கூறும் தகுதி பெற்று விட்டதாக எண்ணிக்கொண்டேன். நானோர் எத்தன்! அந்த இலட்சியத்திலே எனக்கு நம்பிக்கைக் குறைவு ஏற்பட்ட பிறகும், மூடிமறைத்து வைத்திருந்தேன். நான் குற்றவாளி! பிழையான ஒரு இலட்சியத்திலே ஊரார் நம்பிக்கை கொள்ளும்படி செய்து விட்டேன். - என்றெல்லாம் அவர்கள் தங்களைத் தாங்களே அல்லவா, இகழ்ந்துகொள்கிறார்கள். அப்பா அம்மாவைக் கலியாணம் செய்துகொண்டபோது, எனக்கு ஏனப்பா

சொல்லவே இல்லை! - என்று ஒரு மகன் கேட்கமுடியுமா? இந்த நாட்டில்!! அந்த விந்தையினும் விந்தை, இதுநாள்வரை கொண்டிருந்த இலட்சியம் இலட்சியம் அல்ல என்று பிறிதோர் நாள் பேசுவது. இப்போது, பேரறிவு திடீரென வந்துவிட்டது என்பதற்கு என்ன உறுதி காட்ட இயலும்? மீண்டும், உரத்த குரல், தடித்த சொற்கள், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற போக்கன்றி. ஆகவே மகனே! வேகமான நம்பிக்கை மட்டும் போதாது - அழுத்தமான நம்பிக்கை வேண்டும் - அப்போதுதான் காற்றடிக்கும் பக்கம் கருத்து அலையும் நிலை ஏற்படாது. மகனே! மண்ணையே கொண்டுதான் செங்கற்களாக்குகிறார்கள் - எப்படி? அழுத்தமாக்கி! சூளையிலிட்டு!! மண்ணை இறுக்கி அழுத்தம் ஏற்றுகிறார்கள் - அந்த அழுத்தம் குறையாமல் நிலைத்து இருக்க,

சூளை போடுகிறார்கள். இலட்சிய அழுத்தம் தரமானது ஆக, கஷ்ட நஷ்டமெனும் தீயிலே இடப்பட்டாக வேண்டும். வெறும் மண், மழையால் கரையும் - அதே மண், அழுத்தம் ஏற்பட்ட செங்கற்களானால், மழையைச் சட்டை செய்வதில்லை.''

"பக்குவம் ஏற்படாததால் வந்த தொல்லை என்கிறீர்களா தாயே!''

"பெரும்பாலும் அப்படித்தான். சில வேளைகளிலே நெஞ்சறிந்து பொய் சொல்வதுமுண்டு.''

"இலட்சியத்தைவிட்டு விலகுபவர்கள், தாங்கள் கூறுவதைப் பார்த்தால், பரிதாபத்துக்கு உரியவர்கள் என்று ஏற்படுகிறது. ஆனால் அவர்கள் பேசுவதைக் கேட்டாலோ, கோபமல்லவா மூள்கிறது? அந்த முறையிலல்லவா, இலட்சியத்தை இகழ்

கிறார்கள்.''

"இகழட்டுமே, மகனே! இலட்சியபுரிப் பயணத்திலே இதனை எதிர்பார்க்கத்தானே வேண்டும். நெடுநேரம் உன் நேரத்தை வீணாக்கிவிட்டேன். எங்கு கிளம்பினாயோ! என்ன வேலையோ? ஓவியம் தீட்டுபவனோ! உயர் கவிதை இயற்றுபவனோ! உனக்கு இருக்கும் அவசர அலுவலில் குறுக்கிட்டு விட்டேன். . . . .''

"தாயே! பிழைத்த என்னைச் சாகடிக்காதே! வலிவு இருப்பதற்குள் பயணம் நடத்தியாக வேண்டும் என்பது உமது நோக்கம். நமது நாடு சீர்கேடு அடைந்திருப்பதைக் கண்டும் களிநடமாடுவது என் போக்காக இருக்கவேண்டுமோ! அம்மா! புறப்படுங்கள்.''"போய்வரவா, மகனே!''

"புறப்படுங்கள், தாயே! தங்கள்

கால்பட்ட மண்ணை என் நெற்றிக்கு அணிந்துகொண்டு, இதோ, உடன் வருகிறேன். விலகினோர், இலட்சியபுரி பயண இலக்கணத்துக்கு விதிவிலக்கு என்போம். வீழ்ந்துபடுவதாயினும், விடுதலைக்கான முயற்சி யிலேயே அது வந்து நேரட்டும். என் தாயுடன் செல்வது என் கடன்! மயிலும் குயிலும் தேடிட ஓடுவோர், மாநிதி பெற்றிட விலகுவோர், மனமருளால் ஒதுங்குவோர் என்பவர்பற்றிய கவலை நமக்கு வேண்டாம். பயணம் நடக்கட்டும், இலட்சியபுரிப் பயணம்.''

"புனிதப் பயணம், மகனே! தாய்த் திருநாடு மீட்கும் தூய தொண்டு, அதில் ஈடுபட்டால், கிடைப்பது என்ன என்பதை என் புண்கள் காட்டுகின்றன. பார்த்தாயல்லவா?''

"புண்களா அவை, தாயே! பூணாபரணம் எதுவும் இதற்கு நிகராகா.''

”மகனே! என்னைவிட்டு விலகும் நிலையும் சிலருக்கு வந்துற்றதே என்று வருத்தப்பட்டேன். துயர் துடைக்க வந்தாய்! துணை நிற்க வந்தாய். நன்றி மகனே! நிரம்ப மகிழ்ச்சி!’’

“நான் மட்டும் அல்ல, தாயே! விலகுவோம். விம்முவர்! விலகுவோம், விரிசல் ஏற்படும்! விலகுவோம், பயணம் நின்று விடும்! என்று கூறுவோர் சிலராகவும், சிலர் விலகித் தாயின் சித்தத்தைத் தாக்கிச் சித்திரவதை செய்யும் இந்த நேரத்தில்தான், இதுவரையில் ஈடுபடாது இருந்த பலரும், இனி இலட்சியப் பயணத்தில் தங்களுக்குத் துணையாக வருகின்றனர் என்பதைத் தாயே! கண்டு பெருமைப்படப் போகிறீர்கள். நான் முதல்! பிறர், வந்தவண்ணம்.’’”மகனே! உன் பேச்சே இசைபோல் இனிக்கிறது. பாடவும் வல்லையோ?. . . . . ’’

”பாடலொன்று இசைப்பேன், தாயே!

பயணம் நடத்தியபடி.''

தம்பி! இந்தவிதமாக உரையாடலொன்று நடப்பதுபோன்ற ஓர் உள் உணர்ச்சி; அதைத் தொடர்ந்து ஒலித்தது உணர்ச்சிமிகு பாடல்:

"தன்னாட்டைத்தான் பெறான் உலகில்

எந்நாட்டானாயினும்

இழிந்தவன் தோழி!

முன்நாட்டை ஆண்டவன்

முழுவாழ்வு வாழ்ந்தவன்

தென்னாட்டான் இந்நாளில்

தில்லிக் கடியவன்

என்னேடி தோழி

இழிவில் இழிவன்றோ!

ஒன்றேகுலம் என்றான்

புகழே உயிர் என்றான்

அன்றாடம் சாகின்றான்

www.kaniyam.com 1891 FreeTamilEbooks.com

மனத்துயர் விலகிற்று. என் கற்பனை உரையாடலில் கலந்துகொண்ட இளைஞன் போன்றார் எங்கெங்கும், திரண்டெழுந்து நிற்கின்றனர் என்ற எண்ணம் தித்திப்பு அளித்தது. இலட்சியபுரி பயணத்துக்கு இடையூறு விளைவிக்கும் முறையில், சிலர் நடந்துகொண்டாலும், இதோ நான் இருக்கிறேன், துணைநிற்க, இலட்சியபுரிப் பயணத்தைத் தொடர்ந்து நடத்த என்று, எவன் தெரிவிக் கிறானோ, அவனே தமிழ் மறவன்! ஆம்! ஆம்! இதில் ஐயமில்லை! ஏன், தம்பி! இப்படிப் பார்க்கிறாய்? யாரையோ தமிழ் மறவன் என்று கூறுகிறேன் என்ற எண்ணத்தாலா? தம்பி! உன்னைத்தான் குறிப்பிடுகிறேன் - இவனே தமிழ் மறவன் என்று.

அன்புள்ள,

அண்ணாதுரை,

14-5-61

40. 'இந்தியர்' ஆகின்றனர்!! (1)

கழகத்தைக் குலைக்கத் திட்டம் -

விலகியோர் குரல் -

டில்லியின் போக்கு -

தம்பி!

கொளுத்தும் வெயில் கொட்டும் மழை கடுங்குளிர் கருக்கல் பேய்க்காற்று இவை எதனையும் பொருட்படுத்தாது, அவர்கள், கருமமே கண்ணாயினர்; பழச்சாறு பருகினர்; பூங்காற்றுத் தேடினர்; புதுப்புனலாடினர்; இசைகேட்டு இன்புற்றனர்; களிப்புத்தர வல்லனவற்றிலே எல்லாம் மாறிமாறி ஈடுபட்டனர்; மற்றவர்கள். அவர்கள், எல்லாம் பெற்றாகிவிட்டது. இனி நமக்குக் குறையேதும் இல்லை; வாழ்க்கை ஒரு இன்பப் பூங்காவாகி விட்டது; கேட்டது கிடைக்கிறது;

தொட்டது மலருகிறது; நினைப்பது நடக்கிறது; இனி நாம் பெற்றவைகளைச் சுவைத்து மகிழத்தான் காலத்தைப் பயன்படுத்த வேண்டும்; கொளுத்தும் வெயில் எனில், குன்றேறிக் குளிர்ச்சி நாடுவோம்; கடுங்குளிர் எனில், கம்பளம் உண்டு. அழகியதாய், வசதியதாய், குளிரைப் போக்கிக் கொள்வோம்; பேய்க்காற்றும் பெருமழையும் குடிசை களைப் பிய்த்தெறியும், மண் சுவரினைக் கீழே சாய்த்திடும், நம்முடைய கோட்டைமீது வீழ்ந்து அவை தம் வலிவிழந்து போகுமேயன்றி, வேறென்ன கெடுதலைச் செய்திட இயலும்? எனவே, ஆடுவோம், பள்ளுப் பாடுவோம், அடையவேண்டியதை எல்லாம் அடைந்துவிட்டோம் என்று அகமகிழ்வோம் என்று இருந்தனர். சிலர் மட்டும், ஓய்வுக்கு நேரம் இல்லை; உறக்கமோ வருவதில்லை; இடுக்கண்கள் இருப்பதாலே

எடுத்த காரியத்தை முடித்திட மேலும் மும்முரமாகப் பணியாற்றிட வேண்டும்; எனவே! கொளுத்தும் வெயில், கொட்டும் மழை, கடுங்குளிர், பேய்க்காற்று, கருக்கல் எனும் எதனையும் பொருட்படுத்தாமல் பணியாற்றியபடி இருந்தனர். மற்றவர் எள்ளி நகையாடினர். "ஏடா மூடா! ஏன் இந்த வீண் வேலை! நான்தான், நீயும் மனித இனம்தானே என்றெண்ணி, மனம் இளகி, எண்ணற்றவர்கள், இருந்திட ஏற்றதாம் என் எழில் மணிமாடத்தில் ஆனினம் தங்கிட அமைந்ததோர் இடத்தினிலே, சென்று தங்கிடுவாய், செய் தொழிலைக் காட்டிடுவாய்; நல்ல ஊழியன் என்ற பெயரெடுத்து நாலாறும் பெற்றுக் காலத்தைக் கடத்திடுவாய்; உண்ணத் தந்திடுவேன், உழல்வானேன் வயல்தேடி; வண்ணம் இல்லை எனினும், இருந்ததுதான் இந்த ஆடை; அங்கம் மறைத்திட அது போதும்

அல்லவோ சொல்; தந்திட நானிருக்கத் தவிப்பானேன் வேறுபெற; வந்திடு என் முற்றம்; வாழ்வளிக்க முடியும் என்னால்; வதைபட்டுச் சாகாதே, வரம் தந்தேன் உதறாதே!'' என்று பேசினர். ஆனால், அந்த உழைப்பாளிகளோ, ஓயவில்லை, உறங்கவில்லை, மயங்கவில்லை, மனம் மாறவில்லை. வேலை! வேலை! வேலை! செய்தவண்ணம் இருந்தனர்.

வெட்ட வெளி! பொட்டல் காடு! தண்ணீர் கிடைக்காத வறண்ட திடல்! - இருக்க இடம் இதிலாம்! எழில் இல்லம் இவ்விடமாம்! சுற்றும் மணற்பரப்பு செடி கொடியும் வாழாது! இங்கு வயலாகும், வாழ்வளிக்கும் வகை பெறுவோம் என்று கதைக்கின்றார், கருத்தறியாச் சிறார்போலே!! வெட்டி வரும் வேளையிலே பாறை இருந்திடுமே - பெயர்த்தெடுக்கும் கருவி எங்கே? பெரும்

பள்ளம்தனைத் தூர்க்க எளிதாகுமோ இவரால்! உவர் மண்ணால் சுவர் எழுப்பி, உயரம் கண்டதுமே! ஒரு நொடியில் சாய்ந்திடாதோ, கூரைமேல் ஏறியதும், கதவெங்கே, தாள் எங்கே? கனமான பூட்டுமுண்டோ? ஓடுண்டோ, ஒய்யாரம் தரவல்ல பலகணியும் தானுண்டோ! கள்ளிக்கும் சுள்ளிக்கும், கடும் விஷப்பாம்பினுக்கும் அல்லாமல், கனி குலுங்கும் தருக்கள் வளருதற்கோ, தக்க இடம் இஃது! ஈதெல்லாம் அறியாமல், ஏதேதோ எண்ணமிட்டு ஓயாது உழைக்கின்றார், ஒரு பலனும் காணார் காண்!! - என்று "உடையவர்கள்' இகழ்ச்சியுடன் பேசி நின்றார்; இவர்களோ அவர் வார்த்தை எமக்கல்ல என்று எண்ணி, இதயம்தனில் பதிந்த"எழிலிடம்' அமைந்திடும் ஓர் ஏற்றமிகு செயலதனில், ஆற்றலெல்லாம் செலவிட்டார்.

பாறை கண்டபோது பதறினார் இல்லை

அவர்; பிளந்து பெயர்த்தெடுத்து, பொடியாக்கி, கீழ்பரப்பி, வலிவூட்டும் வகை பெற்றோம், இல்லத்தின் அடித்தளம் தனக்கென்று மகிழ்வுற்றார். கல் உடைக்கக் கரம் உண்டு; கருத்திலே உறுதி உண்டு; என்ன இனி நமக்குக் குறை; எழுப்பிடுவோம் நம் இல்லம்; எத்தனைதான் அழகியதாய் இருந்திடினும் மற்றதெல்லாம் இன்னொருவர் இடமன்றோ; இருந்திடலாம் என்கின்றார்; தயவன்றோ காட்டுகின்றார்; கொத்தடிமை ஆக்குதற்கே கூவி அழைக்கின்றார்; இத்தரையில் நமது இல்லம் இனிதாய் அமைத்திட்டால், என் இல்லம்! எழில் இல்லம்! என்றெண்ணி மகிழ்ச்சியுடன் இருந்திடலாம் காலமெல்லாம். இன்று பாழ்வெளியாய் இருந்திடும் இவ்விடத்தில், முன்னம் ஓர் நாளில், உலவினராம் முடியுடையோர்; படைகடந்த இடம் இதுவாம்; பண்புக்குப் பெட்டகமாம்; பார்புகழ

வாழ்ந்தனராம்; பலநூலும் கண்டனராம்! அந்த இடம் தனக்கே, நாம் உரியர் என்பதனை இன்று அறிந்திட்டோம். இனி ஏற்பது இகழ்ச்சி அல்ல எனக் கூறித், தந்தது தின்று, தெந்தினம்பாடித், தருக்கரின் தாளில் தலையினை வைத்து இழுக்கினைத் தேடிக்கொண்டிடப் போமோ! செச்சே! நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்று நவின்றாரே கவிஞர்பிரான்; நமக்கும் நற்பாடம், அக்கவிதை தாராதோ!! "நாமிருக்கும் நாடு நமது' என்பது கண்டோம் என்ற கவிதை, நமக்கும் சேர்த்தன்றோ! ஏன் இனி நமக்கு இச்சகம் பேசிப் பிழைத்திடும் பிச்சை வாழ்வு! ஏற்கோம் இனி இழிநிலை - எடுப்போம் புதுமுயற்சி - கட்டிமுடிப்போம், எமதிடம் - என்று சூளுரைத்தார். எதிர்ப்பட்டோர்கள் இடி இடியெனச் சிரித்து,"கண்டீரோ பெருவீரர்! அறிந்தீரோ இவர் தீரம்!! குன்று பெயர்த்தெடுத்துச்

செண்டு ஆக்கப்போகின்றார்! நின்றிடுக என்று கூறி, கடல் அலையைத் தடுத்து நிறுத்தப்போகின்றார்! மணலெல்லாம் குவித்தெடுப்பார், மரகதக் குவியலாக்கிடுவார்! நத்தையில் முத்தெடுப்பார்; தாழையில் வாழை காண்பார்; தந்தம் பெற்றிடுவார் தத்திடும் அணில் அதனில்; ஏ! அப்பா! இவர் ஆற்றல், எவர்க்குண்டு? கண்டுரைமின்!'' - என்று எவரெவரோ ஏளனம் பேசி நின்றார். பணிபுரியும் போக்கினரோ "நீராடி நீந்துகையில், நீர்புரளும் மீனினம் கொத்திடும் விதமாக இவர் ஏதோ சத்தமிட்டுக் கிடக்கின்றார், நமக்கென்ன இதுபற்றிக் கவலை என்று கூறுவதுபோலாகித்"தூற்றுவோர் தூற்றட்டும் புழுதிவாரி வீசுவோர் வீசட்டும் நம் கடன் பணிசெய்து கிடப்பதே'' அவர்க்குரிய

ஆற்றலை அவர் காட்டி நிற்கட்டும்; நம் கடமை நாமறிந்து நமது இல்லம் அமைத்திடும் ஓர் நற்பணியில் இறங்கிடுவோம்; வண்டாடும் சோலையிலே வண்ணமயில் ஆடுகையில், வளைந்த வால்காட்டித் தாவிடுமாம் மந்தியுந்தான்; மந்தி நடந்திடும் ஓர் நாட்டியமே பாடமாகக் கொண்டிடுவோம் என்று அந்தக் கோலமயில் எண்ணிடுமோ? ஏதேதோ இன்ப நினைவுடனே ஏந்திழையாள் இடுப்பில் குடம் வைத்து, இன்பம் இதயம் துவைத்துச் செல்கையிலே, குப்பை கிளறிடும் ஓர் குக்கல் காணின், நின்று, என்னே! இதன் திறமை! எதற்குண்டு இவ்வாற்றல்! என்றா எண்ணி நின்று எக்களிப்பு கொள்கின்றாள்? இவரோ "இருப்பவர்கள்' - இருப்பதுவோ பறித்தவைகள் - நமக்கோ இடம் இல்லை, நம் இடமோ மாற்றாரால் பாழாகிக் கிடக்கும் இடம்! நாம் அதனை அறிந்த

பின்னர், திருத்த, புதுப்பிக்க, திறம்பெற்று பணிபுரியத் துடித்திடுவதல்லாமல், தூற்றல் கணைதொடுத்து தூய்மையினைக் கெடுத்திடுதல் நன்றாமோ! அழைக்கிறது, அறம், அன்பு!! ஆற்றலெல்லாம் அவை தமக்கே! என்று எண்ணி, ஈடுபட்டார் எடுத்தபணியதனில். பாழ்வெளியில் ஓர் பசுமை பாங்குறவே வந்தது காண்! வெட்டவெளியதுவும், வேற்றுருவம் பெற்றது காண்! சின்னஞ் சிறு கூடம் - கேணி ஆங்கொன்று - அதன் பக்கம் பூச்செடிகள் - மாடியும் அமைத்திடலாம், அடித்தளம் வலிவுற்றதென்பதனால்; காற்றும் வெளிச்சமும் களிப்பூட்ட வருமாறு கட்டினர் காண் புது இல்லம்!

அழகுண்டு அளவறிந்து; வசதியுண்டு, வகை அளவு; இந்த முறையில் நல்லில்லம் அமைத்து, அவரும் இன்புற்று, நம் உழைப்பு

வடிவம் பெற்று, நமதாகி நின்றது காண்! எவர் எண்ணினர் இது இயலும்! என்று முன்னம்! என்னென்ன ஏச்சுகள், எத்துணை ஏளனங்கள்! கூடை எடுத்து நாம் சென்றிடுவோம், குரலெழுப்பி, கல் வீசிக் குலைத்திடுவார் நம் ஆர்வம். எழுப்பிய சுவர்தன்னைக் கைத்தடியால் சாடி, "ஏடா! பயலே! இஃது இரு நாட்கள் நின்றிடுமோ?'' என்று கூறி, அச்சம் எழச்செய்து மகிழ்வுற்றார். கட்டியவர் எவர் அப்பா? கல் உடைக்கும் சொல்லரசா? அன்றி, மண்பிசையும் மன்னரா? எவர் திட்டம் இட்டவர்கள்? இளங்கோவா, கடுங்கோவா? குழி தோண்டி நின்றவர்கள், கூலி மிகப் பெற்றனரோ? கழி வாங்கச் சென்றவர்கள், கணக்குக் காட்டினரோ, சரியாக? செம்பியன் எனும் உங்கள் தோழன், செப்பினானாம், மற்றவர் மரப்பொம்மை, நானே மாமேதை! என் திறமே, இவ்வில்லம்!! என்றெல்லாம்.

அறிவீரா! ஏன் அந்த ஆணவம் என்று கேட்டுக் கொதித்தானாம், இரும்பொறையன், உண்மையா? என்னமோ, பிள்ளைகளா! எப்படியோ ஒரு வழியாய் இல்லம் அமைத்தீர்கள்! இனித்தான் இருக்கிறது, உமக்கு இன்னல் அடுக்கடுக்காய்; இடம் பிடிக்க முனைவோர்கள், இடித்துக்கொள்வரன்றோ! என்னால் இது என்பதனால், எனக்கோ எல்லாமென்று, எவனேனும் எக்காளம் எழுப்பிடலாமன்றோ! நான் எழுப்பியது இந்தச் சுவர் - இதை நானே இடித்திடுவேன் என்று இறுமாப்பாளன், எடுத்திடுவான் கடப்பாரை!! ஆன செலவு அதிகம் காட்டி, அடித்தான் இலாபம் இவன் என்று, ஒருவன் மற்றொருவன்மீது உமிழ்ந்திடுவான் கோபத்தை! கலாம் விளையும் இல்லத்தில், கண்டவர் ஏசிடுவார்!! கார் தந்த நீர்த்துளியால் கலம் நெல் விளைவதுண்டு - கருத்தறியாதார்

வயலுக்கு உரியரென்றால், களமன்றோ களமாகும்!! என்ன நேரிடுமோ? எத்தனை நாள் இவ்வாழ்வோ? எனக்கென்னவோ இஃது நீடித்த இன்பம் எனத் தோன்றிடவே இல்லை, சொன்னேன். கூடி வாழ்ந்திடும் குணம் கொண்டோர் என்று இன்று கூறுகின்றீர், கேட்கின்றேன்; ஆயின், குமுறும் உள்ளத்தான், குறை காணும் எண்ணத்தான், குலவி இருக்கின்றான்; ஓர் நாள் குத்திக் குடலெடுக்கத் துடிக்கின்றான்! அறிந்ததை அறைந்தேன்; ஆசீர்வாதம், வாழ்க! - என்று பெரியவர்கள் சில பேர்கள் பேசினார், இல்லம் கண்டு. கட்டி முடித்திட்ட களிப்பதனில் மூழ்கியவர், கலகமூட்டும் பேச்சுக்குக் காதும் கொடுக்கவில்லை; கல்லெல்லாம் கதை சொல்லும், இல்லம் இஃதன்றோ! மண்ணதனில் சிந்தியது மழை நீரோ? இல்லை, இல்லை! செந்நீரும் கண்ணீரும்

கொட்டியன்றோ, செம்மை கண்டோம். இந்த இல்லத்தில், அன்பு அரசோச்சும், அறிவு ஒளி அளிக்கும்; அறம் வழி காட்ட, ஆற்றல் நடைபோட, அனைவரும் நாம், இலட்சியம் அடைந்திடும் முறை வகுக்க, பாசறையாக அமைந்தது காண் நமது இல்லம்; அனைவருக்கும் இது இல்லம் - அனைவரும் அமைத்த இல்லம் - அவர்க்கு எது இவர்க்கு எது என்று அளவு காணும் முறைக்கு இங்கு அணுவளவும் வேலை இல்லை. இகல் வெல்லவேண்டுமெனில், நம் இதயங்கள் ஒன்றாகி, வெவ்வேறு உருவங்கள், எண்ணமோ ஒன்றேதான் என்று எவரும் எண்ணிப் போற்றிட, வாழ்ந்திடுவோம். இல்லம் அமைத்ததுவும், இருந்து மகிழ்ந்திடவா? இல்லை! இல்லை! மன்றமாக்கி, இம்மனையில் நாம் இருந்து, கொண்ட நம் குறிக்கோள் தனக்காக,

தொடர்ந்து பணியாற்ற, தக்கமுறை, வழி பலவும், கண்டறிய, திட்டமிட! இந்த எண்ணம் நம்மை ஆட்கொண்டதென்றால், இடத்தில் இடம் காண, எண்ணுவரோ, எவரேனும்! கேணித் தண்ணிர் இறைத்து, கீழ் உள்ள கற்களை எடுத்துப் பங்குபோட, கருதுபவர், கசடரன்றோ! நாமென்ன இந்த விவரமெல்லாம் அறியாமல், வீண்வாதம், மனபேதம், கொண்டிடக் கடையவரோ? நம்மில் சில பேர்கள் கூடம் இருந்திடுவர், அவ்வேளை, திண்ணையே நமக்குக் கூடமாய், அமையாதோ! தோட்டத்து வேலைதனைத் துரைசாமி கவனித்தால், கூட்டி மெழுகிட குப்பன் முன்வாரானோ? கூட்டி மெழுகிடும் குப்பன், மற்றோர் நாள், கூடத்தில் இருக்கையிலே ஓய்வாகச் சாய்ந்துகொண்டு, ஒரு முழுங்கு தண்ணீர் பருகிடத் தருவாய் என்று அண்ணலை அழைத்திட்டால், கேணி

வேலை வேணி பார்ப்பாள், என் வேலை அஃதல்ல என்றா கூறிடுவான். நாமெல்லாம் ஓர் குடும்பம் - நமது இல்லம் இக்கூடம் - இங்கு, நான் மேல், நீ அல்ல என் பேச்சுக்கே இடமில்லை என்றெல்லாம் எண்ணி அவர் இதயம் களித்திருந்தார்.

ஏதேதோ திட்டமிட்டோம், எப்பலனும் கிட்டவில்லை. சிண்டு முடிந்துவிட்டோம், சிக்கறுத்துக்கொள்கின்றார். கலகம் மூட்டுகிறோம், கைகொட்டிச் சிரிக்கின்றார். கண்காட்டி அழைக்கின்றோம், கைவீசிப் போகின்றார். ஏதேது இந்த இல்லத்தார், ஏற்றம் மேல் ஏற்றம் பெற்று, எடுத்த காரியம் முடித்து, இன்பத் திராவிடம் அமைத்து, எளியோர் எனினும் வலியோர் பெற்றிடா வெற்றிதனையும், கூடிப்பணியாற்றி, கொள்கை காத்து நின்றால், பெற்றிடுவார் என்ற பேருண்மைதனை நிலைநாட்டி விடுவார்

போலும் எங்ஙனம் சுண்டிடுவோம். இவர் வெற்றி பெறுவதனை! என்னாகும் நமது முன்னைய பேச்செல்லாம்! மண்ணாகிப் போச்சுது பார், மற்றவர் பேச்செல்லாம். கண்ணீர்த் துளிகளன்றோ, காரியத்தை முடித்து விட்டார், என்றெல்லாமன்றோ ஏசுவர்; மற்றவர்கள். நாம் இதற்கு என் செய்வோம், அணிவகுப்புதனைப் பிளக்க ஆயிரத்தெட்டும் செய்தோம்; அத்தனையும் ஆடிக் காற்றிடைப்பட்ட பஞ்சாகிப் பறந்தனவே! பேதம் வருமென்று, பேராவல் கொண்டிருந்தோம் - அண்ணன் தம்பி என்று அவர் குலவுகின்றார்! ஐயய்யோ! ஆபத்து! நாம் அழிந்திடுவோம், இது வளர்ந்தால், என்ன விலை கொடுத்தேனும், எப்பாடுபட்டேனும், சின்னத்தனமான செயலெல்லாம் செய்தேனும், பொன்னைத்தான் இழந்தேனும், கண்ணே! மணியே! என்று கனிவு பேசிப்

பார்த்தேனும், உடைத்தாகவேண்டும் இந்த உள்ள உறவுதனை; பிளந்தாக வேண்டும் இந்தப் பெரும் படையை; அணிவகுப்பை என்று எழுந்தனர், மனம் பொறாத மாற்றார்கள் - கன்னிப் பெண், கண்ணுக்கு மையிட்டு, கார்க் கூந்தல்தன்னிலே மணமல்லிதனைச் சூடி, சின்ன இடை துவள, அன்ன நடை நடந்து, மணப்பந்தல் போகுமுன்னம், மணவாளன் காணுமுன்னம், கண்ணாடி முன் நின்று, கோலம் திருத்த எண்ணிச் சென்றிடும் வேளையிலே, கண்ணாடி அதன்மீது, கல்வீசி ஒரு சிறுவன், உடைத்திட்ட பான்மைபோல, மாற்றாரின் திட்டம், மனையில் கலாம் விளைத்து மகிழ்ச்சிதனைக் குலைத்து, உறவு முறித்து, ஓர் ஊனம் ஏற்படச் செய்துவிட்டது, சென்ற திங்கள் ஒன்பதாம் நாள் - அந்நாள் துந்துபி முழக்கினர் மாற்றார், துடியாய்த் துடித்தனர், இல்லம் கண்டோர் - இன்பத்

திராவிடம் காணப் பாசறை அமைத்தோர் - திராவிட முன்னேற்றக் கழகத்தினர் - நீயும் நானும் - நமது உடன் பிறப்பாளர்களாகிவிட்ட இலட்சக்கணக்கான திராவிடரும்.

ஆனால், தம்பி! மாற்றார் திட்டமிட்ட அளவுக்கோ, விரும்பிய வகையிலேயோ, நமது கழகத்துக்கு ஊறு நேரிட்டு விடவில்லை என்பது இந்த ஒரு திங்களிலேயே தெள்ளத் தெளியத் தெரிந்துவிட்டது. ஏற்பட்ட ஊனம், நமக்கு அதிர்ச்சி தரத்தக்கதாகத் தெரிவதற்குக் காரணம், அதன் அளவு அல்ல; நமது குடும்பம் அத்துணை பாசத்தால் கட்டுண்டு இருப்பதால், இதிலே சிறு பேதம், கீறல், வெடிப்பு, பிளவு, ஏற்பட்டாலும் நம்மால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. நாம் படும் வேதனையைக் காணும் அரசியல் வட்டாரத்தினர் பலரும் வியப்படைகின்றனர். இதென்ன இப்படிக் கலங்குகிறார்களே! ஒரு

கட்சி என்றால், சிலர் விலகுவதும், வேறு சிலர் புகுவதும், சாதாரண நிகழ்ச்சிதானே!! இதற்கும் பிறகு இருக்கத்தக்கது தானே, கட்சி என்ற பெயருக்கே பொருத்தமுள்ளதாகக் கருதப்படும் - என்று கூறுகின்றனர் - கேட்கின்றனர். எனக்கேகூட, அவர்கள் அப்படிக் கேட்கும்போது வெட்கமாகக்கூட இருக்கிறது. இருப்பினும் என் இதயம்தான், நீ அறிவாயே தம்பி! எவர் நம்மை விட்டுப் பிரியினும், என்னால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. இது தெரிந்துதான், அண்ணா! சிலர், உன்னை மிரட்டுகிறார்கள்? என்றுகூடத் தம்பியரில் சிலர் கூறுகின்றனர்.

தம்பி! சின்னாட்களுக்கு முன்பு நடைபெற்ற கூட்ட மொன்றில், ஆர்வம் கொந்தளிக்கும் நிலையில் பேசிய தம்பி ஒருவர், சொன்னார், “அண்ணா! ஆயாசப்படாதீர்கள்! சிலர்

உம்மைவிட்டுப் பிரிந்தனர்; நானும்தான் வருந்துகிறேன்; ஆனாலும் என்ன? நாங்கள் இருக்கிறோம் அணி அணியாக, உம்மை அண்ணாவாக ஏற்றுக்கொண்டவர்கள். அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள்; கழகத்தின் ஆணைப்படி நடப்பவர்கள், தம்பிமார்கள் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள், அண்ணா! கவலைப்படாதீர்கள்!'' என்று பேசினார். இனிய இசையாக இருந்தது அந்தப் பேச்சு - ஆனால் ஒரு கணம்தான் - மீண்டும் அந்தப் பழைய நினைப்பு - பழைய கவலை! நான் பேசும்போது சொன்னேன்:"எட்டுக் குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய், திருவிழா காணச் சென்றபோது, ஒரு குழந்தை காணாமற் போய்விட்டால், பரவாயில்லை. எட்டில் ஒன்று போனால் என்ன. ஏழு இருக்கிறதே, என்றெண்ணியா திருப்தி அடைகிறாள்? இல்லையே! ஏழு

பிள்ளைகளையும், திக்காலொருவராக அனுப்பி, காணாமற்போன பிள்ளையைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி அல்லவா அனுப்புவாள்! அதுபோல, என்னுடன் எண்ணற்றவர்கள் உள்ளனர். ஆயினும், அதனால் பிரிந்தவர்கள்பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்க முடிகிறதா? எட்டுப் பிள்ளைகளைப் பெற்ற தாய், காணாமற்போன பிள்ளையைக் கண்டுபிடித்துக் கொண்டு வரும்படி, மற்ற ஏழு பிள்ளைகளைக் கேட்டுக்கொண்டது போலத்தான், என்னுடன் இருக்கும் தம்பிமார்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் - விலகிய, வழி தவறிய அந்தத் தம்பிகளையும் தேடிக் கண்டுபிடித்துத் திருத்தித் திரும்ப அழைத்துக்கொண்டு வாருங்கள்!'' என்று.

தம்பி! நான் சொன்னது கவைக்காக அல்ல - என் மனம் அப்படி.

விலகியவர்களிடம், பாசம் குறையாமல் இருப்பதற்கு, வேறோர் காரணமும் இருக்கிறது - அவசியம் கூடத்தான் இருக்கிறது.

நாம் ஈடுபட்டிருப்பது, தாயக விடுதலைக்கான அரும் பணியில். இதற்கான ஆற்றல் அளித்திடவல்ல எவரையும் நான் இழந்துவிட விரும்பலாமா? வாட்போர் புரியும் வீரன், குத்தீட்டியையும் கூடத்தானே வைத்திருக்கிறான். அஃதே போலத்தான், நாட்டு விடுதலை எனும் நற்பணிக்காக, அனைவரும் தேவைப்படுகிறார்கள். இதிலே இழப்பின் அளவும், தரமும் அல்ல, இழப்பு என்பதே இதயத்துக்கு அதிர்ச்சி தரத் தக்கதுதான். கிடைக்கும் வாய்ப்பினை எல்லாம் ஒன்று திரட்டி, களம் செல்லவேண்டிய வேளையில், களத்தில் பயிற்சி பெற்றவர்கள், அதைவிட்டு விலகுவது என்றால், மனதுக்குச் சங்கடமாகத்தானே இருக்கும்?

தலைவிரி கோலமாக ஓடி வருகிறாள் ஓர் மூதாட்டி - வாழ்ந்தவள் இன்று வதைபடுகிறாள் என்பது பார்க்கும்போதே புரிகிறது. இரத்தம் சொட்டும் வாயுடன் ஓநாய் அவளைத் துரத்திக்கொண்டு வருகிறது. அலறுகிறாள் அம்மூதாட்டி, அந்தக் கதறல் கேட்டு, வேறோர் புறமிருந்து ஓடோடி வருகிறான் ஓர் வீரன் - கையில் வேல்கொண்டு! அவனை நோக்கி ஓடுகிறாள் அந்த அபலை. தன்னைத் துரத்தும் ஓநாயைத் திரும்பிப் பார்க்கிறாள் - திகில் கொள்கிறாள் - ஆனால் எதிர்ப்புறம் பார்க்கிறாள், வேல் உடையோன் வருகிறான் - அப்பா! காப்பாற்று! என்று கூறியபடி கீழே விழ்கிறாள். ஓநாயைக் கொன்று மூதாட்டியைக் காப்பாற்ற வேலாயுதத்தைப் பயன் படுத்தவேண்டியவன், வழியில் உள்ள காட்டாற்றினிலே துள்ளிடும் வாளைமீது அந்த வேலினை வீசிடக் கண்டால், தம்பி!

மூதாட்டியைத் தள்ளிவிடு, ஓநாயேகூட அல்லவா, இப்படி ஒரு மனமா? என்றெண்ணித் திகைத்துவிடும்!!

அதுபோலல்லவா செய்துவிட்டனர்!

எந்த இடத்திலே உறுதியை எதிர்பார்த்தேனோ, அங்கு அல்லவா, ஏற்பட்டுவிட்டது, மனத்தளர்ச்சி!

என் சங்கடத்துக்குக் காரணம் அதுவன்றோ!

ஒன்று சொல்வேன் தம்பி! எனக்கென்னமோ, பேசத் தெரிந்தவர்களெல்லாம், திரு இடத்தைப்பற்றியே பேசவேண்டும்; எழுதத் தெரிந்தவர்களெல்லாம் இன்பத் திராவிடத்தைப்பற்றியே எழுதவேண்டும்; ஆற்றல் உள்ளவர்கள் அனைவரும் தமது ஆற்றலை, இந்த அருமைத் திராவிடம்

விடுதலைபெறப் பயன்படுத்தவேண்டும் என்று தோன்றுகிறது. காணும் செங்கரும்பு அவ்வளவும் நமது குழந்தைக்கு வேண்டும் என்று எண்ணுவது போன்ற பேதை நெஞ்சம்; என் செய்வது!

எனினும், என் மனநிலை அறிந்து பலர், முன்னிலும் அதிக மும்முரமாகப் பணியாற்றி, என் மனச்சோர்வினைப் போக்கி வருகின்றனர். அஞ்சற்க என்றும், கழகப்பணிக்கு ஆவன செய்வோம் என்றும், களிப்பூட்டும் முறையில் எழுதுகின்றனர்.

விலகியோர், நம்மைவிட்டும் கழகத்தைவிட்டும் விலகினா ரில்லை. ஆண்டு பலவாக அரும்பாடுபட்டு நாம் கட்டிக் காத்து வரும் கொள்கையை விட்டுமன்றோ விலகிச் சென்று விட்டனர். இனி, அவர்தம் போக்கு, நம் மாற்றார்க்கு நிலாச் சோறு! நாம் அது குறித்துக் கவலையற்றுப் பணியாற்றிச் செல்வதே முறை

என்று கூறுகின்றார்.

திராவிட நாடு பகற்கனவு என்றும், பிரிந்துபோக வேண்டியதில்லை என்றும், பிரியும் உரிமை மட்டும் சட்டப்படி கேட்டுப் பெற்றுக்கொண்டால் போதுமென்றும், வடநாட்டுடன் ஒட்டி வாழலாம், உறவு கொண்டாடலாமென்றும், வடநாடு கண்டு அச்சம் ஏன் கொள்ளவேண்டும், வடநாடு நரகலோகமு மல்ல, வடவர் யமகிங்கரருமல்லவென்றும், இத்துணை வேகமாக அவர்தம் இந்தியபக்தி முற்றிவருகிற நிலை காணும்போது, இனி ஒரு புதிய சட்டமே செய்து, நாட்டுப் பிரிவினை கேட்போரைக் கடுஞ்சிறையில் தள்ளவேண்டும், அப்போதுதான் இந்திய ஒற்றுமை நிலைக்கும் என்று நேரு பண்டிதருக்கே யோசனை கூறக்கூடும் என்றன்றோ தோன்றுகிறது.

தம்பி! இதனைக் கவனித்தாயா?

திராவிட நாடு கூடாது என்பதற்கு இந்திய பக்தியை இன்று பெற்றுவிட்டவர்கள், புதிய காரணம் எதுவும் கூறினாரில்லை. கூறாததுடன், ஏற்கனவே நேரு போன்றார் காட்டிய காரணங்கள் தமது மனதைப் பெரிதும் கவர்ந்து, தம்மை இந்நிலைக்குக் கொண்டுவந்தது என்றும் கூறாமல், நேரு பண்டிதரின் பேச்சைக் கேட்க மறுத்தவர்களும், இன்று தனது பேச்சைக் கேட்பர், திருந்துவர், ஒப்புதல் அளிப்பர் என்று எண்ணுகின்றனர். எத்துணைத் துணிவு இருத்தல் வேண்டும், அப்படி எண்ணிட!

"நான்'' சொல்கிறேன் கேளுங்கள்! - என்று கூறும்போது, அந்த"நான்' என்பதற்குப் பொருள் யாது கொள்வதோ? நான், நேருவினும் பெரிய நிலைபெற்றோன்; நேருவுக்கு காட்ட இயலாத காரணம் காட்டவல்லோன்; நேருவுக்கு இல்லை

உமது மனம் மாற்றும் ஆற்றல், நான் கொண்டுள்ளேன் என்று பொருளோ - செச்சே! இப்போது அப்படிச் சொல்ல மாட்டார்கள் - நவ இந்தியாவும் - சக்தியும் விளக்கை அணைத்து விடுவார்களே! இருட்டிலா உழல்வது!

நான் என்று தம்மை நேருவினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது, மேலோன் என்பதற்காக அன்று; உங்கள் இனத்தவன் என்ற உரிமையால், நான் கூறுகிறேன் என்பதாகும். - நேரு பெரியவர், பேரறிவாளர்; எனினும் வேறு இனத்தவர்! எனவேதான், அவர் பேச்சே ஏற்க மறுத்துவந்தீர்! இப்போதோ, சொல்வது நான்! சொந்த இனத்தான்! அந்நியன் அல்ல! எனவே நான் சொல்வது கேண்மின் என்ற பொருள்கொள்வது என்றால், அப்போது, ஒரு அடிப்படை உண்மையை, நாட்டுக்கும் உலகுக்கும் அறிவிக்கவேண்டும். திராவிட நாடு பகற்கனவு என இவர்களும்

பேசுகின்றனர்; நேருவும் பேசுகிறார்; எனினும் இவர்கள் இனம் வேறு - நேரு இனம் வேறு.

இந்த உண்மையைக் கூறும் துணிவாவது ஏற்படவேண்டும்; அல்லது இந்தியா, இந்தியன் என்ற உணர்வுதான் உண்மை யானது, தேவையானது, கொள்ளவேண்டியது என்று கூறும் நாணயமாவது இருக்கவேண்டும்; இரண்டும் இன்றி, நான் கூறுகிறேன் திராவிட நாடு வேண்டாமென்று, என் பேச்சைக் கேளுங்கள்; நேரு இதனைச் சொன்னபோது ஏற்க மறுத்தீர்கள் - மறுத்தோம். தவறில்லை, ஏனெனில் நேரு எவ்வளவு பெரியவ ராயினும் நம்மவர் அல்ல, திராவிடர் அல்ல! நானோ திராவிடன்! எனவே, என் சொல் கேண்மின்!! என்று கூறுவது வெறும் கேலிக் கூத்தாகும்.

”ஐயன் அழைக்கின்றார்! அகிலம் அறிந்துள்ள ஆற்றல் மிக்கோன் அழைக்கின்றார்! மேதினி கொண்டுள்ள

மெய் யெல்லாம் உணர்ந்தவர்காண்! வரலாறு பலவும் கற்றறிந்த பேரறிவாளர்! அவர் காணா நாடில்லை! அவர் உரை கேளா மாந்தரில்லை! அவர் அழைக்கின்றார்! திராவிடம் தனி நாடு என்றெல்லாம் பேசுகிறீர்! பித்துப் பிள்ளைகள்போல் பேதம் பேசலாமோ என்று மெத்த வருத்தப்பட்டு, மேலோன் கேட்கின்றார். உலகமே ஓர் அரசாய் ஆகிவரும் நாட்கள் இவை. இந்நாளில் என் நாடு, என்னுடைய மொழி என்று இயம்பிடுதல் ஆகாது, அறிவீனம் என்கின்றார். அவர் அறியாதனவற்றை எவர் அறிவார், கூறுங்கள். ஐயன் அழைக்கின்றார், வந்திடுவீர், சொந்தமுடன். விந்தியமும் இமயமும் விளங்கி நிற்பதுவும், காவிரியும் கங்கையும் கரைபுரண்டு ஓடுவதும், பாரதம் எனும் இந்த மணித்திரு நாடதனில்! இந்த உண்மையினை ஏற்றிடுவீர், வாழ்ந்திடுவீர்! சொந்த நாடு ஒன்று உண்டென்று பேசி நீவிர்

தொல்லை வளர்க்காதீர்'' என்றெல்லாம் பேசி அழைத்தனரே காங்கிரசார், அப்போதெல்லாம் தோன்றா மனமாற்றம் இப்போது அரும்பும், மலரும் என்று எதனாலே எண்ணுகிறார்?

எடுத்துரைக்கத் தெரியாமல், ஏமாந்தனரோ காங்கிரசார்!

இவர் எடுத்துக் கூறும் வகையால் எவர் மனமும் மாறிடுமோ! என்னே பெருந்துணிவு! ஏன் கொண்டார் இப்போக்கு!

"இல்லையாமே, அண்ணா! இவர் கேட்பது தமிழ் நாடாம்; இன்றுள்ள நிலைமையிலே அதுதான் ஏற்புடைத்தாம். அது பெறவே முயலுவது அறிவுடைமை ஆகுமாம்.'' என்று கேட்டிடுவாய்; என் தம்பி! இதனைக் கேள்! நீ கூறும் முறையில் அல்ல நமைவிட்டுப் பிரிந்தார்கள் பேசுவது, பிரிவினை தேவை யில்லை - பிரியும் உரிமை மட்டும்

பெறுவோம் என்று பேசுகின்றார்; முன்பகுதி கேட்டு, காங்கிரஸ் ஏடுகள் இடம் தரட்டும்; பின்பகுதி காட்டி, பெற்றிடுவோம் ஒரு கூட்டம் என்றன்றோ கொண்டுள்ளார்; புத்தம் புதுப்போக்கு.

தம்பி! தமிழ் நாடு மட்டும் போதும்; அதுமட்டுமாகிலும் பிரிந்து தனி நாடு ஆகிவிடட்டும் என்ற கொள்கையினை, ஆதித்தனார் அளிக்கும் அறிவுரையால் கொள்கின்றார் என்றே வைத்துக்கொள்வோம், வாத முறைக்காக. என்ன பலன் அதனால்? எவ்வகையில் உதவி செய்யும்?

திராவிட நாடு கேட்டால் மட்டும், வடவர் சீறுவர்; தமிழ் நாடு கேட்டால், வாரி வழங்குவரோ? "கேள் கொடுக்கப்படும், தமிழ் நாடு திராவிட நாடு அல்ல' என்று நேரு பெருமகனார் செப்பினரோ, என்றேனும் அவருக்கு ஒரே நோக்கம் - பாரதம் ஒன்று

என்பதே அவர் திட்டம். இந்நிலையில், திராவிட நாடு என்ற திட்டத்தைத் தமிழ்நாடு என்று மாற்றிக் கொள்வதனால் வந்திடும் வசதி என்ன? காரியம் எளிதாகும் என்பரேல் காட்டட்டும் காரணம்!!

இதனைத்தான் எழுதிக் கேட்கின்றார் ஏற்காடுதனில் இருந்து, தன்மான இயக்கம் கண்ட நாள் முதலாய் நம்மோடு இருந்துவரும் தகைமையாளர் - திருவொற்றியூர் சண்முகனார்.

மற்றொன்றும் கேட்கின்றார் நம் நண்பர்.

திராவிட நாடு கேட்கும்போது கொதித்து எழும் காங்கிரசார், தமிழ் நாடு என்று அளவைக் குறைத்துக்கொள்ளும் போது, மகிழ்ச்சி கொள்கின்றனரோ? அங்ஙனமாயின், தமிழ் நாடு தனி நாடு ஆவதற்குக் காங்கிரசார் இசைவரோ?

இசைவதாயின், பெறலாமே! பெற்று, காமராஜரே முதலமைச்ச ராக வீற்றிருக்கலாமே! - என்று கூறுகின்றார். உண்மைதான் தம்பி! காங்கிரசார் என்னமோ, திராவிடநாடுதான் எட்டி, தமிழ் நாடு இனிப்பு என்று எண்ணுவதுபோலவும், ஆகவே, தமிழ் நாடு என்று நாம் திட்டத்தை மாற்றிக்கொண்டால், வெற்றி நிச்சயம் என்று கொள்வது போலவும் அன்றோ பேசுகின்றார்.

ஆனால் உண்மை என்னவென்றால், இன்று திராவிட நாடு கோரிக்கை வலிவுபெற்று வருகிறது; இந்திய துணைக் கண்டத்துக்கு இது ஒரு பெரிய தலைவலியாகிப் போய்விட்டது; வெளிநாடுகளிலெல்லாம் "திராவிட நாடு' கிளர்ச்சிபற்றியும் எழுச்சிபற்றியும் வெகுவாகப் பரவிவிட்டது; எனவே, முதலில் அதனை உடைத்துவிடவேண்டும்; அதற்கு

ஒரு ஊனம் ஏற்படுத்த, ஒரே அடியாக, ஏக இந்தியா - பாரதம் என்று பேசுவதுமட்டும் போதாது - திராவிடம் என்ற எண்ணம் கொண்டோர்களிடத் திலேயே, ஒரு பேதத்தை, பிளவை மூட்டிவிட்டு, திராவிடம் வேண்டாம். தமிழகம் போதும் என்று பேசவைத்து, அவ்விதம் பேசும்போதும் தமிழகத்தின் தொன்மை, தனித் தன்மை, வடவரிடம் சிக்கியதால் வந்த சீரழிவு என்பன குறித்து அதிகம் பேசாமல், அந்தச் சீரழிவுக்குக் காரணமாக உள்ள டில்லி அரசின் போக்கைத் தாக்காமல், திராவிடம் என்று பேசுவோரைத் தாக்கியும் திராவிட நாடு எனும் திட்டத்தைக் கண்டித்தும், அந்தத் திட்டத்துக்குப் பேராதரவு பெற்றளித்த திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து ஏசியும், பூசலைக் கிளப்பியும், பகை கக்கியும், படிப்படியாகப் பிரிவினைக் கொள்கையையே அழித்து ஒழிப்பது

என்பது, அவர்கள் திட்டம்! எனவேதான், தம்பி! திராவிடம் பகற்கனவு; திராவிட முன்னேற்றக் கழகம் கேவலமானவர்களின் கூடாரம்; சுயநலமிகள் கொட்டமடிக்கும் இடம்; அறிவிலிகளின் அரங்கம் என்ற இத்தகைய பேச்சுக்களுக்கு, காங்கிரஸ் ஏடுகள், இத்தனை முன்னிடம் கொடுத்து உசுப்பி விடுகின்றன. இது பழைய வித்தைதான்; இதிலே பழக்கமும் பயிற்சியும் அதிகம் இருப்பதால், அதனை மும்முரமாகச் செய்து வருகின்றனர், புதிய கட்சியினர்.”இவ்வளவு எமது அறிவாற்றலைப் பாராட்டுகிறீர்களே, எமக்கு ஆதரவு காட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்குகிறீர்களே; நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றியும் திராவிட நாடு கூடாது என்பதுபற்றியும் பேசுவதைச் சிந்தாமல் சிதைக்காமல் மெருகும் மிகக் கொடுத்து வெளியிடுகின்றீர்களே!

அங்ஙனமாயின், ஐயன்மீர், தமிழ் நாடு தமிழர்க்கு எனும் திட்டத்துக்கு ஆதரவு காட்டுவீரோ?'' என்று கேட்பரேல், அந்த இதழினர், இடிஇடியெனச் சிரித்து, "என்ன மதியீனம்! எத்துணை ஏமாளி எண்ணம்! உமது பேச்சை எல்லாம் வெளியிட்டோம். எதற்காக? உமதுநிலை உயர்வானது என்பதற்கா? ஐய்யே இதனையுமா, அறைந்திடவேண்டும். நாடுகள் ஓங்கி வளர்ந்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகமதை உருக்குலைத்து உடைத்துவிட, உம்மைக் கருவியெனக்கொண்டோம்; வேறென்ன? அவர் கேட்கும் திராவிடத்தை உடனிருந்து ஆதரித்த உம்மை உசுப்பிவிட்டு, அதனையே தாக்கிக் களிப்புப் பெற்றோம். எந்தத் திருவாயால் ஏசினீரோ நேருதனை, அதே வாயிலிருந்து, அண்ணாவாம் துரையாம்! யார் இந்த அறிஞன்! எவன் தந்தான் இப்பட்டம்! எனக்கும் இவனுக்கும் உள்ள

ஒட்டென்ன உறவென்ன! - என்று முத்துகள் உதிர்ந்தனவே, அவைதாம் எமக்குத் தேவை, அவைதமை எடுத்தெடுத்து அழகாய்த் தொடுத்து, அனைவருக்கும் அளித்திட்டோம். அத்தோடு தீர்ந்ததய்யா, எமக்கு இருந்த அரிப்பெல்லாம். அவ்வளவே! அறிந்திடுக! திராவிடம் தீது என்று தித்திக்கத் தித்திக்கப் பேசினீர், சுவைத்திட்டோம், அதுகண்டு நீர், புதுச்சரக்கு இதுகொள்க என்று! தமிழ் நாடு பிரிவினை என்று பேசுகின்றீர் - பேரறிவோ? திராவிடம் வேண்டாமென்று சொல்லுவதற்கு உள்ள எல்லாக் காரணமும், நீர் கேட்கும்"தமிழ் நாடு தனி நாடு' என்பதற்கும்தான் பொருந்தும். திராவிட நாடு பகற்கனவு என்றீர் - உமது "தமிழ் நாடும்' அஃதேதான்!! ஏனோ இதனை நீவிர் அறிந்திடாது இருக்கின்றீர். விட்டிடுவீர் வீண் வேலை! விலைபோட்டுக்கூட வாங்கவேண்டாம்?

கதராடை. புத்தம் புதிய ஆடை தருகின்றோம். புறப்படுவீர். பொன் அவிர் மேனியான், இந்தப் புவிக்குள்ள தலைவர்களுள், மாணிக்கம் போன்ற மதிப்புடையான், மாமேதை நேருவிடம் மண்டியிட்டுச் சேவை செய்ய!!'' - என்றல்லவோ கூறுவார்கள். இஃது அவர்களை இன்று பயன்படுத்திக் கொள்பவர்களுக்கும் மிக நன்றாகத் தெரியுமே! ஊரறிந்த இரகசியமல்லவோ இது!

தம்பி! நினைவிலிருக்கிறதா, சில ஆண்டுகளுக்கு முன்பு, ம. பொ. சி. அவர்கள், திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு நடத்தி வந்த காதை! ஊரூருக்கும்!! நாட்டுப் பிரிவினையை எதிர்க்க, தடுக்க, ஏக இந்தியா எனும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் காங்கிரசுக்கு இல்லாத பலமும் வசதியும், ம. பொ. சி. அவர் களுக்கு உண்டா? இல்லை! என்றாலும்,

அவர் கிளம்பினார். கண்டோமே திராவிடம் என்ற சொல்லாராய்ச்சியிலிருந்து தொடங்கி, கழகத் தோழர்களுக்கு - விலகியவர்களும் இங்கு இருந்தபோதுதான்! "விசில் அடிச்சான் குஞ்சுகள்' என்ற விநோதப் பட்டம் சூட்டும்வரையில் பேசினார். ஏன் செய்தார் அந்த எதிர்ப்பு? தார்கொண்டு இந்தி எழுத்துக்களை அழித்தபோது மண்ணெண்ணெய் ஊற்றி, தாரைக் கழுவிடத் தமது கழகத்தோரை அனுப்பிவைத்தார். வடநாட்டுக் கடைகள் முன் பெரியாரின் தொண்டர்கள் மறியல் செய்தபோது, இவரது கழகத் தொண்டர்கள் எதிர்மறியல் நடத்தினர். இவைகளுக்கு, இன்று விலகியோர் பெறுகின்ற அளவிலும் வகையிலும், விளம்பரம், காங்கிரஸ் ஏடுகளில் வெளிவந்தன, அறிவாயல்லவா? ம. பொ. சி. யின் தேசபக்தி, இலக்கிய

மேதாவித்தனம் ஆகியவைகளைப் பாராட்டினர், காங்கிரஸ் தலைவர்கள். அவருடைய அறிவுரை கேட்டாகிலும் திராவிட மாயையிலிருந்து விடுபடுங்கள் என்று கூறினர். அவர் நடத்திய மாநாடுகளில், காங்கிரஸ் தலைவர்கள் கலந்துகொண்டனர். காமராஜரே, சென்னையில் ஒரு மாநாட்டிலே, நடுநாயகமாக அமர்ந்திருந்தார். இதெல்லாம், ம. பொ. சி.க்கு அவர்கள் காட்டிய மதிப்பு, ம. பொ. சி. அவர்களின் பேரறிவை அவர்கள் போற்றுவதற்கான சான்று என்றா கொள்வர்? ஏவிவிட, தக்க சமயம், பயன்படுத்திக் கொள்வோம் என்பதன்றி வேறென்ன!

சில நாட்களுக்கு முன்பு, அமைச்சர் பக்தவத்சலம், தூக்கி எறிந்தாரே, இதே, ம. பொ. சி. அவர்களை. “நாங்கள் ஒன்றும் இவருடைய கிளர்ச்சி கண்டு நடுநடுங்கி, தமிழ்நாடு என்று பெயர் மாற்றிடவில்லை;

நாங்கள் ஏற்கனவே முடிவு செய்திருந்தோம்; அவருக்கே அது தெரியும்; அதன்படியே நாங்கள் நடந்து கொண்டோம்'' என்று மதிப்பளிக்க மறுத்தாரே! நானல்லவா, மாநகராட்சி நடத்திய விழாவொன்றில், ம. பொ. சி.யைப் பாராட்டி, நன்றி கூறினேன். நண்பருக்கு இப்போது, என் பாராட்டுதல் தேவைப்படாமல் இருக்கக்கூடும்; ஒரே இடத்திலிருந்து பாராட்டுரைகள் கிடைப்பதைவிட, புதுப்புது இடமிருந்து வருவது சுவையாகத்தான் இருக்கும். அதற்கல்ல, நான் கூறுவது. திராவிட இயக்க எதிர்ப்பு நடத்துவோர் எவராயினும், அவருக்கு ஆதரவு அளித்து, தூக்கிவிட்டு வேலை வாங்குவது, காங்கிரசுக்கு நீண்ட நாள் பழக்கம் என்பதை விளக்கத்தான். அந்த முறைப்படி இப்போது"விலகினோர்க்கு' வீரகண்டாமணி கிடைக்கிறது. வேறென்ன!

இதைப் பெறுவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தை இவர்கள் கண்டித்துத் தீரவேண்டும், வேறென்ன செய்கிறார்கள். தமிழ்நாடுதான் பெறவேண்டும் என்பதற்கா தமது பேச்சில் முதலிடம் கொடுக்கிறார்? கொடுப்பதாயின், தமிழ் நாடு தனி நாடாக இல்லாதிருக்கும் தன்மை, அதனால் ஏற்படும் இழிவுகள், இன்னல்கள், சுரண்டல், அந்தச் சுரண்டலால் வடநாடு கொழுத்து வரும் பயங்கரமான உண்மை, இவைபற்றி அல்லவா பேச்சு, விறுவிறுப்பாக, வீரம் கொப்பளிப்பதாக அமையும்! எங்கிருந்து வரப்போகிறது அந்த எண்ணம்! அதுதான் சொல்லிவிட்டார்களே,

வடநாடு நரகமுமல்ல. வடநாட்டுக்காரர் யமகிங்கரருமல்ல,

வடநாட்டோடு ஒட்டி வாழலாம்,

வடநாட்டு முதலாளியும் இங்கு வந்து

என்று. இது போதாதா, இவர்களைப் பொட்டிட்டு, ஆலத்தி எடுத்து, ஐஞ்சும் மூணும் அடுக்காய்க் கொடுத்து, பாராட்ட, போற்ற, வாழ்த்த! கசக்கிறதா அந்த ஏடுகளுக்கு. எந்த மாவீரன் வடநாட்டானிடம் சிக்கிக்கொண்டிருக்கிற வரையில், திராவிடன் தலைதூக்க முடியாது என்ற முழக்கமிட்டாரோ, அவரே முன்வந்து, அதே முழக்க மொழியில்,

வட நாட்டு முதலாளி இங்கு வந்து தொழில் நடத்தலாம்

என்று கூறுவதை, கொட்டை எழுத்தில் வெளியிட! குதூகலம் கொள்ள!! புண்ணிய க்ஷேத்திரங்களிலே உள்ள பண்டாக்கள், தம்மை நாடிவருவோர் எழுதிக்கொடுக்கும் நற்சான்றுகளைப் படித்துப்படித்து மகிழ்வதைப்போலல்லவா, அவர்கள்,

வடநாட்டு எதிர்ப்புணர்ச்சியை, வரிந்து கட்டிக்கொண்டு ஊட்டிவந்தவர், வாயார, மனமார, வாழ்க வடநாடு! என்று கூறும் முறையில் பேசுவது கேட்டு மகிழ்ந்து, தமது இதழ்களிலே வெளியிட்டு, அதனைத் திரும்பத்திரும்பப் படித்துப் பார்த்து, மகிழ்ச்சி கொள்வார்கள்.

பக்ரா - நங்கல் நிர்வாக ஊழல்.

சிந்திரி தொழிற்சாலையில் காணப்பட்ட சீரழிவு.

வெளிநாட்டுக் கடன் சுமை அதிகமாகி அழுத்துவது.

ஏற்றுமதி குறைந்து, இருப்புத் தேய்வது.

நோட்டுப் பெருக்கத்தால் பணவீக்கம் ஏற்பட் டிருப்பது.

மறைமுக வரிகளினால் ஏழை மக்கள் துயர்

அடைவது.

வருமானவரி ஏய்க்கும் வன்கணாளரை விட்டு வைக்கும் கொடுமை.

முந்திரா போன்றார் தரும் பணம் பெற்றுத் தேர்தல் நிதி குவிக்கும் கேவலத் தன்மை.

எல்லையில் இடம் பிடித்த சீனரிடம், ஏதும் செய்ய இயலாமல், நேரு திண்டாடித் திணறுவது.

கரடியாய்க் கத்தினாலும் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்காத கல்னெஞ்சப் போக்கு.

சேதுசமுத்திரத் திட்டமும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் இன்னமும் ஏட்டளவில் இருந்துவரும், உள்ளம் வாட்டிடும் நிலைமை.

ஒவ்வொரு துறையிலும் ஊழல் அடுக்கடுக்காய் இருப்பதனை, கணக்கு

ஆய்வாளர் காட்டி வரும் கொடுமைமிகு சீர்கேடு.

கொடுமைக்கு ஆளான இலங்கைத் தமிழரின் குரல் கேட்டு, உதவி புரிய முன்வராது, நேரு பெருமகனார் உள்ள போக்கு.

திட்டங்கள் அத்தனையும் வடக்கையே வளப்படுத்தும் போக்கு.

மூன்றாம் திட்டத்திலும் முகத்தில் கரிபூசப்பட்ட கேவலம்.

எதற்கு எடுத்தாலும் டில்லிக்கு எடுக்கும் காவடி, சிந்து.

இவைபோல் அடுக்கடுக்காய் எத்தனையோ, உண்டன்றோ! எடுத்தியம்பக் கேட்டீரோ இவைபற்றி எல்லாம்! இல்லை! ஏன் இல்லை? பேசுவரேல், கூசாமல் இன்று இடங்கொடுக்கும் ஏடுகளின் நேசம் முறிந்துவிடும்; இருட்டடிப்புப் பின் தொடரும்!!

எனவே, விலகியோர் இவைபற்றிய பேச்சைக் கட்டிவைத்து விட்டனர் மூட்டை! இப்போது இருப்பதெல்லாம் என்னை இழிவுசெய்யும் திருவாய் மொழி - அதற்கே இடம் உண்டு, அந்த இதழ்களிலெல்லாம். வேறு, சட்டத்திலே உள்ள சத்தற்ற நிலைமைகளை மெத்தச் சிரமப்பட்டுப் படித்துப் பொருள் அறிந்து, இத்தனை தொல்லை நமக்கு இருப்பதனால், தமிழ் நாடு தனியே இயங்க ஒரு தன்மான முயற்சி வேண்டும் என்று பேசத் தொடங்குவரேல், அவன் போனான் - இவர் வந்தார்; அடைத்திடு கதவை என்று அன்றே கட்டளை பிறக்கும்.

மாற்றார் மனம் மகிழ நடந்துதான் வாழ்ந்திட இயலும் என்ற நிலை பிறந்துவிட்டால், பெற்றுவிட்டால், இடையே நின்று ஒரு திருத்தம் பெறவும் இயலாது. மணல்மேடு ஏறிநின்றார். கால் இடறிப்போமானால், எங்கு வந்து வீழ்வார்?

எவரறியார் இந்த நிலை? எனவே, வேகமாய் இவர்கள் "இந்தியா' ஆகியே தீரவேண்டும்; வேறு வழியில்லை; வேறில்லை முறைகூட!

இவர்கள் இதுபோல்தான், இப்போதே என்று வடக்கே உள்ள சில ஏடுகள், வரைந்திருக்கக் கண்டேன். இங்கு தமிழரிடை, இப்போதே, இந்தியராகுங்கள் என்று இயம்பச் சிறிது கூச்சம் இருக்குமன்றோ! திராவிடர் வேண்டாமென்று, தமிழர் என்ற நிலைகொண்டு, மெள்ளமெள்ள இந்தியராதல் ஒன்றே இவர்க்கு இனி எதிர்காலம்.

வடக்கே வெளியாகும் டைம்ஸ் ஆப் இந்தியா இதழ் நிருபர் பேட்டி கண்டாராம் புதியவரை! பெற்றாராம் அவர் கருத்தை! வெளியிட்டிருக்கின்றார்; படித்தேன்! பதைபதைத்தேன்.

பொது உடைமையர் போன்றோ

சமதர்மவாதி போன்றோ; புரட்சிப் போக்கினர் அல்ல, நாங்கள்.

எந்த (சமதர்ம) தத்துவமும் பிடித்தலையும் போக்கில்லை, எனக்கு.

தமிழ் நாடு தனி நாடு ஆகவேண்டும் என்ற ஆர்வமும் எமக்கு இல்லை.

என்றுரைத்தாராம், புதிய கட்சியின் தலைவரவர், வெளிவந்து இரு கிழமை ஆகிறது; இதுவரையில், மறுப்பும் வரவில்லை என் சொல்ல! கைப்புண் காணக் கண்ணாடியா வேண்டும்? உள்ளம் இருப்பது, வடக்கே உள்ள இதழில் வந்தது; மெள்ள மெள்ள இங்கும் அதனை எடுத்துரைக்கப் போகின்றார்; உடன் இருப்போரில் ஏழெட்டுப் பேர்கள் இலட்சியம் போற்றிடுவோர்! எங்கே அவர் கோபம் எழுந்திடுமோ என்ற அச்சம். இல்லை யெனில், இப்போதே இயம்பிவிடுவார் ஜெய் இந்தும்!

முன்பே இதை உணர்ந்து மொழிந்தது "மெயில்' இதழும், திராவிடப் பிரிவினையை உதறினார்; தக்க செயல், என்றாலும், இஃதேனோ தமிழ் நாடு என்ற ஒரு தத்துவம் பேசுகிறார்; அதற்குப் பொருள் இல்லை; ஆகப்போவதுமில்லை; உடனடியாய் அனைத்தையும் உதறிட அஞ்சி, ஒரு பொருளற்ற திட்டத்தைக் காட்டுகிறார் தோழர்கட்கு; சின்னாட்கள் சென்றதும், இதனையும் போட்டிடுவார் மண்மீது'' - என்றெல்லாம். அதற்கும் மறுப்பு இல்லை. அச்சம்!

அறிவீர், ஐயன்மீர்! இந்தியா என்பது போலி, சூது, சூழ்ச்சி, ஒரு சுரண்டல் யந்திரம்; இதுவே என் கருத்து.

தமிழர், தனி இனம் - தாழ்ந்த நிலையினில் இன்றுளர் - அதற்குக் காரணம் வடவர்.

வடவர் வாழ்ந்திட வழி வகுத்ததுதான்,

இந்திய அரசியல் சட்டமென்னும் பொறி.

இதில் சிக்கி இருக்குமட்டும், தலைநிமிர்ந்து வாழ்ந்திடான் தமிழன் எனும் இனத்தான்.

அவன் மானம் அழிக்கின்றார், மொழியைப் பழிக்கின்றார்; வாழ்க்கை வழியை அடைக்கின்றார்!

வளமெல்லாம் வடக்கேதான்; வாட்டம்தான் தமிழர்க்கு; இந்தியா என்பதிலே இதுவும் ஓர் இடம் என்று இயம்புமட்டும், தன்மானமும் இல்லை, தழைத்திடப் போவதுமில்லை.

வடநாட்டு ஆதிக்கம் அழித்திடவே இருக்கின்றேன்; வந்திடுவீர் என்னோடு; தனி அரசு காண்பதற்கே!!

என்று இவ்விதமெல்லாம், எடுத்துரைக்க முன்வந்தால், ஏது ஏடுகளிலே இடம்!! எனவேதான், அவை இன்று, வெளியே,

காணோம். அம்மட்டோ, தம்பி! திராவிடம் என்றால் கசப்பு - ஆயின, வடநாடு எனின், இனிப்பேயன்றோ காண்கின்றனர்.

எனவே தம்பி! எனைவிட்டுப் பிரிந்தனரே, என்செய்வேன் என்று எந்தன் மனம் பட்டபாடு மிக அதிகம் என்றாலும், இவர் நமது இன்னுயிராம் இலட்சியத்தையே, மறந்து, "இந்தியர்' ஆகின்றார் என்பது புரிவதனால், துக்கம்தனையே நான் தூக்கி ஓர் பக்கம் தொலைவாக வைத்துவிட்டு, திராவிட நாடு பெற, தக்கவர்கள் பல இலட்சம், அன்றுபோல் இன்றும், ஆற்றலோடு இருப்பதைக் கண்டு அகமகிழ்ந்து, புத்தார்வம் கொள்கிறேன். எங்கும் நம் தோழர்கள், புரிந்துகொண்டார், நிலைமையினை; என்னைவிட விரைவாக. என் நெஞ்சா அவர் நெஞ்சம்!!

அன்புள்ள,

அண்ணாதுரை,

21-5-61

#1 'இந்தியர்' ஆகின்றனர்! (2)

திராவிட நாடு -
கட்சியில் தனிப்பட்டவர் உழைப்பு -
வினோபாவுடன் உரையாடல் -
கழகக் கூட்டங்களும் பேச்சாளர்களும்

தம்பி!

"இந்தியாவுக்குச் சென்றேன்; அங்கு இந்தியரைக் காண வில்லை'' என்று - பீவர்லி நிக்கலாஸ் என்ற நூலாசிரியன் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதினான் - உடனே அந்த ஆங்கில நாட்டுக்காரனைத் தேசியத் தலைவர்கள்,"பிய்த்து' எடுத்து விட்டார்கள்

- “ஏ! அறிவிலி! ஏடு எழுத வந்துவிட்டாயா ஏடு! பேனா பிடிக்கத் தெரிந்தால் பேரறிவாளனாகிவிடுகிறாயோ! உனக்கு என்ன தெரியும் எங்கள் நாட்டைப்பற்றி! ஏடு எழுத வந்துவிட்டாயே, ஏடு எழுதுவதுதானே, குடித்துப் புரளுவோர்கள், கண்டவனுடன் குலவுபவர்கள், உன் நாட்டிலே உள்ளனரே, அவர்களைப்பற்றி எல்லாம். . .’’ - என்று தாக்கினார்கள். புத்தகத்தின்மீதும் கணை தொடுக்கப்பட்டது.”இந்தியா சென்றேன் இந்தியரைக் காணவில்லை’’ என்று எழுதிய பீவர்லி நிக்கலாஸ், படாதபாடு படவேண்டியதாயிற்று, இங்கு உள்ள பாரத புத்திரர்களின் தாக்குதலால்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் - பார்புகழ் பண்டித நேரு கொலு வீற்றிருக்கும் பாராளுமன்றத்தில்,

இந்தியா ஒரு நாடு அல்ல! பல தேசிய

இனங்கள் கொண்ட ஒரு பூபாகம்

என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசினார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் - ஒரு பெரிய இயக்கத்தவர் பேசிடவே, பல்லைக் கடித்துக்கொண்டு, கேட்டுக்கொள்ள வேண்டி நேரிட்டது - தடுத்திட இயலவில்லை.

"இந்தியா சென்றேன், இந்தியரைக் காணவில்லை'' என்று பீவர்லி நிக்கலாஸ் சொன்னதே பரவாயில்லை போலிருக்கிறதே, நம் கண் எதிரில் எழுந்து நின்று, நம் காதுபட, நாம் இவ்வளவு வலிவுடன் இருக்கும் நாட்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தவரொருவர்.

இந்தியா ஒரு நாடு அல்ல

என்றல்லவா, கூறுவதைக் கேட்டுக்கொள்ளவேண்டி நேரிட்டு விட்டது.

தவமாய்த் தவமிருந்து நாம் சுயராஜ்யம் பெற்றதும், தரணிபுகழ் எமது தலைவருக்கு என்று முழக்கிக்கொள்வதும், இதைத் தடுக்க முடியவில்லையே! - என்றெல்லாம், பாராளு மன்றத்தில் அமர்ந்திருந்த "பாரத புத்திரர்'கள் எண்ணி ஏங்கி இருந்திருப்பார்கள். நாம், தலை நிமிர்ந்து நடந்தோம். பட்ட கஷ்டமத்தனையையும் மறந்தோம். இது போதும் போ! இவ்வளவு கஷ்டப்பட்டுச் சட்டசபைகளுக்குச் சென்று, எதை வாரிக் கட்டிக்கொள்ளப் போகிறார்கள் - என்று பலரும் கேட்டனர்; ஏளனம் செய்தனர்; பண்டிதரும் பிறரும் வீற்றிருக்கும் மாமன்றத்தில் நின்று, இந்தியா ஒரு நாடு அல்ல என்று கூறியாகி விட்டதல்லவா! இந்த ஒரு நிகழ்ச்சி போதும், நமக்கு எழுச்சியூட்ட என்று எண்ணி மகிழ்ந்தோம்; பெருமைப் பட்டோம், பாராட்டினோம், வாழ்த்தினோம்.

இன்று? அன்று அவ்வளவு அகமகிழ்ந்த நாம், இன்று என்ன காண்கிறோம்?

திராவிட நாடு என்பது கற்பனை

திராவிட நாடு என்பது கனவு

இந்தியாவுடன் இணைந்து வாழலாம்

வடநாடு நரகலோகமல்ல

வடவர் யமகிங்கரருமல்லர்

என்று, "இந்தியா ஒரு நாடு அல்ல' என்று முழக்கமிட்டவரே, பேசிடக் காண்கிறோம். எந்தக் கஷ்டம் வந்தாலும் வரலாம், தாங்கிக்கொள்ளலாம். இதுபோன்ற ஒரு நெஞ்சு நோக வைத்திடும் கஷ்டம் மட்டும் எவருக்கும் வரக்கூடாதப்பா என்று பலரும் கூறிக் குமுறுகின்றனர்.

எங்கெங்கோ தேடினோம்! ஏதேதோ ஆதாரங்களைக் கண்டறிய அலைந்தோம்!

என்னென்னவோ இனிப்பூட்டும் பேச்சுப் பேசிப் பார்த்தோம்! நெரித்த புருவம் காட்டினோம் - கனலைக் கக்கினோம்! என்ன செய்தாலும், இந்தியா என்பதை இந்திய அரசு என்பதை, இந்தியர் என்பதை ஏற்கமறுத்து, என் இனம்! என் மொழி! என் நாடு! என்று பேசிக்கொண்டிருக் கிறார்களே! அடக்கி அழிப்போம் என்றாலோ, அடக்குமுறை வீசவீச, இவர்களின் எழுச்சி ஒன்றுக்குப் பத்தாகப் பெருகும் போல் தெரிகிறதே; கவனிக்காததுபோல இருந்துவிடுவோம், நமது அலட்சியத்தாலேயே சாகடித்துவிடுவோம் என்று நினைத்தாலோ, அவர்களின் கொள்கை, உரம்பெற்று வருகிறது, பரவி வருகிறது; என்ன செய்வதென்றே புரியவில்லையே! - என்று பாரத அரசின் பாதுகாவலர் பதறிக் கிடந்தனர் - இன்று பல்லெல்லாம் வெளியே காட்டி, “குபீர்’ சிரிப்பு

என்பார்களே அப்படிச் சிரிக்கிறார்கள் - ”அட இழவே! இந்தச் சூட்சமம் தெரியாமல், இத்தனைகாலம் மெத்தக் கஷ்டப்பட்டு வந்தோமே. இடுப்பில் சாவிக் கொத்து இருப்பது தெரியாமல், எங்கே இருக்கிறது? எங்கே இருக்கிறது? என்று எல்லா இடமும் தேடிப் பார்த்து அலுத்துப்போனோமே! திராவிடர் என்று மார்தட்டிப் பேசிக்கொண்டு வருபவர்கள் முகாமிலேயே, திராவிடர் என்ற பேச்சை மறுக்க, உணர்ச்சியை அழிக்க, திட்டத்தைத் தாக்க, அமைப்பை உடைக்க “ஒருவர்’ கிடைக்கிறாரே! நாம்தான், இதை முன்னதாக அறிந்துகொள்ளாது போனோம். மந்தமதி நமக்கு, இவ்வளவு சொந்தமுடன், வீராவேசமுடன், திராவிட நாடு திராவிடர் என்றெல்லாம் பேசுகிறாரே, மற்றவர்களெல்லாம் மறந்துவிட்டாலும், இவர் இந்த இலட்சியத்தை மறக்கமாட்டார்

போலிருக்கிறதே; மற்றவர்கள் மார்தட்டிப் பேசுகிறார்கள், இவரோ, நம் மண்டையில் அடித்தன்றோ ஏசுகிறார். மற்றவர்கள், வாதாடுகிறார்கள்; இவரோ போராடுகிறார்! மற்றவர்கள், மாண்புமிக்கவரே! மரபு அறிந்தோரே! என்று நம்மிடம் கனிவாகப் பேசுகிறார்கள்; இவரோ, மரமண்டைகளே! மமதை மிக்கோரே! என்று அடித்துப் பேசுகிறாரே. திராவிடர், திராவிட நாடு, திராவிட அரசு என்பதை இவர் எக்காலத்திலும் விடமாட்டார்; எல்லோரும் ஓய்ந்தாலும் இவர் ஓயமாட்டார்; பலர் சாய்ந்தாலும், இவர் நிமிர்ந்து நிற்பார்! இவர் பேச்சிலே, இடியும் மின்னலும் இருக்கிறது! கண்களோ வீரத்தையும் உறுதியையும் உமிழ்கின்றன! புயலெனச் சுற்றுகிறார் - போர்க்குரல் எழுப்புகிறார்! அம்மட்டோ! மற்றவர்கள், திராவிட நாடு பெறவேண்டியதற்கான

காரணங்களை விளக்குகிறார்கள்; இவரோ காரணம் கூறும் கட்டம் தீர்ந்துவிட்டது; களம் புக வாரீர் - என்று கட்டளை பிறப்பிக்கிறார். ஏதேது, இன்னும் சில ஆண்டுகளில், மற்றவர் களின் மந்தத்தனத்தைப் போக்கி, மாபெரும் கிளர்ச்சி நடாத்தி, இரத்த ஆற்றிலே நீந்தியும், பிணமலைகளைத் தாண்டியுமேனும், திராவிட நாடு பெற்றுவிடுவார்போலிருக்கிறதே, இந்த மாவீரன் - இத்தகைய வீரம் கொப்பளிக்கும்,"தலைவன்' தோன்றியான பிறகு, இனித் திராவிடத்தை அடக்கி ஆள எங்ஙனம் இயலும் - இந்த மாவீரர் போன்றார், மனம் தளருவதோ, கொண்ட கொள்கையை விட்டுவிடுவதோ, நடக்கக்கூடிய காரியமா! குதிரைக்குக் கொம்பு முளைத்தாலும், இவர் போன்றார், கொள்கையை மாற்றிக்கொள்வதேது! பொன் காட்டி மயக்க முடியுமா! பொறிபறக்கும்

கண்ணினர், நாம் காட்டும் எதைக் கண்டுதான் மயக்கமுறப் போகிறார் - என்றெல்லாம் எண்ணிக் கிடந்தோம், “ஏமாளிபோல, இதோ, ஒரே நொடியிலே, கோலத்தை மாற்றிக்கொண்டு,”இந்தியர்’ ஆகிக் காட்டுகிறார்; முழக்கத்தை மாற்றிக்கொண்டு முன்பு இருந்த இடத்தைத் தாக்குகிறார்; பொறி பறக்கிறது இப்போதும்; ஆனால் நம்மை நோக்கி அல்ல; திராவிடமாவது அரசாவது என்று கேட்கிறார்; எவனாக இருந்தாலும், என்னிடம் என்ன செய்ய இயலும்? அறிவாயுதம் கொண்டு அழித்துவிடுவேன் என்று பேசுகிறார்! எவ்வளவு தித்திப்பாக இருக்கிறது, இவர் பேச்சு! இவர் இப்படிப் பேசவல்லவர் என்று அறிந்துகொள்ள முடியாமலே போயிற்றே நம்மால்! தூக்கிவைத்துக்கொண்டு ஆடினார் திராவிடத்தை; இப்போது தூர வீசி எறிகிறார்!

திறமை என்றால் இஃதல்லவா, திறமை. "நேர்மை நேர்மை' என்று நோஞ்சான்கள் பேசுகின்றன! வீரம் என்றால், இப்படி இருக்க வேண்டும்!

"ஆமாம் அப்படித்தான்! இப்போது அப்படித்தான்! முன்பு திராவிடம் என்று பேசினேனே'' என்று கேட்கிறீர்களா? ஆமாம், பேசினேன் - அப்போது - என் இஷ்டம் - இப்போது இப்படி! அதனால் என்ன? என் இஷ்டம்!!

அப்போதுபோலவே இப்போதும், என் பேச்சிலே வீரம் கொப்பளிக்கிறது அல்லவா? பிறகு என்ன? விழுந்து கும்பிடுங்கள்!! காணிக்கை செலுத்துங்கள். வேறென்ன, செய்யவேண்டியவர்கள், நீங்கள்! ஏன் மாறிவிட்டேன் என்கிறீர்களா? அது என் இஷ்டம்!! - என்றெல்லவா, அடித்துப் பேசுகிறார். இவர் இப்படிப்பட்டவர்

என்று அறிந்துகொள்ளாமல், எத்தனை காலத்தை வீணாக்கி விட்டோம்? போனது போகட்டும்! இப்போது நமக்குப் பொற்காலம்? இதைத் தக்கவிதத்தில் பயன்படுத்திக்கொண்டு, திராவிடத்தைத் தீர்த்துக் கட்டிவிடவேண்டியதுதான் என்று, இந்தியப் பேரரசுக்குத் துணை நிற்போர், எண்ணித் திட்டமிட்டுப் பணியாற்றுகின்றனர்.

சங்கடமான இந்த நிலைமையை, ஒரு விடுதலை இயக்கம் எதிர்பார்க்கவேண்டியதும், அதற்குப் பிறகும் உறுதி தளராமல் பணியாற்றவேண்டியதும், தவிர்க்க முடியாத கட்டங்களாகிவிட்டன.

நம்முடன இருந்தவர்களில் சிலர் மாறிவிடுவதால், நாம் கொண்ட கொள்கையின் மாண்பும், நமக்கு அக்கொள்கையிடம் ஏற்பட்டுள்ள உறுதியும் குறையுமென்று எதிர்பார்ப்பவர்கள்,

தங்கள் ஏமாளித்தனத்தை விரைவில் உணரப்போகிறார்கள்.

விடுதலை ஆர்வம் - எழுச்சி, எந்தத் தனி மனிதருடைய ஆற்றலையும் மட்டுமே நம்பி அமைவதில்லை; அப்படித் தமக்கு ஒரு தனி ஆற்றல் இருப்பதாக எவரேனும் நம்பத் தொடங்கினால், இருக்கும் ஆற்றலும் கெட்டு வருகிறது என்றுதான் பொருள்படும். விடுதலை இயக்கம், எப்படி, மாயம், மந்திரத்தாலே நடைபெறுவது இல்லையோ, அதுபோன்றே, எந்த ஒரு தனிப்பட்டவருடைய அதிசயிக்கத்தக்க திறமையால் மட்டும் நடைபெறுவதும் இல்லை. கடல் நீரில் எப்படி உப்புத்தன்மை ஒருசேரக் கலந்து காணப்படுகிறதோ, காற்றிலே எங்ஙனம் இயங்கவைத்திடும் ஆற்றல் ஒருசேரக் கலந்து இருக்கிறதோ, அஃதேபோல, விடுதலை இயக்கம், அதிலே தங்களை ஒப்படைத்து

விட்டுள்ள அனைவருடைய கூட்டுச் சக்தி பரவி, ஒன்றாகிக் கலந்து போயுள்ள நிலை பெற்று விடுகிறது. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், மருட்சி காரணமாகவோ, மயக்கம் காரணமாகவோ, எவரேனும், தம்மை, அந்த விடுதலை இயக்கத்தினின்றும் துண்டித்துக் கொள்கிறார்கள் என்றால், அவர்களோடு, அவர்களும் சேர்ந்து ஏற்படுத்தி வைத்த எழுச்சி, போய்விடாது! அவர்களைக் கேலி செய்தபடி, அவர்கள் ஆக்கித் தந்த எழுச்சி அவர்கள் விட்டுச் சென்ற இடத்திலேதான் இருக்கும்!! அவர்கள் தம்மோடு எடுத்துச் செல்லக்கூடியதெல்லாம். மனக்கசப்பு, அருவருப்பு, இவையேயன்றி, இயக்கத்தில் அவர்கள் ஊட்டிய எழுச்சி, தனியாகக் குறிப்பிட்டுக் கண்டுபிடித்துக் கூறப்பட, காட்டப்பட முடியாத முறையில், மற்றவர்கள் ஊட்டிய எழுச்சியுடன் கலந்துபோய் விடுகிறது;

பிரித்துக் காட்டவோ, பெயர்த்தெடுத்துக் கொண்டு போய்விடவோ முடிவதில்லை. வைரத்திலுள்ள ஒளியிலே, சில பகுதியை வேறாகப் பிரித்து எடுத்துச்செல்ல முடிகிறதா - பட்டை தீட்டி ஒளி ஏற்றியவன் வைரத்தை விட்டு விட்டுச் செல்வானாகில், நான் பட்டை தீட்டியதால் கிடைத்த ஒளியை என்னுடன் எடுத்துச் செல்வேன் என்றா கூறமுடியும்? அதுபோலத்தான், கூட்டு முயற்சியின் விளைவாக ஏற்பட்டுவிடும் எழுச்சியிலிருந்து, எந்த ஒரு அளவையும், எவரும், தனியாக்கி, எடுத்துச் செல்லமுடியாது. உடை, உணவு, பணம், இடம், பழங்கலம், பழைய ஏடு, இப்படிப்பட்டவைகளை எடுத்துச் செல்லலாம்; எழுச்சியை எடுத்துச் சென்றிட முடியாது. எடுத்துச் செல்ல முடியாவிட்டால் என்ன? உடைத்து அழிக்கலாமல்லவா என்று கேட்கத் தோன்றும் - கோபத்தின்

விளைவாக ஆனால் கோபம் குறைந்து அல்லது பலனற்றுப்போன நிலை பிறந்து, எண்ணிப் பார்க்கும்போது, அதுவும் நடவாது என்பது விளங்கும். ஏனெனில், எத்துணை ஆற்றலும் பக்கபலமும் தமக்கு இருப்பதாக எண்ணிக் கணக்கிட்டாலும், அது, ஒரு கூட்டுமுயற்சியின் விளைவாக உள்ள ஒரு இயக்கத்தின் எழுச்சியை அழித்திடத்தக்க ஆற்றல் ஆகிவிடாது.

தோகையைத் தனியே எடுத்து, வான்கோழியுடன் இணைத்துவிடுவதால், மயிலாட்டத்தைவிட அழகானதாக இருந்துவிடாது.

காளையின் கொம்பு ஒடிந்துவிடக்கூடும் - ஒடித்து விடவும் கூடும் - ஆயின், அந்தக் கொம்பு, காளையை வீழ்த்திடவா முடியும்? - அதன் காலின் பட்டு, சிதறுண்டு போய்விடக்கூடும்.

மொத்தத்திலிருந்து விடுபட்ட - அல்லது வேறாகிவிட்ட - அல்லது விலகிய - அல்லது பிரிந்த ஒரு பகுதி, மொத்தத்தை அல்லது மிச்சத்தைவிடப் பெரியதாகவோ, வலிவுமிக்கதாகவோ, வீழ்த்தவல்லதாகவோ, ஆகிவிட இயலாது என்பது இயற்கை நியதி.

ஆனால், அந்த ஆசை எழாமலிருக்காது; அது அரிப்பு அளவு ஏற்படத்தான் செய்யும்.

நாமின்றி என்ன செய்ய இயலும் என்ற எண்ணம், நம்மால்தான் எல்லாம் என்ற எண்ணத்திலிருந்து பிறக்கிறது. பிறகோ, நாமில்லாதபோது, எதுதான் இயங்கும் என்று தோன்றும். பிறகு, நாமின்றியும் ஒன்று இயங்குவதா, அதை நாம் விட்டு வைப்பதா என்று தோன்றும். பிறகு, இயங்குவதை ஒழித்தாக வேண்டும் என்ற அரிப்பு ஏற்படும், அது இயலாது என்ற ஐயப்பாடு குறுக்கிடும்; குறுக்கிட்டதும். நாம் மட்டும் போதாது, ஒத்த

கருத்துடைய மற்றவர்களின் துணையை நாடவேண்டும் என்று எண்ணம் பிறக்கும், அது வளர்ந்திடின், வேறோர் "மொத்தம்' ஏற்படும்; ஏற்பட்டதும், அந்த மொத்தத்தில் நம் நிலை என்ன, பங்கு என்ன என்ற எண்ணம் எழும்! எழுந்ததும், பழைய கதையேதான்; நம்மால் - நம்மாலேதான் - நம்மால் மட்டும்தான் - நாமின்றி என்ன ஆகும் - நாம் நாமாகி விடுவோம் - என்ற இந்தக் கட்டங்கள், வடிவமெடுக்கும் - திரும்பவும் திருப்புகழ், காவடிச் சிந்து பாடுவது கூடாது என்று ஆரம்பித்து, நொண்டிச் சிந்து, பரணி இலாவணி இவைகளில் புகுந்து, பிறகு அறம் பாடி அழித்தொழிப்போம் என்று முழக்கமிடும் கட்டம் தோன்றும். இதற்கு விதிவிலக்கு இல்லை என்பதை உணரச் சிறிது காலம் பிடிக்கலாமே தவிர, இந்தப் பேருண்மையிலிருந்து தப்பித்துக் கொள்ள

மட்டும் முடியாது.

மொத்தத்திலே, தன்னைக் கலந்துவிடச் செய்துகொள்ள இயலாதாருக்கு, இதுதான், எப்போதும் நிலையாகிப்போகும்.

கடலிலே கலக்கும் ஆறுகள்போலத் தனித்தனியாக ஏற்படும் அறிவாற்றல், எழுச்சி பொங்கிடும் நிலைபெற்று, ஒரு இயக்கத்திலே வந்தடைகிறது; வந்தடைந்த பிறகு, இந்த எழுச்சியிலே, இதிலிருந்து இதுவரை, இந்த அளவு வரையில் என்னுடையது, விருப்பம் இல்லையேல், அதனை நான் திரும்ப எடுத்துச் சென்றுவிடுவேன் - அம்மட்டோ! அந்த எழுச்சியைக் கொண்டு எழுச்சியின் இருப்பிடமாகியுள்ள இயக்கத்தையே அழிப்பேன் என்று எண்ணுவது! தோழர் மதியழகன் குறிப்பிடுவதுபோல, ஏமாற்றத்தின் விளைவு; எரிச்சலால் ஏற்படுவது; அஃதன்றி அது வீரமுமாகாது;

அறிவுடைமையு மல்ல; பலனும் தராது!! கடலிற் கலந்த காவிரி கோபித்துக் கொண்டு, கடலில் தான் கலந்திட்ட அளவு நீரைத் திருப்பப் பெற்றுக்கொண்டு, வேறிடம் செல்வதுண்டோ? முடியாதே! அதேதான், ஒரு இயக்கத்திற்கு தமது பங்கினைச் செலுத்திய வர்கள், விலகிச் செல்லும்போது, அது தம்முடனேயே எடுத்துச் சென்றுவிடத் தக்கது என்று எண்ணுவதும் - அந்த இயக்கத்தின் எழிலுக்கும் ஏற்றத்துக்கும், வலிவுக்கும் தாம் தந்தது மட்டும் அல்ல காரணம், கணக்குப் பார்க்காத, பலர் அளித்துள்ளனர். கூட்டு முயற்சியின் வடிவம் அது, என்பது அறியாமல், எந்த இயக்கத்துக்கு நான் ஏற்றம் அளித்தேனோ, அதனை நானே அழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன் என்று முழக்கமிடுவதும் பேதமை - கோபத்தால் விளைவது.

அந்தக் கோபம் குடிகொண்டிருக்கும்போது,

தம்பி! வேறு எந்த எண்ணமும், கிட்டே நெருங்கப் பயப்படும். பாசம் என்பது பொருளற்றதாகத் தோன்றும்! நேசம் என்பது சிலந்திக்கூடுக்குச் சமம் என்று பேசச் சொல்லும்! ஒட்டு என்ன? உறவு என்ன? என்று கேட்கத் தோன்றும்! தழதழத்த குரல் இராது; தீ மிதித்த நிலையினர் போலாவர். முன்பு அறிவு இருந்ததாகக் கருதிய இடம், மூடர்களின் முகாமாகத் தோன்றும். இதிலே ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? ஆத்திரப்படுவது, அறிவுள்ளோர் செயலாகுமா தம்பி!

"பெண்ணா இவள்! எலும்புக் கூடு!'' - என்றானாம் ஒருவன் தன் நண்பனிடம், ஒருவளைப் பார்த்து. முதுகில் ஒரு அறை கொடுத்து, அந்த நண்பன்,"முட்டாளே! எலும்புக்கூடு என்று சொல்லாதே; பூங்கொடி என்று சொல்! அவள் அப்பனுக்கு போன மாதம், அத்தையின் சொத்து ஐந்து இலட்சம் கிடைத்

திருக்கிறது'' என்றானாம்.

அதுபோலத் தம்பி! நிலைமைக்கு ஏற்றபடி பேசுகிறார்கள் என்பது புரியவில்லையா உனக்கு? புரியும்போது, கோபம் ஏன் பிறக்கவேண்டும்? உன் அலட்சியப் புன்னகையன்றி, அதற்குத் தக்க பதில் வேறு எதுவும் இல்லையே!! ஏன், சிலருக்கு, இன்னமும் இது தெரியவில்லை என்றுதான் நான் ஏக்கப்படுகிறேன். அந்த ஏக்கத்தின் காரணமாக, நான் செய்துவரும் இயக்கத் தொண்டு கூடக் குந்தகப்படுகிறது என்பதையும் கூறித்தான் ஆகவேண்டும். இதை மறவாதே, தம்பி, என்னைச் சிலர் ஏசுவதால், எனக்கும் சரி, இயக்கத்துக்கும் சரி, ஒரு துளியும் கெடுதல் ஏற்படாது. அவர்கள் பாடிச்சென்ற "போற்றித் திரு அகவல்' அவ்வளவு இருக்கிறது, கைவசம். அப்படிப் பாடினவர்கள், இப்போது இப்படி!!

- சரி! அதனால் என்ன? மனித சுபாவம் எத்துணை விதித்திரமானது என்பதை அறிந்துகொள்ளும் அரிய வாய்ப்பு இவைகளெல்லாம்! வேறென்ன!

தம்பி! உனக்கு என்னிடம் உள்ளன்பு இருக்கிறது, உணருகிறேன்; என் உயிருக்கு அஃதன்றி வேறு ஊதியம் இல்லை; என் வாழ்க்கைக்கு அதனினும் வலிவான ஊன்றுகோல் இல்லை. உனக்கு உள்ளன்பு நிரம்ப இருக்கிறதே தவிர, இன்று என்னைச் சிலர் சுடுசொல் கூறுகிறார்களே, அவர்களைப்போல, "புகழ்ந்திட'த் தெரியுமா!! உன் உள்ளன்பு, என்னைக் கண்டதும், உன் அகத்தையும் முகத்தையும் மலரச்செய்திடும். நான் காணும் காட்சிகளிலேயே, என்னைக் களிப்பில் ஆழ்த்தும் காட்சி அது; அண்ணா! என்கிறாய் தழதழத்த குரலில், - அதனைவிட இனிய இசை

வேறு எனக்கு இல்லை; வேண்டேன். அது சரி; ஆனால், புகழுரைபேச, உன்னால் முடியுமா? இன்று ஏசும் அவர்கள் முன்பு பேசியதுபோல ஒருக்காலும் பேசமுடியாது. வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்து, வர்ணஜாலங்களிட்டுக் கோர்த்து, கைவண்ணம் தெரியத் தயாரிக்கவேண்டுமே, அப்படிப்பட்ட புகழாரங்களை! உள்ளன்புகொண்ட உன்னால் முடியாதே, அதுபோல; அது சொல்லன்புகொண்டவர்களால் மட்டுமே முடியும் என்பது, அவர்களின் இப்போதைய போக்கினால் விளக்கமாகத் தெரிகிறது. உனக்கு இதயம் வேலை செய்யும் அளவு நேர்த்தியாக உதடு வேலை செய்வதில்லை; அதற்குத் தனித்திறமை வேண்டுமே; நீ, என் தம்பிதானே - எங்கிருந்து உனக்கு அந்தத் திறமை வந்துவிடும்?

சாதாரணமாகவே, காஞ்சிபுரத்தில்

நடை பெறுகின்ற பொதுக்கூட்டங்கள் என்றாலே எங்களுக் கெல்லாம், எப்படி வைதிகர்களுக்கு வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போகும்பொழுது ஒரு புனிதமான காரியத்தைச் செய்கிறோம் என்ற எண்ணமிருக்குமோ அதேபோல, காஞ்சிபுரத்துக் கூட்டத்திலே பேசுவது என்றால், ஏதோ எங்களுடைய வாழ்நாளில் நாங்கள் செய்கின்ற புனிதமான கடமை என்று கருதுவது வாடிக்கை. அது தவிர, இன்றைய தினம், நம்முடைய அண்ணா அவர்களை ஆதரித்து நடைபெறுகின்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலே கலந்துகொள்கிறோம் என்றால், வைதிகர்களுக்கு எப்படி 12 - ஆண்டுகளுக்கு ஒருமுறை மாமாங்கத் தீர்த்தத்தில் குளிப்பதில் ஒரு வெறி இருக்கிறதோ, அதைப்போல், எங்களுடைய வாழ்நாளில் இது ஒரு தடவை கிடைக்குமோ அல்லது இரண்டு தடவை

கிடைக்குமோ என்று எண்ணக்கூடிய வகையில், இதைப் பெரிய காரியமாகக் கருதிக் கொண்டிருக்கிறோம்.

எப்படித் தம்பி! புகழாரம்! எத்துணை பளபளப்பு, பார்த் தனையா!! காஞ்சிபுரமே ஒரு திருத்தலம்!! அங்கு வந்து, பேசுவதே ஒரு புனித காரியம்!!

உன்னாலே முடியுமா இப்படிப் பேச?

உனக்கு உண்ணத் தெரிகிறது - அண்ணா வாழ்க! அண்ணா வாழ்க! என்று சொல்லத் தெரிகிறது. இப்போது படித்தனையே, அதுபோன்ற சொல்லடுக்கு முடியுமா உன்னால்? திருத்தலம் - புனித காரியம். . . மாமாங்கம் - ஏ! அப்பா! ஒருநாலு வரிகளிலே, எத்துணை புகழ் உரைகள்!!

அண்ணா, இதுதான் பூஜா மனோபாவம் - கூடாது - கெடுதல் - என்று கூறுகிறார்கள்

என்கிறாய்.

ஆமாம்! தம்பி! எனக்கும் புரிகிறது. இப்படிப்பட்ட பூஜா மனோபாவம், எத்துணை போலி என்பதும் - இத்துணை பூஜா மனோபாவம் காட்டுவோர் எவ்வளவு வேகமாக மாறி விடுவார்கள் என்பதும் - புகழ்பாடிய வாயே, வேறோர் வேளை பகைபொழியும் என்பதும் புரிகிறது. நான் அன்று இல்லை, அதைக் கேட்க. இதுவரை உனக்கும் சொன்னதில்லை, இன்று சொல்ல நேரிட்டது.

தம்பி! காஞ்சிபுரத்தைத் திருத்தலமாகவும், அங்குவந்து பேசுவதைப் புனித காரியமென்றும்; சொன்னது யார் தெரியுமோ? இந்த அண்ணாத்துரைக்கு அரசியலே தெரியாது - என்று இன்று பேசும், தோழர் சம்பத் அவர்களேதான். நான் இல்லாத அன்று, காஞ்சிபுரம் வந்து, தேர்தல் பிரச்சாரம் செய்து, இந்த திருத்தாண்டகம் பாடிச் சென்றார் - 17-2-

57-ல்.

அவர் இன்று என்னைப்பற்றி நாலு கடுமையான வார்த்தை களைச் சொன்னால், கோபம் கொள்ளலாமா? - அவர் அன்று சொன்னவற்றை எண்ணி மகிழக்கூடாதா!

கொடுத்த கைதான்! இன்று இல்லை, கொடுக்கவில்லை - என்று எண்ணிக்கொள்வதுபோல, அண்ணாவை அகமகிழ்ச்சி யுடன் பாராட்டியவர்தான் - அன்பு இருந்தபோது - இன்று அன்பு இல்லை, ஆகவே புகழவில்லை. அதனால் என்ன என்றுதானே எண்ணிக்கொள்ள வேண்டும்.

ஒளிதரும் விளக்குக்கூட - எண்ணெய் இல்லாதபோது, இருளுக்குத் துணை நிற்கிறது.

மேலும், தம்பி! என்னைப் புகழ்ந்துரைப்பதை நிறுத்திக் கொண்டு,

இகழ்வாகப் பேசுவதால், மொத்தத்திலே நஷ்டம் இல்லை என்பது புரியவேண்டுமே உனக்கு. என்னைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்ததால், அவர், பாவம், புகழவேண்டிய எத்தனையோ, "தலைவர்களை'ப் புகழ இயலாது போயிற்று. "யான் பெற்ற இன்பம்' அவர்களுக்கு இப்போது. அவர்களுக்கும் கிடைக்கட்டுமே அந்த மகிழ்ச்சி. காலமெல்லாம் எனக்கேதானா? மற்றவர்களுக்கும் கிட்டட்டும்!!

என்னே அவர்கள் பாராட்டுவதைப் பெற்றுக்கொண்டே இருந்தால், நான் பெரிய கடனாளி அல்லவா ஆகிவிடுகிறேன். இப்போது எனக்கு ஒருவகை ஆறுதல். அவர்கள் தூற்றுவதைப் பொறுத்துக்கொள்வதை, நான் பட்ட கடனைத் திருப்பிக் கொடுத்திடும் வாய்ப்பாகவே கருதி, மன அமைதி பெறுகிறேன்.

தம்பி! எனக்காகத் தேர்தல் பிரசாரம் செய்யும் வாய்ப்பு. ஒரு தடவை கிடைக்குமோ, இரண்டு தடவை கிடைக்குமோ என்று பேசினார். ஒரே தடவைதான்! நான் மேலும் அவருக்குக் "கடன்காரன்' ஆகவேண்டிய நிலை இல்லை. மனதுக்கு அது ஒருவிதமான ஆறுதல் எனக்கு.

ஆனால், தம்பி! நம்முன் உள்ள பிரச்சினை, புகழ்பாடத் தோன்றுவது எப்போது, இகழத் தோன்றுவது எப்போது, எதனால் என்ற இது அல்ல.

நம்மை அவர்கள் புகழ்ந்த கதை இருக்கட்டும் - இப்போது தூற்றும் படலமும் கிடக்கட்டும் - திராவிட நாடு எனும் இலட்சியத்தை அவர்கள் புகழ்ந்தார்கள் முன்பு; இப்போது இகழ்கிறார்கள்; முன்பு முழு மூச்சாக ஆதரித்தார்கள்; இப்போது, வேகமாகத் தாக்குகிறார்கள். நான்கூடக் கெட்டு விட்டேன்

என்று வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; பழகப் பழகப் பாலும் புளிக்குமாம் - நான் எம்மாத்திரம் என்னைப் பிடிக்கவில்லை என்று கூறிவிடட்டும் - ஆனால் அந்த இலட்சியம், என்ன குற்றம் இழைத்தது? ஏன் அதனை இகழ வேண்டும் - எதிர்க்கவேண்டும்? - என் மனதை வாட்டுவது அதுதான், தம்பி! மற்றது அல்ல.

அந்த வாட்டத்தை எப்படிப் போக்கிக்கொள்வது?

ஏன்! அவர் மாறிவிட்டதுபோல, நாமும் மனதை மாற்றிக் கொள்வது - என்று சிலர், கருதிவிட்டார்கள்.

ஆனால், நண்பர் புஞ்சைப் புளியம்பட்டி சாமிநாதன் அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசியதுபோல - கோபி என்று நினைவு - ”புத்தர் பொதிய மரத்தடி அமர்ந்து ஞானம் பெற்றார் என்கிறார்கள் - அதுபோல என்

நண்பர், எப்படி இந்தத் திடீர் ஞானோதயம் பெற்றாரோ தெரியவில்லை'' - என்று அல்லவா கூறத் தோன்றுகிறது.

இதுவரை காணாதது என்ன கண்டுவிட்டார்கள்? கேட்காதது என்ன கேட்டுவிட்டார்கள்? கிடைக்காத விளக்கம் என்ன அதிசயமாகக் கிடைத்துவிட்டது? திடீரென திராவிட நாடு வேண்டாம் என்று கூற. திராவிட இயக்க வரலாறு வெளியீட்டு விழாவன்றுகூட, திராவிடராகக் காட்சி தந்து, "திராவிட நாடு' இலட்சிய முழக்கம் செய்துவிட்டு, எண்ணிப் பத்து நாட்கள் ஆனதுமா, திராவிட நாடு பகற்கனவு ஆகிவிடுவது!!

திராவிட நாடு கூடாது என்பதற்கு, இதற்கு முன்பு எவரெவரோ, எடுத்துச் சொன்ன காரணங்களால், இவர் மனதை மாற்ற முடியவில்லை; அவைகளுக்கெல்லாம்

சுடச்சுடப் பதிலளித்தார்; இன்று, அந்தக் காரணங்களைவிட வலிவான, மனதை ஈர்க்கத்தக்க, மகத்தான, காரணம் கிடைத்ததா? என்ன அது? எவர் தந்த போதனை? விளக்கம் கிடைத்ததா?

அப்போது நான் பேசி வந்ததெல்லாம் பொய் - புரட்டு - போலி! என்று பேசிவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிட்டதா?

நாற்பது நாளும் நான் கொடுத்து வந்தது சூரணமல்ல, செங்கல்தூள்! மன்னித்துக்கொள். இப்போதுதான் உண்மையான மருந்து தருகிறேன் பெற்றுக்கொள் - என்று மருத்துவன் கூறி ஒரு பொட்டலம் கொடுக்கிறார் - பிரித்துப் பார்த்தால், கருநிறத் தூள் இருக்கிறது என்று வைத்துக்கொள் - எந்த மருத்துவனும் அப்படிச் செய்யமாட்டான்; மக்களை எப்படி வேண்டுமானாலும் படைக்கலாம் என்ற

எண்ணம் கொண்ட சில தலைவர்கள் மட்டுமே அப்படிச் செய்வர் - பொட்டலம் பெறுபவர், மருத்துவருக்கு நன்றி கூறிப் புதிய மருந்தையா சாப்பிடுவார் - முன்பு கொடுத்ததை இத்தனை நாள் கழித்துச் செங்கல்தூள் என்கிறார், துணிந்து; இப்படிப்பட்டவர், இப்போது கொடுப்பது மட்டும் மருந்துதான் என்று எப்படி நம்புவது? இது கரித்தூளோ, என்னவோ என்றுதானே எண்ணுவார்கள். அதுபோல்தான் இந்தப் போக்கும். எந்தப் போக்கையும் நம்பிவர நாலுபேர் கிடைப்பார்கள் என்பது தவிர, வேறு என்ன காரணம் இருக்க முடியும், இந்தக் கோலம் கொள்ள?

தம்பி! திராவிட நாடு விஷயமாக, என்னிடம் பேசியவர்கள் பலர்; வாதாடியவர்களும் உண்டு; விளக்கம் கூறி என்னைத் தம்வழி இழுத்துச்செல்ல

முயன்றவர்களும் சிலர் உண்டு.

அவர்கள் காட்டிய காரணங்களைவிட, இனி ஒருவரும் எந்தக் காரணத்தையும் காட்ட முடியாது. அப்போது மாறாத மனம் - இப்போது மாறும் என்று எண்ணுவதோ, மாறா விட்டால், மனம்போன போக்கிலே ஏசுவோம் என்று தூற்றித் திரிவதோ, எதைக் காட்டுகிறது என்றால், அவர்கள் என்னையும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை, பிரச்சினையையும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதைத்தான்.

வினோபா: உங்கள் கழகத்தின் நோக்கம்?

நான்: நாங்கள் திராவிட நாடு கேட்கிறோம்; அறிவீர்களே.

வினோபா: உங்கள் கழகத்தில் யார் வேண்டுமானாலும் சேரலாமல்லவா - உதாரணமாக, நான் சேர விரும்பினால். . .

.?

நான்: நாங்கள் ”திராவிட நாடு’ சம்பந்தமாகத்தான், கழகம் அமைத்திருக்கிறோம். அகில இந்தியக் கட்சி அல்லவே. எனவே இயல்பாகவே, திராவிட நாட்டிலுள்ளோர்தான் உறுப்பினராகச் சேர விரும்புவர்.

வினோபா: திராவிட நாடு என்றால் தனி நாடாகவேவா?

நான்: ஆமாம். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிவழி அரசுகள் அமைத்து, பிறகு அவைகளின் கூட்டாட்சியாகத் திராவிட நாடு ஏற்படுத்துவது.

வினோபா: மத்திய சர்க்காருக்கு என்ன அதிகாரம்?

நான்: மத்திய சர்க்காரின் கீழ் இருக்கும்

நிலைமையே எழாது. தேவைப்படும்போது, வெளிநாட்டு விவகாரம் குறித்துக் கலந்து பேசலாம், கூடிப் பணியாற்றலாம்.

வினோபா: அப்படி என்றால், தனிநாடு, அதாவது தனி அரசு - சிலோன்போல.

நான்: ஆமாம். வினோபா: பாகிஸ்தான்போல் ஆகிவிடும்.

நான்: நியாயமான கோரிக்கை மறுக்கப்பட்டால், பாகிஸ்தான் போல்தான் ஆகிவிடும்.

வினோபா: தனிநாடு என்றால் தனி பட்டாளம்கூட இருக்குமா?

நான்: ஆமாம். தனிப்படை இருக்கும்.

வினோபா: தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் எல்லாம் ஒன்றாக இருக்குமா?

நான்: எங்களுக்கு நம்பிக்கை உண்டு -

ஏனெனில், நாலு மொழிகளும் ஒரே மூலம் கொண்டவை.

வினோபா: நான் நாலுமாதம் ஆந்திரத்தில் சுற்றுப் பயணம் செய்திருக்கிறேன். ஆந்திரர்கள் தமிழர்களுடன் ஒன்று கூடி அரசு அமைக்கும் எண்ணம் இருப்பதாகத் தெரிய வில்லை.

நான்: இப்போதைக்கு அவ்விதமான எண்ணம் அங்கு இருக்கலாம். தாங்கள் ஆந்திரம் சென்ற சமயம், ஆந்திரர்கள் தமிழருடன் ஒரே அரசில் இருந்ததால் தங்கள் வளர்ச்சி தடைப்பட்டது என்று எண்ணிக் கசப்பு அடைந்திருக்கும் நேரமாக இருந்தது; தனியாகி விட்டார்கள். இப்போது அவர்களுக்கும் மத்திய சர்க்காருக்கும்தான் தொடர்பு, இப்போதும் தங்களுக்கு வளர்ச்சி இல்லை என்றால், அதற்குக் காரணம் தமிழர் அல்ல, மத்திய சர்க்கார்தான் என்று அறிந்து

கொள்வார்கள். இப்போதே மைசூர், கேரளம், ஆந்திரம் ஆகிய பகுதிகளில், ஐந்தாண்டுத் திட்டங்களில், சரியான முறையில் தமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை என்று எண்ணுகிறார்கள்.

வினோபா: மத்திய சர்க்கார் அநீதியாக நடப்பதால்தானே பிரிந்துபோக விரும்புகிறீர்கள்? நீதியாக நடந்து கொண்டால்?

நான்: அப்படிப் பார்ப்பதைவிட, இதுபோல் எண்ணக் கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் அநீதியாக நடப்பதால் கசப்படைகிறோம் என்று கூறுவதைவிட, மத்திய சர்க்கார் என்று ஒன்று இருந்தால் அநீதிதான் நடக்கும் என்று கொள்ளவேண்டுகிறேன். மேலும், நீதியாக நடக்கக்கூடிய கடைசித் தலைமுறையே இப்போது வடநாட்டில் உள்ளது என்று

நினைக்கிறோம். இனி வரக்கூடிய தலைமுறையில் அதிக அநீதிதான் இருக்கும்.

தம்பி! நிலக்கொடைக்காக இங்கு வந்திருந்த வினோபா அவர்களிடம், ஐந்தாண்டுகளுக்கு முன்பு, நடைபெற்ற உரையாடலில், நான் திட்டவட்டமாகத் திராவிட நாடு குறித்துக் கூறியிருப்பதை நினைவுபடுத்துவது, இப்போது யாரோ சிலர் அதைப்பற்றித் திரித்துக் கூறுகிறார்கள் என்பதற்கு விளக்கம் தர அல்ல - என் அறிவு, அன்பு, நெறி முதலிய எல்லாவற்றிலுமே சந்தேகமும் அருவருப்பும் வெறுப்பும் கொண்டுவிட்ட அவர்கள், எதையும் பேசுவார்கள்.

சாந்தம் தவழும் முகம் என்னை ஈர்த்தது; பணியிலே தூய்மை இருந்தது கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன்; அவர் உரையிலே கனிவு இருந்தது;

நெடுங்காலம் பழகியவர்போல என்னிடம் அவர் பேசிய போக்கு, அவருடைய பெருங் குணத்தைக் காட்டிற்று; நான் வினோபா அவர்களிடம் பெருமதிப்புக் கொண்டேன்; ஆனால், திராவிட நாடு பிரச்சினையில் எனக்கிருந்த ஆழ்ந்த நம்பிக்கையும், ஆர்வமும், குறையவில்லை. வினோபாவின் பேச்சு, கேள்வி, இவை, எனக்கு திராவிட நாடு பிரச்சினை சம்பந்தமாக எந்தவிதமான ஐயப்பாட்டினையும் புகுத்தவில்லை. என் நம்பிக்கையையும் ஆர்வத்தையும் அவர் உணர்ந்துகொண்டார். கள்ளமில்லா உள்ளம் என்றுகூடக் கூறினார்.

நான், அவருடன் பேசிவிட்டு வந்ததை வைத்துக் கொண்டு காங்கிரஸ் ஏடுகள், வினோபா, "திராவிட நாடு' திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று எழுதின. அப்போது நான் திராவிட நாடு இதழில்

வெளியிட்ட விளக்க அறிக்கையை, இங்கு வெளியிடுவது பொருத்தமானது என்பதால், தருகிறேன்.

"திராவிட நாடு'' திட்டம் குறித்து வினோபா ஆவலுடன் பல தகவல்கள் கேட்டதும், நான் அவருடன் அது குறித்து உரையாடியதும் அனைவரும் அறிவர்.

சிறிய நாடுகள் பெரிய நாடுகளுக்கு இரையாகிவிடாதா? என்று என்னை வினோபா கேட்டது தவிர, வேறு எதிர்ப்புக்கான காரணம் ஏதும் பேசவில்லை; அவர் கேட்ட அந்தக் கேள்விக்கும் நான் பதில் அளித்தேன்.

சுதந்திரத் திராவிட நாடு கூடாது - என்று வினோபா கூறுவதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

ஆனால் ஆந்திரம், தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு, முழு மாகாண சுயாட்சி

அளித்திடவேண்டும் என்றும், அதனை டில்லி தர இசையும் என்றும் வினோபா கூறியதாகச் செய்தி காணப்படுகிறது.

இயல்பாகவே நான் அவரிடம் பேசிவிட்டு வந்ததால், வினோபா, திராவிடத் தனி நாட்டுக்கு ஆதரவு காட்டுகிறாரோ என்ற சந்தேகமும் அச்சமும் காங்கிரஸ் வட்டாரத்திலே எழுந்திருக்கக்கூடும்.

அதைப் போக்கவேண்டி, வினோபா, இந்தச் செய்தியைக் கூறியிருந்திருக்கக்கூடும்.

சிறிதளவு பேசியதன்மூலம் திராவிட நாடு பிரச்சினையை வினோபா ஆதரிக்கும்படி செய்துவிட என்னால் மட்டுமல்ல, யாராலும் ஆகாது.

எனவே வினோபா, திராவிடத் தனி நாடு கோரிக்கையை ஆதரிக்கவில்லை என்ற செய்தி, எனக்கு அதிர்ச்சியையோ,

ஏமாற்றத்தையோ அளிக்கவில்லை.

எனினும், சிறு நாடு காரணம் காட்டிப் பிரச்சினையை எதிர்ப்பதனால், இதனினும் சிறு நாடுகள் பன்னெடுங் காலமாகச் சுதந்திர நாடுகளாகப் பாங்குடன் வாழ்ந்து வருவதைக் காட்டுவதுடன், சிறு நாடு என்று திராவிட நாடு கருதப்படத் தக்க அளவினதல்ல என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஆந்திரம், கேரளம், தமிழகம், கருநாடகம் என்னும் நான்கு மொழிவழி அரசுகளும், கூட்டாட்சித் திட்டமான திராவிட நாடு அமைத்துக்கொண்டு, வடநாட்டு ஏகாதிபத்யத் பிடியிலிருந்து விடுபடவேண்டும் என்பதுதான் நமது திட்டம்.

இந்தக் கூட்டாட்சி சிறியதுமல்ல, ”தன்னாட்சிக்கு ஏற்ற தகுதி படைத்ததுமல்ல’ என்றும் எவரும் கூறிவிடமுடியாது.

போர்ச்சுகலும் ஸ்பெயினும், பிரான்சும் ஜெர்மனியும், சுவிட்சர்லாந்தும் பெல்ஜியமும், நார்வேயும் ஸ்வீடனும், கிரீசும், இத்தாலியும், அல்பேனியாவும் இஸ்ரேலும், தனி நாடுகள் - திராவிட நாடு இவைகளைக் காட்டிலும் பெரிய அளவு.

தமிழகத்தின் அளவுகூட இல்லாத நாடுகள் பல, தனிக் கொடி பறக்கவிட்டுத் தன்னாட்சி நடத்தித்தான் வருகின்றன.

இந்தியப் பேரரசின் பிடியிலிருக்கும் தமிழகம், தத்தளிக் கிறது பல்வேறு வழிகளில்; ஆனால், தனி நாடாக உள்ள பல சிறு நாடுகள், சீருடன் - சிறப்புடன் வாழ்ந்து வருகின்றன.

போர் நடத்தியேனும் ”சுதந்திரம்’ பெறவேண்டும் என்று துணிந்து இறங்கியுள்ள அல்ஜீரியா, திராவிட நாட்டைவிட அளவிலும் சிறியதுதான் - வளத்திலும் அவ்விதமே.

எனவே, திராவிட நாடு சிறிய நாடு என்று கூறுவதில் பொருள் இல்லை! சிறிய நாடுகள் சுதந்திர நாடுகளாக இருக்கவே கூடாது என்று எந்த அரசியல் "தர்மமும்' கட்டளையிடவுமில்லை. வரலாறும், சிறு நாடுகள் அழிந்து போகும் என்பதை எடுத்துக்காட்டும் பாடப் புத்தகமாகவும் இல்லை.

என்னுடன் பேசியதால், திராவிட நாடு பிரச்சினைக்கு வினோபா ஆதரவு அளித்துவிட்டிருக்கக்கூடும் என்று எண்ணி ஏக்கமுற்ற காங்கிரஸ்காரர்கள், வினோபாவின் கருத்து கண்டு மகிழ்வர்; அவர்களுக்கு அது ஒரு இனிப்புப் பண்டம். நான் ஆதரவு கிடைத்திடும் என்று எதிர்பார்க்கவில்லை; எனவே, ஏமாற்றமுமடையவில்லை.

ஆதரவு - அல்லது எதிர்ப்புக் காட்டும்

அளவுக்கு, பிரச்சினையை அலசிப் பார்த்துப் பேச, அந்தச் சந்திப்பு போதுமானதாகவும் அமையவில்லை.

பிரச்சினைபற்றிப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வினோபா ஆர்வம் கொண்டிருக்கிறார் என்பது எனக்குப் புரிந்தது; பிரச்சினையில் நான் ஆர்வம் கொண்டிருக்கிறேன், ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்பதை அவர் அறிந்து கொண்டிருப்பார் என்று நம்புகிறேன்.

நல்லவர் - மதிக்கத்தக்கவர் என்ற வரிசையினரான வினோபாவினாலேயே, எனக்குத் திராவிடநாடு குறித்து இருக்கும் நம்பிக்கையைக் குறைத்திட இயலவில்லை என்றால், பிறர், என்னையும் உன்னையும் ஏசிப் பேசி வருவதினாலா. திராவிட நாடு பிரச்சினையிலே நமக்கிருக்கும் நம்பிக்கையும் ஆர்வமும், அதற்காகத் தொண்டாற்றும்

திறனும் குறையும்; பாழ்படும்! எவ்வளவு ஏமாளித்தனம் இருக்க வேண்டும் இப்படி எண்ணிக்கொள்ள!! ஆனால் இன்று அவர்கள், திராவிட நாடு திட்டத்தைத் தாக்கிப் பேசுவதை, பத்தி பத்தியாகச் சில ஏடுகள் வெளியிடுவதாலேயே, திராவிட நாடு திட்டத்துக்கு ஏதோ புதிய, வலிவான எதிர்ப்பு வந்துவிட்டது என்று எண்ணி ஏமாறுகிறார்கள். திராவிட நாடு எனும் திட்டத்தை, இவர்களைக் கொண்டு தாக்கச்செய்து, வலிவைக் குறைத்துவிட்டு, பிறகு, இவர்கள் தமிழ்நாடு என்று பேச ஆரம்பித்தால், அவ்வளவு பெரிய திராவிட நாடே தனி நாடு ஆகக்கூடாது என்று சொல்லியாகிவிட்டது என்றால், நீங்கள் சொல்லும் தமிழ்நாடு ஒரு நாள் வாழ இயலுமா தனி நாடாக! ஏன் பைத்யக்காரத்தனமான திட்டம். தமிழ் நாடு தனி நாடு ஆக வாழத்தக்க பொருளாதார அமைப்பு அல்ல (Economic Vi-

ability) என்று ஒரே அடியாக அடித்து, ஆகவே, பாரதத்தில் ஒரு அங்கமாக இருப்பதுதான் புத்திசாலித் தனம்! அதில் இருந்துகொண்டு, பேதம் பேசாமல், பிளவு ஏற்படுத்தாமல், சுகமாக வாழலாம். பேதமும் பிளவும் இல்லாது இருக்கவேண்டுமானால், பிரிவினை - அதற்கான உரிமை - அந்த முறையில் சட்டத்தில் திருத்தம் பெறுவது - என்ற எண்ணமே எழக்கூடாது. அந்த எண்ணம் எழுந்தாலே, திருப்தியற்ற தன்மை, அருவருப்பு, பகை, எல்லாம் தோன்றிவிடும். அந்த நிலை ஏற்படாமலிருக்க, எப்போது திராவிடர் என்ற "மாயை'யிலிருந்து விடுபட்டீர்களோ, உடனே, "இந்தியர்' ஆகிவிடுங்கள். அதுதான் அறிவுடைமை.

என்று இன்று செய்திகளை மிக்க அக்கறையோடு வெளியிடும், ஏடுகள் எழுதப்போகின்றன.

”திராவிட நாடு’ என்று கூறுவதால், தனி நாடு ஆவதற்கான, பொருளாதார வாய்ப்புக் குறிகள் இல்லை என்ற பேச்சுக்குத் துளியும் இடம் கிடைக்கவில்லை; எனவே, மாற்றார்கள், திராவிட நாடு, தனி நாடாக இயங்க முடியாது - இன்னின்ன வளங்கள் இல்லை - என்று சொல்ல முடியவில்லை.

“தமிழ் நாடு’ என்று சொல்லும் அளவுக்குத் திட்டத்தை மட்டந்தட்டினால், பிறகு, ஒரு அலட்சியப் புன்னகையுடன், தமிழ் நாடு தனித்து இயங்கமுடியாதே! ஒரு நல்ல வளமான நாடு ஆகத்தக்க, பொருளாதார வாய்ப்புகள் உள்ள”அளவு’ கொண்டதாகத் தமிழ்நாடு இல்லையே என்று காரணம் காட்டி விடலாம் என்று கருதுகிறார்கள்; நம்புகிறார்கள்; விலகியோர், விரும்பியோ விருப்பமின்றியோ, மாற்றாருக்கு - மகத்தான வாய்ப்பைத் தேடிக் கொடுக்கிறார்கள்.

இன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குலைக்க, விலகியோர்களைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்; அந்தக் காரியம் முடியட்டும் என்பதற்காகவே; விலகியோருக்கு நல்ல விளம்பரம் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

இதே ஏடுகள், விலகியோரின், மற்றக் கருத்துகளுக்குத் துளி மதிப்பேனும் தருவரா? நிச்சயம் இல்லை.

தமிழர் தனி இனம் - தனி அரசு நடத்தியவர்கள் - தனி அரசு நடத்தத் தகுதி உள்ளவர்கள்; தனி அரசு அமைக்கத்தக்க, வளம் இருக்கிறது; அளவு, குடிவளம், இயற்கைச் செல்வம், எல்லாம் இருக்கிறது; தனி அரசு அமையாததால் வடபுலம் கொழுக்கிறது.

தமிழர் தவிக்கின்றனர் - இங்கும் - எங்கும்.

இதை வடபுலத்தினர் கவனிப்பதுமில்லை.

உடனடியாகத் தமிழ் நாடு தனி நாடு ஆகவேண்டும்.

வடநாட்டுக்குக் கப்பம் கட்டி, கால்பிடித்துக் கிடக்கும் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும்.

தம்பி! இப்படிப் பேசட்டுமே பார்ப்போம், இன்று காங்கிரஸ் செய்திகளைக்கூடக் குறைத்துக்கொண்டு, இவர்களுக்கு இடம் தரும் ஏடுகள், எவ்வளவு துச்சமாக மதித்துத் தூக்கி எறிகிறார்கள் என்பது பளிச்செனத் தெரிந்துவிடுகிறது.

திராவிட நாடு என்பதுதான் பிடிக்கவில்லை, தமிழ் நாடு என்றால் பிடிக்கும், ஆதரவு கிடைக்கும் என்றால், ஆதித்தனார், பக்கமல்லவா, இந்தப் பத்திரிகைகள் இருந்திருக்கவேண்டும். இருந்தனவா? இல்லையே! ஏன்? ஆதித்தனார் திராவிட

நாடு கேட்கவில்லையே தவிர, தமிழ்நாடு கேட்கிறார்; பிரிவினை கேட்கிறார்; நேரு சர்க்காரைத் தாக்குகிறார்; அதுமட்டும் அல்ல,

அண்ணாத்துரை அறிவிலி.

அண்ணாத்துரை சர்வாதிகாரி.

அண்ணாத்துரை கதை எழுதுகிறான், பேசுகிறான்.

அண்ணாத்துரைக்கு அரசியல் தெரியாது.

திராவிட முன்னேற்றக் கழகம், மோசமானவர்கள் முகாம்.

அது காலிகள் கூடாரம்

என்றெல்லாம் பேசவில்லை?

எனவே, அந்த ஏடுகளுக்கு, ஆதித்தனார், ஆதரிக்கப்பட வேண்டியவராகத் தெரியவில்லை. அவரை ஒதுக்கி வைத்தனர்.

உள்ளபடி, தமிழ் நாடு விஷயமாக அன்பும் அக்கறையும் இருக்குமானால், விலகியவர்கள்கூட, நம்மை விட்டதும், நேரே அவருடைய இயக்கத்தில் சேர்ந்திருக்க வேண்டுமேயன்றிப் புதுக்கட்சி எதற்கு?

ஆதித்தனார், திராவிட நாடு வேண்டாம் என்பதற்காகவும், திராவிடர் என்ற கருத்து தீது என்பதற்கும், கூறாத எந்தக் காரணத்தைப் புதியவர்கள் கூறுகிறார்கள் - கூறமுடியும்? ஆயினும், புதியவர்களுக்குக் கிடைக்கும் விளம்பரம், ஆதித்த னாருக்குக் கிடைக்காத காரணம் என்ன?

"அண்ணாத்துரையின் செல்வாக்கை ஒழித்துவிடுகிறேன்,

அவன் தலைமையில் உள்ள தி. மு. கழகத்தை அழித்து விடுகிறேன் - என்று ஆதித்தனாருக்குத் திட்டம் இல்லை. அந்தத்

திட்டம் இல்லையென்றால், காங்கிரஸ் ஏடுகளிலே விளம்பரம் இல்லை.''

தி. மு. கழகத்தை ஒழிப்பேன் என்று கொண்டை கட்டிகளும், கோவிந்தாப் போடுவோரும், பட்டை போட்டோரும், பஜனைக்காரரும் முன்வந்தபோதே, காங்கிரஸ் ஏடுகள், அவர்களுக்கு விளம்பரம் கொடுத்தன என்றால், தி. மு. கழகத்தின் முன்னணி நின்று முழக்கமிட்டு, கிளர்ச்சியில் ஈடுபட்டு, அதனை நடத்திச் செல்லத்தக்க ஆற்றல் படைத்தவர் என்ற விருது பெற்றிருந்தவர், தி. மு. கழகத்தை ஒழிக்கிறேன் என்றால், அடே அப்பா! விளம்பரம் கொடுக்கக் கசக்குமா, காங்கிரஸ் ஏடுகளுக்கு!! பொன்னான வாய்ப்பு என்று அல்லவா, மேலே விழுந்து விளம்பரம் தரும்.

இந்த விளம்பரம் பெரிய செல்வாக்கு என்று எவரேனும் மயங்கினால்,

இரக்கப்படுவதன்றி வேறென்ன செய்வது?

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சட்டவிரோதமானது என்று அறிவித்து, அடக்குமுறைகொண்டு அதனை அழித்திட, காங்கிரஸ் சர்க்கார் முனைவதற்கு முன்பு நடத்தப்படும், முயற்சி இது - கழகத்தை வேறு சிலரைக்கொண்டு ஒழிக்க முடிகிறதா என்று பார்ப்பது

ஒவ்வொரு முறையும், நப்பாசைதான் காங்கிரஸ் கட்சிக்கு.

"இவர் எதிர்க்கிறார்! எனவே கழகம் அழிந்துபோகும்'' - என்று விபூதியும் சந்தனப்பொட்டும், வில்வமும் துளசியும், பஸ்கியும் தண்டாலும், பயில்வானும் சவாலும் கிளம்பிய ஒவ்வொரு நேரத்திலும் இதே நப்பாசை.

நாற்பதே நாட்கள், ஒழித்துக் காட்டுகிறேன்

நமச்சிவாயத்தின் மீது ஆணை என்று கிளம்புவார், மடம்கூட இல்லாத ஒரு காவிகட்டி! உடனே காங்கிரஸ் ஏடுகள், அவரை ”மகானாக்கி’ - மக்களுக்கு அறிமுகப்படுத்தி - அவர் பேச்சைப் பேருரையாக்கித் தரும் - கடைசியில் பயனில்லை என்பதை உணர்ந்து மூலையில் உட்காருவர்.

அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம், அடித்தது யோகம், சில காலம்; கழகத்தை ஒழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன் என்று கிளம்பும், யாருக்கும் கிடைக்கும் அந்த யோகம்.

இந்த “சூட்சமம்’ மக்களுக்குத் தெரியாமலுமில்லை, நமது கழகத் தோழர்களும், இதனை நன்கு உணர்ந்து இருப்பதால்தான், எவர்”இந்தியர்’’ ஆகிவிடுவது நல்லது என்று சென்றிடினும், நாம் நமது குறிக்கோள் வெற்றிபெற உழைப்போம் என்ற உறுதிபூண்டு, உழைத்தபடி

உள்ளனர். என் அளவுக்குக்கூட, அவர்கள் இது குறித்துக் கவலைப்படுபவர்களாகத் தெரியவில்லை. முன்னிலும் வேகமாகப் பணிபுரிகிறார்கள் - ஒரு விடுதலை இயக்கத்துக்கு, சிறு இழப்பு நேரிடினும், அதனால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டத்தையும் ஈடுசெய்யத்தக்க விதத்தில் தாங்கள், மேலும் திறமையாகப் பணிபுரியவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும், ஆர்வமும் கொண்டவர்களாகின்றனர்.

எனவேதான், அன்று இருந்ததைவிட அளவினிலும் அதிகமாம் என்றுரைக்கத்தக்க விதமாக, நம் தோழர்கள் திராவிட நாடு திராவிடர்க்கே என்பதனை முழக்கி வருகின்றனர்; மூலை முடுக்குச் சென்று கண்டோம் நம் தோழர்களின், கண்களிலே ஒளி ஆர்வம்; அவர் கருத்தில் குழப்பமில்லை; கவலை கொள்ளற்க!

நம்முடன் இருந்த சிலர் இந்தியராய் மாறுகின்றனர்; இந்தியர் என்றுரைக்கும் எண்ணற்றவர்களுக்கிடையில், இவரும் கூடுவதால், இவர்க்கென்று இன்றுள்ள இடமும் நிலை அல்ல; ஏனண்ணா! வீண் கவலை, நேருவையும் அவர் தம்மைக் கண்கண்ட கடவுளெனக் கொண்டவர்கள் தொகையினையும் கண்டதனால், நம் கருத்து கருகியா போயிற்று? இன்று அந்தப் படை நடுவே, நமக்கு இனிப்பளித்து வந்தவர்கள், சென்று இடம் கண்டு, செய்திடப் போவதென்ன? விடும் அண்ணா! விசாரம்! வேலை நடக்கட்டும்!! - என்று கூறுகின்றார்; எழுச்சி தருகின்றார்.

செல்லும் இடமெல்லாம் இந்தச் செந்தேனே தருகின்றார், சென்றுவந்த "சேதி' தன்னைச் செப்புகின்றார், சுவைசொட்ட, எங்கும் இடர் இல்லை. இலட்சிய ஆர்வம் தனக்கு; எவரும்

ஒப்பவில்லை, இந்தியராவதற்கு - சென்று கண்டிடண்ணா, செம்மைமிகு கழக வடிவமதை - என்றும் கூறுகின்றார்; நானும் பல இடத்தில், இதனையே கண்டுவந்தேன். நன்று, நன்று, தம்பி! நமக்கு இருப்பது ஒரே செல்வம் - இதயத்தை ஈர்த்துள்ள இலட்சியமே அதுதான். அதற்கு நாம் ஆட்பட்டோம்; ஆணிப்பொன் ஆபரணம், அந்தஸ்து அனைத்தையும் அடியினிலே கொட்டி அழைத்தாலும், நாம் ஏகோம்; இன்று இந்த உறுதியினை நாம் புதுப்பித்துக்கொள்வதற்கே, சென்றனர் போலும் என் தம்பியராய் இருந்தவர்கள்; பரிவுகாட்டி வந்த நம்மைப் பிரிந்து போயினரே, நம்மவர்கள், அந்தத் துக்கம் நம்மை அழுத்தி வாட்டியபோதும், அரும்பணியாற்றிட நாம் துளியேனும் தயங்காமல் சென்று இன்பத் திராவிடம் காண் என்றுரைக்க எழுச்சி ஊட்ட,

சென்ற திருத்தலங்கள் பட்டியல் காண்:

செல்லூர் ஆரிமுத்து மோட்டூர்
சங்கராப்பள்ளி காட்டுப்பாடி
காட்டுமன்னார்குடி வேலூர்
அம்மையப்பன்
சத்தியவிசயநகரம்
மன்னார்குடி அரூர்
திண்டுக்கல் சிக்களூர்
ஆம்பூர் மத்தூர்
குடந்தை கருங்கல்
வெங்கடநாயக்கன்பட்டி
நாகர்கோயில்
காஞ்சிபுரம் மடத்துவாசல்
திருவாரூர் கண்டன்விளை
சென்னை மருங்கூர்
வந்தவாசி ஜோலார்பேட்டை
ஆரணி திருப்பத்தூர்
ஓகளூர் கடியாச்சேரி

மீஞ்சூர் ஊத்தங்கரை

காஞ்சிபுரம் சென்னை

அம்மாசத்திரம்
அதிராம்பட்டினம்

சென்னை சேலம்

விருத்தாசலம் ஒடுகத்தூர்

சென்னை வாணியம்பாடி

சென்னை
பெருமாள்நாய்க்கன்பாளையம்

ராமாபுரம் சென்னை

சென்னை கீழ்மாரிமங்கலம்

வடக்காளூர் ஆலத்தம்பாடி

பச்சாம்பேட்டை கட்டக்குடி

காஞ்சிபுரம் சிறுபனையூர்

சென்னை ஆத்தூர்

ஆடையூர் பந்தநல்லூர்

சிங்காரப்பேட்டை தருமபுரி

கடுவன்காடு ஈரோடு

மதுராந்தகம் சென்னை

திருவில்லிப்புத்தூர் சென்னை

கோவை இலந்தங்குடி

வெண்ணந்தூர் புலியூர்

காடுவெட்டிவிடுதி
இராயநல்லூர்

குணவாசல்
செல்லப்பம்பாளையம்

ஒலக்கூர் சோமனூர்

கண்ணுக்கானூர்
குருவரெட்டியூர்

மிளகனூர் ஆண்டிப்பாளையும்

பெரும்பண்ணையூர்
கிரிசமுத்திரம்

வண்ணமங்கலம்
வெள்ளக்கோவில்

குரக்கவாடி பாவட்டக்குடி

சுவாமிமலை கல்லல்

சென்னை குச்சூர்

விளக்கம்பாடி உடன்குடி

முகந்தனூர் குண்டடம்

சின்னமனூர் திருமருகல்
சென்னை சென்னை
கண்ணுக்கானூர்
காட்டூர் மல்லம்பட்டி
சென்னை எட்டியலூர்
சென்னை வாழ்க்கை
பாப்பாம்பாடி தாம்பரம்
அரியலூர் அபிவிருத்தீஸ்வரம்
ஆதனூர் மலையம்பாக்கம்
ஒக்கநத்தம் அணைப்பட்டி
வெள்ளோடு வன்னிக்குடி
மப்பேடு சென்னை
நாகல்கழனி வீரப்பாண்டி
ஊழியபத்து
தேவர்கண்டநல்லூர்
வடுகபாளையம் ஆரணி
சாயிநாதபுரம்
மேலசன்னாநல்லூர்

பண்டரக்கோட்டை
ராமலிங்கப்பட்டி

ஆரணி சென்னை

சென்னை சென்னை

கோவை செங்கற்பட்டு

அலசூர் சென்னை

சென்னை காவேரிப்பாக்கம்

சென்னை தஞ்சை

கடலூர் அருப்புக்கோட்டை

ஜோலார்பேட்டை திண்டிவனம்

மானாமதுரை இரட்டணை

மணப்பாறை காஞ்சீபுரம்

சேடர்பாளையம் சென்னை

உக்கநத்தம் வந்தவாசி

திருவிடைமருதூர்
நசரத்பேட்டை

காட்டூர் திருநின்றவூர்

செண்பகச்சேரி
மேட்டுப்பாளையம்

வீராநந்தபுரம்
காட்டுமன்னார்குடி

தொட்டம்பாளையம்
திருவரங்கம்

மாதவரம் அரிசிக்கரை

விருகம்பாக்கம் இரியூர்

ஆலடிக் குமுளை

பெங்களூர் சென்னை

அகத்திலிங்கம்பாளையம்
அரியநாச்சிபாளையம்

வில்லிவலம்
கொல்லன்பிள்ளையார்

கோயில் மேலகுண்டலபாடி

சவிரியூர் சென்னை

அடியக்கமங்கலம் மன்னார்குடி

மதுரை திருப்புட்குழி

வேப்பனேரி
சத்தியவிசயநகரம் தொழுவூர்

அம்மையார்குப்பம்
வாணியம்பாடி

களக்காட்டூர் கோவை
சாந்திபுரம் சமுசிகாபுரம்
பல்வாய்க்கண்டன் இடைப்பாடி
குடியாத்தம் சென்னை
மணப்பாறை உட்கோட்டை
மணமேல்குடி பரமாக்கோட்டை
அறந்தாங்கி சரவணபுரம்
திருக்காட்டுப்பள்ளி
வைகுந்தன்
பூலாவரி கொடைக்கானல்
பாலையூர் பெரியகுளம்
மன்சுராபாத் (தஞ்சை
ஐயன்பேட்டை
சென்னப்பநாய்க்கன்
பாவிரெட்டிபட்டி
பாளையம் திருச்செங்கோடு
சென்னை மேட்டூர்
அணை அரையாளம்
அரங்கபாளையம் பம்பாய்

கடலூர் தண்ணீர்ப்பள்ளம்
கோவை தேரழுந்தூர்
தூத்துக்குடி நச்சினார்குடி
உடுமலைப்பேட்டை மேலூர்
வாளாவாடி வில்லிவாக்கம்
பல்லடம் புதுப்பாளையம்
திருப்பூர் திருப்பத்தூர்
கவுந்தப்பாடி கொருக்கை
கோபிச்செட்டிப்பாளையம்
கிருட்டினாபுரம்
சத்தியமங்கலம் புதுக்கோட்டை
பவானி ஆலங்கோட்டை
கணக்கன்பாளையம்
இளவலூர்
காரை நெய்வேலி
அம்மூர் பந்தல்குடி
இராணிப்பேட்டை
பெரியபெத்தானூர்
பேரணாம்பட்டு சோளிங்கபுரம்

குடியாத்தம் கடத்தூர்

காயல்பட்டினம்

நாச்சியார்கோயில்

தம்பி! நடைபெற்ற கூட்டங்களின் முழு விவரம் உடனுக்குடன் கிடைப்பதில்லை; கிடைப்பதனை அவ்வப்போது முறையாகப் போடவும் நமக்கு வசதி இல்லை. எனவே நான் திரட்டித் தந்துள்ளது எனக்குக் கிடைத்தவை. என் பார்வைக்குக் கொண்டுவரப்படாமல், நடைபெற்றிருக்கிற கூட்டங்கள் பலப்பல. சில ஊர்களில், குறிப்பாக சென்னையில் பல கூட்டங்கள் அடுத்தடுத்து வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்றுள்ளன.

இவ்வளவு ஊர்களிலும் கூட்டங்கள், திராவிட நாடு பகற்கனவு என்று கூறிவிட்டுச் சிலர் சென்ற பிறகு; ஒரு திங்களுக்குள்.

இந்தப் பட்டியலில். இலங்கைத்

தமிழர் பிரச்சினைபற்றி ஒரே நாளிலே பல ஊர்களிலே நடைபெற்ற கூட்டங்கள் சேர்க்கப்படவில்லை.

பொதுக்கூட்டங்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன. . . . கொடி ஏற்றுவிழாக் கூட்டங்கள், உறுப்பினர் கூட்டங்கள் இணைக்கப்படவில்லை.

இவ்வளவு கூட்டங்களிலும் திராவிட நாடு இலட்சிய நம்பிக்கை கொண்டவர்கள், அதற்காகப் பணியாற்ற உறுதி கொண்டவர்கள் கலந்துகொண்டனர். எழுச்சிக்கு என்ன குறை! இவ்வளவு கூட்டங்களிலும் கலந்துகொண்டவர்கள் ஏமாளிகள், விலகிச் சென்றவர்கள் மாமேதைகள் என்று எவரே துணிந்து கூறுவர். விலகியவர்களின் விளக்க அறிக்கைகளைப் படித்தான பிறகுதான், தம்பி! இத்தனை கூட்டங்களில் மக்கள் கூடினர்.

இவ்வளவு தொடர்ச்சியாகவும், பரவலாகவும், கழகக் கூட்டங்கள் நடைபெறுகின்றன; பொது மக்களின் பேராதரவு அத்துணை வளமாக இருக்கிறது என்பது விளக்கமாகிறதல்லவா? நாங்கள் விலகிய பிறகு, நாடே திகைத்துத் திணறி, கழகத்தை உதறி எரிந்துவிட்டது என்று எவரேனும் கூறினால், நம்பத்தான் முடியுமா - சொல்லத்தான் நா கூசாதா? இப்படிப்பட்ட கட்டுக்கோப்பான ஒரு கழகத்தைத்தான், சிலர் கோபத்தைக் கருவியாக்கி அழித்துவிடலாம் என்று காங்கிரசார் எண்ணுகின்றனர். என்னே அவர்தம் நப்பாசை!

இத்துணை ஊர்களிலும் இந்தப் பட்டியலில் சேர்க்கப் படாமல், விடுபட்டுள்ள இன்னும் சில ஊர்களிலும், ஏற்பட்டுள்ள எழுச்சி, ”பட்டுப்போ!’ என்று நம்மைவிட்டுப் போனவர்கள்

கட்டளையிட்டதும், பாழ்பட்டுப்போய் விடவா செய்யும்? மதியிலியும் கூறானே! அங்ஙனமிருக்க, கலகலத்துப்போய் விட்டது, கரைந்துபோய்விட்டது என்று கதைக்கிறார்களே காங்கிரசார் எற்றுக்கு? பீதி கிளப்பவா? இத்தனை ஊர்களிலும், கழகக் கூட்டங்களில் கலந்துகொண்டவர்கள், இவர்தம் கூற்றினைக் கேட்டுக் கைகொட்டிச் சிரிக்கமாட்டார்களோ! ஏன் இப்படி ஒரு அண்டப்புளுகு பேசித் திரிகிறார்கள்? - நமது ஊரில் நடைபெற்றதே கழகக்கூட்டம்; ஆர்வத்துடன் எழுச்சியுடன்! - என்று பேசாமலா இருப்பர்?

தம்பி! நடைபெற்ற கூட்டங்கள் போதும் என்று கூறவில்லை - இன்னும் நடைபெற வேண்டும் - ஒரு குக்கிராமம்கூட விடுபடாமல்! ஆனால் நடைபெற்ற கூட்டங்களில் பேசப்பட்டவை வெற்றுரை, நம்மைவிட்டுப்

போனவர்களின் பேச்சே, பேருரை என்றா கருதுவர்! பேதைக்கு, வாராதே அந்தப் பித்தம்!

விளக்கம் உரைத்தனர் - மறுப்புக்கு மறுப்புரைத்தனர் - மனமருள் போக்கினர் - வரலாறு காட்டினர் - ஆதாரம் கூறினர் - இனப் பண்புபற்றி எடுத்தியம்பினர் - வடவர் ஆதிக்கம்தனைக் காட்டிக் கண்டித்தனர் - ஐந்தாண்டுத் திட்டங்களிலே காணப்படும் ஓரவஞ்சனையையும், அயல்நாட்டுக் கொள்கையிலே உள்ள குழப்பத்தினையும், வெளிநாட்டுக் கடன் பளு ஏறுவதையும், வரிச்சுமையால் மக்கள் படும் அவதியினையும், விலைவாசி விஷம்போல் ஏறுவதனையும், வேலையற்றோர் தொகை பெருகி வருவதையும், இலங்கைத் தமிழர் படும் அவதியினையும், அது குறித்து நேரு சர்க்கார் அக்கறையற்றுக் கிடப்பதையும், ஊழல் நாற்றமடிப்பதனையும், ஊர் கெடுப்போருடன்

அரசு உறவாடிக்கிடப்பதையும், கள்ளச் சந்தை இருப்பதையும், அவரிடம் காங்கிரசு பணம் பெற்று தேர்தல் நிதி திரட்டுவதையும், இன்னோரன்ன பிறவற்றையும் எடுத்துரைத்தனர் நம் தோழர்! இவ்வளவும் மண்ணாகித்தான் போகும், ஏனெனில் மாமேதை உமைவிட்டுப் பிரிந்தாரே என்று பேசுவது, இந்நாட்டுக் காங்கிரசார்! எமைவிட்டுப் பிரிந்தப் பிறகுதானா, அவர் உமக்குக் கரும்பானார்! சாரு பருகியபின், சக்கையை வீசுதல்போல, வாய் கிளறி மொழி வாங்கி, பின்னர் வீழ்த்திடுவீர், யாரறியார்!! - என்றன்றோ கேட்கத் தோன்றுகிறது, ஏசித் திரிந்திடும், காங்கிரஸ் தலைவர்களை.

இத்தனை கூட்டங்களில் பேசியோர், பலப் பலர்; அவர்தம் பெயரெல்லாம் அறிந்தெடுத்துக் கூறிடவோ நேரம் எனக்கில்லை; நம் ஏடும் எல்லாம் தருவதாக

அமையவில்லை; எனவே, விடுபட்டுப் போயிருக்கும் சில பலரின் பெயர்கூட; தவறாக எண்ணற்க; குறைகாணின் திருத்திடுக; என்னால் முடிந்தமட்டும், இந்தக் கூட்டமதில் பேசி, நம் கொள்கைக்குப் பேராதரவு திரட்டிய தோழர்களின் பெயர் உரைப்பேன் - கேட்டுச் சிந்தித்திடுக; இவர் கூறும் வார்த்தையெல்லாம், வீணாகியா போகும் - விவேகிகள் சிலருக்கு அப்படியன்றோ ஓர் அற்ப ஆசை அலைமோதிக் கிடக்கிறது. கொள்கை அறிந்தவர்கள், விளக்கும் ஆற்றல் பெற்றவர்கள், வரலாறுதனைப் படித்து வகையான அறிவு கொண்டவர்கள், ஆராய்ந்து பார்த்ததனால் அரும் உண்மை கண்டவர்கள், இந்நாடு முன்னம் இருந்த நிலைதனை இலக்கியம் காட்டிட, கண்டு களிப்புற்றவர்கள், அவரெல்லாம் செல்கின்றார், அறிவுடன் ஆர்வம் காட்டி, கொள்கை பரப்புதற்கு! அணி

என்ன, அழகென்ன, ஆதார வகையென்ன, நடையின் மிடுக்கென்ன என்றெல்லாம் பேசி, நாட்டினர் பாராட்டுகின்றார்.

இவர் அளிக்கும் உரைகளுக்கு இல்லாத ஓர் ஆற்றல், நம்மை விட்டுப் போனவர்க்கு உண்டென்றா, நாடு சொல்லும்? செச்சே! நாடென்ன, நல்லதிது கெட்டதிது, என்றறியா மக்களுள்ள இடமா? இல்லையே! இயற்கையாய் அமைந்துள்ள அறிவுள்ள மக்களன்றோ இருக்கின்றார் இந்நாட்டில். அவர்க்கு இலட்சியத்தை அறிவித்து ஆதரவு திரட்ட, அரும்பணி ஆற்றினோரில், ஒரு சிலரின் பெயர் மட்டும் கூறுகிறேன். என் குறையால் விடுபட்டுப்போன பெயர் கூட்டி, பட்டியலைச் சரியாக்கும் பொறுப்பு உனக்குத் தம்பி!

அன்பழகன்

கே. ஏ. மதியழகன்

ஆனந்தன்

இரத்தினவேல் பாண்டியன்

சந்தானம்

மதுரை முத்து

செழியன்

பி. எஸ். மணி

இரா. சாம்பசிவம்

மதுரை சந்தானம்

இளம்வழுதி

காவேரி மன்னன்

தில்லை - வில்லாளன்

சாதிக் பாட்சா

அரங்கண்ணல்

பெரியகுளம் அனிபா

டி. கே. சீனிவாசன்

உடுமலை நாராயணன்

வி. எஸ். கோவிந்தராசன்

எஸ். ஏ. இராசமாணிக்கம்

அ. பொ. அரசு

குமாரபாளையம் சுப்பிரமணியம்

அப்துல் காதர்

ஈ. ஆர். கிருஷ்ணன்

சிவசங்கரன்

வெங்கடாசலம் (கிருஷ்ணகிரி)

கோ. சு. மணி

கமலநாதன்

டி. எம். பார்த்தசாரதி

ஜி. பி. சோமசுந்தரம்

டி. கே. பொன்னுவேலு

ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

சிட்டிபாபு

என். வி. நடராசன்

இராசாராம்

ஆம்பூர் சம்பங்கி

கே. ஆர்.

இராமசாமி
தம்பிதாசன்
இளவரசு
பவளவண்ணன்
எஸ். டி. சோமசுந்தரம்
கருணாகரன்
காஞ்சி கலியாணசுந்தரம்
சித்தூர் கேசவன்
இரா. நெடுஞ்செழியன்
நரசிம்மன்
டி. வி. நாராயணசாமி
எர்ரய்யா
எஸ். எஸ். இராஜேந்திரன்
மீஞ்சூர் கேசவன்
எம். ஜி. இராமச்சந்திரன்
பெங்களூர் சோழன்
சி. வி. எம். அண்ணாமலை
திராவிடமணி

கே. டி. எஸ். மணி

சத்தியவாணி முத்து

சி. எஸ். பூஞ்சோலை

எஸ். வி. பதி

மா. கி. தசரதன்

உசேன்

சி. வி. இராசகோபால்

சகாதேவன்

தி. சு. கிள்ளிவளவன்

டி. சீனிவாசன்

துணைமேயர் செல்வராசன்

இரா. வெங்கடேசன்

மு. கருணாநிதி

சரசுவதி

வெங்கடேசன்

முனு - ஆதி

வேலம்மையார்

தி. ந. சம்பந்தம்

சேலம் மெய்யப்பன்
கொளத்தூர் கோதண்டம்
முருகேசன் (அரூர்)
காசிவிசுவநாதன்
எஸ். முருகேசன்
வெங்கா
அன்பில் தருமலிங்கம்
வளையாபதி
முத்துகிருஷ்ணன்
எம். எஸ். மணி
டி. கே. கபாலி
திருவண்ணாமலை
முருகையன்
சா. கணேசன்
எம். பி. சாரதி
பொன்னிவளவன்
அழகமுத்து
கருத்தோவியன்
ப. உ. சண்முகம்

நெடுஞ்செழியன்
பராங்குசம்
சிற்றரசு
ராவி
முல்லை வடிவேலு
ஷெரிப்
முல்லை சத்தி
நெடுமாறன்
மதிவாணன்
இரா. தர்மலிங்கம்
வி. வி. சாமிநாதன்
காமாட்சி
பொன் சொக்கலிங்கம்
எம். எஸ். வெங்கடாசலம்
பாலகுருசாமி
மதுரை சீனி
வி. கிருஷ்ணமூர்த்தி
குளித்தலை முத்துகிருஷ்ணன்

எம். எஸ். சிவசாமி
இளமுருகு பொற்செல்வி
ஜோசப்
பொற்செல்வி இளமுருகு
தொ. ப. சீனிவாசன்
எம். எஸ். இராமசாமி
வ. குமாரசாமி
தென்னரசு
சைதை. சம்பந்தன்
பில்லப்பன்
கே. ஏ. கிருட்டினசாமி
அன்புரோசு
கோபால்
சடகோபன்
காஞ்சி மணிமொழியார்
அன்புக்கரசன்
மன்னை நாராயணசாமி
அறிவுடைநம்பி

பத்மநாபன்

டி. சபாபதி

கோ. சி. மணி

போரூரான்

கே. மனோகரன்

இராசரத்தினம்

இராதா

எத்திராசு

ஏ. கோவிந்தசாமி

கே. எம். இராசகோபால்

சேலம் ஜெயராமன்

குடவாசல் கிருட்டிணமூர்த்தி

கே. எஸ். அமிர்தம்

கிட்டப்பா

போளூர் சுப்பிரமணியம்

வையாபுரி

அறந்தாங்கி துரையரசன்

தங்கமுத்து

ஆரணி எத்திராசன்
சுந்தரராசன்
ஏழுமலை
பட்டு
கரிகாலன்
பெத்தண்ணன்
திண்டிவனம்
தங்கவேலு
சென்னை சு. பாலன்
மதுரை மாதவன்
ஏ. பி. ஜனார்த்தனம்
அறிவொளி
சி. ஆர் பாலசுந்தரம்
இராமானுசம்
காஞ்சி ராசாராம்சா
பேராவூரணி அடைக்கலம்
வந்தவாசி அண்ணாமலை
எம். கிருஷ்ணமூர்த்தி

எஸ். கே. ரசாக்

ஜி. எம். இஸ்மாயில்

அப்துல்

டாக்டர் விஜயராகவன்

குத்தூஸ்

ஜமால்

அப்பாஸ்

கோவை இராமநாதன்

அன்சார்

பாலகிருஷ்ணன்

டி. கே. சிவகுமரன்

ஜகந்நாதன்

ஏ. எம். ஏ. ரகீம்

என். அசோகன்

கோபி. இராசு

ஆசைத்தம்பி

கரிவேங்கடம்

கோ. செங்குட்டுவன்

அகிலன்
டி. என். கிருஷ்ணன்
கே. ஆர். சபாபதி
ஏ. எஸ். வேலு
அழகிய நம்பி
அலமேலு
அப்பாதுரை
எட்மண்ட்
செ. கோ. பலராமன்
என். வி. என். சோமு
இளங்கோவன்
முத்துக்கலிங்கன்
ஆடலழகன்
மலையரசன்
அழகிரிசாமி
அறிவழகன்
பொன். தருமன்
நீலநாராயணன்

காட்டூர் ராமைய்யா
துரைக்கண்ணு
பி. ஆர். கோகுலகிருட்டிணன்
வேதாசலம்
கே. பெரியசாமி
ஜேசுபாதம்
தமிழ் அழகன்
கே. எம். கண்ணபிரான்
தனக்கோடி
ஞானமுத்து
சபாஸ்டியன்
தனபால்
கோ. துறவி
துரை
கமால் பாட்சா
கபாலமூர்த்தி
இஸ்மத் பாட்சா
அரங்கநாதன்

யூசூப்தீன்
ஜேவியர்
சாவித்திரி
சபாபதி
ஆலடி - அருணா
மயிலை வேலு
தென்னவன்
உடுமலை கோவிந்தசாமி
மேத்தா
மயிலை மாறன்
விமலாதித்தன்
மாசிலாமணி
டி. ஜே. நாதன்
முகம்மது அலி
காட்டூர் கோபால்
என். டி. ஏ. சமது
திராவிடமணி
சந்தப்பன்

கந்தப்பன்
முத்தீசுவரன்
கலியமூர்த்தி
பி. சிவாநந்தம்
பால்ராசன்
இளஞ்சேரன்
கு. கணபதி
கு. சுல்தான்
ஈரோடு பெருமாள்
பி. காதர் மொய்தீன்
எம். கிருட்டிணன்
தமிழ்ச்செல்வன்
புஞ்சைப்புளியம்பட்டி சாமிநாதன்
தஞ்சை அன்சாரி
வெ. சம்பந்தன்
நயினா முகமது
ஈ. எம். அனீபா
சாகுல் அமீது

எம். செல்வராஜ்
முகமுது கனி
சி. நடராஜன்
பட்சிராசன்
பூ. சின்னசாமி

இவ்வளவு இருக்க ஏனண்ணா! கவலை உனக்கு என்றுதானே தம்பி! கேட்கின்றாய். ஆமாம், தம்பி! அரும் பணியாற்றி என்னை அகமகிழவைப்பதற்கும், தகும் செயலாற்றி நமது தாய்நாட்டை மீட்பதற்கும், இத்துணை வீரர் இங்கு திரண்டெழுந்து நிற்குங்காலை, என்னையும் பிரிந்து இந்த ஏற்புடைக் கழகம் விட்டேகி, கொள்கையும் துறந்து கோலோர் குதூகலம் கொள்ளும் வண்ணம், கடுமொழி பேசுவோரின் போக்கினால், இனிக் கவலைகொள்ளேன்; கழகமே நமக்குக் காப்பு; நாமதன் காவலர்காண்; நமக்கினி

உள்ள வேலை, மிகுதியாய் வளர்ந்தது; நாம் அதற்கேற்ப, தொண்டு ஆற்றியே நிற்போம்; இந்தியர் ஆகவேண்டி இனம் விட்டும் மாற எண்ணும் போக்கினர், பொன் பொருள் பலவும் பெற்றுப் பூரித்துக் கிடக்கட்டும், தம்பி! எலும்பும் தோலுமாக நாம் இளைத்திடுவ தேனும் உழைத்திட அஞ்சோம்; இஃது உறுதி, உறுதி என்றே எழுப்புக முழக்கம்; இகல் வெல்வோம், இன்னுயிர் போவதேனும்.

அன்புள்ள

அண்ணாதுரை

28-5-61

41. 2 திரும்பிப்பார் !

தி. மு. கவும் காங்கிரசும் -
விலகியோர் விருது பெறுதல் -

தம்பி!

”முட்டாள்கள் கூட்டத்தார் ஆளவந்தார்
முந்நான்கு வருடங்கள் போன பின்பும்
கெட்டோமே! ஆடைக்கும் நிழலினுக்கும்
கிள்ளுகிற பசி தீர்க்கும் உணவினுக்கும்
கொட்டாவி விட்டோமே! விடுகின்றோமே!
குறையாத வறுமைக்கே ஆளானோமே!
பட்டாயே தமிழா! இம்மடையர் ஆளும்

பாரதத்தின் ஒற்றுமையா இன்னும் கேட்பாய்.”

எனக்கு உள்ளபடி கோபம் - என்னதான் ”கிள்ளுகிற பசி’ இருந்தாலும், ஆட்சி நடத்தும் கட்சியினரை, முட்டாள் என்றும் மடையர் என்றும் மிகக் கேவலமான முறையிலே ஏசுவது கேட்டு. பாட்டாக இருந்தால் மட்டுமென்ன, இப்படியா, தேள்போலக் கொட்டவேண்டும். வள்ளுவர் பன்னிப்பன்னிச் சொல்கிறாரே, கனியிருக்கக் காய் கொள்ளற்க என்று. ஏன் இந்தத் தம்பி இவ்வளவு கடுமொழியைக் கவிதை வடிவாக்கித் தரவேண்டும் என்று கோபம். வேண்டாம், தம்பி, நான் இதுபோன்ற கவிதைகளை இதழில் வெளியிட முடியாது என்று கண்டிப்பாகவே சொன்னேன். பாடிக்காட்டிய தம்பி, கையில் ஒரு கத்தை காகிதம் வைத்திருக்கக் கண்டேன் - சரி - சரி - இதுபோல நிறைய இருக்கும் போலிருக்கிறது;

வெளியிடச் சொல்லிக் கேட்கத்தான் வந்திருக்கிறார் என்ற எண்ணத்தில், அவ்விதம் சொன்னேன். என் கோபத்தை அந்தத் தம்பி பொருட்படுத்தியதாகவே தோன்றவில்லை.

“அண்ணா! இப்போது நான் பாடிய கவிதை, இதழில் வெளியிடுவதற்காக, நான் கொண்டுவந்திருப்பது அல்ல, ஏற்கனவே இதழில் வெளியிடப்பட்டு, நமது கழகத்தவர் படித்தது’’ என்றான். சொல்லிவிட்டு,”அண்ணா! வார்த்தைகளின் கடினம் இருக்கட்டும்; கடுமொழி கூடாது என்ற தங்கள் பேச்சை நான் தட்டி நடக்கவில்லை; ஆனால் இதை எடுத்து வீசிய பிறகுதான் வெகுண்டெழுந்து வாதிட்ட தோழர் ஓட்டம் பெருநடையாகச் சென்றுவிட்டார்’’ என்றான் அந்தத் தம்பி.

”வாதிட்டனையா? எவரிடம்?

ஏன்? நான், கேட்போரிடம், விளக்கம் உரைத்திடச் சொன்னேனேயன்றி, வாதிடவா சொன்னேன். வாதம் நடந்தது என்று சொல்லுகிறாய், என்னென்ன வம்புச்சண்டை போட்டுவிட்டனையோ என்றெண்ணி கலக்கமடைகிறேன். நடந்தது என்ன? கூறப்பா!'' என்று கேட்டேன்.

"பிரிவினை நடைபெறாதாம் அண்ணா! திருஇடம் அமைக்கவிடமாட்டார்களாம்! தீர்த்துக் கட்டிவிடுவார்களாம், அந்தத் திட்டத்தை. தீப்பொறி பறக்கப் பேசினால்கூட, நான் கவலைப்படமாட்டேன் - உனக்கே தெரியும் - உன் தம்பியாவதற்கு முன்பு தொட்டதற்கெல்லாம் கோபம் வரும் - மட்டிப்பயலே! என்றுதான், எவன் எதிர்த்தாலும் பேசுவேன் - பெட்டிப்பாம்பு ஆகிவிட்டேன், உன் பேச்சைக் கேட்டுக்கேட்டு - அதனால் இப்போது கோபம் எழவில்லை - ஆனால் மிகக்

குறும்பாகப் பேசினார் ஒரு நண்பர். தாள முடியவில்லை. கடைசியில், அவருக்கு, இந்தக் கவிதையைத்தான் கொடுத்தனுப்பினேன். - இன்னொன்றும் சேர்த்து. அவர் பிரிவினை கூடாது! வடநாடு தென்னாடு என்று பேசுவது ஆகாது! என்று பேசினார்; அதற்காக ஒரு கவிதை!'' என்றான், தம்பி.”அது என்ன கவிதையோ!'' என்று நான் கேட்க, தம்பி அதனையும் பாடிக் காட்டினான்.

”வடநாடா தென்னாடா? யாருரைத்தார்!

வாழ்கின்ற மாந்தரெல்லாம் ஓரினத்தார்.

நடவாது! நடவாது! பிரிவினைத் தீ

நம் நாட்டைப் பாழாக்கும்;

விடவே மாட்டோம்!”

படிதாண்டாப் பத்தினிகள் முழங்கினார்கள்

பண்டிதரோ அவர் வாயைத் திறக்கக்கூறி

பிடிமண்ணைத் திணிக்கின்றார்! மெல்கின்றார்கள்!

பிறிதொன்றைப் போட்டாலும் விழுங்குவார்கள்.”

“நடந்ததைக் கேள் அண்ணா! என் நண்பன், எப்போது இவ்வளவு பழுத்த காங்கிரஸ்வாதியானானோ தெரியவில்லை. அவனுடைய அப்பா, சேர்த்த சொத்து அவ்வளவும், கள்ளுக் கடை நடத்தியதில் கிடைத்தது. இவனோ கல்லூரியில், வெள்ளையன்போலத்தான் உடுத்திக்கொண்டு வருவது வாடிக்கை.

இப்போது, குடும்பமே காங்கிரசாம்! கூடல்துறை கட்டும்”காண்ட்ராக்ட்’ இவன் அப்பாவுக்கு. அமைச்சர் வந்திருந்தார் விழாவுக்கு. காங்கிரஸ் பக்தி முற்றிவிட்டது மகனுக்கு, என் நண்பனுக்கு. வேண்டுமென்றே, என்னிடம் வம்புக்கு வந்தான் - நமது கழகத்திலிருந்து சிலர் விலகியதைக் காரணமாகக் காட்டி. எங்கள் உரையாடலைக் கூட்டாமல் குறைக்காமல் தீட்டிவந்திருக்கிறேன்; நாட்டவர் அறிவது நலன் பயக்கும் என்ற எண்ணத்தில்’’ - என்று கூறி, கையில் வைத்திருந்த கட்டுரைச் சுருளைக் கொடுத்தான். படித்துப் பார்த்தேன் - பாட்டுக்கள் தவிர, மற்றவை பலன் தருவனவென்று தெரிந்தது. இதோ, அது.

காங்கிரஸ் கட்சி தொண்டர்: வாப்பா, கழகம்! என்ன உங்க கழகத்திலே இப்படிக் குழப்பம். . . .?

தி. மு. க. தொண்டர்: குழப்பமெல்லாம் தீர்ந்துவிட்டதே. நீ என்னப்பா தூங்கி விழித்தவன் கதைபோலப் பழைய விஷயம் பேசுகிறாயே. . . .

கா. க. : ஒரே அடியாக மூடி மறைக்கிறாயே! பெரிய புள்ளி எல்லாம் கழகத்தைவிட்டு வெளியேறித் தனிக்கட்சி அமைத்துக்கொண்டு, உங்களை வெளுத்து வாங்கு கிறார்கள், நாள் தவறாமல்.

தி. மு. க. : அட, அதைச் சொல்கிறாயா? உள்ளே இருந்து உருக்குலைப்பதைவிட, கூடஇருந்துகொண்டே, குமுறிக் கொண்டிருப்பதைவிட, சமயம் பார்த்துக் குழப்பம் செய்வதைவிட, தனியே போய்விடுவது நல்லதுதானே, யாராருக்குக் கழகம் பிடிக்கவில்லை, கழக இலட்சியம் பிடிக்கவில்லை என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

கூடஇருப்பவர்களிலேயே, யாருக்கு, எந்த நடவடிக்கை பிடிக்கவில்லையோ, எந்தக் கொள்கை பிடிக்கவில்லையோ, எந்தத் திட்டத்தை எந்த நேரத்தில் கெடுத்துவிடுவார்களோ என்று நிலை இருப்பதுதான் ஆபத்து; அனாவசியமான குழப்பம் தருவது.

கா. க. : போனவர்கள் போகட்டும் என்கிறாயா?

தி. மு. க. : அப்படிச் சொல்லுவேனா? கூடப் பழகியவர்கள், கழகம் வளர்த்தவர்கள், பிரிந்து போகிறார்கள் என்றால், அலட்சியம் காட்ட முடியுமா? வருத்தம் இருக்கத்தான் செய்யும். ஆனால் என்ன செய்யலாம்? அவர்களுக்கு மனம் அப்படி ஆகிவிட்டது.

கா. க. : கழகம் கலகலத்துத்தானே போகும்?

தி. மு. க. : எதனால்?

கா. க. : விலகிச் சென்றவர்கள் பலமுள்ளவர்கள் - செல்வாக் குள்ளவர்கள் - கழகத்தின் முதுகெலும்பு - ஜீவநாடி.

தி. மு. க. : அடே அப்பா! இவ்வளவு புகழ்ச்சியா, அவர்கள் விலகியவுடன்! இங்கு அவர்கள் இருந்தபோது, கிள்ளுக் கீரை என்றீர்கள்; தள்ளு குப்பையில் என்றீர்கள். எங்களோடு இருந்தபோது எருக்கம்பூ! இப்போது மணமல்லி! எங்களோடு இருந்தபோது கூழாங்கல்! இப்போது வைரம்! இப்படி இருக்கிறது உங்கள் நோக்கும், போக்கும்.

கா. க. : உவமானம் பேசிப்பேசித்தானே ஊரை மயக்குகிறீர்கள்.

தி. மு. க. : அதென்னப்பா அப்படிச் சொல்லிவிட்டாயே! உன் வாயிலே உவமானம்

நுழையாதா? பேசித்தான் பாரேன்!

கா. க. : நான் சொல்கிறேன், இப்போது உங்கள் கழகத்தை விட்டுப் போய்விட்டவர்கள் பலசாலிகள் - புத்திசாலிகள் - செல்வாக்கானவர்கள். அவர்கள் பிரிந்த பிறகு, கழகம் கலையும், கரையும், ஒழியும். . .

தி. மு. க. : பேச்சிலே பொருளே இல்லையே! நீ சொல்வதுபோல, விலகிச் சென்றவர்கள் மிகுந்த பலசாலிகள், செல்வாக்கு உள்ளவர்கள் என்றால், அவர்கள் அல்லவா, தங்கள் வழிக்குக் கழகத்தை மாற்றி மற்றவர்களைத் துரத்திவிட்டுக் கழகக் காவலராகியிருப்பார்கள். இது புரியப் பிரமாதமான அறிவுகூடத் தேவையில்லையே -

கா. க. : அப்படியென்றால், அவர்கள் பிரிந்ததால், கழகத்துக்கு நஷ்டம் இல்லவே இல்லையா. . .?

தி. மு. க. : ஏன் இல்லை! கஷ்டமும் உண்டு, நஷ்டமும் உண்டு.

கா. க. : அப்படிச் சொல்லு. இப்படி, உங்கள் கழகத்தைவிட்டு வெளியேறுகிறார்கள்; இனி எப்படி உங்கள் கழகம், வாழும் வளரும்?

தி. மு. க. : இராசகோபாலாச்சாரியார் உங்கள் காங்கிரசைவிட்டு விலகித் தனிக்கட்சி அமைத்து, உங்கள் வண்டவாளங்களை வெளுத்துக் கட்டுகிறாரே, உங்கள் காங்கிரஸ் கட்சி கலைந்ததா, கரைந்ததா, குலைந்ததா? நீங்கள் என்ன மூலையில் முக்காடிட்டா உட்கார்ந்துவிட்டீர்கள்?

கா. க. : ஒரே ஒரு ஆசாமி. . . .?

தி. மு. க. : இப்போது அவர் ஆசாமி! முன்பு? ஆச்சார்ய சுவாமி!

கா. க. : அவர்தானா, காங்கிரஸ்?

தி. மு. க. : காங்கிரசுக்கு வேதம், உபநிஷத், கீதை எல்லாம் அவர் பேச்சிலே கிடைக்கிறது என்று சொன்ன தேசிய வாய்தானேயப்பா, உன்னுடையது?

கா. க. : ஒரே ஒருவர் - பெரியவர் - போய்விட்டார். . . . .

தி. மு. க. : அவர் மட்டுமா? ஜெயப்பிரகாஷ்நாராயண் - டாக்டர் லோகியா - அசோக்மேத்தா - ஆச்சார்ய கிருபளானி -

கா. க. : பழைய கதை. . . .

தி. மு. க. : இராமசாமி படையாச்சி - காரைக்குடி கணேசன். . .

கா. க. : விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர்.

தி. மு. க. : எங்களைவிட்டுப் பிரிந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்க, இருக்கும் விரல் போதாமல், இரவல் வாங்க

வேண்டி வருகிறதா!

கா. க. : கொள்கைச் சண்டை - தத்துவத் தகராறு - எங்கள் கட்சியில். . . .

தி. மு. க. : அப்படியா! பலே! பலே உத்திரப்பிரதேசத்தில் சம்பூரணானந்தாவுக்கும் குப்தாவுக்கும் நடந்தது தத்துவச் சண்டையா? ஓடி ஓடித் தீர்த்துவைக்க முயன்றாரே நேரு பண்டிதர்! ஓயாமல் நடந்ததே தகராறு. சிரிப்பாய்ச் சிரித்ததே ஊர். பதவிச் சண்டை அல்லவா, அது!

கா. க. : அந்த ஒரு அசங்கியம் நடந்தது உண்மைதான்.

தி. மு. க. : ஒன்றே ஒன்றா! ஏனப்பா, பீகாரிலே, சின்னா கோஷ்டிக்கும் ஜெயின் கோஷ்டிக்கும் "சடுகுடு' விளையாட்டா நடந்தது? அதுவும் பதவிச் சண்டைதானே!

ஒரிசாவிலே, மேத்தாப்புக்கும் மற்றக் காங்கிரசுத் தலைவர்களுக்கும் நடந்தது என்ன"மாடுபிடி' சண்டையா? பதவிதானே! மைசூரில், ஜட்டிக்கும் நிஜலிங்கப்பாவுக்கும் நடந்தது என்ன? பந்தாட்டப் போட்டியா? பதவிச் சண்டைதானே? ஆந்திராவில், சஞ்சீவய்யாவுக்கும் சுப்பா ரெட்டியாருக்கும் நடந்தது என்ன, சங்கீத ஆவர்த்தனமா? சண்டைதானே, பதவிக்காக! பஞ்சாபிலே, கெய்ரான் கோஷ்டிக்கும், மற்றக் காங்கிரஸ் கோஷ்டிக்கும் என்ன நடந்தது? பதவிச்சண்டை அல்லவா? கேரளத்திலே, காங்கிரசுக்குள், கோஷ்டிச்சண்டை இல்லையா!! இவ்வளவுக்குப் போவானேன், டில்லி பாராளுமன்றத்திலே கட்சித் துணைத்தலைவர் யார் என்பதற்காக, மொரார்ஜி தேசாய்க்கும் ஜெகஜீவன்ராமுக்கும் ஏற்பட்ட போட்டி, நேரு பண்டிதரையே

கிடுகிடுக்க வைத்துவிட்டதே. பதவிச் சண்டை அல்லவா அது?

கா. க. : சரி, காங்கிரஸ் கட்சியிலும் பதவிச்சண்டை இருக்கிறது என்றே வைத்துக்கொள்வோம். ஆனால் அதெல்லாம் கடைசியிலே தீர்க்கப்பட்டுப் போய்விட்டனவே தவிர, தெருச்சண்டையாகவா உருவெடுத்தது?

தி. மு. க. : தெருச்சண்டையைவிட மோசமான செயலெல்லாம் நடந்ததே! ஒரு கோஷ்டியை எதிர்த்து இன்னொரு கோஷ்டி கையெழுத்து வாங்குவது! கண்டன அறிக்கைகள் வெளியிடுவது! மறுப்புக் கூட்டங்கள் போடுவது! இதெல்லாம் தரமான, காரியமா? உங்கள் கட்சித் தலைவர் சஞ்சீவிரெட்டியாரே கட்சிக்குள்ளே இருக்கும் தகராறுகளை, வெளியே பேசாதீர்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாரே, கவனம் இல்லையோ! நாங்கள் ஆளும் கட்சி

அல்ல. எதிர்க்கட்சி. அதிலும் துவக்கி 12 - வருடமாகிறது. உங்கள் கட்சியோ, ஆட்சி நடத்தும் கட்சி! ஊருக்கு உபதேசம் செய்யும் கட்சி! பாருக்கெல்லாம் பஞ்சசீலம் போதிக்கும் கட்சி! அதனுடைய இலட்சணம் இப்படியா இருப்பது? உங்கள் உடலில் குருணி அழுக்கை வைத்துக்கொண்டு, எங்களைக் கேலிசெய்ய வந்து விட்டீர்களே; வெட்கமில்லையா, உங்களுக்கு?

கா. க. : எவ்வளவு கருத்து வேற்றுமை இருந்தாலும், கடைசியில், எங்கள் கட்சியிலே கட்டுப்பாடு வெற்றி பெறும்; கட்சிதான் பெரிது என்ற முடிவுக்குத்தான் வருவார்கள்.

தி. மு. க. : அப்படி இருந்திருந்தால், ஆந்திரத்து ரங்கா, இப்போதும் காங்கிரஸ் கட்சியில்தானே இருந்திருக்க வேண்டும்! இல்லையே!!

கா. க. : அவருக்குப் பதவிமோகம்; அதனால் தனிக்கட்சி துவக்கினார்.

தி. மு. க. : அப்படியா! உங்கள் கட்சியிலிருந்து, யாராவது கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் விலகிவிட்டால், அதற்குக் காரணம் அவர்களுக்குள்ளே பதவிமோகம்! எங்களிட மிருந்து எவரேனும் விலகிவிட்டால், அது வீரம், விவேகம், தியாகம்! அப்படித்தானே!!

கா. க. : சிலபேர் இருக்கிறார்கள் எங்களிடமும் சுயநலமிகள். . .

தி. மு. க. : அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்ற கட்சியிலேயே, சிலர் சுயநலமிகளாக இருக்கிறார்கள்; தங்கள் சுயநலம் பலிக்கவில்லை என்றால், வெளியே போய்விடுகிறார்கள்; புதுக்கட்சி ஆரம்பிக்கிறார்கள் என்றால், அதிக அனுபவம் பெறாத, எங்கள் கட்சியிலே,

சிலர் கட்டுப்பாட்டுக்கு மதிப்புத் தரவில்லை என்பதிலே, வியப்பு என்ன இருக்கமுடியும்? ஒன்று கேட்கிறேன். சொல். இந்த 12 வருடங்களில், எங்கள் கழகத்தைவிட்டு வெளி யேறிய "குறிப்பிடத்தக்கவர்கள்' எத்தனை பேர்? உங்கள் கட்சியிலே, எத்தனை பேர்? கணக்குச் சொல்லு பார்ப்போம்!!

கா. க. : அதெல்லாம் தெரியாது எங்களுக்கு. உங்களோடு இருந்தவர், இப்போது திராவிட நாடு வேண்டாம் என்கிறார், அதுதான் முக்கியம்.

தி. மு. க. : திராவிட நாடு கூடாது என்று, உங்கள் மேலான தலைவர்கூடத்தான் சொன்னார். வேறு எத்தனையோபேர் சொன்னார்கள். அதனால் என்ன? பத்தோடு பதினொன்று; அத்தோடு இது ஒன்று! வேறென்ன? அந்த அளவுக்குக்கூட, "மவுசு' ஏற்பட்டதற்குக் காரணம் உங்கள்

பத்திரிகைகள் கொடுக்கும் விளம்பரம். அதைக் கண்டதுமே, புத்தியுள்ள வர்களுக்கு, உண்மை புரிந்துவிட்டதே! நீங்கள் தூக்கி விடுகிறீர்கள் - தூபம் போடுகிறீர்கள் என்ற உண்மை.

கா. க. : நாங்கள் ஒன்றும் அவர்களைத் தேடிக்கொண்டு ஓடவில்லை; ஆள்பிடிக்க! அவர்களாகத்தான் இளித்துக் கொண்டு எங்கள் தயவைத் தேடிவருகிறார்கள்.

தி. மு. க. : பொறு, அப்பா, பொறு இதற்குள், அவர்களை ஏச ஆரம்பித்துவிடாதே. இன்னும், அவர்களை எங்கள் பேரில் ஏவி எவ்வளவோ காரியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டி இருக்கிறது; இதற்குள் நீங்கள், ஒருவரை ஒருவர் கேவலமாகப் பேசிக்கொள்ளாதீர்கள்.

கா. க. : எங்களுக்கொன்றும் அவர்கள் தயவு தேவை இல்லை.

தி. மு. க. : அப்படிச் சொல்லிவிடலாமா? திராவிட நாடு பிரச்சினையை எதிர்க்க உங்களுக்கு இன்று கிடைத் திருக்கிற ஒரே ஒரு "ஆயுதம்' இதுவல்லவா! இதைத்தானே"மலை'போல நம்பிக்கொண்டிருக்கிறீர்கள்.

கா. க. : அப்படியே ஒன்றும் இல்லை.

தி. மு. க. : சொல்லிவிட்டால் போதுமா! செயல், காட்டுகிறதே, உங்களுக்கு இருக்கிற பஞ்சப்புத்தியை. திராவிடநாடு பிரச்சினையை எதிர்க்க நேருவும் மொரார்ஜியும் போதவில்லை உங்களுக்கு. காமராஜரும் சுப்பிரமணியமும், இதற்குத் தக்கவர்கள் என்ற தைரியம் வரவில்லை உங்களுக்கு.

கா. க. : சொன்னோமா, அப்படி?

தி. மு. க. : சொல்லவேண்டுமா! நேருவும்

மொரார்ஜியும் காமராஜரும் சுப்ரமணியமும் இருக்கிறார்கள், திராவிட நாடு பிரச்சினையை ஒழித்துக்கட்ட என்ற தைரியம் உங்களுக்கு இருந்தால், இப்படி, யார் கிடைப்பார்கள், தூபம் போட்டு ஆட்டிவைக்கலாம் என்று அலைந்து திரிவீர்களா? உங்கள் தலைவர்களின் பேச்சு, நாட்டிலே செல்லவில்லை என்பது உங்கள் எண்ணம். இப்போது, எங்களிடமிருநது பிரிந்து வந்தவர்களைப் பிடித்துக்கொண்டு, கரை சேரலாமா என்று பார்க்கிறீர்கள். "எங்களோடு இருந்தவர்கள்' என்பதற்கே, இவ்வளவு செல்வாக்கு! பார்த்தீர்களா!!

கா. க. : நாங்கள் ஒன்றும், திராவிட நாடு பிரச்சினையை ஒழிக்க, உங்களுடைய மாஜித் தோழர்களை நம்பிக்கொண்டு இல்லை. எங்களுக்கு எங்கள் சொந்த வலிவிலே, நம்பிக்கை இருக்கிறது.

தி. மு. க. : ரோஷம் இருக்கிறது -

பேச்சில்! செயலில் காணோமே! உள்ளபடி உங்களுக்கு உங்கள் சொந்த வலிவிலே நம்பிக்கை இருந்தால், எங்கள் மாஜி நண்பர்களின் பேச்சை இந்த அளவுக்கு வேதம்போலாக்கி, உச்சரித்துக்கொண் டிருப்பீர்களா! பஜனையல்லவா பாடுகிறீர்கள்! அவரே சொல்கிறார்! அவரே எதிர்க்கிறார்! அவரே திராவிட நாடு கற்பனை என்று கூறுகிறார் - என்று ஏகாரம் போடுகிறீர்களே, இது எதைக் காட்டுகிறது? எங்கள் பேச்சுத்தான் செல்லாக்காசாகிவிட்டது, உங்களோடு இருந்தவர்களே, சொல்கிறார்களே - எங்கள் பேச்சைக் கேட்காது விட்டுவிட்டாலும், இவர்கள் பேச்சையாவது கேட்கக்கூடாதா என்று "சிபாரிசு'க் கடிதம் வாங்கிக் கொண்டல்லவா வருகிறீர்கள்.

கா. க. : எங்களுக்கு ஒன்றும் அவர்கள் "சிபார்சு' தேவையில்லை.

தி. மு. க. : அந்த "சிபார்சு'க் கடிதத்தை நீட்டுவது தவிர, உங்களுக்கு இப்போது வேறு வேலையே காணோமே.

கா. க. : உங்களோடு இருந்த ஒருவர் திராவிட நாடு கூடாது என்று பேசினால், நாங்கள் அதை எடுத்துக் கூறக்கூடாதா?

தி. மு. க. : கூறலாம், நண்பரே! தாராளமாகக் கூறலாம். ஆனால் எப்படி? இத்தனை காலம், அந்தகாரத்தில் உழன்று கொண்டிருந்தவருக்கு, இப்போதுதான் அறிவுக்கண் திருந்திக்கொண்டவர்களை வாழ்த்துகிறோம். இனியேனும் அவர்கள் நல்வழி நடப்பார்களாக!! - என்று இப்படி அல்லவா இருந்திருக்கவேண்டும் உங்கள் பேச்சு! அப்படியா இருக்கிறது! பசித்தவனுக்குப் பனம்பழம் கிடைத்ததுபோல அல்லவா, அவர்களைப் பயன்படுத்துகிறீர்கள்!!

கா. க. : ஐயோ, பாவம்! இத்தனை காலமாகத்தான் கெட்டு அலைந்துகிடந்தார்களே, இப்போது நல்ல புத்தி ஏற்பட்டது, இனி நல்லவழி நடப்பார்கள் என்று எதிர்பார்த்து, நாலு நல்ல வார்த்தை சொல்லுகிறோம்.

தி. மு. க. : திராவிட நாடு திட்டத்தை அவர்கள் எதிர்க்க ஆரம்பித்த உடனே, அறிவாளரே வருக! ஆண்மையாளரே வருக! நாணயவான்களே வருக! நேர்மையின் பிறப்பிடமே! இருப்பிடமே! முடிவிடமே! வருக! வருக! என்று அர்ச்சிக்கிறீர்கள் - உங்களைப்பற்றி அவர்கள் சொன்னது என்ன? இப்போதும் சொல்வது என்ன? என்பதுபற்றித் துளிகூட எண்ணிப் பார்க்காமல், இப்போதாவது, உங்களை, உங்கள் தலைவர்களை அவர்கள் மதிக்கிறார்களா?

கா. க. : தங்கள் மாஜித் தலைவர்களைக் கண்டிக்கிறார்கள்.

தி. மு. க. : அது போதும் என்கிறீர்களா? இதுதான் பஞ்சப் புத்தி என்பது! உங்கள் தலைவர்களை மதிக்கிறார்களா என்றுகூடக் கவனிக்கமாட்டீர்கள் போலிருக்கிறது! ஐயா! அவர்களுக்குத் தங்கள் மாஜித் தோழர்கள் - ஆகியோரிடம் மதிப்புப் போய்விட்டது; மனம்போன போக்கில் ஏசுகிறார்கள். ஆனால், கவனித்துப் பார்த்தால் தான், உங்களுக்கு உண்மை தெரியும். அவர்களுக்கு, முன்பு இருந்த இடத்துத் தலைவர்களிடம் மதிப்புக் கெட்டு விட்டதும், என்ன செய்கிறார்கள்? தாங்களே "மதிப்பு'த் தேடும் தலைவர் ஆகிறார்கள்! புரிகிறதா! உங்கள் தலைவர்களிடம் "மதிப்பு'க் காட்டவில்லை. காட்டுவ தானால், "தேசபக்தர்களே! தேசியத் தலைவர்களே! உங்கள் வார்த்தைகளை

மதிக்காமல், உண்மையை உணராமல், இதுநாள் வரையில் உழன்று கிடந்தோம். புத்தி வந்தது. பிழை பொறுத்திடுக! மன்னித்திடுக!" என்று இறைஞ்சி, காங்கிரஸ் தலைவர்களை ஏத்தி ஏத்தித் தொழுது, மன்னிப்புபெற மண்டியிட்டுக் கிடப்பார்கள். ஆனால் அவர்கள் செய்வது என்ன? தி. மு. க.வைத் திட்டு கிறார்கள் - காங்கிரசைப் போற்றவில்லை! தி. மு. க. தலைவர்களை வசைபாடுகிறார்கள் - காங்கிரஸ் தலைவர்களை வாழ்த்தவில்லை. புரிகிறதா நிலைமை? உண்மை தெரிகிறதா? தி. மு. க. தலைவர்களைத் தூற்றி, உங்கள் தலைவர்களைப் போற்றவில்லை, உங்கள் நாக்கிலே தேன்தடவி, உங்கள் உதவியைப் பெற்று, அவர்கள் தலைவர்கள் ஆகப் பார்க்கிறார்கள். இது தெரியாமல், தி. மு. க. தலைவர்களைத் தூற்றப் புதியவர்கள் கிடைக்கிறார்களே என்ற

அற்ப சந்தோஷத்திலே நீங்கள் மூழ்கி ஏமாளிகளாகிறீர்கள்.

கா. க. : நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல. தி. மு. க. தலைவர்கள்தான் உண்மையில் ஏமாளிகள்!

தி. மு. க. : நிச்சயமாக இல்லை. இருந்திருந்தால், விலகியவர்கள் தி. மு. கழகத்தையே தங்கள் இஷ்டப்படி மாற்றிவிட இடம் கிடைத்திருக்குமே. முடிந்ததா? அவர்களை நேசிக்க, ஆதரிக்க, கொண்டாட, தி. மு. க.வினர் தயாராக இருந்தனரே தவிர, கண்களை மூடிக்கொண்டு பின்பற்ற வில்லை! "கோடை இடியாக இருக்கலாம் பேச்சில் - ஆனால், பேசும் பொருள் கழகம் ஒப்புக்கொண்டிருக்கும், திராவிட நாடு இலட்சியமாக இருக்கவேண்டும் - அதற்கு மாறாக இருந்தால், மதிப்பளிக்கக் கழகம் முன் வராது!"என்ன அருமையான வாதம்' என்று

கழகம் பாராட்டும். எப்போது? கொள்கைக்காக வாதாடுகிறபோது! கொள்கையைக் குழிதோண்டிப் புதைக்க முனைந்தால், இடமளிக்காது. ஒன்று உமக்குச் சொல்கிறேன், நண்பரே! விலகியவர்களில் விருதுடையோர், இருக்கிறாரே, அவர் இந்த 12 ஆண்டுகளில் கழகத்தில், எது நினைத்தாலும் நடந்தது! எந்தத் தீர்மானம் கொடுத்தாலும் ஏற்றுக் கொண்டனர், ஓட்டுக்கூட எடுக்காமல். ஏன்? கழகத்துக்காக அரும்பாடுபடுகிறார்! கழகக் கொள்கையைப் பரப்பும் ஆற்றல் மிக்கவர்! அவர் விருப்பத்தை மதித்து நிறைவேற்றுவது, அவரை உற்சாகப்படுத்தும், மேலும் உழைத்திடும் ஊக்கம் அளிக்கும், என்பதனால். ஆனால், கொள்கைக்கு உலை வைக்கக்கூடும் என்ற நிலை வந்தது. அவர்தான் கழகத்தைவிட்டு வெளியே போகவேண்டி வந்ததே தவிர, கழகம் ஏமாளியாகி, அவர்

காட்டிய இடத்திலே கையெழுத்திடும் கதியற்ற நிலைபெறவில்லை. கண்டனையே! கருத்திலே தெளிவு ஏற்படவில்லையா?

கா. க. : ஆயிரத்தெட்டுப் பேசு - அக்கறை இல்லை. திராவிட நாடு பிரச்சினைக்குச் சரியான எதிர்ப்புக் கிளம்பி இருக்கிறது.

தி. மு. க. : இது சரியான எதிர்ப்பு என்று கூறும்போது என்ன பொருள்? இதுவரையில், நீங்கள் நடத்தி வந்தது. "சோடை', "சொத்தை' என்பதுதானே. உங்களுடைய தலைவர்களை ஏனய்யா இவ்வளவு கேவலப்படுத்துகிறீர்கள்?

கா. க. : எங்களுடைய தலைவர்கள் சொல்லிக்கொண்டு வந்ததைத்தான், இப்போது, உங்களிடமிருந்து விலகியவர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

தி. மு. க. : அப்படியா! புதிதாக ஒரு காரணமும் காட்ட வில்லையா?

கா. க. : புதிதாகவா! ஏது புதிது! திராவிட நாடு கூடாது என்பதற்கான காரணம் முழுவதும், எங்கள் தலைவர்கள் ஏற்கனவே கூறியதுதானே!

தி. மு. க. : அதைத்தான், இந்தப் புதியவர்கள் பேசுகிறார்கள், என்கிறீர்.

கா. க. : ஆமாம்! வேறே என்ன புதிதாக இவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள்?

தி. மு. க. : அப்படியானால், அந்தக் காரணங்களை, உங்கள் தலைவர்கள் காட்டிப் பேசியபோது கிடைக்காத பலன், இப்போது, புதியவர்கள் பேசுவதாலே எப்படிக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? பொதுமக்கள், உங்கள் தலைவர்களுக்கு அளித்த மதிப்பைவிட, வெல்வாக்கைவிட, புதியவர்களுக்கு அளிக்கிறார்கள், அளிக்கப்போகிறார்கள்! என்பது பொருளா?

கா. க. : சுற்றி வளைத்துப் பேசிப் பேசி சிக்கலை உண்டாக்கப் பார்க்கிறாய். . .

தி. மு. க. : செச்சே! எனக்கென்னப்பா அதனால் இலாபம், திராவிட நாடு திட்டத்தை எதிர்ப்பதற்காகப் புதியவர்கள் கூறும் காரணம், யாவும் பழசு; எங்கள் தலைவர்கள் ஏற்கெனவே எடுத்துக்கூறினவை என்றும் சொல்கிறீர்கள்; அதேபோது இந்தப் புதியவர்களின் எதிர்ப்பினால் திராவிட நாடு திட்டத்துக்கு ஆபத்து நிச்சயம் வரப் போகிறது என்கிறீர்கள். பொருத்தமாக இல்லையே! ஒன்று காரணமாவது புதிதாக, அதிக வலிவுள்ளதாக இருக்க வேண்டும். அல்லது புதியவர்கள், நேருவைவிட, மொரார்ஜியைவிட, கிருஷ்ணமேனனைவிட, காமராஜரை விட, சுப்ரமணியத்தைவிட, வெங்கட்ராமனைவிட, சிவஞானக் கிராமணியாரைவிட, அறிவாற்றலுள்ளவர்கள்

என்றாவது இருக்கவேண்டும். இந்த இரண்டிலே எது உண்மை என்பது, உன்னுடைய கருத்து?

கா. க. : இரண்டுமே உண்மை அல்ல. ஏணி வைத்து எட்டினாலும், எங்கள் நேரு இருக்கிற இடத்துக்கு அருகேகூட இவர்கள் வரமுடியுமா? இவர்கள் இத்தனை வருஷம் இருந்த இடத்தையே தங்கள் வழிக்குக் கொண்டுவரும் அளவுக்குக் கூடச் செல்வாக்கு இல்லாதவர்கள் என்பதுதான், வெட்ட வெளிச்சமாகிவிட்டதே. இவர்களைப் போய், உலகம் புகழும் எங்கள் நேருபிரானுடன் ஒப்பிட்டுப் பேசுவதே கூடப் போக்கிரித்தனம் என்போம். ஆமாம், சகித்துக் கொள்ளமாட்டோம். உண்மையைச் சொல்வதனால் நேருபிரானுடைய அறிவுரையைக் கேட்டுப் புதியவர்களின் முதல்வர், திருந்தினார், புத்தறிவு பெற்றார் என்று பொருள்.

தி. மு. க. : அவர்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லையே. . .

கா. க. : நேருவைவிடத் தாங்கள் பெரியவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் என்று பேசுகிறார்களா?

தி. மு. க. : பேசவில்லை! ஆனால் செயல்? நேருவினால், திராவிட நாடு திட்டத்தை ஒழித்துக்கட்ட முடியவில்லை என்பது தெரிந்திருந்தும், இப்போது இவர்கள் தங்களால், அது முடியும் என்று கிளம்புவது எதைக் காட்டுகிறது? நேருவால் சாதிக்க முடியாததைத் தாங்கள் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருப்பதை, அந்த நம்பிக்கை எப்படி ஏற்பட்டது? நேருவைப்பற்றி மட்டமான அபிப்பிராயமும், தங்கள் அறிவாற்றலைப்பற்றி மிக அதிகமான மதிப்பும் கொண்டிருப்பதனால், இது புரியவில்லையா?

கா. க. : துணிந்து சொல்லட்டுமே பார்ப்போம், அப்படி.

தி. மு. க. : ஏன், இப்போது சொல்லவேண்டும்? பைத்தியக் காரர்களா அவர்கள்! வசமாகச் சிக்கிக்கொண்டிருக் கிறார்கள் காங்கிரஸ்காரர் - அவர்களைப் பயன்படுத்தி விளம்பரம், செல்வாக்குப் பெற்றுக்கொள்ளலாம். அதைச் சாதித்துக்கொள்கிறவரையில், பல்லைக் கடித்துக்கொண்டு, பண்டித நேருவைப்பற்றி அதிகம் பேசாமல் இருக்கலாம் என்பது புதியவர்கள் திட்டம். இது புரியாமல், நீங்கள் பூமுடித்துப் பொட்டுவைத்து விடுகிறீர்கள்.

கா. க. : அவர்கள் தங்கள் "சுய ரூப'த்தைக் காட்டத் தொடங்கினால், நாங்கள் சும்மாவிடமாட்டோம்.

தி. மு. க. : சும்மாவிடாமல், சுருட்டி

எடுத்துக்கொண்டு வந்து விடுவீர்கள், இப்போது நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் விளம்பரச் செல்வாக்கை!

கா. க. : ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும்.

தி. மு. க. : வெறும் சொல்லலங்காரம்! நீங்கள் இப்போது செய்து வரும் தவறின் பலனை நிச்சயம் ஒருநாள் அனுபவித்தே தீருவீர்கள், சாபம் அல்ல! நடைபெறப்போவதை, முன்கூட்டியே சொல்வது. எப்போது திராவிட நாடு திட்டத்தில் நம்பிக்கை போய்விட்டதோ, உடனே அப்படிப் பட்டவர்களுக்கு வேறு, தன்னலத் திட்டமோ, தம்மைப் பற்றிய அதிக கணக்குள்ள மதிப்பீடு போட்டுக்கொள்ளும் சுபாவமோ இல்லையென்றால், என்ன தோன்றவேண்டும்? இடித்து இடித்துச் சொன்னார் நேரு அப்போதெல்லாம்

கேட்கவில்லை. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசினோம்; ஏதேதோ ஏசினோம் காங்கிரஸ் தலைவர்களை; அவர்களிடம் முதலில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும் - என்றல்லவா, எண்ணம் எழவேண்டும். எழுந்ததா? இல்லை! புதியவர்கள், எங்களுக்கு மட்டும் அல்ல - இப்போதும் - உங்கள் நேருவுக்கும் சேர்த்துத்தான் "ஞானோபதேசம்' செய்கிறார்கள். அது புரியாமல் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு ஆடுகிறாய். திராவிட தேசியம் என்பது மாயை என்று மட்டும் சொல்லவில்லை. இந்தியத் தேசியம் என்பது மாயை என்றுதான் சொல்கிறார்கள். திராவிட தேசியம் பேசும் எங்களைப்பற்றி என்னென்ன கூறுகிறார்கள்?

கா. க. : அறிவிலிகள்! சுயநலக்காரர்! எத்தர்கள்! வரலாறு தெரியாதவர்கள்!

தி. மு. க. : இவ்வளவு நாகரிகமாக அல்ல.

நாகரிகப் பேச்சிலே அதிக பயிற்சி கிடையாது அவர்களுக்கு. மிகக் கேவலமாக ஏசுகிறார்கள், எங்களை. ஏன்?

கா. க. : கவைக்குதவாத திராவிட தேசியம் பேசுவதால்.

தி. மு. க. : கவைக்குதவாதது திராவிட தேசியம் மட்டுமா? இந்தியத் தேசியமும் அப்படித்தான் என்றும் பேசுகிறார்கள். மறந்துவிடலாமா?. . .

கா. க. : மறந்துவிடவில்லையே.

தி. மு. க. : அப்படியானால், கவைக்குதவாத தேசியங்கள் இரண்டு. ஒன்று திராவிட தேசியம் - மற்றொன்று இந்திய தேசியம். திராவிட தேசியம் பேசுவோரை என்னென்ன இழி மொழியால் ஏசுகிறார்களோ, அது அவ்வளவும் கவைக்குதவாத இந்திய தேசியம்

பேசுவோருக்குந்தானே பொருந்தும்.

கா. க. : அப்படிப் பேசினால் சும்மாவிடமாட்டோம்.

தி. மு. க. : சூரப்புலிகள்தான்! இதுவரை பேசியதற்கு என்ன செய்துவிட்டீர்கள்? விளம்பரச் செல்வாக்குப் பெற உங்களிடம் வருகிற நேரத்திலாவது, மன்னிப்புக் கேட்கச் சொன்னீர்களா? பசி உங்களுக்கு அவ்வளவு! வீசி எறிந்தாலும் விழுந்தடித்துக்கொண்டுபோய் எடுத்துப் புசிக்கிறீர்கள். ஆதித்தனாருக்கு இருக்கும் ரோஷ உணர்ச்சி உங்களுக்குக் காணோமே! தமிழ் நாடு தனி நாடு என்ற உரிமை அரசாக இராது என்று புதியவர் பேசிக் காட்டியவுடன், ஆதித்தனார், இது சுதந்திரத் தமிழ் நாடு ஆகாது! எனவே, நாம் இதை ஆதரிக்க முடியாது என்று அறிவித்துவிட்டார். வேண்டுமானால், சிவஞானக் கிராமணியார்,

புதிய கட்சியுடன் கூட்டுச் சேரலாம் என்று யோசனை கூறினார். அவருக்கு நான் இளைத்துப் போவேனோ என்ற முறையில், சிவஞானக் கிராமணியார், பிரிவினைக்கான உரிமை என்ற பேச்சு இருக்கிற இடத்தில், நான் சேரமாட்டேன்; என் "பாரம்பரியம்' அதற்கு இடங் கொடுக்காது என்று அறிவிக்கிறார். அவர்கள் காட்டும்"ரோஷ உணர்ச்சி' உங்களுக்கு இருந்தால், இந்திய தேசியம் மாயை என்று பேசுபவரை, நாங்கள் மதிக்க, ஆதரிக்க, தூக்கிவிட முடியாது என்றல்லவா கூறி இருக்கவேண்டும். செய்தீர்களா? இல்லை. ஏன்? தி. மு. கழகத்தை ஒழிக்க இவரை ஏவிவிடலாம் என்ற நப்பாசை. ஏன் அந்த நப்பாசை? நீங்கள் முயன்று பார்த்துத் தோற்றுவிட்டீர்கள். நீங்கள் தோற்றுவிட்ட பிறகு, புதியவர் வெற்றிபெறுவார் என்று எப்படி உங்களுக்குத் தோன்றுகிறது?

உங்களுக்கு உங்களுடைய அறிவாற்றலில் நம்பிக்கை இல்லை. எது கிடைத்தாலும் சரி என்று அலைகிறீர்கள். உங்கள் தலைவர்களைக்கூட, அவர்கள் மதிக்க மறுக்கிறார்கள்.

கா. க. : எங்கள் தலைவர்களை அவர்கள் மதிப்பு குறைவாகப் பேசவில்லை.

தி. மு. க. : இந்திய தேசியம் என்பதும் திராவிட தேசியம் போலவே, மாயை என்பது என்னவாம்! திராவிட தேசியம் 12 வருட முயற்சி! உங்கள் இந்திய தேசியம்? 1885 லிருந்து ஆரம்பமான முயற்சி! இரண்டும் தவறு என்று மாமேதை கூறுகிறார் - மண்டியிட்டுக் கேட்டுக்கொள்கிறீர்களே தவிர, மறுத்திடத் துணிவு பிறக்கிறதா? எங்கிருந்து பிறக்கும்? மாமிச மலையே என்றார்! சோற்றுத் துருத்தியே! சொரணை கெட்ட ஜென்மமே! உருவாரங்களே! மண்டைக்கனம்

பிடித்ததுகளே என்றெல்லாம், உங்கள் தலைவர்களை ஏசினர். என்ன செய்தீர்கள்?

கா. க. : விவரமறியாது பேசும் இதுகளைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்று இருந்துவிட்டோம்.

தி. மு. க. : அதேதானய்யா, இப்போது, தி. மு. க. மேற்கொள்ளும் போக்கு. கூட இருந்தபோது சோடசோபசாரம் செய்தவர்கள்தான், இன்று எரிச்சல் காரணமாக, ஏசுகிறார்கள் - பொருட்படுத்தத் தேவையில்லை என்று இருந்துவிடுகிறார்கள் கழகத்தவர். எப்படி, அன்று, இவர்கள் நேருவிலிருந்து வெங்கட்ராமன் வரையில் நாக்கில் நரம்பின்றி ஏசினாலும் உங்களுக்கு உங்கள் தலைவர் களிடத்திலோ, கட்சியிடத்திலோ மதிப்பும் அன்பும் துளியும் குறையவில்லையோ, பழுதுபட வில்லையோ, அதேபோலத்தான், குலவிக்

கிடந்தவர்கள், குடவிளக்கு எடுத்தவர்கள், சாமரம் வீசியவர்கள் இன்று ஏசுவதால், எங்கள் கழகத்தவரிடமோ கழகத்திடமோ, கொள்கை யிடமோ எமக்குத் துளியும் மதிப்புக் குறையவில்லை. தெரிகிறதா? ஆகையால், காங்கிரஸ் நண்பனே! இந்த மண்குதிரை மீதேறி, ஆற்றினைக் கடக்கலாம் என்று எண்ணிவிடாதே. மக்கள் கேட்பது இதனைப்பற்றி அல்ல.

கா. க. : கழகம் உடைபட்டுவிட்டது என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

தி. மு. க. : அவர்கள் பேசுவதை நிறுத்திக்கொண்டாலும், நீங்கள் இருக்கிறீர்களே, தூபமிட! தாராளமாகச் செய்யுங்கள். ஆனால் சிலகாலம்தான் இது இனிக்கும் - பிறகு புளித்துப் போய்விடும். இப்போதோ ஒன்றாக இருந்தபோது புகழ்ந்த வாய்தான்; இப்போது

நாராசம் வெளிவருகிறது அதிலிருந்து என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இந்தப் பிரச்சினையிலேயே மக்கள் மூழ்கிக் கிடப்பார்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பது, பேதமை. மக்கள் அறிந்துகொள்ள விரும்புவது, யார் விலகினார்கள்? அதனால் என்ன நஷ்டம் என்பதல்ல! ஏனெனில், ஒவ்வொரு கட்சியிலும், சிலர் விலகுவது என்பது நடைபெற்றபடிதான் இருக்கும் என்பது பொதுமக்களுக்குத் தெரியும். விலகியோர்கூட அமைத்த கட்சியிலிருந்தே இப்போது விலகிவருவோர் பட்டியல் பார்க்கிறார்கள். பத்து நாட்களுக்கு முன்பு காங்கிரசில் ஊழல் மலிந்துவிட்டது என்று பகிரங்கமாகக் கூறிவிட்டுக் காங்கிரசைவிட்டு வெளியேறினார் சாக்சேனா என்ற காங்கிரஸ் தலைவர். இப்போது பொது மக்கள்

அறிந்துகொள்ள விரும்புவ தெல்லாம், அவர் ஏன் விலகினார்? இவர் ஏன் விம்முகிறார் - என்பது அல்ல. ஏன் இந்தக் காங்கிரஸ் ஆட்சியிலே விலைவாசி விஷம்போல் ஏறியபடி இருக்கிறது? இதைக்கூடக் கட்டுப்படுத்த முடியாத ஆட்சியும் ஒரு ஆட்சியா? அப்படிப்பட்ட ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும், கட்சியும் ஒரு கட்சியா? அதற்கா மறுபடியும் "ஓட்' அளித்து ஆளச் செய்வது? என்ற இந்தப் பிரச்சினைபற்றி. அடுக்களை காட்டுகிறது ஆட்சியின் அலங்கோலத்தை. இதை எப்படிச் சமாளிப்பது என்பதிலே அக்கறை காட்டுவதை விட்டுவிட்டு, யாரார் தி. மு. கழகத்தின்மீது பாய்வார்கள், காய்வார்கள், அவர்கள் உமிழ்வது என்ன என்று அக்கறையாகக் கவனித்து அதைக் கையில் ஏந்திக்கொண்டு வந்து ஊரூருக்கும் காட்டி, பார்த்தீர்களா! பார்த்தீர்களா! என்று பேசுவதையா,

வேலையாக வைத்துக்கொள்ளவேண்டும்?

கா. க. : நாங்கள் ஒன்றும் அந்த வேலையில் இல்லை.

தி. மு. க. : உங்கள் ஏடுகளிலே, இப்போது இடம் பிடித்துக் கொண்டிருப்பதே, இந்த எச்சில், ஏப்பம், தூற்றல், மாற்றம், நாராசம், இவைதானே! பாரேன் நீயே. மக்கள், இதைப் பார்த்துவிட்டு, உணவுப்பொருள் விலை எவ்வளவு ஏறினாலும் பரவாயில்லை என்றா, மனத்திருப்தி அடைவார்கள்? உங்கள் ஆட்சியின் இலட்சணத்தால் ஏற்பட்ட மொழிச்சண்டை காரணமாகப், பத்துப்பேர் போன மாதம்தான் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தாலி அறுத்தவர்கள் கதறும்போது, பார்! பார்! படித்துப்பார்! புதிய கட்சியினர், தி. மு. க.வை வெளுத்துவாங்குகிறார்கள் என்று காட்டியா சமாதானம் செய்யப்போகிறீர்கள்? வரிக் கொடுமை தாக்குகிறது - முதலாளித்தனம்

பொருளாதாரத் துறையின் கழுத்தை நெரிக்கிறது - கடன் சுமை முதுகை முறிக்கிறது! மக்கள் இவைகளுக்குச் சமாதானம் கேட்கிறார்கள் - தி. மு. கழகத்தைப்பற்றி விலகியவர்கள் என்னென்ன ஏசுகிறார்கள் என்பதா, நீங்கள் தர இருக்கும் சமாதானம்? காங்கிரஸ் ஆட்சியினால் ஏற்பட்டுள்ள கேடு பாடுகளை, நாங்கள் எடுத்துக் கூறும்போது, விலகியவர் களை விட்டு ஏசச் செய்துவிட்டால், மக்கள் திருப்தி அடைந்துவிடுவார்களா? நாங்கள் கேட்கமாட்டோமோ? முட்டாள்கள் கூட்டத்தார் ஆளவந்தார் முந்நான்கு வருடங்கள் போனபின்பும் கெட்டோமே! ஆடைக்கும் நிழலினுக்கும் கிள்ளுகிற பசிதீர்க்கும் உணவினுக்கும் கொட்டாவி விட்டோமே! விடுகின்றோமே! குறையாத வறுமைக்கே ஆளானோமே! பட்டாயே தமிழா! இம்மடையர்

ஆளும் பாரதத்தின் ஒற்றுமையா இன்னும் கேட்பாய்.

கா. க. : இப்படித்தான், ஆபாசப் பாடல் பாடுவீர்கள். இதையுந்தான் விலகியவர்கள் கண்டிக்கிறார்கள். அவர்கள் பேச்சிலே இப்படிப்பட்ட வார்த்தைகள் வருவதில்லை. முட்டாள் என்றும் மடையர் என்றுமா, ஆட்சியில் உள்ளவர்களை ஏசுவது? இது ஒன்று போதுமே, உங்களை ஒடுக்கியாகவேண்டுமென்பதற்கான காரணம். பிரிவினை வேண்டுமாம் - பிரிவினை - நடவாது தம்பி! தலைகீழாய் நின்றால்கூட நடவாது.

தி. மு. க. : "வடநாடா? தென்னாடா? யாருரைத்தார்? வாழ்கின்ற மாந்தரெல்லாம் ஓரினத்தார் நடவாது! நடவாது! பிரிவினைத் தீ நம் நாட்டைப் பாழாக்கும் விடவே மாட்டோம்!! படிதாண்டாப் பத்தினிகள் முழங்கினார்கள்

பண்டிதரோ அவர் வாயைத் திறக்கக் கூறி, பிடிமண்ணைத் திணிக்கின்றார்! மெல்கின்றார்கள். பிறிதொன்றைப் போட்டாலும் விழுங்குவார்கள்.''

கா. க. : பாடு! உனக்கு வேறு எப்படிப்பட்ட பாட்டுப் பாடத் தெரியப்போகிறது. இப்படி எல்லாம் பாடினால், எப்படி உங்களோடு அறிவாளிகள் இருப்பார்கள்?

தி. மு. க. : ஐயா! பேரறிவாளரே! இந்தப் பாடல்கள், இப்போது, நாங்கள் கட்டிவந்து பாடுவது அல்ல. எங்களைவிட்டுப் பிரிந்தவர்களிலே ஒருவர் பாடிவிட்டுப் போனதுதான்.

கா. க. : இவ்வளவு கடுமையாகவா?

தி. மு. க. : கவிதை, ஐயா! கவிதை!! இவருடைய கவிதா சக்தி, முன்பு உங்கள் கட்சியைத் துளைக்கப் பயன்பட்டது; இப்போது

எங்களைத் தூற்றப் பயன்படுத்தப்படுகிறது.

கா. க. : இந்தப் பாடலிலே உள்ள கடுமொழியைக் கேட்டால், இப்படிப்பட்டவர் மாறிவிடக்கூடியவர் என்று எவரும் கூறமாட்டார்களே! தெளிவே கிடையாதா இவர்கட்கு?

தி. மு. க. : "காலையில் மலரும் எண்ணம் கண்துயின்றெழுங் காலத்தில் மூலையில் விழுமோ, இல்லை மூளைதான் மூன்றோ நான்கோ? மாலையின்"மயக்கம்' மீண்டும் மாலையே தெளியும் போலும்''

கா. க. : ஒரே கவிதை மயமாகவே இருக்கிறதே, என்னப்பா?

தி. மு. க. : இதுவும் விலகியோர் விட்டுச்சென்ற கவிதைதான். நீங்கள், கொள்கை காரணமாகச் சிலர் பிரிந்து சென்றார்கள் என்றுதான் பேசக்

கேட்டிருக்கிறார்கள். பலர் அவர்கள் பாதை தவறிச் சென்றவர்கள் என்றுதான் கருதுகிறார்கள்.

கா. க. : அதற்கு ஒரு கவிதை கூற எண்ணமோ?

தி. மு. க. : இல்லை ஐயனே! இல்லை! இதற்கு உரைநடைக் கவிதை உரைத்திடுவோம். கேண்மின்.

கா. க. : கூறுமின்!

தி. மு. க. : "அன்னவனுக்கு ஆசைகள் காட்டிப் புகழ்பல பாடி மக்கள் மன்றத்திலிருந்து வழிபிரித்தெடுத்துச் செல் கின்றார்கள். எந்த மனமும் புகழுரைகளுக்கு இரையாகும். இது இயற்கையின் சக்தி.''

கா. க. : புகழ்தேடிப்போனால், திறமை இருந்தால், மக்கள் தராமலா போவார்கள்?

தி. மு. க. : ”இந்த மக்கள் பொல்லாதவர்கள்! இப்படி அப்படி இம்மி அளவு பெயர்ந்தானெனினும் பேசி மறுப்பர்.’’

கா. க. : திறமையைப் பாராட்டுவார்கள் அல்லவா?

தி. மு. க. : ”இந்த உலகம் திறமையை மட்டும் தனியாய்ப் பிரித்து மதிப்பதே இல்லை. திறமை பிறகு; எம்மோடு உமக்குத் தொடர்பு எவ்வளவு’’ இதுதான் மக்கள்.

கா. க. : இதுவும் விலகியவர்கள் முகாமிலிருந்துதானா?

தி. மு. க. : ஆமாம்! அவர்களைக் காட்டி, எம்மை வாட்டிட நினைப்பது, எவ்வளவு கடினம் என்பது புரிகிறதல்லவா? எனினும், அவர்களிடம் எமக்கு இரக்கம்தான் எழுகிறது. ”எங்கிருந்தாலும் நண்பனே! உன்னை ஏறிட்டு ஒருமுறை பார்த்துப் பின் நட. பின்னால்

நிற்கும் தலைவர்களைவிட, முன்னால் நிற்கும் மக்கள் வலுவினர். சற்றுத் திரும்பிப் பார்! உன் சிந்தனை மாறும்.'' தம்பி! இந்த உரையாடல், உனக்கும், உன் மூலம் நாட்டவருக்கும் தெரிந்திருக்கவேண்டும் அல்லவா? அதனால் அதனை இங்கு அளித்தேன். கருத்திற்கொள்க! கடமையறிந்து காரியமாற்றுக! வெல்க!

அன்புள்ள

அண்ணாதுரை

4-6-61

42. 3 அம்பும் ஏணியும்

1

சோவியத் நாட்டில் மேயர் -
திராவிட நாட்டு விடுதலை -
மாணவ முன்னேற்றக் கழகச் சொற்பொழிவாளர்கள்

தம்பி!

மேயர் முனுசாமி அவர்கள் எழுதிய கடிதம் குறித்துப் பொதுக்கூட்டமொன்றிலே பேசினீர்களே, மேற்கொண்டு விவரம் தரவில்லயே என்று கேட்டிருக்கிறாய். தருகிறேன்.

கீவ்நகரிலுள்ள உக்ரெயின் எனும் விடுதியிலிருந்து, கடிதம் எழுதியிருக்கிறார் மேயர். 16-5-61 மாலை லெனின் கிராடு நகர் சென்றாராம்; விமான நிலையத்தில்

நகர சோவியத் பிரதிநிதிகள் - அதிகாரிகள் - வரமேற்று, நகர சோவியத்தின் பிரதிநிதியாக ஏற்று, எல்லா வசதிகளையும் செய்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

”நகரத்தின் சிறப்பிற்குரிய பல இடங்களைச் சென்று பார்த்தேன். யுத்தத்தினால் நாசமடைந்த நகரம், இவ்வளவு குறுகிய காலத்தில் மாற்றியமைத்து இருப்பது பெருமைக்குரிய விஷயம்’’ - என்று கடிதத்திலே மேயர் தெரிவித்திருக்கிறார்.

மற்றப்படி, நமது விடுதலை இயக்கம் குறித்துத் தகவல் அறிய விரும்புவோர்களிடம் உரையாடும் வாய்ப்பும், மேயருக்குக் கிடைத்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தவர், சென்னை மாநக ராட்சியின் முதல்வராகி, சோவியத் சென்று உலாவருவதும்,

பல தலைவர்களுடன் உரையாடுவதும், நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. ஆமாம்! இங்கு நம்முடன் இருந்தவர் களிலே சிலர், "திராவிடம்' என்று கூறுவது தங்கள்"எதிர்காலத்தை'த் தீய்த்துவிடும் என்று எண்ணம்கொண்டு ஏதேதோ பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில், திராவிட நாடு பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகம் குறித்தும் அந்தக் கழகத்தின் துணையினால், "மேயர்' எனும் நிலைபெற்ற ஒருவர், சோவியத்திலே எடுத்துரைப்பதறிந்து நமது நெஞ்சம் நெக்குருகத்தான் செய்யும்.

மேயரவர்கள், தமக்கு இத்தகைய நிலை கிடைத்தது, திராவிட முன்னேற்றக் கழகத்தினால்தான் என்பதையும், நன்றியறிதலுடன், குறிப்பிட்டுள்ளார்.

"உன்னாலா, நான் உயர்ந்தேன்?'' - என்று கேட்டிடும் உயர்ந்த பண்பினரையும்

பார்க்கிறோம் - ஏற்றம் பெறுவதற்குக் காரணமாக இருந்த கழகத்துக்கு நன்றி காட்டத் தவறாமல், நன்றி மறக்கவில்லை என்று கூறிடும் மேயரையும் காண்கின்றோம். உலகம் பலவிதம்!!

பொதுவாக "இந்தியா'பற்றி, சோவியத் மக்கள் தெரிந்து கொண்டிருக்கும் அளவுக்கு, "திராவிடம்' குறித்து அறிந்து கொண்டில்லை - நான் கூறுவதை ஆவலாகக் கேட்கிறார்கள் என்று மேயர் தெரிவித்திருக்கிறார்.

உண்மைதான்! இந்தப் பதினான்காண்டு காங்கிரசாட்சி, "இந்தியா - இந்தியர்' - "இந்தியப் பேரரசு' - எனும் கருத்துகளை உலகிலே, பரப்பியிருக்கிறது - திட்டமிட்டு, பெரும்பொருள் செலவிட்டு. அதுமட்டுமல்ல, "திராவிட நாடு' என்பதுபற்றிய விவரத்தை, மற்றவர்கள் உலகுக்குத் தெரிவிக்கும் வாய்ப்பினைப் பெறுவதும் எளிதல்

நடைபெறக்கூடியதல்ல. எனவே, சோவியத்திலே, திராவிட நாடுபற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை என்பதிலே, வியப்பில்லை.

திராவிடத்திலேயே திராவிடத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள் - இன்னமும் - சில பலர். இஃதன்றோ வியப்பு!

அதனினும் வியப்பு, திராவிடம் என்றால் என்ன தெரியுமா என்று விளக்கம் அளித்து வந்தவர்களிலேயே சிலர், திருப்பி நம்மைக் கேட்கிறார்கள், திராவிடம் என்றால் என்ன? அதன் எல்லை யாது என்றெல்லாம், அதுதான்!!

திராவிடம் என்பதற்கு விளக்கம் இல்லை - எல்லை இல்லை - அதிலே உண்மையும் இல்லை - என்று முன்பு கூறிய பலரைச் சாடிய நாவினர், இன்று தமது "திறமையை' திராவிடம் என்றொன்று இல்லை

என்று பேசுவதற்குப் பயன்படுத்துவது, விந்தையினும் விந்தை!!

திராவிட நாடு என்பது கைகூட முடியாது ஒன்று என்று முன்பு ஆளும் கட்சியினரும் வேறு இலட்சியம் கொண்டோரும் கூறியபோது, அளித்த மறுப்புரைகள் - தெளிவுரைகள் - விளக்க உரைகள் - முழக்கங்கள் - யாவும் வெறும் ஓசையோ!! அங்ஙனம் கூறிக்கொள்ள, அவர்கட்கே வெட்கமாக இருக்குமன்றோ!

திராவிடம் என்பதற்கு விளக்கமும், அது கைகூடத்தக்கது தான் என்பதற்கு ஆதாரமும் தரச்சொல்லி, முன்பு சிலபலர் கேட்ட காலை, அள்ளித்தந்த, வாரிவீசிய, எடுத்துரைத்தவைகள் அத்தனையும் சொத்தையோ! மெத்தக் கஷ்டப்பட்டு, இத்தனை ஆண்டுகளும், "சொத்தை'களையா, இவர்கள், பேசி வந்தனர்! என்ன பரிதாபம்!

என்ன பரிதாபம்!!

அல்லது, அவை இன்று சொத்தை - அன்று அல்ல!! - என்பது வாதமோ!!

எமக்கு அப்போதும் உள்ளூரத் தெரியும், திராவிடம் என்பது அபத்தம் என்று - என்றாலும், கூறிக்கொண்டிருந்தோம் - இப்போது எமது மனம் இடம் தரவில்லை - எனவே உண்மையை உரைத்திடும் உறுதியையும் ஆற்றல்மிகு அஞ்சாமையையும் துணைக்கழைத்துக்கொண்டு, இப்போது பேசுகிறோம் என்றுரைக்கின்றனர்.

இதுகேட்டு, மனமகிழ்ச்சியை வெளியிடும் தாள்களும், காங்கிரசாரும், உள்ளூர என்ன எண்ணிக் கொள்வார்கள்? என்னே அறிவின் மேம்பாடு! எத்துணை சிறப்புமிக்க ஆராய்ச்சித் திறன்! அஞ்சாநெஞ்சின் அருமைதான் என்னே! திராவிடம் என்பது கற்பனை

என்று கண்டறிந்து, காரணம் பல தேடிப் பெற்றுத், துணிவுடன் பேசுகின்றனரே தூயவர்கள், என்றா வியந்து பாராட்டுவர்? இல்லையே! இயலாதே! முறையுமாகாதே! மூச்சைப் பிடித்துக்கொண்டு, முரசுபோல் ஒலிக்கவேண்டும், வெண்கலநாதம் கிளம்பவேண்டும், மாற்றார் மருளத்தக்க இடியொலி எழவேண்டும் என்ற நினைப்புடன், நரம்புகள் புடைத்திட, இரத்தம் சூடேறிட, திராவிடம் ! திராவிடம்! என்று இவர்கள் பேசியபோது, எவ்வளவு பக்குவமாக, கனிவுடன், தெளிவளிக்கும் முறையில், திராவிடம் என்பது கற்பனை என்று கூறினோம் - அதற்காகப் பல ஆதாரங்களைக் காட்டினோம் - அத்தனையையும், தூக்கி எறிந்துவிட்டு, துச்சமென்போம் உமது இச்சகப் பேச்சை! தூள் தூளாக்குவோம் உமது வாதத் தொகுப்பை! - என்றெல்லாம் பேசி, நமை

இழிமொழி பலகூறி ஏசி, நின்றவர்கள், தெளிவுபெற, அறிவு பெற, இத்தனை ஆண்டுகள் ஆயின! இப்போதல்லவா, நாம் அப்போது கூறியவற்றை, இவர்கள் கூறுகின்றனர். அதிலும், ஏதோ, இவர்கள் கஷ்டப்பட்டு, ஐயந்திரிபற நூற்களைப் படித்து, உட்பொருள் விளங்கத்தக்க முறையில் ஆராய்ச்சிகள் நடாத்தி, புதிய பொலிவும் வலிவும் மிக்க உண்மைகளைக் கண்டறிந்து, முதன்முறையாக எடுத்துக் கூறிடுவதுபோலப் பேசுகிறார்களே - நாம் கொடுத்த அடியால் சுருண்டு கீழே விழுந்தவர்கள், மீசையில் மண் ஒட்டவில்லை என்று பேசும் முறையில், இவர்களே, திராவிடம் கற்பனை என்பதின் ”கண்டுபிடிப்பாளர்‘போலக் கோலம் காட்டிக் குரலெழுப்பி வருகிறார்களே! நாம் கொடுத்ததைக் கொண்டார்கள்! கொண்டதைக் கொட்டு கிறார்கள்! இதிலே

ஒரு "கித்தாப்பும்' தேடுகிறார்களே - என்றுதான் எள்ளி நகையாடுவார்களேயன்றி, போற்றவா செய்வார்கள்?

பழைய சோறு! பழைய சோறு! சுடச்சுடப் பழைய சோறு! பானை அறுவது காசு! கலயம் இருவது காசு! கையளவு ஐந்தே காசு! - என்று கூவி விற்பவனை என்னென்பர்? குறைமதியோ குறும்போ என்பர்!!

திராவிட நாடுபற்றி வாதாடிப் போராடி வந்தவர்கள், திராவிட நாடு கற்பனை என்றுரைக்கக் காட்டும் காரணம் சுடச்சுடப் பழைய சோறு என்பதன்றி, வேறென்னவாக இருக்க முடியும்?

உனது திருநாடதனை விடுவிக்க எழுக! இன்றே!

உலகிலே பான்மைகெட்டு உழலுவது அழகல்லவே!

கொத்தடிமை செய்யாது கொடிகட்டி வாழ்ந்தார்கள் உனது முன்னோர்! குவலயத்தார் பெருமை தந்தார் அதனைக் கண்டு!

ஆண்ட இனம் நாமல்லவோ? அச்சம் ஏனோ? ஆருயிரை இழப்பதேனும், அருமைமிகு திருவிடத்தை அமைப்போம்; காப்போம்!

அகிலொடு சந்தனமிகு அடல்கொண்ட மலைநாட!

ஆழ்கடலின் முத்தெடுத்து அகிலத்துக்கனுப்பியோனே!

நாமணக்கும் பாமலிந்த நாட்டின் நல்லோய்!

பூமணக்கும் பொழில் சூழ்ந்த பொன்னி நாட

புகழ்மணக்கப் பெற்றிடுவோம் புதுமை வாழ்வு!

புறப்படுவாய்! போரிடுவாய்! வெல்வாய்!

தம்பி, நமது கழகம் எழுப்பிய இந்தப் பண் கேட்டுப் பல இலட்சக்கணக்கானோர் புனிதப் பயணத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். குழவியின் மழலையும், யாழின் இனிமையும், பொருளின் மயக்கமும், வாழ்வின் சுவையும் அந்தத் தூயவர்களின் பணியினை மாய்த்திட இயலவில்லை. காற்றினிலே கலந்ததோர் இசையைக் கேட்டுக் களிப்புற்று மெய்மறந்து கிளம்பும் திசை நோக்கிச் செல்வார்போலே, இன்பத்திராவிடம் காண நடக்கின்றார், வீரரெல்லாம். அவர் தமக்கு துந்துபியாய், சங்கொலியாய், இருந்தபேர்கள், இன்று, வேறு ஒலி எழுப்பி நின்றால், கைகொட்டிச் சிரிப்பதன்றி, கடமையையும் மறப்பாரோ கழகத் தோழர்!!

அன்று நீர் ஆற்றிய உரைகளெல்லாம், மறந்தீரோ? மறப்போமோ? மறத்தல் நன்றோ! - என்று கேட்டிடும் தோழர்க்கு, இழிமொழியும் பழியும்தானோ, இவர்கள் தரும் பதிலுரை!

உதட்டோசை! உள்ளத்தின் இசை அஃதல்ல! திராவிடம் திராவிடமென்று பேசி நின்றோம்! - உள்ளத்தில் அதனை நாங்கள் கொண்டோமில்லை!! - என்று கூறிடும் விந்தை மனிதரை, எந்த நாட்டிலும், மதித்தவர் இல்லை!

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்பது உத்தமரின் வாக்காகும். உத்தமரின் அந்த மொழி பொய்த்திடாது.

அன்று நாம் பேசியது அத்தனையும் பொய்யேயன்றி, அணுவளவும் உண்மையில்லை! அறிவிக்கின்றோம்!! - என்று இன்று அறைகின்றார், மாறியோர்கள்!

நன்று! நன்று!! ஆனால் ஒன்று! இன்று மட்டும் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் வேறொன்றும் இல்லை என்று எதைக்கொண்டு நம்புவதோ?

இடித்துப் பேசும் முறை கேட்டா?

தடித்த சொற்கள் வீசக் கண்டா?

வடித்தெடுத்த பொய்யுரையும் விலையாகும் என்று வாணிபம் நடாத்திடும் திறமை கண்டா?

எதைக்கொண்டு நம்புவது, இன்று இவர் பேசுவதே, உள்ளத்துள் உள்ளது என்று?

பல்லாண்டாக, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி வந்தோம்; பெரும் பிழையே, பொறுத்திடுவீர் என்று பேசும் பெரியோர்கள், இன்னும் ஓர் ஈராண்டு சென்ற பின்னர், இன்று கூறிடுவது அனைத்தும் தவறய்யா தவறு! மனமருளின் விளைவு! மாச்சரியம் பெற்றெடுத்த நச்சரவு! என்றுரைக்க

மாட்டார்கள் என்பதற்கு உறுதி யாதோ? எவரே இவருரையில் உறைவது உண்மை என்று கூறவல்லார்! இவர்தான், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடும் விந்தைதனில் வித்தகராய் இருக்கின்றாரே!

பிடிபட்ட கள்வனிடம் பெரும் பொருளை ஒப்படைப்பார் தாமுமுண்டோ? பேதையரோ, மக்கள் தாமும்! பெரும் பிழைகள் பொறுத்திடுவார் எனினும், ஒன்று, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடுவார் உறவுகொள்ளமாட்டார்! உண்மையிது! உணர்வார் திண்ணம்!!

திராவிட நாடு எனும் திட்டத்தை, எதிர்த்திட, மறுத்திட, காரணம் தேடி அலுத்து, கிடைக்காததால், காங்கிரஸ் கட்சியினர், கைபிசைந்து, கண் கசக்கி ஓய்ந்து உட்கார்ந்துவிட்டதுபோலவும், திராவிட நாடு எனும் திட்டத்தை எதிர்த்திட,

தக்க காரணங்களை நூலகமெல்லாம் சென்று கற்று, நுண்ணறிவால் உணர்ந்து, நாத்திறனால் நவில்வார்போல, மாறியோர் இன்று பேசுவது, உள்ளபடி விந்தையினும் விந்தையன்றோ!

அதனினும் விந்தையன்றோ, அவர் பேசும் உரையினாலே அழித்திடும் திராவிடம் என்று, அதே உரையினை ஆண்டு பல பேசிப் பார்த்தும், பலன் காணமுடியாத காங்கிரசார் கொண்டிடும் எண்ணம்!

புட்டுப்புட்டுச் சொன்ன பிறகு, ஒரு முறைக்குப் பலமுறை சொன்னபிறகே, மந்தமதி படைத்த, என் மாணவனுக்கு, பாடம் தெரிந்தது என்று ஆசிரியர் கூறலாம் - பெருமிதத்துடன் - உரிமையுடன்.

நன் மாணவனாக இருப்பின், ஆமய்யா, ஆம்! ஆசிரியர் சொன்னபோது, எனக்குப்

புரியவுமில்லை! பிடிக்கவுமில்லை! ஆனால், விடாமல் அவர் பக்குவமாகப் பாடம் போதித்தார் - பிறகே எனக்குப் புரிந்தது! என் ஆசிரியரின் அருந்திறனால், நான் பாடம் பெற்றேன் என்று மகிழ்ந்துகூறி, ஆசிரியருக்கு நன்றி தெரிவிப்பது முறை.

ஆசிரியர், தெளிவுபெற்ற, அறிவுபெற்ற மாணவனை, தன் திறமையின் விளைவு என்று ஊருக்கு, உலகுக்குக் காட்டுவது இயற்கை.

திருந்திய மாணவனுக்கு, மேலும் உற்சாகமூட்ட எண்ணிடும் இயல்பினராக ஆசிரியர் இருப்பரேல், திருந்திய மாணவரைச் சட்டாம்பிள்ளையாக்கிடக்கூடும்!

ஆனால், பல ஆண்டுகள் மிகுந்த கஷ்டப்பட்டுப் பலமுறை பக்குவமாகப் பாடம் போதித்துப் போதித்து,

பாடத்தைப் புரிந்துகொள்ளும் நிலையை ஒரு மாணவனுக்கு ஓர் ஆசிரியர் ஏற்படுத்தியானபிறகு, நன்றி காட்டுவதற்குப் பதிலாக, பெருமை அளிப்பதற்குப் பதிலாக, அதே மாணவர், தான் ஆசிரியரிட மிருந்து கற்ற அதே பாடத்தை, ஆசிரியரையே தன் மாணவர் என்று கருதிக்கொள்ளும் மமதை மிகுந்த நிலையில், அவருக்கும் சேர்த்துத் தருகிறேன். புதிய பாடம் என்று, வகுப்பறையில் பேசுதல்போலன்றோ இருக்கிறது, மாறினோர் நீண்டகாலமாகவே திராவிடத்தை எதிர்த்துவந்த காங்கிரசாருக்கும் சேர்த்து, "திராவிடம் தீது! பலிக்காது!'' - என்று பாடம் புகட்டுவது!!

மாறினோர், திராவிட நாடு இலட்சியத்தைத் தாக்கிப் பேசுவதற்குக் காங்கிரஸ் கட்சி மேடைகளும் ஏடுகளும் இன்று அளிக்கும் வரவேற்பு கண்டு,

ஆசிரியரை மாணவராக்கிக் கொண்ட (பலகாலும் கேட்ட பிறகே பக்குவம் பெற்ற) மாணவன் போன்ற நிலைகொண்டு நடமாடுகின்றனர் மாறினோர். உண்மை என்னவென்றால், "தம் சரக்கைக் கூவி விற்கும் தரமான ஏஜெண்டு கிடைத்துவிட்டார் - அவருக்கு இனிப்பளிக்கத் தந்திடுவோம் விளம்பரம் என்று, காங்கிரசார் எண்ணு கின்றார்!' எவரே இதனை அறியார்!! மாறினோர், திராவிடம் என்பது கற்பனை என்பதுபற்றிப் பேசவேண்டியதனைப் பேசி, முன்னாள் தோழர்கள்மீது பகை கக்கி, பழிசுமத்தி, இழிவு வீசிடும் கட்டம் முடியுமட்டும், புன்னகை பூத்த முகத்தினராய் இருப்பர், காங்கிரசார்! பிறகோர் நாள், கேட்பர்;"என்னப்பா! இன்று நீ, சொல்வதெல்லாம், முன்பு நாங்கள் சொன்னதே என்பதை, நாடு அறியுமப்பா!!''

என்று. அன்று, அவர்கள் சிரிப்பார்! இவர்கள் சிந்திப்பர்!

சோப்பு விளம்பரக் கடையிலே, சொகுசான சுந்தரியின் படத்தை எடுப்பாகத் தொங்கவிட்டிருப்பது எதற்காக? அந்த ஆரணங்கின் அழகுக்கு மதிப்பளித்தா? அல்ல அல்ல! அந்தப் பாவை, தமது சரக்கு மிக நல்லதென்று கூறுவது காரணம்!!

அஃதேபோல, திராவிடத்தைத் தாக்குவோர் எவரேனும், அவரைத் தூக்கிவிடல், காங்கிரசுக்கு, தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும், வேலை முறையிலே ஒன்று.

தம்பி! கூண்டிலே நிறுத்தப்பட்டு, பாகிஸ்தானுடன் கூடி, இந்தியாவுக்கு எதிராகச் சதிசெய்ய முனைந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுக் குமுறிக்கிடக்கும், ஷேக் அப்துல்லாவைத் தெரியுமல்லவா?

ஷேரே காஷ்மீர் ஜிந்தாபாத் - காஷ்மீரப்புலி வாழ்க - என்று, காங்கிரஸ் முகாமே முன்பு முழக்கமிட்டது! பாகிஸ்தானைக் கண்டிக்க, ஜனாப் ஜின்னாவைத் தாக்க, பிரிவினைச் சக்திகளை ஒடுக்க ஷேக் அப்துல்லா தேவைப் பட்டார்! எந்தக் காங்கிரஸ் மாநாட்டிலும் காஷ்மீரத்துத் தீரரைக் காணலாம்! அந்த வீரரின் முழக்கத்தைக் கேட்கலாம்! நேரு பெருமானின் பக்கத்திலேயேதான், ஷேக் அப்துல்லா அமருவார்! நேருவின் படத்தை வெளியிடும் அளவிலும், முறையிலும், ஷேக் அப்துல்லாவின் படத்தை இதழ்கள் வெளியிட்டன! இன்று? கூண்டில் குற்றவாளியாக!! தீர்ப்பு என்னவோ என்ற நிலையில்!! ஏன் எமக்கு அம்பு! என்று காங்கிரஸ் கட்சி - எனக்கு ஏணி என்று ஷேக் அப்துல்லா, - ஒருவர்பற்றி மற்றவர் போட்ட கணக்கின் விளைவு!

காங்கிரஸ் கட்சியிலும் பரிபூரண சரணாகதி அடைந்தா லொழியத் தூக்கிலிடுகிறார்களே என்று எண்ணி மகிழ்ச்சி கொள்கின்றவர்களைச் சமயம் பார்த்து, அவர்கள் துளி ஏறுமாறாகப் போவார்கள் என்று தெரிந்ததும், தூக்கி எறிந்துவிடக் காங்கிரஸ் தயங்காது - காங்கிரசுக்கு அதிலே பழக்கமும் உண்டு - திறமையும் மிகுதி.

அந்த ஆபத்து ஏற்படாமலிருக்க வேண்டுமானால், ஒரே அடியாகக் காங்கிரசின் அடிபணிந்தாக வேண்டும்.

தேசிய "பாரம்பரியம்' மறவேன் என்கிறார் ம. பொ. சி.

இன்று பெரிய இடத்தில் அமர்ந்துவிட்ட காங்கிரஸ் தலைவர்கள் சிலரைவிடச் சிறைக் கொடுமையை அதிக அளவு

ஏற்றுக்கொண்டவர், ம. பொ. சி.

அவர், பிரிவினைச் சக்திகளை - குறிப்பாக, திராவிட இயக்கத்தை - எதிர்க்க முனையும்போது, அவரை சிலம்புச் செல்வர் என்றும், செந்தமிழ்க் காவலர் என்றும், சிறைக்கஞ்சாச் சீலரென்றும் புகழாரம் சூட்டும் காங்கிரஸ் தலைவர்கள், அதே ம. பொ. சி. தமிழரின் உரிமைக்காக - (அந்த உரிமையும் இந்திய ஒற்றுமைக்கு ஊறுதேடாத முறையில்) போராடக் கிளம்பும் போது, எத்துணை கேவலமாக, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஏசுகிறார்கள் என்பதை நாடு காணவில்லையா?

ம. பொ. சி. அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும், அடிப்படையில் கருத்து ஒற்றுமை இருப்பது மட்டுமல்ல, கூடிப் பணியாற்றியதால் ஏற்பட்ட தோழமையும் நிரம்ப இருக்கிறது. அவருக்கே இது!

கதர் ஆடைப் பிரச்சினையிலேயிருந்து, கல்லூரியில் போதனாமொழியாகத் தமிழ் இருக்கலாமா கூடாதா என்பது வரையில், காங்கிரசுக் கட்சிக்கும், மாறினோர்க்கும் கருத்து ஒற்றுமை கிடையாது. இந்நிலையில், ஓர் போலி நேசம்! எப்படி அது, பொதுமக்களால் மதிக்கப்பட முடியும்? மக்கள் என்ன, சந்திக்கும் திறனே அற்றவர்களா?

காங்கிரசின் துணைகொண்டு, மளமளவென்று வளர்ந்து விட்டால், பிறகு அவர்களையும் ஒரு கை பார்த்துக்கொள்ளலாம் என்று இவர்களும், ஆனானப்பட்டதுகளெல்லாம் அடிபட்டுப் போய்விட்டன, இவர்கள் வளர்ந்து நம்மை என்ன செய்துவிட முடியும்? தி. மு. கழகத்தை எதிர்க்க ஒரு பட்டாளமாக இவர்கள் வேலை செய்கிறவரையில், "கொட்டை எழுத்தை'ச் சம்பளமாகக் கொடுப்போம்; நம்மிடம்

அவர்கள் தமது நாவரிசையைக் காட்டினால், ஒரே அடியாக ஒழித்துக்கட்டிவிடுவோம் என்று காங்கிரசும் எண்ணிக்கொண்டு, நடவடிக்கையிலே ஈடுபடுகின்றது என்பதை நாடு அறிந்துகொள்ளவா இல்லை! நன்றாகத் தெரியும், இந்த நிலைமை.

இந்த நிலைமையை நன்கு உணர்ந்த, தி. மு. கழகத் தோழர்கள் சிலரைக்கொண்டு, நமது இலட்சியத்தைச் சிதைத்து விடலாம் என்று எண்ணும் காங்கிரசாரின் திட்டத்தை நன்கு அறிந்துகொண்டதால், முன்னிலும் விறுவிறுப்பாகப் பணியாற்றி வருகின்றனர்! திராவிட நாடு தனி நாடு ஆகவேண்டும் என்பதற்கான, எழுச்சி மிகு கொள்கையை எடுத்துரைத்து வருவதிலே, புதியதோர் உற்சாகம் காட்டுகின்றனர். புதுப்புதுக் கிளைகள் எங்கெங்கும்!! உறுப்பினர்களின் எண்ணிக்கை வளர்ந்தவண்ணம்;

அதுமட்டுமல்ல! திராவிட நாடு அமைந்தாக வேண்டும் என்பதற்கு ஆதரவுதரும் சான்றுகள், வரலாறு, இலக்கியம் என்பவைகளைப்பற்றி நாட்டவர் உணரத்தக்க வகையில் எடுத்துரைத்தோம்! மறுப்புரைப்போர் ஓய்ந்தேபோனார் என்று இருந்த நிலைமையினை இன்று சிலர் கெடுக்க முனைவதாலே, மீண்டும், கொள்கையினை எடுத்துரைப்போம் என்ற ஆர்வத்துடன் பணியாற்றக் கிளம்பியுள்ளனர்.

பத்திரிகைகளின் இருட்டடிப்பை, அவர்கள் பொருட் படுத்தவில்லை, தமது பணி, பலன் அளித்து வருவதைக் கண்கூடாகக் காண்பதனால்,

பொய்யுரைகள் பேசப்படுகின்றன; பொருட்படுத்துவ தில்லை; கெட்டிக்காரன் புளுகே எட்டே நாள்தான் என்கிற போது, கோபம் கொண்டோர் இட்டுக் கட்டுவது

அத்தனை நாள்கூடத் தாங்காது என்பதனை அறிந்திருப்பதால்.

மாறினோர் விலகுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்னால் வரையில், திராவிட நாடு பிரச்சினையிலே, தமக்கு மாறுபாடான எண்ணமே கிடையாது என்று மார்தட்டிக் கூறிவிட்டு, இப்போது நாங்கள், திராவிட நாடு கூடாது என்று வாதாடினோம் போராடினோம் பல ஆண்டு களாகவே என்று இன்று பேசுவது கேட்டு, கோபம்கூட அல்ல, சிரிப்புத்தான் வருகிறது.

துவக்கத்திலே, தம்பி! எனக்கு இலோசாக ஒரு ஆசை, உள்ளூர இருந்தது.

நம்மை - அதாவது என்னை என்று வைத்துக்கொள்ளேன் - பிடிக்காததால், "திராவிட நாடு' திட்டம் வேண்டாமென்று கூறுவார்கள். ஆனால், தனி அரசு வேண்டும்

என்றுதான் கொள்கை இருக்கும், திராவிட நாடு என்பதற்குப் பதிலாக, தமிழ் நாடு என்று திட்டம் கொள்வார்கள் என்று எண்ணினேன். அதாவது தனி அரசு அமைக்கத்தான் அவர்களும் பாடுபடுவார்கள், ஆனால், அளவிலேதான் மாறுபாடு இருக்கும் என்று எண்ணினேன்.

அளவுபற்றி மட்டுமே கருத்து வேற்றுமை என்றால், அது அருவருக்கத்தக்கதுமல்ல, ஆபத்தானதுமல்ல என்பது என் எண்ணம் என்பதை, தமிழ் நாடா? திராவிட நாடா? என்று கேள்விகள் கேட்கப்படும்போதெல்லாம், ஓரணாவில் காலணா இருக்கிறது, திராவிட நாட்டில் தமிழ் நாடு இருக்கிறது என்று நான் பதிலளித்து வந்ததிலிருந்து, நாடு தெரிந்துகொண்டிருக்கிறது.

அமையவேண்டியது தனி அரசு!

பெறவேண்டியது முழு உரிமை!

ஒழிக்கப்படவேண்டியது வடநாட்டு ஏகாதிபத்தியம்!

விலகவேண்டியது டில்லிப் பேரரசின் பிடியில் இருந்து!

எனவேதான், தமிழ் நாடு என்று அளவு வகையிலே நம்மிலிருந்து மாறுபட்டிருந்தாலும், தனி அரசு, முழு உரிமை வடநாட்டு ஏகாதிபத்திய ஒழிப்பு, டில்லிப் பேரரசிலிருந்து விடுபடுவது என்ற கருத்துக்களிலே, திட்டவட்டமான நம்பிக்கையும், தீவிரத்தையும் கொண்டிருப்பதால், ஆதித்தனாரிடம் நான் மதிப்பு வைக்கிறேன்.

டில்லிப் பேரரசுடன்தான் இணைந்து இருப்போம், வடநாட்டு ஏகாதிபத்தியப் பேரரசில், தமிழ் அரசும் உள்ளடங்கி இருக்கும் என்றால், இனிக்கவும் இனிக்காது - இதைக்

கூற ஒரு தனிக் கட்சியும் தேவையில்லை - இந்த "அடிமைநிலை'தான் தொடர்ந்து என்றால், அந்தத் திருத்தொண்டைத் திறம்பட நடத்த, காங்கிரஸ் இருக்கவே இருக்கிறது!! "நாற்காலிமீது முக்காலியாக ஒரு புதிய கட்சி அந்தப் பழைய காரியத்துக்காக ஏற்படத் தேவையேயில்லை - சிலருக்குத்"தலைமை' வேண்டும்' என்ற காரணம் காட்டினாலொழிய.

சுடச்சுடப் பழைய சோறு விற்க ஒரு தனிக்கடை வைப்பாரும் உண்டா? வைத்திருக்கிறார்களே!!

நாட்டு மக்கள் இந்தப் போக்கை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைத் தம்பி, நீயும் நானும் நன்கு உணரத்தக்க நல்லறிவுப் பிரசாரத்தில் நமது தோழர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

எஸ். டி. சோமசுந்தரம், பி. ஈ.

ஆலடி அருணா, பி. ஏ. பி. எல்.
என். அன்புச்செழியன், எம். ஏ.
கே. ஏ. கிருஷ்ணசாமி, எம். ஏ., பி. எல்.
முரசொலி மாறன், எம். ஏ. உ.
பில்லப்பன், எம். ஏ., பி. எல்.
என். வி. என். சோமு, பி. ஏ.
எஸ். கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., பி. எல்.
எம். எஸ், வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.
அப்பர்சுந்தரம், எம். ஏ., பி. டி., பி. எல்.
சி. என். ஏ. பரிமளம், எம். பி., பி. எஸ்.
ஏனையன், எம், பி., பி. எஸ்.
சிவகுமாரன், பி. ஈ.
பி. மணிவேந்தன், எம். ஏ.
டி. கிருஷ்ணன், எம். ஏ.
ஆர். சேது, எம். ஏ.
பி. சீனிவாசன், எம். ஏ.
உ. கணபதி, எம். ஏ.
டி. நவமணி, எம். ஏ.

கே. இளஞ்சேரன், எம். ஏ.

டி. கந்தசாமி, எம். ஏ. ஆர். பிச்சை, பி. ஏ., பி. எல்.

பி. ஆடியநம்பி, பி. ஏ., பி. எல்.

பி. எஸ். மணியன், பி. ஏ., பி. எல்.

செல்லையா, பி. ஏ., பி. எல்.

எம். ஏ. மசூத், பி. ஏ.

எஸ். அமுதன், பி. ஏ.

மார்க்கண்டன், பி. ஏ., பி. எல்.

கரந்தை ஜின்னா, பி. ஏ.

அலி சேக் மன்சூர், பி.ஏ.

இலட்சுமணப் பெருமாள், பி. ஏ., பி. எல்.

டி. கே. பொன்வேலு, பி. ஏ.

ஏ. சுப்பிரமணியம், பி. ஈ.

ஏ. பாலசுப்பிரமணியன், பி. காம்., (ஆனர்ஸ்)

ஏ. தேவராசன், பி. ஏ.

பி. யு. செழியன், பி. ஏ. (ஆனர்ஸ்)

ஆர். இளந்திரையன், பி. ஓ. எல்.

ஏ. எல். சுப்பிரமணியன், பி. ஏ., பி. எல்.
கே. இராசாராம், பி. ஏ.
குமாரி. ஏழைவல்லி, பி. ஏ.
மலைச்சாமி, பி. ஏ., (ஆனர்ஸ்)
கே. எஸ். சம்பத், பி. ஈ. (ஆனர்ஸ்)
கே. பழனிமுத்து, பி. ஏ.
ஏ. திரவியன், பி. ஏ.
ஆர். தியாகசாமி, பி. ஏ.
புதுமதியான், பி. எஸ்சி.
மோகன்தாஸ், எம். பி., பி. எஸ்.
குமாரி எஸ். பி. சற்குணம்
கிருஷ்ணன், பி. ஏ.
ஆர். நீலகண்டன், பி. ஏ., எல். எல். பி.
சி. கிருஷ்ணன், பி. ஏ., பி. எல்.
சந்திரன், பி. எஸ்சி.
டி. ஹெர்பர்ட் ஜான்
எம். சி. பாலன், பி. ஏ., பி. எல்.
எஸ். ஆனந்தனன், பி. ஏ.

சிதம்பரம்
எஸ். எம். டி. தாசிம்

•

என்ன பட்டியல்? என்கிறாயா தம்பி! நாகர்கோயிலில் நடைபெற இருக்கும் திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாநாட்டிலே கலந்துரையாட இருக்கும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல்.

அவர்களென்ன, நம்முடன் இருந்தவர்களிலே சிலர் மாறினோர் ஆகி, திராவிடத்தைத் தாக்க, அந்தத் தாக்குதலைக் காங்கிரஸ் ஏடுகள் வெளியிடுவது கண்டா, மனம் குழம்புவார்கள், மருட்சி அடைவார்கள்! எங்கேனும் உண்டா? இலக்கியத்தில், வரலாற்றில் கண்ட ”திராவிடத்தை’ மறந்தா போவர், எரிச்சலால், இல்லை என்றுகூற, இதுவே தக்க சமயம்

இந்திய அரசுக்கு வலிவுதேட என்ற எண்ணத்தில், காங்கிரஸ் ஏடுகள், மாறினோர் பேச்சை, மணிமொழிகள்போலாக்கி, நித்த நித்தம் வெளியிட்டுக் காட்டுகிறார்கள் என்பதறியாமல்.

அல்லது, ஐயகோ! திராவிடத்தை நம்முடன் இருந்தாரே எதிர்க் கின்றாரே, நாமென்ன செய்வோம் என்றா கலங்கி நிற்பர்! நம்முடன் இருந்த காலை, திராவிடத்தை எதிர்த்தவரை, இன்று மாறிப்போன "மாவீரர்' மதித்தனரா? மறுப்புரைக்காது இருந்தனரா? உரைத்த மறுப்பும் எத்தகையது!

மாணவரொருவர் மடலொன்று விடுத்துள்ளார் - அம்மடலில் வேறொன்றுமில்லை - திராவிடத்தை மறுத்தோரை, இன்று மாறியுள்ளோரில் ஒருவர் வெளுத்து வாங்கியதோர் பாட்டு மட்டுமே, காணக் கிடைக்கிறது. அதனைக்

காண்க:

தென்னாட்டில் வேரூன்றித், திராவிடர்கைக் கலமாகி

பொன்னாட்டை விட்டுப்பிரிந்தார் பொருளாகி

பம்பாயில் கிளையோடி, பர்மாவில் பண்பாடி

பழம்பெரிய மலைநாட்டில் பழமாகி, ஈழத்தில்

பிஜித்தீவில் வாழ்கின்ற பெருங்குடிகள் துணையாகி

பேரளவில் கிளைத்தோங்கும் பெறற்கரிய கழகத்தை

சுண்டைக்காய் வீரரெல்லாம் தொலைத்துவிட முயல்கின்றார்!

வெண்டைக்காய்க் கூட்டில் விளக்கெண்ணெய்தனைச் சேர்த்து

வழவழத்த கொள்கையென வழங்குகிற மீசையெலாம்

ஆளை அசைத்திடுமாம்! ஆழியினைத் தூர்த்திடுமாம்!

மாமலையைத் தூக்கி மடுவினிலே போட்டிடுமாம்!

வானைப் பிடுங்கி வாளாக்கி வீசிடுமாம்!

நாநடுங்கும் வார்த்தைகளில் வானரங்கள் கத்துதடா!

சிச்சீ; இந்நாடகத்தை சிறு சேயும் நம்பாதே!

கைச்சரக்கில் லாதவர்கள் கதறுவதால் என்ன பயன்?

புடவை துவைப்பதற்கும், பொதி சுமந்து போவதற்கும்

அழுக்கேற்றிச் செல்வதற்கும் அருந்திறமை பெற்றவரே!

எத்தனையோ குப்பைகளை இதற்குமுன்னே கண்டுவந்தோம்

பொத்தல் கலயங்காள்! போயொழிவீர் நில்லாதீர்.

மாபெரிய கலை எங்கள் மடிதனிலே! கலைஞர்களில்

நாடறிந்தோர் எங்கள் நடுவே! அவர் கூறும்

தேனூறும் செந்தமிழின் திறமெல்லாம் எங்கள் திறம்

இரவல் பொருள்தேடி இளைத்துவிட்ட ஓடுகளே!

அறிவின்றி முன்னேற ஆர்ப்பரிக்கும் கூடுகளே!

நீரறிந்த தெல்லாம் நிலையான வயிற்றெரிச்சல்

தம்பி! இப்படி, திராவிட நாடு திட்டத்தைக் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துவிடுவேன் என்று பேசியவர்கள்மீது "கவிதை' பாய்ந்தது; எழுதினோர் மறந்தனர்; படித்தோர் மறக்கவில்லை; பாடம் புரிகிறதல்லவா!!

அன்புள்ள

அண்ணாதுரை

11-6-61

43. 4புதுப் பா !

திராவிடர் உரிமை -
தனி அரசு -
தமிழ் நாடு பிரச்சினை.

தம்பி!

”ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருத்தல் இலாபமா? என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலை யில்லையோ அதுபோல ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கும் விலையில்லை.’’

அதுசரி, அண்ணா! நாடு விடுதலைப் பெறவேண்டும் என்பதனை அழுத்தந்திருத்தமாகக் கூறவேண்டியதுதான் மரமண்டைகளுக்கும் புரியும்படி; ஆனால் விலகியோர் கூறுகிறபடி, எதற்காக அண்ணா!

பால் உணர்ச்சி உள்ள பேச்சுப் பேசுகிறாய்? - என்றுதானே, தம்பி! கேட்கிறாய். இது, என் பேச்சு அல்ல! விலகியோரில் ஒருவரின் பேச்சு! சட்டசபை உறுப்பினர்! அமைதியாகப் பேசுபவர். அவருக்கே மனம் குமுறி, புதுவை மாநாட்டிலே, பேசினார் இதுபோல!

எடுத்துக்காட்டுகள், உவமைகள், கவிதைகள், கதைகள் ஆகியவைகளைக்கொண்டு, தேவையான அரசியல், சமுதாயக் கருத்துக்களை, எளிய முறையிலே அனைவரும் புரிந்துகொள்ளச் செய்யும் முறை - என் கண்டுபிடிப்பு அல்ல! நீண்ட பழம்காலந் தொட்டு, அறிவாளர் மெத்த அருமையாகக் கையாண்ட வழி - அதே முறைப்படித்தான், நம்மைவிட்டு விலகிய சட்டசபை உறுப்பினர் எம். பி. சுப்ரமணியம் அவர்கள், கழக மாநாட்டிலே, நாட்டு விடுதலையின் அடிப்படைத் தன்மையை

விளக்க, இந்த உவமை காட்டிப் பேசினார் - புதுவையில். வழக்கறிஞர் பேச்சு வெறும் பேச்சாக அல்ல, வழக்கை விளக்க வாதம் தேவை அல்லவா - அம்முறையில்,

"நாடு புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்பட்டால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போதிய பணம் திராவிடத்திற்கு ஒதுக்கப்பட்டால், திராவிட நாடு கேட்க மாட்டீர்களா?'' என்பார்கள்.

"ஒரு நாடு விடுதலைபெற்ற நாடாக இருப்பதும், ஒரு மனிதன் சுதந்திர மனிதனாக வாழ்வதும், அதனால் ஏற்படக்கூடிய இலாப நட்டக் கணக்கல்ல - நாம் பார்க்கவேண்டியது. எல்லா வசதிகளையும் கொடுத்து வாழ்நாள் முழுவதும் சிறைக் கைதியாக இருப்பாயா? என்று ஒருவனைக் கேட்டால், கூலிக்காரனாக இருந்தாலும் சுதந்திர மனிதனாகவே இருக்க விரும்புவான் என்பது மறுக்க முடியாததாகும்.''

என்று விளக்கம் அளித்தார்.

இந்த விளக்கம் போதும்போலிருக்கிறதே! மேலும் இதிலே பால் உணர்ச்சி இல்லை. இதுபோல் பேசினால் போதுமே! என்று, தம்பி! உனக்குத் தோன்றுகிறது. ஆனால், அவருக்கு அப்படித் தோன்றவில்லை; ஆகவே அவர் தமது வாதத்தைத் தொடர்ந்து பேசுகிறார்.

”அதைப்போலத்தான் ஒரு நாடு அடிமையாக இருப்பதால் இலாபமா? சுதந்திர நாடாக இருப்பதால் இலாபமா என்பதல்ல நாம் கவனிக்கவேண்டியது - ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தால் இலாபமா? என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ, அதுபோல ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கும் விலையில்லை.’’

நம்மோடு இருந்தாலாவது இத்தகைய

விளக்க உரைகளை நாம் அடிக்கடி கேட்கலாம் - ஆனால் இல்லை - என்ன செய்வது - எப்படி எப்படிப் பேசினார் - பேசக்கூடியவர் என்பதை எண்ணி மகிழ, அவருடைய உரையிலே சில பகுதிகளைத் தந்திருக்கிறேன்.

"இருண்ட கண்டம்' என்று சொல்லப்படும் ஆப்பிரிக்கா விலும், ஆசியாவிலும் இதுவரை ஐரோப்பிய ஏகாதிபத்தியங் களின் காலனிகளாக வைக்கப்பட்டிருந்த நாடுகள், இழைக்கப் பட்ட கொடுமைகளை வாய்திறந்து ஏனென்று கேட்காமல், அடிமைகளாய் வாழ்ந்த மக்கள்,"மனிதர்களாய்ப் பிறந்தோம்; அடிமைகளாய் வாழ்ந்தோம்; கொடுமைகளைச் சுமந்தோம்; இனியும் சகியோம்; வாழ்ந்தால் விடுதலைபெற்ற மக்களாய் வாழ்வோம் அல்லது விடுதலைப் போரிலே மாள்வோம்; இனி, வீணில் காலம் கடத்தமாட்டோம்' என்று ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில்

விடுதலைப் போரிலே தங்களைத் தியாகம் செய்யும் நிலையினைப் பார்க்கிறோம்.

கொடுக்கவேண்டிய பலிகளைக் கொடுத்து, செய்ய வேண்டிய தியாகங்களைச் செய்து, விடுதலை பெற்ற மொராக்கோ, டுனீ□யா, கானா, சைப்ரஸ் நாடுகளைக் காண்கிறோம். வெற்றியின் அருகிலே உயிரைப் பணயம் வைத்துப் போராடும் அல்ஜீரியா, நியூசிலாந்து நாடுகளையும் காண்கிறோம்.

இங்கே - ”திராவிடம் விடுதலை அடையவேண்டும்’ என்று நாம் சொல்லுகிறோம். இந்தியா ஒன்று என்பது என்று இருந்ததில்லை? இந்திய உபகண்டத்தின்மீது படையெடுத்தவர்கள் எத்தனையோ பேர். ஆனால், எவரும் திராவிடத்தில் நுழைந்த தில்லை. பேரரசர்கள் என்று புகழ் பெற்றோர் இந்திய உபகண்டத்தில்

ஏராளம்; ஆனால், எவரும் திராவிடத்தைத் தன்னாட்சியின்கீழ் கொண்டு ஆண்டதில்லை.

"இந்தியா ஒன்று' என்று சந்திரகுப்தன் காலத்தில் இல்லை! சமுத்திரகுப்தன் காலத்தில் இல்லை! அசோகன் காலத்தில் இல்லை! ஹர்ஷன் காலத்தில் இல்லை! கனிஷ்கன் காலத்தில் இல்லை! அக்பர் காலத்தில் இல்லை! ஔரங்கசீப் காலத்தில் இல்லை! ஆனால், அலகாபாத் பண்டிதர் காலத்தில் மட்டும் எப்படி இந்தியா ஒன்றாகும்?

அந்நியன் - வெள்ளையனும், பிரெஞ்சுக்காரனும் ஆண்ட காலத்தில், தன் நிர்வாக வசதிக்காகத் துப்பாக்கி முனையில், சர்க்கஸ் கம்பெனியில் ஆட்டையும் சிங்கத்தையும் ஒருசேர வைப்பதுபோல் - இந்தியாவை "ஏக இந்தியா'வாக வைத்திருந்தான். அதனாலேயே, நாம், எப்படி வடவரோடு ஒன்றாக முடியும்?

மொழியால், கலையால், பண்பாட்டால், வரலாற்றால், பழக்க வழக்கங்களால், பூகோள ரீதியாகத் திராவிடர் வேறு - வடவர் வேறு. அப்படியிருக்க, நாம் அனைவரும் ஒன்று என்று எப்படிச் சொல்ல முடியும்?

இந்த மதத்தைத் தழுவியவர்கள் இந்தியா முழுமையும் உள்ளவர்கள்; ஆகவே இந்தியா ஒன்றாக இருக்கவேண்டும் - என்றால், இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்கள் எல்லோரையும் ஓர் அரசின்கீழ் கொண்டுவர இயலுமா? கிருத்துவ மதத்தைத் தழுவியிருக்கின்ற காரணத்தினாலேயே அமெரிக்காவும், இங்கிலாந்தும், பிரான்சும், ஜெர்மனியும், ஓர் ஆட்சியின்கீழ் இருப்பது சாத்தியமாகுமா? அதைப்போலத்தான், திராவிடமும் இந்தியாவோடு ஒன்றாக இருக்க இயலாது. இரண்டு கைதிகளை, வசதிக்காகப் போலீசுக்காரன் ஒரு

கைதியின் வலதுகையுடன் மற்றவனின் இடதுகையைச் சேர்த்து விலங்கிட்டு, சிறைக்கு அழைத்துச் சென்று ஓர் அறையில் பூட்டி வைப்பதாக வைத்துக்கொள்வோம். விடுதலை அடைந்ததும், அந்தக் கைதிகள் வீடு திரும்புகையில், அவரவர்கள் வீட்டுக்கு அவரவர்கள் போவார்கள். இதுவரை ஒன்றாகவே சிறையில் வைக்கப்பட்டிருந்தோம்; ஆதலால் இனியும் ஒன்றாகவே வெளியிலும் வாழ்க்கை நடத்துவோம்; அப்படித்தான் இருக்க வேண்டும் - என்பது எப்படி நீதியல்லவோ, அதைப்போலத்தான் வெள்ளைக்காரர்களால் அடிமைப்படுத்தப்பட்ட நாம் வெள்ளையர்கள் வெளியேறியவுடன் தனித்தனியே வாழ்வது - அரசோச்சுவதுதான் நீதி என்கிறோம். நாம் நமது உரிமையைக் கேட்டால், “பகைமை பாராட்டு கிறோம்’

என்கிறார்கள்.”என் வீட்டுக்குக் காம்பவுண்டு சுவர் போடுகிறேன்’ என்றால், “பக்கத்து வீட்டுக்காரன் திருடனா?’ என்கிறார்கள் - இது எப்படி நியாயமாகும்? இந்திய அரசியல் சட்டம் என்பது, திராவிடர்களை வடவர்கள் அடிமைப்படுத்த ஏற்பட்ட அடிமை சாசனம் ஆகும். வெள்ளைக்காரன் வெளியேறி எத்தனை ஆண்டுகளாகி விட்டன? பிரெஞ்சுக்காரன் வெளியேறி எத்தனை ஆண்டு களாகி விட்டன? என்ன மாறுதல்களை வாழ்க்கையில் கண்டோம்? வாழ்வு இங்கு மலர்ந்ததா என்றால், இல்லை! போதிய உணவு இந்த அரசால் இதுவரை நமக்கு அளிக்கப்படவில்லை! மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் வசதியாகக் கிடைக்கவில்லை! ஆயிரக்கணக்கான நகரங்களிலும், கிராமங்களிலும் பாதுகாக்கப் பட்ட குடிதண்ணீர் இல்லை! இன்று மக்கள்

குடிதண்ணீரை விலைகொடுத்து வாங்கும் நிலையினைக் கண்கூடாகக் காண்கிறோம்! இலட்சக்கணக்கானவர்களுக்குக் குடியிருக்க வீடில்லை! மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் எனப்படுபவை, உணவு - இருப்பிடம் - தண்ணீர்! இவைகள்கூட உத்தரவாதம் செய்யப்படவில்லை இந்த அரசால்! நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. வறுமை ஒழிந்தபாடில்லை! கல்வி எல்லோருக்கும் அளித்தபாடில்லை! இந்நிலை ஏன்? அரசு நல்ல அரசு இல்லை; திறமையான அரசு இல்லை என்ற காரணத்தால் மட்டுமல்ல - நம்மவர் அரசாகவும் இல்லை என்பதுதான் மேலே சொன்ன நலிவுகளுக்கு எல்லாம் காரணம் என்று நாம் சொல்கிறோம். பக்ரா - நங்கலைக் காட்டுகிறார்கள்; இராகுட் அணைத் திட்டத்தைக் காட்டுகிறார்கள்;

தாமோதர் திட்டம், சிந்திரித் திட்டம் என்கிறார்கள்; பிலாய் என்கிறார்கள்! ரூர்கேலா என்கிறார்கள்; அத்தனையும் எங்கே - வடநாட்டில்! இங்கே - சொந்த நாட்டான் பிறந்த நாட்டில் வாழ்வதற்கு வழிவகை இல்லாமல், கூலிகளாய் சிலோனுக்கும், பர்மாவிற்கும், சிங்கப்பூருக்கும், மலேயாவிற்கும், ஆப்பிரிக்காவிற்கும் சென்றவன், அங்கிருந்து தற்போது துரத்தி அடிக்கப்படுகிறான்."நாடற்றவன்' என்று உதைத்துத் தள்ளப்படுகிறான். ஏனென்று கேட்க நாதியில்லை - வாவென்று சொல்ல நமக்கு உரிமை இல்லை - வந்தாலும், இன்று வசதி அளிக்கும் அதிகாரம் டில்லியில்! ஏன் இந்த நிலை? திராவிடம் புறக்கணிக்கப்படுவதைப் புள்ளி விவரத்தோடு நாள்தோறும் நாம் எடுத்துக் கூறிவருகிறோம். ஒப்ப மறுக்கும் ஆட்சியாளர்கள். மற்றக்

கட்சிக்காரர்கள் எல்லாம் சிலபல சந்தர்ப்பங்களில் நாம் சொல்லியவற்றைச் சொல்லி மத்திய அரசினைக் கெஞ்சிக் கேட்கிறார்கள். நிதியமைச்சர் சுப்பிரமணியம் ஆனாலும் சரி - மைசூர் முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையாவானாலும் சரி - இப்போதைய ஜெட்டியானாலும் சரி - ஆந்திரத்தின் சஞ்சீவியானாலும் சரி - நாம் சொல்லியவற்றைச் சிலபல சந்தர்ப்பங்களில் ஒப்புக் கொள்கிறார்கள். மாற்றார், உடலில் உள்ள நோயை உணருகிறார்கள். ஆனால், நாம் சொல்லும் பரிகாரத்தை உணர மறுக்கிறார்கள் - ஒப்ப மறுக்கிறார்கள். ஒரு நாடு விடுதலை பெற்ற நாடாக இருப்பதும், ஒரு மனிதன் சுதந்திர மனிதனாக வாழ்வதும், அதனால் ஏற்படக்கூடிய இலாபநட்டக் கணக்கல்ல - நாம் பார்க்கவேண்டியது; “எல்லா வசதிகளையும் கொடுத்து வாழ்நாள்

முழுவதும சிறைக் கைதியாக இருப்பாயா. . . என்று ஒருவனைக் கேட்டால். கூலிக்காரனாய் இருந்தாலும் சுதந்திர மனிதனாகவே இருக்க விரும்புவான் என்பது மறுக்க முடியாததாகும். அதைப்போலத்தான், ஒரு நாடும் அடிமையாக இருப்பதால் இலாபமா? சுதந்திர நாடாக இருப்பதால் இலாபமா - என்பதல்ல நாம் கவனிக்கவேண்டியது. ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தால் இலாபமா? - என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ அதுபோல ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கும் விலையில்லை. நாடு புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்பட்டால் - மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போதிய பணம் திராவிடத்திற்கு ஒதுக்கப்பட்டால், திராவிட நாடு கேட்க மாட்டீர்களா? - என்பார்கள். ஆகவேதான், திராவிடம்

தனிநாடாக - விடுதலை பெற்ற நாடாக ஆகவேண்டும் என்று நாம் சொல்கிறோம். ஒரு சிலர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள் - "உலகத்திலுள்ள நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வாழ நினைக்கும் இந்த நேரத்தில், நாடு பிரியவேண்டும் என்கிறீர்களே; உலகப் போக்கினை உணர வில்லையே' - என்று. இன்று உலகத்திலுள்ள சின்னஞ்சிறு நாடுகளும் விடுதலைபெற்ற நாடாகத் தனிநாடாகவே திகழ விரும்புகின்றனவே தவிர, அண்டை நாட்டோடு ஒட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஒரு நாடும் மற்றொரு நாடும் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களும், ஐக்கியநாட்டு அமைப்புப்போன்றவைகள் எல்லாம் தாங்கள் பெற்ற சுதந்திரத்திப் பாதுகாத்துக்கொள்ளவும், சிறிய நாடுகளாயினும் பெரிய வல்லரசுகளோடு சரிநிகர் சமானமாக வாழ்வதற்குச்

செய்துகொள்ளும் ஏற்பாடுகளே தவிர வேறில்லை. ஆதலால், திராவிடம் பிரியவேண்டும் என்பது குறுகிய மனப்பான்மையுமல்ல - உலகப் போக்கிற்கு மாறுபாடானதுமல்ல. திராவிடம் தனித்து வாழுமா - என்கிறார்கள்; இந்தியா தனித்து வாழ்கிறதா, உலகிலேயே பணக்கார நாடான அமெரிக்கா தனித்து வாழ்கிறதா என்றால் - இல்லை; இயலாது. அதைப்போலவேதான், பிரிந்த திராவிடம் தன் நலனுக்கு ஏற்ற வகையில் நேச நாடுகளோடு வியாபார ஒப்பந்தங்களோ, மற்றப் பல ஒப்பந்தங்களோ செய்துகொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான், திராவிடம் பிரிந்தாகவேண்டும் என்று கூறுகிறோம். சின்னஞ்சிறு நாடுகள் - மொராக்கோ, டுனீ□யா, சைப்ரஸ், கானா போன்ற நாடுகளின் விடுதலை வரலாறுகள்,

விடுதலைக்காகத் தியாகத் தழும்புகளை ஏற்றுத் தங்கள் உயிரைக் கொடுக்க முன்வந்த இலட்சக்கணக்கான மக்கள் - விடுதலைப் போராட்டம் நடத்துகின்ற அல்ஜீரியா, நியூசிலாந்து, திராவிடம் போன்ற நாடுகளுக்கு நம்பிக்கையையும், ஊக்கத்தையும் ஊட்டு கின்றன. இந்தப் பணியை - தாய்த்திருநாட்டினை மீட்கும் பணியை ஏற்க இன்று திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தேசிய இயக்கமாக வளர்ந்துள்ளது. இதன் வரலாறு குறுகியகால வரலாறு என்றாலும், பெருமைமிக்க வரலாறு. வாய் குளிர, கேட்போர் காது குளிர, பெருமைமிக்க வரலாறு! - என்று பேசக் கேட்டோம். ஒருமுறை அவரை எண்ணி நன்றி கூறிக்கொள், தம்பி! இனி அந்தப்"பெருமைமிக்க வரலாறு' எப்படி ஏற்பட்டது என்பதை எண்ணிப்பார். இன்றுள்ள

எதிர்ப்பு, புதிதுமல்ல எதிர்ப்புமல்ல என்பது விளங்கும். வசவாளர்கள் இழிமொழி வீசினர்; பழி சுமத்தினர்; ஏளனம் செய்தனர்; எதனையும் நாம் பொருட்படுத்தவில்லை. அதனால்தான், குறுகியகால வரலாறு என்றாலும், பெருமைமிக்க வரலாறு என்று நற்சான்று அளித்தார் நண்பர் - அன்று. அந்தப்"பெருமைமிக்க வரலாறு' படைத்த பொறுப்பாளர் களான, நமது தோழர்கள் முன் வைக்கப்படும் பிரச்சினை யாயினும் சரி! சிக்கலென்பனவாயினும் சரி, எல்லாமே, "பழைய சரக்கு' - புதிய கண்டுபிடிப்புகள் ஏதுமில்லை. நைந்துபோனவை! வந்துவந்து போனவை! பலமுறை பாய்ந்துவந்து, சுருண்டு கீழே விழுந்தவை! - இப்படித்தான் உள்ளன இன்று கிளப்பப்படும் ஏசல், தூற்றல், எரிச்சல் யாவும். தூற்றல்களைப் பொறுத்தவரையிலே, அண்ணா! தரம்

கெட்ட பலரும் முன்பு தூற்றிக்கொண்டுதான் உலவினர்; இது ஒன்றும் புதிது அல்ல; இவர்கள் பாபம், முன்பு"நாமாவளி' பாடியவர்கள்; அதற்காகவேனும் இவர்கள்மீது நமக்கு அனுதாபம் ஏற்படவேண்டும்! ஆனால், இப்போது தமிழ் நாடா? திராவிட நாடா? என்றல்லவா, பிரச்சினை புதிய வடிவமெடுத்திருக்கிறது - என்று கேட்கிறாய். தம்பி! இது பிரச்சினையுமல்ல, வடிவமுமில்லை, புதிதுமல்ல!! ஏன் பிரச்சினை அல்ல, என்கிறேன் என்றால், விடுதலைக்குப் போரிடுவோர், விடுதலையை மறுப்போர் என்ற இரு பிரிவினருக்குள்தான், பிரச்சினை எழ முடியும் - விடுதலைக்குப் போரிடுவோருக்குள்ளாகவே பிரச்சினை எழ முடியாது - போராட்ட முறைகளில், அளவில், வகையில் கருத்து வேறுபாடுகள் எழலாம் - பிரச்சினையாகா அவை. வடிவம் அல்ல

என்று கூறுகிறேன் - தமிழ் நாடு தனி நாடாக வேண்டும் என்று கூறிக்கொண்டே, அது இந்தியப் பேரரசில் இணைந்து நிற்கும், பிரிந்து செல்லும் உரிமைபெற்று என்று பேசப்படுவதால்! புதிது அல்ல என்று கூறிடக் காரணம், தமிழ் நாடா? திராவிட நாடா? என்று திருச்சித் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் விவாதம் நடத்தியது, பல ஆண்டுகளுக்கு முன்பேயாதலால். எனவேதான், இது பிரச்சினையுமல்ல, வடிவமுமில்லை, புதிதுமல்ல என்றேன். ஆனால், இது, விலகியோர் இதனைக் கிளப்புவதைப் பொறுத்தவரையில்தான். தன்னாட்சி ஆர்வம் குன்றாமல், விடுதலை வேட்கையை மறவாமல், தமிழ் நாடுதான் சாலச் சிறந்தது. திராவிட நாடு அல்ல என்று பேசுவோரும் உளர். அவர்கள் கூறுவது புதிது அல்ல - எனினும் வடிவம் தெரிகிறது,

ஏனெனில் வடவர்பிடி அறவே கூடாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகின்றனர். அவர்கள் இதனை ஒரு பிரச்சினையாக்குவது, மாற்றாருக்குத்தான் மகிழ்ச்சி அளிக்கும், என்பதற்காகச் சில கூற விரும்புகிறேன். அதற்கு முன்னர், அவர்கள் அறிந்துகொள்ள, வேறொன்றும் கூறவேண்டும் - தமிழ்நாடு தமிழருக்கே என்பது இன்றைய கண்டுபிடிப்பு அல்ல - நமக்கு அது நுழைவுவாயில்! ஆம்! நமது துவக்கக் கூட்டம்!! தனி அரசாகத் திகழவேண்டியது, தமிழ் நாடா? திராவிட நாடா? என்ற பிரச்சினையை, ஒன்றின்மீது மற்றதை ஏவிவிட்டு, மோதவிட்டு, அந்த தாக்குதலால், இரண்டுமே வதைபட்டு வலிவு குன்றிப்போகும் நிலையை உண்டாக்கவேண்டும் என்று எண்ணிப் பயன்படுத்தும் வன்கணாளர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாடா? திராவிட நாடா? என்ற பேச்சை, இரண்டுக்கும்

இடையே பகையை மூட்டிவிடப் பயன்படுத்து வோருக்கு, உள்ள நோக்கம். தனி அரசு என்னும் திட்டத்தைத் தகர்க்கவேண்டும் என்பதாகும். தமிழ் நாடா? திராவிட நாடா? என்று பிரச்சினைக்கு வடிவம் கொடுத்து, எதற்கு எது விரோதம் என்று மோப்பம் பிடித்து, மோதுதலை உண்டாக்க நினைப்போர் நிறைய இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. திராவிட நாடு கேட்பவர்கள் தமிழ் நாட்டுக்குத் துரோகிகள் என்றோ, தமிழ் நாடு கேட்பவர்கள் திராவிட நாட்டுக்குப் பகைவர்கள் என்றோ பேசும்படி தூண்டிவிடுவது அடிப்படைப் பிரச்சினையை மாய்க்கமுனையும் மாபெருங் குற்றமாகும்; மாற்றாருக்கு, தெரிந்தோ தெரியாமலோ, கைக் கூலிகளாகிவிடும் கயமைப்போக்கை ஏற்படுத்திவிடும். அடிப்படைப் பிரச்சினை, தமிழ் நாடா? திராவிட நாடா? என்ற அளவு, முறை,

வகை என்பதுதானா? அல்ல. அடிப்படைப் பிரச்சினை இந்தியப் பேரரசு என்ற ஒன்றின் கீழ் அடிமையாக இருக்கத்தான்வேண்டுமா? அல்லது விடுபட்டுத் தனி அரசு ஆகவேண்டுமா என்பதுதான். தமிழ் நாடா? திராவிட நாடா என்று பிரச்சினையைப் பேசத் தொடங்கி, இந்த அடிப்படையை, விடுதலையை தன்னாட்சியை, தனி அரசை, மறப்பதோ, இழப்பதோ, மாபெருந் துரோகச் செயலாகும்.

தமிழ்நாடா? திராவிட நாடா? என்று பேசும், இரு வேறு முகாம்கள், ஒன்றை ஒன்று எதிர்ப்பதற்காக அமைக்கப்படுகிறது என்று நிலைமை எழுந்தால், அது அந்த இரு முகாம்களுக்கு அல்ல, இந்தியப் பேரரசுக்குக் கப்பங்கட்டிக்கொண்டு, கட்டியங் கூறிக்கொண்டு, காவடி எடுத்துக்கொண்டு, மற்றவர்கள் அனைவரும் சீரிழந்து, பேரிழந்து, சிற்றினமாகக் கிடக்கவேண்டும் என்று

எண்ணுபவர்களின் முகாமுக்குத்தான் வாய்ப்பு; வலிவு; மகிழ்ச்சி தரும்.

தமிழ் நாடு என்று கூறுவோர் உள்ள முகாம், திராவிட நாடு என்றுரைப்போர் உள்ள முகாம் எனும் இரு முகாம்களுமே, இந்தியப் பேரரசு எதனையும் தன் காலடியில் போட்டு மிதிக்கும் நினைப்புடன், நிலையுடன், வலிவுடன் இருத்தல் வேண்டும் என்று திட்டமிட்டுக் கொட்டமடிக்கும் முகாமுக்கு எதிர்ப்பாக அமைந்தவை என்று திட்டவட்டமாக நிலைமை தெளிவுபடுத்தப்பட்டாக வேண்டும்.

தமிழ் நாடா? திராவிட நாடா? என்ற பேச்சைப் பெரிது படுத்தி அதற்குப் பேருருவம், போருருவம் கொடுப்பதை, இந்தியப் பேரரசு புன்னகையுடன் வரவேற்கும்!

தமிழ் நாடா? திராவிட நாடா? என்று ஒரு முகாம்களும் போரிட்டு மடியட்டும், நாம்

கொடிகட்டி ஆண்டிடுவோம் - கொழுத்துத் திரிந்துகொண்டிருப்போம் என்று திட்டமிடும். தமிழ் நாடா? திராவிட நாடா? என்று சச்சரவு எழட்டும், அந்தச் சச்சரவிலே இரு முகாம்களும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, நாம் நமது ஆதிக்கத்தை வலிவுள்ளதாக்கிக்கொள்ளு வோம் என்று "ஏக இந்திய' முகாம், எண்ணி இறுமாந்து கிடக்கும்.

தமிழ் நாடா? திராவிட நாடா? என்ற பிரச்சினையைக் கிளப்பிவிட்டுவிட்டு, "ஏக இந்தியா' எனும்"பகைமுகாம்' தன்னை நோக்கிப் பாய்ந்துவரும் எதிர்ப்பை முறியடிக்க முனையும்.

அடிப்படை பிரச்சினை, "ஏக இந்தியா' எனும் பொறி உடைக்கப்பட்டாக வேண்டும்; இந்தியப் பேரரசு எனும் திட்டம் தகர்க்கப்பட்டாக வேண்டும் என்பதுதான் என்பதை மறத்தல் ஆகாது.

இன்று, “ஏக இந்தியா’ -”இந்தியப் பேரரசு’ - எனும் ஆட்சி முறைத் திட்டம், ஏட்டளவிலோ, பேச்சளவிலோ, விவாத அரங்கிலோ அல்ல, சட்டமாக்கப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த ”நடைமுறை’ நிலை குலையாதிருக்க, நாளும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

புன்னகையுடன் நல்லுரை கூறுவோராகச் சில வேளை களிலும், புருவத்தை நெரித்தபடி மிரட்டும் பேச்சினராகச் சில வேளைகளிலும், ஏக இந்தியாக்கள் உள்ளனர். அவர்களின் ஒரே எண்ணம், தன்னாட்சி தனி அரசு என்ற உரிமை உணர்ச்சி, விடுதலை வேட்கை, எழாமல், கருக்கிவிட வேண்டும் என்பதுதான்.

இந்தியப் பேரரசுக்குக் காவலர்களாக உள்ளவர்கள், இதனைத்தான் நோக்கமாகக்கொண்டு, ”தேசியம்’ இருக்கின்றனர் - தேனில் குழைத்த

நச்சுப்பொடி தருகின்றனர்.

தமிழ் நாடா? திராவிட நாடா? என்று விவாதம் நடத்திக் கொண்டு அவர்கள் இருக்கட்டும். . . அதுதான் நமக்கு இலாபம் - அப்படி ஒரு சச்சரவு உருவானால்தான், நம்மீது பாய, நேரமோ, நினைப்போ, வலிவோ, வாய்ப்போ கிடைக்காது போகும் என்பது, "ஏக இந்தியா'க்களின் எண்ணம்.

அந்த எண்ணம் காரணமாகத்தான், எப்போது திராவிட நாடா? தமிழ் நாடா? என்ற பேச்சு, விவாதமாக்கப்பட்டாலும், தூபமிட, தூக்கிவிட, ஏக இந்தியாக்கள் துடியாய்த் துடிக்கி றார்கள்; துந்துபி முழங்குகிறார்கள்.

ஏக இந்தியாக்களைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு, திராவிட நாடு என்ற திட்டம் எந்த வகையினதாக, அளவினதாக, முறையினதாக இருப்பினும் கூடாது என்பதுதான், எண்ணம்

சில வேளைகளிலே, ”தமிழ் நாடு’ எனும் திட்டத்தினிடம் பரிவு காட்டுவதுபோலப் பொய்க்கோலம் காட்டுவர்; உண்மை நிலைமை அஃதன்று.

பெயரும் வகையும் முறையும் அளவும் எதுவாக இருப்பினும், தமிழ் நாடு என்று இருப்பினும், திராவிட நாடு என்று இருப்பினும் உரிமை உணர்ச்சியாக, விடுதலை வேட்கையாக தனி அரசுத் திட்டமாக, இருக்கும் எதனையும் ”ஏக இந்தியாக்கள்’ எதிர்த்து ஒழிக்கத்தான், ஆதிக்கத்தால் கிடைக்கும் ஆற்றலைப் பயன்படுத்துவரேயன்றி, இரண்டில் ஏதேனும் ஒன்றை ஆதரித்து, மற்றதை எதிர்ப்பர் என்று மதியிலியும் கூறமாட்டான்.

பிரிந்துபோகிறோம் - பேரரசுக்கு எடுபிடியாக இருக்க மாட்டோம் - தனி அரசாகிவிடப் போகிறோம் என்ற முழக்கம்,

எங்கிருந்து கிளம்பினாலும், தமிழ் நாடு பேசும் முகாமிலிருந்து எழும்பினாலும், திராவிட நாடு கேட்கும் பாசறையினின்று கிளம்பிடினும், ஏக இந்தியாக்களுக்கு வெறுப்புத்தான் உண்டாகும்.

இந்தியப் பேரரசு, "பேரரசாக' இருக்கவேண்டும் என்றுதான் எண்ணுகிறதேயன்றி, பிரிவினை, தமிழ் நாடாக இருந்தால் பரவாயில்லை, திராவிட நாடுதான் கூடாது என்ற நிலையில் இல்லை; இருக்க முடியாது.

பிரிவினை கூடாது - பேரரசு உடைபடக்கூடாது - தனி அரசு அமையக்கூடாது - என்ற இதிலேதான், இந்தியப் பேரரசு கண்ணுங்கருத்துமாக இருக்கும் - தமிழ் நாடா? திராவிட நாடா? என்ற அளவுபற்றிய அக்கறை கொண்டதுபோலச் சிலருக்குத் தூபமிட்டுப் பேச வைப்பதுகூட, மொத்தத்தில்,

”தனி அரசு’ கேட்கும் உரிமை உணர்ச்சியை மாய்க்கவேயன்றி, தமிழன் என்ற உணர்ச்சியை மதித்திட அல்ல.

திராவிட நாடு கூடாது நடவாது என்று தமிழ் நாடு கேட்போர் கூறுவதாகப் பெரிதுபடுத்திப் பேசும், ஏக இந்தியாக்களின் நோக்கம், ஏக இந்தியா உடைபடாதிருக்க வேண்டும் என்பதுதான்.

அஃதேபோல, திராவிட நாடு எனும் திட்டத்தார், தமிழ் நாடு மட்டும் தனி நாடு ஆகவேண்டும் என்ற வாதத்திலே உள்ள குறைபாடுகளைப் பேசும்போது அக்கறை காட்டி அதனை எடுத்துரைப்பதும், ”ஏக இந்தியா’ எனும் திட்டத்தைக் காப்பாற்றத்தான்.

“திராவிட நாடு!’ கேட்கும் குரல் வலிவடைந்து, நாட்டிலே ஆதரவு பெருகிடும் நிலை வளர்ந்ததும், ஆந்திரர் வேறு, கர்நாடகர்

வேறு, கேரளத்தார் வேறு, எங்ஙனம் அவர்களை இணைத்து ஆட்சி நடக்கும்? ஆகாதே! கூடாதே! ஆபத்தாயிற்றே! என்று கூச்சலைக் கிளப்பி, தனி அரசுத் திட்டத்தைத் தகர்க்க நினைக்கிறார்கள் - அதற்கு,"தமிழ் நாடு' கேட்போர், "திராவிட நாடு' திட்டத்துக்கு எதிர்ப்பாகக் கூறும் காரணங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அதுபோலவே, தமிழ் நாடு தனி நாடு ஆதல் வேண்டும் என்ற உரிமை உணர்ச்சியை உருக்குலைக்க, திராவிட நாடு கேட்பவர்கள் பேச்சினை எடுத்துப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்தியப் பேரரசினர் மேற்கொள்ளும் இந்தப் போக்குக்கு உள்ள நோக்கம், "ஏக இந்தியா' காப்பாற்றப்பட வேண்டும் என்பதாகும்.

தமிழ் நாடு தமிழருக்கே எனும் முழக்கம், எழுப்பப்பட்ட போது, எலி வளை எலிகளுக்கே

என்றுதான் ஏக இந்தியாக்கள் கேலிக் குரலொலி கிளப்பின.

திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சிய முழக்கம் எழுந்தது; திராவிடம் திராவிடம் என்று இரைச்சலிட்டன, ஏக இந்தியாக்கள்!

இப்போது, தமிழ் நாடு கேட்போரைக்கொண்டு, திராவிட நாடு திட்டத்தைத் தாக்கவைத்து, தகர்த்திடலாம் என்பது, ஏக இந்தியாக்களின் நப்பாசை!!

திராவிட நாடு திட்டத்தைத் தாக்க, தமிழ் நாடு கேட்போருக்கு வாய்ப்புத் தேடிக்கொடுத்த பிறகு, தமிழ் நாடு தமிழருக்கே என்ற திட்டத்துக்கு வலிவு ஏறிவிட்டால், ஏக இந்தியா என்ன செய்யுமெனில், முன்பு எழுப்பிய முழக்கம் இருக்கவே இருக்கிறது, எலி வளை எலிகளுக்கே? - அதனைக் கருவியாக்கிக்

கொள்ளும்.

எந்த முறையைக் கையாண்டாகிலும். யாரை யார்மீது ஏவிவிட்டாகிலும், உரிமை உணர்ச்சியை, விடுதலை வேட்கையை, தன்னாட்சி ஆர்வத்தை ஒழித்தாக வேண்டும் என்பது ஏக இந்தியாக்களின் திட்டம்.

ஏக இந்தியாக்களின் இந்தச் சதித்திட்டம் புரியும் எவரும், தனி அரசு உணர்ச்சிக்கு ஊறு தேடிடத்தக்க கேடான முறையிலே, தங்கள் போக்கையும் நோக்கையும், பேச்சையும், செயலையும் ஆக்கிக்கொள்ளமாட்டார்கள். மிகுந்த விழிப்புடனிருந்து, ஏக இந்தியாக்களின் சதியை முறியடிப்பர்.

விலைக்கு வாங்கப்பட்டவர்கள் தவிர, வழுக்கி விழுந்தவர்கள் தவிர, குறுக்கு வழியில் புகழடைய நினைப்பவர் தவிர,

மற்ற எவரும், ஏக இந்தியா நடத்தும் கபட நாடகத்தால், ஏமாந்து போகமாட்டார்கள் என்பது திண்ணம்.

“என்னய்யா திராவிட நாடு! தமிழ் நாடுதான் வேண்டு மென்கிறார்களே இன்னின்னார்! உன்னுடைய திராவிட நாடு கேலிக்கூத்தாமே! தமிழ் நாடுதான் சரியான திட்டமாமே!’’ - என்று, ஏக இந்தியாக்கள் கேட்கும்போது, நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும், அந்த”ஏக இந்தியாக்கள்’ நமது நோக்கை வேறுபக்கம் திருப்பிவிட்டுத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள் தந்திரமாக! என்பதை.

தமிழ் நாடு கேட்பவர்களிடம், ஏக இந்தியாக்கள் சென்று, இதுபோலவே கிளறுவார்கள் - தமிழ் நாடு கூடாதாமே! திராவிடத்தார் கூறுகிறார்களே! - என்று. உடனே, தமிழ் நாடு கேட்பவர்கள், வந்தது

சண்டை! இறக்கடி கூடையை!! என்ற போக்கிலே, திராவிட நாடு கேட்பவர்கள்மீது பாய்ந்தால், ஏக இந்தியாக்கள், தனியாகச் சென்று, கைகொட்டிச் சிரிப்பர்! சிண்டு முடிந்துவிட்டோம்! கண்டபடி பேசுகிறார்கள்!! - நம்பாடு இலாபந்தான்!! - என்று பேசி மகிழ்ந்துகொண்டிருக்கும்.

மாறா ஏக இந்தியாக்கள் கிளற, கிண்டிவிட, தூபமிட, தூக்கிவிட, சிண்டுமுடிந்துவிட, முனையும்போது, அடிப்படையை மறவாமல், ”ஐயா! ஏக இந்தியா! உம்வேலை எமக்குப் புரியும் நன்றாக! கபடநாடகம் கண்டு கருத்தழிய மாட்டோம். எமக்குள்ள நோக்கம், இந்தியப் பேரரசு எனும் சூழ்ச்சிக்கோட்டையைச் சுக்குநூறாக்குவது. அந்தக் காரியத்தை நாங்கள் செய்யாமல் தடுக்க, சூது செய்கிறாய் - புரிகிறது. நாங்கள் பலியாக மாட்டோம். எமது எதிர்ப்பை

நிறுத்திக்கொள்ளவும் மாட்டோம், மாற்றிக் கொள்ளவும் மாட்டோம் என்று கூறிடும், துணிவும் தூய்மையும் எழ வேண்டும். எழுந்திடின், ஏதேது! சிண்டு முடிந்துவிட முடியாது போலிருக்கிறதே!'' என்று உணர்ந்து, ஏக இந்தியாக்கள் மூலை செல்வர்.

தமிழ் நாடா? திராவிட நாடா? என்பதற்கான விளக்கப் பேச்சுக்கள் அதிகப்பட அதிகப்பட, இந்தியப் பேரரசின் இறுமாப்பு, ஆதிக்கவெறி, சுரண்டல்முறை, இனம் அழிக்கும் கொடுமை என்பவை குறித்த பேச்சுக் குறையும், மறையும். அந்தப் பேச்சுக் குறையக் குறைய, உரிமை உணர்ச்சி உருக்குலையும். தனி அரசுத் திட்டம் துருப்பிடித்துப்போகும், விடுதலை அணி உடைபடும்; சிதறுண்டுபோகும்.

நாம் தம்பி! ஒரு துளியும் இந்த நிலைமை எழ இடமளிக்கக் கூடாது.

வடக்கு வேறு - தெற்கு வேறு - என்ற விளக்கம் இப்போது நல்ல முறையிலே கிடைத்து, மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

”வடக்கு நரகலோகமுமல்ல - வடக்கே உள்ளவர்கள் யமகிங்கரருமல்ல’ என்ற புதிய சித்தாந்தம், மக்கள் காதுக்கு நாராசமாக இருக்கிறது.

எனக்குள்ள மகிழ்ச்சி, தமிழ் நாடு தனி நாடு ஆகவேண்டும் என்று கூறும் ஆதித்தனார், இப்படிப்பட்ட ஒரு ஆபாசமான சித்தாந்தத்தை ஏற்கவில்லை என்பதுதான்.

வடவரின் பிடியை எதிர்ப்பதில், இந்தியப் பேரரசு கூடாது என்பதில், ஆதித்தனார், தீவிரம் காட்டுவதை வரவேற்கிறேன், மகிழ்கிறேன் - வடநாடு நரகலோகமுமல்ல, வடவர் யமகிங்கரருமல்ல என்று அவர் கூறவில்லை.

அவருக்கு இல்லை அந்தக் கெடுமதி! அந்த நிலைமைக்குத் தாழ்ந்து போகவில்லை. தலை நிமிர்ந்து நின்று, தமிழ் நாடு தமிழருக்கு என்றார்! அதுகேட்டு நான் இன்புறுகிறேன்.

இந்தியப் பேரரசு என்பது அரசியல் ஆதிக்கத்தால் இறுமாந்துகிடக்கும் ஒரு புதிய ஏகாதிபத்தியம்; வடநாட்டு முதலாளிகளுக்கு அமைந்துள்ள கோட்டை; தென்னாட்டைத் தேயவைக்கும் சுரண்டல் யந்திரம் என்ற பேருண்மையை இப்போது மக்கள், மிகத் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டனர்.

இந்த உணர்ச்சி பாழாகும்படியான பேச்சிலே ஈடுபடுபவர் களைவிட நாட்டுக்குக் கேடு செய்பவர்கள் வேறு எவரும் இருக்க முடியாது.

தமிழ் நாடா? திராவிட நாடா? என்ற பேச்சுக்குப் பின்னாலே பதுங்கிக்கொண்டு,

தென்னாட்டைச் சுரண்டிக் கெடுக்கும் வடநாட்டு முதலாளிகளின் கோட்டையாகிவிட்ட இந்தியப் பேரரசு எனும் புதிய ஏகாதிபத்தியத்துக்கு உடந்தையாக இருப்பவர் எவரேனும், அவரினும் இழிதன்மையான செயல் புரிவோர் வேறெவரும் இருக்க முடியாது.

தம்பி! என்னைப்பற்றி, என் திறமைக்குறைவு, தெளிவற்ற தன்மை, பெருந்தலைவர்களிடம் பேச முடியாத பயங்கொள்ளித்தனம் என்ற எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசி மகிழட்டும்; மகிழக்கூடியவர்களுக்கு விருந்தளிக்கட்டும். நான் துளிகூட வருத்தப்படவில்லை. ஆனால், அதே வேகத்துடன், விறுவிறுப் புடன், நம்மை அடிமைப்படுத்தி, அலைக்கழிக்கும் ஏக இந்தியா எனும் ஏற்பாட்டை, எதிர்த்துத்

தாக்கினால் போதும்.

அண்ணன் என்பவன் யாரடா!
அப்படி ஒருவனெனக் கேனடா!

என்று வீரச்சிந்து கேட்போரைப் பரவசப்படுத்தும் அளவுக்குப் பாடட்டும். ஆனால், வடநாட்டு ஆதிக்கத்தால் வதைபடும் மக்களை விடுவிக்க, வீரம் கொந்தளிக்கும் வெண்பாக்கள் பாடுவதை, விட்டுவிடவேண்டாமென்றுதான் கேட்டுக்கொள் கிறேன். நான் ஒரு தனி ஆள் - மிகச் சாதாரணமானவன் - என்னை அடக்க அல்லது அழிக்க, இத்தனை பெரிய முயற்சியும் ஆற்றலும் தேவையா? அந்த ஆற்றலை, நமது மக்களை, சிங்களத்துக்கும், சிங்கப்பூருக்கும், ஜான்சிபாருக்கும், மோரிசுக்கும், நெட்டாலுக்கும் துரத்திவிட்டிருக்கிற இந்தியப்

பேரரசின் - ஆதிக்கத்தை எதிர்த்திடப் பயன்படுத்த வேண்டும்.

வெண்ணெய் வெட்ட வாள் ஏன்? என்னைத் தாக்கவா இவர்களின் அறிவாற்றல் தேவைப்பட வேண்டும்?

ஐயம் ஏற்படும் நாட்டு மக்களுக்கு, இவர்களுக்கு உள்ள ஆற்றல் இந்த அண்ணாத்துரையை ஏசமட்டுமே பயன்படும் அளவுபோலும் என்று!!

அதுமட்டுமல்ல! அவனோடு இருந்தபோது, வடநாட்டு ஏகாதிபத்தியத்தைத் தாக்க, நேருவிலிருந்து நேருதாசர் வரையிலே, "ஏ! மாமிச மலைகளே! சோற்றாலடித்த பிண்டங்களே! உணர்ச்சியற்ற உருவாரங்களே!'' என்றெல்லாம் கண்டித்தார்கள், இடிமுழக்கமிட்டு, இப்போது ஒரு வார்த்தை கூறப் பயப்படுகிறார்களே!

அந்த இடத்தைவிட்டு வந்துவிட்டதும் இத்துணை தொடை நடுக்கமா! - என்று ஏளனமாக எண்ணுவர்.

அதுமட்டுமல்லவே! வடநாட்டு ஏகாதிபத்தியத்தை மகிழச் செய்வதற்காகவே, இப்போது, தி. மு. கழகத்தவரைத் தூற்றிக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று எண்ணுவார்கள். அந்த ஐயம் அகற்றவும், ஆற்றலைத் தக்க வழியில் பயன்படுத்தவும், வீரவெண்பாப் பாடிவர வேண்டுகிறேன். இடையிடையே என்னை இகழ்ந்து விருத்தம் பாடிக்கொள்ளட்டும் - வேண்டா மென்று சொல்ல நான் யார்? - மேட்டுக்குடியினனா? ஒட்டா? உறவா? உம்! ஆகட்டும், என்னை ஏசி, அகவல் அந்தாதி, எதெது முடிகிறதோ அவ்வளவும். ஆனால், அந்தப் பழைய போர்க்குரல் - முழக்கம் - கண்டதுண்டமாக்கிடும் வீராவேசம் - அந்தப்

பக்கம் கொஞ்சம் பாயட்டும். வடநாட்டு ஏகாதிபத்தியத்தின்மீது வெகுண்டு பாடிய வெண்பாக்களை நாடு கேட்கட்டும்.

என் காதுகளிலே ஒலித்தபடிதான் இருக்கின்றன அந்த வெண்பாக்கள்.

தெற்கு வறண்டதேன்? தீக்காடாய்ப் போனதேன்?
குற்றுயிராய் வாழ்வு குலைந்ததேன்? - பொற்றொடியே!
அஞ்சாமல் கூறிடுவேன் அத்தனைக்குங் காரணந்தான்
வஞ்சனையாளர் வடக்கு.

தென்னாட்டின்
செல்வமெலாஞ் சேர்த்து டில்லியில் குவித்தே
அந்நாட்டைப் பூக்காடாய் ஆக்குவதும் - இந்நாட்டில்
மிஞ்சும் தொழில்களையும் வேரறுத்து மாய்ப்பதுவும்

வஞ்சனையாளர் வடக்கு.

•

துன்பநிலை நீங்காத் தூயோர் புகழ்கின்ற ”இன்பத் திராவிடம்’ இங்க மைந்தால் - தென்னவர்பால் தஞ்ச மடைவதல்லால் தன்னாட்சி காணுமோ வஞ்சனையாளர் வடக்கு.

•

நெஞ்சுடையப் பாடுபட்ட நீர்மையார் தென்னாட்டில் பஞ்சடைந்த கண்ணாய்ப் பரிதவிக்க - அஞ்சாமல் மிஞ்சிய செல்வத்தை மேவிச் செழிக்குதடா வஞ்சனையாளர் வடக்கு.

•

நாடாண்ட தென்னவர்கள் நாதியற்று வாழ்விழந்து ஓடாகி நாளும் உழைத்தாலும்

- வாடாமல் நெஞ்சில் இரக்கமின்றி நித்தம் வதைக்கின்றார்! வஞ்சனையாளர் வடக்கு.

•

இத்தகைய விடுதலை உணர்ச்சி கொப்பளிக்கும் வெண்பாக்கள், வீரமுழக்கங்கள், யாவுமே மாறி, இப்போது ஏன் விலகினோம் என்பதற்கான “நொண்டிச் சிந்தும்’ - வடக்குக்குக்”காவடிச் சிந்தும்‘, நேரு பெருமகனாருக்குத் ”திருப்புகழ்’ பாடுவதுமாகவா, இவர்கள் மாறிவிட வேண்டும்? இதைக் காணும்போது,

வஞ்சனையாளர் வடக்கு என்ற வாயினரே!

வாஞ்சனையும் கொண்டீரோ வடவர் பாலே!

கிடக்கின்றான் காஞ்சியிலே கிழடு தட்டி!

கிளர்ந்தெழுந்து காட்டிடுவீர்

உமதுவீரம் வடக்கு நோக்கி!

என்றல்லவா தம்பி! கேட்டிடத் தோன்றும்.

வெண்பாவா இது! என்று கவிதை கற்றோர் கேட்கக்கூடும். தம்பி! எனக்கு அந்த இலக்கணம் தெரியாது. ஆனால் இதுதான் இவர்தம் போக்குக் கண்டு, பேச்சுக் கேட்டு, நாடு தந்திடும் புதுப் பா!

அன்புள்ள

அண்ணாதுரை

18-6-61

44. 5அழியாச் செல்வம்

சிற்பியும் திறமையும், கருத்துக் கதை -
தி. மு. க.வின் கட்டுக்கோப்பு -
திருப்பரங்குன்ற மாநாடு

தம்பி!

அவன் சிற்பி அல்ல - ஆனால் மனதை ஈர்க்கும் காட்சி களைக் காணும்போதெல்லாம், என்றென்றும் காண்போருக்குக் களிப்பூட்டும் விதமாக, இந்தக் காட்சிகளைச் சிற்பி செதுக்கித்தர மாட்டானா! என்று எண்ணுவான் - ஏங்கக்கூடச் செய்வான்.

அகன்ற தாமரைமீது அமர்ந்து துயிலுறும் அன்னப் பெடை, குஞ்சுகளுக்குத் தீனியூட்டும் பறவை, கன்றின் முதுகைத் தன் நாவினால் தடவி மகிழும் பசு, ஏதோ அரவம் கேட்டுக் காதுகளை நிமிர்த்தியபடி, மிரட்சிகொண்ட

கண்களுடன் நிற்கும் புரவி, களத்திலே ஏற்பட்ட வடுகண்டு நண்பன் விளக்கம் கேட்க, அதனைக் கூறிடும்போது கண்களிலே வீரக்களை சொட்டும் நிலையிலுள்ள போர்வீரன், - இவைபோன்ற காட்சிகளைக் காணும்போதெல்லாம், சிற்பி இவைகளைச் செதுக்கி வடிவம் கொடுத்து, எப்போதும், அந்த அழகு காண்போருக் கெல்லாம் மகிழ்ச்சி தந்திடச் செய்ய வேண்டும் என்று எண்ணுவான்.

சிற்பிகள் இருந்தனர் - அவர்களுக்கு இந்தச் சிந்தனை இல்லை! இவனுக்குச் சிந்தனை இருந்தது - ஆனால் அவன் சிற்பி அல்ல!!

"அன்னப் பெடையா? அலர்ந்த மலரா? அன்னமூட்டும் அன்னையா? - அழகாகத்தான் இருக்கும் - மிக அழகாக!

ஆனால், வேலை நிரம்ப இருக்கிறது, ஏற்றுக்கொண்ட வேலை! வயிறு வேறு இருக்கிறது!! - என்று கூறுவர் சில சிற்பிகள் - உளியை எடுப்பர், ஏற்றுக்கொண்ட வேலைக்காக.

திறமை அற்றவர்களோ எனில், அங்ஙனம் எவரும் கூறார்! முகத்திலே ஏற்பட்டுவிட்ட சுருக்கங்களை, அப்படியே சிலையில் வடிப்பதுதான், சிற்பிக்கு உள்ள அறம்! ஆனால், பணம் கொடுக்கும் சீமான், அதைக் கண்டால் சீறுவாரே! அவர் என்ன, தன் முகத்திலே காலக்கரம் கோடுகளை இழுத்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்கிறாரா!! அல்லது அவருக்குக் காதவேலை பார்க்கும் காரிகை அதனைக் கவனப்படுத்துவாளா!! தன் முகத்திலே ஒரு கெம்பீரம், ஒரு கவர்ச்சி இருப்பதாக அவர் எண்ணுகிறார் - சிற்பி அதனை அறிவானே! எனவே, உள்ளதை

உள்ளபடி காட்டினால், உயிரே போனாலும் போய்விடும்; எனவே கலை பிறப்பிக்கும் கட்டளையைக்கூட மீறுகிறான்! சுருக்கமின்றிச் சிலை சமைக்கிறான்! கலைஞன் மீறக்கூடாத அறத்தை மீறுவதை எண்ணுகிறான். கவலை தாக்குகிறது. முகத்தில் சுருக்கம் விழுகிறது.

சீமான்களும் சீமாட்டிகளும் சிலைவடிவமெடுக்கின்றனர்; சிலையைக் கண்டுவிட்டு, அவர்களைக் காண்பவர் ஏமாற்றமடை கின்றனர்! ஏமாற்றத்தை வெளியே எடுத்துரைக்கவும் இயலாத நிலை! பாராட்டுகிறார்கள் சிற்பியை. சிற்பிக்கோ, வேதனை, வெட்கம்!

இந்த வேதனையும் வெட்கமும் போதாதென்று, காலத்தை வெல்லும் கவின்மிகு காட்சிகளை வடித்தெடுக்கச் சொல்கிறான் - வாழ்வுக்காக என்னென்ன பாடுபடவேண்டி நேரிட்டுவிடுகிறது

என்பதறியாதான்! அன்னப் பெடையாம்! அழகு மயிலாம்! அலர்ந்த மலராம்! - ஆமாம்! இவைகள் செதுக்கப்பட வேண்டியவைகள்தான். தெரியும். முடியும். ஆனால், செதுக்கினால், பலன்? உளி தூக்கும் அளவுக்குக்கூட உடலிலே வலிவு இராதே! பட்டினியல்லவா கிடக்கவேண்டி நேரிடும்!

பாரே புகழும்! கலை உலகே பாராட்டும்! - என்கிறான். புகழ்! தேன்!! ஆமாம்! ஆனால், முதலில் பசிப்பிணியல்லவா போகவேண்டும் - பிறகல்லவா, தேனென இனிக்கும் புகழ்!!

ஏற்றமிகு எண்ணம் இருக்கிறது இவனுக்கு; நேர்த்திமிகு கலைத்திறன் இருக்கிறது நமக்கு!! ஆனால் வயிறு வேறு இருந்து தொலைக்கிறது!! - என்று எண்ணிக்கொள்வான் சிற்பி.

ஓடோடி வந்தான் இளைஞன் ஓர்

நாள்! தைலம் போன கட்டைபோன்ற உடல். கல்லாமையைக் காட்டிடும் கண்கள் - இப்படி உள்ள சீமானைக் கட்டுடலும் கருணைபொழியும் கண்களும் உடையோனாக்கிக் கொண்டிருக்கிறான் சிற்பி! உளிக்கு வாயுண்டா, ஏன் இந்த அக்ரமம் என்று கேட்க!!

"அருமையான காட்சி! அகிலம் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டிய காட்சி!''

"களிநடமிடும் கன்னியைக் கண்டாயோ?''

"இல்லை, சிற்பியாரே! கன்னியை அல்ல! ஒரு காளையைக் கண்டேன்.''

"நம் நாட்டு வீரனோ?''

"காளை, சிற்பியாரே! காளை! வீரன் அல்ல!''

"உண்மையான காளையா? அதிலென்ன

அருமை கண்டனையோ?''

"சிற்பியாரே! என்னென்று கூறுவேன் அதனை. காளை வலிவுள்ளது! அழகானது! சந்தனமரத்தைத் தழுவிக்கொண்டுள்ள ஒரு பச்சைக் கொடிமீது இச்சைகொண்டு, இடையே படர்ந்த திருந்த நச்சுக்கொடிகளைக் காணாமல், பாய்ந்து சென்றது. கொடிகள், காளையின் கால்களை இறுக்கிக் கொண்டன! விடுபடப் பலம் கொண்டமட்டும் முயற்சி! முயற்சிக்க முயற்சிக்கக் கொடிகள் காலிலும் கழுத்திலும் சுற்றிக்கொண்டன. திணறும் நிலை காளைக்கு! அரிமாவோ என்று எண்ணுவர், அதன் அலறல் ஒலி கேட்டு! சுற்றிக்கொண்டுள்ள கொடிகளை அகற்றப் போராடுகிறது, காலால், கொம்பினால், கொடிகளை அறுத்தெறிந்தபடி! கண்களிலேகூட நீர் வடிகிறது, முள் குத்தியதால்! உடலெங்கும், கொடியிலுள்ள

முட்கள், கீறியதால் இரத்தத் துளிகள்! காளை, கருப்பு நிறம்! இரத்தத்துளிகள் உடலிலே! சிறிது நேரத்திற்கெல்லாம் கருப்பும் சிகப்பும் கலந்ததோ என்று எண்ணத்தக்க விதமாயிற்று, உடல்.''

"பொறு! பொறு! சந்தனமரம்! அதிலே பச்சைக்கொடி பாயும் காளை! அதனைப் பற்றிக்கொண்ட கொடிகள்! விடுபடக் காளை போரிடுகிறது! அற்புதமான காட்சிதான்! சிலை வடிவமாக்கினால் கலை உலகே புகழும்.''

"ஓடோடி வந்தேன், கூற.''

"போராடும் காளை எனும் சிலை வடிக்கச் சொல்லத் தானே!''

"அல்ல, காளையின் நிலையைப் பார்த்ததும், எனக்கு வேறோர் நினைவு வந்தது.''

"என்ன நினைவு?''

”அடிமைப்படுத்தப்பட்ட வீரன்! கட்டுண்டு கிடக்கிறான் தளைகளால்! தளைகளை அறுத்தெறிந்து விடுதலைபெறப் போரிடுகிறான்! கட்டுடலைச் சுற்றிக்கொண்டிருக்கும் இரும்புச் சங்கிலிகளை, உடலை வளைத்தும் நெளித்தும் அறுத்தெறிய முயல்கிறான். அப்படியொரு சிலை சமைக்க வேண்டும். கொடுமைப்படுத்துவோர் எங்கு இருப்பினும், அடிமைப்படுத்தப்பட்டோர் எவரெனினும், அந்தச் சிலையைக் கண்டதும், வீரம் கொப்பளிக்கும் - விடுதலை ஆர்வம் பீறிட்டெழும்.’’

சிலை கண்டு, சிற்பியே மகிழ்ந்தான்! சிந்தனையாளன், வானத்து நட்சத்திரங்களை எல்லாம் பறித்தெடுத்து மாலையாகத் தொடுத்து, உமக்கு அணிவிக்கும் திறம் எனக்கு இல்லையே என்றான். உன் புகழுரை

அதனினும் மிகுதியானது என்றான் சிற்பி. ஊர் நடுவே சிலையை அமைத்தனர், அனைவரும் காண! கண்டனர்! கண் சிமிட்டினர்! அவரவர் தத்தமது அலுவலைக் கவனிக்கச் சென்றனர்.

கண்டவர், வைத்த கண் வாங்காமல் நிற்பர்! பாராட்டுவர்! உற்றார் உறவினரையும் நண்பர்களையும் அழைத்துவந்து காட்டுவர்! இந்த அருமையான சிலையை வடித்தெடுத்த சிற்பியைக் காணத் துடிப்பர் - அவன் பணிமனையைக் கலைக் கோயில் என்று புகழ்வர்! என்றெல்லாம், சிந்தனையாளன் எண்ணினான்.

கல்லால் ஆன சிலையா இது! உயிருடன் ஓர் வீரன், தளைகளை அறுத்தெறியப் போராடுவது போலவேயன்றோ தெரிகிறது! - என்று பலரும் பேசுவர்! காட்சி கற்பனையா? எங்கேனும் நடைபெற்ற வீரச் செயலா? என்று

கேட்பர்! கொடியினை அறுத்தெறியப் போரிட்ட காளையைக் கண்டதால் எழுந்த சிந்தனை, இச்சிலையாயிற்று எனச் செப்பி மகிழலாம் என்ற எண்ணினான் சிந்தனையாளன்.

அவரவர்கள், அவரவர் அலுவலைக் கவனிக்கிறார்கள் - சிலையைப் பார்த்துவிட்டு!

புன்னகை செய்கிறார்கள் - சிலர் பெருமூச்செறிவதும் தெரிகிறது! ஆனால், சொக்கிப் போய் நிற்கவில்லை! வியப்புடன் விளக்கம் கேட்கவில்லை! வேலைகளைக் கவனிக்கிறார்கள். வேலை இருக்கிறதே நிரம்ப! ஏற்றுக்கொண்ட வேலைகள்! வயிறு இருக்கிறதே!!

சிற்பிகூட இதைத்தானே முன்பு சொன்னான். சிந்தனை யாளன், அதை எண்ணிக்கொண்டான்.

கலைக்கூடம் சென்று, கன்னத்தில் கை

வைத்தபடி உட்கார்ந்தான்.

"கவலை எதற்காக அப்பா?''

"கருத்தற்ற மக்கள்! கலை அறிவு துளியுமற்ற மக்கள்! கண்ணற்ற மக்கள்!'"கண்ணற்றவர்கள் அல்ல அப்பா! கண் இருக்கிறது காண! ஆனால், வயிறு இருக்கிறதே!''

"வயிறு! வயிறு! வயிறு! கேட்டுக் கேட்டுக் காது குடைகிறது, இந்தப் பேச்சை.''

"காது கேட்காது! கண் பஞ்சடைந்துவிடும் வயிறு காய்ந்தால். அதைத் தெரிந்துதான், கண்டுவிட்டு, அவரவர் வயிற்றுப்பாட்டைக் கவனிக்கச் செல்கிறார்கள்.''

"வாயாரப் பாராட்டினால் என்னவாம்? கலை அறிவு இருந்தால்தானே!''

"கலை அறிவு இருக்கிறது, கண்

இருப்பதால். ஆனால், பாராட்ட நேரம் இல்லை! வேலை இருக்கிறதே நிரம்ப! ஏற்றுக் கொண்ட வேலை! வயிறு இருக்கிறதே!''

"ஊரே திரண்டு நின்று புகழப் போகிறது என்று எதிர்பார்த்தேன்.''

•

சிற்பியும் சிந்தனையாளனும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த உளி ஏந்துவோன், "களுக்'கெனச் சிரித்தான். இருவரும் திரும்பிப் பார்த்தனர்; சிந்தனையாளன் சீற்றத்துடன்; சிற்பி ஏதும் புரியாத நிலையில்!

•

"மன்னிக்க வேண்டும்''"அடக்கம் போதும்! சிரித்த காரணம்?''

"தங்கள் பேச்சுக் கேட்டுச் சிரிப்பு. . . . .''

"வயிறு எரிந்து பேசுகிறேன் நான்! உனக்குச் சிரிப்பு வருகிறது உம்!''

"கோபம் கொள்ளாதீர் ஐயா! சிலையைக் கண்டு ஊரே திரண்டு நின்று கொண்டாடும் என்று எதிர்பார்த்ததாகச் சொன்னீர்கள். . .''

"ஆமாம்! எதிர்பார்த்தது தவறா? சிலை, அத்தகைய பாராட்டுதலைப் பெறத்தக்க ஏற்புடையது அல்லவா?''

"என் ஆசானின் திறமையை நான் நன்கு அறிவேன். சிலை, முதல் தரமானது! எவரும் கண்டு பாராட்டத்தக்கது. ஐயம் எவர்க்கும் எழாது! பாராட்டத்தக்க நிலையில் உள்ள சிலையைப் பாராட்டுவது தங்கள் கடமை என்று அறியும் உணர்வு, மக்களில் பெரும்பாலாருக்குக் கிடையாது. . .''

"பாராட்டத் தெரியாது - அதாவது, நான் சொன்னபடி, மக்களுக்குக் கலை அறிவு

இல்லை.''

"கலை அறிவு எப்படிப்பட்டது என்று எடுத்துரைக்கத் தெரியாது. ஆனால் கலை அறிவே இல்லை என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. மேலும், மிக நேர்த்தியாகத்தான் இருக்கிறது என்று மனதிலே எண்ணிக்கொள்வார்கள் - பேச மாட்டார்கள்!''

"அதுதான் தவறு என்கிறேன்.''"அதுதான் மக்கள் இயல்பு!''

"அழகுச் சிலையைக் காண்பது; வாய்மூடிக் கிடப்பது! இது ஒரு இயல்பா!!''

"ஊரே வியப்புற்று ஓடோடி வந்து சிலையைக் கண்டு, அதுபற்றிப் பரபரப்புடன் பேச வேண்டும் என்கிறீர்.''

"எதிர்பார்த்தேன்!''

"ஏமாற்றம் அடைந்தீர்! எரிச்சலும் கொண்டுள்ளீர்.''

"ஆமாம்! ஊரே இந்தச் சிலை பற்றியே பேச வேண்டும் - மற்ற எதனையும் மறந்து! என்று எதிர்பார்த்தேன்.''

"பேசச் செய்கிறேன்.''

•

உளி ஏந்துவோனின் இந்தப் பேச்சைக் கேட்டுச் சிற்பியும் சிந்தனையாளனும் திடுக்கிட்டுப் போயினர்.

சிற்பி, சிந்தனையாளனுக்கு ஆறுதல் கூறினான் - ஆனால், அவன் மனமும் குமுறிக்கொண்டுதான் இருந்தது. கலைத் திறனுக்கு - ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது சிலை! எனினும், வியப்பை, மகிழ்ச்சியை, புகழுரையைக் கூற எவரும் துடிதுடித்துக் கொண்டு வராதது, சிற்பிக்கும்

சங்கடமாகத்தான் இருந்தது. இவ்வளவுதான் மக்கள்! என்று எண்ணிக்கொண்டான். சலிப்பு!

கட்டுடல் மட்டுமல்ல, தளைகளை அறுத்திட முனையும் போது, நரம்புகள் எவ்விதம் புடைத்து இருக்குமோ அந்த நுணுக்கம்கூடத் தெரிந்தது சிலையில்! ஒருபுறமுள்ள தளை அறுபடும் நிலை ஏற்படும்போது, புன்னகை! ஆனால், அதேபோது வேறோர் புறம்; தளை சதையை மென்று தின்றுவிடுவதுபோல இறுக்கிக்கொண்டிருப்பதால் வேதனை! இரண்டுமே சிலையிலே காட்டினான் சிற்பி!

சிலை சமைப்பதிலே, தான் காட்டியுள்ள திறமையை, சிலையின் தரத்தைக் குறித்து எவரும் பேசாதது, சிற்பிக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஊரே திரண்டுவந்து பாராட்டும் என்றுதான் அவனும் எதிர்பார்த்தான்.

வீரன் - கட்டுண்டவன் - தளை அறுத்தவன்

- இந்நிலை யுள்ள சிலைகளைப் பலரும் சமைத்தனர் - முன்பு.

இந்தச் சிலை, ஒவ்வொரு நிலையிலும் காணக்கிடக்கும் சிறுசிறு குறைகளை நீக்கி, ஒவ்வொன்றிலும் விளங்கிய அழகைக் கூட்டிச் சமைக்கப்பட்டது.

இந்தச் சிறப்பியல்பை எடுத்துக்காட்டுவர் என்று சிற்பி எதிர்பார்த்தான்.

சீமாட்டியின் சிலையாக இருந்தால், பொன்னும் பொருளும் கொடுத்திருப்பார் சீமான்.

இந்தச் சிலை சமைத்தபோது, எவரிடமும் பொன்னும் பொருளும் எதிர்பார்க்கவில்லை.

அரண்மனையோ, மாளிகையோ, இந்தச் சிலை தமக்குரியது என்று உரிமை கொண்டாடப் போவதில்லை.

இது வீரனின் சிலை! விருதுபெற்ற வீரன் அல்ல! வேந்தர் அவையில் உயர் இடம் பெற்ற வீரன் சிலை அல்ல! கட்டுண்ட வீரன் - விடுதலை பெறத் துடிக்கும் காளை - தளைகளை அறுத்திடும் முயற்சியில் தன் முழுவலிவையும் ஈடுபடுத்திய நிலையிலுள்ள வீரன் சிலை! இதை மன்னர் மகனோ, மாளிகை உடையோனோ, பாராட்ட எப்படி முடியும்? வீரர்கள்! விடுதலை விரும்பிகள்! தளைகளின் கொடுமையைக் கண்டவர்கள்! உரிமைக்காகப் போரிடத் துணிந்தவர்கள்! இவர்களுக்கு மட்டுமே, இதன் அருமை தெரியும்! பாராட்டத் தோன்றும்!

மக்களே, இதன் மாண்பு அறியத்தக்கவர்கள்.

மக்கள், மன எழுச்சி பெறவே இந்தச் சிலை!

இந்தச் சிலை காட்டும் வீரத் திரு

உருவமே, மக்களை மாக்களாக நடத்திடும் மமதையாளரை அழித்தொழிக்கும் மாவீரத்தை மக்களுக்கு ஊட்டவல்லது!

சிலை இத்தகைய எழுச்சியூட்டும்; இது கல்லில் எழுதப் பட்டுள்ள காவியம்! என்று மக்கள் கூறுவர் சிலையைக் கண்டதும், கண்களிலே ஓர் புத்தொளி தோன்றும்! வீரம் கொப்புளிக்கும் நெஞ்சத்திலே! கூனிக் கிடந்தவன் நிமிர்ந்து நிற்பான்! அஞ்சிக் கிடந்தவன் கெஞ்சி நின்றவன், பஞ்சை அல்ல நான்! கோழை அல்ல நான்! கொடுமையை எதிர்ப்பவன்! உரிமைக்காகப் போராடுபவன்! - என்று முழக்கமிடுவான். மனிதன் வீரனாவான்! மமதையாளன் அச்சம் கொள்வான். சிலை மூலம், சிறப்பானதோர் பாடம் தருகிறோம் - என்றெல்லாம் சிற்பி எண்ணாமலில்லை.

ஆனால், மக்கள்? பார்த்தனர்,

நன்றாகத்தான் இருக்கிறது என்றுரைத்தனர் - மறுகணமோ, ஏருடன் சென்றான் ஒருவன்; எருது தேடிச் சென்றான் இன்னொருவன்; பருகச் சென்றான் ஒருவன்; பண்டம் பெறச் சென்றான் மற்றொருவன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையில் ஈடுபட்டனர்! என்ன செய்வர்? வேலை இருக்கிறதே நிரம்ப. ஏற்றுக்கொண்ட வேலை! வயிறு இருக்கிறது! அது வேறு!

மக்களின் இந்த அக்கறையற்ற போக்கு கண்டு மனம் கொதித்த சிந்தனையாளனுக்கும், அதை மறைத்திட முயன்ற சிற்பிக்கும், உளியேந்தி திடுக்கிடத்தக்க பேச்சல்லவா சொன்னான். ஊரே பேசத்தானே வேண்டும் சிலையைப்பற்றி? பேச வைக்கிறேன்!! என்று. எப்படி என்று இருவரும் யோசித்தனர். உளியேந்தி திட்டம் வகுத்துக்கொண்டான்.

“விர்’ரென்று பறந்துவந்து வீழ்ந்தது ஒரு கல்! சிலைமீது”கல்’லென்ற ஒலி கேட்டது! வழியே சென்றோர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்! சிலைமீது பட்டுத் தெறித்தது கல்!!

யார் இந்தக் காரியம் செய்தது?

என்ன ஈனத்தனமான காரியம் இது? கல்லெறியும் கயவன் யார்?

சிலை இவனை என்ன செய்து?

சீற்றத்துக்குக் காரணம் என்ன?

சீற்றமா புத்தித் தடுமாற்றமா?

ஏமாளியா! அல்லது எவரேனும் ஏவிவிட்டனரா?

இவ்விதமான பேச்சு எழுந்தது! கற்கள், ”விர்விர்’ரெனப் பறந்து வந்து, சிலைமீது விழுந்தவண்ணம் இருந்தன!

கற்கள் சிறியவை - சிலை பெரிது! கற்கள்

வீழ்வதால் ஓசை கிளம்பிற்று - சிலைக்குச் சேதம் இல்லை!

மக்கள் பரபரப்பு அடைந்தனர்! இங்குமங்கும் பதறி ஓடினர்! எதிர்ப்பட்டோரிடம் கூறினர்!

சிலைமீது கல்லெறிகிறார்கள்!

சிலையை உடைக்கிறார்கள்!

சிலை உடைகிறது!

சிலையை உடைத்துவிட்டார்கள்!

அடடா! சிலை அழகானது என்று மகிழ்ந்தனரே!

அற்புதப் படைப்பு என்றனர் அறிந்தோர்!

ஊர் நடுவே அழகாக அமைந்திருந்தது!

உடையக்கூடியதல்லவே அந்தச் சிலை!

அப்படிப்பட்ட சிலைக்கும்

ஆபத்து வந்ததே!

ஊரில், இதுபோலப் பேச்சு; பல்வேறு வகையாக. பலரும், சிலையைக் காண ஓடோடி வந்தனர். முன்பு கண்டதைவிட அக்கறையுடன் பார்த்தனர்; அழகு கண்டு வியந்தனர்!

இதை உடைக்கவும் மனம் வந்ததே!

காதகன்! தன்னால் இப்படிப்பட்ட நேர்த்தியான சிலை செய்ய முடியவில்லையே என்ற பொறாமை!

சிலை செய்த சிற்பிக்கு நாடு சிறப்பளிக்கும்; தனக்குக் கிடைக்காதே என்ற காய்ச்சல்!

கெடுமதி! சிலை, பொதுச்சொத்து! கலைக் கருவூலம் என்ற பேரறிவு இல்லாதனின் பேய்ச்செயல்!!

கூடி நின்றோர் பேசினர்

இதுபோலெல்லாம்.

வீசிய கற்கள் கீழே சிதறிக்கிடந்தன.

"பார்த்தீர்களா! சிலை பொடிப் பொடியாகிவிட்டது.''

என்றான் ஒருவன்! மற்றொருவன் அவசரமாக முடிவுக்கு வரும் இயல்பினன்.

"ஆமாம்! சிலை உடைந்ததால்தான், இந்தக் கற்கள் சிதறிக் கிடக்கின்றன''

என்றான்.

மூன்றாமவன் சிலையை உற்று நோக்கினான்! சிதையாமல் நின்று கொண்டிருந்தது!

கீழே பார்த்தான்; கற்கள்! சிலையின் கண்ணோ, கையின் துண்டோ! காதோ! காலின் துண்டோ! - எது உடைந்து போயிற்றோ என்று பார்த்தான். அதது அப்படி அப்படியே

இருந்திடக் கண்டான்.

”இவை கற்கள்! வீசப்பட்ட கற்கள்! சிலைமீது சீற்றத்தால் சிற்றறிவினனானவன் வீசினானே, அந்தக் கற்கள்! சிலை உடைக்கப்பட்டதால் சிதறி வீழ்ந்த கற்கள் அல்ல! சிலையைப் பாருங்கள், மீண்டும்! சரியாகப் பாருங்கள்! பழுதுபடாமல் இருக்கிறது கலை அழகுடன்!’’

பிறகு மற்றவர்களும் உற்றுப் பார்த்தனர் - உண்மை புரிந்தது. சிலை கெடவில்லை!

சிலையை உடைத்துவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத் தீயெனப் பரவவே, ஊரே திரண்டது சிலை எதிரில்!

முன்பு அதே சிலையைப் பார்த்திருக்கிறார்கள்; ஆனால், அதுபற்றி அதிகமாகப் பேசினதில்லை.

இப்போது அதே சிலை! அதே மக்கள்

பார்க்கிறார்கள்; பார்த்துவிட்டு நிரம்பப் பேசுகிறார்கள். ஊரே திரண்டு வந்து பார்க்கிறது சிலையை! ஊரார் சிலை பற்றியே பேசுகிறார்கள்.

அவசரத்தில் சிலை உடைந்துவிட்டது - பொடிப்பொடி யாகிவிட்டது - என்று பேசுகிறார்கள். பிறகோ கூர்ந்து பார்க்கிறார்கள்; வீழ்ந்து கிடப்பவை வீசப்பட்ட கற்களே என்பது புரிகிறது; சிலை உடைபடாமல் இருப்பதைக் காண்கிறார்கள்.

உடைந்துபோய்விட்டது என்று நினைத்தோம், சிலை உடைபடவில்லை!

கற்களைச் சரமாரியாக வீசித்தான் பார்த்தார்கள். சிலைமீது வீழ்ந்தன; ஆனால், சிலை உடைபடவில்லை! வீசப்பட்ட கற்கள், மூலைக்கு மூலை வீழ்ந்து கிடக்கின்றன!

ஊர் மக்கள் இதுபோல் பேசத் தொடங்கிச்

சிலை உடைபடாத தன்மைபற்றித் துவக்கிச் சிலையின் அமைப்பு, நேர்த்தி, தரம், சிற்பியின் திறம், சமைத்த நோக்கம், சிலை தரும் எழுச்சி என்பன பற்றியெல்லாம் பேசலாயினர்.

சிற்பியும் சிந்தனையாளனும், ஊரே சிலைபற்றிப் பேசுவது கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

உளி ஏந்தி, வீசியதுபோக, மீதம் உள்ள கற்களைக் காட்டி, "எப்படி என் வேலை?'' என்று கேட்டுச் சிரித்தான்!

"கற்களை வீசியவன் நீதானா?''

"ஆமாம்! வேறு யாருக்குத் தெரியும் அந்தத் தந்திரம்?''

"எந்தத் தந்திரம்?''

"அக்கறையற்றுக் கிடந்த ஊர் மக்களைச் சிலையைப்பற்றி இவ்வளவு பேச வைத்தேன்

அல்லவா? கற்களை வீசி!''

அதற்காகவா இந்த வேலை? அக்ரமக்காரர்! சிலைக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டுவிட்டிருந்தால்?

"ஏற்படுமா? எனக்குத் தெரியாதா, சிலையின் வலிவு; நான் வீசும் சிறு கற்கள் எப்படிப்பட்டவை என்பது. மேலும் வீசுபவன் யார்? நான்! வேகம் எப்படி இருக்கும் என்பதும் தெரியுமல்லவா?''

"சிலை உடைந்துவிட்டது என்றே நான் பயப்பட்டுப் போனேன்.''

"நீங்கள் பயப்பட்டது கிடக்கட்டும். ஊரே பயந்து போயிற்றே.''

"ஆமாம்! சிலை நொருங்கிவிட்டது என்று எண்ணிக்கொண்டுதான், ஓடோடி வந்தனர் ஊர் மக்கள், திரள் திரளாக!''

"ஊர் மக்களுக்குப் பீதி ஏற்படும் விதமாக, நான்தானே வதந்தி கிளப்பினேன்! சிலை உடைந்து விட்டது! உடைக்கப்பட்டாகிவிட்டது! சிதறிச் சிறு சிறு கற்களாகக் கீழே வீழ்ந்துவிட்டது என்றெல்லாம்.''

"ஊர் மக்கள் சிலையைப்பற்றி அக்கறையற்று இருக்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இப்போதல்லவா தெரிகிறது, ஊராரின் நினைவு, சிலைபற்றியேதான் இருந்து வந்திருக்கிறது என்ற பேருண்மை.''

"இதை அறிந்துகொள்ள நல்ல வாய்ப்புக் கிடைத்தது.''

மூவரும் எழுச்சிகொள்ளும் விதமாக, ஊரார், சிலையின் நேர்த்தி குறித்தும்; சிற்பியின் திறம்பற்றியும்; சிலையைக் காண்போர் பெறும் எழுச்சிபற்றியும் பேசி

மகிழ்ந்தனர்.

•

தம்பி! திராவிட முன்னேற்றக் கழகத்தையும், திராவிட நாடு எனும் திட்டத்தையும், தாக்கித் தகர்த்திட எண்ணிப் பலர் வீசிய இழிமொழியும், பழிச்சொல்லும், இந்தக் கதையில் வரும், உளியேந்தியின் வேலைமுறை போன்றது என்று எண்ணத்தக்க விதத்தில், ஒவ்வொரு தாக்குதலின்போதும், ஊரே திரண்டுவந்து கழகத்தைக் கண்டு, கலகலத்துப் போய்விடவில்லை என்பதை அறிந்து, கழகத்தின் ”தாங்கும் சக்தி’ குறித்துப் பேசிடுவதைக் கேட்கிறோம்.

ஒரு மாறுபாடு - அதனை நான் மறந்திடவில்லை.

கதையில் வரும் உளியேந்தி உள்ளபடி, ஊர் மக்களைத் திரட்டத் தந்திரம்

கடைப்பிடித்தான்; அதற்கே கல் வீசினான்.

கழகத்தின்மீது இழிமொழியும் பழிச்சொல்லும் வீசுவோர், அதுபோன்றார் அல்ல.

ஆனால், தமது முயற்சிகள் முறிந்துபோனதை உணர்ந்த பிறகு, அவர்களிலே சிலரேனும் கழகத்துக்குத் தாங்கும் சக்தி எவ்வளவு இருக்கிறது, ஊரார் கழகத்தைப்பற்றி எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறார்கள் என்பதை, நாம் விளங்கிக்கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே, பகை கக்குவதுபோல, எதிர்ப்பு நடத்துவதுபோல, ஏளனம் செய்வது போல நடித்தோம் என்று பேசக்கூடும்.

இதிலே, இவர்தம் போக்கிலே, எது நடிப்பு? எது உயிர்த் துடிப்பு? எது

கொண்ட கோலம்? எது நிலைத்த தன்மை? என்று கண்டறிவது கடினம்; எனினும், கழகத்தின் தாங்கம் சக்தி வளரவேண்டும் எனில், சில ஆண்டுகளுக்கு ஒருமுறை, இப்படிப் பட்ட, இழிமொழி, பழிச்சொல், கழகத்தின்மீது வீசப்பட வேண்டும்! மாற்றார் வீசுவதைக் காட்டிலும், உற்றாராக இருந்தோர் வீசுவதுதான், கழகத்தின் தாங்கும் சக்தியை நாம் கணக்கெடுக்க மெத்தவும் பயன்படும்.

அந்தக் கட்டம் திடீரென்று முளைத்தது; வேகமாக வளர்ந்தது; இப்போது முடிவடையும் தருவாயிலிருக்கிறது.

சிலைமீது கல் வீசப்படுகிறது என்ற உடன், சிலை உடைந்து விட்டதாமே என்று பேசியபடி, ஊரே திரண்டுவந்து, சில எதிரே நின்றதுபோல, இப்போது, அரசியல் வட்டாரங்கள் அனைத்தும், ஏடுகளில் பலப்பல, திராவிட முன்னேற்றக் கழகம்

குறித்து அக்கறை காட்டாது இருந்த கோலம் கலைக்கப்பட்ட நிலையில், ஒவ்வொரு கணமும் கழகத்தைப்பற்றியே, நினைப்பாக இருப்பது காண்கிறோம்.

இசைவாணன், சத்தமாகக் கொட்டாவி விட்டால்கூட "இது ஒரு தனி இராகமோ!' என்று எண்ணிக்கொள்வார்களாம்!

அதுபோல, இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் பேச்சு, நடவடிக்கை எதுவாக இருப்பினும், அரசியல் வட்டாரங்கள் ஆய்வுக் கூடங்களாகின்றன; செய்தி திரட்டுவோர் துப்பறிவோராகின்றனர்; ஒவ்வொரு அங்க அசைவுக்கும், இரப்பைத் துடிப்புக்கும், பொருள் யாதாக இருக்கமுடியும் என்று பொருள் தேடுகின்றனர்; பொறுப்பு மிக்கவர்கள்!!

பெரும்பகுதி, பீதி கிளப்பவும், பிளவு

மூட்டவும்தான் எனினும், எனக்கு ஒரு மகிழ்ச்சி - உலகிலேயும் சரி, இங்கேயும் சரி, ஓராயிரம் நிகழ்ச்சிகள் உள்ளன. குலுவிலே "குளு குளு' வாசம் செய்யும் நேரு; வங்க அசாம் வல்லடியால் ஏற்பட்ட கொதிப்பு; பாஞ்சாலத்திலே உருவாகிக்கொண்டுள்ள பரபரப்பு; காஷ்மீர்பற்றி அயூப்கான் காட்டும் கண்டிப்பான போக்கு என்று எண்ணற்ற நிகழ்ச்சிகள் உள்ளன. எனினும், இவைகளுக்கெல்லாம் இடம் கிடைப்பதே இப்போது கஷ்டமாகிவிட்டது. கழகத்தைப்பற்றிய செய்திகள், செய்திகளுக்கு விளக்கங்கள்; கழகம் குறித்து ஆருடங்கள்; கழகத்தில் இவருடைய சிரிப்புக்கு என்ன பொருள்? அவருடைய சீற்றத்துக்கு என்ன காரணம்? என்ற ஆராய்ச்சியுரைகள் ஆகியவைகளுக்கு அளித்ததுபோக, மிச்சம் இருக்கும் இடத்திலேதான், குருஷேவும்

கென்னடியும், நேருவும் மொரார்ஜியும், அணுகுண்டும் வியன்னாவும், சகாராவும் சஞ்சீவரெட்டியும், பக்ராவும் பண்டார நாயகாவும், குடியேற வேண்டி இருக்கிறது!

நான் அறிந்தவரையில், ஒரு கட்சிக்காகத் தம்மை ஒப்படைத்துள்ள ஏடுகள், வேறோர் கட்சியின் பாதக்குறட்டின் அளவிலிருந்து கூடிப் பேசும் நிகழ்ச்சிவரையில், நேரத்தை, நினைப்பை இத்தனை பெரிய அளவுக்குச் செலவிடுவது இதுதான் முதல்முறை என்று எண்ணுகிறேன். அதிலும், நேற்றுவரை நெறித்த புருவத்துடன், அது ஒரு கட்சியா! அதற்கு எமது இதழிலே இடமா! வேறு வேலையா இல்லை எனக்கு!! என்று மாமேதைகள்போலக் கோலமணிந்துகொண்டிருந்த ஏடுகள், இன்று, பக்கத்துக்குப் பக்கம் கழகத்தைப் பற்றியே வெளியிட வேண்டி வருகிறது!

அது ஒரு கட்சியா! என்று அவ்வளவு ஆணவங்கலந்த அலட்சியம் காட்டிவந்தோமே, இன்று விழுந்தடித்துக்கொண்டு போகிறோமே, என்ன வீசுவார்கள்? யார் ஏசுவார்கள்? என்ன வதந்தியைக் கக்கலாம்? என்ன வசை மொழியைப் பொழியலாம்? - என்று துடியாய்த் துடிக்கிறோமே; அலட்சியப்படுத்தத் தக்கது இந்தக் கழகம் என்று பேசினாயே முன்பு! அது உண்மை என்றால் அந்தக் கழகத்திலே என்ன நேரிட்டால் என்ன? நமக்கு என்ன கவலை! ஊராருக்குத் தெரிவிக்க, எத்தனை எத்தனையோ பிரச்சினைகள் இருக்க, எந்தக் கழகத்தை ஏறெடுத்தும் பார்க்கமாட்டோம், அது குறித்து எதுவும் எமது வாயால் பேசமாட்டோம், பேசுவது தரக்குறைவு. வீணாக அந்தக் கழகத்துக்கு விளம்பரம் நாமாகத் தேடிக் கொடுப்பதாக முடியும் என்றெல்லாம், உச்சாணிக் கிளை

அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோமே, அந்தக் கழகம்பற்றி. இன்று உதிர்ந்தது ஏதேனும் கிடைக்காதா, யாராவது இழிமொழி உமிழ மாட்டார்களா, அதைச் சிந்தாமல் ஏந்தி வந்திடலாமே என்ற அளவுக்கு இறங்கிவந்துவிட்டோமே; - இதை அறியும் மக்கள் நம்மைப்பற்றி, நமது தரத்தைப்பற்றி, என்ன கருதுவார்கள் என்பதுபற்றிக்கூட, அந்த ஏடுகள் எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை!

நாடுவாரற்று, நாட்டிலே செல்வாக்கற்று, மதிப்பாரற்று உள்ளது, திராவிட முன்னேற்றக் கழகம்; இதற்கு ஒரு கொள்கை உண்டா? கோட்பாடு உண்டா? எதிர்காலம் உண்டா? ஆதரவு உண்டா? என்றெல்லாம் பேசியும் எழுதியும் வந்தவர்கள் இன்று!

"கழகம் கலகலத்து வருகிறது!''

"கழகத்தின் கட்டுக்கோப்பு உடைகிறது!''

"கழகத்தில் கலகம் ஏற்பட்டுவிட்டது!''

"கழகத்தில் கொள்கைக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது.''

"கழகத்தை இனி நாடு ஆதரிக்காது!''

"கழகத்துக்கு எதிர்காலம் இல்லை!''

என்ற தலைப்புகளிட்டும், தகவல்களைத் தீட்டியும், எழுது கின்றனவே, இதற்கு என்ன பொருள்? ஏதாகிலும் இவர்கள் பேச்சிலே, பொருத்தம், முன்பின் தொடர்பு இருப்பதாக மதியிலியன்றி மற்றவர் கருதுவரா?

இன்று அமாவாசை! - என்று முதல் வரியில் எழுதத் தொடங்கி, ஒளிவிட்டுக்கொண்டிருந்த நிலவு, மங்கிற்று - கருமேகம் நிலவைப் பிடித்துக்கொண்டது என்று எழுதினால், அந்த "எழுத்தாளரை' பித்தர் பட்டிக்கல்லவா

அனுப்பவேண்டி நேரிட்டுவிடும்!

கழகம் கவைக்கு உதவாதது! நாடு, அதனைச் சீந்துவ தில்லை!! - இந்த அறிவுசால் தீர்ப்பினை முன்பே அளித்துவிட்ட பேரறிவாளர்கள், இப்போது, கழகத்தின் உயரமும் அகலமும், கனமும் குறைகிறது என்ற கணக்கெடுக்க முன்வருவானேன்! அமாவாசை என்று சொல்லியான பிறகு, நிலவு மேகத்தால் மறைக்கப்பட்டு மங்கிற்று என்று எழுதுவது ஏனோ!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கொள்கை இல்லை!! இது, அண்ட சராசரத்து அறிவைத் திரட்டி உருட்டித் தம் எழுதுகோலில் திணித்துக்கொண்டிருப்பதாகக் கருதிக்கொண் டிருப்போரின் தீர்ப்பு!!

இன்று, திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையான திராவிட நாடு திராவிடருக்கே

என்பதை, இன்னின்னார் எதிர்க்கிறார்கள் என்று பட்டியல் வெளியிடுவது என்ன பேரறிவோ!!! கைகொட்டிச் சிரிப்பர், இவர்தம் மன அரிப்பையும், அந்த அரிப்பைப் போக்கிக்கொள்ள யார் சொறிந்துவிடுவார்கள் என்று இவர்கள் அலைகிற நிலையையும் காண்பவர்கள்!!

வங்காளியும் - அசாமியனும் வெட்டிக்கொண்டு சாகிறார்கள்!

பஞ்சாபிலே, தாராசிங் உண்ணாவிரதம் இருக்க நேரிட்டால் என்னென்ன பயங்கர விளைவுகளோ கிளம்பக்கூடும் என்ற பீதி படை எடுத்திருக்கிறது.

மராட்டியத்துக்கும் - விதர்ப்பத்துக்கும் மோதல் உருவாகிக்கொண்டு வருகிறது.

ஆற்றுநீர்பற்றி அண்டை அண்டை நாடுகளுக்கிடையே அமளிநிலைமை

ஏற்பட்டிருக்கிறது.

இரண்டில் ஒன்று பார்த்தேவிடுவோம் என்று காஷ்மீர் பற்றி அயூப்கான் முழக்கமெழுப்புகிறார்.

மத்தியப்பிரதேசத்திலே கொள்ளைக்காரரின் அட்டகாசம் குறையக் காணோம்.

பீகார் காங்கிரசிலே கோஷ்டிச் சண்டை முற்றுகிறது; முடைநாற்றமெடுக்கிறது.

ஆந்திரத்தில், பழங்குடி மகனை முதலமைச்சராக்கி விட்டதால், "உயர் வகுப்பினர்' எதிர்ப்பினைப் பல்வேறு முனைகளிலே கிளப்பியபடி உள்ளனர்.

தமிழ்நாட்டில், டில்லியில் இருக்கமுடியாமல் திருப்பி அனுப்பப்பட்ட, டி. டி. கே.யை முதலமைச்சராக்கும் முயற்சி நடப்பதாகக் கேள்விப்பட்டுக் காங்கிரஸ்

வட்டாரமே கிலியும் கசப்பும் கொண்டு பேசி வருகிறது.

கருநாடகத்திலே காங்கிரஸ் கட்டுப்பாடு என்பது பதவிப் பிசின் போட்டு ஒட்டவைக்கப்பட்டிருக்கிறது; எந்த நேரத்திலும் பிய்த்துக்கொள்ளக்கூடும் என்கிறார்கள்.

வெற்றிமுரசு கேட்கும் ஒரிசாவிலேயே, முன்னாள் முதலமைச்சர், காங்கிரசுக்குத் துரோகம் செய்தார் என்று இந்நாள் முதலமைச்சர் குற்ற விசாரணை நடத்த ஏற்பாடு செய்கிறார்!

உடலெல்லாம் சிரங்கு! தலையெல்லாம் ஈரும் பேனும்! அந்த அரிப்பு அடங்க மருந்து தேடாமல், கழகத்தின் காலிலே ஒட்டிக்கொண்டுள்ள கசுமலத்தை வழித்தெடுத்து நாட்டுக்குக் காட்டிடும் காரியத்திலா ஈடுபடுவது.

பண்டித நேருவுக்கு அடுத்தபடி, யார்? என்பது தலைவலி அளவுக்குள்ள பிரச்சினையாகிவிட்டது! மொரார்ஜியா? ஜெகஜீவன்ராமா? கிருஷ்ணமேனனா? லால்பகதூரா என்று புரியவில்லை? முகாம்கள் அமைக்கப்படுகின்றன! கோவிந்த வல்லப பந்த் மறைத்த உடனே, அவர் இருந்துவந்த அறையிலே நுழைந்து மொரார்ஜி கொலு இருக்கிறாராம்!! இது யாரைக் கேட்டுக்கொண்டு செய்தார் என்று நேரு பெருமகனார் கேட்க, இதற்கு நான் யாரைக் கேட்கவேண்டும்! என்று மொரார்ஜி அலட்சியமாகப் பதில் அளிக்கிறார்.

அடுத்த முறை, டில்லியில் நான்தான் மந்திரி! - என்று வணிகக் கோட்டத்தாருக்கு கோவை சி. சுப்ரமணியம் செப்பிட, ஐயோ! நான் என்ன கதியாவது? என்று அரியலூரார் அலறுகிறார் என்கிறார்கள்.

எத்தனை காலம், நான் வெறும் மந்திரியாக இருப்பது!! எவ்வளவு நெருக்கடிகளைக் கடந்திருக்கிறேன்! எத்துணை நெளிவு சுளுவுகள் தெரியும் எனக்கு! இருந்தாலும் ஒரு முறையாவது முதல் மந்திரியாக இருக்க அனுமதிக்கக்கூடாதா! மறுபடியும் வெறும் மந்திரி வேலைதான் என்றால், ஏன் எனக்கு அது!! - தேர்தலுக்கே நிற்கப்போவதில்லை!! - என்று மனம் நொந்து பேசுகிறாராம், பக்தவத்சலம்.

"அத்திப் பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை'' என்பார்கள்; அதுபோல இருக்கிறது அந்த இடத்து விவகாரம்! இந்த இலட்சணத்தில், கழகத்திலே காலையிலே நடப்பது என்ன? மாலையிலே சூடுவது யாது? பிற்பகல் பேசியது என்ன? யாருக்கு யார் மேல்? கீழே என்ன? மேலே என்ன? என்ற இந்த ஆராய்ச்சியிலா, ஈடுபடுவது!!

குற்றுயிராகக் கிடக்கும் கணவனுக்கு, மருந்து கலக்கிக் கொடுக்கவேண்டிய மாதரசி, வெள்ளைச் சேலை வாங்கினாளாமே வள்ளி, காரணம் என்ன? என்று அண்டை வீட்டுக்காரியுடன் வம்பளப்பு நடத்துவது போலல்லவா, ஆளும் கட்சியிலே உள்ள ஆயிரத்தெட்டுக் கோணல்களை நிமிர்த்த முயற்சிக்காமல், கழகக் கோட்டத்தை எட்டி எட்டிப் பார்த்துவிட்டு, கண்ணுக்குத் தெரிவது செக்கா? சிவலிங்கமா? என்று ஆராய்ச்சி நடத்துகிறார்கள்!! இதனால் அடையப்போகும் இலாபம் என்ன? இந்த இதழ்கள், நமது சிறப்புகள்பற்றி இதுநாள்வரை, சிந்து பாடிவந்தன என்றாலாவது, ஐயோ! இப்போது தூற்றித் திரிகின்றனவே என்று கவலைப் பட்டிருக்கலாம். எப்போதும் எதிர்ப்பு எழுதிய ஏடுகள்! இப்போதென்ன புதிதாக, இவைகளில் எழுதப்படுவது கண்டு, பதற

இருக்கிறது!! பன்னீர் வியாபாரம் செய்வதன் கரம், காடிப்பானையில் பட்டால், அட பாவமே! நறுமணம் போய்விடுமே என்று பரிதாபப்படலாம்!! காடிப்பானையில் விட்டிருந்த கையிலே, கருவாட்டுத் துண்டு எடுத்தால், பரிதாபப்படவா செய்வார்கள்!

காலமெல்லாம், கழகத்தைக் கண்டித்துவந்த ஏடுகள் - இன்று பிறர் உமிழ்வதை எடுத்து வைத்துக்கொண்டு, ஊருக்குக் காட்டுகிறார்கள்! வேறென்ன!!

வீசப்படுபவை வீழ்ந்துபடும்! நிலைத்து நிற்பது, நிமிர்ந்து நிற்கும்!

எதிர் நீச்சலில் ஈடுபட்ட கழகம் எரிச்சலாளர்களின் இருமல், தும்மல், ஏப்பம், கனைப்பு இவைகளைக் கண்டு கலங்கப் போவதில்லை. எரிச்சலாளரின் இருமல், தும்மல், ஏப்பம் இவைகளை ஊருக்கு எடுத்துக்

காட்டிடும், "மேலான' செயலிலே, ஈடுபடும் ஏடுகளின்மீது எனக்குத் தம்பி! கோபம்கூட இல்லை, பரிதாபம்தான். நிச்சயமாக!!

கற்கள் வீசப்படுவது கேட்டு, சிலைக்கு ஏதேனும் சேதம் நேரிட்டுவிட்டதோ என்று காண ஓடோடி, ஊரார் திரண்டு வந்ததுபோலத்தான், ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி ஏடுகளின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ள, கழகத்திடம் வியப்புற்றோர், விசாரப்படுவோர், கோபம்கொண்டோர், அச்சப்பட்டோர், விளக்கம் தேடுவோர் எனும் பல்வேறு வகையினரான பொது மக்கள், முன்பு காட்டியதைவிட அதிக அளவு அக்கறை காட்டுகிறார்கள் - ஆதரவு திரட்டித் தருகிறார்கள்!

வண்டுபோல் சுற்றுகிறார்கள் நமது தோழர்கள் - உற்சாகம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகியபடி இருக்கிறது.

தம்பி! கழகத்தைக் குறித்து எவரெவரோ ஏதேதோ பேசுகிறார்களே, கழகத் தோழர்களிடம் ஏதேனும் உற்சாகக் குறைவு, எழுச்சியிலே விரிசல், சலிப்பு இருக்கிறதா என்று கண்டறியவே, "கொள்கை பரப்புவோர்' கூடிப் பேசிட வாரீர் என்று அழைத்திருந்தேன்.

இது மாநாடு அல்ல! இங்கு விவாதங்கள், தீர்மானங்கள், இல்லை! இது பொதுக்குழு அல்ல - செயற்குழு அல்ல! - கொள்கை பரப்புவோர் கூடிக் கலந்துரையாடலாம் வாரீர் என்று அழைத்திருந்தேன். . . . நூறிலிருந்து இருநூறு பேர் வரையில் வரக்கூடும் என்று நினைத்திருந்தேன். வந்தவர் தொகை ஆயிரத்துக்குமேல்! வர இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்திருந்தோர் தொகை அந்த அளவு இருக்கும்.

இரண்டு நாட்கள்! கண்மூடிக் கண்திறப்பதற்குள் கழிந்து விட்டன! எத்தனை

உற்சாகம்! எவ்வளவு எழுச்சி!!

தருணமறியும் தங்கவேலர் என்று முன்பு ஒரு முறை "விடுதலை'யில் நான் தலையங்கமெழுதி இருந்தேன் - காஞ்சி புரத்திலே, "பிரிவினை மாநாடு' நடத்தியதற்காக, அந்தத் தங்கவேலர்தான், உறுதுணையாக நின்றார்; உணவளித்தார்; உரையாடல் கேட்டு மகிழ்ந்தார்.

அவருடைய தென்னந்தோப்பிலே அமைக்கப்பட்ட விடுதியில் தோழர்கள் தங்கினர்; கொட்டகையில் கூட்டம் நடந்தது. ஆயிரம் தோழர்கள்; ஐந்தாறு சொற்பொழிவுகளைக் கேட்டுவிட்டுக் கலைந்தனரோ? அதுதான் இல்லை!!

அவர்கள் அனைவரும் தத்தமக்குச் சரியென்றுபட்ட கருத்துக்களை, பல பிரச்சினைகளுக்கு ஆய்வுரைகளை, அரிய

யோசனைகளை எடுத்துரைத்தனர்.

கழகம் கலகலத்துப் போய்விட்டது என்பதற்கு அடையாளமா இது!! கண்ணுள்ளோர் கண்டனர்; கருத்துள்ளோருக்கு உண்மை புரிந்தது!!

கழகம் உடைபடுகிறது என்று சில ஏடுகள் எழுதி மகிழ்ந்து கொண்டிருந்த வேளையிலேயே, மெயில் இதழின் தனி ஆய்வாளர், ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, அரசியல் நிலைமைகளை நன்கு ஆராய்ந்து, விளக்கக் கட்டுரைகள் வெளியிட்டார்.

அதிலே, அவர், ஒவ்வொரு மாவட்டத்திலும், பிளவு, குழப்பம், பிரிவு, சரிவு என்று எந்தத் தி. மு. கழகத்தைக் குறித்து இட்டுக்கட்டிக் கூறப்படுகிறதோ, அந்தக் கழகம், வலிவு குன்றாமல், பொலிவுடன், விளங்கி வருவதையும், காங்கிரஸ் கட்சிக்குச்

சரியான அறைகூவல் விடத்தக்க நிலையில் இருப்பதையும் எடுத்துக் காட்டியிருந்தார்.

ஆயிரவர் கூடினர், அதனை மெய்ப்பித்தனர்!!

தத்தமது வட்டாரங்களிலே கழக வளர்ச்சி எந்த அளவு உள்ளது என்பதுபற்றி, மாவட்ட வாரியாக அமர்ந்து, ஆய்வுரை தந்தனர்.

ஆர்வமும், நம்பிக்கையும், எழுச்சியும் எந்த அளவுக்கு இருந்தால், தேர்தலில், தி. மு. கழகம் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்தாகவேண்டும் என்பதில்லை என்ற கருத்தைக் கூறி யிருப்பார்கள் என்பதை, அப்படி ஒரு கருத்து வெளியிடப் பட்டது. ”எதிர்ப்பு’ என்ற தலைப்பிட்டு எழுதும் இதழ்கள், எண்ணிப் பார்க்கவேண்டும்.

பன்னிப்பன்னிச் சொன்னபிறகும். “பழிபோட்டுத் தலை வாங்கும்’ போக்கினர்,

பிற கட்சிகளுடன், குறிப்பாகச் சுதந்திரா கட்சியுடன்,"கூட்டு' ஏற்பட்டுவிட்டதுபோலத் தாமாக இட்டுக் கட்டிக்கொண்டு, பிறகு, அதற்கு "எதிர்ப்பு' ஏற்பட்டதாகக் கயிறு திரித்து, களிப்பைத் தமக்குத்தாமே ஊட்டிக்கொள்கிறார்கள். எதைச் சுவைத்தோ அவர்கள் இன்புறட்டும், தம்பி! நமது கழகம், எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேரவுமில்லை; அதற்கான பேச்சு நடத்தப்படவுமில்லை; எவரும் அதற்காக ஏற்பாடும் செய்ய வில்லை; அழைப்பும் இல்லை!

ஆயிரவர் கூடி, அந்தப் பிரச்சினைபற்றி, அரிய கருத்துகளை தெரிவித்தது, அந்தப் பிரச்சினைபற்றி, நீயும் நானும், மேலும் சிந்திக்க.

ஆயிரவர் எதிர்ப்புக் காட்டினர் என்று ஓர் மண் குதிரை தேடிப்பெற்று, மகிழட்டும் இதழினர். என் மகிழ்ச்சிக்குக்

காரணம், கழகம் கலகலத்துவிட்டது, "தேர்தலில் ஈடுபட வேண்டாம்!'' என்று, மனச்சோர்வுடன், திகிலுடன், சலிப்புடன் நமது தோழர்கள் பேசவில்லை. மாறாகத் தேர்தலில் ஈடுபடுவதற்கான நல்வாய்ப்புகள் மிகுந்திருப்பதைத்தான் மெத்த உற்சாகத்துடன் பேசினர் - தன்னம்பிக்கையுடன்.

கழகத்திலே வலிவு குறைந்துவிட்டது; தூற்றல், தாக்குதல் ஆகியவற்றால் கழகத்தின் வாய்ப்புகள் கெட்டுவிட்டன என்ற எண்ணம், கவலை, கலக்கம், பீதி, துளியேனும் தோழர்களிடம் இருந்திருக்கு மானால், யாருடனாவது கூட்டுச் சேர்ந்து, எந்தெந்தக் கட்சிகளின் துணையையாவது கொண்டு, தேர்தலில் நிற்கவேண்டும்; பல கட்சிகளின் "கூட்டும்' உதவியும் இருந்தால்தான், இந்தத் தேர்தலை நாம் சமாளிக்க முடியும்; தனியே

நின்று தேர்தலில் வெற்றி தேடிக்கொள்ள முடியாது என்ற முறையில் பேசியிருப்பர். மாற்றார் கூறுவதுபோலவும், மனப் பேதப்பட்டோர் விரும்புவதுபோலவும் கழகம் வலிவு குன்றி இல்லை. எனவேதான், தோழர்கள் நமக்குள்ள வலிவுகொண்டு நாம் தேர்தலில் ஈடுபடலாம் என்ற எழுச்சியுடன், நம்பிக்கையுடன் பேசினர்!

ஆயிரவர் கூடிப்பேசி ஆர்வம் கண்ட நிகழ்ச்சிமட்டுமல்ல, தம்பி! அடுத்த திங்கள், இருக்கிறது. நல்விருந்து; பொது மாநாடு! எத்தனை இலட்சம் மக்கள் கூடப்போகிறார்கள் என்பதை எண்ணிப்பார்!!

வெட்டவெளியிலே, கொட்டும் மழையிலே கூடினோம், முன்னேற்றக் கழகம் துவக்க.

மூன்றாவது பொது மாநில மாநாடு கூடுகிறது! இதற்கு, மதுரையம்பதியில்

தோழர் முத்துவுடன் சென்று, திடல் தேடினேன் - மதுரை நகருக்குள், நாம் விரும்புகிற அளவு பெரிதான, வசதியான, திடல் இல்லை!

வளர்ச்சியின் வகையும் அளவும் தெரிகிறதல்லவா!!

திருப்பரங்குன்றம் செல்கிறோம், மாநாடு நடத்த!

மதுரையிலிருந்து எத்தனை கல் தொலைவு என்கிறாயா?

அது எங்கே உனக்கும் எனக்கும் தெரியப்போகிறது!! திருப்பரங்குன்றமே புதிய மதுரையாகக் காட்சி தரப்போகிறதே! இலேசான ஆட்களா மதுரைத் தோழர்கள்! திருப்பரங்குன்றத்தைத் திருநகராக்குகிறார்கள் - திருவிடமாக்குகிறார்கள்.

எழிலூர்

வெட்ட வெளியிலே, கொட்டும் மழையிலே, கழகம் துவக்கினோம்! இன்று மாநாட்டுக் கொட்டகை அமைக்க ஊர் நடுவே இடமில்லை!! எனவே, திருப்பரங்குன்றம் பெரியதோர் திடலை எழிலூராக்குகிறார் வரவேற்புக்குழுத் தலைவர் மதுரை முத்து. தோழமைமிக்க தொண்டர்கள், உங்கள் தேவைகளைக் கவனிக்க.

காவியமும் ஓவியமும், இசையும் கூத்தும், எழுச்சியூட்டும் பற்பலவும், உம்மை மகிழ்விக்க!

எந்நாளும் மறக்கொணாத திருநாளாகும், திருப்பரங் குன்றம் மாநாடு.

தரணியாண்ட நாம் தாழ்ந்திருக்கிறோம், நிலை அறிந்ததால் நிமிர்ந்து நிற்கிறோம்!

பகைவர் சீறிக்கொண்டு பாய்ந்து வருகிறார்; பரணி பாடுவோம்! பகையை வெல்லுவோம்! வாரீர் திருப்பரங்குன்றம்! -

என்று கூறு தம்பி! நாட்டினருக்கு!!

நேரு அறியட்டும்

நேரு வருகிறார் பரிவாரங்களுடன் மதுரைக்கு, திருப்பரங்குன்றம் மாநாடு குறித்து அவர் அறிந்துகொள்ள முற்படுவார்!

அவர் செவியில். மிகப்பெரிய மாநாடு! மகத்தான ஏற்பாடு! ஏற்றமிகு எழுச்சி! வெள்ளம்போல் வீரர்கள் என்ற செய்தி விழ வேண்டும்!

திருப்பரங்குன்றம் வருவது திராவிடரின் நீங்காக் கடமை.

வடபுலத்துத் தலைவர் திரு இடத்து மாண்பு அறியத் திருப்பரங்குன்றம் மாநாடு!

இதுவரை எவரும் காணாத அளவுடன், அழகுடன், சுவையுடன், பயனுடன், நடைபெற்றது என்ற நற்பெயர் கிடைத்திட

வேண்டும்.

கழகத்தின் மாண்பு காத்திட அனைவரும் வாரீர் திருப்பரங்குன்றம் என்று தோழர்க்கெல்லாம், அழைப்பு அனுப்பு தம்பி! மறவாமல்.

அறைகூவல்

வண்ணமுகப்பு, வரவேற்பு வளைவுகள் கண்ணைக்கவரும் கவர்ச்சியுடன்!

நிழலது தந்து நம் நிலையினை உணர்த்தும் பெரியதோர் பந்தல், அமர்ந்திருந்து அரிய உரைகள் கேட்டிட!

வரிசை வரிசையாகக் கடைகள்! புதியதோர் அங்காடி!

உலவி மகிழச் சாலைகள்! உண்டு களைப்பாற விடுதிகள்! மகிழ்வூட்டும் கலையரங்கம்! கருத்தூட்டும் கண்காட்சி!

இன்பத் திராவிடம் பெற்றிட வாரீர் என இருவண்ணக் கொடிகள் ஆடி அழைத்திடும் அழகுறும் காட்சி!

விடுதலைப் போருக்கான அழைப்பு வந்திடுங் காலை வீறுகொண்டெழுந்திடப் போகும் வீரர்தம் கூட்டம் உலாவரும் காட்சி!

இவை எலாம் உமக்காக!

உமது உழைப்பு நாட்டுக்காக!

திருப்பரங்குன்றம், மாநாடுமட்டுமல்ல; நமது இன மனமகிழ் மன்றம்!

திருப்பரங்குன்றம், ஆட்டிப்படைக்கும் வடவருக்கு அறைகூவல்!

அடுத்துக் கெடுத்திடும் நினைப்பினர்க்கு எச்சரிக்கை!

விட்டுச் சென்றவர்கட்கு அறிவுரை!

வீரர் குழாத்துக்கு அழைப்பு!

திருப்பரங்குன்றம் பொறுப்புணர்ந்தோர்க்கு!

அகமும் முகமும்

மலர பகற்கனவு என்றார் பண்டிதர்! பாதந்தாங்கிகளும் அதனையே கூறுகின்றனர்! ஏன் கூறினர் அதுபோல்? நாம் எதிர்ப்பு கண்டு அஞ்சுவோம், ஏளனம் கேட்டுத் துஞ்சுவோம், பழிச்சொல் கேட்டுப் பதறுவோம், பயணம் தடைப்படும் என்று எண்ணியதால்! தி. மு. கழகம், அஞ்சி அஞ்சிச் சாவோரைக் கொண்ட அமைப்பா! அல்லது உயிரிழக்க அஞ்சாத உத்தமரின் உறைவிடமா? பித்து மனம் கொண்டோரா? சித்தம் தடுமாறாச் சீலரா?

திருப்பரங்குன்றம் எடுத்துக்காட்டும், எதையும் தாங்கும் இதயம் கொண்டவரின் பண்பகம் தி. மு. க. எனும் உண்மையை.

கண்ணீர்த்துளிகளே! நாட்டின்

கண்மணிகளே! கடமை அழைக்கிறது! உலகு கவனிக்கிறது! ஊராள்வோர் உற்று நோக்குகிறார்கள்; உலைவைப்போர் முணுமுணுக்கிறார்கள்!

வாளுக்கும் வேலுக்கும் மட்டும் அல்ல, வஞ்சனைக்கும் அஞ்சிடமாட்டோம் என்று அணியணியாய் வந்து கூடி அறிவிப்பீர் அவனிக்கு.

அகமும் முகமும் மலர! தரமும் திறமும் விளங்க! வீரமும் தீரமும் மிளிர! வெற்றிப் புன்னகை தவழ! வீரர்காள்! விரைந்து வாரீர்! திருப்பரங்குன்றம்!! - தம்பி நாடெங்கும் சென்றிடுவாய், நல் அழைப்புத் தந்திடுவாய்.

துணிவோர் தொகை காட்டிட

பொன் இருந்திட, பொருள் இருந்திட, திருவிடத்திலே போக்கற்ற நிலையில் மக்கள் இருந்திடுவதேன்?

கண் இருந்தும் ஒளி இருந்தும், கட்டிப்போட்டுவிட்டால்,

மலரும் மானும், கனியும் பிறவும், காண முடியுமா? திராவிடம் கட்டுண்டு கிடக்கிறது! திராவிடர் தேம்பித் தவிக்கின்றார்! திராவிட நாடு திராவிடருக்கே! முழக்கம் இது; வெற்றி எப்போது? வேலுக்கும் வாளுக்கும் அஞ்சா வீரம், சூதுக்கும் சூழ்ச்சிக்கும் சாயாநெஞ்சம், பதவிக்கும் பவுனுக்கும் இளிக்காப் போக்கு, இவைகொண்டவர் தொகை வளர்ந்து விட்டால், கொடிகட்டி நாம் ஆள்வோம் திராவிடத்தை! விடுதலை வரலாறு தரும் பாடம் இது. இன்பத் திராவிடம் பெற்றிடத் துணிவோர் தொகை எவ்வளவு என்பதைக் காட்டிடத் திருப்பரங்குன்றம்.

திராவிட முரசொலிக்க

பரலோகத்துக்கு வழி காட்டவேண்டிய

பாதிரியார், அரசு அமைக்கும் காரியத்தில் ஈடுபடலாமா! என்று ஒருவன் கேட்க, பரலோகம் அனுப்பித்தான் வருகிறார் பாதிரியார், அப்பாவிகளை நம்மீது மோதவிட்டு, சாகடித்து என்று கேலி பேசினான் மற்றொருவன், அன்று! இன்று, சைப்ரஸ் தனி நாடு, தனி அரசு, மகாரியாஸ் பாதிரியார் விடுதலை பெற்றளித்தார்.

சைப்ரஸ் சிறு தீவு! திராவிடம் ஒப்பற்ற நாடு!

சைப்ரஸ் விடுதலை பெற்றது! திராவிடம் இன்றும் அடிமை! ஏன்? திருப்பரங்குன்றம், இதை ஆராயத்தான் ஐயம் கொண்டோர் விளக்கம்பெற, அச்சம்கொண்டோர் வீரம்பெற அவனிக்கு நமது முயற்சியை அறிவிக்கத் திருப்பரங்குன்றம்.

திருப்பரங்குன்றம், திக்கெட்டும் திராவிட

முரசு ஒலித்திட!

திராவிடர் எனில். . .

முடியுடை மூவேந்தர் இவர் முன்னோர்; இன்று நமது அடிபணிந்து கிடக்கின்றார் இழிந்து! டில்லி கூறுகிறது - நாம் கேட்கிறோம். உயிரும் இருக்கிறது! உணர்வும் இருக்கிறது! எனினும் மானம் காத்திடுவோர் தாயகம் மீட்டிடுவோம், அரசு அமைத்திடுவோம் என்று ஆர்த்தெழத்தான வேளை வரவில்லை! அது எப்போது? விடுதலை, எம்முறையில்? அப்பணிபுரிய, எத்துணை வீரர்? இவைகளுக்குப் பதில்காண, திருப்பரங்குன்றம்.

திராவிடர் எனில் வாரீர்! விடுதலை விரும்பிகள் எனில் வந்திடுவீர், திருப்பரங்குன்றம்; - என்று அழைத்திடுவாயன்றோ, இன்பத்

திராவிடத்துள்ளோரை எல்லாம். உனக்கா தெரியாது!! தாயகம் விடுபடத், தனி அரசு கண்டிடத், தளராது உழைத்திடத், திரண்டு வாரீர் திருப்பரங்குன்றம் என்று இப்போதே அழைத்துக் கொண்டுதானே இருக்கிறாய்!!

ஆர்த்தெழுவோம்

நாமிருக்கும் நாடு நமது என்றுரைத்திடா நாவும் நாவென்றுரைத்திட நல்லோர் கூசுவர்.

நாமிருக்கும் நாடோ நம்மிடம் இல்லை. நம்மை வடவர் ஆளுகின்றார், சகிப்பதற்கில்லை!

பொன்னை, பொருளை இழந்திடலாம், உரிமை இழப்பதோ? உரிமையற்ற வாழ்வு கண்டு உலகம் சிரிக்காதோ? இந்த உண்மைதனை உணர்ந்தோரெல்லாம திரண்டு வருகிறார், உரிமைப் போரின் அணிவகுப்பை அமைக்க வருகிறார்!

திருவிடத்தின் விடுதலைக்கு உழைத்திட நாமே திருப்பரங்குன்றம் சென்று ஆர்த்தெழுவோமே!!

எல்லாக் கண்களும் அப்பக்கம்

எழுச்சியின் அளவு, வகை, கண்டு களித்திட ஏற்ற இடம் திருப்பரங்குன்றம். எல்லாக் கண்களும் அப்பக்கம்! எல்லார் எண்ணமும் அதுபற்றி! இன்றே நண்பரைக் கண்டிடுவீர்! மாநாடு காண அழைத்திடுவீர்! குடும்பத்துடன் வந்து காண வேண்டிய குதூகலாபுரி திருப்பரங்குன்றம்.

கார்கண்ட உழவன்போல், கதிரவன் கண்ட கமலம்போல, கண்டதும் விழியில் மகிழ்ச்சி பொங்கும் வீரரின் நெஞ்சினில் விடுதலை ஆர்வம் கொந்தளிக்கும், அணிவகுப்பின் திறம் கண்டு, ஆர்வத்தின் அளவு கண்டு. விழிப்புற்ற திராவிடத்தின் வீரரெல்லாம் கூடுகின்றார்,

வெற்றிக்கு வழி காண, திருப்பரங்குன்றம்.

மரபு அறிந்தவர், மானம் காப்பவர், இனம் அறிந்தவர், இலட்சிம் மறவார், உழைத்திடுபவர், கழைக் கூத்தரல்ல!! இன்னுயிர் கொடு! இன்பத் திராவிடம் பெற! கட்டளை அஃது எனில், காளையரும் கன்னியரும் போட்டியிடுவர், உயிர்தர, உரிமைபெற! முதியவர் இளைஞரை முந்திக்கொண்டே வருவர், எந்தையர் நாடு விடுதலை பெற்றிட ஈந்தேன் இன்னுயிர் என்று கூறியே!

இல்லங்களிலே

தம்பி! இல்லங்களிலே இப்போதே நடைபெறும் இன்ப உரையாடலை, நான் அறிந்துதான் இருக்கிறேன். “நேற்றிருந்த கோபம்மாறி, நேர்த்தியானதே! முகம் பார்த்திடும்போதே! கேட்கக் கேட்க மொழியும்

பாகாய், இனிக்குது இன்று.’’’காரணத்தைக் கூறிடவும் வேண்டுமோ அத்தான்! கண்டிடலாம் மாநாடு என்றுரைத்தீரே!’’ இல்லங்களிலே இன்ப உரையாடல், திருப்பரங்குன்றம் சென்றிடலாம், திருவிடத் தீரரைக் கண்டிடலாம். தேன்நிகர் பேச்சினைச் சுவைத்திடலாம். உரிமைக்கோர் வழி கண்டிடலாம் என்பதுபற்றியே! செந்தாமரையின் அழகு, கண்டபோது! மல்லிகையின் மணம் முகர்ந்தபோது! செங்கரும்பின் சுவை உண்டபோது! தாயக விடுதலைக்கான மாநாடு அளித்திடும் மகிழ்ச்சி, எண்ணிடும்போதெல்லாம் இனிக்கும்! பேசிடும் வாய் மணக்கும்! ஏன்? மாநாடு, மானமும் மரபும் காத்திடும் மறவர், கூடி எழுப்பிடும் இலட்சிய முழக்கம் நெஞ்சினில் பதிந்து, நம்மை வீரராய், தீரராய், திராவிடராய் ஆக்கிடத்தக்க கொள்கைக்

கோட்டம், திருப்பரங்குன்றம்! தம்பி! திருப்பரங்குன்றம், திராவிடர்க்காக! அறிவாய் நீ! அறிவிப்பாய் மற்றவர்க்கு!!

குடும்பத்துடன்

வருகிறேன், திருப்பரங்குன்றம்! செல்கிறேன் திருப்பரங் குன்றம்! செல்வோம் திருப்பரங்குன்றம்! இல்லங்களின் இன்றையப் பேச்சு இது. வரவேற்புக் குழுத்தலைவர் மதுரை முத்து, பொட்டல் காட்டைப் பூம்பொழிலாக்கக் காத்திருக்கிறார், களிப்பூட்ட! இசைகேட்டு இன்புறுவோம்! வீரக்காதைகள், விடுதலை வரலாறுகள், இலக்கியச் சுவையுடன்!! ஆட்சி முறை, அறவழி ஆகியவைபற்றிய பேருரைகள். மாநாட்டிலே கெனியாடா, திவேலரா, நாசர், ஹோசிமின், போர்க்யூபா, மகாரியாஸ், என்க்ருமா மற்றும் எண்ணற்ற விடுதலை வீரர்கள், வெற்றிபெற்ற வரலாறு கேட்டு, உணர்ச்சி

பெறப் போகிறோம். புதிய நம்பிக்கை பெற இருக்கிறோம். நாடகங்கள் உண்டு, நற்கருத்தளிக்க. கழகக்காவலர் அனைவரும் கூடுமிடம், திருப்பரங்குன்றம்! வாழ்நாளில் மறக்கொணாத அரிய நிகழ்ச்சி! நெஞ்சை அள்ளும் எழில் பல மிஞ்சும் வண்ணக் களஞ்சியம், திருப்பரங்குன்றம்! வீட்டிலே சிலர் விம்மிக்கிடக்க, நீவீர் மட்டும் விருந்துண்ண வருவது அழகல்ல!! குடும்பத்துடன் வருக திருப்பரங்குன்றம்! - என்று கூறிடத் தோன்றுகிறதல்லவா!!

வீரருக்கு அழைப்பு

கண் திறந்தது! கருத்து மலர்ந்தது! கழகம் அழைத்தது! கடமை புரிந்தது! எழுந்தனர்! வீரர் எழுப்பினர் முழக்கம்! இன்பத் திராவிடம் எமக்கே என்று.

அவரெல்லாம் கூடுமிடம்,

திருப்பரங்குன்றம்!

அறமறிந்தோர் மாமன்றம், திருப்பரங்குன்றம்!

விடுதலைக்கு வழிகாண, திருப்பரங்குன்றம்.

எண்ணம் வண்ணமாக, திருப்பரங்குன்றம்!

கூனிக் கிடந்திடமாட்டோம், குமுறிச் செத்திடமாட்டோம், கொத்தடிமையாகிடமாட்டோம்! சித்தம் தடுமாறிடவும் மாட்டோம்! இத்தரையில் எத்தனையோ நாடு! எங்கட்கு இல்லை எம்நாடு! பெற்றிடுவோம் திருநாடுதனை, குற்றுயிராகும் வரை போராடியேனும். பண்பாடக் கேட்டிடுவீர்! திண்தோளர் கூடிடுவீர்! எழுவோம், பகைவெல்வோம்! இதற்கான அறிவிப்பு திருப்பரங்குன்றம் மாநாடு.

வீரர்க்கு அழைப்பு, விடுதலை அணிவகுப்பு: திருப்பரங்குன்றம்!

தீரர் தோற்றதில்லை

கருப்பர் என்றனர், இன்று வெள்ளையர் முகம் வெளுத்தது பயத்தால். ஏன்? கட்டுண்டுகிடந்தவர்கள், வெட்டுண்டு மடிவதேனும், விடுதலைக்கே உழைப்போம் என்று கூறிவிட்டனர். இடியோசை கேட்க நாகமென வெள்ளையர், விரண்டுவிட்டனர். சுடுகிறார்கள், சாகிறார்கள்; எனினும், செத்தவர்போக மிச்சம் உள்ளவர், விடுதலை, விடுதலை, விடுதலை என்ற முழக்கமிடு கின்றனர். குண்டுகள் தீர்ந்துவிட்டன - சாவுக்கஞ்சா வீரர் தொகை குறையவில்லை. முழக்கமிடுகின்றனர், எமது நாடு, எமது அரசு, எமது உரிமை. திருப்பரங்குன்றம் வாரீர், விடுதலை பெற்றோர் புகழ்பாட, விடுதலைக்கான பாடம்பெற, தீரர்

தோற்றதில்லை, திருவிடரும் தோற்கமாட்டார், திருப்பரங்குன்றம் இதை உலகுக்கு உணர்த்த.

பொங்கி எழுகிறது

தலைகனத்தோர் ஆட்சிக்கு முடிவுவைத்து, தனி நாடு சமைத்திடுவோம் வாரீர் என்று பன்னிரண்டு ஆண்டுகளாய்ப் பேசிவந்தோர், இன்று பகைவர் பரிகசிக்கப் பேசுகின்றார். அவரல்ல கழகம் என்று அறிவிக்க அனைவருமே வந்திடுவீர் மாநாட்டுக்கு. திருப்பரங்குன்றம் தெரிவிக்கட்டும், விடுதலை உணர்ச்சி மங்கவில்லை, மறையவில்லை! மாறாக, பொங்கி எழுகிறது புதிய வேகத்துடன் - மாற்றாரும் அவரை அடுத்துப் பிழைப்போரும் அகலக் கண்திறந்து, ஆச்சரியப்படத் தக்க அரியதோர் அணிவகுப்பு திருப்பரங்குன்றம், எனும் பேருண்மையை, உழைத்த உத்தமர்களே, உம்மை இகழ்கிறார்கள் - கொள்கைக் குன்றுகளே. உம்மைக் கேலி

பேசுகிறார்கள், இனமறிந்த ஏந்தல்களே, உம்மை ஏளனம் செய்கிறார்கள், கழகம் கலகலத்துவிட்டதாம், அணிவகுப்புச் சிதறிவிட்டதாம், நம்பிக்கை நசித்துவிட்டதாம் பதில் என்ன தருகிறீர்கள்? பேசவேண்டாம், ஏசவேண்டாம், திரு இடம் காணவிழைவோர் அனைவரும் திருப்பரங்குன்றம் உலா வருவீர், பேச்சு அடங்கிக்கிடப்பர் மாற்றாரின் கைப்பாவைகள். மகத்தான பொறுப்பு, கழக மாண்பு காப்பது. கழகம் அழைத்தால், அனைவரும் எழுவோம் என்பதை அறிவிக்க, திருப்பரங்குன்றம்.

அறவழி

தோகையில்லை, மயில்தான்; குளிர்ச்சியில்லை, நிலவுதான்; ஒளியில்லை, மணிதான்; சுவை இல்லை, கனிதான்; அணியில்லை, பாட்டுத்தான்; மழலை இல்லை, குழவிதான்; மணம் இல்லை,

மலர்தான்; கூறுவரோ எவரேனும்? கேட்டிடின் கைகொட்டிச் சிரிப்பரன்றோ. ஆனால், தனி அரசு இல்லை, திராவிடர்தான் என்றன்றோ இன்றுள்ள நிலை. கேலிக்கூத்தல்லவோ, கேவல நிலைமையன்றோ! பகை முடிப்போம், பழி துடைப்போம், அறவழி நின்று திருவிடம் பெறுவோம். திருப்பரங்குன்றம் வழி காட்டும் கோட்டம்.

வீரக்கோட்டம்

அச்சம், அவனை அடக்கியதில்லை; ஆசை அவனைக் கட்டுப்படுத்தியதில்லை; அரண்மனை கண்டு அவன் சொக்கின தில்லை; மாளிகை தரும் மதுரவாழ்வு வேண்டினவனல்ல. நிந்தனை தந்தனர்; நிலாச் சோறு என்றான். வேதனை வேண்டுமளவு உண்டான்; எனினும், "திராவிட நாடு திராவிடர்க்கே'' எனும் இலட்சியத்தை கடந்தானில்லை, அவனே

திராவிடத் தீரன். திராவிடத்துத் தீரரெல்லாம் திரண்டு வருகின்றார் திருப்பரங்குன்றம். தாயகத்தின் தளை நொறுக்கிட தன்மானத் திறம் பெருக்கிட, தனி அரசுதனைச் சமைத்திட, நான், நான், நானுந்தான் என்று முழக்கமிடும் வீரர் கூட்டம் திரண்டிடும் அரிய கோட்டம் திருப்பரங்குன்றம். இலட்சக்கணக்கான இல்லங்களில் ஏற்பாடுகள். . . . இப்போதிருந்தே இளைஞருடன் முதியவர் போட்டியிடுகின்றனர். ஆடவரும் ஆரணங்குகளும் பயணப்படுகின்றனர், தாயக மீட்புக்கான சூளுரை எடுக்க, திருப்பரங்குன்றம்.

தம்பி! உன்னைக் காண, நான் வருகிறேன், திருப்பரங்குன்றம் என்று சொல்லவா வேண்டும். நீதான் என்னைக் கட்டிப்போட்டு விட்டிருக்கிறாயே, உன் அன்பினால்.

திருப்பரங்குன்றம் மாநாடு எழிலுடன்,

ஏற்றத்துடன் நடைபெற, உன் சீரிய கருத்துரைகளை எடுத்துரை. தி. மு. கழகம், கூட்டு முயற்சியால் ஈட்டிய கருவூலம் உள்ள பெட்டகம். இங்கு “எல்லாம் எனக்குத் தெரியும் என்ற பேச்சுக்கு இடம் இல்லை. அந்தப் போக்கு முற்றினால், பொது வாழ்வுக்கு வந்தது பெருந் தொல்லை. துவக்க முதல், நாம் கட்டிக் காத்துவரும்”தோழமை’. . . திருப்பரங்குன்றத்தில், கோடையிலே இளைப்பாறிக் கொள்ளக் கிடைத்த குளிர் தருவாய், இதயப் பூங்காவில் உள்ள எழில் மலராய், நமக்கு இனிமை பயக்கட்டும். பயணத்தில் மிக முக்கியமான கட்டம் வந்துள்ளோம், திருப்பரங்குன்றம், மேற்கொண்டும் பயணமாகி வெற்றியூர் சென்றிடும் அறிவாற்றலை நமக்கெல்லாம் அளிக்கட்டும்.

மாற்றார் தம் மனம்போன போக்கிலே

ஏசட்டும், பேசட்டும்; செவிபுகவிடாதே. நாம் மேற்கொண்டுள்ள பணி மகத்தானது. தூய்மையுடன் கூடிய தோழமை கலந்த, கூட்டு முயற்சி மட்டுமே, நமக்குள்ள அழயாச் செல்வம். கண்ணீருடன் பிறந்தோம். அந்தக் கண்ணீரும் கேலி செய்யப்படுகிறது. அது கேட்டுக் கண்ணீருக்கிடையிலே ஓர் புன்னகையும் பூத்திடும் முகம் காட்டுகிறோம். நம்மை நிந்திக்கிறார்களே என்று கலக்கமடையாதே; நாராச நடையாலே, நம்மை அழிக்க நினைத்தோர்கள் பலர்; நாம் அழிந்தோமில்லை. காரணம், நம்மை நாட்டுக்குரியதோர் நற்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு விட்டோம்.

ககனப்பூ வந்திமகன், கொய்தானாம்

அதைக்கண்டு குருடன் அம்பால் எய்தானாம்

செகமிசை ஊமையனும் வைதானாம்

அதைச் செவிடன் கேட்டு நகை செய்தானாம்

கரமில்லான் வாதியைப் பிடித்தானாம்

காலில்லான் உதைத்துதைத்து இடித்தானாம்

சிரமில்லாதவன் கடித்தடித்தானாம்

வேதநாயகம், பொய்யுரைப்போரை, நகைச்சுவையுடன் கூடிய பாடலால் சாடினார். குருடன் குறிபார்த்து அம்பு எய்கிறான்! ஊமை, திட்டுகிறான்! செவிடன் அதைக் கேட்டுச் சிரிக்கிறான்! கரம் இல்லாதவன் ஆளை இழுக்கிறான் கால் இல்லாதவன் எட்டி உதைக்கிறான்! தலையில்லாதவன் ஆளைக் கடிக்கிறான்!!

நம்புவார்களோ! நம்பமாட்டார்கள்;

கூறுவரோ? இதனையே அல்ல என்றாலும், இதுபோன்ற பொய்யுரைகளைக் கூறுவர் - எங்கு? எவர்? வழக்குமன்றத்தில்! காசாசையால்!

நம்மைப்பற்றிப் பேசப்படுவன, இவைபோன்றன; நம்ப முடியாதன! எனவே, நாம், பதிலுரை தரத் தேவையில்லை! நாடு, நல்ல தீர்ப்பளிக்கும்; நாம் நமது நினைப்பைத் திருப்பரங்குன்றம் பக்கம் திருப்புவோம்; மாநாடு நமக்கு மாண்பளிக்கும்.

அன்புள்ள

அண்ணாதுரை

25-6-61

45. 6 கதைகள் - கருத்தளிக்க

மரங்கொத்தியும் குருவியும் -
கருத்துக் கதை -
அவரைக் கொடியும் குழந்தையும் -
மகிழம்பூவும் சுணைப்பூவும்

தம்பி!

அதற்கு என்னமோ கோபம் - பாவம்!

காரணம் என்ன கோபத்துக்கு என்றா கேட்கிறாய்? எளிதாகத் தெரிந்துவிடக் கூடியதா, கோபத்துக்கான காரணம்! கொண்டவர்களுக்கே சில வேளைகளில் தெரிவதில்லை - கண்டவர்களுக்கா தெரிந்துவிடும். மேலும் கோபம், அறிவை மாய்க்கும், ஆத்திரத்தைக் கிளப்பும் - அந்த நிலையில், கோபம் கொண்டதற்கு என்ன காரணம் என்று கேட்டால் சொல்லத்தான்

முடியுமா, சொல்லத்தான் செய்வார்களா? இயலாதே!

மெத்தப் படித்தவர்கள் என்று தம்மைப் பிறர் நம்பும்படி செய்பவர்களாலேயே, கோபத்தை அடக்கிக்கொள்ள முடிவ தில்லை. இது, பாவம், படித்தவர் பட்டியலில் சேராதது! கோபம் கொண்டதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், சொல்லவா போகிறது. மேலும் சிறிதளவு கோபம் வளரும். கீச்சுக் கீச்சென்று கத்தும்! கொத்தும்! ஓ! சொல்லவில்லையல்லவா உனக்கு - இது ஒரு குருவியின் கதை!!

மரப்பொந்தில் தாய்! பக்கத்துக் கிளையில் இது. கோபமாகத் தாயை அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தால், தன் "பிகுவு' கெட்டுவிடும் என்ற நினைப்பு - வேறு பக்கமே பார்த்தபடி, உட்கார்ந்திருக்கிறது. தாய்,"எத்தனை பிகுவு என் கண்ணுக்கு!'' என்று எண்ணியபடி

பரிவுடன் பார்க்கிறது.

குருவி, மரங்கொத்தி அல்ல! பழமாகக் கிடைத்தால் கொத்தித் தின்னும் - துண்டு துணுக்கு என்றால், விருப்பம் கொள்ளும் - சிரமமின்றித் தின்னலாம் அல்லவா - அதனால்.

மரங்கொத்தியின் மூக்கு, ஒரு துளைக்கருவி அல்லவா - அந்தப் பெருமை அதற்கு. பறந்து செல்லும், துளைக்கும் - வேறு இடம் பறக்கும். இந்தக் குருவிக்கு அதைக் கண்டதால், ஒரே வியப்பு!! எத்தனை பெரிய மரம் - துளைத்தேவிட்டதே! மரம், அசைந்தது ஆடிற்று; இலைகள்தான் உதிர்ந்தனவேயன்றி, மரங்கொத்தி துளைப்பதைத் தடுத்திட முடியவில்லையே, அதனால், செ! இவ்வளவுதானா, இந்த மரம்! இதற்கு இத்தனை பெரிதாக ஓங்கி வளருவானேன்! ஒரு சிறு பறவையின் மூக்குக்குத் தப்ப

முடியவில்லை - துளைத்தேவிட்டது! உருவம்தான் மிகப் பெரியது; உள்ள வலிவு மிகக் குறைவு!! - என்று நினைத்தது குருவி.

முதலிலே, இந்த நினைப்பு ஒருவிதமான மகிழ்ச்சிகூடக் கொடுத்தது குருவிக்கு. மரத்தைத் துளைத்தது ஒரு பறவை - நம் இனம்!! - என்பதால் ஒரு மகிழ்ச்சி.

அதனால், குருவி, மரங்களை அலட்சியமாகக்கூடப் பார்க்கலாயிற்று. மரம் என்றால் என்ன? நான் பயப்பட வேண்டுமா!! என் இனத்தினால் துளைக்கப்படுகிறது - இந்த மரம்!! இதற்கு, நான் ஏன் பெருமை தரவேண்டும். என்னைக் கண்டல்லவா, மரம் பயப்படவேண்டும், நடுங்கவேண்டும்! ஓ! ஓ! மரம் ஆடுவது, நடுக்கத்தால்தான் போலும். ஆமாம், பயத்தால் நடுக்கம் ஏற்படுகிறது மரத்துக்கு. இதை நாம் இதுநாள்வரையில் தெரிந்துகொள்ளாமலிருந்துவிட்டோமே!!

- என்றெல்லாம் எண்ணிக்கொண்டது. குருவிதானே! பாவம்!!

இந்த நினைப்பு எழுந்தது முதலில் தாய்க்குருவிக்குப் புரியவில்லை - தெரியவில்லை. குருவி, இரையைத் தின்னும் போது வேகமாகக் கொத்தக் கண்டபோதுகூட, தாய்க்குருவிக்குச் சந்தேகம் வரவில்லை - சரியான முறையிலே, தீனியைக் கொத்தித் தின்னக்கூடத் தெரியவில்லையே, இத்தனை நாளாகியும் - இது எப்படித்தான் பிழைக்கப்போகிறதோ என்று எண்ணித் தாய்க்குருவி கவலைப்பட்டது.

குருவிக்கு மரங்கொத்திக்கு இருப்பதுபோன்ற "துளைக் கருவி' தனக்கு இல்லை என்ற நினைப்புக்கூட எழவில்லை. நாமும் பறவைதான் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருந்தது. பறவை மரத்தைத் துளைக்கும் - நாமும் பறவை! - இவ்வளவுதான்

அதன் எண்ணம். பாவம், குருவிதானே! வண்டி வண்டியாக ஏடுகளை வைத்திருக்கும் மேதைகளே, இந்த விஷயத்தில் தவறாக எண்ணி நடந்துகொள்ளும்போது, குருவிக்குக் குறை அறிவு இருந்ததில் என்ன ஆச்சரியம்.

"மரங்கொத்தி' வேறோர் மரத்திலே, துளைபோட்டுக் கொண்டிருந்தது. அதற்குக் கர்வம்! பார்! என் திறமையை! இத்தனை பெரிய மரத்தை நான் துளைத்துவிடுகிறேன்."தடியன்' போல ஓங்கி வளர்ந்திருக்கிறதே தவிர, மரத்தினால் ஏதாகிலும் செய்ய முடிகிறதா, பார்! - என்று கேட்பதுபோல, மரங்கொத்தி துளைப்பதும், சுற்றுமுற்றும் பார்த்து, கழுத்தைப் புடைப்பதும், வெற்றியைத் தெரிவிக்கும் போக்கில், கிறீச்சிடுவதும், மீண்டும், துளைப்பதுமாக இருந்தது. குருவிக்குக் கொள்ளை சந்தோஷம், உற்றுப்பார்த்தது பலமுறை! நாமும் பறவை!

நமக்கும் மூக்கு இருக்கத்தான் செய்கிறது!! - என்ற நினைப்பு - உடனே, குருவியும் மரத்தைக் கொத்தத் தொடங்கிற்று; துளைக்க முடியவில்லை. குருவிக்கு வெட்கம்! அங்கே பார்த்தால் மரங்கொத்தி துளைக்கிறது! ரோஷம் குருவிக்கு! பலமாகக் கொத்திற்று - மூக்குகூடச் சிறிது வலித்தது - மரத்தின் பட்டைகூடப் பெயர்ந்திடவில்லை, பழக்கம் இல்லாததால். இப்படி இன்னும் ஒரு நாலு கொத்துப் பலமாகக் கொத்தினால், மரத்தைத் துளைத்துவிட முடியும் - ஏன் முடியாது? அதோ, நம் இனம் அங்கு துளைக்கிறதே! நாமும் பறவைதானே - என்று எண்ணிற்று - வேகமாகப் பலமாகக் கொத்தலாயிற்று. துளைக்க முடிய வில்லை. அது மட்டுமல்ல. கொத்தியதால், மூக்கு வலித்தது, மேற்கொண்டு, கொத்த முடியவுமில்லை. அங்கோ, மரங்கொத்தி

வேறோர் கிளை சென்று! துளைக்கிறது. குருவிக்குக் கோபம்!!

கோபம் கொண்ட குருவியைக் கேலி செய்வதுபோல மரங்கொத்தி சுற்றிச் சுற்றி வட்டமிடுகிறது. மரத்தைத் துளைத்து விட்டேன்! துளைத்துவிட்□ன்! நானும் பறவை! நீயும் அதே இனம்! என்னால் முடிந்தது! உன்னால் முடியவில்லை!! - என்று கூவுவதுபோலத் தோன்றிற்று குருவிக்கு.

இந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு, நான் பறவை இனம் என்று சொல்லிக்கொள்ளவேண்டுமா! கூடவே கூடாது! பறவை இனத்திலேயே, நானோர் பாவியோ! பரிதாபத்துக்குரிய பாவியாகவா இருப்பது, கூடாது!! - என்று எண்ணிற்று. கோபம் தலைக்கேறிவிட்டது. துளைத்தேவிடுவது என்று ஆத்திரத்துடன், வேலையை, வேகமாக, கோபத்துடன்

தொடங்கிற்று. ஏற்கெனவே, அலுப்பு - வலி - எனவே, மூக்கு உடைந்தது - வதாள மாட்டாமல், குருவி, பொந்துக்குள் சென்றது. தாய்க்குருவி, "உனக்கேன் வீண் வேலை! மரங்கொத்தியைப் பார்த்து, உன் மனதிலே வீணான எண்ணத்தை வளர்த்துக்கொண்டது தவறு அல்லவோ! அதற்கு உள்ள"மூக்கு' அப்படி - துளைக்கும் கருவியாக இருக்கிறது. உனக்கு ஏது, அந்தக் கருவி! உனக்கு எதற்கு அந்த வேலை?'' - என்று கேட்பதுபோலப் பார்த்து, சேர்த்து வைத்திருந்த பழத் துண்டைக் குருவியின் வாயில் கொடுத்துத் தின்னச் செய்தது. குருவிக்குக் கோபம் நீங்கிற்று - விவரமும் புரிந்தது.

எதற்காக அண்ணா! குருவிபற்றிய கதை என்று கேட்கிறாயா, தம்பி! வயதாகிறதல்லவா, அதனால் கதை சொல்லும் போக்கு இருக்கிறது எனக்கு. நானென்ன, கனடா

நாட்டு அரசியலைப்பற்றி எழுதப்பட்ட 22-ரூபாய் விலையுள்ள புத்தகத்தில், 777ஆம் பக்கத்தில், ஒன்பதிலிருந்து இருபத்து ஏழாவது வரையில் கோடிட்டு, அதைப் படித்துக்காட்டி, "புத்தி புகட்டும்' ஆசிரியன் போன்றானாகத் தலைவன் இருக்கவேண்டும்; மக்களோ மாணாக்கர்களாக இருக்கவேண்டும்,"பிரம்படி'க்கும் தயாராக! - என்று கூறுபவனா!' - இல்லையே! உன் அண்ணன்! அவ்வளவுதான்!

ஆனால், தம்பி! கதையைப் படிக்கப் படிக்கக் கருத்துக்கள் ஊற்றெடுத்தபடி இருக்கும்.

ஒவ்வொரு முறை படிக்கும்போதும், புதுப்புதுக் கருத்து கிடைக்கும். பல பிரச்சினைகளை விளங்க வைக்கும்.

இந்தக் கதையிலே வருகிறதே "குருவி'

- இதன் போக்கு, ஒரு மரங்கொத்தி செய்வதைத் தானும் செய்யவேண்டும். அப்போதுதான் தனக்குப் பெருமை என்று எண்ணிக்கொண்டது. பாவம் குருவிதானே!

ஆனால் குருவிகளை மட்டுமல்ல, கொல்லும் புலிகளைக் கூடக் கூண்டிலே அடைத்திடவல்ல வீரமும், குவலயத்துக்கே புத்திபுகட்டும் பேரறிவும் கொண்டிருப்பதாக எண்ணம் கொள்ளும் மனிதர்கள்கூட அல்லவா, குருவி வீணான வேலையில், காரணமின்றி ஈடுபட்டதுபோல் ஈடுபடுகிறார்கள்.

வீணான வேலையில் ஈடுபடுவது கூடாது! துளைக்கும் வேலை செய்யவென்றே, மரங்கொத்தி இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு, நாமும் அதுபோல் துளைக்கவேண்டும் என்று எண்ணி மூக்கைக் கெடுத்துக்கொண்ட குருவிபோல, மனிதர்

களிலும் சிலர் உளர். நாம் அதுபோல் ஆகக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கதை!!

குருவி யாரைக் குறிப்பிட? மரங்கொத்தி, எவரை மனதிலே வைத்துக்கொண்டு? தாய்க்குருவி, யார்? - என்றெல்லாம் கேட்காதே, தம்பி! அப்படி எவரையும் மனதிலே வைத்துக் கொண்டு, கட்டப்பட்ட கதை அல்ல இது. தும்பிகள் பறந்திடும் தோட்டத்திலே, மலர்களைப் பழித்திடும் வண்ணம்கொண்ட வண்டுகளும் பூச்சிகளும் இருந்திடக் கண்டேன்! சுற்றிச் சுற்றி வட்டமிடுகின்றன, சத்தமிட்டபடி! ஒலிக்குக் காரணம் யாதோ? பொருள் என்னவோ? என்று எண்ணியபடி, காட்சியைக் களிப்புடன் கண்ட நிலையில், மரங்கொத்தி கண்டேன்! மரத்தைத் துளைத்தபடி இருந்திடக் கண்டேன்! பிறகு குருவியையும் கண்டேன்! கதையாகக்

கூறினேனே, அது அவ்வளவும் கண்டேன்.

மனித இனத்திலும், உள்ளதைக் குலைக்க, நல்லதைக் கெடுக்க, மொத்தத்தைத் துளைத்திடும் செயலிலேயே ஈடுபட்டபடி சிலர் இருப்பது என் நினைவிற்கு வந்தது. மரப்பொந்தில், தாயின் அன்புக் கதகதப்பில் இருந்திடவேண்டிய குஞ்சுக் குருவியும், துளைக்கும் வேலையில் ஈடுபடுவதுபோல சிலர் வீண் வேலையில், உள்ளதைக் கெடுப்பதில் ஈடுபடுவதை எண்ணிக் கொண்டேன். குருவி, துளைபோட முடியாமல் பொந்துக்குள் சென்று விட்டதைக் கண்டேன். இந்தக் கதை வடிவம் கொண்டது.

•

இன்னும் ஓர் கதை தம்பி! இதுவும் கருத்துக்காகத்தான், காலம் போக்க அல்ல! இதிலும் குருவி! ஆனால், குருவியுடன் குமரி,

குமரன், குழவி!!

தோட்டத்தில் முளைவிட்ட "அவரை' கண்டு, அவன், இன்பம் சுமந்து, குங்குமநிறக் குழவி பெற்ற தாய்போல் குதூகலித்தான்.

கொடி வளரும்; பூ பூக்கும்; கொத்துக் கொத்தாய்க்
காய்க்கும், காண்போம் என்று அவன்
எண்ணி அகமகிழ்ந்தான்; என் மகவும்
ஈராண்டு ஆனதுமே, கைவீசி நடை
நடந்து மெய்சிலிர்க்க வைத்திடுவான்
என்றே தாயும், மை பூசி
பொட்டிட்டு, மதலை தன்னை மார்போடு
அனைத்துச் செல்லும் பான்மை

போலே.

இவனுக்குத்தானென்ன இத்தனை களிப்பு! ஏதோ எங்கும் இல்லாத செல்வத்தை இவன் பெற்றவன்போலே, நித்த நித்தம், பார்த்துப் பார்த்து நின்று பல பேசி மகிழ்கின்றான் - பைத்தியமேதானோ இவனுக்கு என்று அண்டைப் பக்கம் உள்ளோர் பேசினர் கேலி மொழி. அதுவும் கேட்டு, மூக்கோ சப்பை இதற்கு, வாயும் பொக்கை, வண்ணம் சிவப்பல்ல, வரும் கருப்பை அறிவிக்கும் வகைதான் ஈது என்று தன் குழந்தையினை எதிர்வீட்டுப் பாட்டி ஏளனம் செய்கையிலே, கண் கெட்டதாலே பாட்டி! என் கரம் இருப்பது கட்டித் தங்கம் என்பது உனக்குத் தெரியவில்லை; உன்னைப்போல் இருக்குமென எண்ணிக் கொண்டாய்; என் செல்வம் “ராஜாக்குட்டி’. எந்தன் கலி தீர்க்க

வந்தான் என்றா பேசுகின்றாள் எழில் மாது? இல்லை! இல்லை! தன் மகவை உச்சிமோந்து"இச்'சளித்து இருக்கின்றாள்; காண்கின்றோம். அஃதேபோலத் தன் தோட்டக் கொடியைக் கண்டு எவர் என்ன கூறினாலும், இவர்க்கென்ன தெரியும், போ! போ! என்றெண்ணித் தோட்டம் சென்று, இலைகளை எண்ணிப் பார்ப்பான். இன்னும் எத்தனை நாட்கள் போனபின், பூ காண்போம் என்று கணக்கெடுத்துக் களித்திடுவான், குதித்திடுவான்.

கொடி படர்ந்தது; மலர் பூத்தது; பிஞ்சுகள் இங்கும் அங்கும்!!

பேசாத கொடி ஏதேதோ சேதிகள் சொல்வதுபோன்று அருகே நின்று, அந்த அசைவிலே அகமகிழ்வான்.

கொத்துக் கொத்தாகக் காய்க்கும்; மெத்த

உருசியா யிருக்கும்; பொரித்தாலும் கூட்டு வைத்துத் தின்றாலும் வாய் மணக்கும்; குழம்புக்கும் ஆகும் நன்றாய் என்றெல்லாம் எண்ணி நின்றான்.

பக்கத்து வீட்டில்தான் அந்தப் பாவை பெற்றாள் பைங்கிளி, பசும்பொன், குலக்கொடி என்றெல்லாம் கொஞ்சிடும் குழவி ஒன்று, ஆண்டு நாலைந்துக்கு முன்னம்.

அந்த அழகுச் சிலைக்கு உயிர் உண்டு. ஆதலாலே, தாய் காண ஓடி ஆடி, தளிர்க்கரம் தன்னால் கன்னத்தைக் கிள்ளும், சுண்ணத்தைக் குழப்பி அழுகுரலெழுப்பும். அது, என்னத்தைச் செய்தாலும் அவளோ, என் ராஜா! வாடா! வேண்டாம்! இதோ பார், உனக்கு நான், ஆனையொடு குதிரைப்பொம்மை அழகழகாய் வாங்கி வந்தேன்! ஆடி மகிழ வாடா, நான் வாழவந்த கோவே! என்றெல்லாம் கொஞ்சுகின்றாள். அவளுக்கு, "அவரை'

அல்ல;"அஷ்ட ஐஸ்வரியமும்' அவனே!!

பக்கத்துப் பக்கம் வீடு! பாங்கான நேசம் உண்டு! அண்ணன் அவளுக்கு அவனும் - உள்ளத்தால் அவனுக்கு அந்த "அவரை' மீதுள்ள அன்பு கண்டு"களுக்'கெனச் சிரிப்பாள் குறும்பாய்.

"ராஜா' வாளாக இருத்தல் உண்டோ? வாளெடுத்துமே சென்று வழி நிற்கும் பகையை வென்று, புதிய நாடு பெற்று, புதுப்பெருமை தேடானோ! இவனும் புறப்பட்டான், தோட்டப் பக்கம், குடைக்கம்பு தூக்கிக்கொண்டு.

சிட்டுக்குருவி கண்டான் - சினமிகக் கொண்டான் - நானிங்கு இருக்கையிலே நடமாட்டமா உனக்கு? என்று கேட்டான். கைகளாட்டி; குருவியும் கீச்சுக் கீச்சென்று கெக்கசெய்து விட்டு, ஒரு செடி தன்னை விட்டு வேறொன்றுக்குத் தாவ, என்னிடம்

சண்டைபோடப் பயந்துமே குருவி, பார்! பார்! ஓடுது, கூடுதேடி என்று கூறு எண்ணிச், சுற்றும் முற்றும் பார்த்தான்; யாருமில்லை. இதற்குள் குருவி, பக்கத்துத் தோட்டம் உள்ள அவரைக் கொடியினில் ஊஞ்சலாடி மகிழ்ந்தது கண்டான்; சென்று கம்பினை வீசினான்; குருவி பறந்தது; கொடி அறுந்தது!

அறுந்த கொடியைச் செல்வன் பார்க்கவில்லை; அவன் பறவையின் சிறகு அறுக்கப் பாய்கின்றான் கோபத்தோடே குருவியும், விளையாட்டுச் சிறுவன் காண, கொடி முழுதும் மாறி மாறி, குந்துவதும் பறப்பதுமாய்க் கோலம் காட்டிற்று. கோல் கரத்தில் இருக்கும்போது, கொற்றவனுக்கு என்ன குறை! வீசினான் நாலா பக்கம்! ஒவ்வோர் வீச்சும், "விர்'ரென்று பறந்திட்ட குருவிமீது விழவில்லை, கொடிமீதேதான் - ஒவ்வொன்றாய் அறுந்து வீழ்ந்தது; பூவும்

பிஞ்சும் வீழ்ந்தன தரைமீதெல்லாம்.

என்னவோ வேலையாக வந்தவன், கண்டான் இதனை. சொல்லவா வேண்டும் அவனுக்கு. "சுரீல்' என்று வந்தது கோபம். என்ன காரியம் செய்திட்டான், இந்தப் போக்கிரிச் சிறுவன்! செல்லமாய் வளர்த்து வந்தேன், கொடிதனைப் பல நாளாக; எத்தனை அழகாய்ப் பிஞ்சுவிட்டது எனை மகிழ்விக்க அத்தனையையும் இந்த அறிவிலி அழித்திட்டானே! ஐயய்யோ, கொடிகள் எல்லாம் துண்டு துண்டாகக் கீழே அறுந்தன்றோ விழச்செய்தான். கோல் ஒன்று வேண்டுமோடா, குரங்கே! வாலும் எங்கே? யார் உன்னை வரச்சொன்னார்கள், இழுத்துப் போய் அறைகின்றேன் பார்! என்றவன் கூறி நின்றான்; கோவென அழுதவண்ணம் குழந்தை வீடு சென்றான்.

கொடிகளை மீண்டும் ஏதோ ஒருவகையாக

அமைத்து, கொண்ட கோபம் மாறிச் சோகமாய்ப் போனதாலே, இல்லத்துக்குள்ளே வந்தான் - இருமியபடியே தாயும், என்னடா கூச்சல் என்றாள். குழந்தையாம், குழந்தை! அது கொடிகளை அறுத்துப்போட்டு அழித்தது என்றான். அடித்தாயோ? என்று கேட்டாள்; இல்லை. அடிக்கா முன்பே, அழுதது என்றான்; உற்றுக் கேட்டான், ஓயவில்லை அழுகை; தெரிந்தது.

இடுப்பினில் குழந்தையோடு வந்தனள் தாயும் அங்கு.

“என்னண்ணா! இப்படியா என் குழந்தையை இரக்கமே யின்றி அடித்துத் துன்புறுத்துவது?”அவரை’தான் ஆணிப் பொன்னால் ஆனதோ? போனால் என்ன? இதோ உமக்கு, “அவரை’ அரைத் தூக்குக்கு மேலிருக்கும், கொண்டு மகிழ்ச்சி கொள்ளும். குழந்தையைக் கொடுமை

செய்யவேண்டாம்'' என்று கூறி, மடியினில் கொண்டு வந்த,"அவரை'ப் பிஞ்சை அவன் எதிர்கொட்டி நின்றாள்.

வெட்கம்தான் அவனுக்கு - அதனை ஓரக்கண் பார்வை காட்டிற்று.

கொடி எலாம் அறுத்துவிட்டான். . . . . என்று கூறினான், கோபமின்றி.

"எப்படி விக்கிவிக்கி அழுகின்றான், பார் அண்ணா! இவன் எப்போதும் இதுபோல, அழுததைக் கண்டதில்லை. என் மனம் என்ன பாடுபடும் சொல்லு'' என்று கேட்டு, அவளும் கண்ணில் நீரை அழைத்திடுவாள்போல நின்றாள் - அன்றாடம் அழுதழுது குழந்தை அமர்க்களம் செய்வதுண்டு - எந்நாளும் இதுபோல் அழுததே இல்லை என்று தாய் கூறுகின்றாள் - பொய்யா? - இல்லை! அன்பு பெய்திட்ட அபத்தப் பேச்சு!! அந்தப் பொல்லாத

குழந்தையும் இவனையே பார்த்துப் பார்த்து அழுதது விக்கி விக்கி.

”மாமன் அடித்தானென்று ரோஷமடி மகனுக்கு. அவனே மார்பினில் சாத்திக்கொண்டு மன்னிப்புக் கேட்டாலன்றி ஓயவே போவதில்லை, உனக்கென்ன தெரியும்!’’ - என்று தொட்டில் தொல்காப்பியமெல்லாம் தொடர் தொடராகக் கற்ற மூதாட்டி கூறுகின்றாள்.

இங்கு வா! என்றழைத்து, குழந்தையைக் கரத்தில் ஏந்தி, ”அவரை’தானே உனக்கு வேண்டும், அள்ளிக்கொள் அவ்வளவும் என்று, கீழே கிடந்ததைக் கொடுத்தான் எடுத்து. குழந்தை வீசிற்று மீண்டும் கீழே.

அழுகை ஓயவுமில்லை; இவன் செய்வித்தை எதுவுமே பலிக்கவில்லை; பார் உனக்குப் பழம் தருவேன், பசுவினைக்

காட்டுவேன் வா என்று கூறித் தோட்டம் ஏகினான் குழந்தையோடு.

”என்னடி காசு ரொம்பக் கொட்டியோ கிடக்குது உன் வீட்டில் - ஏனடி இந்த ரோஷம் - எடுத்துச்செல் இதனை’’ என்று பாட்டி பரிவுடன் சொன்னாள். பாவையோ, அதைக் கேட்டல்ல, தோட்டத்தில் சிரிப்புச் சத்தம் எழக் கேட்டு மகிழ்கின்றாள்.

கிளி கொஞ்சும் காட்சி காண, தாய் சென்றாள் தோட்டப் பக்கம். அங்கு, கொடியினைப் பற்றி இழுத்து, குழந்தையின் கரம் கொடுத்து, அதை அறுத்ததுமே குழந்தை, கைகொட்டிச் சிரித்திடவும், அதன் கன்னத்துக்குழியை, அவரைப் பூவினால் நீவி, அவனும், அகமகிழ்ந்திடவே கண்டாள்.

அரைநொடி நின்றாள் கண்டு; “அண்ணா!’’ என்றழைத்த வண்ணம், அவனருகே

சென்று,"போக்கிரி அண்ணா, இவன்; இவன் போக்குக்கு ஏற்றவண்ணம் ஆடி நீர், கொடியை எல்லாம் அறுத்திடலாமோ?'' என்று கூறிக் குழந்தையை வாங்கிக்கொண்டு, முத்தமிட்டாள்; அவனோ, வையகம் தன்னை வாழ்விக்கும், அன்பின் அருமை அறிந்து அகமகிழ்ந்து நின்றான்.

அங்கெங்கோ ஓர் இல்லத்தில், அவனுக்கென்றே உள்ள மங்கை தெரிகின்றாள் குழந்தையோடு செடிகளின் மறைவில் நன்றாய்!!

•

குழந்தைக்குக் கொடியின் - அருமை தெரிவதில்லை; விளையாட்டாகக் கொடியினை அறுத்துவிடுகிறது. பாசம் காரணமாகத், தாயோ, கோபிக்க முடிவதில்லை. கொடியினைப் பாங்காக

வளர்த்தவனோ, அது பாழ்படுத்தப்படுவது கண்டு பதறத்தான் செய்கிறான்; எனினும், அன்பின் அருமை அவனையும் தன் வயப்படுத்தவே, அவனும் கொடி அறுத்தேனும் குழந்தை குதூகலம் அடையட்டும் காண்போம்; கொடியினில் கொத்துக் கொத்தாக "அவரை' இருந்திடக் காணும்போது ஏற்படும் களிப்பை மிஞ்சும் களிப்பன்றோ காண்கின்றோம், இந்தக் குழந்தை கன்னத்தில் குழியும் விழ,"களுக்'கெனச் சிரிக்கும்போது என்று எண்ணுகிறான்.

கள்ளம் கபடமற்ற நிலை குழந்தைக்கு. எனவே கொடியினை அறுத்திட்டாலும், மூண்டிடும் கோபம் தன்னை அடக்கிக் கொள்ள முடிகிறது. ஆனால் வேண்டுமென்றே ஒருவன் கொடியினை அறுத்தால், மனம் எத்தனை வேதனைப்படும்!!

விவரமறியாமல், விளைவு

தெரியாமல், சிலர் நல்ல காரியத்தைக் கெடுத்துவிடுகிறார்கள். அவர்தம் குறையறிவு கண்டு இரங்குகிறோம். வேறு சிலரோ, வேண்டுமென்றே, நாசம் உண்டாக்கும் நோக்குடனேயே, கொடியினை அறுத்திடுவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். கொடிகளை அழித்து விட்டேன். துண்டு துண்டாக்கி விட்டேன் என்று அவர்கள் கைகொட்டிச் சிரிப்பர்! அவர் செயலுக்குப் பரிவு காட்டிப் பாராட்டவும் சிலர் முன் வருவர். ஆனால், கொடி படரக் கண்டு மகிழ்ந்தவன் மனம் என்ன பாடுபடும்! அவனல்லவா, படர்ந்துள்ள கொடியின் அருமை அறிந்தவன். அவன் மனமன்றோ அனலிடைப் புழுவெனத் துடிக்கும், அழிவு வேலை செய்திடுவோனைக் காணின்.

ஆக்கத் தெரியாவிட்டாலும், அழிக்காமலாவது இருக்க வேண்டும்

- என்பதைப் பாடமாக்கவே, இதனைச் சொன்னேன்.

விவரமறியாதாரின் செயலால்கூட, அழிவு நேரிடுவது உண்டு - குழந்தை கொடி அறுத்ததுபோல!

அது கண்டு, கோபம் எழும்; ஆயினும் அடங்கும், கெடுமதி யுடையோர் கொடி அறுத்திடுவதுபோன்ற தீய செயலில் ஈடுபட்டால், உலகம் மன்னிக்காது!!

விவரமறியாதார், கொடி அறுத்திடுவதுபோன்ற அழிவு வேலையில் எவரேனும் ஈடுபட்டால், கதையில் வரும் குழந்தையைக் கொடிக்கு உரிமையாளன், முதலில் கோபித்துக் கொண்டான் எனினும், பிறகு, பரிவு காட்டினான் அன்றோ, மன்னித்து; அதுபோன்றே; அருமை அறியாமல், விவரம் தெரியாதார் கேடுடைச் செயலே புரியினும்,

அது கண்டு, நமக்குக் கோபமே எழினும், அதனை அடக்கிக்கொள்வதும், நீக்கிக் கொள்வதுமே முறை என்பதை விளக்கத்தான் இந்தக் கதை!

எது கொடி? எது குழந்தை? என்றெல்லாம் கண்டுபிடிக்கும் காரியத்திலே வீணாக ஈடுபட வேண்டாம், தம்பி! பொதுவாகச் சொல்கிறேன், எந்தத் தனிப்பட்டவர்களையோ எண்ணிக் கொண்டு அல்ல.

சிலருக்குத் தாம் செய்யும் காரியம், இப்படிப்பட்டது என்ற உணர்வு ஏற்பட்டு, வெட்கம் பிறந்தால் நல்லதுதான். ஆனால், ஆசை வெட்கமறியாது என்று அன்றே சொல்லியிருக்கிறார்களே!!

•

நாம் வாழ்ந்த கதை; இன்று வீழ்ந்துகிடக்கும் வேதனை; இதனை

மாற்ற நாளை நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கை; இவைபற்றி எல்லாம் கூறிடுவாய், கேட்டிடலாம், கருத்துப் பெற்றிடலாமென்று நான் நினைத்தால், நீ என்னண்ணா! குருவிக் கதையும், கொடி அறுத்த குழவி கதையும் சொல்கிறாயே; நமை அழிக்க எண்ணி, ஆளும் கட்சியிலுள்ளோர். இலட்ச இலட்சமாக "நிதி' திரட்டிக் குவித்தபடி உள்ளனர்; நீயும் கொண்டு வருகிறாய் 101 காசு, 501 காசு, 2001 காசு என்று! - என்றுதானே, தம்பி! கோபம். கோபம் கொள்ளாதே!! இன்னொரு கதை கூறுகிறேன், கேள்.

வயலிலே படர்ந்திருந்தது பூசுணைக்கொடி! பெரிய, பளபளப்பான, பூக்கள், கொடியினில் பொன் நிறம்! கண்கவர் வனப்பு!!

வயலின் ஓரத்தில், வரப்பைத் தன்னிடமாக்கிக்கொண்டு, வளர்ந்திருந்தது

ஒரு மகிழ மரம். சின்னஞ்சிறு பூக்கள். அதிலே! உற்றுப் பார்த்தாலொழியக் கண்ணுக்குத் தெரியாது அவ்வளவு சிறுசு!!

கீழே "பூசுணை'ப் பூ! மகிழம் பூவைப் பார்த்து கேசெய்வதுபோல், மலர்ந்து இருக்கிறது. காற்றடிக்கிறது! பூசுணைப் பூவின் இதழ்கள் அசைகின்றன! வா! வா! சின்னஞ் சிறு மகிழம்பூவே! என்னைப் பார்! என் அழகைப் பார்! நீயும் இருக்கிறாயே பூவென்ற பேருடனே பூனைக்கண் அளவுக்கு - என்று கேலி செய்வதுபோல, அசைந்து ஆடுகின்றது.

மகிழம் பூக்கள், காற்றடித்ததும் உதிருகின்றன கீழே!

கொடியிலிருந்து பூசுணைப்பூ அறுந்துபோகவில்லை காற்றால். மகிழம் பூக்களோ, குவியல் குவியலாக உதிர்கின்றன

மரத்தடியில்.

இவ்வளவுதான் உன் வாழ்வு! இவ்வளவுதான் உன் வலிவு! ஒரு காற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லையே என்று கேபேசுகிற து பூசுணைப்பூ. இது காலையில் தோன்றிய காட்சி! கொடியிலே கொலுவிருக்கும் பூசுணைப்பூ!

குப்பையுடன் குப்பையாகக் கிடக்கும் மகிழம்பூ!

மாலை! வயலை ஒட்டியுள்ள வீட்டில் வாழும் "வண்ணக்கிளி' வீதியிலே இருந்த, சாணி உருண்டையை வழித்தெடுத்து, வறட்டியாகத் தட்டுகிறாள், சுவரினிலே!! தம்பி! சாணியுடன் என்ன என்கிறாய்? காலையிலே களிநடமாயிற்றே, அதே பூசுணைப் பூதான்! ஆமாம். மார்கழி மாதம், வீட்டெதிரே. சாணி உருண்டைமீது பூசுணைப் பூவை அழுத்தி

வைப்பர், கண்டதுண்டு அல்லவா?

கர்வம் கொண்ட நிலையில், என்னைப் பார்! என் அழகைப் பார்! காற்றும் பிய்த்திட முடியாத என் வலிவைப் பார்! பளபளப்பைப் பார்! அளவு பார்! நீயும் இருக்கிறாயே பூனைக் கண் அளவு என்று கேலி பேசும் நிலையில் இருந்ததல்லவா பூசுணைப்பூ! அதற்கு நேரிட்ட கதியைக் கண்டனையோ? அதைப் பறித்தெடுத்த பாவை, சூட்டிக்கொண்டனளோ, கார் குழலில்! இல்லை! கோயிலுக்கு உகந்ததெனக் கருதி, அங்கு அனுப்பினானோ? அதுவும் இல்லை! வேறு எங்கு சென்றது பூசுணைப்பூ? சாணி உருண்டைமீது!

அளவு பெரிது! பளபளப்பு மிகுதி! பொன் நிறம்! எல்லாம் எதற்குப் பயன்பட்டது? சாணி உருண்டைக்குச் "சால்வை'யாக!!! இந்த இடம் போய்ச்சேரத்தான், இத்தனை "வாயாடி'த்தனமும், பயன்பட்டது. காலை

முதல் சாணி உருண்டைமீது இருந்தது; மாலையோ, சுவரிலே, தட்டப்பட்டுக் காய்கிறது ”வறட்டியாக’.

பூசுணைப் பூவைப் பறித்தெடுத்து, சாணி உருண்டைக்குப் போர்வையாக்கி, பிறகு, வறட்டி தட்டிடும், பெண்ணின் தலையிலே, என்ன தெரியுமா? மகிழம்பூ மாலை!! ஆமாம், தம்பி! கீழே உதிர்ந்துகிடந்த மகிழம் பூவேதான்! அளவு, சிறியது! பளபளப்பும் இல்லை! உதிர்ந்துதான் கிடந்தது, மரத்தடியில், மண்பரப்பில்! பூசுணையால், கேலிப் பொருளாகக் கருதப்பட்ட பூனைக்கண் அளவுள்ள, மகிழம்பூ! அதற்கு எது இடம்? சாணி உருண்டை அல்ல! மாதின் கூந்தல்!!

பூசுணை அளவு பெரிது, பளபளப்பு மிகுதி - ஆனால் மணம் ஏது?

மணமற்றது, சாணி உருண்டைக்குத்தான்

ஏற்றதாயிற்று!

மகிழம்பூவோ மணம் உள்ளது; அளவு கிடக்கட்டும்; வண்ணம் கிடக்கட்டும்; எனவேதான், அது மாதின் கூந்தலிடம் சென்று அணியாயிற்று!!

அதுபோலத்தான், தம்பி, காங்கிரசிடம் சேரும் பணம். பெரிய அளவுள்ள பூசுணைப்பூ! பளபளப்பு உண்டு, மணம் இல்லை! அளவு பெரியது, ஆயின் அணிவார் இல்லை. சாணிக் கென்று பூசுணைப்பூவைப் பயன்படுத்துவதுபோல், காங்கிரசிடம் குவியும் நிதியும், அசங்கியமான காரியத்துக்குத்தான் பயன்படப் போகிறது! நல்ல காரியத்துக்கு அல்ல. மணம் தர அல்ல.

நம்மிடம் வந்திடும் 101, 1001, 2001 இவைகள், உதிர்ந்து கிடக்கும் மகிழம்பூக்கள், சாணிக்கு அல்ல; மணம் அளிக்க!

இப்படித்தானா அண்ணா, மனதுக்குச் சமாதானம் தேடிக்கொள்வது!! - என்று கேட்பாய்; தெரியும் எனக்கு.

காங்கிரஸ் பெருந்தலைவர்கள், கேட்ட உடனே, ஆயிரம் பத்தாயிரம் என்று அள்ளித் தருகிறார்கள் சுளை சுளையாக!!

பெறுபவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கு! தருபவர்களுக்கு அத்துணை அன்பு! தெரியவில்லையா? - என்று கேட்கிறாய், சரி! கோடிவீட்டுக் கோபாலப் பிள்ளையின் கருப்பு ஆடு, கதை தெரியுமா உனக்கு? தெரிந்திருந்தால், காங்கிரசுக்கு ஆயிரம், பத்தாயிரம் என்று பணம் குவிவதுபற்றி வியந்து பாராட்ட மாட்டாய். கேளேன் அந்தக் கதையையும்.

மாரியம்மன் திருவிழா தடபுடலாக! ஊர்வலம் முடிந்து, அம்மனை உள்ளே

கொண்டுபோகும், நேரம். “ஓஹோ!’’ என்று ஓங்காரக் கூச்சலிட்டான், அருணாசலம்! வந்துவிட்டாள் அம்மன்!! - என்று கூறி வணங்கி நின்றனர் பக்தர்கள். ஆவேசம் வந்துவிட்டது அருணாசலத்தின்மீது! அதுவரை ஊரார் பார்த்ததில்லை அவ்வளவு”உக்கிரமான’ ஆவேசத்தை.

“அம்மா! தாயே! அங்காள பரமேஸ்வரி! அடியாரை இரட்சிக்க வேண்டுமம்மா!’’ - ”சிலம்புப் பாட்டு’ பாடுகிறான் பூஜாரி! ஆவேசமாடிடும் அருணாசலமோ குதிக்கிறான், உடலை நெளிக்கிறான், கண்களை உருட்டுகிறான், புருவத்தை நெரிக்கிறான், பற்களை நறநறவெனக் கடிக்கிறான். சிறுவர்கள் அலறி அடித்துக்கொண்டு ஓடுகிறார்கள். பெண்களுக்குப் பெரும் பீதி. முதியவர்கள் முணுமுணுக்கிறார்கள்.

”எள்ளளவு கோபமும் எங்கள்மேல்,

வேண்டா மம்மா! என்ன நீ, கேட்டிட்டாலும் இப்போதே தருவோம் அம்மா; எல்லையைக் காத்து நிற்கும், எங்கள் குலதேவி அல்லோ!''

பாடலை பூஜாரி, உருக்கமாகப் பாடிவிட்டு, அம்மனைக் கேட்கிறான், "என்ன குறை, கூறம்மா?' என்று."போட்டாயடா பூஜை! போட்டாயடா! போடுகிறேன் என்று முன்னம் சொன்னபடியே.''

அம்மன் என்ன! பூஜாரிக்குச் சளைக்குமா? பாடுகிறது!!

"என்ன பூஜையம்மா! எங்களிடம் கூறுமம்மா! கோழிகொண்டுவந்து, குடலெடுத்து மாலையாக்கிக் கொண்டாடச் சித்தமம்மா! கோபம் வேண்டாம் தாயே!''

"வேண்டாண்டா கோழி''

"ஆடு அறுக்க வேண்டுமென்றால், ஆகாது என்றா சொல்வோம், அம்மா உன் ஆசை

என்ன? அறியச் சொல்லுமம்மா!''

"ஆடுதாண்டா வேணும்''

"ஆகட்டும், தாயே! ஆடு"காவு' கொடுக்கிறோம்!''

"சாதாரண ஆடு அல்லடா! வெள்ளாடு வேணும் - வெள்ளாடு''

"வெள்ளாடு கொண்டுவந்து வேண பூஜை செய்வோம், தாயே!''

"வெள்ளாடு வேண்டும்டா - கருப்பு நிறத்திலே. காலரா நோயைக் கொண்டுவர, காத்திருக்கிறா, மொள்ளைமாரி! உயிர் பிழைக்க வேணுமென்றால், உடனே வேணும் கறுப்பாடு.''

"கருப்பாடு வாங்கிவர கணநேரம் தாருமம்மா.''

"வேணாம்! சந்தையிலே இருக்கற ஆடு

வேண்டாம்டா, சண்டாளப் பசங்களா; கோடி வீட்டுக் கோபாலப் பிள்ளையிடம் இருக்கிறதே, கருப்பு வெள்ளாடு, அதுதான்"காவு' கொடுக்கணும். இல்லையானா, காலரா நோய் வந்து, ஊரே சுடுகாடாகும். மொள்ளைமாரி, என்னைத் தகிக்கிறா! இப்பவே கோபாலப் பிள்ளை வீட்டு ஆட்டை அறுத்து, அந்த இரத்தத்தைக்கொண்டு எனக்கு அபிஷேகம் செய்யணும். மறந்திங்க, தொலைஞ்சிங்க. மலை ஏறிப் போறேண்டா. மாரியம்மா, நானேதான்.''

அம்மன் "பழம்' சாப்பிட்டுவிட்டு மலையேறிவிட்டது.

ஊர்ப் பெரியவர்கள் சென்று, "அம்மன்' சொன்னதைக் கூறி, எவ்வளவோ தடுத்தும் கேட்காமல், கோடிவீட்டுக் கோபாலப் பிள்ளையுடைய கருப்பு வெள்ளாட்டை இழுத்து வந்து, குளிப்பாட்டி,"காவு' கொடுத்தார்கள்.

இந்தக் கதைக்கும் காங்கிரஸ் பெருந்தலைவர்களுக்கும், ஆயிரம் பத்தாயிரம் என்று பணம் பலர் கொடுப்பதற்கும், என்ன சம்பந்தம்? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அது விளங்க, பழைய சம்பவம் ஒன்று கேள், தம்பி!

ஆவேசமாடிய அருணாசலம், கோடி வீட்டுக் கோபாலப் பிள்ளையிடம், ஆட்டுப் பால், கேட்டான் ஒரு நாள் மருந்துக்காக ஆழாக்கு. இல்லை போ! என்று விரட்டிவிட்டார். கோபம், அருணாசலத்துக்கு; "பார்த்துக்கொள்கிறேன் உன்னை ஒரு ஆழாக்குப் பால் தர முடியாதுன்னு சொன்னேயல்லோ, இரு! இரு! நீ, பதறப் பதற, உன்னோட கருப்பு ஆட்டை,"காவு' கொடுத்துவிட்டு, மறுவேலை பார்க்கிறேன்'' - என்று கருவிக் கொண்டான்.

மாரியம்மா திருவிழா வந்தது; ஆவேசம் ஆடும் வாய்ப்பைத் தேடிக்கொண்டான்;

காரியத்தை முடித்துவிட்டான்.

சாதாரண அருணாசலம் ஆழாக்குப் பால் கேட்டபோது கிடைக்கவில்லை.

ஆவேசம் ஆடினான். ஆடே வெட்டப்பட்டது, ”காவு’ கொடுக்கப்பட்டது.

தம்பி! பதவி ஆவேசமாடிக்கொண்டல்லவா, பணக்காரர் களிடம் போகிறார்கள், காங்கிரஸ் பெரிய தலைவர்கள் - ஆவேசம் ஆடிய அருணாசலம்போல! அதனால் கிடைக்கிறது ஆயிரம், பத்தாயிரம்! அன்புக் காணிக்கை அல்ல!! அச்சத்தைப் போக்கிக்கொள்ள, ஆபத்தைத் தடுத்துக்கொள்ள ஆகின்ற ”செலவு.’’

சிரிக்கிறாயே தம்பி! சிந்தித்துப் பாரேன், நான் சொல்வதிலே உள்ள பொருள் விளங்கும்.

மரங்கொத்த நினைக்கும் குருவி, கொடி அறுக்கும் குழந்தை, மாலையாகும் மகிழம்பூ,

கோடிவீட்டுக் கருப்பு ஆடு எனும் இவையாவும், தரும் கருத்தினை எண்ணிப்பார், தம்பி! சுவை கருதி மட்டுமல்ல, பயன் கருதி!!

இதிலென்ன இருக்கிறது! மதுரைக்குத்தான் வரப் போகிறாயே, சுவையும் பயனும் பெற, தர.

அதற்கான ஏற்பாட்டிலே ஈடுபட்டிருக்கும் வேளை இது. அதிகம் எழுதி, அதற்குக் குந்தகம் ஏற்படுத்தலாமா? திருப்பரங்குன்றத்தில் சந்திப்போம்.

அன்புள்ள

அண்ணாதுரை

2-7-61

46. 7 குன்றின்மேலிட்ட விளக்கு

திருப்பரங்குன்றம் மாநாடு
கழகம் விடுதலை இயக்கமே
தஞ்சைச் சம்பவம் தரும் படிப்பினை
பதவிப் பித்தர்கள் யார்?
சோற்றுப் பிரச்சினை
தி. மு. க. : அரசியல் வெட்டுக்கிளி அன்று
மக்களாட்சி என்பதன் பொருள்
மெழுகுவர்த்தியால் பெற்ற பாடம்
அண்ணாவின் உடற்கூறும் உளப்பாங்கும்
செய்தித்தாள்களின் வேலைத் திறம்
சிங்களத்தில் சித்திரவதை

தம்பி!

உரிமையுடன் பெருமிதம்கொள்கிறாய் - உன் புன்னகை யிலேயே ஓர் புது எழில் காண்கிறேன் - பனித்துளியுடன் காணப்

படும் புதுமலர் உன் கண்கள் - ஆமாம்! வெற்றிக் களிப்புடன் இருக்கிறாய் - வேழத்தின் தந்தத்தை முரித்து, உடலில் பாய்ந் திருந்த வேலினைப்பறித்தெடுத்த மாற்றான்மீது வீசி வெற்றி கண்ட வீரமரபின் வழி வந்தவனன்றோ - இன்று விடுதலைக் கிளர்ச்சியிலே ஈடுபட்டு, வீறுகொண்டெழுந்து வெற்றிப் பாதையிலே நடைபோடுகிறாய் - உன் கை வண்ணமாக, கருத்தோவியமாக, எழுச்சி வடிவமாகத் தோற்றமளித்த, திருப்பரங்குன்றம் மாநாடு, உன்னையும் என்னையும், மரபின் மாண்பையும், தாயகப் பெருமையையும் மறவாத அனைவரையும், களிப்புக் கடலில் நீந்திடச் செய்தது. எப்படி, அண்ணா! என் பணி? - என்று கேட்கிறாய். என் சொல்வேன், தம்பி! உன்னிடம் இத்தகைய அரும் ஆற்றல் நிரம்ப இருப்பது அறிந்துதானே, நாடு மீட்டிடும் நற்பணியில் ஈடுபட, நான்

துணிந்தது.

தம்பி! திருப்பரங்குன்றம் மாநாடு, நமது இயக்க வரலாற்றிலே நிச்சயமாக ஒரு திருப்புமுனை என்பதை, நிகழ்ச்சி களையும் நிலைமைகளையும் ஆராய்வோர் அனைவரும் உணருவர்.

விடுதலை இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பெரியதோர் விபத்து ஏற்பட்டுவிட்டது என்று மாற்றார் இகழ்ந்துரைக்கும் நேரம்!

தி. மு. க. சுடுகாடு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்று, அரசாளும் இடம் (தகுதி என்று கூற மனம் இடம் தரவில்லை) பெற்றதனால், ஆணவமாக அமைச்சர் பேசும் காலம்!

உட்குழப்பம் மூட்டிவிட்டோம், இனி ஒருவரைஒருவர் அடித்துக்கொண்டு

சாகவேண்டியதுதான் என்று "சாபம்' கொடுக்கும் போக்கிலே, மாற்றார்கள் தூற்றி நிற்கும் நாட்கள்.

இத்தகைய நேரத்திலல்லவா, நாம் கூடினோம் - திருப்பரங் குன்றத்தில்.

தம்பி! திருச்சியிலே நடைபெற்ற மாநில மாநாட்டுக் காக, நாம் எடுத்துக்கொண்ட முன்னேற்பாடுகள், செய்த விளம்பரங்கள், திரட்டிய ஆதரவுகள்போல, இம்முறை எதுவும் செய்ய முடியாத நிலை - அறிவாய்.

விடுதலை இயக்கத்திலே ஒரு வெடிப்பு உண்டாக்கி, வீழ்த்தும் சதி திட்டமிடப்பட்டதோ, அல்லது கேடான நிலைமை அப்படி ஒரு விளைவுக்கு வழிகோலியதோ நான் அறியேன்; எனினும் ஏற்பட்ட நெருக்கடி, என் நெஞ்சுக்குப் பெரிய அதிர்ச்சியாகவும், நமது தோழர்களுக்குப் பெருத்த வேதனையாகவும்

இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அச்சு முரிந்துவிட்டது என்று அச்சமூட்டியோரும், பயிர் அழிகிறது என்று பச்சாதாபம் காட்டினோரும், கழகம் கலைகிறது என்று கலக்கமூட்டியோரும் பலர்.

இரண்டு திங்கள், இதழ்கள் எல்லாம், இந்தச் சேதிகளையே தாங்கிக்கொண்டு வந்தன.

விடிந்ததும், இன்று என்ன தூற்றலோ? இன்று எவர் அறிக்கையோ? எவருடைய அறைகூவலோ? என்று நினைத்த வண்ணமே, இதழ்களைப் பிரிக்க முடியும் என்ற நிலைமை.

இப்படி ஒரு தாக்குதல் இதுவரையில், இந்த இயக்கத்தின் மீதாவது தொடுக்கப்பட்டதுண்டா என்று நானும் எண்ணி எண்ணிப் பார்க்கிறேன், ஒன்றுகூட எனக்குத் தெரியவில்லை.

மனமுரிவுகள் ஏற்பட்டதுண்டு, - பிளவுகள் காணப் பட்டதுண்டு - முகாம்கள் அமைக்கப்பட்டதுண்டு - புகார்கள் வெளியிடப்பட்டதுண்டு - ஆனால், அப்பப்பா! பகை, இந்த அளவுக்குக் கக்கப்பட்டதுண்டா? எப்போதாகிலும்?

எந்தக் கட்சியிலாகிலும்? காந்தியாருக்கும், சுபாஷ்சந்திரபோசுக்கும் மூண்ட பெரும் தகராறுகூட, ஊரூருக்கும் "முகாம்கள்' அமையவும், தலைவர்கள் அறிக்கைகள் விடவுமான நிலைமையைத்தான் ஏற்படுத்திற்றே தவிர, பழிச் சொல், இழிமொழி பதற பதறத் தூற்றுவது, பகையைக் கக்குவது போன்ற சிறுமைச் செயல்கள் தலைதூக்கவில்லை. நம்மை நோக்கியோ, நச்சரவினும் கொடிய பழிச்சொற்கள், நாராசத்திலே தோய்த்தெடுக்கப்பட்ட இழிமொழிகள் நாளைக்கு ஒரு புகார்,

வேளைக்கு ஒரு குற்றச்சாட்டு - வீசப்பட்டன.

நேசம் முரிந்ததே, பாசம் அற்றுப்போய்விட்டதே, தொடர்பும், தோழமையும் அறுபட்டுப்போகின்றனவே கூடிப் பணியாற்றிய இனிய நாட்கள் முடிவுற்றுப் போகின்றனவே, கண்டதும் களிப்பு பேசும்போது மகிழ்ச்சி என்பதை எண்ணியே, என் மனம் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கும்போது, இருபது முப்பது ஆண்டுகள் எல்லாத்துறைகளிலும் பகை மூண்டு மூண்டு, பார்த்த உடனே, முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் அளவுக்குக் கடுகடுப்பாகத்தக்க கசப்புணர்ச்சி கப்பிக்கொண்டால், எப்படி இழித்தும் பழித்தும் பேசிக்கொள்வார்களோ, எதிர்ப்பு மூட்டிக்கொள்வார்களோ, எதிரிகளுடன் கூடிக்கொண் டாகிலும் அழித்துவிட முனைவார்களோ, அப்படி அப்படி அல்லவா,

விலகிய விநாடியே வேகம், விறுவிறுப்பு, பகை கக்குவதிலே காட்டத் தொடங்கினார்கள். அதை எண்ணும் போதுதானே, தம்பி! இவர்கள் நெடுங்காலமாகவே, இவ்வளவு பகை உணர்ச்சியை மனத்திலே குவித்து வைத்துக்கொண்டிருந் தார்கள். சமயம் வரட்டும் வரட்டும் என்று பார்த்துக்கொண் டிருந்தார்கள் என்பது புரிகிறது நானோர் ஏமாளி - துளியும் இப்படி இருக்கக்கூடும் என்ற ஐயப்பாடு எனக்கு எழவே இல்லை! கடைசி விநாடி வரையில், கழகத்தின் கட்டுக்கோப்புக்காக வாதாடுகிறார்கள் - விதிமுறைகளில் மாற்றம் காண விழை கிறார்கள் - என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன் - சிறிதளவு கூட என்னைப்பற்றியோ, அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த ஏற்புடைய கொள்கைபற்றியோ, இத்தனை பகை,

அவர்கள் உள்ளத்தில் புற்றரவுபோல இருக்கிறது என்று நினைக்கவே இல்லை.

தேக்கிவைக்கப்பட்ட வெள்ளம், கரையிலே சிறு விரிசல் ஏற்பட்ட உடனே, அந்த வழியாகப் புகுந்து, விரிசலை உடைப்பு ஆக்கி, கரையைப் பெயர்த்துக்கொண்டு வெளியே பாய்ந்து, சுற்றுப்புறம் முழுவதையும் வெள்ளக்காடாக்கி, மாடுமனை அழித்து, மக்கள் கூட்டத்தைப் பாழ்படுத்தி, வயல்களை நாசமாக்கி, வாழ்வைக் குலைப்பதுபோலல்லவா. வெறுப்புணர்ச்சி இருந்திருக்கிறது, இந்த அளவு; இன்று வெள்ளமாக வெளியே பாய்கிறது! இதை நான் துளிகூட எதிர்பார்க்கவே இல்லை. அதனால், என் வேதனை மற்றவர்க்குள்ளதைவிடப் பன்மடங்கு அதிகம். அந்த நிலையிலே மாநாடு என்ற அறிவிப்பு. எனக்கு மகிழ்ச்சியையும் அளிக்கவில்லை, அதற்கான முன்னேற்பாடு

களிலே ஈடுபடும் ஆர்வத்தையும் நான் போதுமான அளவு பெறவில்லை.

ஜூலை 13ஆம் தேதி மாநாடு - தம்பி! நான் ஜூலை 9ஆம் தேதிவரையில், வடாற்காட்டிலே கூட்டங்களில் கலந்துகொண் டிருக்கிறேன். பொருளாளர் கருணாநிதி மாநாட்டு அமைப்பாளர் அலுவலையும் சேர்த்துப்பார்க்கவேண்டி நேரிட்டது. கலைக் காட்சிப் பொறுப்போ, நண்பர்கள் பார்த்தசாரதி, இராஜாராம், பொன்னுவேல், செழியன் ஆகியோரிடம்; நண்பர் மதி, நடராசன், நாவலர் ஆகியோர் மாநாட்டுக்கான அறிவிப்புக்களை, அலுவல் களைக் கவனித்துக்கொண்டிருந்தனர். மதுரைத் தோழர் முத்துவுடன், மாவட்டத் தோழர்களும், அன்பிலும் மன்னார் குடியும்! நானோ, ஊரூருக்கும், தர்மலிங்கம் எம். பி. அவர்களால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில்!

நடைபெறுவதோ, நெருக்கடி ஏற்பட்ட நிலையில் பொது மாநாடு. எண்ணி நாலு நாட்கள்கூட, நான் அந்த மாநாடு குறித்து ஏதும் செய்வதற்கு இல்லாமலே போய்விட்டது - எனினும், மாநாடு, எழிலும் ஏற்றமும், பயனும் சுவையும் மிக்க முறையிலே, நடந்தேறித் திராவிடத்துக்குப் புதியதோர் எழுச்சியை உண்டாக்கிற்று.

எங்கெங்குக் "கால்' நடுவது என்பதிலே இருந்து எந்த இடத்திலே எந்தப் படம் இருக்கவேண்டும் என்பது வரையிலே, திருச்சி மாநில மாநாட்டிலே, நான் கவனித்துக்கொண்டேன். மதுரையிலோ உள்ளே நுழைகிறவரையில், கொட்டகையின் அளவோ, வகையோ, அதன் வண்ணமோ எனக்குத் தெரியாது. மாநாட்டு வேலைகளுக்கும் எனக்கும் அவ்வளவு தொடர்பற்ற நிலைமை! இருந்தால் என்ன?

மாநாடு காண்போர் களித்திடும் சீருடன் நடைபெற்றது. காருலாவிற்று - சீர்கெடக்கூடிய மழையாகிவிடவில்லை - வெப்பத்தைத் தணித்திடும் குளிர் காற்றளிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாள், இயற்கை அன்னை!

இந்த நிலையினின்றும், நானோர் பாடம் பெற்றேன்.

நாம் கவனிக்காவிட்டால், கருத்துடன் காரியமாற்றா விட்டால், செம்மை ஏற்படாது என்ற எண்ணம், அகந்தையளவு எனக்கு எப்போதும் எழுவதில்லை என்றாலும், அச்சம் தரத்தக்க அளவுக்கு எழுவதுண்டு. இதைச் செய்யவேண்டுமே, அதை இப்படி அமைக்கவேண்டுமே எதை எதை எப்படி எப்படிக் கெடுத்துவிடுவார்களோ என்றெல்லாம், ஒரு பதைப்பு, பரபரப்புணர்ச்சி ஏற்படும். அதனால், எல்லாக் காரியத்திலும்

ஏதேனும் ஓர்விதமான தொடர்பு இருக்கவேண்டும் என்று துடிப்பதுண்டு! அப்படித் தொடர்பு இருப்பதனால்தான். காரியம் செம்மையாக நடக்கிறது என்ற நினைப்பும் உண்டு - மறைப்பானேன்!!

ஆனால், தம்பி! இம்முறை நடைபெற்ற மாநாடு, எனக்கிருந்து வந்த அந்த எண்ணம் எவ்வளவு தவறானது என்பதை நான் உணரச் செய்தது.

தென்னங்கீற்றிலே அணில் அமர்ந்திருக்கும்! காற்றடிக்கும்! கீற்று ஊஞ்சலாடும்! பார்த்திருக்கிறாயல்லவா? அப்போது, அந்த அணில், கீற்றினை ஆடவைப்பது தான் தான் என்று எண்ணிக் கொள்ளுமோ என்னவோ - நடைபெறுகிற காரியத்தில் ஒரு தொடர்பு இருந்தால், அந்தக் காரியத்தை நான் செய்வதாக, எனக்கு ஒரு நினைப்பு உண்டு. அது தேவையற்றது

என்பதைத் தெளிவாக்கும் வகையிலே, நான் தொடர்புகொள்ள முடியா திருந்தும், மாநாடு சம்பந்தமான எல்லா நிகழ்ச்சிகளும் மிகச் செம்மையாக நடைபெற்றிருக்கின்றன.

தம்பி! இதன் உட்பொருள் என்ன, தெரிகிறதல்லவா? நடு நாயகர்களின் திறமையால் மட்டுமே, நமது இயக்கம் வாழ முடியும், வளரமுடியும், என்பது தவறான தத்துவம்; பல இலட்சக்கணக்கானவர்களின் அறிவாற்றலால், உழைப்பினால், வடிவமெடுத்துள்ள இயக்கம், தன்னைத்தானே இயக்கிக் கொள்ளவும், மற்றவர்களை இயங்க வைக்கவுமான ஓர் நிலையை, வலிவை, தன்மையைப் பெற்றுவிட்டது!

இந்தப் ”பாடம்’ எனக்குக் கிடைத்ததைப்போலக் கிடைத் திருந்தால், ஒருவேளை, விலகி வீறாப்புப் பேசுவோர் தன்னடக்கம் கொண்டிருக்க முடியுமோ,

என்னவோ!!

மாநாட்டு வெற்றி, நிச்சயமாக, ஏற்கனவே இருந்து வந்த தவறான எண்ணத்தைப் போக்கியதுடன், இயக்கத்திடம் எனக்கு முன்பு இருந்ததைவிட அதிகமான மதிப்பும் நம்பிக்கையும் கொள்ளச் செய்தது.

வீரனுடைய, ஆற்றலின் காரணமாகத்தான், அம்பு பாய்கிறது! ஆனால், விடுபட்ட அம்புக்கு, செலுத்துபவனிடம் உள்ளதைக்காட்டிலும், வேகமும் துளைக்கும் சக்தியும் ஏற்பட்டு விடுகிறது அல்லவா?

அம்பினை எய்துவிட்டு, எய்தவனே முயன்றாலும் அதன் வேகத்தைத் தடுக்க, கெடுக்க, மடக்க முடியாது அல்லவா? தம்பி! நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் ஒவ்வோர் அளவு, இயக்கம் வளர வகையும் வடிவமும்பெறத் துணை நின்றோம்.

நமது கூட்டு முயற்சியின் விளைவுதான், தி. மு. க. ஆனால், அந்த அமைப்பு செம்மைப்பட்டதும், நாமே கண்டு வியக்கும் நிலை ஏற்பட்டுவிடுகிறது. அதிலே, நமது பங்கு இது, அதன் தரம் இத்தகையது என்று, பிரித்தெடுத்துக் காட்ட இயலாது - உரிமை கொண்டாடுவதும் பொருளற்றதாகும்.

வண்ணக் கலயங்களில் உள்ள சிவப்பும் பச்சையும், நீலமும், மஞ்சளும், கருப்பும் பிறவுமான வண்ணங்கள், தூரிகைகொண்டு ஓவியம் வரைவோனின் திறமையினால், வானமாகி, வாவியாகி, மலராகி, மாதாகி, கனியாகி, கிள்ளையாகி, அருவியாகி, அல்லி யாகிவிடுகிறது. கலயத்தில் இருந்தபோது, வெறும் வண்ணக் குழம்பு! ஓவியமான பிறகோ, புத்தம் புதிய வடிவங்கள்! வண்ணக்குழம்பின்றி ஓவியம் இல்லை! உண்மை! எனினும், ஓவியமான பிறகு,

வண்ணக்குழம்பு என்னால்தான் இவையாவும் என்று உரிமைகொண்டாடவா முடியும்?

நம் உழைப்பு, தம்பி, அந்த வண்ணக்குழம்புக்கு ஒப்பிட லாம்! ஓவியன் நிலையில் உனது காலக்கரம்!!

காலக்கரத்தின் வேலைத் திறத்தால், வடிவம்பெற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் ஈடுபட்டு, பதவி பிடிக்கும் அரசியல் சூதாட்டத்துக்காக அமைக்கப்பட்ட அரசியல் கட்சியாக இருந்தால், அப்போது, மேட்டுக் குடியினர், மேடை அதிரப் பேசுவோர், கூடுவிட்டுக் கூடு பாய்வோர், குலவிக் கெடுக்கவல்லோர், சிண்டு முடிந்துவிடுவோர், சீமான்களை வலை போட்டு இழுக்கத் தெரிந்தோர், இருபொருள் தரும் "இலட்சியம்' கூறுவோர் எனும் தரத்தினர் தேவைப்படுவர்.

எவரிடம் இரும்புப் பெட்டி அல்லது

மற்றவர்களின் இரும்புப் பெட்டியைத் தனதாக்கிக்கொள்ளும் தந்திரமோ இருக்கிறதோ அவர், கட்சிக்குக் கர்த்தாவாகிடவேண்டிவரும். அவருடைய "ஆதரவு' இருந்தால் மட்டுமே கட்சி வளரும், வெற்றி கிட்டும். அவர் விலகினாலோ, அல்லது அவர் செல்வம் கரைந்து போய்விட்டாலோ, கட்சி கருகும்.

அரசியலில் உள்ள, விளைந்த காட்டுக் குருவிகள், அப்படிப் பட்ட கட்சியில் "பசையும் உருசியும்' உள்ள வரையில், இடம் பெற்று இருக்கும்; பசையும், உருசியும் உலர்ந்தால், பறந்தோடும் வேறோர் பசை தேடி.

எவருக்கு என்ன விலை? யாரைக் கொண்டு யாரை வீழ்த்தலாம்? எவரெவருக்குள்ளே பகை உளது? - என்று மோப்பம் பிடிக்கத் தெரிந்தவர்கள் அப்படிப்பட்ட கட்சிக்கு நடுநாயகர்களாகக்கூடும்.

ஆனால், தி. மு. க. தேர்தலில் ஈடுபடுகிறது என்றாலும், இடம் பிடித்து இனிப்புப்பெற அல்ல; பதவி பிடித்துச் சுவைக்க அல்ல; பல்வேறு நாட்டின் தலைவர்கள், இன்று அக்கறை காட்ட மறுக்கிறார்கள், திராவிட நாடு பிரச்சினை குறித்து; அவர்களின் கவனத்தை ஈர்க்கவும், ஆதரவைப் பெறவும், தேர்தல் வெற்றியின் மூலம், பொதுமக்களின் ஆதரவு இருப்பதை எடுத்துக் காட்டும் தூய நோக்கத்துக்காகவே! எனவே, தேர்தலில் ஈடுபட்டாலும், கழகம் விடுதலை இயக்கம் எனும் மாண்பினை இழந்துவிடாது; விடுதலைக் கிளர்ச்சியின் ஒரு கட்டமாகவே, கழகம் தேர்தலில் ஈடுபடுவதைக் கொள்கிறது.

தம்பி! விடுதலை இயக்கத்துக்குத் தேவைப்படுபவர் - எட்டு இலட்சம் கொட்டிக் கொடுக்கத்தக்க செல்வவான் அல்ல - எதிர்ப்புக்கு அஞ்சாத ஏறுகள் வேண்டும்!

வேளைக்கு ஒரு வேடமிடும், அரசியல் கழைக்கூத்தாடிகள் அல்ல, எந்தச் செயலையும், இலட்சியத்துக்கு வலிவு தரத்தக்கதாக அமைத்துக் கொள்ளத்தக்கவர்கள் வேண்டும். அவர்கள் குடிசை வாழ்வோராக இருக்கலாம்; ஆனால், கொள்கைத் தங்கம்கொண்டோராக இருத்தல்வேண்டும். தேர்தலில் ஈடுபடலாம்; ஆனால் வெற்றிக்காக ஏக்கம்கொண்டு, கூடாநட்பும், கொள்கை இழப்பும் தேடிக்கொள்ளக்கூடாது.

தேர்தலில் வெற்றி பெற்றால் மட்டுமே, நாடாள முடியும்; நாடாண்டால்தான், நமது கட்சியின் வளர்ச்சிக்கான வழி தேடிக் கொள்ளலாம் என்ற நப்பாசையால், ஆளும் கட்சியாக உள்ள காங்கிரஸ், சிற்றரசர்களையும் சீமான்களையும், ஆலை அதிபர் களையும் தட்டிக் கொடுத்தும் கட்டித் தழுவியும், பணம் பெற்று வருவது உலகறிந்த

இரகசியமாகும். சபர்மதி குடிலில் இருந்து சாந்தம் போதித்து, காந்தியார் திரட்டிய செல்வாக்கு மட்டும், தேர்தலில் வெற்றிபெறப் போதாது என்று உணர்ந்துகொண்ட காங்கிரஸ் கட்சி, இன்று கோடிக்கணக்கான ரூபாய்களைத் தேர்தலில் செலவழித்துத் தான், வெற்றிபெற முடியும் என்பதை அறிந்து, அந்தப் பணம் பெற, எப்படிப்பட்ட படுபாதகச் செயல் புரிவோராக இருப்பினும் கவலை இல்லை என்று கூறிப் பணம் திரட்டிடக் காண்கிறோம்.

"நமஸ்தே'' - பயபக்தியுடன் கூறுகிறான், கட்டுடல் படைத்தவன்.

"நமஸ்தே!'' என்று நடுக்கும் குரலில் பேசுகிறார், அந்தக் காங்கிரஸ் தலைவர்.

"நெடுநாட்களாக எனக்கு ஒரு ஆவல், என்னால் ஆன தொண்டு செய்யவேண்டும் என்று. இன்றுதான் அதற்குச் சந்தர்ப்பம்

கிட்டிற்று; ஜென்மம் சாபல்யமாகும் இனி,'' என்று உருக்கமாகப் பேசுகிறான், ஓங்கி வளர்ந்தவன். பயத்தால் உதடு உலருகிறது, நா வறளுகிறது, உடல் ஆடுகிறது காங்கிரஸ் தலைவருக்கு; ஏனெனில், இன்றுதான் சந்தர்ப்பம் கிட்டிற்று என்று சொல்பவன், பெரிய கொள்ளைக்காரன்; இடம்: மத்தியப் பிரதேசத்திலுள்ள ஒரு காடு!!

வழிப்பறி நடத்துபவன்; போலீஸ் வளையத்தில் சிக்காதவன் இந்தக் கொள்ளைக்காரன் - இவனிடம் வந்து சிக்கிக் கொண்டோமே; பாவி, என்ன பாடுபடுத்தப்போகிறானோ என்று எண்ணினார் அந்தக் காங்கிரஸ் பிரமுகர். கும்பிடுவதும் குழையக் குழையப் பேசுவதும், பிறகு குத்தவும் வெட்டவும் குழி பறித்துத் தள்ளவுந்தான் இருக்கும்! வேறென்ன? கொள்ளைக்காரன் கொஞ்சிப்

போவானா? சூது! பசப்பு! ஏமாற்றுவித்தை - என்றெல்லாம் எண்ணி நடுநடுங்கினார் அந்தக் காங்கிரஸ்காரர். ஆனால், நடந்தது என்ன தெரியுமோ, தம்பி! அந்தக் கொள்ளைக் காரன், பெருந்தொகை நன்கொடையாகத் தந்து, அதனைக் காங்கிரசின் தேர்தல் நிதிக்கு வைத்துக்கொள்ளும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டான்!

நடத்துவது வழிப்பறி! கொடுப்பது காங்கிரசுக்கு நன்கொடை! எப்படி இருக்கிறது விசித்திரம்!! அதுகூடக் கிடக்கட்டும், எப்படியெல்லாம் இருக்கிறது பார்த்தனையா காங்கிரசுக்குத் தேர்தல் நிதி குவியும் வகை!! வழிப்பறி நடத்துபவன், எவரெவருடைய வயிறு எரிய எரியப் பார்த்தானோ இந்தப் பணத்தை! காது அறுத்தானோ! யாராரைப் பதறப்பதற வெட்டினானோ! "ஐயா! ஐயா! எல்லா

நகைகளையும் பறித்துக்கொண்டாயிற்று; இதை மட்டும் விட்டுவிடு! அவர் தொட்டுக் கட்டிய தாலி! புனிதமானது! என் உயிரினும் மேலானது! இதை மட்டும் பறிக்காதே!' என்று காரிகை கதறி இருப்பாள் - அவன், கன்னத்தில் அறைந்தானோ, கைகளை முறித்தானோ, கடகடவெனச் சிரித்தானோ, கனல் கக்கினானோ, யாரறிவார்கள்! தாலியையும் பறித்தெடுக்கத் தயங்காத காதகன்! அவன் தருகிறான், கொள்ளைப் பொருளிலே, ஒரு பங்கு! காங்கிரசின் தேர்தல் நிதிக்கு!! பெறுகிறார் பிரமுகர், கூச்சமின்றி.

கதைகளிலே மட்டுமே படித்திருக்கிறோம், "தாயே! மகமாயி! தயாபரியே! அருளுமம்மா! போகும் இடந்தன்னிலே, ஆபத்து வராமல் காத்து நில்லம்மா! மாகாளி! மகேஸ்வரி! ஆடு கோழியுடன் ஆர்ப்பாட்ட பூஜையெல்லாம், அடியேன் செய்திடுவேன், அன்னை மனம்

மகிழ! மையிருட்டு வேளையிலே மதிலேறித் தாவுகையில், எவர் கண்ணிலும் சிக்காமல் எனைக்காக்க வேணுமம்மா! -'' என்றெல்லாம் திருடர்கள் வேண்டிக்கொள்வார்களாம், கொள்ளை அடித்துவிட்டுப் பிடிபடாமல் காடு திரும்பியதும்,"வேண்டுதலை' நிறைவேற்று வார்களாம்!!

காட்டுத்தேவதைகளுக்குப் பூஜை போடும் கொள்ளைக் காரக் கூட்டம்போலல்லவா, மத்தியப் பிரதேசத்துக் கொள்ளைக் காரன் நடந்துகொண்டிருக்கிறான்!

இவனைத் தள்ளுங்கள்! தலைமறவாகக் கிடப்பவன் சட்டத்தை மதிக்காதவன்! போலீசுக்குத் தப்பித்திரியும் பேர்வழி! பிடிபட்டால், சுட்டுத்தள்ளுவார்கள். சமுதாயம் இவனைக் காறித் துப்பும்.

முந்திராவைத் தெரியுமல்லவா?

பல நாட்கள், பத்திரிகை களிலே, அவனுடைய பெயர் அடிபட்டபடி இருந்ததே! படம்கூட வெளியிட்டார்களே, நினைவு இருக்கிறதல்லவா?

உருட்டுவிழி இல்லை; முறுக்கு மீசை இல்லை! கையிலே கட்டாரி இல்லை, கட்டுடல்கூட இல்லை! "நவநாகரிக'த் தோற்றம்! பார்வையிலே பாகு கலந்தளிக்கக்கூட முடிகிறது அவனால், சமுதாயத்திலே, அவனுக்குப் பளபளப்பான இடம்! மாளிகை வாசி! சட்டத்துக்கு உட்பட்டு நடப்பவன்!

ஆனால், சட்டம் எட்டிப் பிடிக்க முடியாத விதத்தில், ஏமாற்று வித்தைகள் பல நடத்தி, கோடிகோடியாகப் பொருள் ஈட்டினான்.

துரைத்தனத்தின் கண்களிலேயே மண்தூவிக் கோடி ரூபாய்

பறித்துக்கொண்டான்! எனினும், அவனை அயோக்யன் என்றல்ல, சீமான் என்று அழைத்தனர். அக்கிரமக்காரன் என்று அல்ல, "அதிர்ஷ்டசாலி' என்று அழைத்தனர்! அவன் வணிகக் கோமான்! வியாபார தந்திரம் தெரிந்த நிபுணன்! - என்றெல்லாம் பாராட்டினர். அவனோ, வழிப்பறி நடத்திய கொள்ளைக் காரனைவிடக் கொடுமைகளைக் கூசாமல் செய்துதான்"கோடீஸ்வரன்' ஆனான்.

கத்தி காட்டினான் வழிப்பறிக்காரன் - இவன் புன்னகை காட்டினான், பொருள் பறிக்க!

காடு, வழிப்பறிக்காரனிடம் உறைவிடம், தொழிலிடம்! இவனுக்கோ நகரம் உறைவிடம்! அங்காடி தொழிலிடம்! பகற் கொள்ளைக்காரன் இவன் - பதறப்பதற வெட்டினானில்லை, பசப்பிப் பசப்பி ஏய்த்தான்!

இப்படிப்பட்ட பகற்கொள்ளைக்காரன், காங்கிரசின் தேர்தல் நிதிக்குப் பணம் கொடுத்திருக்கிறான்!!

பெற்றுக்கொண்டனர், காங்கிரஸ் தலைவர்கள் - கூசாமல், குமுறாமல்!!

முந்திரா ஊழல்பற்றிய விசாரணை நடந்தபோது, இந்த அக்கிரமம் அம்பலமாயிற்று!!

காங்கிரசின் தேர்தல் நிதிக்குப் பெரும் பொருள் கொடுத்து, ஆளவந்தார்களின் அன்புக்கு உரியவனாகிவிட்டதனாலேயே, முந்திரா, அக்கிரமச் செயலைத் துணிந்து செய்திடமுடிந்தது என்று ஆய்ந்தறிந்த அறிவாளர் அறிந்தனர்!! வழிப்பறி நடத்தியோ, மோசடி செய்தோ, இருட்டுச் சந்தை நடத்தியோ, இலாப வேட்டையாடியோ, பொருள் ஈட்டி னாலும், எமக்கு அதிலே

என்ன பங்கு? என்று கேட்டுப் பெற்றிடும் போக்கிலே, நாட்டுக்குரியார் யாமே! - என்று நாப்பறை கொட்டும் காங்கிரஸ் நாயகர்கள் நடந்துகொண்டனர். நாடு அறியும் நல்லோர் மனம் பதறிற்று; நாமும் அறிவோம்.

"சட்டப்படி, குற்றமற்றதாக இருக்கலாம் - ஆனால், பெரிய தொழிலதிபர்களிடம் கைநீட்டிப் பெரும் பொருளை ஆளும் கட்சி பெறுவது, அறம் ஆகாது! அத்தகைய முறைகேடு நேரிடுவது, குடியாட்சியின் மாண்பினையே குலைத்துவிடும்'' என்று நீதிமன்றத்தினரே எடுத்துக் காட்டினர், டாட்டா எனும் வட நாட்டுக் கோடீஸ்வரரிடமிருந்து பெரும் தொகையைக் காங்கிரஸ், தேர்தல் நிதியாகப் பெற்றது குறித்து வழக்கொன்று தொடுக்கப்பட்டபோது.

"காங்கிரஸ் கட்சியிடம் ஆட்சிப்பொறுப்பு இருந்தால் மட்டுமே, எமது தனி உடைமைக்குப்

பாதுகாப்பும், இலாபம் ஈட்டிக் குவிக்க நல்வாய்ப்பும் இருக்கும்; மேலும் காங்கிரசாட்சி அமைந்தால்தான் எஃகுத் தொழில் தேசிய மயமாகப்படாம லிருக்கும்; எனவே, எங்கள் தனிஉடைமையின் தற்பாதுகாப்புக் காகக் காங்கிரசாட்சி தொடர்ந்து இருக்கச் செய்வது, எமது கடமையாகிறது'' என்ற கருத்துப்பட, வழக்கு மன்றத்திலே, டாட்டா வணிகக் கோட்டத்தினர் எடுத்துரைத்தனர்.

தம்பி! காட்டில் மறைந்து திரியும் கொள்ளைக்காரனும், சட்டத்தை ஏய்த்துச் சுரண்டும் பகற்கொள்ளைக்காரனும், சர்க்காரிடம் சலுகைகள் பெற்றுக் கொழுத்துக் கிடக்கும் கோடீஸ்வரனும், கொட்டிக் கொடுக்கும், பணத்தைக் குவித்து வைத்துக்கொண்டு, கொடிகட்டி ஆள்கிறோம் பொதுமக்கள் ஆதரவால்! - என்று பேசுகின்றனர் காங்கிரஸ் கட்சியினர்.

ஒரிசாவில், ஒரு திங்களுக்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் நடத்திய தில்லுமுல்லுகளைப் பல தலைவர்கள் எடுத்துக் காட்டினர் - படித்திடும் எவரும் பதறாமல் இருக்க முடியாது.

பத்துப் பதினைந்தே ஆண்டுகளில், ஒரிசா மாநிலத்திலேயே மிகப் பெரிய முதலாளியாகத் தொழிலதிபராக ஓங்கி வளர்ந்து விட்டுள்ள பட்நாயக் என்பவர் பணத்தைப் பல வழிகளிலும் ஈட்டி, வாரி இறைத்து, வெற்றியைத் தட்டிப் பறித்துக் கொண்டார். பொது மக்களின் நல்லாதரவை அல்ல; பெரும் பொருள் படைத்தோர் துணிந்து இறங்கினால், ஜனநாயகத்தை விலை கொடுத்து வாங்கித் தமக்கு "எடுபிடி'யாக்கிக்கொள்ள முடியும், என்பதைத்தான் ஒரிசாவில் காங்கிரஸ் பெற்ற வெற்றி காட்டுகிறது என்று அரசியல்

ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

”சட்டம் ஒரு கழுதை - பயந்து பின்னால் செல்பவர்களைக் காலால் உதைக்கும்; துணிந்து முன்புறம் சென்றாலோ, பயந்து ஓடும்’’ என்று காலஞ்சென்ற கல்கி கூறினார்.

ஒரிசாத் தேர்தலில் சட்டம் குறுக்கிடுமோ என்ற அச்சமற்று, பட்நாயக் நடந்துகொண்டார்; வெற்றி கிட்டிற்று.

இந்தியத் துரைத்தனத்தின் பாதுகாப்புத்துறைக்கு அமைச்சர் கிருஷ்ணமேனன். இவர் நேருவின் நண்பர்; பட்நாயக்குக்கு மிகவும் வேண்டியவர்.

பாதுகாப்புத்துறைக்கு ஜீப் மோட்டார்கள் தேவை; இதற்கான ”ஒப்பந்தம்’ பட்நாயக்கின் யோசனைப்படி பம்பாயில் உள்ள மகேந்திரா கம்பெனிக்குத் தரப்பட்டதாம்! அந்த மகேந்திரா கம்பெனியினர், பாதுகாப்புத் துறைக்காகத்

தயாரிக்கப் பட்டிருந்த ஜீப் மோட்டார்களில் நூறு மோட்டார்களை, இலவசமாக, ஒரிசா தேர்தலுக்குக் கொடுத்தனராம். ஒரிசாவில், மூலை முடுக்கெல்லாம், ஓடிக்கொண்டிருந்த, புத்தம் புதிய ஜீப் மோட்டார்களைக் கண்டு, பொதுமக்களே மலைத்துப் போயினர்; மாற்றுக் கட்சிகள் மருண்டு போயின! தேர்தல் முடிந்ததும், ஜீப் மோட்டார்கள், திரும்பவும் கம்பெனிக்கு அனுப்பப்பட்டுப் பழுதுபார்க்கப்பட்டு, மெருகு ஏற்றப்பட்டுப் பாதுகாப்புத் துறைக்கு அனுப்பப்படுமாம்!!

சட்டப்படி பார்த்தால், மிகப் பெரிய குற்றம்.

அறமுறைப்படி பார்த்தால், சகிக்க முடியாத அக்கிரமம்.

ஆயினும், துணிந்து செய்தனர்; சட்டம் வாய் பொத்திக் கிடந்தது; அறம், மாண்டுதான் ஆண்டு பதினான்கு ஆகி விட்டனவே! பாவம்,

அறம் என்ன செய்ய முடியும்!!

ஒரிசாவில் நடைபெற்றது, ஒத்திகை! பட்நாயக் முறை பொதுத் தேர்தலின்போது எல்லா மாநிலங்களிலும் புகுத்தப் படும் - என்று வெளிப்படையாகவே சில காங்கிரஸ் தலைவர்கள் பேசுகின்றனர். அவர்களைவிட "ஆபத்தானவர்கள்' அந்த யோசனையை, உள்ளத்திலே மறைத்து வைத்துக்கொண்டு, உதட்டிலிருந்து ஜனநாயகத் தேன் துளியைச் சொட்ட விடுபவர்கள்!!

கோர்வாலா என்பவர், நிர்வாகத்துறை நிபுணர். அவருக்குக் காங்கிரஸ் கட்சியிடம் மனமாச்சரியம் ஏற்பட எந்தக் காரணமும் இல்லை - எதையும் எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த எரிச்சல்காரர் அல்ல; எதிர்க்கட்சி நடத்திடுபவருமல்ல. துரைத்தனம் தூய்மையாக நடத்தப்படாவிட்டால், பொது மக்களின் வாழ்வு குலையும் என்ற எண்ணம்

கொண்டவர்.

காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதி திரட்டும் போக்கைக் கோர்வாலா மிக வன்மையாகக் கண்டித்துள்ளார்.

மக்களாட்சி முறைப்படி நடத்தப்படும் தேர்தல் பணச் செலவின்றி நடைபெறாதுதான்; பெரும் அளவு பணம் தேவைப் படத்தான் செய்யும்; ஆனால், அந்தப் பணம், எந்த முறையில், எவரெவரிடம் திரட்டப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான், நேர்மை நிலைக்குமா என்பது இருக்கிறது. இலட்சக்கணக்கிலும், பல்லாயிரக் கணக்கிலும், பெரிய புள்ளிகளிடம், காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதி திரட்டுகிறது. அந்த விதமாகத் தேர்தல் நிதி திரட்டினால், பிறகு அந்தப் பெரிய புள்ளிகளைப் பாதிக்கத்தக்க திட்டங்களை, எப்படி காங்கிரசாட்சி மேற்கொள்ள முடியும்? சமதர்மம்பற்றி

இனிக்க இனிக்கப் பேசலாமே தவிர, செயல்பட முடியுமா? - என்று கோர்வாலா, கேட்கிறார். பதில் உண்டா? இல்லை!!

அசோக் மேத்தா கூறினார், பம்பாய் அமைச்சராக மொரார்ஜி தேசாய் இருந்தபோது, பெரிய தொழிலதிபர்களை நயத்தாலும் பயத்தாலும் மயக்கியும் மிரட்டியும் தேர்தல் நிதிக்குப் பணம் திரட்டினார் என்று.

பெரிய தொழிலதிபர்கள் எவரும் பணம் தந்ததில்லை என்றா மொரார்ஜி தேசாய், பதிலளித்தார்? இல்லை! மிரட்ட வில்லை! மயக்கவில்லை! தாமாக முன்வந்து, காங்கிரஸ் மீது உள்ள பக்தியினால் பணம் கொடுத்தார்கள் என்று பதிலளித்தார்!

புத்திக்கூர்மை இருக்கிறது பதிலில், ஆனால், இதயசுத்தி இருக்கிறதா?

சில நாடகங்களில் காண்கிறோமல்லவா,

கூரிய கட்டாரியை முதுகுப்புறம் அழுத்திக்கொண்டே, இன்று முதல் படைத்தலைவர் இட்டதுதான் சட்டம்! யோகாப்பியாசத்தில் நான் ஈடுபடப்போவதால், இன்றுமுதல், அரச அலுவலை, என் அன்புக்குரிய படைத்தலைவர் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கட்டளையிடுகிறேன் - என்ற பிரகடனத்தை மன்னனைக் கொண்டே பிரபுக்களுக்குப் படித்துக் காட்டச் செய்யும் படைத் தலைவனை!! அதுபோல, அதிகாரபலம், அதனால் மூட்டக் கூடிய அச்சம், எழச்செய்யக்கூடிய ஆசை, இவைகளைக் காட்டிக் காங்கிரஸ் அமைச்சர்கள், கனதனவான்களை, காங்கிரஸ் பக்தர்கள் என்று அறிவிக்கச் செய்கிறார்கள். இது நாடறிந்த உண்மை!! வேறொன்று; பணம் அதிகம் இல்லாவிட்டாலும், அதை ஈடுசெய்யத்தக்க

விதமான தந்திர புத்தி படைத்த சிலர், சீமான்களாகிக்கொண்டிருக்கும் நிலையிலுள்ளவர்கள், காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் திருப்பார்வை நமது பக்கம் விழ வைக்கத் தந்திர முறைகளைக் கையாண்டு வருகின்றனர்.

தம்பி! இது நடைபெற்ற ஒரு சம்பவம்! ஊரையும் பேரையும் மட்டும் கேட்காதே.

"அவருக்கு, நமது கழகத்தின்மீது மிகுந்த பற்றுதல்.''

"அவருக்கா? சிவப்பழம் என்கிறார்கள். நம்மை நாத்திகர் என்று தூற்றுகிறார் என்கிறார்கள்.''

"வெளியே அப்படித்தான் தெரிவார்; பேசுவார்; ஆனால், உள்ளூர அவர், முழுக்க முழுக்க நம்மவர்.''

"என்னவோ அப்பா! என்னால்

நம்பமுடியவில்லை!''

"யாருமேதான் நம்பமாட்டார்கள். ஆனால் நான் சொல்வது உண்மை என்பதை, நீங்களே பார்க்கத்தானே போகிறீர்கள் - இன்று. கூட்டம் முடிந்ததும், விருந்து அவர்வீட்டிலேதான்!!''

"அவருடைய வீட்டிலா? ஏனப்பா, அப்படி ஏற்பாடு செய்கிறாய்? நமது கட்சியில் உள்ளவரல்லவே, அவர்!''

"நம்ம வீட்டிலேதான் விருந்து, என் கண்டிப்பான உத்தரவு - என்று கூறிவிட்டாரே.''

"அவர் யாரப்பா, நமக்கு உத்தரவு போட?''

"உத்தரவு என்று நான் தவறுதலாகச் சொல்லிவிட்டேன். வேண்டுகோள்!''

தம்பி! எனக்கும், ஒரு ஊரில் கூட்டம் ஏற்பாடு செய்து, என்னை அழைத்துப்போக வந்திருந்த கழகத் தோழருக்கும், நடைபெற்ற

உரையாடல், மேலே குறித்திருப்பது.

கழகத் தோழர் குறிப்பிட்டவர், பெரிய புள்ளியாகிக் கொண்டுவருபவர்! அதற்கான அறிகுறிகள் இருந்தன! அலுவல்கள் அப்படி! நிலபுலம் உண்டு! தொழில்கள் பலப்பல! அவருடைய அரசியல் என்பது, மொத்தமாக ஒரு வாரத்துப் பத்திரிகையை, ஒரு புரட்டுப் புரட்டிவிட்டுப் பழைய பேப்பர்க் காரனுக்கு எடை போட்டுக் கொடுக்கும் அளவிலும் வகையிலுந்தான் இருந்தது.

அமைச்சர்கள், திறப்புவிழாக்களுக்கு வருகிறபோதெல்லாம், அடக்க ஒடுக்கத்தையும், பற்று பாசத்தையும் காட்டிக்கொள்ளும் விதமாக, மேடைக்குப் பக்கம் அமருவார்! அமைச்சரின் உரையின் அருமையை உணர்த்தக் கையொலி எழுப்புவார்! கதர்மாலை போடுவார்! கேள்விப்பட்டிருக்கிறேன்.

எனவே, அவருக்கு நமது கழகம் என்றால் உயிர் என்று தோழர் சொன்னபோது எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

கூட்டம் நடைபெற்றது; அவர் மேடை அருகில் இல்லை.

மாலை போட்டார்கள் எனக்கு; அவர் பெயரால் அல்ல; அவருடைய கம்பெனியின் பெயரால்!! பொருளும் விளங்கிற்று; என் நண்பனுடைய திகைப்பும் தெரிந்தது.

விருந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

வீட்டுக்கு வெளியே வரவேற்று நின்றார், பெரிய புள்ளி!

கதராடை! கட்டுக்கட்டாக விபூதி! கனிவான பார்வை - ஆனால், அதிலே ஓர்விதமான கம்பீரம் வேண்டுமென்றே புகுத்தப்பட்டிருந்தது!!

"இவர்தான். . .'' என்று அவரை அறிமுகப்படுத்தி வைத்தார் நண்பர்.

"நம்ம கழகம் என்றால் உயிர்! இந்தக் கூட்டம் நடத்தக்கூட இவருடைய உதவி, நிரம்ப!'' - என்றார் மற்றோர் கழகத்தோழர்.

"அப்படியா?'' என்றேன் யான். அசை! பொருள் இல்லை!!

"அதெல்லாம் நம்பாதீர்கள். நான், காங்கிரஸ் கட்சி. கழகம் நல்லதோ கெட்டதோ, எனக்குத் தெரியாது. ஊருக்குப் பெரியவன் என்ற முறையில், நமது ஊருக்கு வருகிற"பெரிய மனிதர்களை' வரவேற்று உபசரிப்பது, என் கடமை. எங்கள் குடும்பத்தில் இது, தலைமுறை தலைமுறையாக நடந்து வருகிறது. கிருபானந்தவாரியார் நம்ம வீட்டில்தான் தங்குவார்! கிட்டப்பா கூட ஒரு தடவை இங்கு வந்து தங்கி இருந்ததைப்

போன வருஷம், கே. பி. சுந்தரம்மாள் இதே இடத்திலே நின்றுகொண்டுதான் சொன்னார்கள்! கம்யூனிஸ்ட் கந்தசாமியும் இங்கு வருவார்! வேறு எங்கே போவார்கள்? எங்கே வீடே ஒரு குட்டிப் பார்லிமெண்டு! என் கடையிலே கணக்கு வேலை பார்க்கிறானே கபாலி அவன், கழகம்! இன்று கூட்டத்துக்கான வேலையிலே பாதி அவன் தலையிலேதான் விழுந்தது. "என்னமோடா அப்பா! மாடுபோல உழைக்கிற ஜென்மம் நீ. இப்படி உயிரையே வைத்திருக்கிறாய் கழகத்தின்மீது. கழகம் உனக்கு என்ன வாரிக் கொடுக்கப்போகிறதோ தெரியவில்லை' என்று நான்கூடக் குத்தலாகப் பேசுவேன் - பயல் சளைக்கவேமாட்டான் - முதலில் கடமை, பிறகே உரிமை என்பான். கெட்டிக்காரன்!'' என்று பேசிக் கொண்டே போனார்.

கூட உட்கார்ந்து சாப்பிடவில்லை!

அது அமைச்சர்கள் வருகிறபோது செய்வார்போலிருக்கிறது, "அமைச்சர்கள் சம்மதித்தால்!'

தம்பி! மற்ற விவரம் சலிப்பை உண்டாக்கும்; பாடம் என்ன என்பதைக் கேள். . . அவர், கழகத்தாருடன் கனிவாக இருக்கிற "சேதி' கிளம்பியதும், உள்ளூர்க் காங்கிரஸ் கமிட்டியிலே பேச்சு! மாவட்டம்வரை பரவிற்று! மந்திரிகளின் காதுக்கே சென்றதாம்! விளைவு என்ன தெரியுமோ? அமைச்சர் அந்த ஊருக்கு வந்த போது, பக்கத்திலே இவர்!! ஆமாம்! காங்கிரசுக்குத்"தூண்' ஆகிவிட்டார்! தேர்தலுக்கும் தயாராம்!!

இப்படிப்பட்ட தந்திர முறை தெரிந்த செல்வவான்களும் இருக்கத்தானே செய்கிறார்கள்!! எவரையும் காங்கிரஸ் கட்சி, பயன்படுத்திக்கொள்ளத் தவறுவதில்லை!!

தஞ்சைத் தரணியில் நடைபெற்ற "சம்பவம்' ஒன்று கூறுகிறேன், தம்பி! இன்றைய காங்கிரஸ் முகாமில் உள்ளவர் களின் இயல்பு விளங்கிவிடும்.

கள்ளுக்கடை மறியல் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரம். தூய கதருடையும் அதனினும் தூய்மை யான இதயமும்கொண்ட தொண்டர்கள், கள்ளுக்கடை மறியல் செய்கிறார்கள்.

குடிகாரர்களின் காலில் விழுந்து கெஞ்சுகிறார்கள்.

கடைக்காரனிடம் மன்றாடுகிறார்கள்.

ஊரெங்கும் ஒரே பரபரப்பு!

"யார் பெத்த பிள்ளைகளோ பாவம், இப்படிப் படாத பாடு படுகிறார்கள், பாழாய்ப்போன குடியை ஒழிக்க'' என்று மூதாட்டி களெல்லாம் கூறி வாழ்த்தினர்.

”பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது - ஆனால், பானையைப் பார்த்தால், விட மனம் வரமாட்டேன் என்கிறதே! நல்ல பிள்ளைகள்! நம்ம காலிலே வீழ்ந்தே கும்பிடுகிறார்கள். நல்லதுதான் சொல்கிறார்கள் - குடி, குடி கெடுக்கும், விட்டுவிடு! வீடு விளங்கும்! நாடு வாழும்! என்றெல்லாம் சொல்கிறார்கள். உருட்டி மிரட்டிப் பார்த்தால்கூட அசையமாட்டேன்கிறார்கள். பரிதாபமாகத்தான் இருக்கிறது’’ என்று குடிகாரனேகூட பச்சாதாபம் காட்டுகிறான்.

அப்படிப்பட்ட நேரத்திலே, கள்ளுக்கடை நடத்தி, கனவான் ஆகிக்கொண்டுவந்த ஒருவர், கடுங்கோபம் கொண்டார்!

அவர், தம் வீட்டுப் பிள்ளை பீடி குடித்தானென்று கேள்விப்பட்டால்கூட, அலறித் துடித்து அடித்து மிரட்டி

”ஆகுமாடா பயலே இந்தக் கெட்ட காரியம்? கேவலமல்லவா? பீடி பிடித்தால், மார்பு உலர்ந்து, இருமல் ஏற்பட்டு, ஈளைகட்டி ஆளையே உருக்கித் தள்ளிவிடுமே! உனக்கேன்னடா இந்தக் கெடுமதி?’’ என்று கொதித்துக் கூறி இருப்பார்; கோல்கொண்டு தாக்கியிருப்பார். ஆனால், குடிகெடுக்கும் குடிமூலம் கொள்ளை அடிக்கிற காரணத்தால் குடிக்கவேண்டாம் என்று கெஞ்சுகிற மறியல் தொண்டர்கள்மீது கோபத்தைக் கக்குகிறார்! காட்டுக் கூச்சலிடுகிறார்! பேயாட்டமாடுகிறார்! குடிகாரர்களுக்குப் போலீஸ் பாதுகாப்புத் தருகிறார்.

”பயப்படாதீங்கடா! எல்லாம் பொடிப்பயலுங்க! ஏலே டே! எவனாச்சும் என் கடை வாசற்படியை மிதிச்சி கும்பிடு போட்டா, தொலைச்சிடுவேன் தொலைச்சு. குடி குடியைக் கெடுக்குமாமா? புதுசாக்

கண்டுபிச்சானுக! காந்தி சொன்னாராம் காந்தி! கொண்டாங்கடா உங்க காந்தியை! கேட்கிறேன். குடிகெடுதலா! அப்படின்னா காப்பி, டீ, கொக்கோ, ஓவல் இதெல்லாம் கெடுதல் இல்லையான்னு கேட்கறேன்? சொல்லச் சொல்லு பதில்! முடியுமா? அட பாலைத்தான் எடுத்துக்கொள்ளேன். என்னவாம் அது? பசுவோட இரத்தமல்லவா? அதை மட்டும் குடிக்கலாமா குடம் குடமா?''

இவ்விதமாகவெல்லாம் பேசிக் காங்கிரஸ் தொண்டர்களை ஏசிக் கடையை இலாபகரமாக நடத்திக்கொண்டு வந்தார். காங்கிரஸ் தொண்டர்களோ துளியும் தளர்ச்சியடையவில்லை. கடை முதலாளியின் ஏவுதலால் குடியர்கள் எச்சிலைத் துப்புவார்கள்! எதிரே நின்று ஏசுவார்கள்! ஆபாசமாக நடந்து கொள்வார்கள். இவர் இடி இடியெனச் சிரிப்பார்! சபாஷ்

பட்டம் கொடுப்பார்! அது மட்டுமா? அந்த வீரச் செயலுக்குப் பரிசாக ஒரு மொந்தையோ இரண்டோ இனமாகக்கூடத் தருவார்!

அப்படிப்பட்ட அறம் அறிந்த நாட்டுப்பற்று மிகுந்த நல்லவர்!!

இதனாலெல்லாம் காங்கிரஸ் தொண்டர்கள் அடங்காதது கண்டு வெகுண்டார். மூளை வேகமாக வேலை செய்தது; ஒரு திட்டம் தீட்டினார்!

ஒருவனைப் பிடித்து, உள்ளே ஊற்றி, தன் யோசனையைச் சொன்னார். அவன் எடுத்தான் சவுக்கு! ஓடினான் கள்ளுக்கடை நோக்கி ஓங்காரக் கூச்சலிட்டபடி!

கடைமுன்னால் மறியல் நடத்திக்கொண்டிருந்தனர் காங்கிரஸ் தொண்டர்கள் - அவர்கள்மீது வீசினான் சவுக்கு!

”சண்டாளப் பசங்களா! எனக்கா துரோகம் செய்யத் துணிந்துவிட்டிங்க! குடிகாரன் குடிகாரன்னு, நீங்க யாரைச் சொல்கிறீங்களோ, அவங்களெல்லாம், என்னோட பக்தனுங் களாச்சே! என் பக்தனுங்களுக்கு ஒரு கெடுதல் வந்தா, நான் பார்த்துகிட்டா இருப்பேன்! பார், உங்களை என்ன பாடு படுத்தறேன் என்று. படுத்துத் தூங்கும்போது, பாம்பா வந்து கடிக்கப்போறேன்! வாயிலும் மூக்கிலும் இரத்தமா வடிஞ்சி, ஐயோன்னு மாண்டுவிடப் போறிங்க! என் சாபம் பொல்லாதது! நான் யார் தெரியுமா? தெரியுமடா நான் யாருன்னு? நான் தாண்டா, மதுரை வீரன்!’’ - என்று கொக்கரித்தான். ஆவேசம் வந்ததுபோலப் பாசாங்கு செய்து.

சவுக்கடிப்பட்டனர்; சாபம் பெற்றனர்; எனினும், சளைக்கவில்லை.

மதுரை வீரனாக நடக்கச் சொல்லிக் காங்கிரஸ் தொண்டர் களுக்குச் சவுக்கடி வாங்கிக்கொடுத்த தூயவர். மேலவர் இன்று தம்பி! காங்கிரஸ் எம். எல். ஏ.யாகிவிட்டார், பரிசுத்தமாகி விட்டார்!!

கள்ளுக்கடைகளை அடைத்தாகவேண்டும் என்று சட்டம் பிறக்கிற வரையிலே அதிலே அடித்துத் திரட்டவேண்டியதைத் திரட்டிக்கொண்டார்! கள்ளுக்கடை நடத்தச் சட்டம் இடம் கொடுக்காது என்று ஏற்பட்ட பிறகு கதர்க்கடையின் தயவு பெற்றால் ஆளவந்தார்களின் அன்பும் ஆதரவும் கன கச்சிதமாகக் கிடைக்கும் என்பதைக் கண்டுகொண்டார்; காங்கிரஸ்காரராகிவிட்டார்!!

அன்று அப்படி நடந்துகொண்டோமே என்ற அச்சம் அவருக்கு இல்லை; அன்று நமது கட்சியை, தொண்டர்களை

இழிவுபடுத்தியவரை எப்படி மனம் ஒப்பி, நமது கட்சியிலே நடுநாயகமாக்கிக்கொள்வது என்ற வெட்கம் காங்கிரசின் தலைவர்களுக்கு இல்லை! ஏன்?

பெரியபுள்ளி! நிறையப் பணம்!! தேர்தலில் வாரி இறைப்பார்! வெற்றி கிடைக்கும் கிடைத்தால் காங்கிரஸ் கட்சியின் வெற்றி என்று கொண்டாடலாம் என்று ஒரு நப்பாசை பாவம், காங்கிரசாருக்கு!!

உண்மையான காங்கிரஸ் தொண்டர்களுக்கு பாவம் வேதனை இருக்கிறது - இருந்து? அவர்களுக்குக் காங்கிரசிலே இடம் ஏது? தொண்டு செய்யவேண்டிய நிலையே இல்லாதபோது தொண்டர்கள் எதற்கு? இப்போது இளைஞர் காங்கிரசல்லவா தேவைப்படுகிறது! காங்கிரஸ் தொண்டர்களல்லவே!

தம்பி! காங்கிரசுக்கு ஒரே நோக்கம் - தேர்தலில் வெற்றி பெறுவது. அதற்காக, எவரெவர் கிடைத்தாலும், முன்பு அவர் எப்படி நடந்துகொண்டவராக இருப்பினும். பல்லைக் கடித்துக் கொண்டு சகித்துக்கொண்டு, அவருடைய பணத்தைக்கொண்டு ஜனநாயகத்தை விலை கொடுத்து வாங்கிக் கட்சி வெற்றி பெற்றது என்ற விருதுபெறவேண்டும் - இதுதான், நோக்கமாகி விட்டது.

அண்ணா! நாம் தேர்தலில் ஈடுபடுவதும், சொந்த இலாபம் கருதித்தானாம்! கொள்கை பரப்ப அல்லவாம்! சட்டசபையிலா! திராவிடநாடு கிடைக்கும், அடப் பைத்தியக்காரர்களா! தூக்கு மேடை ஏறி அல்லவா திராவிடநாடு பெறமுடியும்!! என்று கேட்கிறார்கள் என்று கூறுகிறாய் - தம்பி! புரிகிறது!!

கூறுபவரில் இருவகையினர் உளர்.

ஒருவகையினர், நெடுநாட்களாகக் கூறிவருபவர்கள் - பரம்பரை ஆண்டிகள் என்று வைத்துக்கொள்ளேன் - ஒரு பேச்சுக்குச் சொல்லி வைத்தேன். அவர்கள் உண்மையிலேயே "பிரபுக்கள்.' அந்தஸ்தில்!

இன்னொரு வகையினர், எரிச்சலால் பேசுபவர் - பஞ்சத் தால் ஆண்டிகள் என்று வைத்துக்கொள்ளேன்.

எவராக இருப்பினும், அவர்தம் இந்தப் பேச்சுக்கு, ஏச்சுக்கு, நான் பதில் தேடித் தொல்லைப்படவேண்டியதில்லை. அறிவுத் தெளிவும், அபாரமான துணிவும் கொண்டவர்கள், "அருளிய' பதில், ஏராளமாகக் கைவசம் இருக்கிறது!!

அது அத்தனையும் "குப்பைகூளம்' - என்று கூறி இதோ தருகிறோம் கட்டித்

தங்கம், கெட்டி முத்து என்று, இன்று முற்றிலும் மாறான பேச்சுப் பேசுபவரேல் காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றும் என்ற கவிதா வாக்கியத்தைத்தான் பரிசாக அளிக்கவேண்டும்! வேறென்ன தரமுடியும்!!

இந்தத் தினாமூனாக்காரர்களைக் கேட்கிறேன், அட மடையர்களே! திராவிட நாடு வேண்டும் என்கிறீர்களே! அது கிடைக்கும் இடம் சட்டசபையா! குதிரைக்குக் கொம்பு இருந்தால், சட்டசபையில் திராவிடநாடு இருக்கும்!! - என்று பேசிவிட்டு, எப்படி? வெண்கலக்கடையிலே வேழம் புகுந்தது போலிருந்ததா பேச்சு? என்று பக்கம் உள்ளோரைக் கேட்டு பரவசமடையக்கூடும்!

அருமை! அருமை! தாங்கள் பேசிய உடனே, எனக்குக் கற்பனை சுரக்க ஆரம்பித்துவிட்டது; கவிதை வழியப் போகிறது, கலயம் கலயமாக

என்று கூறி,

திராவிடநாடு
திராவிடர்க்கென்று தேடிடும்
மதியிலிகாள்!!
திராவிடநாடு எலும்புக்கூடு எழுந்து நடவாது!!
எண்ணம் பலிக்காது!!

என்று பாடி மகிழக்கூடும்.

அதிலும், நம்மைவிட்டு நண்பர்கள் சிலர் விலகிவிட்டதால், புதிய துணிவுபெற்ற, போக்கிடமற்றவர்கள், மெத்தத் தெரிந்தவர் போல், ஏதேதோ பேசித் திரிகின்றனர்.

திராவிட நாடு சட்டசபையில் இல்லை!

சட்டசபை என்பது இந்தியப் பேரரசுக்கு உட்பட்டது. அதில் இருந்துகொண்டே, திராவிட நாடு கேட்டுப்பெற முடியும் என்பது வெறும்

சூது.

பதவிப் பித்துக்கொண்டதனாலேயே, சட்டசபை நுழைய விழைகிறார்கள்.

பொதுமக்களை ஏய்த்திட, தமது பதவிப்பித்தை மறைத்திட, திராவிட நாடு பெறப் போகிறோம் என்று பசப்புகிறார்கள்! நாட்டினரே நம்பாதீர்கள்! நல்லோரே நம்பாதீர்கள்! - என்று பேசுகின்றனர்.

தம்பி! பதவிப்பித்தன் யார் என்பதற்கு ஒரு இலக்கணம் வேண்டுமா? நான் கண்டுபிடித்தது அல்ல! ஏ! அப்பா! என்னால் முடிகிற காரியமா அது!! தரப்பட்ட இலக்கணம்!

"கொண்ட கொள்கையைக் கண்ட பதவிக்குக் காவு கொடுப்போரே பதவிப் பித்தர்கள்!''

பலே! பலே! இரத்தினச் சுருக்கமா இருக்கிறதே, என்கிறாயா? "இரத்தினம்',

“மாணிக்கம்‘, ”முத்து‘,”வைடூரியம்‘ என்றெல்லாம் போற்றத்தக்க அறிவுரைகள் ஊற்றுப் பெருக் கெடுத்து ஓடிவந்த வேளையில், நம்மை நாடி வந்த நல்லுரை இது!! நீர் நிரம்பிய ஆற்றினிலே, வாளையும் வராலும் துள்ளிடக் காண்கிறோம்! நீர் வற்றிப்போய், இங்கும் அங்கும் சேற்றுக்குழம்பு இருக்கும்போது, கெண்டைக் குஞ்சுகள்! தவளைக் கூட்டங்கள்! நண்டுகள்! நத்தைகள்! புழுக்கள்! பூச்சிகள்! இவை தாமே, இருக்க முடிகிறது! பாவலர் பாடிட, பாவையர் குடைந்து விளையாடிட, தீட்டிடத் தகும் அழகு என்று ஓவியர் கொண்டாடிட, கோலாகல மாகத்தான் ஆறு, கலகலவெனும் ஒலி எழுப்பியே, கண்டவர் களித்திடும் விதத்திலே களிநடமிடுகிறது - பிறகோ, வருவாய் குறைந்து, உள்ளது செலவாகி வறண்டு போகிறது! தெள்ளிய நீரினை அள்ளிப்

பருகினால் போதும். கவலையும், களைப்பும் பறந்தோடியே போகும், கனிரசமும் இதற்கு ஈடாகாது என்றெல்லாம் பாராட்டத்தக்க விதமாகத்தான், ஆறு காட்சி தருகிறது. ஆனால் நீர் குறைந்துபோன பிறகு?

அதுபோலத்தான், தம்பி! ஒரு கொள்கையிடம் எவருக் கேனும், பற்றுமிகுந்து, இருக்கும்போது, அதற்கான விளக்கம் கூற முற்படுவது, கூர்வாள் ஏந்திடும் வீரன். மாற்றார் இடையே பாய்ந்து செல்வதுபோன்றதுபோல இருக்கும்! வாதம் பிரமாத மாக இருக்கும்! உவமைகள் உருண்டோடி வந்திடும்! காரணங்கள் அடுக்கடுக்காகக் கிடைக்கும்!

மறுப்பரேல், கண்கள் கனலைக் கக்கும், வார்த்தைகள் வலிமைமிக்கனவாகும்! கடுமொழி கூறிடத் தோன்றும்!!

திராவிட நாடு எனும் கொள்கையிலே பற்றுக்கொண்ட நிலையில், அதற்கு ஆக்கம் தேடிட அரியதோர் வாய்ப்பாகச் சட்டசபை நுழைவினை மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. இதுகண்டு மனம் பொறாதார், சட்டசபையிலா திராவிட நாடு என்று கடாவினர்; கடுங்கோபம் பிறந்தது! பதவிப் பித்துக்கொண்டுதான், கழகத்தவர் சட்டசபை செல்லத் துடிக்கின்றனர் என்று கூறினர் - கூறினோர் சிறுமதியாளர்! என்று சினந்தெழத் தோன்றிற்று. அப்போது இதயத்திலிருந்து வெளிவந்த இலக்கண விளக்கம்தான்.

"கொண்ட கொள்கையைக் கண்ட பதவிக்குக் காவி கொடுப்போரே பதவிப் பித்தர்கள்.''

எனும் பழமொழி!

அது அப்போது, அண்ணா! இப்போது, வேறு என்று கூறுகிறார்! தம்பி! நமக்கு, அந்த "அப்போது'தான் தேவை! "இப்போது' இருக்கிறதே, அது நமக்கு வேண்டாம்!

அப்போது திராவிட நாடு கொள்கையிலே நம்பிக்கை இருந்தது - அதனால் அப்படிச் சொன்னார்கள் - என்று கூறுவது கேள் தம்பி! நமக்கு இப்போதும் அந்தத் திராவிட நாடு கொள்கையிலே நம்பிக்கை இருக்கிறது - எனவே, நம்மைப் பொறுத்தவரையில், அப்போது வேறு, இப்போது வேறு என்பது இல்லை. எனவே, "அப்போது' - அதாவது திராவிட நாடு கொள்கையில் நம்பிக்கை உள்ள நிலையில் - கூறப்பட்டதுதான் இப்போதும் போதுமானதாக, அறிவு நிரம்பியதாக இருக்கிறது!! ஆகவே, தம்பி! சட்டசபை நுழைவு குறித்துப் பொச்சரிப்புக் காரணமாகவோ பொறுப்பற்ற

தன்மையாலோ, எவர் என்ன கூறிடினும், இதோ, இஃதன்றி வேறோர் விளக்கம் நாம் அளிக்க வேண்டுவதில்லை - ஏனெனில், கொண்ட கொள்கையில் பழுது ஏற்படாத காலத்துக் கருத்து இது.

"உலகத்தின் அனுதாபத்தைப் பெறாமல் உலகின் எந்த மூலையிலும், அரசியல் நிலையை வேற்றுருக்கொண்டுவிடுவது எளிதல்ல.''

"இந்தியாவிற்கு விடுதலை எப்படிக் கிடைத்தது? நேருவே சொன்னார் - நாங்கள் முற்றிலும் எதிர்பாராத வகையில், இந்தியாவிற்குத் திடீரெனச் சுதந்திரம் கிடைத்துவிட்டது; நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தயாராகக்கூட இருக்க வில்லை'' - என்பதாக!

"ஜெர்மனியைப் பாசிச வெறியன்

என்று அழைத்துக் கொண்டிருந்த பிரிட்டன், உலகத்தின் முன் தன் முகத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கிற்று.''

"1938-க்குப் பிறகுதான் இந்தியாவின் விடுதலைப் பிரச்சினை - ஒரு பிரச்சினை என்பதாக உலகத்தவரின் கண்களுக்குப் புலப்பட்டது.''"1939ஆம் ஆண்டில், இந்தக் காங்கிரசார் எல்லாம் சட்ட சபைகளில் நுழைந்து, இந்தியாவின் விடுதலை குறித்துப் பேசினார்கள்.''

"ஜின்னாவின் பாக்கிஸ்தான் கோரிக்கை, நமது திராவிட நாடு கோரிக்கையைவிட"மாற்றுக் குறைந்தது; முஸ்லீம்கள் - அவர்கள் பல இனத்தவராயிருந்தாலும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள்' என்றுகூறி, அவர்களுக்காகப் பாகிஸ்தான் கோரப்பட்டது.''

”அந்தக் கோரிக்கை எப்படி ஈடேறிற்று? தேர்தல்கள் நடைபெற்றபோது, முஸ்லிம் லீக் அதில் கலந்துகொண்டது. பஞ்சாபில் முஸ்லீம் லீக் மந்திரிசபை; வங்காளத்தில் பஸ்லுல்ஹக் தலைமையில் முஸ்லிம் லீக் மந்திரிசபை; சிந்து மாகாணத்திலும் லீக் மந்திரிசபை, மேலும் பல மாநிலங்களிலும் முஸ்லீம் லீகர்கள் சட்டசபை உறுப்பினராயிருந்து குரல் எழுப்பிக்கொண்டிருந் தனர். இப்படிச் சட்ட மன்றங்களில் முழங்கப்பட்டபோது பாகிஸ்தான் கோரிக்கை மேலும் வலுப்பெற்று, வெற்றிபெறும் வாய்ப்பைப் பெற்றது.’’

”இன்று உலகத்தில் வளர்ந்துள்ள சூழ்நிலை - இது போன்றே பிரச்சினைகள் உலகத்தின் கவனத்தை ஈர்த்தா லன்றி வெற்றிபெறுவது கடினம் என்பதுதான்.’’

”யாரைப் பதவிப் பித்தர்கள் என்று கூறலாம்? யார் பதவி பெறுவதற்குச்

சகலத்தையும் விட்டுவிடுகிறார்களோ, அவர்களைத் தான் கூறலாம்.''

"உதாரணம் கூறவேண்டுமானால், நமது சென்னை மந்திரிகள் சுப்பிரமணியமும், ராஜாவும் கிடைப்பார்கள்.''

"தட்சிணப் பிரதேசம் வேண்டும்'' என்று பேசிக்கொண் டிருந்தவர்கள், மறுநாள் காலையில்,"தட்சிணப் பிரதேசம் வேண்டுமா - மந்திரி பதவி வேண்டுமா?' - என்று அவர்கள் தலைவர் கேட்டதும், "எங்களுக்கு மந்திரி பதவிதான் வேண்டும்' என்று கூறிவிட்டார்களே - அவர்கள்"பதவிப் பித்தர்கள்' எனப்படுவோர்!

"கொண்ட கொள்கையைக் கண்ட பதவிக்குக் காவு கொடுப்போரே"பதவி பித்தர்கள்!''

தனிமனிதர்கள் என்ற அளவிலே பதவிப்

பித்துக்கு உதாரணமாக சுப்பிரமணியம், ராஜா ஆகியோரைக் குறிப்பிட்டேன்.

"கட்சி என்ற முறையில், நமது ஆழ்ந்த அனுதாபத்திற்குரிய கம்யூனிஸ்ட்டு கட்சியைக் குறிப்பிடலாம்.''

"போன பொதுத் தேர்தலுக்கு முன்வரை,"முதலாளிகளின் முதுகெலும்பை முறிப்போம்' என்று பேசி வந்தவர்கள், தேர்தல் நேரத்தில், "முதலாளிகளின் விரோதம் எதற்காக?' - என்று எண்ணினார்களோ, என்னவோ,"உள்நாட்டு முதலாளிகள் எங்கள் நண்பர்கள், அவர்களுக்கு நாங்கள் வெளிநாட்டு முதலாளிகளிடமிருந்து பாதுகாப்புத் தருவோம்' என்று பேச முற்பட்டார்கள்.

"இப்படி, தேர்தலுக்கு முன்புவரை, முதலாளிகளை ஒழிப்போம் என்று பேசிவிட்டு,

தேர்தல் நேரத்தில், சட்ட சபையில் சில இடங்களைப் பெறுவதற்கு உதவுவதற்காக முதலாளிகளின் பாதுகாப்பாளராக - பணியாளர்களாக மாறு கிறார்களே, அவர்கள், பதவிப்பித்தர்கள்!''

"எங்களிடத்தில், அப்படி ஒரு சிறு நெளிவை ஆதாரப் பூர்வமாக எவராலும் எடுத்துக் காட்ட முடியாதே!''

"நாங்கள் தேர்தலில் தோற்றாலும் வெற்றிபெற்றாலும், எங்கள் பரிசுத்தமான இதயம் நிலைக்கும்; அதுவே எங்களுக்குப் போதும்!''

தி. மு. கழகம் தேர்தலுக்காகத் திடீரென அமைக்கப்பட்ட கழகம் அல்லவே! தோன்றிய எட்டு ஆண்டுகளாகக் கழகம் மக்களுக்கு மகத்தான பணிபுரிந்திருக்கிறது. கொள்கைக்காக எவ்வளவு பெரிய

தியாகத்தையும். எந்த நேரத்திலும் கேட்டாலும் தந்து வந்திருக்கிறது.

”இந்த நேரத்தில் சிலர், சட்டப் பிரச்சினை ஒன்றையும் கிளப்பியிருக்கிறார்கள்.’’

”தேர்தலில் வெற்றி பெற்றால் இவர்கள் எப்படி இந்திய அரசியல் சட்டத்திற்கு விசுவாசம் தெரிவிக்காமல் பதவிப் பிரமாணம் செய்யமுடியும்? அப்படிச் செய்தால், அதை எப்படி ஏற்பது?’’ - என்று சிலர் கேட்கின்றனர்.

“1939ஆம் ஆண்டிலும், 1946ஆம் ஆண்டிலும், ஆச்சாரி யாரும் - நேருவும், இன்ன பிற காங்கிரசாரும் பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுக்கு விசுவாசம் தெரிவித்துவிட்டுத்தான் பதவி ஏற்றனர். அதனாலேயே, மன்னரை இவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று எவரும்

கூறவில்லை; மன்னருக்கேகூடத் தெரியும் -"இவர்கள் நமக்கு உள்ளன்போடு விசுவாசம் தெரிவிக்கவில்லை' என்று!''

"அதுபோல நாம் இப்போது இந்திய அரசியல் சட்டத்திற்கு விசுவாசம் தெரிவிப்பது என்பது எந்த வகையானது என்பதை நாடு நன்கறியமுடியும்.''

தம்பி! சட்டமன்றம் செல்வது பொறுப்புணர்ந்து தான் கொண்ட கொள்கைக்கு வலிவூட்டும் நோக்குடனேதான் என்பதைக் கொள்கைப் பற்றுள்ள எவரும் மறுக்க இயலாது என்பதற்குச் சான்று வேறு ஏதும் தேவையில்லை - கொள்கைப் பற்று இருந்தகாலை வெளியிடப்பட்ட இக்கருத்துரை ஒன்றே போதும்.

திருப்பரங்குன்றம் மாநாட்டிலே குழுமிய கொள்கை மறவாக் கோமான்களுக்கு, இப்படி

இலக்கணம் பேசத் தெரியாம லிருக்கலாம்; ஆனால், அவர்கள் கொண்ட கொள்கையைக் கண்ட பதவிக்காகக் காவு கொடுக்கும் போக்கினரல்ல! ஆகவே தான், இலக்கணம் கூறினோர், கொண்ட கொள்கையைவிட்டுச் சென்றுவிட்டாரெனிலும், இவர்கள் கொள்கையுடன் இணைந்து விட்டோம் என்பதை எடுத்துக்காட்ட எழுச்சியுடன் கூடினர் - எவரும் கண்டு வியக்கத்தக்க விதத்தில்! கொள்கைக்காக வாதாடியவர்களே இன்று அதனை இழந்து பேசுவது, காது குடையும் அளவு கேட்கிறது - மணம் பதறத்தான் செய்கிறது - எனினும், எதிர்ப்புரைப்போருக்கு; மறுப்புரைப்போருக்கு, எரிச்சல் மூட்டுவோருக்கு, ஏளனம் பேசுவோருக்கு, அழித்து விடுவோம், ஒழித்துவிடுவோம் என்று ஆர்ப்பரிப்பவர்க்கு, பதிலளிப்பதும் காலக்கேடு என்று

உணர்ந்து, மாநாட்டில் திரண்டு வந்திருந்து தமக்குள்ள கொள்கைப் பற்றினை நாடறியச் செய்தனர். மற்ற நேரங்களில், மாநாடுகளில் கலந்துகொள்வது மகிழ்ச்சிக்குரியதாக இருந்திருக்கும் - இம்முறை, களிப்புப் பெற மட்டுமல்ல திராவிட நாடு திராவிடருக்கே எனும் கொள்கைக்கு நாங்கள் துணை நிற்கிறோம் என்பதை எடுத்துக்காட்டும் கடமையை மற்றவர்க்கு உணர்த்தவும் கூடினர்.

அழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன் என்று ஒருவர் பேசினால், ஒழித்துவிட்டுத்தான் உறங்கச் செல்வேன். என்று மற்றொருவர் பதிலுரைப்பது, கடினமுமல்ல, அதற்கு அளவற்ற அறிவும் தேவையில்லை.

இழிமொழி பேசுவோருக்குப் பதில் மொழி, அதனினும் இழிந்ததாகப் பிழிந்தெடுத்துத் தருவது என்பதும் இயலாதது மல்ல, எவரிடமும் பாடம் கேட்கவும் தேவையில்லை

- அறிவின் தரம் எவ்வளவுக்கெவ்வளவு குறைந்திருக்கிறதோ அந்த அளவுக்கு ஆபாசநடை மிகுதியாகக் காணப்படும்.

யானை துரத்திக்கொண்டு வந்தால், அச்சத்துடன் ஐயையோ! என்று அலறுவர்; பன்றி பாய்ந்தோடிவரின் அருவருப்புடன், ஐயையோ! என்று கூறியபடி ஒதுங்கிக் கொள்வர்.

பொது மாநாட்டிலே கூடிய பொறுப்புமிக்கோர் மறுப்புரை கூறிடவோ, வெறுப்புரை பேசிடவோ, நாராச நடை மொழிந்திடவோ விரும்பும் போக்கினரல்லர். நம்மையும் நமது கொள்கையையும், கழகத்தையும் அழித்திடப்போவதாக, முன்பு சிலர் முழக்கமிட்டபோது, இன்று அதே செயலில் தம்மைச் சிக்க வைத்துக்கொண்டவர்கள், கழக எதிர்ப்பாளர்களை எத்தகைய சூடான

சொற்களால் தாக்கினர் என்பதை, மாநாட்டிலே கூடியிருந்தோர் மறந்துவிடவில்லை; மறந்துவிடக்கூடியதாகவும் அமைந்ததல்ல, அந்தச் சொற்கள்!! சொற்களா? தீப்பொறிகள்!! அதனைக் கூச்சத்துடன்தான் நினைவுபடுத்தவேண்டி இருக்கிறது - நமது நாக்குக்குப் பழக்கமற்ற சரக்கு ஆதலால்,

வெத்து வேட்டெத்தனை நாள்? வீணாகிப் போகாதீர்! திருந்தித் தமிழ்த்தாயை, திராவிடத்தை வாழவைப்பீர் இல்லையெனில், நீரல்ல; இன்னுமொரு கூட்டம் சூழ்ந்து வருமென்றாலும் தூளாக்கிப் போட்டிடுவோம்.

எப்படித் தம்பி! வீரம்! தூளாக்கிப் போட்டுவிடுவோம் எதிர்த்து வரும் கூட்டத்தை என்கிறார்!

அதுசரி, அண்ணா! இன்னுமொரு என்ற வார்த்தைக்குப் பக்கத்தில், எழுத்தற்ற இடம்

இருக்கிறதே, அது என்ன அச்சுப் பிழையா? என்றுதானே கேட்க எண்ணுகிறாய். தம்பி! அச்சுப் பிழை அல்ல! பிழை என்னுடையது! எனக்குத் துணிவில்லை, அந்த இழிமொழியை எடுத்துக்காட்ட - எனவே விட்டொழித்தேன்.

கழக எதிர்ப்பாளர்களைக் கடுமொழியால் தாக்கும் போக்கு நம்மிலே, மிகச் சிலருக்கே உண்டு. அவர்கள் அப்போக்குக் கொண்டதற்குக் காரணமும், நம்மைவிட அவர்கட்கு கொள்கைப் பிடித்தம் அவ்வளவு அழுத்தமானது என்பதனால் அல்ல, அவர்களின் "பாணி' அது! பணியும் அஃதே! பிணி என்றும் கூறலாம்!!

"பாணி' கிடக்கட்டும் தம்பி! இன்று அவர்கள் ஈடுபட்டுள்ள பணிகூடக் கிடக்கட்டும், கொள்கைப்பற்றுக்கொண்டிருந்த நாட்களில் அவர்கள், எத்துணை அழுத்தந் திருத்தமாக, வாதாடி னார்கள் என்பதை எண்ணி

மகிழ்ச்சிகொள்வோம் - நன்றிகூடச் செலுத்திக்கொள்வேன், என்னைப் பொறுத்த வரையில். உன்னைத்தானே அண்ணா! இழிவாக ஏசுகிறார்கள் என்று ஆயாசத்துடன் கேட்கிறாய், தம்பி! எனக்கு, முப்பொரு முறை நான் கூறியபடி, பட்ட கடனைத் தீர்ப்பதுபோன்று, மனத்துக்கு ஒரு நிம்மதியே ஏற்படுகிறது, அவர்கள் ஏசும்போது. எத்துணைப் புகழாரம் சூட்டினார்கள் - விதவிதமான மலர்களைத் தொடுத் தெடுத்து!! நான், அவர்களுக்கு என்ன தர முடிந்தது? தம்பி! என்று தழதழத்த குரலில், அன்பின் காரணமாக, அந்தஸ்து காரணமாக அல்ல, அழைத்தேன்! அது ஒரு பிரமாதமா! ஆயிரம் பேர், அவர்களை"அண்ணாச்சி' என்று அழைக்கும்போது, நான் தம்பி என்று அழைத்ததுகூட ஒரு தவறு என்று எண்ணுகிறார் களோ என்னவோ! போகட்டும்;

பகை உள்ளம் உலைக்கூடம் போன்றிருக்கும் - தீப்பொறிதான் வெளிவரும், நான் வியப்படைய வில்லை; வெகுண்டிடவும் மாட்டேன்! இந்த இயல்பு இறந்து பட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன.

எனக்கிருக்கும் மகிழ்ச்சியெல்லாம், ஏற்புடைய கொள்கைக்கு எண்ணிலடங்காதார், அதற்கும் அஞ்சாதார், அணிவகுத்து நிற்கின்றார், ஐயப்பாடெழுப்பியும் ஆர்ப்பரித்தும் எதிர்த்தும் சிலர், அன்று நாங்கள் சொன்னதெல்லாம் அபத்தம், அநியாயம்! இன்றே உரைக்கின்றோம். இது உபநிஷதம் என்றே விந்தைப் பேச்சுதனை வீசிடும் இவ்வேளையிலும்!

நீண்ட மனக்குழப்பத்திற்குப் பிறகு, அறிவாளர் சிலர், தெளிவு பெற்றனர்; ஏமாளிகளாகவே நீவிர் இன்னும் இருக்கின்றீர்! இதிலே மகிழ்ச்சிகொள, மார்தட்ட

என்ன உளது? என்றும் கேட்டிடச் சிலர் உண்டு, அறிவேன், தம்பி. அறிவேன்! அன்னார்க்கொன்றுரைப்பேன்!

கூக்கூ! கூக்கூ! என்று கூவிடாமலே புறாவும் அக்கா அக்கா! வென்றழைக்கும் கிளியுமாகுமா!!

கூகூ! கூகூ! என்று கூவிடும் கிளி!

அன்னை, "மாடப்புறாவே!
மாமரக்குயிலே!
பச்சைக்கிளியே பாகே!"
என்று அழைத்திட்டாலும்,
குழவி, அம்மா! அம்மா!
என்றே இசைக்கும்,
அறியீரோ நீவிர்!!

என்ன அண்ணா! புறாவும் குயிலும் கிளியும் குழவியும், எப்படி எப்படிக்

குரலெழுப்பும் என்பது யாருக்கும் தெரியாதென்றா, கூறவந்துவிட்டாய் என்று கேட்டுவிடாதே தம்பி! நான் கூறுவது. வேறொர் உண்மையை விளக்க! எப்படி, குயிலும் கிளியும் புறாவும் குழவியும், தத்தமக்கு இயற்கையாக அமைந்துள்ள ஒலியையே மொழிந்திடுமோ, அதுபோலத் திராவிடர் திராவிட நாடு என்றுதான் முழக்கமெழுப்புவார்கள் - அது இயற்கை அந்த இயற்கையின்படிதான் நாம் நடந்துகொள்வோமே தவிர, ஒரு மாற்றமும் ஏற்படாது - என்பதை விளக்கத்தான், தம்பி, இதனைக் கூறினேன்.

திராவிடநாடு இலட்சியத்தை அண்ணாத்துரை கைவிட்டு விட்டான் என்று யாரோ கதைத்தனராம் - ஓராண்டுக்கு முன்பு. விடுவார்களா, பேச்சையும் மூச்சையும் அர்ப்பணிப்பவர்கள். பிடித்தார்கள் ஒரு

பிடி, என்னைக் குறைவாகப் பேசியவர்களை. எனக்கு எத்தனை பெரிய துணை இருந்தது என்று ஏக்கத்துடன் காட்டிட அல்ல, அதனை இதுபோது எடுத்துரைப்பது, திராவிடர், திராவிட நாடு என்று முழக்கமெழுப்புவது இயற்கையின் பாற்பட்டது என்ற பேருண்மையை, அதனை உரைத்தோரே உளம் குழம்பிப்போயிருக்கும்போது, அவர்கள் தெளிவுபெற அவர்களுக்குத் தருவது முறையல்லவா, அதனால்.

பித்தம் போக்கும் கஷாயம் தயாரிக்கும் மருத்துவருக்கு, பித்தம் மேலிட்டுவிட்டால், அதே கஷாயத்திலே ஒரு முழுங்கு தரமாட்டோமா, அதுபோல என்று வைத்துக்கொள்ளேன்!

திராவிட நாடு எனும் கொள்கை தீதானது என்று பேசிடும் காங்கிரசாருக்கு, அதிலும் குறிப்பாக ஆளவந்தார்களைப்

பிடித்துக்கொண்ட பித்தத்தைக் குறைக்கத் தயாரிக்கப்பட்ட கஷாயத்திலே, இதோ ஒரு முழுங்கு.

“இப்போது ஒருவர், நான் போகுமிட மெல்லாம் பேசுகிறார் -”அண்ணா திராவிட நாட்டுப் பிரச்சினையைக் கைவிட்டுவிட்டார்’ என்று! நான் அவருக்குத் தெரிவிப்பதெல்லாம், புறா - “கூக்கூ’ என்று கத்தும் வரையில், கிளி -”அக்கா, அக்கா’ என்று அழைக்கின்ற வரையில்; குயில் - “கூகூ, கூகூ’ என்று கூவுகின்ற வரையில்; குழந்தை”அம்மா, அம்மா’ என்று சொல்லுகின்ற வரையில், நாங்களும், ”திராவிட நாடு திராவிடருக்கே’ என்று சொல்லிக் கொண்டேதான் இருப்போம்! இயற்கையில் ஒருவேளை மாற்றம் ஏற்பட்டாலுங்கூட, எங்கள் கொள்கையில் மாற்றம் இருக்காது என்பதனை தெளிவாக அவர்கள் அறிதல்வேண்டும்.

“பிரிந்தால் திராவிட நாடு வாழுமா - என்கிறார்கள்! இப்போது ஒன்றாக இருப்பதனால் ஆபத்து வராமலா இருக்கிறது? சீனாக்காரன் 40 ஆயிரம் சதுர மைல்களைப் பிடித்து வைத்துக்கொண்டு இருக்கிறான்; நமது ஆட்சி என்ன செய்கிறது?”விட்டேனா பார், விட்டேனா பார்’ என்கிறது! இதனால் நமக்கும் பெரும் ஆபத்து இருக்கிறது!

”ஒரு நாட்டினுடைய சக்தி அதன் நிலப்பரப்பைப் பொறுத்து இல்லை, அந்த நாட்டு மக்களின் ஒற்றுமையிலும், விஞ்ஞான வளர்ச்சியிலும்தான் இருக்கிறது! சிறிய நாடாகிய எகிப்து, பெரிய நாடுகளாகிய இங்கிலாந்தையும் அமெரிக்கா வையும் எதிர்த்துப் பேசியது! இப்போது இரஷ்யாவையே எதிர்த்துப் பேசுகிறது! அந்த வலிமையை அந்த நாடு பெற் றிருக்கையில், அதைவிட எல்லா

வசதிகளையும் பெற்றிருக்கும் திராவிடம் வாழமுடியாதா? வாழ முடியும். எனவேதான் நாம் திராவிட நாடு கேட்கிறோம்.''

"இம்மாநிலத்தில் காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்தபின், எவ்வித நன்மையும் மக்களுக்கு ஏற்பட வில்லை! விலைவாசி உயர்வு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது! இவர்கள் எதைத் தொட்டாலும் அது உருப்படுவதில்லை!அதை நடத்துவதற்கு இவர் களுக்கு ஆற்றல் இல்லை! போதுமான அதிகாரம் இல்லை! ஆனால், அவர்கள் செய்வதெல்லாம் நம்மைத் திட்டுவதுதான்! அழகேசன் பதவிக்கு வந்த பிறகு காங்கிரசுக் கமிட்டியிலிருந்து பல ஆயிரம் ரூபாய் கொடுத்துச் சில பத்திரிகைகளை விட்டு, நம்மைத் திட்டச் சொல்லுகிறார்கள்! முடிந்துபோன சகாப்தத்தை மீண்டும் தொடங்கியிருக்கிறார்கள்! இதில் அவர்கள்

வெற்றி பெறமாட்டார்கள் என்பதற்கு நமக்கு மக்கள் மன்றம் நல்ல தீர்ப்பளித்து வருகிறது.''

திருப்பரங்குன்றத்திலே திரண்டு வந்திருந்தோர், திராவிட நாடு எனும் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டோர் - எனினும், ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்த காரணத்தினாலேயே எதையும் மறுக்கும் துணிவு பெற்றுவிட்ட நிலையில் காங்கிரஸ் கட்சி இருப்பதனால், பொதுத் தேர்தலில், அதனை முறியடித்துக் காட்டுவதன்மூலம், உலகுக்கு, நமது கொள்கைக்கு ஆதரவாகப் பொதுமக்கள் துணை நிற்கின்றனர் என்பதை விளக்கித் தீரவேண்டும் என்ற உறுதியைப் பெற்றனர்.

ஆனால், காங்கிரஸ் கட்சி, எதைப் பெரிதாக நம்பிக் கொண்டிருக்கிறது என்பதனை விளக்கவே தொடக்கத்தில், அந்தக் கட்சி திரட்டி வைத்துக்கொண்டுள்ள

பணபலம் பற்றியும், கொள்கையைப்பற்றிய கவலையற்று, எவரெவர், பெரிய புள்ளி களோ அவர்களைப் பிடித்திழுத்துத் தேர்தலில் ஈடுபடுத்தி, வெற்றியைக் கட்சிக்கு விருது ஆக்கிக்கொள்ளலாம் என்று திட்டமிடுவதையும் குறித்து எழுதினேன். ஏகாதிபத்தியத்தின் முன்னாள் எடுபிடிகளெல்லாம் இன்று பெரிதும் காங்கிரஸ் கட்சியிலே உளர். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில காங்கிரஸ் தொண்டர்கள் இன்றும், தூய்மை வேண்டும், வாய்மைக்கு மதிப்பளிக்கவேண்டும். கொள்கை வழி நிற்போரையே, தேர்தலில் ஈடுபடுத்தவேண்டும் சுரண்டிப் பிழைப்போர், சுக போகிகள், வகுப்புவாதிகள், வல்லடி வழக்கினர் ஆகியோரைக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் நிறுத்தக்கூடாது என்று எண்ணுகின்றனர். மனம்

குமுறுகின்றனர். இந்த மடல் எழுதிக் கொண்டிருக்கும்போது ஒரு செய்தி பார்த்தேன், ஆங்கில இதழில்.

விடுதலை இயக்கத்தை எதிர்த்து வெள்ளை யருடன் குலவிப் பலன் பெற்றவர்கள்.

பிற்போக்காளர்கள், வகுப்புவாதிகள், பிளவுப் போக்கினர்.

பர்மிட் லைசென்சு பெற்று இலாப வேட்டை யாடிக் காங்கிரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துவோர்.

இப்படிப்பட்டவர்களை, காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் நிறுத்தக்கூடாது என்று பஞ்சாப் காங்கிரஸ் குழு ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நல்லவர்கள்! ஆனால், பாவம், காங்கிரசின் இன்றைய அமைப்பு

முறையையும் போக்கையும் அறிந்துகொள்ளாதவர்கள்!! எனவேதான், சீலம் போதிக்கிறார்கள்! பாருக்கெல்லாம் பஞ்சசீலம் போதிக்கும் பண்டிதர் நடத்திச் செல்லும் காங்கிரஸ் கட்சிக்கு சீலம் எது என்பது தெரியாததாலா சீரழிவு ஏற்பட்டது. சீலம் நிரம்பத் தெரியும் பிறருக்கு எடுத்துரைக்கச் சொன்னால் நாள் கணக்கிலே கூறத் தெரியும்; ஆனால் செயலில் இல்லையே!

இவ்வளவு கடுமையான பத்தியம்கூட அல்ல, மிகச் சாதாரணமான ஒரு திருத்தம் கூறினார் சஞ்சீவ ரெட்டியார், காங்கிரசுக்குத் தலைவராக அமர்த்தப்பட்டிருப்பதனால். தொடர்ந்து பத்து ஆண்டுகள் பதவியில் இருந்தோர், இம்முறை தேர்தலில் ஈடுபடாமலிருப்பது நல்லது; இது என் யோசனை என்று கூறினார். எத்துணை

பெரிய அதிர்ச்சி காங்கிரஸ் வட்டாரத்தில்! என்னென்ன விதமான பொருள் விளக்கங்கள்!!

யாருக்கோ சீட்டுக் கிழிக்க, சஞ்சீவியார் இந்தத் தந்திரத்தைக் கையாள்கிறார் என்பவர்களும்,

இவருக்குக் கோபால ரெட்டியார் மீது கோபம்; அவரை வீழ்த்தத்தான் இந்த விபரீத யோசனை என்று பேசுபவர்களும்,

தனக்கு இருந்து வந்த பதவியைப் பதைக்கப் பதைக்கப் பறித்துக்கொண்டவர்கள், ஏன் பத்து ஆண்டுகளுக்கு மேல் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும் என்ற எரிச்சலின் விளைவு இந்த ஏற்பாடு என்றுரைப்போரும்,

இந்த யோசனை, பண்டித நேருவுக்கேகூட

அல்லவா வேட்டு வைப்பதாக அமைகிறது என்று மிரட்டுவோரும்.

ஆக, இவ்விதமெல்லாம், மூலைக்கு மூலை எதிர்ப்புக் கிளம்பி, அதனால் ஏற்பட்ட தொல்லைகளிலிருந்து தப்பிப் பிழைத்தால் போதும் என்ற நிலைமை ஏற்பட்டு, இப்போது சஞ்சீவியார் நான் சும்மா ஒரு யோசனைதான் சொன்னேன்; அது விதி அல்ல; கட்டளை அல்ல! எல்லோருக்கும் அது பொருந்தும் என்றும் கூறிடவில்லை - என்றெல்லாம் நித்தம் நித்தம் ஒரு புத்தம் புது விளக்கம் அளித்தபடி இருக்கிறார்.

பதவி சம்பந்தப்பட்ட பிரச்சினை எழும்போது, இவ்வளவு பதைபதைப்பு ஏற்படுகிறது; இதனை உணராது, தேர்தலிலே ஈடுபடவே, இன்னின்னாருக்குத் தடை விதிக்கவேண்டும் என்று ஆர்வம் காரணமாகச் சிலர் கூறினால், எரிமலை நெருப்பைக்

கக்குவதுபோலல்லவா, காங்கிரஸ் மேலவர்கள் எதிர்ப்பார்கள்!!

தூய்மை காத்திடும் பண்பினர் சிலர் காங்கிரசில் உளர் எனினும், அவர்தம் விருப்பம் நிறைவேறத்தக்க வகையில், தேர்தலில், வேட்பாளர்களைக் காங்கிரஸ் நிறுத்த முன்வராது. பணம் பெருத்தான்களைத்தான் பிடித்திழுத்து நிறுத்தி வைக்கும்.

இதை அறியாமலல்ல, நாம் பொதுத் தேர்தலில் ஈடுபடத் திட்டமிட்டிருப்பது.

எத்துணைதான் பணபலம் காங்கிரஸ் கட்சியிடம் குவிந்து கிடப்பினும், இந்தப் பதினான்கு ஆண்டு ஆட்சியினால், அக்கட்சி தேடிக்கொண்டுள்ள வெறுப்பும், பொதுமக்களின் மனக் கொதிப்பும், தம்பி! சாதாரணமானதென்று, தள்ளிவிடும்

துணிவு, சர்வாதிகார வெறி பிடித்தலையும் காங்கிரசுக்குக்கூட இருக்க முடியாது.

எந்தத் துறையிலும், கேடுபாடும், முறைகேடும், சீர்குலைவும் ஏற்பட்டுப் போய்விட்டிருக்கிறதேயன்றி, மக்கள் வளம் காண வழி கோலப்பட்டதாகக் கூறுவதற்கில்லை.

மற்ற மற்ற மாநிலங்கள் கிடக்கட்டும், இங்கு பச்சைத் தமிழர் ஆட்சியிலே, பள்ளிகள் பலப்பல ஆயிரமாம், விளக்குகள் சிற்றூர் எங்கணுமாம், கூறுகிறாரே பெரியார், என்பாய். ஆமாம், தம்பி! விளக்குகள் உள்ளன, புற இருளை அகற்ற! பள்ளிகள் உள்ளன அகத்து இருள் நீக்க! ஆனால் இருள் நீக்கப்பட்ட நிலை காண்கிறோமா? அல்லது இந்த விளக்கேற்றும் காரியத்தை, வேறொருவரும் செய்ததில்லையா? செய்ய இயலாதா? செய்திடும் செம்மலும், மாயமந்திரத்தாலா,

மாகாளி பூசையாலா செய்து காட்டுகிறார் - இல்லையே, தம்பி! தைலம் தீர்ந்துபோன கட்டைபோல உடலுடையான் உழைக்கிறானே, அவன் சிந்தும் வியர்வைத் துளிகள் வெள்ளிப் பணமாகி வரியாகி, துரைத்தனத்தாரிடம் சேர, அதைக்கொண்டு, சிந்தியது சிதறியது சீரழிவுக்குப் பயன்பட்டது, சிதைந்துபோக, மிச்சம் இருப்பதைக்கொண்டு செய்யப்படும் செயலன்றோ! இதிலே, மார்தட்ட, உரிமை கொண்டாட என்ன இருக்கிறது!!

வயிறு காய்கிறது கிராமத்து மக்களுக்கு, அதற்கு வழி செய்யக்காணோம், வெளிச்சம் போட்டுக்காட்டுகிறீர்கள். மின்சார விளக்குப் போட்டோம் என்று கித்தாப்புப் பேசு கிறீர்கள் என்று சட்டமன்றத்திலே, நான் கூறியபோது, அமைச்சர் களுக்கு அடக்கமுடியாத கோபம் வந்தது; நமது தோழர்கள் அனைவருமே, நான் கூறியது முற்றிலும் உண்மை

என்றனர் - அவர்களிலே சிலர் இப்போது விளக்குப்போடும் ஆட்சிக்குக் கொடி தூக்கும் தொண்டர்களாகிவிடத் துடிக்கிறார்கள் என்று காங்கிரஸ் வட்டாரத்திலேயே பேசப்படுகிறது, நிலைமை அதுபோலானால், உள்ளபடி பரிதாபப்படவேண்டியதுதான். காட்டிலே தன்னிச்சையாக உலவிய அரிமாகூடச் சர்க்கஸ் காரனிடம் சிக்கினால், ஓடு என்றால் ஓடுகிறது, படு என்றால் படுக்கிறது! பார்க்கிறோமே!

அந்த நிலை, என்னை நிந்தித்துக் கிடப்போருக்கு ஏற்படக் கூடாது என்று மெத்தவும் விரும்புகிறேன். ஆனால், நண்பர்கள் என்னைக் கேட்கிறார்கள், அண்ணா! விலகியவர்களுக்குத் திராவிடநாடு தீது என்று புது எண்ணம் பிறந்திருக்கலாம் - இருக்கட்டும் - கனியே அழுகிப்போனால், புழு நெளிகிறது! அண்ணாதுரைக்கு அரசியலே

தெரியாது என்று பேசலாம் - பேசட்டும், அதனால் குறையேதும் ஏற்பட்டுவிடாது - ஆனால் இதிலெல்லாம் மனமாற்றம் ஏற்பட்டுவிட்டது என்பது பற்றிச் சளைக்காமல் பேசுகின்றவர்கள்.

டில்லிப் பேரரசின் ஏகாதிபத்தியப் போக்கு,

அதனிடம் இங்குள்ள மந்திரிகள் காவடி தூக்கிடும் கேவலம்.

டில்லிப் பேரரசின் நிர்வாக ஊழல்களால் கோடி கோடியாகப் பணம் பாழாகும் கொடுமை, அதைத் தடுத்திடத் திறனின்றி, தத்துவம் பேசிக் கிடக்கும் நேருவின் கையாலாகாத் தன்மை,

ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னகம் வஞ்சிக்கப் படும் கொடுமை,

அதனைத் தட்டிக் கேட்க முடியாத நிலையில் எட்டு உருவாரங்களாக மந்திரிகள்

இருக்கும் கேவலத்தன்மை,

வரிகள் வளர்ந்து மக்கள் வாட்டமடைவது,

அதனைக் குறைத்திட மனமின்றி, மமதை அரசாள்வது,

வரிச்சுமை பெரிதும் ஏழையின் முதுகிலேயே ஏற்றப் பட்டு அவன் முதுகெலும்பு முரிந்த நிலையில் நெளிவது,

பணக்காரர்கள் மேலும் பொருள் திரட்டிக் கொழுப்பது,

சுரண்டிப் பிழைக்கும் சுகபோகிக்கு, பாதுகாப்புத் தருவது, பாதுகாப்புப்பெறுபவர் காங்கிரசின் தேர்தல் நிதிக்காகப் பொருள் கொட்டிக் கொடுப்பது, முந்திராபோன்ற மோசடிக்காரனிடம் காங்கிரஸ் குலவிப் பணம் பெற்ற பாதகம்,

அதைக் கண்டித்தவர்கள்மீது பண்டிதர்

பாய்ந்து விழும் அக்கிரமம்,

கடன்மேல் கடன் வாங்கி, எதிர்காலத்தைப் பயங்கர மானதாக்கும் கொடுமை,

கடன்பட்டுப் பெற்ற பொருளைக்கொண்டு வட நாட்டை வளமாக்கும் அக்கிரமம், விலைவாசி விஷம் போல ஏறியதால் ஏற்பட்டு உள்ள வேதனை,

அதனைக் கவனிக்காது மதோன்மத்தர்களாக மந்திரிமார் இருப்பதன் கேவலம்,

தென்னகம் தேம்பிக் கிடப்பதைக் கவனியாதிருக்கும் மடமை,

அதனால் மூண்டிடப்போகும் புரட்சியின் தன்மை,

என்றெல்லாம் பொறி பறக்கப் பேசுவார்களே - இப்போது காணோமே!

ஏனண்ணா! ஒரு மணி நேரம் உன்னைத் தூற்றச் செலவிடட்டும் - ஒரு அரைமணி நேரமாகிலும், இதற்கு ஒதுக்கக் கூடாதா? காணோமே! காரணம் என்ன? காங்கிரசாட்சியைக் கண்டிக்கத் தேவையில்லை என்ற முடிவா? அந்த பிரச்சினை யிலும் புத்தறிவு ஏற்பட்டுவிட்டதோ? என்று கேட்கிறார்கள். நானென்ன பதில் கூறமுடியும்?

காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலங்களைப்பற்றி, மிகக் காரசாரமாகக் கண்டித்தவர்கள், ஐயமில்லை! இப்போது, சித்தம் எப்படியோ தெரியவில்லை! ஆனால் வெளியே கேட்கும் சத்தம் அவ்வளவும், அந்த அண்ணாதுரைக்கு என்ன தெரியும்? என்பது தான்!! பார்ப்போம் போகப்போக!

காங்கிரசாட்சி விளக்குப் போட்டது. ஒன்றே போதும், மீண்டும் மக்கள் ஆதரவைப்பெற

என்று பேசுவோர் எவரெனினும், அவர்தம் திருப்பார்வைக்கு ஒரு தெளிவுரையை வைக்கிறேன் - தெளிவுரை தந்தவர்கள் இன்று சிந்தை திரிந்து போயிருக்கக்கூடும்!!

மந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்கள், இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தைப் பிரரேபித்துப் பேசுகையில் குறிப்பிட்டார் - "இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலு மில்லாத அளவு சென்னை மாநிலத்தில்தான் 2,500 கிராமங் களுக்கு மின்சார வசதி தரப்பட்டிருக்கிறது' - என்று!

உண்மைதான்; சென்னை மாநிலத்திற்கு இந்த ஐந்தாண்டுத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி இதுவரை 2,500 கிராமங்களுக்கு மின்சார ஒளி கிடைத்திருப்பதுதான்! "அடுத்து வரும் ஆண்டுகளிலும், ஆண்டொன்றுக்கு 1000 கிராமம் வீதம் மின்சார ஒளிபெறும்' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

”கிராமங்களுக்கு மின்சார ஒளி தரப்பட்டிருப்பதனாலேயே நாட்டு மக்களின் பொது வருவாய் அதிகரித்து, கஷ்டங்கள் நீங்கி, வாழ்வு கிடைத்துவிட்டதா என்றால் இல்லையே! மின்சார ஒளி கிராமங்களுக்கு மிக அவசியமாகத் தேவையான வசதிகளுள் ஒன்று; ஆனால் அது மட்டுமா மக்களின் தேவை?

”தமிழ் நாட்டின் இன்றைய தேவை. கிராமங்கள்தோறும், வீடுகள்தோறும் மின்சார விளக்கு வேண்டுமென்பதல்ல; மக்களுடைய பொது வருவாய் அதிகரித்து வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டுமென்பதுதானே!’’

”அதைப்போலவே, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத் திலும் சென்னையைப் பொறுத்தவரை, கிராமங்களுக்கு மின்சார வசதி செய்வதும், வைத்திய வசதி, அடிப்படைக்

கல்வி, குடிசைத் தொழில் இவற்றை அதிகரிப்பதும்தான்'' என்று கூறப்படுகிறது.

"நோய் போக்க - வைத்திய வசதியும், அறியாமை நீங்க அடிப்படைக் கல்வி வசதியும் அவசியந்தான்; மிக மிக அவசியந் தான்; நோயைப் போக்கிக்கொண்டு மனிதன் வாழ்வதற்கு, உணவே கிடைக்கவில்லை என்றால்,"அவனுக்கு நோய் போக்க வசதி செய்கிறேன்' என்கிறது சென்னை அரசாங்கம்!

"ஒரு ரூபாய் வைத்திருக்கிறான் ஒருவன்; அவனுக்குப் பசி கடுமையாக இருக்கிறது; அவன் தனது பசியை நீக்க, அந்த ரூபாயைக்கொண்டு உணவுப் பண்டம் வாங்குவானா? அல்லது"வீட்டிலே கொளுத்தி வைத்தால் "கம்'மென்று மணக்கும்' என்று கருதி ஊதுவத்தி வாங்குவானா?"ஊதுவத்தி வாங்குவேன்' என்கிறார் சுப்பிரமணியம் - தனது வரவு செலவுத் திட்ட சொற்பொழிவின்

மூலம்! மனிதனே, சோறின்றிச் சாகும்போது ”அந்த மனிதனுக்கு மருந்தும் கல்வியும் தருகிறேன்’ என்று கூறிக்கொண்டிருக்கிறார் சுப்பிரமணியம்!

“தென்னாட்டில், மந்திரி சுப்பிரமணியம் அவர்கள், கிடைக்கிற மின்சாரத்தைக்கொண்டு மக்களின் பொது வருவாய் அதிகரிப்பதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய காரியங்களைச் செய்யாமல், கிராமங்களுக்கு”வெளிச்சம்’ போட்டுக்கொண்டிருக்கிறார்; ஆனால் வடநாட்டிலோ கிடைக் கின்ற மின்சாரத்தைக்கொண்டு அந்த நாட்டு மக்களின் பொது வருவாயை அதிகரிக்கும் வகையில், புதுப்புதுத் தொழிற்சாலை களை உருவாக்கி வருகிறார்கள்; வடநாடு தொழில் வளம் மிகுந்த நாடாக வேகமாக வளர்க்கப்படுகிறது; தென்னாடு

விவசாயத்தை மட்டும் நம்பிக்கிடந்து தேயுமாறு செய்யப்படுகிறது.''

"விவசாயத்தை மட்டும் நம்பிக் கிடக்கும் ஒரு நாடு வளருமா? நாளாவட்டத்தில் தேய்ந்துதான் போகும்! ஏனெனில், விவசாயத்தின் அளவு மாறக்கூடியதல்ல; வளரக்கூடியதல்ல.''

"இந்த நாட்டில் மக்கள் பெருக்கம் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பதையும் மனதில்கொண்டு சற்றுக் கவலையோடு சிந்திப்பவர்களுக்கு,"நாம் வளர முடியாத விவசாயத்தை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால் எதிர்காலச் சந்ததியினருக்கு வாழ்வளிக்க என்ன திட்டம் வைத்திருக்கிறோம்' என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.''

"பெருகி வளரக்கூடிய தொழில்கள்

எல்லாம் தென்னாட்டில் இல்லை - வடநாட்டில்தான்; இந்த நிலையினால், கூரிய சிந்தனை உள்ளவர்கள் தெரிந்து கொள்ளலாம் - தென்னாட்டின் எதிர்காலத்தை!''

"திராவிட நாட்டின் விடுதலையை நாமாகவே பெற்றாலும் பெறலாம்; அல்லது வடநாட்டுக்காரர்கள் தாமாகத் தந்தாலும் தந்துவிடலாம்!''

"தாசிகள் பற்றிய கதைகள் நீங்கள் நிரம்பப் படித்திருக்க லாம் - தாசி, ஒருவனிடத்தில் பணம் இருக்கும் வரையில்தான்,"என்னைத் தழுவிக்கொண்டே இருங்கள்; நீங்கள் இல்லா விட்டால் நான் ஏது? நான் இல்லாவிட்டால் நீங்கள் ஏது?' "ஈருடலும் ஓருயிரும்' என்பதுபோலப் பேசுவர்; ஆனால், அவனிடமிருந்து பணம் பூராவும் பறிபோன பிறகு,"அவன் இனி நம்

வீட்டிலிருந்தால் சோற்றுக்குக் கேடு' என்ற நிலைமைக்கு வரும்போது, அவனைக் கழுத்தைப்பிடித்து நெட்டித் தள்ளி விடுவார்கள்; அதைப்போலவேதான் ஏகாதிபத்தியங்களும்!

"இன்று வடநாட்டு ஏகாதிபத்தியம், வடநாட்டைத் தொழில் வளமிக்க நாடாக்கி, அந்தத் தொழில் வளர்ச்சியினால் உற்பத்தியாகும் ஏராளமான பொருள்களுக்குத் தென்னாட்டை"மார்க்கெட்' ஆக்கித் தென்னாட்டு மக்களின் செல்வத்தைச் சுரண்டி, நாளாவட்டத்தில் அவர்களை ஓட்டாண்டியாக்கிவிடும்; அப்போது இனியும் தென்னாடு வடநாட்டுடன் ஒட்டிக்கொண் டிருப்பதனால் பயனில்லை'' என்று தெரிந்ததும், தென்னாட்டிற்கு "விடுதலை'' வழங்க முன் வரலாம்.

"அதுவரையில் - நம் செல்வம் முழுவதும் சுரண்டப்படும் வரையில் - தாசிபோல,"நாம்

எல்லாம் பாரத புத்திரர்களல்லவா? நமக்குள் ஒற்றுமை வேண்டாமா? எல்லோரும் இந்தியராயிற்றே?' - என்பர். நாம் ஓட்டாண்டிகளான பின், நீங்கள் ஏன் வட நாட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்கிறீர்கள்? நீங்கள் யார்? நாங்கள் யார்?'' என்று பேசுவர் - தாசிபோல!

"எனவேதான், நாம் சற்றுப் புத்திசாலித்தனமாக, நம்மிடம் கொஞ்ச நஞ்சம் இருக்கும் செல்வமும் சுரண்டப்படுமுன் வட நாட்டு ஏகாதிபத்திய அணைப்பினின்றும் விலகிக்கொள்ள வேண்டும் என்று தி. மு. கழகம் கூறுகிறது; அப்போதுதான் இந்த நாட்டு விவசாய, தொழிலாள, பாட்டாளிவர்க்க மக்கள் நலம் பெற்று, நல்ல பல திட்டங்கள் தீட்டி, தொழில் வளர்த்துச் செல்வம் பெருக்கிச் சுதந்திரத்துடன் வாழ முடியும்.''

ஓட்டாண்டிகளாகிவிடுமுன்பு,

விடுபடுக! வாழ்வு பெறுக! என்றுதான், தம்பி! திருப்பரங்குன்றம் மாநாடு, திருவிடத்தாருக்குத் தெரிவிக்கிறது.

திராவிட நாடு கற்பனை என்ற எண்ணம், ஊட்டப்பட் டிருக்கலாம் - விவரமறியாதார் எவரேனும் எழுதிய ஏடு படித்த தால்; அல்லது திராவிடநாடு கொள்கைக்காகக் பரிந்து பேசும் நாம், எந்த ஏடும் படிக்காதவர்கள் என்ற எண்ணம் உள்ளே புகுந்திருக்கலாம்.

எல்லைபற்றிச் சந்தேகம்; இனம் குறித்து ஐயப்பாடு; நடைமுறைக்கு ஒத்து வருமா என்பதுபற்றிய அச்சம் பெரும் படை பலத்துடன் உள்ள பேரரசின் தாக்கும் சக்தியைப் பக்கம் நின்று பார்த்ததால் ஏற்பட்ட பீதி; இவை எல்லாம் எழக்கூடும், எவருக்கும். குழப்பம் ஏற்பட்டிருக்கலாம் மனத்தில்; கூடிப் பணியாற்றிய இடம் வெறுப்புக்குரியதாகத் தோற்றமளிக்கலாம்; ஒட்டு இல்லை உறவு

இல்லை என்ற உறுதி பிறந்திருக்கலாம். மனம்தானே! சிந்தையை அடக்கியே சும்மா இருப்பது அரிது!!

ஆனால், வடக்கு வஞ்சிக்கிறது தெற்குத் தேய்கிறது என்பதுபற்றிக் காங்கிரசாட்சிக் பாசீசமாகி வருகிறது என்பது குறித்து, வரிப்பளு, கடன் சுமை, விலை ஏற்றம் இவைப்பற்றிக் குழப்பமோ, மனமாற்றமோ ஏற்பட்டிருக்க முடியவே முடியாதே!

திராவிட நாட்டுக்காக வாதாடவேண்டாம் - எதிர்ப்புச் செய்வதைக்கூட நிறுத்திக்கொள்ளவேண்டாம் - சுவையும் பயனும் நிரம்பியதாக இருக்கக்கூடும்; ஆனால் பொதுமக்களை அலைக்கழிக்கும் ஆட்சி நடத்துகிறதே காங்கிரஸ் கட்சி; அதைக் கண்டிக்க, எதிர்க்க, பொதுமக்களை அதன் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டிய கடமையிலிருந்து நழுவலாமா? வழுவலாமா?

தி. மு. கழகத்திலிருந்து விலகிக் காங்கிரசிலே சேர்ந்து விடுபவர்களுக்கு, அந்தச் சிக்கல் இல்லை! திராவிட நாடு மட்டும் தானே பிடிக்கவில்லை. அண்ணாதுரையும் பிடிக்கவில்லை. சரி! விட்டுவிடட்டும்! நட்டமில்லை!! ஆனால், ஆட்சிக் கொட்டுகிறது, மக்கள் துடிக்கிறார்கள்; அந்தப் பிரச்சினையில், ஒவ்வொரு அரசியல் கட்சியும், தன் கடமையை நேர்மையுடன் செய்திட வேண்டாமா?

எந்தப் பிரச்சினையிலே சந்தேகம் எழுந்தாலும், நான் ஆச்சரியப்படமாட்டேன், தம்பி! ஆனால், காங்கிரசாட்சியினால் ஏற்பட்ட விளைவு கேடுபாடுதான் என்ற பிரச்சினையிலேயும், சந்தேகம் ஏற்பட்டுத் தயக்கம் ஏற்பட்டால்தான், நிச்சயமாகத் திடுக்கிட்டுப் போவேன்.

அந்த முறையிலே பார்க்கும்போதுதான்

நான் ஆதித்த னாரைப் பாராட்டுகிறேன். அவர், திராவிட நாடு எனும் திட்டத்தைக் கண்டிக்கிறார். ஆனால், அதேபோது - தமிழ்நாடு தனிநாடு என்று முழக்கமிடுகிறார் - வடநாட்டுப் பாசீசப் போக்கை எதிர்க்கிறார் - வடநாட்டுப் பேரரசின் பிடியிலிருந்து, தமிழ்நாடு விடுபடவேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார். எனவே அவர், திராவிட நாடு திட்டத்தை எதிப்பதைக்கூட, என்னைப் பொறுத்தவரையில், கண்ணியமான எதிர்ப்பு என்று கொள்ளுகிறேன்.

ஆனால், திராவிடநாடு திட்டத்தை எதிர்க்கத் தொடங்கி, வடநாட்டுப் பேரரசுமீது தொடுத்துவந்த எதிர்ப்பை நிறுத்திக் கொண்டு, காங்கிரசாட்சியினால் ஏற்பட்ட கேடுபாடுகளைக் கண்டித்து, அந்த ஆட்சியை ஒழித்தாகவேண்டிய கடமையையும்

கைவிட்டுவிடும் போக்கிலே சிலர் நடந்துகொள்ளும்போதுதான் எனக்கு வியப்பாக மட்டுமல்ல, திகைப்பாகக்கூட இருக்கிறது.

திராவிட நாட்டுத் திட்டத்தை எதிர்ப்பது மட்டுமே தமது திட்டமாக்கிக்கொள்ளாமல், வடநாட்டுப் பேரரசின் பாசீச ஏகாதிபத்தியப் போக்கையும், நேர்மையுடன் கண்டிப்பவர்கள், நமது திட்டத்தை எதிப்பவர்கள் எனினும்கூட, பொதுமக்களைப் பாசீசப் பிடியிலிருந்து விடுவிக்கும் கடமையிலிருந்து தவறாத வர்கள் என்பதற்காக, நாம் பாராட்டக்கூடச் செய்யலாம்.

திராவிட நாடும் வேண்டாம் - வடநாட்டுப் பிடிபற்றிய கண்டனமும் எதிர்ப்பும் தேவையில்லை - காங்கிரசாட்சியின் கேடுபாடுகளையும் எதிர்க்கத் தேவையில்லை என்றால், தனிக் கொடியும் படையும், நடையும்

எற்றுக்கு! இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தவா? அதனைக் காங்கிரசுக்குள்ளே இருந்து கொண்டே நடத்திக்கொள்ளலாமே!! என்றுதான் எவரும் கூறுவர்.

விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் தவிர, மற்ற அனை வருக்கும், காங்கிரசாட்சியினால் விளைந்துள்ள கேடுபாடுகள் பற்றித் துளியும் ஐயப்பாடுகள் இல்லை! எப்படி இருக்கமுடியும்? தழும்புகள் இருக்கின்றனவே, தாக்கப்பட்டது நினைவிற்கு வராமலா இருக்கும்!

மற்றது கிடக்கட்டும் முதலில், நமது முதலமைச்சர் மறவாமல் கூறுகிற சோற்றுப் பிரச்சினையை பார்க்கச் சொல்லு, தம்பி! ஆட்சியின் இலட்சணம் தெரிந்துவிடும்.

1956ஆம் ஆண்டு
படி அரிசி - 54 காசு
1-வீசை புளி - 66 காசு

1-படி கொத்தமல்- - 1-12 காசு
மிளகாய் வற்றல் 1 வீசை - 1-86 காசு
துவரம் பருப்பு படி - -50 காசு
காப்பிக்கொட்டை வீசை - 6-09 காசு
சர்க்கரை வீசை - 1-22 காசு

தம்பி! 1947-லிருந்து காங்கிரசாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, 1947ஆம் ஆண்டு விலையைவிட இந்த விலை அதிகம். மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்து, வேதனை அதிகமாகிறது. விலைவாசி ஏறிவிட்டதைக் கண்டிக்கின்றன எல்லாக் கட்சிகளும். ஆகட்டும் பார்க்கலாம் என்கிறது காங்கிரஸ் அரசு! அதற்குப் பெயரே ஏழை பங்காளன்!

மூன்று ஆண்டுகள் உருண்டோடுகின்றன!

எத்தனையோ கண்டனக் கூட்டங்கள் - சட்ட மன்றப் பேச்சுகள் - மாநாடுகள் - தூதுக்

குழுக்கள் - பத்திரிகைத் தலையங்கங்கள்! பலன்? தெரிந்துகொள்ளத்தான்வேண்டுமா, தம்பி! சரி! இதோ பாரேன் பலனை!! விலைவாசி விஷம்போல் ஏறுகிறது; வாழ்க்கையை நடத்த முடியவில்லை என்றுதானே மக்கள் முறையிட்டார்கள்! ஆகட்டும் பார்க்கலாம் என்றல்லவா காங்கிரஸ் அரசு அறிவித்தது! அறிவித்துவிட்டுப் பிரச்சினை யைக் கவனிக்காமலே இருந்துவிட்டதோ? இல்லை! இல்லை! கவனித்தது! கவனித்ததன் பலன்? கேள், தம்பி அந்தக் கூத்தை!!

1959ஆம் ஆண்டு

படி அரிசி - 1-12 காசு

புளி வீசை - 3-50 காசு

மிளகாய் வீசை - 5-00 காசு

துவரம்பருப்பு படி - 1-50 காசு

காப்பிகொட்டை வீசை - 8-50 காசு

எப்படி ஏழைபங்காளன் அருள்? விலையைக் குறைக்கச் சொல்- மக்கள் முறையிட்டார்கள். விலை மிக அதிகமோ என்று வினவினர் அரசினர். ஆம்! ஐயனே! படி அரிசி 54 காசு விற்கிறது!! என்று புலம்பினர்! பாலகா! அழாதே! கவனிக்கிறேன் என்று வாக்களித்தது காங்கிரஸ் அரசு. மூன்று ஆண்டுகள் ஓடின - படி அரிசி 54 காசாக இருந்தது 1 ரூபாய் 12 காசுகளாக உயர்ந்தது!

பதறி இருப்பார்கள் மக்கள்! ஆமாம்! ஆனால் அரசினர் கேட்டிருப்பார்களல்லவா, 1956ஆம் ஆண்டு வந்து முறையிட்டீர் களே விலை ஏற்றமாக இருக்கிறது என்று. இப்போது என்ன சொல்லுகிறிர்கள் என்று. என்ன சொல்லி இருப்பார்கள் மக்கள்! ஐயனே! அது பொற்காலம் படி அரிசி 54 காசுக்குக் கிடைத்தது - இப்போது 1-12 காசு விலை!

என்று விம்மியிருப்பர்.

இந்த விலை ஏற்றத்தைக் கண்டிப்பதற்குக்கூடவா "மேஷ ரிஷபம்'' பார்க்கவேண்டும்! பொதுமக்களுக்கு சமுதாயத் தொண்டாற்றும் கடமையை மறவாதவர் எவரும் எந்தப் பிரச்சினையிலே மனக்குழப்பம் இருப்பினும், இதிலே தெளிவும் திட்டவட்டமான போக்கும் பெற்று, இந்த நிலைக்குக் காரண மான காங்கிரசாட்சியைக் கண்டிக்கவேண்டுமல்லவா!

திருப்பரங்குன்றம் மாநாடு, மிகப் பெரிய கண்டனம் - காங்கிரசாட்சியின் போக்குக்கு.

மக்கள் பாடவில்லையே தவிர, முன்பு சுதேசமித்திரனில் வெளிவந்த பாடல், பலருக்கு நினைவிற்கு வந்தது - விலைவாசி ஏறிக்கொண்டேபோவது குறித்துக் கண்டனம் தெரிவிக்கப்பட்ட போது. பாடக்

கற்றுக்கொண்டாகிலும் தம்பி! பலருக்கும் பாடிக் காட்டவேண்டிய, பாடல்:

புளி மிளகாய் தனியா! - இதற்கு
ஏழரை நாட்டுச் சனியா?
விலை குறைவது எப்போ? - இதை
விளக்கிச் சொன்னால் தப்போ?
மிளகாய் தனியா கூடி - வெளி
நாட்டுக்குப் போனதோ ஓடி!
புளியும் மலடியாச்சோ? - காய்த்துப்
பழுக்க மறந்து போச்சோ?
குழம்பின் மீது ஆவல் - வைக்கக்
கூடா தென்றே மூவர் -
அழும்பு எண்ணம்தானோ? - இந்த
அவல நிலையும் ஏனோ?

மக்களின் மீது வெறுப்பா? - இந்த

மூன்றுக்கும் இப்போ சிரிப்பா?
அக்கறை காட்ட வேண்டும்

விலைவாசி ஏற்றம் என்பது எங்கும் ஏற்பட்டுவிட்டுள்ள நிலைமை; இதற்காகக் காங்கிரசாட்சியைக் கண்டிக்கலாமா என்று கேட்போரும்,

விலைகள் ஏன் ஏற்றமாயின நின்றால், பணம் பெருத்து விட்டது, மக்களிடம் பணப்பழக்கம் அதிகமாகிவிட்டது, எந்தச் சாமான் என்ன விலை என்றாலும் கொடுத்து வாங்கும் சக்தி வளர்ந்துவிட்டது, அதனாலேயே விலையை உயர்த்தி விட்டார்கள் என்றும்,

பணப்புழக்கம் ஏன் அதிகமாயிற்று என்றால், தொழிலாளர் களும் ஊதியம் பெறுவோரும் முன்பு பெற்றதைவிட அதிக

அளவு பணம் பெறுகிறார்கள் என்றும், விளக்கம் என்று எண்ணிக்கொண்டு, ஒரு நிலைமையை மற்றோர் நிலைமைக்குக் காரணம் என்று, தாமாகப் பொருத்திக் காட்டச் சிலர் முற்படுகின்றனர்.

கூலி உயர்வும் ஊதிய உயர்வும் ஏற்பட்டுள்ளன; ஆனால், அதைவிட வேகமாகவும் அதிக அளவிலும் விலைகள் ஏறிவிட் டிருக்கின்றன. எனவே, கூலி உயர்வு ஏற்பட்டுப் பணபுழக்கம் அதிகமாயும், பாட்டாளிகளால் வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களைக்கூடப் போதுமான அளவு பெறமுடியவில்லை; தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

பணப்புழக்கம் பொருள் உற்பத்தியும் ஒரே சீராக இருந்திருந்தால், நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்காது. அத்துடன், உற்பத்தி பெருகப்பெருக, முந்திராக்கள்

வளர்ந்தால், கள்ளச்சந்தையும் கொள்ளை இலாபமும் தானே வளரும்; வளரும்போது ஏழையின் வயிற்றில்தானே அடிப்பார்கள்! இப்போது நடப்பது இதுதான், இதைக் கட்டுப்படுத்தவேண்டு மென்றால், கள்ளச் சந்தைக்காரர்களிடம் கனிவு காட்டும் போக்கு ஆட்சிப் பொறுப்பில் உள்ள கட்சியினருக்கு இருத்தல் கூடாது. முந்திரா தரும் பணம், இந்தத் தூய்மையையா காட்டுகிறது? டாட்டா வணிகக் கோட்டம் அள்ளிக் கொடுக்கும் நன்கொடை, எதன் பொருட்டு?

உலகெங்குமே விலைவாசி ஏற்றம் இருக்கிறது, இங்கு மட்டுமல்ல என்று, வாதாடி பொறுப்பைத் தட்டிக் கழித்து விடவும் முனைகின்றனர். இதன் உண்மையையும் அறிந்து கொள்ளவேண்டுமல்லவா?

ஷெனாய் என்றோர் பொருளாதாரப் பேராசிரியர் இருக்கிறார். அவர் பதவிப்பசி

கொண்டதால் ஆளும் கட்சியைப் பகைத்துக்கொண்டவரும் அல்ல; எதிர்க்கட்சி நடத்துவதால் ஏதேனும் பேசித் தீரவேண்டிய நிலையில் உள்ளவர் என்றும் எள்ளி நகையாடிட முடியாது. பொருளாதாரத்துறை நிபுணர் என்ற நிலையில், கருத்தளித்து வருபவர்.

”பணப்பெருக்கமும் விலைவாசி ஏற்றமும் எல்லா நாடுகளிலும் உள்ளன என்று ஒரு தவறான வாதம் பேசப்பட்டு வருகிறது.

1955ஆம் ஆண்டு நிலைமையிலிருந்து 1959ஆம் ஆண்டு நிலைமைவரை 27 நாடுகளின் பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து பார்த்ததில் எல்லா நாடுகளிலும் பணப்பெருக்கமும் விலை ஏற்றமும் ஏற்பட்டுவிட்டன என்பது பொய்யுரை என்று விளக்கமாகத் தெரிகிறது.

பெல்ஜியம்
ஜெர்மனி
ஜப்பான்

இம்மூன்று நாடுகளிலும், விலை ஏற்றம் 100-க்கு 1 என்ற அளவில்தான் இருக்கிறது; இங்கோ, 100-க்கு 33 என்ற அளவு விலை ஏறிவிட்டிருக்கிறது.

பிரான்சு
இத்தாலி

எனும் இருநாடுகளில், விலைஏற்றம் இல்லை! சில குறிப்பிட்ட பண்டங்களின் விலை விழுந்தே இருக்கக் காண்கிறோம்.

கனடா
அமெரிக்கா
இங்கிலாந்து

ஆகிய நாடுகளிலே விலை ஏற்றம் 100-க்கு 2 என்ற அளவுதான்!''

பொருளாதார நிபுணர் ஷெனாய், இந்த உண்மையைச் சுட்டிக்காட்டி, இங்கு, விலைவாசிகள் கண்மண் தெரியாமல் ஏறி இருப்பதைக் கண்டிக்கிறார்.

ஆட்சியிலுள்ளோர் என்ன செய்கின்றனர்?

நமது கழகம் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கலந்து, விலைவாசிக் கண்டன நாள் நடத்தியபோது, காங்கிரஸ் கட்சியினர், கேபேசின ர் - கலகம் செய்கிறோம் என்றனர் - கலங்கமாட்டோம் என்று வீறாப்புப் பேசினர் - விலைகளைக் குறைக்க வழி என்ன என்று ஆராயவில்லை, செயல்படவில்லை. ஏன்? காங்கிரஸ் கட்சிக்கு எத்தனை எதிர்ப்பு எழும்பினாலும், அச்சப்படத் தேவையில்லை, ஆட்சியிலிருந்து நம்மை அகற்றக்கூடிய வலிவு எந்த எதிர்க்கட்சிக்கும் இல்லை; எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றாகி வந்தாலும் அது நடவாது என்ற எண்ணம் ஏற்பட்டு ஆணவம்

உண்டாகிவிட்டது.

ஆளும் கட்சிக்கு ஆணவம் பிடித்துக்கொள்வது அதன் அழிவுக்குத்தான் வழி அமைக்கும். எனவே, ஆர்ப்பரிக்கட்டும் ஆணவத்தால் என்று கூறி, நம்பிக்கையோ, மகிழ்ச்சியோ பெறுவது தவறு. ஏனெனில், ஆளும் கட்சிக்கு ஆணவம் பிடித்திருப்பதுபோலவே, எதிர்க்கட்சிகளுக்கு நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டிருக்கிறது; காங்கிரசை வீழ்த்துவது முடியாத காரியமாகி விடுமோ என்ற பயம் பிடித்துக்கொள்கிறது. பொதுமக்களோ, காங்கிரசே எந்தத் தந்திர முறைகளையாவது கண்டுபிடித்து, மீண்டும் பதவியைப் பிடித்துக்கொள்ளும், நாமேன் அதனுடைய பகையைத் தேடிக்கொள்வது; மனம் குமுறுகிறது, என் செய்வது!! என்ற நிலையில், பீதியே அடைகின்றனர்.

மக்களாகப் பார்த்து மக்களாட்சி

அமைக்கிறார்கள்; அந்த உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, என்பது தத்துவம் - எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்பது அதனை அழகுற எடுத்துரைக்கும் கவிதா வாக்கியம். ஆனால், நடைமுறை? மக்கள் நடுங்கிக் கிடக்கின்றனர், நாடாள முற்பட்ட காங்கிரஸ் கட்சியை நீக்கும் வலிவற்று; வகையற்று.

இங்கிலாந்து நாட்டிலே ஒரு மன்னன் - கோனாட்சி என்பது முறுக்கேறியிருந்த நாட்களில்,

அவன்கூட, மக்களாகத் தமக்கென உறுப்பினரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்ற உரிமை வழங்கினானாம்.

அந்த உரிமை வழங்கிய மன்னன் வெளியிட்ட அறிக்கை என்ன தெரியுமா, தம்பி!

மடாலயத்துக்கு அதிபர்

தேர்ந்தெடுக்கப்படவேண்டும் - தேர்ந்தெடுக்க வேண்டியவர்கள், மடாலயத்தில் உள்ள துறவிகள். இவர்களுக்கு மன்னன், உரிமை தருகிறான், அதிபர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள, அதற்கான அறிக்கை இதோ!

”மடாலயத்துத் துறவிகளே! தேர்தல் நடத்திக் கொள்ளும் உரிமையை உமக்கு அளிக்கிறேன்! நீவிர், கூடி, தாரளமாகத் தேர்தலை, நடத்தி ஒருவரை மடாலய அதிபர் ஆக்கிக்கொள்ளலாம்.

அந்த உரிமை உமக்கு அளிக்கிறேன்.

ஆனால், ஒரு நிபந்தனை. என் கணக்கராகப் பணிபுரியும் ரிச்சார்டு என்பவனைத் தவிர வேறு எவரையும், மடாலய அதிபராகத் தேர்ந்தெடுக்கக் கூடாது. என் கட்டளை!’’

பணக்கோட்டை கட்டிக்கொண்டு பாதுகாப்பும் வலிவும் தேடிக்கொண்டுவிடும் கட்சிகள், இந்த மன்னன் தேர்தல் நடத்திக்கொள்ளும் உரிமையை வழங்கி, அதேபோது, இன்னாரைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறானே, அதுபோல, ஐந்தாண்டுக்கு ஒருமுறை தேர்தல் உரிமையை மக்களுக்குத் தருகிறார்கள் - தந்துவிட்டு, ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக்கொள்ள ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுகிறார்கள்.

அமைச்சர்கள், அதிகாரிகள் புடைசூழச் சென்று ஓட்டு கேட்கும்போது, ஊரைச் சீராக ஆள்வதுபற்றித் தாமே பேசும் போது, உமக்கு உற்ற குறை எதுவெனினும் போக்கும் திறம் எமக்கன்றி வேறு எவர்க்குண்டு என்று எக்காளமிடுகையிலே, ஏழை எளியவர் நிமிர்ந்து நின்று, "நன்று! நன்று! உமது

தற்பெருமை! நாடாள நீவிர் வந்த நாள் தொட்டு, நாங்கள் கண்டது வேதனையன்றி வேறென்ன? ஒரு காரியமாவது ஒழுங்காகச் செய்ததுண்டா?'' என்றா கேட்கமுடியும். குமுறலை அடக்கிக்கொண்டு, கூனி, கோணி நின்று, உமக்கல்லால் வேறு எவர்க்குண்டு எமை ஆளும் உரிமை என்றன்றோ கூறிவிட வேண்டிவரும். இந்நிலையில், எளியவர்கள், தமது மனச்சாட்சி யின்படி நடந்துகொள்ள வழி ஏது? மக்களாட்சியின் மாண்பு செயல்முறையால் சிதைக்கப்பட்டுப் போகிறது - பெரும்பாலும்.

இந்திய துணைக்கண்டம் மிகப்பெரிய நிலப்பரப்பு - இங்கு எல்லா மாநிலங்களிலும், அமைப்புகளைக்கொண்டு, ஒரு கட்சி இயங்கி, தேர்தலில் ஈடுபடுவது என்றால், எளிதான காரியமுமல்ல; அத்தகைய அமைப்பினை விரைவிலே ஏற்படுத்திக்கொள்வதும்

இயலாது.

விடுதலை பெற்றளித்த வீரர் குழாம் என்ற விருதுடன், காங்கிரஸ் கட்சி தேர்தல் களத்திலே குதித்தது - வெற்றி அதனைத் தேடி வந்தது. எதிர்ப்போர்கள் கிளம்பினர். கனதனவான்கள், வணிகக் கோமான்கள், குலத்தலைவர்கள், பட்டதாரிகள், பெரும் பண்ணைகள் - இப்படிப்பட்டவர்கள்!

நாடு மீட்ட நல்லவர்களே நாடாளவேண்டும் என்று மக்கள் தீர்ப்பளித்தனர் - பேழையுடையாரை ஏழையர் உலகு தோற்கடித்தது.

மகாராஜாக்கள் - பூபதிகள் - மிட்டாமிராசுகள் - ஆலை அரசர்கள் - வணிகக் கோமான்கள் - பலரும் மண் கவ்வினர்.

ஜரிகைக் குல்லாய்களைக் காந்திக் குல்லாய் தோற்கடித்தது.

இதனைக் கண்டதும் ஏழையர் வெற்றித் திருநடன மிட்டனர்; வேதனை தீர்ந்தது என்று எண்ணினர், வேளை வந்தது புதுவாழ்வுபெற என்று நம்பினர்.

எமது தோழர்கள், ஏழை பங்காளர்கள், காந்தி சீடர்கள், தியாக சீலர்கள், இந்தக் காங்கிரசார்! இவருக்குத்தான் எமது "வாக்கு' - இதயம்!! இவரை எதிர்த்திட, எவர்க்கே இயலும்? அரண்மனையின் அலங்காரப் பொம்மைகள், மாளிகை மதோன்மத்தர்கள், இராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜ கோலாகல எனும் விருது படைத்தோர்கள் என்போரெல்லாம், உருண்டனர் கீழே, தேர்தலில் தோற்று! - என்று எக்காள மிட்டனர். ஏழையர் - திட்டமிட்டனர். தோற்றவர்கள்.

காங்கிரசில் சேர்ந்துகொண்டனர் - சேர்த்துக்கொள்ளப் பட்டனர். காங்கிரஸ் ஈட்டி வைத்திருந்த தியாகம், இந்தச் சீமான்களுக்கு

கேடயமாக்கப்பட்டது.

தண்டி யாத்திரையின்போது, தரைக்கும் படுக்கைக்கும் வித்தியாசம் தெரியாமல் நடந்துகொண்ட வெறியர்கள்; வெள்ளை நிறம் கண்டாலே வீழ்ந்து கும்பிட்ட அடிமைகள், கதர்த்துணி என்றாலே கோணித்துணி, சாணித்துணி என்று இகழ்ந்து பேசிய அகந்தையினர் அனைவரும், காந்தி கட்சியின ராயினர்!!

அரண்மனைகளிலே காங்கிரஸ் கொடி பறக்கலாயிற்று - நீண்ட காலமாக அந்தக் கொடியைத் தமது குடில்களில் மட்டுமே ஏற்றி வைத்திருந்த ஏழையர் கொடி போட்டுவிட்டோம் பணக்காரர் கோட்டைமீது என்றெண்ணிக் களித்தனர்; கொடி ஏற்றிக்கொண்டோம், இனிக் காந்திபடை, நமது வெற்றிக்குப் பாடுபடும் என்று சீமான்கள் உணர்ந்தனர்.

குச்சு நாயுடன் குலவும் வெள்ளைக்காரக் கவர்னரின் படத்துக்குத் தங்கமுலாம் பூசப்பட்ட சட்டம் போட்டு, மாடத்தின் கூடத்திலே முன்பு மாட்டி வைத்திருந்த சீமான்கள், அந்தப் படத்தை அப்புறப்படுத்தினர் - அண்ணல் காந்தியார் படத்தை, அரிஅரன் படத்தருகே தொங்கவிட்டுத் தொழுதிடத் தக்க தேவ தேவன் இவரே என்றனர். இதுகண்டு, காங்கிரஸ் தொண்டர்கள் பூரித்துப்போயினர்.

இவ்வளவு இலகுவாக இவர்களை வலையில் போட்டுக் கொள்ள வழி இருக்கும்போது, வறட்டு ஜம்பத்துடன் நாம் இலட்சக்கணக்கிலே பொருளைக் கொட்டி எதிர்த்து, பணத்தைப் பாழாக்கிக்கொண்டு, சிறுமையையும் தேடிக் கொண்டோமே முட்டாள்தனமாக, என்றுகூட அந்தச் சீமான்கள் எண்ணினர்; ஆயாசப்பட்டனர்.

புற்றிருக்க, வெற்றிடத்தில் உலவி,

அடிபட்டுச் சாகும் பாம்புபோல, புதரிருக்க அதிலே பாதுகாப்புத் தேடிடாமல் பாதையிலே படுத்திருந்து ஊராரின் தடியடிக்கு இரையாகும் ஓநாய்போல அல்லவா இதுநாள்வரை இருந்து வந்தோம், இதோ, காப்பளிக்கக் காத்திருக்கிறது காங்கிரசுக்கட்சி, இது நமக்குக் கேடயமாகும், வாள், நம் பணம்! இனி வெற்றி நமக்கே, என்றனர்; வெற்றிமேல் வெற்றியும் பெற்றனர்.

வெள்ளையன் காலத்திலேகூட, வெறும் பணக்காரன் என்பதற்காக, ஆட்சிபீடத்திலே இடம் அளிக்கப்பட்டதில்லை; தோட்டக்கச்சேரியும் துரையுடன் கை குலுக்கலும், பட்டமும் மெடலும் என்பதோடு, சரி! மெத்தப் படித்தவர்களை மட்டுமே, மேலான அலுவல் பார்க்க இடமளித்தனர்.

இப்போது, பணம் படைத்தான் என்றால் போதும், பதவி அவனைத் தேடிவருகிறது!!

ஒருவர் மட்டுமே, இந்த நிலை ஏற்படும், நாடு கெடும் என்பதனை உணர்ந்தார், அண்ணல் காந்தியார். எனவே அவர், "காங்கிரஸ் தன் புனிதக் கடமையைச் செய்தாகிவிட்டது. இனி அதனைக் கலைத்துவிடவேண்டும். இல்லையேல், அதனைச் சுயநலமிகளும் பாதகர்களும் புகலிடமாக்கிக்கொண்டு, பொது மக்களை ஆட்டிப் படைப்பர், அது ஆபத்தாக முடியும்' என்று தம்முடைய பத்திரிகையில் எழுதினர், படித்தனர், சிரித்தனர், கலைத்திடுவதா காங்கிரசை!! என்று கேட்டுக் கண்சிமிட்டினர்.

இன்று, காங்கிரஸ் கட்சியின் "தூண்களாக' - முன்னாளில், துரைமார்களின்,"கைத்தடிகளாக' இருந்தவர்கள் விளங்குகின்றனர்.

துகிலுரித்த துச்சாதனனுக்குத் துரோபதை மாலையிடுவதா? என்று கேட்டோமே, தம்பி!

சென்ற தேர்தலின்போது; கவனமிருக்கிறதா?

காங்கிரசின் அமைப்பு, இதுபோலாகிவிட்டது.

இதனால், காங்கிரசின் கட்சி கெடுக்கப்பட்டுவிட்டது, என்பது வெளிப்படை, குடிலன் கைதொடின் மஞ்சளும் கரியாகும் என்றார் மனோன்மணீயம் ஆசிரியர்!

ஆபத்து அந்த மட்டோடு இல்லை! காங்கிரஸ் கெட்டது மட்டுமல்ல, சீமான்களும் சிற்றரசர்களும் காங்கிரசை எதிர்க்க முடியாது என்று கூறி, அதன் அடி பணிந்துவிட்டார்கள், நாம் எம்மாத்திரம், காங்கிரசுக்கு! நம்மால் ஆகுமா, காங்கிரசை எதிர்க்க! என்ற எண்ணம் வலுத்தது - பொதுமக்கள், காங்கிரஸ் கட்சியிடம் பரிவு காட்டிய நிலைமாறிப் பயப்படும் நிலை பிறந்தது.

காங்கிரஸ் ஏழையர் முகாமாகத்

தியாகிகள் திரருச்சபையாக இருந்தபோது, ஏழையரும் நடுத்தர வகுப்பினரும், அதில் உள்ளவர்களைப் பாசத்துடன் நேசித்தனர்! ஊருக்கு உழைக்கும் உத்தமர்கள் என்று பாராட்டினர். உயிரையும் இழக்கத் துணியும் விடுதலை வீரர்கள்! இவர்கள்போல, வீரமும் தியாகமும் நமக்கெல்லாம் ஏற்பட முடியுமா? முடியாது! முடியாது! எனவே, இவர்கட்கு நாம் தொண்டாற்றி மகிழ்விப்பது தேசியக் கடமை என்று கருதினர்.

தொண்டர்களைக் காணும்போதே அன்பு சுரக்கும்.

பாவம்! இந்தப் பிள்ளையாண்டானை அடி அடி என்று போலீஸ் அடித்தது - மண்டையை உடைத்தது - ஆனால், துளிக்கூடக் கலங்கவில்லை, இந்தத் தம்பி! - என்று நெஞ்சம் நெக்குருகக் கூறுவர்.

பெரிய அறிவாளி! நாடு இருக்கும் நிலையும் உலகம் போகிற போக்கும் உணர்ந்து பேசுகிறார். வெள்ளையர்களே திணறுகிறார்கள், பதில் அளிக்கக் முடியாமல் - என்று மதிப்புடன் பாராட்டினர் காங்கிரசின் தலைவர்களை.

காங்கிரஸ்காரர்களிடம், அன்பும் மதிப்பும் மிகுந்திருந்தது. அவர்களுடன் பழக, உறவாட, அனைவருக்கும் விருப்பம்.

இன்று அன்பு காட்டவும் மதிப்பளிக்கவும், காங்கிரசில் அதிகம் பேர் இல்லை.

காங்கிரசிலுள்ளவர்களிலே சிலரைக் காணும்போது, பொதுமக்களுக்கு வியப்பே வருகிறது! இவர்களெல்லாமா, காங்கிரசில்? பொருத்தம் துளியும் இல்லையே! என்று எண்ணுகின்றனர்.

தஞ்சைத் தரணியில் கள்ளுக்கடை

நடத்தியவர் காங்கிர எம். எல். ஏ-யாகக் காட்சி தருவது காணும் பொதுமக்கள், மதிப்பும் அன்புமா கொள்ள முடியும்? வியப்படைகின்றனர்.

காங்கிரசிலுள்ள வேறு சிலரைக் காணும்போது, பொது மக்களுக்குப் பச்சாதாப உணர்ச்சி மேலிடுகிறது - சுயராஜ்யம்! சுயராஜ்யம்! என்று முழக்கமிட்டுக்கொண்டு உழைத்தான்; எவனெவனோ காங்கிரஸ் கட்சியின் தயவுபெற்று வாழ்கிறான் வளமாக; இவனையோ, பராரியாக்கிவிட்டு விட்டார்கள்; கவனிப்பாரில்லை! இந்த மந்திரி என்னோடு பெல்லாரிச் சிறையில் இருந்தார் - அதோ அவர் அலிபுரம் சிறையில் என் கொட்டடிக்குப் பக்கத்துக் கொட்டடியில்தான் இருந்தார் என்று, இவன் "சொந்தம்' கொண்டாடுகிறான் - அவர்களுக்கோ கண் தெரியவில்லை! கார் ஏறிப் போகிறார்கள், கனம்களாகி விட்டவர்கள்,

அது கிளப்பிவிடும் புழுதிதான், அவன் பெறும் பரிசு ஆக இருக்கிறது என்பதைக் கண்டு, இரக்கம் காட்டுகின்றனர்.

இன்னும் சிலர் உளர் காங்கிரசில் - அவர்களைக் கண்டால், வியப்பு, மதிப்பு, அன்பு, பரிவு, பச்சாதாபம் எனும் உணர்ச்சிகள் அல்ல, பயம் ஏற்படுகிறது, பொதுமக்களுக்கு.

ஏனெனில், அவர்கள் காணும் அந்தப் ”பெரிய புள்ளி’, எத்தகைய காட்டுத் தர்பார் நடத்தியவர்; எவ்வளவு பேர் களுடைய வாழ்வைக் குலைத்தவர் என்பதை அறிந்திருக் கிறார்கள். எனவே அச்சம் - அருவருப்பு எனும் உணர்ச்சிகளைத் தான், அப்படிப்பட்டவர்களைக் கண்டதும் பெறமுடியும்.

எதிர்த்தவன் வாழ்ந்ததில்லை. நினைத்ததை முடிப்பார்.

களியாட்டத்தில் மன்னன்! கற்றோரை மதிப்பதில்லை.

கட்டி வைத்து அடிப்பார். கொளுத்துவார்! கொடுமை செய்வார்!

கண்ணுக்கெட்டிய தூரம் அவர் வயல்!

காலிகள் கூட்டம் அவர் கட்டளைப்படி நடக்க!

அழகிகளை இழுத்து வருவார்; மஞ்சம் அல்லது சவக்குழி!!

இப்படி எல்லாம் எவர்களைப்பற்றி, ஊரில் குசு குசுவெனப் பேசிக்கொள்ளப்படுகிறதோ, அப்படிப்பட்டவர்கள் காங்கிரசில் புகுந்துகொண்டுள்ளனர். பயமாகத்தானே இருக்கும் பாமர மக்களுக்கு.

பூஜை அறைக்குள்ளே இருப்பதாலேயே, புலி சாதுவாகவா மாறிவிடும்!

கதராடை அணிந்துகொண்டதாலேயே, காதகர்கள் இரட்சகர்களாகவா மாறிவிடுகிறார்கள்!

தங்கப்பூண் போட்ட தடியால் தலையில் அடித்தால் வலிக்காமல், மகிழ்ச்சியா பிறக்கும்!

வாழ்வை அழிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள் வந்தேமாதரம் பாடிவிட்டால், கொடுமைகளை மறந்துவிடவா முடியும்!

எனவேதான், நிலப்பிரபுக்கள், ஆலை அரசர்கள், வட்டிக் கடை வேந்தர்கள், வணிகக் கோமான்கள் - ஊரை அடித்து உலையில் போட்டவர்கள் - ஏழையை அழித்து ஏழடுக்கு மாடி கட்டிக்கொண்டவர்கள் - சுரண்டிப் பிழைப்போர் - சூதால் கொழுப்போர் ஆகிய வகையினர் காங்கிரசில் இடம்பெற்றது கண்டு, பொதுமக்களுக்கு

அச்சம் ஏற்பட்டது - அப்படிப் பட்டவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுடன் குலவிடும் காங்கிரசைப்பற்றியும் வெறுப்பு ஏற்பட்டது.

இப்படிப்பட்டவர்களின் கொட்டம் அடக்கப்படும் காங்கிரசாட்சியில் என்று நம்பினர்; ஏமாந்தனர்; அது மட்டுமா, பொதுமக்கள் திடுக்கிடத்தக்க விதத்தில், அப்படிப்பட்ட அக்கிரமக்காரர்களே காங்கிரசை நடத்திச் செல்லும் நாயகர் களும் ஆகிவிட்டதைக் காண்கிறார்கள்.

தம்பி! இந்த அச்சமும் அச்சத்துக்குக் காரணமாக உள்ள நிலைமையும் இன்னும் ஒரு ஐந்தாண்டுக்காலம் நீடிக்குமானால், மக்களாட்சி கேலிக்கூத்தாக்கப்பட்டு, பொதுமக்கள், பயத்தால் பீடிக்கப்பட்டு, மனம் மருண்டு, உணர்ச்சிகள் ஒடுங்கிப்போகும் நிலைமை ஏற்பட்டுப் போய்விடும். மக்களுக்கும் ஆளும் கட்சிக்கும் அன்புப்

பிணைப்பு இருக்காது - அச்சந்தான் இணைத்து வைக்கும். சீறிவரும் வேங்கை எதிர்ப்பட்டால், வழிப்போக்கன் என்ன செய்ய முடியும்? எதிர்த்துத் தாக்கத் துணிவு ஏற்படாது - ஓடிவிடக் கால்வராது - பேந்தப்பேந்த விழித்தபடி, வெடவெட வென உடல் ஆட, நிற்பான் - புலிக்கு இரையாகிவிடப்போகி றோம் - தப்பிப் பிழைக்க வழி இல்லை என்ற எண்ணத்துடன். பொதுமக்கள் அச்சத்தால் பீடிக்கப்பட்டுக் கிடக்கும் போதுதான், கொடுங்கோலர்களுக்குக் கொண்டாட்டம்.

தம்பி! திராவிட முன்னேற்றக் கழகம், பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுவதற்கான பல காரணங் களிலே இந்த அச்சத்தைப் போக்குவதும் ஒன்றாகும் - மிக முக்கியமானதுமாகும்.

நம்மை வீழ்த்தும் வலிவு, எதிர்க்கும் துணிவு, எவருக்கும் எழாது. எந்தக்

கட்சிக்கும் கிடையாது என்ற எண்ணம் பிடித்துக் கொண்டால் அதைவிட ஆபத்து மக்களாட்சித்துறையிலே வேறொன்று இருக்க முடியாது.

மக்களாட்சி என்பது கட்சிகள் போட்டியிட்டு மக்கள் ஆதரவைப் பெற்று, ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துவது என்று முறை இருக்கும்போது, என்னைவிட்டால் நாடாளும் தகுதியும் உரிமையும் பெறத்தக்க வேறு கட்சிகளே இல்லை என்று ஆட்சிப்பீடம் ஏறிய கட்சிக்கு ஆணவ எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது.

ஆனால், பதினான்கு ஆண்டுகளாக உள்ள அரசியல் நிலைமை, காங்கிரசு கட்சிக்கு இந்த ஆணவத்தை உண்டாக்கி விட்டதுடன், "ஆலும் வேலும்' மட்டுமல்ல,"கோரையும் புல்லும்' கூட, ஆளும் தகுதி தம்மிடம் மட்டுமே அடைக்கலம் புகுந்து விட்டதாக ஆர்ப்பரிக்கும் நிலைமையை

ஏற்படுத்திவிட்டது.

வர்ணாஸ்ரம முறைப்படி எப்படி வேதமோதவும் வேள்வி நடாத்தவும் பார்ப்பனருக்கே உரிமையும் தகுதியும் இருப்பதாக நெடுங்காலம் சொல்லப்பட்டு, செயல் புகுத்தப்பட்டு வந்ததோ, அதுபோல, இன்று காங்கிரசார் தம்மை, "ஆளும் ஜாதி'யாகக் கருதிக்கொள்கிறார்கள். பேசவும் செய்கிறார்கள்.

இதற்குக் காரணம், தொடர்ந்து அந்தக் கட்சியே ஆட்சியில் இருப்பது.

தொல்லை தரத்தக்க விதத்திலே ஆட்சி நடத்தும் அந்தக் கட்சியிடமிருந்து ஆட்சியைப் பறித்து வேறு கட்சியிடம் ஒப்படைக்கும் உரிமையும் ஆற்றலும் இருந்தும் பொதுமக்கள் அதனைச் செய்யத் தவறியது. காங்கிரசுக்குக் கண்மூடித் தர்பார் நடத்த இடமளிக்கிறது.

மக்களாட்சி மாண்புற நடக்கும் நாடுகளிலே நிலைமை இது அல்ல.

தவறு செய்தால், கொதித்தெழுந்து பொதுமக்கள் கவிழ்த்துவிடுவார்கள் என்ற அச்சத்துடன்தான், எந்தக் கட்சியும் ஆட்சியில் அமர முடியும்.

வாக்காளர்களை அணுகி ஓட்டுக் கேட்கும்போது காங்கிரசாருக்கு வாக்காளர்கள் பேருருவம்கொண்டோராகத் தெரிகின்றனர். அவர்தம் தயவைப்பெற்றாகவேண்டுமே என்ற உணர்வு இருக்கிறது. எனவே, பணிவும் பரிவும், குழைவும் கும்பிடும், தாராளமாக வருகின்றன. இதுகூட, மிகப் பெரிய எதிர்ப்பைத் தி. மு. கழகம் ஏற்படுத்தியிருப்பதனால்தான். இல்லையேல் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைகூட, வாக்காளர் களிடம் பரிவு காட்டும் போக்கு இருக்காது.

அதிலும், தி. மு. கழகம், வயலிலே கதிர் காணட்டும், அந்த நேரமாகச் சென்று அறுத்துத் தள்ளிவிடலாம் என்று எண்ணும் அரசியல் வெட்டுக்கிளிகள் அல்ல. நாள்தோறும் பொது மக்களிடம் தொடர்பு வைத்துக்கொண்டு, ஆட்சியின் போக்கை விளக்கியபடி உள்ள இயக்கம். எனவே, ஆட்சியை ஏற்றுள்ள கட்சி, எந்தக் கொடுமை செய்தாலும், தவறு இழைத்தாலும், உடனுக்குடன், பொதுமக்கள் அறிந்துகொள்கிறார்கள். அறிந்து கொள்வதால், ஆட்சியின்மீது கோபம் கொள்கிறார்கள். கோபம் கொண்டுவிட்டிருப்பார்களே, அதனால் ஓட்டுக் கொடுக்க மறுத்தால் என்ன செய்வது என்ற அச்சத்தால், வாக்காளர் களிடம், கெஞ்சுகிறார்கள், கொஞ்சுகிறார்கள், காங்கிரஸ் கட்சியினர்.

எனினும், இந்தக் குழைவும் பணிவும்,

”ஓட்டு’க் கேட்கும் போதுதான்.

ஆடியும் பாடியும் ஆயிரத்தெட்டுச் சுவை காட்டியும், ஜாதிச் சொந்தத்தையும் சமயச் சொந்தத்தையும் எடுத்துக் காட்டியும் ஓட்டுகளைப் பறித்துக்கொண்ட பிறகோ, இனி 5 ஆண்டுகள், இந்த மக்களைப்பற்றி என்ன கவலை, இவர்கள் என்ன செய்துவிட முடியும்! என்ற எண்ணம் தோன்றுகிறது. துணிவு பிறக்கிறது. எந்த வாக்காளர் முன்பு பணிவுடன் நின்றார் களோ, அவர்களைப் பிறகு ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். பார்க்க நேரிடினும், வாக்காளர் சிறிய உருவாகத் தெரிவர்; வெற்றி பெற்ற காங்கிரஸ்காரர் கெம்பீரக் கோலம் கொள்வர்.

ஆட்சி நடத்தும்போதும், விழிப்புடனிருந்து, தவறுகளைக் கண்டிக்கவும், பொதுமக்களின் துணைகொண்டு தண்டிக்கவுமான வலிவுடன் எதிர்க்கட்சிகள் இருப்பது மக்களாட்சி

மமதையாட்சி யாகிவிடாமல் செய்திடும் தடுப்பு முறையாகும்.

பிரிட்டனில், கட்சிகள் இடம்பெறும் வகையினைக் கவனித்தால் இது தெரியும்.

மக்கள் நம்மை மட்டுமல்ல, நமது நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து, நல்வழிப்படுத்த, வேறு பலரையும் குறிப்பிடத் தக்க அளவில் அனுப்பி இருக்கிறார்கள் என்ற உணர்வு ஆளும் கட்சிக்கு ஏற்படத்தக்க விதமாகவே, பிரிட்டிஷ் பாராளுமன்றம் அமைந்திருக்கிறது.

1945ஆம் ஆண்டு தொழிற்கட்சி அமைச்சர் அவை அமைத்தது; 393 உறுப்பினர்கள் கொண்டிருந்ததால்.

ஆனால், எதேச்சாதிகாரத்துடன், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற போக்குடன் இங்கு காங்கிரஸ் கட்சி நடந்துகொள்கிறதே

அவ்விதம் தொழிற்கட்சி நடந்துகொள்ள முடியாது; ஏனெனில் தவறுகளைக் கண்டறிய, தடுத்து நிறுத்த, எதிர்க்கட்சியாக கன்சர்வெடிவ் கட்சி இடம்பெற்றிருந்தது. அந்தக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 213.

1950ஆம் ஆண்டிலேயும் தொழிற்கட்சிதான் ஆட்சி நடத்திற்று. அப்போது எண்ணிக்கை 315! கன்சர்வெடிவ் எண்ணிக்கை 297!

பலம் குறைக்கப்பட்டது; எதிர்க்கட்சியின் பலம் வளர்ந்து காணப்பட்டது. 1951ஆம் ஆண்டுத் தேர்தலின்போது, நிலைமையே மாறிவிட்டது; கன்சர்வெடிவ் கட்சி ஆட்சிக்கு வந்தது; 321 உறுப்பினர்களுடன்.

இனி நம்மைக் கேட்பார் இல்லை என்று கன்சர்வெடிவ் கட்சி நடந்துகொள்ள முடியுமா? அதுதான் இல்லை! ஏனெனில்,

ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சியாக தொழிற்கட்சி, 295 உறுப்பினர்களுடன் அமர்ந்திருந்தது. எனவே, ஆளுங்கட்சி அடக்க ஒடுக்கத்துடன்தான் நடந்துகொள்ளவேண்டும்!

1955ஆம் ஆண்டுத் தேர்தலில், தொழிற்கட்சி 277 உறுப்பினர்களுடனும், கன்சர்வெடிவ் கட்சி 345 உறுப்பினர் களுடனும் பாராளுமன்றத்தில் இருந்தன.

1959ஆம் ஆண்டு கன்சர்வெடிவ் கட்சி 365 உறுப்பினர் களுடன் ஆட்சிப் பொறுப்பேற்றது; தொழிற்கட்சியினர் 258 என்ற அளவுக்கு வந்துவிட்டனர்.

தொழிற்கட்சிக்குள் மூண்ட தத்துவச் சண்டைகளும், இடம் பிடிக்கும் போட்டிகளும் அந்தக் கட்சியை இளைக்க வைத்துவிட்டன.

எனினும், இப்போதும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஆளுங்கட்சி

நடந்துகொள்ள முடியாது - எதிர்க் கட்சிக்கு, தட்டிக் கேட்கக்கூடிய அளவு வலிவும் எண்ணிக்கையும் இருக்கின்றன.

இந்த நிலைமையினால்தான், பிரிட்டனில் ஆளும் ஜாதி என்ற ஆணவம் கொள்ளத்தக்கவிதமான போக்கில், எந்தக் கட்சியும் நடந்துகொள்ள முடியவில்லை. மக்களாட்சியின் மாண்பும் கெடவில்லை.

மக்களாட்சி என்பதன் பொருள்; ஆட்சியை மக்கள் அமைக்கிறார்கள் என்று இருக்கவேண்டுமேயன்றி ஆட்சி மக்களை அவமதிக்கும் சக்தியாக மாறுகிறது என்று இருத்தல் கூடாது.

இதைக் கவனித்துப் பார்க்கும் எவரும், 1962ஆம் ஆண்டுத் தேர்தல், கட்சிக்குள் ஏற்படும் கடுமையான போட்டி என்பதல்ல, மக்கள், மக்களாட்சியைச் சரியான

முறையிலே அமைக்கிறார் களா இல்லையா என்பதற்கான சோதனை என்பதை உணருவார்கள், உணருபவர்கள், அடுத்து வரும் தேர்தலின்போது பொதுமக்கள் ஆற்றவேண்டிய கடமை நிரம்ப இருக்கிறது; ஆளும் ஜாதியாகிவிட்டோம் என்று ஒரு கட்சி ஆணவம் கொண்டிடும் ஆபத்திலிருந்து நாட்டை மீட்கவேண்டும் என்பதை அறிந்து, அதற்கேற்ப நடந்துகொள்வார்கள்.

மக்கள் இந்தக் கடமையை உணர்ந்து செயலாற்றத் தூண்டுவதும் துணை நிற்பதும் தி. மு. கழகத்துக்கு உள்ள கடமையாகும்.

இதனை நன்கு உணர்ந்தே நமது கழகத் தோழர்கள் மெத்த ஆர்வத்துடன், பொதுத் தேர்தலில் நாம் ஈடுபடுவது என்ற தீர்மானத்தை வரவேற்றனர்.

இவ்விதமான, நாட்டின் நிலைமையை

மாற்றிடத்தக்க செலாற்றுவதிலே, நமது தோழர்கள் கொண்டுள்ள நல்லார் வத்தைக் குலைத்திடக்கூடிய, குழப்ப நிலை, கசப்புணர்ச்சி, எதிலும் எவரிடமும் காரணமற்ற ஐயப்பாடு, எரிச்சல், எவரோ திட்டமிட்டுத் தமது நிலையைத் தகர்க்கிறார்கள் என்ற அருவருப்புணர்ச்சி ஆகியவவை நம்மிடையே சில காலமாக ஏற்பட்டுவிட்டதனால் செயலாற்றுவதிலே ஓர் தளர்ச்சியும் தயக்கமும் அவ்வப்போது தலைதூக்கிடக் காண்கிறேன்; கவலை கொள்கிறேன்.

எனக்கு எது கவலையை மூட்டுகிறதோ, அஃது நமது இயக்க வளர்ச்சி நமது ஆதிக்கத்துக்கு ஓர் அறைகூவலாகும் என்று அறிந்து கலக்கத்துடன் உள்ள மாற்றார்களுக்கு, மகிழ்ச்சி யைத் தரத்தானே செய்யும். அவர்கள் இந்தச் சூழ்நிலையை உண்டாக்கக்கூடத் திட்டமிடுகிறார்கள்;

ஏற்பட்டுவிடும் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமானது ஆக்கிக்கொள்ளவும் முடிகிறது.

பன்னிரண்டு ஆண்டுகளாக நாம் நடத்திவரும் இயக்கம், பல்லாயிரக்கணக்கானவர்களிடையே, பல்வேறு நிலையான, அளவுள்ள வகையுள்ள தொடர்புகளை ஏற்படுத்திவிட்டது. அது இயற்கை. அந்தத் தொடர்புகளிலே, காரணத்தோடு சில வேளை களிலும் காரணமற்றுப் பல வேளைகளிலும், நெருக்கடிகள், முரிவுகள், மாச்சரியங்கள் ஏற்பட்டுவிடுவது உண்டு.

என்னைப் பொறுத்தவரையில், என் சொல்லாலோ செயலாலோ அப்படிப்பட்ட நெருக்கடிகள், முரிவுகள், மாச்சரியங்கள் ஏற்படக்கூடாது என்பதிலே மிகமிகக் கவலை கொண்டுதான் இத்தனை ஆண்டுகளாக நடந்துகொண்டு வந்திருக்கிறேன்.

என்னையும் அறியாமல் எவருக்கேனும் இடர்ப் பாடோ, மனத்தாங்கலோ, இழப்போ ஏற்பட்டுவிட்டிருக்கு மானால், அந்த அளவுக்கு, நான் எனக்கென்று வகுத்துக் கொண்டுள்ள வேலை முறையில் தோல்வி கண்டதாக எண்ணி என்னை நானே நொந்துகொள்வேனேயன்றி, பிறர்மீது கோபப் படுவது என் இயல்பு அல்ல.

ஆனால், இதிலே கவனிக்கவேண்டிய, மிக முக்கியமானது, தொடர்புகளில் ஏற்படும் நெருக்கடிகள், மனச்சங்கடத்தை, கோபத்தை மூட்டிடினும்கூட, இயக்கத்திற்கு ஊறு நேரிடத்தக்க முறையிலும், எதிரிகள் ஏளனம் செய்து நம்மை முறியடிக்கக் கூடிய வகையிலும், நமது சொல்லும் செயலும் இருத்தல் ஆகாது.

கழகத்தின் காரியத்தைக் கவனித்துக்கொள்ள அமையும்

அலுவலர்களிடையே உள்ள தொடர்புகளில், எவருக்கேனும், எரிச்சல், கோபம், சங்கடம் ஏற்பட்டுவிட்டால், கொள்கை காரண மாக ஈர்க்கப்பட்டு, கழகத்திடம் தம்மை ஒப்படைத்துள்ள இலட்சக்கணக்கான மக்கள், என்ன செய்ய முடியும்! அது அவர்களுடைய பிரச்சினைகூட அல்லவே!!

கழக அலுவர்களிடை - எந்த முனையில் இருப்பினும் சரியே - கசப்புணர்ச்சி எழுமாயின், அருள்கூர்ந்து அவர்கள், தம் மனக்கண்ணால், கழகத்தில் தம்மை ஒப்படைத்துவிட்டுள்ள இலட்சக்கணக்கானவர்களைக் கண்டு, அவர்கள் நம்மிடம், கழகத்திடம், கொள்கையிடம் கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஊறு நேரிடத்தக்க முறையில், நாம் நடந்துகொள்ளலாமா என்பதைத் தான் உணரவேண்டும்.

நம்மைக் கண்டதும் அவர்களின் கண்கள்

களிநடமிடுகின்றன!

நமது உரை கேட்கும்போது அவர்தம் அகமும் முகமும் மலருகின்றன!

நமது இலட்சிய முழக்கத்தை அவர்கள் எழுப்பும்போது, நாடி முறுக்கேறுகிறது, முகம் புதிய பொலிவு பெறுகிறது! உடல் புல்லரித்துப் போகிறது!!

அவர்களுக்கு, யார் எந்த அலுவல் பார்க்கிறார்கள், அலுவலர்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் என்ன என்பதல்ல பிரச்சினை! தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள இலட்சியத்துக்கு, சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு எந்த அளவு ஏற்றம் கிடைத்தது! முன்பு ஆதரவு தந்தவர்களைவிட இப்போது அதிகம் பேர் ஆதரவு தருகிறார்களா? முன்பு கழகத் தோழர் களுக்கு, பொது நிர்வாக அமைப்புகளில் -

பஞ்சாயத்திலிருந்து பாராளுமன்றம்வரை - கிடைத்த இடத்தைவிட அதிகமான இடம் கிடைத்திருக்கிறதா! - என்ற இதிலேதான், தம்பி! அக்கறை, முழுக்க முழுக்க!!

அவர்களுக்கு எழுச்சி இதிலேதான் கிடைக்கிறது!!

அவர்கள் நமது இலட்சியத்துக்குத் துணை நிற்கிறார்கள் - நாம் அதற்காக நன்றியறிதலுடன் நடந்துகொள்ளவேண்டு மென்றால், அவர்களின் மனம் மகிழத்தக்க, எழுச்சி கொள்ளத் தக்க முறையில் நடந்துகொள்ளவேண்டும்.

திருப்பரங்குன்றம் மாநாட்டு மேடையில் அமர்ந்தபடி திரளான மக்களைக் கண்டபோது; என் உள்ளத்திலே, இந்த எண்ணந்தான் மேலோங்கி நின்றது.

பார்க்கும்போதே, முகம் மலருகிறதே!

பேச்சைக் கேட்கும்போதே மகிழ்ச்சியால் துள்ளுகிறார்களே!

நெருக்கிக்கொண்டு வந்தாகிலும், அருகே வந்து பார்க்க வேண்டும் என்று நாம் அமர்ந்திருக்கும் இடம் நோக்கிச் சொந்தத் துடன் பந்தத்துடன் வருகிறார்களே! என்னே இவர்தம் அன்பின் திறம்! எத்துணை பற்றுக்கொண்டிருக்கிறார்கள்!! எவ்வளவு நம்பிக்கையும் நட்புணர்ச்சியும் அவர்களின் இதயத்திலே பூத்துக் குலுங்குகின்றன!! இப்படிப்பட்ட மக்களின் நம்பிக்கைக்கும் நட்புக்கும் என்றென்றும் பாத்திரமாக இருப்பதன்றி, வாழ்க்கை யிலே நாம் பெறத்தக்க பேறுதான் வேறு என்னவாக இருக்க முடியும்!

நமது கழகம் ஏற்றம் பெறுகிறது என்பதனால், இத்தனை எழுச்சியும் மகிழ்ச்சியும் பெறுகிறார்கள்.

நிமிர்ந்து நடக்கிறார்கள்! நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்!!

நமக்குள்ளே, கலாம் விளைகிறது, அலுவலர்களுக் கிடையே அருவருப்புணர்ச்சி ஏற்படுகிறது, மாற்றார் பயன் படுத்திக்கொள்ளத்தக்க விதமாக அந்த நிலைமை செல்கிறது என்றால், தம்பி! இலட்சக்கணக்கான அந்த மக்களுடைய இதயம் படாத பாடுபடும்!!

"முத்தே! பூங்கொத்தே! சிட்டே! சீனிகற்கண்டே!'' என்று, தான்பெற்ற குழந்தையைக் கொஞ்சிடும் தாய், ஓர்நாள், குழந்தை உருகி உடல் கருகக் கண்டால், எப்படிப் பதறுவாளோ, அது போலத் தம்பி! எழிலுடன் ஏற்றத்துடன் எங்கள் கழகம் வளருகிறது என்று பெருமிதத்துடன் பேசி மகிழும் மக்கள், என்ன இது? ஏதேதோ பேசுகிறார்களே! இப்படி இப்படி நிலையாமே?

இன்னின்னாருக்குள் கசப்பாமே? - என்று பிறர் பேசக் கேட்டாலோ நம்மில் சிலரே பேசிக்கொண்டாலோ துடிதுடித்துப் போகிறார்கள்!

புதுப்புனலாடிவந்த பூவை, வெண்ணுரையன்ன வண்ணச் சேலை உடுத்திக்கொண்டு, கார்நிறக் கூந்தலில் ஏறிவிட்ட ஈரத்தைப் போக்கிக்கொள்ள, அகில் புகையிடும்போது, அகில் மணம் கூந்தலை உலர்த்துவதுடன் மணமும் ஏற்ற, அந்த நறுமணம் நுகர்ந்தபடி, நங்கை இருந்திடும் வேளையிலே, நெருப்புப்பொறி கிளம்பி, ஆடையிலே விழுந்து, அது நெருப்பாகிவிடுமானால், எப்படித் துடிதுடிப்பாள் - ஏது செய்வது என்று தெரியாமல் பதறுவாள் - ஆடையைக் களைந்திட வகையும் மறந்து அலறுவாள் - நெருப்பை அணைத்திட இயலாது பதறுவாள்

என்பதைத் தம்பி! ஒருகணம் எண்ணிப்பார்!! கழகத்திடம் தமது உயிரையே வைத்திருக்கும் பல இலட்சக்கணக்கான மக்கள் நிலை புரியும்.

கழக அலுவலர்களாகப் பல்வேறு இடங்களிலே உள்ள வர்கள், தமது சொல்லும் செயலும், மேலே குறிப்பிட்டுள்ள விதமான, பொறிபோன்றதாகிவிடாமல், பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு மாநாட்டிலே மேலோங்கி இருந்தது.

விவரம் அறியாத குழந்தைகளை இடுப்பிலே வைத்துக் கொண்டு, இளமாதர்கள், குழந்தைகளுக்கு, நம்மைச் சுட்டிக் காட்டி, உறவுமுறை கூறி நிற்கிறார்களே! அந்தக் குழந்தைகளும் கலகலவெனச் சிரிப்பொலி கிளப்பி, நமக்கு இனிய இசையளிக் கின்றனவே, தம்பி! இதைப் பொருளற்றது என்றா எண்ணுகிறாய்! எல்லாக் கட்சிகளிலும் இந்த இன்ப நிலை, இருக்கிறது என்றா

எண்ணுகிறாய்! இல்லை, தம்பி! நிச்சயமாக இல்லை! நொந்து கிடக்கும் ஒரு இனம் கப்பிக்கொண்டிருக்கும் துன்பத்தைத் துளைத்துக்கொண்டு, சிறு அளவு ஒளி வெளிவரும்போது, பெறக் கூடிய நிலை இது. வெறும் அரசியல் கட்சியின் பல நடவடிக்கைகளிலே ஒன்று அல்ல!!

ஒரு திங்களுக்கு முன்பு, நான் எழுதிக்கொண்டிருந்தபோது, திடீரென மின்சார விளக்குகள் ஊரெங்கும் அணைந்துவிட்டன - ஒரே மையிருட்டாகிவிட்டது. ஓடிப்போய் ஒரு மெழுகுவர்த்தி கொண்டுவந்தான், எனக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி காணும் எண்ணம்கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான தம்பிகளிலே ஒருவன். அந்த மெழுகுவர்த்தியைக் கொளுத்தினான் - கப்பிக் கொண்டிருந்த

இருளைக் கிழித்துக்கொண்டு. சின்னஞ்சிறு சிங்காரச் சுடர் எங்களை மகிழ்வித்தது. என்ன குளிர்ச்சி! எத்துணை மகிழ்ச்சி! மின்சார விளக்குக்கு உள்ள பளபளப்பு, இதற்கு நிச்சயம் இல்லை - ஆயினும், இருள் கப்பிக்கொண்ட போது, இதோ என்னால் முடிந்த அளவு நான் ஒளி தருகிறேன் என்று கூறுவதுபோலல்லவா மெழுகுவர்த்தி இருந்தது. நான் எழுதுவதை நிறுத்திக்கொண்டு, அதையே பார்த்துக்கொண்டிருந்தேன். சின்னஞ்சிறு திரி! அழகான ஒளி! எரிச்சலூட்டாத வெளிச்சம்!! ஒளியின் அளவு குறைவுதான் - வலிவுகூட அதிகம் இல்லை! காற்றடிக்கிறது, திரியினின்றும் கிளம்பும் ஒளி நடுக்கத் தோடு ஆடுகிறது! கையைத் திரைபோலாக்கி, அசையும் ஒளிக்குப் பாதுகாப்பளிப்பது, அணையவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டி இருந்தது. அவ்வளவு வலிவற்றது, பாவம்,

எனினும் தன்னால் முடிந்த அளவு இருளை ஓட்டுகிறது! அதனிடம் பேசவேண்டும்போலத் தோன்றிற்று போயேன்!!

தம்பி! மெழுகுவர்த்தி எரிவதைப் பார்த்துக்கொண்டே இருந்தேன் - சில விநாடிகள். சுடர் விடுகிறது, ஒளி தருகிறது. பயன் அளிக்கிறது! எவ்விதமாக என்பதைச் சொல்லவா, தம்பி! ஒளி அளித்துக்கொண்டிருப்பதால், மெழுகுவர்த்தி தன்னைத் தானே மாய்த்துக்கொள்கிறது! உருக்கிக்கொண்டே போகிறது! பார்த்துக்கொண்டிருக்கும்போதே கரைகிறது! ஒளியா தந்து கொண்டிருந்தது தம்பி! தன் உயிரையே தந்துகொண்டிருந்தது, அணு அணுவாக!! தன்னை மாய்த்துக்கொள்கிறது. இருளை விரட்ட ஒளிதர! நமக்குப் பயன் தருவதற்காகவே, தன்னைத் தந்துவிடுகிறது! ஒரு ஜாண் அளவு இருந்தது,

கொளுத்தும்போது - பார்த்துக்கொண்டே இருக்கும்போது, சுட்டுவிரல் அளவுக்கு வந்துவிட்டது - உடலிலே மட்டுமல்ல, உயிரிலேயே, ஒரு பெருமளவு இழந்துவிட்டது - இருளகற்றும் தொண்டாற்றி. இன்னும் சிறிது நேரமானால் உருவமே இருக்காது - உயிரும் இருக்காது - ஒளி அளித்த மெழுகுவர்த்தி இருந்த இடம் வெற்றிடமாகிவிடும்! எனக்கென்னவோ அதனை அடியோடு மாண்டுபோகவிடக்கூடாது! என்று தோன்றிற்று. உருகி உடல் குறைந்துபோவதைக் கண்ணால் பார்க்கும்போதே மனம் ஏதேதோ எண்ணுகிறது - அது உருத்தெரியாமலாகிவிடும் கொடுமையைக் காண முடியாது - காணக்கூடாது என்று தோன்றிற்று. மின்சார விளக்குகள் திடீரென எரியலாயின - ஒளி தந்ததுபோதும்,

இருளகற்ற உன்னை நீ குற்றுயிராக்கிக் கொண்டதுபோதும் தியாகியே! திருவிளக்கே! உன்னை மடிய விட்டேன்! என்று கூறுவதுபோன்ற நிலை பெற்றேன். மெழுகு வர்த்தியை அணைத்து, கரத்தில் எடுத்து, வைத்துக்கொண்டேன். எனக்கு கவி பாடத் தெரியாது!!

தம்பி! தம்மைத்தாமே வருத்திக்கொண்டு, தமது வாழ்வைச் சிதைத்துக்கொண்டு, இருளகற்றி ஒளிதருவதுபோல, இனம் வாழக் கழகத்தை வலிவுள்ளதாக்க, தமது வலிவை எல்லாம் தந்து கொண்டிருக்கும், இலட்சக்கணக்கானவர்களின் இதயம் வாடாமல், நம்பிக்கை சிதையாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு, நம்முடையது என்ற உணர்ச்சியால், உந்தப்பட்டவனானேன், மாநாட்டிலே மக்கள் காட்டிய பேரார்வத்தைக் கண்டபோது.

விழிப்புற்ற மக்கள், உதயசூரியனைக் கண்டு, வாழ்வுக்கு வளம் தேடும் வாய்ப்புக் கிடைத்தது என்று நடந்திடும் உழவன்போல, நடை போடுகின்றனர்.

மாநாட்டில் நான் கண்ட மக்களுக்கு, ஒரு கட்சியை எப்படி ஒருவர் மனத்துக்கும் ஒருகுறையும் வராமல், முறைகள் ஒவ்வொன்றும் அனைவருக்கும் திருப்திதரத்தக்க விதமாக அமைத்துக்கொண்டு நடத்திச்செல்வது என்பதுபற்றிய எண்ணத்தைவிட, திராவிடம் அடிமைப்பட்டிருக்கும் கொடுமையை நாம் உணர்ந்திருக்கும் அளவுக்கு மற்றவர்கள் ஏன் இன்னமும் உணரவில்லை, திராவிடத் தனிஅரசு அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் நமக்கு ஏற்பட்டதுபோல ஏன் மற்றவர் களுக்கு ஏற்படவில்லை - மற்றவர்களும் தாய்த்திருநாட்டின் விடுதலைக்காகத்

துடித்தெழு இன்னும் எவ்வளவு பணியாற்ற வேண்டும். எம்முறையில் பணியாற்றவேண்டும் என்பதுபற்றியும்,

திராவிட நாடு திராவிடருக்கு எனும் இலட்சியத்துக்கு நாட்டு மக்களின் பேராதரவு பெருகி இருக்கிறது, வளர்ந்தபடி இருக்கிறது என்பதை உலகுக்கும் ஊராள்வோருக்கும் எடுத்துக் காட்ட இந்தப் பொதுத் தேர்தலில் எப்பாடு பட்டாகிலும் வெற்றிபெற்றாகவேண்டுமே என்பதிலேயும்

மக்களாட்சியின் பயனும் தரமும் தக்க அளவிலும் விதத்திலும் கிடைக்கவேண்டுமென்றால், கேடுபாடுகள் முறைகள் கொண்டதான நிர்வாகத்தை, அச்சமின்றி, கூச்சமின்றி, 14 ஆண்டுகளுக்கு மேலாக நடத்திக்கொண்டுவரும் காங்கிரஸ் கட்சிக்குத் தக்க பாடம் கற்பித்தாகவேண்டும் என்பதிலும், இருந்தது.

கட்சியை நடத்திச் செல்பவர்கள், இந்த எண்ணத்துக்கு முதலிடமும் முக்கியமான இடமும் கொடுத்து, காரியமாற்ற வேண்டும் என்ற விருப்பமே மக்களிடம் மேலோங்கி இருந்தது.

நாட்டுப் பிரிவினைபற்றியும், நாட்டுப் பிரிவினை உணர்ச்சி மெள்ளமெள்ள ஆந்திர கேரள கர்நாடகப்பகுதிகளிலும் பரவி வருகிறது என்பது குறித்தும், காங்கிரஸ் ஆட்சி என்பது முதலாளித்துவ பாசீச ஆட்சியாக மாறி வருவதாலும், வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு கங்காணியாகி இருப்பதாலும் அதனை முறியடித்தாகவேண்டும் என்பது குறித்தும், பேசிய போதும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும், மக்கள் காட்டிய எழுச்சி மிக்க ஆர்வம், அவர்கள் எண்ணம் எது என்பது குறித்து அழுத்தமாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

கட்சி நல்ல முறையில், எவருடைய மனத்துக்கும் குறையின்றி நடத்திச் செல்லப்படவேண்டும் என்பதிலே, தம்பி! எனக்கு இருப்பதுபோன்றே, மக்களுக்கும் நிரம்ப அக்கறை இருக்கிறது, ஆனால் கட்சியின் நடைமுறையில் குறை இருப்பதைக் கண்டு குமுறியோ கொதித்தோ, அதை நீக்குவதற்கு உள்ள வழிபற்றித் தாம் கொண்டுள்ள கருத்தன்றி வேறெவர் கருத்தும் மேலானதுமல்ல; தேவையானதுமல்ல என்று எண்ணிக் கொண்டும், குறைகளை வேண்டுமென்றே குவித்துவைத்துக் கொண்டு யாரோ சிலர் பயன் அடைகிறார்கள் என்று தாமாகக் கருதிக்கொண்டும், அச்சம் தயை தாட்சணியமின்றிப் பேசுவ தாகவும் எழுதுவதாகவும் கருதிக்கொண்டு, தம்மை ஒத்தவர்களை, கூட்டுத் தோழர்கள்பற்றிக் கேவலமான கருத்துகளைப் பரப்புவதும்,

காதைப் பிடித்திழுத்துக் கன்னத்தில் அறைந்து தலையில் குட்டினாலன்றி, மரமண்டைக்குப் புத்தி வரவே வராதே என்று எண்ணி, காட்டுப்போக்கில் நடந்துகொள்ளும் பழங்கால ஆசிரியர்கள்போல, இடித்து இடித்துச் சொன்னா லொழிய, இவர்கள் திருந்தமாட்டார்கள் என்று கருதும் போக்கை மேற்கொண்டும் நடந்துவருவது, கசப்புணர்ச்சி பரவவும் பகை உணர்ச்சியாகிவிடவும், எதிர்ப்பாளர்களுக்கு நம்மையும் அறியாமல் உடந்தையாகவும்தான் பயன்படுமேயன்றி, திருத்தம் கிடைத்திட வழிகோலாது.

அதுவரையில் எவருமே துணிந்து செய்யாத, அறுவை ஒன்றினை, ஆற்றலுள்ள ஒரு மருத்துவர் மேற்கொண்டார். வெற்றிகரமாக அறுவை நடத்தினார். மருத்துவர் பலரும் மேதை சிலரும் கூடி, அவருக்குப் பாராட்டு விழா நடத்தினர்.

இதுபோலத் துணிந்து இதுவரையில் எவருமே செய்ததில்லை!

எனது 40 ஆண்டு அனுபவத்தில், இப்படிப்பட்ட சிக்கலான ஒரு அறுவையை நான் கேள்விப்பட்டதே இல்லை; இவர் நடத்திக் காட்டினார்; வியப்படைகிறேன்; உலகம் பாராட்டுகிறது.

பலரும் பாராட்டினார்கள்; அற்புதமான முறையில் அறுவை நடத்திய மருத்துவரை.

அவர் நன்றி கூறும்போது "அறுவை வெற்றிகரமாக நடந்தேறியது, ஆனால் நோயாளிதான் பிழைக்கவில்லை'' என்று அறிவித்தாராம்!

திருத்தங்கள் தேவை; திருத்தப்பட்ட நிலையில் ஒரு அமைப்பு நின்று நிலைத்து வளரத்தக்க உயிரூட்டம் பாழ்படாத முறையில்.

தம்பி! எனக்குக் கழுத்தின் பின்புறத்தில்,

இரண்டு மூன்று ஆண்டுகளாகச் சதை சிறு அளவுக்கு உருண்டு காணப்படுகிறது; அது மெள்ள மெள்ள வளர்ந்தும் காணப்படுகிறது. அதைக் காணும் நண்பர்கள் கவலை தெரிவித்தனர். எனக்கும் அது என்னவோ ஏதோ என்ற கவலை உண்டு. டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் என் உடற்கூறு நன்கு அறிந்தவர். அவரிடம் காட்டவேண்டும், கருத்தறியவேண்டும் என்ற ஆவல் எழும்; உடனே அவர் பார்த்துவிட்டு, இது மிக ஆபத்தானது, உடனே இதை அகற்றவேண்டும். ஆறு திங்களாவது படுக்கையில் இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டால் கவலையும் கிலியும் அதிகமாவதுடன், வழக்கமாகச் செய்துகொண்டு வரும் பணியினைச் செய்வதற்கும் குந்தகம் ஏற்பட்டுவிடுமே என்றெண்ணிக் கொண்டே, பல திங்கள்

காலத்தை ஓட்டி விட்டேன்; பிறகு ஒரு நாள் அவரிடம் சென்று காட்டினேன்.

உள்ளூர இலேசாக ஒரு சிறு கவலையும் இருந்தது - உன்னிடமின்றி வேறு யாரிடம் சொல்லப்போகிறேன். கான்சர் என்கிறார்களே அந்த விதமாக ஏதாவது இருந்து தொலைக்குமோ என்ற கவலை. அது அல்ல என்றார், மனத்துக்கு ஒரு நிம்மதி வந்தது. ஆனால் "உருண்டை' கரையவில்லை; வளர்ந்தபடி இருக்கிறது. வலி இல்லை; வலி இல்லாவிட்டால் கவலை இல்லை; வலித்தால்தான் உடனே கவனிக்கப்படவேண்டும் என்று சிலர் கூறுவார்கள். அவர்கள் அப்படிக் கூறுவதைக் கேட்டுக் கேட்டுச் சாதாரணமாக நீர் கோத்துக்கொள்வதாலோ, நீண்ட நேரம் தூக்கமின்றி இருப்பதாலோ, நெடுந்தூரம் பயணம் செய்வதாலோ, கழுத்து நரம்புகள்

வலித்தால் உடனே எனக்கு உருண்டையால் அந்த வலியோ என்ற சந்தேகம் தோன்றும். ஆனால், சாதாரணத்தைலத்தேய்ப்பு அல்லது நீர் கோர்த்துக் கொண்டது போக்கும் மருந்து உட்கொள்வது எனும் மருத்துவம் செய்தால், வலி போய்விடுகிறது அல்லது குறைகிறது. அப்போது ஒரு தைரியம்! உருண்டைக்கும் கழுத்தில் ஏற்பட்ட வலிக்கும் சம்பந்தம் இல்லை என்று.

வேறோர் மருத்துவர் - அவர் நரம்பு சம்பந்தமான வியாதிபற்றி நிரம்ப அறிந்தவராம் - அவரிடம் காட்டச் சொன்னார்கள்.

அவர் அழுத்திப் பார்த்தார் உருண்டையை - வலிக்கிறதா? என்றார் - இல்லை! அழுத்தும்போது உருண்டை இல்லா விட்டாலும் வலிக்கத்தானே செய்யும் அந்த அளவு வலிமட்டுமே இருப்பதாக என் எண்ணம்.

அவர், இதை அறுவைமூலம் நீக்கிவிட்டாலும் நீக்கி விடலாம், இல்லை அப்படியே விட்டு வைத்து, பிறகு மேலும் வளருகிறதா என்று பார்த்து, என்ன செய்வது என்று யோசித் தாலும் தவறில்லை - என்று கூறினார்.

இப்போதும் அந்த உருண்டையும் இருக்கிறது. அது என்ன? அதற்கு என்ன செய்வது? என்ற எண்ணமும் எழுகிறது. எனினும், என் வேலைகளைக் குந்தகப்படுத்திக்கொள்ளவில்லை; என் வேலைகளைக் கெடுக்கும் அளவுக்கு, அது தொல்லையாக இல்லாதிருக்கும்போது அதைப்போய் அறுத்துக்கொள்வானேன் - அறுத்துக்கொள்வதனாலே, வேறு ஏதாகிலும் புதுத் தொல்லை வந்து தொலைக்கப்போகிறது என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

எனக்குத் தம்பி! அறுவை முறை எதெதற்குப் பயன்படும், என்னென்ன நேர்த்தியான முறைகள் உண்டு என்பதுபற்றிய அக்கறை மட்டுமே மேலோங்கி இருந்தால், இந்த மூன்றாண்டுக் காலம், நான் இதே வேலையாகத்தான் இருந்திருக்கவேண்டும். கவனிக்காததால் பெரிய கெடுதல் ஏற்பட்டுவிடுமே என்று கூறக் கூடும், ஏற்படாது என்ற நம்பிக்கை. ஏற்படாத வரையில், நாம் செய்ய முடிகிற வேலைகளைச் செய்யாமல் இருக்கக்கூடாது என்ற எண்ணம்!

என் உடற்கூறு, உள்ளப்பாங்கு இரண்டையுமே கூறிவிட்டேன்.

ஒரு மகிழ்ச்சி எனக்கு; இந்த "உருண்டை' ஒரு தொல்லை என்று எண்ணிக்கொண்டல்லவா இருந்தேன் - அப்படி இல்லை - அதுவும் எனக்காக வாதாடுகிறது, நன்றி!!

இப்படி நான் கூறுவதால் தம்பி, உடலையாகட்டும் அல்லது அமைப்பையாகட்டும், அது எந்தக் குறைகளுடன் வேண்டுமாயின் இருந்து தொலைக்கட்டும் என்று விட்டுவிட வேண்டும் என்று கூறுவதாக நினைத்துக்கொள்ளாதே. நிச்சயம் கவனிக்கவேண்டும்.

ஆனால், இப்படி நடைபெற்றால் என்ன ஆகியிருக்கும் என்பதை எண்ணிப்பார்!

"தெரியுமா விஷயம் ஆசாமிக்கு, பெரிய வியாதி!''

"யாருக்கு, அண்ணாவுக்கா?''

"அண்ணனாவது தம்பியாவது! சொல்லேன், அண்ணா துரை என்று அவனுக்குத்தான்.''

"என்ன? என்ன?''

"கழுத்திலே ஒரு உருண்டை - கட்டியல்ல. என்னென்னவோ நோய்கிருமிகள் கூடுகட்டிக்கொண்டுவிட்டன.''

"நோய்க்கிருமிகளா?''

"ஆமாம்! ஆமாம்! உள்ளே என்னென்ன வியாதி உண்டாகும் விஷப்பூச்சிகள் இருக்கிறதோ யார் கண்டார்கள்? கழுத்தே வீங்கிவிட்டது. ஆசாமியால் படுக்கவே முடிவதில்லை யாம். ஒரே வலியாம்.''

"யாருக்கும் சொல்லக் காணோமே.''

"மறைத்து வைத்திருக்கிறான்.''

"ஏன்?''

"அப்படி ஒரு விஷ உருண்டை இருப்பது வெளியே தெரிந்தால் நாலு பேர் அவனைக் கிட்டே சேர்ப்பார்களா? அதனால்தான் மறைக்கிறான்.''

”தொத்து நோயா; அது.’’

”ஆமாம், கொடிய தொத்து நோய்.’’

”உனக்கு எப்போது தெரியும்?’’

”இரண்டு மூன்று நாட்களாக! தெரிந்தது முதல் நான் அவனோடு முன்புபோலப் பழகுவதுகூடக் கிடையாதே!’’

இப்படிப் பேசப்பட்டால் என்ன நிலைமை ஏற்படும்?

என்னைப்பற்றிப் பலரும் பயத்துடனோ அருவருப்புடனோ பேசவும் எண்ணவும் முற்படுவர்.

அது தம்பி! நோயைத் தீர்க்கும் மருந்தாகுமா?

அந்தப் பேச்சு என் காதுக்கே வருகிறது என்று வைத்துக் கொள் - அல்லது இதிலெல்லாம் தயவென்ன தாட்சணிய

மென்ன, நேரிலேயே சொல்லுவோம் என்ற போக்கிலே, என்னிடமே வந்து சொல்லிவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள். என்ன ஆகும்? எனக்கு உள்ளபடி கிலி ஏற்படும்! படுத்த படுக்கையாவேன்!!

அதுபோலத்தான், தம்பி! ஒரு அமைப்பைத் திருத்தும் வழி, அருவருப்பை, இழிவை, பகையை அதற்குச் சேர்த்துக்கொடுப்பது அல்ல.

ஆபிரகாம் லிங்கன் சொன்னார், ”கைகொடுத்து உதவும் நல்லவர்களே, குற்றம் குறையை எடுத்துரைக்கவேண்டியவர்கள்’’ என்று.

இந்த நோக்கத்தை மறவாமல், நாம் நமது அமைப்பு விஷயத்திலே அக்கறை செலுத்தவேண்டும் என்பதைக் கூறவே இதனைச் சொன்னேன்.

திராவிடர் என்ற உணர்ச்சி நைந்துபோயிருந்ததுடன் இந்தியர் எனும் ஒரு போலி உணர்ச்சி ஊட்டப்பட்டு வந்த நிலையிலிருந்து வந்த சமுதாயத்தில், மிகச் சாதாரணமானவர்கள் எப்படியோ, இன உணர்ச்சியைப் புகுத்திவிட்டார்களே; ஒரு அரை டஜன் பேச்சாளர்கள், நாலு நாள் கூத்தாகிப் போகும் இவர்கள் முயற்சி என்றெண்ணிக்கொண்டிருந்தோம், இவர் களோ நாமே கண்டு மலைக்கத்தக்க விதத்தில் வளருகிறார்களே, நகரத்திலே மட்டுமே நயமாகிப் பேசி வளரமுடியும் என்று எண்ணியிருந்தோம். இவர்களோ பட்டிதொட்டிகளிலெல்லாம் பலம்பெற்று வருகிறார்களே எந்தப் பத்திரிகை இவர்கள் செய்தியை வெளியிடும், கருத்தினை எடுத்தரைக்கும் ஒளி இல்லையேல் உயிர் இல்லை என்பதுபோலப் பத்திரிகை

உலகத் திருப்பார்வை விழாவிட்டால், இந்த இயக்கம் வாழாது, பட்டுப் போகும் என்று எண்ணிக்கொண்டோம், இவர்களோ, தமது இயக்கத்துக்கென்று ஒரு பத்திரிகை உலகத்தையே அமைத்துக் கொண்டார்கள். பணம் ஏது என்று பரிகாசம் செய்தோம், இவர்களோ, பேசுவதைக் கேளுங்கள் பணமும் தாருங்கள் என்று புதுமுறை வகுத்துக்கெண்டார்கள். "தேசிய கீதங்கள்', தோத்திரப்பாடல்கள் நம்மிடம் வண்டி வண்டியாக உள்ளன. அவைகளைக் கேட்கும் மக்கள் சொக்கிப்போவர்; இவர்களுக்கு ஏது அந்த வாய்ப்பு என்று பேசினோம். இவர்களோ, இயக்கப் பாடல்கள், இயக்கப் பாடகர், இயக்க நாடகம் என்று ஏற்படுத்திக் கொண்டார்கள். ஏ! அப்பா! பொல்லாத ஆசாமிகள்! இவர்களை இபபடியே வளரவிடுவது பேராபத்தாகிப்போகும்; கோட்டை போன்ற

வீட்டுக்கு அமைந்துள்ள சுவரிலே, முளைத்து மூன்று இலைவிட்டு, வளர்ந்துவிடும் அரசு வேம்புபோன்ற செடி, பிறகு, அந்தச் சுவரினையே கலனாக்கிவிடுவதுபோலன்றோ இவர்களின் வளர்ச்சி நமது ஆதிக்கத்தைக் குலைத்துவிடும், இதனை ஒழித்தாகவேண்டும் என்று, காங்கிரசார் பலமான ஏற்பாடு களைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறார்கள், பல வழி களிலும், நமது வளர்ச்சியை அழிக்கத் திட்டமிடுகிறார்கள்.

எதிர்த்துத் தாக்குவதைவிட, உட்குழப்பம், சச்சரவு, மனக்கிலேசம் மூட்டிவிடுவதுதான், போர் முறைகளிலேயே, பயங்கரமானது.

ஆதிக்கத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சி, இந்த முறையைத் திறம்படக் கையாளுகிறது.

”பயல்கள் நாத்திகர்கள்! கடவுள்

நம்பிக்கையற்றவர்கள்'' என்று பழி சுமத்தினர் - பக்தர்களும் பாமரமக்களும் பதை பதைப்பார்கள், பகை கொள்வார்கள் என்று. நாமோ, ஐயா! நாங்கள் நாத்திகரல்ல; ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று உள்ளத்துறையும் உண்மையை உரைத்தோம்; உள்ளபடி இவர்கள் நாத்திகம் பரவக்கூடாது என்ற நோக்கமுடையவர் களானால் நமது விளக்கத்தைக் கேட்டுப் பாராட்ட அல்லவா வேண்டும்? பாராட்டினார்களா? இல்லை! பயம்கொண்டனர்! பாவிப் பயல்கள்மீது இந்த பழிபோட்டுத் தலைவாங்கலாம் என்று பார்த்தோம், இடம் கொடுக்கவில்லையே என்று எண்ணிக் கை பிசைந்துகொண்டனர்.

இவர்கள் வகுப்புவாதிகள்; வகுப்புத்துவே□கள்; பார்ப்பன விரோதிகள் என்று நம்மைப்பற்றிச் சொல்லி, பகைமூட்டப் பார்த்தனர். ஐயா! நாங்கள் சில முறைகளை,

நடவடிக்கைகளை, தத்துவங்களை, நம்பிக்கைகளை, ஏற்பாடுகளைக் கண்டிக்கிறோம், நீக்கவேண்டும் என்கிறோம்; ஒரு வகுப்பின்மீதோ, தனிப் பட்டவர்கள்மீதோ, பகையுமில்லை துவேஷமும் இல்லை! என்று விளக்கமளித்தோம். மகிழ்ந்தனரா? இல்லை! மற்றோர் பழிசுமத்தலாயினர், பார்! பார்! பார்ப்பனருக்கு அடிமைகளாக்கி விட்டார்கள் என்று கூறத் தலைப்பட்டனர்.

தம்பி! இப்படியே ஒவ்வொன்றாக அலசிப்பார்த்தால் தெரியும். இருபத்துநான்கு மணி நேரமும் என்ன பழி சுமத்தலாம்? எத்தகைய எதிர்ப்பு மூட்டலாம்? என்று அலைகிறார்கள், மாற்றார் என்பது.

நமது கழகத்தவர்கள் பொதுமக்களுடன், இடையறாத தொடர்புகொண்டவர்கள். எனவே எப்போதும், பொது மக்களுடைய பார்வையில் பட்டவண்ணம் இருக்கிறார்கள்.

நமது நோக்கமும் நடத்தையும், இன்று அந்த மக்களுடைய அன்புப் பார்வையைப் பெற்றளிக்கிறது.

மணம் கமழும் மல்லிகை நிரம்பிய பூக்குடலையை, ஒருவர் நம்மிடம் காட்டி, "ஐயா! இதை ஒரு ஐந்துநிமிடம் வைத்துக் கொண்டிருங்கள், வீட்டிலே, மாலை தொடுக்க"நார்' மறதியாக வைத்துவிட்டு வந்துவிட்டேன், எடுத்துக்கொண்டு ஓடோடி வந்துவிடுகிறேன்' என்று சொன்னால், மகிழ்ச்சியுடன் சம்மதிக் கிறோம் - மூக்சைத் துளைக்கும் வாடை அடிக்கும் ஏதேனும் பொருளுள்ள மூட்டையைக் கொடுத்து "சற்று பார்த்துக் கொள்ளுங்கள், இதோ சடுதியில் வந்துவிடுகிறேன்' என்றால்,"சரி' என்றா சொல்கிறோம்? இல்லையல்லவா? மனித இயல்பு அது.

தம்பி! நமது நோக்கமும் நடவடிக்கையும்,

மக்களின் அன்புத் தொடர்பை நமக்குப் பெற்றளிக்கின்றன. இதே தொடர்பு, நமது செயலிலும் சொல்லிலும் வெறுப்பூட்டும் நெடி கொண்டதாகிவிட்டால், நிலைக்குமா? நிலைக்காது! அன்புப் பார்வை மறையும்; அலட்சியப் பார்வை, கோபப் பார்வை, வெறுப்புப் பார்வை கிளம்பும்.

அப்படிப்பட்ட ஒரு வெறுப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டும் என்பதற்காகப் பலபல பழிகள், புகார்கள், அவிழ்த்து விடப்படுகின்றன. ஒவ்வொன்றும், நாம் கடக்கவேண்டிய நெருப்பாற்றை உண்டாக்குகிறது.

வெறுப்புணர்ச்சியே மாற்றார்கள் பழிபோட்டு, மூட்டி விடுவதிலே முயன்று தோற்றுப்போகவே, நமக்குள்ளாகவே, ஒரு பிரிவைத் தூண்டிவிட்டு மற்றோர் பிரிவின்மீது பழி கூறவைத்து, பழி

கூறுபவர்களுக்குப் பக்கத்துணை நின்று, பரிவு காட்டி, பிளவுமூட்டும் காரியத்தை இந்த மூன்றாண்டுகளாகத் திட்ட மிட்டுச் செய்து வருகிறார்கள்.

கழகத் தோழர்கள், குடும்பப் பாசத்தோடு, கொள்கைப் பற்றுடன், தோளோடு தோள்சேர நின்று பணியாற்றுவதைக் காணும்போது, காங்கிரசாருக்கு கடுகடுப்பாகிறது; இந்த வலிவான அணிவகுப்பு வளருகிறதே என்ற கிலி ஏற்படுகிறது. எத்துணை தோழமை, இவர்களிடம்! ஒருவருக்கொருவர் துணை நின்று பணியாற்றி வருகிறார்களே!! ஒரு துளியும் இவர்களுக்குள் போட்டி, பொறாமை, பகை மூளவில்லையே, என்றெல்லாம் எண்ணிப் பயம் கலந்த துக்கம் கொள்கிறார்கள். நமது ஒற்றுமை அவர்களுக்குத் திகைப்பை உண்டாக்குகிறது. ஆதிக்கம் அழிக்கப் பட்டுவிடும் என்ற அச்சம்

அவர்களைப் பிடித்து உலுக்குகிறது.

ஆனால், நமது தோழர்களிடையில், காரணத்துடனோ காரணமின்றியோ, தோழமை கெடத்தக்க, கட்டுப்பாடு குலையத் தக்க, பகை மூண்டிடத்தக்க நிலை ஏற்பட்டு, கழகத் தோழர்கள் ஒருவரை ஒருவர் தூற்றவும் எதிர்க்கவும் தொடங்கினால்; காங்கிரசாருக்குக் கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சியாக இருக்கிறது! பயம் நீங்கி, மகிழ்ச்சி பிறக்கிறது. பயல்கள் பிளவு பட்டுவிட்டார்கள்; இனி அணிவகுப்புக்கு, அழிவுதான் என்று எண்ணுகிறார்கள். நமக்குள் பிளவு ஏற்படுவதிலேதான் காங்கிரசுக்குப் புது வலிவு கிடைக்கும் என்பதற்குக் காரணம் அதிகம் கூறத் தேவையில்லை.

சடுதியிலே உணர்ச்சிவயமாகக்கூடியவர்களை சிறிதளவு தந்திரம் தெரிந்தவர்கள்,

தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது, எளிதான காரியம்!! தூண்டுபவர்களுக்குச் சுவையாகக்கூட இருக்கும்! எருதுமீதுள்ள புண்ணை காக்கை கொத்தும்போது, பார், தம்பி! என்ன சுறுசுறுப்புடன் காகம் இருக்கிறது என்பது தெரியும். பழத்துண்டு வீசினால்கூடப் பயந்து பயந்து வரும், கொத்தும், அகப்பட்டவரையில் எடுத்துக்கொண்டு பறந்தோடிப் போகும். மாட்டின்மீது உள்ள புண்ணைக் கொத்தும்போது, அப்படி அல்ல, மாடு வாலைச் சுழற்றிச் சுழற்றி அடிக்கும். தப்பித்துக்கொள்ள இப்படியும் அப்படியும் பறந்திடும். ஆனால், மீண்டும் வந்து, கொத்தும். அதற்கென்னவோ அந்தக் காரியத்தில், அத்துணை உற்சாகம், சுவை!!

அதுபோன்றே, சிலர், கிளறிவிடுவதில், குத்திவிடுவதில் மிகுந்த சுறுசுறுப்பாக இருப்பார்கள்; சுவை பெறுவார்கள்.

இருவர், நெடுநாட்களாக நண்பர்கள், களங்கமற்ற முறையில் நேசம் இருக்கிறது; அங்காடிப் பக்கத்தில், அந்தி சாயும் நேரத்தில், அளவளாவுகிறார்கள், சில விநாடிகள்; பிறகு பிரிகிறார்கள் வேறு அலுவல் இருப்பதறிந்து என்று வைத்துக்கொள்.

இரண்டே நிமிடத்தில், நான் குறிப்பிடுகிறேனே குத்திக் கிளறி மகிழ்பவன், அப்படிப்பட்டவன் முயன்றால் பல ஆண்டு நேச உணர்ச்சிக்கே, பழுது உண்டாக்கிவிட முடியும் - விலைமிக்க பட்டுத் துணியில் ஒரு சொட்டு மையைத் தடவிவிட்டால் அந்தத் துணியின் அழகு மாய்வதுபோல!!

பக்குவமான பேச்சு - பதறாத போக்கு - ஏதுமறியாதவன் போன்ற நடிப்பு இவை இருந்தால் போதும்.

நான் காட்டிய இரு நண்பர்கள்,

பேசிப்பிரிகிறார்கள் - மகிழ்ச்சியுடன்.

கிளறுபவன், அதில் ஒருவனை அணுகி, அதிகம் ஏதும் பேசத் தேவையில்லை; மிகச்சாதாரணமான முறையில்,

"ஏம்பா! எப்போது மறுபடியும் நீங்கள் நண்பர்களா னீர்கள்?'' என்று கேட்டால் போதும்.

தூக்கி வாரிப்போடும் அவனுக்கு, "என்னய்யா இது, எங்களுக்குள்ளே என்னவோ பகை இருந்ததைப்போலவும், அது இப்போது நீங்கியதுபோலவும் ஒரு கேள்வி கேட்கிறாயே முட்டாள்தனமாக!'' என்று அவன் கூற, கிளறிவிடுபவன், ஏதுமறியாதவன்போல நடித்தபடி,"பகையில்லையா! உங்களுக் குள்ளே கடுமையான விரோதம் இருந்ததாக அல்லவா நான் எண்ணிக்கொண்டேன். ஆச்சரியமாக இருக்கிறதே! நீ, சொல்கிறாய்

எங்களுக்குள் பகையே ஏற்பட்டதில்லை என்று. ஆனால் இவ்வளவு நேரம் உன்னிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசினானே அவன், காதால் கேட்கமுடியாத ஆபாசமான வார்த்தைகளால் அல்லவா, உன்னை ஏசினான் - இந்தக் காதால் கேட்டேனே!'' என்று விஷம் தூவ, "என்னைத் திட்டினானா! உனக்கென்ன பைத்தியமா! என்னையா என் நண்பன் திட்டி னான்? என்ன சொன்னான்? எங்கே? எப்போது?'' என்று அவன் பதறிக் கேட்க, கிளறிவிட்டு வேடிக்கை பார்ப்பவன், மிகவும் பரிவு கொண்டவன்போல நடித்தபடி,"வேண்டாம். தம்பி! எப்படியோ ஒன்று, சினேகமான இருக்கிறீர்கள், அதைக்கெடுக்கலாமா, வேண்டாம். என்னவோ புத்திகெட்டு, ஆத்திரத்திலே உன்னைக் கேவலமானப் பேசிவிட்டிருக்கிறான் போகட்டும்

விட்டுத்தள்ளு. அதை நான் விவரமாகக் கூறி, உன் மனத்துக்கு சங்கடத்தை ஏற்படுத்தக்கூடாது. நேசம் முறிந்துவிடும்'' என்று கூறிவிட்டு, மேற்கொண்டு எதுவும் கூறாது, போய்விடுகிறான் என்று வைத்துக்கொள். தம்பி! என்ன ஆகும் தெரியுமா? திகைப்பு! சந்தேகம்! புகும்!! அடுத்த முறை நண்பனைப் பார்க்கும்போது, இது நினைவிற்கு வரும் - கேட்கலாமா வேண்டாமா? என்ற எண்ணம் குடையும்; அதனால் வழக்கமான முக முலர்ச்சி குறைந்து போகும்; அதைக் கண்டு அந்த நண்பனுக்குச் சந்தேகம் எழும் - என்ன ஒரு மாதிரியாக இருக்கிறானே! எப்போதும் போலக் கலகலப்பாகக் காணப்படவில்லையே. ஏதாகிலும் சங்கடமோ? கோபமோ? நம்மிடம் அலட்சியமோ? அடிக்கடி நாம் பண உதவி கேட்கிறோம் என்பதால், நமது நேசத்தைக்

குறைத்துக்கொள்ளப்பார்க்கிறானோ என்றெல்லாம் எண்ணு வான் இருவரும் குழம்புவர்! - கிளறியவன் வைத்த வேட்டு நேசத்தை முறித்திடும் - கிளறியவன் இருவரின் மதி தடுமாறிய நிலையை எண்ணி மகிழ்ந்துகொண்டிருப்பான்.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுவதைக் கண்டிருப்பார்கள்.

வெறும் சுவைக்காக மட்டுமல்லாமல், கிளறிப் பகை மூட்டி, வலிவைச் சிதைத்து, பயன்பெற எண்ணித் திட்டமிட்டு வேலை செய்கிறவர்களால் ஏற்படக்கூடிய ஆபத்து மிக மிக அதிகமல்லவா?

உறுமல் கேட்கும்போதே கிலி கொள்வார்கள் - ஓடி விடுவார்கள். ஆனால் புலி உறுமுவதற்குப் பதிலாகப் புள்ளினம்

போல இசை எழுப்புகிறது என்றால், இத்தனை இனிய குரலெழுப்பும் இந்தப் பிராணி எவர்க்கு என்ன தீங்கிழைக்கும்! என்று நம்பி, அருகே சென்று, அழிவைத் தாமே தேடிக்கொள்ள நேரிடுமன்றோ!

கிளறிக் கலகமூட்டிப் பகை வளர்ப்போர், உறுமும் புலியாக இருக்கமாட்டார்கள் - குரல் புள்ளினம்போன்றதாக இருக்கும், செயலோ இரத்தவெறிகொண்டதாக இருக்கும்.

ஒரு பெரிய இயக்கத்தை மாற்றார்கள் திகைக்கத் தக்க அளவுக்கு வளர்த்தான பிறகு, இந்தப் பேராபத்துச் சூழாமல், பாதுகாத்து நிற்கும் பெரும் பொறுப்பு, ஏற்படுகிறது.

அதிலும் நம்முடைய கழகத்தைப் பொறுத்தவரையில் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்க அல்ல, கிளறிவிட்டும் பகை வளர்க்கப் பலரும் துடியாய்த் துடிக்கின்றனர்.

தோலோடு பழம் இருக்கும்போது, நாம் கையாள வேண்டிய பக்குவத்தைவிட, தோல் உரித்தான பிறகு அதிகமான பக்குவம் தேவைப்படுகிறதல்லவா!

செய்திகள் பரப்புவோர், நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருவோர்கூட, ஒருஅமைப்பிலே இருக்கக்கூடிய நேசத் தொடர்பு களுக்கு ஊறு ஏற்படுத்தமுடியும்.

அரசியல் அமைப்புகளுக்கு மட்டுமல்ல - குடும்பம் - தொழிலிடம் - மன்றம் எதிலும்.

குப்புசாமி வாந்தி எடுக்கிறான் திடீரென்று ஒரு நாள். காரணம் தெரியாது திகைக்கிறான். களைப்பு மேலிடுகிறது. காப்பி குடித்தால் களைப்புப் போகும் என்று எண்ணுகிறான். கந்தசாமி நடத்தும் காப்பிக் கடை சென்று காப்பி குடிக்கிறான்.

தம்பி! இவை நிகழ்ச்சிகள்.

இதையே கிளறிப் பகைமூட்டும் போக்குக்குப் பயன்படுத்த எண்ணினால், எதையும் கூட்டத் தேவையில்லை, குறைக்கத் தேவையில்லை, சிறு மாற்றம் செய்து வெளியிட்டால் போதும்.

கந்தசாமி நடத்தும் காப்பிக்கடை சென்று காப்பி குடித்தான். குப்புசாமி வாந்தி எடுத்தான்.

இப்படி வெளியிட்டாலே போதும், கந்தசாமி கடைக் காப்பி குடித்ததால்தான், குப்புசாமி வாந்தி எடுத்தான் என்று பொருள்கொண்டு, கந்தசாமி கடையையே பலரும் வெறுத்துப் பேசத் தொடங்குவார்கள்.

செய்திதான்! கருத்துரைகூடத் தரப்படவில்லை.

நடந்தவைதாம்! இட்டுக்கட்டி எதையும் சொல்லவில்லை.

என்றாலும் எது முதலில் நடந்தது, எது பிறகு நடந்தது என்பதை மட்டும் வேண்டுமென்றே, எடுத்துக் காட்டாமல், இதனால் இது நடந்தது; அதாவது, கந்தசாமியின் கடை காப்பி குடித்ததால் வாந்தி வந்தது என்ற பொருள்கொள்ளும்படி, புகார் எழும்படி, பழி ஏற்படும்படி, செய்தி வெளியிடப்பட்டால் விபரீதம் ஏற்படுகிறது.

ஒரு அரசியல் கட்சியில், அதிலும் விடுதலை இயக்கத்தில் கிளறிவிட்டுப் பகைமூட்டும் செயலைச் செய்திடும் வாய்ப்புகள் அதற்காகவே அலைந்துகொண்டிருப்பவர்களுக்கு ஆயிரம் கிடைக்கும்.

அத்தனைக்கும் இடம் தராததாக உள்ளம் பக்குவப் பட்டாகவேண்டும்.

ஏன்தான் சிலர் இதுபோலெல்லாம்

செய்யவேண்டுமோ என்று எண்ணி ஆயாசப்படுகிறாய். தம்பி! இது காலத்தின் கூறு! நாம்தான் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பயிற்சி பெற வேண்டுமே தவிர, அவர்களின் இயல்புகளை நாம் மாற்றும் காரியத்தில் ஈடுபட்டுப் பயனில்லை.

உலகிலே காணக்கிடக்கும், பல்வேறு நெருக்கடியான பிரச்சினைகள் குறித்து உலகப் பெருந்தலைவர்கள் நேச முறையில் கலந்து பேசினால் போர்ப் போக்கு மாறும் என்ற நல்ல நோக்கத்துடன், சில தினங்களுக்கு முன்பு சோவியத் தலைவர் குருஷேவும் அமெரிக்கத் தலைவர் கென்னடியும், வியன்னா நகரில் சந்தித்தனர்.

பல இதழ்கள் படங்களை வெளியிட்டன - இன்னின்னது பேசினார்கள் என்ற தகவலை வெளியிட்டன - அறிக்கைகள் வெளியிட்டன.

நியூயார்க் ஹெரால்டு டிரைப்யூன் எனும் அமெரிக்க இதழ் இரு தலைவர்களும் என்னென்ன உண்டு களித்தனர் என்ற பட்டியலைத் தந்தது.

பேசும் பிரச்சினைகளை மற்றவர்க்கு அறிவிப்பது. கருத்துத் தெளிவுபெறப் பயன்படும்; அவர்கள் சாப்பிட்டதைச் சொல்லிப் பயன்?

உண்டு! அந்தச் செய்தி மூலமாகவே, அந்த இதழ் தனக்குச் சரியென்றுபட்ட சில எண்ணங்களை எடுத்துக் காட்டிற்று.

விருந்து, முதலில் குருஷேவுக்கு, கென்னடி வைத்தாராம்.

ஈரல் சமைத்து வைக்கப்பட்டிருந்ததாம் - பிரான்சு நாட்டு முறைப்படி!

பொருள் உண்டோ? உண்டு என்கிறார் இதழில் எழுதியவர்.

பிரான்சு நாட்டு உணவு முறையில் தயாரிக்கப்பட்ட ஈரல் கறி படைத்ததன்மூலம், ”நான் பிரான்சு நாடு மேற்கொண்டுள்ள முறைகளை ஆதரிக்கிறேன். உம்மைச் சந்திப்பதற்கு முன்பு பிரான்சு நாட்டுத் தலைவரைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன் - அதைக் கவனப்படுத்துகிறேன்’ - என்று கென்னடி, குருஷேவுக்கு அறிவித்தாராம்!

அடுத்தது, மாட்டிறைச்சி; அது பிரிட்டனில் செய்யப்படும் பக்குவப்படி தயாரிக்கப்பட்டதாம்.

அதனை அளித்ததன் பொருள் ”நாம் கூடி, உலகப் பிரச்சினைகளைப்பற்றி பேசுகின்றோம். இங்கு, பிரிட்டிஷ் முதல்வரும் இருந்திருக்கவேண்டியது முறை. பிரிட்டன் கையாளும் பக்குவத்தைத்தான் நான் விரும்புகிறேன். இதை அறிவிக்கத்தான் இந்தப் பண்டம்’’ என்று குருஷேவுக்கு

கென்னடி அறிவித்தாராம்!!

பிறகு, ஒரு அமெரிக்க முறைப் பண்டம். அந்த முறை 1952ஆம் ஆண்டு, சமையற்கலையில் புகுத்தப்பட்டதாம்; அதனை அளித்தற்கு, ஒரு அரசியல் விளக்கம் உண்டென இதழில் எழுதப் பட்டிருக்கிறது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக, அயிசனவர் 1952இல் அமர்ந்தார். அவர் வேறு கட்சி - கென்னடி வேறு கட்சி! என்றாலும், ”நாம் கூடிப் பேசும் பிரச்சினைகளில், அயிசனவர் கட்சிக்கும் என் கட்சிக்கும் உடன்பாடு இருக்கிறது என்பதைக் காட்டவே, அயிசனவர் பதவி ஏற்ற 1952ஆம் ஆண்டு சமையற் கலையில் புகுத்தப்பட்ட புது முறையில் செய்யப்பட்ட இந்தப் பண்டம் தந்திருக்கிறேன்’’ என்று தெரிவிக்கிறாராம், கென்னடி.

எப்படித் தம்பி! இதழின் வேலைத் திறம்!!

பிறகு குருஷேவ் கென்னடிக்கு விருந்தளித்தார்.

அந்த விருந்திலே, முழுக்க முழுக்க அமெரிக்க நாட்டு "பாக' முறைப் பண்டங்கள் இருந்தனவாம்.

பொருள் உண்டோ? "நிரம்ப'' என்கிறார் கட்டுரையாளர்.

"எங்களால்தான் முடியும் நேர்த்தியான வகைகளைச் செய்திட - என்று பேசிக்கொள்கிறீர்களே - எதையும் சாதிக்கும் திறமை சோவியத்துக்கு உண்டு - சாப்பிட்டுப் பாரும், இவை யாவும், உங்கள் நாட்டுச் சமையல் முறைப்படி எங்கள் நாட்டவர் தயாரித்தவை, தரம் எப்படி என்பதை அறிந்துகொள்ளும்!!'' என்று குருஷேவ், கென்னடிக்கு அறிவிக்கிறாராம்.

தம்பி! இருவரும் ஒருவருக்கொருவர்,

விருந்து நடத்தியதில், அதிகமாகச் சாப்பிட்டவர், கென்னடிதானாம்!!

பொருள் என்ன என்றால், "கிடைத்ததை விடமாட்டோம், பெறுவதும் பெரு அளவுதான். இது அமெரிக்க முறை'' என்பதை அறிவிக்கும் நோக்கமாம் கென்னடிக்கு.

இப்படி, விருந்துக்குத் தத்துவங்களை இணைத்துவிடும் போக்கிலே, அந்த இதழ் எழுதிற்று.

ஆனால், கவனித்தனையா; இதிலே, இழிவுபடுத்தும் முறை, மனத்தை புண்ணாக்கும் நோக்கம் தலைகாட்டவிடவில்லை.

அப்படி, இழிவுபடுத்தவேண்டுமென்றால், குருஷேவைக் கண்ட உடனே கென்னடி "வருகிறீர்களா! மிருகக்காட்சிச் சாலைக்குப் போகலாம்! ஒரு பெரிய கரடி

வந்து சிக்கிக்கொண்ட தாம். பிடித்து அடைத்துப் போட்டிருக்கிறார்கள்!'' என்று கேட்டார். அதற்கு குருஷேவ்,"போகலாம்! ஆனால், அங்கே யானை இருக்குமே, இப்போதுதான் அதனிடமிருந்து தப்பிப் பிழைத்தோம், இதற்குள்ளாகவா அதனிடம் மாட்டிக்கொள்வது என்ற பயம் உமக்கு உண்டாகுமே என்றுதான் பார்க்கிறேன்'' என்று பதிலளித்தார் என்று இதழ் எழுதியிருக்கலாம்.

கரடி, சோவியத் நாட்டுக்கு உவமையாகக் கூறப்படுவது. எனவே, அதைக் கேலி செய்வது, மறைமுகமாகச் சோவியத்தைக் கேலி செய்வதாக அந்தப் பேச்சுக்குப் பொருள் ஏற்பட்டு, குருஷேவுக்கு மனச்சங்கடம் உண்டாகியிருக்கும்.

அதுபோலவே, யானை, அயிசனவர் கட்சிக்குச் சின்னம். அந்தக் கட்சியிடம் கென்னடிக்கு மிகுந்த பயம் என்று கென்னடி

யைக் குருஷேவ் கேலி செய்வதாகவும் பொருள் ஏற்பட்டுவிடும்.

இந்த அளவு போதும், "மூட்டிவிட!'

எனவே, தம்பி! மூட்டிவிடுவோரின் நோக்கம் தெரிந்து நாம் கழகத்தைக் கட்டிக் காப்பாற்றவேண்டும்.

வெறும் தேர்தலுக்காக மட்டுமே, நமது கழகம் என்றால், ஒருவர் பகைத்துக்கொண்டால் புதிதாக ஒன்பது பேருடைய நட்புக் கிடைக்கும் என்றுகூட எண்ணிக்கொண்டு, காரியத்தைக் கவனிக்கலாம்; அல்லது தேர்தலிலே பாதகமே ஏற்படினும்கூடப் பேராபத்தாகிவிடாது என்று துணிவுடன் இருக்கலாம். ஆனால், நாம் நடத்திச் செல்வது, விடுதலை இயக்கம்! இதிலே, கட்டுக் கோப்புக் கெடவிடலாகாது! மனமுறிவுகள் எழக்கூடாது. நாளுக்கு நாள்

நேசத் தொடர்புகள் வலிவும் பொலிவும் உள்ளனவாக இருத்தல்வேண்டும்.

திருப்பரங்குன்றத்திலே நான் கண்டு களிப்படைந்தது, கழகத்திடம் தம்மை ஒப்படைத்துவிட்டுள்ள உத்தமர்களிடம் நிலவும், இந்த உணர்ச்சிப் பெருக்குத்தான்.

அதுதான் நாம் திரட்டியுள்ள கருவூலம். அதுதான், விடுதலைக் கிளர்ச்சிக்குத் தேவையான படைக்கலம்.

விடுதலைக் கிளர்ச்சிகளின்போது நடைபெற்ற நிகழ்ச்சி களை, ஏடுகளிலே படிக்கும்போது, தம்பி! நெஞ்சம் நெகிழ்கிறது. எத்தனை எத்தனை வீரச்செயல்கள்! என்னென்ன விதமான தியாகங்கள்!! விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபடுவது என்றால், விளக்க மாக, கேட்போர் மனத்திலே பதியத்தக்க விதமாகப் பத்து மாநாடுகளிலே

பேசிவிடுவது மட்டும் என்றா எண்ணிக் கொள்வது! புள்ளி விவரங்களைச் சேகரித்து, மனப்பாடம் செய்துகொண்டு, அதனைப் பேச்சிலே கொட்டிக் காட்டி விடுவதனால் மட்டுமா, விடுதலை கிட்டிவிடும், காட்டாத காரணம் இல்லை! பேசாத பிரச்சினை இல்லை! மறுக்கொணாத வாதங்களைத் திறமையுடன் காட்டினோம். இதற்குப் பிறகும் விடுதலை கிடைக்கவில்லை என்றால், என்றுமே கிடைக்காது, எவர் முயன்றாலும் கிடைக்காது!! என்று கூறுபவர்கள், விடுதலை வரலாற்றில், இங்கும் அங்குமாக, கொட்டை எழுத்துக் களில், கோடிட்ட இடங்களைப் பார்த்துவிட்டு அரசியல் நடத்துபவர்கள். அரசமரத்தைச் சுற்றிக்கொண்டே அடி வயிற்றைத் தடவிப் பார்ப்பது என்பார்களே, அந்தப் போக்கினர்.

படித்தால் உடல் புல்லரிக்கிறது! உள்ளம்,

புயல் கொள்கிறது! கண்கள், குளமாகின்றன!!

உடலெங்கும் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்திட்ட நிலையில், குதிரை வீரர்கள், உடலைத் தூக்கி வந்து சந்தைச் சதுக்கத்திலே வீசி, பயத்துடன் இங்கும் அங்குமாகப் பதுங்கி கிடக்கும் மக்களைப் பார்த்து,

”இதோ உங்கள் வீரன்!

விடுதலை கேட்டானே வீணன்!

விடுதலை கிடைத்துவிட்டது!

இனி எமது ஆட்சிக்கு அடங்கி இருக்கமட்டான்!

எமக்கு வரி செலுத்தமாட்டான்!

எமது சட்டம் அவனைத் தொடாது!

அவன் விடுதலை பெற்றுவிட்டான்!

கேட்டான்; கொடுத்துவிட்டோம்!

நிறைய! சுடச்சுட! உடலெங்கும்

எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள், விடுதலை வீரன் உடலில் ஏற்பட்டுள்ள பொத்தல்களை!!

விடுதலை வேண்டுமா, விடுதலை!!

தருகிறோம்! இதுபோல! தாராளமாக!!

என்று கேலிமொழி பேசிவிட்டு, இடி இடியெனச் சிரித்து விட்டுச் செல்கிறார்கள். நாட்டை அடிமைக் காடாக்கிய எதேச்சாதிகார வெறியர்கள்! கொடுங்கோலர்கள்!!

ஸ்பெயின் நாட்டுப் பிடியிலிருந்து, தன் நாட்டை விடுவிக்கும் வீரச் செயலில் ஈடுபட்ட, "ஜோரேஸ்' எனும் வீரனைப்பற்றிப் படிக்கும்போது, எவருக்கும் அடிமையாக இருக்கிறோம், உயிரும் இருக்கிறதே - என்று எண்ணத் தோன்றும்.

காடா, இது? அது நமது நாட்டிலல்லவா இருக்கிறது!

கல்லறையா இது? நமது வீடல்லவா, கல்லறை!!

சோளக்கொல்லைப் பொம்மைகள், அதோ வயலில் தெரிகின்றனவே, அவைகளா? சொல்லும் மதியிலி எவன்? அந்நியன் அடிபணிந்து, சொந்த நாட்டில் அவன் அரசு நடத்தக் கண்கூடும் கண்விழி பிதுங்கி வெளியே வரவில்லையே நமக்கு - நாமல்லவா, சோளக்கொல்லைப் பொம்மைகள்! சுட்டெரிக்க வேண்டும் நம்மை! விட்டுவைத்திருக்கிறார்கள், உலகிலே அவமானச் சின்னங்களாக உழலட்டும் என்று!!

மாற்றான் பிடியில் சிக்கிய நாட்டிலே மான உணர்ச்சி பீறிட்டெழும் நிலை பெற்றவர் கூறுவரன்றோ இதுபோலக் கூறினர்,

விடுதலைக்காகப் போராடிய நாடுகளிலே, உலவிய வீரர்கள் - தியாகிகள்!!

அடிமைத்தனத்தை எதிர்த்துப் போரிடாமல், மாற்றான் அடிபணிந்து, வாழ்வு நடத்தும் தகப்பனை, மகன் சுட்டெரித்து விடுவதுபோலன்றோ பார்த்தான்! "தர்பார்' தயவால், வாங்கிவந்த பொன் இழைத்த ஆடையைத் தகப்பன் தருவான், மகளிடம் அதைக் கண்ட, அவர்களுடைய அண்ணன் கண்களில் பொறி பறக்கும்!

"அணிந்துகொள்ளம்மா, அணிந்துகொள்! ஆசையோடு, அப்பா வாங்கிவந்தார், உன் அழகுக்கு அழகு செய்ய!''

விலையுயர்ந்த ஆடை - வேலைப்பாடு மிக்கது.

கொடுத்த விலை கொஞ்சமல்ல! உடன்பிறப்பே! இந்நாட்டு மக்களின்

மானத்தைப் பறித்தெடுத்து, மண்டியிட்டபடி மாற்றான் முன்வைத்து, அதற்காக அவன் தந்த கூலியை - கோடிப் பொன்னைக்கொண்டு வாங்கி வந்திருக்கிறார், வண்ணச்சேலை!

எண்ணம், உயர்வானது!!

என் நாடு அடிமைக்காடு என்று சொல்பவன், யார்? பார் என் மகளை! பளபளப்பான ஆடை! பட்டத்தரசிபோன்ற எடுப்புடன் இருக்கிறாள்! அடிமை என்று எவனோ உளறுகிறானே!

அடிமைக்கு ஏது அலங்கார ஆடை!

என் மகளைப் பார்! நாடு, அடிமைப்படவில்லை!! என்பதை நடமாடிக் காட்டுகிறாள் - என்றல்லவா, தங்கையே! நம் அப்பா! அறிவிக்க எண்ணம் கொண்டிருக்கிறார்!!

என்று கேலி பேசுகிறான் - கேட்போர்

துடிதுடிக்க - பூவை அந்தப் பொன்னாடையைக் கிழித்தெறிய, குடும்பம் வாழ வேண்டுமே என்ற பொறுப்புக்காக, மாற்றானை அண்டிப் பிழைக்கும் நிலைக்குச் சென்ற தந்தை, மாரடைத்து மாண்டுப்போக!!

விடுதலை வரலாறுகளையும் படித்துவிட்டு, திராவிட மாவது தனிநாடாவது என்று பேச, தம்பி! நெஞ்சழுத்தம் மிக மிக அதிகம் வேண்டும் - தோல் மிகமிகத் தடித்திருக்கவேண்டும் - அறிவு அடியோடு அழிந்துபோயிருக்கவேண்டும்.

பார்மெச்ச வாழ்ந்ததற்கு வரலாற்றுச்சான்று இருக்கிறது! வகைகெட்ட நிலையில் உள்ளோம், இதற்குச் சான்று தேடத் தேவையில்லை. இந்த இரு காரணங்களைவிட, விடுதலை தேவை என்பதற்குக் காரணம் தேடவும் வேண்டுமோ! தன்னாட்சி இல்லாததால்தானே, சிங்களச்

சீமையிலே நம்மவர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவது குறித்து, கண்ணீர் வடிக்கவும் கை பிசைந்துகொள்ளவும் மட்டுமே, நம்மால் முடிகிறது. அமைச்சர்கள் என்போர் ஒரு அறிக்கைமூலம் கூடக் கண்டனம் தெரிவிக்க வழி இல்லை. நமக்குத் துளியும் சம்பந்தமற்றவர்களின் பிடியாக இந்தியப் பேரரசு இருப்பதால் தானே, சிங்களத்திலே கொடுமை புரியும் திருமதி. பண்டார நாயகாவைக் கண்டிக்கவேண்டிய பண்டித நேரு, மாம்பழம் அனுப்பி வைக்கிறார், அம்மையார் தின்று சுவை கண்டு மகிழ! இவர் மாம்பழம் அனுப்புகிறார்; அம்மையார் மங்குஸ்தான் பழம் அனுப்புகிறார்கள்! சிங்களம் சென்று செக்குமாடென உழைக்கும் நம்மவர்களோ, வெறியரால் தாக்கப்படுகிறார்கள்; அவர்களின் குடிலிலே நேருவின் திருஉருவப்படம் வேறு இருக்கிறது!

இன்று எந்தச் சிங்களத்திலே இந்தக் கொடுமை இழைக்கப் படுகிறதோ, அங்கு கரிகாற்பெருவளத்தான் வெற்றிகண்டு, பிடிபட்ட சிங்களக் கைதிகளைக்கொண்டு வந்தல்லவா, காவிரிக்குக் கரை அமைத்தான் என்று வரலாறு தெரிவிக்கிறது. கல்லணை அமைந்த இனம் இன்று, கங்காணியின் சவுக்கடியைப் பெற்றுத் துடிக்கிறது. விடுதலை ஏன் வேண்டும்? இப்போது என்ன குறை? என்று கேட்கச் சிலர் உளர்; அவர்கள் பெரிய இடத்திலும் அமர்ந்துவிட்டுள்ளனர்.

முன்னோரே! மூதாதையரே! உம்மோடு சேர்ந்து இங்கு இருந்துவந்த, பொன்னும் மணியும், புவியாளும் திறனும், இன்னின்னவை என்று யாமறிய, இலக்கியம் ஏன் படைத்து விட்டுச் சென்றீர்கள்! கொற்றம் இழந்துழலும் எமக்கு, முன்பு, ஏற்றம் மிகுந்திட நம் இனத்தார் வாழ்ந்தார்கள் என்பதறிவிக்கும்

இலக்கியம் இன்றும் இருப்பது, எமை வெட்கித் தலைகுனிந்து விம்மிடச் செய்கிறதே. வீடிழந்து மாடிழந்து விழிமட்டும் இழவாமல், எல்லாம் இருந்தபோது எழில்மாடமதை, ஓவிய மாய்த் தந்தொருவர், உன் வீடு! காண்பாய்! என்றால், மனம் என்ன பாடுபடும்! அக்கணமே, விழியேனும் போய்விட்டால், வேதனை எழாதே என்று எண்ணிடவும் தோன்றுமன்றோ, இன்று நம்மிடம் இருக்கும் இலக்கியம் பலப்பலவும், இது போன்ற நிலையையன்றோ நமக்கெல்லாம் உணர்த்துகிறது, அந்தோ! கவியொன்று பார்த்திட்டேன், ஆங்கிலமொழியதனில் நினைவிற்கு வருகிறது - நம் நிலையை அறியச்செய்யும் தன்மையது.

அணிந்து அகமகிழ
அணிகலன் தந்தாள்

அன்னை; சென்றாள்

கொடுத்தது அஃதெனில்

கொண்டு சென்றதோ

அரிதாம் விரம்! வெற்பு! அந்தோ!

மண்ணோடு மண்ணாய் ஆனது அஃதும்.

அணிகலன் விட்டுச்சென்ற அன்னை

அதனை அன்றே மண்ணுக்காக்கி

எனக்கென வீரம் விடுத்திடின், அம்ம!

ஏற்றம் பெற்றே வாழ்ந்திருப்பேனே!

இதுபோன்றன்றோ வரலாற்றிலே புதைந்துகிடக்கும், புகழொளிதரும் மணிகளை நம்மிடம் கொடுத்துவிட்டு, அஞ்சா நெஞ்சினையும் அறிவாற்றலையும்,

ஆன்றோர், தம்முடன் எடுத்தேகினர்.

அஞ்சா நெஞ்சுடை விடுதலை வீரர்கள், கொடுங்கோலர் களின் கொடுமை அதிகமாக அதிகமாக, கிளறிவிடப்பட்ட தழலென்றாயினர்.

"வெற்றியூர் செல்கையிலே வேதனை உமக்களிக்கும் பாவியேன் ஆகிவிட்டேன்.''

"காடும் மலைவனமும் கடக்கக் கலங்காத காதலியே! என் அரசி! பேசும்மொழிப் பொருளும், என்ன? கூறிடுவாய்.''

"நாடு மீட்டிடவே நடைபோடும் என் அன்பே! நானும் உடனிருந்து பாடுபட இயலவில்லை.''

போர்முனையே பூங்காவாய், கொண்டவளே, கோகிலமே! அருகில் நீ இருக்க, மாமலையும் கடுகாகி, மாவீரம் பெறு கின்றேன்! ஊணும் உறக்கமுமே உத்தமி! நீ மறந்து, உடனிருந்து உழல்கின்றாய்,

வாழ்த்துகிறேன் அரும்பேறே!

பாதை முழுவதும் கடந்து பட்டொளி வீசிடும் நம் மணிக்கொடி பறந்திடும் காட்சியினைக் காண்பதற்கு கண் உண்டு; வலிவில்லை. நின்னோடு வந்திடும் நிலையும் எனக் கில்லை! நெஞ்சமதில் வீரம் மாறவில்லை, மாறாது. ஆயின் நடந்திடவும் இயலாது, இனி என்னால், ஊர்ந்தேனும் வந்திடுவேன், உன்பாதம்பட்ட வழி. உயிரும் பிரிந்திடும் உணர்கின்றேன் இவ்வேளை.

”ஐயையோ என் செய்வேன்; ஆவி துடிக்குதடி! கை கோத்து உலவிடுவார், காதலர்கள்; இயற்கை அது. களம்நோக்கிப் பாய் கின்றோம் கலங்காமல், நாளெல்லாம் பூச்சூடி மகிழ்ந்திடவும், புதுப்புனலில் ஆடிடவும் பூவையர்க்கு விருப்பம் எழும். மாற்றாரின் கணையன்றோ மலராக நினக்களித்தேன்! கொட்டும் குருதியிலே குளித்திடவன்றோ

அழைத்தேன்.''

குற்றுயிராய் இருக்கையிலும் கொள்ளை இன்பம் காணு கின்றேன், மெச்சி எனை நீங்கள் பேசுவது கேட்டு, இன்று, ஆருயிரே! இதனையும் நான் இழந்திடுவது எண்ணித்தான் இறப்பதற்கு அஞ்சுகின்றேன். எனக்காகப் பயணத்தை நிறுத்தாதீர், என் ஆணை! களம் நோக்கிச் சென்றவனைக் கண்ணீர் தடுத்தது, அந்தக் கண்ணீரைச் சொரிந்தவளோ காதகி அவன் மனைவி என்றென்னை வையம் இகழ்ந்திடும், நான் தாளேன், உம்முடனே இருக்கின்றேன், என்றெண்ணிப் புறப்படுவீர்! உள்ளத்தில் உறைபவளே! என்பீரே, மறந்தீரோ! நோய்கொண்ட உடலது தான் சாய்ந்திங்கு இருந்துவிடும், ஆவி இருக்குமிடம், அன்பே! உன் இதயம்தான்! தாவிச் சென்றிடுவிர், தடையாக எனைக் கருதி, தளராதீர்,

தயங்காதீர்! மாற்றாரை வீழ்த்திடுவான் மணவாளன் என்றெண்ணி, மணமேடை மலரணையாய்க் கொண்டிங்கு இருந்தபடி, வாழ் வீச்சும் வேல் வீச்சும் வல்லமையும் கண்மூடிய நிலையில் கண்டு களித்திடுவேன்; போய்வாரீர்.''

தம்பி! நாடு மீட்டிடும் கடுமையான போரில் ஈடுபட்ட மாவீரன், களம்பல செல்கிறான், காதலி உடன்வர! அவளோ வீரம் செறிந்த முத்தழகை விளக்கொளியில் கண்டல்ல, போர் முனையில் கண்டு கண்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றாள். ஆரணங்குக்கு வந்துற்ற நோய், அவள் உயிர் குடிக்கும்போதும், அஞ்சாமல், விடைகொடுத்து அனுப்புகிறாள்.

மாற்றாரை நோக்கி மாவீரன், பாய்ந்து சென்றபடி இருக்கிறான். அவன் காதலி உயிர் இழக்கிறாள்!! எதிரியின் தாக்குதலால் உடலில் குருதி கொட்டுகிறது; தன்

இல்லக்கிழத்தி மடிந்த சேதி கேட்டு, மாவீரனின் இதயத்திலிருந்து குருதி பீறிட்டுக் கிளம்பி, கண்ணீராகிறது.

தென் அமெரிக்க நாட்டிடையே புயலெனக் கிளம்பி விடுதலைப் போர் நடத்தி, வெனிசூலாஸ், பொலீவியாபோன்ற நாடுகளை, ஸ்பெயின் நாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுவித்த சைமன் பொலீவர் என்னும் மாவீரன் வரலாற்றைப் படிப்போர், துடித்தெழுவர் - அத்துணை உள்ளம் உருக்கும் நிகழ்ச்சிகள் உள்ளன.

என்றோ நடைபெற்ற நிகழ்ச்சிகள் கிடக்கட்டும், இன்று மட்டும் என்ன, வீரத்துக்கும் தியாகத்துக்கும் பஞ்சமா? பல்வேறு நாடுகளிலே காண்கிறோம் விடுதலை வீரர்கள் வெற்றிபெற, இரத்தம் கொட்டுவதை.

நமது நாட்களிலே

நடைபெற்றுக்கொண்டிக்கும் அல்ஜீரியா விடுதலைப் போரிலே இதுவரை பத்து இலட்சம் பேர் உயிரிழந்தவர் என்று அல்ஜீரிய சுதந்தர சர்க்கார் அதிபர் அப்பாஸ் கூறுகிறார். இல்லை! இல்லை!! இதுவரை 1,20,000 பேர் மட்டுமே கொல்லப்பட்டனர் என்று பிரான்சு அரசு கூறுகிறது.

பிரான்சு அரசு கூறும் கணக்குப்படியே பார்த்தாலும் பயங்கரம் தெரிகிறதல்லவா? இரத்தம் ஆறாக ஓடுகிறது என்பது புரிகிறதல்லவா?

படையுடன் படை மோதிக்கொள்கிறது, அல்ஜீரியாவில்!

நாம், திராவிட நாடு பெற, அறநெறி, உள்ளத்தை மாற்றுவது, உலகினர் நமது உரிமையை உணரும்படி செய்வது என்று திட்டமிட்டுப் பணியாற்றுகிறோம்.

வீர வரலாறு படித்தவர்கள், எழுச்சியைப் பெற்றவர்கள், நாடு மீட்டிட இன்னுயிர் ஈந்திடவேண்டிய வேளை எப்போது கிடைக்கும் - நமது பங்கினை எப்போது செலுத்துவது என்றே எண்ணுவர்.

இங்கோ, திராவிடர் எனும் இனம் குறித்தும் திராவிட நாடு எனும் அமைப்புப்பற்றியுமே விளக்கம் அளித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் கூட்டத்திலேயே, இருக்கிறோம். இந்த கூட்டத் திலேயே விளக்கம் பெற மறுப்போர் இருந்தால்கூடப் பரவாயில்லை, விளக்கம் பெற்றோரே மறந்துவிடும் கண்றாவிக் காட்சியைப் பார்க்கிறோம். விளக்கம் அளித்துக்கொண்டு வந்தவர்களே, விளக்கம் இல்லையே என்று பேசிடும் விந்தையும் நடக்கிறது.

திராவிட நாட்டின் எல்லை என்ன? என்று கேட்பவர் களுக்கு, நான் செல்ல ஒரு

மோட்டாரும் நாலு லாரி நிறையக் கல்லும் இருந்தால், ஒரு சுற்றுச் சுற்றி எல்லையைக் குறித்துக் காட்டுவேன் என்று பதில் அறைந்தது எப்படி வீரமாக, விவேக மாக, அரசியலாகக் கொள்ளப்பட்டதோ, அதுபோலவே, அதே அறிவினர், எல்லையாவது மண்ணாவது! ஏது திராவிடம்? எதற்குத் திராவிடம்? என்று குரலெழுப்பி, இதிலே, உள்ள வீரத்தை வெண்பா ஆக்கு, ஆற்றலை அகவலாக்கு என்று பேசுகிறார்கள்.

அகில உலகிலேயே ஏற்பட்டுவிட்ட அறிவுப் பஞ்சத்தைப் போக்கத் தம்மை அர்ப்பணித்துக்கொள்பவர்கள்போன்ற போக்கில், விழியையும் மொழியையும் ஆக்கிக்கொண்டு, திராவிடம் எப்படி வாழும், பிரிந்தால் என்று கேட்டு, புதியதோர், சிக்கல் நிரம்பிய பிரச்சினையை உண்டாக்கிவிட்டதாக எண்ணி மனப்பால் குடிக்கிறார்கள்.

அவர்களின் இந்தப் பேச்சைக் கேட்டவர்கள் ”வடவரின் அடிவருடிகளன்றி, மற்ற எவரும், திராவிடம் பிரிந்தால் வாழுமா என்று கேட்கமாட்டார்கள். அடிவருடிகளை எவரும் மதிக்கவும் மாட்டார்கள்! என்று பேசியதைக் கேட்டவர்கள்தான்!! இளநீர் இருக்கும் தென்னை யிலே கள்ளும் பெறுகிறார்கள். முத்து உறங்கும் கடலிலேயே நத்தை உலவக் காண்கிறோம். சிலருடய மனம் இதுபோல, எதையும் கொள்கிறது; நாக்கு எப்படியும் பேசுகிறது என்பதன்றி, வேறென்ன!!’

இந்தியாவில் தென்னாட்டு மாநிலங்களுக்கு எதிராக வட நாட்டு மாநிலங்கள் ஒன்று திரண்டு, தென்னாட்டின் நலன் களுக்கு விரோதமாக அவர்கள்மீது குதிரை ஏற ஆதிக்கம் செலுத்த வாய்ப்பிருக்கிறது என்பது யூகிக்கக்கூடியதே!

இப்படி வடநாடு தென்னாட்டின்மீது

ஆதிக்கம் செலுத்து மானால் தென்னாடு - வடநாட்டின்மீது போர் தொடுப்பது - இந்தியாவில் ஒரு உள் நாட்டுப்போர் மூளுவது இயற்கையே!

என்று கூறியவர், டாக்டர் அம்பேத்கார். வடநாடு தென்னாடு என்று பேசுவதே அறிவீனம் என்று பேசும் புத்திக் கூர்மையுள்ள புதிய போக்கினர், டாக்டர் அம்பேத்காரையும் ஒரு பிடி பிடிப்பார்களோ என்னவோ! என்ன தெரியும் அவருக்கு! அவர் ஒரு வக்கீல்! வாதாடுவார்! அதுவே தவிர, எது நடக்கக்கூடியது, எது நடைபெற முடியாது என்று யூகித்தறியும் அறிவாற்றல் அவருக்கு ஏது? என்றும் பேசுவார்களோ, என்னவோ, யார் கண்டார்கள்.

நமக்குத் தம்பி! டாக்டர் அம்பேத்கார் போன்றவர்களுக்குக் கூட, அவ்வளவாக அறிவாற்றல் கிடையாது. என்று கூறும் "நோய்'

கிடையாது!!

அவர்போன்றார்கள் வரலாற்று ஆசிரியர்கள், கூறியுள்ள கருத்துகள் நமக்கு நம் பாதையில் ஒளி விளக்குகளாக உள்ளன. அந்தப் பாதையில், எழுச்சிமிக்கவர்கள் ஏறுநடைபோடுகிறார்கள்!!

நாகர்நாடு ஒரு தனிச் சுதந்திர நாடாகும். அது இந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட ஒரு மாநிலமாக இருப்பதை நாகர்கள் விரும்பவில்லை. ”நாங்கள் இந்தியாவினின்றும் முற்றிலும் வேறுபட்ட தனித்தேசிய இனமாகவே தொடர்ந்து இருக்க விரும்புகிறோம். இதுவே எங்கள் அடிப்படைக் கோரிக்கை.’’

”இந்தியக் குடியுரிமையை ஏற்க நாங்கள் மறுப்பதன் காரணமாக, இந்தியக் குடியரசுடன் எங்களைப் பலவந்தமாகப்

பிணைக்கும் நோக்குடன், இந்திய ஆயுதப் படையினர் கடந்த சில ஆண்டுகளாகவே எங்கள்மீது ஏவிவிடப்படுகின்றனர். அந்த ஆயுதப்படையினர் எங்கள் நாட்டு ஆண் - பெண் - சிறார் ஆகிய அனைவரையும் எதிர்த்துக் கொடூரச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.''

"எங்கள் நாட்டில் எந்த ஒரு இந்தியனுக்கும் ஒரு அங்குல நிலமும் சொந்தம் கிடையாது.''

"இந்தியாவுக்கும் நாகநாட்டுக்குமிடையே எந்தவிதச் சிக்கலான பிணக்குக்கும் இடமில்லை. சரித்திரம் சம்பந்தப்பட்ட ஆண்டான் - அடிமை முறைக்கான கேள்வியே எழவில்லை. இரு நாடுகளுக்குமிடையே பொதுவானதொரு மரபு கிடையாது; கலாச்சாரத்தில்கூடப் பொதுமை கிடையாது.''

அமெரிக்க ஏடான "நியூயார்க் டைம்ஸ்'

இதழில் பிசோ எழுதியுள்ள இந்தக் கடிதம் வெளியாகியுள்ளது.

அவர் தம் கடிதத்தில், தம்மை, "நாகர்களின் தேசிய கவுன்சில் தலைவர்' என்று தெரிவித்து, நாகர்களுக்கான தனிச் சுதந்திர நாடு கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் பிசோ மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"நாகர் வாழும் பகுதி இந்தியாவின் ஒரு பகுதியாக எப்பொழுதும் இருந்ததுமில்லை; இருக்கவுமில்லை. நாங்கள் புதிதான ஒரு பிரச்சினையைக் கிளப்பி அதற்காகப் போராட வில்லை. தொன்றுதொட்டு இருந்து வரும் மனிதகுல வரலாற்றின் அடிப்படையில், எங்கள் தேசிய உரிமையைத் தொடர்ந்து நிலை நாட்டிக்கொள்ளவே நாங்கள் விரும்புகிறோம்.''

”நாகர்கள் தூய்மையான ஜனநாயகத்தை அனுபவித்து வருகிறார்கள். எங்கள் நாட்டில் வீடோ நிலமோ இல்லாத குடும்பத்தை எங்கும் காண முடியாது. அது சாதிகளற்ற சமுதாயத்தைக்கொண்ட ஒரு நாடாகும். அங்குள்ள மக்கள், பாதுகாப்புக்காகப் போலீஸ் உதவியையோ, இராணுவ உதவியையோ நாடுவதில்லை.''

”படித்த நாகர்களில் 90 சதவிகிதத்தினர் கிறிஸ்துவர்களாக உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் நல்ல கல்வியறிவைப் பெற்றிருக்கின்றனர்.''

நாகர் நாடுபற்றி, அந்நாட்டுத் தலைவன், வழிகாட்டி கூறிடும் இக்கருத்தைப் பார்க்கிறோம், நமக்கும் நாட்டுப்பற்றுச் சுரக்கிறது.

யார் அந்தச் பிசோ? என்று கேட்டுத்

தமது அறிவின் மேம்பாட்டினை வெட்ட வெளிச்சமாக்கிக்கொள்வோர் தாராள மாகச் செய்யட்டும், நமக்கு நாகர் நாட்டுத் தலைவன் பிசோ போன்றவர்களின் கருத்துரை, பாடம் அளிக்கிறது. நாம் மேற்கொண்டுள்ள பாதை, சரியானதுதான் என்று உணர்த்து கிறது. அது போதும் நமக்கு, அந்த உணர்ச்சி கொந்தளிக்கும் உள்ளத்தினர் கூடிய பேரவைதான் திருப்பரங்குன்றம் மாநாடு.

திருப்பரங்குன்றத்தில் கூடீனீர்களே, அப்படியானால் சைவத்தை ஆதரிப்பதாகத்தானே பொருள்? - என்று கேள்வி எழுப்பி, மடக்கிவிட்டேன்! மடக்கிவிட்டேன்! என்று கூவி மகிழட்டும்; நமக்கு அவர்களின் போக்குக்கான காரணம் புரிகிறது; எனவே கவலை எழவில்லை.

நாடு மீட்டிடும் நற்பணியில் ஈடுபட்டாகவேண்டும் என்பதனையும்,

அப்பணி புரிகிறீர்கள் என்பதனாலேயே, எமது ஆதரவை இந்த வகையிலே தருகிறோம் என்பதனையும், நாம் உணரத்தக்க விதமாக மாநாடு குன்றின்மேலிட்ட விளக்கென அறிவொளி பரப்பி நின்றது. அந்த ஒளி பட்டதால் நமது உள்ள மெலாம் உவகைப் பொன்னோவியமாயிற்று! என்னகம் - தென்னகம் - இதுவே பொன்னகம் என்று உணர்ச்சியுடன் முழக்கினர். விழிப்புற்ற மக்களின் வீர உணர்ச்சி வீண்போனதாக வரலாறு கூறவில்லை, வீணர்களே அந்த உணர்ச்சியை மதிக்க மறுப்பர்!

அஞ்சிக் கிடந்தனர் ஆப்பிரிக்க நாட்டு நீக்ரோக்கள் - ஆளப்பிறந்தவர்கள் ஆங்கிலர் - அவர்களின் அறிவாற்றலும் அழிக்கும் சக்தியும் மிகப்பெரிது - அதை எதிர்த்து நிற்க முடியாது - ஆண்டவன் நம்மை அடிமைகளாக இருக்கவே படைத்துவிட்டான்

என்று எண்ணினர். கொடுமை பல கண்டனர்; பலர் கொட்டினர் குருதி; அந்தக் குருதியினைக் கண்டபின்னர், மற்றையோர் உறுதிபெற்றனர்; உறுதி பெற்றதும், நிமிர்ந்து நின்றனர்; நின்று காணும்போதுதான் தெரிந்தது, தம்மை அடக்கி ஆளும் வெள்ளையர், தம் அளவு பேருருவம் கூடப் பெற்றவர்கள் அல்ல; துப்பாக்கிமீது நின்றுகொண்டு, மெத்த உயரமானவர்கள் போலத் தம்மைக் காட்டிக்கொள்கிறார்கள் என்ற உண்மை. இதுகண்டு ஆப்பிரிக்க மக்கள் இடிஇடி எனச் சிரித்தனர்; அந்தச் சிரிப்பொலி சிறைகளைத் தூளாக்கிற்று; தளைகளை நொறுக்கிற்று; விடுதலைக்கொடி இன்று பல நாடுகளிலே பறக்கிறது!!

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா! என்று குன்றம் அழைத்தது; கூடினர் மறக்குலத்தோர்! ஒளி கண்டு ஓடின காடுதனில் பதுங்கி வாழும்

மிருகங்கள்போலுள்ள எதிர்ப் புணர்ச்சிகள்.

உணவு, உறைவிடம், ஊதியம் தருவதாக நான் கூறவில்லை.

பசி, தாகம், களம் நடத்தல், போர், மரணம் - இவையே நான் அளிக்க உள்ளவை. உதட்டளவில் நாட்டுப்பற்றுக் கொண்டோன் என்னைப் பின்தொடரவேண்டாம். உள்ளத்தில் நாட்டுப்பற்று உள்ளவர் என்னுடன் வருக!

இத்தாலிய நாட்டு விடுதலை வீரன் காரிபால்டி கூறினான் இம்மொழி. அம்மொழி கேட்டுத் திரண்டது ஓர் அணிவகுப்பு. இன்று திருவிடம் ஒரு காரிபால்டியைக் கொண்டில்லை என்று கூறட்டும் - தவறில்லை - ஆனால் அம்மாவீரன் ஆணை கேட்டு ஆற்றலுடன் போரிட்டு வெற்றிபெற்ற வீரர்போன்றோர், இங்கு இல்லை என்று மட்டும் கூறாதீர். திருப்பரங்குன்றம் மாநாடு

கண்டவர்கள், அங்ஙனம் கூறத் துணியார். திராவிட நாட்டைத் திராவிடர்க்காக்கும் தீரப்படையொன்று உண்டு, என்பதை திருப்பரங்குன்றம் மாநாடு காட்டிற்று. எங்கிருந்து கிடைத்தது இந்த எழுச்சி நிலை! தம்பி! எல்லாம் உன் வீரத்தின் விளைவு! எழுச்சியின் பலன்! உழைப்பினில் விளைந்த உயர்வு! வாழ்த்து கிறேன் உன்னை! வளர்க நின் ஆர்வம்! வெல்க திராவிடம்.

அன்புள்ள

அண்ணாதுரை

6-8-1961

47. 8 முதல் பந்தி!

விடுதலைக் குற்றம் -
நேரு பண்டிதரின் பேராற்றல் -
கொள்கையில் உறுதி -
நீண்டகாலச் சிறை

தம்பி!

மேளதாளம் முழங்க, வாழ்த்தொலிகள் பீறிட்டுக் கிளம்ப, கோலோச்சுவோருக்குப் பாராட்டுப் பண் பாடியபடி கொடி ஏந்திகள் நடைபோட, கோலாகலமாக, "சுதந்திர தின' ஊர்வலம், எங்கள் தெருவில் போய்க்கொண்டிருந்தபோது, அவர்கள் நம்புவார்களோ இல்லையோ, என் வார்த்தையை - நான், பண்டித ஜவஹர்லால் நேருவின் சொற்பொழிவுகள் கொண்ட தொகுப்பு நூலைப் படித்துக்கொண்டிருந்தேன்.

ஊர்வலத்திலே கலந்து கொண்டவர்களிலே, எத்துணை பேர், அந்த நூலைப் படித்தவர்களோ, நான் அறியேன்! பலர், நாடாளும் நிலையைக் காங்கிரஸ் கட்சி பெற்ற பிறகு கதர் அணிய ஆரம்பித்தவர்கள் என்பதை நானும் அறிவேன் - ஊரறியும். எனவே, அவர்கள், பண்டிதரின் சொற்பொழிவுப் புத்தகத்தை, ஏன் தொட்டிருக்கப் போகிறார்கள், பாபம்! அதிலும், நான் குறிப்பிடுவது, இந்திய துரைத்தனத் தலைவராக நேரு பண்டிதர் அமர்ந்த பிறகு ஆற்றிய உரைகள் அல்ல! அன்றோர் நாள்! விடுதலை இயக்கத்தின் முன்னணி நின்று, இலட்சிய முழக்கமிட்ட நாட்களில்!"கனவு காண்கிறான் இந்தச் சீமான் மகன்! கற்றதைக் கதைக்கிறான்! கவைக்குதவாதன பேசுகிறான்! பரந்த சாம்ராஜ்யத்துக்கு அதிபனாக உள்ள

வெள்ளையனைப் “பயமறியாப் பருவம்’ காரணமாக எதிர்க்கிறான் - நடக்கிற காரியமா இது?’’ - என்று கண் சிமிட்டியபடி, கேலிப் புன்னகை தவழ,”மேதைகளும்‘, ”அனுபவக் களஞ்சியங்களும்’, பேசிக் கொண்டிருந்த நாட்கள்! அந்த நாட்களில், பண்டிதர் பேசியவற்றினைப் படித்துக்கொண்டிருந்தேன் - இன்று கிடைத்த அரசியல் செல்வாக்கைச் சுவைத்தபடி, தேசியத் தோழர்கள், உரத்த குரலிலே முழக்கம் எழுப்பிக்கொண்டு, ஊர்வலம் வந்தபோது. எப்படிப்பட்ட நேரு தெரிந்தார் என்கிறாய், தம்பி! எழுச்சியூட்டும் நேரு! தளைகளைப் பொடிப் பொடியாக்கி விடவேண்டும் என்ற துடிப்பினை எவரும் கொள்ளத்தக்க வீரம் ஊட்டும் பேச்சாளர்! அச்சம், தயை, தாட்சணியம், அருகே நெருங்க முடியாத நிலையினர்! மாற்றானிடம் மண்டியிடுபவன், மாபெரும் துரோகி!

பேரம் பேசுபவன் கோழை! குழைபவன் கோமாளி! திகைத்துக் கிடப்பவன், உருவில் மட்டுமே மனிதன்! - என்று பண்டிதர் நாடெங்கும் இடிமுழக்கமெனக் குரல் கொடுத்து, சோர்ந்த உள்ளங்களைத் தட்டி எழுப்பி, படை திரட்டிக்கொண்டு வந்த நாட்களிலே, அவர் பேசியவை இன்றும், என்றென்றும், விடுதலைக் கிளர்ச்சியிலே, தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ள, எவருக்கும் வீர உணர்ச்சியை ஊட்ட வல்லவை!!

"ஆனாலும்'' -"என்ன செய்வது'' - "இப்போதைக்கு இதுதான்'' -"இயன்ற அளவுதானே'' - "படிப்படியாக'' - என்ற சொற்கள் பேச்சிலே இடம் பெறாத நாட்களைக் குறிப்பிடு கிறேன். உலைக்களத்திலிருந்து பழுக்கக் காய்ச்சப்பட்ட நிலையில் வெளியே எடுக்கப்படும் இரும்புக் கம்பியைப் பார்த்திருப்பாயே, தம்பி! அந்த நேரு!! ஆமாம்!

இப்போது உள்ள பட்டுக் குஞ்சம் கட்டப்பட்டுப் பளபளப்பான உறையில் இடப்பட்டுள்ள உடைவாள்போன்ற நேரு அல்ல! சந்தனப் பொதிகையில் சிந்துபாடி விந்தைகள் செய்திடும் பூங்காற்று! மின்சார விசிறி தரும் காற்று அல்ல!! மரத்திலே பழுத்து, காற்றுக்கு ஆடிடும் கனி! கீழே விழுந்து, ஒரு பக்கம் கருத்துப்போன நிலையில் உள்ள பழம் அல்ல!"பாரதத்தை'க் கட்டிக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகப், பலரும் பரிவு காட்டிப் பக்கம் நின்று துணை புரியவேண்டும் என்ற முறையைத் துணைகொண்டு, இலட்சியத்தைக் குறைத்தும், மறைத்தும், தேய்த்தும் உருக்குலையச் செய்துவிட்ட நிலைக்குத் தம்மைத் தாமே துரத்திக்கொண்ட துரைத்தனத் தலைவரின் பேச்சு அல்ல - அதிலே தயக்கம், தடுமாற்றம், முரண்பாடு, முணுமுணுப்பு, மிரட்டல் என்பவைகள்

கலந்துவிட்டன!

தொடுத்த கணை ”விர்’ரெனப் பாய்கிறதல்லவா! பாயும் அம்பு! நான் குறிப்பிடும் நேரு!!

குறி தவறிக் கீழே வீழ்ந்து கிடக்கும் அம்பு போன்றுள்ள நிலையினராகிவிட்ட நேரு அல்ல!!

ஊர்வலத்தினர், உலக நாடுகளிடம் கடன் வாங்கவல்ல, உள்நாட்டிலே தேர்தல் வெற்றி பெற்றுத் தரத்தக்க, எதிர்க் கட்சிகளை அழித்தொழித்திடும் ஆற்றலைக் காட்டி நிற்கும், நேருவின் புகழ் பாடிக்கொண்டு சென்றனர். நானோ ”பழுதுபடாத இரத்தினமாக’ இருந்த நாட்களில் அவர் பேசியவற்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அவர்களோ அடுத்து வர இருக்கும் தேர்தலை எண்ணிக்கொண்டு, நேருவை

வாழ்த்திக்கொண்டிருந்தனர்.

வழக்குமன்றத்திலே முழக்கம், வாலிபர் மாநாட்டிலே பேச்சு, காங்கிரஸ் மாநாடுகளிலே பேருரை, பத்திரிகை நிருபர்களிடம் விளக்கம். இவ்வண்ணம் வடிவங்கள் பல உள; ஆனால் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்பது, வீர உணர்ச்சி, செயலாற்றவேண்டுமென்ற துடிப்பு, இலட்சியம் வெற்றிபெற்றே தீரும் என்ற திடமான நம்பிக்கை, மக்கள் திரண்டெழுந்து விட்டனர் என்பதைக் கண்டதால் ஏற்பட்ட களிப்பு!

வாதாடுவதற்காக, நான் வழக்குமன்றத்திலே நிற்கவில்லை! என் நாடு விடுதலை பெற வேண்டும் என்பதற்கு நான் வாதாடவா வேண்டும்!! பொருள் இல்லை அதற்கு.

ஏதேதோ, செக்ஷன்களைக்

குறிப்பிட்டிருக்கிறார்கள், நான் செய்த குற்றங்கள் என்பதாக. நான் ஒரே ஒரு குற்றம்தான் செய்திருக்கிறேன் - தொடர்ந்து செய்து கொண்டு வருவதாகவும் இருக்கிறேன். என் நாட்டை அந்நியன் பிடியிலிருந்து மீட்பதற்காகப் போராடுவது. அது குற்றம் என்றால், நான் குற்றவாளி! சந்தேகமின்றி!! உங்கள் சட்டப்படி!! ஆனால் அதனை நான் செய்யாதிருந்தால், நான், என் நாட்டுக்கு, மக்களுக்கு, மாபெருந் துரோகி யாவேன்! அதனை அறிந்தே அடிமைத்தனத்தை எதிர்க்கும் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறேன்! சட்டம் அதைக் குற்றம் என்று கூறுகிறதா? கூறட்டும்! நீங்கள் காட்டும் சட்டத்தை விட, மேலான சட்டம் ஒன்றுக்கு நான் கட்டுப்பட்டவன்! அது நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டாகவேண்டிய கடமை!

இங்கு, சட்டங்களை அலசுவார்கள்;

ஆராய்வார்கள், மறுப்புகள், குறுக்குக் கேள்விகள் கிளம்பும். அறிவேன். ஆனால், நியாயம் பெற இது அல்ல இடம் என்பதை அறிந்திருக்கிறேன். வழக்கு மன்றத் தலைவரிடம் மதிப்புக் குறைவு அல்ல - இந்த வழக்குமன்றம், சட்டம் இவையாவும், என் நாட்டை அடிமைப்படுத்திவிட்டுள்ள அந்நியனின் கைப்பாவைகள்! எடுபிடிகள்! ஏவலர்கள்! இங்கு, நியாயம் எப்படிக் கிடைக்கும்? எதிர்பார்க்கத்தான் முடியுமா?

தண்டனை தாருங்கள்! தாராளமாக! நீண்டகாலத் தண்டனையாக!! விடுதலைப் போரில் ஈடுபடுபவனுக்கு அதனினும் மேலான பேறு இல்லை; அதனினும் மேலான மகிழ்ச்சி தரவல்லது - ஒரு சமயம், விடுதலைப் போரிலே மடிவது அல்லது விடுதலை பெறுவது என்பதன்றி - வேறு எதுவாகவும் இருக்க முடியாதல்லவா?

சிறையில் தள்ளுங்கள் என்னை! என் ஆருயிர்த் தோழர்கள், பெருமதிப்புக்குரியோர் சிறையில் உள்ளனர்; நான் வெளியில் இருக்கிறேன்; இதுதான் தாங்கமுடியாத வேதனை! என்னை, என் தோழர்கள் உள்ள இடத்துக்கு அனுப்புங்கள்!!

இந்த நாடே பெரிய சிறைக்கூடம்! இதிலே உள்ளே சென்றால்தானா சிறை! அளவுதான் பெரிது, சிறிது! நிலைமையில் வித்தியாசம் இல்லை! தண்டனைதரக் கூடியுள்ள இடத்தில், வாதாடிக் காலங் கழிப்பானேன்! கொடுப்பதைச் சற்றுக் கடினமானதாகக் கொடுங்கள்!!

தம்பி! வழக்கறிஞர்களிலேயே மிகக் கீர்த்தி வாய்ந்தவர், நிரம்ப வருமானம் உடையவர், வாழ்க்கையில் இன்பம் காண்பவர்; அரண்மனைபோன்ற வீட்டை உடையவர்; ஆள் அம்பு ஏராளம்; நிலபுலம் நிறைய;

ஊரிலே செல்வாக்கு; இவ்வளவும் பெற்றுத் திகழ்ந்த மோதிலால் நேருவின் திருக்குமாரர், பல ஆண்டுகள் இங்கிலாந்திலே படித்துப் பட்டம் பெற்றவர், இதுபோல, வழக்குமன்றம் நின்று முழக்கமிடக் கேட்பவர்கள், எழுச்சிப் பிழம்பாகிவிடுவரன்றோ! ஆமாம் அதற்குத்தானே அவரும் அவ்விதம் பேசினார் - வழக்குமன்றத்தினருக்காகவா அந்தப் பேச்சு - நாட்டு விடுதலை வீரர்களுக்காக!!

நேரு பண்டிதர், உலகிலே பல நாடுகள் விடுதலை பெற நடத்திய, வீரக்காதைகளை, காப்பியங்களை நன்கு கற்றுணர்ந்தவர் - விடுதலைப் போர் நடத்தியவர்களில் சிலரைக் கண்டும் பேசியவர் - விடுதலைப் போரிலே வீழ்ந்துபட்டவர்களின் கல்லறையின்மீது, விடுதலை பெற்ற மக்கள், கண்ணீர் சிந்தி அஞ்சலி செலுத்தும், உள்ளமுருக்கும் காட்சிகளைக் கண்டவர் - எனவே, அவருக்கு,

வழக்குமன்றத்திலே நிற்கும்போது, தம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள், சட்டப்புத்தகத்திலே, அவை களுக்காகத் தரப்பட்டுள்ள விளக்கங்கள் எனும் இவை அல்ல, நிச்சயமாக. விடுதலைக்காகப் பாடுபட்டவர்களின் அணிவகுப்புத் தான் தெரிந்திருக்கும். நான் கண்டேனே, கோலாகலமாகக் கொடி ஏந்திச் சென்றவர்கள், அந்த அணிவகுப்பிலே, மருந்துக்குக் கூட அப்படிப்பட்ட, விடுதலைப் போர்புரிந்த மாண்பினர் கிடையாது! ஆகவேதான், மிக உரத்த குரலிலே முழக்கமெழுப்பினர்! தம்பி! குயிலுக்கு முடிகிறதா, காக்கைபோலக் கரைய!! இனிமை என்று எண்ணிக்கொண்டு, வலிவற்ற குரலெழுப்புகிறது! காக்கை அப்படியா! காதைக் குடைந்தெடுத்து விடுகிறதல்லவா? உள்ளபடி, விடுதலைப் போரிலே ஈடுபட்டுக் களம் நின்று,

தாக்குதலுக்கு ஆளாகித் தழும்பேறப் பெற்றவர்கள், அன்று பேசக்கூட இயலாதபடி, கண்கள் களிப்புக் கவிதை பாடிடும் நிலையில் இருப்பர். கட்டித் தங்கம், பூமிக்கடியில்தானே தூங்கி க்கொண்டிருக்கிறது! சிறு தகரத் துண்டுகள், கண்களைப் பறித்துவிடும் விதமான, ஒளி கிளப்பிக்கொண்டல்லவா உள்ளன - வெயில் வேளையில்! கடலுக்கு அடியில் அல்லவா முத்து உறங்குகிறது! கடலோர மணலில், குவியல் குவியலாக உள்ளவை வெறும் கிளிஞ்சல்கள்!!

“விடுதலை பெற்றோம், விழி பெற்றோம்’’ என்றார் ஓர் பேரறிவாளர்! ஒரு நாட்டின் எழில், ஏற்றம், வளம், வாழ்வு, யாவும், வேற்று நாட்டானிடம் நாடு சிக்கிக் கிடக்கும்போது, மங்கிப் போகிறது. நமது நாடு ஏழை நாடு; வளமற்றது, வாழவைக்கும் வல்லமை பெற்றது அல்ல என்று நாமே எண்ணும்விதமான,

புத்தித் தடுமாற்றத்தைக் கொடுத்துவிடுகிறது, அடிமைத்தனம், நாட்டிலே செல்வம் இருக்கும், நாட்டவர் கண்களுக்குத் தெரியாது! வயலில் வளம் இருக்கும்! பெற்றிட வழி தெரியாது! நாட்டுக்குப் புகழ்மிக்க வரலாறு இருக்கும், படித்திட வாய்ப்பு இருக்காது! கண்ணுக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும்! நம்மை நாமே ஆண்டுகொள்ள முடியாதவர்கள் - நம்மை ஆள நம்மைவிட வலிவுமிக்கவர்கள், அறிவுமிக்கவர்கள், அனுபவமிக்கவர்கள் வந்திருக்கிறார்கள். எப்படி ஆள்வது என்பது அவர்கட்குத் தெரியும்! ஆளும் பொறுப்பை நாம் அவர்களிடம் விட்டு விட்டு, ஆடுமாடுகளை மேய்த்திடலாம், காடுமேடு திருத்திடலாம், கைகட்டிப் பிழைத்திடலாம், கடைகண்ணி வைத்திடலாம், கால் வயிற்றுக்குக் கிடைத்தாலும், கந்தா! முருகா! என்று பஜனை செய்தபடி இருந்து, மாயாபந்தம் விடுபட்டு,

மகேசன் அடி சேர்ந்துவிடலாம். அதுவரையில் இந்தக்"கட்டை' நடமாடும் இடம், இந்த உலகம் - நாடு - வீடு! - என்று வேதாந்தம் பேசிடுவர் மக்கள் - அடிமைப் பிடியில் இருக்கும் காலை! அவர்கட்கு, விழி இல்லை - நாட்டைக் காண, நல்வழி காண! அதனால்தான் பேரறிவாளர் சொன்னார், "விடுதலை பெற்றோர், விழி பெற்றோர்!'' என்று.

ஊர்வலத்திலே சென்றவர்கள், அந்தவிதமான விழி பெற்றவர்கள் அல்ல! விடுதலை பெற்றுத் தந்தவர்களின் முகாமிலே நமக்கு இடம் கிடைத்துவிட்டது! அவர்கள் ஈட்டியுள்ள செல்வாக்கு, நமக்குப் பயன்பட வழி கிடைத்து விட்டது! அவர்கள் பெற்றுள்ள வடுக்களைக் காணும் மக்கள், நெஞ்சம் நெக்குருக நிற்கிறார்கள்! உமது கட்டளைப்படி நடந்து கொள்கிறோம் என்று உள்ளம் உருகிக் கூறுகிறார்கள்! நாடு, மீட்டுத் தந்தவர்களுக்கு,

நன்றி காட்டுவதும், அன்புக் காணிக்கை செலுத்துவதும், நமது தலையாய கடமை என்ற உணர்வு கொண்டவர்களாக மக்கள் இருப்பது அறிந்து, இந்தப் பொன்னான வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்வோம் என்ற நோக்குடன், விடுதலைப் போர் நடாத்தியவர்களின் முகாமுக்கு, தங்கக் கூடாரம் அமைத்துத் தருகிறோம், தர்பார் மண்டபம் கட்டிக்கொடுக்கிறோம், வெற்றிவிழா நடத்துகிறோம், விருந்து வைபவம் ஏற்பாடு செய்கிறோம், இசை நிகழ்ச்சியும் நாட்டியங் களும் களிப்பூட்டும் விதமானவைகளாக இருப்பது எமது பொறுப்பு. நீவிர் நடமாடும் பாதையில் நறுமண மலர் தூவுகிறோம்; குளித்திடப் பன்னீர் வேண்டுமா? உடுத்திடப் பட்டுப் பட்டாடை தேவையா? பூண்டிட, அணிகள் வேண்டுமா? கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்! கோலாகலமாக

விழா நடத்திக் காட்டுகிறோம்! கண்டு களியுங்கள் - காதுகுளிர வாழ்த்துகிறோம், கேட்டு இன்புறுங்கள்! - என்றெல்லாம் பேசி, பாசம் காட்டி, நேசம் பெற்றால், கிடைக்கக்கூடிய, "பசையும் ருசியும்' விழியில் படுகிறது - மனதிலே ஆசை அலை மோதுகிறது! அந்தக் கொந்தளிப்புத்தான், உரத்தகுரல் முழக்க மாகிறது! கள்தானே தம்பி! பொங்கி வழிகிறது! இளநீர்? அப்படி இல்லையல்லவா? உற்றுப் பார்த்தால் தெரியும், வெண்ணெயை விடச் சுண்ணாம்பு, பளபளப்பான வெண்மை நிறம் காட்டுகிறது!

நான் படித்துக்கொண்டிருந்த ஏடு, பிழைக்கத் தெரிந்த வர்கள் கட்டித்தழுவி, உச்சிமோந்து முத்தமிட்டு, கண்ணே! கற்பகமே! கலிதீர்க்க வந்தவனே! என்று கொஞ்சிடும் நிலையைக் காங்கிரஸ் பெற்ற நாட்களிலே, பேசப்பட்டவைகள் அல்ல; இது என்ன

வீண் வேலை! தலைகீழாக நின்றாலும் இவர்களின் எண்ணம் ஈடேறாதே! உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? வீணாக உதைபட்டுச் சாகிறார்கள்! பிடிபட்டு வதைபடுகிறார்கள்! ஆற்றல் இல்லாமலா, அவ்வளவு தொலைவிலிருந்து, இங்கு வந்து, நம்மை அடக்கி ஆள முடிகிறது வெள்ளையரால்! படைகொண்ட முடிமன்னர்களெல்லாம், அவனைப் பகைத்துக்கொண்டு, பொடிப் பொடியாகிப் போயினர்! கோட்டைகளெல்லாம் தரை மட்டமாகிவிட்டன; புல் முளைத்துவிட்டன! தோள்வலியும் வாள்வலியும் கொண்டோர் யாம்! தொடுத்திடுவோம் கணைகள் பல, எதிரிகள் சிரம் கொய்திட! என்று வீரம் பேசியோரெல்லாம், வீழ்ந்தடித்து ஓடினார்கள், அவன் "வேட்டு'க் கிளப்பியதும், கொச்சி, திருவிதாங்கூரும், கோலமிகு

மைசூரும், ஹைதராபாத்தோடு, அழகுமிகு ஜெய்ப்பூரும், போபாலும், பீகானிரும், போர்ப் புலிகள் நிரம்பிய பேரரசாம் மராட்டியமும், விருதுப் பெயர்களையே விண்முட்டும் அளவுபெற்ற எத்தனையோ அரசுகளும், எதைக் காட்டி வருவனவாம்? எதிர்த்தார் பிழைத்ததில்லை, தொழுதார் வாழ்ந்திடலாம், எனும் நிலையையன்றோ! களம் நின்று கடும் போரிட்டு, வெற்றி பல பெற்று, வீரமரபினர் என விருது பெற்றவர்கள் வீழ்ந்துபட்டனர்; இவர்கள் மேடை அதிரப் பேசிக் காணப்போவது என்ன? சிறை! சித்திரவதை தூக்குமேடை! இவைதாமே! இஃது அறியாமல், சுயராஜ்யம் எமது பிறப்புரிமை என்று சுலோகம் பாடுகிறார்களே!! பாய்ந்து வரும் வெள்ளத்தில் படகேறிச் செல்வதோ? சீறிவரும் வேங்கையைச் சிறு கோலால் தாக்குவதோ? விரண்டோர் வேழம் வந்தால்,

தடம்படுத்துத் தடுப்பதோ? கடற்போரில் வல்லவர்கள் - தரைப்படையில் மிக்கவர்கள் - தந்திரம் அறிந்தவர்கள் - போர் யந்திரம் வைத்துள்ளவர்கள்! இவர்களை எதிர்த்து நிற்க இயலுமோ எவராலும்? - என்றெல்லாம், பரிதாபம் காட்டியும், பரிகாசம் பேசியும், பாமரர் மட்டுமல்ல, படித்தோரும், துச்சமெனக் காங்கிரசைக் கருதிய நாட்களில், அதன் சார்பில் நின்று, பண்டிதர் பேசிய பேருரைகள் கொண்ட ஏடு நான் படித்தது.

இன்று பண்டித நேருவின் ஒரு சொல், சிலரைக் கோடிக் கணக்கான பணம் பெறவைக்கும் ஆற்றல் படைத்தது. எடுத்துக்காட்டுக்கு, இனி எவரும் அரிசிச் சாதம் சாப்பிடக் கூடாது என்று அவர் கட்டளையிட்டால், கோதுமை மண்டலத்து வணிகக் கோட்டம் கோடீஸ்வரர்கள் கொலு விருக்கும் இடமாகிவிடும்.

அன்று பண்டிதரின் பேச்சு, எத்தனையோ இளைஞர்களை இன்ப வாழ்வை இழந்துவிடச் செய்தது.

அந்த நாள் நேரு, அடிமைத்தனத்தைப் போக்கிக் கொள்ளும் ஆற்றல் பெறவேண்டும் என்பதற்காக எடுத்துக் காட்டிய காரணங்களை, அவர் வீர உணர்ச்சி பொங்கிடத்தக்க விதத்தில் விளக்கிய வகையைப் படித்துக்கொண்டிருந்தபோது - காங்கிரஸ் நண்பர்கள் திடுக்கிடக் கூடாது - நாம் மேற்கொண்டுள்ள காரியத்திலே எனக்கு முன்னிலும் பன்மடங்கு ஆர்வம் வளர்ந்தது!

“எவ்வளவு பெரிய தலைவர் எமது நேரு! எத்துணை வீர உரைகள் ஆற்றியவர்! அணி வகுப்புகள் நடாத்தியவர்! ஆங்கில ஏகாதிபத்தியத்தை அதிர அடித்தவர்! சிறைக்கஞ்சாச் சிங்கம்! என்பதை அவர் பற்றிய ஏடு படித்துத் தெளிவாக அறிந்து

கொண்ட பிறகுமா, உனக்கு, அவரை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தத் தோன்றுகிறது! பித்தமோ உனக்கு! உலக வல்லரசுகளிலே முன்னணி உள்ளது பிரிட்டன். அந்தப் பேரரசே, எமது நேருவின் வீரத்தின் முன்பு தலைகாட்ட முடியாமல் ஓடோடிச் சென்று விட்டது. பேதையே, அதை எல்லாம் படித்தேன் என்றும் பேசுகிறாய். வீரம் கொந்தளிக்கும் பேச்சு என்கிறாய்! சொல்லிவிட்டு, நீ கிளம்புகிறாய் முனைபோன கத்தியும், மூளியான கேடயமும் தூக்கிக்கொண்டு, புண்ணான உடல் கொண்டோன், கண்போன குதிரை ஏறிக் களம் செல்லும் கதைபோல. நீ எதிர்க்கிறாய் எமது நேரு அரசை! அதைப் படித்தேன் இதைப் படித்தேன் என்று கூறுகிறாய். அறிவு பெறாமல், எதைப் படித்துத்தான் என்ன பலன்? நேரு பண்டிதரின் அருமை பெருமை அறியாமல், அவராற்றிய அருஞ்செயல்கள்

தெரியாமல், அவரை எதிர்க்கக் கிளம்பினால், அப்படிப்பட்டவனை,"அவன் அறியமாட்டான், அந்த அஞ்சா நெஞ்சுடை ஆற்றலரசின் வீரத்தை' என்று எண்ணிப், பரிதாபப் படலாம். நீயோ, அதை நான் அறிந்திருக்கிறேன் என்கிறாய் - அறிந்தும் எதிர்க்கத் துணிகிறாயே! இது ஏமாளித்தனம் மட்டுமல்லவே - முழுக்க முழுக்க முட்டாள்தனமல்லவா?'' - என்று காங்கிரசாருக்குக் கேட்கத் தோன்றும். சிலர் இதுபோலப் பேசவும் செய்கிறார்கள். பாடக்கூடச் செய்கிறார்கள்.

பாவம், அவர்கள் பண்டித நேருவின் வல்லமைக்கு நான் அறைகூவல் விடுவதாக எண்ணிக்கொண்டு அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

அவர்கள், பண்டித நேருவின் வலிவை மட்டுமே நம்பிப் பிழைத்துத்

தீரவேண்டியவர்களாக இருப்பதால், அவருடைய வல்லமையை எவரேனும் மதிக்காவிட்டால் மருளுகிறார்கள் - எதிர்க்கத் துணிந்தால் திகைக்கிறார்கள்.

தம்பி! மிகப் பழங்காலத்தில் அல்ல, இரண்டொரு நூற்றாண்டுக்கு முன்பு வரையில்கூட, ஐரோப்பாக் கண்டத்து நாடுகளில், காதல் விவகாரச் சண்டையிலிருந்து, நாட்டுப் பிரச்சினைபற்றி எழும் சச்சரவு வரையில், ஒருவருக்கொருவர், வாட்போர் புரிந்துகொள்வதன் மூலம் தீர்த்துக்கொள்வார்கள்; அது மிகவும் போற்றப்பட்டு வந்த முறையாகவும் கொள்ளப் பட்டது சில நாடுகளில். அந்த முறையைச் சில நாடுகளில் தடுக்கச் சட்டம் இயற்றினர்; இயற்றியும் அந்த முறையைச் சிலர் துணிந்து மேற்கொண்டனர்.

அதுபோன்றது அல்ல, இன்று நடைபெறும்

விடுதலைப் போராட்டங்கள்.

எனவே, இதிலே, தனி மனிதர்களின் தாக்கும் சக்தி, தாங்கும் சக்தி, போர்த் திறமை, போர்க் கருவிகள் என்பவைகளுக்கு இடமில்லை.

எவர் கருத்துக்கு மக்களிடம் ஆதரவு திரண்டு வருகிறது; மக்கள் எவர் பக்கம் தீர்ப்பளிக்கிறார்கள் என்பதுதான் இதிலுள்ள பிரச்சினை.

இதனை அறியாமல், சில காங்கிரசார், எமது நேருவையா எதிர்க்கிறாய்? என்று எக்காளமிட்டுத் தமது குறை அறிவைக் கொட்டிக் காட்டுகிறார்கள். என் ஆழ்ந்த அனுதாபம் அவர்கட்கு.

நமது போராட்டம் ஓரு முறையை எதிர்த்து. நேரு பண்டிதரை எதிர்த்து அல்ல.

நேரு பண்டிதர் தமது ஆற்றலை, எந்த

முறைக்குப் பக்க பலமாக்கிக் காப்பாற்றி வருகிறாரோ, அந்த முறைமீது நமக்கு வெறுப்பு; அதைக் கண்டிக்கிறோம்; எதிர்க்கிறோம்; கிளர்ச்சி நடாத்துகிறோம்; நேரு பண்டிதரெனும் தனி மனிதரிடம், மதிப்புக் குறைவுமில்லை; அவரை மட்டமாக மதிப்பிட நாம் மதியிலியும் அல்ல. மாறாக, நேரு பண்டிதரின், விடுதலை ஆர்வம், நமக்கு அவரிடம் பெருமதிப்பை ஏற்படுத்துகிறது; ஆனால், அதனினும் அதிக அளவு மதிப்பு, விடுதலை ஆர்வத்தின்மீது ஏற்படுகிறது!

அவர் காட்டிய ஆர்வம், கொண்ட உறுதி, ஊட்டிய வீரம், பட்ட கஷ்ட நஷ்டம், ஏற்றுக்கொண்ட தியாகம், ஈடுகொடுத்த இன்னல்கள், எதிர்நீச்சலிட்டது, எதிர்ப்புக்கஞ்சாமை, சிறையில் வாடியது, சித்திரவதைக்கும் அஞ்சாமல் நின்றது, அணி திரட்டியது, பாசறை அமைத்தது,

படை நடாத்தியது - இவைகளை, நான் தொகுப்பு நூலில் படித்தபோது, இப்படிப் பட்ட நேரு அல்லவா, திராவிடத்தை அடக்கி வைத்திருக்கிறார் என்ற திகைப்பு அல்ல; இப்படி அல்லவா, விடுதலைக்குப் பாடுபட வேண்டும்! இவர்போலல்லவா ஓய்வின்றி உழைக்க வேண்டும்! இவர் பேச்சிலல்லவா, விடுதலையின் ஆர்வம் மேலும் விளக்கமாகிறது! இவரே இவ்வளவு இன்னலை ஏற்றுக் கொண்டாரென்றால், நாம் காணும் இன்னல், மிகச் சாதாரண மன்றோ! இவரே இத்துணை காலம், பலப்பல பாடுபட்டுச் சோர்வு சில வேளை, துயரம் பல நேரம், தோல்வி துளைத்திடும் நிலை சில சமயம் எனும் பல்வேறு நிலைகளைக் கண்டு, மனம் உடையாமல் நின்று, தொடர்ந்து பணியாற்றித்தான், வெற்றி கண்டாரென்றால் நாம், இதனைவிட அதிகமான அளவல்லவா

பாடுபட்டாக வேண்டும் - என்ற எண்ணம்தான் எனக்கு ஏற்பட்டது.

புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்டதாம்! கான மயிலாடக் கண்ட வான்கோழியும் சிறகு விரித்ததாம் ஆட! அதுபோல இந்த அண்ணாத்துரை, நேருவின் பேராற்றலையும், வீரதீரச்செயலையும் ஏட்டிலே படித்தானாம், உடனே தானும் அதுபோலச் செய்யப்போவதாகப் பிதற்றுகிறான்! என்னே இவன் பேதமை! - என்று பேசுவர் காங்கிரசார். எளிதாகப் பேச இயலும்; பேசும்போது, சுவையாகவும் இருக்கும், தேர்தல் நெருங்கி வருகிறதல்லவா, அதனால், பயனும் கிடைக்கும். பெற்று இன்புறட்டும். எனக்கு நட்டமில்லை.

ஆனால், இன்று நம்மைப்பற்றி இவர்கள் இதுபோல ஏளனம் பேசுகிறார்களே, தம்பி! இதேபோலத்தான், நேரு உள்ளிட்ட

காங்கிரசார் விடுதலைக் கிளர்ச்சி நடாத்தியபோது, பிரிட்டனில் இருந்த ஆணவக்காரர்கள், அயர்லாந்து நாட்டிலே, திவேலரா கட்சியினர் நடத்திய போராட்ட முறைகளை ஏடுகளிலே படித்துவிட்டு, இந்தக் "கைராட்டைகள் ஆட்டம் போடுகின்றன! பட்டினி கிடத்தலிலேயிருந்து கோர்ட்டை அவமதிப்பது வரையில், ஐயர்லாந்து முறையின் மறுபதிப்பு! சொந்தப் புத்தி துளியும் கிடையாது. இவர்களுக்கென ஒரு தனி முறையும் இல்லை! எல்லாம் இரவல் சரக்கு! எளிய வாழ்க்கை; ஏழையுடன் ஏழையாக இருப்பது, தன் துணியைத் தானே துவைத்துக்கொள்வது எனும் காந்தி முறைகூட, ர□ய நாட்டு டால்ஸ்டாய் தத்துவம்; அவர் சொல்லிக் கொடுத்த பாடம்!'' என்று பேசினர்; ஏளனம் செய்தனர்.

முன் ஏர் போனபடி பின் ஏர் போகிறது -

என்பார்கள் அல்லவா? அதுபோல, முன்பு, வெள்ளை வெறியர் பேசியதை இன்று காங்கிரஸ் கண்ணியவான்கள் பேசுகின்றனர். இதைப் புரிந்துகொண்டால், தம்பி! நமக்குக் காங்கிரசாரிடம் கோபம் எழாது; மாறாக, அவர்களே உணரும் வண்ணம், நாம் நமது இலட்சியத்துக்காகப் பாடுபட வேண்டும், இன்னல்கள் அடுக்கடுக்காக வந்தாலும், தளரக்கூடாது; இன்னுயிர் போவதேனும், இலட்சியத்தை இழக்கக்கூடாது என்ற உறுதியை, எழுச்சியைப் பெறவேண்டும் என்று தோன்றும். தரவேண்டிய விலைகொடுத்துப் பெறவேண்டிய விடுதலையைப் பெற்றுக் காட்டினால், இன்று ஏசுவோரின் கண்ணீர் நம்மை வாழ்த்தும் நிலையில் வழியும்!

ஊர்வலம் போகிறார்கள், பாவம், பெரும்பாலானவர்கள், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபடாதவர்கள்.

உடன் வரும் போலீஸ் அதிகாரிகளைக் காணும்போதே, அவர்களுக்குப் பெருமை, பூரிப்பு! மார்பை நிமிர்த்தி நடக்கிறார்கள்!

முன்பு? ஓட ஓட அடித்து விரட்டினார்களே போலீசார் - அந்த நாட்களில், இதோ இன்று ஊர்வலத்திலே கலந்து கொள்ளும் "பிரமுகர்கள்' - வெள்ளைக்கார அதிகாரிகளுக்குத் தோட்டக் கச்சேரி நடத்திக்கொண்டும்,"வேலை வெட்டி இல்லாததுகள்! விவரமறியாததுகள்! நத்தம் புறம்போக்கு! நாலணா எட்டணா!'' என்றெல்லாம், காங்கிரஸ் தொண்டர்களை ஏசிக்கொண்டு இருந்தவர்கள். இவர்கள், "விடுதலை விழா' கொண்டாடும் குழுவினராகிவிட்டனர்! இவர்களைக் கொண்டு"விடுதலை விழா' நடாத்திக்கொள்வதிலே, உண்மைக் காங்கிரஸ் தொண்டர்கள் வேதனைப்படுவர்,

வெட்கப்படுவர்! ஆனால், அத்தகைய உண்மைக் காங்கிரஸ் தொண்டர்கள், பலபேர், இன்று இல்லை; மறைந்து போயினர்; பலர் வேறு வேறு கட்சியின ராயினர்; இன்னும் சிலர், இந்தத் தலைகீழ் மாற்றம் கண்டு, திகைத்துப்போயுள்ளனர்; பேசவும் இயலாதவராக!

பர்தோலி வரிகொடா இயக்கம்! சபர்மதி ஆசிரமம்! நவகாளி யாத்திரை! செளரி செளரா! சம்பரான்! - இவைகளுடன் பின்னிக் கிடக்கும் எழுச்சிமிகு நிகழ்ச்சிகளை அறியாதவர் தொகையே ஏராளம் - நான் கண்ட ஊர்வலத்தில் மட்டுமல்ல - தம்பி! ஒவ்வோர் இடத்து ஊர்வலத்திலும் - மொத்தத்திலே இன்றுள்ள காங்கிரசிலே!

காளிங்கமர்த்தனம்! கம்சவதம்! சிசுபால சம்ஹாரம்! கோவர்த்தனத்தைக் குடைபிடித்தது! - என்பவைகளைக் "கிருஷ்ண

லீலா’ காலட்சேபத்திலோ, கூத்திலோ மட்டுமே தெரிந்துகொள்கிறார்களல்லவா மக்கள். ஆனால், அதற்காகக் கிருஷ்ணன், கண்ணன், கோபாலன் எனும் பெயருடையார்களை அழைத்து, வெண்ணெய் தருவார்களா!! அதுபோலத்தான், பர்தோலி, சபர்மதி, சம்பரான், நவகாளி என்பவை களைப்பற்றி, நான் குத்திக் காட்டுவதால் மானம் பொத்துக்கொண்டு வருகிற நிலையில் சிலர் பேசினாலும், அதற்காக, இன்றுள்ள காங்கிரசாருக்கு ஆதரவு காட்டமாட்டார்கள் - அந்தக் காரணத்துக்காக!

பர்மிட் பெறத் துணை நின்றார்! பஸ் ரூட் வாங்கிக் கொடுத்தார்! பஞ்ச நிவாரணக் கடை கிடைக்கச் செய்தார்! ஏரி மராமத்து காண்ட்ராக்ட் எடுத்துக் கொடுத்தார்! பால் பவுடர் தந்தார்! மந்திரி பக்கத்தில் உட்கார வைத்தார்! பெரியப்பாவிடம் உயிர்!

பெரியதனக்காரருக்கு நண்பர்! சத்திரம் ஆறு! சமாராதனை வருடா வருடம்! ஜாதியில் பெரியவர்! ஊரில் பாதி அவருடையது! கடன் கொடுப்பவர் அவரேதான்! கலெக்டர் மகனுக்குப் பெண் தந்தார்! - எனும் இப்படி ஏதாகிலும் காரணங்களுக்காகப் பெரும்பாலான காங்கிரசாருக்கு, ஆதரவு - தேர்தல் காலத்தில் - தரப்படுகிறதேயன்றி, இவர்கள், விடுதலை வாங்கித் தந்தவர்கள்! வீரதீரச் செயலாற்றியவர்கள்! என்று எண்ணி அல்ல. மக்கள் இத்தனை விவரமாகப் பேச மாட்டார்களே தவிர, அவர்கள் விவரம் அறியாதவர்கள் அல்ல!!

ஊர்வலம் செல்வோர், தவறான எண்ணம்கொண்டுள்ளனர் - இவர்களை விடுதலைப் போர் நடாத்திய வெற்றி வீரர்கள் என்று நாம் எண்ணி ஏமாறுவோம் என்று எதிர்பார்க்கிறார்கள்! அத்துடன், இத்தகைய

வெற்றி வீரர்களை எதிர்த்து நின்று, நாம் நமது இலட்சியத்தை அடைய முடியாது என்ற அச்சம், நம்மைப் பிடித்து உலுக்கும் என்றும் எண்ணுகிறார்கள்.

இவர்களை, நாம் விடுதலை பெற்றுத்தந்த வீரர்கள் என்று எண்ணி ஏமாறமாட்டோம் - விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நாம், காங்கிரஸ் நடத்திய விடுதலைக் கிளர்ச்சிபற்றிய வரலாற்றினை, காங்கிரசில் ஒட்டிக்கொண்டுவிட்ட இவர்களைப் போல் அல்லாமல், தெளிவாகப் படித்துப் பாடம் பெற்றிருக்கிறோம். மாட்டின் கழுத்திலே கட்டப்பட்ட மணியைக் கொண்டு மாட்டின் விலையை மதிக்கமாட்டார்கள்; அந்நிலையில் மாட்டின் கழுத்து மடிப்பில் ஒட்டிக்கொண்டு கிடக்கும் "உணியைக் காட்டி பத்து ரூபாய் சேர்த்துக்கொடு என்று மாட்டுக் குடையான் கேட்டால் கைகொட்டியல்லவா நகைப்பார்கள்!

அதுபோல' காங்கிரசுக்குக் கிடைத்துள்ள பதவியைக் கண்டே, மயங்க மறுக்கும்போது, ஒட்டிக் கொண்டுள்ள உணிபோல, ஆளும் கட்சியாகக் காங்கிரஸ் மாறின பிறகு, அதிலே குடிபுகுந்த குணாளர்களைக் கண்டா, மருளப்போகிறோம்? அவர்களுக்குப் பாபம், அப்படி ஒரு நினைப்பு!

இவர்களின் நினைப்பு இதுவென்றால், விடுதலைக் கிளர்ச்சி நடாத்திய அனுபவம் பெற்ற காங்கிரஸ் தலைவர்களோ, தங்களோடு, வீரர் வரிசையே தீர்ந்துபோய்விட்டது! ஆற்றலின் கடைசிச் சொட்டும் தீர்ந்துபோய்விட்டது. விடுதலைக் கிளர்ச்சி என இனி ஒன்று தலைதூக்காது! தலைதூக்கவேண்டிய அவசியமே இல்லை! எவராலும் முடியாது! எவருக்கும் இல்லை அந்த ஆற்றல்! - என்று திடமாக - மிகத் திடமாக நம்புகிறார்கள்.

அவ்வளவு நல்லவர்கள், இவ்வளவு பொல்லாங்கான எண்ணம் கொண்டிருப்பதைக் காணும்போதுதான், நமக்குக் கோபத்துடன் வருத்தமும் பிணைந்து வாட்டுகிறது.

காங்கிரசின் தொண்டர்கள், துணைநாடி வந்துற்ற பிணி போன்றார், எப்படி, “எமது நேரு பண்டிதரையா எதிர்க்கத் துணிகிறாய்?’’ என்று கடுங்கோபம் கொண்டு கேட்கிறார்களோ, அதுபோன்றே, விடுதலைக்குப் பாடுபட்டவர்கள், விடுதலையின் அருமை அறிந்தவர்கள், விடுதலை உணர்ச்சி பெற்று விட்டவர்கள், எங்ஙனம் எதற்கும் துணிந்தவராவர் என்பதனைத் தெரிந்தவர்கள் எனும் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர்களும்,”இதுகளா! நம்மையா! விடுதலையா! போரா!’’ - என்று கேலி

பேசுகிறார்கள். அதைக் காணும்போதுதாம், தம்பி! உள்ளபடி இவர்கள், தமது தத்துவங்களைத் தாமே இகழ்கிறார்களே! இன்றைய நடவடிக்கையால், முன்னாள் செயலால் கிடைக்கும் பெருமைகளுக்கும் இழுக்குத் தேடிக் கொள்கிறார்களே! என்று பரிதாபமாக இருக்கிறது.

வெள்ளையரை நேரு போன்றார் எதிர்த்தபோது, அவர்களிடம் இருந்துவந்த, ஆயுதம் என்ன? திடமான நம்பிக்கை! அசைக்க முடியாத ஆர்வம்! எதையும் தாங்கும் உள்ளம்! வேறு உண்டா? சொத்து நிரம்ப இருந்தது அவர்களிடம் - நம்மைப் போல நடுத்தெரு நாராயணர்கள் அல்ல, அந்த நாள் காங்கிரசார். இன்று காங்கிரசார் ஆகிவிட்டவர்கள்போல, ஊரை அடித்து உலையிலே போடவேண்டிய நிலையினரும் அல்ல. பூர்வீகச் சொத்து! நல்ல வருவாய்! சமூகத்திலே மேலிடம்! படிப்பு!

பதவி! - எல்லாம் இருந்தது.

தம்பி! என்றாவது ஒரு நாள், முதன்முதல் காங்கிரசை நடத்த முன்வந்தவர்கள் எவரெவர், அவர்களின் செல்வநிலை, சமூகநிலை என்ன என்பதோடு, வெட்ட வெளியில் கொட்டும் மழையில் கூடி தி. மு. கழகம் துவக்கினோமே, அவர்களுடைய நிலையுடன், ஒப்பிட்டுப் பார். உனக்கே வியப்பாக இருக்கும். நாமா இப்படி ஒரு இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றி வர முடிகிறது என்று.

செல்வமும் செல்வாக்கும், படிப்பும், பதவியும், சமூகத்தில் உயர்நிலையும் இருந்தன என்றாலும், வெள்ளையரிடம் இருந்து வந்த அதிகார பலம் - ஆள் பலம் - ஆகியவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவை மிக வலிவற்றவை! எனினும் துணிந்து எதிர்த்து நின்றார்கள் - திட நம்பிக்கையுடன் - வெற்றி நாடி வந்தது.

இந்தப் பாடம், அந்த விடுதலை வரலாறு படிக்கும்போது மிகத் தெளிவாக நமக்குப் புரிகிறது. ஆனால், அந்த வரலாற்றுக்கு உரியவர்களென்று தம்மைக் கூறிக்கொள்பவர்களோ, நாம் ஈடுபட்டுள்ள விடுதலைக் கிளர்ச்சியைத் துச்சமென்று எண்ணுகிறார்கள். ஏன், தம்பி, இது? சொன்னால் கோபித்துக் கொள்ளமாட்டாயே? அவர்கள், நமது உறுதியைச் சந்தேகிக் கிறார்கள்!! ஆமாம்! முழக்கமெழுப்புகிறாய், திராவிட நாடு திராவிடருக்கே என்று; ஆனால் கொள்கையிலே உறுதி இருக்கும், கொள்கைக்காக எதையும் இழக்கச் சம்மதிப்பர் எத்துணை இன்னல்களையும் ஏற்றுக்கொள்வர் என்று நான் சொல்வதை, அவர்கள் நம்ப மறுக்கிறார்கள்! விளைவு தெரியாமல் வீம்பு பேசுகிறார்கள்! கனவு காண்கிறார்கள்! கவைக்குதவாதன

பேசுகிறார்கள்! பேச்சுக் கச்சேரி நடத்துகிறார்கள்! எதிர்ப்புக் கண்டால் இருக்குமிடம் தெரியாமல் ஓடிவிடுவார்கள்! பிடி! அடி! சுடு! என்று உத்தரவு பிறப்பித்தால் போதும், காலடி வீழ்ந்து கதறுவார்கள்! அவர்கள் சுகவாழ்வு விரும்புபவர்கள்! தாமுண்டு, தம் குடும்பம் உண்டு என்று இருப்பவர்கள்! தொழில் செய்ய வேண்டும், நிம்மதியாக வாழ வேண்டும் என்று எண்ணுபவர்கள்! பொழுதுபோக்கு அரசியல் நடத்துகிறார்கள்! வீரமோ தீரமோ அற்றவர்கள்! வெஞ்சமர் காண அஞ்சுவர்; கொடுஞ் சிறை எனின் ஒளிவர்! கோலோச்சுவோரின் கோபப் பார்வை பட்டால் கருகிச் சாம்பலாவர்! - என்று எண்ணுகிறார்கள்.

உன்னை இகழ்கிறார்கள்; உன் வீரத்தைப் பழிக்கிறார்கள்; உறுதியைச் சந்தேகிக்கிறார்கள்.

என்மீது கோபித்துக்கொள்ளாதே தம்பி! எனக்கு இல்லை, அவ்விதமான சந்தேகம். நான் நம்புகிறேன் - பரிபூரணமாக நம்புகிறேன். நான் நம்பிக்கை கொள்ள வேறு என்ன இருக்கிறது! என் எண்ணமல்ல, மேலே சொன்னது. உன்னையும் என்னையும் சேர்த்து, முன்பு விடுதலைக் கிளர்ச்சி நடத்திய காங்கிரசார் சந்தேகிக்கிறார்கள். இவர்களுக்கு, ஒரு விடுதலை இயக்கத்தை நடத்தத் தக்க வீரம் கிடையாது; அதற்கேற்ற தியாகம் புரியும் ஆற்றல் கிடையாது; இலட்சியத்திலேயே அசைக்க முடியாத நம்பிக்கை கிடையாது - என்று எண்ணுகிறார்கள்.

நம்முடைய முயற்சிகளை அவர்கள் கேவலமாகக் கருதி ஏளனம் பேசுவதற்குக் காரணம் இதுதான். நான் உள்ளதை உள்ளபடி உரைத்துவிட்டேன்.

மற்றொன்று தம்பி! நாம் கொள்கையிலே உறுதி கொண்ட வர்கள்தானா, எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள்தானா, எதிர்ப்புக்கு அஞ்சாதவர்கள்தானா என்பதுபற்றிய சந்தேகம் அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது தெரிகிறதா? அதையும், நான் மறைக்க விரும்பவில்லை. இரண்டு நிலைமைகள் இதற்குக் காரணம்.

ஒன்று, நம்மிலே மிக முக்கியமானவர்கள் என்ற நிலையினர், நம்மைக் காட்டிலும் அடித்துப்பேசிக் கொள்கை பரப்பியோர், அமைச்சர்களை அறைகூவி அழைத்தும், எதிர்ப்பாளர்களை ஏசிப் பாடியும், இழிமொழியால் தாக்கியும் வந்தவர்கள், திடீரெனத் ”திராவிட நாடு கிடைக்காது விட்டு விட்டோம்; விட்டு விடுக! இல்லையேல் கெட்டுவிடுவீர்கள்! நீங்களாகக் கெடாவிட்டால், நாங்கள் எதிர்த்துக் கெடுத்து விடுவோம்’

என்றெல்லாம் பேசிடும் கோலம் கண்டதால், காங்கிரஸ் தலைவர்களிலே சிலருக்கு ஒரு நம்பிக்கை - இதுபோலத்தான் மற்றவர்களும், திராவிட நாடு கொள்கையை விட்டுவிடுவார்கள்; இவர்களுக்கு என்றைக்குமே அந்தக் கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை இருந்ததில்லை! எந்தக் கொள்கையிலும் நம்பிக்கை கொள்ளக்கூடியவர்களே அல்ல இவர்கள் என்று எண்ணுகிறார்கள்.

மற்றொன்று, நமது தோழர்களுக்கிடையே, அலுவலர் களாகப் பணியாற்றும் வகையிலே எழும் கசப்புகள், பேதங்கள் இவைகளைக் காணும்போது, காங்கிரஸ் தலைவர்கள் களிப்புடன் பேசிக்கொள்கிறார்கள், "பயல்கள் அடித்துக் கொண்டு மடியப்போகிறதுகள். கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை இருந்தால், அதற்காக உயிரையும்

கொடுக்கவேண்டுமென்ற உறுதி இருந்தால், இப்படியா, சில்லறை விஷயங்களுக் கெல்லாம் சிண்டுபிடி சண்டை நடக்கும். கொள்கையாவது மண்ணாவது! காட்டுக் கூச்சலோடு சரி! காரியமாற்றும் திறம் ஏது! கொள்கையிலே நம்பிக்கை இருந்தால்தானே!'' என்று பேசிக் கொள்கிறார்கள்.

தம்பி! இந்த நிலைமை வளரும், பேதமும் பிளவும் அதிக மாகும், கழகம் கலகலத்துப்போகும் என்று காங்கிரஸ் தலைவர்கள் நம்புகிறார்கள்.

நம்மிடையே தோன்றிவிடும் சில பல செயல்கள், அந்தத் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையை வளரச் செய்கிறது! என்ன செய்வான் இந்த அண்ணாத்துரை! தடுத்துப் பார்க் கிறான் - மறுத்துப் பார்க்கிறான் - நிலைமை

சீர்படாவிட்டால், என்ன செய்வான்? விட்டுவிட்டு ஓடிவிடுவான்! பார்! பார்! நடக்கப்போவதை!! - என்று காங்கிரஸ் தலைவர்கள் சிலர் பேசுவதுகூட எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொள்கையை விட்டுவிட்டுச் சிலர் போய்விட்டதும், கொள்கைக்காகக் கழகமே தவிர, நமது உரிமைகளுக்காக, பெருமைகளுக்காக, இலாபத்துக்காக அல்லது அதை யாரோ பெற்றுவிடுகிறார்களோ என்று மோப்பம் பிடித்து முணுமுணுப்பதற்காக அல்ல என்பதை முற்றிலும் உணராததால் மூண்டுவிடும் சச்சரவுகளும், காங்கிரஸ் தலைவர்களை, மொத்தத்தில் நமது கழகத்தவருக்கே கொள்கையிலே நம்பிக்கை இல்லை என்ற எண்ணம்கொண்டு பேசச் செய்கிறது.

நான் தம்பி! அவர்களின் தீர்ப்பும் வாதமும்

சரியென்று கூறவில்லை.

அவர்கள் அவ்விதம் எண்ணவும், பேசவும், நம்முடைய, நடவடிக்கைகள் சில இடம் கொடுத்துவிடுகின்றன என்பதைத்தான் கூறுகிறேன்.

எனக்கும் தெரியும், உனக்கும் தெரியும், ஊரறியும் உலகறியும், காங்கிரஸ் கட்சிக்குள்ளே முளைத்து, வெடித்து, முடைநாற்றம் வீசிக்கொண்டிருக்கும் சச்சரவுகள்.

அமைச்சரவை அமைக்கப்பட்ட ஏழு திங்களுக்குள், இரண்டாவது முறையாக குப்தா அமைச்சர் அவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்! பண்டித நேருவின் சொந்த இராஜ்யத்தில்!

குப்தா அமைத்திருப்பது காங்கிரஸ் மந்திரி சபை.

அதற்கு எதிர்ப்புக் கிளம்புவது, முன்னாள் முதலமைச்சர் சம்பூரணானந்தாவின் ஆதரவாளர்களாக உள்ள காங்கிரஸ் எம். எல். ஏ. க்களிடமிருந்து!

அதனை அவர்கள் திரைமறைவில்கூடச் செய்யவில்லை. சம்பூரணானந்தாவின் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த கமலபதி திருபாதி என்பவர் இல்லத்தில் கூடியே பேசுகிறார்கள் - பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

அந்த மாநிலத்திலேயே வெளிவரும், இந்தி - உருது - பத்திரிகைகளிலே, பார்த்தால்தான் தெரியும், குப்தா கோஷ்டியின் குட்டுகளை உடைக்கிறேன் என்று ஒரு பத்திரிகையும், சம்பூர்ணானந்தாவின் செல்வாக்குக்குச் சமாதி கட்டுகிறேன் என்று மற்றோர் பத்திரிகையும் நாராச நடையில் எழுதித் தீர்த்துக்கொள்ளும் விந்தை!

இங்கு நமக்கு வருகிற சேதி, குப்தா அமைச்சர் அவைமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருகிறது என்ற அளவுதான். அங்கு உள்ள நிலைமையிலே, இது நூற்றில் ஒரு பகுதி.

ஒவ்வொரு நாளும், இரு பிரிவுக் காங்கிரசாரும் முகாம்களில் கூடிப்பேசுவதும், கலகமூட்டுவோர், கலாம் விளைவிப்போர், கைக்கூலி பெறுவோர், கபட நாடகமாடுவோர், கூடிக் குடிகெடுப்போர், மிரட்டிச் சலுகை பெறுவோர் என்பவர்கள் மும்முரமாக வேலை செய்வதும், இவரைப்பற்றிய ஒரு இரகசியம் என் உள்ளங்கையிலே இருக்கிறது என்று ஒருவரும்; அவர் விஷயமாக எனக்குத் தெரிந்ததை அவிழ்த்து விட்டால், ஊர் நாறும் என்று இன்னொருவர் பேசுவதும்; இதை நீங்களே பேசிக்கொண்டு இருக்கக்கூடாது; ஒழுங்கு நடவடிக்கை

எடுப்பார்கள்; ஆகையினால், மாற்றுக் கட்சிக்காரரிடம் "தகவலை'க் கொடுங்கள், அவர்கள் அம்பலப்படுத்தட்டும், ஆசாமி அகப்பட்டுக்கொண்டு விழிக்கட்டும்; நாம், இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற பாவனையில் இருந்துவிடலாம் என்று யூகம் தெரிந்தவர் சொல்லிக்கொடுப்பதுமாக நிலைமை இருக்கிறது.

உத்திரப்பிரதேசத்தில் மட்டுமல்ல தம்பி! பல இடங்களிலும்.

ஆனால், அவை குறித்துப் பேச்சு, வெளியே அதிகம் எழாது; மூடி மறைப்பார்கள்; கமிட்டிச் சண்டை என்பார்கள்; இதனால் காங்கிரசுக்கு ஒரு கெடுதியும் வராது என்பார்கள்.

நம்முடைய கழகத்தில் ஒரு சிறு சம்பவம் ஏற்பட்டாலும், பெரிதாக்கிக் காட்டி, ஊர் கூட்டி, குழப்பி, நமது கழகத்தைக் குலைக்க முயற்சி

எடுப்பார்கள், எடுக்கிறார்கள்.

இப்போது, தம்பி! விளக்கமாகிறதல்லவா, ஏன், நம்முடைய விடுதலைக் கிளர்ச்சியை, அந்த விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட கழகத்தை, காங்கிரஸ் தலைவர்கள் துச்சமாக மதிக்கிறார்கள், ஏளனம் செய்கிறார்கள் என்பதற்கான காரணம்.

சொல்லிவிட்டேன். நீ சோகமடைய அல்ல, ஒவ்வொருவரும் தத்தமது பங்காக, கழகத்தின் கண்ணியம் நம் ஒவ்வொரு வரின் உரிமையைவிடப் பெரிது என்ற போக்கில், நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காக.

ஆனால், இதனால் நமது கழகம் ஒழிந்துபோகும் என்று நம்புவது மட்டுமல்ல, இந்திய துணைக்கண்டத்துப் பல்வேறு இராஜ்ய முதல் மந்திரிகளெல்லாம் கூடிய மாநாட்டில், கனம் காமராஜர், இதனை

வெளிப்படையாகவே பேசியிருக்கிறார் - அறிவாய்.

நாட்டைப் பிரிவினை செய்ய வேண்டும் என்ற கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தி. மு. கழகத்தை, ஒழித்தாக வேண்டும்! அதற்காக, கழகத்தையே தடுத்துவிடலாமா? அல்லது தனித்தனியாகக் கழகத் தோழர்களைப் பிடித்திழுத்துக் கூண்டிலேற்றிக் கடுமையாகத் தண்டித்து அழிக்கலாமா? என்ன செய்து இந்தப் பிரிவினைச் சக்தியை ஒடுக்குவது என்பதுபற்றிக் கூடிக் கலந்துரையாடினர் முதலமைச்சர்கள்.

அப்போது காமராஜர், தி. மு. கழகத்தின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை; அது தன்னாலே அழிந்துவிடும்; இப்போதே, அதிலே ஏற்பட்ட பிளவு, சண்டை, சச்சரவு! எலக்ஷனுக்குப் பிறகு, இருக்கவே இருக்காது.

அதைப்பற்றிக் கவனிக்காமலிருந்துவிட்டால், அது, தன்னாலே செத்துவிடும் என்று பேசியிருக்கிறார்.

புரிகிறதா, தம்பி! காமராஜர், எதை நம்பிக்கொண்டிருக் கிறார் என்பது. நம்மிடையே பிளவு! நம்மிடையே சண்டை சச்சரவு!?. . . இதனைத்தான் மலைபோல நம்பிக்கொண்டிருக் கிறார். இதை அறியாமல், குத்திக் கிளறிவிடுவதுதான், யாராலுமே முடியாத, அபாரமான ஆற்றல் என்ற எண்ணத்தில் நடந்து கொள்பவர் எவராயினும், அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ, காமராஜரின் கரத்தை, கருத்தை வலிவுள்ளதாக்கு கிறார்கள் என்றுதான் பொருள்படும்.

தம்பி! காட்டிலே உள்ள புலி, தன் இரையை வேட்டையாடித்தான் பிடித்துத் தின்னும். பலப்பல மைல்கள் வேட்டைக்காக ஓடுமாம்,

களைப்பு மேலிடுகிற முறையில்! அந்த விதத்தில், அடித்துத் தின்றால்தான் அதற்குத் திருப்தி.

பெருஞ் சிறகடித்துப் பறக்கும் கழுகு, இருக்கிறதே அது வேட்டை ஆடாது - துரத்தித் தாக்காது - துளைத்துக் கொல்லாது - ஆடோ மாடோ, கொல்லப்பட்டோ, செத்தோ, பிணமாகி, அழுகி, நாற்றம் அடிக்கும் நிலையிலே கிடக்கும் போதுதான், கீழே இறங்கிவந்து, குத்திக் கிளறித் தின்று, பசி தீர்த்துக்கொள்ளும்.

சில முதலமைச்சர்கள் நம்மை வேட்டையாடிக் கொல்ல வேண்டும் என்று திட்டம் தருகிறார்கள்.

காமராஜரோ, கழுகு முறையைப் பின்பற்றலாம் என்கிறார்.

வேட்டையாட நினைக்கும் திட்டத்தினர், கழகத்தைத் தடைபோட்டு, ஒழித்துக் கட்டலாம்

என்று நினைப்பதும் பேதமை. கழுகாகலாம் என்று கூறும் காமராஜரின் யோசனையும் பலிக்கப் போவதில்லை.

விடுதலை இயக்கம், தடையால், படையால், அழிவதில்லை!

விடுதலை இயக்கம் அழிந்துவிட்டது, அழித்து விட்டோம் என்று எண்ணி எதேச்சாதிகாரிகள் எக்காளமிடலாம். ஆனால், அது புதைகுழியைப் பிளந்துகொண்டு, மீண்டும் மீண்டும் எழும்!

சில ஆறுகள் ஓடிக்கொண்டே வருமாம்; இடையிலே காணாமலே போய்விடுமாம்! பிறகோ நெடுந் தொலைவில் வேறோர் இடத்திலே அதே ஆறு கிளம்பி ஓடி வருமாம்! தம்பி! காணாமற் போய்விட்டது என்று எண்ணிக்கொண்டிருக்கும் போது, என்ன நடக்கிறது என்றால், ஆறு ஒரு பிலத்தின்

வழியாகப் பூமிக்கடியில் சென்றுவிடுகிறது! மறைந்துவிடுகிறது! பிறகு? நெடுந்தூரம் அடிவாரத்திலே ஓடி, மீண்டும் "குபுகுபு'வென மேல் பக்கம் கிளம்பி, மற்றோர் வெடிப்பு வழியாக வெளியே வந்து, பழையபடி ஆறாகி ஓடுகிறது! விடுதலை இயக்கமும் அப்படித்தான். வெளியே நடமாடவிடாதபடி தடைபோட்டு விடுவதாலே, உணர்ச்சி அழிந்துபோய்விடாது! இடம் பார்த்து, காலம் பார்த்து, வழிபார்த்து, பெருக்கெடுத்து ஒடிவரும். எத்தனை முறை, வெள்ளைக்காரக் கவர்னர்கள் சீமைக்குச் சேதி அனுப்பினார்கள் - "காங்கிரஸ் தலைகாட்டுவதில்லை! கல்லறையில் கிடக்கிறது!" என்று. பார்த்தவர்களும் இருக்கிறார்கள், அதுபற்றிப் படிப்பவர்களும் புரிந்துகொள்வார்கள்!

சச்சரவுகளால் கழகம் அழிந்துபடும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார் காமராஜர்.

அவர் போன்றாரின் வெளிப்படையான பேச்சைக் கேட்ட பிறகும், கொள்கையில் உறுதிபடைத்த தோழர்கள், கழகத்திலே பேத உணர்ச்சியை மூட்டிவிடுவார்கள் என்று நான் எண்ண வில்லை. அவ்விதம் நடந்துகொள்பவர்களால், ஏற்படும் சிதைவு களையும் சரிப்படுத்திக்கொண்டு, கழகத்தின் கட்டுக்கோப்பைக் காத்து நிற்கும் கர்மவீரர்களின் எண்ணிக்கை மிகப் பெரிது!

எனவே புலித் திட்டமாயினும் கழுகுத் திட்டமாயினும் கழகத்தை ஏதும் செய்துவிடாது.

தம்பி! உனக்கு எப்போதாகிலும், நீர்கோர்த்துக் கொண்டதுண்டா! சளி பிடிக்கிறது என்பார்களே அது? எனக்கு அந்தத் தொல்லை அடிக்கடி!

காய்ச்சல், கைகால் பிடிப்பு, வயிற்றுவலி என்று பலவிதமான நோய்கள் ஏற்பட்டால்

ஒருவகையிலே நிம்மதிகூட என்று சொல்லலாம் - ஏனெனில், ஏதும் செய்ய முடியாத நிலையில் படுத்துவிடுவோம். இந்தச் சளிபிடிப்பது இருக்கிறதே இது மிகமிகத் தொல்லை! படுக்க வைக்காது - வேலை செய்யும் நினைப்பைக் கொடுக்காது. ஆனால் வேலையிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கும்போது, தும்மலாகி, மூக்கைத் துளைத்து, குடைந்து, ஆளைப் படாதபாடு படுத்திவிடும்! சாதாரணச் சளிதானே என்பர் எவரும். மருத்துவரிடம் சொல்லக்கூடத் தோன்றாது! என்ன உடம்புக்கு என்றுகூட எவரும் அக்கறையுடன் விசாரிக்கமாட்டார்கள். நாமாகக் கூறினால்கூட, "சளிதானே! இதற்கா இந்தப் பாடுபடுத்துகிறாய்!'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டுச் செல்வார்கள். ஆனால், அந்தச் சளியின் தொல்லை, படுபவர்களுக்குத்தான் தெரியும்.

ஒரு வேடிக்கையான கதை சொல்வார்கள்:

விகடகவியான தெனாலிராமன், ஒரு நாள், காளியைத் ”தரிசனம்’ கண்டானாம்! கவிகளைக் காளி நேரடியாகக் காணக் கூடிய காலத்துக் கதை!

அந்தக் காளி, ஆயிரமுக மாகாளி!

முகம் மட்டும்தான் ஆயிரம்! கரங்கள் அவ்வளவு இல்லை!

கண்ட உடன் தெனாலிராமன், கடகடவெனச் சிரித்தானாம்.

அவன் அப்படிச் சிரித்தது கண்டு, எப்படி இருந்திருக்கும் மாகாளிக்கு?

என்னமோ கவிபாடுகிறானே, அழைத்தானே “பிரசன்னமாகி, ஏதாகிலும் வரம் கேட்பான், கொடுக்கலாம்; ஆசாமி பிழைத்துப் போகட்டும் என்று பார்த்தால்,

கண்டதும் விழுந்து கும்பிடாமல், கடகடவெனச் சிரிக்கிறானே! எவ்வளவு மண்டைக் கர்வம் இவனுக்கு! சூலாயுதத்தை வீசி இவனைத் தொலைத்துவிடலாம்' என்று மாகாளிக்குத் தோன்றிற்று. மறுகணம் கோபம் குறைந்து விட்டது;"பாவம்! இவனோ கவி! எது மனதில் படுகிறதோ, அதை மிகைபடக் கூறிப் பழக்கப் பட்டவன்! உள்ளத்திலே கள்ளமில்லை! இவன்மீது கோபம் கொள்ளக்கூடாது!'' என்று எண்ணி, "எதற்காகச் சிரிக்கிறாய்?'' என்று கேட்டாள்.

"தாயே! தயாபரி! எனக்கு இருப்பது ஒரே மூக்கு! அந்தச் சனியனில் சளி பிடித்துக்கொண்டால், இந்த இரண்டு கைகளும் போதவில்லையே! அம்மா! உனக்கோ ஆயிரம் மூக்குகள்! உனக்குச் சளி பிடித்துக்கொண்டால் என்ன பாடுபடுவாயோ என்று எண்ணினேன், சிரிப்பு வந்தவிட்டது''

என்று தெனாலிராமன் பதிலளித்தானாம்.

மாகாளியும் விழுந்து விழுந்து சிரித்ததாகக் கதை!

தம்பி! நான் மாகாளியையும் கண்டதில்லை! தெனாலி ராமனையும் கண்டவனல்ல. ஆனால், சளியின் தொல்லை நன்றாகத் தெரியும். அதுபற்றித் தெனாலிராமன் சொன்னதைக் காளி மறுத்தால்கூட, நான் மறுக்கமாட்டேன்; அவ்வளவு தொல்லை தருவது சளி.

நமது கழகத்திலே காய்ச்சல், குன்மம், கைகால் பிடிப்பு போன்ற கடுமையான நோய் எதுவும் இல்லை! ஆனால், சளி பிடித்துக்கொள்கிறது அடிக்கடி! தொல்லையான நோய்!

ஆனால், எனக்கே இயல்பாக, அடிக்கடி சளி பிடித்துக் கொள்வதால், இந்தச்

”சளி’த் தொல்லையையும், நான் கூடுமான வரையில் தாங்கிக்கொள்கிறேன். அது நிமோனியா காய்ச்சல் ஆகிவிடாதபடி பார்த்துக்கொள்கிறேன். ஆனால், அதனால், எத்தனையோ மிக முக்கியமான வேலைகள் கெடுகின்றன! தடைபடுகின்றன.

காமராஜரோ, இந்தச் சளியே கழகத்தைக் கொன்றுவிடும் என்கிறார்.

மருத்துவர்கள் மறுத்து உரைப்பார்கள்; கழகத்தின் நடவடிக்கைகளிலே பொறுப்பேற்றுக்கொண்டுள்ள நான், தம்பி! உன் ஒத்துழைப்பால், நிலைமைகளைத் திருத்திவிட இயலும் என்று நம்புகிறேன். என்றாலும், எனக்குத் தெரியும், மற்ற வியாதிகள் ஆபத்தானவை, சளி அசிங்கமானது! எனவே, அதற்காக, அது பிடிக்காதபடி பார்த்துக்கொண்டாக வேண்டும்.

விவரமறிந்த எவரும், ஒரு விடுதலை இயக்கத்திலே, சரிவு, சச்சரவு, சோர்வு, தோல்வி, கலக்கம், மயக்கம், போட்டி, பொறாமை சிற்சில வேளைகளிலே மூண்டுவிடுவதால், அந்த விடுதலை இயக்கமும், விடுதலை உணர்ச்சியும் அடியோடு அழிந்துபோய்விடும் என்று கூறமாட்டார்கள்; எண்ணிக் கொள்ளவும் மாட்டார்கள்.

சூரத் காங்கிரஸ் மகாநாட்டிலே ஏற்பட்ட செருப்பு வீச்சுகளைவிடக் கேவலமாகவா, வேறொன்று இருக்க முடியும்?

அப்போது இருந்த காங்கிரஸ் தலைவர்களெல்லாம், சாதாரணமானவர்களா?

திலகர் நடத்திச் சென்ற காங்கிரசில், "சூரத்' நடந்தது! அதனால் காங்கிரசார்,

காவி உடுத்திக் கமண்டலமேந்திக் கடும் தவம் செய்யக் காசிக்கா போய்விட்டார்கள்? அல்லது காமராஜர் நமது கழகத்தைப்பற்றிக் கூறுகிறாரே, அதுபோலக் காங்கிரஸ் அழிந்தா போய்விட்டது? ஆத்திரத்தில் அறிவிழந்தனர். கடமை மறந்தனர். உரிமைக்காக ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டனர். இலட்சியம் பெரிது, கட்சியிலே நமக்குத் தரப்படும் இடம் பெரிதா அல்லவா என்ற எண்ணம் எழக்கூடாது என்பது மறந்தனர், சச்சரவில் ஈடுபட்டனர். பிறகு, ஊரே கூடிப் புத்தி சொல்லிற்று! வெட்கப்பட்டனர்! தமக்குள்ளே ஏற்பட்டுவிட்ட பிளவு கண்டு ஏகாதிபத்தியம் எள்ளி நகையாடக் கண்டனர், நிலைமை புரிந்தது; மனம் திருந்திற்று; காங்கிரசில் மீண்டும் கண்ணியமும் கட்டுப்பாடும் நிலைத்தது! வெற்றி கிடைத்தது.

சூரத் காங்கிரசில், தலைவர்களே

ஒருவர்மீது ஒருவர் மிதியடிகளை வீசிக்கொண்டு, கலாம் விளைவித்துக்கொண்ட சம்பவம் குறித்து, வைசிராய், கவர்னர்கள் மாநாடு கூட்டிப் பேசி இருந்தால், பம்பாய் மாகாணக் கவர்னர் என்ன சொல்லியிருப்பார். ”காங்கிரசைப் பற்றித் துளியும் கவலைப்படத் தேவையில்லை. அதிலே பிளவு, பேதம், சண்டை, சச்சரவு! சூரத் சம்பவம் தெரியுமல்லவா? நாம் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அது தன்னாலே அழிந்துவிடும்’’ என்றுதானே கூறியிருப்பார்.

அதேதான், காமராஜர் இப்போது பேசியிருப்பது.

பேச்சு, இயல்பினால்கூட அமைந்ததல்ல, இடத்தால் அமைகிற பேச்சு!

அத்தனை முதலமைச்சர்கள் கூடிப் பேசுமிடத்தில், தி. மு. கழகம் பற்றிய

பிரச்சினை வரும்போது, “ஆமாம்! ஆமாம்! தி. மு. கழகம் வளர்ந்துவிட்டது! நாட்டுப் பிரிவினை பற்றிய பேச்சு எங்கும் பரவிவிட்டது! நாங்கள் செய்யும் எதிர்ப் பிரசாரம் பலன் அளிக்கவில்லை. எம்மால் அந்தக் கழகத்தை ஏதும் செய்ய முடியவில்லை'' என்றா ஒரு முதலமைச்சர் பேச முடியும்! எதிர்பார்க்கத்தான் செய்யலாமா, அவ்விதம் பேசுவார் என்று! கொஞ்சம் மீசையை முறுக்கிக்கொண்டு, கனைத்துவிட்டு, ஒரு அலட்சியப் புன்னகையுடன்,”தி. மு. கழகம் ஒன்றும் இல்லை. அது தன்னாலே சாகும்!'' என்றுதான் சொல்லத் தோன்றும்.

ஆகவே, தம்பி! காமராஜர் அங்கு அவ்விதம் பேசியது கேட்டு, யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை! கவனிக்கத் தேவையுமில்லை. ஆனால், மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால்,

இந்தியப் பேரரசு நமது கழகத்தின்மீது குறி வைத்துவிட்டது என்பதுதான்!

சந்தைச் சதுக்கத்துப் பேச்சு, சட்டசபை வரையில் போய்ச் சேர்ந்தது என்று இருந்தோம்.

மற்றோர் கட்டம் இது! இந்தியப் பேரரசு முதலமைச்சர்கள் மாநாடு கூட்டி, தி. மு. கழகத்தை ஒழித்தாக வேண்டும் என்ற துடிப்பை வெளிப்படுத்தி, விதவிதமான திட்டம் தீட்டியது.

"தலையைக் கொண்டுவருபவர்களுக்கு இனாம் தரப்படும்!'' என்ற அளவுமட்டும் எழுதித் தொகைபற்றி ஒருமித்த முடிவு ஏற்படாததால், அதனைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டதுபோல என்று வைத்துக்கொள்ளேன்.

தி. மு. கழகத்தின் வளர்ச்சியும், திராவிட

நாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்துக்குச் செல்வாக்கும், எந்த அளவுக்கு என்றால், முதலமைச்சர்கள் மாநாட்டிலே, கூடிப் பேசவேண்டிய நிலைமைக்கு இந்தியப் பேரரசைக் கொண்டு வந்து விட்டுவிட்டது.

"அதெல்லாம் வீண் புரளி, வேண்டாம்! உங்கள் கழகத்தைப் பற்றி ஒன்றும் முதலமைச்சர்கள் கூடிப்பேசவில்லை."அசாம்' பஞ்சாப் ஆகிய இடங்கள்பற்றிப் பேசினார்கள்; அந்தப் பேச்சோடு பேச்சாக, தமிழ்நாடு பற்றிய பேச்சும், தி. மு. க. பற்றியும், எழுந்தது; அவ்வளவுதான்.'' - என்று பேசுவர், காங்கிரஸ் பேச்சாளர்.

தம்பி! முதலமைச்சர்கள் மாநாட்டிலே, அசாம், பஞ்சாப் பற்றிப் பேசினது உண்மை; பேசவேண்டிய விதமான நிலைமைகள், நெருக்கடிகள் அங்கே! வங்காளியும் அசாமியனும் ஒருவரை ஒருவர்

வெட்டிக்கொண்டு மடிகிறார்கள். "ஜெய்ஹிந்த்' முழக்கமிட்டபடி!! பாஞ்சாலத்தில், எந்த விநாடி என்ன நடக்குமோ என்று பீதி கொள்ளத்தக்க நிலைமை. எனவே. சட்டம் சமாதானம் காத்திட, அவைபற்றிப் பேச எண்ணம் எழும்.

தமிழ் நாடு நிலைமை அதுவல்ல. இங்கு தி. மு. கழகம் எந்தவிதமான கிளர்ச்சியிலும் இப்போது ஈடுபட்டிருக்கவில்லை. அமைதியான பிரசாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பஞ்சாபில் கிளர்ச்சி, அசாமில் அமளி! அவைபற்றிப் பேசும்போது, தி. மு. க. குறித்து, ஏன் எண்ணம் பாய வேண்டும்?

அந்தக் கிளர்ச்சி - அமளி ஆகியவைகளைவிட, தி. மு. கழகம் நடத்திவரும் திராவிட நாடு பற்றிய பிரசாரம், தொடர்ந்து, கட்டுப்பாடாக,

பட்டிதொட்டிகளிலும், வேக மாகவும் வெற்றிகரமாகவும், கேட்போர் உள்ளத்தைத் தொடத்தக்க விதத்திலும் நடைபெற்றுக்கொண்டு வருவதுதான், உண்மையில், இந்தியப் பேரரசு எனும் ஆதிக்கத்தின் சல்வேரினை அரித்துக்கொண்டு வருகிறது என்பது, அவர்களுக்குப் புரிகிறது. எனவே கவலை குடைகிறது.

கழகத்திலே அவ்வப்போது ஏற்பட்டுவிடும் “நலிவுகள்’ - கழகத்தின்”தேர்தல்’ வேலையை வேண்டுமானால் ஓர் அளவுக்குப் பாதிக்குமேயன்றி, கழகம் மேற்கொண்டுள்ள, நாட்டு விடுதலைக்கு மக்களைப் பக்குவப்படுத்தும், காரியத்தைக் கெடுக்காது, தடுக்காது என்பதை, யூகமுள்ள காங்கிரஸ் தலைவர்கள் அறிந்து கொண்டுள்ளனர். இதனை நம்மிலே “பிளவு’ ஏற்பட்டபோது, ஊர்

கூட்டிக் கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்த ஏடுகளே உணர்ந்து,"எதிர்பார்த்தபடி, தி. மு. கழகம் வலிவு இழக்கவில்லை; வேலை நிற்கவில்லை; விறுவிறுப்பாகத்தான் பணியாற்றுகிறது'' என்று இப்போது எழுதிவிட்டன.

இந்தக் கழகத்தை யார் பொருட்படுத்துகிறார்கள்? இதனுடைய வறட்டுக் கூச்சலுக்கு எவர் செவிகொடுப்பார்கள்? என்றெல்லாம் பேசிய நிலை போயேவிட்டது! என்ன செய்து, இதை ஒழிப்பது என்று கலந்துபேசும் கட்டம் வந்துவிட்டது.

இந்தக் கழகத்தை இனி யார் சீந்துவார்கள்? இதிலிருந்த வீரரும் தீரரும் விவேகியும் போய்விட்டார்கள் வெளியே! இனி இது இளைத்து ஈளைகட்டி இருமிச் சாகப்போகிறது என்று மேடைகளிலே காங்கிரசார் பேசிக்கொண்டிருக்கும் நிலை கண்டோம்.

ஆனால், முதலமைச்சர்கள் முகாம் அமைத்துத் திட்டம் தீட்டுகிறார்கள், தி. மு. கழகத்தை ஒழிக்க!

அடுத்து வர இருக்கும் தேர்தலில் வெற்றி பெரிய அளவு கிடைத்து ஏற்படும் மகிழ்ச்சியைவிட, தம்பி! எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியை இந்தச் சேதி தருகிறது!

நாம் கவனிக்கப்பட்டாகிவிட்டோம்! குறி வைத்து விட்டார்கள்! பட்டபாடு வீண்போகவில்லை! பாரெல்லாம், நமது கழகம் பற்றியும் இலட்சியம் குறித்தும் அறிந்து கொள்ளத்தக்க நிலையை நோக்கி நடைபோடுகிறோம்! - என்ற எண்ணம், என்னைத் தம்பி! என்னென்னவோ இன்ப நினைவுகளைக் கொள்ளச் செய்தது. பாதி இராத்திரி வேளையில், தடதடவெனத் தெருக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்பது போலவும், திறந்த உடனே கரங்களைப்

போலீஸ் அதிகாரி பற்றி இழுப்பது போலவும், வெளியே தயாராக நிற்கும் வண்டியில் ஏற்றுவது போலவும், வழி நெடுக இதுபோன்ற வண்டிகள் நடமாடுவது போலவும், திராவிடரில் ஒரு பகுதியினர் சிறையில் என்னோடு இருப்பதுபோலவும், இப்படி எல்லாம், காட்சிகள்!!

முதலமைச்சர்கள் மாநாட்டைத் தொடர்ந்து நடவடிக்கை களைத் துரிதப்படுத்துவார்களானால், தம்பி! என்னென்ன நடைபெறக்கூடும் என்று எண்ணிப் பார்த்தனையா? பொலிவு மிக்க முகத்தினராய், வலிவு மிக்க குரலில், திராவிட நாடு திராவிடருக்கே என்று முழக்கம் எழுப்புகிறார்களே நமது தோழர்கள், பட்டி தொட்டிகளிலும், மும்மூன்றாண்டு உள்ளே தள்ளலாம் அதற்கே!!

ஆமாமடா, தம்பி! காட்டுக் கூச்சல்! வறட்டுக்

கூச்சல்! என்றார்களே! அது புதியதோர் குற்றம்!! மூன்று ஆண்டுகள் உள்ளே!! கொடிக்குத் தடை! கூட்டத்துக்குத் தடை! ஏடுகளுக்குத் தடை! இலட்சியத்துக்குத் தடை!! உம்! மளமளவென்று வரக்கூடும் எல்லாம். தேர்தலுக்கு முன்பா, பிறகா என்பதுதான் பிரச்சினை!

திராவிட நாடு திராவிடருக்கே என்று கேட்பது, பிரிவினைப் போக்கு, அது சட்டப்படி குற்றம் - மூன்றாண்டு உள்ளே! - என்ற நிலைமை ஏற்பட்டால், நாட்டிலே, அந்த முழக்கமே எழாது, இயக்கமே இருக்காது என்று "வந்தே மாதரம்' கூறுவது குற்றம் என்று கூறப்பட்டதை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்ட, காங்கிரசார் நம்புகின்றனர். ஏன், தம்பி! நம்மைக் கோழைகள், கொள்கையிலே வலிவற்றவர்! குடும்பம் பெரிது குவலயம் சிறிது என்று கொள்பவர்கள் என்று

எண்ணுகிறார்கள்.

"ஏன் வீணாகச் சிக்கிக் கொள்கிறீர்கள்? இன்னின்னார் இப்படி வரும் என்று அறிந்து, முன்னதாகவே எங்களுக்குத் திராவிட நாடு வேண்டாம்'' என்று சொல்லி, தப்பித்துக் கொண்டார்களே, அதுபோல, நீங்களும் ஓடிவிடுங்கள்; இல்லையேல், உள்ளே தள்ளிவிடுவோம்! - என்று டில்லி தெரிவித்துவிட்டது.

தம்பி என்ன சொல்கிறாய்?

"என்ன சொன்னார் நேரு பண்டிதர் வெள்ளை ஏகாதிபத்தியம், அவரை மிரட்டியபோது'' - என்பதைப் படித்து விட்டுத்தான் இதனை எழுதுகிறேன்.

என்ன செய்தார்கள் விடுதலை கேட்ட, ஜோமோ கெனியாடாவை? எட்டு ஆண்டுகள் சிறை! பிறகு? அந்த எஃகு

உள்ளம் என்றும்போல் இருக்கக்கண்டு, நேற்று, விடுதலை நெய்ரோபி நகரில். பதினாயிரக்கணக்கான ஆப்பிரிக்கர் கூடி ஆடிப்பாடி வரவேற்றனர், கெனியாடாவை! அதைப் படித்து விட்டு அந்த மகிழ்ச்சியிலே இதனை எழுதினேனில்லை.

ஐயர்லாந்து நாட்டு விடுதலைக்காகப் போராடிய மாவிரன் மடிந்தான்; அவனுடைய புதைகுழிக்கருகே நின்று, மற்ற விடுதலை வீரர் பேசினர். அந்தப் பேச்சைப் படித்துவிட்டு இதனை எழுதுகிறேன்.

வாய்ச் சொல்லில் வீரரா? கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, வருவது ஏற்கத் தயாராக இருக்கும், விடுதலை விரும்பிகளா? என்று நாடு கேட்கிறது. காலம் கேட்கிறது தம்பி! என்ன சொல்கிறாய்?

விடுதலைக் கிளர்ச்சியில்

எதிர்பார்க்கவேண்டிய அடக்குமுறை அவிழ்த்துவிடப்படும் வேளை நெருங்கிக்கொண்டிருக்கிறது. தம்பி! என்ன சொல்கிறாய்? முதல் பந்தியா! பிறகா! வேண்டவே வேண்டாமா! பதில் சொல்லிவிடு! மணி அடித்து விட்டார்கள்!!

தேர்தல் முடிந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று பேசுகிறார் காமராஜர்.

தம்பி தேர்தலின் முடிவு, பார்த்து இலட்சியத்தைப்பற்றிய கருத்தினைக் கொண்டவர்களல்ல, நாம்! தேர்தல், நமக்கு ஏற்பட்டுவிடும் பல வேலைகளிலே ஒன்று!! அது முடியட்டும் என்கிறார் காமராஜர் - என்னைப் பொறுத்தவரையில், தேர்தலுக்கு இரண்டாவது இடம்தான் - முதல் இடம் இலட்சியம் என்ன ஆவது என்பதுதான்! அதனைக் காத்திட, கொடிய அடக்கு

முறையையும் தாங்கி நிற்கும் தோழரின் தொகை எவ்வளவு என்பதுதான், எனக்குத் தேவை! மன்னித்து விடு தம்பி! எனக்கு என்று எக்களிப்பில் கூறிவிட்டேன் - நாட்டுக்குத் தேவை.

விடுதலை கேட்கும் எம்மை சிறைக்கு இழுத்துச் செல்லும்போது, அந்தச் சிறையில் - எத்தனை M.P..க்கள் எத்தனை M.L.A.க்கள் இருக்க வேண்டும் என்று உங்களுக்கு ஆசை இருக்கிறதோ, அந்த அளவுக்கு தேர்தலிலே வெற்றி தேடிக் கொடுங்கள். பொட்டிட்டு ஆர்த்தி எடுத்து, போய் வருவாய் களம் நோக்கி! என்று வழி அனுப்பி வைப்பதுபோல, நாட்டு மக்களே! நல்லோர்களே! நீண்டகாலச் சிறை அழைக்கிறது! அங்கிருந்து தூக்கு மேடைக்கும் இழுத்தேகலாம்! உங்கள் ஆதரவைத் தந்து, வழியனுப்பி வையுங்கள்; தேர்தலிலே நீங்கள் தேடித்தரும் வெற்றி,

களம் செல்லும் வீரருக்குத் திலகம் இட்டு அனுப்புவதுபோன்றது என்பதை, தம்பி! இன்றே கூறிவிடு, எதற்கும் தயாராகிவிடு!!

அன்புள்ள

அண்ணாதுரை

20-8-61

48. 9 பட்டப் பகலில். . . ! (1)

பட்டப் பகலில் கண்ட கனவு -
காளையும் கன்னியும்

தம்பி!

இதய மலரே!
இன்பப் பெருக்கே!
முத்தே! முழுநிலவே!
செந்தேனே! என் மானே!

இதுபோலெல்லாம் பண்பாடிடத் தெரியாப் பாவை - கண் உறக்கம் கொண்ட நிலையில் கவிதை தீட்டப்பட்ட மடலெனத் திகழ்கிறாள். தொட்டலின் ஓரத்தில் ஒரு கரம் - மற்றொன்று தரையில்! அவள் ஏழை! இல்லம் இல்லாமையின் இருப்பிடம்; செல்வம் தொட்டிலில்! அந்தச் செல்வத்தைப் பெற்றுப்

பெருமாட்டியாகிட வைத்தவன், கழனி அருகே, காவல் காத்து நிற்கிறான் - களஞ்சியம் போய்ச் சேரவேண்டிய நெல்லை எவரும் களவாடாதிருக்க. அவன் கண்களிலே அறுவடைக்குத் தயாராகி நிற்கும், பயிரா தெரிகிறது! இல்லையே! கதிரின் கனம் தாளமாட்டாமல், சிறிது கீழே தாழ்ந்தபடி பயிர் இருக்கிறது. "இன்னும் இரண்டே மாதம்! பிறகு பாரேன்!'' என்று கனிவு வழிந்திடச் சொன்னபோது, அவன் தோள்மீது துவண்டு வீழ்ந்து,"உங்களுக்கு எப்போதும் கேலிதான்!'' என்று பேசியபடி ஒரு பார்வையைச் செலுத்தினாளே, அந்தப் பாவை அல்லவா தெரிகிறாள்.

அவளோ அயர்ந்து துயிலுகிறாள். ஓடி ஆடி வேலை செய்த அலுப்பு! அலுப்பைக் கவனித்தால், அங்கம் வளர்க்க வேண்டாமா? அதோ தங்கம்! அதற்காக உழைப்பு

- உழைப்பினால் களைப்பு; அயர்ந்து தூங்குகிறாள்; கலாபத்தை மடக்கிக்கொண்டு துயிலும் மயிலனையாள்.

அவன், கழனிப்பக்கம்! தவளைச் சத்தம் காதைக் குடைகிறது. பாம்புகள் சீறுவதுபோன்ற ஒலியும் கேட்கிறது. காற்றினால் அசைந்தாடும் பயிர், கதிர்முற்றிய நிலையில் இருப்பதால், கொஞ்சும் சதங்கை அணிந்தவள் கோலம் காட்டி நடக்கையிலே எழும் ஓசைபோல இசை எழுப்புகிறது.

ஆயிரம் வேலிக்கு அதிபனாம்! மூன்றடுக்கு மாடிவாழ் மன்னனாம்! இருந்தும் என்ன? தானாகச் சென்று, அவரவரைக் கண்டு, நான்தான் நாலூர் மிட்டாதாரன்! என்று கூறிக் கொள்ளத்தானே வேண்டிவரும் - அவனை உலகறியச் செய்திட வல்ல மகவு இல்லையெனில்.

தொட்டிலிலே படுத்துத் துயிலும் தும்பைக்கு இந்த எண்ணம்போலும். என்னைக் காணுங்கள் - என் எழிலைக் காணுங்கள் - என் தந்தை தெரிகிறாரல்லவா! என் அன்னையும் தெரிகிறாரல்லவா!! உலகம் மெச்சும் அவர்கள் வாழ்வது எவரால்? என்னால்! ஆமாம், சின்னஞ்சிறு சிட்டு என்று மட்டுமே எண்ணிக்கொள்ளாதீர்கள். நான் எந்தைக்கு ஏற்றம் கிடைத்திடச் செய்யும், செந்தாமரை! தெரிகிறதா? - என்று பேசிடும் பருவமல்ல! முகப்பொலிவு அதுபோன்றே விளங்குகிறது.

உன்னோடு உறவாட எண்ணியே, ஓங்கி வளர்ந்து வருகிறேன்! தொட்டால் மெய் சிலிர்க்கும் - ஆகவேதான், என் கரங்களை நீட்டியபடி நிற்கிறேன்! வா! வா! என்றும் அழைக்கிறேன் - என்று தென்னை, நிலவை நோக்கிப் பேசிட இயலுமா! கீற்றுகள்

ஆடுவதும் அசைவதும் அதனைத்தான் காட்டுகின்றன.

தொழுவத்தில், தன் கன்றின் முதுகை, நாவினால் நீவியபடி நிற்கிறது பசு! அதன் கழுத்திலே கட்டப்பட்டுள்ள மணியின் ஓசைதான் இசை! அந்தக் கன்றுக்குத்தான் எத்துணை பெருமை! நான் வேண்டுமென்றே ஒரு முறை என் காதை அசைத்தாலும் போதும்; கண்களால் கனிவு காட்டி, என்ன? என்ன? என்று கேட்டாள் என் தாய்; கழுத்தை அசைத்து அசைத்து! - என்று கூறுவதுபோலக் குதித்தாடுகிறது கன்று.

தொட்டிலிலே அரசு செலுத்தும் மகவின் முகத்திலே வந்து வந்து போகும் களையும் விந்தை விந்தையான சேதிகள் எதனை எதனையோ கூறுவதுதான் போலும்!

அந்த அணங்கின் முகத்திலேயும்

அகத்தின் பொலிவு ஒளிவிடுகிறது. புன்னகை இதழிலே! பல்வேறு வகையான புன்னகை! பெருமிதம் காட்டும் வகை! குறும்புணர்ச்சி காட்டும் வகை! கூச்சத்தைக் காட்டும் வகை! இங்ஙனம் பலப்பல! ஆனால், எல்லாவற்றிலும் ஓர் இனிய எழில்!!

எண்ணம் பலப்பலவும், கனவு வடிவம் கொண்டு, காரிகைக்கு துயிலில் விருந்தாகிவிடும் நிலைபோலும்!

அதோ! அதோ! அந்தப் புன்னகைக்கு என்ன பொருளோ? எழுப்பிக் கேட்டிடலாம்! எழுந்ததும், இன்பக் கனவினை ஏன் கலைத்தாய்? முழுதும் நான் கண்டு மகிழ இருந்தேனே! பாதியிலே எனை எழுப்பிப் பாழடித்துவிட்டாயே! தின்னப் பழம் எடுத்துத் தோல் நீக்கி நிற்கையிலே, மந்தி பாய்ந்துவந்து பறித்தோடிச் சென்றிட்ட பழங்கதைபோல்!! என்றெல்லாம் கேட்டு மிக எரிச்சலும்

காட்டுவளோ! ஏன் எழுப்பி அவள் மகிழ்வைப் போக்குவது; வேண்டாம்! என்று தோன்றும்.

இதழோரம் எழில் கூட்டும் அந்தப் புன்னகையில், ஏதோ ஒரு நினைவால் வந்துற்ற கூச்சமது நிச்சயமாய்த் தெரிகிறது. உண்மை, கூச்சம் எதன் பொருட்டு? குடத்தை இடுப்பேற்றி, குளிர்மதியைக் கண்ணேற்றி, மலருக்கு மணமூட்ட, கூந்தலிலே தானேற்றி, மையுண்ட கண்ணாள், மையலூட்டும் பருவத்தாள், வானகத்தினும் வையகமே சிறந்ததென வாயால் மொழியாமல், கண் வழியாய்க் காட்டிடும் காளையர் நெஞ்சினிலே கனலேற்றி நடக்கின்றாள்; புனல்கொண்டு வருவாளாம்! புன்னை பூத்திருக்கும் பொன்னில் மணமிருக்கும் என்றே புலவோர் கூறிடவே, மலர்க்குவியல் ஆங்கிருக்கும்! அன்னம் தவழ்ந்தாடும்! அணிகள் குதித்தோடும்! வண்ணம் பல

கொண்ட வண்டுகள் இசை பயிலும்! கோலேந்தும் மன்னனது கூடம்தனில் வீரர் வந்தமர்ந்து வாழ்த்தொலிக்கும் வேளையிலே, வந்து நின்று! அவையோரின் அஞ்சலிதனை ஏற்கும் அரசகுலம் இவள் காணீர் எனும் விதமாய் வருகின்றாள்.

நாளைக்கு இருவேளை காளையைக் குளிப்பாட்டிப் பாதுகாத்திடச் சொன்னார் பரிவுமிகு என் தந்தை! அதற்கே நான் வந்தேன்! என்று கூறுகின்றான்; இவனை யார் கேட்டார்கள்? மலர்நாடி வந்திடும் வண்டினை எவர் கேட்பர்? கூறுகின்றான் குமரன், வேறேதும் அறியானாம்! வேல் விழியைக் காணானாம்! கழுத்தைக் காலென்றும், காதினை கண்ணென்றும் தவறாக எண்ணியன்றோ, தன் வேலை செய்கின்றான்! காளையும் வாய்விட்டுச் சிரித்துக் கேலி செய்யும் இவன் போக்கை

அறிந்ததனால்!

நெற்றியிலே பூத்திட்ட முத்துக்களைத் தரைமீது, தையல் வீசுகிறாள். இவனுக்குத்தான் அதனால் எத்தனை தவிப்பு!! கல்லோ அவர் மனமும், கன்னிக்குக் கடினமிகு வேலை பல தந்திட்டார்! மலருக்கு அனல் காற்று! ஆகுமோ? கருகாதோ! மானை ஏர்தனில் பூட்டி, மதியலியும் உழுதிடானே! மங்கை இவள் வியர்வை மண்ணில் விழும் அளவு, பாடுபடச் செய்கின்றார்; பாவிகள்; பெற்றோராம்!! - என்றெல்லாம் கேட்டிடத்தான் துடிக்கின்றான்; அவன் நினைப்பை, கண்ணோரம் தன்னால் கண்ட அவள், "களுக்'கெனச் சிரித்திடாமல், அடக்கிக் கொண்டதுதான் விந்தை!

"மாடோட்டி வந்தவனே! மன்னாரின் மகன்தானே! சின்னான், உன் பேர்! - ஆமாம் சிலம்பத்தில் வல்லவனாம்; சொன்னார்கள்

பல பேர்கள்! வயலூர் தோப்பினிலே, வகையான பலனாமே! ஆயிரத்துக்கு மேலே இலாபமாம் இவ்வாண்டு; உண்மைதானே! கால்காசும் செலவழிக்காக் கஞ்சன் மகன் என்றாலும், பசியோடு வந்தவர்க்கு பரிந்து உணவளிப்பாயாம்! பாமாலை தொடுப்பாயாம். பன்னிருகையன் சொன்னான்! ஆமாம் உனக்கு இன்னும், ஆகவில்லையே, மணமும்! அத்தைக்கோ மகள் இல்லை! சொத்தைப் பல்லாம், சொக்கிக்கு! உன் அக்கா மகள்! எவள் வந்து உன் மனையில் எழில்கூட்டி நிற்பாளோ! இனியா பிறக்க வேண்டும்! இருப்பாள் பருவமங்கை! ஏடா! குறுநகையோ? பல்போன கிழவனுக்குப் பாவை கதை தெரிவதுண்டோ என்றெண்ணிப் பரிகாசம் செய்குவாயோ!! பழுத்துள்ள நானும் முன்னம்"பிஞ்சாக' இருந்தவனே! ஆனால், இதனைக் கேள்; அங்கும் இங்கும் அலைந்து

அலர் கிளப்பி வாழ்ந்ததில்லை! ஆரணங்கே வேண்டாம், நான் அடவி செல்வேன் என்று அகடவிகடம் பேசி அடம் செய்தும் இருக்கவில்லை. அவளா? இவளா? என்று எடைபோட்டுப் பார்த்ததுண்டு! மனதில் இடம் பிடித்த மங்கையிடம் பணிந்துவிட்டேன்! மலர்த்தோட்டமாகியது மண்குடிசை, அவள் கால்பட்டு! இருக்கும் நாற்பதாண்டுக்கும் மேலாக! இலுப்பைத் தோப்பாக இருந்தது, இன்றுள்ள மணிக்கூண்டு! ஏலப்பப் பிள்ளை வீட்டில் ஏது மோட்டாரெல்லாம் அப்போது! சின்ன மாடி வீடு! சத்திரம் கட்டியதில், சரியாகத் தட்டிவிட்டார்! பழைய கதை அதெல்லாம்! ஆமாம்! ஆனால் அன்றுபோலத்தான் இன்றும், ஊரணியில் வருகிறார்கள், உறவு முறை பெறுகிறார்கள்! உன்மத்தனாடா நீ! ஒரு நாழிகைப் பொழுது ஓயாமல் நான் பேசி நிற்க, பதிலேதும் கூறாமல், காளை

உடலை, கல்லென்று எண்ணிக்கொண்டு, தேய்த்தபடி இருக்கிறாயே! வாய்விட்டா அது சொல்லும். போதுமய்யா தேய்ப்பு என்று! வாயுள்ளதுகளெல்லாம், கண்ணால் பேசிடும் காலமல்லவோ இதுவும்! வருகிறேன், உன் வீடு! இரவு, எட்டுக்கு மேலாக! பார்! பார்! மன்னார், நான் கூறப்போவது கேட்டு, உனைப் படுத்தப்போகும் பாடு! ஊர்கூட்டி உனை நிறுத்தி வாழத் தெரியாதான், வகையில்லான் என் மகனும்! வழிகாட்டும் விளக்கு வேண்டும், இல்லையேல் வழுக்கிடுவான்! திருவிளக்கு இது காணீர்! திருவினரே! வாழ்த்துவீரே! என்று மன்றமுள்ளோர் எல்லோர்க்கும் மகிழ்ச்சி பொங்கப் பொங்கக் கூறி, உனை மனையறம் பயிலும் வேலை ஏற்றிடச் சொல்வான், பார்! பார்! - என்றெல்லாம் முதியவர் மொழிகிறார், அவளும் கேட்க! ஆயிரத்தெட்டுப் பேர்க்கு,

அவர் மணம் முடித்ததுண்டு! ஏடெடுத்தால், பார்வை மங்கியது விளங்கும் அவர்க்கு! மடுவும் மாந்தோப்பும், ஊருணிக் கரையும் உச்சி மாகாளிக் கோயிலும், "சந்திப்பு' இடமாகும், சேதி காதில் வீழ்ந்திட்டால் போதும்; செல்வார்; கண்ணொளி நிரம்பி நிற்கும்; காட்சியும் காண்பார்; மனதில் உள்ள கருத்தையும் காண்பார் இந்தப் பொல்லாத புலவன்! அவர்தான், இந்தப் புறநானூற்றுக்கேற்ற புனலோரம் காணுகின்றார் அகநானூற்றிலொன்று மகிழ்கின்றார்.

கேட்டது போதும், இஃதே இன்றெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடத்தக்கது. ஆமாம்! தாயும், என்னவோ, ஏதோ வென்று ஏங்குவாள் நேரம் சென்றால்! இவர்கட்கு என்ன வேலை! திருக்குறள்தனையே வள்ளுவர் செய்துமே அளிக்காவிட்டால்; ஒவ்வொரு

குறளில் காணும் ஒவ்வொரு கருத்திற்கும், பாரதம் பாடிக் காலம் பாழ்படச் செய்வார், ஓயாப் பேச்சிலே வல்லவர்கள்! செல்வோம் வீடு! புன்னைக்கு அருகிலேயே புது வீடு கட்டிக்கொண்டு, இருந்துவிடுவதுதானே, ஏனம்மா இங்கு வந்தாய்? என்றெல்லாம், அம்மா பேசி, எனைத் தலைகுனிய வைப்பாள்! என்னவோ எண்ணிவிட்டாள், என்னைக் குறித்துமேதான்! இவர் என்ன எனைக் காணத்தானா, இங்கு வந்தார்? எவர் சொன்னார்? எவரெவர் வருகிறார்கள் என்பதை அறிந்திடவோ நான் உள்ளேன்! ஏன் வீண்வேலை! "ஏனய்யா எனையே நோக்கி நிற்கிறீர்?'' என்றா கேட்டேன்; பார்த்திடுவாரை எல்லாம் காரணம் கேட்க நானும், பைத்தியமா! காளையைக் காண்பேன், சிலவேளை! தொழுவத்தில கட்டும்போதும், முட்டுமோ அவரை என்று

எண்ணுவதுண்டு! துளியும் அவர்மீது நினைவு அல்ல; காளைமீதே! இதனைக் கண்ட எவரோ சென்று, எதையோ கூறி என் அன்னை மனதில் ஐயம் ஏற்றிவிட்டார்; தெரிந்துகொண்டேன். இனி என்ன இங்கு வேலை! எதிர்வீட்டுப் பாட்டி வந்தால்,"என்னடி குட்டி, எமக்கும் இருக்கட்டும் கொஞ்சம் தண்ணீர்! எல்லாவற்றையும் நீயே எடுத்துச் சென்றிடாதே! போதும்; வீடு, போ! போ!'' என்று பேசிப் பொக்கை வாயால் பொய்க்கோபம் காட்டுவாளே! அவள், இவர் மண்பிசையும் குழவியாக இருந்தபோது, இடுப்பினில் தூக்கி வைத்து, "என் அரசே, தங்கக்கட்டி! எவர் நிகரே சிங்கக் குட்டி!'' என்றெல்லாம் பாட்டுப்பாடிக் கொஞ்சுவது உண்டாம்! சொன்னார்! சின்ன வயதிலே கெக்கச் செவேலென இருப்பாராம், பாவம் வேலை; மேனி செப்பாகிப் போனநிலை! அது சரி! நமக்கென்ன அதுபற்றிய கவலை!

யாருக்கு அவர் சொந்தம் ஆவாரோ, யார் கண்டார்கள்! - என்றெல்லாம் மனதிலெண்ணி மங்கை நடக்கின்றாள், குடம் குலுங்க; பாதிதான் நீர் - முழுவதும் நீர் நிரம்ப மறந்தனள்; அதற்கா வந்தாள்?

"பேரென்ன'' -"அழகி'' "பேரழகி'"மயிலேதான்'' "அடக்கம்'"அன்னை?'' "சொர்ணம்'"அப்படிச் சொல்லு! தாயேதான் மகள்! தங்கத்தாலான சிலை!''

போவோர் வருவோரெல்லாம் பேசுகின்றார், இம்முறையில், இவளைக் கண்டு.

"தாயேதான் மகள்! தங்கத்தாலான சிலை!'' - என்ற பேச்சுக் கேட்டுத்தான், இதழோரம் புன்னகை கொண்டாள். இளமங்கை, துயிலுகையில். பதினெட்டு ஆண்டுகட்குப்

பிறகு பாவையாகிப் பெற்ற பெருமாட்டியினை, மகிழவைப்பாள். இதுபோது மகவாக உள்ள செல்வி! இதற்குள் அன்னைக்கு, புன்னைமரம், காளையின் கனவு, முதியவர் பேச்சு, எல்லாம்! கனவில்!! தாயைப்போல மகள்!! தங்கத்தாலான சிலை! என்று ஊரார் பேசுவது, உதட்டோரம் சிரிப்பளித்து, இனிப்பளித்து நிற்கிறது. கரும்பறியாச் சுவைதானும், கலந்திருப்பதுபோல, நினைப்பில் இனிப்பேற்றும் நிலைபெறப் போவதனை அறியாது குழந்தை, அழகு துயில்கொள்கிறது.

பதினெட்டு ஆண்டுகளைக் கடக்கவேண்டும், செல்வி பாவையாகிக் குறுநகைக் குமரனின் மனமதை வென்று, அவன், பைந்தமிழ்ப் பாடலின் பொருட்சுவை யூட்டிடும் புலவரின் பேச்சிலே கிடைத்திடும் இனிமையை நுகர்ந்திருந்த நிலைமாறி,

“கண்டுபோல் மொழி! வண்டுசேர் குழல்! கண்களோ சேல்! மதி, முகம்! வேய், தோள்! என்றெல்லாம் அவளைப்பற்றி நெஞ்சு நெகிழப் பேசவும், அவன் ஆடல் பாடல் கூடம் மறந்து, அடலேறன்ன தோழர்கள் போர்முறை பயிலும் இடத்தை மறந்து, பழமுதிர் சோலை நோக்கிப் பறந்திடும் புள்ளேபோன்றும், நீர்நிலை நாடிச்செல்லும் புள்ளி மானினமேபோன்றும் சேல்விழி மாது செல்லும் ஊருணிப்பக்கம் சென்று, உலவிடும் போக்குக் கண்டோர், மலரணிக் கொண்டைச் சொருக்கிலே, மதுநிறை அவள்மொழிச் செருக்கிலே, நிலவெறி அங்கக் குலுக்கிலே, மனமது அழிந்த நிலையிலே மையல்கொண்டு அலைகிறான் விணிலே, தொழிலையும் இழப்பன் சின்னாளிலே’ என்று கடிந்துரைத்திடக் கேட்டு,”காதலின் மேன்மைதனை உணர்ந்திடா மனத்தினார்,

கடுமொழி பேசுகின்றார்! விழிவலை வீழ்ந்தே னென்று வீணுக்கு ஏசுகின்றார்! இவர் எனை அறியமாட்டார்; என்நிலை காணமாட்டார்! கதிரொளி பட்டதாலே தாமரை இதழ் விரித்திடும், அந்த இயல்பினைக் கரையும் காக்கை அறியுமோ, கூறீர் ஐயா! புள்ளினம் இசையைத் தானே எழுப்பிடும் போதில், ஆங்கு செவிப்புலன் கெட்டோன், என்ன செப்புவான், அறியோமா நாம்! பறை ஒலி மிகுந்தபோது, பண்ணொ- படுமோ காதில்! அடுப்பினில் ஏற்றியுள்ள பானையில் கொதியும் ஏறித், தளதளவென்றே சத்தம் கேட்டிடும் போது பித்தன், பானைக்கு என்ன நோயோ? பாவம் அழுகிறதே என்பான்; பானையுள் பாற்சோறு தானும் காணான்! அதுபோல, நீர்கொண்டு செல்லவந்தாள், என் நெஞ்சமே கொண்டு சென்றாள்! குளித்திட நானும் வந்தேன், நீரிலே நெருப்பே கண்டேன்!

மறுப்பவர், உண்டு, ஆமாம்; மனதைப் பறிகொடுத் திடாதே என்று மதியுரைப்போரும் உண்டு. அன்னார் மறக்கின்றார் ஓர் உண்மைதன்னை! கண்ணொடு கண்ணுமேதான் கலந்திட்டதாலே, காதல் அரும்பிற்று, மலராயிற்று, அறிந்திட இயலாதார்கள், அறிவுரை என்று எண்ணி அனல்வாரி வீசுகின்றார், சுடுவது நெருப்பு, ஆமாம், எனினும் மனமது உலையே ஆகி தழ-ங்கு ஓங்கும்போது, இவர் தரும் சுடுசொல் தானும் என் செய்யும்; ஏன் இதை அறியவில்லை; ஊருணிக் கரையோ, அன்றி ஊர்க்கோடித் தோப்போ, எங்கோ முன்னம் எப்போதேனும் ஓர்நாள், இவர்கள் முறுவல் காட்டி நின்றவ ரல்லரோ? அவர்க்கு அன்று இருந்ததேபோல், எனக்கின்று இலையே என்று ஏன் இவர் எண்ணிடாமல், ஏதேதோ பேசுகின்றார்! எங்கு இவர்க்குப் பதிலைத்

தேடி, வீசிடுவதற்கோ, நேரம்? என் மனம் கொள்ளைகொண்ட ஏந்திழை நடக்கும் பாதை இப்படி முள்ளும் கல்லும் நிரம்பி இருந்திடலாமோ? என்பதை எண்ணி எண்ணி ஏக்கமே கொண்டேன், நானும் என்ன நலமா? என்று கேட்கிறார், கேலியாக!! துளையில்லாக் கம்புதானும், குழலது ஆகாதன்றோ? நாணிலா வில்லால், என்ன காரியம் ஆகும், கூறீர்! திரியிலா விளக்கேபோலும், திருஇலா உருவம் போலும், பொன்னிலாப் பேழைபோலும் இருக்கின்றார்; வாழ்கின்றாராம்!! உண்பதும் உறங்குவதும், உற்றதோர் வேலைகள்தாம்! ஆயினும், வேறு இன்றி, இதனையே தொடர்ந்து செய்யும் பேதையர் தம்மைப் பெருமைக்குரியவர் என்றா சொல்வர்; பாவையைப் பெற்ற பின்னர், கடுகாகும் மலைகள் தாமும்! பட்டது விட்டுத்தள்ளு! என்றிவர் கூறிடக் கேட்டேன்

நானும். பட்டது துளிர்த்ததென்று பேசுவர், புதுப்பாங்கு கண்டு, தொழிலிலே வெற்றி காண்பேன், தோகையாள் துணையைக் கொண்டு - என்றவன் எண்ணமிட்டபடி, புன்னை மரமிருக்கும் ஊருணிப் பக்கமதில் உலவுவான்! பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு!

இளமாதோ, இப்போதே காண்கின்றாள், அந்த இன்பச் சூழ்நிலையை; விழியும் திறந்தில்லை; விந்தை இஃதன்றோ!

விந்தை அல்ல! மனதிலே கொள்ளை ஆசை, மாதாகிப் போனவட்கு! மதலை மங்கையாவாள், மங்கையின் செங்கை களுக்கு, வளைகளையிட்டும் வாரியே அணைத்துக்கொண்டும், வாழ்வினை அளிக்கவல்லான், வருவான் உரியபோதில்; எங்கு இவர் சந்திப்பார்கள்? என்னென்ன பேசுவார்கள்? என்றெல்லாம் எண்ணும்

உள்ளம்; இயற்கைதான், வியப்பென்ன இதிலே!

மதலைகள் குதலைபேசி, மாமனை மாடு ஆக்கி, மனைகளில் ஆடிப்பாடி, பின்னர் மங்கையராகி, மணவாளர் தம்மைக் கொண்டு, மலர்ந்திடும் முல்லைதானும், மணம் பரப்பிடுதல் போல, இல்லறம் தன்னில் நறுமணம் கமழ வாழ்ந்திடும் நிலையைக் கண்டாள்; தன் மகவு படுத்துறங்கும், தொட்டலின் பக்கம் கீழே படுத்துறங்கிடும் போதினிலே. கண்ட காட்சியால் கொண்ட எண்ணங்கள், கனவெனும் உருவம் தன்னில் உறவாடக் காணுகின்றாள்; வியப்பென்ன? வினாக்கள் ஏன்? அன்னைக்கு உண்டன்றோ, ஆசை மகவு என்னென்னவிதமான ஏற்றம் பெறவேண்டுமென்ற நெஞ்சைத் தித்திக்க வைக்கும் நினைப்புகள் பற்பலவும்.

கனவென்று அதனைத் தள்ளிக்

கருத்தறியாது போயின், கனிமீது தோல்கண்டு, சுவை ஏது என்றெண்ணி, சுவை காணும் வாய்ப்பிழக்கும் போக்கினர் போலாவர்.

அன்னை காணும் கனவு, தன் மகவுக்கான எதிர்காலம் எங்ஙனம் இருத்தல்வேண்டுமென்று திட்டமிடுவதின் விளைவு! கனவு கனவாகவே இருந்துவிடும் என்றெண்ணும் போக்கினர், பேதையர்! பேரறிவாளர் கண்ட கனவெல்லாம் நனவாகி, மாநிலத்தவர்க்கு இன்று மகிழ்வளிக்கக் காண்கின்றோம். எண்ணெய் திரியிட்டு ஏற்றிவைத்த விளக்கிருக்க, இந்த விளக்கைவிட ஒளிமிகுந்த நிலைபெற்று, எண்ணெய் திரியுமின்றி, எரியாதோ ஓர் விளக்கு, என்றெண்ணிக் கிடந்தவனை, இளித்தவாயன் என்றார், ஏனிந்தக் கனிவு என்றார் - ஆயினும் அதுபோன்ற

கனவுகளால், அகிலம் பெற்ற பேறு அளவிட்டுக் கூறப்போமோ!

பெற்றோம் ஒரு மகவு - கிடத்தினோம் தொட்டிலிலே! யாருக்கு யார் உறவு? எத்தனை நாள் இவ்வுறவு! தூங்கி விழிக்கையிலே, துவண்டிடலாம். இச் சிசுவும் தொட்டில் கயிறறுந்து, பொத்தென்று கீழே விழுந்து, ஆவி பிரிந்திடலாம், படுத்துறங்கும் குழவிக்கு மாந்தம் கண்டிடலாம், மார்ச்சளி பிடித்திடலாம்; தத்தி நடக்கையிலே கொத்திடலாம் ஓர் பாம்பு! யார் கண்டார், என்னென்ன ஆபத்து வருமென்று! சின்னஞ்சிறு விழிகள், வண்டுகளாய் உள்ளன! நன்று நன்றென்று நாலுபேர் கூறுகின்றார். அம்மை நோய் வந்தால், அழகான இக் கண்கள், "பூ' விழுந்துபோனாலும் போய்விடலாம்; யார் கண்டார்! மாடு முட்டிடலாம், வெறிநாய் கடித்திடலாம்; அப்பன் வெறிபிடித்து அடித்து

உடலை வாட்டிடலாம்! அத்தனைக்கும் தப்பி, ஆரணங்காய் வளர்ந்தாலும், உற்ற துணை கிடைக்காமல், உதைப்போனுக்கு வாழ்க்கைப்பட்டு அழுது கிடப்பாளோ, கிணற்றில் வீழ்வாளோ, என்னென்ன விபத்துகளில் இவள் சிக்கிக்கொள்வாளோ? என்னாகுமோ, இவளின் எதிர்காலம்! யாரறிவார்! - என்றெல்லாம் தாய் எண்ண, பேயுள்ளம் இருக்க வேண்டும்.

தாயுள்ளம் இருந்திடுமோர் பாங்கினையே, கூறிவந்தேன்; தாய் வயிற்றிலுதித்தோர், எவருமே மறுத்திடார்கள்!

ஈன்றெடுத்த மகவினுக்கு எதிர்காலம் இருந்திடவேண்டும் விதம், யாது என்று எண்ணமிட்டாள், அஃதே கனவு; அஃது கனவாகிப் போய்விடாது; காண்பாள், பெற்ற மகளின் பருவம் வளர்ந்த நிலை! ”வண்ணக் கிளியே வா! வா! கன்னல் தமிழே வா! வா!

முல்லை மொட்டே வா! வா! அல்லி மலரே வா! வா! அந்தி அழகும் நிலவழகும், அணி அழகுள்ள தமிழழகும் ஒன்றாய்த் திரண்டு வந்துள்ள உயிரே, வா! வா!'' என்றெல்லாம் கனிவுடன் கூறிடவும், எதிர்காலம் குறித்துத் திட்டமிடவும், தாய் உள்ளத்தால் முடியும்.

தான் ஈன்றெடுத்த குழந்தைக்கு, பொன்னும் மணியும் பூட்டிப் புது ஆடைகள் அணிவித்துப் பொட்டிட்டுப் பூமுடித்து, போகவரப் பார்த்துப் பூரித்துப் பெருமைப்படுவது தாய் இயல்பு. தொட்டிலிலே துயிலுகின்ற மயில், தோகை விரித்தாடும் நாளை நினைவிலிருத்தி, கருத்தைக் கரும்பாக்கி மகிழ்வதுவும் தாய் இயல்பு. கனவுகள் காண்பதுவும், நினைவாக மாற்றிடும் மனதுடன்தான்; அதனை மறந்திடுதல் கூடாது.

கழனி காத்திடும் கணவன் - தொட்டிலில்

துயிலும் குழவி - படுத்துறங்கும் பெருமாட்டி - இவைகளே, இந்த நேரத்தில், உருவாக, உண்மையாக உள்ளன. அந்த உண்மை நிலையுடன், தாயன்பு (பற்று, பாசம்) இணைந்து பிணைந்து, இழைந்து குழைந்து எண்ணம் பல சுரந்து, இன்பக் கனவாகி, எதிர்காலம் உருவாகிறது.

கழனியில் காவலிருக்கும் கணவனுக்குப் பதில், ஒரு சோளக்கொல்லைப் பொம்மை!

தொட்டிலில் படுத்துறங்கும் குழந்தைக்குப் பதிலாக கூரைமீது வீழ்ந்துகிடக்கும் ஒரு மரப்பாச்சி!

தரையில் படுத்துறங்கும் தையலுக்குப் பதிலாக ஒரு ஓவியம்!

தம்பி! இந்த நிலையிருப்பின், எண்ணமும் இல்லை; எண்ணத்துடன் இணைந்து பிறக்கும் இன்பக் கனவும் இல்லை; அதன்

தொடர்பாகவும், விளைவாகவும் ஏற்படும் எதிர்காலத் திட்டங்களும் இல்லை.

நடைபெறக்கூடியது; நடைபெற இயலும் என்பதை உறுதிப் படுத்தும் விதமான, அடிப்படை நிலை; இந்த அடிப்படை நிலையை வைத்து, என்னென்ன விதமான, ஏற்றமிகு செயல்களை, செம்மைகளை, சீர்களைப் பெறமுடியும் என்பதற்கான எண்ணம் - இவை இருப்பின், எண்ணம் ஈடேற வழி கிடைக்கும்; எத்தனை பேர், ஏளனம் பேசிடினும்.

பருத்திச் செடி கண்டு, துணிபற்றி எண்ணிடலாம்; துணி கிடைக்கும் வழி உண்டு, பருத்தி மூலப் பொருளாக இருப்பதனால்.

வில்வக்காய் கண்டு, நூலாக்கித் தரி அமைத்து நெய்து ஆடைதனைப் பெற்றிடலாம் என்று எண்ணிடுவது பேதமை.

உண்மை நிலையுடன் உயர்வளிக்கும்

கற்பனை கலந்து விட்டால், இன்பக் கனவுகளை, விழித்த நிலையிலும் காண்பர், வித்தகர்கள்.

பட்டப் பகலிலே
பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின்
நிகழ்ச்சி

என்றார் பாரதியார்.

தம்பி! புன்னை மரம் நிற்கும் புனலிடம் சென்ற பூவை, கடிமணம் செய்யும் நோக்குக்கொண்ட காளையைக் கண்டாள் என்று தாய் மனம் கொண்ட எண்ணம், கனவினில் உருவம் பெற்றதுபற்றிக் கூறினேன். அவள் அதனையே, கழனியினின்றும் திரும்பிய தன் கணவனிடம் கூறுவளேல் என்ன சொல்வான்?

காவல் காத்திருந்த அலுப்பின் மிகுதியால், அவன் வாடிக் கிடப்பானேல், "சரி சரி! இதுமட்டுமா, கனவு காண்பாய்! எட்டடுக்கு மாடியிலே, உன் செல்வி இருப்பது போலவும், பத்துப் பதினெட்டுத் தோழியர்கள் அவளைப் புடைசூழ நிற்பது போலவும், தங்கத்தாலான பல்லக்குதனில் ஏறி, நீ அவளைக் காணச் செல்வதுபோலவும்கூடக் கனவு காண்பாய்! கனவுதானே!! காலால் வைரத்தை உதைக்கலாம், கண்ணால்"கைலாய'த்தைக் காணலாம், விதைக்காமலே அறுத்தெடுக்கலாம், விண்ணிலவு வீட்டு விளக்காகக் காணலாம்!'' - என்று கேலி செய்திடக்கூடும்.

அவன் மனமும் உடலும் களைப்பினால் தாக்கப்படாம லிருந்தால், "என்ன? என்ன? சொல்லு? சொல்லு! இன்னொரு முறை சொல்லு! புன்னை மரமா? பெரிய மரமா!

நிறையப் பூவா! நமது செல்வி அங்கு சென்றாளா? குடமெடுத்தா? தங்கக் குடமா!

அவ்வளவு தூரமா நடந்து சென்றாள்! கால் என்ன வலித்திருக்கும். . . . .'' என்று கேட்பான், களிப்புப்பெறுவான், களிப்பூட்டுவான்.

இருவருக்குமே, பிறிதோர் நாள், மனநிலை சரியாக இல்லையெனில்,

கனவுகாண வேண்டியதுதான்! வேறு; என்று சலித்துக் கொள்ளக்கூடும்.

கனவுகண்ட கன்னிபோல, ஒரு இல்லத்துப் பெண் தன்னைச் சிற்றரசன் சிறை எடுத்து, வாயுவேக மனோவேகமான குதிரைமீது அமர்த்திக்கொண்டு, தடுத்திட வந்தவர்களின் தலைகளைக் கொய்துவிட்டுக் கடுகிச் சென்றான் என்று கனவு கண்டு, அப்படிப்பட்ட சிற்றரசன் வரவு நோக்கிக் காத்துக் கிடக்கலாமா? என்று கேட்பார் உளர்.

எனவேதான்! தம்பி! தாய், தன் மகவுபற்றிக் கொண்டிடும் எண்ணம், கனவு வடிவமெடுத்தால், எங்ஙனமிருக்கும் என்பது பற்றிக் கூறினேன். தமது எதிர்காலம், தமது குடும்ப எதிர்காலம், தாம் நடத்தும் தொழிலின் மேம்பாடான எதிர்காலம், இவைபற்றித் தோன்றிடும் ஆசைகள் கனவு வடிவமாகினால், வடிவமாகியதுடன், அது நடைமுறையில் பலித்தும்விட்டால் அதனால் பலன், அந்தக் குடும்பத்துக்கு மட்டுந்தான்.

நாடு பற்றி, சமுதாயத்தைப் பற்றி, நல்லோர்கள் கொள்ளும் எண்ணம், அவர்கள் நாட்டினிடம் சமுதாயத்தினரிடம் கொண்டுள்ள பற்று எத்தகையது என்பதைத்தான் முக்கியமாகக் காட்டிடும்.

நாட்டிலேயும் சமுதாயத்திலேயும், காணக்கிடக்கும், மூண்டுகிடக்கும், சீர்கேடுகள் நலிவுகள் ஆகியவற்றினைக் கண்டு, மனம்

உளையும் நிலைபெற்ற சீலர்கள், அந்தச் சீர்கேடுகள் ஒழிக்கப்பட்டுச், செம்மை ஏற்பட்டு, நாடோ, சமுதாயமோ, நல்ல நிலைமைபெற வேண்டும்; அதற்கு வழிவகை என்ன என்று எண்ணுவர் - பட்டப் பகலிலே தோன்றும் கனவு அது.

அத்தகைய கனவு பலித்துவிடுகிறது. கனவு காண்கிறான் கருத்தற்றவன்! - என்று கூறிடுவர், தம்மை நிறை அறிவு பெற்றவரெனக் கருதிக்கொள்ளும் மண்டைக்கனம் பிடித்தோர்.

கனவு காண்கின்றான்! - என்று பலருடைய எண்ணத்தைக் கேலி பேசினர் - நாடு இன்று அத்தகைய கனவு கண்டவர்களின் கனவு நனவாகி நிற்பதைக் கண்ணுற்று!!

கனவுகளின் தன்மையைவிட, எத்தகைய விதமாகவெல்லாம் கனவு காண்கின்றனர்;

காண இயலும் என்பது குறித்தும், அதனால் கிடைத்த பலன்பற்றியும், அடுத்த கிழமை எழுதுகிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

3-9-61

49. 10 பட்டப் பகலில். . . ! (2)

நினைவு மறத்தல் -
இட்லரின் போர் முறை -
கனவு நனவாதல்

தம்பி!

சென்ற கிழமை, தொட்டிலில் படுத்துத் துயிலும் தன் மகவு குறித்துத் தாய் காணும் கனவுபற்றி எழுதியிருந்தேன்; மேலும் எழுதுவதாகவும் வாக்களித்திருந்தேன்.

உனக்குக் கடிதம் எழுதி முடித்த பிறகு தொடங்கிய சுற்றுப்பயணம், சற்றுக் கடுமையானது, தம்பி! ஆனால், தவிர்க்கவே முடியாத, தவிர்க்கக்கூடாத நிகழ்ச்சிகள்; எனவே, இந்தக் கிழமை உனக்குக் கடிதம் எழுதத் தொடங்கும்போது

உள்ளபடி அலுப்புத்தான் - ஆயினும், அதைப் போக்கிக்கொள்ளக்கூட உன்னுடன் உரையாடுவது மெத்தப் பயன்படும் மாமருந்தல்லவா!!

ஒவ்வொருவருக்கு, அவ்வப்போது ஏற்படும் நினைவுகளே கூடச் சிறிது போதில் கலைந்தும், சிதறியும், சிதைந்தும், குறைந்தும் போய்விடுகிறது, அறிவாய்.

என்னமோ நினைத்தேன் - மறந்துவிட்டேன். . . . என்று பேசுவது கேட்டிருப்பாய். நன்றாகக் கவனப்படுத்திச் சொல்லு - ஒன்றுக்கு மற்றொன்று சொல்லிவிடாதே! நினைவு படுத்திக் கொண்டு சொல்லு - என்று மற்றவர்கள் கூறுவதும் கேட்டிருப்பாய்.

நேற்று நடந்தது, இன்று அவனுக்கு நினைவிலிருக்காதே! அவ்வளவு தெளிவு!! - என்றும்,

அவனுக்கு அதெல்லாமா நினைவிலே இருக்கும் - பெரிய ஆள் அல்லவா - எத்தனையோ வேலை - இந்தச் சாதாரண விஷயமா நினைவிலே இருக்கும் - என்றும்,

உனக்கு எங்கே அப்பா, இதெல்லாம் இப்போது நினைவிலே இருக்கப்போகிறது - காலம் மாறிவிட்டதல்லவா, உன் நிலையும் மாறிவிட்டது, நினைப்பும் மாறிவிட்டது - என்றும்,

கேலியாகவும், கோபத்துடனும், இடித்துரைக்கும் போக்கிலும் ஒருவரைப்பற்றி அவருடன் தொடர்புகொண்ட மற்றவர் பேசுவது கேட்டிருப்பாய்.

நினைவு என்பதே பல்வேறு காரணங்களாலே கலைந்தும், குலைந்தும், சிதைந்தும் சிதறியும் போவதுண்டு.

அப்பாவித்தனம், அகம்பாவம்,

தொல்லைகள், நிலைமையில் மாற்றம், இவைபோன்ற காரணங்களால் நினைவு மாறி விடுவதுண்டு.

சிலர், வேண்டுமென்றே, நினைவு இல்லாததுபோல, நடிப்பதுண்டு - தமது வசதிக்காக!

சிலர், எதிலேயும், தாம் பற்றற்றவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளவேண்டியேகூட, எதுவும் தமது நினைவிலே தங்குவது இல்லை என்று கூறி, அப்படிக் கூறிக்கொள்வதிலேயும் பெருமை இருப்பதாக எண்ணிக்கொள்வதுண்டு.

தலையைச் சொரிந்துகொள்வது - நெற்றியைத் தடவிக் கொள்வது - புருவத்தை நெரித்துக்கொள்வது - இப்படி எல்லாம், செய்வர், நினைவிலே இருந்து கலைந்துவிட்ட எண்ணத்தை மீண்டும் தேடிக் கண்டுபிடித்துக்

கொண்டுவர!

ஒருநாள், மரப்பொந்து ஒன்றிலே குடியிருந்து வந்த சிறு பறவையின் குஞ்சு, கீழே தவறி வீழ்ந்துவிட்டது; பல ஆண்டு களுக்கு முன்பு என் கரத்தில் சிக்கிற்று. கொள்ளை ஆசை எனக்கு, அதனை வளர்க்க வேண்டும் என்று என்னதான் ஆசையுடன் நான் இருப்பினும், அதன் தாயன்பு அதற்கு என்னிடம் கிடைக்குமா? கிடைக்காது! கிடைக்காது! உன்னால் முடியாது! நீ, பழம் தருவாய், பால் ஊற்றித் தருவாய்! வேளையறியாமல், என் விருப்பம் தெரியாமல்! ஆனால், என் தாயின் அரவணைப்பிலே எனக்குக் கிடைக்கும் "கதகதப்பு' இருக்கிறதே, அது அல்லவா, எனக்குப் பேரின்பம் ஊட்டி வளர்க்கிறது! உன்னிடம் ஏது, அந்தக்"கதகதப்பு' அளிக்கும் வல்லமை! நீயோ, மனித இனம் - வேட்டைக்கார ஜாதி!

நானோ, பறவை இனம் - உன் பிடியில் சிக்காமல், தயவு நாடாமல், வானத்தில் வட்டமிடும், வானம்பாடி! என்னை விட்டுவிடு! என் இச்சையாக நான் சிறகடித்துப் பறந்திடுவேன் - சிந்துகளும் பாடிடுவேன்! தொலைவிலே இருந்து கேட்டு இன்பம் பெறு - அதற்காக எனக்கொன்றும் தர வேண்டாம்!! தாயன்பு பெறுவதைத் தடுத்திடாதே, விட்டுவிடு! - என்றெல்லாம், பேசுவதுபோலக் குருவிக்குஞ்சு கிறீச்சிடுகிறது - அதனாலேயே அலுத்தும் போகிறது; தன் வலிவற்ற மூக்கினால் என் விரலைக் கொத்துகிறது; வலி தாளமாட்டாமல் துவண்டுபோகிறது!

தம்பி! இந்த நிலையில், வேறு மரம் சென்றிருந்த தாய்ப்பறவை வந்தது; சரேலெனப் பொந்து நுழைந்தது; அடுத்த கணம், கிறீச்சிட்டபடி வெளியே வந்தது, கிளையின் அருகே சுற்றிச் சுற்றி வட்டமிட்டது;

இங்கும் அங்கும் தேடுகிறது, பாடும் பறவை! மீண்டும் கூட்டுக்குள் போய்ப் பார்க்கிறது, வெளியே வருகிறது, வேதனையும் கோபமும் கலந்த குரலில் கூவுகிறது.

நாடகம் தீட்டுவோர், சேயினைக் காணாது தவிக்கும் தாய், என்னென்ன விதமாகத் தத்தளிப்பாள், ஏதேது கூறிக் கதறுவாள், என்னென்ன விதமாகக் கூவி அழைப்பாள், எங்கெங்கு தேடிடுவாள், எவரெவரைக் கேட்டிடுவாள் என்பதுபற்றி அழகுறத் தீட்டுவர் - பார்த்திருக்கிறோம் - இந்தப் பாடும் பறவையின் பரதவிப்பினை, எத்துணை திறம் படைத்த நூலாசிரியராலும் அப்படியே சித்தரித்தளிக்க முடியாது. கண்டால் மட்டுமே விளங்கும். கூறக் கேட்கும்போது, மிகைப்படச் சொல்வதாகக் கூடத் தோன்றும்.

தம்பி! எனக்குச் சிறிதளவு அச்சமேகூட ஏற்பட்டுவிட்டது போயேன்! அந்தக் குருவி, என்

உள்ளங் கையில், தன் இன்பம், சிறைபட்டு இருப்பது அறிந்து, எங்கே என் கண்களைக் கொத்திவிடுகிறதோ என்று பயந்தேன்.

மற்றொன்று கேள், தம்பி! பறக்கக்கூடத் தெரியாத அந்தக் குஞ்சு, என் பரிவு, பச்சாதாப உணர்ச்சியினைப் பெற்ற அந்தக் குருவிக்குஞ்சு, தாய்க்குருவியின் குரல் கேட்டு, அச்சத்தையும் அலுப்பினையும் மறந்து குரல் கொடுக்கிறது!! ஆமாம், தம்பி! தன்னைத் தாய் தேடுகிறாள் என்பதறிந்து, "இதோ! இதோ இருக்கிறேன்! இவனிடம் சிறைபட்டுக் கிடக்கிறேன்!'' என்று தெரிவிக்கிறது.

விட்டுவிட்டு, மாறிமாறி இரு குரல்கள்! பாசத்துடன் தேடும் பாடும் பறவையின் அழைப்புக் குரல்!! பரிவுடன் பதில் அளிக்கும் குரல்!!

கோபந்தான் எனக்கு - ஒரு சின்னஞ்சிறு

குருவி, மரப்பொந்து வாழும் தாய்க் குருவிக்காக, இத்தனை கத்துக் கத்துவதா!! நம்மை அவ்வளவு துச்சமாக மதிக்கிறது! - என்று எண்ணினேன். உள்ளங்கையிலிருந்து அதனை விடுத்தேன் - தத்தித்தத்தி நடந்தது - தாய்க் குருவி கண்டுவிட்டது - தம்பி! நல்ல இசை நிகழ்ச்சியின்போது, பக்க வாத்தியக்காரர்களின் "வாசிப்பை'க் கேட்டிருக்கிறாயல்லவா? இவரா? அவரா? மிருதங்கமா? கஞ்சிராவா? எவருடைய வாசிப்பிலே, நயமும் லயமும், மிடுக்கும், எடுப்பும் மிகுந்து காணப்படுகிறது என்று மன்றத்துள்ளோர், வியந்து எண்ணியபடி இருப்பர்! இறுதிக் கட்டத்தில், இருவரும் ஒன்றாக இணைந்துவிடுவர். ஒலிகள் இழைந்துவிடும், இனிமை மிகுந்துவிடும்! அதேபோல, இங்கு, தாய்க் குருவியின் குரல், குஞ்சு எழுப்பும் குரலோசை, நிந்தி

நிந்தி நிந்நின்னி, தத்தததத்த இந்த ஒலிகளின் இனிமைபோல, இரு குரலிசை, மாறிமாறி, விட்டுவிட்டுப் பிறகு இணைந்து, இழைந்து ஒரே இனிமையாகிவிட்ட நிலை; அழைத்துக்கொண்டே போய் விட்டது தாய்க் குருவி, குஞ்சினை! பொந்துக்குள்ளே, தாயும் சேயும்! கதகதப்பும்! மகிழ்ச்சி மிக்க கிறீச்சொலி! எனக்கே, கோபம் மாறி, மகிழ்ச்சி பிறந்தது! இயற்கையாக இருக்கவேண்டிய நிலை இது!! - என்று எண்ணினேன் - இந்த நிலை கெட்டல்லவா போயிருக்கும், அந்தக் குருவிக் குஞ்சினை நாம் கூண்டிலிட்டு வளர்த்தால் என்றுகூடத் தோன்றிற்று.

தம்பி! பல ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி; இப்போது, ஏன் என் நினைவிற்கு வந்தது? நினைவு எப்படி யெப்படிச் சிதையும், கலையும், மீண்டும் அதனைத் தேடிப்பெற என்னென்ன

செயல் வேண்டும் என்று எண்ணியபோது, பொந்திலிருந்து தவறிப்போன குஞ்சுதனைத் தேடித் தாய்ப் பறவை தத்தளித்த நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது.

நமது நினைவு, சிதறிப்போய், மீண்டும் அதனைத் தேடிப் பெறுவதுகூட, இதுபோலத்தான் தத்தளிப்பு! தவிப்பு! அழைப்பு! கண்டுபிடிப்பு! களிப்பு! திரும்பப் பெறுவது! முழு மகிழ்ச்சி!!

”அப்பாடா! இப்போதுதான் நினைவிற்கு வந்தது!!’’ - என்று வெற்றிக் களிப்புப் பொங்கிடும் நிலையில் பேசுகிறோ மல்லவா சில வேளைகளில் - இதுதான் தம்பி! தாய்க்குருவியும் அதன் குஞ்சும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டன!! - என்று பொருள். பேழைக்குள் போட்டு வைத்திருக்கும் பல பொருள்களுக் கிடையிலே, சிக்கிக்கொள்ளும் ஏதேனும் ஒரு பொருளைத் தேடும்போது,

எப்படி இருக்கிறது நிலைமை! அதேதான்!! பல விஷயங்கள் நினைவிலே இருக்கும், - ஏதோ ஒன்று மட்டும் நினைவிலிருக்காது - அடே அப்பா! - அதை மீண்டும் நினைவிலே கொண்டுவர, என்ன பாடுபடவேண்டியிருக்கும் தெரியுமா? ஆனால், தம்பி! சிதறியதும் கிடைத்துவிட்டால், நினைவிலிருந்து விலகியது மீண்டும் நினைவிற்கு வந்துவிட்டால், எத்துணை களிப்பு என்கிறாய்!! ஏதேனும் ஒரு அலுவலிலே, பொருளிலே, எண்ணத்திலே, நாம் நம்மை மிகுதியும் ஈடுபடுத்திக்கொண்டு விடுவோமானால், அதிலேயே, நமது நினைவு முழுவதும் இணைந்துபோய் விடுமானால், வேறு பல விஷயங்களிலே நமக்கு நினைவுக் குறைவு மிகுதியாக ஏற்பட்டுவிடும்.

ஏதோ நினைப்பிலே, இதனை மறந்துவிட்டேன்! - என்று பலர் பேசக்

கேட்டிருக்கிறாய் அல்லவா?

நீண்ட நாட்களாகத் தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற கணவன், வீடு திரும்பும் சேதி கேட்டால், துணைவிக்கு அந்த ஒரு நினைப்பே மிகுதியாகிவிடும் - வேறு எதுவும் நினைவிலே இராது என்பர் புலவர். கழுத்தணியைத் தலையிலிட்டும், சூட வேண்டியதைச் சொருகியும், சொருகவேண்டியதைச் சூடியும், அஞ்சனத்தைப் புருவத்துக்கிட மறந்தும் போவராம் மாதர்.

காதலால் கட்டுண்டு கிடப்போர் அப்படித்தான் - நினைவு தடுமாறியிருப்பர் என்று எண்ணிவிடாதே, தம்பி! எந்த ஒரு உணர்ச்சி மேலிட்டு, நாம் அதன் வயப்பட்டுப் போய்விட்டாலும், இதே நிலைதான்!

பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் - உடற்கூறு பற்றிய நுண்ணறிவு

மிக்கவர், ஒருநாள் மாணவர்கட்கு, தவளையின் உடற்கூறு எவ்விதம் உளது என்பதுபற்றிய பாடம் நடத்த எண்ணிப் பெரிய தவளையொன்றினைக் காகிதத்தில் சுற்றித் தம் சட்டைப்பையில் திணித்துக்கொண்டார். உணவு உட்கொள்ளக் கூட நேரமில்லை. போகிற வழியிலேயே தின்றுகொள்ளலாம் என்று ரொட்டித்துண்டு ஒன்றினை வேறோர் காகிதத்தில் வைத்து எடுத்துக்கொண்டார். வழி நடந்தார்.

தவளையின் உடலைக் கீறிக்காட்டி, அமைப்பு உள்ள விதம் பற்றி விளக்கம் அளித்து, மாணவர்க்கு நல்லறிவு புகட்டவேண்டு மென்பது பற்றிய எண்ணமே மேலிட்டிருந்தது; அந்த எண்ணம் அவரை ஆட்கொண்டுவிட்டது.

வகுப்பறை சென்றார்; மாணவர்களை அழைத்து, "மாணவர்களே! இன்று,

தவளையின் உடற்கூறு பற்றிய பாடம்; தவளையின் உடலமைப்பு எப்படி இருக்கிறது என்பதைக் காட்ட, இதோ ஒரு தவளை கொண்டுவந்திருக்கிறேன்'' என்று கூறியபடி, பொட்டலத்தை எடுத்து மேஜைமீதுவைத்துப் பிரித்தார்; ரொட்டித்துண்டு இருந்தது; திகைத்தார்; சட்டையின் மற்றப் பையைத் துழாவினார் - ஏதும் இல்லை!!

"நன்றாக நினைவிருக்கிறதே! தவளையைக் காகிதத்தில் சுற்றிச் சட்டைப்பையிலே, வைத்த நினைவு தெளிவாக இருக்கிறதே! காணோமே!'' என்று கூறித் திகைக்கிறார்.

தவளையைக் காகிதத்திலே சுற்றிச் சட்டைப் பையிலே வைத்த நினைவு பழுதுபடவில்லை; நினைவு, சரியாகவே இருக்கிறது.

அந்த நினைவுமட்டுமே அவரிடம்!

தவளையை இப்படி இப்படிக் கீறிக் காட்ட வேண்டும்; அதன் உடலமைப்புப்பற்றி இன்னின்ன விளக்கம் அளிக்க வேண்டும் என்ற எண்ணமே, அவர் மனதில்; வேறு நினைவு இல்லை! என்ன செய்கிறோம் என்ற நினைவுகூட இல்லை!! அவ்வளவு இரண்டரக் கலந்துவிட்டார், தவளை பற்றிய பாடத்தை மாணவர்க்குக் கூறவேண்டும் என்ற நினைப்பில். அதனால் வருகிற வழியில், என்ன செய்கிறோம் என்ற நினைவு கொள்ளாமல், பொட்டலத்தைப் பிரித்து, ரொட்டித்துண்டு என்று எண்ணிக்கொண்டு பாவம் தவளையையே மென்று தின்று விட்டார்!

தம்பி! நல்லவர்! எனினும் இப்பேராசிரியர், ஏதோ ஒரு நினைப்புக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட்டுக் கவனிக்கப்படவேண்டிய வேறு

விஷயங்களைப் பற்றிய நினைப்பே இல்லாது போனார்; இந்த விபரீதம் ஏற்பட்டது.

ஒரு பொருளில் அல்லது எண்ணத்திலே, நம்மைப் பிணைத்துக்கொள்வதிலேகூட ஏற்பட்டுவிடக்கூடிய, கெடுதல் குறித்து விளக்க, தவளை தின்ற பேராசிரியர் கதையைக் கூறுவர்.

நினைவிலே நிற்பது, எத்துணை வலிவுமிக்க ஆதிக்கம் செலுத்துகிறது என்ற பாடமும் இதிலிருந்து பெற இயலும்!

ஒன்றில் மனம் ஈடுபட்டுவிட்டால், மற்றதெல்லாம் நினைவிலே தங்காது என்பதற்கும், இஃது ஓர் எடுத்துக்காட்டு.

ஒன்றுகூட நினைவிலிருந்து தவறிவிடவே செய்யாது! ஒவ்வொரு விஷயமும், தகவலும், விவரமும், இவருக்கு நினைவிலிருக்கும் என்று சிலர் பற்றிச் சொல்வார்கள். அவ்வளவு

நினைவுத் திறமைகொண்டவர் என்பர்.

சிலர், உள்ளபடி, நினைவுத்திறமை மிகுதியும் உடையவர் களாகவும், அந்தத் திறமையை வளமாக வைத்திருப்போராகவும் இருக்கிறார்கள்.

அந்தத் திறமையினைச் செம்மையாக வைத்துக்கொள்வதை ஒரு கலையாகவே கொள்கின்றனர்.

தம்பி! வேறு சிலர் உளர்; எதையும் மறவாமல் நினைவிலே பதியவைத்துக்கொள்ளும் திறமை தம்மிடம் இருப்பதனால், தாம் மற்ற எல்லாத் துறைகளிலுமே திறமைமிக்கவர் என்று கூறுபவர்; மற்றவர்களையும் அதனை ஏற்றுக்கொள்ளச் செய்பவர்.

எதனையும் நினைவிலே கொள்பவர்; நினைவு தவறாதவர்; என்ற அந்த ஒரு

திறமையினைக்கொண்டே மற்றவர்களை மிரட்ட முனைபவர்களும் உண்டு.

ஜெர்மன் நாட்டு அதிபராகி உலகை உருட்டி மிரட்டிய ஹிட்லர் அப்படிப்பட்டவரென ஒரு நூலாசிரியர் கூறுகிறார்.

எல்லாம் தமக்குத் தெரியும்!

எல்லாம் தமக்கு மட்டுமே தெரியும்!!

என்று கூறுபவர் ஹிட்லர்; பிறரும் அதனை நம்பும்படி அவருடைய பல நடவடிக்கைகள் இருக்குமாம்,

ஹிட்லரைக் காட்டிலும் போர்த்திறன் மிக்கவர்கள், போர் முறை கற்றறிந்தவர்கள், போர்ப் பயிற்சி பெற்றவர்கள், பலர் இருந்தனர், அவரைச் சூழ்ந்தபடி.

அவர்களே வியந்து பாராட்டும்படி, அச்சப்படும்படி, அவர்களின் துறைகள்

பற்றிய நுணுக்கங்களை, அவர்கள் கேட்டு வெட்கும்படி, ஹிட்லர், மளமளவென்று பேசுவார்; கேள்விகள் கேட்பார்; திருத்தங்கள் தருவார், திகைக்கவைப்பார்!! எடுத்துக் காட்டுக்கு இது.

இன்ன நாட்டின் பேரில் இந்த மாதம் இத்தனையாம் நாள் படையெடுத்துச் செல்ல வேண்டும் - டாங்கிப் படைகளை அனுப்ப வேண்டும்.

என்று ஹிட்லர் உத்தரவு பிறப்பிப்பார். டாங்குப்படைப் பிரிவின் தலைவன், அந்த நேரம் படை எடுப்புக்கு ஏற்றது அல்ல என்ற எண்ணம் கொண்டவர்.

அவர் போர் பல நடாத்தியவர்! களம் பல கண்டவர்!!

ஹிட்லரைக் கண்டு தமது கருத்தை அறிவிக்க வருகிறார்.

ஹிட்லரிடம் முறையிடுகிறார்; படை எடுப்புக்கு இது ஏற்ற நேரம் அல்ல என்பதற்கான காரணங்களைக் கூற, மனதிலே அவைகளைத் தொகுத்துத் தம்மைத் தயாரித்துக்கொள்கிறார்.

ஹிட்லர், அந்தப் படைப்பிரிவின் தலைவனிடம், முடுக்காகப் பேச்சைத் துவக்குகிறான்.

டாங்கிப் படைப் பிரிவின் தலைவன், நீ?

ஆம்! வழிபாட்டுக்குரிய தலைவரே!

இப்போது உன் வசம் உள்ள டாங்கிகள் எத்தனை?

ஆயிரத்து நானூறு!

பழுதானவை?

சில டாங்கிகள். . . . .

அதாவது, உனக்கு அந்தக் கணக்குத்

தெரியாது?

கவனிக்கவில்லை, குறிப்பு எடுத்துக்கொண்டு வர வில்லை. . . . .

சரி! பெட்ரோல், எவ்வளவு இருக்கிறது?

போதுமான அளவு. . . . .

போதுமான அளவு என்றால்? எதற்குப் போதுமான அளவு! உம்! பெட்ரோல், எவ்வளவு இருக்கிறது என்பது, உனக்குத் திட்டவட்டமாகத் தெரியாது. . . . .

மன்னிக்க வேண்டுகிறேன். . . . .

டாங்கிப் படையினரில், இப்போது நோய்வாய்ப்பட் டிருப்போர் எத்தனை பேர் என்று தெரியுமா? மருத்துவப் பிரிவினருக்குத்தான், அந்தத் தகவல் தெரியும். . . .

உனக்குத் தெரியாது?

ஆம்! அதிபரே! உன்னிடம் உள்ள டாங்கியின் உருளை, எத்தனை டன்? எடை? தெரியாது!

தெரியாது!!

டாங்கி ஓட்டுபவர்களின் சட்டையில், எத்தனை பொத்தான்கள்?

சட்டை என்ன நிறம்?

பழுப்பு நிறமாக. . . .

முன்பு! இப்போது, நிறம் மாற்றப்பட்டது. . . உத்தரவு பிறந்திருக்கிறது. உனக்குத் தெரியவில்லை. சட்டையிலே உள்ள பொத்தான்கள் 13. உனக்குத் தெரியவில்லை. டாங்கியின் உருளை, மூன்று டன்! உனக்குத் தெரியாது! நோய்வாய்ப்பட்டுள்ள டாங்கி ஓட்டுபவர்கள் 77! உனக்குத் தெரியாது. பெட்ரோல் மூன்று இலட்சம் காலன் இருக்கிறது! உனக்குத் தெரியாது!

பழுதாகியுள்ள டாங்கிகள் பதினாறு. உனக்குத் தெரியாது! நீ, டாங்கிப் படைப் பிரிவின் தலைவன் - உனக்கு, நீ தொடர்பு கொண்டுள்ள துறையிலே தெரிந்திருக்கவேண்டிய இவ்வளவு தகவல்கள் தெரியவில்லை! அப்படிப்பட்ட நீ, உனக்குத் தெரியாததை எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டுள்ள எனக்குப் புத்தி கூற வருகிறாய், துணிவாக! படை எடுப்புக்கு இது ஏற்ற சமயம் அல்ல என்று!! உன் மேற்பார்வையிலே இருப்பது பற்றியே உனக்குத் தெரியவில்லை! நான் கூறவேண்டி இருக்கிறது! நீ, போர் முறைபற்றி எனக்குப் புத்திமதி கூறத் துணிவு கொண்டுவிட்டாய். . . .

மன்னிக்க வேண்டும் முற்று முணர்ந்த மூலவனே! எங்கும் இருப்பதும், நடப்பதும், இருந்த இடமிருந்தே, அறிந்துகொள்ளும் ஆற்றலரசே!

என் அகந்தையை அழித்தீர்! அறிவு புகட்டினீர்! வாழ்க அதிபர்! வாழ்க அரசு! வருகிறேன் தலைவா!

சென்று வா! எதிரியைக் கொன்று குவித்துவிட்டு வா!!

தம்பி! டாங்கிப்படைப் பிரிவுத் தலைவனே, கேட்டு மலைத்துப் போகும்படியான "தகவல்களை' ஹிட்லர், அறிந்திருந்தது எப்படி தெரியுமா?

டாங்கிப் படைப் பிரிவுத் தலைவன் தன்னைக் காண வருகிறான் என்று தெரிந்ததும், தன்னிடம் உள்ள தகவல் சேகரிப்புத் துறையினனைக்கொண்டு, ஒரு படைத்தலைவன், சாதாரணமாகக் கவனிக்கத்தக்கவை அல்ல என்று ஒதுக்கி விட்டிருக்கக்கூடிய விவரங்களைக் கொண்டுவரச் செய்து, அவைகளைக் கொட்டிக்

காட்டி, படைத்தலைவனைத் திணற அடிப்பது, ஹிட்லர் முறை!!

இந்த விவரங்கள், படைத்தலைவனுடைய நினைவிலே இருக்கத் தேவைகூட இல்லை! இருக்காது. இந்த விவரங்களைப் பற்றிய நினைப்பிலே அவர் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு விட்டால், மிக முக்கியமான, முடிவெடுக்கத்தக்க நுண்ணறிவு பெற நேரம்கூடக் கிடைக்காது. எனவேதான், பழுதான டாங்குகளின் எண்ணிக்கை, சட்டையில் உள்ள பொத்தான்களின் எண்ணிக்கை, உள்ள பெட்ரோலின் அளவு போன்றவைகள் அவன் நினைவில் இல்லை. ஹிட்லர், இவைகளைப்பற்றிக் கேட்கக்கூடும் என்று அவன் எதிர்பார்த்திருக்கக்கூடமாட்டான். வேறு முக்கியமான பிரச்சினைகள் குறித்துப் பேசுவார்; எதிரி நாட்டிலே

உள்ள ஏற்பாடுகளின் தன்மைபற்றி எடுத்துரைக்கலாம்; போர் செய்திடப் பொன்னான வாய்ப்பு, மூன்று திங்களிலே ஏற்படும் என்பதற்கான காரணங்களை விளக்கலாம் என்று அவன் சென்றான். ஹிட்லரோ, சட்டையிலுள்ள பொத்தான்கள் எத்தனை என்று கேட்டுவிட்டார்; தெரியவில்லை கூற; திணறுகிறான்; ஆனால் உலகை ஒரு குடைகீழ் ஆளும் வல்லமை மிக்கோன், தந்தையர் நாட்டுக்குப் புதியநிலை ஏற்படுத்திக் கொடுத்த தலைவன், இந்தப் பொத்தான் கணக்கினைக்கூட அறிந்துவைத்திருக்கிறானே! நாம் இதனை அலட்சியப் படுத்தினோம் - நம் அதிபனோ, இதனையும் அறிந்து வைத்திருக்கிறான்! இல்லாமலா, அதிபர் என்ற நிலைக்கு, ஆண்டவன் இவரை உயர்த்தியிருக்கிறார். இத்துணை அறிவாற்றல் மிக்கவர், படை

எடுப்புக்கு நாள் குறித்தால், எல்லாம் அறிந்துதான் குறித்திருப்பார்! நாம், யார், அதைக் குறை கூற; ஐயப்பாடு எழுப்ப! அதிபர்! அறிவார் அனைத்தும்!! - என்றுதான், படைப் பிரிவுத் தலைவனே எண்ணுவான், பேசுவான், பாராட்டுதலுடன்.

ஆனால், உண்மையில் ஹிட்லர், போர்த்துறைப் பிரச்சினை களிலே வல்லவன் அல்ல என்பது, அவன் ஒரே நேரத்தில், பல முனைகளில் களங்களை உண்டாக்கிக்கொண்டு கெட்டொழிந்த தால் விளக்கமாகிறது.

அந்த முடிவு எழுகிற வரையில், ஹிட்லர் கொட்டிக் காட்டிய, "தகவல்கள்' - எதுவும் தன் நினைவிலே பதிந்து இருக்கும் என்று எடுத்துக்காட்டியது ஆகியவற்றைப் பார்த்து உடனிருந்தோர் மட்டுமா, உலகினரே மலைத்துக் கிடந்தனர்.

தம்பி! இதுபோலவே, மிகச்சாதாரணமான, அடிப்படை யல்லாத தகவல்களைச் சேகரித்து நினைவிலே வைத்துக் கொண்டு, உடனிருப்போரைத் திணற அடிக்கும் கருத்துக் கழைக்கூத்தர் நிரம்ப இருக்கிறார்கள்; பார்த்திருப்பாய்.

அவர்கள் தம்மை, ஆதாரமளிக்கும் ஆற்றல் மிக்கோர் என்றும், புள்ளிவிவரப் புலிகளென்றும், பிறர் எண்ணிக் கொள்ளும்படி நடந்துகொள்வர்.

உழவர்களுக்குப் பொறுக்கு விதைகளின் அருமை பற்றிய தகவல் அளிப்பர்; ஏர் பூட்டி ஓட்டி அறியார்! வணிகர்களுக்கு, ஜாவா சர்க்கரையால் கிடைக்கக்கூடிய இலாபம் பற்றி எடுத்துரைப்பார்கள்; ஒரு தொழிலிலும் ஈடுபட்டு இலாபம் பெற்றவர்களாக இருக்கவே மாட்டார்கள்.

இசைவாணர்களின் இல்லத்தின் அளவிலிருந்து அவர்கள் பூசிக்கொள்ளும் கலவை விலை வரையில் தகவல் தருவார்கள்; பல்லவிக்கும் அனுபல்லவிக்கும் உள்ள தொடர்புகூடத் தெரிந்திருக்காது. மூன்றடுக்கு மாடிவீடு எவ்வளவு சிக்கனமாகக் கட்டி முடிக்க முடியும் என்ற திட்டம் தருவார்கள்; தாம் இருக்கும் வீட்டிலே கூரையில் ஒழுக்கல் இருக்கும்.

தம்பி! இப்படிப்பட்டவர்கள் நிரம்ப இருக்கிறார்கள்!

இவர்கள், பல தகவல்களை நினைவிலே வைத்துக் கொள்வர்; கேட்பவர்களை மலைக்கச் செய்ய; வேறு கவைக்குதவும் விதமாக அல்ல.

நான் குறிப்பிட்ட ”நினைவு’, இவை போன்றது அல்ல.

அந்த நினைவுகளேகூடச் சில வேளைகளிலே, கலைந்தும் குலைந்தும் போகின்றன; சிதைந்தும் சிதறியும் போய்விடுகின்றன என்றால், "கனவு', கண்டது கண்டபடியேவா, நினைவிற்கு வரும்? வாராது! ஆனால், கனவுகள் கண்டனரே, பலர்!! தாம் கண்ட கனவுகளைப் பிறருக்கும் எடுத்துக் கூறியுள்ளனரே! அம்மட்டோ! கனவுகள் நனவாகக் கண்டும் உள்ளனரே? அஃது எங்ஙனம் எனின், அவர்கள் கண்ட கனவுகள், பட்டப் பகலில்! கண்விழித்த நிலையில்!! அவர்களின் கனவு என்பது அவர்கள், தமது எண்ணத்தை வண்ணக்குழம்பாக்கி, அதுகொண்டு தீட்டிய ஓவியம் - தமது நெஞ்சத் திரையிலே தீட்டிவைத்த ஓவியம்! அதனைக் காணவேண்டின் அவர்தம் நெஞ்சத்தை அறிதல் வேண்டும்.

ஊமை கண்ட கனவு ஊருக்குத் தெரியாது!

உலுத்தன் காணும் கனவை, ஊருக்கு உரைக்கமாட்டான். உத்தமரின் கனவுகள், நனவாகிவிடுகின்றன; உருப்படாதாரின் நனவுகள் கனவாகிப் போகின்றன.

எல்லாம் வெறும் கனவு! என்று ஏளனம் கிளப்பக் கேட்டிருக்கிறோம்.

கனவில்தானே! எல்லாம் காணலாம்!! என்ற கேலிப் பேச்சுக் கேட்டுள்ளோம்.

கனவு காண்கிறான்! என்று ஆதிக்கக் குரலிற் பேசக் கேட்டிருக்கிறோம்.

ஆனால், தம்பி! கனவுகள் நனவாகியுள்ளன!

விடுதலை வரலாறுகள், விஞ்ஞான வெற்றிகள், கனவுகள் நனவானதன், விளைவுகள் - அறியோமா!!

ஆற்றோரம்! அந்தி சாயும் நேரம்! ஊர்ந்து செல்லும் நிலையிலுள்ளான், உடலெங்கும் புண்பட்டான்!! போர் வீரன் - வாளிழந்தான், உடல் வலிவிழந்தான், உயிர் இழக்குமுன், வெற்றி பெற்றாகவேண்டும் என்ற எண்ணத்தான். இக்கரையில் படுத்தபடி, எதிர்ப்புறம் நெடுந்தொலைவில், தெரியும் எதிரிகளின் நடமாட்டத்தைக் காண்கிறான்; கோபம் கொப்பளிக்கிறது! கண்களிலே ஓர் ஒளி - வெறிகொண்டவனோ என்று எண்ணுவர்,அதனைக் காண்போர்! கண் எதிரே மாற்றார் கட்கமேந்த இயலவில்லை!! நெஞ்சம் நெருப்புடை உலையாகிறது! ஏதேதோ எண்ணுகின்றான்!! தம்பி! முகத்திலே ஓர் மகிழ்ச்சிக் குறி தெரிகிறது! ஏன்? எதையோ காண்கிறான் - எதிர்காலத்தில் ஒரு சிறு பகுதியை!! கனவு காண்கிறான், தம்பி! கனவு. கேட்போமா! அவனை, வீரனே! நீ

காணும் கனவு என்ன என்று. பாவம், களைப்பு மேலிடுகிறது அவனுக்கு; பிறகு கேட்போம்!

அன்புள்ள

அண்ணாதுரை

10-9-61

தொலை நோக்கு – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும்,

அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

எமது பணிகள்

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள்

யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation

Account Number : 606 1010 100 502 79

Union Bank Of India

West Tambaram, Chennai

IFSC – UBIN0560618

Account Type : Current Account